~~Sulphate~~

Urea
[illegible]
Sulphate } 8 m

T. V. Gopala Ayyar

உ

சிவமயம்.

கல்லாடனார்

இயற்றிய

கல்லாடம்.

இது

மயிலேறும்பெருமாள்பிள்ளை முதலிய

வித்வான்கள் எழுதிய

உரையோடு,

அதனை விளக்கி,

மஹாவித்வான்

காஞ்சி - இராமாநந்தயோகிகள்

எழுதிய

விசேஷ உரையுடன்,

சென்னை :

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1911

விலை ரூபா 3.

உ

வேலுமயிலுந்துணை.

முகவுரை

எந்நாட்டவரும் தந்நாட்டுப் பழம் பொருளைப் பொன்னேபோற் போற்றுவர். எப்பொருளினும் கல்விப்பொருளே சிறப்புடையதா மாகலின், மக்களாவார் தந்நாட்டில் வழங்கும் பண்டைய நூல்களையும் அவற்றை இயற்றிய ஆசிரியரது வரலாறுகளையும் அறிய அவாவுவர். சிதைந்துள்ள நூல்களைத் தேடிச் செப்பனிட்டு வெளியிடும் அருங்கலைவிநோதர்களே அவற்றாலுண்டாகும் பயனையும் மகிழ்வையும் உணர வல்லார்.

இனி, பண்டைய நூல்களிற் பழகி ஆராய்வதும், அவற்றை இயற்றிய ஆசிரியரது வரலாறுகளை உணர்வதும் எற்றுக்கோவெனின், அன்னார் உண்மையுறக் கண்டு உரைத்துள்ள உறுதியுரைகள் உணரக் கிடைத்தலே யன்றி, அக்காலத்திய மாந்தர் கொண்டிருந்த நடையுடை பாவனைகளும், நாகரிகமும் நாட்டுவளனும் பிறவும் நன்கு புலனாமென்பது கொண்டே யென்க. இக்கருத்துப்பற்றியன்றே மேனாட்டுப் புலவரும், நூல்கள் தோன்றிய கால வரலாற்றைப் பெரிதும் முயன்று தேடுகின்றனர்.

நமது நாட்டின்கண் வரலாற்று முறைமை எழுதிவைக்கும் வழக்காறின்மையால், எவர் எக்கதை யுரைக்கப் புகினும், 'பல்லாயிர வருடங்களுக்கு முன்' எனப்பாயிரங் கூறத் தொடங்குகின்றனர். சிலர் முற்பட்ட தொன்றே முதிர்ச்சி யுடையதென்று கருதி தமக்கான நூல்களை மற்றெவற்றிற்கும் முற்பட்டதென்று முரண்படக் கூறுவர். மற்றுஞ்சிலர் காலமென்னுங் கண் தெரியாக் காட்டிற் புகுந்து கண்டது அல்லலே யன்றிப் பிறிதில்லையென அதனின் அகன்றொழிவர். கருமமே கண்ணாயினார் சிலர் எவ்வகைய இன்னலையும் புறங்கண்டு

மனஞ் சோர்வுபடாது பண்டைய நூல்கள், சாசனங்கள், கல்வெட்டுக்கள், பிறநாட்டு வரலாறுகள் முதலியவற்றை ஆராய்ந்து கால முறையைக் கண்டறிகின்றனர். இவரது உழைப்புச் சிறக்குமாறு இறைவன் இன்னருள் புரிவானாக.

இதுநிற்க, பண்டைய தமிழ் நூல்களில் 'கல்லாடம்' என்னும் அரிய நூலும் ஒன்றாம். இது கல்லாடனார் இயற்றியது. கல்லாடர் கடைச்சங்கத்துப் புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர். இவரது சிறப்புக்கவி திருவள்ளுவ மாலையின்கண் ஒன்பதாவதாக நிலவுகின்றது. ஒரு காலத்து, மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருக்கோவையாரைச் சுட்டிச் சங்கப்புலவர்கள், "அகப்பொருள் இயலுக்கு மாறுபடுகின்றமையின் இந்நூல் குற்றமுடைத்து" எனலும், கல்லாடர் அக்கடுமொழியைக் கேட்கப்பொறாது அவர்தங்கூற்றை மறுத்து, அதுகாரணம்பற்றி மற்றைய புலவர்களோடு முரண்பட்டு, ஆலவாயில் அருட்பெருங் கடவுளை யணுகி, "அடியார்க்கு நல்லாய்! 'பாவை பாடியவாயாற் கோவைபாடுக' என்னும் திருப்பணியை மேற்கொண்டு திருவாய் மலர்ந்தருளியதாகும் திருக்கோவையார். முற்றறிவுடைய மணிவாசகர் வழங்கிய அதனைச் சிற்றறிவுடைய இப்புலவர்கள் குற்றமுடைத்து என்கின்றனரே! இது என்னே! அடியேன் அப்புலவர்களை வாயடக்குமாறு அருள் புரிதி" என வேண்டியபின்னர், விரைந்து சென்று ஒரு புடையிருந்து, கோவையாருள் ஆங்காங்கு ஒவ்வொன்றாக நூறு செய்யுட்களைத் திரட்டி, ஒவ்வொன்றன் கருத்து ஒவ்வொன்றினுகப் பெரிதும் சிறிதுமாய ஒரு நூறு அகவற்பாக்களை யாத்தனர். யாத்தபின்னர் கல்லாடர் குற்றங் கூறிய அப்புலவர்களைக் கூட்டிச்சென்று, இறைவன் முன் இருத்தி, "நச்சினார்க்கினியாய்! யான் இனி இந்நூறு அகவல்களைத் திருமுன் கூறுகின்றேன். திருக்கோவையார் எவ்வகையினும் அமைவுடையதேயாயின், அவையிற்றை அகப்படக்கொண்ட இவ்வகவல்களை ஏற்றருளல்வேண்டும்" என்று விண்ணப்பித்து ஓதுவாராயினர். எம்பெருமான் ஒவ்வொரு பாவும் முடியுந்தோறும் தம் முடியைத் துளக்கினின்றார். அதுகண்ட

சங்கப்புலவர்கள் சங்கை யொழிந்தனர் என்பது இந்நூலைக் குறித்து வழங்கும் கர்ணபரம்பரை.

கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயும்
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

என்னுந் தனிச்செய்யுள் ஒன்று அக்கூற்றை ஆதரிக்கின்றது. மேற்கண்ட வரலாறு எத்துணை உண்மை யுடைத்து எனத் துணிதற்குப் போதிய ஆதரவுகள் வேறு கிடைத்தில.

இதுநிற்க, வாதவூரடிகளது வாசகத்தை யுவந்து, தில்லை யம்பலவாணர் அவர்க்கு 'மணிவாசகர்' என்னும் அபிதானத்தை யருளினர் என்பதும், 'பாவை பாடியவாயாற் கோவைபாடுக' என்றனர் என்பதும், அவ்வடிகள் அருளிய திருவாசகம் முதலிய தமிழ்மறை நூல்களைத் தமது அருமைத் திருக்கரத்தான் எழுதினர் என்பதும், மற்றும் அவ்வடியவர்பொருட்டுத் தாம் மண் சுமத்தல் முதலாய தொழில்களைப் புரிந்தனர் என்பதும், பிறவும் ஒப்புமையுடையவாக் கொள்கின்றுமாகலின், அந்நூலைச் சுட்டி எழுந்த குறையினைப் போக்குதற்பொருட்டு மதுரை நாயகர் தம்முடியைத் துளக்கினார் என்பது இழுக்காகாதன்றே. இதனாற் கல்லாடர் பொருட்டு முடிதுளக்கினாரல்லர் என்பது புலனாகும். அன்றி, அந்நூல் குற்றமுடைத்தாயின், அதனைக் கேட்டு மகிழ்ந்து, ஏட்டின்கண் எழுதிவைத்த இறையனார்க்கும் இழுக்குண்டாமாகலின் இயற்றினார், எழுதினார் ஆகிய இருவோர்க்கும் இழுக்குறுவண்ணம் மதுரையீசர் தம்முடி துளக்கினார் என்பது அல்வழியாகாதென்க.

இனி, திருக்கோவையாரின் துறையடைவுகளை உள்ளுறையாக்கொண்டு கல்லாடனார் தம் நூலினை யாத்தனரெனின், மணிவாசகர் கல்லாடனார்க்கு முற்பட்டவர் என்பது பெறப்படும். * சிலர், மணிவாசகர் திருத்தொண்டத் தொகையுட்

* ஸ்ரீமாந் கோபிநாதராவ் அவர்களை உள்ளிட்டோர்.

கூறப்படாமையின், அவர் சுந்தரர்க்கும் பிற்பட்டவர் எனக் கொண்டு, மணிவாசகர் சற்றேறக்குறைய கிறிஸ்துசகம் ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்தவர் என்கின்றனர். * சிலர் 'பொய்யடிமை யில்லாத புலவர்' என்பது மாணிக்க வாசகரையே குறிக்கற்பாலது, நம்பியாண்டார் அதற்குச் சங்கப் புலவருள் கபிலர்,பரணர், நக்கீரர் ஆகிய மூவரையும் முரண்படக்காட்டினர் என்பது முதலிய அடைவுகளைக் காட்டி, மணிவாசகர் சுந்தரர்க்கு முற்காலத்தவராதலே யன்றி, 'நரியைக் குதிரை செய்வானும்' என அப்பர் அருளிய மறை மொழியை வெளியாக்கி, வாசகர் சம்பந்தருக்கு முற்பட்டவ ரென்றும் கூறுவர். மற்றுஞ் சிலர் மணிவாசகர் சம்பந்தருக்கு முற்பட்டவர் என்பதிற் சற்றும் ஐயமில்லை; அவர் வீரசைவராயினமைபற்றி சுந்தரர் அவரைத் திருத்தொண்டத் தொகையுட் கூறு தொழிந்தனர் என்ப. மணிவாசகர் வீரசைவரே என்னலா மெனின், வீரசைவர்கள் அவரை அடியார் தொகையுட் கொண்டிலராதலின் அது முரண்படுமாறுகாண்க.

இதுநிற்க, கல்லாடம் ஒன்றனையே ஆதாரவாகக் கொண்டு மணிவாசகர் கடைச்சங்ககாலத்திற்கு முற்பட்டவர் என்பதில் முரண்படுமாறு என்னையோ வெனின், அற்றாயின் திருக்கோவையார் சங்கமருவிய நூலாதல் வேண்டும். அவ்வாறாதல் சங்கமருவிய நூற்றொகையுட் காண்கின்றேமில்லை. மற்றும் திருக்கோவையார் சங்கம் மருவிய நூலாயின், இறையனார் அகப்பொருளுக்கு உரை கண்டருளிய நக்கீரனார் மேற்கோளாக இதனை யெடுத்து ஆளாதிருத்தல் கூடுமோ வென்னும் ஐயப்பாடும் நிகழ்கின்றது. டாக்டர் ஜி.யு.போப்பையர் அவர்களும் மணிவாசகனார் ஒன்பதாம் நூற்றாண்டில் வதிந்தவரென ஊகிக்கின்றனர்.

மற்று இக்கல்லாடம் வந்த வழிதான் யாதோ வென்றாராய்வுழி, இது கல்லாடனார் செய்தது என்பதுமட்டும் பொய்யாமாறில்லை. அக்கல்லாடர்தாமும் கடைச்சங்கத்திருந்த

* ஸ்ரீமாந் கே. ஜி. சேஷ ஐயர் அவர்களை உள்ளிட்டோர்.

அவர்தாமோ அல்லரோ என்பது துணிதல் வேண்டும். கோவையார் சங்கம் மருவிய நூலன்றாமெனவே இக்கல்லாடம் செய்தவரும் அக்கல்லாடரன் றென்பது தெளிவாகும். ஆகவே மற்றொரு கல்லாடர் சங்ககாலத்திற்குப் பிற்படஇருந்தனரென்பதுதானே போதரும். அவர்தாமும் மிகப் பிற்பட்ட காலத்தவர் என்று புலப்படுகின்றது. உரையாசிரியருள் ஒருவரும் இக்கல்லாடத்தை யெடுத்தாளக் காண்கின்றிலோமாதலின், இவர் உரையாசிரியர்கள் காலத்திற்கும் பிற்பட்டவர் என்பது இழுக்காது.

கல்லாடம் என்பது ஒரு திருப்பதி. தனை, 'கல்லாடத்துக்கலந்தினிதிருந்து' என்னும் மணிவாசகர்திருவாக்குத்தெளிவிக்கும். ஆகவே கல்லாடனார் அப்பதியின்கண் வதிந்தவர் என்னலாம். இவரே சங்ககாலத்தவர் எனக்கொள்ளின், பின்னவர் அவர் பெயரையே தாம் மேற்கொண்டிருந்தனர் என ஊகிக்கலாம். இவ்விரண்டாம் கல்லாடரே இந்நூலினை யாத்தனரென்பது தெள்ளிதிற் புலனாகும். அவ்வாறாயின் இந்நூலைச்சுட்டி யெழுந்த கர்ண பரம்பரையான கதை யொரு மட்டும் உண்மை பயக்கு மென்பது உரையாமலே விளங்கும்.

இவையனைத்தையும் ஒரு புறம் ஒதுக்கி, இந்நூலின் உள்ளுறையை உற்று நோக்குமிடத்து, திருக்கோவையாருள் ஒருநூறு செய்யுட்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் கருத்துக்கள் அகப்பட அகவல் செய்தா ரென்பதை மறுத்தற்கில்லை. ஆயினும் ஒரோவிடத்து அதுதானும் மாறுபடுகின்றது. இதனை,

திருக்கோவையார்.

இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்கள பத்தொளி பாயநும்மூர்க்
கருங்குன்ற வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.

கல்லாடம்.

எம்மூர் சேணினு நும்மூர்க் குன்றமும்
பெருந்தவர் குழுவு மருங்கதி யிருப்பும்
பொதியமுங் களிப்ப விரிதரு தென்றலுங்
கலைகடல் குடித்த முனிவனுந் தமிழு
மேருவு மூவர்க் கோதிய புராமு
முலகமீன் றளித்த வுமையுமா வரனுந்
தேவர்க் கரசனுங் காவற் றருவும்
வழுவா விதியு மெழுதா மறையுஞ்
செங்கோல் வேந்துந் தங்கிய குடியுந்
தவஞ்சூ ழிமயமுங் கமஞ்சூன் மழையு
மெல்லையி லீங்கிவை சொல்லிய வன்றி

ஆகிய இ ண்டு செய்யுட்களையும் ஒப்பநோக்கி உய்த்துணர்க. அகப்பொருள் இயல்பற்றிக் கோவைநூற் றுறையடைவுகள் எவர் உரைப்பினும் ஒன்றையொன்று பற்றியே நிற்கும் என்பது ஈண்டுக் கவனிக்கத் தக்கதாம். நிற்க, "கல்லாடம் கற்றவனிடத்துச் சொல்லாடாதே" எனவும், "கல்லாடம் கற்றவனிடத்து மல்லாடாதே" எனவும், இந்நூலைச் சுட்டி வழங்கும் பழமொழிகள் இதன் உயர்வை உள்ளவாறே யுரைக்கின்றன. இது பண்டைய நூல்களேபோல் சொற்செறிவும் பொருளாழமும் கொண்டு விளங்குதலின் கற்றோர் இதனைக் கருந்தனமாகக் கொண்டிருக்கின்றனர்.

உத்தமக் கவிகளை ஓவியம் வல்ல புலவர்க்கு ஒப்பிட்டுரைத்தல் கூடும். ஓவியன், தான் காணும் பொருளின் உருவின் அமைப்புக்களை உண்மையுறத் தேர்ந்து, இயற்கை நலம் சிறிதும்மாறுபடாவண்ணம் சித்திரிக்கின்றான். அவன் தான் வரையக்கொண்ட அப்பொருளின் உருவினாலாதல் நிறத்தினாலாதல் ஒரு சிறிது மிகுத்தேனும் குறைத்தேனும் காட்டுவானாயின் காண்போரதனை இயற்கைநல மழிந்ததென எள்ளியுரைப்பர். நல்லியற் புலவரும் இத்தகையினரே. நல்லியற் புலவராயினார் தாம் கூறப்புகுந்த விடயங்களைத் தம்மனம் போனவாறு

மாறுபடுத்துக் கூறாது அவ்விடயத்தின் உண்மை நிலையோடு தம் மனத்தை ஒன்றி, உலகினர் உண்மையுற உரைக்குந் திறத்தினராவர். இவ்வகைய உத்தமப் புலவர்களில் கல்லாடரையும் ஒருவராகக் கூறலாம். இவர் இல்பொருளுவமை, தற்குறிப்பேற்றம் முதலிய அணிகளை ஒதுக்கி, இயற்கை நவிற்சியினையே பெரிதும் பாராட்டுகின்றனர். இதனை,

வரியுடல் சூழக் குடம்பைநூ றெற்றிப்
போக்குவழி படையா துள்ளுயிர் விடுத்தலின்
அறிவு புறம்போய வுலண்டது போலக்
கடற்றிரை சிறுக மலக்குதுயர் காட்டும்
உடலெனும் வாயிற் சிறைநடுவு புக்குப்
போகா துணங்குறும் வெள்ளறி வேமும்

அருணிறைந் தமைந்த கல்வியருளமெனத்
தேக்கிய தேனுட னிருள்மதி கிடக்கும்
கல்லாக் கயவர்க் கருநூற் கிளைமறை
சொல்லினர் நோமெனத் துணைமுலை பெருத்தன
பலவுடம் பழிக்கும் பழியூ னுணவினர்
தவமெனத் தேய்ந்தது துடியெனு நுசுப்பே
கடவுட் கூறு ருளமெனக் குழலும்
கொன்றைபுற வகற்றி நின்றவிருள் காட்டின
சுரும்புபடிந் துண்ணும் கழுநீர் போலக்
கறுத்துச் சிவந்தன கண்ணிணை மலரே

மீனுண வுள்ளி யிருந்தவெண் குருகெனச்
சோறுநறை கான்ற கைதைய மலரும்

அறிவெயி றீனத்தமுள் ளிலைமுடக் கைதைகள்

முதலிய பாவடிகள் இனிது விளக்கும்.

இந்நூலாசிரியர் தம் நூலுள் பெரும்பாலும் ஒவ்வோர் அகவலினும் மதுரையம்பதியினைச் சிறப்பித்து, மதுரை நாயகரைத் துதித்து, அவர் செய்தருளிய திருவிளையாடற் சரிதங்களை விளங்கக் கூறுகின்றனர். அன்றி, அத் தலம் திருப்பரங்குன்றினை அண்மியதெனத் தழுவிக்கூறுதலின், இவர் பாண்டி

நாட்டின ரென்பதும், முருகனைத் தமது வழிபடுகடவுளாக் கொண்டவர் என்பதும் துணியப்படும். இந்நூலில் முருகக் கடவுள் வணக்கமும் இதனை உறுதிப்படுத்தும்.

இவ்வரிய நூலை ஏறக்குறைய ஐம்பது யாண்டுகளுக்குமுன்னர் ஸ்ரீமாந்-திரிசிரபுரம்-மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் மூலபாடமாகப்பதிப்பித்தனர். இதற்குப்புலவர்பெருமான் ஸ்ரீமாந். மயிலேறும்பெருமாள் பிள்ளையவர்கள் முன்னரே இந்நூலின் முதல்முப்பத்தேழு அகவல்களுக்கு விரிவுரையொன்றுவரைந்திருந்தனர். அதன்பின்னர் வித்வான் புதுவை - சுப்பராய முதலியாரவர்கள் ஏனைய அகவல்களுக்குப் பதவுரை யொன்றெழுதினர். இவ்விரண்டுரையும் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டிருந்தும், பாராட்டுவோ ரின்மையால் இக்காலத்தே அது தானும் கிடைப்ப தரிதாயிற்று. அதுகண்ட மகாவித்வான் காஞ்சிபுரம் - இராமசாமி நாயுடவர்கள் மேற்குறித்த இரண்டுரைகளையுந் தழுவி அகலவுரை யொன்று வரைந்தளித்தனர். அவர்தன்மையும், இவ்வுரையின் வன்மையும் இத்துணைய வென எடுத்துரைத்தல் என் சிற்றறிவி னளவிற்றன்றென வாளா விடுத்தனன். ஈற்றிலுள்ள மூன்று அகவல்களுக்கு உரை செவ்வனே புலப்படாமை போலும் அவற்றிற்கு அரும்பதவுரை மட்டும் கண்டுவிட்டது. "கல்லாடத்தோடு மல்லாடாதே" என்னும் பழமொழி பழுதுபடா தென்பதற்கு அஃதும் ஒரு சான்றாகும்.

இம் மூன்றே யொழிய நூல்முழுதும் நன்கு புலனாமாறு இனிய உரை யெழுதியளித்த அப்பெரியார்க்கும், அவர்க்குப் பொருளுதவி செய்து அந்நூலை அச்சுவாகனத்தேற்றி யெங்கும் உலவிவரச்செய்த ஸ்ரீமாந். சை. சிவசங்கரச்செட்டியார், பி. ஏ., பி. எல்., அவர்கட்கும் தமிழுலகம் நன்றி பாராட்டும் கடப்பாடுடையதென்னும் கருத்துடையேன்.

எஸ். பி. ஜி. ஹைஸ்கூல்,
சென்னை, 24-2-11.

கா. நமச்சிவாயன்.

உ

சிவமயம்

கல்லாடம்

மூலமும் உரையும்.

கடவுள் வாழ்த்து.

வெண்பா

செவ்விதிகழ் பொருட்டுச் செந்தா மரைவதனக்
கொவ்வையெழிற் செவ்வாய்க் குறத்தேனை—நவ்வி
விழியானை யைப்புணரும் வேளைமத வெள்ளம்
பொழியானை யைமனமே போற்று.

அப்யுக்தர்

விருத்தம்

வாய்ந்தபொருட் கொருபொருளாய்க் கலைவாணிக்
கருள்கொழிக்கு மன்பாய்ப் பாரி
னைந்தமுது தமிழ்வடித்துக் கல்லாட
மெனவொருநூ லருளி யிட்டார்
தேய்ந்தமதிச் சடைப்பரமர் கருணைபெறச்
சங்கமுது செல்வர் வாழ்த்தக்
காய்ந்தபுல னடக்கியுயர் பெருஞானம்
பழுத்தருள்கல் லாட னாரே.

வெண்பா

கல்லாடர் செய்பனுவற் கல்லாட நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயு
மாமதுரை யீசர் மனமுவந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்.

விருத்தம்

வடிவெடுத்து வேதமன்பிற் பாடுகினு
மறிந்தறியா வண்ணம் வைகும்
பொடியணியுந் திருமேனிப் புனிதன்மது
ரைக்கிறைவன் புகழின் பாடல்
நெடியகவிக் கல்லாடர் பொருட்டுறையை
நிகழ்த்துதொறு நிலவு சூடும்
முடியசைத்து நன்றுநன்றீ தெனமகிழு
மெனினிகராய் மொழிவ தியாதே.

கணபதி துதி.

நேரிசை யாசிரியப்பா

திங்கண்முடி பொறுத்த பொன்மலை யுருவி
கருமணி கொழித்த தோற்றம் போல
இருகவுள் கவிழ்த்த மதநதி யுவட்டின்
வண்டினம் புரளும் வயங்குபுகர் முகத்த
செங்கதிர்த் திரளெழு கருங்கடல் போல
முக்கண்மேற் பொங்கும் வெள்ளமெறி கடத்த
பெருமலைச் சென்னியிற் சிறுமதி கிடந்தெனக்
கண்ணரு ணிறைந்த கவின்பெறு மெயிற்ற
ஆறிரண் டருக்க ரவிர்கதிர்க் கனலும்
வெள்ளைமதி முடித்த செஞ்சடை யொருத்தன்
உடலுயி ராட வாடுறு மனலமும்
தென்கீழ்த் திசையோன் தெறுதறு தீயும்
ஊழித் தீப்படர்ந் துடற்றுபு சிகையும்
பாசக் கரகம் விதியுடை முக்கோல்
முறிக்கலைச் சுருக்குக் கரம்பெறு முனிவர்
விழிவிடு மெரியுஞ் சாபவாய் நெருப்பும்
நிலைவிட்டுப் படராது காணியி னிலைக்கச்
சிறுகாற் றுழலு மசைகுழைச் செவிய
ஆம்பன்முக வரக்கன் கிளையொடு மறியப்

பெருங்காற்று விடுத்த நெடும்புழைக் கரத்த
கருமிடற்றுக் கடவுளைச் செங்கனி வேண்டி
இடங்கொண் ஞாலத்து வலங்கொளும் பதத்த
குண்டுநீ ருடுத்த நெடும்பா ரெண்ணமும்
எண்ணு விலக்கமொடு நண்ணிடு துரயமும்
அளந்துகொடு முடித்த னின்கட னாதலின்
வரியுடல் சூழக் குடம்பைநூ றெற்றிப்
போக்குவழி படையா துள்ளுயிர் விடுத்தலின்
அறிவுபுறம் போய வுலண்டது போலக்
கடற்றிரை சிறுக மலக்குதுயர் காட்டும்
உடலெனும் வாயிற் சிறைநடுவு புக்குப்
போகா துணங்குறும் வெள்ளறி வேமும்
ஆரணம் போற்றுநின் காலுற வணங்குதும்
கான்முக மேற்ற தொளைகொள்வாய்க் கறங்கும்
விசைத்தநடை போகுஞ் சகடக் காலும்
நீட்டிவலி தள்ளிப நெடுங்கயிற் றாசலும்
அலமரு காலு மலகைத் தேரும்
குறைதரு பிறவியி னிறைதரு கலக்கமும்
என்மனத் தெழுந்த புன்மொழித் தொகையும்
அருள்பொழி கடைக்கண் டாக்கித்
தெருளுற வைய முடிப்பையின் றெனவே.

'திங்கள்' என்பதுமுதல் 'முகத்த' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(பதவுரை) திங்கள்-பிறையை, முடி-சிரத்தில், பொறுத்த - தாங்கிய, பொன்மலை-பொன்மலையினின்றும் வீழ்கின்ற, அருவி-அருவியானது, கருமணி-நீலமணியை, கொழித்த-கொழிக்கின்ற, தோற்றம்போல - காட்சிபோல, இருகவுள் - இரண்டு கவுள்களும், கவிழ்த்த - கொட்டின, மதநதி - மதமாகியநதியின், உவட்டில் - பெருக்கில், வண்டு இனம் - வண்டுக் கூட்டங்கள், புரளும் - புரளுதற்கிடமாகி, வயங்கு - விளங்குகின்ற, புகர்-புள்ளிகளோடு கூடிய, முகத்த-முகத்தினையுடையாய்.

(விசேடவுரை) திங்கள் என்றது சந்திரனுக்குப் பொதுப் பெயராயினும் பொன்மலைக்கேற்பச் சந்திரனென்றும், மூத்தபிள்ளையாருக்கேற்பப் பிறையென்றும் பொருள்கொள்ளக்கிடந்தது, இத்தொடர் பொன்மலைக்கும் மூத்தபிள்ளையாருக்கும் உவமை கூறலான். பொன்மலை - மேருமலை (பொன்னுனியன்ற மலை). பொன்மலை மூத்தபிள்ளையாருக்கும், அதன்முடி பொறுத்த திங்கள் மூத்தபிள்ளையார் முடியிற் றரித்த பிறைக்கும், அருவி மூத்தபிள்ளையாரது இருகவுள் கவிழ்க்கு மதப்பெருக்கிற்கும், அருவிகொழிக்கு நீலமணி மூத்தபிள்ளையாரது மதப்பெருக்கிற் புரள்கின்ற வண்டினத்திற்கும் உவமையாகக்கொள்க. கவுள் - கதுப்பு. மதநதி - மதநீராகிய யாறு. உவட்டு - பெருக்கு. புரளல் - உருளல். உருளலெற்றுக்கெனின் பெருக்காதலானென்க. புகர் - புள்ளி (பொறி).

'சேங்கதிர்' என்பதுமுதல் 'கடத்த' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) செங்கதிர் - செங்கதிரின், திரள் - கூட்டம், எழு - எழுகின்ற, கருங் கடல்போல-கரிய கடல்வெள்ள மெறிந்தாற்போல, மூக்கண்மேல்-மூன்று கண்களினிடத்தும், பொங்கும் - எழாநின்ற, வெள்ளம் எறி - பெருக்காகச் சிந்துகிற, கடத்த - மதநீரினையுடையோய்.

(வி-ரை.) செங்கதிர் - சோம சூரியாக்கினிகள் எனப் பொருள் கொள்க, மேல் முக்கண்மேற் பொங்கும் எனவருதலால். செங்கதிர்-செம்மையாகிய கதிர், இது இதனையுடைய சுடர்களை யுணர்த்தலான் ஆகுபெயர்.

'பெருமலை' என்பதுமுதல் 'எயிற்ற' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(ப-ரை.) பெரு - பெரிய, மலை - மலையின், சென்னியில் - உச்சியில், சிறுமதி - இளம்பிறை, கிடந்தென-கிடந்தாற்போல, கண் அருள் - அருட்பார்வையையுடைய முகத்தில், நிறைந்த - நிரம்பின, கவின் பெறும் - அழகுபெற்ற, எயிற்ற - கொம்பினையுடையோய்.

(வி-ரை.) கிடந்தென என்பது கிடந்தால் என என்பதன் விகாரம். எயிறு-கொம்பு.

'ஆறிரண்டருக்கர்' என்பதுமுதல் 'குழைச்செவிய' என்பது வரை. (9—18 வரிகள்.)

(ப-ரை.) ஆறு இரண்டு - பன்னிரண் டென்னுந் தொகையை யுடைய, அருக்கர்-சூரியர்களது, அவிர்-பிரகாசிக்கிற, கதிர் கனலும்-கிரணக்கினியும், வெள்ளை மதி - வெண்பிறையை, முடித்த - சூடின, செஞ்சடை - செவந்த சடாபாரத்தையுடைய, ஒருத்தன்-ஒப்பற்றவனாகிய சிவபெருமான், உடல் உயிர் ஆட - உடலுயிர்கள் நடுங்கும்படி, ஆடும் - நடித்தற்கிடமாகிய, அனலமும் - பிரளய காலாக்கினியும், தென் கீழ் திசையோன் - தென்கிழக்குத்திக்கினைத் தனக்கிடமாக வுடையவனாகிய தீக்கடவுள், தெறுதரு - (தன்னைச்சேர்ந்த எல்லாப் பொருள்களையும்) எரிக்கிற, தீயும் - நெருப்பும், உடற்றுபு - வருத்தாநின்று, படர்ந்து - உலகமுழுதும் பரக்க, சிகை - சிகையினையுடைய, ஊழித்தீயும் - பிரளய காலாக்கினியும், பாசம் - உறிக்கயிற்றிற்றங்கிய, கரகம் - கமண்டலத்தையும், விதி உடை - (வேத விதிப்படியே) தாங்கப்பெற்ற, முக்கோல் - திரிதண்டத்தையும், முறிக்கலைச் சுருக்கு - முறிக்கலையின் சுருக்கினையும், கரம்பெறு - (தமது) கையிற்றாங்கிய, முனிவர் - முனிவரது, விழி விடும் எரியும் - கண்கள் வெளிப்படுத்துகிற சினத்தீயும், சாபம் - சபித்தலையுடைய, வாய் நெருப்பும் - வாய்த்தீயும், நிலைவிட்டு - தத்தம் நிலையினின்றும் நீங்கி, படராது-பரவாவண்ணம், காணியில் நிலைக்க-தத்தம் காணியில் நிலைபெற் றிருக்கும்படி, சிறுகாற்று உழலும் - சிறுகாற்றலவாநின்ற, அசை - அசையாநின்ற, குழை - குழையையணிந்த, செவிய-திருச்செவியினையுடையோய்.

(வி-ரை.) ஆறிரண்டருக்கராவார் - தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவசுவான், பூஷன், சவித்துரு, துவட்டன் என்பவர். ஒரு சூரியனே சித்திரைமாதமுதலாக மேடமுதலிய ஒவ்வோ ரிராசியிற் பிரவேசித்து இப்பெயர்களைப்பெறுவனென்பர். இப்பன்னிரண்டு சூரியரை த்வாதசாதித்தர் என்பர் வடநூலார். அவிர்தல் - பிரகாசித்தல். கதிர் - கிரணம். கனல் - ஆகுபெயர். மதி சந்திரனுக்குப் பொதுப்பெயராயினும், முடித்த செஞ்சடை யொருத்தன் என மேல்வருதலால் ஒருகலைச் சந்திரனைக் குறித்தது. வெள்ளை-இயற்கையடை. வெள்ளை மதி செஞ்சடை யென்றது முரண்டொடை. ஒருத்தன்-தனியன், "தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடி" என்றார் பெரியாரும். தனியன் என்பதனை அத்வீதியன் என்பர் வடநூலார். உட

யுயிர்-உடம்போடுகூடிய உயிர்கள். அநலம்-வடசொல். தென்கீழ்த் திசைப்பாலகனுதலால் அக்கினிதேவனைத் 'தென்கீழ்த்திசையோன்' என்றார். தெறுதரல் - எரித்தல், பகுதி தெறுதா. தீ-ஆகுபெயர். ஊழித்தீ - வடவைத்தீ; இது பெண்குதிரை வடிவமா யிருப்பது. இது கடனீர் தன்னெல்லை கடவாது நிற்றற்பொருட்டுப் படைப்புக் காலத்தே கடனடுவே யமைக்கப்பட்டது. உடற்றுபு - செய வெனெச்சத்திரிபு. சிகை - கொழுந்து; இதனை ஜ்வாலை யென்பர் வடநூலார். பாசம்-கயிறு; அது கரகம் என மேல் வரலால் உறிக்கயிறு என்றுரைக்கலாயிற்று. பாசத்தா ணியன்ற வுறி யென்பர் சில ராகுபெயரான், அப்பொருள் சிறவாமை யுய்த்துணர்க. விதி - வேதவிதி (நியமம்). முக்கோல் - மூன்று மூங்கிலை யொருங்கு சேர்த்துக் கட்டி விரதியர் கைக்கொண் டிருப்பது. இது மும்மூர்த்திகளு மொன்றாகிய முதற்கடவுளதுருவ மென்றும், மூன்று தத்துவரூபமென்றும் குறிப்பது. இதனை த்ரிதண்டம் என்றும், இதனை யுடையாரை த்ரிதண்ட ஸந்யாஸிகள் என்றுங் கூறுப வடநூலார். முறிக் கலைச் சுருக்கு - துண்டித்த கலையின் சுருக்கு. சுருக்கு - சுருக்கப்பட்டது. கலை-துணி, இது தவத்தினரது தண்டிற் கட்டியிருப்பது; இதனை அவராவிழ்த்துச் சுத்தாசமந முதலிய செய்தற்குத் தங்கையிற் சுருக்கிக்கொள்வது இயல்பாதலான். அவரை 'முறிக்கலைச் சுருக்குக் கரம்பெறு முனிவர்' என்றார். முனிவர் - கடவுளை இடையறாது மநநஞ் செய்வோர் (மநந சீலர்) என்பது பொருள். இது வடசொல்லென் றறியாதார் சிலர் தென்சொல்லெனக்கொண்டு உலகத்தை வெறுத்தவர் என்றுரைப்பர், அது பொருந்தாதென்பதுய்த்துணர்க. கோபாக்நி வெளிப் படும்வாயில் விழியாதலால் 'விழிவிடு மெரி' என்றார். சாபவாய் நெருப்பு என்றது வாயினாற் சபித்தலை. காணி - உரிமை நிலம். ஆறிரண்டருக்க ரவிர் கதிர்க் கனல் முதலிய வெல்லாக் கனல்களும் தத்தநிலைவிட்டுப் பெயராதிருத்தற் காரணம் மூத்தபிள்ளையாரது திருச்செவி யசைவா னுளதாஞ் சிறு காற்றென்பது இத்தொடர்ப் பொருள்.

'ஆம்பல்' என்பதுமுதல் 'கரத்த' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

(ப-ரை.) ஆம்பல் - யானையின், முகம் - முகத்தினையுடைய, அரக்கன் - அரக்கனானவன், கிளையொடு - தன் சுற்றத்தாருடன், மறிய - தமோற, பெருங்காற்று விடுத்த - பெருங்காற்றினை வெளிப்

படுத்திய, நீடு - நெடிய, புழை - தொளையையுடைய, கரத்த - துதிக்கையினையுடையோய்.

'கருமிடற்று' என்பதுமுதல் 'பதத்த' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) செங்கனி வேண்டி - செங்கனியை விரும்பி, கருமிடறு - நீலகண்டத்தையுடைய, கடவுளை - கடவுளாகிய சிவபெருமானை, இடம்கொள் - இடத்தையுடைய, ஞாலத்து - புவியுருவாகக்கொண்டு, வலம்கொள்ளும் - வலம்வந்த, பதத்த - திருவடியையுடையோய்.

'குண்டு' என்பதுமுதல் 'கடனாதலின்' என்பதுவரை.
(23—25 வரிகள்.)

(ப-ரை). குண்டுநீர் - கடலினை, உடுத்த - புடைசூழப்பெற்ற, நெடு-பெரிதாகிய, பார்-உலகிலுள்ளாரது, எண்ணமும் - எண்ணங்களையும், எண்ணு இலக்கமொடு நண்ணிடு-எண்ணப்படாத இலக்கத்தோடு கூடிய, துயரமும் - துன்பங்களையும், அளந்துசொடு - அளவிட்டுக்கொண்டு, முடித்தல்-முடிவுசெய்தல், நின்கடன் ஆதலின் - உன் கடன்மை யாதலால்.

(வி-ரை.) குண்டு-ஆழம்; கடலினு மாழ்ந்த நீர்நிலையொன் றின்மையான் அதனைக் 'குண்டுநீர்' என்றார். பார் - ஆகுபெயர்.

'கான்முகம்' என்பதுமுதல் 'தோகையும்' என்பதுவரை.
(33—38 வரிகள்.)

(ப-ரை.) கால் - காற்றினை, முகம் ஏற்ற - தன்னிடத்தேற்ற, தொளைகொள்-தொளையைக்கொண்ட, வாய்-வாயினையுடைய, கறங்கும்-காற்றாடியும், விசைத்த நடை-வேகமாகிய நடையோடு, போகும்-செல்லுகின்ற, சகடக்காலும் - பண்டியினுருளையும், நீட்டி - நீளச்செலுத்தி, வலிதள்ளிய - திணிவினால் தள்ளப்பட்ட, நெடுங்கயிற்று ஊசலும் - நெடிய கயிற்றிற்பிணித்த ஊசலும், அலமருகாலும்-சுழற்காற்றும், அலகைத்தேரும் - பேய்த்தேரும், குறைதரு - தாழ்தற்குரிய, நிறைதரு - நிறைந்த, பிறவியின் கலக்கமும் - பிறப்புத் தடுமாற்றத்தையும், என்மனத்து எழுந்த-என்னுள்ளத்திற் றோற்றின, புல்மொழித் தொடையும் - புல்லிய சொற்றொடையையும்.

(வி-ரை.) ஞாகம் - இடம். சகடம் - பண்டி. அலமரல் - சுழலல்; பகுதி அலமா. பேய்த்தேர் - கானனீர். கலக்கம் - துன்பமெனினுமாம்.

'அருள்' என்பதுமுதல் 'இன்றேன' என்பதுவரை.

(39—40 வரிகள்.)

(ப-ரை.) அருள் - அருண்மழையை, பொழி - பொழிகின்ற, கடைக்கண் தாக்கி - கடைக்கண்பார்வை செலுத்தி, இன்று - இப்பொழுது, ஐய-ஐயனே, தெருள் உற - தெளிவுபொருந்த, முடிப்பை என-முடிப்பாயென்று கருதி.

(வி-ரை.) பொழியென மேல்வருதலால் அருள் என்பதற்கு அருள்மழையென் றுரைக்கலாயிற்று. தாக்கல் - படச்செய்தல். ஐய எனபதற்கு அழகாக, வியப்ப என்றுரைத்தலுமாம்.

'வரியுடல்' என்பதுமுதல் 'உலண்டதுபோல' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) நூல்-நூலினால், வரி - கீற்றுக்களையுடைய, உடல் - தன்னுடம்பை, சூழ - வளைய, குடம்பை - கூட்டினை, தெற்றி-உண்டாக்கி, போக்கு - தான் போதற்குரிய, வழி படையாது - வழியையுண்டாக்கிக்கொள்ளாது, உள் உயிர் விடுத்தலின் - அக்கூட்டினுள்ளே யுயிர்விடுத்தலால், அறிவு புறம்போய-அறிவில்லாத, உலண்டு போல - கோற்புழுப்போல;

(வி-ரை.) உலண்டது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. விடுத்தலின் என்பதில் இன் என்னுமைந்தாவது மூன்றுவதன் கருவிப்பொருட்டு. அறிவு புறம்போய-அறிவுநீங்கின, படையாது விடுத்தலின் எனவியையும்.

'கடற்றிரை' என்பதுமுதல் 'வணங்குநும்' என்பதுவரை.

(29—32 வரிகள்.)

(ப-ரை.) கடல் - கடலின், திரை - அலைகள், சிறுக - சிறுகும்படி, மலக்கு - கலங்குதற்கேதுவாகிய, துயர் காட்டும் - துன்பத்தையுண்டாக்குகிற, உடல் என்னும்-உடம்பென்கிற, சிறை நடுவு புக்கு - சிறைநடுவேபுகுந்து, வாயில் போகாது-வாயிலிற்செல்லாது, உணங்குறும் - வருந்துகின்ற, வெள்ளறிவேமும்-வெள்ளறிவினையுடையேமாகிய யாமும், ஆரணம் போற்றும் - வேதங்கள் போற்றுகிற, நின்

கால் - உன் திருவடியை, உற - மிகுதியாக, வணங்குதும் - வணங்கா நின்றோம்.

(வி-ரை.) கடற்றிரை சிறுக என்றது கடற்றிரைகளினு மிகப் பலவாக என்றபடி. மலங்கல் - கலங்கல். வாயில் - வாய்தல் (சுழும் னையென்னும் வாயில்). சிறை - காவல். உணங்குறு - ஒருசொல். வெள்ளறிவு-அறியாமை. போற்றுதல் - துதித்தல். ஆரணம்போற்று நின்காலுற வணங்குதும் என்றது அறிவுருவாகிய வேதங்கள் துதித் தற்குரிய நின் திருவடியை வெள்ளறிவேம் துதித்தற்கியலாமையால் உறவணங்குதும் என்றபடி.

முகத்த, கடத்த, எயிற்ற, செவிய, கரத்த, பதத்த, எண்ணமுந் துயரமு முடித்தல் நின்கடனாதலின் முடிப்பையெனக் கருதி வெள் ளறிவேமும் நின்காலுற வணங்குதும் என வினைமுடிவு செய்க.

வெள்ளறிவேம் - ஒருமைத்தன்மைப்பன்மை. முடித்தல் என்ப தற்கு நாசமாக்குதலும் முற்றுறச்செய்தலும் பொருளாதலால் பிற விக் கலக்கத்தை நாசஞ்செய்வாயென்றும், என் புன்மொழித் தொ டையை முற்றுவிப்பாயென்றும் உரைத்துக்கொள்க.

முருகக் கடவுள் துதி.

நேரிசை யாசிரியப்பா.

பாய்திரை யுடுத்த ஞாலமுடி வென்ன
முடங்குளை முகத்துப் பஃறே ளவுணனொடு
மிடையுடு வுதிரச் செங்களம் பொருது
ஞாட்பினுண் மறைந்து நடுவறு வரத்தால்
வடவைநெடு நாக்கின் கிளைகள்விரிந் தென்னச்
செந்துகிர் படருந் திரைக்கடற் புக்குக்
கிடந்தெரி வடவையிற் றளிர்முக மீன்று
திரையெறி மலைகளிற் கவடுபல போக்கிக்
கற்செறி பாசியிற் சினைக்குழை பொதுளி
அகறிரைப் பரப்பிற் சடையசைந் தலையாது
கீழிணர் நின்ற மேற்பகை மாவின்
ஒருட லிரண்டு கூறுபட விடுத்த
அழியாப் பேரளி யுமைக்க ணின்று
தற்பெயர் புணர்த்திக் கற்பினொடு கொடுத்

அமையா வென்றி யரத்த நெடுவேலோய்
கீழ்மே னின்றவக் கொடுந்தொழிற் கொக்கின்
கூறிரண் டாய வொருபங் கெழுந்து
மாயாப் பெருவரத் தொருமயி லாகிப்
புடவிவைத் தாற்றிய பஃறலைப் பாந்தள்
மண்சிறுக விரித்த மணிப்படந் தூக்கி
விழுங்கிய பல்கதிர் வாய்தொறு முமிழ்ந்தென
மணிநிரை சிந்தி மண்புக வலைப்பக்
கார்விரித் தோங்கிய மலைத்தலைக் கதிரென
ஓவறப் போகிய சிறைவிரி முதுகிற்
புவனங் காணப் புகழொடு பொலிந்தோய்
போழ்படக் கிடந்த வொருபங் கெழுந்து
மின்னன் மாண்ட கவிரலர் பூத்த
சென்னி வாரணக் கொடும்பகை யாகித்
தேவர்மெய் பணிப்புற வான்மிடை யுடுத்திரள்
பொரியிற் கொறிப்பப் புரிந்தபொரு ளுடித்
தாமரை பழித்த கைமருங் கமைத்தோய்
ஒருமையு ளொருங்கி யிருகைநெய் வார்த்து
நாரத னோம்பிய செந்தீக் கொடுத்த
திருகுபுரி கோட்டுத் தகர்வரு மதியோய்
முலையென விரண்டு முரட்குவடு மரீஇக்
குழற்காடு சுமந்த யானைமகட் புணர்ந்தோய்
செங்கட் குறவர் கருங்காட்டு வளர்த்த
பைங்கொடி வள்ளி படர்ந்தபுய மலையோய்
இமயம் பூத்த சுனைமாண் டொட்டில்
அறிவிற் றங்கி யறுதாய் முலையுண்
டுழன்மதில் சுட்ட தழனகைப் பெருமான்
வணங்கிநின் றேத்தக் குருமொழி வைத்தோய்
ஓமெனு மெழுத்திற் பிரமம் பேசிய
நான்மறை விதியை நடுங்குசிறை வைத்துப்
படைப்புமுதன் மாய வான்முதற் கூடித்
தாதையு மிரப்பத் தளையது விடுத்தோய்

கூடஞ் சுமந்த நெடுமுடி நேரி
விண்டடை யாது மண்புகப் புதைத்த
குறுமுனி தேற நெடுமறை விரித்தோய்
ஆறுதிரு வெழுத்துங் கூறுநிலை கண்டு
நின்றாட் புகழுநர் கண்ணுட் பொலிந்தோய்
மணிக்கா லறிஞர் பெருங்குடித் தோன்றி
இறையோன் பொருட்குப் பரணர்முதல் கேட்
பெருந்தமிழ் விரித்த வருந்தமிழ்ப் புலவனும்
பாய்பா ரறிய நீயே யாதலின்
வெட்சிமலர் சூழ்ந்த நின்னிரு கழற்கால்
குழந்தை யன்பினொடு சென்னிதலைக் கொள்ளு
அறிவுநிலை கூடாச் சின்மொழி கொண்டு
கடவுட் கூறா வுலவா வருத்தியும்
சநநப் பிழையுந் தள்ளாக் காமமும்
தற்படு துயரமு மடைவுகெட் டிறத்தலும்
தென்புலக் கோமகன் றீத்தெறு தண்டமும்
நரகொடு துறக்கத் துழல்வரு பிழையும்
நீளா திம்பரின் முடித்து
மீளாக் காட்சி தருதியின் றெனவே.

'பாய்திரை' என்பதுமுதல் 'நெடுவேலோய்' என்பதுவரை.

(1—15 வரிகள்.)

(ப-ரை.) பாய்-பரந்த, திரை-கடலினை, உடுத்த - சூழப்பெற்ற, ஞாலம் - உலகத்தார், முடிவு என்ன - யுகமுடிவென்னுமாறு, பல் தோள் - பல தோள்களையுடைய, முடங்கு உளை முகத்து ஆவுணனொடு - சிங்கமுகாசுரனுடனே, மிடை - (ஆகாயத்தில்) நெருங்கின, உடு - உடுக்கணங்கள், உதிர - உதிரும்படி, செங்களம் பொருது - போர்க்களத்திற் போர்செய்து, நடுவு அறு - (சாவாமல்) பாதியிலரசுரிமை யறுதற்குக் காரணமாகிய, வரத்தால் - வரத்தினால், ஞாட்பினுள் - போர்க்களத்தில், மறைந்து - ஒளித்து, வடவை - வடவைத் தீயினது, நெடு நாக்கின் கிளைகள் - நெடிய நாவின் கிளைகள், விரிந்தென்ன - விரிந்தாற்போல, செம் துகிர் - செம்பவளக்கொடிகள், படரும் - படர்தற்கிடமாகிய, திரைக்கடல் - அலைகளையுடைய

கடலினிடத்தே, புக்கு - புகுந்து, அகல் - அகன்ற, திரை - அலைகளையுடைய, பரப்பில் - விஸ்தீர்ணமாகிய அக்கடலில், கிடந்து எரி - எரியாநிற்கிற, வடவையின் - வடவைத் தீப்போல, முகம் - தலைனிடத்தில், தளிர் ஈன்று - தளிர்விட்டு, திரை எறி-அலையெறிகின்ற, மலைகளின் - மலைகளைப்போல, கவடு பலபோக்கி-பலகோடுகள்விட்டு, கல்செறி பாசியின் - கல்லிற்செறிந்த பாசிபோல, சினை - கிளைகளில், குழை பொதுளி-இலைதழைத்து, சடை அசைந்து - வேரசைந்து, இணர் - பூங்கொத்துக்கள், அலையாது - அசையாமல், கீழ்நின்ற - கீழாய்நின்ற, மேற்பகை - முற்பகையாகிய, மாவின் - மாவினது, ஓர் உடல் - ஒருடம்பானது, இரண்டு கூறுபட - இருகூறும்படி, விடுத்த - எவின, அழியா - குறையாத, பேர் அளி - பெருங்கருணையையுடைய, உமை - பார்வதி, கண்நின்று - எதிர்நின்று, தன்பெயர் புணர்த்தி - தன்பெயரைச் சாத்தி, கற்பினொடு கொடுத்த - கற்பித்தலுடனே கொடுத்த, அமையா வென்றி - அடங்காத வெற்றியினையுடைய, நெடு - நீண்ட, அரத்த வேலோய்-செவ்வேற்படையை யுடையோய்.

(வி-ரை.) ஞாலம் - ஆகுபெயர். திரை-ஆகுபெயர். முடங்குளை-அன்மொழித்தொகைக் காரணப்பெயர். ஞாட்பு-போர்க்களம். நடுவறு ஆமாவது-சூரன் முற்பிறப்பிலரசனாகி ஒரிருடியுட னுண்மைகேட்ப அவர் சுப்பிரமணியர்க்கு மயிலுங் கோழியு மாகச் செல்லென்றது. ஆரம்-வேண்டுகோள். நடுவுறு வரம் என்று பாடமாயின் உண்மையாகப் பொருந்துதற்குக் காரணமாகிய வரமென்க. முகம்-எழனுருபு. மலைகளின் என்பதில் இன் ஐந்தாவதனுப்புப்பொருட்டு. கவடு - கோடு (பெருங்கிளை). திரைப்பரப்பு - கடல் எனினுமாம். போன ஜநநத்து உரிமை நீங்கி யடைந்தகாலத்து முருகக்கடவுள் நீயெனக்குச் சொந்தருவென்றமையால் 'மேற்பகை' என்றார். உமை தற்பெயர் புணர்த்திக் கொடுத்தலாவது-சத்தியென்னும் பெயர் புணர்த்திக் கொடுத்தல். கற்பாவது - சூரனைச் சங்கரிக்கக்கடவையென்று கற்பித்தல். கற்பு - தொழிற்பெயர். அமைதல் - ஒடுங்குதல்.

'கீழ்மேல்' என்பதுமுதல் 'போலிந்தோய்' என்பதுவரை.

(16—25 வரிகள்.)

(ப-ரை) கீழ் மேல் நின்ற - கீழ் மேலாக நின்ற, அ - அந்த, கொடுந் தொழில் - தீத்தொழிலையுடைய, கொக்கின் - மாவினது, இரண்டு கூறு ஆய-இரு கூறாகிய, ஒரு பங்கு எழுந்த-ஒரு கூறெழு

ந்து, பெருவரத்து-பெரியவரத்தினால், மாயா - அழியாத, ஒரு மயில் ஆகி-ஒருமயிலுருவாகி, புடவி வைத்து ஆற்றிய-பூமியைத் தலையில் வைத்துத்தாங்கிய, பல் தலை பாந்தள்-ஆதிசேடன், மண் சிறுக-மண்ணும் சிறுகும்படி, விரித்த-பரப்பின, மணிப்படம்-மணிப்படத்தை, தூக்கி - கொத்தி மேலேயெடுத்து, விழுங்கிய - (முன்னே) விழுங்கின, பல் கதிர் - பல கதிர்களை, வாய்தொறும் - வாய்களெல்லாவற்றாலும், உமிழ்ந்தென - உமிழ்ந்தாற்போல, மணி நிரை - மணி வரிசையை, மண் புக சிந்தி - மண்ணிற்புகுமாறு சிதறி, அலைப்ப - வருத்தலால், கார் - மேகமானது, விரித்து ஓங்கிய - பரவப்பெற்று உயர்ந்த, மலைத்தலை-மலையினிடத்தே, கதிர் என-ஞாயிறு பொலிந்தாற்போல, ஓ அற - ஒழிவற, போகிய - நீண்ட, சிறை விரி - சிறை விரியாநின்ற, முதுகில் - அதன் முதுகிலே, புவநம் காண - உலகங் காணும்படி, புகழொடு பொலிந்தோய் - புகழுடனே விளங்குவோய்.

(வி-ரை.) வைத்தாற்றிய வென்பது இறந்தகாலப் பொருடந்து நின்றது. மண்ணிற் சிறப்பும்மை தொக்கது. புரிந்த பொருள் - வாரணமாதல். கீழ் - வேர். கொக்கு - மாமரம். மாய்தல் - அழிதல். ஆற்றல்-தாங்கல். பாந்தள் - பாம்பு, இது புடவிவைத்தாற்றிய பஃறலையென்ற விசேடணத்தால் ஆதிசேடனை யுணர்த்திற்று. மணி - அரதநம். கதிர் - ஆகுபெயர். சிந்தல் - சிதறல். அலைத்தல் - வருத்தல். கார் - ஆகுபெயர். மலைத்தலை யென்பதில் தலை ஏழனுருபு. ஓ - ஓரெழுத் தொருமொழியாகிய முதனிலைத் தொழிற்பெயர். புவநம் - ஆகுபெயர்.

'போழ்பட' என்பதுமுதல் 'அமைத்தோய்' என்பதுவரை.

(26—31 வரிகள்.)

(ப-ரை.) போழ்பட கிடந்த - பிளவுபடக் கிடந்த, ஒருபங்கு எழுந்து - வேறொரு கூறெழுந்து, கொடும்பகை - கொடிய பகையாகிய, மின்னல் மாண்ட - விளக்கமாகிய அழகு மாட்சிமைப்பட்ட, கவிர் அலர் - முருக்கம்பூப்போன்ற, பூத்த - செஞ்சூட்டுப் பொலிவு பெற்ற, சென்னி - தலையையுடைய, வாரணம் ஆகி - கோழியாகி, தேவர் மெய் - தேவர்களுடம்பு, பனிப்பு உற - நடுக்கமடைய, பொரி மின்-பொரிபோல, வான் - ஆகாயத்தில், மிடை - நெருங்கின, உடு திரள் - மீன்கணங்களை, கொறிப்ப - கொறித்தலால், புரிந்த - அது விரும்பின, பொருள் - கருமத்தை, நாடி - (தேவர்க்கு இடுக்கணில்

லாது) கருதி, தாமரை பழித்த - தாமரைமலரை யிகழ்ந்த, கை - திருக்காத்தின், மருங்கு - வலப்பக்கத்தில், அமைத்தோய் - கொடியாக அமைத்துக்கொண்டோய்.

(வி-ரை.) மின்னல் - மின்னுதல். அலர் - தொழிலாகுபெயர். சூட்டு-உச்சிக்கொண்டை. வாரணம் - சேவற்கோழி. கொறித்தல் - பல்லினாற் கறித்தல். புரிதல் - விரும்புதல். நாடல் - திருவுளம்பற்றல். மருங்கு - பக்கம், அது ஈண்டு வலப்பக்கத்தைக் குறித்தது.

'ஒருமையுள்' என்பதுமுதல் 'மதியோய்' என்பதுவரை.

(32—34 வரிகள்.)

(ப-ரை.) ஒருமையுள் ஒருங்கி - ஐம்பொறியு மொருவழியாக மனத்தைச் செல்லுமிடத்துச் செல்லவிடாது ஒருவழிப்படுத்தி, நாரதன் - நாரதமுனிவன், இருகை நெய் வார்த்து - இருகையாலும் நெய்யை வார்த்து, ஓம்பிய - செய்துமுடித்த, செந்தீ - வேள்வியால், கொடுத்த - தரப்பட்ட, திருகு - திருகுதலையுடைத்தாய், புரிமுறுக்கோடு கூடின, கோட்டு - கொம்பினையுடைய, தகர் - தகரின் மேல், வரும் - வருகின்ற, மதியோய் - மதியினையுடையோய்.

(வி-ரை.) ஒருமை-ஒருவழியாக. ஒருங்கல் - ஒருவழிப்படுத்தல். ஓம்புதல் - அரக்கர் முதலாயினோரால் இடையூறு நேராது காப்பாற்றல் எனினுமாம். செந்தீ-ஆகுபெயர் திருகு-முறுக்கு. பொரி யென்பது பாடமாயின் பொருக்கினையுடைய என்க. கோடு - கொம்பு. தகரிவரும் என்றும் பாடம்; இதற்குத் தகரேறிவருகிற என்றுரைக்க; தகர்-ஆட்டுக்கடா. மதி-அறிவு. குழவிப்பருவத்தே இவ்வீரத்தொழி னிகழ்த்தினமையால் 'மதியோய்' என்றார்.

'முலை' என்பதுமுதல் 'புணர்ந்தோய்' என்பதுவரை.

(35—36 வரிகள்.)

(ப-ரை.) முரண்-மாறுபாட்டினையுடைய, இரண்டு குவடு என- இரண்டு மலைகளென்னுமாறு, முலைமரீஇ - முலைகளைப் பொருந்தி, குழற்காடு சுமந்த - கூந்தற் காட்டினைச் சுமந்த, யானை மகள்-தெய்வயானையை, புணர்ந்தோய் - சேர்ந்தோய்.

(வி-ரை.) மரீஇ யென்பதற்குப் பகுதி மருவு. முலைமரீஇயென்றது குவடுமரீஇ, யெனினுமாம். என்னெனின், யானைமகளென்ற

தில் யானையாகிய மகளென் றோசையுண்டாதலால், யானையானது மகளானதற் கேற்பத் தனக்குரிய குறிஞ்சியாகிய மலையையும் தானுலவுங் காட்டையும் முலையாகவும் குழலாகவும் மருவிச்சுமந்த தென்றற்கு 'யானைமகள்' என்றார். காடு மிகுதிகுறித்து வந்தது.

'செங்கண்' என்பதுமுதல் 'மலையோய்' என்பதுவரை.
(37—38 வரிகள்.)

(ப-ரை.) செம்கண் - செவத்த கண்களையுடைய, குறவர் - குன்றவாணர், கருங்காட்டு - கரியகாட்டில், வளர்த்த - காப்பாற்றின, வள்ளி பை கொடி-வள்ளியாகிய பசியகொடியானது, படர்ந்த-படரப்பெற்ற, புயம் - திருத்தோள்களாகிய, மலையோய் - மலையினையுடையோய்.

(வி-ரை.) செங்கண் கருங்காடு என்றது முரண்டொடை. பைங்கொடி செவ்விக்கொடியுமாம். கொடிக்குப் படர்தலும் மலைக்கு அசற்கிடமாயிருத்தலும் இயல்பெனபது போதர 'பைங்கொடி வள்ளி படர்ந்த' புயமலை யென்றார்.

'இமயம்' என்பதுமுதல் 'வைத்தோய்' என்பதுவரை.
(39-42 வரிகள்.)

(ப-ரை.) இமயம் பூத்த-இமயமலையிலுண்டாகிய, மாண்-மாட்சிமைபொருந்திய, சுனை - பொய்கையிலுண்டாகிய, தொட்டில்-மலராகிய தொட்டிலில், அறிவின் - அறிவோடு, தங்கி - பொருந்தி, அறுதாய் முலை உண்டு - ஆறுதாயர் முலையுண்டு, உழல் - திரியாநின்ற, மதில்-முப்புரத்தை, நகை தழல்-சிரிப்பாகிய நெருப்பினால், சுட்ட - எரித்த, பெருமான் - சிவபெருமானனவர், வணங்கி நின்று ஏத்த - தொழுதுநின்று துதிக்க, குருமொழி வைத்தோய்-அவர்க்குக் குருமொழியை வைத்தோய்.

(வி-ரை.) தங்கி உண்டு வைத்தோய் எனக் கூட்டுக. சிவபெருமான் உமையொடு புணர்ந்துண்டாக்கிய கருவை இந்திரன் பல கண்டங்களாகச் சேதித்தலால் எஞ்சின கருவை அமரர் சேனாபதியெனச் சமாதியினுணர்ந்து அவன்பா லேற்றுக்கொண்டுபோன முனிவரெழுவரும் இறைவன் கண்டமாக்கிய கருவைக் கவர்ந்து அங்கியிற் பெய்து, அக்கருவைக் கடவுட் கற்பினையுடைய அருந்ததி யொழியக் கார்த்திகையாகிய அறுவரும் தம் கணவர் வேண்ட வயின்று சூற்கொண்டு சரவணப்பொய்கை மலரி லீன்றமையால் 'முலையுண்டு' என்றார்.

'பதுமப்பாயல்'' எனப் பரிபாடலிற் கூறப்பட்டமையாலு மலரைத் தொட்டிலாக்கினர். அறிவின் என்னுமின் மூன்றனுருபின்பொருளது. மூலை-மூலைப்பால் (ஆகுபெயர்). உழல் மதில்-ஐங்கமபட்டணங்கள். இவை மூன்றென்னுந் தொகையவாய் இரும்பு பொன் வெள்ளி என்பவைகளானியன்றன. "இரும்புறுமாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர், துரும்புறச்செற்ற கொற்றத்தெம்பிரான்றில்லைச் சூழ்பொழிற்கே'' என்றார் மணிவாசகரும். தழனகை-தழலாகிய நகை, தழலையுடைய நகை என விரித்தலுமாம். பெருமான்-பெருமையுடையான். குருசிஷ்ய பாவந்தோன்ற 'வணங்கினனேறத்தக் குருமொழி வைத்தோய்' என்றார். குருமொழி வைத்தலாவது உபதேசித்தல். அது ஓங்காரார்த்தோபதேசம். இதனை,

> "தேமொழி யத்தன் பெறவோந் தனக்கன்று சேணுலகத்
> தேமொழி யத்தஞ் சினங்காட் டவுணரைச் சேமகரத்
> தேமொழி யத்தம் புயமலர் சூடிகை சிந்தவென்ற
> தேமொழி யத்தம் பதினு லுலகுமந் தித்ததொன்றே.''

என்றற்றொடக்கத்தனவற்றா னினிதுணர்க.

'ஓமெனும்' என்பதுமுதல் 'விடுத்தோய்' என்பதுவரை.
(43—46 வரிகள்.)

(ப-ரை.) பிரமம் பேசிய - பிரமமாகப்பேசின, நால்மறை விதியை-நான்கு வேதங்களையுடைய பிரமனை, ஓம் என்னும் எழுத்தின் - ஓமென்னு மக்கரத்தால், நடுங்கு - நடுங்குதற் கேதுவாகிய, சிறை வைத்து - சிறைப்படுத்தி, படைப்பு முதல் மாய - படைத்தல் முதலிய தொழில்கள் நடவாமையாலே, கூடி-அவை நடக்கும்படி, வான் முதல் - தேவர்களும், தாதையும் - தந்தையாகிய சிவபிரானும், இரப்ப - வேண்ட, தளை விடுத்தோய் - விலங்கு விடுத்தோய்.

(வி-ரை.) எழுத்தின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது. ஓமென்னுமெழுத்து - பிரணவாக்கரம். பிரமம்பேசல்-தானே பிரமமென்றல். 'வேதங்கட் கலகிலவேனும், பயின்று வருவன நான்கே யாதலின் 'நான்மறை' என்றார். விதி - முதனிலைத் தொழிலாகுபெயர். விதித்தல் - படைத்தல். சிறை - சிறைச்சாலை (காவல்). வான் - ஆகுபெயர். படைப்பு முதலாய தொழில்கள் இவனனே நடவாவேனும் இவனது படைப்பு நிகழ்ந்தாலன்றே யேனையாது அளிப்பழிப்புக்கள் நிகழ்வது, ஆதலால்

படைப்புமுதல்மாய என்பதற்குப் படைப்புமுதலாய தொழில் நடவாமையால் எனப் பொருளுரைக்கலாயிற்று. இவ்வாறன்றி, படைப்புமுதல் - படைப்பாகிய முதற்றொழில் என்றுரைத்தலுமாம். தளை - விலங்கு. சிறைவைத்து சிறைவிடுத்தோய் என்னாது தளை விடுத்தோய் என்றல் முரணுமேயெனின், முரணாது, என்னை? சிறை வைக்குங்கால் தளையிட்டே வைப்பது பெருவழக்காதலினென்க. மாயவென்னும் செயவெனெச்சம் காரணப்பொருட்டு. கூடியென்பதைக் கூடவெனத்திரிக்க. அது - பகுதிப்பொருள் விகுதி. தாதையும் என்னுமும்மை இறந்தது தழீஇயது, உயர்வு சிறப்புமாம். பேசிய விதியை யெனவும் வைத்துவிடுத்தோய் எனவுமியையும்.

'கூடம்' என்பதுமுதல் 'விரித்தோய்' என்பதுவரை.

(47-49 வரிகள்.)

(ப-ரை.) கூடம் சுமந்த - கூடமானது தாங்கிய, நெடு முடி - நெடிய குவடுகளையுடைய, நேரி - நேரிமலையானது, விண் தடையாது - ஆகாய வழியைத் தடுக்காது, மண் புக - மண்ணிலழுந்தும்படி, புதைத்த - மறைத்த, குறுமுனி - அகத்திய முனிவன், தேற - தெளியும் வண்ணம், நெடுமறை - பெரிதாகிய வேதார்த்தத்தை, விரித்தோய் - விரித்துரைத்தோய்.

(வி-ரை.) கூடம்-மன்றாகச் செய்யப்பட்ட கோட்டம். "மாடஞ்செய்" என்னு முதற்குறிப்புள்ள திருக்கோவையார் செய்யுளில் "கூடஞ்செய் சாரற் கொடிச்சியென்றே நின்று கூறுவதே" என்பதனுரையை மீண்டு நினைக்க. குவடு-சிகரம். கூடஞ்சுமந்த என்பதற்கு மரத்திரளாற் கூடஞ்செய்தாற்போன்ற எனினுமாம். நேரி - சோழதேயத்துள்ள தோர்மலை. தடைத்தல் - தடுத்தல். விண்-ஆகுபெயர். அங்குட்டப் பரிமாணராதலால் அகத்தியரை 'குறுமுனி' என்றும், உருவிற் குறியரேனும் நெடுமறை விரிப்பொருளை யறியுமறிவினரென்பது தோன்ற 'நெடுமறை விரித்தோய்' என்றும் கூறினார். குறுமுனி நெடுமறை யென்பன முரண்டொடை. முனி - மகசீலன், இத்தொடரான் இவர் அகத்தியர்க்குப் பரமாசாரிய வென்பதினிது விளக்கப்பட்டது.

அறமுதலிய நாற்பொருளும் மறைந்திருத்தற் கிடனாதலால் வேதத்தை மறையென்பது தமிழறிஞர் வழக்கு. வேதம் என்பதற்குச் சதுர்வித புருஷார்த்தங்களையும் அறிதற் கருவியாயுள்ளது எனப் பொருள் கூறுவர் வடநூலார். வித்-தாது, (பகுதி).

'ஆறு' என்பதுமுதல் 'பொலிந்தோய்' என்பதுவரை.

(50—51 வரிகள்.)

(ப-ரை.) ஆறு திரு எழுத்தும் - ஆறு திருவெழுத்துக்களும், கூறும் - சொல்லுகின்ற, நிலை - நிலையை, கண்டு - அறிந்து, நின் - உனது, தாள் - திருவடியை, புகழுநர் - துதிப்போரது, கண் உள் - கண்ணினுள்ளே, பொலிந்தோய் - விளங்குவோய்.

(வி-ரை.) ஆறு திருவெழுத்து என்றது "குமாராயநம" என்னும் மந்திரத்தை. இது கூறுநிலை மந்திர சாத்திரத்தானுணர்க. கண்டு என்ற நீண்டறிந்தென்னும் பொருட்டு. கண் முகக்கண் அகக்கண் இரண்டுமாம். அகக்கண் - அறிவு. பொலிதல்-மிக்கு விளங்குதல்.

'மணிக்காலறிஞர்' என்பதுமுதல் 'நீயேயாதலின்' என்பதுவரை.

(52—55 வரிகள்.)

(ப-ரை.) மணிக்கால்-அரதநப் பிறப்பிடத்தை, அறிஞர் - அறிவோராகிய மதுரை வாணிகரது, பெருங்குடி - பெரிய குடியில், தோன்றி - பிறந்து, இறையோன் பொருட்கு - இறையோன் கூறின பொருட் கூற்றிற்கு, பரணர்முதல் கேட்ப - பரணர் முதலாயினோர் கேட்க, பெருந்தமிழ் - பெரிய தமிழில், பாய - பரந்த, பார் அறிய - உலகிலுள்ளார் அறியும்படி, விரித்த-பொருள் விரித்த, அருந்தமிழ்ப் புலவனும்-அரிய தமிழ்ப்புலவனும், நீயே ஆதலின்-நீயேயாதலால்.

(வி-ரை.) கால் - பிறப்பிடம். இறையோன் பொருள் - இறையனாரகப்பொருள். பரணர் முதலாயினோர்-பரணர் முதலாகிய கடைச்சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மர். பாய் - பாய வென்பதனீறு குறைந்தது. பார் - ஆகுபெயர். புலவனும் என்னுமும்மை யெண்ணும்மை, இறந்தது தழீஇயதுமாம். வணிகர் பெருங்குடியிற் றோன்றி யென்றது பூரிகிழார்க்கு உருத்திர சன்மராகத் தோன்றி யென்றவாறு. தமிழில் எழுத்துஞ் சொல்லுமேயன்றிப் பொருளின்மையால் பாண்டியனுஞ் சங்கத்தாரும் வேண்டிக்கொள்ள,சொக்கநாதர், "அன்பினைந்திணை" முதலாக அறுபது சூத்திரமாகப் பொருட்கூறு வகுத்தருள, அதற்கு நக்கீரர் மெய்யுரைகாண, ஆலவாய்ப் பெருமானடிகளுரைசெய்யக்கேட்டுக் கண்ணீர்வார மெய்ம்மயிர் சிலிர்ப்ப உருத்திரசன்மர் சங்கப்பலகையிலிருந்து குறிப்பிற் பொருள் விரித்தமையால் 'அருந்தமிழ்ப்புலவன்' என்றார். குறிப்பிற் பொருள் விரித்தமை

பெற்றுக்கொளின், ஐயாட்டைப் பிராயத்து மூங்கைப்பிள்ளையா யிருந்தமையானென்க.

'வேட்சிமலர்' என்பதுமுதல் 'இன்றேனவே' என்பதுவரை.

(56—65 வரிகள்.)

(ப-ரை.) அறிவுநிலைகூடா - அறிவுநிலை பெறாத, சில்மொழி கொண்டு - எமது சில சொற்களை யேற்றுக்கொண்டு, கடவுள் கூறு - கடவுளாகிய வுன்னைப் புகழாமைக் கேதுவாகிய, உலவா அருத்தியும்-கெடாத ஆசையும், சனப்பீழையும்-பிறவித்துன்பமும், தள்ளா-ஒழிக்கப்படாத, காமமும் - காமநுகர்ச்சியும், தற்படு துயரமும் - தன்னாலுண்டாகிய துன்பமும், அடைவு கெட்டு-முறைதப்பி, இறத்தலும் - நடத்தலும், தென்புலக்கோமகன் - இயமன், தீ-நெருப்புப்போல, தெறு - வருத்துகிற, தண்டமும்-ஒறுத்தற்றுன்பமும், நரகொடு துறக்கத்து - நரகத்தும் சுவர்க்கத்தும், உழல்வரு-உழலாநின்ற, பீழையும் - துன்பமும், நீளாது - நீட்டியாது, இம்பரில் - இம்மையிற்றானே, முடித்து - முடிவுசெய்து, இன்று - இப்பொழுதே, மீளா - மீளாத, காட்சி - முத்திப்பேற்றை, தருதி என - தருவை யென்றெண்ணி, வெட்சிமலர் - வெட்சிமலர்மாலை, சூழ்ந்த - அணியப்பெற்ற, நின் - உனது, கழல் - வீரக்கழலணிந்த, இருகால்-இரண்டுதிருவடிகளையும், குழந்தை அன்பினொடு - குழந்தையன்பினால், சென்னி தலைக்கொள்ளுதும் - (யாம் எமது) சிரத்திலேற்றுக்கொள்வோம்.

(வி-ரை.) நிலைகூடல் - நிலைபெறல். சின்மொழி - புன்சொல் எனினுமாம். மொழிகொண்டு என்பதில் கொண்டு மூன்றுவதன் சொல்லுருபு. உலத்தல் - கெடுதல். பிறவித்துன்பங்களாவன - தன்னாலுளவாவனவும், பிறவுயிர்களா லுளவாவனவும், தெய்வத்தாலுளவாவனவுமென மூவகையா னுளவாகுந் துன்பங்கள்; இவற்றையே ஆத்மிகம் பௌதிகம் தைவிகம் என்பர் வடநூலார். "ஊறு ளெழுந்த வுருகெழு செந்தீக்கு, நீருட் குளித்து முயலாகும் - நீருட், குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி, யொளிப்பினுங் காமஞ் சுடும்." என்பவாகலின் 'தள்ளாக்காமம்' என்றார். அடைவுகெட்டிறத்தல் - வரம்பு கடந்து நடத்தல். தென்புலம் - தென்றிசையாகிய இடம், அதற்குத் தலைவனாதலால் இயமனை 'தென்புலக் கோமகன்' என்றார். தெறுதல் - வருத்துதல். தண்டித்தலானுளதாந் துன்பத்தைத் தண்ட

மென்றூராகுபெயரான். நரகொடு என்பதில் ஒடு உம்மைப்பொருட்டு, இசைநிறையெனினுமாம். உழல்வரல்-ஒருசொல். முடித்தல் - ஒழித்தலு முற்றுவித்தலும். ஆதலால் அருத்தி முதலியவற்றை யொழித்தல் என்றும், எமது புன்சொற்பாவை முற்றுவிப்பாயென்றும் உரைத்துக்கொள்க. சின்மொழியென்றது சிலசொல்லானியன்ற பாவினை (பிரபந்தத்தை). மீளாக்காட்சி - மீளாமைக் கேதுவாகிய நினது தரிசநம் எனினும் பொருந்தும். அறிவுநிலை கூடாச் சின்மொழிகொண்டு நீளா திம்பரின் முடித்துத் தருதியின்றென நின்னிரு கழற்கால் சென்னிதலைக் கொள்ளுதும் எனவும், அருத்தி முதலியவற்றை யொழித்து மீளாக்காட்சி தருதியென நின்னிருகழற்கால் சென்னி தலைக்கொள்ளுதும் எனவு முடித்துக்கொள்க. கொள்ளுதும் என்பதற்கு வினைமுதலாகிய யாம் என்பது வருவித்துரைக்கப்பட்டது.

வேலோய் பொலிந்தோய் அமைத்தோய் மதியோய் புணர்ந்தோய் மலையோய் வைத்தோய் விடுத்தோய் விரித்தோய் பொலிந்தோய், புலவனு நீயேயாதலின், அறிவுநிலைகூடாச் சின்மொழிகொண்டு அருத்தி முதலியவற்றை மீளாது முடித்துக் காட்சி தருதியென்று நின்னிரு கழற்கால் சென்னிதலைக் கொள்ளுதுமென வினை முடிக்க.

திருக்கோவையார் ௧௬௪-ம் செய்யுள்.

தமர் நினைவுரைத்து வரைவுகடாதல்.

தமர்நினைவுரைத்து வரைவுகடாதலென்பது-இற்செறிவறிவித்து வரைவு கடாயதோழி. அவன் முலை தாங்கமாட்டாது இடை வருந்துவதனைக் கண்டு எமரிற்செறிப்பாராக நினையாநின்றார். அயலவரு மகட்பேச நினையாநின்றாரெனத் தமர்நினைவுரைத்து வரைவு கடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

"சுற்றுஞ்சடைக்கற்றைச்சிற்றம்பலவற்றொழா துதொல்சீர்
கற்றுமறியலரிற்சிலம்பாவிடைநைவதுகண்
டெற்றுந்திரையின்னமிர்தையினித்தமரிற்செறிப்பார்
மற்றுஞ்சிலபலசீறூர்பகர்பெருவார்த்தைகளே."

"விற்செறிநுதலியையிற்செறிவிப்பரென்
றொளிவேலவற்குவெளியேயுரைத்தது."

(பொ-ரை.) சிலம்பா! சுற்றப்பட்ட சடைத்திரளையுடைய சிற்றம்பலவனை முற்பிறவியிற் றொழாமையான் நூல்களைக் கற்றுவைத்தும் அவனது பழைய புகழை யறியாதாரைப்போல, முலைதாங்கவில்லா திடைவருந்துவதனைக் கண்டு, எற்றுந்திரையையுடைய கடலிற்பிறந்த இனியவமிர்தத்தை யொப்பாளை இப்பொழுது தமர் இற்செறிப்பார், அதுவுமன்றி, இச்சீறூராராற் பகரப்படும் பெரியவார்த்தைகள் சில பலவுள, எ-று.

(வி-ரை.) எற்றுந்திரை யென்பது சினையாகிய தன் பொருட்கேற்ற வடையடுத்துநின்ற தொ ராகுபெயர். இற்செறிப்பார் என்பது ஆரீற்று முற்றச்சொல். வினைப்பெயர் என்பாரும் செறிப்பர் என்று பாடமோதுவாருமுளர். சிலபலவென்பது பத்தெட்டுளவென்பதுபோலத் துணிபின்மைக்கண் வந்தது. சீறூர்ப்பகரென்பதூஉம் பாடம்.

உ

சிவமயம்.

நூல்.

நேரிசையாசிரியப்பா.

அமுதமுந் தருவும் பணிவரப் படைத்த
உடலக் கண்ண னுலகுகவர்ந் துண்ட
களவுடை நெடுஞ்சூர்க் கிளைகளம் விட்டொளித்த
அருணிறைந் தமைந்த கல்விய ருளமெனத்
தேக்கிய தேனுட னிருன்மதி கிடக்கும்
எழுமலை பொடித்த கதிரிலை நெடுவேல்
வள்ளிதுணைக் கேள்வன் புள்ளுடன் மகிழ்ந்த
கறங்குகா லருவிப் பரங்குன் றுடுத்த
பொன்னகர்க் கூடற் சென்னியம்பிறையோன்
பொதியப் பொருப்பன் மதியக் கருத்திணைக்
கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
பொற்குவை தருமிக் கற்புட னுதவி
என்னுளங் குடிகொண் டிரும்பய னளிக்கும்
கள்ளவிழ் குழல்சேர் கருணையெம் பெருமான்
மலர்ப்பத நீங்கா வுளப்பெருஞ் சிலம்ப
கல்லாக் கயவர்க் கருநூற் கிளைமறை
சொல்லினர் தோமெனத் துணைமுலை பெருத்தன
பலவுடம் பழிக்கும் பழியூ னுணவினர்
தவமெனத் தேய்ந்தது துடியெனு நுசுப்பே
கடவுட் கூறு ருளமெனக் குழலும்
கொன்றைபுற வகற்றி நின்றவிருள் காட்டின
சுரும்புபடிந் துண்ணுங் கழுநீர் போலக்
கறுத்துச் செவந்தன கண்ணிணை மலரே
ஈங்கிவை நிற்க சிறார் பெறுந்தமர்
இல்லிற் செறிக்குஞ் சொல்லுடன் சின்மொழி
விள்ளுந் தமியிற் கூறினர்
உள்ளங் கறுத்துக் கண்செவந் தருத்தே.

பகுதி-டகற்குறி. துறை-இற்செறிவறிவித்து வரைவு கடாவிய தோழி, தலைவியவயவங்கண்டு எமர் இற்செறிப்பாராக நினையாநின்றார், அயலவருமகட்பேச நினையாநின்றாரெனத் தமர்நினைவுரைத்து வரைவுகடாதல்.

'அமுதமும்' என்பதுமுதல் 'பிறையோன்' என்பதுவரை.

(1—9 வரிகள்.)

(ப-ரை.) அமுதமும் - அமிழ்தும், தருவும் - கற்பகத் தருவும், பணிவர - முன் தாழ்தலுண்டாகையால், படைத்த - பின் படைக்கப்பட்ட, உடல் அக்கண்ணன் - இ[illegible]திரனது, உலகு - உலகத்தை, கவர்ந்து உண்ட - கவர்ந்துண்டற் [illegible]கேதுவாகிய, நெடு - பெரிய, களவு உடை - களவினையுடைய, சூர் - சூரனது, கிளை - தம்பி, களம் விட்டு ஒளித்த - போர்க்களத்தை விட்டு மறைந்த, அருள் நிறைந்து அமைந்த - கருணை நிறைந் தொடுங்குதற்குக் காரணமாகிய, கல்வியர் - கல்வியை யுடையாரது, உள்ளம் என - மனம் அக் கல்வியால் தேக்கியதுபோல, தேக்கிய தேனுடன் - நிறைந்த தேனோடு, இறால் - தேன் கூடானது, மதி கிடக்கும் - மதிபோற் கிடக்கிற, எழுமலை - எழுமலையை, பொடித்த - துகளாக்கின, கதிர் - ஒளியையுடைய, இலை - தகட்டு வடிவாகிய, நெடுவேல் - நெடிய வேற்படையையுடைய, வள்ளி துணை - வள்ளி நாய்ச்சியாருக் கொப்பாகிய, கேள்வன் - கணவன், புள்ளுடன் மகிழ்ந்த - புள்ளோடுகூடி மகிழ்ந்த, கறங்கு - ஒலிக்கின்ற, கால் - நீரையுமிழாநின்ற, அருவி - அருவியாறுகளையுடைய, பரங்குன்று உடுத்த - திருப்பரங்குன்றஞ் சூழ்ந்த, பொன்நகர் - பொன் மாடங்களையுடைய, கூடல்-மதுரையிலெழுந்தருளிய, சென்னியம் பிறையோன் - சிரத்தில் அழகிய பிறையையுடையோன்.

(வி-ரை.) உடலக்கண்ணன் என்பதில் அகரம் பண்டறிசுட்டு, "உண்டற் குரிய வல்லாப் பொருளை, யுண்டன போலக் கூறலும் விதியே" என்ற விதியால் 'உண்ட' என்றார். தாருகாசுரனைக் 'கிளை' என்றார் துணையாகலின். விட்டென்ற செய்தெனெச்சம் காரண காரியமின்றி வந்தது, "அகனமர்ந்து செய்யாளுறையும்" என்பதிற் போல. தேனையுடைய விருட்டென் மதிவேற்றுமை தெரியாது கிடக்கும் எனினுமாம், கிடக்குமென்னும் பெயரெச்சம் நிலப்பெயர் கொண்டது. கறங்கி வீழாநின்ற அருவியெனப் பொருள்கொள்ளின், "நிலத்தலைஇ யதுப்பெலா நிறைதளும்பு முரகனே" என்றாற்போலக்

கொள்க. பிறையோன் என்பதனைப் பெயராக்காது, "முன்னத்தி னுணருங் கிளவியு முளவே" என்பதனா லமைக்கினுமாம். கிளைகள் விட்டொளித்த என்பது பாடமாயின் களம் என்பது கள்ளென விகாரமாயிற்றெனக்கொள்க. இவ்வாறு களமென்றாற்போல அகவற் பாவி லசைமிக்கு வருதலுமுண்டு. பணிவர என்பதற்குச் சொல்வழியி னிற்க வென்றலுமொன்று. இத்திணைப் பணிந்துநிற்ப வெனினு மாம். தருவென்பது மரப்பொதுப் பெயராயினும் பணிவரப் படைத்த வுடலக்கண்ணன் என மேல் வருதலால் கற்பகத்தருவைக் குறித்தது. அகலிகைவிழைவாற் கௌதமர்சாப மேற்றமைதோன்ற 'உடலக்கண்ணன்' என்றார். பரங்குன்று ஆறுபடை வீட்டினுளொன்று. பொன்னகர்க்கூடல் என்பதற்குப் பொன்னுலகுபோலுங் கூடல் என்றுரைப்பினு மமையும்.

'பொதியப்பொருப்பன்' என்பதுமுதல் 'கருணையெம்பெருமான்' என்பதுவரை.

(10—14 வரிகள்.)

(ப-ரை.) பொதியப் பொருப்பன்-பாண்டியன், அற்புடன்-அன்போடு, பொற்குவை-பொற்கிழியை, தருமிக்கு-தருமியென்னும் அர்ச்சகருக்கு, உதவி - கொடுப்ப, மதியக் கருத்தினை - அவன் மனக்கருத்தை, கொங்குதேர் வாழ்க்கை - கொங்குதேர் வாழ்க்கையென்னு முதற் குறிப்பினையுடைய, செந்தமிழ் கூறி - செந்தமிழ்ப்பாட்டருளி, என் உள்ளம் குடிகொண்டு - என்மனத்திற் குடிகொண்டு, இரும் பயன் - பெரும்பயனை, அளிக்கும்-தந்தருள்கின்ற, கள் அவிழ் குழல் சேர் - உமாதேவியைச் சேர்ந்த, கருணை - கிருபையையுடைய, எம் பெருமான் - எம்மிறைவன் (ஆகிய அவனது).

(வி-ரை.) உதவி உதவ என்பதன் றிரிபு, திரியாது கிடந்தவாறு பொருள் கொள்ளினுமாம். இரும்பயன் முத்திப்பேறு அதனிற் பெரும்பயனொன் றின்மையான்; "சிறப்பீனும்" என்றார் பெருநாவலரும். இருபயன் எனப் பாடமோதி இம்மை மறுமைப் பயனென் றுரைத்தலு மொன்று. குடிகொண்டுசேர் எனவியையும். பாண்டியர்க்குத் தசாங்கங் கூறுங்கால் முதற்கட்சிறந்துநிற்றலால் 'பொதியப் பொருப்பன்' என்றார். "மலையாறுநாடு" என்னுஞ் செய்யுளாற் றசாங்க மினிது விளங்கும். அற்பு அன்பென்பதன் றிரிபு. கள்ளவிழ்குழல்-அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

மலர்ப்பத நீங்கா வுளப்பெருஞ் சிலம்ப.

(15—வது வரி.)

(ப-ரை.) மலர் - தாமரைமலர்போலும், பதம் - திருவடியை, நீங்கா-நீங்காத, உள்ளம் - மனத்தையுடைய, பெருஞ்சிலம்ப-பெரிய சிலம்பனே.

(வி-ரை.) இறைவனது திருவடிக்குவமையாகப் புணர்க்கப்படுதலால் மலர் என்றது தாமரைமலருக்காயிற்று. பதத்தை யெழுவாயாக்கித் திருவடியானது நீங்காதவென் றுரைப்பினுமாம். சிலம்பன்-மலைநாடன்.

'கல்லா' என்பதுமுதல் 'பேருத்தன' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) கல்லா-கற்காத, கயவர்க்கு-கீழ்மக்கட்கு, அருநூல்-அரியநூலாகிய, கிளை-சாகைகளையுடைய, மறை-மறைப்பொருளை, சொல்லினர்-சொன்னவரது,தோம் என-குற்றம் பெருத்தாற்போல, துணை முலை-முலையிரண்டும், பெருத்தன-பருத்தன.

(வி-ரை.) கல்லாக்கயவர் - கல்வியறிவில்லாத கீழ்மக்கள்; கயமை-கீழ்மை. மறைப்பொருள்-வேதார்த்தம், ரஹஸ்யார்த்தம் எனினுமாம். 'அருநூல்' என்றார் இறைவனருளின முதனூலாதலான் தோம் - பாவமுமாம். பொருளின் றொழில் உவமையினுங் கூட்டியுரைக்கப்பட்டது. பருத்தன என்பதற்குப் பகுதி பருமை, பராரை மராத்து என்பதிற்போல. "உசாவினைப் பேதைக்களிப்பான் பிழைப்பிற் பெருகினவே, கோதைக் கொம்பன்னார் குயம்" என்றார் பிறரும். முலை-சாதிப்பெயர். இனைத்தெனவறிந்த முற்றும்மை தொக்கது.

'பலவுடம்பு' என்பதுமுதல் 'நுசுப்பே' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) பல உடம்பு-பலவுடம்புகளை, அழிக்கும்-சிதைத்தற்குக் காரணமாகிய, பழி-பழித்தற்குரிய, ஊன் உணவினர்-ஊனுணவுடையோரது, தவம் என-தவம் அறத்தேய்ந்தாற்போல, துடி என்னும் நுசுப்பு-துடியென்றற்குரிய இடையானது, தேய்ந்தது-அறத் தேய்ந்தது.

(வி-ரை.) பலவுடம்பழித்தலாவது-பலவுடம்புகளினின்று வுயிரினைப் பிரித்தல். பழி - அறிஞரானும் அவர்செய்த அறிவு நூல்க

ளாலும் பழிக்கப்பட்ட. ஊனுணவினர்-ஒருசொல். பூழியென்னுங் காலங்கரந்த பெயரெச்சத்திற்கிது முடிபாயிற்று. பொருளின்கணுழில் உவமையினுங் கூட்டி யுரைக்கப்பட்டது. தேய்ந்ததென்றது முன்னெல்லாம் துடிபோலு நுசுப்பின்று அதுவுமின்றி அறத்தேய்ந்ததென்றபடி.

'கடவுள்' என்பதுமுதல் 'காட்டின' என்பதுவரை.

(20—21 வரிகள்.)

(ப-ரை.) குழலும் - குழல்களும், கொன்றை - கொன்றைக் காயை, புறவகற்றி - முல்லைநிலத்தகற்றி, கடவுள் - இறைவனை, கூறார்-புகழாதவரது, உள்ளம் என-மனமிருளைக் காட்டினாற்போல, நின்ற இருள் காட்டின - நிலைபெற்ற இருளைக்காட்டின.

(வி-ரை.) கடவுட் கூறா ருளமெனக் குழலிருள் காட்டினவென்பதற்கு வண்ணவுவமை யொவ்வாதேனும் உவமைக்கண்ணிறத்தை விட் டறியாமையென்னும் பண்புபற்றிக் கூறினார்; இது பண்புவமை. இது "புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி, மூக்கிற் கரியாருடைத்து" என்பதனு லினிது விளங்கும். பண்பு-குறிப்பின்றி நிகழுங் குணம். கொன்றை புறவகற்றி யென்றது தற்குறிப்பேற்றம். காட்டினவெனக் குழல் மயிர் மாத்திரையா னைம்பாலையு முணர்த்தலிற் பன்மை கூறினார். இத்தொடர்க்கண்ணும்பொருளின் கணுழி லுவமைக்கண்ணுங் கூட்டியுரைக்கப்பட்டது. குழலும் என்றவும்மை யிறந்ததுதழீஇயது. கடவுட்கூறா ருள்ளமுங் குழலும் நின்றவிருள் காட்டினவென்றார் பகலோர்க்கும் பின்னிடாமைபற்றி. ஐம்பாலாவன - குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி யென்பன. இவற்றுள் குழல் என்பது சுருட்டி முடிப்பது, கொண்டை யென்பது பக்கல் முடிப்பது, சுருள் என்பது பின்னே செருகுவது, பனிச்சை யென்பது பின்னிவிடுவது, முடியென்பது உச்சியின் முடிப்பது.

'சுரும்பு' என்பதுமுதல் 'மலரே' என்பதுவரை.

(22—23 வரிகள்.)

(ப-ரை.) சுரும்பு - வண்டுகள், படிந்து உண்ட-படிந்து தேனுண்ட, கழுநீர்போல-கழுநீர் மலர்போல, கண் - கண்களாகிய, இணைமலர் - இரண்டு மலர்கள், கறுத்துச் செவந்தன-கறுத்துச் செவந்துவிட்டன.

(வி-ரை.) படிதல் - தோய்தல். சுரும்பு உண்டவென்பதற்குச் செயப்படுபொருளாகிய தேன் வருவித்துரைக்கப்பட்டது. சழுநீர் - பொருளாகுபெயர். செவந்தன - செம்மைப் பண்படியாகப் பிறந்த இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று. சிவந்தன என்றும் பாடம்.

'ஈங்கிவை'என்பதுமுதல் 'கண்செவந்துருத்தே' என்பதுவரை.

(24—27 வரிகள்.)

(ப-ரை.) ஈங்கு - இவ்விடத்து, இவை நிற்க - இவை நிற்பன வாக, (இவற்றைக்கண்டு) பெறும் தமர்-இவளை யீன்ற தாய்தந்தைய ராகிய தமர், இல்லில் செறிக்கும் சொல்லுடன் - மனையிற் சேர்க் கின்ற சொல்லோடு, தமியில் - தமியராயிருந்து, உள்ளம் கறுத்து - மனங்கோதித்து, கண் செவந்து-கண்கள் செவ்வாநின்று, உருத்து- கோவித்து, கூறினர் - பேசினர்,(ஆதலால் இற்செறிப்பார் அதுவேயு மன்றி) சீறூர் - சீறூரும், சில்மொழி - சிலசொற்களை, விள்ளும் - விள்ளாநின்றது, எ - று.

(வி-ரை.) சீறூர் சில்மொழி விள்ளும் என்றது மகட்பேசலை. சீறூர் இடவாகுபெயராய்ச் சீறூரிலுள்ளாரைக் குறித்தது, "சிலம் பணிகொண்ட செஞ்சீறடி பங்கன்"என்புழிப்போல. சிறு ஊர் சீறூர் எனப்பட்டது. ஈங்கிவை யென்பதை ஒரு சொல்லாகக் கோடலு மாம், இவையென்பதே பொருள். திருக்கோவையார், உகஎ-வது "தெள்வன் புனற்சென்னியோன்" என்னும் முதற்குறிப்பினை யுடைய செய்யுளின் விசேடவுரை இங்கு நோக்கத்தக்கது. ஈங்கிவை நிற்க என்பதற்கு இம்மாதின் செயல் இங்ஙனமாம் இது நிற்க வென் றுரைப்பினுமாம். பெருந்தமர் என்றும் பாடம், இதற்குத் தமரிற் சிறந்தவராகிய தாய்தந்தையர் முதலியோர் என்றுரைத்துக்கொள்க.

சிலம்ப, பெருத்தன, தேய்ந்தது, காட்டின, செவந்தன, இவை நிற்க, தமர் இல்லிற் செறிக்குஞ் சொல்லுடன் பேசிக்கொண்டனரா தலால், இனி யிற்செறிப்பார், அதுவேயுமன்றி, சீறூர் சின்மொழி விள்ளும் என வினைமுடிவு செய்க. (௪)

தாயறிவுகூறல்.

தாயறிவு கூறலென்பது—தொழுதிரந்து கூறவும், வேட்கை மிகவாற் பின்னுங் குறியிடைச் சென்று நிற்ப, அக்குறிப்பறிந்து, நங்கானலிடத்து அரையிரவின்கண் ஒருதேர் வந்ததுண்டாகக் கூடு மென வுட்கொண்டு அன்னை சிறிதே கண்ணுஞ் செவந்து என்னையும்

பார்த்தாள், இருந்தவாற்றான் இவ்வொழுக்கத்தை யறிந்தாள்போலு மெனத் தோழி தலைமகளுக்குக் கூறுவாள்போன்று சிறைப்புற மாகத் தலைமகற்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

“விண்ணுஞ் செலவறி யாவெறி யார்கழல் வீழ்சடைத்தீ
வண்ணன் சிவன்றில்லை மல்லெழிற் கான லரையிரவி
லண்ணன் மணிநெடுந் தேர்வந்த துண்டா மெனச்சிறிது
கண்ணுஞ் சிவந்தன்னை யென்னையு நோக்கினள் கார்மயிலே.”

“சிறைப்பு றத்துச் செம்மல் கேட்ப
வெறிக்குழற் பாங்கி மெல்லியற் குரைத்தது.”

(ப-ரை.) கார் மயிலே - கார்காலத்து மயிலையொப்பாய், விண்ணும் - விண்ணுளாரானும், செலவு - (எல்லாப்பொருளையுங்கடந்தப்பாற்சென்ற) செலவை, அறியா - அறியப்படாத, வெறி ஆர் - நறுநாற்றமார்ந்த, கழல் - கழலிணையும், வீழ் சடை - தாழ்ந்த சடையிணையுமுடைய, தீ வண்ணன் - தீவண்ணனாகிய, சிவன் - சிவனது, தில்லை - தில்லையில், மல் - வளவிய, எழில்-எழிலையுடைய, கானல் - நெய்தனிலத்தில், அரை யிரவின் - அரையிரவின்கண், மணி - மணிகளையுடைய, அண்ணல் - தலையாயதொரு, நெடுந்தேர் - நெடுந்தேரானது, வந்ததுண்டாம் என - வந்ததுண்டாகக்கூடுமென (உட்கொண்டு), அன்னை - அன்னையானவள், சிறிது - சிறிது, கண்ணுஞ் சிவந்து - கண்களுஞ் சிவந்து, என்னையும் நோக்கினள் - என்னையும் பார்த்தனள் (இருந்தவாற்றா னிவ்வொழுக்கத்தினை யறிந்தாள் போலும்), எ - று.

(வி-ரை.) எல்லாப் பொருளையுங் கடந்து நின்றனவாயினும் அன்பர்க்கணியவாய் அவரிட்ட நறுமலரான் வெறிகமழுமென்பது போதர ‘வெறியார் கழல்’ என்றார். மெய்ப்பாடு - பெருமிதம். பயன் படைத்து மொழியால் வரைவுகடாதல்.

நேரிசையாசிரியப்பா.

பூமணி யானை பொன்னென வெடுத்துத்
திங்களும் புயலும் பருதியுஞ் சுமந்த
மலைவருங் காட்சிக் குரிய வாகலி
னிறையுடைக் கல்வி பெறுமதி மாந்த
ரீன்றசெங் கவியெனத் தோன்றிநனி பரந்து

பாரிடை யின்ப நீளிடைப் பயக்கும்
பெருநீர் வையை வளைநீர்க் கூட
லுடலுயி ரென்ன வுறைதரு நாயகன்
கடுக்கைமலர் மாற்றி வேப்பலர் சூடி
யைவாய்க் காப்புவிட் டணிபூ ணணிந்து
விரிசடை மறைத்து மணிமுடி கவித்து
விடைக்கொடி நிறுத்திக் கயற்கொடி யெடுத்து
வழுதி யாகி முழுதுல களிக்கும்
பேரரு ணாயகன் சீரருள் போல
மணத்துடன் விரிந்த கைதையங் கானத்
தோடா வென்றிப் பொலம்பூட் குரிசில்
சின்னங் கிடந்த கொடிஞ்சி மாத்தேர்
நொச்சிப் பூவுதிர் நள்ளிரு ணடுநாள்
விண்ணஞ் சுமந்து தோற்றஞ் செய்தெனத்
தன்கண் போலு மென்க ணோக்கிக்
கள்வரைக் காணு முள்ளம் போலச்
செம்மனந் திருகி யுள்ளந் துடித்துப்
[illegible]ன்வழங் காது நெஞ்சொடு கொதித்தனண்
மாறுக் கற்பி னன்னை
கூறு மதியத் திருநுதற் கொடியே.

பகுதி - வரைவுமுடுக்கம். துறை - தொழுதிரந்து கூறவும் வேட்கை மிகவாற் பின்னுங் குறியிடைச் சென்று நிற்ப அக்குறிப் பறிந்து தோழி தலைமகட்குக் கூறுவாள்போன்று, சிறைப்புறமாகத் தலைமகற்கு வரைவு தோன்றத் தாயறிவு கூறல்.

'பூமணி' என்பதுமுதல் 'நாயகன்' என்பதுவரை.

(1—8 வரிகள்.)

(ப-ரை.) நிறையுடை - அறமுதலியவற்று ணிறைதலையுடைய, கல்வி பெறும்-கல்வியாற்பெற்ற, மதி - அறிவினையுடைய, மாந்தர் - பெரியோர்,— (மங்கலமொழியாய்ப் பூவென மணியென யானையெனப் பொன்னென எடுத்து)—, ஈன்ற-சொல்லிய, செம் கவி என- செவ்விய கவிபோல, பூ மணி யானை பொன் என - பூவும் மணியும்

யானையும் பொன்னுமாகிய இவற்றை, எடுத்து—, திங்களும் புயலும் பருதியும் - திங்களையும் புயலையும் பருதியையும், சுமந்த - அக்கவிபோலப்பெற்ற, மலை - மலையினின்றும், தோன்றி - தோன்றி, நனி பரந்து - மிகவும் பரந்து, வரும் காட்சிக்கு - வருகின்ற காட்சிக்கு, உரியவாகலின் - உரியதாதலான், நீளிடை - நெடுந்தூரம், பாரிடை - பாரிடத்தில், இன்பம் பயக்கும் - இன்பமுண்டாக்குகின்ற, பெருநீர் - பெருக்கினையுடைய புனலோடுகூடிய, வையை வளை - வையைநதி வளைந்த, நீர் - நீர்மையையுடைய, கூடல்-மதுரையானது; உடலென்ன - உடலாக, உயிரென்ன - தானுயிராக, உறைதரும் - பொருந்துகின்ற, நாயகன் - இறைவன்.

(வி-ரை.) கவிபோல வெடுக்கப்பட்டுத் தோன்றிப் பரந்துவருங் காட்சிக்குரியதாகலின் இன்பமுண்டாக்கும் பெருக்கினை யுடைய வென வினைமுடிக்க. செய்தெனெச்சஞ் செயப்படு பொருட்கணின்றது. வையையுங் கவியும் மலையுங் கவியுஞ் செம்மொழிச் சிலேடையுவமை. மாந்தரென்பது பெண்ணொழிசொல். அவரிடத்தினின்றும் பிறத்தலின் 'ஈன்ற' என்றார். கூடலின்கண் - என்னுடலோடுகூடிய வுயிரென்னவெனினுமாம். இன்னும் மலைவருங்காட்சிக் குரியவாகலினென்றவிடத்துச் சிலேடையணியால் வையையானது மலையினின்று வருங்காட்சி யுடைத்தாதலாலும் கவியும் வரைக்காட்சிக் குரித்தாதலாலும் என்றுரைகொண்டு மாந்தர் கவியெனப் பாரிடையின்பம் பயக்கும் பெருநீர் வையையென ஆற்றொழுக்காகப்பொருள் கூறினும் பொருந்தும். கவியென்றது கவிக்கூட்டத்தாலாகிய காவியம். பெருங்காப்பியத்தில் வரைக்காட்சி முதலியன கூறுதல் உரித்தாதலின் 'மலைவருங்காட்சிக் குரியவாகலின்' என்றார். ஆற்றுக்குங் கவிக்கும் பன்மைப்பொருள் தோன்ற 'உரிய' என்று பன்மைவிகுதி கூறினார். பூ மணி யானை பொன் என்பன மங்கலமொழிகள். திங்கள் - சந்திரன். புயல் - மேகம். பருதி - சூரியன். மலையென்பதனீற்றில் ஐந்தனுருபுதொக்கது. வையைநீர்வளையென வைத்து வையையாற்று நீரான்வளைக்கப்பட்ட என்றுரைத்தலுமாம். இன்னார்க்கு நாயகனென விதவாமையால், சராசரப்பொருள்களெல்லாவற்றிற்கும் இறைவன் என்பது தானே போதரும்.

'கடுக்கைமலர்' என்பதுமுதல் 'கானத்து' என்பதுவரை.

(9—15 வரிகள்.)

(ப-ரை.) கடுக்கைமலர் மாற்றி - கொன்றைமலரைச் சூடாது தவிர்ந்து, ஐவாய்க்காப்பு விட்டு - ஐந்துவாயையுடைய வாசுகி யென்

னும் பாடாகிய சங்கணத்தை யணியாது, விரி சடை மறைத்து - விரிந்தசடையினைமறைத்து, விடைக்கொடி நிறுத்தி-விடைக்கொடியினையெடாது நிறுத்தி, வழுதியாகி - பாண்டியனாகி, வேப்பலர் சூடி-வேப்பமலரைச்சூடி, அணிபூண் அணிந்து-அழகிய பொன்னினு மணியினுஞ் செய்யாநின்ற வாபரணத்தையணிந்து, மணி முடி கவித்து - இரத்தின கிரீடத்தைக் கவித்து, கயல் கொடி எடுத்து-கயற்கொடியை வலத்தேயுயர்த்தி, முழுதுலகு அளிக்கும் - இவ்வுலகமுழுதுங் காத்தற்குக்காரணமாகிய, பேரருள்நாயகன்-மிகுந்தவருளினையுடைய இறைவனது, சீரருள்போல-சீரைத்தந்த அவ்வருளையுடையதுபோல, மணத்துடன் விரிந்த - மணத்தோடுங்கூடி மலர்ந்த, கைதையங்கானத்து - தாழையையுடைய நெய்தனிலத்து.

(வி-ரை.) மாட்டாய மொழிமாற்றிக்கொண்ட நிரை நிரை, நேரே கொள்ளும் நிரை நிரையுமாம். சீரருள்-அன்மொழித்தொகை. 'சீரம்பரத்திற் றிகழ்ந்தொளி தோன்றும்'' என்பதனை வினைத்தொகையாகக் கூறினர் திருக்கோவையினும். விரிந்தகைதை யொற்றுமை நயம்பற்றிச் 'சினைவினை முதன்மே னின்றது. வேம்பலர் என்பது வேப்பலர் என வலித்தலாயிற்று. ஐவாய் - அன்மொழித்தொகைக் காரணப்பெயர். விடைக்கொடி - இடபக்கொடி. கயல் கொடி-மீனக்கொடி. கைதையங்கானத்து என்பதில் அம் சாரியை.

கூறு மதியத் திருநுதற் கொடியே.

(25—வது வரி.)

(ப-ரை.) கூறு ஆம் மதியம் - மதியின் பிளவுபோன்ற, திருநுதல் கொடியே - அழகிய நுதலினையுடைய கொடிபோல்வாய்.

(வி-ரை.) நுதல்கொடி - வெளிப்படை, ''பூண்முலைப் பிடிக்க வாய்ப்போர் செய்தற்ற'' என்றாற்போல. நுதல் - நெற்றி. கொடி - உவமையாகுபெயர்.

'ஓடா' என்பதுமுதல் 'அன்னை' என்பதுவரை.

(16—24 வரிகள்.)

(ப-ரை.) நொச்சிப்பூ உதிர் - நொச்சிப்பூ வுதிராநின்ற, நள்ளிருள்-இருட்செறிவினையுடைய,நடுநாள்-அரையாமத்து, ஓடாவென்றி-கெடாதவென்றியினையும், பொலம் பூண்-பொன்னாற்செய்த பூணினையுமுடைய,குரிசில்-தலைவனது, விண்ணம்சுமந்துகிடந்த-மேகத்தைச் சுமந்துகிடந்த, கொடிஞ்சி மாத்தேர்-கொடிஞ்சியினையுடைய பெரிய

தேரினது, சின்னம்தோற்றம்செய்தெனு-அடையாளங்கிடந்ததென, மாறு கற்பின் அன்னை-கெடாத கற்பினையுடைய அன்னை, தன் கண் போலும்-தன் கண்போல்கின்ற, என்கணோக்கி - என்னைப்பார்த்து, கள்வரை காணும்-கள்ளரைக் காண்போரது, உள்ளம்போல-உள்ள மாறுபட்டாற்போல, செம்மனம் - கோடாதமனம், திருகி - மாறு பட்டு, உள்ளம் துடித்து - மனந்துடித்து, புறன் வழங்காது - இப் பேச்சு வெளிவிடாது, நெஞ்சொடு கொதித்தனள்-நெஞ்சம் புழுங்கி ளுள் (ஆதலானிவ்வொழுக்கத்தினை யறிந்தாள்போலும்).

(வி-ரை.) சினையொடுமுதற்கொற்றுமை யுண்மையால் 'காணு முள்ளம்' என்றார். தொழில் வேற்றுமைப்படுதலின் மனமுள்ள நெஞ்சம் பொருட்பின் வருகிலே. செம்மைமனம்-செம்மனம்;செம்மை-மனங்கோடாமை. "செறிவு நிறையுஞ் செம்மையுஞ் செய்யு மறிவு மருமையும் பெண்பாலான" என்ற விதியானமைக்க. வென்றி - வெற்றி. பொலம் - பொன். பூண் - ஆபரணம். விண் - ஆகாயத்தி லுள்ள மேகம், அது அம்முச்சாரியைபெற்று விண்ணம் என்று யிற்று. கொடிஞ்சி-மேன்மொட்டு. நெஞ்சொடு என்பதில் ஒடு இசை நிறை. ஆதலான் இவ்வொழுக்கத்தினை யறிந்தாள்போலும் என்பது இசையெச்சம்.

கொடியே! நம்மன்னை நெய்தனிலத்து அரையாமத்துத் தலை வன் றேரடையாளங் கிடந்ததென வென்னைப்பார்த்து மாறுபட் டுள்ளந் துடித்துப் புழுங்கினுளாதலா னிவ்வொழுக்கத்தினை யறிந் தாள் போலுமென வினைமுடிவுசெய்க. (உ)

வழியொழுகி வற்புறுத்தல்.

வழியொழுகி வற்புறுத்த லென்பது—தலைமகளது வருத்தங் கண்ட தோழி, அவளை வழியொழுகி யாற்றுவிக்கவேண்டு மளவாக லின் ஆற்றுமைக்குக் காரணமாகியவற்றைக்கூறித் தானும் அவ ளோடு வருத்தமுற்று, அது கிடக்க, இம் மலர்ப்பாவை யன் னுட்கு இவ்வேறுபாடு வந்தவா றென்னோவென்று அயலவர் ஐயுறு நிற்பாராதலின் நீ யாற்றவேண்டுமென்று அவள் வழியொழுகி வற் புறுத்தா நிற்றல். அதற்குச் செய்யுள்:—

"மதுமலர்ச் சோலையும் வாய்மையு மன்பு மருவிவெங்கான்
கதுமெனப் போக்கு நிதியினை ருக்குமுன் னிக்கலுழ்ந்தா
ளுதுமலர் நோக்கபொர் றூன்றுடை யோன்றில்லை நோக்கலர்போ
லிதுமலர்ப் பாவைக்கென் னோவந்த வாறென்ப ரேந்திழையே."

சூழிருங் கூந்தலைத்
தோழி தெருட்டியது.

(ப-ரை.) மதுமலர் சோலையும் - (அவரைப் புதுவது கண்ணுற்ற) மதுமலர்ச்சோலையையும், வாய்மையும் - (நின்னிற் பிரியேன் பிரியி னாற்றேனென்று கூறிய வஞ்சினத்தினது) மெய்ம்மையையும், அன்பு-(வழிமுறை பெருகிய) அன்பையும், மருவி-(நம்மோடு) மருவி வைத்து, கதுமென - பின்விரைந்து, வெங்கான் - வெங்கானத்து, போக்கும் - போகிய போக்கையும், நிதியின் - (போய்த்தேடும்) நிதியினது, அருக்கும் - செய்தற்கருமையையும், முன்னி - நினைத்து, கலுழ்ந்தால் - நீ யழுதால், ஏந்திழையே - ஏந்திழாய், நொதுமலர் - அயலோர், நோக்கமோர் மூன்றுடையோன் - கண்களொரு மூன்றையுடைய சிவனது, தில்லை நோக்கலர்போல் - தில்லையைக் கருதாதார் போல, மலர்ப்பாவைக்கு - மலரிற் றிருவன்னாட்கு, இதுவந்தவாறு - இவ் வேறுபாடு வந்தவாறு, என்னோ என்பர் - என்னோவென் றையுறுவர் (அதனால் நீ யாற்றுவாயாக).

(வி-ரை.) அன்புவழிமுறையாற் சுருங்காது கடிது சுருங்கிற் றென்னுங்கருத்தாற் 'கதுமெனப் போக்கும்'என்றாள். அருக்குமென் றதனால் நீட்டித்தல் கருதினாளாம். வழியொழுகி யாற்றுவிக்கவேண்டு மளவாகலின் - ஆற்றாமைக்குக் காரணமாகியவற்றை மிகுத்துக் கூறினாளாம் இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன் - தலைமகளை யாற்றுவித்தல்.

நேரிசையாசிரியப்பா.

பகையுடன் கிடந்த நிலைபிரி வழக்கினைப்
பொருத்தலும் பிரித்தலும் பொருபகை காட்டலு
முட்பகை யமைத்தலு முணர்த்துசொற் பொருத்தலு
மொருதொழிற் கிருபகை தீராது வளர்த்தலுஞ்
செய்யா வமைச்சுடன் சேரா வரச
னாடு கரிந்தன்ன காடுகடந் தியங்கி
யிடும்பை நிரப்பினர்க் கீதலி னிறந்தோர்க்
கிதழ்நிறை மதுவந் தாமரை துளித்தென
விழிசொரி நீருடன் பழங்கண் கொண்டா
லுலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க
மாறனும் புலவரு மயங்குறு காலை

முந்துறும் பெருமறை முளைத்தருள் வாக்கா
லன்பினைந் திணையென் றறுபது சூத்திரங்
கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோற்
பரப்பின் றமிழ்ச்சுவை திரட்டிமற் றவர்க்குத்
தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்
தழற்கட் டாக்கின் சரும வாடையன்
கூடலம் பெரும்பதி கூறுநர் கிளையென
நிறைநீர்க் கயத்து ளொருதா ணின்று
தாமரை தவஞ்செய் தளியுடன் பெற்ற
திருமகட் கடுத்த தென்னென்
றொருமை காண்குவர் துகிர்க்கிளைக் கொடியே.

பகுதி:—வரைபொருட் பிரிதல். துறை - தலைமகள் வருத்தங் கண்ட தோழி அவள் வழி யொழுகி யாற்றுவிக்க வேண்டுமளவாக லின் ஆற்றாமைக்குக் காரணமாகியவற்றைக்கூறித் தானு மவளொடு வருத்தமுற்றதுகிடக்க, இவட்கிவ்வேறுபாடு வந்ததென்னேவென் றயலவரையுறுநிற்பாராதலா னீயாற்றவேண்டுமென் றவள்வழி யொழுகி வற்புறுத்தல்.

'உலகியல்' என்பதுமுதல் 'காலை' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) உலகு - உலகத்தில், இயல் - இலக்கணமாக, நிறுத்தும் - நிறுத்தும், பொருண் மரபு - பொருட்கூறு, ஒடுங்க - ஒருபஞ் சத்திலிறத்தலால், மாறனும் - பாண்டியனும், புலவரும் - கடைச் சங்கத்தாரும், மயங்குறு காலை - (எழுத்துஞ் சொல்லு முண்டாய்ப் பொருட்கூறின்றி) மயங்குதலுற்ற காலத்து.

(வி-ரை.) உலகியலுமென்னு மெச்சவும்மை தொக்கதாக்கி நாடகவழக்கும் நிறுத்தும் பொருளிலக்கணமெனினுமாம். மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியாததனையு முட்டின்று முடித்த லென்பதனல் நாடகவழக்குங் கொள்க. கூதிர் வேனிலென்று சூத்திரத்திற் பெரும்பகை தாங்கும் வேலினானுமென்றாற்போல.

'முந்துறு' என்பதுமுதல் 'கடவுள்' என்பதுவரை.

(12—16 வரிகள்.)

(ப-ரை.) கடல் அமுது - கடலமுதத்தை, எடுத்து - திரட்டியெடுத்து, கரையில் வைத்ததுபோல் - கரையில் வைத்தாற்

போல, முந்துறும் பெருமறை - எல்லாநூற்கு முந்திய பலமறை, மூளைத்தருள் வாக்கால் - தோற்றிய வாக்கினால், பரப்பின் சுவை தமிழ் - பரப்பினையுடைய பொருட்சுவைத்தமிழை, அன்பினைந்திணை என்று - அன்பினைந்திணையெனத் தொடங்கி, அறுபது சூத்திரம் - அறுபதுசூத்திரமாகத் தொகுத்து, மற்று அவர்க்கு - பாண்டியனுக்கும் கடைச்சங்கத்தாருக்கும், தென்றமிழ் - அந்தத் தென்றமிழை, தெளிதர - தெளிய, கொடுத்த - கொடுத்தருளின, கடவுள் - கடவுள்.

'தழற்கண்' என்பதுமுதல் 'கிளையென' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) தழற்கண் - அக்கினிக் கண்ணையுடைய, தரக்கின் - புலியின், சரும ஆடையன் - தோலாகிய ஆடையையுடையவன், (அவனது) கூடல் அம்பெரும்பதி - அழகிய கூடலாகிய பெரிய பதியினை, கூறார் கிளை என - துதியாதவரது சுற்றம்போல.

'பகையுடன்' என்பதுமுதல் 'கோண்டால்' என்பதுவரை.

(1—9 வரிகள்.)

(ப-ரை.) இடும்பை நிரப்பினர்க்கு - நினக்குத் துன்பத்தையுண்டாக்கிய தமர்க்கு, ஈதலின் - ஈதற்பொருட்டால், பகையுடன் கிடந்த - (பழஞ்சத்துரு மித்துருவாகானென் றெண்ணாது நெடுங்காலம்) பகையோடு கிடந்த, நிலைபிரி வழக்கினை - தொன்றுதொட்டு வரும் வழக்கை, பொருத்தலும் - ஒன்றுபடுத்தலும், பிரித்தலும் - (வினைவந்துழிப் பகைவர்க்குத் துணையாயினாரைப் பிரியாது தம்பாலாயினாரை யவர் பிரிக்கக் கொடை இன்சொற்களால்) பேணிக்கொள்ளாமையும், பொருபகை காட்டலும் - (வலியுங்காலமு மிடனுமறியாது) பொருதற் கேதுவாகிய பகையை யுண்டாக்கிக்கோடலும், உட்பகை அமைத்தலும் - புறப்பகைக் கிடனாக்கிக்கொடுத்து அவர் வெல்லுந் துணையு முள்ளாய்நிற்கும் பகையை யுண்டாக்கலும், உணர்ந்து சொல் பொருத்தலும் - ஆக்கமுங்கேடுந் சொல்லால் வருதலாற் பிறருணர்த்துஞ் சொல்லின் பயன்றெரியாது கூட்டிக்கோடலும், ஒரு தொழிற்கு இருபகை தீராதுவளர்த்தலும் - ஒருவினை செய்தற்றொழிலை யிரண்டு பகையாற் றீராது பகையை யுண்டாக்கலுமாகிய இவற்றை, செய்யா அமைச்சுடன் - செய்யாத அமைச்சனுடன், சேரா அரசன் - பொருந்தாத அரசனது, நாடு கரிந்தன்ன - நாடுகரிந்தாற்போன்ற, காடுகடந்து இயங்கி - காடிடையிட்டு நடந்து, இறந்தோர்க்கு - போனார்க்கு, இதழ் நிறை - இதழ் நிறைந்த, மது - தேனை, அம் தாமரை - அழ

கிய தாமரை, துளித்தென-துளித்தாற்போல, விழிசொரி நீருடன் - விழிசொரிகின்ற நீரோடுகூடி, பழங்கண்கொண்டால் - வருந்தினால்.

(வி-ரை.) நிலைபிரி வழக்கிற்கு ஆதியாய் வரும்பகை நாட்டுதலென்றார் சிந்தாமணியினும், பகைவர் பிரிக்கத்தான் பேணிக்கொள்ளாமையிற்றான் பிரித்தலாயிற்று, இவை யிரண்டும் அமைச்சர்க்கின்றியமையாக் குணமின்மை. பொருபகைகாட்டல் - வினைத்திட்பமின்மை. உட்பகை யமைத்தல் - வினைத்தூய்மை யின்மை. உணர்த்து சொற்பொருத்தல் - சொல்வன்மையின்மை. ஒருதொழிற் இருபகை தீராது வளர்த்தல்-வினைசெயல் வகையின்மை. தொழிற்கு-உருபு மயக்கம். இருபகையாற்றீர்த்தல்-தம்பகைஞரோடொருப் பகையாயினரை யெடுத்துவிட்டுத் தம்வினை தீர்த்தல்;"மோதிமுள்ளொடு முட்புடை கண்டிட" என்றார் சிந்தாமணியினும். இவற்றைச் செய்யாவெனவே இன்றியமையாக் குணமுடைமையும் வினைத்திட்பமும் வினைத்தூய்மையுஞ் சொல்வன்மையும் வினைசெயல்வகையுஞ் செய்யுமமைச்சனென்பது விளங்கிற்று. தூதுமுதலியன புறமண்டலத்துப் போய்ச் செய்தலாதலின் அகமண்டலத்துச் செய்தலை யிவைந்தினுங் கூறினர் வள்ளுவரென்க. ஒடு வேறு வினையொடு. வரைவிடை வைத்துப் பிரிதல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதலாற் காலநீட்டித்தலின் அதன் போக்கையும் நிதிதேடற் கருமையையும் நினைந்து வருந்திலென்பாள் 'இறந்தோர்க்கு'என்றாள்.பிரிவழக்கு-வினைத்தொகைநிலைத்தொடர். பொருபகை என்பதுமது. அமைச்சு - பண்பாகுபெயர். 'நாடுகரிந்தன்ன காடு' என்றதனால் பாலைவனம் என்றவாறாயிற்று. பழங்கண்கொண்டால் என்பதற்குத் துன்பங்கொண்டால் என்றுரைத்தலும் பொருந்தும்.

'நிறை' என்பதுமுதல் 'கோடியே' என்பதுவரை.

(19—22 வரிகள்.)

(ப-ரை.) துகிர் கிளை கொடியே - கிளையினையுடைய பவளக் கொடிபோல்வாய், தாமரை - தாமரையானது, நிறை நீர் கயத்துள் - நிறைந்தநீர்மடுவில், ஒருதாள் நின்று-ஒருதாளினின்று,தவம்செய்து-தவஞ்செய்து, அளியுடன் பெற்ற - அன்புடன்பெற்ற, திருமகட்கு - திருமகளை யனையாளுக்கு, அடுத்தது என்னென்று - பொருந்திய வேறுபாடென்னென்று, ஒருமை காண்குவர்-மாதுமலரெல்லாருங் கூடி யையுறுவர் (அதனை னீயாற்றுவாய்).

(வி-ரை.) திருமகள் - குறிப்புவமை; இஃதுவமைக்கண் வந்த வாகுபெயர், தொகையுவமையுமாம். கொடி - உவமையாகுபெயர்; திருமகள் என்பதும் அது. கயம் - மடு. தாள் - நாளம் (கால்). கோது மலர்-அயலார். கொடியே! கூடற்பதியைக் கூறுதவர் கிளைபோல நினக்குத் துன்பத்தை யுண்டாக்கிய தமர்க்கீதற்பொருட்டாற் காடிடையிட்டு நடந்துபோனார்க்கு வருந்தினால், திருமகட்குப் பொருந்திய வேறுபாடென்னென் றையுறுவர், அதனால் நீ யாற்றுவாயென வினைமுடிவு செய்க. (௫)

திருக்கோவையார் ௧௬௪-ம் செய்யுள்.

பிரிவருமைகூறி வரைவுகடாதல்.

பிரிவருமை கூறி வரைவுகடாதலென்பது—கொய்தமை கூறி வரைவுகடாய தோழி இப்புனத்துப் பயின்ற கிளிகள் தமக்குத் துப்பாகாக் காலத்துந் தினைத்தாளை விடாதிராநின்றன. நாம் போனால் நங்காதல ரிவ்விடத்தே வந்துநின்று நம்மைத் தேடுவர் கொல்லோ வெனச் சிறைப்புறமாகப் பிரிவருமைகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பரிவுசெய் தாண்டம் பலத்துப் பயில்வோன் பரங்குன்றின்வா
யருவிசெய் தாழ்புனத் தைவனங் கொய்யவு மிவ்வனத்தே
பிரிவுசெய் தாலரி தேகொள்க பேயொடு மென்னும்பெற்றி
யிருவிசெய் தாளி னிருந்தின்று காட்டு மிளங்கிளியே.

மறைப்புறக் கிளவியிற்
சிறைப்புறத் துரைத்தது.

(பு-ரை.) பரிவு செய்து - (எம்மைப்) பரிந்து, ஆண்டு-ஆண்டு, அம்பலத்து - அம்பலத்தின்கண், பயில்வோன்-பயில்வானது, பரங்குன்றின்வாய் - பரங்குன்றினிடத்து, அருவி செய் - அருவி நீராற் செய்யப்பட்ட, தாழ் புனத்து - தாழ்ந்த புனத்தின்க ணுண்டாகிய, ஐவனம் கொய்யவும் - மலைநெல்லைக் கொய்யவும், இவ்வனத்து,- இக்காட்டின்கண், இருவி செய் தாளினிருந்து-இருவியாகச் செய்யப்பட்ட தாளிலேயிருந்து, பேயொடும் - பேயோடாயினும், செய்தால்-(நட்புச்)செய்தால், பிரிவு அரிது-பிரிவதரிதாகும், கொள்க-(இதனை) உள்ளத்துக்கொ[illegible]ள்க, என்னும் பெற்றி-என்னுந் தன்மையை, இளங்கிளி - இளங்கிளிகள், இன்று காட்டும் - இப்பொழுது காட்டாநின்றன, எ-று.

(வி-ரை.) பேயோடாயினும் பிரிவுசெய்தா லாற்றுத லரிதென்னுமைப்பினு மமையும். இருவியென்பது - கதிர் கொய்ததட்டை.

தாளென்பது - கதிர் கொய்யாமுன்னுஞ் சொல்வதோர் பெயர். இப்புனத்துப் பயின்ற கிளிகள் தமக்குத் துப்பாகாக்காலத்து மிதனை விடாதிராநின்றன. இனி நங்காதலர் நம்மாட் டென்செய்வ ரொன்றுங் கருத்தான் மறைப்புறமாயிற்று. சிறைப்பட வுரைத்ததென்பது பாடமாயின் சிறைக்கண் வந்து நிற்பவென் றுரைக்க.

திருக்கோவையார் கஙூ௪-ம் செய்யுள்.

தினைமுதிர்வுரைத்து வரைவுகடாதல்.

தினைமுதிர்வுரைத்துவரைவுகடாதலென்பது-அயலுரையுரைத்து வரைவுகடாய தோழி, இவ்வேங்கை தினைப்புனங் கொய்கவென்று சோதிடஞ் சொல்லுதலைப் பொருந்தி யெம்மைக் கெடுவித்தது.இனி நமக்கே னல்விளையாட்டில்லையெனச் சிறைப்புறமாகத் தலைமகனோடு கூறுவாள்போன்று தினைமுதிர் வுரைத்து வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மாதிடங் கொண்டம் பலத்துநின் றோன்வட வான்கயிலைப்
போதிடங் கொண்டபொன் வேங்கை தினைப்புனங் கொய்கவென்று
தாதிடங் கொண்டுபொன் வீசித்தன் கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு வித்தது தூமொழியே
ஏனல் விளையாட் டினியில் லையென
மானற் றோழி மடந்தைக் குரைத்தது.

(ப-ரை) தூமொழியே- தூயமொழியையுடையாய். மாது இடம் கொண்டு - உமாதேவியாரை யிடப்பக்கத்துக்கொண்டு, அம்பலத்து நின்றோன் - (எல்லோருங் காண) அம்பலத்தின்கண் நின்ற (பொருந்தா வொழுக்கத்தை யுடையவனது), வட - வடக்கின்கணுண்டாகிய, வான் - பெரிய, கயிலை - கைலைமலைக்கணுள்தாகிய, போதிடங்கொண்ட - பொருப்பிடங்கொண்ட, பொன் வேங்கை - பொன் (போலு மலரையுடைய) வேங்கை,தினைப்புனம் - தினைப்புனத்தை, கொய்க என்று - அரிகவென்று, தாது - மகரந்தத்துகளை, இடங் கொண்டு-தன்னிடத்தேகொண்டு, பொன் வீசி - பொன் (போலும் மலரை யெல்லார்க்கும்) கொடுத்து, தன் கள் - தனது தேனை,வாய்-பூத்தவிடத்து, சொரியநின்று - சொரிந்துநின்று, சோதிடங்கொண்டு - சோதிடஞ் சொல்லுதலைப் பொருந்தி, இது - இஃது, எம்மைக் கெடுவித்தது-எம்மைக்கெடுத்தது (இனி என்செய்தும்),எ-று.

(வி-ரை.) போதி - மலை; போதி இடம் - போதிடமென மரீஇயிற்று. பொன்னைக் கொடுத்துப் பிறர்க்கடிமையாதலைப் பொருந்தித்

தானிழிந்த சாதியாதலாற் றனக்குரிய கள்ளை வாய்சொரிய நின்றெனச்சிலேடைவகையானிழித்துக் கூறினாளாகவுமுரைக்க. சோதிடங்கொண்டிதெம்மைக் கெடக்கொண்டதென்பது பாடமாயிற் கெடக்கொண்டதென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீரவாய்க் கெடுத்ததென்னும் பொருள்பட்டு எம்மையென்னு மிரண்டாவதனை முடித்தனவாக வுரைக்க. மெய்ப்பாடு - அழுகை. பயன் - செறிப்பறிவுறுத்தல்.

திருக்கோவையார் கசரு-ம் செய்யுள்.

மயிலொடுகூறி வரைவுகடாதல்.

மயிலோடுகூறி வரைவுகடாத லென்பது—பிரிவருமை கூறி வரைவுகடாய தோழி, பிரிவாற்றாமையோடு தலைமகளையுங்கொண்டு புனங்காவலேறிப் போகாநின்றாள்; கணியார் நினைவு இன்று முடிந்தது; யாங்கள் போகாநின்றேம்; இப்புனத் தொருவர்வந்தால் இங்கு நின்றும் போனவர்கள் துணியாதன துணிந்து போனாரென்று அவர்க்குச் சொல்லுமினென மயிலொடுகூறி வரைவுகடாவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கணியார் கருத்தின்று முற்றிற்றி யாஞ்சென்றுங் கார்ப்புனமே
மணியார் பொழில்காண் மறத்திர்கண் டீர்மன்னு மம்பலத்தோ
னணியார் கயிலை மயில்கா ளயில்வே லொருவர்வந்தாற்
றுணியா தனதுணிந் தாரென்னு நீர்மைகள் சொல்லுமினே.

நீங்கரும் புனம்விடு நீள்பெருந் துயரம்
பாங்கி பகர்ந்து பருவா லுற்றது.

(ப-ரை.) கணியார் - கணியாரது, கருத்து - நினைவு, இன்று முற்றிற்று-இன்று முடிந்தது; (அதனால்) யாம் சென்றும் - யாங்கள் போகாநின்றேம்; கார் புனமே-கரியபுனமே, மணி ஆர்-மணிகளார்ந்த, பொழில்காள் - பொழில்களே, மறத்திர் கண்டீர் - (வேங்கையோடு பயின்றீராகலின் நீரெம்மை) மறப்பீர்; மன்னும் - நிலைபெற்ற, அம்பலத்தோன் - அம்பலத்தையுடையவனது, அணி ஆர் - அழகார்ந்த, கயிலை மயில்காள் - கைலையினின்றும் வந்த மயில்களே, அயில் வேல் ஒருவர் - கூரியவேல் துணையாகத் தனிவருமவர், வந்தால் - (ஈண்டு) வந்தால், துணியாதன -(அன்புடையார்) துணியாதனவற்றை, துணிந்தார் - (அவர்) துணிந்தார், என்னும் நீர்மைகள் - என்னும் நீர்மைகளை, சொல்லுமின் - அவர்க்குச் சொல்லுமின், எ-று.

(வி-ரை.) நீர்மை-ஈண்டு வியப்பு. நீரிவ்வாறு சொன்னால் அவராற்றுவாரென்பது கருத்து. பேருளினேன் கைலையினுள்ளீராகலின்

நீர் கண்ணோட்ட முடையீரென்பது கருத்து. கார்ப்புன மென்பதற்குக் கார்காலத்துப் பொலியும் புனமெனினு மமையும். துணியாதன வாவன்-பிரிதலும், வரையுந்துணையும் ஆற்றியிருத்தலுமாம். புனமே, பொழில்காள், மயில்காள் என்றுகூட்டி, நீரெம்மை மறப்பீராயினும் மறவாது சொல்லுமி னென்றுரைப்பாருமுளர். கணியார் என்றது வேங்கைமரத்தை (சோதிடரை). கண்ணோட்டம் - தாக்ஷிண்யம். இவையாறற்கும் மெய்ப்பாடும் பயனும் அவை.

நேரிசையாசிரியப்பா.

அண்டமீன் றளித்த கன்னிமுனி வாகத்
திருநுதன் முளைத்த கனறெறு நோக்கினில்
ஆயிர மணிக்கரத் தமைத்தவான் படையுடன்
சயம்பெறு வீரனைத் தந்தவன் றன்னால்
உள்ளத் தருளுந் தெய்வமும் விடுத்த
இருண்மனத் தக்கன் பெருமக முண்ணப்
புக்கதே வினர்தம் பொருகடற் படையினை
ஆரிய வூமன் கனவென வாக்கிய
கூடற் பெருமான் பொதியப் பொருப்பகத்
தருவியஞ் சார லிருவியம் புனத்தினும்
மயிலுங் கிளியுங் குருவியும் படிந்து
நன்றி, செய்துநர்ப் பிழைத்தோர்க் குய்வில வென்னுங்
குன்று வாய்மை நின்றுநிலை காட்டித்
தங்குவன கண்டும் வலிமனங் கூடி
வகவுந் துணிந்தன மெம்பெரும் படிறு
சிறிதுநின் றியம்ப வுழையினங் கேண்மினின்
றாற்றெழு மிருகவுட் பெருமதக் கொலைமலைக்
கும்ப மூழ்கி யுடற்குளித் தோடப்
பிறைமதி யன்ன கொடுமரம் வாங்கித்
தோகையர் கண்ணெனச் சுடுசரந் துரக்கும்
எம்முடைக் குன்றவர் தம்மனம் புகுதவிப்
புனக்குடிக் கணியர்தம் மலர்க்கையே டவிழ்த்து
வரிப்புற வணில்வாற் கருந்தினை வளைகுரல்
கொய்யுங் காலமு நாள்பெறக் குறித்து

நிழலுங் கொடுத்தவ ரீன்ற
மழலை மகார்க்கும் பொன்னணி தற்கே.

அண்டமீன்றளித்த—பொன்னணிதற்கே, பகுதி - பகற்குறி, துறை - கொய்தமை கூறி வரைவுகடாவிய தோழி, இப்புனத்துப் பயின்ற மயின் முதலியன தமக்குத் துப்பாகாக் காலத்தினுந் தினைத்தாளை விடாதிராநின்றன. யாம் போனால் நங்காதல ரிவ்விடத்தே வந்து தேடுவர்கொல்லோவெனச் சிறைப்புறமாகப் பிரிவருமை கூறி வரைவுகடாதல்.

'அண்டம்' என்பதுமுதல் 'தன்னால்' என்பதுவரை.
(1—4 வரிகள்.)

(ப-ரை.) அண்டம்-(பல்லாயிரகோடி)அண்டத்தையும், ஈன்று-படைத்து, அளித்த - காத்த, கன்னி - உமைக்கு, முனிவு ஆக - கோபமுண்டாகையால், திரு நுதல் - அழகிய நுதலில், முளைத்த - தோன்றிய, கனல் - கனலாக, தெறு - சுடாநின்ற, நோக்கினில் - கண்ணினால், ஆயிரம் - அளவிறந்த, வான் படை - பெரியபடை, அமைந்த—, மணி கரத்துடன் - அழகிய கையுடன், சயம் பெறும் - வெற்றிபெறும், வீரனை - வீரபத்திரனை, தந்து - படைத்து, அவன் றன்னால் - அவனால்.

(வி-ரை.) ஆக வென்னும் வினையெச்சந் தந்தென்னும் பிறவினை கொண்டது; இது காரணப்பொருட்டு. ஈன்ற அண்டம் என்னுமையால் பல்லாயிரகோடி அண்டமென் றுரைக்கப்பட்டது. அண்டம் - உலகம். எஞ்ஞான்றும் ஒருபெற்றியளாதலின் உமையைக் 'கன்னி' என்றார்.

'உள்ளத்தருளும்' என்பதுமுதல் 'சாரல்' என்பதுவரை.
(5—10 வரிகள்.)

(ப-ரை.) உள்ளத்து - உள்ளத்தின்கட் பிறக்கும், அருளும் - இரக்கமும், தெய்வமும் - தெய்வமென்னு நினைவும், விடுத்த - விடுத்தற்குக் காரணமான, இருள் - அஞ்ஞானத்தினையுடைய, மனம் - மனத்தோடு கூடிய, தக்கன் - தக்கனுண்டாக்கிய, பெருமகம் - பெரிய மகத்தவிர்ப்பாகத்தை, உண்ண—, புக்க - புகுந்த தேவினர்தம் - பிரமன் முதலான கடவுளர், பொரு - போர்செய்யாநின்ற, கடல் படையினை-படைக் கடலினை, ஊமன்-ஊமன் கண்ட, அரிய கனவு என - அரிய கனவுபோல, ஆக்கிய - வெளிப்படாதாக்

கிய, கூடற் பெருமான் - மதுரைப் பெருமானது, அருவி - அருவி யையுடைய, பொதியப் பொருப்புச் சாரலகத்து - பொதிய வரை யின் பக்கத்து.

(வி-ரை.) தெய்வமு மென்பது தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணியவாகு பெயரிலேயாய நினைவை யுணர்த்திற்று; "இருந்தாற் கோரோலை கொடுத்தானெறி குண்டலத்திற் பொருந்தார் பொறி யை" என்றாற்போல. பார்வதி பிரிதற் கிரங்காமையானும், சிவனைப் பிரிதற் கிரங்காமையானும் 'அருளுந் தெய்வமும் விடுத்த' என்றார். மயக்கத்தைத் தருதலின் அஞ்ஞானத்தை 'இருள்' என்றார். ஆரிய என்பது அரிய என்பதன் விகாரம்; ஆரியனாகிய வூமனெனினுமாம். தெய்வம் - ஆகுபெயர்; மகம் - என்பதும் அது. கடற்படை படைக் கடல் என முன்பின்னாக மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. பெரு மானது பொருப்பு என வியையும்.

'இருவி' என்பதுமுதல் 'அணிதற்கே' என்பதுவரை.
(10—26 வரிகள்.)

(ப-ரை.) உழை யினம் - மானினங்காள், எம் - எம்முடைய, பெரும் படிறு - மிகுதியாகிய குற்றத்தை, இன்று இயம்ப - இப் பொழுது சொல்ல, சிறிது நின்று - சிறிதுபொழுது நின்று, கேண் மின் - கேட்பீராக; பெரு மதம் - பெருமசம், ஊற்று எழும் - ஊற் றெழாநின்ற, இரு கவுள் - இரண்டு கபோலத்தினையுடைய, கொலை மலை - யானையின், கும்பமூழ்கி-மத்தகத்திலமிழ்ந்து, உடல் குளித் தோட - உடலுருவியோட, மதி - மதிக்கும், பிறையன்ன - பிறை போன்ற, கொடுமரம் வாங்கி - வில்லைவளைத்து, தோகையர் - மயில் போல்வாரது, கண் என - கண்போல, சுடு சரம்-சுடுசரத்தை, துரக் கும்-ஏவுகின்ற, எம்முடை-எம்முடைய, குன்றவர்தம் - குன்றவரது, மனம் புகுத - மனமறிய, இப்புனம் - இப்புனத்தில், குடி - குடியா கச் சிறந்த, கணியர் - வேங்கையார், கை-ஒழுங்காக, தம் மலர் எடு அவிழ்த்து - தம்மலரிதழ்விரித்து, நிழலும் கொடுத்து - நிழலையுங் கொடுத்து, அவர் ஈன்ற - அவர்பெற்ற, மழலை - உருத்தெரியாத சொல்லையுடைய, மகார்க்கும் - சிறார்க்கும், பொன்னணிதற்கு—, காலமும்—,நாள் பெற-(தினைகொய்யும்) நாளென்பதுபெற,குறித்து- கருதப்பட்டதனால், வரி - வரியினையுடைத்தாய, புறம் - முதுகினை யுடைய, அணில் - அணிலினது, வால் - வால்போல, வளை - வளை ந்த, கருந்தினை - கரியதினையின், குரல் - கதிரினை, கொய்யும் - கொய்யவும், நன்றி செய்குநர் - நன்றி செய்தாரை, பிழைத்தோர்க்கு-

பிழைத்தவர்க்கு, உய்வு இல என்னும்-உய்வில்லையென்கிற,வாய்மை குன்றா - உண்மை கெடாத, நிலை - நிலையை, நின்று காட்டி- நின்று காட்டாநின்று, புனத்து - புனத்தில், இருவியினும்-அறுத்த தாளினும், மயிலும் - மயிலும், கிளியும் - கிளியும், குருவியும் - குருவியும், படிந்து - வீழ்ந்து, தங்குவன கண்டும்—, வலிமனங்கூடி - மனவலியுண்டாய், ஏகவும் துணிந்தனம் - செல்லவுந் துணிந்தோம்.

(வி-ரை.) முற்றும்மை தொக்கது. பிறையாகிய மதியெனினுமாம். நிழலுமென்னு மும்மை சிறப்பும்மை. மகார்க்கு மென்னு மும்மை எச்சவும்மை. பொன்னணிதல் - கலியாணம் பண்ணுதல். ஏகாரம்-அசை. வேங்கை புட்பிக்கும் காலம்வரையும் 'நாள்' என்றார், சிற்றகத்தியத்தினும். காலமுமென்னுமும்மை எண்ணும்மை. காலம்-வரையுங்காலம். என்பது என வொருசொல் வருவிக்க. கொய்யவுமென்னுமும்மை எதிர்மறையும்மை. காட்டியென்பது நிகழ்காலமுணர்த்திற்று. இருவியினுங் கண்டுமென்னு மும்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. ஏனையஎண்ணும்மைகள். ஏகவுமென்றதிலும்மை சிறப்பும்மை. ஊற்றெழுதல்-சுரத்தல். கொலைமலை என்றமையால் யானையெனப் பொருளுரைக்கலாயிற்று. தோகை-மயில். சரம்-அம்பு. குன்றவர் - மலைநாடர் (குறவர்) மழலை - நிரம்பாச் சொல். பொன்னணிதல் - மணஞ்செய்தல். குறித்து-காரணப்பொருட்டாகிய வினையெச்சம். வரி - கீற்று. உய்வு - பரிகாரம். இருவி - தினைத்தட்டை. துணிந்தனம் என்னும் பயனிலைக்கு எழுவாயாகிய யாம் என்பது வருவித்துரைக்கப்பட்டது.

பொதியத்து மான்காள்! எம்முடைய குற்றத்தை நின்று கேட்பீராக. எம்முடைய குன்றவர் மனமறிய வேங்கையா ரிதழ்விரித்து நிழலையுங் கொடுத்துச் சிறார்க்கும் பொன்னணிதற்குக் காலமுந் தினை கொய்யுநாளென்பது பெறக் கருதப்பட்டதனால், தினைக்கதிரினைக் கொய்யவு முண்மைகாட்டாநின்று புனத்து இருவியினும் மயின் முதலியன தங்குவன கண்டும் ஏகவுந் துணிந்தனமென வினை முடிவு செய்க. (சு)

திருக்கோவையார் கoசு-ஆம் செய்யுள்.

இளமைகூறி மறுத்தல்.

இளமைகூறிமறுத்தலென்பது—அவளது வடிவுக்கஞ்சி மலர்ந்தறியாவென்றதல்லது மறுத்துக்கூறியவாறன்று. சிறப்பின்மை கூறியவாறெனவுட்கொண்டு, சிறப்புடைத் தழைகொண்டு செல்ல, அதுகண்டு குழலும் முலையும் குவியாத குதலைச் சொல்லிக்கு நீசொல்

லுகின்ற காரியம் சிறிதும் இயைபுடைத்தன் றென, “அவளது இளமைகூறி மறுத்துரையாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

உருகு தலைச்சென்ற வுள்ளத்து மம்பலத் தும்மொளியே
பெருகு தலைச்சென்று நின்றோன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகு தலைச்சென்ற கூழை முடியா முலைபொடியா
ஒருகு தலைச்சின் மழலைக்கென்னோ வைய வோதுவதே.

முளையெயிற் றரிவை
விளையில ளென்றது.

(ப-ரை.) உருகுதலை சென்ற - (அன்பாது) உருகுதலை யடைந்த, உள்ளத்தும் - மனத்திலும், அம்பலத்தும் - அம்பலத்திலும், (ஆகிய இரண்டிடத்தும் ஒப்ப) ஒளிபெருகுதலை சென்று - ஒளி பெருகுதலையடைந்து, நின்றோன் - நின்றவனாகிய சிவபெருமானது, பெருந்துறை - திருப்பெருந்துறைக்கண்ணே வாழ்பவளாகிய, பிள்ளை - இளமைப்பருவத்தை யுடையவளாகிய எமது பெண்ணினது, கள் ஆர் - தேன் நிறைந்த, முருகு - மணமானது, தலைச்சென்ற-தம்மிடத்தடைந்த, கூழை-குழல்கள், முடியா-சேர்த்து முடிக்கப்படா, முலை பொடியா-முலைகள் அரும்பா, (இத்தன்மையளாகிய) ஒரு-ஒப்பற்ற,சில் குதலை மொழிக்கு-சில மழலைச்சொற்களையுடையாட்கு, ஐய - ஐயனே, என்னோ ஓதுவது - என்னையோ நீ சொல்லுகின்ற இது (சிறிதும் இயைபுடைத்தன்று), எ-று.

(வி-ரை.) எகாரம்-அசைநிலை. கள்ளார் கூழையென வியையும். குதலைமை - விளங்காமை. மழலை - இளஞ்சொல். சின்மழலைத்திறத்து என நான்காவது எழாவதன் பொருட்கண் வந்ததெனினுமமையும். இவை நான்கற்கும் மெய்ப்பாடும் பயனும் அவை.

நேரிசையாசிரியப்பா.

இரண்டுட லொன்றாய்க் கரைந்துகண் படாமல்
அளவியல் மணநிலை பரப்புங் காலம்
தளைகரை கடந்த காமக் கடலுள்
புன்னுனிப் பனியென மன்னுத லின்றிப்
பீர மலர்ந்த வயாவுநோய் நிலையாது
வளைகாய் விட்ட புளியருந் தாது
செவ்வாய் திரிந்து வெள்வாய் பயவாது
மனைபுகை யுண்ட கருமண் ணிடந்து
பவள வாயிற் சுவைகா ணாது
பொற்குட முகட்டுக் கருமணி யமைத்தெனக்

குன்றுழக் கொங்கையுந் தலைக்கண் கறாது
மலரா வவிழ்ந்த தாமரைக் கயலென
வரிகொடு மதர்த்த கண்குழி யாது
குறிபடு திங்க ளொருபதும் புகாது
பொன்பெய ருடையோன் றன்பெயர் கடுப்பத்
தூணம் பயந்த மாணமர் குழவிக்கு
அரக்கர் கூட்டத் தமர்விளை யாட
நெருப்புமி ழாழி யீந்தரு ணிமலன்
கூடன் மாநக ராட வெடுத்த
விரித்த தாமரை குவித்த தாளோன்
பேரருள் விளையச் சீரிலர் போலத்
துலங்கிய வமுதங் கலங்கிய தென்ன
விதழ்குவித்துப் பணித்த குதலையுந் தெரியாது
முருந்து நிரைத்த திருந்துபற் றோன்றாது
தெய்வங் கொள்ளார் திணிமன மென்ன
விரிதரு கூழையுந் திருமுடி கூடாது
துணைமீன் காட்சியின் விளைகரு வென்னப்
பார்வையிற் றொழில்கள் கூர்விழி கொள்ளாது
மறுபுலத் தடுபகை வேந்தடக் கியதென
வடித்தெழு கொலைமுலை பொடித்தன வென்றே
செம்மகண் மாலை யிம்முறை யென்றால்
வழுத்தலும் வருதலும் தவிர்தி
மொழிக்குறி கூடாச் செவ்வே லோயே.

இரண்டெலொன்றாய் - செவ்வேலோயே, பகுதி - சேட்படை.

துறை - தலைவிவடிவுக்கஞ்சி மலர்ந்தறியாவென்று மறுத்துக்கூறிய வாற்றைச் சிறப்பின்மை கூறியவாறெனவுட்கொண்டு சிறப்புடைத் தழைகொண்டு செல்வதுகண்டு தலைவி யிளமைத்தன்மை கூறி மறுத்தல்.

மொழிக்குறி கூடாச் செவ்வே லோயே.

(33—வது வரி.)

(ப-ரை.) மொழிக்குறி - குறித்த சொல்லும், கூடா - விரைவி னுற் கூடப்படாத, செவ்வேலோய் - செவந்த வேலினையுடையாய்.

(வி-ரை.) சிறப்பும்மை தொக்கது.

பொன்பெய ருடையோன் றன்பெயர் கடுப்ப.

(15—வது வரி.)

(ப-ரை.) பொன்பெயர் உடையோன்-இரணியனெனப்பொன்னினது பெயரினை யுடையவன், தன் பெயர்-நாராயணாய வென்னுந் தன் திருநாமத்தை, கடுப்ப-அவன்மகன் சொல்லாவண்ணம் வெறுத்தலால்.

(வி-ரை.) கொடுப்ப என்றும் பாடமுண்டு; இதற்கு வழங்காது தடுத்தல் என்றுரைக்க.

இரண்டுட லொன்றாய்க் கரைந்துகண் படாமல்.

(1—வது வரி.)

(ப-ரை.) இரண்டு உடல்-தாய்தந்தையென்பவ ரீருடலும்,ஒன்றாய் - முயக்கத்தா லொருடலாய், கரைந்து -புணர்ச்சியானுருகி, கண் படாமல் - கண்முதலிய அவயவ நுகர்ச்சி யுண்டாகாமல்.

(வி-ரை.) இது முயக்கமு நிலையுங் காட்சியுமின்மை கூறினர். "காதலாற் காமபூமிக் கதிரொளி யவருமொத்தார், மாதருங் களிறன்னு மாசுண மகிழ்ச்சி மன்ற, லாதரம் பெருகுகின்ற வன்பினாலன்னமொத்துந், தீதிலார் திளைப்பினுமான் செல்வமே பெரிதுமொத்தார்" என்னுஞ் சிந்தாமணிப் பாட்டின் முயக்கமு நிலையுங் காட்சியுங் கூறி யவற்றிற் குவமை கூறினர். கண்முதலிய அவயவ நுகர்ச்சியைக் 'கண்' என்றார்.

'அளவியல்' என்பதுமுதல் 'மன்னுதலின்றி' என்பதுவரை.

(2—4 வரிகள்.)

(ப-ரை.) அளவியல் - அளவானியன்ற கூட்டமும், மணநிலை- இன்பநிலையும், பரப்பும் காலம் - உண்டாக்குங் காலமாகிய, தளை - தடைசெய்யும், கரை கடந்த - கரையைக் கடந்த, காமக்கடலுள் - காமமாகிய கடலினுள், புல் நுனி - புல்லினது நுனியின்கண் வீழ்ந்த, பனி என-நீரளவென்னும்படி, மன்னுதல் இன்றி - நிலைபெறுதலில்லாமல்.

(வி-ரை.) அளவியன் மணம் - சாதியானமைந்த கூட்டம். "அருணி வட்லைவ யத்தினி யென்பவை, தெரியுங்காலை, யரிவையர்

சாதி, சசனேயிடப னச்சுவ னென்று, மகன்மேற் சாதி வகுக்கவும் படுமே'' என்றார் இன்பசாரமுடையார். நிலை - அமுதநிற்குநிலை. காலம் - நாழிகை, மாலை முதலியவை. இன்னும் இது விரிப்பிற் பெருகுமாதலான் இம்மட்டில் நிறுத்தப்பட்டது.

பீர மலர்ந்த வயாவுநோய் நிலையாது.

(5—வது வரி.)

(ப-ரை.) பீரமலர்ந்த - பசலைபூத்தற்குக் காரணமாகிய, வயாவு நோய் நிலையாது - வயாவுநோய் நிலைபெறாது.

(வி-ரை.) பீர்-பசலை (வேறுபட்டநிறம்); இதனை, வைவர்ண்யம் என்பர் வடநூலார். "வயாவென் கிளவி வேட்கைப் பெருக்கம்", அது கருப்பந்தங்கி வருத்தமுற்று நுகரப்படும் பொருண்மேற் செல்லும் வேட்கை.

வளைகாய் விட்ட புளியருந் தாது.

(6—வது வரி.)

(ப-ரை.) வளை காய்விட்ட - வளைந்தகாயினைவிட்ட, புளியருந் தாது-புளியினையு மருந்தாது.

(வி-ரை.) சினைமுதலாகிய சன்பொருட்கேற்ற வடையடுத்து நின்றதோ ராகுபெயர்; "பூங்குமிழ்போல" புளியென்பத னீற்றில் எச்சவும்மை தொக்கது.

செவ்வாய் திரிந்து வெள்வாய் பயவாது.

(7—வது வரி.)

(ப-ரை.) செவ்வாய் திரிந்து - சிவந்தவாயும் வேறுபட்டு, வெள் வாய் பயவாது - வெளுத்தவாயாக வுண்டாகாது.

(வி-ரை.) செவ்வாய் என்பதனீற்றில் எச்சவும்மை தொக்கது.

'மனை' என்பதுமுதல் 'காணாது' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) மனை - மனையின்க ணுண்டாகிய, புகையுண்ட - புகைபட்டதனால் வந்த, கருமண் இடந்து - கரியமண்ணைப்பிட்டு, பவளவாயின் - பவளம்போன்ற வாயினால், சுவை காணாது-சுவையுங் காணாது.

(வி-ரை.) சுவையென்பதனீற்றில் எச்சவும்மை தொக்கது. உண்டகருமண் உண்டவெச்சில் போன்றது. செம்மை வாய்க்கியல்பாதலின் 'பவளவாய்' என்றார். உண்ட என்பது ஈண்டுச் செயப்பாட்டின்கண் வந்தது. பவளவாய் - உவமைத்தொகைநிலைத்தொடர். வாயின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப் பொருளில் வந்தது.

'போற்குடம்' என்பதுமுதல் 'கருது' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) பொன் குடம் - பொன்னாற் செய்த குடத்தின், முகட்டு - உச்சியில், கரு மணி - கரியமணியை, அமைத்தென-அழுத்தினாற்போல, குங்குமம் - செஞ்சாந்தணிந்த,கொங்கையும் - முலையும், தலை - தன்னிடத்து, கண் கருது - கண்கள் கருது.

(வி-ரை.) இது விகாரவுவமை. முகடு - உச்சி (உபரிபாகம்). கருமணி - நீலமணி. தலை - ஏழனுருபு. கருது-கருக்காமல். கொங்கையும் என்பதனீற்றும்மை எச்சவும்மை.

'மலர' என்பதுமுதல் 'குழியாது' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) மலர - மலர்தர, அவிழ்ந்த-விரிந்த, தாமரை-தாமரைமலரில்தங்கும், கயல் என-மீன்போல, வரிகொள் - வரிபரந்து, மதர்த்த-களித்த, கண் குழியாது - கண்ணுங் குழியாமல்.

(வி-ரை.) தாமரை-ஆகுபெயர். கண் என்பதனீற்றில் எச்சவும்மை தொக்கது.

குறிபடு திங்க ளொருபதும் புகாது.
(14—வது வரி.)

(ப-ரை.) குறிபடு - பெருங்காலமென்று குறித்தல்பெற்ற, திங்கள் ஒருபதும் - மாதம் பத்தும், புகாது - செல்லாமல்.

(வி-ரை.) பெருமடையாளமுண்டாதற்கிடமாகிய பத்துமாதமுஞ் செல்லாமலென்னுமாம். அடையாளம்-வயிறெருடுங்கன் முதலியன.நோயும் புளியுர்வாயுஞ் சுவையுங் கண்ணுமென்னும் உம்மைகள் விகாரத்தாற்றொக்கன. கொங்கையும் பத்துமென்னும் உம்மைகள் விரிந்துநின்றன.

'தூணம்' என்பதுமுதல் 'நிமலன்' என்பதுவரை.
(16—18 வரிகள்.)

(ப-ரை.) தூணம் பயந்த - தூணாகிய தாயினால் பெறப்பட்ட, மாண் அமர் - மாட்சிமை பொருந்திய, குழவிக்கு - நரசிங்கமாகிய குழந்தைக்கு, அரக்கர் கூட்டத்து - அரக்கர் குழுவுடனே, அமர் விளையாட - போர்செய்து விளையாட, நெருப்பு உமிழ் - தீயுமிழா நின்ற, ஆழி - சக்ராயுதத்தை, ஈந்தருள் நிமலன் - கொடுத்தருளின நிமலன்.

(வி-ரை.) பயந்த என்னும் பெயரெச்சம் செயப்பாட்டின்கண் வந்தது. நிமலன் என்றது சிவபெருமானை. கண்படாமல் மன்னுத லின்றி நிலையாது அருந்தாது பயவாது காணாது கருது குழியாது புகா தென்னு மெதிர்மறை வினையெச்சவடுக்கு பயந்தவென்னும் பெய ரெச்சத்தோடு முடிந்தது, இது குறிப்புருவகம்.

'கூடல்' என்பதுமுதல் 'தாளோன்' என்பதுவரை.
(19—20 வரிகள்.)

(ப-ரை.) கூடல் மாநகர் - மதுரைமாநகரில், ஆட - மாறியாடும் படி, விரித்த தாமரை - விரித்த தாமரையை, எடுத்த - தூக்கின, குவித்த - குவித்தாற்போன்ற, தாளோன் - (பொன்னம்பலத்துப் பதித்த) அத்தாளினை யுடையோன்.

(வி-ரை.) இது விகாரவுவமை. குவித்ததா ளொற்றுமைநயம் பற்றி வந்தது. அகரம் பண்டறிசுட்டு. எடுத்த விரித்த குவித்த தாம ரைத்தாளெனப் பெயரெச்சவடுக்காய்ப் பொருள்கொள்ளின், எடுத் தல் - தூக்குதல், எடுத்தபாதம் - குஞ்சிதபாதம், இஃதைவகைக்காற் றெழிலிற் காண்க. விரித்தல் - சொல்லுக்கிடாக விரித்தல். குவித் தல் - குவிக்கவேண்டுஞ் சொற்களுக்குக் குவித்தல். இவையிரண்டுஞ் சிங்களக் காற்றொழில். தாள் - திருவடி.

'பேரருள்' என்பதுமுதல் 'தேரியாது' என்பதுவரை.
(21—23 வரிகள்.)

(ப-ரை.) பேரருள் விளை - மிகுந்தவருளினை யுண்டாக்கப்பட்ட, அச்சிரிலர்போல - அச்சீரினையுடைய ரல்லாதார்போலவும், துலங்கிய அமுதம் - தெளிந்தபுனலில், கலங்கியதென்ன - கலங்கியபுனல் போலவும், இதழ் குவித்து - வாய்குவித்து, பணித்த - சொல்லப் பட்ட, குதலையும் தெரியாது - சொல்லுருவுந் தெரியாது.

(வி-ரை.) சீரிலர் - தொல்லைச்சீரிலரென்க. கலங்கியது - தொழிற்பெயர். உம்மையை மாற்றுக. ஞுதலைதெரியாதென்றும் பாடம். விளை-வினைத்தொகை, விளைசீர் என வியையும். அமுதம், புனல் என்பன நீரின் பெயர்கள். இதழ்-ஆகுபெயர். ஞுதலை-மழலைச்சொல்.

முருந்து நிரைத்த திருந்துபற் றோன்றாது.

(24—வது வரி.)

(ப-ரை.) திருந்து - திருந்திய, முருந்து - இறகின் குருத்து, நிரைத்த-நிரைத்தாற்போன்ற, பல் தோன்றாது - பல்லின்கணுண்டாகிய நகை தோன்றாது.

(வி-ரை.) பல்-இடத்துநிகழ் பொருளின்றொழில் விடத்தின்மேனின்றதோராகுபெயர். முருந்து - மயிலிறகின் அடி. நிரைத்தல்-வரிசையா யமைத்தல்.

'தெய்வம்' என்பதுமுதல் 'கூடாது' என்பதுவரை.

(25—26 வரிகள்.)

(ப-ரை.) தெய்வம் கொள்ளார் - தெய்வமுண்டென்று கொள்ளாதவரது, திணி மனம் என்ன - திண்ணிய மன மொருவழிப்படாததுபோல, விரிதரு கூழையும் - பரந்தகுழலும், திருமுடி கூடாது - அழகிய முடிபோலக் கூடவில்லை.

(வி-ரை.) திணிமனம்-அஞ்ஞானத்திற் செறிந்தமனம், "மண்டிணி ஞாலத்து" என்றாற்போல. உம்மை - சிறப்பும்மை. கொள்ளார் என்பதனீற்றில் ஆறனுருபு தொக்கது. கூழை, குழல் என்பன கூந்தலின் பெயர்கள்.

'துணை' என்பதுமுதல் 'கோள்ளாது' என்பதுவரை.

(27—28 வரிகள்.)

(ப-ரை) காட்சியின்-பார்வையினால், கருவிளை-சினையை விளைக்காநின்ற, துணைமீன் என்ன - இணைமீன்போல, பார்வையின் - பார்வையினால், தொழில்கள் - விளைக்குந் தொழில்களையும், கூர்விழி கொள்ளாது - கூரியகண்கள் கொள்ளாது.

(வி-ரை.) சிறப்பும்மை தொக்கது. விளைகரு - வினைத்தொகை நிலைத்தொடர். கரு - சினை. துணை - இரண்டு. இணையென்பதும் அது. பார்வையின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவது கருவிப்பொருளில் வந்தது.

'மறு' என்பதுமுதல் 'வேன்றே' என்பதுவரை.

(29—30 வரிகள்.)

(ப-ரை.) வேந்து-ஒரு வேந்தன், மறு புலத்து அடுபகை - வேற்றுப் புலத்து விளைக்கும் பகையை, அடக்கியது என - காலம் பார்த்துள்ளடக்கினாற்போல, வடுத்தெழு கொலை - கொலையை வெளிப்படுத்தி யெழாநின்ற, முலை - முலை, பொடித்தன என்றே - தோன்றவில்லை.

(வி-ரை.) ஏகாரம்-எதிர்மறை, "இருநில மன்னற் கின்பமே" என்றாற்போல. வேந்து-ஆகுபெயர். மறுபுலம் - வேற்றரசரிடம். வடுத்தல்-வெளிப்படுத்தல், அரும்புதல் எனினுமாம். பொடித்தல் என்பதும் அப்பொருளதே.

'செம்மகண்மாலை' என்பதுமுதல் 'தவிர்தி' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப-ரை.) செம்மகள் மாலை - ஆதலாலொருவிரகுமறியாத புதிய மகளொழுங்கு, இம்முறை என்றால் - இப்படியென்றால், வழுத்தலும் - இவள்பொருட்டாற் குறையிரத்தலும், வருதலும்-வருதலும், தவிர்தி - நீ தவிர்வாயாக.

(வி-ரை.) செம்மை - புதுமை, அது முன்கண்டறியாமை; "செங்கீரிளவாளை" என்றாற்போல. விரகு - உபாயம். புதியமகள் - இளம்பெண். தவிர்தல் - ஒழிதல்.

குவித்ததாளோ னருள்விளக்காநின்ற அச்சீரிலர்போலவும் கலங்கியதுபோலவும் பணித்தசொற் றெரியவில்லை, நகை தோன்றவில்லை, முடி கூடவில்லை, தொழில்களைக் கண் கொள்ளவில்லை, முலை தோன்றவில்லை, ஆதலால், இவளொழுங்கு இப்படியென்றால், இவள் பொருட்டாற் குறையிரத்தலும் வருதலும் நீ தவிர்வாயாக வென வினைமுடிவு செய்க. (௫)

திருக்கோவையார் ௨௬௭-ம் செய்யுள்.

சுவடுகண்டறிதல்.

சுவடுகண்டறிதல் என்பது—சோதிடம்பெற்றுச் செல்லாநின்றவள் ஆடமரம்பின்கட் கிடந்த இவை, தீவினையே னெடுத்துவளர்த்த மாணிழைசிறடி, உவை, அக்கள்வனடியாமெனச் சுவடுகண்டறியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

தெள்வன் புனற்சென்னி யோனம் பலஞ்சிந்தி யாரினஞ்சேர்
முள்வன் பரன்முரம் பத்தினமுன் செய்வினை யேனெடுத்த
வொள்வன் படைக்கண்ணி சீறடி யிங்கிவை யுங்குவையக்
கள்வன் பகட்டுர வோனடி யென்று கருதுவனே.

சுவடுபடு கடத்துச்
செவிலிகண் டறிந்தது.

(ப-ரை.) தெள் - தெள்ளிய, வல் - பெரிய, புனல் - புனலை யுடைத்தாகிய, சென்னியோன் - சென்னியை யுடையவனது, அம்பலம் - அம்பலத்தை, சிந்தியார் - கருதாதாரது, இனம் சேர் - இனஞ்சேரும், முள்-முள்ளையும், வல் - வலிய, பரல் - பரலையுமுடைய, முரம்பத்தில் - இம் முரம்பின்கட்கிடந்த, இங்கிவை - இவற்றை, முன் - முற்காலத்து, செய் - செய்யப்பட்ட, வினையேன் - தீவினையையுடைய யான், எடுத்த - எடுத்து வளர்த்த, ஒள் - ஒள்ளிய, வல் - வலிய, படை - படைபோலும், கண்ணி - கண்ணினையுடையாளுடைய, சீறு - சிறிய, அடி - அடிச்சுவடாம், (இனி) உங்குவை - உவற்றை, அ - அந்த, கள்வன் - கள்வனாகிய, பகட்டுரவோன் - பகடுபோலும் வலியை யுடையா னுடைய, அடியென்று - அடிச்சுவடென்று, கருதுவன் - உய்த்துணராநின்றேன், எ - று.

(வி-ரை.) முரம்பு - பரல்முள் முதலிய நிறைந்த நிலம். இங்கிவை, உங்குவை யென்பன ஒருசொல்.

நேரிசையாசிரியப்பா.

நிணமுயி ருண்ட புலவு பொருது
தலையுட லசைத்துச் சாணைவாய் துடைத்து
நெய்குளித் தகற்று நெடுவேல் விடலை
அந்தண ருகுநீர்க் கருட்கரு விருந்து
கோடா மறைமொழி நீடுறக் காணுங்
கதிருடல் வழிபோய்க் கல்லுழை நின்றோர்
நெருப்புருத் தன்ன செருத்திறல் வரைந்த
வாசகங் கண்டு மகிழ்ந்தது மிவணே
துணைவிளக் கெரியு நிலைவிழிப் பேழ்வாய்த்
தோகைமண் புடைக்குங் காய்புலி மாய்க்க
வாய்செறித் திட்ட மாக்கடிப் பிதுவே
செடித்தலைக் காருட லிடிக்குரற் கிராதர்

மறைந்துகண் டக்கொலை மகிழ்வுழி யிங்கிலை
தவநதி போகு மருமறைத் தாபதர்
நன்னர்கொ ளாசி நாட்டிய திவ்வுழை
கறையணற் புயங்க னெரிதழல் விடத்தை
மலைமறை யதக மாற்றிய வதுபோற்
கொடுமறக் கொலைஞ ராறிடை கவர
வெண்ஞூது கிடைத்த புண்ணெழு செருநிலைக்
கைவளர் கொழுந்து மெய்பொடி யாகவென்
சிற்றிடைப் பெருமுலைப் பொற்றொடி மடந்தைதன்
கவைஇய கற்பினைக் காட்டுழி யிதுவே
குரவஞ் சுமந்த குழல்விரித் திருந்து
பாடலம் புனைந்தகற் பதுக்கையிவ் விடனே
யொட்டுவிட் டுலறிய பராரைநெட் டாக்கோட்டு
உதிர்பறை யெருவை யுணவூன் றட்டி
வளைவாய்க் கரும்பருந் திடைபறித் துண்ணக்
கண்டுநின் றுவந்த காட்சியு மிதுவே
செம்மணிச் சிலம்பு மரகதப் பொருப்புங்
குடுமியந் தழலு மவணிருட் குவையு
முளைவரும் பகனு மதனிடை மேகமுஞ்
சேயிதழ் முளரியுங் காரிதழ்க் குவளையும்
ஒருழைக் கண்ட வுவகைய தென்ன
வெவ்வுயிர் நிறைந்த செவ்விகொண் மேனியில்
அண்டப் பெருந்திரள் அடைவின் றளித்த
கன்னிகொண் டிருந்த மன்னருட் கடவுள்
மலையுருக் கொண்ட வுடல்வாள் அரக்கர்
வெள்ளமும் சூரும் புள்ளியற் பொருப்பு
நெடுங்கடற் கிடங்கு மொருங்குயிர் பருகிய
மணிவேற் குமரன் முதனிலை வாழுங்
குன்றுடுத் தோங்கிய கூடலம் பதியோன்
ருடலை தரித்த கோளினர் போல
நெடுஞ்சுர நீங்கத் தங்கா
லடுந்தழன் மாற்றிய காற்குறி யிவணே.

நிணமுயிருண்ட - காற்குறியவனே, பகுதி - உடன்போக்கு. துறை - புணர்ந்துடன் வருவாரை வினவி அதுவழியாகப் போய், மகணிறை நிலைமை முதலியகண்டு செவிலிவியந்துரைத்தல்.

'நிணமுயிருண்ட' என்பதுமுதல் 'விடலை' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) உயிருண்ட-சத்துருக்களுயிரை யுடலினின்று நீக்கிய தனுனே, புலவு நிணம் பொருது-முடைநாற்றத்தோடு நிணத்தைப் பொருது, தலையுடல் அசைத்து - உடற்றலை விதிர்த்து, சாணைவாய் துடைத்து - சாணையில் தன்வாயைத் துடைத்து, நெய் குளித்து-நெய்யின் மூழ்கி, அகற்றும்-நீக்கும், நெடு வேல் - நெடிய வேலினையுடைய, விடலை - விடலை.

(வி-ரை.) இது கருவி கருத்தாவாயிற்று. பொருதகற்றமென வினையும். உண்டற்குரிய வல்லாப்பொருளை யுண்டெனக் கூறினார் இலக்கணையான். விடலை - பாலைநிலத் தலைமகன்; பருவப் பெயரன்று. பருவப்பெயராயின், "அத்திறனிறந்த முப்பதின்காறும் விடலைக்காகு மிகினே முதுமகன்" என்றார் அவிநயனார். நிணம் - கொழுப்பு. விதிர்த்தல் - நடுக்கல். வாய் - கூர் நுனி.

'அந்தணர்' என்பதுமுதல் 'மகிழ்ந்ததுமிவணே' என்பதுவரை.

(4—8 வரிகள்.)

(ப-ரை.) அந்தணர் - வேதியர், உகும் நீர்க்கு - அருக்கியங் கொடுக்கும் நீரினால், அருள் - அருளாகிய, கரு இருந்து - கருக்கொண்டு, கோடா-கோடாத, மறை மொழி - மந்திரமாகிய கதிரை, நீடுறக்காணும் - நெடுங்காலம் பொருந்த ஈனும், கதிர் - சூரியனது, உடல் வழிபோய் - மார்பின்வழியாகச் சென்று, கல் உழை - நடுகல்லின்கண்ணே, நின்றோர் - (வீரசொர்க்கமாகிய போகம்பெற்று) நின்ற வீரரது, நெருப்பு உருத்தன்ன - நெருப்பானது உருக்கொண்டாற்போன்ற, செரு - போர்க்களத்தி லுண்டாகிய, திறல்-வெற்றியை, வரைந்த - எழுதின, வாசகம் கண்டு - பாசுரத்தைப் பார்த்து, மகிழ்ந்ததும் - மகிழ்ந்த இடம், இவணே - இவ்விடமே.

(வி-ரை) இது எகதேச வுருவகம், "எமப் புணையைச் சுடும்" என்றாற்போல. மறைமொழி - மந்திரம், "மறைமொழி காட்டிவிடும்" என்றார் பெருநாவலரும். நின்றோர் எனச் செயப்படுபொருளை வினைமுதல்போலக் கூறினார். இருகைநீர் என்றும் பாடம். நீர்க்கு -

உருபுமயக்கம், நீடு-நெடுங்காலத்தை யுணர்த்திற்று, நீடுநினைந்திரங் கல் என்புழிப்போல. உம்மை-இசைநிறை. அந்தணரிடத் தருக்கிய மேற்று அருள் மாறாதிருந்து அவர்க்கு மந்திர சித்தியை ஓங்கச் செய்யும் கதிர் எனினும் அமையும். அருள் வாளாகெடாது பயன்படு தலால் 'கருவிருந்து' என்றார். கதிர்-ஆகுபெயர். ஞாயிற்றின் மார்பு வாயிலாக வீரசொர்க்கம் புகுதல் மரபாதல் இதனாற் பெறப்பட்டது. இதனை, "கோவியரும் வானத் தரம்பையருங் கோடினார், தேவர்களு மாதவருந் தேறினார்-பூவுலகில், கார்வாழும் கையான் கரிகாற் சோ ழன்மண்டு, போர்வா ளுறைவிடுத்த போது" என்பதனானு முணர்க.

'துணை' என்பதுமுதல் 'கடிப்பிதுவே' என்பதுவரை.
(9—11 வரிகள்.)

(ப-ரை.) துணை விளக்கு-இரட்டைவிளக்கு, எரியும்-எரிந்தாற் போலச்சுனலும், நிலைவிழி-நிலைக்கண்களையும், பேழ் வாய்-பெரியவாயினையும், மண் புடைக்கும் - நிலத்தில் விசைத்தடிக்கின்ற, ரோகை - வாலினையும் உடைய, காய் புலி-சினவிய புலியை, மாய்க்க - மாய்க்குட்பொருட்டு, வாய் செறித்திட்ட - (அதனது) வாயினிடத்துச் செறித்திட்ட, மா கடிப்பு இது - பெருங்கடிப்பு இதுவே.

(வி-ரை.) "பொன்றுஞ் சரகத்தினைப் பொருள் செய்யுமே" என்றாற்போலப் பெயரெச்சம் மாறிநின்றது. ஆளைக்கண்டு வாலைவிசைத் தடித்தல் புலிக்கும், அதன்வாயிற் குத்துதல் வீரற்கும் மரபாதலான் இவ்வாறு கூறினார். மாக்கடிப்பு- ஆயுதவிசேஷம். துணை - இரண்டு. நிலைவிழி - இமையாவிழி. காய்புலி - வினைத்தொகைநிலைத்தொடர். சினவிய - கோவித்த. மாய்த்தல் - கொல்லுதல். செறித்தல் - திணித்தல்.

'செடித்தலை' என்பதுமுதல் 'இந்நிலை' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) செடித்தலை-செடிபோலுந் தலையினையும், கார் உடல்-கரியவுடலினையும், இடி குரல் - இடியோசைபோலுங் குரலினையும் உடைய, கிராதர்-வேடர், மறைந்து - ஒளித்துநின்று, அக்கொலை - அந்தப் புலிக்கொலையை, கண்டு - பார்த்து, மகிழ் உழி - மகிழ்ந்த இடம், இந்நிலை - இந்த இடமே.

(வி-ரை.) செடி - தூறு. நின்ற இடத்தினை 'நிலை' என்றார். நிலை - ஆகுபெயர். இடியென்றதும் அது.

'தவநதி' என்பதுமுதல் 'இவ்வுழை' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) தவம் - தவத்தினையுடைய, நதி - புண்ணியதீர்த்தங்களில், போகும்-செல்லாநின்ற, அருமறை-அரியமறையினையுடைய, தாபதர் - அருந்தவத்தினர், நன்னர்கொள் - நன்மையாகக் கொள்ளாநின்ற, ஆசி நாட்டியது - ஆசிகூறியது, இவ்வுழை - இவ்விடமே.

(வி-ரை.) நீராடலும் தவமாதலான் 'தவநதி' என்றார்; அது, "நாலிரு வழக்கிற் றாபதபக்கம்" என்பதனாலறிக. நாட்டியது-தொழிற்பெயர். நன்னர் - பண்புப்பெயர். ஆசி - ஆசீர்வாதம் (வாழ்த்து.)

'கறையணல்' என்பதுமுதல் 'இதுவே' என்பதுவரை.

(16—22 வரிகள்.)

(ப-ரை.) கறை-கறுத்தலையுடைய,அணல்-கீழ்வாய்ப்புறத்தோடு கூடிய,புயங்கன்-பாம்பினது, எரிதழல்-எரிநெருப்புக் கொல்வதுபோலக்கொல்லுகிற, விடத்தை-நஞ்சினை, மலை மறை-மலையில் மறைந்த, அதகம் - மருந்து, மாற்றிய அதுபோல் - தீர்த்த அச்செயல்போல, சிற்றிடை - சிறிய இடையினையும், பெருமுலை - பெரியமுலையினையும், பொன் தொடி - பொன்னானியன்ற தொடியினையும் உடைய, என் மடந்தை-என் மாதானவள், தன்கவைஇய - தன்னிடத்துண்டாகிய, கற்பினை - கற்பை, ஆறு இடை கவர - வழியிற்கவரும்படி, எண்ணாது கிடைத்த - மதியாமற்கிட்டின, கொடு-கொடுமையாகிய, மறக்கொலைஞர்-கொலைத்தொழிலையுடைய மறவர், புண் எழு - புண் உண்டாதற்குக் காரணமாகிய, செருநிலை - போர்க்களத்தில், கைவளர் கொழுந்து-கைவளர்ந்த தலைப்படையினரது, மெய் பொடி ஆக-உடம்பு துகளாக, காட்டுழி-காட்டின இடம், இதுவே - இவ்விடமே.

(வி-ரை.) கொல்வதுபோலக் கொல்லுதல் - உயிர்போமளவும் சென்று கொல்லுதல், இதுதொழிலுவமம். தழலாகியவிடம் எனினுமாம், "நாறுழற் சீற்றத்தூன்" என்றாற்போல. அதகம்-மருந்து.செயலையது எனச் சுட்டிக் கூறினார். மாற்றிய என்னும் பெயரெச்சம் வினைகொண்டது, கல்லகத்திடுதல் கவைஇய எனத்திரிந்து எச்சமாய் நின்றது; "கழுவிளங்காரம் கவைஇயமார்பு" என்றாற்போல. கற்பினை யென்பதில் இன்னும் ஐயும் அசை. எண்ணாது-மதியாமல். புண்ணெழுகொடுமரம் எனக் கூட்டுக. அது, "புண்டாங் குவைவேல்" போலநின்றது. கை - படைவகுப்பு. இருவகைக் கற்பினுள் இவள்

கற்புக் கந்திருவ வழக்கம்போல் ஒரு தலையாய்க் களவின்வழி யொழுகுங் கற்பாதலின், அக்கற்பினிறந்து பாடுபயவாமையின் கற்புக்காட்டியது என்றாள். கொடுமரக்கொலைஞர் எனப் பாடமோதி வில்லினையுடைய மறவர் என்றுரைத்தலுமாம். ஆறலைத்தல் - வழி கூட்டிப்பறித்தல். தலைப்படையினர் - முற்படையினர்.

‘குரவம்’ என்பதுமுதல் ‘இவ்விடனே’ என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை.) குரவம் சுமந்த - (முற்காலத்துக்கேற்ற) குரவமலரினைத்தரித்த, குழல் விரித்திருந்து-குழலைவிரித்திருந்து, பாடலம் புனைந்த - (இக்காலத்துக்கேற்ற) பாதிரிமலரைப் புனைந்தவிடம், கற்பதுக்கை இவ்விடன் - இக்கற்பாறையிடம்.

(வி-ரை.) இதனால் காலந்தோறும் வேறு வேறு பூவணிவரென்பது பெறப்பட்டது. அது, “நாள்செய்மாலை நகைமுடிப்பெய்பவே” என்பதனானறிக. குழல் - கூந்தல்.

‘ஒட்டு’ என்பதுமுதல் ‘காட்சியுமிதுவே’ என்பதுவரை.
(25—28 வரிகள்.)

(ப-ரை.) ஒட்டுவிட்டு உலறிய-யானையுரிஞ்சத்தோலிடப்புண்டு காய்ந்த, பருவரை-பரிய அரையினையுடைய, நெடு ஆ கோட்டிடை - நெடிய ஆச்சாவினது கோட்டிடையில், வளைவாய் - வளைந்தவாயினையுடைய, கரும்பருந்து - கரியபருந்தானது, உதிர்பறை-உதிராநின்ற சிறையினையுடைய, எருவை உணவு - கழுகினுணவாகிய, ஊன் தட்டி - ஊனையதுநுகராது தவிர்த்து, பறித்துண்ண-பறித்துண்ண, கண்டு நின்று - பார்த்துநின்று, உவந்த காட்சியும் இது - மகிழ்ந்த விடமு மிவ்விடம்.

(வி-ரை.) ஒட்டியிருத்தலால் தோலை ‘ஒட்டு’என்றார். நெட்டா என்றார் கப்பின்றியொன்று யோங்கிநிற்றலின், “வழுவை யுரிஞ்சி வழன்ற தளர்கோடு” என்றார் சிற்றகத்தியத்தினும். கண்டது சொல்லிய கவியைக் காட்சியென்றாற்போலக் கண்டு நின்றவிடத்தைக் ‘காட்சி’ என்றார். உம்மை - இசைநிறை. ஆ - ஆச்சாமரம் (மராமரம்). உலறல் - காய்தல். இடப்புண்டல் - உரிபடல், பருவரை - பெரும் பொருக்கு. கோடு - கிளை. சிறை - சிறகு. ஊன் - தசை.

'செம்மணி' என்பதுமுதல் 'கடவுள்' என்பதுவரை.

(29—36 வரிகள்.)

(ப-ரை.) செம்மணிச் சிலம்பும்-மாணிக்கவரையையும், மரகதப் பொருப்பும் - மரகதவரையையும், உவகை - மகிழ்ச்சியால், ஒருழை கண்டதென்ன - ஓரிடத்திற்கண்ட காட்சிபோலவும், அம்-அழகிய, குடுமி - சிகையினையுடைய, தழலும் - நெருப்பையும், இருள் குவையும்-இருட்கூட்டத்தையும், அவண்-மகிழ்ச்சியா னோரிடத்திற்கண்ட காட்சிபோலவும், மூவருமறியாமை கெடுதற்கேது வாகிய பாலாதித்தனையும், அதனிடை மேகமும் - மேகத்தினையும் மகிழ்ச்சியா னோரிடத்திற்கண்ட காட்சிபோலவும், சேயிதழ் முளரியும் - சிவந்த இதழினையுடைய தாமரையையும், காரிதழ் குவளையும்-கரிய இதழினையுடைய நீலோற்பலத்தையும் மகிழ்ச்சியா னோரிடத்திற்கண்ட காட்சிபோலவும், எவ்வுயிர் - எல்லாவுயிர்க்கண்ணும், நிறைந்த - நிறைந்த, செவ்வி கொள் - செவ்விகொண்ட, மேனியில் - திருமேனியில், அண்டப்பெருந்திரள்-பல்லாயிரகோடி யண்டத்தையும், அடைவு - முறைமுறையே, ஈன்று - படைத்து, அளித்த - காத்த, கன்னி - உமையை, கொண்டிருந்த - இடங்கொண்டு வீற்றிருந்த, மண்-நிலைபேற்றை யுடைத்தாய, அருள்-அருளினையுடைய, கடவுள் - கடவுள்.

(வி-ரை.) இது நிறவுவமைக்கண் வந்த அபூதவுவமை. என்னவுமென்னு மெண்ணும்மை தொக்குநின்றது, அதனை யெங்குங் கூட்டிக்கொள்க. கண்ட அதுவெனக் கூட்டுக. அது வினைகொண்டது காட்சியாயிற்று. எவ்வுயிர்க்கண்ணு மென்பதில் உருபும் முற்றும்மையுந் தொக்கன. வரை - மலை. மரகதம் - பச்சைமணி. பாலாதித்தன் - பாலசூரியன். முளரி - ஆகுபெயர். குவளையும் அது. இடங்கொண்டு - இடப்பாகத்திற்கொண்டு.

'மலை' என்பதுமுதல் 'இவணே' என்பதுவரை.

(37—44 வரிகள்.)

(ப-ரை.) மலையுருக்கொண்ட - நீலமலை யுருக்கொண்டாற்போன்ற, உடல்-மெய்யினையுடைய, வாள் - வாளினையுமுடைய, அரக்கர் வெள்ளமும்-அரக்கர் வெள்ளத்தையும், சூருள்-சூரனையும், புள்ளியல் பொருப்பும் - கிரவுஞ்சகிரியையும், நெடுங்கடல் கிடங்கும் - ஆழமாகிய நெடிய கடலினையும், ஒருங்கு உயிர் பருகிய - கூடவுயிரைப் பருகிய, மணி வேல் குமரன்-அழகிய வேலினையுடைய குமரன், முத

ளிலை வாழும் - ஆறுதலத்தும் முதனிலையாக வாழும், குன்று - திருப்பரங்குன்றம், உடுத்தோங்கிய - சூழ்ந்துயர்ந்த, கூடலம்பதியோன் - மதுரையாகிய திருப்பதிக்கு நாயகன், தாள் - அவன்றிருவடியினை, தலைதரித்த - சென்னியிற் றரித்தற்குக் காரணமாகிய, கோளினர் போல - யோகசப்பயிற்சி யுடையாரைப்போல, நெடுஞ்சுரம் நீங்க - நெடிய பாலைநிலத்தை நீங்கவேண்டி, தம் கால்-தம்முடையகாலினை, அடும்தழல் மாற்றிய-அடுந்தழலை நீக்கிய, கால்குறி இவணே - காற்குறியையுடையவிட மிவ்விடமாதலால் அவர் போயின நெறியிதுவே.

(வி-ரை.) கொண்டவுடல் ஒற்றுமைநயம்பற்றி நின்றது. உடல் கூறவே மலை நிலமலையாயிற்று. பருகி யென்பதனை "உண்டற்குரிய வல்லாப்பொருளை, யுண்டன போலக் கூறலு மரபே" என்பதனான் வெவ்வேறு பொருள்கொள்க. திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுகள், சோலைமலை, ஆகிய வைந்திடத்திற்கும் திருப்பரங்குன்ற முதனிலையாதலின் அதனை 'முதனிலை' என்றார். தாடலை தரித்தற்குக் காரணமாகிய கோட்பாடு இயம முதலியன. குறி-ஆகுபெயர். கோள்-கொள்கை. அடும் தழல்-சுடுகின்ற நெருப்பு. காற்குறி - அடிச்சுவடு.

நாட்டிய கல்லைக்கண்டு சுற்றியதினாலும், புலிபட்டதனாலும், மறைந்தவேடர் பலவடிச்சுவட்டினாலும், குந்தியகாலின ரடிக்கெதிர் நின்று விலங்கியதாலும், ஆறலை கள்வர் கொடிப்படை தூளானதாலும், பாறையிற் கழித்த பூவினாலன்றி யணியவுதிர்ந்த பூவாலும், சிறையுதிர்ந்ததாலன்றி யடிபெயர்த்து வைத்ததனாலும், கால் குந்தியதனாலும் செவிலி யிடமறிந்தா ளென்க.

விடலை மகிழ்ந்தவிட மிவ்விடம், கடிந்தவிடமிது, மகிழ்ந்தவிட மிங்கிலை, ஆசிர்வாதஞ் செய்தவிட மிவ்விடம், மெய் தூளாகக் காட்டுமிட மிவ்விடம், பாதிரிமலரைப் புனைந்தவிட மிக்கற்பாறையிடம், பார்த்து மகிழ்ந்தவிட மிவ்விடம், காற்குறியையுடையவிட மிவ்விடம், ஆதலால், அவர் போயினநெறி யிதுவென வினைமுடிவு செய்க. (சு)

திருக்கோவையார் உ௱௦-ம் செய்யுள்.

நற்றாய் வருந்தல்.

நற்றாய் வருந்த லென்பது — உடன்போனமை கேட்டு உண் மகிழ்வோடுநின்று, ஒரே திலன் பின்னே தன் தோழியைவிட்டு, என்னையு முன்னே துறந்து, சேரரார் முன்னே ஊர் அலர்தூற்ற

அருஞ்சுரம் போயினுள், இனி யானெங்ஙன மாற்றுவேனென, நற்ருய் பிரிவாற்ருது வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

யாழியன் மென்மொழி வன்மனப் பேதையொ ரேதிலன்பின்
ருேழியை நீத்தென்னை முன்னே துறந்துதன் ஞர்கண்முன்னே
வாழியிம் மூதூர் மறுகச்சென் ருளன்று மால்வணங்க
வாழிதந் தானம் பலம்பணி யாரி னருஞ்சுரமே.

கோடாய் கூற
நீடாய் வாடியது.

(ப-ரை.) யாழ் - யாழ் (ஓசையி னியல்புபோலும்), இயல்-இயல்புடைய, மெல் மொழி - மெல்லியமொழியையும், வல் மனம் - வலிய மனத்தையுமுடைய, பேதை - பேதையானவள், ஓர் ஏதிலன்பின் - ஒரு நொதுமலன்பின்னே, தோழியை - தன்ருேழியை, நீத்து - விட்டு, என்னை-என்னை, முன்னே-முற்காலத்தே, துறந்து-நீங்கி, இ மூதூர் - இம் மூதூரிலுள்ளார், மறுக - கலங்க, துன்ஞர் கண் முன்னே - சேராதார்முன்னே, மால் - திருமால், வணங்க - வணங்குதலான், அன்று - அன்று, ஆழி - ஆழியை, தந்தான் - கொடுத்தவனது, அம்பலம் - அம்பலத்தை, பணியாரின் - பணியாதாரைப் போல, அரும் - (செல்லுதற்) அரிய, சுரம் - சுரத்தை, சென்ருள் - சென்றடைந்தாள்.

(வி-ரை.) இனி யெங்ஙன மாற்றுகேன் என்பது எஞ்சிநின்றது. நொதுமலன் - அயலான். சேராதார் - பகைவர். கோடாய் - செவிலித்தாய். நீடாய் - நற்ருய். மூதூர் - ஆகுபெயர். ஆழி-சக்கரம். இறசெறிக்கப்பட்ட பின்னர்ப் பராமுகத்த ளென்பதனை உடன் போனபின்ன ருணர்ந்தாளாகலின் 'என்னை முன்னே துறந்து' என்ருள். வாழி - அசைநிலை. மெய்ப்பாடும் பயனும் அவை.

நேரிசையாசிரியப்பா.

பொடித்தரும் பாதசின் முலைக்கொடி மடந்தையள்
மணிமிளிர் பெருங்கட் கிமைகாப் பென்ன
விழித்துழி விழித்து மடங்குழி யடங்கியும்
தன்னைநின் றளித்த வென்னையு மொருவுக
பன்மணிக் கலன்க ளூடற்கழ களித்தெனச்
சுற்றுடுத் தோங்கிய வாயமுந் துறக்குக
பிணிமுக மஞ்ஞை செருமுகத் தேந்திய

மூவிரு திருமுகத் தொருவே லவற்கு
வானுற நிமிர்ந்த மலைத்தலை முன்றில்
மனவணி மடந்தை வெறியாட் டாளன்
வேன்மகன் குறத்தி மாமதி முதியோர்
தொண்டகந் துவைப்ப முருகியங் கறங்க
ஒருங்குவந் திமையா வருங்கடன் முற்றிய
பின்னர்நின் றேற்றகைத் தாயையும் பிழைக்குக
கருந்தலைச் சாரிகை செவ்வாய்ப் பசுங்கிளி
தூவியந் தோகைவெள் ளோதிமந் தொடருழை
இவையுட னின்பமு மொருவழி யிழக்குக
சேயித ழிலவத் துடைகாய்ப் பஞ்சினம்
புகைமுரிந் தெழுந்தென விண்ணத் தலமரக்
குழைபொடி கூவையிற் சிறைசிறை தீந்த
பருந்துமாந் தையும் பார்ப்புடன் றவழ
உடைகவட் டோமை யுயர்சினை யிருக்கும்
வளைகட் கூகை மயங்கிவாய் குழற
ஆசையிற் றணியா வழற்பசி தணிக்கக்
காளிமுன் காவல் காட்டிவைத் தேகும்
குழிகட் கரும்பேய் மகவுகண் முகிழ்ப்ப
வேமுடற் சின்னம் வெள்ளிடை தெறிப்ப
நெடுந்தாட் குற்றிலை வாகைநெற் றொலிப்பத்
திசைநின் றெழாது தழன்முகந் தேறிச்
சுடலையிற் சூறை யிடையிடை யடிக்கும்
பேரழற் கானினு நாடுமென் னுளத்தினும்
மொருபாற் பசுங்கொடி நிறைபாட் டயரப்
பாரிடங் குனிப்ப வாடிய பெருமான்
வையகத் துருவினர் மலரா வறிவினைப்
புலனிரை மறைத்த புணர்ப்பது போலக்
குளிர்கொண் டுறையுந் தெளிநீர் வாவியை
வள்ளைசெங் கமலங் கள்ளவி ழாம்பற்
பாசடை மறைக்குங் கூடற் பெருமான்
செந்தாள் விடுத்துறை யந்தர்க டம்மினு

மூவாத் தனிநிலைக் கிருவரு மோருயிர்
இரண்டெனக் கவைத்தநல் லாண்டரு தோழியைச்
செருவிழு மிச்சையர் தமதுடல் பெற்ற
இன்புக ணேக்கா வியல்பது போல
மருங்குபி ணேக்கா தொருங்குவிட் டலகைப்
பொருந்திய தெப்படி யுள்ளம்
அருந்தழற் சுரத்தி லொருவனன் பெடுத்தே.

பொடித் தரும்பாத - ஒருவ னன்பெடுத்தே. பகுதி - உடன்போக்கு. துறை - உடன்போனமைகேட் டுண்மகிழ்வோடுநின்று ஓரேதிலன் பின்னே போனாள். இனி யானெங்ஙன மாற்றுகே னெனப் பிரிவாற்றாது நற்றாய் வருந்தல்.

மணிமிளிர் பெருங்கட் கிமைகாப் பென்ன.

(2—வது வரி.)

(ப-ரை.) இமை - இமையானது, மணி மிளிர் - (விழித்தவிடத்தில் விழித்தும் விழியாதடங்கினவிடத்தி லடங்கியும்) மணிவிளங்கும், பெருங்கட்கு - பெரியகண்ணை, காப்பென்ன - காத்ததுபோல.

(வி-ரை.) காப்பு - பெயர்ச்சி விளங்காதுநின்ற தொழிற்பெயர். கட்கு - உருபுமயக்கம்.

'பொடி' என்பதுமுதல் 'ஒருவுக' என்பதுவரை.

(1—3—4 வரிகள்.)

(ப-ரை.) பொடித்து அரும்பாத-தோன்றி வெளிப்படாத, சின்முலைக்கொடி - முலையினையுடைய கொடிபோலுஞ் சிறிய, மடந்தையாள்-மடந்தை, விழித்துழி விழித்தும்-விழித்தவிடத்தில் விழித்தும், அடங்குழி அடங்கியும் - துயின்றவிடத்திற் றுயின்றும், தன்னை - தன்னை, நின்று - நீங்காதுநின்று, அளித்த - காத்த, என்னையும் - என்னையும், ஒருவுக - நீங்குவாளாக.

(வி-ரை.) பொருளடை யுவமைக்குங் கொள்க. உம்மை - சிறப்பும்மை. இது ஒருவயிற் போலியுவமை.

'பன்மணி' என்பதுமுதல் 'துறக்குக' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) உடல் - உடலானது, பன்மணி கலன்கள் - (பக்கஞ் சூழ்ந்து மேம்பட்ட) பலமணிகளையுடைய ஆபரணங்களுக்கு, அழகு

அளித்தென-அழகளித்தாற்போலத் தானுநீங்கா தழகளித்தலின்றி, சுற்றுடுத்து - பக்கஞ்சூழ்ந்து, ஓங்கிய - மேம்பட்ட, ஆயமும் - ஆய வெள்ளத்தையும், துறக்குக - நீங்குவாளாக.

(வி-ரை.) உம்மை-சிறப்பும்மை. உவமையடையைப் பொருளு க்கும் பொருளடையை யுவமைக்குங் கொள்க. இது உவமைத்தோற் றத்தின்வகை. அழகளித்தல் - அழகுசெய்தல். ஆயவெள்ளம் - ஆயக் கூட்டம்.

'பிணிமுகம்' என்பதுமுதல் 'பிழைக்குக' என்பதுவரை.

(7—14 வரிகள்.)

(ப-ரை.) பிணிமுகம் - பிணிமுகமென்னும் யானையினையும், மஞ்ஞை - மயிலினையும், மூவிரு திருமுகத்து - ஆறுமுகத்தினையும், செருமுகத்து எந்திய-போர்முகத்தெடுத்த, ஒரு வேலவற்கு-ஒப்பற்ற வேலினையுமுடைய குமரனுக்கு, வானுற நிமிர்ந்த - வானளவு முயர் ந்த, மலைத்தலை முன்றில் - மலைத்தலையாகிய முற்றத்தின்கண், மனவு அணி மடந்தை-மனவணிந்த மடந்தையும்,வெறியாட்டாளன்- தெய்வமேறி யாடுமவனும், வேன்மகன் - வேலனும், குறத்தி - கட்டு விச்சியும், மாமதி முதியோர் - மிகுந்த மதியினையுடைய முதுபெண் டிரும், தொண்டகம் துவைப்ப-முரசு முழங்க, முருகியம் கறங்க - வெறியாட்டுப்பறை முழங்க, ஒருங்கு வந்து - சேரக்கூடி, இமையா அருங்கடன் - (மறியறுத்தன் முதலிய) சுருங்காத பூசை, முற்றிய பின்னர் - முடித்த பின்னர், நின்றேற்ற - நின்றேற்ற, கைத்தாயை யும் - செவிலித்தாயையும், பிழைக்குக - தப்புவாளாக.

(வி-ரை.) பிணிமுகம்-முருகற் குரித்தாகிய யானை. "சேயுயர் பிணிமுக மூர்ந்த" என்று பரிபாடலினும், "ஓடாப்பூட்கைப் பிணி முகம் வாழ்த்தி" என்று திருமுருகாற்றுப்படையினுங் கூறினர்; பிணிமுகமாகிய மயிலெனினுமாம். "வாணுதலுன்முருகு மெய்ந் நிறீஇ" என்றார் வெண்பாமாலையினும். பின்னரிற் பெற்றவென்றும் பாடம். உம்மை - சிறப்பும்மை. மலைத்தலை - மலையினுச்சி. மனவு - அக்குமணி. வெறி - ஆவேசம். தொண்டகம் - குறிஞ்சிநிலப்பறை. மறி - ஆடு.

'கருந்தலை' என்பதுமுதல் 'இழக்குக' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) கருந்தலை - கரிய தலையினையுடைய, சாரிகை - நாக ணவாய்ப்புள்ளும், செவ்வாய்-சிவந்த வாயினையுடைய, பசுங்கிளி -

பசிய கிளியும், அம் - அழகிய, தூவி - தூவியினையுடைய, தோகை - மயிலும், வெள் ஒதிமம் - வெள்ளையன்னமும், உழை-மானும் ஆகிய, இவையுடன் தொடர் - இவற்றுடனுண்டாகிய, இன்பமும்-இன்பத்தையும், ஒருவழி இழக்குக - ஒருவழி யிழப்பாளாக.

(வி-ரை.) தொடர் இன்பமென்க. உம்மை-சிறப்பும்மை. எண்ணும்மைகள் தொக்கன. தூவி - சூட்டு; "தூவிமஞ்ஞை நன்மணம் புகுத்தும்" என்றார் சிந்தாமணியினும். நாகணவாய்ப் புள்ளுக்குப் பூவையென்று மொருபெயர். தோகை - ஆகுபெயர்.

'சேயிதழ்' என்பதுமுதல் 'அலமர' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) சே இதழ்-செவந்த பூவினையுடைய, இலவத்து-இலவமரத்தின், உடைகாய் - வெடித்தகாயினுள், பஞ்சினம் - பஞ்சுக்கூட்டம், புகை முரிந்து எழுந்தென - தழலின்கண் உண்டாகிய புகையுடைந்தெழுந்தாற்போல, விண்ணத்து - ஆகாயத்தில், அலமர - சுழல.

(வி-ரை.) விண்ணத்து என்பதில் அத்துச்சாரியை. அலமர என்பதற்குப் பகுதி அலமா.

'குழை' என்பதுமுதல் 'தவழ' என்பதுவரை.

(20—21 வரிகள்.)

(ப-ரை.) குழைபொடி - இலைகரிந்த, கூவையின் சிறை-கூவையின் பக்கத்தில், சிறை தீந்த - சிறகுகள் கரிந்த, பருந்தும் ஆந்தையும்-பருந்தும் ஆந்தையும், பார்ப்புடன் தவழ-தத்தம் குஞ்சுகளோடு தவழ.

(வி-ரை.) குழை - தளிருமாம். பொடிதல் - கரிதல். கூவை - ஓர் மரம். தீந்தனவெனப் பாடமாயின் தீந்தனவாகிய வென்க.

'உடை' என்பதுமுதல் 'குழற' என்பதுவரை.

(22—23 வரிகள்.)

(ப-ரை.) உடை கவட்டு - பிளந்த கவட்டினையுடைய, ஓமை - ஓமைமரத்தின், உயர் சினை இருக்கும்-உயர்ந்த கிளைகளிலிருக்கிற, வளை கண் கூகை-வளைந்த கண்களையுடைய கூகைகளும், மயங்கி - மனமயங்கி, வாய் குழற - வாய் குழறுநிற்க.

(வி-ரை.) உம்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை. உலர் சினை யென்றும் பாடம். இதற்கு உலர்ந்த கிளையென்பது பொருள். வளைகண் - வட்டமாகிய கண்.

'ஆசை' என்பதுமுதல் 'தெறிப்ப' என்பதுவரை.

(24—27 வரிகள்.)

(ப-ரை.) ஆசையின் - ஆசைபோல, தணியா-தணியாத, அழல் பசி தணிக்க - பசியாகிய நெருப்பைத் தணிக்கும்படி, காளி முன் - காளிக்கெதிரே, காவல் காட்டி வைத்து-காவலாகக் காட்டிவைத்து; எகும் - போகின்ற, குழி கண்-குழிந்தகண்களையுடைய, கரும்பேய்- கரிய பேயினது, மகவு - பிள்ளைகள், கண் முகிழ்ப்ப-கண்ணைமூடும் படி, வேம் உடல் சின்னம் - வேவாநின்ற பிணத்தினுடற் சின்னங் கள், வெள்ளிடை தெறிப்ப - வெளியாமிடத்தில் தெறிப்ப.

(வி-ரை.) ஆசையின் - என்பதில் இன் ஐந்தனுருபு, ஒப்புப் பொருட்டு. கடும்பேய் என்றும்பாடம்; இதற்குக் கடுமையாகிய பே யென் றுரைக்க.

நெடுந்தாள் குற்றிலை வாகைநெற் றொலிப்ப.

(28—வது வரி.)

(ப-ரை.) நெடுந்தாள் - நெடியதாளினையும், குறு இலை - குறிய இலையினையுமுடைய, வாகை - வாகைமரத்தின், நெற்று ஒலிப்ப - நெற்றுகளொலிக்க.

(வி-ரை.) நெற்று - முதிர்ந்துலர்ந்தகாய்.

'திசை' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(29—33 வரிகள்.)

(ப-ரை.) சுடலையில் - இடுகாட்டில், சூறை - சுழல்காற்று, திசைநின்று எழாது - திசைகளினின்றெழாமல், தழல் முகந்து - அக்கினியை மொண்டுகொண்டு, எறி - உயர்ந்து, இடையிடை அடிக்கும் - விட்டுவிட்டுச் சுழலும், பேர் அழல் கானினும்-பெரிய அழற் காட்டினும், நாடும் - தன்னைக்கருதும், என் உளத்தினும் - என் னுள்ளத்தினும், ஒருபால் - இடப்பாகத்திலிருக்கும், பசுங்கொடி - பசியகொடிபோல்வாள், நிறைபாட்டயர-ஆடற்கேற்ற வெண்டுறைப் பாட்டைப் பாட, பாரிடம் குனிப்ப - பூதகணங்களாட, ஆடிய பெரு மான் - நடித்தபெருமான்.

(வி-ரை.) அயா குனிப்ப என்னும் செயவெனெச்ச வடுக்கு ஆடிய வென்பதன் முதனிலைகொண்டு முடிந்தது. நிலப்பெயர்கொண்டது. முகம் தெரிப்ப என்றும் பாடம். அடிக்கும்கான் எனவும், கானினும் உள்ளத்தினும் ஆடிய எனவும் இயையும்.

'வையகத்து' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(34—38 வரிகள்.)

(ப-ரை.) வையகத்து உருவினர் - பூமியிடத்துப் பிறக்கு மறிவினையுடையாரது, மலர்ஆ அறிவினை - கல்விகேள்விகளான் மலர்ச்சியாகாநின்ற அறிவினை, புலன் நிரை மறைத்த - பஞ்சவிடயங்கள் வெளிப்படாது மறைத்த, புணர்ப்பதுபோல - மாயம்போல, வாவி-தடாகங்களில், குளிர்கொண்டு - குளிர்ச்சிகொண்டு, உறையும் - உறைகின்ற, தெளி நீரை - தெளிந்தநீரை, வள்ளை - வள்ளைக்கொடியும், செங்கமலம் - சிவந்த தாமரைமலரும், கள் அவிழ் - மதுவிரியாநின்ற, ஆம்பல் - அல்லிமலரும், பாசடை - (இவற்றின்) பசிய இலையும், மறைக்கும்-தெரியாது மறைக்குமிடமாகிய, கூடல் பெருமான்-மதுரைப்பெருமானுடைய.

(வி-ரை.) மலர்-வினைமாத்திரையாய் நின்றது. ஆவறிவு-வினைத்தொகை. மறைக்கும் என்னும் பெயரெச்சம் கூடல் என்னும் நிலப்பெயர் கொண்டது. புணர்ப்பது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. தாமரை ஆம்பல் என்பன ஆகுபெயர்கள்.

செந்தாள் விடுத்துறை யந்தர்க டம்மினும்:

(39-வது வரி.)

(ப-ரை.) செந்தாள் விடுத்து - சிவந்த திருவடியைவிட்டு, உறை - வாழ்கின்ற, அந்தர்கள் தம்மினும் - அறிவில்லார்தம்மினும்.

(வி-ரை.) பெருமானுடையதாள் எனவியையும். அந்தர்-(ஞானக்கண்ணில்லாத) குருடர். தம்-சாரியை.

'மூவா' என்பதுமுதல் 'தோழியை' என்பதுவரை.

(40—41 வரிகள்.)

(ப-ரை.) மூவா - (கருமத்தி லிருவரு மொருவர்க்கொருவர்) மூந்தாத, தனி நிலைக்கு - ஒப்பற்ற நிலையால், இருவரும்-இருவருயி

ரும், ஓர் உயிர் இரண்டு என - ஒருயிரென்னும்படி உடலிரண்டாக, கவைத்த - பெற்றதனால் வந்த, நல்லாண்டருள்-நல்ல காவல்செய்த, தோழியை - பாங்கியையும்.

(வி-ரை.) தனிநிலைக்கு - உருபுமயக்கம், சிறப்பும்மை தொக்கது. தாழுமோருயிராயினும் இற்செறிக்கப்பட்ட பின்னர் பராமுகத்தளாதலின் நற்றாய் முதலியோரை முன்னே துறந்தமையின், தோழியையும், பின்னேவிட்டகலவென்றான். உம்மை-சிறப்பும்மை. அரண்டரு தோழியை யென்றும் பாடம்; இதற்குக் காவலாயிருந்த பாங்கியை யென்றுரைத்துக்கொள்க.

'சேரு' என்பதுமுதல் 'போல' என்பதுவரை.

(42—43 வரிகள்.)

(ப-ரை.) செருவிழும் இச்சையர் - போர்க்களத்திற் செல்லும் விருப்பமுடையவர், தமது உடல்பெற்ற-தமது உடம்புபெற்றதனால் உண்டாகிய, இன்புகள் - இன்பங்களை, நோக்கா இயல்புபோல - பாராட்டாத இயற்கைபோல.

(வி-ரை.) போர்க்களத்தில் செல்லுதற்குக் காரணமாகிய அன்பினர் தாம் உடல் பெற்றதனால் வந்த இன்பங்களை நோக்காத இயல்புபோலவென்க. உடற்பெற்றவின்பம் - மக்கள் மெய்தீண்டல் முதலாகிய இன்பம். செரு - போர், அது அதனையுடைய இடத்திற்காயினமையால் ஆகுபெயர். உடல் - மானிடதேகம். இயல்பது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி.

மருங்குபி னோக்கா தொருங்கு விட்டு.

(44—வது வரி.)

(ப-ரை.) மருங்கு நோக்காது - பக்கம்பாராது, ஒருங்கு - எங்களோடுகூட, பின்விட்டு - பின்னேவிட்டு.

ஒருவ னன்பெடுத்து.

(46—வது வரி.)

(ப-ரை.) ஒருவன் அன்பு எடுத்து - ஒரேதிலனது அன்பை மேற்கொண்டு.

(வி-ரை.) ஏதிலன் - அயலான்.

'அகல' என்பதுமுதல் 'சுரத்தில்' என்பதுவரை.
(44—46 வரிகள்.)

(ப-ரை.) அரும் - செல்லுதற்கரிய, தழல் சுரத்தில் - நெருப்புப்போலும் பாலைநிலத்தில், அகல-செல்ல, உள்ளம் பொருந்தியது-மனமொருமித்தது, எப்படி - எவ்வாறு.

(வி-ரை.) இனியான் எவ்வாறு ஆற்றுவேன் என்பது இசையெச்சம். போல அகல என இயையும்.

மடந்தை என்னை நீங்குவாளாக, அதுவன்றி ஆயத்தை நீங்குவாளாக, அதுவன்றிச் செவிலியையும் தப்புவாளாக, அதுவன்றிப் பூவைமுதலியவற்றினா லுண்டாகிற இன்பத்தையு மிழப்பாளாக, அதுவன்றித் தோழியையும் விட்டு ஒருவனன்பை மேற்கொண்டு, பாலையிற்செல்ல மனம் பொருந்தியதெப்படி, இனி யெங்ஙனமாற்றுவேன் என வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் உகூச-ம் செய்யுள்.
செலவுநினைந்துரைத்தல்.

செலவுநினைந்துரைத்த லென்பது — வரைவுடம்படாமையின், தோழி தலைமகனோடு புலந்து கூறக்கேட்டு, அக்குறிப்பறிந்து, இக்கல்லதரின்கண் நீர்வந்தவா றென்னோவென்று வினவுவாரைப் பெற்றேமாயின், இத்தன்மையையுடைத்தாகிய இருளின்கண் யாம் அவருழைச்சேறலரிதன்று, சென்றேமாயினும், அவ்வாறு சொல்லுவா ரில்லையெனத் தலைமகள் செலவுநினைந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

வல்சியி னெண்கு வளர்புற் றகழமல் கும்மிருள்வாய்ச்
செல்வரி தன்றுமன் சிற்றம் பலவரைச் சேரலர்போற்
கொல்கரி சீயங் குறுகா வகைபிடி தானிடைச்செல்
கல்லத ரென்வந்த வாறென் பவர்ப்பெறிற் கார்மயிலே.

'பாங்கி நெருங்கப் பணிமொழி மொழிந்து
தேங்கமழ் சிலம்பற்குச் சிறைப்புறக் கிளவி.

(ப-ரை.) கார் மயிலே - கார்காலத்து மயிலையொப்பாய், சிற்றம்பலவரை - சிற்றம்பலவரை, சேரலர்போல்-சேராதாரைப்போல வருந்த, சீயம் - சிங்கமானது, கொல் கரி - கொலைக்கரியை, குறுகா வகை -சென்றணுகாதவண்ணம், பிடி - பெண்யானை, தான் -

தான், இடை - இரண்டற்கு மிடையே, செல் - சென்று புகும், கல் - கற்கள் நிறைந்த, அதர் - வழியில், வந்தவாறு - நீர் வந்தவாறு, என் - எங்ஙனே, என்பவர்-என்று சொல்லுவாரை, பெறின் - பெற்றேமாயின், வல்சியின் - (குறும்பியாகிய) உணவு (காரணமாக), எண்கு - கரடி, வளர் - வளர்ந்துயர்ந்த, புற்று - புற்றை, அகழ - அகழாநிற்ப, மல்கும் - மிகாநின்ற, இருள்வாய் - இருளின்கண், செலவு - அவரிருந்தவழிச் சேறல், அரிது அன்று - அரிதன்று (செல்வேமாயினுமவ்வாறு சொல்லுவாரில்லை), எ-று.

(வி-ரை.) செல்வரிதென்பது - செல்வுழிக்க ணென்பதுபோல மெய்யீற் றுடம்படுமெய். செல்லவென்பது கடைக்குறைந்து நின்றதெனினு மமையும். மன் - ஒழியிசைக்கண் வந்தது. கல்லதர் - கற்கண்ணதர். கல்லதரினென்பது பாடமாயின் வந்தவா றென்னெனவொருசொல் வருவித்துரைக்க. பணிமொழி மொழிந்தென்பதனை மொழியவெனத் திரித்து சிறைப்புறக் கிளவியாயிற்றென வொருசொல் வருவித்துரைக்க. சிறைப்புறக் கிளவியாயிற்றெனவே, சிறைப்புறமாதல் குறித்தாளல்லளென்பது பெற்றாம். இவை யிரண்டற்கும் மெய்ப்பாடு அழுகையைச் சார்ந்த விளிவரல், பயன் அது.

நேரிசையாசிரியப்பா.

உயிர்புகுஞ் சட்டக முழிதொறு முழிதொறும்
பழவினை புகுந்த பாடகம் போல
முதிர்புயல் குளிறு மெழுமலை புக்க
கட்டுடைச் சூருடல் காமங் கொண்டு
பற்றியுட் புகுந்து பசுங்கடல் கண்டு
மாவொடுங் கொன்ற மணிநெடுந் திருவேல்
சேவலங் கொடியோன் காவல்கொண் டிருந்த
குன்ற முடுத்த கூடலம் பதியிறை
தொடர்ந்துயிர் வவ்விய விடங்கெழு மிடற்றோன்
புண்ணியந் தழைத்த முன்னோர் நாளில்
இருவிர னிமிர்த்துப் புரிவொடு சேர்த்துக்
குழையுடற் றலைவிரி கைத்திரி கறங்க
வொருவிரற் றெறித்து மைவிரற் குவித்தும்
பெருவா யொருமுகப் படகம் பெருக்கத்
தடாவுட லும்பர்த் தலைபெறு முழவ

நான்முகந் தட்டி நடுமுக முரப்ப
வொருவாய் திறந்துட் கடிப்புடல் விசித்த
சல்லரி யங்கைத் தலைவிரற் றுக்கக்
கயந்தலை யடியெனக் கயிறமை கைத்திரி
யிருவிர லுயர்த்திச் செருநிலை யிரட்ட
விருதலை குவிந்த நெட்டுடற் றண்ணுமை
யொருமுகந் தாழ்த்தி யிருகடிப் பொலிப்பத்
திருமல ரெழுதிய வரையிரு பத்தைந்
தங்குலி யிரண்டிரண் டணைத்துவி ளர்நிறீஇ
மும்முகக் கயலுடன் மயிர்க்கயிறு விசித்த
கல்ல வடத்திரள் விரற்றலை கறங்க
மரக்கா லன்ன வொருவாய்க் கோதை
முகத்தினுந் தட்ட மூக்கினுந் தாக்க
நாடிரு முனிவர்க் காடிய பெருமான்
திருவடி வினவாக் கருவுறை மாக்க
ணெஞ்சினுங் கடந்து நீண்டவல் லிரவிற்
செல்லவு முரியந் தோழி நில்லா
தெம்மெதிர்ப் பின்றி யிருந்தெதிர்ப் பட்டு
மறைவழி யொழுகா மன்னவன் வாழும்
பழிநாட் டார்ந்த பாவம் போலச்
சேர மறைத்த கூரிரு ணடுநா
ளரிதிற் போந்தனி ரென்றோர்
பெரிதின் வாய்மை வெற்பனிற் பெறினே.

'உயிர்' என்பதுமுதல் 'புகுந்து' என்பதுவரை.

(1—5—வரிகள்.)

(ப-ரை.) உயிர் புகும்-உயிர் பொருந்துதற் கிடமாகிய, சட்டக முழிதொறு முழிதொறும் - உடம்பிடந்தோறு முடம்பிடந்தோறும், பாடகம்போல - இடைவிடாது காலைப் பாடகஞ் சூழ்ந்து கிடந்தாற் போல, பழவினை புகுந்த - சூழ்ந்து கிடந்த பழவினை கொல்லும் விருப் பங்கொண்டு தொடர்ந்துட் புகுந்தாற்போல, முதிர் - சூன்முதிர்ந்த, புயல் - மேகம், குளிறும் - முழங்காநின்ற, எழுமலை-எழுமலையினும்,

புக்க - புகுதற்குக் காரணமாய, கட்டுடை - கட்டினையுடைய, சூருடல் - சூரபன்மாவுடலை, காமங்கொண்டு - கொல்லும் விருப்பங்கொண்டு, பற்றி உட்புகுந்து - தொடர்ந்துட் புகுந்து.

(வி-ரை.) பழவினை புகுதற்குக் காரணமாகிய விடத்தினையுடைய நெஞ்சம் புகுந்தாற்போல வெனினுமாம். பொருளுடைமையை யுவமைக்குங் கொள்க. எழுவகைப் பிறப்பிற் பலவகை யுடம்பினைக் கூறுவார் 'உழிதொறு முழிதொறும்' என்றார். "பாடகம்போலச் சூழ்ந்த பழவினை" என்றார் சிந்தாமணியினும். கட்டு - கற்பித்தல், அது சுப்பிரமணிய னெனக்குச் சத்துருவாய் வருகவென்று கற்பித்தல். குதிரைமுகமு மக்கள் வடிவுமாகக் கற்பித்தலுடைய சூரனெனினுமாம். "வண்டேதும்" என்னு மருதக்கலியுள், "இரணிக்கேற்ற வொடியாப் பருவத்துச் சூர்கொன்ற வேலோன்" என்றார். சட்டகம்-உடம்பு, உழி-ஏழனுருபு, இடப்பொருளது. பாடகம்-மாதர்காலணியிலொன்று.

'பசுங்கடல்' என்பதுமுதல் 'கோடியோன்' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) பசுங்கடல் கண்டு - (மலைகளிற்காணாது) பசிய கடலிடத்துக் கண்டு, மாவொடும் கொன்ற - அவன் மறைதற்கிடமாகிய மாவொடுங் கொன்ற, மணி - நீலமணிகட்டிய, நெடும் - நெடிதாகிய, திருவேல் - அழகிய வேலினையும், சேவலங்கொடியோன் - கோழிக் கொடியினையுமுடையோன்.

(வி-ரை.) மாவானதன்றிச் சூருடனே மாமுதறடிந்தவெனச் சூரனுக் காரணைச் கூறினார் புறத்திலும், உம்மை - இசைநிறை என்னை வாட்டமுயின்றிச் சென்றெய்தினார் என்றாற்போல - ஒடுவையு மும்மையையு மசைநிலையாக்கி மாவாக நிற்கக்கண்டு கொன்ற வெனினுமாம். "உரல்மாகொன்ற" என்றாற்போல சூரனென்னும்பெய ரொப்புமைபற்றிக் 'கொன்ற' என்றார்.

'காவல்' என்பதுமுதல் 'மிடற்றோன்' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) காவல் கொண்டிருந்த - காப்பாகக்கொண்டு வீற்றிருந்த, குன்றமுடுத்த - திருப்பரங்குன்றஞ் சூழ்ந்த, கூடலம்பதி இறை - அழகிய கூடற்பதியில் வாழுமிறையானவன், தொடர்ந்து உயிர் வவ்விய-உயிர்களைத்தொடர்ந்து கைக்கொள்ளும், விடங்கெழு மிடற்றோன் - விடத்தினையுடைய மிடற்றினை யுடையோன்.

(வி-ரை.) அம் - சாரியையுமாம். விரைவுபற்றி வவ்விய என இறந்தகாலத்தாற் கூறினர். கெழு - சாரியை, யாழ்கெழுமணிமிடற்று என்றாற்போலவும், வயங்கெழுபுகழோன் வற்புறுத்தியது என்றாற்போலவும், புறத்திற் சிறந்த சீர்கெழு கொடியுமவ்வேறு என்றாற்போல விடம் பொருந்திய வெனினுமாம். பதியுறை என்று பாடமாயின் உறைமிடற்றோனெனக் கூட்டுக. கூடலம்பதியிறை - சிவபெருமான். வவ்வல்-கவர்தல். மிடறு - கண்டம்.

'புண்ணியம்' என்பதுமுதல் 'கறங்க' என்பதுவரை.

(10—12 வரிகள்.)

(ப-ரை.) புண்ணியம் - சிவபுண்ணியம், தழைத்த - தழைத்தத னால் வந்த, முன்னோர் நாளில் - பூசநாளில், இருவிரல்-பெருமையையுடைத்தாகிய விரலினை, புரிவொடு நிமிர்த்து - தொழிலோடு நிமிர்த்து, சேர்த்து - சேர்த்தி, குழை - குழையாநின்ற, உடல்-உடலினையும், தலைவிரி - பரந்த தலையினையுமுடைய, கைத்திரி - இடக்கை, கறங்க - முழங்காநிற்ப.

(வி-ரை.) முன்னோர் - மந்திரி, அது ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி. மந்திரி நாளெனவே வியாழ நாளாய்ப் பூசமா[illegible]. கையினாற் றிரித்தமையாற் கைத்திரி யென்று இடக்கைக்குப் பெயராயிற்று. இருமை - பெருமை. குழை - வினைத்தொகை.

'ஒரு' என்பதுமுதல் 'பெருக்க' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) பெருவாய்-பரந்த வாயினையும், ஒரு முகம்-ஒருமுகத்தினையுமுடைய, படகம்-படகமென்னும் வாச்சியம், ஒருவிரல் தெறித்தும் - தன்னிடத்தொரு விரலைக்கொண்டு தெறித்த[illegible] விரல் குவித்தும் - ஐவிரலைக் குவித்ததனாலும், பெருக்[illegible] பெருகப்பண்ண.

(வி-ரை.) தெறித்துங் குவித்துமென்பன எதுட்[illegible]யின. வாச்சியம் - வாத்தியம்.

'தடா' என்பதுமுதல் 'உரப்ப' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-ரை.) தடாவுடலும்பர் - பெரிய வுடலின்மேல், தலைபெறும் - தலைபெற்ற, முழவம்-முழவமென்னும் வாச்சியம், நான்முகம்-

நான்குமுகமும், நடுமுகம்-நடுமுகமும், தட்டி-தட்டுதலால், உரப்ப-ஒலியைப் பண்ணுகிற்ப.

(வி-ரை.) தடவு என்னும் உரிச்சொல் தடா என ஈறுதிரிந்து நின்றது. உம்பர் - மேல். தட்டி-காரணப்பொருட்டாகிய வினையெச்சம்; இது உரப்ப என்னும் வினைகொண்டது.

'ஒருவாய்' என்பதுமுதல் 'தாக்க' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) ஒருவாய் திறந்து - ஓரிடத்தைத் திறந்து, உட்கடிப்புடல் விசித்த-குமிழினை யுள்ளேகட்டிய வுடலினையுடைய, சல்லரி - சல்லரியென்னும் வாச்சியம், அங்கை-அங்கையினாலும், தலைவிரல் - தனிவிரலினாலும், தாக்க - தாக்குதலான் முழங்காநிற்ப.

(வி-ரை.) வாய் - இடம்.

'கயந்தலை' என்பதுமுதல் 'இரட்ட' என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) கயந்தலையடியென-யானைக்கன்றினடிபோல, கயிறு அமை - கயிறுபொருத்திய, கைத்திரி - துடியென்னும் வாச்சியம், இருவிரல் - இருவிரல், செருநிலை - செருநிலை, உயர்த்தி - கையையுயர்த்தி, இரட்ட - இரட்டாநிற்ப.

(வி-ரை.) கையிற்றிரித்தலையாற் கைத்திரியாயிற்று. கயந்தலை - யானைக்கன்று; மெல்லியதலையையுடையது என்பதுபொருள். இரட்டல் - ஒலித்தல்.

'இருதலை' என்பதுமுதல் 'ஒலிப்ப' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) இருதலை குவிந்த - இரண்டுதலையுஞ் சுருங்கிய, நெட்டுடல - நெடியவுடலினையுடைய, தண்ணுமை - தண்ணுமையென்னும் வாச்சியம், ஒருமுகம் தாழ்த்தி - ஒருமுகத்தினைத் தாழ்த்தி, இருகடிப்பு ஒலிப்ப - மற்றொருமுகத்தி லிரண்டு கடிப்பினாலொலியைப்பண்ணுகிற்ப.

(வி-ரை.) தலை - பக்கம். தண்ணுமை-மத்தளம், ஒருகட்பறையெனினுமாம். கடிப்பு - கோல்.

7

'திருமலர்' என்பதுமுதல் 'கறங்க' என்பதுவரை.

(23—26 வரிகள்.)

(ப-ரை.) திருமலர் எழுதிய-தாமரைமலர் வடிவாக வெழுதிய, வரை இருபத்தைந்து - இருபத்தைந்து வரையில், அங்குலி இரண்டு இரண்டு அணைத்து-இரண்டிரண்டு விரலாக அணைத்து, விளர்சிறி இ- செவ்வி நிறுத்தி, மும்முகக் கயலுடன் - மும்முகக்கயலுடன், மயிர்க்கயிறு விசித்த - மயிர்க்கயிறுகட்டிய, கல்லவடத்திரள் - கல்லவடத்திரளென்னும் வாச்சியம், விரற்றலை கறங்க - விரற்றலையினால் முழங்க.

(வி-ரை.) இலக்குமிக்குத் தவிசாயிருத்தலால் தாமரைமலரைத் 'திருமலர்' என்றார். மும்முகக்கயல் - மூன்றுமுகமுள்ள சேல்மீன். விசித்தல் - கட்டுதல். விரற்றலை - விரல்நுனி.

'மரக்காலன்ன' என்பதுமுதல் 'தாக்க' என்பதுவரை.

(27—28 வரிகள்.)

(ப-ரை.) மாக்கால் அன்ன - மரக்கால் போன்ற, ஒருவாய்க் கோதை-ஒருவாய்க்கோதை, முகத்தினும் தட்ட-முகத்தினுந்தட்ட, மூக்கினும் தாக்க - மூக்கினுந்தாக்க.

(வி-ரை.) ஒருவாய்க்கோதை-ஓர் கட்பறை. தாக்கல் - அடித்தல்.

நாடிரு முனிவர்க் காடிய பெருமான்.

(29-வது வரி.)

(ப-ரை.) நாடு - கருதாநின்ற, இரு முனிவர்க்கு - பதஞ்சலி வியாக்கிரபாத ரென்னு மிருமுனிவர்க்காக, ஆடிய பெருமான்-திருநடஞ்செய்த பெருமான்.

(வி-ரை.) செயவெனெச்சவடுக்கு ஆடியவென்னும் பெயரெச்சத்தின் முதனிலை கொண்டது. நான்கனுருபு அதற்கு வினையுடைமைப்பாற்பட்டது. பூசநாளிற் றிருநடஞ் செய்த பெருமானெனக் கூட்டுக.

'திருவடி' என்பதுமுதல் 'தோழி' என்பதுவரை.

(30—32 வரிகள்.)

(ப-ரை.) திருவடி வினவா - திருவடியினை நினையாமையால் வந்த, கருவுறை மாக்கள் - கருவினையுடைய மாக்களது, நெஞ்சினும்

கடந்து - நெஞ்சிருளினுங் கடந்து, நீண்ட வல் இரவில் - நீட்டித்த வலிய இரவினிடத்து, தோழி - தோழீ.

(வி-ரை.) திருவடி நினையாவென்றும் பாடம். கரு - கருப்பம். நெஞ்சு - ஆகுபெயர்.

எம்மெதிர்ப் பின்றி யிருந்தெதிர்ப் பட்டு.
(33—வது வரி.)

(ப-ரை.) எம் - எம்மை, எதிர்ப்பின்றி-எதிர்தலின்றி, இருந்து எதிர்ப்பட்டு - எதிர்ப்பட்டிருந்து.

(வி-ரை.) இருந்தெதிர்ப்பட்டு என்பது எதிர்ப்பட்டிருந்து என முன்பின்னாக மாற்றிப் பொருள் கொள்ளப்பட்டது.

'அரிதின்' என்பதுமுதல் 'பெறினே' என்பதுவரை.
(37—38 வரிகள்.)

(ப-ரை.) அரிதின் - கீரரிதாக, போந்தனிர் என்று - வந்தீரென்று, பெரிதின் - பெரிதாக, ஓர் - ஒரு, இன் - இனிய, வாய்மை - வார்த்தை, வெற்பனின் - வெற்பனால், பெறின் - பெற்றேமாயின்.

(வி-ரை.) அரிதின் பெரிதின் என்பவற்றில் இன் அல்வழிச் சாரியை. வெற்பனின் என்பதில் இன் என்னுமைந்தாவது மூன்றுவதன் கருவிப்பொருளில் வந்தது.

'மறை' என்பதுமுதல் 'நாள்' என்பதுவரை.
(34—36 வரிகள்.)

(ப-ரை.) மறைவழி - மறையின் வழியே, ஒழுகா - ஒழுகாத, மன்னவன் - வேந்தன், வாழும் - வாழ்கின்ற, நாடு - நாட்டை, பழியார்ந்த - பழியடர்ந்ததனால் வந்த, பாவம் - பாவம், சேரமறைத்த போல-ஒருங்கே மறைத்தாற்போல வெல்லாப்பொருளையு மறைத்த, கூர் இருள் நடுநாள் - மிகுந்த விருளையுடைய விடையாமத்தில்.

(வி-ரை.) மறைவழி - வேதமார்க்கம். இடையாமம்-நடுச்சாமம்.

நில்லாது செல்லவு முரியம்.
(32—வது வரி.)

(ப-ரை.) நில்லாது-யாம் கணப்பொழுதுந் தரியாது, செல்லவும் உரியம் - செல்லவுமுரியமே.

(வி-ரை.) உம்மை - சிறப்பும்மை.

திருக்கோவையாா உ௬௦-ம் செய்யுள்.

அறத்தொடுநிற்றல்.

அறத்தோடு நிற்றலென்பது—அறத்தொடு நிற்பாளாக முன்னுரேற்றுவாய்செய்து, எம்பெருமாற்குப் பழிவருங்கொல்லோ வென்னு மையத்தோடுநின்று யாமுன் பொருநாள் கடற்கரையிடத்தே வண்டல் செய்து விளையாடா நின்றேமாக, அங்கோரத்தொரு தோன்றல் நும்வண்டன் மனைக்கு யாம் விருந்தென்று வந்து நின்றபொழுது, நீ பூக்கொய்யச் சிறிது புடைபெயர்ந்தாய், அந்நிலைமைக்கட் கீழ்காற்று மிகுதலாற் கரைமேலேறுங் கடல்மேல் வந்துற்றது; உறயான் றோழியோ தோழியோவென்று நின்னை விளித்தேன், அதுகண்டிரங்கி, அவனருளொடு வந்து தன் கையைத் தந்தான், யானு மயக்கத்தாலே யதனை நின்கையென்று தொட்டேன், அவனும் பிறிதொன்றுஞ் சிந்தியாது என்னுயிர்கொண்டு தந்து என்னைக் கரைக்கணுய்த்துப் போயினன். அன்று என்னுணிினல் நினக்கதனைச் சொல்லமாட்டிற்றிலேன், இன்றிவ்வாறுயினபின் இது கூறினேன். இனி நினக்கடுப்பது செய்வாயாகவெனத் தோழிக்குத் தலைமகள் அறத்தொடு நில்லாநிற்றல். அதற்குச்செய்யுள்:—

வண்டலுற் றேமெங்கண் வந்தொரு தோன்றல் வரிவளை யீ
ருண்டலுற் றேமென்று நின்றதொர் போழ்துடை யான்புலியூர்க்
கொண்டலுற் றேறுங் கடல்வர வெம்முயிர் கொண்டு தந்து
கண்டலுற் றேர்நின்ற சேரிச்சென் றூனொர் கழலவனே.

செய்த வெறியி னெய்துவ தறியாது
நிறத்தொடித் தோழிக் கறத்தொடு நின்றது.

(ப-ரை.) வண்டல் உற்றேம்-விளையாட்டைப் பொருந்தினேமாகிய, எங்கண் - எம்மிடத்து, ஒரு தோன்றல் - ஒரு தோன்றல், வரி வளையீர் - வரிவளையையுடையீர், உண்டல் உற்றேம் என்று - (நும்வண்டன் மனைக்கு விருந்தாய்நாம்)உண்ணக்கருதினேமென்று சொல்லி, வந்து - வந்து, நின்றதோர் போழ்து - நின்றதோர் பொழுதின்கண், உடையான் - உடையானது, புலியூர் - புலியூர் வரைப்பில், கொண்டல் உற்று-கீழ்காற்று மிகுதலால், ஏறும் - கரைமேலே வந்தேறும், கடல் - கடல், வர - (எம்மேல்) வர, (அதன்கணழுந்தாமல்) எம் உயிர் கொண்டு - எம்முயிரைக் (கைக்) கொண்டு, தந்து - (எமக்குத்)தந்து;ஓர்கழலவன்-அவ்வொப்பற்ற கழலையுடையவன் ,கண்

டல் உற்று-கண்டலாகிய(மரம்)மிக்கு, ஏர் நின்ற-அழகுநின்ற, சேரி-(அச்)சேரியின்கண், சென்றான் - சென்றான், எ - று.

(வி-ரை.) இனித்தக்கது செய்வாயாக வென்பது எஞ்சி நின்றது. தோன்றல்-பெருமையிற் சிறந்தோன். உடையான்-சிவபிரான். கண்டல்-தாழை. வண்டலுற்றே மங்கனென்பது பாடமாயின், உக்கனென்பதனை ஏழாம்வேற்றுமைப் பொருள்பட நின்றதோரிடைச்சொல்லாக வுரைக்க. புலியூர்க் கடலென வியையும். தேரிற் சென்றானென்பது பாடமாயின் நம்மைக் காண்டல் விரும்பித் தேர் செலுத்திச் சென்றானென் றுரைக்க. தேரினென்பது - கருவிப்பொருட்கண் வந்த வைந்தாமுருபெனினு மமையும். இதற்குக் காண்டலுற்றென்பது குறைகின்றது. தோன்றல், கழலவன் என்றதனால், அவனது பெருமையும், எம்முயிர்கொண்டு சென்றதனால் - மெய்யுறவுங் கூறினாளாம், மெய்ப்பாடும் பயனும் அவை.

நேரிசை யாசிரியப்பா.

தன்னுழைப் பலவுயிர் தனித்தனி படைத்துப்
பரப்பிக் காட்டலிற் பதும னாகியு
மவ்வுயி ரெவ்வுயி ரனைத்துங் காத்தலிற்
செவ்விகொள் கருமுகிற் செல்வ னாகியுங்
கட்டிய கரைவரம் புட்புக வழித்து
நீர்தலை தரித்தலி னிமல னாகியுந்
தருவு மணியுஞ் சங்கமுங் கிடைத்தலி
னரிமுதி ரமரர்க் கரச னாகியு
மூன்றழ னன்மறை முனிவர் தோய்ந்து
மறைநீ ருகுத்தலின் மறையோ னாகியு
மீனுங் கொடியும் விரிதிணை யைந்துந்
தேனுறை தமிழுந் திருவுறை கூடலு
மணத்தலின் மதிக்குல மன்னவ னாகியு
நவமணி யெடுத்து நற்புலங் காட்டலின்
வளர்குறி மயங்கா வணிக னாகியும்
விளைதரு முழவும் வித்து நாறுந்
தழைதலின் வேளாண் டலைவ னாகியும்
விரிதிரை வையைத் திருநதி சூழ்ந்த

மதுரையம் பதிநிறை மைம்மலர்க் களத்த
விணையடி வழுத்தா னொதொழி லென்னக்
கைதையங் கரைசெய் பொய்தற் பாவையோ
டிருதிரை யெடுக்கப் பொருதிரை யெடுத்தும்
பூழிப் போனகம் புதுவுட னுண்டுஞ்
சாய்தாட் பிள்ளை தந்துகொடுத்து
முடவுடற் கைதை மடன்முறித் திட்டுங்
கவைதுகிர்ப் பாவை கண்ணி சூட்ட
குவலயத் திருமலர் கொணர்ந்து கொடுத்தும்
நின்று னுண்டொரு காளை
யென்று லித்தொழில் செய்வது புகழே.

தன்னுழைப் பலவுயிர் —செய்வது புகழே, பகுதி - வரைபொருட் பிரிதல், துறை - அறத்தொடுநிற்றல்.

'தன்னுழை' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) பலவுயிர் - மீன்முதலிய பலவுயிரினையும், தனித் தனி - தனித்தனியாக, படைத்து - சிருட்டித்து, தன்னுழை - தன்னிடத்தில், பரப்பிக்காட்டலின் - பரப்பிக்காட்டுதலால், பதுமனாகியும் - (நால்வகைத் தோற்றத்தே மூவகைப் பிறப்பினையும் வெவ்வேறு தன்னிடத்துண்டாக்கிப் படைத்துக் காட்டும்) பிரமனாகியும்.

(வி-ரை.) நீர் வெவ்வேறு படைத்தல் - நீர்வாழ்சாதியொழிந்தவுஞ் சலமயமாதலாவது வின்றியமையாமையின் அது வெவ்வேறு படைத்ததாயிற்று. "முழங்கு முந்நீர்" என்னும் புறப்பாட்டில் "நீரின் றமையா யாக்கைக் கெல்லா, முண்டிகொடுத்தோ ருயிர்கொடுத் தோரே, புண்டிமு தற்றே யுணவின் பண்டம், முணவெனப் படுவது நிலத்தொடு நீரே, நீரு நிலனும் புணரி யோரீண், டுடம்பு முயிரும் படைத்திசி னோரே" என்பதனானுமறிக. பிரமன் வெவ்வேறு படைத்தல் "ஸர்வ பதிஜென்று மொன்பது மானிடம்" என்பதனானுமறிக. ஆதித்தனொருவனைய்க் கடந்தோறும் வெவ்வேறு தோன்றினாற்போல, உயிரொன்றாய்க் கடந்தோறும் வியாபிக்கு மென்பார் மதமறுத்தற்குப் 'பலவுயிர்' என்றார்.

'அவ்வுயிர்' என்பதுமுதல் 'செல்வனாகியும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) அவ்வுயிர் - தன்னிடத்திலுண்டான வுயிரினத்தையும், எவ்வுயிர் அனைத்தும் - ஒழிந்த வுயிரெல்லாவற்றையும், காத்தலின் - காத்தலால் (பிரமன் படைக்கு முயிரெவ்வுயிரவ்வுயிரினைத் தங் காக்கும்), செவ்வி கொள் - அழகைக்கொண்ட, கரு முகில் - கரிய மேகம்போலும், செல்வனாகியும் - விட்டுணுவாகியும்.

(வி-ரை.) காத்தல் - காலமறிந்துதவலும், வரம்புகடவாது நிற்றலும்.

'கட்டிய' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) கட்டிய - தான் வரம்பிகந்தோடாது வரம்பாகக்கட்டிய, கரைவரம்புட்புகவழித்து - கரையழியவழித்து, நீர்தலை தரித்தலின் - நீர் தலைமையாகத் தரித்தலால், நிமலனாகியும் - (திருட்டி திதியையுண்டாக்கிய கரைவரம்பினைத் தன்னிடத்தொடுங்கச் சர்வசங்காரம் பண்ணிக் கங்கையைத் தலைமேற்றரித்த) சிவனாகியும்.

(வி-ரை.) வரம்பு - கரை. இகத்தல் - கடத்தல். நிமலன் - மலரஹிதன்.

'தருவும்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) தருவும் - சோலையும், மணியும் - மணிகளும், சங்கமும் - சங்கங்களும், கிடைத்தலின் - பெறலால் (கற்பகத்தருவும் சிந்தாமணியும் சங்கநிதியும் பெறலால்), அரிமுதிர் - மிகுந்த கண்ணிலையுடைய, அமரர்க்கு அரசன் ஆகியும் - இந்திரனாகியும்.

(வி-ரை.) முதிர்தல்-மிகுதல். அமரர்க்கரசன் - தேவராஜன்.

'மூன்றழல்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) மூன்று அழல் - (காருகபத்தியம் தென்றிசையங்கி ஆகவநீயம் என்னும்) முத்தீயினையும், நான்மறை - (தைத்திரியம், பௌடிகம், தலவகம், சாமம் என்னும்) நான்கு வேதத்தினையுமுடைய,

முனிவர் தோய்ந்து - முனிவர் மூழ்கும்படி, மறை நீர் - மறையா நின்ற நீரை, உகுத்தலின் - கொடுத்தலால், மறையோன் ஆகியும் - (அம் முனிவர்பால் அளவளாய்க் காயத்திரியால் ஆதித்தனுக் கருக்கியங் கொடுக்கும்) வேதியனாகியும்.

(வி-உ.) தோய்ந்து - தோய, தோய்ந்து மறைதற்குக் காரணமாகிய நீரெனினுமாம். தென்றிசையங்கி - தக்ஷிணாக்நி.

‘மீனும்’ என்பதுமுதல் ‘ஆகியும்’ என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) மீனும் - மீன்களும், கொடியும் - கொடிகளும், விரி திணை ஐந்தும் - (குறிஞ்சி முதலாக) விரிந்த நிலமைந்தும், தேனுறை - தேனினுறைந்த, தமிழும் - இரசமும், திரு உறை கூடலும் - திருமகள் பொருந்திய மதுரையும், மணத்தலின் - பொருந்துதலால், மதிக்குலமன்னவன் ஆகியும் - (தனக்குரிய கயற்கொடியும் பிறகொடிகளும் பரந்த திணையைந்துஞ் செவிக்கினிமை பொருந்திய இறையனாரகப்பொருளும் திருமகள் பொருந்திய மதுரைமாநகரும் பெற்ற) பாண்டியனாகியும்.

(வி-ரை.) தேன் - இனிமை, “தேனூறநின்று தெருண்டார வை செப்பலுற்றேன்” என்றாற்போல. திருவுறை கூடற்கு - கண்டாரால் விரும்பப்படு மழகுபொருந்திய கூட லெனினுமாம். மதிக்குலம் - சந்திரகுலம். கயற்கொடி - மீனக்கொடி, திணையைந்து - ஐவகைநிலம், அவை:—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

‘நவமணி’ என்பதுமுதல் ‘ஆகியும்’ என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) நவமணி - புதுமையாகிய மணிகளை, எடுத்து - (திரையால்) எடுத்து, நற்புலம் காட்டலின் - நல்லவிடங்கடோறுங் காட்டுதலால், விளர் குறி - (நவமணிகளை யெடுத்து அம்மணிகள் பிறக்கு நல்ல தானங்களைக் காட்டி) உண்டாகாநின்ற விலக்கணத்தைச் (சொல்லுதற்கு), மயங்கா - மயங்காத, வணிகன் ஆகியும் - வணிகனாகியும்.

(வி-ரை.) நற்புலங்காட்டி யுண்டாகாநின்ற விலக்கணத்தைச் சொல்லுதல் - ஏழ்ம்பாரோசிகன்னி கொற்கைத்துறைகளி லுண்டா

கிய விப்பிழுத்தும் ஈழுத்துறையி லிப்பிழுத்தும் மதியொளிபோன்று நெய்த்திருக்குமெனச் சொல்லுதல். ஏனையவு மிவ்வாறு கண்டு கொள்க. "புலந்தொகுத்தோனே" என்றாற்போல புலமிலக்கண முமாம், குறிப்பு அடையாளமுமாம். நவம் - புதுமை. திரை - அலை.

'விழைதரும்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) விழைதரும் - விரும்பப்படும் (உழவுத்தொழிலும் உழுதபின் வித்துந்தொழிலும் வித்தியபின் பயிர்களுண்டாந் தொழிலுந் தன்னாற் றழைதலினால்), உழவும் - உழவும், வித்தும்-வித்தும், நாறும் - நாற்றும், தழைதலின் - தழையப்பண்ணுதலின், வேளாண் தலைவன் ஆகியும்-வேளாண்மையையுடைய தலைவனாகியும்.

(வி-ரை.) வித்தும் நாறுமென வினைமாத்திரையாய்நின் றும்மைபெற்றது. நாறுதல் தோன்றுதலெனவே முசமும் எதிர்முகமும் கருப்பமும் விளைவும் அடங்கின. தழைதல் - செழித்தல். நாறு - நாற்று.

'விரிதிரை' என்பதுமுதல் 'தொழிலேன்ன' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

(ப-ரை.) விரிதிரை - விரிந்த திரையினையுடைய, வையை - வையையாகிய, திரு நதி சூழ்ந்த - அழகிய நதியுடுத்த, மதுரையம் பதிநிறை - அழகிய மதுரைநகரிற் றங்காநின்ற, மை மலர் களத்தன் - குவளைமலர்போன்ற கண்டத்தினை யுடையோனது, இணை அடி - இரண்டு பாதத்தையும், வழுத்தார் - வழுத்தாதார், அணை தொழில் என்ன - பொருந்திய தொழிலேபோல.

(வி-ரை.) அம்-அசையுமாம். நிறையென்றும் பாடம்.

'கைதையங்கரை' என்பதுமுதல் 'எடுத்தும்' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) இருதிரை - (நீ பூக்கொய்யப் பிரிகின்ற காலத்துக் கீழ்காற்று மிகுதலால்) கரையேறாநின்ற திரையினையுடைய கடல், கைதையங்கரை - கண்டற்கரைசேர்ந்த, செய்-செயலமைந்த, பொய் தற்பாவையோடு - விளையாட்டுப் பாவையுடனே, எடுக்க - என்னை யெடுக்க, பொருதிரை - அக்கடலினின்று, எடுத்தும் - என்னை யெடுத்தும்.

(வி-ரை.) போல வெடிக்கவென வினையும். இருந்திரை எனப் பாடமாயின், (இருமை-கருமையுட்) பெருமையுமாம். கைதை கண்டல் என்பன தாழையின் பெயர். பாவை - பிரதிமை. திரை - ஆகுபெயர்.

பூழிப் போனகம் புதுவுட னுண்டும்.

(23—வது வரி.)

(ப-ரை.) பூழிப்போனகம்-(நும் வண்டன் மனைக்கு விருந்தென்று) பூழ்தியாலமைத்த சிறுசோற்றை, புதுவுடனுண்டும் - புதிதாகச்சேர வங்கீகரித்தும்.

(வி-ரை.) "காமர் கடும்புனல்" என்னுங் குறிஞ்சிக் கலியில் "எல்லாமுட னீங்க" என்றார்.

சாய்தாட் பிள்ளை தந்துகொ டுத்தும்.

(24—வது வரி.)

(ப - ரை.) தாள் - தாளினையுடைய, சாய் பிள்ளை - கோரைப் பாவை, தந்து கொடுத்தும் - பண்ணி யெனக்குத் தந்தும்.

(வி-ரை.) கொடுத்துமென்ப திடவழுவமைதி. சாய்-கோரை.

முடவுடற் கைதை மடன்முறித் திட்டும்.

(25—வது வரி.)

(ப-ரை) முடவுடல் - வளைந்த வுடலினையுடைய, கைதை மடல் - தாழைமடலை, முறித்திட்டும் - முறித்திட்டும்.

'கவை' என்பதுமுதல் 'கோடுத்தும்' என்பதுவரை.

(26—27 வரிகள்.)

(ப-ரை.) கவை - கவர்ப்பட்ட, துகிர்ப்பாவை-பவளப்பாவைக்கு, கண்ணி சூட்ட - மாலைசூட்ட, குவலயத் திருமலர் - அழகிய நீலோற்பலமலரை, கொணர்ந்து கொடுத்தும் - கொண்டுவந்து தந்தும்.

'நின்றான்' என்பதுமுதல் 'புகழே' என்பதுவரை.

(28—29 வரிகள்.)

(ப-ரை.) நின்றான் - நின்றவன், உண்டு ஒரு காளை என்றால் - ஒருகாளை யுண்டென்றால், இத்தொழில் செய்வது-இங்ஙனம் வெறி

யாட்டெடுத்தல், புகழே - நங்குடிக்குப் புகழல்ல, (இனி யுனக்குத் தக்கது செய்வா யென்க.)

(வி-ரை.) ஏகார மெதிர்மறை. "ஏலாப்பரிசுளவே" என்றாற் போல.

தோழி! எடுத்தும், உண்டும், கொடுத்தும், இட்டும், கொடுத்தும், நின்றவ ளொருகாலை யுண்டென்றால், வெறியாட் டெடுத்தல் நங்குடிக்குப் புகழல்ல, உனக்குத் தக்கது செய்வாயென வினைமுடிவு செய்க. (கக).

10 திருக்கோவையார் ௱௭௰-ம் செய்யுள்.

தேர்வரவுகண்டு மகிழ்ந்துகூறல்.

தேர் வரவு கண்டு மகிழ்ந்துகூற லென்பது—புனல் வரவு கேட்ட தலைமகன் புனலாட்டு விழவிற்குப் பரத்தையர் சேரிக்கட் செல்லாநிற்ப, இவனைப் புணர்தற்குத் தக்க தவத்தினை முற்காலத்தே செய்தீர்கள், தேர் வந்து தோன்றிற்று, இனிச்சென்று இவனது தோளிணையைத் தோய்மினெனத் தேர்வரவுகண்டு பரத்தையர் தம்முண் மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சேயே யெனமன்னு தீம்புன லூரன்றிண் டோளிணைக
டோயீர் புணர்தவந் தொன்மைசெய் தீர்சுடர் கின்ற கோலத்
தீயே யெனமன்னு சிற்றம் பலவர் தில் லைநகர்வாய்
வீயே யெனவடி யீர்நெடுந் தேர்வந்து மேவினதே.

பயின்மணித் தேர்செலப் பரத்தையர் சேரிக்
கயன்மணிக் கண்ணியர் கட்டுரைத்தது.

(ப-ரை.) சுடர்கின்ற - சுடராநின்ற, கோலம் - வடிவு, தீயே என - தீயேயென்று சொல்ல, மன்னு-நிலைபெற்ற, சிற்றம்பலவர் - சிற்றம்பலவரது, தில்லை நகர்வாய் - தில்லைநகரிடத்துள்ளனவாகிய, வீயேயென - மலரையொக்கும், அடியீர் - அடியையுடையீர், நெடுந் தேர் - நெடிய தேர், வந்து மேவினது - (ஈண்டு) வந்து மேவிற்று; புணர்தவம்-(இவனைப்) புணர்தற்குத் தக்க தவத்தை, தொன்மை - முற்காலத்து, செய்தீர் - செய்தீர்கள்; சேயே என - (வடிவு) முருகவேளே யென்றுசொல்ல, மன்னு - நிலைபெறுகின்ற, தீம்புனலூரன் - இனிய புனலை யுடைத்தாகிய ஊரையுடையவனது, திண் - திண்ணிய, தோள் இணைகள் - தோளிணைகளை, தோயீர் - (இனி) அணைமின், எ - று.

(வி-ரை.) ஒன்றற்கொன் றிணையா யிருத்தலின் 'இணை' எனத் தனித்தனி கூறப்பட்டன. இதுவும் ஊடனிமித்தம். கோலமெனற்பாலது கொலமெனக் குறுகிநின்றது. கயன்மணிக்கண்ணி யென்பது பாடமாயின், பரத்தையர் சேரிக்கட் டலைமகனது தேர் செல்லத் தலைமகளெறிந்துரைத்ததாம். இணை - ஒப்பு, தோய்தல் - அணைதல், வி-மலர். இப்பொருட்கு நெடுந்தேர் நுமது சேரிக்கண் வந்து தங்கற்றென்றுரைக்க. மெய்ப்பாடு-உவகை. பயன்-தலைமகன் வரவு சேரிப்பரத்தையர்க்குப் பாங்காயினார் அவர்க்குணர்த்தல்.

நேரிசையாசிரியப்பா.

வடிவிழிச் சிற்றிடைப் பெருமுலை மடவீர்
தொழுமின் வணங்குமின் சூழ்மின் றொடர்மின்
கட்டுதிர் கோதை கடிமல ரன்பொடு
முண்டக முகையின் முலைமுகந் தரிமி
னுருளிற் பூழி யுள்ளுற வாடுமி
னெதிர்மி னிறைஞ்சுமி னேத்துமி னியங்குமின்
கருப்புரந் துதைந்த கல்லுயர் மணித்தோள்
வாசம் படரு மருத்தினு முறுமின்
பெருங்கவின் முன்னாட் பேணிய வருந்தவங்
கண்ணிடை யொத்திடைக் காண்மின் கருதுமின
பூவுஞ் சுண்ணமும் புகழ்ந்தெதி ரெறிமின்
யாழிற் பரவுமி னீங்கிவை யன்றிக்
கலத்துமென் றெழுமின் கண்ணளி காண்மின்
வெண்சுடர் செஞ்சுட ராகிய விண்ணொடு
புவிபுன லனல்கான் மதிபுல வோனென
முழுது நிறைந்த முக்கட் பெருமான்
பனிக்கதிர்க் குலவன் பயந்தருள் பாவையைத்
திருப்பெரு வதுவை பொருந்திய வந்நாட்
சொன்றிப் பெருமலை தின்றுநனி தொலைத்த
காருடற் சிறுநகைக் குறுந்தாட் பாரிட
மாற்று தலந்த நீர்நசை யடக்க
மறிதிரைப் பெருநதி வரவழைத் தருளிய
கூடல்ம் பதியுறை குணப்பெருங் கடவுண்

முண்டக மலர்த்து முதிராச் சேவடி
தரித்த வுள்ளத் தாமரை யூரன்
பொற்றுணர்த் தாமம் புனைந்தொளிர் மணித்தேர்
விதிவந் ததுவர லானம்
மேதந் தீர விருமருங் கெழுந்தே.

வடிவிழிச் சிற்றிடை-இருமருங் கெழுந்தே. பகுதி-பரத்தையிற் பிரிதல்; துறை - தேர்வரவுகண்டு மகிழ்ந்து கூறல்.

'வெண்சுடர்' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(14—16 வரிகள்.)

(ப-ரை.) வெண்சுடர் - (எவ்வகைப் பொருளினும்) சந்திரனும், செஞ்சுடர் - ஆதித்தனுமாகிய அவ்விரு சுடரும், ஆகிய-உண்டாகிய, விண்ணொடு - ஆகாசமும், புவி-பிருதுவியும், புனல்-நீரும், அனல் - தீயும், கால் - காற்றும், மதி புலவோன் என-மதிக்கு மியமானனும் என்னும்படி, முழுதும் நிறைந்த - எங்கும் நிறைந்த, முக்கண் பெருமான் - மூன்று கண்ணினையுடைய பெருமான்.

(வி-ரை.) ஒடு - எண்ணொடு. மதிபுலவோன் - மதிக்கும் புலவோன்; "மலைகிழவோனே" என்றாற்போல, புலவோனென வுடம்பொடு புணர்த்துக் கூறினார். புலவன்- அறிவுள்ளவன். "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான், உலகேழெனத்திசைபத் தெனத்தானொருவனுமே, பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ" எனத் திருவாசகம் - பிரபஞ்சசுத்தி-தில்லையிற்பாடிய திருத்தோணோக்கத்தினும் அஷ்டமூர்த்தங் கூறினார்.

'பனி' என்பதுமுதல் 'அந்நாள்' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) பனி கதிர் குலவன் - சந்திர வம்சத்தனாகிய மலயத்துவச பாண்டியன், பயந்தருள் - பெற்ற, பாவையை - அழகிய மும்முலைத் தடாதகையை, திருப்பெரு வதுவை - கலியாணமாக, பொருந்திய அந்நாள்-பொருந்திய அந்நாளில்.

(வி-ரை.) புலத்தை யுடையவனைப் புலவனென்றாற் போலக் குலத்தை யுடையவனைக் 'குலவன்' என்றார்.

'சோன்றி' என்பதுமுதல் 'கடள்' என்பதுவரை.

(19—23 வரிகள்.)

(ப-ரை). சொன்றி பெருமலை - பெருஞ் சோற்றுமலையை, நனி - மிகவும், தின்று தொலைத்த-நுகர்ந்து தொலைத்த, காருடல் - கரிய வுடலினையும், சிறு நகை - சிறிய நகையினையும், குறுந்தாள் - குறிய தாளினையுமுடைய, பாரிடம் - குண்டோதரன், ஆற்று து - தாகமாற்றுது, அலந்த - வருந்துதற்குக் காரணமாகிய, நீர் நசை அடக்க - நீர் வேட்கையை யடக்க, மறிதிரைப் பெருநதி - மறிந்த திரையினையுடைய வையைப் பெருநதியை, வரவழைத்தருளிய - வரும்படி யழைத்துக் கிருபைபண்ணிய, கூடலம்பதியுறை-மதுரை நகரிலுறையாநின்ற, குணப்பெருங்கடவுள் - எண் குணங்களையுடைய எல்லார்க்கு மேலான கடவுள் (அவரது).

(வி-ரை.) மலையென் றுரைத்தலின் 'தின்று' என்றார்; அது இழித் தற்கண் வருதலின் வழுவன்று; "அறுசுவை யடிசி லணியிழை தரு தலி னுறுவயிரா வோம்பாது தின்று" என்றாற்போல. அருளியகுணப் பெருங் கடவுள் கூடலம்பதியுறை கடவுளென் றியைக்க. குணம்-ராஜஸகுணம்; குணத்தினை யடையாக்கி எண்குணம் எனினுமாம். சொன்றி-சோறு. குண்டோதரன் - ஓமகுண்டம்போன்ற வயிற்றை யுடையவன். நசை வேட்கை என்பன விருப்பப்பொருள. உறை தல் - வசித்தல்.

'முண்டகம்' என்பதுமுதல் 'எழுந்தே' என்பதுவரை.

(24—28 வரிகள்.)

(ப-ரை). முதிரா - அறிவு பெருத, முண்டகம் - இதயதாம ரையையும், அலர்த்தும் - அறிவுபெறப்பண்ணும், சேவடி - சிவந்த வடியினை, தரித்த - பெற்ற, உள்ளத்தாமரை - இதய தாமரையை யுடைய, ஊரன்-நம்மூரனது, பொன்-பொன்னினுற்செய்த, துணர்- கொத்தினையுடைய, தாமம் - மாலையை, புனைந்தொளிர் - புனைந்த தனுல் விளங்காநின்ற, மணி தேர் - மணிகள் கட்டிய தேரானது, வீதி - (புனலாட்டு விருப்பினுல் நமது) சேரியிடத்து, வந்தது—, வரலால் - வந்ததாதலால், நந்தம் எதம் - (இப்பொழுது) நம்மே லுண்டாகிய படிறு, தீர - நீங்க, இருமருங்கு - இரண்டு பக்கமும், எழுந்து - எழுந்து.

(வி-ரை.) முண்டகமு மென்னுஞ் சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது; மூதிராத முண்டகமு மலர்த்துஞ் சேவடி யெனினுமாம். வந்தது வரலென்பது புகுந்ததுவே யென்றாற்போல நின்றது. இரு மருங்குமென்னு முற்றும்மை தொக்கது. முன்னும் பின்னு மொழிக் கிடமும் வலமும் பக்கமாயிற்று. எகாரமீற்றசை.

'வடி' என்பதுமுதல் 'மடவீர்' என்பதுவரை.

(1—வது வரி.)

(ப-ரை.) வடி விழி-மாவடுப்போன்ற விழியினையும், சிற்றிடை-சிறிய விடையினையும், பெரு முலை - பெரிய முலையினையுமுடைய, மடவீர் - மடவீர்.

(வி-ரை.) பெருந்தோட் சிறுநுதற் பேரமர்க்கட் பேதைபோல மயங்கிவந்தது. வடி - மாவடு, "வடிக்கண் பரப்பி" என்றாற்போல. மடவீர் என்றது குணத்தை நோக்காது பொதுவாய் மாதரீர் என்னும் பொருள் பயந்து நின்றது.

'தொழுமின்' என்பதுமுதல் 'காண்மின்' என்பதுவரை.

(2—13 வரிகள்).

(ப-ரை.) தொழுமின் - அத்தேரைக் கையெடுத்துத் தொழுவீராக; வணங்குமின் - (அதுவன்றி யவனைத்) தலைவணக்கஞ் செய்வீராக; சூழ்மின் - அத் தேரைப் பிரதக்கிணஞ் செய்வீராக; தொடர்மின் - (அதுவன்றி யதனைப்) பற்றுவீராக; உருளிற் பூழி - (அதுவன்றி யத்தேரின்) வண்டியா லெழுந்த புழுதியை, உள்ளுற வாடுமின் - மேலெங்கும் பூசுவீராக; கடிமலர் கோதை - (அதுவன்றி) நீர் வாசத்தினையுடைய மலர்மாலையை, அன்பொடு - அன்போடு, கட்டுதிர் - முடிப்பீராக; முண்டகம் - (அதுவன்றி) முண்டகமலரை, முகையின் - முகிழ்போன்ற, முலைமுகம் - முலையிடத்தில், தரிமின் - தரிப்பீராக; எதிர்மின் - (அதுவன்றி அவனை) நீ ரெதிர்கொள்வீராக; இறைஞ்சுமின் - (அதுவன்றி யவனைச்)சாஷ்டாங்கமாகச் சேவிப்பீராக; ஏத்துமின்-(அதுவன்றி யவனைப்) புகழ்வீராக; இயங்குமின் - (அதுவன்றி) அவனிடத்துச் செல்வீராக, கல் உயர் - (அதுவன்றி யவனது) மலையி னுயர்ச்சியினு முயர்ந்த, மணி தோள் - மணித்தோளில், துதைந்த - செறிந்த, கருப்புர வாசம் படரும் - கருப்புரவாசத்தைக் கொண்டுவரும், மருத்தினும் - காற்றினெதிரிலும், உறுமின் - பொருந்துவீராக; முன்னுள்-(அதுவன்றி)

முன்னாள், பெருங்கவின் - பெரிய அழகானது, பேஅரிய - (இவனிடத்திலிருக்க வேண்டுமென்று) விரும்பிய, அருந்தவம் - அரிய தவத்தை, கண்ணிடை - கண்ணால், உளத்திடை - உள்ளகத்திடத்து, காண்மின் - காண்பீராக; கருதுமின் - (அதுவன்றி) நீரவனை நினைப்பீராக; எதிர் - (அதுவன்றி) அவனெதிரே, புகழ்ந்து - (அவனைப்) புகழ்ந்து, பூவும் சுண்ணமும் - பூவையுஞ் சுண்ணத்தையும், எறிமின் - எறிவீராக; யாழில் பரவுமின் - (அதுவன்றி அவனை) யாழிற் பாடுவீராக; ஈங்கு இவையன்றி-இவ்விடத்திற் கூறிய வினையன்றி, கலத்தும் என்று எழுமின் - (அவனைக்) கூடுவேமென் றெழுவீராக; கண் அளி - (அதுவன்றி அவனைக்கூடி) அவன் கிருபையை, காண்மின் - காண்பீராக.

(வி-ரை.) அன்றி யென்பதனை யெங்குங் கூட்டி அதுவென வொருசொல் வருவிக்க. "தேமல ரங்கசட் டிருவே புகுத்த, மாமலர்க் கோதை மணாளன் புகுதுக" என்றாற்போலத் தனித்தனி முற்றாக்கினுமாம். தலைவன் புதுப்புனலாட்டு விழவிற்குப் பரத்தையர் சேரியிற் செல்ல அவரிவ்வணங் கூறியதுந் தலைவி யூடுதற்கு நிமித்தமாம். இது பரத்தையர்க்குப் பாங்காயினார் கூறியது.

மடவீர்! நம்மூரன்றோர் நம்வீதியில் வந்ததால் இப்பொழுது நம்மே லுண்டாகிய படிறு நீங்க இரண்டு பக்கமு மெழுந்து இவ்வண்ணஞ் செய்வீராகவென வினைமுடிவுசெய்க. (கஉ)

திருக்கோவையார் ௩௦௰ - ம் செய்யுள்.

கல்வி நலங்கூறல்.

கல்விநலங் கூறலென்பது—வரைந்துகொண்ட பின்னர் ஓதற்குப் பிரியலுறாநின்ற தலைமகன், தலைமகளுக்குப் பிரிவுணர்த்துவானாக, மிகவுங் கூற்றாற் சுற்றோர் நன்மைச் செல்லையில்லாத தன்மைய ராவரெனத் தோழிக்குக் கல்விநலங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சீரள வில்லாத் திகழ்தரு கல்விச்செம் பொன்வரையி
னாரள வில்லா வளவுசென் றாரம் பலத்துநின்ற
வோரள வில்லா வொருவ னிருங்கழ லுன்னினர்போ
லேரள வில்லா வளவின ராகுவ ரேந்திழையே.

கல்விக் ககல்வர் செல்வத் தவரெனச்
செறிகுழற் பாங்கிக் கறிவறி வித்தது.

(ப-ரை.) ஏந்திழையே-ஏந்திழாய், சீர்-நன்மைக்கு, அளவில்லா-எல்லையில்லாத, திகழ்தரு - விளங்கும், கல்வி - கல்வியாகிய, செம்பொன் வரையின்-மேருக்குன்றத்தினது, ஆர்-மிக்க, அளவு இல்லா-அளவில்லாத. அளவு - எல்லையை, சென்றோர் - அடைந்தவர்கள், அம்பலத்துள் நின்ற-அம்பலத்தின்கண்ணின்ற, ஓர் அளவு இல்லா-ஓரளவையுமில்லாத, ஒருவன் - ஒப்பில்லாதானுடைய, இருங்கழல்-பெரிய திருவடிகளை, உன்னினர்போல் - (அறிந்து) நினைந்தவரைப் போல். சீர் - நன்மைக்கு, அளவு இல்லா-எல்லையில்லாத, அளவினர் ஆகுவர் - தன்மையராவர், எ - று.

(வி-ரை.) செம்பொன்வரை யென்றான் தூய்மையும் பெருமையுங் கலங்காமையு முடைமையால். கற்றதின்மேலுங் கற்க நினைக்கின்றா னாதலான் 'ஆரளவில்லா வளவுசென்றோர்' என்றான். ஆரளவு - காதமும் புகையு முதலாயின அளவு. ஓரளவென்பது காட்சியும் அநுமானமு முதலாயினவளவு; இது குறிப்பெச்சம். செல்வத்தவர் - இல்வாழ்க்கைச் செல்வத்தவர். அறிவறிவித்தது - அறியப்படுவதனை யறிவித்தது. பாங்கி யறிவறிவித்ததென்பது பாட்டாயின் தலைமகனது குறிப்பைக்கண்டு தோழி தலைமகட்குக் குறிப்பினாற் கூறினாளாக வுரைக்க. மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - பிரிவுணர்த்தல்.

நேரிசையாசிரியப்பா.

நிலையினிற் சலியா நிலைமை யானும்
பலவுல கெடுத்த வொருதிறத் தானு
நிறையும் பொறையும் பெறுநிலை யானும்
தேவர் மூவருங் காவ லானுந்
தமனியப் பராரைச் சைல மாகியு
மளக்கவென் றமையாப் பரப்பின தானு
மமுதமுந் திருவு முதவுத லானும்
பலதுறை முகத்தொடு பயிலுத லானு
முள்ளுடைக் கோட்டு முனையெறி சுறவ
மதிர்வளை தடியு மளக்க ராகியு
நிறையுளங் கருதி நிகழ்ந்தவை நிகழ்பவை
தருதலின் வானத் தருவைந் தாகியு
மறைவெளிப் படுத்தலிற் கலைமக ளிருத்தலி

னகமலர் வாழ்தலிற் பிரம னாகியு
முயிர்பரிந் தளித்தலிற் புலமிசை போக்கலிற்
படிமுழு தளந்த நெடியோ னாகியு
மிறுதியிற் சலியா திருத்த லானு
மறுமைதந் துதவு மிருமை யானும்
பெண்ணிடங் கலந்த புண்ணிய னாகியு
மருள்வழி காட்டலி னிருவிழி யாகியுங்
கொள்ளுநர் கொள்ளக் குறையா தாதலி
னிறையுள நீங்கா துறையரு ளாகியு
மவைமுத லாகி யிருவினை கெடுக்கும்
புண்ணியக் கல்வி யுண்ணிகழ் மாக்கள்
பரிபுரக் கம்பலை யிருசெவி யுண்ணும்
குடக்கோச் சேரன் கிடைத்திது காண்கென
மதிமலி புரிசைத் திருமுகங் கூறி
யன்புருத் தரித்த வின்பிசைப் பாணன்
பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய
மாதவர் வழுத்துங் கூடற் கிறைவ
னிருசரண் பெறுகுநர் போலப்
பெருமதி நீடுவர் சிறுமதி நுதலே.

நிலையிற் சலியா-சிறுமதி நுதலே. பகுதி - ஓதற்பிரிவு, துறை - கல்விநலங் கூறல்.

'நிலையினின்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை.) நிலையினின் - புருடார்த்தமாகிய (தர்மார்த்த காமங்களின்) நெறியினின்றும், சலியா - அசையாத, நிலைமையானும் - நிலைமையினாலும், பல உலகு - உலகம்பலவும், எடுத்த - கைக்கொண்ட, ஒரு திறத்தானும் - ஒப்பற்ற கூறுபாட்டானும், நிறையும் - அறிவும், பொறையும் - பொறுதியும், பெறும் - உண்டாகும், நிலையானும் - நிலைமையானும், தேவர் மூவரும் - பிரமா விட்டுணு உருத்திரனென்னு முத்தேவரும், காவலானும் - காவலா யிருத்தலானும், பாரரை - (நின்ற நிலையில் துளங்காத நிலைமையும் பலவுலகுக்கு மாதாரமாகு மொப்பற்ற கூறுபாடும் இவ்வளவகல முயரமென்

பதும் பலபொருளையுந் தாங்கலும் பெற்ற நிலைமையும் மூவர்க்கு மிருப்பிடமாதலு முடைத்தாய) பரியவரையினையுடைய, தமனியச் சைலம் ஆகியும் - மகமேருவாகியும்.

(வி-ரை.) இன் - நீக்கம். இனைத்தென வறிந்தவும்மை தொக்கது. பலவுலகையுடைய பூமியைப் 'பலவுலகு' என்றார். "மாயோன் மேய காடுறை யுலகமுஞ், சேயோன் மேய மைவரை யுலகமும்" என்றார் தொல்காப்பியனாரும். "மூவேழுலகம்" என்று பரிபாடலினுங் கூறினார். இது எதுவுஞ் சிலேடையு முருவகமும் பெற்ற சங்கீர்ணம்; ஏனையவுமன்ன.

'அளக்க' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(6—10 வரிகள்.)

(ப-ரை.) அளக்கவென்று - இவ்வளவு பொருளுளவென்று, அமையா - ஆராயப்படாத, பரப்பினதானும் - விரிவானும், அமுதமும் திருவும் - அமுதமுந்திருவும் (என்று மங்கலமொழி), உதவுதலானும் - தருதலானும், பலமுறை-பலபொருண்மார்க்கமும், முகத்தொடு - தன்னிடத்தில், பயிலுதலானும் - பயிலுதலானும், முள் உடை - (ஒருவராலு மளக்கப்படாத பரப்பினையும் அமுதத்தினையுந் திருமகளையுந் தருதலும் எற்றுமதி யிறக்குமதியுடைய பலதுறையிடத்தோடு பொருந்துதலு முடைத்தாகிய இருமருங்கு) முள்ளினையுடைய, கோட்டு - கோட்டினால், முனை எறி - பகையை வெல்லாநின்ற, சுறவம் - சுறவம், அதிர் - முழங்காநின்ற, வளை-சங்கத்தை, தடியும் - வெல்லுதற்கிடமாகிய, அளக்கர் ஆகியும் - கடலாகியும்.

(வி-ரை.) பரப்பினதென்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. தடியுங்கடல் இடத்து நிகழ்பொருளின்றொழி லிடத்தின்மேல் நின்றது. "மிஞிறார்க்குங் காஞ்சி" என்றார் பாலைக்கலியினும். பயிலல்-பழகல். சுறவம் - மீன்விசேடம். தடிதல் - வெல்லுதல்.

'நிறையுளம்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(11—12 வரிகள்.)

(ப-ரை.) நிறையுளம் - நிறைந்த அவரவருள்ளத்தில், நிகழ்ந்தவை நிகழ்பவை - எப்பொருள் நிகழ்ந்தவை நிகழ்பவை, (அப்பொருள்களை யவரவாறிவுக்குத் தக்கதாய்), கருதி-கருத, தருதலின் - கொடுத்தலானும், வானத்தரு ஐந்து ஆகியும் - (அவரவருள்ளங் குறைபடா

மற் கருதி யவருள்ளதற் னிகழ்ந்தபொரு ளெப்பொருளப்பொருள் களைக் கொடுக்கும்) வானத்தின்கணுள்ள வைந்தருவாயும்.

(வி-ரை.) ஐந்தருவாவன - சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிஜாதம் என்பன.

'மறை' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-உரை.) மறை வெளிப்படுத்தலின் - இரகசியப் பொருளை வெளிப்படுத்தலானும், கலைமகள் இருத்தலின் - சரஸ்வதி குடியாக விருத்தலானும், அகமலர் வாழ்தலின் - இதய கமலத்திற் றங்குத லானும், பிரமன் ஆகியும் - (வேதத்தை வெளிப்படுத்தச் சரச்சுவதி யோடு பொருந்தித் தாமரையிடத்தி லிருக்கும்) பிரமனாகியும்.

(வி-உரை.) கல்விக் கதிதேவதை யாதலால் சரஸ்வதியை 'கலை மகள்' என்றார்.

'உயிர்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-உரை.) உயிர் - உயிர்கள், பரிந்த - விரும்பி வேண்டிய பொருள்களை, அளித்தலின் - கொடுத்தலானும், புலமிசை போக்கலின் - அவரவர்க் கடங்காதறிவை மேற்போக்கலானும், படி முழுது - (உயிர்களை விரும்பிக் காத்தலு மறிவுக்கு மேலாகக் காணப்படுதலு முடைய) உலகமுழுதும், அளந்த - அளந்த, நெடியோன் ஆகியும் - திருமாலாகியும்.

(வி-ரை.) முற்றும்மை தொக்கது. விருப்பம் நிகழாவழி வேண் டல் நிகழாதென்பது தோன்றப் பரிந்ததே என்பதற்கு விரும்பி வேண்டிய பொருள்களை யென்றுரைக்கலாயிற்று.

'இறுதி' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(17—19 வரிகள்.)

(ப-உரை.) இறுதியில்-கற்பவிறுதியில், சலியாது- அசைவின்றி, இருத்தலானும்-இருத்தலானும், அறுமை - ஆறங்கத்தையும், தந்து- தன்னிடத்துண்டாக்கி, உதவும் - எல்லாருமறிய வுதவும், இருமை யானும் - பெருமையானும், பெண்ணிடம் கலந்த - (எல்லாத்தேவரு மொடுங்குங் கால விறுதியி லேகமா யசைவின்றி யிருத்தலுந் தொ

மூத விம்மையிற் சீவன்முத்தராய் மறுமைப்பயன் றந்துதவும் பெருமையுமுடைய) பார்வதியை யிடப்பாகத்தில் வைத்த, புண்ணியன் ஆகியும் - சிவபெருமானாகியும்.

(வி-ரை.) ஆறு - அறுமைபா யீண்டெண்ணின்மே னின்றது. "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்", "தெரிமாண் டமிழ் மும்மைத் தென்னன் பொருப்பு என்புழிப்போல" அது "ஆறறி யந்தணர்" என்றாற்போல, வரையறைக் குணப் பண்புடைப் பொருண்மேனின்ற வாகுபெயர், அங்கத்தை யுணர்த்தலின். ஆறங்கமாவன - மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதி, நிருத்தம், சோதிடம் என்பன.

அருள்வழி காட்டலி னிருவிழி யாகியும்.

(20—ஆது வரி.)

(ப-ரை.) அருள் வழி - கற்றதனால் தொடர்பு பற்றாது இயல்பாக வெல்லா வுயிர்கண்மேலுஞ் செல்வதாகிய) கருணையை, காட்டலின் - கொடுத்தலால், இருவிழி ஆகியும் - (வீட்டுநெறி காட்டலா லருட்பார்வையைக் காட்டும்) இருவிழியாகியும்.

(வி-ரை.) அருளினால் வழிகாட்டல் - அருள்கொடுத்து வழி காட்டலாயிற்று. அருள்காட்டல் - வீட்டு நெறியைக் காட்டல்; "அருளிலார்க் கவ்வுலகமில்லை" என்பதனானறிக.

'கோள்ளுநர்' என்பதுமுதல் 'ஆகியும்' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) கொள்ளுநர் - கற்பார், கொள்ள - கற்றதனால், குறையாது - குறையாது, நிறை - அறிவுபொருந்திய, உளம் - உள்ளத்தைவிட்டு, நீங்காதாதலின்-பிரியாம லுண்டாதலால், உறை அருள் ஆகியும் - (ஒன்றொன் றொவ்வாத சமயநெறியி லுள்ளாரெல்லாரு மளவைகளா லாய்ந்துகொள்ள வேறுபடாம லறிவினையுடைய வுள்ளத்தை நீங்காது) உறையுமருளாகியும்.

(வி-ரை.) அருட்காயின் யாவருமென வொருசொல் வருவிக்க. "பல்லாற்றாற் றேரினு மஃதே துணை" என்பதனால் அருள் எல்லாச் சமயத்தார்க்கு மொக்குமென்க.

'அவை' என்பதுமுதல் 'மாக்கள்' என்பதுவரை.

(23—24 வரிகள்.)

(ப-ரை.) அவை - (நல்லவை நிறையவை யென்னும் இரண்டு) சபைக்கு, முதலாகி - முதன்மையாகி, இருவினை கெடுக்கும் - நல்வினை தீவினைகளைக் கெடுக்கும், புண்ணியக்கல்வி - தருமமுதலாகிய கல்விகளை, உண்ணிகழ் மாக்கள் - கருதாநின்ற மாக்கள்.

(வி-ரை.) ஆகியும் நிகழ் கல்வியெனக் கூட்டுக. புண்ணியக் கல்வியெனவே குறையவையுந் தீயவையு மொழிந்தன. நல்லவை - வெண்பா - "புகழுந் தருமநெறி நின்றோர்பொய் காம, மிகழுஞ் சினஞ்செற்ற மில்லோர்-நிகழ்கலைக, ளெல்லா முணர்ந்தோ ரிருந்த விடமன்றோ, நல்லா ரவைக்கு நலம்" என்பதனானறிக. நிறையவை - வெண்பா - "நலனடக்கஞ் செம்மை நடுவுநிலை நான்குங், குலனென் றிவையுடையோர் கோதில் - புலனில்லோர், சென்று மொழிந்தனவுங் கேட்டோர் செறிந்தவிட,மன்றோ நிறைந்த வவை" என்பதனானறிக.

சிறுமதி நுதலே.

(32—வது வரி.)

(ப-ரை.) சிறுமதி நுதலே - சிறியமதிபோலு நுதலினையுடையாய்.

(வி-ரை.) சிறுமதிநுதல் - அன்மொழித்தொகை. ஏ-விளியுருபு.

'பரி' என்பதுமுதல் 'நீடுவர்' என்பதுவரை.

(25—32 வரிகள்.)

(ப-ரை.) பரிபுரக்கம்பலை - (அம்பலத்தி லாடும்) காற்சிலம் போசையை, இரு செவிபுண்ணும் - இரு செவியிற் பொருந்துதற் கேதுவாகிய, குடக்கோச்சேரன்-குடதிசைக் கோவாகிய சேரமான், மதிமலிபுரிசை - மதிமலிபுரிசை யென்றடி யெடுத்துப்பாடி, திருமுகம் இது - இவ்வோலையை, கிடைத்து காண்கென கூறி - பெற்றுக் காண்பானாகவென்று கூறி, அன்பு உருதரித்த - அன்புதானே யொருவடிவாகப் பெற்ற, இன்பு இசை பாணன்-இனிய இசையினையுடைய பாணன், நிதிபெற கொடுக்கென - நிதிபெறக் கொடுப்பானாகவென்று, உறவிடுத்தருளிய-பொருந்த விடுத்தருளிய, மாதவர் வழுத்தும் - மிகுந்த தவத்தையுடையோர் வணங்கும், கூடற்கிறைவன்-கூடற்கு முதல்வன், இருசரண் பெறுநர்போல - பெரிய

சரணத்தைப் பெற்றார்போல, பெருமதி நீடுவர் - மிகுந்த கல்வியறிவிற் களவில்லாத தன்மையராவர்.

(வி-ரை.) உண்ணுமென்ப துண்டற்குரிய வல்லாப்பொருளை யென்பதனாற் கொள்க. குடக்கோ - திசைநிலைக்கிளவி. கூடல் - மதுரை. இருசரண் - இணையடி யெனினுமாம். மதி - அறிவு, அது ஈண்டைக்கேற்பக் கல்வியறிவுக்காயிற்று.

சிறுமதிநுதலே! கல்விமாக்கள் இறையவன் சரணம் பெறுகுநர்போலப் பெருமதி நீடுவரென வினைமுடிவு செய்க.

இது விதலையாப்புப் பொருள்கோள். வரைந்தபின்னர்த் தலைமகட்கோதற் பிரிவுணர்த்துவானாகக் கல்வியுடைய மாக்களிறைவன் சரணம் பெற்றாற்போல நீடுவரெனத் தோழிக் கறிவித்தானென்க.

12 திருக்கோவையார் ௩௯௮-ம் செய்யுள்.

முன்னிகழ்வுரைத் தூடறீர்த்தல்.

முன்னிகழ்வுரைத் தூடறீர்த்தலென்பது—கல்வியிடத் தூடாநின்ற தலைமகளுக்கு, யாம் கொடிய நெறியைச்சென்று சிறிய வூரின்கண் மரையதட் பள்ளியில், இச்செறிந்த மெல்லிய முலைகள் என் மார்பிடை வந்தடர்க்கத் தங்கிய சிறியதுயிற்கு மாறு கண்டிலம், அதனை நீ யுள்ளியு மறிதியோவென முன்னிகழ் வுரைத்துத் தலைமகன் அவளை யூடறீராநிற்றல். அதற்குச் செய்யுள்:—

ஆறூர் சடைமுடி யம்பலத் தண்டாண் டம்பெறினு
மாறூர் மழவிடை யாய்கண்டி லம்வண் கதிர்வெதுப்பு
நீறூர் கொடுநெறி சென்றிச் செறிமென் முலைநெருங்கச்
சீறூர் மரையத ளிற்றங்கு கங்குற் சிறுதுயிலே.

முன்னி கழ்ந்தது நன்னுதற் குரைத்து
மன்னுபுன லூரன் மகிழ்வுற் றது.

(ப-ரை.) ஊர் - தவழாநின்ற, மழவிடையாய் - இளையவேற்றையுடையாய், ஆறு ஊர் - ஆறுபரந்த, சடைமுடி - சடைமுடியை யுடைய, அம்பலத்து - அம்பலத்தின்கண் உளராகிய, அண்டர் - தேவரது, அண்டம் - அண்டம் (முழுதையும்), பெறினும் - (யாம்) பெறினும், வள் கதிர் - (ஞாயிற்றினுடைய) வளவிய கதிர்கள், வெதுப்பு - வெதுப்பிய, நீறு ஊர் - நீறுபரந்த, கொடுநெறி சென்று - கொடிய நெறியைச் சென்று, இ-இந்த, செறி-நெருங்கிய, மெல் முலை-

மெல்லிய முலைகள், நெருங்க-எம்முடைய மார்பினிடைவந்து) அடா, சிறு ஊர்- (நெறியால்) சிறியவூரின்கண், மரை அதளில்-மரையென்னு மிருகத்தின் றோலினாலாய படுக்கையில், தங்கு - தங்கிய, கங்குல்-இரவில், சிறு துயில் - சிறியதுயிற்கு, மாறு கண்டிலம் - மாறுகண்டிலம் (அதனை நீ யுள்ளியு மறிதியோ).

(வி-ரை.) மழவிடையாய் என்பதற்கு இளவேறு போல்பவனே யென் றுரைப்பினுமாம். மாறு - ஒப்பு. அண்டாதண்ட முழுதும் பெறுதலால் வருமின்பமும் அத்துயிலான்வந்த வின்பத்திற்கு மாறல்ல வென்றவாறு. இளவேறு-புதல்வன். தமக்குத்தக்க பள்ளியு மிடமுமின்மையிற் 'சிறுதுயில்' என்றான். துயிலும் பொழுதிற் றுயிலாப்பொழுது பெரிதாகலின் அவ்வாறு கூறினானெனினு மமையும். துயிற்கென்று நான்கனுருபு விகாரவகையாற் றொக்குநின்றது. முன்னிகழ்ந்தது கூறுவானாய் உண்ணின்ற சிவப்பாற்றுவித்தது. ஞெழுங்கவென்பதூஉம் மரவதளென்பதூஉம் பாடம். ஞெமுங்கல்-அழுந்தல். மரவதள் - மரப்பட்டை. மெய்ப்பாடு - உவகை, பயன்-தலைமகளை மகிழ்வித்தல்.

நேரிசையாசிரியப்பா.

குரவ மலர்ந்த குவையிருட் குழலி
யிருவே மொருகா லெரியத ரிறந்து
விரிதலைத் தோன்முலை வெள்வா யெயிற்றியர்க்
கருப்புது விருந்தெனப் பொருந்திமற் றவர்தரு
மிடியுந் துய்த்துச் சுரைக்குட மெடுத்து
நீணிலைக் கூவற் றெளிபுன லுண்டும்
பழம்புற் குரம்பை யிடம்புக் கிருந்து
முடங்கத ளுறுத்த முகிணகை யெய்தியு
முடனுடன் பயந்த கடலொலி யேற்று
நடைமலை யெயிற்றி னிடைதலை வைத்து
முயர்ந்தவின் பதற்கின் றுவம முண்டெனின்
முலைமுன் றணந்த சிறுநுதற் றிருவினை
யருமறை விதிக்கத் திருமணம் புணர்ந்து
மதிக்குலம் வாய்த்த மன்னவ னாகி .
மேதினி புரக்கும் விதியுடை நன்னா
ணடுவூர் நகர்செய் தடுபவந் துடைக்கு

மருட்குறி நிறுத்தி யருச்சனை செய்த
தேவ நாயகன் கூடல்வா ழிறைவன்
முண்டக மலர்த்தி முருகவி ழிருதா
ளுறைகுந ருண்ணு மின்ப
மறைய லன்றி மற்றொன்று மடாதே.

குரவமலர்ந்த-மற்றொன்றுமடாதே. **பதி-**பரத்தையிற் பிரிவு, **துறை** - முன்னிகழ்வுரைத் தூடறீர்த்தல்.

குரவ மலர்ந்த குவையிருட் குழலி.

(1—வது வரி.)

(ப-ரை.) குரவம் மலர்ந்த - குரவமலர்விரிந்த, குவை இருள் - இருட்கூட்டம்போலும், குழலி - குழலினையுடையாய்.

(வி-ரை.) இல்பொருளுவமை, அபூதவுவமையெனினு மமையும், மலர்ந்தகுழ லெனினுமாம். குரவம் - ஆகுபெயர். குவையிருள் என்பதனை முன்பின்னாகமாற்றிப் பொருள் கூறப்பட்டது. குழலி - அண்மைவிளி.

'இருவேம்' என்பதுமுதல் 'பொருந்தி' என்பதுவரை.

(2—4 வரிகள்.)

(ப-ரை.) இருவேம் - நாமிருவரும், ஒருகால்-ஒருதரம், எரியதரிறந்து-எரியினையுடைய சுரத்திற்போய், விரி தலை-விரிந்ததலையினையும் தோல் முலை - நான்ற முலையினையும், வெள் வாய் - வெள்ளியவாயினையுமுடைய, எயிற்றியர்க்கு - பாலைநில மகளிர்க்கு, அரும் - கிடையாத, புது விருந்து என-புதியவிருந்தென்றுபடி, பொருந்தி-பொருந்தி.

(வி-ரை.) மற்றவரென்பதனைப் பின் கூட்டுக. எரி - எரியாநின்ற எனினுமாம். எரி - நெருப்பு. அதர்-வழி; அது ஈண்டுப் பாலைவழிக்காயிற்று. நான்ற - தொங்கின.

பழம்புற் குரம்பை யிடம்புக் கிருந்தும்.

(7—வது வரி.)

(ப-ரை.) பழம்புல் குரம்பையிடம் - பழையபுல்லால் வேய்ந்த அவர் சிற்றிலிடத்து, புக்கிருந்தும் - புகுந்திருந்தும்.

மற் றவர்தரு
முடங்கத ளுறுத்த முகிணகை யெய்திபு
இடியுந் துய்த்து

(4—8—5 வரிகள்.)

(ப-ரை.) முடங்கு அதளுறுத்த - சுருட்டிவைத்ததோலை விரிப்ப, முகிழ் நகை எய்தியும் - (அதற்குக்) குறுநகை விளைத்தும், மற்றவர் தரும் - அவரிடம், இடியும் துய்த்து - தினைமாவினை நுகர்ந்தும்.

(வி-ரை.) மற்று - அசை. உம்மை - மாறுக. நுகர்தல் - உண்டல். இடி-ஆகுபெயர்.

'சுரைக்குடம்' என்பதுமுதல் 'உண்டும்' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) நீணிலை கூவல் - ஆழ்ந்த நிலையினையுடைய கிணற்றில், தெளி புனல் - தெளிந்தநீரை, சுரை குடம் - சுரைக்சாயாலமைத்த குடத்தில், எடுத்து உண்டும் - எடுத்தருந்தியும்.

(வி-ரை.) சுரை - ஆகுபெயர். அருந்தல் - பருகல்.

'உடன்' என்பதுமுதல் 'வைத்தும்' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) கடல் - கடலானது, உடனுடன் - உடனுடனே, பயந்த - தந்த, ஒலி எற்றும் - ஓசையைக் கேட்டும், நடைமலை-யானையின், எயிற்றினிடை - மருப்பின்கண், தலை வைத்தும் - தலையினை வைத்தும்.

(வி-ரை.) கடவொலி யென்று பாடங்கூறி யானையொலி யென்ற பொருள் கூறுவதுமுண்டு. ஒல்லி யென்பதனை யொலியென விகாரமாக்கி எற்று மென்பதனை எற்றுமென்று பாடமோதின், யானை நீருண்ணுந் துறையிற் பொருந்தியதனைப் பெற்றவுடனே வெட்டு மருப்பிடத்துத் தலையைவைத்துமென்க. மருப்பு-கொம்பு (தந்தம்). தலையைவைத்தும் என்றது தலைவைத்துறங்கியு மென்றவாறு.

உயர்ந்த வின்பதற் கின்றுவம முண்டெனின்.

(11—வது வரி.)

(ப-ரை.) உயர்ந்த இன்பதற்கு-சிறப்பாகிய அவ்வின்பத்திற்கு, உவமம் இன்று - வேறுவமையுமில்லை, உண்டெனின் - ஒன்றுண்டென்று விசாரிக்கின்.

(வி-ரை.) உம்மை - சிறப்பு, அது தொக்குநின்றது.

'முலை' என்பதுமுதல் 'நன்னாள்' என்பதுவரை.

(12—15 வரிகள்.)

(ப-ரை.) மதி குலம் வாய்த்த - சந்திர வம்சத்தினின்றுந் தப்பாது பெற்ற, மன்னவன் ஆகி - பாண்டியனாகி, முலை மூன்று அணந்த - மூன்றாகப் பொருந்திய முலையினையும், சிறு நுதல் - சிறிய நுதலினையுமுடைய, திருவினை - திருவினை, அருமறை விதிக்க - பிரமன் சடங்கியற்ற, திருமணம்புணர்ந்து-திருக்கலியாணஞ்செய்து, மேதினி புரக்கும் - உலகையாளும், விதியுடை நன்னாள் - விதியினையுடைய நல்ல நாளில்.

(வி-ரை.) திரு - மும்முலைத் தடாதகை. மூன்றணந்தமுலை, "பொன்றுஞ் சாகத்தினாய் பொருள் செய்யுமே" என்றாற்போல நின்றது; அணந்த திருவென நிலப்பெயர் கொண்டதெனினுமாம். மதிக்குலம் வாய்த்த மன்னவனாகி யென்பதனை வடநூலார் தாதுரூப்ய ரூபகம் என்பர்; இதனைத் தொல்காப்பியனார், சொல்லும் பொருளு முடனாராய்தலின் உருவகவுவமை யென்பர், இதற்குப் "பாண்டியனைப்போன்றெனப் பொருளாக்குக"; "ஆய்ந்த குருகுலமா மாழ்கடலி னுண்முளைத்த வறச்செங்கோ லாய கதிரினை, வேந்தர் பெருமானைச் சச்சந்தனை மந்திரிமா னாகமுடன் விழுங்கிற் றன்றே" என்றாற்போல; இது கிழக்கிடு பொருணிலைக் களமாக முதலொடு முதல்வந்த மெய்யுவமம். மறை - ஆகுபெயர். புரத்தல் - காத்தல் எனினுமாம்.

'நடுவூர்' என்பதுமுதல் 'அடாதே' என்பதுவரை.

(16—21 வரிகள்.)

(ப-ரை.) நடுவூர் - மதுரையூர்நடுவில், நகர் செய்து - ஆலயஞ்செய்து, அடு பவம் துடைக்கும்-பத்தரடுத்த பிறவியைக் கெடுக்கும், அருள் குறி நிறுத்தி - தன்கருணையைத் தேவென்னுங் குறியாக நிறு

த்தி, அருச்சனை செய்த - ஆராதனைசெய்த, தேவ நாயகன் - தேவர் நாயகன், கூடல் வாழ் இறைவன்-மதுரையிலுறையாநின்ற தலைவன், முருகு அவிழ்-மணம் விரியும், இரு தாள்-இருதாளாகிய, முண்டகம்-தாமரையால், மலர்த்தி - (இதயதாமரையை) மலர்த்தி, உறைகுநர் - பொருந்தினர், உண்ணும் இன்பம்-பெறுமின்பமே,அறையல்அன்றி-(உவமையென்று)சொல்லுதலன்றி,மற்றொன்றும்அடாது-வேறொன்றுனு முவமைபெறாது (அதனை நீ கருதியுமறியாய்).

(வி-ரை.) முண்டகம்-ஆகுபெயர். அடாது - தகாது எனினுமாம். முருகவிழ்தாளெனவே தாமரையா யுருவகஞ் செய்தார், மலர்த்தியெனவே பிறவினையாயிற்று. உண்ணுமின்பம் - "உண்டற்குரிய வல்லாப்பொருளை" என்பதனு னமைக்க. "சோணலமுண்டு துறக்கப்பட்டு" என்றாற்போல, ஏகாரத்தைப் பிரித்தின்பமெய்யெனக் கூட்டுக. தேற்றேகாரம்படப் புணர்த்துச் சொன்னமையா னிது நியமவுவமையாயிற்று.

குழலி! போய் - பொருந்தி - இருந்தும் - எய்தியும்-துய்த்தும்-உண்டும் - ஏற்றும் - வைத்தும் - உயர்ந்தவின்பத்திற்கு - ஒன்றுவமமுண்டெனின் - இருதாளுறைகுநர் - உண்ணுமின்பமே யுவமையென்று சொல்லுதலன்றி வேறுபெறாது, அதனை நீ கருதியு மறியாயென வினைமுடிவு செய்க. (கஉ)

13 திருக்கோவையார் களக-ம் செய்யுள்.

நிலவுவெளிப்பட வருந்தல்.

நிலவுவெளிப்பட வருந்தல் என்பது - இரக்கங்கூறி வரைவுகடாய தோழி, பிற்றைஞான்று அவனிரவுக்குறியிடை வந்துநிற்ப, நிலவுவெளிப்பட்டாற் சென்றெதிர்ப்பட மாட்டாமற் றுங்கள் வருந்தாநின்றமை சிறைப்புறமாக மதியோடு புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

நாகந் தொழவெழி லம்பல நண்ணி நடநவில்வோ
ஞ்க மிதுமதி யேமதி யேநவில் வேற்கை யெங்க
ணுகம் வரவெதிர் நாங்கொள்ளு நள்ளிருள் வாய்நறவார்
நாக மலிபொழில் வாயெழில் வாய்த்தநின் னுயகமே.

தனிவே லவற்குத் தந்தளர் வறியப்
பனிமதி விளக்கம் பாங்கி பகர்ந்தது.

(ப-ரை.) நவில் - பயிலப்பட்ட, வேல் - வேலையேந்திய, கை - கையையுடைய, எங்கள் நாகம் - எங்கள் யானை, வர - வர, நாம் - நாங்கள், எதிர்கொள்ளும் - எதிர்கொள்ளும், நள் இருள்வாய் - செறிந்த இருளிடத்து (அவ் விருளைச்சிதைத்து) நறவு ஆர் - தேனூர்ந்த, நாக மலி - நாகமலர் மலிந்த, பொழில்வாய் - பொழிலிடத்து (நின்று), எழில் வாய்த்த - (நீ செய்கின்ற) அழகுவாய்த்த, நின் நாயகம் - நினது முதன்மை, மதியே - திங்காள், மதியே - நினக்கறிவே, நாகம் தொழ - (பதஞ்சலி முனியாகிய) நாகந்தொழ, எழில் அம்பலம் நண்ணி - எழிலையுடைய அம்பலத்தைப் பொருந்தி, நடம் நவில்வோன் - கூத்தைப் பயில்வானது, நாகம் இது - மலைகாணிஃது, எ - று.

(வி-ரை.) இதனைக் கடைப்பிடிப்பாயாகவென்ப தெஞ்சிநின்றது. நடம் - நடநம். மதியே என்னு மேகாரம் விளிவோ டெதிர்மறை. நாகத்தான் விழுங்கப்படு நீ, நாகந்தொழ வம்பலத்து நடம் பயில்வோனது மலைக்கட்புகுந்து விளங்கி வீற்றிருத்தல் நினக்கு நன்றியயவாதென்பது கருத்து. அறிவென்பது ஈண்டறிந்து செய்யப்படுங் காரியத்தை. தனிநாயகமென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு - வெகுளி, பயன் - இடையீடறிவித்தல்.

நேரிசையாசிரியப்பா.

நண்ணிய பாதி பெண்ணினர்க் கமுத
மடுமடைப் பள்ளியி னடுவவ தரித்தும்
திருவடி வெட்டினு ளொருவடி வாகியும்
முக்கணி லருட்கண் முறைபெற முயங்கியும்
படியிது வென்று வடிமுடி கண்டும்
புண்ணிய நீறெனப் பொலிகதிர் காற்றியும்
நின்றனை பெருமதி நிற்றெழு தேற்கு
நன்னரிற் செய்குறு நன்றியொன் றுளதால்
ஆயிரந் தழற்கரத் திருட்பகை மண்டிலத்
தோரொரு பனிக்கலை யொடுங்கிநின் றடைதலிற்
கொலைநுதி யெயிறென் றிருபிறை முளைத்த
புகர்முகப் புழைக்கை யொருவிசை தடிந்தும்
மதுவிதழ்க் குவளையென் றடுகண் மலர்ந்த
நெடுஞ்சுனை புதையப் புகுந்தெடுத் தளித்தும்
செறிபிறப் பிறப்பென விருவகை திரியும்

நெடுங்கயிற் றாசல் பரிந்துகலுழ் காலை
முன்னையிற் புனைந்து முகம னளித்தும்
தந்தவெங் குரிசி றனிவந் தெமது
கண்ணெனக் கிடைத்தெங் கண்ணெதிர் நடுநாட்
சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கட் பெருமான்
மாதுடன் றோன்றிக் கூடலு ணிறைந்தோன்
தன்னைநின் றுணர்ந்து தாமுமொன் றின்றி
யடங்கினர் போல நீயும்
ஒடுங்கினின் றமைதி யிங்கிலை யறிந்தே.

நண்ணியபாதி - இங்கிலையறிந்தே. பகுதி - இரவுக்குறி, துறை- மதியொடு புலந்துகூறல்.

'கோலை' என்பதுமுதல் 'தடிந்தும்' என்பதுவரை.

(11—12 வரிகள்.)

(ப-ரை.) கொலை - கொலையினையும், துதி - கூர்மையினையு முடைய, எயிறு என்று-மருப்பென்று, இரு பிறை முளைத்த - இரண்டுபிறை முளைத்தாற்போன்ற, புகர்முகம்-புகர்முகத்தினையுடைய யானை (வந்தெதிர்ந்த அந்நாள்), ஒருவிசை - ஒருதரம், புழை கை - அதனது துளையையுடைய கையை, தடிந்தும் - வெட்டியும்.

(வி-ரை.) உவமையொடு பொருட் கொற்றுமைபற்றி முதலொடு மியைந்த பெயரெச்சம் நிலப்பெயர் கொண்டது. புகர்-புள்ளி. கொலை - தொழிற்பெயர். தடிதல் - வெட்டுதல். கை - துதிக்கை.

'மதுவிதழ்' என்பதுமுதல் 'அளித்தும்' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) மது இதழ் - (அதுவன்றித்) தேனையுடைத்தாய விதழினையுடைய, குவளை என்று - குவளையென்று, அடு - எல்லாரையு மடாநின்ற, கண்மலர்ந்த - கண்மலர்ந்தாற்போன்ற, நெடுஞ்சுனை - நெடிய சுனையிடத்தில், புதைய - அமிழ்ந்த, புகுந்து - (அதனுள்) புகுந்து, எடுத்தளித்தும் - எடுத்தளித்தும்.

(வி-ரை.) கண்மலர்ந்த சுனைகிலப்பெயர் கொண்டது. இயன்றென்று பாடமாயின் - மருப்பியன் றிருபிறைபோன் முளைத்தவென்றும், குவளைமலரியன்றடுத்த கண்போல மலர்ந்தவென்றும் பொருளுரைக்க. கண்மலர்ந்த வென்றதற்கு இடம்பரந்த வெனினுமாம். அடுதல் - கொல்லுதல். புதைதல் - அமிழ்தல், அளித்தல் - காத்தல்.

'செறி' என்பதுமுதல் 'முகமனளித்தும்' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) செறி - (புவனந்தோறும்) பொருந்தும், பிறப்பு இறப்பு என - பிறவிப் போக்குவரவுபோல, இருவகை திரியும் - போக்குவரவென்னு மீண்டுகூறுபாடாகத் திரியும், நெடுங்கயிற்றூசல்-நெடிய கயிற்றூசல், பரிந்து - வடமற்றதனால், கலுழ்சாலை - அழுங்காலத்து, முன்னையிற் புனைந்து - முன்போலச் செய்து, முகமன் அளித்தும் - நல்வார்த்தை சொல்லியும்.

(வி-ரை.) தொழிலுவம மாதலின் உவமைக்குந் தொழில் கொள்க. பரிந்து என்னும் வினையெச்சம் காரணப்பொருட்டு. கலுழ்தல் - அழுதல். புனைந்து என்பதற்கு அலங்கரித்தெனினுமாம்.

'தந்த' என்பதுமுதல் 'நடுநாள்' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) தந்த - உயிர்தந்த, வெம் - விருப்பத்தினையுடைய, குரிசில் - குரிசிலானவன், தனி வந்து - தானொருவனுமாக வந்து, எமது கண்ணெனக்கிடைத்து - எங்கண்போலப் பொருந்தி, எம் கண்ணெதிர் நடுநாள் - எங்கண்ணிற்காணு மிடையாமத்தில்.

(வி-ரை.) எம்முடைய குரிசிலெனினுமாம். வெம்மை ஈறு குறைந்து வெம் என நின்றது. குரிசில்-பெருமையிற் சிறந்தோன். இடையாமம் - நடுச்சாமம்.

பெருமதி.

(7—வது வரி.)

(ப-ரை.) பெருமதி - உயர்ச்சியினையுடைய மதியே.

(வி-ரை.) இது இகழ்ச்சிக்குறிப்பு. மதி - சந்திரன்.

'நண்ணிய' என்பதுமுதல் 'அவதரித்தும்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நண்ணிய பாதி - பாதிபாகப் பொருந்திய, பெண்ணினர்க்கு - பெண்ணைவடிவாக வுடையவர்க்கு, அமுதம் அடும் - விடமாகிய அமுத முண்டாக்கும், மடைப்பள்ளியினடு - கடலாகிய திருமடைப்பள்ளியினுப்பணில், அவதரித்தும் - தோன்றியும்.

(வி-ரை.) இது குறிப்புருவகம், மாட்டேறேலாவுருவகமுமிது. அமுதம் - உணவு. நாப்பண் - நடு.

திருவடி வெட்டினு ளொருவடி வாகியும்.
(3—வது வரி.)

(ப-ரை.) திருவடிவு எட்டினுள் - அட்டமூர்த்தமாகும் வடிவில், ஒருவடிவு ஆகியும் - ஒருவடிவமாகியும்.

(வி-ரை.) அஷ்டமூர்த்தம் முன்கூறிய கவியுட் காண்க.

முக்கணி லருட்கண் முறைபெற முயங்கியும்.
(4—வது வரி.)

(ப-ரை.) முக்கணில் - மூன்று திருநயனத்தில், அருள் கண் - அருட்கண்ணாக, முறைபெற முயங்கியும் - (ஆதித்தன் சந்திரன் அக்கினியென்னும்) முறைபெறப் பொருந்தியும்.

(வி-ரை.) இடப்புறஞ் சத்திகூறுதலி னிடக்கண்ணை 'அருட்கண்' என்றார். நயநம் - கண்.

படியிது வென்ன வடிமுடி கண்டும்.
(5—வது வரி.)

(ப-ரை.) படி இது என்ன-இது பகையென்னமல், அடி முடி கண்டும் - அடியோடு முடியைக் கண்டும்.

(வி-ரை.) இது வென்பதனைத் தனித்தனிக் கூட்டுக.

புண்ணிய நீறெனப் பொலிகதிர் காற்றியும்.
(6—வது வரி.)

(ப-ரை.) புண்ணிய நீறு என-(எண்ணாது), நல்வினையுண்டாக்குந் திருநீறுபோல, பொலி கதிர் காற்றியும் - மிகுந்த கிரணங்களைக் கக்கியும்.

(வி-ரை.) காற்றியுமென்பது-"பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி" போல நின்றது. காற்றல் - கக்கல்.

நின்றனை.

(7—வது வரி.)

(ப-ரை.) நின்றனை - நின்ற நீ.

'நிற்றொழுதேற்கு' என்பதுமுதல் 'உளதால்' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(ப-ரை.) நிற்றொழுது ஏற்கும் - பிறையானகாலத்து நின்னைத் தொழுது பெறும், நன்னரின் - நன்மையால், செய்குறும் - உனக்குச்செய்யும், நன்றி ஒன்று உளது - நன்மையொன்றுளது (அஃதே தெனின்).

(வி-ரை.) ஆல் - அசை. நன்னரின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவது கருவிப்பொருட்டு. நன்னர் - பண்புப்பெயர்.

'ஆயிரம்' என்பதுமுதல் 'அடைதலின்' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) பனி - குளிர்ச்சியினையுடைய, ஒரொரு கலை - (கலை பதினாறில்) ஒவ்வொருகலையாக, ஒடுங்கி - (அக்கினிமுதலாகப் பதினைந்து தேவருமுண்ண) ஒடுங்கி, நின்று - (மற்றொரு கலையோடு) நின்று, ஆயிரம் தழல் கரத்து-ஆயிரங்கிரணக்கினியையுடைய, இருள் பகை மண்டிலத்து - ஆதித்த மண்டலத்து, அடைதலின்-அடைதலால்.

(வி-ரை.) கலை - கூறு. தழல்கரம் - நெருப்புக்கிரணம். இருட்பகை - சூரியன். மண்டலத்து என்றும் பாடம்.

'சமயக்கணக்கர்' என்பதுமுதல் 'அறிந்தே' என்பதுவரை,

(20—27 வரிகள்.)

(ப-ரை.) வளர்கவிப் புலவர்முன் - சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மர்முன், சமயக்கணக்கர் - அறுவகைச் சமயவாதியர், மதிவழி-கருத்தின்வழி, கூறாது - கூறாது, உலகியல் கூறி - உலகநடைகூறி, பொருள் இது என்ற - பொதுவாக விதுவே பொருளென்று கூறிய, வள்ளுவன்றனக்கு - திருவள்ளுவன்றனக்கு, முதற்கவிபாடிய-வள்ளு

வர் மாலையின் முதற்கவியைச் சொன்ன, முக்கண் பெருமான்-மூன்று கண்ணினையுடைய பெருமான், கூடலுள் - மதுரையுள், மாதுடன் தோன்றி - அங்கயற்கண்ணம்மையுடன்றோன்றி, நிறைந்தோன் - பூரணகலையாயிருந்தோன், தன்னை-அவன்றன்னை, நின்று உணர்ந்து-நெடுங்காலமளவிட்டறிந்து, தாமும் ஒன்று இன்றி-இருவகைப்பற்று மின்றி, அடங்கினர்போல - அமைந்த பெரியோரைப்போல, நீயும் - நீயும், ஒடுங்கி-(வேற்றுமையின்றி) ஒடுங்கி, இந்நிலை யறிந்தே - (இஃதிறைவன் கூடலாதலி னிங்ஙனங்கூறிய) நிலைமைகளையறிந்து, நின்று அமைதி - நின்றமைவாயாகவென்பதாதலா னீயமைவாயாக.

(வி-ரை.) அசரீரிவாக்குஞ் சரசோதியும் பாடியதன்றி, "என்றும் புலராதியாணர் நாட்செல்லுகினும்" என்று சங்கத்தார்க்குமுன் முதன்மையாகப் பாடினமையின் 'முதற்கவி' என்றார். பொருளாவன - அறமும்பொருளு மின்பமும் வீடும். அவற்றுள் வீடு நூலாற் கூறப்படாமையின் மூன்றுமே கூறினார். இதுவென் றொருமையாற் சுட்டியது ஒழுக்கம் வழக்கு தண்டமென்ற மூன்றனு ளொழுக்கமொன்றுமே கூறுங் கருத்தினானும், பலநீதியி லரசன்காவல் நடாத்துமுறைமை கூறுங் கருத்தினானும், பல்சுவையி னின்பச்சுவை யொன்றுமே கூறுங் கருத்தினானு மென்க. நீயுமென்னு மும்மை யெச்சவும்மை. என்பதென வொருசொல் வருவிக்க. இந்நிலையறிதலாவது - பெண்ணினரெனவே, ஏகாதசகலையை யுண்டது பார்ப்பதியும் சதுர்த்தசகலையையுண்டது சிவனுமென்றறிதல், மடைப்பள்ளியினடுவவதரித்தெனவே - சதுர்த்தகலையையுண்டது அதற்கிறைவனாகிய வருணனென்றறிதல். திருவடிவெட்டினு ளொருவடிவாகியெனவே - பிரதமகலையையுண்டது அக்கினியென்றும், துதியகலையையுண்டது ஆதித்தனென்றும், தசமகலையையுண்டது வாயுவென்றும் அறிதல். முக்கணிலருட்கண்ணெனவே-பகையுமுறவு முண்டென்றறிதல். அடியறிகுவையெனவே - நவமகலையையுண்ட மறலியையுதைத்ததென் றறிதல். முடியறிகுவையெனவே-நெரித்துச் சூடினமையும் பாம்புமுண்டாகு நிலையறிதல். நீறெனப்பொலிகதிர் கற்றியெனவே - தூளாக்குவனென்றறிதல். மாதுடன் றோன்றியெனமீட்டு மனுவதித்துப் பயங்கரந்தோன்ற நிறைந்தோ னடங்கினபோலவெனவே- திரிதியகலையையுண்டதுவிச்சுவதேவரென்றும்,பஞ்சமகலையையுண்டது வஷட்காரமென்றும், சஷ்டகலையையுண்டது பூசிக்கும்வாசவனென்றும், சத்தமகலையையுண்டதுமுனிவரென்றும், அஷ்டமகலையை யுண்டது ஏகபாதவசமென்றும், துவாதசகலையை

யுண்டது பிதிர்க்களென்றும், திரயோதசகலையை யுண்டது குபேரனென்றும், பூரணைக்கலையை யுண்டது பிரமாவென்றும் அறிதல். இவை நுகர்ச்சியும் வருத்தலுங் குறித்துக் கூறினாள். அசரீரிவாக்கு-ஆகாசவாணி. சரசோதி - சரசுவதி.

மதியே! நீ செய்யு நன்மைக்கு நாங்கள் செய்யுநன்மை, இக்கடவு ளிருக்குங்கூடல் இல்லாதலானும், நீறுபோலத் தூளாக்கு தற் கதுபோல வொளியைக் காட்டுதலானு மமைதியென்பதாதலா னீயு மமைவாயாகவென வினைமுடிவு செய்க.

நிலவுவெளிப்பட வதனோடிரக்கங் கூறி வரைவுகடாவியதோழி, தலைவன் சிறைப்புறத்தானாகப் புலந்து கூறினமையின் இது வெகுளி விலக்கென்னு மலங்காரமாயிற்று. (கரு)

14

திருக்கோவையார் ௲௨௦-ம் செய்யுள்.

வரவெடுத்துரைத்தல்.

வரவெடுத்துரைத்த லென்பது—தலைமகன் முகிலொடு வாரா நிற்பக்கண்டதோழி, நம்மன்னர், தம்மைவணங்குவாராக வுடம்பட்டவர் கொடுத்த திறையையும், வணங்காது மாறுபட்டவ ரடையாளங்களையும் தமது தேருக்குமுன்னாகக்கொண்டு, வீரமுரசார்ப்ப, ஆலியா நின்ற மாவினோடும் வந்தணுகினார். இனி நமக்கொருகுறை யில்லையெனத் தலைமகளுக்கு அவன் வரவெடுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பணிவார் குழையெழி லோன்றில்லைச் சிற்றம் பலமனைய
மணிவார் குழன்மட மாதே பொலிகநம் மன்னர்முன்னாப்
பணிவார் திறையும் பகைத்தவர் சின்னமுங் கொண்டுவண்டே
ரணிவார் முரசினொ டாலிக்கு மாவோ டணுகினரே.

வினை முற்றிய வேந்தன் வரவு
புனையிழைத் தோழி பொற்றொடிக் குரைத்தது.

(ப-ரை.) பணி - பணியாகிய, வார் - நீண்ட, குழை - குழையானுண்டாகிய, எழிலோன் - அழகையுடையவனது, தில்லைச்சிற்றம்பலம் - தில்லைச்சிற்றம்பலத்தை, அனைய - ஒக்கும், மணி - (நீல) மணிபோலும், வார் - நீண்ட, குழல் - குழலையுடைய, மடமாதே - மடப்பத்தையுடைய மாதே, பொலிக - பொலிக, நம் மன்னர்-நம்முடைய மன்னர், பணிவார் - வந்து தம்மை வணங்குவாராக (உடம்

பட்டவர் கொடுத்த), திறையும் - திறையையும், பகைத்தவர் - (பணியாது) மாறுபட்டவரது, சின்னமும் - அடையாளங்களையும், வண்டேர் - (தமது) வண்டேர்க்கு, முன்னாக்கொண்டு - முன்னாகக்கொண்டு, அணி - அணியப்பட்ட, வார் - வாரையுடைய, முரசினொடு - வீரமுரசினோடும், ஆலிக்கு மாவோடு - ஆலியாநிற்கு மாவினோடும், அணுகினர் - வந்தணுகினார், எ - று.

(வி-ரை.) வண்டேரோ டென்பதனைத் தொகுக்கும் வழித்தொகுத்துக் கூறினாரெனினு மமையும். இப்பொருட்கு, முன்னாக வந்து பணிவாரென் றுரைக்க. மெய்ப்பாடு - உவகை, பயன் - தலைமகளை மகிழ்வித்தல்.

நேரிசையாசிரியப்பா.

சலியாப் பராரைத் தமனியப் பொருப்பெனு
மொருகால் சுமந்த விண்படர் பந்தரின்
மூடிய நாற்றிசை முகிற்றுகில் விரித்துப்
பொற்சிலை வளைத்து வாயில் போக்கிச்
சுருப்பணி நிரைத்த கடுக்கையம் பொலந்தார்
நிரைநிரை நாற்றி நெடுங்காய் மயிரமைத்
தூதையி லலகிட் டுறைப்புய றெளித்துப்
போற்றுறு திருவ நாற்றிசை பொலிய
மரகதத் தண்டிற் றோன்றிவிளக் கெடுப்பக்
குடத்திய ரிழுக்கிய வளைசித றியபோற்
கிடந்தன வாம்பி பரந்தன மறைப்பப்
பிடவலர் பரப்பிப் பூவைப் பூவிட்
டுறவிணை நட்புக் கிளவியப் பெய்த
முகின்முழ வதிர வேழிசை முகக்கு
முல்லை யாழொடு சுருதிவண் டலம்பக்
களவலர் சூடிப் புறவுபாட் டெடுப்பப்
பசுந்தழை பரப்பிக் கணமயி லால
முல்லையந் திருமகள் கோபவாய் மலர்ந்து
நன்மண மெடுத்து நாளமைத் தழைக்க
வரிவளை முன்கை வரவர விறப்பப்
போனநந் தனிநமர் புள்ளியன் மான்றேர்

கடுவிசை துரந்த கான்யாற் றொலியி
னெள்ளி னருட்க வள்ளின மடக்கிமுன்
றோன்றின ராகலி னீயே மடமகண்
முன்னொரு காலத் தடுகொலைக் கணைந்த
முகிலுருப் பெறுமோர் கொடுமரக் கிராத
னருமறைத் தாபத னமைத்திடு செம்மலர்
செருப்புடைத் தாளால் விருப்புடன் றள்ளி
வாயெனுங் குடத்தில் வரம்பற வெடுத்த
அமுதங் கடத்தள்ளு மணிநீ ராட்டிப்
பின்னல்விட் டமைத்த தன்றலை மலரிணை இக்
தருமலர் விண்புக மணிமுடி நிறைத்து
வெள்வாய் குதட்டிய விழுதுடைக் கருந்தடி
வைத்தமை யாமுன் மகிழ்ந்துண வுண்டவன்
மிச்சிலுக் கின்னு மிச்சைசெய் பெருமான்
கூடனின் றேத்தினர் குலக்கிளை போலத்
துணர்ப்பெறு கோதையு மாரமும் புனைக
புதையிரு டிரக்கும் வெயின்மணித் திருவுந்
தண்ணம் பிறையுந் தலைபெற நிறுத்துக
விறையிருந் துதவா நிரைவளைக் குலனும்
பெருஞ்சூ டகமு மொருங்குபெற் றணிக
நட்டுட் பகையின ருட்குடி போல
வரவுசெய் தொன்று நகைதரு முளத்தையுங்
கொலைபினர் நெஞ்சங் கூண்டவல் லிருளெனு
மைம்பாற் குழலையு மணிநிலை கூட்டுக
விருந்துகொண் டுண்ணும் பெருந்தவர் போல
நீங்காத் திருவுடை நலனும்
பாங்கிற் கூட்டுக வின்பத்திற் பொலிந்தே.

சலியாப்பாரை - இன்பத்திற் பொலிந்தே. பகுதி-வேந்தற்குற் றுழிப்பிரிதல், துறை - வரவெடுத்துரைத்தல்.

'சலியா' என்பதுமுதல் 'பந்தரின்' என்பதுவரை.

, (1—2 வரிகள்.)

(ப-ரை.) சலியா-அசையாத, பாரை-பரியவரையினையுடைய, மணியம் பொருப்பெனும் - மகமேருவாகிய, ஒருகால் - ஒரு காலா

..து, சுமந்த - சுமந்த, விண்-விண்ணுகிய, படர் - பரந்த, பந்தரின் - பந்தரிடத்து.

(வி-ரை.) பொருப்பென்னுங்கால் - குணமென்னும் குன்று போல நின்றது. சலித்தல் - அசைதல். தமனியம் தபநியம் என்னும் வடசொற் சிதைவு. தமனியம் பொருப்பு - பொன்மலை. கால்-தூண் பந்தர் என்றதற்கேற்பக் 'கால்' என்றார்.

மூடிய நாற்றிசை முகிற்றுகில் விரித்து.

(3—வது வரி.)

(ப-ரை.) மூடிய நாற்றிசை-நான்கு திக்கும் பொருந்த, முகில் துகில் விரித்து - முகிலாகிய படாத்தை விரித்து.

(வி-ரை.) முகில் - மேகம். துகில், படாம் என்பன துணியென்னும் பொருள. நாற்றிசையாவன-கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்பன.

பொற்சிலை வளைத்து வாயில் போக்கி.

(4—வது வரி.)

(ப-ரை.) பொன் சிலை-அழகிய விந்திரதனுசை, வளைத்து-வளைத்து, வாயில் போக்கி - வாயிலாக்கி.

(வி-ரை.) பொன் - அழகு. சிலை-வில், அது ஈண்டைக்கேற்ப இந்திரதநுசு எனப்பட்டது.

'சுருப்பணி' என்பதுமுதல் 'நாற்றி' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) சுருப்பு அணி - வண்டாய நீல மணியணியை, நிரைத்த - நிரைத்த, கடுக்கையம் பொலந்தார்-அழகிய கொன்றைப்பூவாகிய பொன்மாலையை, நிரைநிரை நாற்றி - அணியணியாகத் தூக்கி.

(வி-ரை.) சுரும்பு - வண்டு, அது சுருப்பென வலித்தல் பெற்றது. அணி - வரிசை. கடுக்கை - ஆகுபெயர்.

நெடுங்காய் மயிரமைத்து.

(6—வது வரி.)

(ப-ரை.) நெடுங்காய் - (கொன்றையினது) நெடிய காயாகிய, மயிர் அமைத்து - கவரியைத் தூக்கி.

(வி-ரை.) மயிர் - மானமாவின் மயிர். கவரி - இதனைச் சாமரம் என்பர் வடநூலார்.

ஊதையி லலகிட் டுறைப்புய றெளித்து.

(7—வது வரி.)

(ப-ரை.) ஊதையின் - காற்றாகிய சிலதியால், அலகிட்டு - விளக்கி, புயல் - புயலாகிய சிலதியால், உறை தெளித்து - நீர்தெளித்து.

(வி-ரை.) ஊதை - காற்று. சிலதி - சேடி. அலகிடல் - விளக்கல். புயல் - மேகம். உறை - நீர். இது மாட்டேறேலாதுவந்த வுருவகம்.

'போற்று' என்பதுமுதல் 'எடுப்ப' என்பதுவரை.

(8—9 வது வரிகள்.)

(ப-ரை.) நாற்றிசை - நாற்றிசையும், போற்றுறு - போற்றுதலுற்ற, திருவம் பொலிய - செல்வம் பொலிய, மரகதம்-மரகதநிறம் போலு நிறத்தினையுடைத்தாய, தண்டின் - தண்டினையுடைய, தோன்றி - காந்தளாகிய பெண், விளக்கு எடுப்ப - பூவாகிய விளக்கை யேந்த.

(வி-ரை.) இது மாட்டேறேலா வருவகம். திரு-செல்வம், இது அம்முச்சாரியை யேற்றுத் திருவமென்றாயிற்று. தோன்றி - செங்காந்தள், இது விளக்கெடுப்ப என்றதனாற் போந்த பொருள்.

'உறவு' என்பதுமுதல் 'எடுப்ப' என்பதுவரை.

(13—16 வது வரிகள்.)

(ப-ரை.) உறவு - பகைநரம்பின்றி யுறவாநரம்பும், இணை - இணையா நரம்பும், நட்பு - நட்பாநரம்பும், கிளை - கிளையாநரம்பும், வியப்பு எய்த - அதிசயம்பெற, எழிசை முகக்கும் - இசையேழும் பொருந்தும், முல்லை யாழொடு - முல்லையாழிசைக்கு, சுருதி-சுருதியாக, வண்டு அலம்பு - வண்டுகண் முழங்கிப் (பாணர் சாதியாகி), புறவு பாட்டு எடுப்ப - முல்லைப்பாட்டெடுப்ப, முகில் - முகிலாகிய, முழவதிர - முழவமதிர.

(வி-ரை.) முல்லைப்பாட்டு-முல்லைநிலப்பாட்டு. முழவு-மத்தளம். "ஏழா நரம்பினை நாலு நட்பாகு, மைந்தகிளை யாறு மூன்றாம் பகையே" என்றாரிசைமரபுடையார். ஏழிசையாவன-" சங்கு குயின் மயில் யானை புரவி, செங்கா லன்னம் காடையிவற் றோசை" என்பதனானறிக.

பசுந்தழை பரப்பிக் கணமயி லால.

(17—வது வரி.)

(ப-ரை.) பசுந்தழை - பசிய பீலியினை, பரப்பி - விரித்து, கணமயில் ஆல - கூட்டங்கொண்ட மயிலாகிய கணிகையாட.

(வி-ரை.) பசுந்தழையென்றது பைந்தோகையை; பீலியென்றதுமது. ஆலல் - ஆடுதல்.

களவலர் சூடி.

(16—வது வரி.)

(ப-ரை) களவலர் சூடி - தான் களவமலரைச் சூடி.

'குடத்தியர்' என்பதுமுதல் 'பூவிட்டு' என்பதுவரை.

(10—12 வரிகள்.)

(ப-ரை.) குடத்தியர் - இடைச்சியர், இழுக்கிய - இழுக்க, சிதறிய அளைபோல் - சிதறிய தயிர்போல, கிடந்தன ஆம்பி - கிடந்தனவாகிய காளானாகிய துகில், பரந்தன மறைப்ப - தன்னுடலை மறைப்ப, பிடவலர் பரப்பி - (பின்) பிடவர்பூவைப் பரப்பி, பூவை பூவிட்டு-காயாம்பூவைச் சிதறி.

(வி-ரை.) ஆம்பி - காளான்.

'முல்லை' என்பதுமுதல் 'அழைக்க' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) முல்லையம் திருமகள்-முல்லைநிலமாகிய அழகிய திருமகள், கோபம் - இந்திரகோபம், வாய்மலர்ந்து - வாயாகமலர்ந்து, நல் மணம் எடுத்து - நல்ல கலியாணமுண்டாக, நாள் அமைத்து அழைக்க - நாளிட்டழைக்க.

(வி-ரை.) இந்திரகோபம் - மூதா, ஈயல் என்னும் பெயர்களை யுடையதோர் பூச்சி; இது மழைகாலத்திற் பசும்புல்லடர்ந்த நிலத்தி லுண்டாவது.

'வரிவளை' என்பதுமுதல் 'ஆகலின்' என்பதுவரை.

(20—24 வரிகள்)

(ப-ரை.) முன் கை - முன்கையில், வரிவளை-வரிவளையை, வர வர - இடுந்தோறு இடுந்தோறும், இறப்ப - கழல, போன - பிரிந்த, நட் தனி நமர் - ஒப்பற்ற நம்முடைய தலைவர், ஒலியின் - ஒலியினை யுடைய, கான்யாற்று - கான்யாற்றின், கடுவிசை - கடியவிசையை, துரக்க - முடுக்கிய, புள்ளியல்-புட்போல நிலந்தீண்டாத செலவினை யுடைய, மான்தேர் - குதிரை பூட்டப்பட்ட தேர்க்கு முன்னாக, எள் ளினர் - இகழ்ந்தமருவார், உட்க - அஞ்ச, வள்ளினம் - பணிவார் கொடுத்த வளவியவினங்களை, மடக்கி - கொண்டு, முன் தோன்றின ராகலின் - நம்மெதிர் தோன்றினராதலால் (நமக்கொரு குறை யில்லை).

(வி-ரை) மா - குதிரை; இது னகரச்சாரியை பெற்று மான் என்றாயிற்று. மருவார் - பகைவர். முடுக்கிய தேர் என்க. கடிய வேக த்தைத் துரந்த வொலியினையுடைய கான்யாற்றினைப்போல முடுக்கி யிகழ்ந்தவரெனினுமாம். "கடுவரை நீரிற் கடுத்துவரக் கண்டும்" என் றார் வெண்பாமாலையினும். புள்ளியன் மான்றேர் - புட்போல நிலந் தீண்டாது செல்லாநின்ற குதிரையெனினுமாம். "புள்ளியற் கலிமா வுடைமை யான" என்றார் தொல்காப்பியனாரும்.

நீயே மடமகள்.

(24—வது வரி.)

(ப-ரை.) நீயே மடமகள் - மடப்பத்தினையுடைய மகளே நீ.

(வி-ரை.) ஏகார மீற்றசை.

'முன்' என்பதுமுதல் 'கிராதன்' என்பதுவரை.

(25—26 வரிகள்.)

(ப-ரை.) முன் ஒருகாலத்து - பண்டொரு காலத்திலே, அடு கொலைக்கு-அடாநின்ற கொலைத்தொழிலுக்கு, அணைந்த-பொரு

ந்திய, முகில் உரு பெறும் - கரியமேகநிறம்போலு நிறம்பெற்ற, ஓர் கொடுமரம்-ஒப்பற்ற வில்லினையுடைய, கிராதன் - (கண்ணப்பனென்னும்) வேடன்.

(வி-ரை.) கொலை - கொல்லுந்தொழில். முகில் - மேகம், அது ஈண்டைக்கேற்பக் கரியமேக மெனப்பட்டது. கோடுமரம் கொடுமரம் எனக் குறுகிற்று; வளைந்தமரம் என்பது பொருள். மரம்-மூங்கில்.

'அருமறை' என்பதுமுதல் 'நீராட்டி' என்பதுவரை.

(27—30 வரிகள்.)

ப-ரை. அருமறை - அரிய மறையினையுடைய, தாபதன் - சிவகோசரியார், அமைத்திடு செம்மலர் - சாத்திய சிவந்தமலரை, விருப்புடன் - விருப்பமுடன், செருப்புடைத்தாளால்-செருப்பிட்ட காலால், தள்ளி - தள்ளி, வாய் எனும் குடத்தில் - வாயாகிய குடத்தில், வரம்பு அற எடுத்த - அளவறவெடுத்த, அமுதம் - அமுதத்தினால், கடத்து அள்ளு மணிநீராட்டி - மணிக்குடத்தினிறைந்த நீராலாட்டினாற்போலத் திருமஞ்சனஞ்செய்து.

(வி-ரை.) கடற்றள்ளுமென்று பாடமாயின் கடலிடத்துச் செலுத்து நீர்போலவென்க.

'பின்னல்' என்பதுமுதல் 'நிறைத்து' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப-ரை.) பின்னல்விட்டு-கட்டின பின்னலை யவிழ்த்து, அமைத்த தன் தலைமலர் - தனது தலையினிடத்தமைத்த பூவினை, தரு மலர் - கற்பகத்தருவின் மலர், இணைஇ-இணைத்து, விண்புக - விண்ணிடத்துச் செல்லும்படி, மணிமுடி நிறைத்து - மணிமுடியிடத்திற் சாத்தி.

(வி-ரை.) விண்புகு - தற்குறிப்பேற்றம். மணிமுடி - அழகிய முடி.

'வேள்' என்பதுமுதல் 'போல' என்பதுவரை.

(33—36 வரிகள்.)

(ப-ரை.) வெள் வாய் குதட்டிய - வெள்ளியவாயிற் றின்றுபார்த்த, விழுதுடை கருந்தடி - நிணமுடைக் கருந்தசையை, வைத்து

அமையாமுன் - திருமுன்வைத்துப் பூசனைசெய்யுமுன், மகிழ்ந்து உணவு உண்டு-மகிழ்ந்து அதனையமுதாகவுண்டு, அவன் மிச்சிலுக்கு-அவனெச்சிலுக்கு, இன்னும் - முன்போல விப்பொழுதும், இச்சை செய் பெருமான் - விருப்பஞ்செய்யும் பெருமானுடைய, கூடல் - மதுரையை, நின்று - நெறிநின்று, ஏத்தினர் - புகழ்ந்தவாது, குலக்கிளைபோல - குடிமையினையுடைய வுறவுபோல.

(வி-ரை.) உம்மை - சிறப்பும்மை, எச்சவும்மையுமாம்.

துணர்ப்பெறு கோதையு மாரமும் புனைக.

(37—வது வரி.)

(ப-ரை.) துணர் பெறு-பூங்கொத்தாற் கட்டப்பட்ட, கோதையும் - மாலையும், ஆரமும் - முத்தமாலையும், புனைக - புனைவாயாக.

'புதை' என்பதுமுதல் 'நிறுத்துக; என்பதுவரை.

(38—39 வரிகள்.)

(ப-ரை.) புதை இருள் - செறிந்தவிருளை, தூக்கும் - கெடுக்கும், வெயின் மணி திருவும் - ஒளியினையுடைய மாணிக்கத் திருவென்னும் பணியும், தண்ணம் பிறையும் - குளிர்ச்சியினையுடைய பிறையென்னும் பணியும், தலைபெற நிறுத்துக - தலையினிடத்துப் பெறும்படி நிறுத்துவாயாக.

(வி-ரை.) பணி - ஆபரணம். தண்ணம்பிறை- "குருதிக் கோட்டுக் குஞ்சர நகரம்" போனின்றது.

'இறை' என்பதுமுதல் 'அணிக' என்பதுவரை.

(40—41 வரிகள்.)

(ப-ரை.) இறையிருந்துதவா - கையிலணியவணியக் கழலுமளவினையுடைய, நிரை வளை குலனும் - நிரையான வளைக்கூட்டமும், பெருஞ்சூடகமும் - தோள்வளையும், ஒருங்குபெற்று அணிக - கூடப் பெற்றணிவாயாக.

(வி-ரை.) நிரை - வரிசை. பெருஞ்சூடகமெனவே தோள்வளையாயிற்று.

'நட்டுப்பகையினர்' என்பதுமுதல் 'கூட்டுகே' என்பதுவரை.

(42—45 வரிகள்.)

(ப-ரை.) நட்டுட்பகையினர் - நட்புக்கொண்டு உட்பகையினை யுடையார், உட்குடிபோல - குடியுறவு பெருமகிழ்ச்சி செய்யப் பெறாததுபோல, உறவுசெய்தோன்று - உறவு பெருமகிழ்ச்சி செய்யப்பெறாது, நகைதரும் உளத்தையும்-வருந்து மனத்தையும், கொலையினர் நெஞ்சம் - கொலைசெய்வார் மனத்தில், கூண்ட வல்லிருள் எனும் - செறிந்த அறியாமையாகிய விருளென்னும், ஐம்பால் குழலையும் - ஐந்துபகுதியினையுடைய குழலையும், அணிநிலை கூட்டுகே-அணிநிலை கூட்டுவாயாக.

(வி-ரை.) "ஐம்பான் முடியுங் கொண்டையுங் குழலும், வம்பார் பனிச்சையும் வார்மயிர்ச் சுருளும்" என்பதனால் ஐம்பாலறிக. அணிநிலை கூட்டுக வென்பதனை மனத்துக்காயின் விடாது பொருந்தி நிலையினிறுத்துகவெனவும், குழற்காயின் அலங்கரித்து முடிக்க வெனவுங்கொள்க.

'விருந்து' என்பதுமுதல் 'பொலிந்தே' என்பதுவரை.

(46—48 வரிகள்.)

(ப-ரை.) விருந்துகொண்டு - இருவகை விருந்தினரையும் புறத்திற்கொண்டு, உண்ணும் - உண்ணும், பெருந்தவர்போல - பெரிய தவத்தினையுடையார்போல, நீங்கா திருவுடை நலனும் - நீங்காத செல்வத்தினையுடைய நலத்தையும், இன்பத்தில் பொலிந்தே - இன்பத்தினாற் பொலிவு பெறும்படி, பாங்கிற் கூட்டுகே - தம்மிடத்திற் பெற்றார்போலப் பெறுவாயாக.

(வி-ரை.) தலைமகன் முகிலொடு வரக்கண்ட தோழி, தலைமகண் மகிழ அவன் வரவு கூறினாள்; இயைபுருவகமு மாட்டேறேலா வுருவகமுங் குறிப்புவமையும் பண்புவமையுந் தொழிலுவமையுஞ் சிலேடையுந் தற்குறிப்பேற்றமு நிரனிறையும் வந்த சங்கீர்ணம்.

விண்ணாகிய பந்தரின் விரித்துப்போக்கி நாற்றி அமைத்து அலகிட்டுத் தெளித்து விளக்கெடுப்பப் பரப்பி விட்டுற வியப்பெய்தப் பாட்டெடுப்ப அதிர மயிலாடச் சூடி மறைப்பப் பரப்பிச் சிதறி முல்லைமகளழைக்கப் பிரிந்தவர் தேர்க்குமுன்னாக மருவாரஞ்சப் பணிவார் கொடுத்தவற்றைக்கொண்டு நம்மெதிர்தோன்றின ராதலால்

கைச்சொருகுறையில்லை, நீ கூடனின்றேத்தினர் கிளைபோலப்புனைக நிறுத்துக அணிகூட்டுக பாங்கிற்கூட்டுகவென வினைமுடிவு செய்க.

விரித்து நாற்றி யென்றாற்போல்வன, "வேய்சந்த வெண்முத்தஞ் சிந்துபைங் கார்வரை மீன்பாப்பி" என்றாற் போலவும், "தூவி மஞ்ஞைநன் மணம்புகு துந்தும்பிக் கொம்பரோ" என்றாற் போலவுங் கொள்க. (கசு)

திருக்கோவையார் உசகூ-ம் செய்யுள்.

15. அழுங்குதாய்க்குரைத்தல்.

அழுங்குதாய்க்குரைத்தலென்பது—உலகியல்புகூறவும் மீளாது நின்று, தாமெடுத்து வளர்த்தமை சொல்லிக் கவலாநின்ற செவிலியை முன்னிலைப் புறமொழியாக, இவர்தாம் இல்லின்கணெடுத்து வளர்த்தவர்போலும், அவர் போய்த் தம்மை யிருவரையுங் கூட்டுவித்த தெய்வப்பதியாகிய தில்லையிடத்துப் பழனங்களைச் சென்றணைவரெனத் தம்முட் கூறுவார்போன்று கூறி, மீட்டுக்கொண்டுபோகாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

ஆண்டி லெடுத்தவ ராமிவர் தாம வரல்கு வர்போய்த்
தீண்டி லெடுத்தவர் தீவினை தீர்ப்பவன் றில்லையின்வாய்த்
தூண்டி லெடுத்தவ ராறெங்கொ டெற்றப் பழம்விழுந்து
பாண்டி லெடுத்தபஃ றாமரை கீழும் பழனங்களே.

செழும்பணை யணைந்தமை
அழுங்குதாய்க் குரைத்தது.

(ப-ரை.) இவர் தாம் - இவர்தாம், ஆண்டு-அவ்விடத்து, இல்-இல்லின்கண், எடுத்தவராம் - எடுத்து வளர்த்தவர்போலும்; தீண்டில் - (யாவராயினுந்) தம்மையணுகில், எடுத்து - அவர் நரகத்தழுந்தாமலெடுத்து, அவர் தீவினை தீர்ப்பவன் - அவரது தீவினையைத் தீர்ப்பவனது, தில்லையின்வாய்-தில்லையின்கண், தூண்டிலெடுத்த - தூண்டிலை விழுங்கிய, வரால்-வராலானது, தெங்கொடெற்ற-தெங்கொடுமோத, பழம் - அதன்பழம், விழுந்து - விழுந்து, பாண்டில் - கிண்ணம்போலும் பூக்களை, எடுத்த - உயர்த்திய, பஃறாமரை - பலவாகிய தாமரையை, கீழும் - கிழிக்கும், பழனங்கள் - பழனங்களை, அவர் போய் - அவர் சென்று, அல்குவர் - சேர்வர், எ - று.

(வி-ரை.) இனியோரிடரில்லையென்ப தெஞ்சிநின்றது. பாண்டில்-ஆகுபெயர்; தாமரையுமது. கிளும் என்றும் பாடம். தில்லையின்

வாய்ப் பழனங்களென வியையும். ஆண்டிலெடுத்தவரா மிவர்தா மென்று தம்முட்கூறிப் பின் செவிலிக்குக் கூறினாராக வுரைக்க. இவ்வாறு பகராது செவிலிகேட்ப முழுவதூஉந் தம்முட் கூறினாராக வுரைப்பினுமமையும். தூண்டிலா னெடுக்கப்பட்ட வராலெனினு மமையும்; இவை மூன்றற்கும் மெய்ப்பாடு பெருமிதம், பயன்-செவி லிக் குலகியல்புகூறி அவளை மீள்வித்தல். நில்லாவளைதொட்டு இது காறும் வரப் பாலைத்திணை கூறியவாறறிக.

நேரிசையாசிரியப்பா.

கல்லுயர் வரைத்தோட் செம்மனக் குரிசிலுங்
கல்லாத் தவறுளம் புல்லிய குழலு
மிம்மனை நிறைபுகுந் தெழின்மணம் புணரக்
கோளொடு குறித்து வரும்வழி கூறிய
மறைவாய்ப் பார்ப்பான் மகனும் பழுதிலன்
சோதிடக் கலைமக டோற்றம் போலச்
சொரிவெள் ளலகரும் பழுதில் வாய்மையர்
உடன்றெடு குறியின் வரும்வழி குறித்த
மூதறி பெண்டிருந் தீதில ரென்ப
பெருந்திரட் கண்ணுட் பேச்சுநின் றோர்ந்து
வாய்ச்சொற் கேட்டநன் மதியரும் பெரியர்
ஆய்மலர் தெரிந்திட்டு வான்பலி தூவித்
தெய்வம் பராய மெய்யருந் திருவினர்
கருங்கொடி யடம்புங் கண்டலுஞ் சூழ்ந்த
பனைக்குடிப் பரதவர் கலத்தொடு மறியச்
சுரிமுகச் செவ்வாய்ச் சூழ்வளை தெறிப்பக்
கழுக்கடை யன்ன கூர்வாய்ப் பெருங்கட்
பனைகிடந் தன்ன வுடன்முத றுணிய
ஆருயிர் கவருங் காருடற் செங்கட்
கூற்றமுருத் தெழுந்த கொள்கை போல
நெட்டுடற் பேழ்வாய்ப் பெருஞ்சுறவு தடியும்
வரைநிரை கிடந்த திரையுவர் புகுந்து
நெடுஞ்சடைக் கிடந்த குறும்பிறைக் கொழுந்துங்
கருமுகில் வெளுத்த திருமிடற் றிருளும்

நுதன்மதி கிழித்த தழலவிர் நோக்கமு
மறைத்தொரு சிறுகுடிப் பரதவ னாகிப்
பொன்றலைப் புணர்வலை கொடுங்கர மாக்கி
நெடுங்கடல் கலக்கு மொருமீன் படுத்த
நிறையரு ளுயக னுறைதரு கூடல்
வணங்கா ரினமென மாழ்கிக்
குணங்குடி போய்வித் தாயுளந் தவறே.

கல்லுயர்-உளந்தவறே. பநுதி - உடன்போக்கு, நூறை-அழுங்கு தாய்க்குரைத்தல்.

'கருங்கோடி' என்பதுமுதல் 'துணிய' என்பதுவரை.

(14—18 வரிகள்.)

(ப-ரை.) கருங்கொடி - கரிய கொடியினையுடைய, அடம்பும் - அடம்பும், கண்டலும் - கண்டலும், சூழ்ந்த - சூழ்தற்கிடமாகிய, பனைக்குடி - பனைக்குடியினையுடைய, பரதவர்-பரதவர், கலத்தொடு மறிய - கலத்தோடு மடிய, சுரிமுகம் - சுரிந்த முகத்தினையும், செவ்வாய் - சிவந்த வாயினையும், சூல்வளை - கருவினையுமுடைய சங்கங்கள், தெறிப்ப-தெறித்துவிழ, கழூக்கடை அன்ன-கழுவினது நுனி போன்ற, கூர் வாய் - கூரிய வாயினையும், பெருங்கண் - பெரிய கண்ணினையுமுடைய, பனைகிடந்தன்ன-பனைகிடந்தாற்போன்ற, உடன் முதறுணிய - உடலினையுடைய மீன்முதலானவை துணிபட,

(வி-ரை.) உடல்-ஆகுபெயர். குரவாயென்று பாடமாயிற் கழூக்கடைபோன்ற குரம்பாளை யிடத்திற் கள்ளையுடைய பெரும்பனையென்று பொருள் கூறுக. குரம்பாளையைக் குரமென்றாரென்க. அது விகாரம்.

'ஆருயிர்' என்பதுமுதல் 'தடியும்' என்பதுவரை.

(19—21 வரிகள்.)

(ப-ரை.) காருடல் - கரிய வுடலினையும், செங்கண் - சிவந்த கண்ணையுமுடைய, கூற்றம் - யமனனவன், உருத்தெழுந்த-கோபித்தெழுதற்குக் காரணமாகிய, ஆருயிர் - உடலினின்றும் பெறுதற்சரிய வுயிர்களை, கவரும் கொள்கைபோல - கைக்கொள்ளுங் கொள்

கைபோல, நெட்டுடல் - நெடிய வுடலினையும், பேழ்வாய் - பெரிய வாயினையுமுடைய, பெருஞ்சுறவு - பெரியசுறவினை, தடியும் - தடிந்து.

(வி-ரை.) முற்றெச்சமாய் நின்றது, நெடுங்கடல் கலக்குமொரு மீனையென்க.

'வரைநிரை' என்பதுமுதல் 'மீன்' என்பதுவரை. (22—28 வரிகள்.)

(ப-ரை.) நெடுங்கடல் - நெடியகடலினை, கலக்கும்-கலக்கும், ஒருமீன் - ஒருமீனை, வரைநிரை கிடந்த-வரைகணிரையாகக் கிடந்தாற்போன்ற, திரையுவர் புகுந்து - திரையினையுடைய கடலிற் புகுந்து, நெடுஞ்சடைக்கிடந்த - நெடிய சடையிற் கிடந்த, குறும்பிறைக் கொழுந்தும் - குறிய பிறைக்கொழுந்தும், கருமுகில் - கரியமுகில், வெளுத்த - வெளிறுபடுதற்குக் காரணமாகிய, திருமிடற்றிருளும் - திருமிடற்றின்க ணுண்டாகியவிருளும், நுதன்மதி கிழித்த - மதிபோலு நுதலிடத்துக் கிழிக்கப்பட்ட, தழல்அவிர் நோக்கமும் - அக்கினியாக விளங்குங் கண்ணினையும், மறைத்து - மறைத்து, ஒரு சிறுகுடி பரதவன் ஆகி-ஒரு சிறுகுடியின்க ணுண்டாகிய பரதவனாகி, பொன் - பொன்னாற்செய்த மணிகளை, தலைப்புணர்-தலையின்கணுடைய, வலை - வலையை, கொடுங்கரமாக்கி-கொடுங்கையில் வைத்து வீசி.

(வி-ரை.) பொன் - ஆகுபெயர்.

'படுத்த' என்பதுமுதல் 'தவறே' என்பதுவரை. (28—31 வரிகள்.)

(ப-ரை.) படுத்த-அகப்படுத்தற்குக் காரணமாகிய, நிறை-அறிவும், அருள்-அருளுமுடைய,நாயகன்உறைதரு-நாயகன்வாழாநின்ற, கூடல்-கூடனகரை, வணங்கார் இனம் என-வணங்காதார் கூட்டம் போல, மாழ்கி-மயங்கி, குணங்குடி போய்வித்த-தன் குணம்போல விருவரையுங் குடிபோகப்பண்ணிய, ஆய் - ஆய்போலும், உளம் - இவளுள்ளமும், தவறே - தவறுபட்டதாயிற்று.

(வி-ரை.) போய்வித்த வாய் விகாரம்; "புகழ்புரிந்தில்லிலோர்க் கில்லை" என்றாற்போல. போலுமென வொருசொல் வருவிக்க. போக்கியது காரணமாக வாக்கம் வருவிக்கப்பட்டது.

'கல்லுயர்' என்பதுமுதல் 'பழுதிலன்' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை.) கல்லுயர் - கல்லினால் வளரும், வரை தோள் - மலை போன்ற தோளினையும், செம்மனம் - நடுவுநிலைமையையுடைய மனத்தினையுமுடைய, குரிசிலும் - தலைவனும், கல்லா - கல்லாமையினால் வந்த, தவறு உளம் - தவறினையுடையாருள்ளம், புல்லிய குழலும் - பொருந்தினாற்போன்ற குழலினையுடையாளும், இம்மனை - இவள், சொன்ன மனையின்கண், நிறை புகுந்து - தோற்றப்பொலிவு நிறையப் புகுந்து, எழில் மணம் புணர - அழகிய கல்யாணம் செய்ய, வரும்வழி - வரும்வழி, கோளொடு குறித்து - வியாழ நோக்கினையுஞ் சரக்கோளினையுங் கருதி, கூறிய - சொன்ன, மறை வாய் - வேதத்தையோதிய, பார்ப்பான் மகனும் - பார்ப்பானாகிய மகனும், பழுதிலன் - பயனுள்ளவனாக.

(வி-ரை.) கல்லுவலம்-கற்சுண்ண மென்றாற்போல மலை தோட்கடை. தவறுங் குழலு மாகுபெயர். புல்லிய குழல், "குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச்செவ் வாயிக் கொடியிடை" என்றாற்போன்றது. நிறை புகுந்தென்பது "அறுகா னிறைமலர்"போல விகாரம். ஒடு - உருபுமயக்கம். குற்றமில னெனினு மாம், முற்றெச்சமாய் நின்றது; மேல் வருவனவு மன்ன.

'சோதிடக்கலைமகள்' என்பதுமுதல் 'வாய்மையர்' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) சோதிடக் கலைமகள் - மணம் புணரக் கோளைக் குறித்துவரும் வழிகூறிய கணிதச்சாத்திரத்தினைக் கொடுக்குமகள், தோற்றம்போல - தோற்றரவுபோல, சொரி - சொரிந்த, வெள்ளலகரும் - வெள்ளலகினையுடையவரும், பழுதில் வாய்மையர் - பயனுள்ள வாய்மையினையுடையார்.

(வி-ரை.) மணம் புணரக் கோளொடு குறித்துவரும் வழியென்பதனை யிதற்குங் கூட்டுக. தோற்றரவு - காட்சி. அலகர் - பலகறையை யுடையவர், அலகு - பலகறை.

'உடரேடு' என்பதுமுதல் 'என்ப' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) உடரெடு குறியின் - உடலினைத் தொடும் தூதலக் கணத்தினால், வரும் வழி குறித்த - மணம்புணர வரும்வழி கருதிய, மூதறி பெண்டிரும் - முதுமையறிந்த பெண்டிரும், தீதிலர் என்ப - நன்மையுடையராக.

(வி-ரை.) என்பவென்பதை "கன்னிகொண் டிழிந்த தென்பவே" என்றாற்போல, இது "கிளந்த வல்ல வன்ன பிறவுங், கிளந்த வற் றியலா னுணர்ந்தனர் கொளலே" என்னும் புறனடையா னமைக்க. குறி - இலக்கணம் (தூதலக்ஷணம்). தீதின்மை - நன்மை.

'பெருந்திரட்கண்ணுள்' என்பதுமுதல் 'பெரியர்' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) பெரும் திரள் கண்ணுள் - மிகுந்தவினக்கூட்டத் திடத்து நின்று, பேச்சு நின்றோர்ந்து - அவர் தம்மிற் கூறும் பேச்சின் கருத்தை விசாரித்து, வாய்ச்சொல் கேட்ட - மணம் புணர வரும்வழி நற்சொல்லாகக் கேட்ட, நன் மதியரும் - நல்ல புத்தியினை யுடையவரும், பெரியர் - சிறுமையிலராக.

(வி-ரை.) வாய்ச்சொல் "குடக்கணீர் கொண்டுவா வென்றாள் குனிவிற், றடக்கையாய் வென்றி தரும்" என்றாற்போல்வது. ஓர்தல் - ஆராய்தல். வாய்ச்சொல் என்பதில் வாய் இயற்கையடை. நன்மதி - பேரறிவு.

'ஆய்மலர்' என்பதுமுதல் 'திருவினர்' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) மெய்யரும் - உண்மையினையுடைய அவ்விருவரும் (போய்), ஆய் மலர் தெரிந்திட்டு - மலரை யாய்ந்தருச்சித்து, வான் பலி தூவி-மிகுந்த தெய்வ வுணவினைக் கொடுத்து, தெய்வம் பராய - தம்மைக் கூட்டுவித்த தெய்வத்தைப் பரவுதற்குக் காரணமாகிய, திருவினர் - நல்வினை யுடையாராயினர், இனிமேற்பாரிடரில்லை.

(வி-ரை.) இருவரையும் போகப்பண்ணிய தாய்போலு மிவளுள்ளமுந் தவறுபட்டதாயிற்று. மணம்புணர வரும்வழி குறித்த

பார்ப்பான் முதலியோரு மித்தன்மையராக அவ்விருவரும் போய் நல்வினை யுடையராயினரென வினைமுடிவு செய்க. (கஎ)

16 திருக்கோவையார் உகூஉ-ம செய்யுள்.

வெறிவிலக்கல்.

வெறிவிலக்க லென்பது—தலைமகளை யையந்தீர்த்து வெறிக் களத்தே சென்று வேலவனை நோக்கி, புனலிடை வீழ்ந்து கெடப் புக வந்தெடுத்துய்த்த கதிர்த்தோணிற்க, இந்நோய் தீர்த்தற்கும் பிறிதோரு-பாயத்தைக் கருது நின்னைப்போல இவ்வுலகத்தின்கண் அறிவுடையா ரில்லையென, மேலறத்தொடு நிற்பாளாகத் தோழி வெறிவிலக்காநிற்றல். அதற்குச் செய்யுள்:—

விதியுடை யாருண்க வேரி விலக்கல மம்பலத்துப்
பதியுடை யான்பரங் குன்றினிற் பாய்புனல் யாமொழுகக்
கதியுடை யான்கதிர்த் தோணிற்க வேறு கருதுநின்னின்
மதியுடை யார்தெய்வ மேயில்லை கொல்லினி வையகத்தே.

அறத்தொடு நின்ற திறத்தினிற் பாங்கி
வெறிவி லக்கிப் பிறிது ரைத்தது.

(ப-ரை.) விதி உடையார் - (இவ்வெறியாட்டு விழவின் வேரி யுண்ண) விதியுடையவர், வேரி உண்க-வேரியுண்ணவமையும்; விலக்கலம் - யாமதனை விலக்கோம்; (அதுகிடக்க) அம்பலத்து - அம்பலமாகிய, பதியுடையான் - இருப்பிடத்தை யுடையானது, பரங்குன்றினில் - பரங்குன்றினிடத்து, பாய் - பரந்த, புனல் - புனலோடே, யாமொழுக - யாமொழுகக் (கண்டு), கதியுடையான்- (எடுத்தற்பொருட்டு ஆண்டு) வரவையுடையவனுயவனுடைய, கதிர் தோள் - ஒளியையுடைய தோள்கள், நிற்க - நிற்க, வேறு கருதும் - இந்நோய் தீர்த்தற்கு வேறோருபாயத்தை கருதும், நின்னின் - நின்னைப்போல, மதியுடையார் - அறிவுடையார், தெய்வமே - தெய்வமே, வையகத்து - இவ்வுலகத்தில், இனி - இப்போது, இல்லை கொல் - இல்லைபோலும், எ-று.

(வி-ரை.) இவ்வாறு கூறவே, நீ கூறிய தென்னென்று கேட்ப அறத்தொடு நிற்பாளாவது பயன், அம்பலத்தென அத்துச்சாரியை அல்வழிக்கண் வந்தது. ஓரிடத்தர் ஞெதுக்கப்படாமையிற் பதி யுடையவனென்று சொல்லப்படாதவன் அம்பலத்தின்கண் வந்து பதியுடைய ஞயினனென்பதுபட வுரைப்பினுமமையும். பரங்குன்றி

னென்பதற்கு "பாலன் புகுந்திப் பரிசினி னிர்மித்த" என்ற தற்குரைத்த துரைக்க. ஒழுக வென்னும் வினையெச்சம் கதியை யுடையானென்னு மாக்கத்தை யுட்கொண்ட வினைக்குறிப்புப் பெய ரோடு முடியும். கதி - ஆண்டுச்சென்ற செலவு, கதிர்த்தோணிற்க வென்பதற்கு எரித்தற்பொருட்டு அவன்றேன் வந்துநிற்கவென்று பொருளுரைத்து அவ்வெச்சத்திற்கு முடிபாக்கினு மமையும். மதி யுடையா ரில்லைகொல்லென்பது குறிப்புநிலை. அறத்தொடுநின்ற திறத்தினில் - அறத்தொடு நின்ற தன்மைத்தாக. பிறிது - புன லுடையவன் வந்துதவினவுதவி. மெய்ப்பாடு - பெருமிதத்தைச் சார் ந்த நகை. பயன் - குறிப்பினால் வெறிவிலக்குதல். பரங்குன்று - திருப்பரங்குன்று. வேரி - கள். இனியென்பது இப்போதென்னும் பொருள்பயந்து நின்றது. "பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன், பெண்டகையாற் பேரமர்க்கட்டு" என்புழிப்போல.

நேரிசையாசிரியப்பா.

உழைநின் றீரும் பிழையறிந் தீரும்
பழங்குறி கண்ட நெடுங்கண் மாதரு
மொன்று கிளக்க நின்றிது கேண்மி
னொருபாற் பசுங்கொடி திருநுதல் பொடித்த
குறுவெயர்ப் பொழுக்கெனப் பிறையமு தெடுக்கப்
படிறர் சொல்லெனக் கடுநெஞ் சிறைப்ப
வண்டப் பொற்சுவர் கொண்ட வழுக்கை
யிறைத்துக் கழுவுவ தென்னக் கங்கைத்
துறைகொ ளாயிர முகமுஞ் சுழல
வப்பெருங் கங்கை கக்கிய திரையெனக்
கொக்கின் றூவ லப்புற மாக
மாணிக் கத்தின் விளைத்த சுவரெனப்
பாணிக் குட்பெய் செந்தழல் பரப்பத்
தன்னுறப் படைத்த பொன்னணி யண்ட
மெண்டிக் களந்து கொண்டன வென்னப்
புரிந்த செஞ்சடை நிமிர்ந்து சுழல
மேருவின் முடிசூழ் சூரிய ராகத்
தயக்கிய மூன்றுகண் ணெங்கணு மாகக்

கூடன் மாநக ராடிய வமுதை
யுண்டு களித்த தொண்டர்க ளென்ன
விம்மது வுண்ணா வும்மையி னுடையோர்
முருகு நாறப் பருகுதல் செய்க
வேலனும் வெறிக்கள னேறுத லாக
வணங்காட்டு முதியோண் முறங்கொணெல் லெடுக்கப்
பிணிதர விசித்த முருகியந் துவைக்க
வையவி யழலொடு செய்பிடம் புகைக்க
வின்னும் பலதொழிற் கிங்கிலை நின்று
மாறு பாடு கூறுத லிலனே
யீங்கிவை நிற்க யாங்களவ் வருவியி
லொழுகப் புக்குத் தழுவி யெடுத்து
மொருமதி முறித்தாண் டிருகவுட் செருகிய
வேந்துகோட் டும்பல் பூம்புன மெம்முயி
ரழிக்கப் புகுந்த கடைக்கொ ளொளி
னெடுங்கை வேலா லடுந்தொழில் செய்தும்
பெறுமுயிர் ரிரண்டு மருவி யளித்த
பொன்னெடுங் குன்ற மன்னிய தோளன்
செவ்வேள் தந்த மைதுய ரிருப்பக்
கூறு பெயரொடு வேறுபெய ரிட்டு
மறியுயி ருண்ணக் குறுகிவந் திருந்த
தெய்வங் கற்ற வறிவை
யுய்யக் கூறினோர் நெஞ்சிடம் பொருதே.

உழை நின்றீரும்-நெஞ்சிடம் பொருதே. **பகுதி**-வரைபொருட் பிரிதல். **துறை** - வெறிவிலக்கல்.

'ஒரு' என்பதுமுதல் 'எடுக்க' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) பிறை அமுது - பிறையின்க ணுண்டாகிய வமுதம், ஒருபால் - இடப்பக்கத்திலிருக்கும், பசுங்கொடி - பசிய கொடியினைப்போல்வாள், திரு நுதல் - அழகிய நுதலில், பொடித்த - தோன்றிய, குறு வெயர்ப்பு ஒழுக்கென - குறிய வியர்வை யொழுக்காக, எடுக்க - எடுக்க.

(வி-ரை.) குறிய வேர்வை யொழுக்குப்போலச் சூடிய பிறையி னின்றும் அமுத மூண்டாக வெனினுமாம். பசுங்கொடி - அன்மொழித்தொகை, இது குறிப்புவமை; "பாவையாளை" என்றாற் போல.பசுங்கொடி யென்றது உமையவளை. ஒருபால் எனப் பொதுப் படக் கூறினரேனும் ஈண்டைக்கேற்ப இடப்பக்கமென் றுரைக் கப்பட்டது. நுதல் - நெற்றி.

படிறர் சொல்லெனக் கடுநெஞ் சிறைப்ப.

(6—வது வரி.)

(ப-ரை.) படிறர் - பொய் சொல்வார், சொல்லென-சொல்லில் (விடஞ்சிந்துதல்) போல, நெஞ்சு-கண்டத்தில், கடு இறைப்ப - நஞ் சஞ்சிந்த.

(வி-ரை.) இது கோறற்றொழிலாற் றொழிலுவமை, கடுவினை யுடைய விடமிடறென்க. நஞ்சம் விளங்கியவிடத்துச் சிந்தவெனி னுமாம். கடியென்னு முரிச்சொற் றிரிந்துநின்றது. பெயரெச்சமாகிய வினைத்தொகையாயிற்று. படிறு - பொய். இறைத்தல் - சிந்தல்.

'அண்ட' என்பதுமுதல் 'சுழல' என்பதுவரை.

(7—9 வரிகள்.)

(ப-ரை.) கங்கைத்துறை கொள்-கங்கையின் றுறைகொண்ட, ஆயிரமுகமும் - ஆயிரமுகங்களும், அண்டப்பொற்சுவர்-அண்டத்தி னது பொற்சுவரில், கொண்ட - பொருந்திய, அழுக்கையிறைத்துக் கழுவுவதென்ன - அழுக்கைக் கழுவுநீராக, சுழல - சுற்ற.

(வி-ரை.) கழுவுவது-தொழிற்பெயர். கழுவுநீர் சுற்றியதுபோ லச் சுற்றவெனினுமாம். உம்மை - முற்றும்மை.

'அப்பெருங்கங்கை' என்பதுமுதல் 'அப்புறமாக' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) கொக்கின் றூவல் - கொக்கினிறகு, அப்பெருங் கங் கை - அந்தப் பெரிய கங்கையினிடத்தில், கக்கிய திரை என - எறி யுந்திரையாக, அப்புறமாக - அந்தக் கங்கையிடத்திற் சேர.

(வி-ரை.) அப்பெருங் கங்கை - கழுவுநீரான கங்கை, அகரம் - பண்டறி சுட்டுமாம். அப்பெருங் கங்கையிடத் தெறிந்த திரை அவ் விடத்தானுற்போலக் கொக்கினிறகு அக்கங்கையிருந்த விடத்தாக வெனினுமாம். அப்புறம் - சடையினிடம். அப்புறவாகவென்று பாட மாயின் அப்பினுறும்படியாக வென்க.

'மாணிக்கத்தின்' என்பதுமுதல் 'பரப்ப' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) பாணிக்குள் பெய் - கையிடத்திற் கொண்ட, செந்தழல் - சிவந்தவக்கினி, மாணிக்கத்தின் - மாணிக்கத்தைக்கொண்டு, வளைத்த - வளைத்த, சுவர் என - கோட்டையாக, பரப்ப - ஒளியைப் பரப்ப.

(வி-ரை.) கோட்டைபோலச் செந்தழல்பரப்ப வெனினுமாம். மாணிக்கத்தாலென்பது "உருபினும் பொருளினு மெய்தடு மாறி, யொன்ற னிலைக்களத் தொன்றுசென் றதுபோற், சுண்ணத் தால் விளக் கவிப்பப் பொங்கிய" என்றாற்போல்வது.

'தன்னால்' என்பதுமுதல் 'சுழல' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) தன்னால் படைத்த - தன்னாற்செய்யப்பட்ட, பொன் அணி அண்டம் - அழகிய பொன்னாகிய அண்டத்தை, புரிந்த-திரித்தாற்போல, செஞ்சடை-சிவந்தசடைகள், எண் திக்கு அளந்துகொண்டன என்ன - எட்டுத்திக்கு மளந்துகொண்டனவாக, நிமிர்து சுழல-பரந்துசுழல.

(வி-ரை.) கொண்டன வென்பது தொழிற்பெயர், "பதிகொண்டு பரந்தன போன்றுளவாலன்" என்றாற்போல. புரிந்த செஞ்சடையென்புழி யுவமையொடு பொருட்கொற்றுமை யுண்மையா னுவம வினைபொருளொடு மியைந்தது. திரியாததனைத் திரித்ததுபோலக் கூறலின் வேறோருவம விலக்கணமாம், "ஊட்டி யன்ன வொண்டளிர்ச் செயலை" என்றாற்போல. "குறித்தோன் கூற்றந் தெரித்து மொழி கிளவி" என்ற விதியன்று, விரும்பப்பட்ட செஞ்சடையெனினுமாம். கொண்டனவென்ன வென்பதனைக் கொண்டாற்போல வெனினுமாம், "கோணி ரைத்தன போற்கொழுந் தாரைகள்" என்றாற்போல.

'மேருவின்' என்பதுமுதல் 'எங்கணுமாக' என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(ப-ரை.) எங்கணும் - எத்திசையும், தயங்கிய - விளங்குகின்ற, மூன்று கண் - மூன்று நயனமும், மேருவின் முடி சூழ் - மேருவின் முடியைச் சுற்றிய, சூரியராக - சூரியராக.

(வி-ரை.) முற்றும்மை யொன்று தொக்கொன்று விரிந்தது போல வெங்கணுமாக வெனினுமாம். தயங்கல் - விளங்கல். மேரு - மேருமலை. மூன்று கண் என்பதனீற்றில் இனைத்தெனவறிந்த வும்மை தொக்கது.

'கூடன்மாநகர்' என்பதுமுதல் 'என்ன' என்பதுவரை.
(19—20 வரிகள்.)

(ப-ரை.) கூடல் மா நகர்-மதுரையாகிய பெரிய நகரிடத்தில், ஆடிய - (பரிகொண்டு) ஆடிய, அமுதை-(சொக்கநாதராகிய) அமுதத்தை, உண்டு களித்த - (மனமாகிய வாயினால்) உண்டு களித்த, தொண்டர்கள் என்ன - அன்பர்கள்போல.

(வி-ரை.) ஏகதேசவுருவகம். "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலருமிந் நோய்" என்றாற்போலச் செயவென்னும் வாய்ப்பாட்டு வினையெச்சவடிக்கு ஆடியவென்னும் பெயரெச்சத்தின் முதனிலைகொண்டு முடிந்தது. முதனிலை - பகுதி, அஃது ஆடு என்பது, அன்பருக்குச் சிறந்த இனிமையைத் தருதலால் சொக்கநாதரை 'அமுது' என்றார். ஆடல் - நடஞ்செய்தல்.

'உழை' என்பதுமுதல் 'கேண்மின்' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) உழைநின்றீரும் - உழையாக நின்றீரும், பிழையறிந்தீரும் - இதனாலிது வந்ததென்றறிந்த நீரும், பழங்குறி கண்ட - (இன்னார்க்கிப்படி யிதனால் வந்ததென்று) முன்போன குறியாலறிந்த, நெடு கண் மாதரும் - நீண்டகண்களையுடைய மாதரும், ஒன்று கிளக்க-யானொரு காரியஞ்சொல்ல, இது நின்று கேண்மின்-இதனை (மகிழ்ந்து) நின்று கேட்பீராக.

(வி-ரை.) உழைநின்றார் - ஏவல்செய்வார், நெடுங்கண்மாதர் - தூரதிருட்டி யறிந்தமாதர். தொண்டர்களென்ன மகிழ்ந்துநின்று கேண்மினென்க. உழை-பக்கம். பிழை-தவறு. கிளத்தல்-சொல்லல்.

'இம்மது' என்பதுமுதல் 'செய்க' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) இம்மது - (வெறியாடுங் களத்தில்) இங்ஙனமிருந்த மதுவினை, உண்ண உம்மையினுடையோர் - போனசெனனத்தி லுண்ண விதியுடையார், முருகு நாற-வாசங்கமழும்படி, பருகுதல் செய்க - உண்ணவமையும்.

(வி-ரை.) முருகுநாற என்பதற்கு முருகன்வெளிப்பட வெளி யுமாம். உண்டுகளித்த தொண்டர்க்குப் பரமானந்தமன்றி மதுவுண் டாற்போல மயக்க மின்மையிற் கேட்பார் மகிழ்ச்சி பொருளாயிற்று. மது-கள்.

வேலனும் வெறிக்கள னேறுத லாக.
(23—வது வரி.)

(ப-ரை.) வேலனும்-(அதுவன்றி) வெறியாட்டாளனும், வெறிக்களன் - வெறியாடுங்களத்தில், ஏறுதலாக - செல்லவமையும்.

(வி-ரை.) உம்மை - இசைநிறை. "தேனும் வழங்கு-பைந்தார் விசையை சிறுவன் றேங்கொள்" என்றாற்போல, நம் வெறிக்களனு மாம். வெறிக்களமென்பதனை முன்னும் பின்னுங்கூட்டுக. வேலன்-வேற்படையைக் கரத்திலுடையவன். வெறி-தைவாவேசம். வெறிக் களன் - ஆவேசியாடுமிடம். ஏறுதல் என்றது ஈண்டுச் சேறற்பொ ருட்டு.

அணங்காட்டு முதியோள் முறங்கொணெல் லெடுக்க.
(24—வது வரி.)

(ப-ரை.) அணங்காட்டு முதியோள்-(அதுவன்றி) கட்டுவிச்சி, முறங்கொள் நெல் எடுக்க-(இவள் கொண்ட நோய் முருகனால் வந்த தென்று) சுளகிலிட்ட நெல்லையெடுத்துக் குறிசொல்லியதினாலே.

(வி-ரை.) எடுக்கவென்பதெடுத்துச் சொல்லுதலெனத் தன் காரியந்தோன்ற நின்றது. அது, "விறற்சேய் கடவு மயிலிதன்றே கொடிவாரணங்காண்க வன்சூர் தடிந்த,வயிலிதன்றே, நெல்லிற்றோ ன்றுமவன் வடிவே" என்பதனுணர்க. கட்டுவிச்சி-குறி சொல்பவள்.

பிணிதர விசித்த முருகியந் துவைக்க.
(25—வது வரி.)

(ப-ரை.) பிணிதர - இறுகுதல் பெற, விசித்த-கட்டிய, முருகி யம் துவைக்க - வெறியாட்டுப்பறை முழங்க (அமையும்).

(வி-ரை.) பிணி - இறுக்கம். பிணிதர என்பதற்குப் பகுதி பிணிதா.

ஐயவி யழலொடு செய்யிடம் புகைக்க.
(26—வது வரி.)

(ப-ரை.) ஐயவி-(அதுவன்றி) வெண்சிறு கடுகினை, அழலொடு-அழலோடு கூட்டி, செய்யிடம் - (குங்கிலிய முதலிய) புகைசெய்யு மிடத்து, புகைக்க - புகைக்கவமையும்.

(வி-ரை.) "ஐயவிசிந்தி ...றைபுகைத்து" என்றார் வெண்பா மாலையினும். ஐயவி - சிறிய வெண்கடுகு.

'இன்னும்' என்பதுமுதல் 'நிற்க' என்பதுவரை.
(27—29 வரிகள்.)

(ப-ரை.) இன்னும் - (இங்ஙனஞ் சொன்னவையன்றிப்) பின்னும், பலதொழிற்கு - (செய்யும்) பலதொழிற்கு, நீங்கிலை நின்று - (யான்) இவ்வண்ணநின்று, மாறுபாடு கூறுதல் இலன் - விரோதஞ் சொல்லுதலில்லையாதலால், ஈங்கிவை நிற்க - இங்ஙனம் சொன்னவையொழிய.

'யாங்கள்' என்பதுமுதல் 'எடுத்தும்' என்பதுவரை.
(29—30 வரிகள்)

(ப-ரை.) யாங்கள் அவ் வருவியில்-யாங்களெப்போதுமாடு மம்மலைச் சாரலாற்றில், ஒழுக - அமிழ்ந்த, புக்கு - உட்புகுந்து, தழுவி எடுத்தும் - கட்டியெடுத்ததனாலும்.

(வி-ரை) அகரம் - பண்டறிசுட்டு, அருவியென்றது இங்கு யாற்றைக் குறித்தது. தழுவியெடுத்தல் - அணைத்தெடுத்தல்.

'ஒரு' என்பதுமுதல் 'செய்தும்' என்பதுவரை.
(31—34 வரிகள்.)

(ப-ரை.) பூம்புனம் - யாங்கள் காக்கும் பூம்புனத்திற் புகுந்த, ஒரு மதி முறித்து - ஒரு மதியை யிருபிளவாக்கி, இரு கவுள் செருகிய - இருகவுளினுஞ் செருகினாற்போன்ற, வந்து கோட்டு உம்பல் - உயர்ந்த கோட்டினையுடைய யானை, எம் உயிர் அழிக்கப் புகுந்த - எம்முயிரைக் கொல்லும்படி கிட்டிய, கடைக்கொள் நாளில் - இறுதி நாளில், ஆண்டு - அவ்விடத்து, நெடும் கை வேலால் - கையின்கண்ணிருந்த நெடிய வேலினால், அடும் தொழில் செய்தும் - அதனைக் கொன்றதனாலும்.

(வி-ரை.) இருகவளு மென்னு முற்றும்மை விகாரத்தாற் றொக்கது. செருகிய கோடு "வடுத்தான் வகிர்மலர்க் கண்ணி" போன்றது. மதி - சந்திரன். கவுள் - கபோலம். கோடு - கொம்பு. அடுந் தொழில் - ஒருசொல், கொல்லுதல் என்பது பொருள்.

'பேறும்' என்பதுமுதல் 'துயரிருப்ப' என்பதுவரை.
(35—37 வரிகள்.)

(ப-ரை.) பெறும் உயிர் இரண்டும் - யாம் பெறுமுயி ரிரண்டையும், மருவி அளித்த - மருவிக்காத்துக் கிருபைபண்ணின, பொன் நெடுங்குன்றம் - மகமேரு, மன்னிய - (நிலைபெற்றாற்போல) நிலைபெற்ற, தோளன் - தோளிணையுடையான், செவ்வே - நேரே, தந்தமை - தந்தமையாநின்ற, துயர் இருப்ப - துயருண்டாயிருப்ப.

(வி-ரை.) பெறுமுயிர்-"கறங்குநூல்" போல நின்றது. பொன்னெடுங்குன்றம் - நெடிய பொன்மலை. துயர் - துன்பம்.

'கூறுபெயரோடு' என்பதுமுதல் 'பொருதே' என்பதுவரை.
(38—41 வரிகள்.)

(ப-ரை.) கூறு பெயரொடு - தாய்தந்தையரிட்ட பேரோடே, வேறு பெயரிட்டு - பேய்கொண்டாளென்று வேறுபெயரிட்டு, மறி உயிர் உண்ண - இக்கிடாவினுயிரை யுண்ணும்படி, குறுகி வந்திருந்த - அணுகிவந்திருந்த, தெய்வங்கற்ற வறிவை - (இந்நோய் தீர்க்கும்) தெய்வங்கற்ற வறிவை, உய்ய கூறில் - (இவள்) பிழைக்கும்படி கூறில், ஓர் நெஞ்சிடம் பொருது - ஒரு நெஞ்சிடம் பொருது.

(வி-ரை.) தெய்வங் கற்ற வறிவை யுய்யக்கூறி னொருநெஞ்சிடம் பொருதென்பது குறிப்புநிலை. அறத்தொடுநின்ற தன்மைத்தாக இவ்வாறு கூறக்கேட்டார்க் கறத்தொடுநிற்பது பயன் மெய்ப்பாடு பெருமிதஞ் சார்ந்தநகை, பயன் குறிப்பினால் வெறிவிலக்குதல், தொண்டர்கண்போல கேட்பீராக.

விதியுடையார் மதுவுண்ணவமையும், அதுவன்றி வேலன் வெறியாட வமையும், அதுவன்றி கட்டுவித்தி குறிசொல்லுதலினாலே வெறியாட்டுப் பறைமுழங்கவமையும், அதுவன்றி வெண்சிறு கடுகினைப் புகைக்கவமையும், இவையன்றிப் பின்னுஞ் செய்யுந்தொழிற்கு விரோதஞ் சொல்லுதலில்லை, இவைகிடக்க, எடுத்ததனாலுங் கொன்றதனாலுந் தோளிணையுடையான் றந்ததுயரிருப்ப மறியுயிருண்ணத் தெய்வங்கற்ற வறிவைக்கூறி னொருநெஞ்சிடம் பொருதென வினைமுடிவுசெய்க.

17 திருக்கோவையார் உசஅ-ம் செய்யுள்.

உலகியல்புரைத்தல்.

உலகியல்புரைத்தலென்பது—மீளக்கூறவும் மீளாது கவலாநின்ற செவிலிக்குச் சந்தனமு முத்துஞ் சங்குந் தாம் பிறந்த விடங்

கட்கு யாதும் பயன்படாது, தம்மை விரும்பி யணிவாரிடத்தே சென்று பயன்படாநிற்கும். அதுபோல மகளிருந் தாம் பிறந்தவிடத்துப் பயன்படார் நீ கவலவேண்டாவென உலகியல்பு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சுரும்பிவர் சந்துந் தொடுகடன் முத்தும்வெண் சங்கு மெங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணி யாம்வியன் கங்கையென்னும்
பெரும்புனல் சூடும் பிரான்சிவன் சிற்றம்பல மனைய
கரும்பன மென்மொழி யாருமந் நீர்மையர் காணுநர்க்கே.

சேவிலியது கவலைதீர
மன்னிய வுலகியன் முன்னி யுரைத்தது.

(ப-ரை.) சுரும்பு - (நறுநாற்றத்தாற்) சுரும்பு, இவர் - சென்று (பரக்கும்), சந்து - சந்தனமும், தொடு - தொட்கப்பட்ட, கடல்-கடலிற் (பிறந்த), முத்தும் - முத்தமும், வெள் சங்கும் - வெண்சங்கும், எங்கும் - எத்தேயத்தும், (தாம் பிறந்த விடங்கட்கு யாதும் பயன்படாது) விரும்பினர்பால் - (தம்மை) விரும்பி யணிவாரிடத்தே, சென்று - சென்று, மெய்க்கு - அவர் மெய்க்கு, அணியாம் - அணியாகாநிற்கும், வியன் - அகன்ற, கங்கை என்னும் - கங்கையென்னுநின்ற, பெரும் புனல் - பெரும் புனலை, சூடும் பிரான் - சூடுகின்ற பிரான், சிவன் - சிவன், சிற்றம்பலம் - அவனது சிற்றம்பலத்தை, அனைய - ஒக்கும், கரும்பன - கரும்புபோலும், மெல் - மெல்லிய, மொழியாரும் - மொழியினையுடைய மகளிரும், காணுநர்க்கு - ஆராய்வார்க்கு, அந்நீர்மையர் - அத்தன்மையர் (நீகவலவேண்டா), எ-று.

(வி-ரை.) சங்கு - மணியாயும் வளையாயும் அணியாம். எங்கு மணியாமென வியையும். சிற்றம்பலத்து மன்னுங் கரும்பன மென்மொழியா ரென்பது பாடமாயின் - சிற்றம்பலத்தையுடைய தில்லையினுளதாங் கரும்புபோலு மென்மொழியை யுடையா ரென்றுரைக்க.

நேரிசையாசிரியப்பா.

பழமை நீண்ட குன்றக் குடியினள்
வருந்தாது வளர்த்துங் குடங்கை துயிற்றியு
மானின் குழவியொடு கெடவரல் வருத்தியும்
பந்து பயிற்றியும் பொன்கழங் குந்தவும்
5 பாவை சூட்டவும் பூவை கேட்கவு
முண்டமை செய்த மடமையள் யானென்

றெம்மெதிர் கூறிய விம்மொழி தனக்குப்
பெருமை நோக்கிற் சிறுமைய துண்டே
செறிதிரைப் பாற்கடல் வயிறுநொந் தீன்ற
செம்மகள் கரியோற் கறுதி யாக
மகவி னின்பங் கடல்சென் றிலவா
லன்றியும் விடிமீன் முளைத்த தாரம்
வவ்வின ரிடத்து மவ்வழி யான
திரைக்கடல் குடித்த கரத்தமா முனிக்குந்
திங்கள் வாழ்குலந் தங்குவேந் தற்கு
மமுதவூற் றெழுந்து நெஞ்சங் களிக்குந்
தமிழெனுங் கடலைக் காணி கொடுத்த
பொதியப் பொருப்பு நெடுமுதுகு வருந்திப்
பெற்று வளர்த்த கற்புடை யார
மணியுமா மகிழ்நர் பதியுறை புகுந்தா
லுண்டோ சென்றது கண்ட துரைத்த
பள்ளிக் கணக்க ருள்ளது பெற்ற
புறமார் கல்வி யறமா மகளைக்
கொண்டு வாழுநர்க் கண்டரு கிடத்து
மவர்மன வன்னை கவரக் கண்டிலம்
பெருஞ்சேற்றுக் கழனி கரும்புபெறு காலைக்
கொள்வோர்க் கன்றி யவ்வயல் சாயா
பூம்பணை திரிந்து பொதியவிழ் முளரியிற்
காம்புபொதி நறவம் விளரியோ டருந்திக்
கந்தித் தண்டலை வந்துவீற் றிருந்து
கடிமலர்ப் பொழிலிற் சிறிதுகண் படுத்து
மயக்கநிறை காமத் தியக்கங் கொண்டு
நின்ற நாரணன் பரந்த மார்பிற்
கலவாக் குங்கும நிலவிய தென்னக்
கார்வான் றந்த பேர்கொள் செக்கரில்
விதிவாய்த் தென்றன் மெல்லென் றியங்கு
மூதூர்க் கூடல் வந்தருண் முக்கணன்
காமனை யயனை நாமக் காலனைக்

கண்ணு லுகிரான் மலர்கொள் காலாற்
சுட்டுங் கொய்து முதைத்துந் தணித்த
விட்டொளிர் மாணிக் கமலையி னொருபா
லடங்கப் படர்ந்த பசுங்கொடி யதனை
வளர்த்த சேண்மலை யுளத்துயர் கொண்டு
தொடர்ந்தது மிலைகீழ் நடந்தசொற் கிடக்கப்
பாலைக் கிழத்தி திருமுன் னட்டிய
சூலத் தலையிற் றொடர்ந்துசிகை படர்ந்து
விடுதழ லுச்சம் படுகதிர் தாக்கப்
பாடல்சால் பச்சைக் கோடகக் காற்றை
மையில் காட்சிக் கொய்யுளை நிற்ப
வயிற்றி லிருந்து வாய்முளைத் தென்ன
விருகான் முகனிற் கருகாத் துரந்து
படுமழ னீக்கக் குடகடற் குளிக்கு
நாவாய்க் குறியாத் தீவாய் பாலையிற்
றம்மி லின்பஞ் சூளுடன் கூடி
யொன்றி விளைந்து சென்றுட் குடைந்து
பொன்பதி நீங்கி யுண்பது மடங்கி
முழங்கப் பெருங்குரல் கூஉய்ப்
பழங்க ணெய்தியது பேதைமை யறிவே.

பழமை நீண்ட - பேதைமை யறிவே. பகுதி - உடன்போக்கு. துறை - உலகியல்புரைத்தல்.

‘செறிதிரை’ என்பதுமுதல் ‘சென்றிலவால்’ என்பதுவரை.

(9—11 வரிகள்.)

(ப-ரை) செறிதிரை-செறிந்த திரையினையுடைய, பாற்கடல் - திருப்பாற்கடலாகிய தாய், வயிறு நொந்து - வயிறுநொந்து, ஈன்ற - பெற்ற, செம்மகள் - செய்ய திருமகளாகிய மகள், கரியோற்கு-கரிய நிறத்தையுடைய விட்டுணுவாகிய கொழுநற்கு, அருதிபாக - பாரியாக, மகவின் இன்பம்-அம்மகவால் வருமின்பங்கள், கடல் சென்றில - கடலாகிய அத்தாயிடத்திற் சென்றனவல்ல.

(வி-ரை) இது குறிப்புருவகம். ஆல் - அசை.

'அன்றியும்' என்பதுமுதல் 'அவ்வழியான' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) அன்றியும் - அதுவன்றியும், விடி மீன் - விடிதற்குக் காரணமான சுக்கிரன், முளைத்த - உதித்தாற்போலத் தோன்றிய, தாளம்-முத்தமும், வவ்வினரிடத்தும்-விரும்பினர்க்கறுதியாகவே, அவ்வழியான - அதனால் வருமின்பங்களுந் திருமகளின்பம்போலக் கடலிற் சென்றனவல்ல.

(வி-ரை.) முளைத்த தாளம், "குணந்தான் வெளிப்பட்ட கோவ்வைச் செவ்வாயிக் கொடியிடை" என்றாற்போன்றது. உம்மை-இசைநிறை."மெழுகினுற் புனைந்த பாவை வெய்துயிர்த் தாங்கு மோவாள்" என்றாற்போல. இது குறிப்புருவகம் ; கடல்தாயாய்த் தாளமகவாதலின் "இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத் தூன்று நல்லாளிலாத குடி" போல.

'திரைக்கடல்' என்பதுமுதல் 'சென்றது' என்பதுவரை.
(14—21 வரிகள்.)

(ப-ரை.) திரை கடல் - திரையையுடைய கடலை, குடித்த கரத்த - நுகர்வதற்குக் காரணமாகிய கையினையுடைய, மாமுனிக்கும் - அகத்தியற்கும், திங்கள் வாழ் - சந்திரனால் வாழும், குலம் தங்கும்-வம்சத்திற் பிறந்த, வேந்தற்கும் - பாண்டியனுக்கும், நெஞ்சம்-நெஞ்சத்தில், அமுதஊற்று எழுந்து-அமுதவூற்றெழுந்து, களிக்கும்-களித்தற்குக் காரணமாகிய, தமிழ் எனும் கடலை-தமிழாகிய கடலை, காணி கொடுத்த - உரிமையாகக் கொடுத்த, பொதியப்பொருப்பு - பொதியப்பொருப்பாகியதாய், பெற்று-பெற்று, நெடுமுதுகு வருந்தி-நெடிய முதுகு வருந்தி,வளர்த்த-வளர்த்த,கல்புடையாரம்-அக்கல்லைப்புடைத்தெழாநின்ற சந்தனமாகு மகவானது, அணியும் - பூசும், மா மகிழ்நர் - பெருமைபொருந்திய தலைவர், பதியுறை புகுந்தால்-உறைபதியிலுறைந்தால், உண்டோ சென்றது - அப்பொருப்பின் பக்கத்திற் சென்றதில்லை.

(வி-ரை.) இது குறிப்புருவகம். கல் - சுட்டுப்பெயர். ஒகாரமெதிர்மறை. திரைக்கடல் குடித்த கரத்தவென்னும் விசேடணத்தால் மாமுனி யென்றது அகத்தியனை யுணர்த்திற்று.

'கண்டது' என்பதுமுதல் 'கண்டிலம்' என்பதுவரை.
(21—25 வரிகள்.)

(ப-ரை.) கண்டது உரைத்த - கண்டபொருளினை யுரைத்த, பள்ளிக்கணக்கர் - உபாத்தியாயர், உள்ளது பெற்ற - உள்ளமாகிய தாய் பெற்ற, புறம் ஆர் - புறத்தினிறைந்த, கல்வியறமாமகளை-அறக் கல்வியாகிய மாமகளை, கொண்டு வாழுநர் இடத்து-கொண்டு வாழ்வா ரிடத்து, கண்டு அருகு-தனக்கருகாகக் கண்டும், அவர் மனவன்னை-அவர் மனமாகிய தாய், கவரக்கண்டிலம் - கைக்கொள்ளக் கண்டே மில்லை.

(வி-ரை.) அன்னை யென்பதனை முன்னுங்கூட்டுக. அவர் மன வன்னை - சுட்டுப்பெயர். உள்ளது என்பதில் அது பகுதிப் பொருள் விகுதி, "வறியார்க்கொன்றீவதே யீகை மற்றெல்லாங், குறி யெதிர்ப்பை நீரதுடைத்து" என்றாற்போல. இது முற்றுருவகம். கண்டு மென்னும் உம்மை சிறப்பும்மை.

'பெருஞ்சேற்று' என்பதுமுதல் 'சாயா' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) பெருஞ்சேற்று - பெருஞ்சேற்றினையுடைய, கழனி-கழனியாகியதாய், கரும்புபெறுகாலை - கரும்பாகிய மகவைப்பெறுங் காலத்து, கொள்வோர்க்கு அன்றி-கொள்வோர்க்கல்லாமல், அவ்வயல் சாயா-அவ்வயலாகியதாய் அதனைத் தன்பாற் சேர்த்துக்கொள்ளாது.

(வி-ரை.) இது குறிப்புருவகம். பெருஞ்சேறு - மிக்கசேறு. கழனி - வயல்.

'பூம்பணை' என்பதுமுதல் 'முக்கணன்' என்பதுவரை.
(28—37 வரிகள்.)

(ப-ரை.) தென்றல்-தென்றலானது, பூம்பணை திரிந்து-பொலி வினையுடைய வாவியிடத்திற் சஞ்சரித்து, பொதி அவிழ் முளரியில் - முகையவிழ்ந்த தாமரையில், காம்பு பொதி - அடியினை மறைத்த, நற வம் - தேனை, விளரியோடு அருந்தி - விளரிபாடும் வண்டொடருந்தி, கந்தி தண்டலை - கமுகஞ்சோலையில், வந்து வீற்றிருந்து-வந்து வீற் றிருந்து, கடி மலர் பொழிலில் - வாசனையுடைய மலர்ச்சோலையில், சிறிது கண்படுத்து-சிறிதுகாலம் பொருந்தி, மயக்க நிறை காமத்து - மயக்க நிறைதற்குக் காரணமாகிய விருப்பத்தால்; இயக்கங்கொ

ண்டு - அசைநடைகொண்டு (கிடந்ததுமிருந்ததுமன்றி,) நின்ற நாரணன் - நின்ற திருமாலின், பரந்த மார்பில் - அகன்ற மார்பில், கலவா குங்குமம் - கூட்டிலாச்செஞ்சாந்து, நிலவியது என்ன - தங்கியதுபோல, கார்வான் தந்த-கரியமேகஞ்செய்யநிறங்கொடுத்த,பேர்கொள் செக்கரில் - செவ்வந்தியென்னும் பேர்கொண்ட காலத்தில், மெல்லென்று - மந்தமாக, வீதிவாய் - வீதியில், இயங்கும்-உலாவுதற்கிடமாகிய, மூதூர்க்கூடல் - மதுரை மூதூரில், வந்தருள் முக்கண்ணன் - வந்தருளு முக்கண்ணினையுடையவன்.

(வி-ரை.) விளரி - ஆகுபெயர். விள்ளரி - விளரியென விகாரமாக்கித் பாடும் வண்டெனப் பொருளுரைப்பினும் அமையும். ஒடு - வேறுவினையோடு. பெயர் - பேரென மருவிற்று. "பெற்றபேர் விண்டலர் கோதைக்கு விசையை யென்பவே" என்றாற்போல. இயங்கு மூதூர் - இடத்துநிகழ் பொருளின்றொழி லிடத்தின்மேலேறி நின்றது. கந்தி - கமுகு. செவ்வந்தி-செவ்வந்திக்காலம் (மாலைக்காலம்).

'காமனை' என்பதுமுதல் 'இலை' என்பதுவரை.
(38—44 வரிகள்.)

(ப-ரை.) காமனை - காமனை, கண்ணால் - கண்ணால், சுட்டும் - சுட்டும், அயனை - பிரமன் சிரத்தினை, உகிரால் - நகத்தால், கொய்தும் - கொய்தும், நாமக்காலனை-அச்சத்தினையுடைய காலனை, மலர்கொள் காலால்-மலர்களைக்கொண்ட காலால், உதைத்தும் - உதைத்தும், தணித்த -(அவரவர் மதங்களைத்)தணித்த, விட்டொளிர்-விட்டுவிளங்காநின்ற, மாணிக்க மலையின் - மாணிக்கமலைபோல்வான், ஒருபால்-ஒப்பற்ற இடப்பக்கத்தில், அடங்கப்படர்ந்த-அடங்கச்சென்ற, பசுங்கொடியதனை-பசுங்கொடிபோல்வாளை, வளர்த்த சேண் மலை - வளர்த்த இமயமலையாகிய தாய், உளத்துயர்கொண்டு - மனத்திற்றுன்பங்கொண்டு, தொடர்ந்ததுமிலை - அவளைத் தொடர்ந்ததில்லை.

(வி-ரை.) இது முறைநிரனிறையு மேகதேச வுருவகமுமாம்; "கூற்றுவனை மன்மதனை யரக்கர் கோவைக், கூனிலவைக் குஞ்சரத்தை யிஞ்சி மூன்றை, யேற்றுலகின் புறவுருவ மாளத் தோள்க, ணிறவெறிப்ப விமயப்பெண் வெருவ வேவக், காற்றொழிலா னயனத்தாற் விரலாற் கற்றைக், கதிர்முடியாற் கரதலத்தாற் கணையாற் பின்னு, மூற்றழிய வுகைத்துருத்து நெரித்துச் சூடி, யுரித்தெரித்தோ னெவனெனம் முடையகோவே" என்றாற்போல. நாம் என்னு முரிச்சொலீறு திரிந்துநின்றது. மலர் கொள் கால் - அன்பர் அர்ச்சிக்கு மலர்

கொண்டகால், "விண்ணுஞ் செலவறியா வெறியார் கழல்" என்றார் மணிவாசகரும்; மலரை யடிமைப்படுத்துங்கா லெனினுமாம். மலர் - தாமரைமலர். மாணிக்கமலை, பசுங்கொடி, குறிப்புவமை; 'பாவை யானை' போல. இன்-சாரியை. பசுங்கொடியென்றது உமாதேவியை. சேண்மலை - பெரியமலை (இமயமலை). தொடர்தல் - பின்சேறல்.

கீழ் நடந்தசொற் கிடக்க.
(44—வது வரி.)

(ப-ரை.) கீழ் நடந்த சொல் கிடக்க-(ஆதலால்) கீழ் நடந்த சொல் லிப்படி வார்த்தையாயிருக்க.

(வி-ரை.) "ஒன்று முதலாக் கீழ்க்கொண்டு மேலுணர்தலின்" என்றார் பிறரும்.

'பழமை' என்பதுமுதல் 'வளர்த்தும்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) குன்றம் - குன்றத்தின்கண், பழமை நீண்ட - ஒருவராலு மறியப்படாத பழமையாகிய, குடியினள் - குடியினையுடையவளை, வருந்தாது-பிணிமுதலியவற்றான் வருந்தாமல், வளர்த்தும் - யானெடுத்து வளர்த்தும்.

(வி-ரை.) "கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே தோன்றிய குடி" என்பார் 'பழமை நீண்ட குன்றக் குடியினன்' என்றார்.

குடங்கை துயிற்றியும்.
(2—வது வரி.)

(ப-ரை.) குடங்கை துயிற்றியும்-(கண்டுயில்வதறிந்து) குடங்கையிடத்திற் றுயிலப்பண்ணியும்.

மானின் குழவியொடு கெடவரல் வருத்தியும்.
(3—வது வரி.)

(ப-ரை.) மானின் குழவியொடு-(அழுவதறிந்து) மானின் குழவியுடனே, கெடவரல் வருத்தியும் - விளையாட்டுண்டாக்கியும்.

(வி-ரை.) மானின் குழவி - மான்கன்று.

பந்துபயிற்றியும்.
(4—வது வரி.)

(ப-ரை) பந்து பயிற்றியும் - பந்தாடுதலைக் கற்பித்தும்.

(வி-ரை.) பந்து - ஆகுபெயர்.

'போன்' என்பதுமுதல் 'கேட்கவும்' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) பொன்கழங்குந்தவும் - பொன்னாற்செய்த கழங்கினை யாடவும், பாவை சூட்டவும் - வண்டலம் பாவையைப் புனையவும், பூவை கேட்கவும் - நாகணவாய்ப்புள்ளின் வார்த்தையை கேட்கவும்.

(வி-ரை.) பூவை - ஆகுபெயர், குழலினிது யாழினிது என்பன போல.

'உடைமை' என்பதுமுதல் 'உண்டே' என்பதுவரை.
(6—8 வரிகள்.)

(ப-ரை.) உடமைசெய்த - உடைமையாகச்செய்த, மடமையள் யான்என்று-மடமையையுடையோள் யானென்று, எம் எதிர் கூறிய- எம் முன்னே சொல்லிய, இம்மொழி தனக்கு - இந்த வார்த்தைக்கு, பெருமை நோககின் - பெருமை விசாரிக்கின், சிறுமையது உண்டு- அதற்குச் சிறுமையுமுண்டு, அஃதேதெனின்.

(வி-ரை.) ஏகாரமீற்றசை. எச்சவும்மை தொக்கது. மடமை - அறியாமை.

'பாலைக்கிழத்தி' என்பதுமுதல் 'தாக்க' என்பதுவரை.
(45—47 வரிகள்.)

(ப-ரை.) பாலைக்கிழத்தி - பத்திரகாளி, திருமுன் நாட்டிய - திருமுன்னே நட்ட, சூலத்தலையின்-சூலத்தினுச்சியினின்றும், தொடர்ந்து-உண்டாகி, சிகை படர்ந்து-தீக்கொழுந்து தொடர்ந்துபோய், உச்சம்படு - வானத்தினுச்சியிற்பட்ட, கதிர் தாக்க - ஆதித்தன்மெய் யிற்றாக்குதலால்.

(வி-ரை.) இன் - நீக்கம். பாலைநிலத்துக் குரியளாதலால் பத்திரகாளியை 'பாலைக்கிழத்தி' என்றார்.

'பாடல்சால்' என்பதுமுதல் 'படுமழனீக்க' என்பதுவரை.
(48—52 வரிகள்.)

(ப-ரை.) படும் அழல் நீக்க-உண்டாம் வெப்பம் நீக்க, மை இல்- குற்றமில்லாத, பாடல்சால் - உணர்வு சொல்லுதலமைந்த, பச்சைக் கோடகக்காற்றை - புசிய குதிரையாகிய காற்றினை, காட்சிக்கொய் யுளை நிறப - தோற்றத்திற்குரிய தலையாட்ட மயிர்சிலிர்த்து நிற்ப, இருகால் - இரண்டுகோல்கள், வயிற்றிலிருந்து - வயிற்றின்கண்ணி

ருந்து, வாய் முளைத்தென்ன - வாயினிடத்திற் றோன்றின்றாற்போல, முகனிற்கு அருகா - முகத்துக்கருகாகச் செல்ல, துரந்து - முடுக்கி.

(வி-ரை) கோடகக்காற்று-அவயவியுருவகம். வாய்முளைத்தென்ன - இல்பொருளுவமை. கோடகம் - குதிரை. உளை - புறமயிர்.

'குடகடல்' என்பதுமுதல் 'பாலையில்' என்பதுவரை.
(52—53 வரிகள்.)

(ப-ரை.) குடகடல் குளிக்கும் - மேற்கடலிற் குளித்தற்குக் காரணமாகிய, தீவாய் - தழலினதுண்மையை, நாவாய் குறியா-நாவினையுடைய வாயாலுஞ் சொல்லப்படாத, பாலையில் - பாலையிடத்தில்.

(வி-ரை.) சிறப்பும்மையு முருபுந்தொக்கன. வாயுண்மை குறியா வென்பது காரணங் காரியமாய்நின்றது, கருதுதலுஞ் செய்தலோ டொத்தலின்.

'தம்மில்' என்பதுமுதல் 'அறிவே' என்பதுவரை.
(54—58 வரிகள்.)

(ப-ரை.) தம்மில் இன்பம்-தம்முளின்பம், சூளுடன்-கற்புநிலை தவறாது, கூடி - கைவந்து, ஒன்றி - பொருந்தி, விளைந்த-முற்றியது காரணமாக, சென்றாட்கு - போனவளால், பொன்பதி நீங்கி-அழகிய பதியைவிட்டு, உடைந்து-வருந்தி, உண்பதும் அடங்கி-புசிப்புமின்றி, முழங்க - (திசையெங்கும்) முழங்க, பெருங்குரல் கூஉய் - வாய்விட்டரற்றி, பழங்கண் எய்தியது - மெலிதற்குக் காரணமாகிய, பேதைமை அறிவே - பேதைமையால் வந்தவறிவே.

(வி-ரை.) சென்றாட்கென்பது உருபுமயக்கம். பதிநீங்கி யென்பது பதியை நீங்கினாள், பதியினீங்கினாளெனக. "தொகையாய் மயங்கி யன்ன பிறவுந், தொன்னெறி பிழையா" என்பதனால் உருபினும் பொருளினு மெய்தடுமாறி யொன்றனிலைக்களத் தொன்று சென்றது. உண்பதுமென்னுமும்மை சிறப்பும்மை. கூவியென்பது கூஉயெனத் திரிந்தது. எய்தியபேதைமை - "நிலம்பூத்த மரம்" என்றாற் போன்றது. பேதைமை - அறியாமை. பேதைமையாலுண்டான வறிவு - இப்பாலையில் வரநினைத்த நினைவு. எசாரம்-தேற்றம்.

இவ்வாறு கீழ்நடந்த சொற்கிடக்க, எம்முன்னுடைமை செய்த மடமையள் யாளென்று கூறிய வார்த்தைக்குப் பெருமைநோக்கின் சிறுமையுமுண்டு. அஃதேதெனில், பாலையிற் றலைவனுடன் சென்றவளால் வருந்துதற்குக் காரணமாகிய பேதைமையால் வந்த அறிவென வினைமுடிவுசெய்க.

18 திருக்கோவையார் ௩௦௩-ம் செய்யுள்.

மகிழ்ந்துரைத்தல்.

மகிழ்ந்துரைத்தலென்பது-மணமுரசொலி கேட்டதோழி சிலம்பன்றந்த பெறுதற்கரிய தழைகளை வாடாமல் வைத்து அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலைமகளைத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

இருந்துதியென்வயிற்கொண்டவன்யானெப் பொழுதுமுன்னு
மருந்துதிசைமுகன் மாற்கரியோன்றில்லை வாழ்த்தினர்போ
லிருந்துதிவண்டனவா லெரிமுன் வலஞ்செய்திடப்பா
லருந்துதிகாணுமளவுஞ் சிலம்பனருந் தழையே.

மன்னிய கடியிற் பொன்னறுங் கோதையை
நன்னுதற் றோழி தன்னின் மகிழ்ந்தது.

(ப-ரை.) சிலம்பன் - சிலம்பன்றந்த, அரும் - பெறுதற்கரிய, தழை - தழைகள், (இப்பொழுது) முன்எரி வலஞ்செய்து - முன் றீயை வலங்கொண்டு, இடப்பால்-(பின்வசிட்டன்) இடப்பக்கத்துத் (தோன்றும்), அருந்துதி - அருந்ததியை, காணுமளவும்-காணுமளவும், இருந்துதி - (அன்பர் துதிப்ப அவர்வயிற் றான் கொள்ளும்) பெருந்துதியை, என்வயின் கொண்டவன் - என்வயின் (உண்டாக்கிக்) கொண்டவன், யான்-யான், எப்பொழுதும் உன்னும் மருந்து - எப்பொழுதும் உன்னும்வண்ணம் (சுவையுடைத்தாயதோர்) மருந்து, (இவ்வாறெனக்கெளியனாயினும்) திசைமுகன் மாற்கு - திசைமுகனுக்கும் மாற்கும், அரியோன் - அரியோனது, தில்லை - தில்லையை, வாழ்த்தினர்போல் - வாழ்த்தினரைப்போல, இருந்து - வாடாதிருந்து, திவண்டன - விளங்கின, எ-று.

(வி-ரை.) திசைமுகன் மாற்கரியோ னென்றது - "பிரமன் மாற்கரியோன்" என்று நிகண்டாதிகளிற் கூறிய சிவநாமமாயிற்று. என்றது - தழைகளை வாடாமல்வைத்து அத்தழையே பற்றுக்கோடாக ஆற்றியிருந்தாளெனத் தலைமகளை மகிழ்ந்து கூறியவாறு. திவண்டனவென்பதற்கு வாடாதிருந்து இவளைத் தீண்டி யின்புறுத்தின வென் றுரைப்பினு மமையும். தழைவாடாதிருந்தன வென்றது முன்னர்த்தான் அவன்றந்த தழையை யேற்ற முகூர்த்தத்தைக் கொண்டாடியவாறு. மெய்ப்பாடு - உவகை. பயன் - மகிழ்தல். 'ஷேயினமென்றேன்' என்பதுதொட்டு இதுகாறும் வர இப்பாட்டு

பத்தொன்பதும் அறத்தொடு நிலையினையும், அதன்பின்னர் வரைதலையும் நுதலினவென்பது.

நேரிசையாசிரியப்பா.

குங்குமக் கோட்டல ருணங்கலர் கடுக்கும்
பங்குடைச் செங்காற் பாட்டளி யரிபிடர்க்
குருவிற் றேய்ந்த வரிகெழு மரகதங்
கல்லெனக் கிடப்பச் சொல்லிய மேனித்
திருநெடு மாலுக் கொருவிசை புரிந்து
சோதிவளர் பாக மீந்தரு ணித்தன்
முனிவ ரேமுற வெள்ளியம் பொதுவின்
மனமுங் கண்ணுங் கனியக் குனிக்கும்
புதிய நாயகன் பழமறைத் தலைவன்
கைஞ்ஞின் றவன்செங் கால்கண் டனர்போல்
விளக்கமும் புதுமையு மளப்பில் காட்சியும்
வேறொருப் பெடுத்துக் கூறுவது நீக்கமு
மறிவோர் காணுங் குறியா யிருந்தன
விருந்திண் போர்வைப் பிணிவிசி முரச
முன்ன மெள்ளினர் நெஞ்சுகெடத்து வைப்ப
மணங்கொள் பேரணி பெருங்கவின் மறைத்ததென்
றெழுமதி குறைத்த முழுமதிக் கருங்கயல்
வண்டு மருவி யுண்டு களியாது
மற்றது பூத்த பொற்றிகழ் தாமரை
யிரண்டு முகிழ்செய்து நெஞ்சுறப் பெருகும்
வற்றா மேனி வெள்ளத் தூண் மறிய
நுனித்தலை யந்தணர் கதழெரி வளர்த்துச்
சிவந்த வாய்தோறும் வெண்பொரி சிதறச்
செம்மாந்து மணந்த வளிய கூரெரி
மும்முறை சுழன்று தாயருண் மகிழ
வில்லுறை கல்லின் வெண்மலர் பரப்பி
யிலவலர் வாட்டிய செங்கால் பிடித்துக்
களிதூங் குளத்தொடு மெல்லெனச் சேர்த்தி

யிரண்டு பெயர்காத்த தோலாக் கற்பு
முகனுறக் காணுங் கரியோர் போல
விடப்பா னிருத்திப் பக்கஞ் சூழ
வடமீன் காட்டி விளக்கணி யெடுத்துக்
குலவாழ்த்து விம்ம மணவணிப் பக்கங்
கட்புலங் கொண்ட விப்பணி யளவும்
வாடிநிலை நின்று மூடியே மாந்து
மென்முக மளக்குங் காலக் குறியைத்
தாமரைக் கண்ணா லுட்புக வறிந்து
முலக மூன்றும் பெறுதற் கரியதென்
றெண்ணு வாய்மை யெண்ணிக் கூறியுங்
கல்லுயர் நெடுந்தோ ளண்ணன்
மல்லுறத் தந்த வீர்ந்தழை தானே.

குங்கும - ஈர்ந்தழைதானே. பகுதி - மணஞ்சிறப்புரைத்தல். துறை - மகிழ்ந்துரைத்தல்.

'வாடி' என்பதுமுதல் 'தானே' என்பதுவரை.
(35—41 வரிகள்.)

(ப-ரை.) கல் உயர் - வரையினுச்சியினு முயர்ந்த, நெடு தோள் - நெடியதோளையுடைய, அண்ணல் - தலைவன், வாடி -(வினையதற்கெல்லா மறுமொழி கொடாமையினால்) வாடி, நிலைநின்றும் - (சேட்படுத்தன் முதலியவற்றால்) நீங்காமனின்றும், ஊடியே மாந்தும் - (ஆற்றா நெஞ்சினோடு) புலந்து ஆற்றுவிக்க விரும்பியும், தாமரை கண்ணால் - தாமரைபோன்ற கண்ணால், என் முகம் - என்னிடத்து, அளக்குங் கால் - அளவளாவும்பொழுது, அக்குறியை - அக்குறியை, உட்புக அறிந்தும் - மனத்திற்கேற்க வறிந்தும், உலக மூன்றும் - (இத்தழை பூமியந்தர சொர்க்கமென்று) மூன்றுலகத்தும், பெறுதற்கு அரியது என்று - பெறுதற்கரியதென்று, எண்ணு - விசாரித்து, வாய்மை - தலைமையாகியவுண்மை, எண்ணி கூறியும் - கருதிக்கூறியும், மல் உற - வளமையுற, தந்த - கொடுத்த, ஈர்ந்தழை - ஈர்ந்தழை.

(வி-ரை.) கல்-மலை, "வடபெருங்கல்" என்றாற்போல. நெடுந் தோள் - பெயர்நிலைக்கிளவி, "வேலோன்" என்றாற்போல. கல் - ஆகு பெயர். நீக்கப்பொருட்கண் வந்த இன்னுஞ் சிறப்பும்மையுந் தொக்கன. எண்ணும்மை தந்த வென்பதனோடு முடிந்தது. தந்ததென்பது

இடவழுவமைதி. தானுமேகாரமும் அசை. எண்ணு-செய்யாவென்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம். மல்லல் மல்லெனத் தொகுத்தல் பெற்றது. ஈர்ந்தழை - குளிர்ச்சியாகிய தழை.

'இருந்திண்' என்பதுமுதல் 'துவைப்ப' என்பதுவரை.
(14—15 வரிகள்.)

(ப-ரை.) முன்னம் - களவுகாலத்து, எள்ளினர் - இகழ்ந்தார், நெஞ்சு கெட-மனங்கெடும்படி, இருந்திண்-பெரிய திண்ணிய, போர்வை - தட்டினை, பிணிவிசி - மிகக்கட்டிய, முரசம் - மணமுரசம், துவைப்ப - ஆர்ப்ப.

(வி-ரை.) பிணிவிசி-"ஒருபொருட் பன்மொழி சிறப்பின்வழா" என்றமையான் மிகுதி யுணர்த்திற்று. நெஞ்சுகெடல்-மனமஞ்சுதல்.

'மணம்' என்பதுமுதல் 'மறிய' என்பதுவரை.
(16—21 வரிகள்.)

(ப-ரை.) மணங்சொள் பேரணி-கலியாணவணியாகிய பாசடை, பெருங்கவின் மறைத்தது என்று-எல்லாவற்றினுஞ் சிறந்த அழகான வெள்ளத்தை மறைத்ததென்று, வண்டு - முலைக்கண்ணாகிய வண்டு, மருவி - பொருந்தி, உண்டு - தேனுசர்ந்து, களியாது - களியாமல், அது - அவ்வண்டு, திகழ் - திகழாநின்ற, இரண்டு - முலையாகிய விரண்டு, பொற்றாமரை - பொற்றாமரை, முகிழ் செய்து - அரும்பி, பூத்த-பூத்த, நெஞ்சுற-நெஞ்சாகிய வாவியில்பொருந்த, வற்றா பெருகும்-குறையாது பெருகும், மேனி - நிறமாகிய, வெள்ளத்துள்-வெள்ளத்துள், எழுமதி - விண்ணிலெழுந்தமதியை, குறைத்த-பிறையாக்கிய. முழுமதி - முகமாகிய முழுமதியிடத்துண்டாகிய, கருங்கயல் - விழியாகிய கரியகயல்கள், மறிய - மறிய.

(வி-ரை.) மேனிவெள்ளத்தின் மறியவெனவே கவினையும் வெள்ளமாகஉருவகம்பண்ணினார். வண்டுதாமரை நெஞ்சுறவெனவே- "முதலைக்கூறச் சினையறி கிளவி" ஆயிற்று. "தாமச் செப்பிணை முகட்டுத்தண் கதிர்விடு நீலமா மணிதாபித்தனபோன் மனம்பருகு கருங்கண்ண வென்றதனைச் சினையிற் கூறு முதலறி கிளவி" என்றாற்போல. 'எழுமதி குறைத்த முழுமதி' குறிப்பினால் வந்த வுவமையுருவகம். இவையெல்லா மாட்டேறேலா வுருவகம், "அஞ்ச வருதானையமரொன்னு நீள்வயலில், வெஞ்சினம் வித்திப் புகழ்விளக்குஞ்-செஞ்சுடர் வேற், பைங்கட் பனைத்தாட் பகட்டுழவ னல்கலா, லெங்கட்

கடையாவிடர்'', என்றார் வெண்பாமாலையினும். அது "மாட்டே றின்றி வருதலு முரித்தே, கூட்டி யாளுங் குறிப்பி னுனே'' என் பதனுனறிக.

‘நுனித்தலை’ என்பதுமுதல் ‘சிதற’ என்பதுவரை.
(22—23 வரிகள்.)

(ப-ரை.) நுனித்தலை-குடுமித்தலையையுடைய, அந்தணர்-வேதியர், கதழ் எரி - வேகத்தையுடைய அக்கினியை, வளர்த்து - வளர்த்து, சிவந்தவாய்தோறும்-சிவந்தவிடந்தோறும், வெண்பொரி சிதற - வெள்ளைப்பொரியைச் சிந்த.

(வி-ரை.) நுனியையுடைய குடுமியை நுனியென்ற தாகுபெயர். கூர்த்தலையுடைய வந்தணரென்று பொருளுரைக்கில் ஐகாரமசை, "கோணைக் களிற்றுக் கொடித்தே ரிவுளி'' என்றாற்போல. சிதறி - சிதற.

‘செம்மாந்து’ என்பதுமுதல் ‘மகிழ’ என்பதுவரை.
(24—25 வரிகள்.)

(ப-ரை.) செம்மாந்து - அகமலர்ந்து, மணந்த-கூடுதற்குக் காரணமாகிய, அளிய - கிருபை மிகுதிபோல், கூரெரி-மிகுந்த வோமாக்கினியை, தாயர் உள் மகிழ - தாயருள்ளமகிழும்படி, மும்முறை சுழன்று - மூன்றுமுறை சுற்றி.

(வி-ரை.) அகரம் - அசை, "அளிய மொய்ம்ப னிருந்தவப் பூம் பொழில்'' என்றாற்போல.

‘இல்லுறைகல்லின்’ என்பதுமுதல் ‘மேல்லெனச்சேர்த்தி’ என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) இல்லுறை கல்லின் - அம்மியில், வெள் மலர் பரப்பி - வெள்ளைப்பூவைப் பரப்ப, இலவு அலர் வாட்டிய-இலவம்பூவை வருத்திய, செங்கால் பிடித்து - சிவந்தகாலைப்பிடித்து, களி தூங்கு உளத்தொடும் - களிப்புச்செறிந்த வுள்ளத்தோடும், மெல்லென சேர்த்தி - பையவைத்து.

(வி-ரை.) இல்லுறைகல் - அம்மி. பரப்பி - பரப்ப. ஒடு - உடனிகழ்ச்சி. மெல்லெனவென்பது "பஞ்சிகொண் டூட்டினும் பையெனப் பையென வஞ்சிப்பின் வாங்குமடி'' என்றாற்போல நின்றது.

'இரண்டுபெயர்' என்பதுமுதல் 'காட்டி' என்பதுவரை.

(29—32 வரிகள்.)

(ப-ரை.) தோலா - தோலாத, இரண்டு பெயர் - இருவரும், காத்த - காத்ததனால் வந்த, கற்பு - கற்பினை, முகனுற காணும் - பொருந்தக்காணும், கரியோர் போல - சான்றோரினோர்போல, இடப்பாணிறுத்தி - தலைவி யிடப்பாகந் தனக்கு வலமாக நிறுத்தி, பக்கம் சூழ - சுற்றத்தார் சூழும்படி, வடமீன் காட்டி - அருந்ததியைக் காட்டி.

(வி-ரை.) எண்ணும்மை தொக்கது. காத்த கற்பு உண்டவெச்சில்போல நின்றது. தலைவன் கந்தருவ வழக்கம்போலப் பிரியாது வரைந்தமையானும் தலைவி பிறர் வரைவுக்கஞ்சி யறத்தொடு நிற்றலானும் இருவருங் காத்ததனால் வந்த கற்பென்றார். இது விபரீதவுவமை. உவமையாய் வருவதனைப் பொருளாக்கிப் பொருளை யுவமையாக்குதலின் களவின்வழி வந்த கற்புங் களவின்வழி வாராக் கற்புந் தம்மிடத்திற் பொருந்தக்காணுஞ் சான்றோரினோர்போல வடமீன்காட்டி யெனினுமாம். களவின்வழிவந்த கற்பு கந்திருவர் கற்பு, களவின்வழி வாராக்கற்பு உலகக்கற்பு. இது உலகக்கற்பன்மையானும் கந்தருவவழக்க மொத்தமையானும் 'கரியோர்போல' என்றார்.

'விளக்கணியெடுத்து' என்பதுமுதல் 'பணியளவும்' என்பதுவரை.

(32—34 வரிகள்.)

(ப-ரை.) விளக்கு அணி எடுத்து - ஆயிரம் பெருந்திரி யெடுத்து, குல வாழ்த்து விம்ம - குலத்தோர் வாழ்த்தும் வாழ்த்தொலி பெருக, மணவணி பக்கம் - திருமங்கலியத்தைப் பூட்டும் பகுதி, இக்கண்புலம் கொண்ட - இக்கண்ணிடங்கொண்ட, பணியளவும் - அமைதிமட்டும்.

(வி-ரை.) பக்கம் - பகுதி. பகுதிக் கிளவியைப் "பக்கச்சொல்" என்றார் தொல்காப்பியனாரும்.

'குங்கும' என்பதுமுதல் 'நித்தன்' என்பதுவரை.

(1—6 வரிகள்.)

(ப-ரை.) குங்கும கோட்டு - குங்குமமாத்தினது கொம்பில், உணங்கல் - வாடுதலையுடைய, அலர் கடுக்கும் - பூவைப்போலும்,

பங்குடை செங்கால் - வளைவினையுடைய செய்யகாலினையும், பாட்டு அளி - பாட்டினையுமுடைய வண்டினது, அரி பிடர்-அரிந்தாற்போலும் பிடரில், குருவில் தோய்ந்த - நிறமுமொளியும் பொருந்திய, அரிகெழு மரகதம் - மரகதமலையானது, கல் என கிடப்ப - கல்லென்று சொல்லும்படி கிடப்ப, சொல்லிய மேனி - சொன்ன திருமேனியினையுடைய, திரு நெடுமாலுக்கு - விட்டுணுவுக்கு, ஒருவிசை புரிந்து - ஒருதரம் விரும்பி, சோதி வளர் - சோதியாக வளராநின்ற, பாகம் ஈந்தருள் நித்தன் - வலப்பாகத்தைக்கொடுத்த நித்தன்.

(வி-ரை.) உணங்கல் கடுக்கும் பங்குடைச் செங்கால் - தொழிலும் பண்பும்பற்றியவுவமை. அரிபிடர் - "வடுத்தான் வகிர்கண்ணி" போன்றது. எண்ணும்மை தொக்கது. மரகதங் கல்லெனக் கிடப்பச் சொல்லியமேனி, "கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு தொல்கவின் வாடியதோள்" என்றாற்போலுங் குறிப்புச்சொல். தன் சோதிவளர்ந்த பக்கமதுவாதலின் வலமாயிற்று.

'முனிவர்' என்பதுமுதல் 'கண்டனர்போல்' என்பதுவரை.

(7—10 வரிகள்.)

(ப-ரை.) முனிவர் - பதஞ்சலி முதலோர், மனமும் கண்ணும் கனிய - மனமுங் கண்ணுங் கனியும்படி, ஏமுற - விரும்ப, வெள்ளியம் பொதுவில் - வெள்ளியம்பலத்தில், குனிக்கும் - நடிக்கும், புதிய நாயகன் - புதுமையையுடைய முதல்வன், பழமறை தலைவன் - பழைய வேதத்துக்கு முதன்மையானவன், கைஞ்ஞின்றவன் - ஒழுக்கத்தினின்றவனது, செம் கால் கண்டனர்போல் - சிவந்த பாதத்தைக் கண்டவர் தமக்குத்தாமே யுவமையாயினாற்போல.

'விளக்கமும்' என்பதுமுதல் 'இருந்தன' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) விளக்கமும் - காந்தியினாலும், புதுமையும் - (காணுந்தோறும்) புதுமையினாலும், அளப்பு இல் காட்சியும்-எண்ணப்படாத காட்சியாலும், (தமக்குத்தாமே யொப்பாய்) வேறுபடுத்துக் கூறுவது நீக்கமும் - வேறுப்பிலாமைக்கும், அறிவோர் காணும் - பெரியோர் காணும், குறியாயிருந்தன - இலக்காயிருந்தன.

(வி-ரை.) விளக்கத்தாலும் புதுமையாலும் காட்சியாலுமென்பன உருபு தொடர்ந்தடுக்கிய வேற்றுமைக்கிளவி. "ஒருசொன்னடைய பொருள்சென் மருங்கே" என்றவிதியான் "வரிமணித்தூதை

யும் பாவையும்'' என்றாற் போன்றன. இது எதுவோடு கூடிய பொது நீங்குவமை. பொருளடையை யுவமைக்கும் வருவிக்க.

இத்தழைகள் மங்கலியத்தைப் பூட்டும் பகுதி கண்ணிற் காணுமளவும் வேறுபாடிலாமைக்குப் பெரியோர் காணுமிலக்கா யிருந்தன வென வினைமுடிவு செய்க. தழைகள் வாடாது வைத்து அது பற்றுக் கோடாக வாற்றினளென எற்றமுகிழ்த்தத்தைப் பாங்கிகொண்டாடி மகிழ்ந்தாள். (கக)

19 திருக்கோவையார் கஎ-ம் செய்யுள்.

பிறைதொழுகென்றல்.

பிறைதொழுகென்றலென்பது—பிறையைக் காட்டித் தான் றொழுதுநின்று, நீயும் இதனைத் தொழுவாயாகவெனத் தோழி தலைமகளது புணர்ச்சிநினைவறியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மைவார் கருங்கண்ணி செங்காங் கூப்பு மறந்துமற்றப்
பொய்வான வரிற்புகாதுதன் பொற்கழற் கேயடியே
னுய்வான் புகவொளிர் தில்லைநின் றோன்சடை மேலதொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறுபிறைக்கே.

பிறைதொழு கென்று பேதை மாதரை
நறுநுதற் பாங்கி நாண நாட்டியது.

(ப-ரை.) மறந்தும் - மறந்தும், பொய் - பொய்மையையுடைய, மற்றவானவரில் - அவ்வானவரிடத்து, புகாது-புகாமல், தன்-தனது, பொன் கழற்கே - பொன்னாலியன்ற கழலையுடைய திருவடிகளிலே, அடியேன் - அடியேன், உய்வான் - உய்யவேண்டி, புக ஒளிர் - புக விளங்கும், தில்லை நின்றோன் - தில்லைக்கட் கட்புலனாய் நின்றவனுடைய, சடைமேலது - சடைக்கண்ணதாகிய (பிறையை), ஒத்து - நிகர்த்து, செவ்வான் அடைந்த-செக்கர்வானையடைந்த, பசுங்கதிர் - செவ்வியகதிரையுடைய, வெள்ளை-வெள்ளையாகிய, சிறு பிறைக்கு - சிறியபிறைக்கு, மை - மையையுடைய, வார்-நெடிய, கருங்கண்ணி - கரியகண்ணினையுடையாய், செங்கரம் - நினது செய்யகைகளை, கூப்பு - கூப்புவாயாக, எ-று.

(வி-ரை.) மறந்துமென்பது - ஈண்டு அறியாதுமென்னும்பொருட்டாய்நின்றது. மற்று - அசைநிலை. மற்றை யென்பது பாடமாயின் அல்லாத பொய்வானவரென்றுரைக்க. இனமல்லாயினும் இனமாக உலகத்தாரால் கூறப்படுதலின் அவ்வாறு கூறினர். ''மூவரே

ன்றே யெம்பிரானொடு மெண்ணி" என்பதூஉம் அக்கருத்தேபற்றி வந்தது. பிறர் கூறும் பெருமை அவர்க்கின்மையின், "பொய்வாணவர் என்றார். எனக்குப் பொறியுணர்வல்ல தின்மையின் கண்கவருந் திருமேனிகாட்டி என்னைவசித்தா னென்னுங் கருத்தான், "உய்வான் புகத்தில்லை நின்றேன்" என்றார். சடை - செக்கர்வானத்திற் குவமை.

நேரிசையாசிரியப்பா.

நெடுவெளி யுயிர்த்து மழைமத மொழுக்கி
யெழுமலை விழுமலை புடைமணி யாக
மீன்புகர் நிறைந்த வான்குஞ் சரமுகம்
வால்பெற முளைத்த கூன்கோ டானும்
பேச நீண்ட பன்மீ னிலைஇய
வானக் கடலிற் றோணிய தானுங்
கொழுநர்க் கூடுங் காம வுததியைக்
கரைவிட வுகைபு நாவா யானுங்
கள்ளமர் கோதையர் வெள்ளணி விழவி
லங்கணைக் கிழவன் காட்சியுண் மகிழ
விழைத்து வளைத்த கருப்புவில் லானு
நெடியோன் முதலாந் தேவர் கூடி
வாங்கிக் கடைந்த தேம்படு கடலி
னமுதுடன் றோன்றிய வுரிமை யானு
நின்றிரு நுதலை யொளிவிசும் புடலி
லாடிநிழற் காட்டிய பீடது வானும்
கரையற வணியு மானக் கலனுட்
டலைபெற விருந்த நிலைபுக ழானு
மண்ணக மனைத்து நிறைந்தபல் லுயிர்கட்
காயா வமுத மீகுத லானும்
பாற்கட லுறங்கு மாயவன் போலத்
தவள மாடத் தகன்முது குபற்றி
நெடுங்கார் கிடந்து படும்புனல் பிழியுங்
கூடல்வீற் றிருந்த நாடகக் கடவுள்
பொற்சுடர் விரித்த கொத்தலர் கொன்றையும்
தாளியு மறுகும் வாலுழை யெருக்கமுங்

கரந்தையும் வன்னியு மிடைந்தசெஞ் சடையி
லிரண்டைஞ் ஞூறு திரண்டமுக மெடுத்து
மட்புல னகழ்ந்து திக்குநிலை மயக்கிப்
புரியாக் கதமோ டொருபா லடங்குங்
கங்கையிற் படிந்த பொங்கு தவத்தானு
மந்நெடு வேணியிற் கண்ணியென விருந்து
தூற்றுமறு வொழிந்த வேற்றந் தானு
மணிவான் பெற்றவிப் பிறையைப்
பணிவாய் புரிந்து தாமரை மகளே.

நெடுவெளியுயிர்த்து - தாமரைமகளே. பகுதி - நாணநாட்டம். துறை - பிறைதொழுகென்றல்.

தாமரை மகளே.

(35-வது—வரி.)

(ப-ரை.) தாமரைமகளே - பதுமினியானவளே.

(வி-ரை.) திருமகளைப்போல்வாயெனக் குறிப்புவமையாக்கினு மமையும். மங்கலமாய்போழ்தின் முகமலர்ச்சி யுடைத்தாய் எல்லாரானும் நன்கு மதிக்கப்படுந்தன்மையு முடைத்தாய் விளங்குந் தாமரையைப்போலு மகளேயெனினு மமையும். இது தொழிலுவமை. பதுமினி - தாமரைமலரில் வாழ்பவள்.

'நெடுவெளி' என்பதுமுதல் 'கோடானும்' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(ப-ரை.) (பிறையானது) எழுமலை-உதயகிரி, விழுமலை-அத்தமனகிரி (இரண்டு), புடைமணியாக - புடைமணியாக, நெடுவெளி - நெடுவெளியாகிய வயிர்ப்பினை, உயிர்த்து-உயிர்த்து, மழை-மழையாகிய, மதம் ஒழுக்கி - மதத்தினைவிட்டு, மீன் - மீனாகிய, புகர் நிறைந்த - புகர் நிறைந்த, வான் - ஆகாயமாகிய, குஞ்சரமுகம்-யானைமுகத்தில், வால் பெற - தூய்மைபெற, முளைத்த - தோன்றிய, கூன் கோடானும் - கூன் கோடாயினும்.

(ப-ரை.) கூன் - வளைவு, பெயர்க்கடையாயிற்று. "உரையிடத் தியலு முடனிலையறிதல்" என்பதனால் தோன்றவேண்டி வளைந்த கோ டெனினுமாம். வியனிலை யுருவகம் "ஒன்றினங் கப்பலவிறையு முருபித்து முருபியாது மவயவியு முரைப்பது வியனிலை" என்றமை

யின் ஆகவுயிர்த்தெனப் பிறவினைகொண்டது. நிறைந்தவென்னும் பெயரெச்சம் நிலப்பெயர் கொண்டது. ஆயினு மென்பது ஆனு மெனக் குறைந்து நின்றது, "ஒன்றுனுந் தீச்சொல்" என்றாற்போல; இது மேல்வருவனவற்றிற்கு மொக்கும். எழுதல் - உதித்தல். விழுதல்-அத்தமித்தல். புடை - பக்கம். நெடுவெளி-பெருங்காற்று. உயிர்ப்பு - மூச்சு. மீன்-உடுக்கள். புகர் - புள்ளி.

'பேச' என்பதுமுதல் 'தோணியதானும்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) (அது) பேச நீண்ட - சொல்லத்தொலையாத, பன்மீன் நிலைஇய - பலமீன்கணிலைபெற்ற, வானக்கடலில் - வானாகிய கடலினின்றும், தோணியதானும் - (இருளாகிய பாசியைநீத் துலகத்தை விளக்கமாகிய கரையிலேற்றும்) தோணியதாயினும்.

(வி-ரை.) "வானக்கடலிற்றோணி" "எமப்புணையைச் சுடும்" என்றாற்போலு மேகதேசவுருவகம். பன்மீ னிரண்டிற்குஞ் சிலேடை. வானம் - ஆகாயம். தோணி - மரக்கலம்.

'கொழுநர்' என்பதுமுதல் 'நாவாயானும்' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) (அது) கொழுநர் கூடும் - தலைவரோடு கூடுதற்குக் காரணமாகிய, காமவுததியைவிட - காமமாகிய கடலை நீங்க, கரை உகையும் நாவாயானும் - (இன்பமாகிய) கரையிற் செலுத்துஞ் சம்பானாயினும்.

(வி-ரை.) இது வியனிலையுருவகம். உகைத்தல்-செலுத்தல்.

'கள்ளமர்' என்பதுமுதல் 'கருப்புவில்லானும்' என்பதுவரை.
(9—11 வரிகள்.)

(ப-ரை.) (அது) ஐங்கணைக்கிழவன்-பஞ்சபாணத்தையுடைய மன்மதன், கள் அமர் கோதையர் - மதுப்பொருந்திய கோதையினையுடையார், வெள்ளணி விழவில் - பிறந்தநாள் விழவில், உள் மகிழ இழைத்து - உள்ளமகிழும்படி செய்து, வளைத்த - வளைத்த, கருப்புவில் காட்சியானும் - கரும்புவில்போலக் காணப்பட்டதாயினும்.

(வி-ரை.) வெள்ளணிநாள் - பிறந்தநாள். வெள்ளணி நாளை 'வெள்ளணி' என்றார். "கரும்பகடுஞ் செம்பொன்னும் வெள்ளணி நாட் பெற்றார்" என்றார் வெண்பாமாலையினும்.

'நெடியோன்' என்பதுமுதல் 'உரிமையானும்' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) நெடியோன் முதலாம்-விட்டுணு முதலாகிய, தேவர் கூடி - தேவர்களெல்லாங் கூடி, வாங்கிக்கடைந்த - வலித்துக் கடைந்த, தேம்படு கடலின்-பாற்கடலில், அமுதுடன் தோன்றிய- அமுதமாகப் பிறந்த, உரிமையானும் - உரிமையினனும்.

(வி-ரை.) தேம்படுகடல் - பாற்கடல். பாலைத் தேம் என்றது ஆகுபெயர். நெடியோன் என்றது திரிவிக்கிரமனைக் குறித்தது.

'நின்' என்பதுமுதல் 'பீடதுவானும்' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-ரை.) நின் திரு நுதலை ஒளி - நின்றிருநுதலொளியை, ஆடி - கண்ணாடி, நிழல் காட்டிய - நிழலைத் தன்னிடத்திற் காட்டினாற்போல, விசும்பு உடலில் - விசும்பு தன்னிடத்தில், காட்டிய பீடதுவானும் - காட்டிய பெருமையானும்.

(வி-ரை.) எடுத்துக்காட்டுவமை. பீடது என்புழி அதுவென்பது பகுதிப்பொருள் விகுதி. நுதலொளியை யெனற்பாலது நுதலையொளியென வெழுத்துநிலை மாறிற்று.

'கரையறவணியும்' என்பதுமுதல் 'புகழானும்'என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை) கரையற அணியும் - எல்லையின்றியணியும், மானக் கலனுள் - பெருந்தன்மையையுடைய ஆபரணங்களில், தலைபெற இருந்த - தலையின்கணுண்டாம்படியிருந்த, நிலைபுகழானும் - நிலை புகழப்படுதலானும்.

(வி-ரை.) மானம்-கொண்டாட்டமுமாம்."மானவேலவன்மடன் மாமிசையானு மேறுவனென வுரைத்தது" என்றாற்போல. புகழானுமென்பது உடைதுஞ்சுவிற்றேனென்றாற்போன்றது.

'மண்ணகமனைத்தும்' என்பதுமுதல் 'ஈகுதலானும்' என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) மண்ணகம் அனைத்தும் - பூமியனைத்தும், நிறைந்த பல் உயிர்கட்கு-நிறைந்த பலவுயிர்கட்கு, ஆயா-விசாரித்து, அமுதம் ஈகுதலானும் - அமுதத்தைக் கொடுத்தலானும்.

(வி-ரை.) அனைத்து மென்னு மும்மை முற்றும்மை. ஆயா - செய்யாவென்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம்.

'பாற்கடல்' என்பதுமுதல் 'கடவுள்' என்பதுவரை.
(21—24 வரிகள்.)

(ப-ரை.) பாற்கடல் - திருப்பாற்கடலில், உறங்கும் - கண்டு யிலும், மாயவன்போல-விட்டுணு கிடந்தாற்போல, தவளமாடத்து-சுதை யழுத்திய மாடத்து, அகல்முதுகுபற்றி-அகன்ற விடத்தைப் பற்றி, நெடு கார் கிடந்து - மிகுந்த மேகங்கிடந்து, படும் புனல், பிழியும் - உண்டாம் புனலைச் சொரியும், கூடல் வீற்றிருந்த-மதுரை யில் வீற்றிருந்த, நாடகக்கடவுள் - நாடகத்தையுடைய கடவுள்.

(வி-ரை.) கிடந்ததற்குக் கிடந்தது தொழிலுவமை, மற்றது பண்புவமை. முதலொடு சினைக்கொற்றுமை யுண்மையா னுறங்கு மென்னும் பெயரெச்சத்திற்கு மாயவனென்பது வினைமுதற் பெய ராய் நின்றது. "தெறுங்கண்ணி வந்த சிற்றம்பலவன்" என்றாற் போலக் கண்ணென வொருசொல் வருவிக்க. பிழியுங்கூடல் - நிலப் பெயர்கொண்டது. நாடகமென்றது - கதை தழுவிவருங் கூடத்தை யன்று, கூத்தென்னும் பொதுமையை. நாடகம் நாடப்பட்ட வகைக் கூத் தெனினுமாம். அகக்கூத்தாவது - தேசிவடுகு சிங்களம் சாத்து விதமுதலிய மூன்றுகுணமும் பற்றி யாடுதலி னகமார்க்கமாயிற்று. "அகத்தொழிற் சுவையா னகமெனப்படுமே" "தேசிவடுகுடனே சிங் களமென் றேதினார், பேசிலிவை பிஞ்ஞகன் முன்னுடியவா— மோசையா, மொத்துடனே பாணியுடனே யிசையுடனே, வைத்து முதலாய் வந்திடும்" என்றாராகலின்.

'போர்ச்சுடர்' என்பதுமுதல் 'தவத்தானும்' என்பதுவரை.
(25—31 வரிகள்.)

(ப-ரை.) இரண்டைஞ்ஞூறு திரண்ட - ஆயிரமாகக் கூடிய, முகம்எடுத்து-முகமெடுத்து, மண்புலன்அகழ்ந்து-மண்ணினிடத்தை யகழ்ந்து, திக்கு நிலை மயக்கி - திக்கு நிலைகளைமயக்கி, புரியாக்கத மோடு - (ஒருகாலமும்) விளையாத கோபத்துடனே, சுடர் - ஒளி யினையுடைய, பொன் (கொத்து) - பொற்கொத்தை, விரித்த-விரித் தாற்போன்ற, கொத்தலர் - கொத்தலர்ந்த, கொன்றையும் - கொன் றைமாலையும், தாளியும் அறுகும் - தாளியுமறுகும், வாலுழை எருக்க மும் - வாலியவிதழினையுடைய வெருக்கமாலையும், காந்தையும் -

காந்தைமாலையும், வன்னியும் - வன்னிமாலையும், மிடைந்த - செறிந்த, செஞ்சடையில் - செஞ்சடையில், ஒருபால் அடங்கும் - ஒருபாலடங்கும், கங்கையில் படிந்த - கங்கையிலாடுதற்குக் காரணமாகிய, பொங்கு தவத்தானும் - மிகுந்த தவத்தினானும்.

(வி-ரை.) முற்றும்மை தொக்கது. விரித்தகொத்து - "வடுத்தான் வகிர்கண்ணி" போன்றது. மிடைந்தசென்னி - நிலப்பெயர் கொண்டது. செஞ்சடை - பெயர்நிலைக்கிளவி. அது 'பெயர்நிலைக் கிளவியினாகுனவும்" என்பதனானறிக.

'அங்நெடுவேணியில்' என்பதுமுதல் 'ஏற்றத்தானும்' என்பதுவரை.

(32—33 வரிகள்.)

(ப-ரை.) அங்நெடு வேணியில் - (அக் கங்கையமைந்த) நீண்ட சடையில், கண்ணி எனவிருந்து - சூடும்பூவாகவிருந்து, தூற்றும் - (உலகம்) தூற்றுதற்குக் (காரணமாகிய), மறு ஒழிந்த - மறுவொழிந்ததனால்வந்த, ஏற்றத்தானும் - ஏற்றத்தானும்.

(வி-ரை.) மதியைக் கண்ணியாகக் கூறினார். 'செழுநீர் மதிக் கண்ணிச் சிற்றம்பலவனே கொய்ம்மலர்க் கொன்றைமாலைக் குளிர் மதிக் கண்ணியார்க்கு' என்றாற்போல. தூற்று மறுநிலம் - பூத்த மரம்போன்றது. ஒழிந்தவேற்றம் - உண்டவெச்சில்போன்றது.

'அணிவான்' என்பதுமுதல் 'புரிந்து' என்பதுவரை.

(34—35 வரிகள்.)

(ப-ரை.) அணி வான் பெற்ற-அழகியவானை யிடமாகப்பெற்ற, இப்பிறையை - இப்பிறையை, புரிந்து - விரும்பி, பணிவாய் - பணிவாயாக.

(வி-ரை.) தாமரைமகளே ! இப்பிறையானது கோடாயினுந் தோணியாயினு நாவாயாயினும் விற்போலக் காணப்படுவதாயினுந் தொழுதற் கமையாதெனினு முரிமையினாலும் பெருமையினாலும் புகழப்படுதலினாலு மீகுதலானுந் தவத்தினாலு மேற்றத்தினாலும் பணிவாயென வினைமுடிவு செய்க. (௨0)

20 திருக்கோவையார் ௩௱௫-ம் செய்யுள்.

ஆற்றாமைகூறல்.

ஆற்றாமைகூறலென்பது — தலைமகளது வருத்தங்கண்ட தோழி, காதலர் கானகத்தையுடைய சுரத்தைப்போய்ப் பொரு

டேட நினையுாநின்றாரென்று யான் சொல்லுமளவில், அவளது முலையுங் கண்ணும் பொன்னும் முத்துந்தாராநின்றன; இனி நீ சேட்சென்று தேடும்பொருள் யாதோவெனத் தோழி தலைமகனுக்கு அவளது பிரிவாற்றாமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

வானக் கடிமதிற் றில்லையெங் கூத்தனை யேத்தலர்போற்
கானக் கடஞ்செல்வர் காதல ரென்னக் கதிர்முலைகண்
மானக் கனகந் தருமலர்க்கண் கண்முத்தம் வளர்க்குந்
தேனக்க தார்மன்ன னென்னோ வினிச்சென்று தேர்பொருளே.

ஏழை யழுங்கத்
தோழி சொல்லியது.

(ப-ரை.) வானம் - முகில்களை யுடையதாகிய, கடி - காவலை யுடைய, மதில் - மதிலாற் சூழப்பட்ட, தில்லை - தில்லையில், எம் கூத்தனை ஏத்தலர்போல் - எங்கூத்தனை யேத்தாதவர்போல, காதலர் - காதலர், கானக்கடம் செல்வர்என்ன - கானகத்தையுடைய சுரத்தைச் செல்வரென்று சொல்ல, கதிர் முலைகள் - ஒளியையுடைய முலைகள், மானம் - கொண்டாடப்படும், கனகம் - பொன்னை, தரும் - தாரா நின்றன; மலர் கண்கள் - மலர்போலுங் கண்கள், முத்தம் - முத்தத்தை, வளர்க்கும் - பெருகவுண்டாக்காநின்றன; (அதனால்) தேனக்க - தேனொடு மலர்ந்த, தார்மன்னன் - தாரையுடையமன்னன், இனி சென்று தேர் பொருள் என்னோ - இனிச்சேட்சென்று தேடும்பொருள் யாது, எ-று.

(வி-ரை.) மானமென்றது அளவை, அளவையென்பது பிரமாணம். மாற்றாணிப் பொன்னென் றுரைப்பினு மமையும். மன்னனென்பது ஈண்டு முன்னிலைக்கண் வந்தது. இயல்பு விளியென்பாருமுளர். மெய்ப்பாடு - இளிவரலைச் சார்ந்த பெருமிதம். பயன் - அது.

நேரிசையாசிரியப்பா.

பொருப்புமலி தோளினு நெருப்புமிழ் வேலினுஞ்
செந்திரு மகளைச் செயங்கொண் மங்கையை
வற்றாக் காதலிற் கொண்ட மதியன்றிக்
களவலர் தூற்றத் தளவுகொடி நடுங்க
வேயுளம் பட்டுப் பூவைகள் கறுக்கத்
தண்டா மயல்கொடு வண்டோரந் தரற்றக்

காலங் கருதித் தோன்றினை குலைப்பத்
துன்பு பசப்பூருங் கண்ணிழ றன்னைத்
திருமல ரெடுத்துக் கொன்றை காட்ட
விறைவளை நில்லா தென்பன நிலைக்கக்
கோடல் வளைந்த வள்ளல ருகுப்பக்
கண்டுளி துளிக்குஞ் சாயாப் பையுளைக்
கூறுபட நாடி யாசையொடு மயங்கிக்
கருவிளை மலர்நீ ரருகுநின் றுகுப்பப்
பேரழல் வாடை யாருயிர் தடவ
விளைக்குங் கால முளைத்த காலை
யன்புஞ் சூறு நண்புநடு நிலையுந்
தடையா வறிவு முடையோய் நீயே
யெழுந்து காட்டிப் பாடுசெய் கதிர்போற்
றோன்றி நில்லா நிலைப்பொருள் செய்ய
மருங்கிற் பாதி தருந்துகில் புனைந்தும்
விளைவய லொடுங்கு முதிர்நெல் லுணவினுந்
தம்மில் வீழுநர்க் கின்பமென் றறிந்துந்
தண்மதி கடுஞ்சுடர் வெவ்வழல் கண்வைத்
தளவாப் பாத மண்பரப் பாகத்
தனிநெடு விசும்பு திருவுட லாக
விருந்திசைப் போக்குப் பெருந்தோ ளாக
வழுவறு திருமறை யோசைக ளனைத்து
மொழிதர நிகழும் வார்த்தை யாக
வுண்ணிறைந் துழலும் பாடிரண் டுயிர்ப்புப்
பகலிர வொடுங்கா விடுவளி யாக
வடுபடைப் பூழியன் கடுமுரண் பற்றி
யிட்டவெங் கொடுஞ்சிறைப் பட்ட கார்க்குலந்
தளையொடு நிறைநீர் விடுவன போலப்
புரசையொடு பாச மறவுட னிமிர்ந்து
கூடமுங் கந்துஞ் சேறுநின் றலைப்ப
மூன்றுமத நெடும்புனல் கான்றுமய லுவட்டி
யேழுயர் கரித்திரள் கதமொடு பிளிறும்

பெருநகர்க் கூட லுறைதரு கடவுளை
நிறையப் பேசாக் குறையினர் போலவுங்
கல்லா மனனினுஞ் செல்லுதி பெரும
விளமையு மின்பமும் வளனுங் காட்சியும்
பின்புற நேடின முன்பவை யன்றி
நுனித்த மேனித் திருவினட் கடைத்த
வினைதரு மடைவி னல்லது
புனையக் காணேன் சொல்லா யினவே.

பொருப்புமலிதோளினும் - சொல்லாயினவே. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - ஆற்றாமைகூறல்.

'பொருப்பு' என்பதுமுதல் 'அன்றி' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) பொருப்பு - மலையினதுயர்ச்சியினும், மலி - மிகுந்த, தோளினும்-தோளின்கண்ணும், நெருப்பு உமிழ்-அக்கினியைக் கக்காநின்ற, வேலினும் - வேலின்கண்ணும், வற்றா காதலில் - தணியாத காதலால், செம் திருமகளை-சிவந்த திருமகளையும், செயங்கொள் மங்கையை - வீரமகளையும், கொண்ட மதியன்றி-கொண்டதனால் வந்த மதியன்றி.

(வி-ரை.) பொருப்பு-ஆகுபெயர். நீக்கப்பொருட்கண்வரு மின்னுஞ் சிறப்பும்மையுந் தொக்கது. இன்னிரண்டுஞ் சாரியை. ஏழாமுருபு விரிக்க.

'அன்பும்' என்பதுமுதல் 'நீயே' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) அன்பும் - (எல்லாவுயிர்கண்மேலுஞ் செல்லும் அருள் விளைக்கும் பயனும் இல்லறமினிதுநடத்தற் பயனுந்தரும்), அன்பும், சூளும் - நின்னிற்பிரியேனென்ற ஆணையும், நண்பும் - காதலுடைமையும், நடுநிலையும் - (பகை நொதும னண்பென்னு மூன்றினுமறத்தின்வழுவாது) ஒப்புநிற்கு நிலைமையும், தடையா அறிவும் - கல்வி கேள்விகளிற் றடைபடாவறிவும், உடையோய் நீயே - உடையை நீயாதலால்.

(வி-ரை.) தடைபடாவறிவு - உண்மையறிவு. கல்வியறிவு-அற முதலிய நூல்களைக் கற்றவறிவு. கேள்வியறிவு-அந்நூற்பொருளைக் கற்றறிந்தார் கூறக்கேட்டவறிவு.

'மருங்கிற்பாதி' என்பதுமுதல் 'அறிந்தும்' என்பதுவரை.
(21—23 வரிகள்.)

(ப-ரை.) மருங்கில் பாதி தரும் - மருங்குலிற்பாதி வெளிகாட்டும், துகில் புனைந்தும் - துகிலையுடுத்தும், விளைவயலொடுங்கும் - விளைந்தொடுங்கும் வயலில், உதிர் நெல் - உதிர்ந்த நெல்லாலுண்டாகிய, உணவினும் - உணவினாலும், தம்மில் வீழுநர்க்கு - தம்மிலொழுக்கத்தை விரும்பினவர்க்கு, இன்பமென்று அறிந்தும்-இன்பமென்றறிந்தும்.

(வி-ரை.) நீயேயென்னு மேகாரத்தைப் பிரித்து விரும்பினர்க்கேயெனத் தேற்றேகாரமாகக் கூட்டுக. உம்மையெச்சவும்மை. மற்றது கையாற் பொத்தினமை தோன்றிற்று.

'இளமையும்' என்பதுமுதல் 'அன்றி' என்பதுவரை.
(42—43 வரிகள்.)

(ப-ரை.) நேடின முன்பவை அன்றி - பண்டு தேடின பொருளன்றி, இளமையும் இன்பமும் - இளமையுமின்பமும்; வளனும் - பெற்ற செல்வமும், காட்சியும் - காட்சியும், பின்புற - பிற்பட.

'எழுந்து' என்பதுமுதல் 'செய்ய' என்பதுவரை.
(19—20 வரிகள்.)

(ப-ரை.) எழுந்து - காலையிலெழுந்து, காட்டி - தன் கிரணங்காட்டி, பாடு செய் கதிர்போல் - மாலையிற்படுமாதித்தனைப்போல, தோன்றி நில்லா-உண்டாய்நில்லாத, நிலைப்பொருள் செய்ய-பொருளைத்தேட.

'தண்மதி' என்பதுமுதல் 'விடுவெளியாக' என்பதுவரை.
(24—31 வரிகள்.)

(ப-ரை.) தண்மதி - குளிர்ந்த மதியினையும், கடுஞ்சுடர்-கடிய சுடரினையுடையவாதித்தனையும், வெவ்வழல் - வெவ்வியவழலினையும், கண் வைத்து - கண்ணாகப்பெற்று, மண் பரப்பு - பூமிப்பரப்பு, அளவா-எவராலு மளக்கப்படாத, பாதமாக-திருவடியாக, தனி நெடுவிசும்பு - ஒப்பற்ற நெடியவாகாயம், திரு உடலாக - திருவடிவாக,

இருந்திசைப்போக்கு - பெருமையினையுடைய திசைப்பரப்பு, பெருந்தோள் ஆக-பெரியதோளாக, வழு அறு திரு மறை-குற்றமற்ற அழகிய வேதத்தின், ஓசைகள் அனைத்தும் - சுரங்கணன்கும், மொழிதாகிசழும்-சொல்லகிசழும், வார்த்தையாக-வார்த்தையாக, பகல் இரவு ஒடுங்கா - பகலுமிரவு மொடுங்காது, விடு வளி - விடுமுயிர்ப்பு, உள் நிறைந்து - உள்ளே நிறைந்து, உழலும் - போக்குவரவுசெய்யும், பாடிரண்டு உயிர்ப்பாக - இரண்டுபக்கத்துயிர்ப்பாக.

'அடுபடை' என்பதுமுதல் 'கடவுளை' என்பதுவரை.
(32—39 வரிகள்.)

(ப-ரை.) அடு படை - சத்துருக்களைக் கொல்லும் படையினையுடைய, பூழியன் - பாண்டியன், கடு முரண்பற்றி-(இந்திரன் விலக்கிய) கொடிய மாறுபாட்டைப்பற்றி, இட்ட வெம் கொடுஞ்சிறை - செய்த வெவ்விதாய கொடியசிறையில், பட்ட கார் குலம் - அகப்பட்ட மேகத்திரளான, தளையொடு-விலங்குடனே, நிறை நீர்-மிகுந்த புனலை, விடுவனபோல - சொரிவனபோல, எழு உயர் கரி திரள்-எழுமுழமுயர்ந்தயானைத்திரளானது, புரசையொடு - கழுத்திலிடுகயிறும், பாசம் - பாசக்கயிறும், அற - அறும்படி, உடல் நிமிர்ந்து - உடனிமிர்ந்து, கூடமும் கந்தும்-தாஞ்சேரிடமுந் தறியும், சேறுநின்று - சேறுபட்டு, அலைப்ப - சேர்ந்தோரையலைப்ப, மூன்று மத நெடு புனல்-மும்மதமாகிய மிகுந்தபுனலை, கான்று - விட்டு, மயல் உவட்டி - மயக்கமிகுந்து, கதமொடு பிளிறும் - கோபத்தான் முழங்கும், கூடல் பெருநகர் - கூடலாகிய பெரியநகரில், உறைதரு கடவுளை - பொருந்துங் கடவுளை.

(வி-ரை.) தளையொடு வென்ற ஒடு வேறுவினையொடு, புரசையொடு வென்ற தெண்ணொடு, "முரசொடு வரிவளை முழங்கியார்த்தன" என்றாற்போல. எழென்பது - ஆகுபெயர். யானைக்குத் தன்னிலக்கண மேழுமுழவுயரமாதலின் 'எழுயர் கரித்திரள்' என்றார். கதமொடு வென்னு மொடுவொருயிற்று. ஆக வுறைதருங் கடவுளென்கியையும்.

'நிறையப்பேசா' என்பதுமுதல் 'செல்லுதிபெரும்' என்பதுவரை.
(40—41 வரிகள்.)

(ப-ரை.) நிறைய பேசா-முற்றுந்துதியாததனால் வந்த, குறையினர்போலவும் - குறையுடையார்போலவும், கல்லா மனனினும் -

ஒருவழிப்படக் கல்லாத சயவர்மனத்தைப்போலவும், செல்லுதி பெரும - குறையுடையையா யொருவழிப்படாது சுரத்திற் செல்லு கின்றனை.

களவலர் தூற்றத் தளவுகொடி நடுங்க.

(4—வது வரி.)

(ப-ரை.) களவலர் தூற்ற - களவலரைச் சொரியாநிற்ப, தளவு கொடி நடுங்க - முல்லைக்கொடியசைய.

(வி-ரை.) நடுங்கவென்னுஞ் சினைவினை முதன்மேனின்றது.

வேயுளம் பட்டுப் பூவைகண் கறுக்க.

(5—வது வரி.)

(ப-ரை.) வேயுளம் பட்டு பூவைகண் கறுக்க - காயாப் பூத்துத் தன்னிடங் கறுப்ப.

(வி-ரை.) வேய்தல் - மலர்தல், அது வேயுளாயிற்று. செய்தல் - விளைதல். பாய்தல்-"செய்யுள் விளையுள்பாய்த்துளானுற்போல. "மலையினோர் முல்லை மலர்வேய்ந்து வாய்ந்த" என்றார் சிற்றகத்தியத்தினும். காயாமலரைச் சூடுதல்போன்று கண் கறுப்ப வெனினுமாம். "வீறுசால்" என்னும் பாலைக்கலியில் "மரமெல்லா மலர்வேய" என்றாற்போல. அம் - அசை.

தண்டா மயல்கொடு வண்டுபரந் தரற்ற.

(6—வது வரி.)

(ப-ரை.) வண்டு - வண்டுகள், தண்டா மயல் கொடு - நீங்காத விருப்பங்கொண்டு, பரந்து அரற்ற - எங்கும் பரந்துபாட.

காலங் கருதித் தோன்றிகை குலைப்ப.

(7—வது வரி.)

(ப-ரை.) தோன்றி - தோன்றியானது, காலம் கருதி - காலத்தைக்கருதி, கை குலைப்ப - கைவிரிந்தாற்போல மலர.

(வி-ரை.) குலைப்பவென்றது-"முல்லை முறுவலிப்ப மொய்காந்தள் கைகுலைப்ப" என்றாற்போல.

'துன்பு' என்பதுமுதல் 'காட்ட' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) கொன்றை - கொன்றையானது, கண் - கண்ணில், துன்பு பசப்பு ஊரும் - துன்பமாகிய பசலையாகப் பரக்கும், நிழல் தன்னை - ஒளியை, திருமலர் எடுத்து காட்ட - அழகிய மலர்பூத்துக் காட்ட.

(வி-ரை.) "பூப்போலுண்கண் பொன்போர்த்தனவே" என்றூர் ஐங்குறுநூற்றினும்.

'இறை' என்பதுமுதல் 'வள்ளலருகுப்ப' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) கோடல் - கோடல்கள், இறை-கையின்கணணிந்த, வளை நில்லாது என்பன நிலைக்க - வளைகணில்லாதென்று சொல்லுவனபோல, வளைந்த - வளைந்த, வள் அலர் உகுப்ப - வளவியவலர் களைச்சிந்த.

(வி-ரை.) இறை - ஆகுபெயர். "இறைவளை யாழ்தழீஇ" என்றற்போல. 'உண்ட பட தோய" என்பனபோல நிலைக்கவென்பது உவமவுருபு. அள்ளலர் - கூரியவலருமாம்.

'கண்' என்பதுமுதல் 'உகுப்ப' என்பதுவரை.
(12—14 வரிகள்.)

(ப-ரை.) கருவிளைமலர்-கருவிளைமலர்கள், அருகுநின்று-அருகு நின்று, கண் - கண்ணனது, துளி துளிக்கும் - துளியைச் சிந்துதற்குக் காரணமாகிய, சாயா பையுளை - கெடாத துன்பத்தை, கூறு பட நாடி - பகுதிப்படப் பார்த்து, ஆசையொடு மயங்கி - திக்கொடு பொருந்தி, நீர் உகுப்ப - நீரினைச்சிந்த.

(வி-ரை.) இது தற்குறிப்பேற்றம். ஒடு - வேறுவினையொடு நீர்கள்-அது திசைச்சொல்.

பேரழல் வாடை யாருயிர் தடவ.
(15—வது வரி).

(வி-ரை.) ஆருயிர் - பெறுதற்கரியவுயிரை, பேர் அழல் வாடை தடவ - மிகுந்த தழலோடுகூடிய வாடை வருட.

விளைக்குங் கால முளைத்த காலை.
(16—வது வரி).

(ப-ரை.) விளைக்கும் காலம் - உண்டாக்குங்காலம், முளைத்த காலை - தோன்றியகாலத்து.

(வி-ரை.) செயவெனெச்சவடுக்கு விளைக்குமென்னும் பெயரெச்சங் கொண்டது.

'நுனித்தமேனி' என்பதுமுதல் 'சொல்லாயினவே' என்பதுவரை.
(44—46 வரிகள்.)

(ப-ரை.) நுனித்த மேனி திருவினட்கு - கூர்த்தவுருவழகையுடையாட்கு, அடைத்த - அமைத்த, வினைதரும் அடைவின் அல்லது-விதிதரு முறைமையன்றி, சொல்லாயின-சொல்லுதற்கமைந்த காரியங்களை, புனைய - புனைந்துசொல்ல, காணேன் - யானறியேன்.

(வி-ரை.) இது எதிர்வினைவிலக்கென்னு மலங்காரம். நுனித்தலென்று பாடமாயி னுரிமையாகிய வினையென்க. ஆயின - தொழிற்பெயர். ஏகாரம்-ஈற்றசை.

பெரும! நீ தோளினும் வேலினுங்கொண்ட மதியன்றி யன்பு முதலியனவு முடையையாதலா லிவ்வொழுக்கத்தை விரும்பினர்க்கே யின்பமென் றறிந்து மிளமை முதலிய பிற்படப் பொருளைத் தேடச் செல்லுகின்றனை யதனால் யான் கார்தோன்றியகாலத் திவட்கமைந்த காரியங்களைச் சொல்ல வறியேனென வினைமுடிவுசெய்க.

எழுந்து காட்டிப் பாதிசெய் கதிர்போற் றோன்றி யென்பது - "நாளது சின்மை கடைநாளிதுவென் றறிந்தாரு மில்லை" என்றாற் போலவும், "உண்டோவுளநாள்" என்றாற்போலவும், காலையிலுதித்த வாதித்தன்மாலையின் மறைந்தா னென்றாரே லெல்லாரு மிறப்பரென் றமையினுளது சின்மையாயிற்று. "புறந்தந் திருளிரியப் பொன்னேமியுய்த்துச், சிறந்த வொளிவளர்க்குந் தேரோன் - மறைந்தாற், புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி, யிறவாது வாழ்கின்றார் யார்". என்றார் பிறரும். இளமையுங் காமமும் பிற்படவென்பது-"இளமையருமை இளமையுங் காமமு நின்பாணில்லா" என்றாற்போல. தடையா வறிவு முடையோ யென்பது-"தாளாண்பக்கம் அறிவினுன் முயலுதலின் உரனுடை யுள்ளத்தை" என்றாற்போல. நில்லா நிலைப்பொருள் செய்யவென்பது - தகுதியதமைதிதேடும் பொருண்

முறைமையிற் றேடவேண்டுதலினது பாணிக்கு மென்றலின் சென்ரோர் முகப்பப் பொருளுங்கிடவா வென்றாற்போல. மருங்கிற் ப'தி தருந்துகில் புனைந்துஎன்பது-"இன்மைய திழிவு,ஒரோகை தம்முட்டஇழீயோ ரோகையொன்றன் கூறுடை யுடுப்பவரேயானுயிம்" என்றாற்போல. நேடினமுன்பவையன்றாவென்பது-"உடைமைய துயர்ச்சி இளமையுங் காமமு மோராங்கு பெற்றார் வளமைவிழை தக்கதுண்டோ"என்றாற்போல.செல்லுதிபெருமஎன்பது-"அன்பினதகலம் பிரிந்துறைந் தன்புபெருத்தல் வேண்டா முதிர்நெல் லுணவினுந் தம்மில் வீழுநற் கின்பமென்றலின் பிரிந்திறைசூழா தியைய" என்றாற்போலவும், "சிறுநனி நீதுஞ்சி யொப்பினு மஞ்சு நறுநுத னீத்துப் பொருள்வயிற் செல்வோய்" என்றாற்போலவுமாம். துன்புபசப்பூருங் கண்ணிழறன்னைத் திருமல ரெடுத்துக் கொன்றை காட்டவென்பதும், இறைவளை நில்லா தென்பண நிலைக்கக் கோடல் வளைந்த வள்ளல ருகுப்ப வென்பதும்,கண்டுளி துளிக்குஞ் சாயாப் பையுளைக் கூறுபட நாடி யாசையொடு மயங்கிக் கருவிளை மலர்நீ ருகுகின்றுகுப்பவென்பதும்,பொழல் வாடை யாருயிர் தடவ என்பதும், "அகற்சிய தருமை என்றே ளெழுதிய தொய்யிலும் யாழ்கின் மைந்துடைமார்பிற்சுணங்கு நினைத்துக்காண்"என்றாற்போலவு ,"இடைமுலைக் கோதை குழைய முயங்கு முறைநாள் கழிந லுரிமைக் காணடை" என்றாற் போலவும், இது "நிகழ்ந்தது கூறி நிலையலுந் திணையே" யென்றமையான் முன்னொருகாற் றலைவன் கூறக்கேட்டுத் தோழியதனை யுட்கொண்டு கூறினுள். நாளது சின்மை முதலியவற்றிற்குக் கூறிய வுதாரணங் கலித்தொகையிற் பாலைத்திணையிற் காண்க. "ஒன்றாத்தமரினும் பருவத்துஞ் சுரத்தும்" என்னு மகத்திணைச் சூத்திரத்தில் "நாளது சின்மையு மிளமைய தருமையுந், தாளாண் பக்கமுந் தகுதிய தமைதியு,மின்மைய திழிவுமுடைமைய துயர்ச்சியு,மன்பின தகலமு மகற்சிய தருமையும்" என்றார் தொல்காப்பியனார். (உக)

திருக்கோவையார் களஎ-ம் செய்யுள்.

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

தன்னுட்கையாறெய்திடுகிளவியென்பது—தலைமகனைக் காணலுற்று வருந்தாநின்ற தலைமகள், இக்கண்டல் சான்றாகக்கொண்டு இப்புன்னையிடத்துக் கலந்த கள்வரை இவ்விடத்து வரக்கண்டிலையோ, துணையில்லாதேற்கு ஒருசொல் லருளாயென்று தன்னுட் கையாற்றை மதியொடுகூறி வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

விண்டலை யாவர்க்கும் வேந்தர்வண் டில்லைமெல் லங்கழிசூழ்
கண்டலை யேகரி யாக்கன்னிப் புன்னைக் கலந்தகள்வர்
கண்டிலை யேவரக் கங்குலெல் லாமங்குல் வாய்விளக்கு
மண்டல மேபணி யாய்தமி யேற்கொரு வாசகமே.

மின்னுப் புரையு மந்நுண் மருங்கு
றன்னுட் கையா றெய்திடு கிளவி.

(ப-ரை.) கங்குல் எல்லாம் - கங்குன் முழுதும், மங்குல்வாய் - ஆகாயத்திடத்தை, விளக்கும் மண்டலமே - விளக்கு மண்டலமே, விண்டலை யாவர்க்கும் - விண்ணிடத்துள்ளாராகிய எல்லார்க்கும், வேந்தர் - வேந்தராயுள்ளாரது, வண் தில்லை வளவிய தில்லைவரைப்பில், மெல் அம் கழி சூழ் - மெல்லிய கழிசூழ்ந்த, கண்டலையே கரி யா - கண்டலே சான்றாக, கன்னி புன்னை - இளைய புன்னைக்கண், கலந்த கள்வர் - (என்னைச்) கலந்த கள்வர், வர கண்டிலையே - (ஒருகால்) வரக்கண்டிலையே, தமியேற்கு-துணையில்லாதேற்கு, ஒரு வாசகம் - ஒருசொல், பணியாய் - அருள்வாய், எ - று.

(வி-ரை.) மெல்லங்கழி யென்பதூஉ மொருபண்புத்தொகை முடிபு. மென்மை - நிலத்தின் மென்மை. கழிசூழ் புன்னையெனக் கூட்டுக. கண்டலையென்றவை காரம் அசைநிலை. கரியாகக் கொண்டென வொருசொல் வருவித்து இரண்டாவதாக வுரைப்பினுமமையும். எஞ்ஞான்று மனத்தறொன்றுகந் தாமொன்று மொழிந்தாரென்னுங் கருத்தால் 'கள்வர்'என்றாள். கள்வர்க் கண்டிலை யென்பது பாடமாயின் இரண்டாமுருபுவிரிக்க. கங்குலெல்லாங் கண்டிலையே யென்றுகூட்டி யுரைப்பினுமமையும். கண்டே கூறுகின்றிலையென்னு முணர்வினளாகலின் எய்திடுகிளவியாயிற்று. அந்நுண்மருங்குல் கிளவி யென்றியையும். மெய்ப்பாடு-அழுகை. பயன்-அயர்வுயிர்த்தல்.

நேரிசையாசிரியப்பா.

நீர்நிலை நின்று கால்கறுத் தெழுந்து
திக்குநிலை படர்ந்த முகிற்பா சடையு
மிடை யிடை யுகளு மீனுமீறுஞ்
செம்முகிற் பழநுரை வெண்முகிற் புதுநுரை
பெங்குஞ் சிதறிப் பொங்கியெழு வனப்பும்
பலதலை வைத்து முடியாது பாயு
மெங்குமுகம் வைத்த கங்கைக் காலுங்

கொண்டுகுளிர் பரந்த மங்குல்வா யிக்குண்
முயலெனும் வண்டிண வமுதநற வொழுக்கித்
தேவர் மங்கையர் மலர்முகம் பழித்துக்
குறையாப் பாண்டில் வெண்மையின் மலர்ந்த
மதித்தா மரையே மயங்கிய வொருவே
ணின்பாற் கேட்கு மளிமொழி யொன்றுள
மீன்பாய்ந்து மறிக்கத் திரையிடை மயங்கிச்
சூல்வயி றுளைந்து வளைகிடந்து முரலும்
புன்னையம் பொதும்பிற் றம்முடை நெஞ்சமு
மீனுண வுள்ளி யிருந்தவெண் குருகெனச்
சோறுநறை கான்ற கைதைய மலரும்
பலதலை யரக்கர் பேரணி போல
மருங்குகூண் டெழுந்து கருங்காய் நெருங்கி
விளைகட் சுமந்த தலைவிரி பெண்ணையு
மின்னுங் காணுக் காட்சிகொண் டிருந்த
வன்னத் திரளும் பெருங்கரி யாகச்
சொல்லா வின்பமு முயிருறத் தந்து
நாளிழைத் திருக்குஞ் செயிர்கொளற் றந்து
மெய்யுறத் தணந்த பொய்யின ரின்று
நெடுமலை பெற்ற வொருமகள் காண
நான்முக விதியை தாளந் தாக்க
வந்தநான் முகனை யுந்தி பூத்தோன்
விசித்துமிறை பாசத் திடக்கை யிசைப்ப
மூன்றுபுரத் தொன்றி லரசுடை வாணன்
மேருக் கிளைத்த தோளா யிரத்தொடு
மெழுகடல் கிளர்ந்த திரள்கலி யடங்க
முகம்வே றிசைக்குங் குடமுழ விரட்டப்
புட்காற் றும்புரு மணக்கந் திருவர்
நான்மறைப் பயனு மேழிசை யமைத்துச்
சருக்கரைக் குன்றிற் றேன்மழை நான்றென
வேழு முனிவர்க டாமு மாதவ
ரன்பின ருள்ளமோ டென்புகரைந் துருக

விரனுன் கமைத்த வணிகுரல் வீங்காது
நான்மறை துள்ளும் வாய்பிள வாது
காட்டியுள் ளுணர்த்து நோக்கமா டாது
பிதிர்க னன்மணி சூழ்முடி நடுங்காது
வயிறுகுழி வாங்கி யழுமுகங் காட்டாது
நாசி காகுளி வெடிகுரல் வெள்ளை
பேசாக் கீழிசை யொருபுற மொட்ட
நெட்டுயிர்ப் பெறிதல் லெறிந்துநின் றிரட்ட
லோசை யிழைத்தல் கழிபோக் கென்னப்
பேசுறு குற்ற மாசையொடு மாற்றி
வண்டின் றுரியுங் கஞ்ச நாதமுஞ்
சிரல்வா னிலையுங் கழையிலை வீழ்வது
மருவி யோசையு முழவின் முழக்கமும்
வலம்புரிச் சத்தமும் வெருகின் புணர்ச்சியு
மின்னுமென் றிசைப்பப் பன்னிய விதியொடு
மந்தர மத்திமை தாரமிவை மூன்றிற்
றுள்ள றாங்க றெள்ளிதின் மெலிதல்
கூடிய கான வன்பொடு பரவப்
பூதந் துள்ளப் பேய்கை மறிப்ப
வெங்குள வுயிரு மின்பநிறைந் தாட
நாடக விதியோ டாடிய பெருமான்
மதுரை மாநகர்ச் செழிய னாகிக்
கதிர்முடி கவித்த விறைவன் மாமணிக்
காறலைக் கொள்ளாக் கையினர் போல
நீங்கினர் போக்கு மீங்குழி வருவதுங்
கண்டது கூறுதி யாயி
னெண்டகப் போற்றி நின்கால் வணங்குதுமே.

நீர்நிலைநின்று - நின்றுள்வணங்குதுமே. பருதி - இரவிற்குறி. துறை - தன்னுட்கையாறெய்திடுகிளவி.

'நீர்நிலை' என்பதுமுதல் 'பாசடையும்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நீர் நிலை-கடலினிடத்து, நின்று-இடையறுதுண்டு நின்று, கால் கறுத்து எழுந்து-இடங்கறுத்துயர்ந்து, திக்கு நிலை படர்ந்த - திசைகளை நிலையாகச்சென்ற, முகில் பாசடையும் - மேகமாகிய பசியவிலையையும்.

(வி-ரை.) நிலைநீர்-கடல், அது பின்மொழி நிலையாய் நீர்நிலையாயிற்று; அடைகரைபோல நீர்நிலை நின்றெனபது "வானின்றுலகம் வழங்கி" என்றாற்போன்றது.

இடையிடை யுகளு மீனு மீனும்.
(3—வது வரி.)

(ப-ரை.) இடை இடை உகளும் - இடையிலே யிடையிலே பெயரும், மீனுமீனும் - நாண்மீனாகிய மீனையும்.

'செம்முகில்' என்பதுமுதல் 'வனப்பும்' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) செம் முகில் - சிவந்தமேகமாகிய, பழநுரை - பழைய நுரையையும், வெள் முகில் - வெள்ளைமேகமாகிய, புது நுரை-புதிய நுரையையும், எங்கும் சிதறி - தன்னிடமெங்குஞ் சிதறி, பொங்கி எழு வனப்பும் - மிகுந்தெழாநின்றவழகினையும்.

(வி-ரை.) வினைமுதலல்லாத கருவி முதலாயின வவ்வினை முதல் வினைக்குச் செய்விப்பனவா மாதலாற் சிதறியெனச் செய்விப்பதாகக் கூறினர். "வேய்தந்த வெண்முத்தஞ் சிந்துபைங் கள் வரை மீன்பரப்பிச், சேய்தந்த வானக மானுஞ் சிலம்ப" என்றாற்போல.

'பலதலை' என்பதுமுதல் 'காலும்' என்பதுவரை.
(6—7 வரிகள்.)

(ப-ரை.) பல தலைவைத்து முடியாது-ஓரிடத்திற் சென்றமையாது பலதலைவைத்து, எங்கும் பாயுமுகம் வைத்த - எங்கும் பாக்குமுகம்வைத்த, கங்கைக்காலும் - கங்கையாகிய காலையும்.

கொண்டுகுளிர் பரந்த மங்குல் வாவிக்குள்.
(8—வது வரி.)

(ப-ரை.) கொண்டு - தன்னிடத்திற் பெற்று, குளிர் பரந்த - குளிர்ச்சிமிகுந்த, மங்குல் வாவிக்குள் - ஆகாசமாகிய வாவிக்குள்.

(வி-ரை.) உருபு தொடர்ந்தடுக்கிக் கொண்டென்னும் வினையெச்சத்தோடு முடிந்தது.

முயலெனும் வண்டுண வமுதநற வொழுக்கி.
(9—வது வரி.)

(ப-ரை.) முயல் எனும் வண்டு - முயலாகிய வண்டு, உண - உண்ணும்படி, அமுத நறவு ஒழுக்கி - அமுதமாகிய தேனைச்சிந்தி.

(வி-ரை.) "பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னாட், குறைபடு மதியந் தேயக் குறுமுய றேய்வ தேபோல்" என்றாற்போல 'முயல்'கூறினார். "மான்முழுதுந் தாங்கிவரு மதியம்" என மானைச் சொல்லுவாருமுளர்.

'தேவர்மங்கையர்' என்பதுமுதல் 'தாமரையே' என்பதுவரை.
(10—12 வரிகள்.)

(ப-ரை.) தேவர் மங்கையர்-தெய்வமாதர்கள், மலர் முகம் பழித்து - மலர்போலு முகத்தைப் பழித்து, பாண்டில் குறையா - வட்டங்குறையாத, வெண்மையின் மலர்ந்த - வெள்ளியதாக விரிந்த, மதி தாமரையே - மதியாகிய வெண்டாமரையே,

(வி-ரை.) தாமரைக்கு முகத்திற்குமொத்தபண்பு. செம்மையும் வடிவும் பொலிவும் முகத்திற்கு மதிக்கு மொத்தபண்பு. கட்கினிமையுஞ் சுத்தத்தின் மிக்குப் பொலிதலு மிவ்வாறொத்த பண்பு. வேறுபடுதலான் உவமைக்குவமை யில்லெனமொழிய வென்னுங் குற்றமாகாதென்க; "கொழுந்தாரகைமுகைக் கொண்டலம் பாசடை விண்மடுவி, லெழுந்தார் மதிக்கம லம்மெழி றந்தென விப்பிறப்பி, லழுந்தா வகையென்னை யாண்டவன் சிற்றம் பலமனையாய், செழுந் தாதவிழ்பொழி லாயத்துச் சேர்ந்தி ருத்தகவே" என்றாற்போல. உவமைக்குவமை "வெண்டிங்கள் போன்றிங்கு வெண்சங்கு விண்டனைய, வண்டிலங்கு தாழை வளர்கோடு" என்றாற்போல்வன. இது விபரீத வுவமையொடு கூடிய விசைபுருவகமாதலி னுவமை யுருவகம்.

'மயங்கிய' என்பதுமுதல் 'ஒன்றுள' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) நின்பால் மயங்கிய ஒருவேன் - நின்பால் வருந்திய வொருத்தியாகிய யான், கேட்கும் அளிமொழி ஒன்று உள-கேட்கும் வார்த்தை யொன்றுளது (அஃதெதெனில்).

'நாளிழைத்திருக்கும்'என்பது முதல்'நெஞ்சமும்'என்பதுவரை.
(16—25—26 வரிகள்.)

(ப-ரை.) நாளிழைத்திருக்கும் - அல்லகுறிப்படாது வருநாளை யுண்டாக்கி யிருந்ததனால் வரும், செயிர் கொள் - குற்றம் பொருந்திய, அற்றத்து - வேளையில், மெய்யுறத் தணந்த - உண்மையாக வந்ததுபோல வந்துபிரிந்த, பொய்யினர் - பொய்ச்சூளினையுடையார், தம்முடை நெஞ்சமும் - தம்முடைய மநமும்.

(வி-ரை.) இருந்ததனால் வருங்குற்றம் - நாய்துஞ்சாமை முதலியன.

'மீனுணவு' என்பதுமுதல் 'கைதையமலரும்' என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(ப-ரை.) மீன் உணவு உள்ளியிருந்த - மீனாகியவுணவைக் கருதிப் பார்த்திருந்த, வெள் குருகு என - வெள்ளைக்குருகுபோல, சோறு நறை கான்ற - சோறு நறையைக்கக்கிய, கைதையமலரும் - தாழைமலரும்.

'பலதலை' என்பதுமுதல் 'பெண்ணையும்' என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(ப-ரை.) பல தலை - பலவாகிய தலையினையுடைய, அரக்கர் - அரக்கர் படைக்கு வகுத்த, பேரணிபோல - பேரணிபோல, மருங்கு - பக்கத்தில், கூண்டு எழுந்து - திரண்டெழுந்து, கருங்காய் நெருங்கி - கரியகாய் மிடைந்து, விளை கள் சுமந்த - விளையுங் கள்ளைத்தரித்த, தலை விரி பெண்ணையும் - தலைவிரித்த பனையும்.

(வி-ரை.) பொருளடையை யுவமைக்குங் கொள்க.

அன்னத் திரளும் பெருங்கரி யாக,
(23—வது வரி.)

(ப-ரை.) அன்னத்திரளும் - அன்னக்கூட்டமும், பெருங்கரி யாக - மிகுஞ்சான்றாக.

'மீன்' என்பதுமுதல் 'பொதும்பரில்' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) திரையிடை - திரையிடத்து, மீன் பாய்ந்து மறிக்க - மீன்கள் குதித்துத் தடுக்க, வளை - சங்குகள், மயங்கி - மதிமயங்கி, சூல்-கருவோடு பொருந்திய, வயிறு உளைந்து கிடந்து-வயிறு நொந்து கிடந்து, முரலும் - முழங்கும், புன்னையம் பொதும்பரில் - புன்னையினிளமரக்காவில்.

(வி-ரை.) அம்-சாரியை, அழகுமாம். பொதும்பர்-பகுதிப்பொருள் விகுதி.

சொல்லா வின்பமு முயிருறத் தந்து.
(24—வது வரி.)

(ப-ரை.) உயிர் உற - உயிர் பெறும்படி, சொல்லா இன்பமும் - இப்படியிருக்குமென்று சொல்லப்படாதவின்பமும், தந்து-தந்து.

(வி-ரை.) உம்மை - எச்சவும்மை, துன்பமுந் தருதலின்.

நெடுமலை பெற்ற வொருமகள் காண.
(27—வது வரி.)

(ப-ரை.) நெடு மலை பெற்ற - ஒருகாத்தினுமழியாத விமயவரை யுயிர்த்த, ஒருமகள் காண - ஒப்பற்ற பார்வதிகாண.

(வி-ரை.) பெரியமலை யெனினுமாம்.

நான்முக விதியே தாளந் தாக்க.
(28—வது வரி.)

(ப-ரை.) நான்முகன் - நான்கு முகத்தினையுடைய பிரமன், விதியே - சொன்ன விதிப்படியே, தாளம் தாக்க - தாளமடிக்க.

(வி-ரை.) விதியே தாளந்தாக்கல் - காலமானக்கிரியை முதலிய பிறழாது கூத்துக்கேற்க வொக்கடித்தல். ஏகாரம் - தேற்றம்.

'அந்த' என்பதுமுதல் 'இடக்கைவிசிப்ப' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) அந்த நான்முகனை - விதிப்படியே யொக்கடிக்கும் பிரமனை, உந்தி பூத்தோன்-திருவுந்தியிற் படைத்தவன், பாசத்து-கயிற்றினல், விசித்து - பிணித்து, மிறை இடக்கை இசைப்ப - இடக்கையினல் இடக்கையென்னும் முதற்கருவியின் ஒருமுகத்திற் பலகிரியை விளைப்ப.

(வி-ரை.) விசித்துமென்னு மும்மை சிறப்பும்மை. மிறை - ஆகுபெயர். இசைத்தல்-ஒருமுகத்திற்பலகிரியை விளைத்தல். கட்டி வளையாநின்ற கயிற்றினையுடைய விடக்கை யெனினுமாம். மிறை - வளைவு; "விண்ணிடமன்னர்கொள்ள மிறைக்கொளிதிருத்தினனே" என்றாற்போல.

'மூன்றுபுரத்தோன்றில்' என்பதுமுதல் 'இரட்ட' என்பதுவரை.
(31—34 வரிகள்.)

(ப-ரை.) மூன்று புரத்து ஒன்றில் - மூன்றுபுரத் தொருபுரத்தின்கண், அரசுடை வாணன் - அரசுசெய்யும் வாணன், எழுகடல் கிளர்ந்த-சத்தசாகரத்தினின்றும் பெருகிய, திரள் கலி அடங்க-ஆரவாரத்தின்கூட்ட மடங்கும்படி, முகம் வேறு இசைக்கும்-ஐந்து முகமும் வெவ்வேறோசையாக விசைக்கும், குடமுழவு - குடமுழவாகிய முதற்கருவியினை, மேரு கிளைத்த தோள் ஆயிரத்தொடு - மகமேரு கம்புவிட்டாற்போன்ற ஆயிரங்கைகளாலும், இரட்ட - கொட்ட.

(வி-ரை.) நீக்கப்பொருட்கண்வரு மின்னுருபு தொக்கது. ஒடு-உருபுமயக்கம். முற்றும்மை தொக்கது.

'ஏழுமுனிவர்கள்' என்பதுமுதல் 'உருக' என்பதுவரை.
(38—39 வரிகள்.)

(ப-ரை.) எழு முனிவர்கள்-சத்தவிருடிகளும், தாழும் மாதவர் - வணங்கு மன்பினையுடைய பதஞ்சலிமுனிவர், அன்பினர் - அன்பினையுடையாராய், உள்ளமோடு என்பு கரைந்து உருக - உள்ளமு மெலும்பு மொன்றாய்க் கரைந்துருகும்படி.

(வி-ரை.) ஒடு - எண்ணொடு.

புட்காற் றும்புரு மணக்கந் திருவர்.

(35—வது வரி.)

(ப-ரை.) புள் கால் தும்புரு - புள்ளின்கால்போலுங் காலினையுடைய தும்புருவும், மணம் கந்திருவர் - மணத்தினையுடைய கந்திருவரும்.

(வி-ரை.) புள் - ஆகுபெயர். மணம் - களவிற்புணர்ந்து வரைந்துகொள்ளுதலுங் கொள்ளாமையுமாகிய மணம்.

'நாசி' என்பதுமுதல் 'அசைவோடுமாற்றி' என்பதுவரை.

(45—49 வரிகள்.)

(ப-ரை.) நாசி - நாசிப்பாட்டும், காகுளி - காகுளிப்பாட்டும், வெடிகுரல் - வெள்ளோசையும், பேசாக்கீழிசை - கீழிசையும், ஒருபுறமொட்டல் - ஒருபுறமொட்டலும், நெட்டுயிர்ப்பு எறிதல் - நெட்டுயிர்ப் பெறிந்தாற்போல, எறிந்து நின்றிரட்டல் - எறிந்துநின்றிரட்டலும், ஓசை இழைத்தல்-ஓசையிழைத்தலும், கழி போக்கு என்ன - கழிபோக்குமென்று, பேசுறு குற்றம் - சொல்லப்பட்ட குற்றமும், அசைவொடு மாற்றி - சோம்பும்விட்டு.

(ப-ரை.) நாசிப்பாட்டு-ஒரு தானத்தேபாட வொரு தானத்தே நழுவுவது. தாளம் - நெஞ்சு முதலியன. காகுளி - பேய் கத்தினாற்போற் பாடுவது. வெடிகுரல்-வெள்ளை வெடித்தகுரலாகிய திறமில்லா வெள்ளோசை. திறம் - "மாத்திரைக ளொன்பானுந் தானங்க ளெட்டானு, மேத்துங் கிரியையொன் றீரைந்தும்-கோத்துப், பதின்மூன்றெழுத்தாற் றொழிலைந்தும் பண்ணின், மதியோர் களைந்து திறமாம்" என்பதனையறிக. கீழிசை-திறமுந் தானமுங் குறையுங் கட்டையிசை. ஒருபுறமோட்டல்-பாடு திறத்தை யொதுக்கிப் பாடுதல். நெட்டுயிர்ப் பெறித லெறிந்துநின் றிரட்டல் - ஒரு பண்ணைப்பாட வேறொரு பண்ணிலே விலங்கி நின்றிரட்டல். ஓசையிழைத்தல் - காசநோய் கத்தினாற்போற் பாடுவது. கழிபோக்கு-ஒரோசையான தன்மை நீங்கிப் பலவோசையாய் வருதல். அசைவு, மடி - "பெருங்குரல் கட்டை நழுவல் விலங்க, லொருக்கி யொதுக்கம் புரைத்தல் - விருப்பிலாச், காகுளி சாக சுரமென்னு மிவ்வெட்டு, மாசாவெனச் சொன்னா ராய்ந்து" என்றாரிசைமரபுடையார்.

நான்மறைப் பயனு மேழிசை.

(36—வது வரி.)

(ப-ரை.) நான்மறை பயனும் - நான்கு வேதத்தின் பயனாகிய, எழிசை - சத்தசுரத்தினையும்.

(வி-ரை.) முற்றும்மை - தொக்கது. அமைத்தென்பதைப் பின்னே கூட்டுக.

'வண்டின்றாரியும்' என்பதுமுதல் 'பன்னியவிதியோடு' என்பதுவரை.

(50—54 வரிகள்.)

(ப-ரை.) வண்டின் தாரியும்-வண்டினது முழக்கமும், கஞ்சநாதமும் - சஞ்சக்கருவியினொலியும், வலம்புரி சத்தமும் - வலம்புரிச் சங்கின் முழக்கமும், சிரல்-மீனெறி பறவையும், வானிலையும்-வானம்பாடியும் (சிற்குருவியும்), கழையிலை வீழ்வதும் - மூங்கிலினிலை விழுகின்ற தொழிலும், அருவி ஓசையும் - அருவியினோசையும், முழவின் முழக்கமும் - குடமுழவின் முழக்கமும், வெருகின் புணர்ச்சியும் - வெருகின் புணர்ச்சியி னெழுமோசையும்போலும், இன்னும் என்றிசைப்ப பன்னிய விதியொடு - உத்தமமானவிசையும் பாடும் பாட்டுந் தொழிற்கிரியையும் பொருந்திய விதியுடனே பின்னு முண்டென்று கருதும்படி.

(வி-ரை.) உத்தமமான இசை -குயிலோசையும் வண்டினாதமும் வலம்புரிச் சத்தமுமென்க. "துய்யமொழி மென்குயிலுஞ் சோலைவரி வண்டினமும், வைய முழங்கும் வலம்புரியுங் - கைவைத்துத், தும்புருவு நாரதரும் பாடியமு வோசையென, நம்புநீர் நால்வேதத் துள்" என்று ரிசைமரபுடையார். பாடுந்தொழிற் கிரியையாவன:— "சிச்சிலி பூனை குடமுழக்சஞ் செம்மைத்தா, முச்சிமலை நீர்விழுக்கா டொண்பருந்து—பச்சைநிற, வேயினிலை வீழ்ச்சியுடன் வெங்கானிழற்பறவை, யேயுங்கா லோசை யியம்பு" என்பதனானறிக, இசையுந் தொழிலும் பகுத்தறியக் கிடத்தலி னுய்த்துணர் நிரை நிரை. இன்னுமென்றதனால் வானம்பாடி பருந்து முதலியன கொள்க. வெருகின்புணர்ச்சி-அன்மொழித்தொகை உறுமுதலைக் குறித்தலின், பன்னுதல் பன்னென விணை மாத்திரையாய் நின்றது. இபலுதல் - பொருந்துதல் என்று என உண்டென வொருசொல் வருவிக்க.

'அமைத்து' என்பதுமுதல் 'மூன்றின்' என்பதுவரை.

(36—55 வரிகள்.)

(ப-ரை.) மந்தரம் - படுத்தல், மத்திமை - சமன், தாரம் - எடுத்தலாகிய, இவை மூன்றின் அமைத்து - இவை மூன்றினிலடக்கி.

(வி-ரை.) "நீடவுங் குறுகவு நிவப்பவுந் தூக்கிப் பாடிய புலவர்" என்றார் வெண்பாமாலையினும்.

சருக்கரைக் குன்றிற் றேன்மழை நான்றென.

(37—வது வரி.)

(ப-ரை.) சருக்கரை குன்றில் - சருக்கரைமலையில், தேன் மழை நான்றென - தேன்மழை வீழ்ந்தாற்போல்.

'துள்ளல்' என்பதுமுதல் 'கானம்' என்பதுவரை.

(56—57 வரிகள்.)

(ப-ரை.) துள்ளல் - துள்ளப்படுதலும், தூங்கல் - தூங்கப்படுதலும், தெள்ளிதின் மெலிதல் - தெள்ளிதாக மெலிக்கப்படுதலும், கூடிய கானம் - பொருந்திய விசைப்பாட்டை.

'விரனான்கமைத்த' என்பதுமுதல் 'காட்டாது' என்பதுவரை.

(40—44 வரிகள்.)

(ப-ரை.) விரல் நான்கு அணி அமைத்த - நான்கு விரலணியாக வமைக்கப்பட்ட, குரல் வீங்காது - மிடறு வீங்காது; நான்மறை துள்ளும் - நான்கு வேதமுந் தொனிக்கும், வாய் பிளவாது - வாய் பிளவாது; காட்டி உள் உணர்த்தும் - உள்ளக்கருத்தினை வெளியிற் காட்டி யறிவிக்கும், நோக்கம் ஆடாது - கண்ணிமையாடாது; பிதிர் கனல் - சிதறிய தழல்போலும், மணி சூழ் - மணிசூழப்பட்ட, முடி நடுங்காது - முடியினையணிந்த தலையசையாது; வயிறு குழி வாங்கி - வயிறெக்கி, அழுமுகம் காட்டாது - அழுதாற்போலு முகங்காட்டாமல்.

(வி-ரை.) இனைத்தெனவறிந்த வும்மை தொக்கது. உள்ளும் நோக்கமும் ஆகுபெயர். மணிசூழ்முடி-அன்மொழித்தொகை. அழுமுகம் - ஒற்றுமை நயம்பற்றி யுவமவினை பொருண்மேனின்றது. "கண்ணிமையா கண்டந் துடியா கொடிறசையா, பண்ணளவும் வாய் தோன்றா பற்றெரியா-வெண்ணிலிவை, கள்ளார் நறுந்தெரியற் கை

தவனே கந்திருவ, ருள்ளாளப் பாட லுரை" உள்ளாளப் பாட்டுப் பாடுங்காலிடை பிங்கலையை யியக்கமறுத்துச் சுழிமுனையி லியக்க மாக்கிப் பாடுவர்; "உள்ளாளம் விந்து வுடனாதை மொலியுருட்டுத், தள்ளாத தாக்கெடுத்த ருன்படுத்தன்-மெள்ளக், கருதி நலிதல் கம்பித்தல் குடில, மொருபதின்மே லொன்றெனன் றுரை" என்று ரிசைமரபுடையார். இப்பதினொரு வகையினுலு முள்ளாளப் பாட்டுப்பாடுவர்.

அன்பொடு பரவ.

(57-வது வரி.)

(ப-ரை.) அன்பொடு பரவ - அன்புடனே பாட.

(வி-ரை.) சருக்கரைக்குன் றிற் றேன்மழைபெய்து ரசிப்பித்தாற் போலாகிக்கம் பிக்கப்பாடவென்ப துபயவுவமை.

'பூதந்துள்ள' என்பது முதல் 'நீங்கினர்' என்பதுவரை.

(58—64 வரிகள்.)

(ப-ரை.) பூதந்துள்ள - பூதகணங்கடுள்ள, பேய்கை மறிப்ப - பேய்கொண்டாட, இன்பம் நிறைந்து - இன்பமிகுந்து, எங்குள உயிருஉ-எவ்விடத்து முளவாகிய வுயிர்களும், ஆட-ஆட, நாடக விதியோடு - நாடகத்துக்குள்ள விதியோடு கூடி, ஆடிய பெருமான்-திருநடனஞ்செய்த பெருமான், மதுரைமாநகர்-மதுரைமாநகரில், செழியன் ஆகி-பாண்டியனாகி, கதிர்முடி கவித்த இறைவன் - சடை முதலிய காந்தொளியினையுடைய முடிபுனைந்தவிறைவன், மாமணி கால்-மாணிக்கத்தாளை, தலைக்கொள்ளா கையினர்போல - பொருந்தாத கையினர் பிரிந்தாற்போல, நீங்கினர் - கரியோர் பிறரில்லையென்று இப்போது பிரிந்தனர்.

(வி-ரை.) உம்மை மாறுக. முடிகவித்தவிறைவன்-அரசனெடுத்த தேவகுலம்போன்றது. "நாளுறத் திங்களு நல்லணி நீக்கினர்" என்றார் சிந்தாமணியினும். தலைக்கொள்ளாக் கையினர் - பொருந்தாத தனால் வந்த சிறுமையினையுடையார். கை - கைவாய்க்கால் கைக்குடைபோல நின்றது. கை-சிறுமை. தலைக்கொள்ளாமை - பொருந்தாமை.

இன்னுங் காணக் காட்சிகொண் டிருந்த.

(22—வது வரி.)

(ப-ரை.) இன்னும் காண காட்சி கொண்டிருந்த - (யான் அவற்றைக்) காணும்படிக்கு அவை யிப்போதும் காண விருந்தன (ஆதலால்).

(வி-ரை.) உம்மை - சிறப்பும்மை. இருந்த-பலவின்பால் வினைமுற்று.

‘போக்கும்’ என்பதுமுதல் ‘வணங்குதுமே’ என்பதுவரை.
(61—66 வரிகள்.)

(ப-ரை.) போக்கும் - (அவர்) பிரிவும், ஈங்குழி - இவ்விடத்து, வருவதும் - கருதி வருவதும், கண்டு - விசாரித்து, அது - அதனை, கூறு தியாயின் - சொல்லுதியாயின், நின்கால் - நின்பாதத்தை, எண்தக - நின் கருத்துக் கேற்கும்படி, போற்றி - பாதுகாத்து, வணங்குதும் - வணங்காநின்றேம்.

(வி-ரை.) உள்ளி கருதி வணங்குது மென்பது காலமயக்கு. மதித்தாமரையே! நின்பாற் கேட்கும் வார்த்தை யொன்றுளது. அஃதே தெனின், பொய்ச்சூளுரைத்தார் நெஞ்சமுந் தாழைமலரும் பனையும் அன்னக்கூட்டமுஞ் சான்றாக இளமரக்காவி லின்பமுந்தந்து, கரியோர் பிறரில்லை யென்று பிரிந்தனர், இன்னுமவை காட்சிகொண் டிருந்தனவாதலால் அவர் பிரிவும் வரவும் விசாரித்து அதனைக் கூறுதியாயின் நின்பாதத்தை வணங்குதுமென வினைமுடிவு செய்க. (உஉ)

திருக்கோவையார் கூஅ-ம் செய்யுள்.

வேறுபடுத்துக்கூறல்.

வேறுபடுத்துக்கூறலென்பது:—பிறைதொழாது தலை சாய்த்து நாணி நிலங்கிளையா நிற்பக்கண்டு, பின்னும் இவள் வழியே யொழுகி இதனை யறிவோமென உட்கொண்டு, நீ போய்ச் சுனையாடி வாவென்ன, அவளும் அதற்கிசைந்து போய் அவனோடு தலைப்பெய்து வர, அக்குறி யறிந்து அவளை வரையணங்காகப் புனைந்து வேறுபடுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

அக்கின்ற வாமணி சேர்கண்ட னம்பலவன் மலயத்
திக்குன்ற வாணர் கொழுந்திச் செழுந்தண் புனமுடையா
ளக்குன்ற வாறமர்ந் தாடச்சென் றாளங்க மவ்வவையே
யொக்கின்ற வாறணங் கேயிணங் காகு முனக்கவளே.

வெய்யவளைத் தோளியை வேறுபாடு கண்
டாய்வளைத் தோழி யணங்கென் றது.

(ப-ரை) அக்கின் - அக்காகிய, தவாமணி - நல்லமணி, சேர் - பொருந்திய, கண்டன் - மிடற்றையுடையவன், அம்பலவன் - அம்பலவன், (அவனது) மலயத்து - மலயத்தின்கணுள்ளதாகிய, இ குன்றவாணர் - இக்குன்றவாணருடைய, கொழுந்து - மகளாகிய, செழும் - வளவிய, இ தண் புனம் உடையாள் - இத்தண்புனங் காவலுடையவள், அ குன்றம் ஆறு - அக்குன்றத்தின்கணுண்டாகியவாற்றை, அமர்ந்து - மேவி, ஆட சென்றாள் - ஆடப்போயினாள் அங்கம் - தன்னுறுப்புக்கள், அவ்வவையே - அவளுறுப்புக்களாகியவற்றையே, ஒக்கின்றவாறு - ஒக்கின்றபடி, அணங்கே - (என்) அணங்கே, உனக்கு - நினக்கு, அவள் இணங்கு ஆதும் - அவளிணங்காகும், எ - று.

(வி-ரை.) அத்தலைவனைக்கண்டு போவாயாக வென்பதெஞ்சி நின்றது. இன் - அல்வழிச்சாரியை. மலயத்திக்குன்றமென்று இயைப் பாருமுளர். இணங்கு - ஒப்பு. குன்றவாணர் - குறவர். கொழுந்து - குழந்தையெனப் பொருள்படுவதோர் மரபுச்சொல்.

நேரிசையாசிரியப்பா.

கண்ட காட்சி சேணின் குறியோ
வென்னுழி நிலையா வுள்ளத்தின் மதியோ
சூர்ப்பகை யுலகிற் றோன்றினர்க் கழகு
விதிக்கு மடங்கா வென்பன விதியோ
வென்னுடைக் கண்ணு முயிரு மாகி
யுண்ணிக ழின்ப முள்வா ளொருத்தி
மலைக்குஞ் சரத்தின் கடக்குழி யாகி
நெடுமலை விழித்த கண்ணே யாகி
யம்மலைத் திருநுதற் கழியா தமைத்த
வெள்ளைகொள் சிந்துர நல்லணி யாகித்
தூர நடந்த தாளெய்ப் பாறி
யழுதொடு கிடக்கு நிறைமதிப் பக்க
மொருபாற் கிடந்த துணைமதி யாகி
யருவி வீசப் பறவைகுடி போகி
விண்டுநற வொழுக்கும் பாண்டி லிருளா
யிளமை நீங்காது காவல்கொ ளமுதம்
வரையர மாதர் சூழ்வுட னருந்த

வாக்கியிடப் பதித்த வள்ளமு மாகி
யிடைவளி போகாது நெருங்குழலைக் கொடிச்சியர்
சிறுமுகங் காணா மாடி யாகிச்
சிறந்தன வொருசுனை யிம்மலை யாட
வளவாக் காதல் கைமிக் கணைந்தன
ளவளே நீயா யென்கண் குறித்த
தெருமர றந்த வறிவுநிலை கிடக்கச்
சிறிதுநின் குறுவெயர் பெறுமணங் காறி
யொருகண நிலைக்க மருவுதி யாயி
னிந்நிலை பெயர வுன்னுமக் கணத்திற்
றாண்டா விளக்கி னீண்டவ ளுதவு
மவ்வுழி யுறவு மெய்பெறக் கலந்தின்
னொருகட லிரண்டு திருப்பயந் தாங்கு
வளைத்த நெடுங்கார்ப் புனத்திரு வீரு
மணிநிறை யூச லணிபெற வுகைத்துங்
கருங்காற் கவணிடைச் செம்மணி வைத்துப்
பெருந்தே னிறாலொடு குறிவிழ வெறிந்தும்
வெண்டுகி னுடங்கிப் பொன்கொழித் திழியு
மருவி யேற்று முழைமலை கூஉயும்
பெருஞ்சுனை விழித்த நீலங் கொய்துங்
கொடுமரம் பற்றி நெட்டிதண் பொலிந்து
தினைக்குர லறையுங் கிளிக்கணங் கடிதிர்
வெள்ளி யிரும்பு பொன்னெனப் பெற்ற
மூன்றுபுரம் வேவத் திருநகை விளையாட்
டொருநாட் கண்ட பெருமா னிறைவன்
மாதுட னென்றி யென்மனம் புகுந்து
பேணா வுள்ளங் காணாது நடந்து
கொலைகளை வென்னும் பழுமரம் பிடுங்கிப்
பவச்சுவ ரிடித்து நெஞ்சமண் டபத்துப்
பாங்குடன் காணத் தோன்றியுண் ணின்று
பன்மலர்ச் சோலை விம்மிய பெருமலை

ரிமையோர் புரத்தை நிறைமணங் காட்டுங்
கூடலம் பதியகம் பீடுபெற விருந்தோ
னிருதாள் பெற்றவர் பெருந்திருப் போல
மருவிய பண்ணை யின்பமொடு விளைநலஞ்
சொல்லுட னமரா தீங்கு
வில்லுடன் பகைத்த செந்திரு நுதலே.

கண்டகாட்சி-செந்திருநுதலே. பகுதி-நாணநாட்டம், துறை - வேறுபடுத்துக்கூறல்.

வில்லுடன் பகைத்த செந்திரு நுதலே.

(54—வது வரி.)

(ப-ரை.) வில்லுடன் பகைத்த-வில்லுடனே மாறுபட்ட, செம்-(காணுந்தோறும்) புதுமையாகிய, திரு நுதலே - அழகிய நுதலினை யுடையாய்.

(வி-ரை.) உடன் - "பொறி வரிவரா லினமிரியப் புக்குடன்" என்றாற்போன்றது. திலதத்தினையுடைய வழகிய நுதலெனின், செம்மை-ஆகுபெயர். வில்லுடன் பகைத்த நுதலினையுடைய செய்ய திருமகளை யொப்பா யெனினுமாம். நுதல் - நெற்றி. திருநுதல் - அன்மொழித்தொகை. செந்திரு - ஆகுபெயர்.

'என்னுடைக்கண்ணும்' என்பதுமுதல்
'ஒருத்தி' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) என்னுடை கண்ணும்-என்னுடைய கண்ணும், உயிரும் ஆகி - உயிருமாகி, உள் நிகழ் இன்பம்-உள்ளத்தி னிகழுமின்பத்தையும், உள்ளாள் ஒருத்தி - உடையாளொருத்தி.

(வி-ரை.) என்னுடைக்கண்-"நின்னுடை நீர்மையும்" என்றாற் போன்றது. என் கண்ணுமுயிருமாகி யின்பத்தையுமுடையாளென்றாள் விரும்பும் பொருளெல்லாவற்றினுஞ் சிறந்தமையானும், தான் அவளென்னும் வேற்றுமை யின்மையானும். அது, "உயிரு நாணு மடனு மென்றிவை, செயிர்தீர் சிறப்பி னால்வர்க்கு முரிய" என்பதனா னறிக.

அளவாக் காதல் கைமிக்கு.

(22—வது வரி.)

(ப-ரை.) அளவா - அளவுபடுத்தப்படாத, காதல் கைமிக்கு - காமங்கையிகந்தவழி யுள்ளநிகழ்ந்து.

மலைக்குஞ் சரத்தின் கடக்குழி யாகி.

(7—வது வரி.)

(ப-ரை.) மலை குஞ்சரத்தின் - மலையாகிய யானைக்கு, கடக்குழியாகி - மதம்படுகுழியுமாகி.

(வி-ரை.) அத்தும் இன்னுஞ் சாரியை. கடம் - மதம்.

நெடுமலை விழித்த கண்ணே யாகி.

(8—வது வரி.)

(ப-ரை.) நெடுமலை - நெடிய மலையாகிய (புருடன்), விழித்த கண்ணேயாகி - விழிக்கப்பட்ட கண்ணுமாகி.

(வி-ரை.) மலை - மாட்டேறேலாது வந்தது. வரைவிழித்துப் பார்த்தாற்போன்ற கண்ணுமாகி யெனினுமாம். ஏகாரம்-ஈற்றசை.

'அம்மலை' என்பதுமுதல் 'நல்லணியாகி' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) அம்மலை - அம்மலையாகிய, திருநுதற்கு - திருவினது நுதலின்கண், அழியாது அமைத்த - (ஒருகாலமும்) அழியாதிட்ட, வெள்ளை கொள் - வெண்மைகொண்ட, நல் அணி - நல்லணியாகிய, சிந்துரம் ஆகி - சிந்துரமுமாகி.

(வி-ரை.) நுதற்கு-உருபுமயக்கம்.

'தூரநடந்த' என்பதுமுதல் 'மதியாகி' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) தூரநடந்த - தூரத்தினின்றும் வந்த, தாள் எய்ப்பு ஆறி - தாளிளைப்பாறுகின்று, அமுதொடு கிடக்கும் - அமுதத்தோடு

பொருந்திக் கிடக்கும், நிறை மதிப்பக்கம் - பக்க நிறைந்தமதியின், ஒருபால் துணைகிடந்த-ஒருபாகத்திற் றுணையாகக் கிடந்த, மதியாகி-மதியுமாகி.

(வி-ரை.) பக்கம் நிறைந்தமதி-உவாமதி. எய்ப்பாறிக் கிடக்குமென்பது "அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப் பகல்கான் று" என்றாற் போன்றது. தாள் - கால். ஆறி - ஆற எனினுமாம்.

'அருவி' என்பதுமுதல் 'பாண்டிலிறுலாய்' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) பறவை - (பொருந்திய)வண்டுகள், குடிபோகி-விட்டு நீங்க, விண்டு - விண்டு, அருவி வீச - அருவிபோலச் சிந்தும்படி, நறவொழுக்கும் - தேனைச்சிந்தும், பாண்டில் இறால் ஆய் - வட்டமாகிய தேன்கூடுமாகி.

(வி-ரை.) பறவை - வண்டு, "தாதுண்பறவை பேதுறலஞ்சி" என்றாற்போல. போகி-போக, செய்தெனெச்சத் திரிபு. விண்டென்பது செய்வதன் றொழிற்கு மேதுவாக்கின் செய்விப்பதன் றொழிற்குமாம், "காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப், பூடாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து, தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்" என்றாற்போல.

'இளமை' என்பதுமுதல் 'வள்ளமுமாகி' என்பதுவரை.

(16—18 வரிகள்).

(ப-ரை.) வரையரமாதர் - வரையரமகளிர், இளமை நீங்காது - தம்மிளமைபோகாது, குழுவுடன் - கூட்டத்துடன், காவல்கொள் - காக்கும், அமுதம் - அமுதத்தை, அருந்த - உண்ணும்படி, ஆக்கி - உண்டாக்கி, இடம்பதித்த - அவ்விடத்துப் பதிப்ப, வள்ளமுமாகி - கிண்ணமுமாகி.

(வி-ரை.) உண்ணும்படி யமுதத்தை வார்த்துப் பதித்த வள்ளம் எனினுமாம். வரையரமகளிர் - மலையில் வாழ்கின்ற தெய்வப் பெண்கள்.

'இடைவளிபோகாது' என்பதுமுதல்
'ஆடியாகி' என்பதுவரை.
(19—20 வரிகள்.)

(ப-ரை.) இடை வளி போகாது - இடையிற் காற்றும் புகாது, நெருங்கு முலை - நெருங்கிய முலையினையுடைய, கொடிச்சியர்-குறத்தியர்தம், சிறு முகம் காணும் - சிறியமுகத்தி னழகைப் பார்க்கும், ஆடி ஆகி - கண்ணாடியுமாகி.

(வி-ரை.) சிறப்பும்மை தொக்கது. முகம் : ஆகுபெயர். எண்ணும்மை தொக்கது.

'சிறந்த' என்பதுமுதல் 'அணைந்தனள்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) இம்மலை - இம்மலையிடத்து, சிறந்த ஒருசுனை-சிறந்தவொருசுனையில், ஆட அணைந்தனள் - நீராடச்சென்றனள்.

(வி-ரை.) செய்தெனெச்சவடுக்குச் சிறந்தவென்னும் பெயரெச்சங்கொண்டது. உவமைக்குக் கூறியன உருவகத்திற்குமாம் என்றமையால், சுனை பல பொருளுருவகமாயிற்று.

'கண்டகாட்சி' என்பதுமுதல் 'விதியோ' என்பதுவரை.
(1—4 வரிகள்.)

(ப-ரை.) சேணின் - (நின்னைத்) தூரத்தில், கண்ட காட்சிக்குறியோ - காணப்படும் பொருளாகக் கண்டவடையாளத்தினனோ, என் உள்ளத்துழி - என்னுள்ளத்திடத்தில், நிலையா மதியோ - நிலையில்லாத புத்தியினனோ, சூர்ப்பகை உலகில் தோன்றினர்க்கு - குறிஞ்சிநிலத்திற் பிறந்தார்க்கு, அழகு விதிக்கும் அடங்கா - விதிக்கு மழகு வேறுபடாது, என்பன விதியோ-என்று சொல்லப்படுவதாகிய விதியினனோ.

(வி-ரை.) "சேயோன்மேயமைவரையுலகமும்" என்றமையால், குறிஞ்சிநிலத்தை 'சூர்ப்பகையுலகு' என்றார். ஆனுருபு மூன்றற்கும் விரிக்க, ஒகார மூன்றும் இன்னதென்று துணியாது கூறினமையின். வரையணங்காக வேறுபடுத்திக் கூறினமையால் 'விதிக்கு மழகு மடங்காது' என்றார். விதிவிதித்தலென வினைமேனின்ற வினைப்பெயரன்றி விதியென வினைமாத்திரை யுணர்த்திநின்று

விதிக்குமெனவுருபேற்று நின்றது. ஒகாரத்தை யெதிர்மறையாக்கிக் கூறினுமாம்.

'அவளேநீயாய்' என்பதுமுதல் 'கிடக்க' என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை.) அவளே நீயாய் - நீதானே யவளாக, என் கண் குறித்த - என்கண் குறித்ததனால் வந்த, தெருமரல் - தடுமாற்றத்தை, நிலை தந்த - நிலையாகத் தந்த, அறிவு கிடக்க - அறிவுகிடக்க.

(வி-ரை.) ஆய் - ஆக. நீ யவளாக வென்றதற்கு நின்னை யவளாகவென்க. 'பாங்கனையா னன்ன பண்பனைக் கண்டிப் பரிசுரைத்தால்'' என்றாற்போலத் திரிந்ததன் றிரிபதுவாய் நின்றது. குறித்தறிதற்குக் கண்டுணையாதற் சிறப்பு நோக்கி, உயிரதுணர்வுகண்மேலேற்றப்பட்டது, "குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு ளென்னபயத்தவோகண்'' என்றாற்போல.

'சிறிது' என்பதுமுதல் 'ஈங்கு' என்பதுவரை.
(25—26—53 வரிகள்.)

(ப-ரை.) குறுவெயர் பெறும் - குறுவெயர் பெறுதற்குக்காரணமாய், நின் - நினது, சிறிதணங்கு ஆறி - வருத்தஞ் சிறிது தீர்ந்து, ஈங்கு - ஈங்கு, ஒரு கணன்-ஒருகணப்பொழுது, நிலைக்க-நிலைபெற, மருவுதியாயின் - பொருந்துவையாயின்.

(வி-ரை.) கணப்பொழுது - "அர்க்க வுதயத் தலரம் புயமாதலெற்குவளை யாதலித ழேட்டிற்கு - நிற்குமதி, லூசிமுனை தெறித்த லோரிதழிற் செல்கால, மாசில் கணமாய் வரும்'' இதனானறிக. நிலைக்கவென்ப தெதிர்கால முணர்த்துமெச்சம். உம்மை ஐயம், துணியாமைக்கண் வருதலின், "முரித்தேந் தாரினாய் நீ முனியினும்''என்றாற்போல. ஒரு கணப்பொழுது நிலைபெறச் சேர்வையாயி னென்று பொருளுரைக்கின் உம்மை அசை. ஈங்குத் தன்மை யுணர்த்துதல். "செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்'' என்னுஞ் சூத்திரத்திற ···ண்க. "கண்ணுளார் நுங்காதலா ரொழிக காம மீங்கென'' என்றுற···லத் தன்மை யுணர்த்திற்று.

'இங்கிலை' என்பதுமுத··· 'அவளுதவும்' என்பதுவரை.
(27—28 வ···)

(ப-ரை.) இங்கிலை - இங்ஙனநின்ற நிலையிலே···
உன்னும் அக்கணத்தில்-கருதுமப்பொழுதில், ஈண்டு-இடையா-நீங்க, ···க்கு,

தூண்டாவிளக்கின் - தூண்டாவிளக்கினைப்போல, அவளுதவும் - அவள்வருவள்.

(வி-ரை.) தூண்டாவிளக்கு - மணிவிளக்கு.

'அவ்வுழி' என்பதுமுதல் 'உகைத்தும்' என்பதுவரை.
(29—32 வரிகள்.)

(ப-ரை.) அவ்வுழி - அவள் வந்தவிடத்து, இருவீரும்-இரண்டு பேரும், மெய் பெற-உண்மை பெறும்படி, உறவு கலந்து - உறவாடி, இன்று - இப்பொழுது, இரண்டு திரு-இரண்டுதிருவினை, ஒருகடல்-ஒரு பாற்கடல், பயந்தாங்கு - பெற்றாற்போல, வளைத்த - வளைக்கப்பட்ட, நெடு கார்ப்புனத்து - நெடியதாகிய கரியபுனத்தில், அணி பெற - அழகுபெறும்படி, மணி நிறை - முத்தமணிகளழுத்திய, ஊசல் உகைத்தும் - ஊசலாடுதலானும்.

(வி-ரை.) பாற்கடலென் றுவமைகூறுதலான் மணியூசன் முத்தமணி யூசலாயிற்று.

'கருங்கால்' என்பதுமுதல் 'எறிந்தும்' என்பதுவரை.
(33—34 வரிகள்)

(ப-ரை.) பெருந்தேனொடு-மிகுந்த தேனுடனே, இறால்-தேன் கூடாகிய, குறி விழ - இலக்கு விழும்படி, கருங்கால் - மயிராலமைத்த காலினையுடைய, கவணிடை-கவணிடத்து, செம்மணி வைத்து - மாணிக்கத்தை வைத்து, எறிந்தும் - எறிந்ததனாலும்.

(வி-ரை.) ஒடு வுருபை மாறுக. இலக்காக விழும்படி தேனையுடைய விருட்டின்கண் ணெறிந்ததனாலு மெனினுமாம். ஒடு: உருபு மயக்கம். இறந்தகாலங் காட்டுஞ் செய்தெனெச்சங் காரியப்பொருட்க ணின்றது.

'வெண்டுகில்' என்பதுமுதல் 'அருவியேற்றும்' என்பதுவரை.
(35—36 வரிகள்.)

(ப-ரை.) வெள் துகில் - வெள்ளைத் [illegible]போல, நுடங்கி - அசைந்து, பொன் கொழித்து - [illegible]ணக்கொழித்து, இழியும் - வீழும், அருவி எற்றும் - அ[illegible]ற ரேய்ந்ததனாலும்.

(வி-ரை.) [illegible]ாழிலும் பண்புப்பற்றிய வுவமை, "விரவியும் வருஉ[illegible] என்ற விதியான்.

முழைமலை கூஉயும்.

(36—வது வரி.)

(ப-ரை.) முழைமலை - முழையினையுடைய மலைக்கெதிர், கூஉயும் - கூவுதலானும்.

(வி-ரை.) இகரவீறு திரிந்துநின்றது.

பெருஞ்சுனை விழித்த நீலங் கொய்தும்.

(37—வது வரி.)

(ப-ரை.) பெரு சுனை-பெரிய சுனையினிடத்து, விழித்த-மலர்ந்த, நீலம் கொய்தும் - நீலமலரைக் கொய்ததனாலும்.

(வி-ரை.) விழித்த நீலம் என உரிய பொருளன்றி யொப்புடைப் பொருண்மேல் வினைபுணர்த்தமையால் இது சமாதியென்னு மலங்காரம். நீலம்: ஆகுபெயர்.

கொடுமரம் பற்றி நெட்டிதண் பொலிந்தும்.

(38—வது வரி.)

(ப-ரை.) கொடுமரம் பற்றி - பழுவினைப்பற்றி, நெடு இதண் - நெடிய பரணில், பொலிந்தும் - பொலிவு பெற்றதினாலும்.

(வி-ரை.) இடையிடையிற் கொடுத்த மரமாதலின் 'கொடுமரம் என்றார். இது பொன்னாற் செய்யப்பட்ட குடத்தினைப் பொன்னென்றாற் போல்வதோ ராகுபெயர். 'கொடுமரப் போற்றி' என்று பாடமாயின், கொடிய மிருகங்களான்வரு மேதத்தைப் பாதுகாக்கவேண்டியென்க. இதில் இரண்டுருபும் பொருளு மொப்பவிரிந் திரண்டு மயங்கியவாறு காண்க. இதனை, "ஒம்படைக் கிளவிக் கையுமானுந், தாம்பிரி விலவே தொகைவருங் காலை" என்பதனானறிக.]

தினைக்குர லறையுங் கிளிக்கணங் கடிந்தும்.

(39—வது வரி.)

(ப-ரை.) குரல்தினை - கதிரினையுடைய தினையிடத்தில், அறையும்-கூப்பிடும், கிளி கணம் - கிளிக்கூட்டத்தை, கடிந்தும் - ஒட்டுதலானும்.

(வி-ரை.) தினைக்குரல் பின்மொழி நிலையல்.

'வெள்ளி' என்பதுமுதல் 'இறைவன்' என்பதுவரை.
(40—42 வரிகள்.)

(ப-ரை.) ஒருநாள் - ஒருநாள், திருநகை - அழகிய நகையால், வெள்ளி - வெள்ளியும், இரும்பு - இரும்பும், பொன் - பொன்னும், என பெற்ற-என்று சொல்லும்படி பேர்பெற்ற, மூன்று புரம்-மூன்று புரமும், வேவ-வேம்படி, விளையாட்டுக்கண்ட - விளையாட்டுக்கண்ட, பெருமான் இறைவன் - பெருமானாகியவிறைவன்.

(வி-ரை.) எண்ணும்மை தொக்கது. இளைத்தென வறிந்த வும்மை விகாரத்தாற் றொக்கது. 'வெறுத்த' என்றும் பாடம்.

'மாதுடன்' என்பதுமுதல் 'நடந்து' என்பதுவரை.
(43—44 வரிகள்.)

(ப-ரை.) பேணு - தன்னை விரும்பாத, உள்ளம்-உள்ளமானது, காணாது நடந்து - காணாது சென்று, என் மனம் - என்னுள்ளத்தில், மாதுடன் ஒன்றி - அங்கயற்கண்ணம்மையோடு பொருந்தி, புகுந்து - புகுந்தொழுகி.

(வி-ரை.) மனம்: சுட்டுப்பெயர். ஒன்றி - ஒன்ற.

கொலைகள வென்னும் பழுமரம் பிடுங்கி.
(45—வது வரி.)

(ப-ரை.) கொலை - கொலையும், களவு என்னும் - களவுமாகிய, பழுமரம் பிடுங்கி - பழுமரங்களைத் தள்ளி.

(வி - ரை.) புலாலுண்ணுங் கூடாவொழுக்கமும் வெகுளுத லும் இன்னாசெய்தலும் அவாவுமோவெனின், கொலையுங் களவுமே கூறினாராயினும் "மொழியா ததனையு முட்டின்றி முடித்தல்" என்னு முத்திபற்றிக் கொள்க. "கூதிர்வேனில்" என்ற சூத்திரத்தில் "பெரும்பகை தாங்கும் வேலினானும்" என்று கூறியொழிந்த வாயுதமுங் கொண்டார் "சுவையொளியூ றோசை நாற்றமென் றைந்தின், வகை தெரிவான் கட்டே யுலகு" என்ற குறளில் உடம்படுபுணர்த்தல் கூறினாராதலான் உத்திவகை செய்யுட்குங் கொள்ளக்கிடந்தன. எல்லா வுயிர்க்குந் தோன்றுதொட்டு வருதலின். 'பழமரம்' என்றும் பாடம்.

'பவச்சுவர்' என்பதுமுதல் 'உண்ணின்று' என்பதுவரை.
(46—47 வரிகள்.)

(ப-ரை.) பவச்சுவர் - பிறவியாகிய சுவரினை, இடித்து - இடித்து, (கொல்லாமை முதலிய மரங்களை நாட்டிப் பிறவாமையாகிய சுவரை வைத்து) (புதுக்கக்கட்டி - புதிதாகக்கட்டி, அன்பு கொடு வேய்ந்த - அருளாகிய (பொற்றகடு) கொண்டுவேய்ந்த), நெஞ்சமண்டபத்து - இருதய (தாமரையாகிய) மண்டபத்து, உள் நின்று - உண்ணின்று, பாங்குடன் காண தோன்றி - யான் பக்கமெல்லாங்காண வெளிப்பட்டு.

(வி-ரை.) மரங்களென்பன ஆகுபெயராதலின் அவற்றில் காலுத்திரம் போதிகை முதலியன அடங்கின. அருத்தாபத்தியானும், கட்டிப்போந்ததனானும், பிறவாமையாகிய சுவரைவைத்துக் கொல்லாமை முதலிய மரங்களாற் கட்டியென ரூபகம் வருவிக்கப்பட்டது. இது பலமறுதலையன்று, மரங்களைத் தனித்தனி கொள்ளக்கிடத்தலின். இது அவயவியை யுருவகஞ் செய்யாது அவயவங்களை யுருவகஞ் செய்தமையான் அவயவவுருவகம், அன்பு மாட்டேறேலாது வந்தமையின் வியனிலையுருவகமாகாது. அவயவி மாட்டேறேலாது வந்தமையின் அன்பினானூர்ந்தவருளை யன்பென்றதும் நெஞ்சிலிருந்த தாமரையை நெஞ்சென்றதும் ஆகுபெயர். சீவன்முத்தனை முன் கண்டுதொழுகிச் சீவன்முத்தனனபின் இதய தாமரையுண்ணின்று வெளிப்பட்டமை விளங்கிற்று.

'பன்மலர்' என்பதுமுதல் 'பெருந்திருப்போல' என்பதுவரை.
(48—51 வரிகள்.)

(ப-ரை.) பன்மலர் சோலை - பலவாகிய மலர்ச்சோலையில், விம்மிய பெருமலர் - மலர்ந்த நறியமலர்கள், இமையோர் புரத்தை - தேவருலகின்கண், நிறை மணம் காட்டும் - நிறைந்த வாசத்தை யுண்டாக்குதற்கிடமாகிய, கூடலம் பதியகம் - கூடலாகிய பதியினதிடம், வீடுபெற இருந்தோன் - சிவகதியாகவிருந்தவன், இருதாள் பெற்றவர் - இரண்டு பாதத்தையு மடைந்தவர், பெறும் திருப்போல - பெற்ற பெருஞ்செல்வம் இன்பமொடு நன்மையை விளைத்தாற்போல.

(வி-ரை.) பொன்மலர்ச் சோலையெனின் கற்பகத்தருவென்க. விம்முதல் "சங்கம் விம்மு நித்திலம் கொங்கு விம்மு கோதை" என்றாற்போல நின்றது. புரத்தை : உருபுமயக்கம். இந்திரன் சாபந்தீர்

தற் கர்ச்சித்த மலர். காட்டுங் கூடல் நிலப்பெயர் கொண்டது, "நஞ்சமுதாகுங் கண்டன்" என்றாற்போல, இந்திரனர்ச்சித்த மலர்களிமையோர் புரத்தை மண்ணிடத்திற் காட்டுதலெனினுமாம். பன்மலரென்று பாடமாயினமையின் இமையோர் புரமணமாகக் காட்டுங் கூடலென்க. அத்தும் ஐயுஞ் சாரியை. 'பீடுபெற விருந்தோன்' என்னும் பாடம்.

'மருவியபண்ணை' என்பதுமுதல் 'அமராது' என்பதுவரை. (52—53 வரிகள்.)

(ப-ரை.) மருவிய பண்ணை - மருவிய விளையாட்டு, இன்பமொடு - இன்பமோடு, விளை - உண்டாகும், நலம் - நன்மையெல்லாம், சொல்லுடன் அமராது - சொல்லுதற்கமையாது.

(வி-ரை.) செய்தெனெச்சவடுக்கு காரணகாரியப் பொருட்டாய் விளைநல மென்பதனோடு முடிந்தது.

நுதலினையுடையாய்! காட்சியினானே புத்தியினானே விதியினானே நின்னை யென்றோழியாகக் கருதிய வறிவுகிடக்க, ஈங்கு மருவுவையாயின் அவள்வருவள், வந்தாலிருவீரு முறவாடி, ஊசலாடன் முதலிய தொழில் விளைத்தலான், மதுரையிலிருந்தவன் சரணடைந்தார் பெற்றசெல்வ மின்பமொடு நன்மை விளைத்தாற்போல இன்பமோடுண்டாகு நன்மையெல்லாஞ் சொல்லுதற் கமையாதென வினைமுடிவுசெய்க. (உரு)

திருக்கோவையார் களசு-ம் செய்யுள்.

காமம்மிக்ககழிபடர்கிளவி.

காமமிக்க கழிபடர்கிளவியென்பது-தலைமகனைக் காணலுற்று வருந்தாநின்ற தலைமகள், தனது வேட்கை மிகவாற் கேளாதனவற்றைக் கேட்பனவாக விளித்து, நீங்கள் என்னை எதுற்றழிகின்றாயென்று ஒருகால் வினவுகின்றிலீர், இதுவோ நுங்காதன்மையென அவற்றொடு புலந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மாதுற்ற மேனி வரையுற்ற வில்லி தில்லைநகர்சூழ்
போதுற்ற பூம்பொழில் காள்கழி காளெழிற் புள்ளினங்கா
ளேதுற் றழிதியென் னீர்மன்னு மீர்ந்துறை வர்க்கிவளோ
தீதுற்ற தென்னுக்கென் னீரிது வோநன்மை செப்புமினே.

தாம மிக்க தாழ்குழ லேழை
காம மிக்க கழிபடர் கிளவி.

(ப-ரை.), மாது உற்ற மேனி - மாது பொருந்திய மேனியை யுடைய, வரை உற்ற வில்லி-வரையாகிய மிக்கவில்லை யுடையவனது, தில்லை நகர் சூழ்-தில்லைநகரைச் சூழ்ந்த, போது உற்ற-போதுபொருந்திய, பூம்பொழில்காள் - மலரினையுடைய பொழில்காள், கழிகாள்-(அப்பொழிலைச் சூழ்ந்த) கழிகாள், எழில் புள்ளினங்காள் - (அக்கழிகளிற் பயிலும்) எழிலையுடைய புள்ளினங்காள், ஏது உற்று அழிதி என்னீர் - (என்னை நீங்கள்) யாதனையுற் றழிகின்றாயென்று ஒருகாற் கூறுகின்றிலீர், ஈர்ந்துறைவர்க்கு - குளிர்ந்த துறைவர்க்கு, இவள் - இவள், தீது உற்றது என்னுக்கு என்னீர் - தீதுற்ற தெற்றிற்கென்று கூறுகின்றிலீர், இதுவோ - இதுவோ, நன்மை - (நம்மாட்டு) நும் காதன்மை, செப்புமின் - செப்புமின், எ-று.

(வி-ரை.) மாதுற்ற மேனியென்பது ஆகுபெயராய் மேனியையுடையான்மேனின்றதெனினுமமையும். வரையுற்றவில்லி யென்பதற்கு வரைத்தன்மையைப் பொருந்திய வில்லையுடையானெனினுமமையும். வரைத்தன்மையைப் பொருந்துதல் - வரையாயிருத்தல். போது-பேரரும்பு, "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி, மாலை மலரு மிந்நோய்" என்றார் பெருநாவலரும். மன்னுமென்பதூஉம் இவளோவென்னு மோகாரமும் அசைநிலை. மன்னுந் தீதுற்றதெனக் கூட்டி மிகுதிக்கண் வந்ததென்பாருமுளர். இதுவோ நன்மை என்பதற்குத் தில்லையைச் சூழ்ந்தவிடத்துள்ளீராகலின் உமக்குண்டாகிய சிறப்புடைமை யிதுவோவெனினுமமையும். அழுதியென்பதூஉம் பாடம். ஏழையது கிளவியென விரியும்.

நேரிசையாசிரியப்பா.

வானவர்க் கிறைவ னிலங்கிடைக் கொண்டு
திருவுட னிறைவிழி யாயிரத் திரளு
மிமையாது விழித்த தோற்றம் போலக்
கஞ்சக் கொள்ளை யிடையற மலர்ந்து
மணஞ்சூழ் கிடந்த நீள்கருங் கழியே
கருங்கழி கொடுக்கும் வெள்ளிற வருந்தக்
கைபார்த் திருக்கு மடப்பெடைக் குருகே
பெடைக்குரு கணங்கின் விடுத்தவெண் சினையொடு
காவலடை கிடக்குங் கைதையம் பொழிலே

வெம்மையொடு கூடியுந் தண்மை பொருந்தியு
முலகவிரு டுரக்குஞ் செஞ்சுடர் வெண்சுடர்
காலங் கோடா முறைமுறை தோற்ற
மணிநிரை குயிற்றிய மண்டப மாகிப்
பொறைமாண் டுயிர்க்குந் தாயா மண்மகள்
களையா துடுக்கும் பைந்துகி லாகி
வேனிற் கிழவன் பேரணி மகிழ
முழக்கா துழங்கு மாமுர சாகி
நெடியோன் றுயிலா தறிவொடு துயிலப்
பாயற் கமைந்த பள்ளியறை யாகிச்
சலபதி யாய்ந்து சேமநிலை வைத்த
முத்துமணி கிடக்குஞ் செறியிரு ளரங்காப்ப்
புலவுடற் பரதவர் தங்குடி யோம்ப
நாளும் விளைக்கும் பெருவய லாகிக்
கலமெனு நெடுந்தேர் தொலையா தோட
வளப்பறப் பரந்த வீதிய தாகிச்
சுறவ வேந்து நெடும்படை செய்ய
முழக்கமொடு வளைத்த வமர்க்கள மாகி
மகரத் தெய்வ நாணிறைந் துறைய
மணிவிளக்கு நிறைந்த வாலய மாகி
நீர்நெய் வார்த்துச் சகர ரமைத்த
தீவளர் வட்டக் குண்ட மாகி
யெண்டிகழ் பருவா யினமணிப் பாந்தட்
டண்டினின் றெரியுந் தகளிய தாகிப்
பஞ்சவ னிறைந்த வன்புடன் வேண்ட
மாறிக் குனித்த நீறணி பெருமாற்
கமுத போனகங் கதுமென வுதவு
மடுந்தீ மாறு மடைப்பள்ளி யாகி
யின்னும் பலவாய் மன்னுங் கடலே
நுங்க ளின்பம் பெருந்துணை யென்பாற்
றண்ணந் துறைவற் கின்றிவ ளொருத்தி
நெருப்புறு மெழுகி னுள்ளம் வாடியு

மருவி தூங்கக் கண்ணீர் கொண்டு
மரவின்வா யரியிற் பலவு நினைந்து
நிலையாச் சூளி னிலையா நெஞ்சங்
கொண்டன ளென்னென வென்முக நாடி
யுற்ற வாய்மை சற்றுந் தருகிலீ
ரன்றெனி னும்மி லொன்றுபட் டொருகா
லிவளோ துயரம் பெறுவதென் னென்று
வினவா திருக்குங் கேண்மை
மனனு ணுடிற் சொல்லினுங் கொடிதே.

வானவர்க்கிறைவன் - சொல்லினுங்கொடிதே. **பகுதி** - இரவுக் குறி, **துறை** - காமமிக்க கழிபடர்கிளவி.

‘வானவர்’ என்பதுமுதல் ‘கழியே’ என்பதுவரை.
(1—5 வரிகள்.)

(ப-ரை.) வானவர்க்கு இறைவன் - இந்திரன், நிலங்கிடை கொண்டு - மண்ணிற்கிடந்து, திரு உடல் - அழகியவுடலில், நிறை விழி ஆயிரத்திரளும் - நிறைந்த திரளாகிய ஆயிரங்கண்ணும், இமையாது விழித்த தோற்றம்போல - குவியாது விழித்த தோற்றம் போல, கஞ்சக்கொள்ளை - தாமரைத்திரள், இடையற மலர்ந்து - முறையின்றி மலர்ந்து, மணம் சூழ் கிடந்த - மணஞ்சூழ்தல் பெற்ற, நீள் கருங்கழியே - நீண்ட கரியகழியே.

(வி-ரை.) இது எதிர்நிரனிறையுவமை. இனைத்தெனவறிந்த வும்மை மாறுக. மலர்ந்தென்னுஞ் செய்தெனெச்சம் செயப்படுபொருள்கோ ணிலைதிரிந்து “நாழிகுறைபட” என்றாற்போல, சினையொடு முதற்கொற்றுமை யுண்மையாற் சினைவினை முதலொடு மியைந்ததெனினுமாம்.

‘கருங்கழி’ என்பதுமுதல் ‘குருகே’ என்பதுவரை.
(6—7 வரிகள்.)

(ப-ரை.) கருங்கழி தொடுக்கும் - கரியகழிதொடுக்கும், வெள் இறா - வெள்ளியவிறாமீனை, அருந்த - நுகர, கைபார்த்து இருக்கும் - (அதன்) சிறுமைபார்த்திருக்கும், மடப்பெடை குருகே - மடப்பத்தினையுடைய பெடையாகிய குருகே.

(வி-ரை.) கை - இடமுமாம். கழியிலுற்பத்தியாதலால் அது கொடுத்தலாயிற்று. கருங்கழியாகிய வள்ளியோன் திரையாகிய கையினு லருந்தக் கொடுக்கும் வெள்ளிறவாகிய பொருளினைப் பெறப் பார்த்திருக்கு மிரவலனுகிய குருகே எனக் குறிப்புருவக மாக்கினும மையும். "இடுக்கண்கால் கொன்றிட வீழுமடுத் தூன்று, நல்லா ளில் லாத குடி" என்றாற்போல. இறு - இறவாயிற்று, "குறியத னிறுதிச் சினைகெட" என்றதனல்.

'பேடைக்குருகு' என்பதுமுதல் 'பொழிலே' என்பதுவரை. (8—9 வரிகள்.)

(ப-ரை.) பெடை குருகு - பெடையாகிய குருகு, அணங்கின் - மெய்வருத்தத்தின், விடுத்த - ஈன்ற, வெள் சினையொடு - வெள்ளிய முட்டையொடு, காவல் - காவலாக, அடை கிடக்கும் - இரை பெறுதலைகிடைத்தற் கிடமாகிய, கைதையம் பொழிலே-தாழைச் சோலையே.

(வி-ரை.) ஒடு - ஒருவினையொடு, அது மெய்வருத்தப்பட்டுப் பெற்றமையா னுயர்வின்வழித் தாயிற்று. 'குருகடைகிடக்குஞ்சோலை' இடத்துநிகழ் பொருளின்றொழி லிடத்தேறி நின்றது, "ஒருகுழை யொருவன்" என்னுங் கவியில் "மிஞிறார்க்குங் காஞ்சி" என்றாற் போல. சினைக்குக் காவலாகக் கிடக்குமென வுருபுமயக்கமுமாம். அம் : அசை.

'வெம்மை' என்பதுமுதல் 'மண்டபமாகி' என்பதுவரை. (10—13 வரிகள்.)

(ப-ரை.) வெம்மையொடு கூடியும் - வெப்பத்துடனே பொருந்தியும், தண்மைபொருந்தியும் - குளிர்ச்சியுடனேபொருந்தியும், உலக இருள் துரக்கும் - உலகத்தின்கண் ணுண்டாகியவிருளைக் கெடுக்கும், செஞ்சுடர் - ஆதித்தனும், வெண்சுடர் - சந்திரனும், காலங் கோடா - பகலிரவென்னுங் காலத்தில் கோடாது, முறை முறை தோற்ற - முறைமுறையாக வுதிக்கும்படி, மணி நிரை குயிற்றிய - மணிகளை நிரையாகக் குயிற்றினற் போன்ற, மண்டபம் ஆகி - மண்டபமாகியும்.

(வி-ரை.) ஒடுவைப் பின்னுங் கூட்டுக. "செறுவார்க்குஞ் செய் யாவிடல்" என்றாற்போலக் கோடாதென்பது கோடாதென விகாரம். கோடாவென்னும் வினையெச்சம் தோற்றவென்பதனேடு முடிந் தது.

'போறை' என்பதுமுதல் 'பைந்துகிலாகி' என்பதுவரை.
(14—15 வரிகள்.)

(ப-ரை.) பொறை - (இருவகைத் தோற்றத்தின்) பொறுதி, மாண்டு - மாட்சிமைப்பட்டு, உயிர்க்கும் - பெறும், தாய் ஆம்-தாயாகிய, மண் மகள்-பூதேவி, களையாது-(ஒருபோதும்) நீங்காது, உடுக்கும் - உடுக்கும், பைந்துகில் ஆகி-பசியதுகிலாகியும்.

(வி-ரை.) பொறை: தொழிற்பெயர்; பகுதி: பொறு. விகுதி ஐ இருவகைத் தோற்றம் என்றது இயங்கியற்பொருள் நிலையியற் பொருள் என்பவற்றை. உயிர்த்தல்-பெறுதல்.

'வேனிற்கிழவன்' என்பதுமுதல் 'முரசாகி' என்பதுவரை.
(16—17 வரிகள்.)

(ப-ரை.) வேனிற்கிழவன் - மன்மதன், பேரணி - (படைக்கு வகுத்த) பேரணி, மகிழ - மகிழும்படி, முழக்காது - (ஒருவராலும்) முழக்கப்படாது, தழங்கும் - முழங்கும், மா முரசு ஆகி - பெரிய முரசாகியும்.

(வி-ரை.) வேனில் - வசந்தருது. கிழவன் - உரியவன். முரசு - முரசம்.

'நேடியோன்' என்பதுமுதல் 'பள்ளியறையாகி' என்பதுவரை.
(18—19 வரிகள்).

(ப-ரை.) நெடியோன் - திருமால், துயிலாது-(மயக்கத்தோடு) துயிலாது, அறிவோடு துயில - யோகநித்திரைபண்ண, பாயற்கு அமைந்த - (சேடனாகிய) பாயற்குப் பொருந்திய, பள்ளிஅறையாகி-திருப்பள்ளியறையாகியும்.

(வி-ரை.) துயில ஆகியென வினையும்; துயிலுமப்பாயற்கெனின், அகரம் பண்டறிசுட்டு; விட்டுணுமூர்த்தி முதலியோர் துயிலாதிருக்கத் தான்றுயிலும் பாயற்கென்க இது "செய்யாமற் செய்தவுதவி" போன்றது. நெடியோன் என்றது திரிவிக்கிரமனை. பாயல்-சயநம். பள்ளியறை - படுக்கைவீடு.

'சலபதி' என்பதுமுதல் 'ஆங்காய்' என்பதுவரை.
(20—21 வரிகள்.)

(ப-ரை.) சேம்நிலை-காவல் நிலையாக, சலபதி - வருணன், ஆய்ந்து - ஆராய்ந்து, வைத்த - வைத்தாற்போன்ற, முத்துமணி கிடக்

கும் - முத்துமணிகள் கிடத்தற்கிடமாகிய, இருள் செறி - இருள் செறிந்த, அரங்கு ஆய் - அறையாகியும்.

(வி - ரை.) உவமையொடு பொருட்கொற்றுமை யுண்மையாலும் அவ்வினை பொருளொடு மியைந்தது. வருணன் புனற்கரசனாதலின் அவன் சேமநிலையாக வைக்கப்பட்ட முத்துமணிகளெனினுமாம். புனல் - நீர். செறிதல் - நெருங்குதல், மிகுதலுமாம்.

'புலவு' என்பதுமுதல் 'வயலாகி' என்பதுவரை.
(22—23 வரிகள்)

(ப-ரை.) புலவு - புலானாற்றத்தையுடைத்தாய, உடல் - உடலினையுடைய, பரதவர் - நெய்தனிலமாக்களாகிய உழவர், தம் குடி ஓம்ப-தங்குடியைப் பாதுகாக்கும்படி, நாளும் விளைக்கும்-(மீன் முதலிய பயிர்களை) நாடோறும் விளையப்பண்ணும்,பெருவயல் ஆகி-பெரிய வயலாகியும்.

(வி-ரை.) புலவு: ஆகுபெயர்.

'கலமெனும்' என்பதுமுதல் 'வீதியதாகி' என்பதுவரை.
(24—25 வரிகள்.)

(ப-ரை.) கலம் எனும் - மரக்கலமாகிய, நெடு தேர் - பெரிய தேர், தொலையாது ஓட-இடைவிடாமலோட, அளப்பு அற - ஒருவராலு மளக்கப்படாதபடி, பரந்த - பரந்த, வீதியதாகி - தெருவீதியாகியும்.

(வி-ரை.) ஓடப்பரந்த வெனவியையும். பரத்தல்-விரிதல். வீதியதாகி யென்பதில் அது பகுதிப்பொருள் விகுதி.

'சுறவவேந்து' என்பதுமுதல் 'அமர்க்களமாகி' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) சுறவவேந்து - சுறவமாகிய அரசன், நெடும்படை செய்ய-மிகுந்த போர்செய்யும்படி, முழக்கமொடு-ஆரவாரத்துடனே, வளைத்த - (பூமியை) வளைத்த, அமர்க்களம் ஆகி-போர்க்களமாகியும்.

(வி-ரை.) ஒடு - உடனிகழ்ச்சி. வளைத்த அமர்க்களம் - கற்கப்படுமோசிரியன் போன்றது.

'மகரத்தெய்வம்' என்பதுமுதல் 'ஆலயமாகி' என்பதுவரை.
(28—29 வரிகள்).

(ப-ரை.) மகரத்தெய்வம் - மகரமாகிய தெய்வம், நாள்நிறைந்து உறைய-நெடுங்காலம் பொருந்தும்படி, மணி விளக்கு நிறைந்த-மணியாகிய விளக்கு நிறைதற்கிடமாகிய, ஆலயம் ஆகி - கோயிலாகியும்.

(வி-ரை.) மகரம் - மகரமீன். மணிவிளக்கு - ரத்நதீபம்.

'நீர்நெய்வார்த்து' என்பதுமுதல் 'குண்டமாகி' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) நீர் நெய் வார்த்து-நீராகிய நெய்யை வார்த்து, சகரர் அமைத்த - சகரராலமைக்கப்பட்ட, தீ வளர்-(வடவா முகாக்கினியாகிய (நெருப்பு வளர்தற்கிடமாகிய, வட்டக்குண்டம்ஆகி - ஓமகுண்டமாகியும்.

(வி-ரை.) சகரர் தோண்ட வுண்டாதலின் அதனை வார்த்ததாகக் கூறினர். அமைக்கப்பட்ட குண்டமெனவியையும். சகரர் - சகரராஜகுமாரர்.

'எண்டிகழ்' என்பதுமுதல் 'தகளியதாகி' என்பதுவரை.
(32—33 வரிகள்.)

(ப-ரை.) எண் திகழ் - ஆயிரமென்னுமெண்ணால் விளங்காநின்ற, பகு வாய் - பெரிய வாயினையும், இனமணி - இனமணிச் சூட்டினையுமுடைய, பாந்தள்-பாந்தளாகிய, தண்டில் நின்று எரியும்-தண்டின்மேற் சூரியனாகியதீபம் நின்றெரிதற்கிடமாகிய, தகளியது ஆகி-தகளியாகியும்.

(வி-ரை.) விளங்குதல் - கலைகளான் மேம்படுதல். "இலங்கு நூல் கற்றுரோ டேனையவர்" என்றாற்போல, மணியையுடைய சூட்டினை மணியென்று ராகுபெயரான். மணியை யுமிழும் பாந்தளென வுருபும் பொருளுந் தொக்கதெனினுமாம், படைக்கைபோல. அது வென்பது பகுதிப்பொருள் விகுதி. மணி : ஆகுபெயர். ஆதித்தனாகிய தீபமென மாட்டேறேலாது வந்தது.

'பஞ்சவன்' என்பதுமுதல்'மடைப்பள்ளியாகி' என்பதுவரை.
(34—37 வரிகள்.)

(ப-ரை.) நிறைந்த அன்புடன் - அன்பெல்லா நிறைதற்கிடமாகிய, பஞ்சவன் - பாண்டியன், வேண்ட - விரும்ப, மாறி குனித்த -

மாறியாடிய, நீறு அணி பெருமாற்கு-நீறணிந்த பெருமானுக்கு, அமுத போனகம்-அமுதமாகிய போனகத்தை, கதுமென உதவும்-விரையக்கொடுக்கும், அடுந்தீ மாறு - (வடவையாகிய) அடுந்தீமாறுத, மடைப்பள்ளி ஆகி - திருமடைப்பள்ளியாகியும்.

(வி-ரை.) அமுதமாகிய போனகம் - நஞ்சு. போனகம்-உணவு. மாறி - கால்மாறி. நீறு - திருவெண்ணீறு.

இன்னும் பலவாய் மன்னுங் கடலே.

(38—வது வரி.)

(ப-ரை.) இன்னும் - (இங்ஙனஞ் சொன்னவையன்றிப்) பின்னும், பலவாய் - பலவிதமாய், மன்னும் கடலே-நிலைபெறுங்கடலே.

(வி-ரை.) இன்னும் - பின்னும், "அருவரை மார்பிற் சென்றதறிந்தில ரனேக ரின்னும்" என்றாற்போல. கடற்குப்பலபொருளையுமுருவகம் பண்ணினமையாற் பலபொருளுருவகம். மன்னுதல் - நிலைபெறுதல்.

'தண்ணந்துறைவற்கு' என்பதுமுதல் 'வாடியும்' என்பதுவரை.

(40—41—45 வரிகள்.)

(ப-ரை.) இன்று - இப்பொழுது, (என் முகம் நாடி-என்முகம் பார்த்து), இவள் ஒருத்தி - இவளொருத்தி, தண்ணம் துறைவர்கு-குளிர்ச்சியினையுடைத்தாய துறையினையுடையாற்கு, நெருப்பு உறு மெழுகின் - நெருப்பிலுற்ற மெழுகுபோல, உள்ளம் வாடியும்-உள்ள முருகியும்.

(வி-ரை.) தண்ணந்துறைவன்: விகாரம். நான்கனுருபு காதற்கண் வந்தது. இன்: ஐந்தனுருபு, ஒப்புப்பொருட்டு. உள்ளம்: ஆகுபெயர். அம்: சாரியை.

அருவி தூங்கக் கண்ணீர் கொண்டும்.

(42—வது வரி.)

(ப-ரை.) அருவி தூங்க-அருவியொழுகினாற்போல வொழுகும்படி, கண்ணீர் கொண்டும் - கண்ணீர்கொண்டும்.

(வி-ரை.) தொழிலுக்குத் தொழிலுவமங் கொள்க.

அரவின்வா யரியிற் பலவு நினைந்து.
(43—வது வரி.)

(ப-ரை.) அரவின்வாய் - பாம்பின்வாயிலகப்பட்ட, அரியின் - தேரை (பலவு நினைந்தாற்) போல, பலவும் நினைந்தும்-எல்லாம் நினைந்தும்.

(வி-ரை.) தேரை - தவளை. அரியின் என்பதில் இன் ஐந்தனுருபு; ஒப்புப்பொருட்டு.

'நிலையா' என்பதுமுதல் 'தருகிலீர்' என்பதுவரை.
(44—46 வரிகள்.)

(ப-ரை.) நிலையா - நிலையாத, சூளின் - (வருவேனென்ற) சூள் போல, நிலையா - (அன்புார் நிறுத்த) நிலைநில்லாத, நெஞ்சும் - நெஞ்சும், கொண்டனள் என்என-என்பெற்றனளென்று, உற்ற வாய்மை-உற்றவாய்மை, சற்றும் தருகிலீர் - சிறிதாயினுந் தருகின்றிலீர்.

(வி-ரை.) என்முகம் நாடி யென்பதனை முன்னே கூட்டுக. நெஞ்சுமென்னு மும்மை யெச்சவும்மை. சற்றுமென்னும் வினையெச்சந் தருகின்றிலீரென்னு மெதிர்மறையிற் றருதலோடு முடிந்தது: "அறியச் சிறிதுமா வியன்றன்ன மென்னேக்கி நின்வாய் திறவாவிடின்" என்றாற்போல. சூள் - ஆணை. சூளின் என்பதில் இன் ஐந்தாவத னுப்புப்பொருட்டு. நெஞ்சு: ஆகுபெயர். வாய்மை-உண்மை.

'அன்றெனின்' என்பதுமுதல் 'கோடிதே' என்பதுவரை.
(47—50 வரிகள்.)

(ப-ரை.) அன்று எனின் - (இது) அல்லாவிடின், நும்மில் ஒன்றுபட்டு ஒருகால் - நும்மிலொன்றுபட்டொருதரம், இவளோ - இவளோ, துயரம் பெறுவது என்னென்று - துன்பப்படுவதென்னென்று, வினவாது இருக்கும் - கேளாதிருக்கும், கேண்மை - உறவாந் தன்மையை, மனனுல் நாடில்-மனத்தினினைக்கினும், சொல்லினும்-நாவாற்சொல்லினும், கொடிதே - கொடிதே (என்றறிகின்றிலீராதலால்).

(வி-ரை.) என்றறிகின்றிலீரென வொருசொல் வருவிக்க. ஓ,- இரக்கக்குறிப்பு, அசையுமாம். ஏகாரம்: ஈற்றசை. நாடி என்பது அவ்வத் தொழிலுக்கேற்ப நின்றது. நாடினுமென்னு மெண்ணும்மை தொக்கது. "தன்மை சுட்டலு முரித்து" என்றாற்போல. இன்: நீக்கம். உம்மை - சிறப்பும்மை.

நுங்க ளின்பம் பெருந்துணை யென்பால்.
(39—வது வரி.)

(ப-ரை.) நுங்கள் இன்பம் - நுங்கள் காதன்மை, என்பால் - என்மாட்டு, பெருந்துணை - பெருந்துணையாம்.

(வி-ரை.) பெருந்துணை யென்ப திகழ்ச்சிக்குறிப்பு, அதனாற் பலந்தமை தோன்றிற்று. இன்பமென்று காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். நும்மா லெனக்குவரு மின்பமெனினுமாம்.

கழியே! குருகே! கைதையே! கடலே! இவளொருத்தி துறைவற் குருகியும் சோண்டும் நினைந்தும் நிலைபெறு நெஞ்சுமென் கொண்டனளென் றுற்றவாய்மை சிறிதாயினுந் தருகின்றிலீர், அதுவன்றி, நீங்களொன்றுபட்டுக் கேளாதிருக்கு முறவாந்தன்மையை நினைக்கினுஞ் சொல்லினுங் கொடிதென் றறிகின்றிலீராதலால் நுங்கள் காதன்மை பெருந்துணையாமென வினைமுடிவு செய்க.

கழியே! ஆயிரங்கண்ணுடைய விந்திரன்போலுந் தோற்றத்தினையுடைய நீ யறியாத தொன்றில்லை, என்னளவு மறிகின்றிலை யெனவும்; குருகே! நீ யிரவலனுயின் நீ யிரத்தலறிவை, என்னிரவறிகின்றிலை யெனவும்; கைதையே! நீ குருகுகட் காதாரமாவை, எனக்காதர மாகின்றிலை யெனவும்; கடலே! நீ யிருசுடர்க்கு மிடங்கொடுத்தனை எனக் கிடங்கொடுத்திலை; பூமகட்காளையா யபிமானங் காத்தனை, எனக்குக் காத்திலை; மன்மதன் போணி பெண்களாதலால் பெண்கட்கெல்லா நீ துன்பஞ் செய்திலை, எனக்குத் துன்பஞ் செய்தனை; பள்ளியறையாய் விட்டுணுவின் துயிலறிந்தனை, யான்றுயிலாத தறிந்திலை, வருணன்வைத்த முத்துமணிகட் சுறையாய்நீங்காது காத்தனை, எனக்கு நீங்காது காத்திலை, பரதவர்க்கு வயலாயுணவாக்கினை, எனக் குணவாக்கிலை; தேரோட வீதியான நீ அவர் செல்ல விடங்கொடுத்தனை, எனக்கு வீதியா யிடங்கொடுத்திலை; அமர்க்களமான நீ பொரப்படுவை, தலைவரோடு பொரப்பட்டிலை; ஆலயமான நீ சேவிக்கப்படுவை, என்னாற் சேவிக்கப்பட்டிலை; ஓமகுண்டமான நீ அடுத்தார்க்குப் பலன் கொடுப்பை, யான் பலன் பெற்றிலன்; விளக்கெரியுந் தகளியான நீ யெங்கும் விளங்கப்பண்ணுவை, யான் விளங்கப்பண்ணிலை; மடைப்பள்ளியான நீ பெண்களிட்ட வழக்காகுவை, எனக் கப்படியாயிலை யெனவுஞ் சொல்லெச்சமுங் குறிப்பெச்சமுங் கொள்ளக் கிடந்தன. ஆயிரங்கண்ணும் விழித்துத் தெய்வேந்திரன் கிடந்தாற்போல மலர் விரிந்து கிடந்தனை,

எல்லாமுனக்குத் தெரியுமென அக்கூற்றுச் செய்யுஞ் செய்யுட் சிதைவின்மையிற் கூற்றெச்சமாம். என்னளவு முனக்கொன்றுந் தெரிந்ததில்லை யென்பது குறிப்பிற் கிடந்தமையிற் குறிப்பெச்சம். "செங்களட்படக்கொன்றவுணர்த்தேய்த்த" என்னும் பாட்டி லிரண்டும் காண்க. "சொல்லிய நன்மை யில்லாச் சுணங்கனிவ் வுடம்பு நீங்கி" என்னும் பாட்டில், "கூரிரும் பிரதங் குத்த வெல்லையில் செம்பொனாசு, மெரிநிறம் பெற்ற தன்றே" இதுவுமத்தன்மைத்தென்றது சொல்லெச்ச மென்றார். "படைமலர் நெடுங்கண்ணாள்" என்ற பாட்டில் "அல்குன் மிடைமணி மேகலை நோற்றயானே நோலாதேன்" என்பது குறிப்பெச்சமென்றார். "சொல்லொடுங் குறிப்பொடு முடிவு கொளியற்கை, புல்லிய கிளவி யெச்ச மாகும்" என்பது விதி. இது "நோயு மின்பமும்" என்னுஞ் சூத்திரத்தில் அழுகைபற்றிச் செய்யாமாபிற் றொழிற்படுத்தடக்கியது. (௨௪)

திருக்கோவையார் ௧௫-ம் செய்யுள்.

இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

இடமணித்துக்கூறி வற்புறுத்தலென்பது—அருட்குணமுரைத்து வற்புறுத்தவும் ஆற்றாமை நீங்காத தலைமகட்கு, நம்மூரிடத்திற்கு எம்மூரிடம் இத்தன்மைத்தெனத் தன்னூரினணிமை கூறி வற்புறுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத்
திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்தலெம்மூர்ப்
பருங்குன்ற மாளிகை நுண்களபத் தொளி பாயநும்மூர்க்
கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.

மடவரலை வற்புறுத்தி
இடமணித்தென் றவணியம்பியது.

(ப-ரை.) வரும் குன்றம் ஒன்று - இயங்குமலை யொன்றை, உரித்தோன் - உரித்தவன், தில்லையம்பலவன் - தில்லையம்பலத்தையுடையான், மலயத்து - (அவனது பொதியின்) மலையிடத்து, இருங்குன்றவாணர் - பெரியகுன்றத்தின்கண் வாழ்வாருடைய, இளங்கொடியே - மகளே, இடர் எய்தல் - வருத்தத்தைவிடு, கனங்குழை - கனங்குழாய், எம்மூர் - எம்மூரிடத்து, பருங்குன்றம் - பெரியகுன்றம்போலும், மாளிகை, - மாளிகைகளின், நுண் களபத்து - நுண்ணிதாகிய சாந்தின், ஒளி பாய - ஒளிபரந்து, நும் ஊர் கருங்குன்றம் - நும்மூர்க்கணுண்டாகிய கரிய குன்றம், வெண்ணிறம் - வெள்ளை

நிறத்தையுடைய, கஞ்சுகம் - சட்டையிட்டதனோடு, ஏய்க்கும் - ஒக்கும், எ-று.

(வி-ரை.) கருங்குன்ற வெண்ணிற மென்பது பாடமாயின், நுண்களபத்தொளிபரப்ப அவ்வொளி நும்மூர்க் கருங்குன்றத்திற் கிட்ட வெண்ணிறக் கஞ்சுகத்தோ டொக்குமென்றுரைக்க. ஈண்டுரைத்தவாற்றால், தலைமகன் மிக்கோனுதல் வேண்டும், வேண்டவே ஒப்பு என்னை பொருந்துமாறெனின், "மிக்கோனாயினுங் கடிவரையின்றே" என்பதோத்தாகலிற் பொருந்துமென்க. வற்புறுத்தி-வலியுறுத்தி. இளமணித் தென்றலே வற்புறுத்தலாக வுரைப்பினு மமையும். மெய்ப்பாடு - பெருமிதம். பயன் - இடமணித்தென்று வற்புறுத்தல். இயங்குமலையென்றது யானையை. கொடி : ஆகுபெயர். கணங்குழை: அன்மொழித்தொகையாய எச்சத்திரிபு.

நேரிசையாசிரியப்பா.

பொருப்புவளன் வேண்டி மழைக்கண் டிறப்பக்
குருகுபெயர்க் குன்றத் துடல்பக வெறிந்த
நெடுவேற் கடவுண் மயிற்கொடி முன்றிற்
பெருங்கிளை கூண்டு வெட்சிமலர் பரப்பி
யிருணற வளாய செந்தினை வெள்ளிடி
தேக்கிலை விரித்து நாற்றிசை வைத்து
மனவணி முதியோள் வரையணங் கயர்ந்து
மூன்று காலமுந் தோன்றக் கூற
வேலன் சுழன்று குறுமறி யறுப்பக்
கருவி நுனிகொ ணெறியிலை யீந்தின்
முற்றிய பெருநற வெண்ணுடன் குடித்து
நெட்டிலை யரம்பைக் குறுங்காய் மானு
முளியந் தறித்த கணைகொள்வாய்த் திரிக
லொப்புடைத் தாய வட்டவாய்த் தொண்டகங்
கோறலை பனிப்ப வான்விடு பெருங்குரல்
வீயாது துவைக்குங் கடன்மலை நாடர்
வருந்தியின் றெடுத்த செந்திரு மடமக
ளொருவுக வுள்ளத்துப் பெருகிய நடுக்க
மெம்மூர் சேணினு நும்மூர்க் குன்றமும்

பெருந்தவர் குழுவு மருங்கதி யிருப்பும்
பொதியமுங் களிப்ப விரிதரு தென்றலுங்
கணைகடல் குடித்த முனிவனுந் தமிழு
மேருவு மூவர்க் கோதிய புரமு
முலகமீன் றளித்த வுமையுமா வறனுந்
தேவர்க் கரசனுங் காவற் றருவும்
வழுவா விதியு மெழுதா மறையுஞ்
செங்கோல் வேந்துந் தங்கிய குடியுந்
தவஞ்சூ ழிமயமுங் கமஞ்சூன் மழையு
மெல்லையி லீங்கிவை சொல்லிய வன்றிக்
கண்ணன் கரமும் வெண்ணெயும் போலப்
பாசடை புதைத்த நெட்டாற் றேரிப்
பூத்தலர் விரித்த சேப்படு தாமரை
யுள்வளை யுறங்கும் வள்வாய்க் கூட
ணிறைந்துறை முக்கட் பெருந்திற லடிக
ளடியவர்க் கெவ்வள வெல்லை யதுவாங்
கொடிபுரை நுசிப்பிற் பெருமுலை யோளோ.

பொருப்புவளன்வேண்டி - பெருமுலையோளே. பகுதி - இயற்கைப்புணர்ச்சி, துறை - இடமணித்துக்கூறி வற்புறுத்தல்.

பொருப்புவளன் வேண்டி மழைக்கண் டிறப்ப.
(1—வது வரி.)

(ப-ரை.) பொருப்பு - மலையில், மழைக்கண் திறப்ப-மழைபெய்யும்படி.

(வி-ரை.) 'சேயோன் மேயமை வரையுலகமும்'' என்று பொருட்கூற்றிற் கூறியதற்கு, ''மழைவளந் தருவிக்கு முருகன்'' என்றார். கண்டிறத்தல் - மழைபெய்தல்.

'குருகு' என்பதுமுதல் 'கடவுள்' என்பதுவரை.
(2—3 வரிகள்.)

(ப-ரை.) குருகு பெயர் - கிரவுஞ்சமென்னுங் குருகின் பெயரையுடைய, குன்றத்து - குன்றத்தினது, உடல் பக - வடிவம்பிளக்க, எறிந்த - எறிந்த, நெடு வேல் - நெடியவேலினையுடைய, கடவுள்-கடவுட்கு.

(வி-ரை.) கடவுள் தெய்வமென்னும் பொருட்டா யஃறிணை முடிபுகொள்ளு முயர்திணையாய் நின்றது. நாவலந்தீவில் வட கூற்றிற் கிரவுஞ்சமென்னும் வரையைக் குருகுப்பெயர்க்குன்றமென்றார். ஈண்டுக் குருகென்றது அன்றிலை, அதற்கு வடமொழிப்பெயரது வாகலின், "நாவலந் தண்பொழி லாயிடைக் குருகொடு பெயர்பெற்ற மால்வரை யுடைத்து" என்றார் பரிபாடலினும். "குருகு பெயரிய குன்றெறிந்தானும்" என்றார் வெண்பாமாலையினும். குருகுபெயர் வரகுகதிர்போனின்றது. "ஒற்றிடை மிகா மொழியு மாருள, வெத்திறத்தில்லை வல்லெழுத்து மிகலே" என்பது விதி.

'மயில்' என்பதுமுதல் 'கூண்டு' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) மயில் - மயிலினையும், கொடி-கொடியினையுமுடைய, முன்றில் - முற்றத்தில், பெருங்கிளை - மிகுந்த கிளைகள், கூண்டு - திரண்டு.

'வெட்சிமலர்' என்பதுமுதல் 'வைத்து' என்பதுவரை.
(4—6 வரிகள்.)

(ப-ரை.) நாற்றிசை - நாற்றிசையினும், தேக்கிலை விரித்து - தேக்கிலையை விரித்து,வெட்சிமலர் (அளாய)-வெட்சிப்பூவோடு (கலந்த),செந்தினை - சிவந்த தினையரிசியை, பரப்பி - பரப்பி, இறால் நற அளாய - இறாட்டுத்தேனோடு கலந்த, வெள்ளிடி - வெள்ளிய தினைமாவை, வைத்து - வைத்து.

(வி-ரை.) நாற்றிசையினு மென்னு மினைத்தென வறிந்தவும்மை தொக்கது; அதனோடு மயங்கற்கண் வந்த வொடுவென்னுருபிரண்டிடத்துந் தொக்கது. அளாய வென்பதனை மலரோடுங் கூட்டுக.

'மனவணி' என்பதுமுதல் 'கூற' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) மனவு அணி சங்குமணியணியும், முதியோள்- முதுபெண்டிர், வரையணங்கயர்ந்து - வரைநெல்லிற் றெய்வமுண்டாகச் செய்து, மூன்று காலமும் - மூன்றுகாலத்து நிகழ்வனவும், தோன்றக்கூற - வெளிப்படக்கூற.

(வி-ரை.) வரை : ஆகுபெயர். முதியோள் - கட்டுவிச்சி. அணங்கு - தெய்வம்,

வேலன் சுழன்று குறுமறி யறுப்ப.

(9—வது வரி.)

(ப-ரை.) வேலன் - வெறியாட்டாளன், சுழன்று - சுற்றி, குறுமறி - குறியவாட்டுமறியினை, அறுக்க - அறுக்க.

(வி-ரை.) முருகன்றனக் கடையாளமாகக்கொண்டு திரிதலின் 'வேலன்'என்றார். "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்"என்றார் புறத்திணையினும்.

'கருவிநுனிகோள்' என்பதுமுதல் 'குடித்து' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) கருவி நுனிகொள் - படைக்கலத்தி னுனிபோல நுனியைக்கொண்ட, நெறி இலை - நெறித்தவிலையினையுடைய, ஈந்தின் - ஈந்திலில், முற்றிய - விளைந்த, பெருநறவு-மிகுந்த நறவெல்லாம், எண்ணுடன் குடித்து - கருத்தாகவருந்தி.

(வி ரை.) நறவு - தேன். ஈந்து - ஈச்சமரம்.

'நெட்டிலை' என்பதுமுதல் 'மலைநாடர்' என்பதுவரை.

(12—16 வரிகள்.)

(ப-ரை.) நெடு இலை - நெடிய இலையினையுடைய, அரம்பை - வாழையினது, குறுங்காய் மானும் - குறிய காயைப்போலும், முளியந்தறிந்த - முளியாமெலொப்பமிட்ட, கணைகொள் வாய்-திரட்சிகொண்ட வாயினையுடைய, திரிகலொப்புடைத்தாய - திரிகைபோன்ற, வட்டவாய் - வட்டவாயினையுடைய, தொண்டகம் - குறிஞ்சிப்பறையை, கோல்-கடிப்பால், தலைபனிப்ப-அதனிடத்தடித்தலால், வான் விடு-வானளவுஞ் செல்லும், பெருங்குரல் - மிகுந்தவோதை, வீயாது - கெடாது, துவைக்கும் - முழங்குதற்கு, கடன் - காரணமாகிய (தெய்வத்திற்குச் செய்யுஞ் சிறப்பினையுடைய), மலைநாடர் - மலைநாடர்.

(வி-ரை.) அம் : சாரியை. தறித்த - தறிந்த, விகாரம்; பனிப்பவென்பது காரணசாரியப்பொருட்கண் வந்த இறந்தகாலம். துவைக்குங்கடன்"கிலம் பூத்தமரம்" போன்றது.கடவுட்குக் கிளைகள் கூண்டு பரப்பி வைத்துக்கூற அறுக்க வருந்தி அடித்தலான் முழங்குங் கடன் மலைநாடரென்க.

வருந்தியீன் றெடுத்த செந்திரு மடமுகள்.

(17—வது வரி.)

(ப-ரை.) வருந்தி ஈன்றெடுத்த - தவம்பண்ணிப் பெற்றெடுக்கப்பட்ட, செந்திரு - செந்திருவினைப்போலும், மடமகள் - மடப்பத்தினையுடைய மடமகளே.

(வி-ரை.) கடல்கடைந்து வருந்திப் பெற்றெடுத்த திருவெணினுமமையும். மடமகள் - அண்மைவிளி. செந்திரு - இலக்குமி. மடப்பம் - இளமை.

ஒருவுக வுள்ளத்துப் பெருகிய நடுக்கம்.

(18—வது வரி.)

(ப-ரை.) உள்ளத்து-உள்ளத்தின்கண், பெருகிய நடுக்கம் - மிகுந்த துன்பத்தை, ஒருவுக - விட்டு நீங்குக.

கொடிபுரை நுசுப்பிற் பெருமுலை யோளே.

(36—வது வரி.)

(ப-ரை.) கொடிபுரை-கொடிபோலும், நுசுப்பின்-இடையினையும், பெருமுலையோளே - பெரிய முலையினையுமுடையாய்.

'எம்மூர்' என்பதுமுதல் 'இருப்பும்' என்பதுவரை.

(19—20—35 வரிகள்.)

(ப-ரை.) எம்மூர்-எம்முடைய வூர்க்கும், நும்மூர் குன்றமும் - நும்முடையவூர்க் குன்றத்திற்கும், (எல்லை யெவ்வளவெனில்), பெருந்தவர் குழுவும்-அரிய தவத்தினையுடையார் கூட்டத்திற்கும், அருங்கதியிருப்பும் - வீட்டிருப்பிற்கும், (எல்லை) எவ்வளவு - (எல்லை) எவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம், (அதுவன்றி).

(வி-ரை.) அதுவென்பது எல்லையைச் சுட்டிற்று.

பொதியமுங் களிப்ப விரிதரு தென்றலும்.

(21—வது வரி.)

(ப-ரை.) பொதியமும் - பொதியமலைக்கும், களிப்ப-எல்லாருமகிழும்படி, விரிதரு - பரவாநின்ற, தென்றலும் - தென்றற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம், (அதுவன்றி).

கலைகடல் குடித்த முனிவனுந் தமிழும்.
(22—வது வரி.)

(ப-ரை.) கலை கடல்-முழங்காநின்ற கடலினை, குடித்த-நுகர்ந்த, முனிவனும் - அகத்தியற்கும், தமிழும் - தமிழிற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

மேருவு மூவர்க் கோதிய புரமும்.
(23—வது வரி.)

(ப-ரை.) மேருவும் - மேருவிற்கும், மூவர்க்கு-பிரமா முதலிய மூவர்க்கும், ஓதிய - சொன்ன, புரமும் - கோயிற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

உலகமீன் றளித்த வுமையுமா வறனும்,
(24—வது வரி.)

(ப-ரை.) உலகம்-பதினாலுலகத்தையும்,ஈன்று அளித்த-படைத்துக்காத்த, உமையும் - உமைக்கும், மா அறனும் - பெரிய அறத்திற்கும், (எல்லை எவ்வளவு-எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

(வி-ரை.) மாவறம் - முப்பத்திரண்டறமாம்.

தேவர்க் கரசனுங் காவற் றருவும்.
(25—வது வரி.)

(ப-ரை.) தேவர்க்கு அரசனும் - தேவேந்திரனுக்கும், காவல் - (அவன்) காவலையுடைய, தருவும் - கற்பகத்தருவிற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம்-அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

வழுவா விதியு மெழுதா மறையும்.
(26—வது வரி.)

(ப-ரை) வழுவா விதியும் - (படைப்பு முறையில்) தப்பாத பிரமாவுக்கும், எழுதா மறையும்-எழுதப்படாத வேதத்திற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம்-அவ்வள வெல்லையாம்), (அதுவன்றி).

செங்கோல் வேந்தும் தங்கிய குடியும்.
(27—வது வரி.)

(ப-ரை.) செங்கோல் வேந்தும்-செவ்விய கோல்போலு முறைமையினையுடைய வேந்தனுக்கும், தங்கிய - அவன் செங்கோற்கீழ் தங்கிய, குடியும் - குடிக்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம் - அவ்வளவெல்லையாம்), (அதுவன்றி).

(வி-ரை). செவ்விய கோல்போலு முறைமையைச் 'செங்கோல்' என்றார் ஆகுபெயரான்.

தவஞ்சூ ழிமயமுங் கமஞ்சூன் மழையும்.
(28—வது வரி.)

(ப-ரை.) தவம் சூழ் - தவத்தோர் சூழ்ந்த, இமயமும் - இமயமலைக்கும், கமம் சூல் - நிறைந்த சூலினையுடைய, மழையும் - மேகத்திற்கும், (எல்லை எவ்வளவு - எல்லை யெவ்வளவோ, அதுவாம்-அவ்வள வெல்லையாம்), (அதுவன்றி).

(வி-ரை.) இல்லெனன்பதனைச் சேரோடு கூட்டி யிங்ஙிவை சொல்லிய வன்றியெனப் பின்னுரைக்க.

'கண்ணன்' என்பதுமுதல் 'அதுவாம்' என்பதுவரை.
(30—35 வரிகள்.)

(ப-ரை.) கண்ணன் காமும் - விட்டுணுவின் கையும், வெண்ணெயும்போல - அதனிலிருந்த வெண்ணெயும்போல, பாசடை - பசியவிலை, புதைத்த - மறைத்த, நெட்டாற்று - நெடியவொழுங்கினையுடைய, எரி-வாவியின்கண், பூத்தலர் விரித்த-பூத்து மலர்விரித்த, சேப்படு - செம்மை யடுத்த, வள் வாய் - வள்ளம்போன்ற வாயினையுடைய, தாமரையுள்-தாமரையுள், வளை உறங்கும் சங்கங்கிடந்துறங்கும், கூடல் - மதுரையில், நிறைந்துறை - பூரணகலைபா புரையும், முக்கண் - முக்கண்ணினையும், பெருந்திறல் - பெருந்திறலினையுமுடைய, அடிகள் - அடிகட்கும், அடியவர்க்கு - அடியவர்க்கும், எவ்வளவு எல்லை - எவ்வளவெல்லையோ, அதுவாம்- அவ்வளவெல்லையாம்.

(வி-ரை.) அடிகட்குமென வுருபு மும்மையுந் தொக்கது. அடியர்க்குமென வும்மை விரிக்க.

ஈங்கிவை சொல்லிய வன்றி—சேணில்.
(29—19 வரிகள்.)

(ப-ரை.) ஈங்கிவை சொல்லிய அன்றி - இங்ஙனஞ்சொல்லப் பட்ட விவையன்றி, சேண் இல் - தூரமில்லை.

மகளே! நடுக்கமொருவுக. பெருமூலையையுடையாய்! எம்மூர்க்கு நம்மூர்க்குன்றிற்கு மெல்லை யிவையன்றித் தூரமில்லை யென வினை முடிவு செய்க. (உரு)

திருக்கோவையார் கூகூ-ம் செய்யுள்.

நின்குறை நீயே சென்றுரையென்றல்.

நீயே கூறென்று மறுத்தலென்பது—இவள் இவ்விடத்து நிலைமையை மறையாது எனக்குரைப்பாளாயது என்கட்கிடந்த பரிவினானன்றே, இத்துணைப் பரிவுடையாள் எனக்கிது முடியாமை யில்லை யெனத் தலைவன் உட்கொண்டுபோய்ப் பிற்றைஞான்று செல்ல, தோழி! யான்குற்றேவன் மகளாகலிற் றுணிந்து சொல்லமாட்டுகின்றிலேன், இனி நீயே சென்று நின்குறையுள்ளது சொல்லெனத் தானுடம்படாது மறுத்துக் கூறுநிற்றல். அதற்குச்செய்யுள்:—

அந்தியின் வாயெழி லம்பலத் தெம்பா னம்பொன் வெற்பிற்
பந்தியின் வாய்ப்பல வின்சுளை பைந்தே னொடுங்கடுவன்
மந்தியின் வாய்க்கொடுத் தோம்புஞ் சிலம்ப மனங்கனிய
முந்தியின் வாய்மொழி நீயே மொழிசென் றம்மொய்குழற்கே:

அஞ்சு தும் பெரும் பஞ்சின்மெல் லடியைக்
கூறுவ நீயே கூறு கென்றது.

(ப-ரை.) அந்தியின்வாய் - அந்தியின்கணுண்டாகிய, எழில் - (செவ்வானின்) எழிலையுடைய, அம்பலத்து - அம்பலத்தின்கணுளனாகிய, எம் - எம்முடைய, பரன் - (எல்லாப்பொருட்கும்) அப்பாலாயவனது, அம் - அழகிய, பொன் வெற்பில் - பொன்னையுடைய வெற்பிடத்து, பந்தியின்வாய் - பந்தியாகிய நிரையின்கண், பைந்தேனொடும் - செவ்விததேனோடும், பலவின்சுளை - பலாச்சுளையை, கடுவன் - கடுவன், மந்தியின்வாய் - மந்தியின்வாயில், கொடுத்து-(அருந்தக்) கொடுத்து, ஓம்பும் - பாதுகாக்கும், சிலம்ப - சிலம்பையுடையாய், மனம் கனிய - (அவள்) மனநெகிழ, முந்தி - விரைந்து, இன் - இவ்வினிய, வாய்மொழி - வாய்மொழிகளை, அம்மொய்குழற்கு -

அம்மொய்த்த குழலையுடையாட்கு, நீயே - நீயே, சென்று - சென்று, மொழி - சொல்லுவாயாக, எ - று.

(வி-ரை.) எல்லாப்பொருளையுங் கடந்தானாயினும் எமக்கணியனென்னுங் கருத்தான் 'எம்பரன்' என்றார். வெற்பிற் சிலம்ப வெனவியையும், பந்திபலாநிரை யென்பாருமுளர். சிலம்பென்றது வெற்பினொருபக்கத்துளதாகிய சிறுகுவட்டை. வாய்மொழி - மொழியென்னுந்துணையாய் நின்றது. மனங்கனியு மென்பதூஉம், நின்வாய்மொழியென்பதூஉம் பாடம். மந்தி உயிர்வாழ்வதற்குக் காரணமாகியவற்றைக் கடுவன்தானே கொடுத்து மனமகிழ்வித்தாற்போல அவள் உயிர்வாழ்வதற்குக் காரணமாகிய நின்வார்த்தைகளை நீயே கூறி அவளை மனமகிழ்விப்பாயாகவென உள்ளுறையுவமங் கண்டுகொள்க. மெய்ப்பாடும் பயனும் அவை.

நேரிசையாசிரியப்பா.

வேற்றுப் பிடிபுணர்ந்து தீராப் புலவி
சுற்றமொடு தீர்க்க வுய்த்த காதலிற்
கருங்கைவெண் கோட்டுச் சிறுகட் பெருங்களி
றுளத்துநின் றளிக்குந் திருத்தகு மருநூல்
பள்ளிக் கணக்கர் பாற்பட் டாங்குக்
குறிஞ்சிப் பெருந்தே னிறாலொடு சிதைத்து
மென்னடைப் பிடிக்குக் கைப்பிடித் துதவி
யடிக்கடி வணங்குஞ் சார னாட
வந்தண ரிருக்கை யகல்வோர் சூழ்ந்தென
நன்னயங் கிடந்த பொன்னகர் மூடிப்
புலைசெய் துடன்று நிலைநிலை தேய்க்குந்
தள்ளா மொய்ம்பி னுள்ளுடைந் தொருகால்
வேதியன் முதலா வமரரு மரசனும்
போதுதூ யிரப்பப் புணரா மயக்க
நாரண னடித்த வெழுவாய்த் தருக்கத்
தறிவுநிலை போகி யருச்சனை விடுத்த
வெள்ளமுர ணரக்கர் கள்ளமதின் மூன்று
மடுக்குநிலை சுமந்த வலித்தடப் பொன்மலை
கடுமுரண் குடிக்கு நெடுவிற் கூட்டி

யாயிரந் தீவா யரவுநாண் கொளுவி
மாதவ னங்கி வளிகுதை யெழுநுனை
செஞ்சரம் பேருரு ளருக்கன் மதியாகத்
தேர்வரை வைய மாகத் திருத்திச்
சென்னிமலை யீன்ற கன்னிவிற் பிடிப்ப
வொருகான் முன்வைத் திருகால் வளைப்ப
வளைத்தவில் வட்டங் கிடைத்தது கண்டு
சிறுநகை கொண்ட வொருபெருந் தீயி
னேழுயர் வானம் பூழிபடக் கருக்கி
யருச்சனை விடாதங் கொருப்படு மூவரி
லிருவரைக் காவன் மருவுத லீந்து
மற்றொரு வற்கு வைத்தநட மறிந்து
குடமுழ விசைப்பப் பெறுமரு ணல்கி
யொருநா ளருச்சனை புரிநர் டலர்க்கு
மரும்பெற லுளதாம் பெரும்பதங் காட்டி
யெரியிடை மாய்ந்த கனல்விழி யரக்கர்க்
குலவாப் பொன்னுல கடைதர வைத்த
சுந்தரக் கடவுள் கந்தரக் கறையோன்
மாமி யாடப் புணரி யழைத்த
காமரு கூடற் கிறைவன் கழலிணை
களிப்புடை யடியர்க்கு வெளிப்பட் டென்ன
வொருநீ தானே மருவுதல் கிடைத்துக்
கள்ளமும் வெளியு முள்ளமுறை யனைத்தும்
விரித்துக் கூறிப் பொருத்தமுங் காண்டி
யீயா மாந்தர் பொருடேய்ந் தென்ன
நுண்ணிடை சுமந்தாற் றுது
கண்ணிய சுணங்கின் பெருமுலை யவட்கே.

வேற்றுப்பிடிபுணர்ந்து - பெருமுலையவட்கே. பகுதி - சேட்படை. துறை - நின்குறைநீயேசென் றுரையென்றல்.

'வேற்றுப்பிடி' என்பதுமுதல் 'சாரனுட' என்பதுவரை.
(1—8 வரிகள்.)

(ப-ரை.) கருங்கை - கரியகையினையும், வெள் கோட்டு-வெள்ளிய கோட்டினையும், சிறு கண்-சிறிய கண்ணினையுமுடைய, பெருங்

களிறு - பெரியயானையானது, வேற்றுப்பிடி - தான் அயற்பிடியை, புணர்ந்து - புணர்ந்ததினாலே, தீராப்புலவி - தீராதபுலவியை, சுற்றமொடு தீர்க்க - தன்சுற்றமொடு தீர்க்கும்படி, உய்த்த காதலின் - தன்னிடத்தில் செலுத்திய காதலினாலே, பள்ளிக்கணக்கர்பால் - பள்ளியோதுவிப்பாரிடத்து, உள்ளத்துநின்று - உள்ளத்தி லிடைவிடாதுநின்று, அளிக்கும் - கொடுத்தற்குக் காரணமாகிய, திருத்தகும் - சிறப்புத்தகும், அருநூல்-அரியநூல், பட்டாங்கு-(சிதைவு) பட்டாற்போல, குறிஞ்சி - குறிஞ்சிநிலத்துண்டாகிய, இருளொடு சிதைத்து - இருட்டையழித்து, மெல் நடை - மெத்தென்ற நடையினையுடைய, பிடிக்கு - பிடிக்கு, பெருந்தேன் - மிகுந்ததேனை, கை பிடித்து - (அதன்) கையைப்பிடித்து, உதவி - கொடுத்து, அடிக்கடி வணங்கும் - அடிக்கடி வணங்குதற்கிடமாகிய, சாரல்-மலைப்பக்கத்தினையுடைய, நாட - நாடனே.

(வி-ரை.) யானையானது பிடியின் வெறுப்புத்தீர்த்து அதற்குயிர் வாழ விருட்டைச் சிதைத்துத் தேனைக் கொடுத்து மனநெகிழும்படியடிக்கடி வேண்டிக்கொண்டாற்போல, அவளுயிர் வாழும்படி மனத்துயர் நீக்கி அவள் மனநெகிழும்படி நின்குறைகளை நீயேகூறிவேண்டிக்கொள்வாயென வுள்ளுறை யுவமங்கொள்க. "கிழவோட் குவமமீரிடத் துரித்தே" என்னுஞ் சூத்திரத்திற் சிறுபான்மை குறிஞ்சி முதலியவற்றிற்கு முவமப் பொலிவுங் கொள்க. "என்றலின், குறிஞ்சியிலுவமப் பொலிவு கொண்டார் பள்ளியோதுவிப்பாரிடத் தரியநூல் சிதைவுபட்டாற்போல" என்ற வேனையுவமங் குறிஞ்சிப் பெருந்தே னிருளோடு சிதைக்குமென்ற வுள்ளுறை யுவமத்தைத்தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்துநின்றது. இது உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பென்க. "கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என்ற சூத்திரத்திற்போன்ற வுள்ளுறை. புணர்ந்தவென்று பாடமாயின் உண்ட வெச்சில்போலக் கொள்க. சுற்றமொடு என்ற ஒடு ஒருவினையொடு உபகாரப்படுதலின். இருளொடு என்ற ஒடு உருபுமயக்கம்.

'பேருருளருக்கன்' என்பதுமுதல் 'ஆகத்திருத்தி' என்பதுவரை.
(22—23 வரிகள்.)

(ப-ரை.) அருக்கன் மதி - ஆதித்தனும் சந்திரனும், பேருருள் ஆக - பெரிய வண்டியாக, வையவரை - பூமியெல்லை, தேராக திருத்தி - தேராகப்பண்ணி.

'மாதவன்' என்பதுமுதல் 'செஞ்சரம்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) வளி குதை - வாயுகுதையாக, அங்கி - அக்கினி, எழு நுனை-தோன்று முனையாக, மாதவன்-விட்டுணு, செஞ்சரம் - சிவந்த வம்பாக.

(வி-ரை.) இது எதிர்நிரனிறை, இதனை மயக்கநிரனிறையுமா மென்பர்.

சென்னிமலை யீன்ற கன்னிவிற் பிடிப்ப.
(24—வது வரி.)

(ப-ரை.) சென்னி - உச்சியினையுடைய, மலை ஈன்ற-இமயமலை பெற்றதனால் வந்த, கன்னி - பார்வதி, வில் பிடிப்ப-வில்லைப் பிடிக்கும்படி.

(வி-ரை.) சிவனுக் கிடப்பாகங் கன்னியாதலில், 'கன்னிவிற் பிடிப்ப' என்றார்.

'அடுக்குநிலை' என்பதுமுதல் 'நாண்கோளுவி' என்பதுவரை.
(18—20 வரிகள்.)

(ப-ரை.) அடுக்கு நிலை - அடுக்காகிய வுலகத்தை, சுமந்த - பரித்த, வலி-வலியையும், தடம்-பெருமையையுமுடைய, பொன் மலை - மகமேருவை, கடு முரண் - கடிய பகையை, குடிக்கும் - கெடுக்கும், நெடு வில் கூட்டி-நெடிய வில்லாகத்திருத்தி, ஆயிரம் தீ வாய்-விடத்தையுடைத்தாய ஆயிரம் வாயினையுடைய, அரவு நாண் கொளுவி - பாம்பு நாணாகவேற்றி.

(வி-ரை.) "உண்டற்குரிய வல்லாப்பொருளை,யுண்டனபோலக் கூறலுமரபே" என்றமையாற் 'குடிக்கும்' என்றார். "தீநஞ்சு நச்சு நாகத்தி னாழச் சீற்றத்தன்" என்றாற்போல.

'ஒருகால் முன்வைத்து' என்பதுமுதல் 'பெருந்தீயின்' என்பதுவரை.
(25—27 வரிகள்.)

(ப-ரை.) ஒருகால் முன்வைத்து-ஒருகாலை முன்னே வைத்து, இருகால் - இருகாலை, வளைப்ப - வளைக்கும்படி, வளைத்த-வளைக்கப்பட்ட, வில்வட்டம்-வில்வட்டம், கிடைத்தது கண்டு-பெற்ற தொழில்

களைக்கண்டு, சிறு நகை கொண்ட - புன்முறுவல் செய்ததனால் வந்த, ஒரு பெருந்தீயின் - ஒப்பற்ற பெருநெருப்பில்.

(வி-ரை.) ஒருகான் முன்வைத்தெனவே-ஒருகால் வளைத்தமை தோன்றிற்று; அதனால் ஆலீட நிலையும் விரத்தியாலீடமு மடங்கின. இரட்டுற மொழிதலால் ஒருகான் முன்போல் வைத்தென்னவே யொருகால் வளைந்தமை தோன்றிற்று. அதனாற் பைசாசநிலை யடங்கிற்று. "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" என்றமையா னமைக்க. "குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு" என்றாற்போலவும், "பாடுதும் பாவை போற்பே" என்றாற்போலவும், இருகால் வளைப்ப வெனவே மண்டிலநிலை யடங்கிற்று. "நிலையோர் நால்வகை நிலைபைசாச, மாலீட மண்டிலம் பிரத்தியா லீடம், ஒருகா னிலைநின் றொருகான் முடக்கும், பரியா யமெனப் பைசாச நிலையே", "வலக்கான் மண்டலித் திடக்கான் முந்துற, மதற்பெய ராலீட நிலைய தாகும், இருகான் மண்டலித் திடுதன்மண் டிலநிலை வலக்கான்முந்துற் றிடக்கான் மண்டலிப் பிற்பிரத்தி யாலிட மெனப்பெய ராகும்" இவற்றா னறிக. வில்லி னொருகாலை முன்னே யூன்றி, அதனிருகாலும் வளைத்ததனால் அவ்வில் வட்டமாகப்பெற்ற தொழில்களை யெனினுமாம். வட்டம் - இடமுமாம், "மற்றநாடு வட்டமாக" என்றாற்போல. வில்லிடத்துக் கற்றதொழில்களைப் பார்த்தெனினுமாம்.

'அந்தணரிருக்கை' என்பதுமுதல் 'மோய்ம்பின்' என்பதுவரை.

(9—12 வரிகள்.)

(ப-ரை.) அந்தணர் இருக்கை - பெரியோராசிரமத்தில், அகல்வோர் சூழ்ந்து என - கீழ்மக்கள் சூழ்ந்து தீட்டுச்செய்தாற்போல, நல் நயம் கிடந்த-மிகவு நன்மையாகக் கிடந்த, பொன் நகர் முடி-தெய்வலோகமுற்றும், புலை செய்து - தீட்டுச்செய்து, உடன்று - கோபித்து, நிலைநிலை தேய்க்கும் - அடிக்கடி கெடுக்கும்; தள்ளா-ஒருவராலு நீக்கப்படாத, மொய்ம்பின் - வலியினால்.

(வி-ரை.) சூழ்ந்தென: விகாரம், "பரப்புக் கிடந்தென" என்றாற்போல. உடன்று என்பதற்குப் பகுதி உடல். மொய்ம்பு - வலி. இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது.

எழுவாய் கள்ளமதின் மூன்றும்.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) எழுவாய் - ஓரிடத்திரா தெழுதல்பெற்ற, கள்ளமதில் மூன்றும் - கள்ளத்தையுடைய முப்புரமும்.

(வி - ரை.) எழுவா யிரண்டும் வினைமாத்திரையாய் நின்றன. கள்ளம் - வஞ்சம். மதில் : ஆகுபெயர்; முப்புரமும் அது. உம்மை பிரிந்து மதிலோ டியைந்தது.

ஏழுயர் வானம் பூழிபடக் கருக்கி.

(28—வது வரி.)

(ப-ரை.) ஏழுயர் வானம்—, பூழிபடக் கருக்கி - தூள்பட வெரித்து.

(வி-ரை.) இது பாண்டரங்கக் கூத்தென்க. என்னை "எரியி னுருவ விரிசடைக் கடவுள், திரிபுர மெரித்தல் காரண மாக, வரி சிலை வளைத்து வாளிமுன் கோத்துத், தேரே யரங்க மாக வாடிய, கூத்தே பாண்டரங் கம்மே" என்றாராகலின்.

'உள்ளுடைந்து' என்பதுமுதல் 'அரக்கர்' என்பதுவரை.

(12—17 வரிகள்.)

(ப-ரை.) வேதியன் முதலா - பிரமா முதலான, அமரரும் - தேவர்களும், அரசனும் - தேவேந்திரனும், ஒருகால் - ஒருமுறை, உள் உடைந்து - உள்ளம் வருந்தி, போது தூய் - மலரைச் சிந்தி, இரப்ப - வேண்டிக்கொள்ள, நாரணன் - விட்டுணுவானவன், புணரா மயக்கம்-(முன்னின்றநிலையிற்) பொருந்தாது மயக்கும்படி, நடித்த - நடிப்புச்செய்த, தருக்கத்து-(உலோகாயத சமயத்) தருக்கத்தினாலே, அறிவுநிலை போகி - அறிவுநிலைகெட்டு, அருச்சனை விடுத்த - (சிவ) வழிபாடு தவிர்ந்த, முரண் - பகையினையுடைய, அரக்கர் - அரக்கர், வெள்ளம் - வெள்ளத்துள்;

(வி-ரை.) புணராதென்பது குறைந்துநின்றது. பிரமனை 'வேதியன்' என்றார், அவன் வேதியர் தலைவனாதலான். அமரர் என்றதை யடுத்துவந்ததனால் அரசன் என்றது தேவேந்திரனைக் குறித்தது.

அருச்சனை விடாதங் கொருப்படு மூவரில்.

(29—வது வரி.)

(ப-ரை.) அங்கு - (நாரணன் விளையாட்டினால்) அவ்விடத்து, அருச்சனை விடாது - சிவார்ச்சனையை விடாது, ஒருப்படு மூவரில் - ஒருவழிப்படு மூவர்க்குள்.

'இருவரை' என்பதுமுதல் 'சுந்தரக்கடவுள்' என்பதுவரை.

(30 – 37 வரிகள்.)

(ப-ரை.) இருவரை - வாணாசுரனொழித்த விருவர்க்கு, காவல் மருவுதல் ஈந்து-வாயில் காவற்றொழில் பெறுதலைச்செய்து, மற்றொரு

வர்க்கு - மற்றொருவனாகிய வாணனுக்கு, வைத்த - தான் மெய்யிற் காட்டிய கோப்பு முதலியவற்றையுடைய, நடம் அறிந்து - நடத்தின் சதியறிந்து, குடமுழவு இசைப்ப - குடமுழவைக்கொட்ட, பெறும்-பெறுதற்குக் காரணமாகிய, அருள் நல்கி - கிருபையளித்து, ஒரு நாள் - ஒருநாளில், அருச்சனை - அருச்சனை, புரி - செய்ய, நாடலர்க்கும் - விரும்புதலில்லாதவர்க்கும், அருப்பெறல் - பெறுதற்கரிய, பெரும்பதம் உளதாம் - பெரும்பத முண்டாகுமென்பது, காட்டி - காட்டவேண்டி, எரியிடை மாய்ந்த - புன்னகைத்தீயா லிறத்தற்குக் காரணமான, கனல்-கனலினையுடைத்தாய, விழி-விழியினையுடைய, அரக்கர்க்கு - அரக்கர்க்கு, உலவா - கெடாத, பொன்னுலகு-சுவர்க்கம், அடைதர வைத்த - பெறவைத்த, சுந்தரக்கடவுள்-நன்மையினையுடைய கடவுள்.

(வி-ரை.) மற்று: அசை. வைத்த: தொழிற்பெயர். நடம்: ஆகுபெயர். பெருமருள்: காரண காரியம். கருவிக் கண்டங்கும், நாடலர்க்குமென்னு மும்மை சிறப்பும்மை. என்பதெனை வொருசொல் வருவிக்க. காட்டி - காட்ட, எரிநகைத்தீ - மாய்ந்த கனல்விழி. அரக்கர் காரணகாரியமன்றி முதற்பெயர் கொண்டதுமாம். கனல்விழி யரக்கர்-முன்சொன்ன சிவார்ச்சனைவிட்ட வரக்கர். ‘கனல் விழியரக்கர்’ என்றார் முன் கோபித்து மாய்தலின். அடைதர என்பதற்குப் பகுதி அடைதா. கடவுள்: ஆகுபெயர், தத்துவாதீதனென்பது பொருள்.

‘கந்தரக்கறையோன்’ என்பதுமுதல் ‘வெளிப்பட்டென்ன’ என்பதுவரை.

(37—40 வரிகள்.)

(ப-ரை.) கந்தரக் கறையோன் - மிடற்றுக் கறுப்பையுடையோன், மாமி ஆட - மாமியாகிய மேனைநீராட, புணரி அழைத்த - கடலினையழைத்த, காமரு - அழகுமருவிய, கூடற்கு இறைவன் - மதுரைக்கிறைவன், களிப்பு உடை அடியர்க்கு - மேல்வைத்த வுள்ளக்களிப்பினையுடைய அடியார்க்கு, கழலிணை-அவன் கழலிணைகள், வெளிப்பட்டென்ன - வெளிப்பட்டாற்போல.

(வி-ரை.) கறை - கறுப்பு, “காரென்ன வாருங் கறைமிடறு” என்றாற்போல. கந்தரக்கறையோன்-சினையொடு முதற்கொற்றுமையுண்மையால் “செவிச்செஞ் சேவலுங் கூகையும்” என்றாற்போன்றது. காமர் மருவும் - காமருவெண விகாரமாயிற்று, “காமருபூங்கோதாய்” என்றார் சிற்றகத்தியத்திலும். கறை: ஆகுபெயர். கந்தரம்;

வடசொல், சித்தைத் தாங்கிக்கொண்டிருப்பது என்பது பொருள். கழல் - திருவடி. இணை - இரண்டு. வெளிப்பட்டாலென்ன வென்பது வெளிப்பட்டென்னவென விகாரமாயிற்று.

'ஈயாமாந்தர்' என்பதுமுதல் 'பெருமுலை' என்பதுவரை.

(44—46 வரிகள்.)

(ப-ரை.) ஈயாமாந்தர் - கொடாத லோபிகளுடைய, பொருள் தேய்ந்தென்ன-பொருடேய்ந்தாற்போலத் தேய்ந்ததென்னும், நுண் இடை-நுண்ணிய இடையானது, சுமந்து ஆற்றாது-தான் சுமந்தாற்றாமல், கண்ணிய - கருதுதற்குக் காரணமாகிய, சுணங்கின்-சுணங்கினையுடைய, பெரு முலை - பெரிய முலையினையுடையாளை.

(வி-ரை.) தேய்ந்தென்ன வென்பது விகாரம். செயப்படுபொருள் வினைமுதல்போனின்றது, "இல்வாழ்வான்பான்" என்றாற்போல. கண்ணியமுலை - தன்வினையன்றிப் பிறவினையெனின் என்றொரு வொருசொல் வருவிக்க. கண்ணுதல் - கருதுதல். சுணங்கு - தேமல். பெருமுலை : அன்மொழித் தொகைக்காரணப்பெயர். இது ஈண்டண்மைவிளியாய்நின்றது.

மருவுதல் கிடைத்து.

(41—வது வரி.)

(ப-ரை.) மருவுதல் கிடைத்து - கிட்டுதலைப் பெற்று.

(வி-ரை.) மருவுதல் என்பதனீற்றில் இரண்டனுருபு தொக்கது.

ஒருநீ தானே.

(41—வது வரி.)

(ப-ரை.) ஒரு நீ தானே-(யாம் குற்றேவன் மகளாயிற் சொல்ல மாட்டோம்) ஒப்பற்ற நீதானே.

(வி-ரை.) ஏகாரம்: பிரிநிலை.

'அவட்கு கள்ளமும்' என்பதுமுதல் 'பொருத்தமுங்காண்டி' என்பதுவரை.

(42—43—46 வரிகள்.)

(ப-ரை.) அவட்கு - அவளுக்கு. உள்ளம் உறை - நின்றுள்ளத்திற் பொருந்திய, கள்ளமும் வெளியும்-பொய்யுமெய்யுமாகிய, அனைத்தும் - எல்லாம், வி[illegible] கூறி [illegible]மனம் நெகிழ) விரித்துச் சொல்லி, பொருத்தமுங் காண்[illegible] - உடன்படு[illegible]ங் காண்பாயாக.

(வி-ரை.) உள்ளமுறை - உள்ளபடியெனினுமாம். யான்சொன்ன பொய்யு மெய்யுங் கருதும்படி யவட்கு நின்மனத்திற் கிடையெல்லா முறையாக விரித்துக்கூறி யெனினுமாம்.

சாரனுட! அன்பர்க்கிறைவன் கழலிணைவெளிப்பட்டாற்போல, பெருமூலையாளை மருவுதல் பெற்று நீதானே யவட்குப் பொய்யுமெய் யுஞ் சொல்லி யுடன்படுவதுங் காண்பாயாகவென வினைமுடிவு செய்க. (உசு)

திருக்கோவையார் கசஅ-ம் செய்யுள்.

இரவுக்குறி வேண்டல்.

இரவுக்குறி வேண்டலென்பது — பதிநோக்கி வருந்தாநின்ற தலைமகன், இற்றையிரவிற் கியானுங்கள் சீறூர்க்கு விருந்து, என்னை யேற்றுக்கொள்வாயாக வெனத் தோழியை யிரவுக்குறி வேண்டாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மருந்துநம் மல்லற்பிற விப்பிணிக் கம்பலத் தமிர்தா
யிருந்தனர் குன்றினின் றேங்கு மருவிசென் றேர்திகழப்
பொருந்தின மேகம் புதைந்திரு ளுங்கும் புனையிறும்பின்
விருந்தினன் யானுங்கள் சீறூ ரதனுக்கு வெள்வளையே.

நள்ளிருட் குறியை வள்ள னினைந்து
வீங்கு மென்முலைப் பாங்கிக் குரைத்தது.

(ப-ரை.) வெள் வளையே - வெள்வளையையுடையாய், நம் அல்லல் பிறவி பிணிக்கு - நம்முடைய அல்லலைச் செய்யும் பிறவியாகிய நோய்க்கு, மருந்தும் - (அருந்து) மருந்தாய் (வைத்தும்), அம்பலத்து - அம்பலத்தின்கண், அமிர்தாயிருந்தனர் - (சுவையால்) அமிர்தமுமா யிருந்தவாது, குன்றினின்று-குன்றின்கணின்று, எங்கும்-ஒலிக்கும், அருவி - அருவிகள், சென்று - பாய்ந்து, ஏர் திகழ - அழகு விளங் கும்வண்ணம், மேகம் - மேகங்கள், பொருந்தின - வந்து பொருந் தின (அதனால்), புதைந்து-(அம்மேகத்தின்கண்) புதைந்து, இருள் தூங்கும் - இருள் செறியும், புனையிறும்பின் - செய்காட்டையுடைய, உங்கள் சீறூரதனுக்கு-நுமது சீறூரதற்கு, விருந்தினன் யான்-யான் விருந்தினன், எ-று.

(வி-ரை.) என்னை யேற்றுக்கொள்வாயாக என்பது எஞ்சிநின் றது. மேகம் வந்து பொருந்தின வென்றதனால், தன்னூர்க்குப்போத

லருமை கூறுவான்போன்று இரவுக்குறி மாட்சிமைப்படு மென்றானும். 'இருடேந்தும் புனையிறும்பு' என்றதனால், யாவருங் காணாராகலினுண்டு வந்து நிற்கின்றே னென்றானும். மாலை விருந்தினரை மாற்றாத லறனன்றென்பது தோன்ற 'விருந்தினன்' என்றான். குன்றினின்றேங்கு மருவியேர் திகழச்சென்று பொருந்தின மேகமென்க. அருவி யேர்பெற மேகம் பொருந்தின வூர் நின்னூராகலான், என்னினைப்பற்று யானுமோர்பெற நின்னை வந்து சேர்ந்தே னென்பது போதரும். மெய்ப்பாடு-பெருமிதம். பயன்-இரவுக்குறிநேர்வித்தல்.

நேரிசையாசிரியப்பா.

வள்ளியோ ரீதல் வரையாது போல
வெண்டிசைக் கருவிருந் தினமழை கான்றது
வெண்ணகைக் கருங்குழற் செந்தளிர்ச் சீறடி
மங்கைய ருளமெனக் கங்குலும் பரந்தது
தெய்வங் கருதாப் பொய்யினர்க் குரைத்த
நல்வழி மானப் புல்வழி புரண்டது
கால முடியக் கணக்கின் படியே
மறலி விடுக்க வந்த தூதுவ
ருயிர்தொறும் விளைந்தென வுயிர்சுமந் துழலும்
புகர்மலை யிபங்கா வகையரி சூழ்ந்தன
வெள்ளுடற் பேழ்வாய்த் தழல்விழி மடங்க
லுரிவை முடிக் கரித்தோல் விரித்துப்
புள்ளி பரந்த வள்ளுகிர்த் தரக்கி
னதள்பிறக் கிட்டு குதிபாய் நவ்வியின்
சரும முடுத்துக் கரும்பாம்பு கட்டி
முன்புகு விதியி னென்புகூல் பூண்டு
கருமா வயிறு திருமார்பு தூக்கி
வையகத் துயிர்கள் வழக்கறல் கருதித்
தொய்யி லாடுங் கடனுடைக் கன்னிய
ரண்ணாந்த வனமுலைச் சுண்ணமு மளறு
மெழிலிவான் சுழலப் பிளிறுகுரற் பகட்டினந்
துறைநீ ராடப் பரந்தகார் மதமும்
பொய்கையுங் கிடங்குஞ் செய்யினும் புகுந்து
சிஞ்சை யிடங்கரைப் பைஞ்சிலைச் சேலை

யுடற்புலவு மாற்றும் படத்திரை வையை
நிறைநீர் வளைக்கும் புகழ்நீர்க் கூடல்
வெள்ளியம் பொதுவிற் களவிழ் குழலொடு
மின்பநடம் புரியுந் தேவ நாயக
னருவியுடற் கயிறுஞ் சுனைமதக் குழியும்
பெருந்தேன் செறியுங் கருந்தேன் றொடர்ச்சியு
மோவாப் பெருமலைக் குஞ்சர மனைக்க
வளந்தரு புறங்க டொல்குடிச் சிறார்க்
கண்ணிய விருந்தின ளாகி
நண்ணுவன் சிறுநுதற் பெருவிழி யோளே.

வள்ளியோரீதல்-பெருவிழியோளே. பகுதி-இரவிற்குறி, துறை-இரவுக்குறிவேண்டல்.

சிறுநுதற் பெருவிழி யோளே.
(39—வது வரி)

(ப-ரை.) சிறு நுதல் - சிறியநுதலினையும், பெருவிழியோளே - பெரியவிழியினையு முடையாய்.

(வி-ரை.) நுதல் - நெற்றி. விழி - கண், இது ஆகுபெயர்.

'வள்ளியோர்' என்பதுமுதல் 'கான்றது' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) வள்ளியோர் - வள்ளன்மையுடையோர், வரையாது ஈதல் போல - வரையாது கொடுப்பதுபோல, இனம் - கூட்டமாகிய, மழை - மழையானது, கருவிருந்து - சூல்கொண்டு, எண் திசை - எட்டுத்திக்கின்கண்ணும், கான்றது - காலாநின்றது.

(வி-ரை.) செய்யுளாதலி னும்மைதொக்கது. கான்றது: கால மயக்கம், "மடையடைத் தனையதம் மாக்க ளீட்டமே" என்றாற் போல.

'வெண்ணகை' என்பதுமுதல் 'பரந்தது' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) கங்குலும் - கங்குலானது, வெள் நகை - வெள்ளிய பல்லினையும், கருங்குழல் - கரிய கூந்தலையும், செம் தளிர் - சிவந்த தளிர்போன்ற, சிறு அடி - சிறிய அடிகளையுமுடைய, மங்கையர் உள்ளம் என - பெண்கள் உள்ளம்போல், பரந்தது - (இருண்டு) பரந்தது.

(வி-ரை.) இது பாடபுனைவு, "அசங்குன்றி கண்டளைய ரேனு மூசங் குன்றி, மூக்கிற் கரியார்" என்றாற்போல. உம்மை : இசைநிறை.

'தெய்வங்கருதா' என்பது முதல் 'புரண்டது' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) தெய்வம் கருதா - தெய்வமுண்டென்று கருதாத, பொய்யினர்க்கு - பமற்றுள்ளத்தார்க்கு, உரைத்த - சொன்ன, நல்வழி மான - நல்லொழுக்கந் தெரியாது தடுமாறியதுபோல, புல் வழி புரண்டது - புல்லால் வழிதெரியாது தடுமாறியதென்க.

(வி-ரை.) கருதல் - நினைத்தல். மானல் - நிகர்த்தல்.

'காலமுடிய' என்பது முதல் 'சூழ்ந்தன' என்பதுவரை.
(7—10 வரிகள்.)

(ப-ரை.) மறலி - காலனானவன், கணக்கின்படியே - (உயிர்கட்கு விதித்த) விதிப்படியே, காலமுடிய - காலக்கடவு ளிறக்கும்படி, விடுக்க வந்த - விடவந்த, தூதுவர் - தூதுவர், உயிர்தொறும் - அவ்வுயிர்தோறும், வளைந்தென - வந்து வளைந்தாற்போல, உழலும் - தேடித்திரியும், அரி - சிங்கங்கள், உயிர் சுமந்து - உயிரினைச் சுமந்து, புகர் மலை - புகரினையுடைய யானைகள், இயங்காவகை - சஞ்சரியாதபடி, சூழ்ந்தன - சுற்றிநின்றனவென்க.

(வி-ரை.) காலமென்றது - காலக்கடவுளை; அது "காலமுலக முயிரே" என்றதனானறிக. கணக்கு - அவரவர்க்கு விதித்தநாளின் தொகை. விடுக்க - ஏவ. வளைந்தது: விகாரம். புகர்மலையெனவே யானையாயிற்று, "தாமச் செப்பினை" முகட்டென்றாற்போல. யானை சிங்கமென்பன சாதிப் பொருமை. உழலுதல் - தேடித்திரிதல். "வாடலுழுவை" என்னு மகப்பாட்டில், "பேதுற்ற லந்தனே னுழல்வேன் கொல்லோ" என்றார். சுமந்தியங்கா வெனவியையும்.

'வெள்ளுடல்' என்பது முதல் 'விரித்து' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) வெள் உடல் - வெள்ளையுடலினையும், பேழ் வாய் - பெரிய வாயினையும், தழல் விழி - தழல்போலும் விழியினையுமுடைய, மடங்கல் உரிவை - சிங்கத்தோலையும், கரித்தோல் - யானைத்தோலையும், விரித்து மூடி - விரித்துப் போர்த்தென்க.

(வி-ரை.) "வண்ணன் மடங்கல தளம்பலவன்" என்றார் கோவையினும். கரி - துதிக்கையையுடையது.

'புள்ளிபரந்த' என்பதுமுதல் 'சருமமுடுத்து' என்பதுவரை.
(13—14 வரிகள்.)

(ப-ரை.) வள் உகிர் - கூரியவுகிரினையுடைய, தாக்கின் - புலியினது, புள்ளி பரந்த - புள்ளி விரிந்த, அதள் - தோலையும், பிறக்கிட்டு - பிறகுகாட்டிக்கிடந்து, குதிபாய் - தாவும், கவ்வியின் - மானின், சருமம் உடுத்து - தோலையுமுடுத்தெனக.

(வி-ரை.) பிறக்கு - பிறகு. உகிர் - நகம். தாக்கு - தாக்ஷு என்னும் வடசொறறிரிபு. குதிபாய்: ஒருசொல்.

'கரும்பாம்பு' என்பதுமுதல் 'திருமார்புதூக்கி' என்பதுவரை.
(15—17 வரிகள்.)

(ப-ரை.) கரும் பாம்பு - கரிய பாம்பினை, கட்டி - (கங்கணமுதலாகக்) கட்டி, முன்புகு விதியின் - ஆதிப்பிரமாவின், என்பு - எலும்பினை, குரல் பூண்டு - கழுத்திலணிந்து, கருமா எயிறு - பன்றிக் கொம்பினை, திருமார்பு தூக்கி - திருமார்பிற்றூக்கி.

(வி-ரை.) கருமா - பன்றி. விதி - பிரமன்.

'வையகத்து' என்பதுமுதல் 'சுண்ணமுமளறும்' என்பதுவரை.
(18—20 வரிகள்.)

(ப-ரை.) கன்னியர்-கன்னியர் (நதித்துறையினீராடுதலால்), வையகத்து - பூமியின்கணுண்டாகிய, உயிர்கள் - உயிர்கள், வழக்கறல் கருதி - சஞ்சாரமின்மை கருதி, தொய்யில் ஆடும் - தொய்யிலெழுதும், கடன் உடை - முறைமையினையுடைய, அணூந்த - இறுமாந்த, வனமுலை - அழகிய முலையிலணிந்த, சுண்ணமும் அளறும்-சுண்ணமுங் குங்குமக்குழம்பும்.

(வி-ரை.) வழக்கு - சஞ்சாரம், "ஆள்வழக்கற்ற சுரத்திடை" என்றாற்போல. தொய்யில் - பத்திக்கீற்று, சந்தனக்கோலம். அணூந்த இறுமாந்த என்பவற்றிற்குப் பகுதிகள் முறையே அணூ இறுமா என்பன.

'எழிலிவான்' என்பதுமுதல் 'மதமும்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) எழிலி வான் சுழல - (கார்காலத்த) மேகம் வானில் சுழலத்ததனால், பிளிறு-(மாறென்று கருதி) முழங்காநின்ற, குரல் -

குரலினையுடைய, பகட்டினம்-யானைத்திரள், துறை நீர் ஆட - நதித்துறையில் மூழ்கலால், பரந்த கார் மதமும் - பரந்த கரியமதமும்.

(வி-ரை.) நீராட வென்பதனைக் கன்னியர் நீராட வெனவுங் கூட்டுக. எழிலி : ஆகுபெயராற் காலர், "கடன் முகந்து" என்னும் அகப்பாட்டில், "இன்குர லெழிலியாமே செய்சகைமுல்லை" என்றார். சுழல - தழைக்க, "சுழற்கலவ மேல்விரித்த சோலை" என்றார் பிறரும். வானிடத்து மேகஞ்சுற்றவெனப் பின்மொழிநிலையலாகினுமாம். பகடு - யானை.

பொய்கையுங் கிடங்குஞ் செய்யினும் புகுந்து.

(23—வது வரி.)

(ப-ரை.) பொய்கையும் - வாவியினிடத்தும், கிடங்கும் - அகழிடத்தும், செய்யினும் - வயலினிடத்தும், புகுந்து - சென்று.

(வி-ரை.) உம்மை எண்ணினுருபு. "தொகல் வரையார்" என்றமையா னுருபுதொக்கது. வாவி - தடாகம்.

'சிஞ்சையிடங்கரை' என்பதுமுதல் 'வெள்ளியம்போதுவில்' எனபதுவரை.

(24—27 வரிகள்.)

(ப-ரை.) சிஞ்சை இடங்கரை - முழக்கத்தினையுடைய முதலைக்கும், பைஞ்சிலை சேலை - சிவந்த வாலையுடைய கெண்டைக்கும், உடல் புலவு மாற்றம்-உடலின்கண்ணுண்டாகிய புலானாற்றத்தைத் தீர்த்தற்குக் காரணமான, படம் - வெள்ளைப்படத்தை விரித்தாற்போன்ற, திரை - திரையினையுடைத்தாய, நிறை நீர் - நிறைந்த நீரினையுடைய, வையை வளக்கும் - வையைசுற்றும், புகழ் நீர் - புகழ்நீர்மையையுடைய, கூடல் - மதுரை, வெள்ளியம்பொதுவில் - வெள்ளியம்பலத்தில்.

(வி-ரை.) 'படர்திரை' என்று பாடமாயிற் பரந்ததிரையென்க. புகுந்து மாற்றுதற்குக் காரணமாகிய நீரையுடைய வையையென்க. இடங்கர் - முதலை. சேல் - கெண்டை. படம் - துணி. திரை : ஆகுபெயர். வையை - வையையாறு. நீர்மை - தன்மை. பொது-சபை.

'கள்ளவிழ்' என்பதுமுதல் 'தேவநாயகன்' என்பதுவரை.

(27—28 வரிகள்.)

(ப-ரை.) கள் அவிழ் - தேன்பொழியு மாலைபொருந்திய, குழலொடும் - குழலினையுடைய வுமையோடுங்கூடி, இன்ப (நவரசத்

தால் வரும்) இன்பத்தினையுடைய, நடம் புரியும் - நடனஞ்செய்த, தேவநாயகன் - தேவர்களுக்கு முதன்மையானவன்.

(வி-ரை.) "வாலெயி றூறிய நீர்" என்றாற்போல இடத்துநிகழ் பொருளின்றொழி லிடத்தின்மேலேற்றப்பட்டது. அவிழ்குழல் : அன்மொழித்தொகை. அவிழ்தல் - சொரிதல், "கள்ளவிழ் தார் வென்றிக் கழல் வெய்யோய்" என்றார் வெண்பாமாலையினும். மாலை யென்பது வருவிக்கப்பட்டது. கள்ளவிழ் குழலவிழ்தல்: சினைவினைப் பாற்பட்டு முதல்வினையாயிற் றெனினுமாம். அதற்கு மலர்சினை போலக்குழற்கின்றியமையாமையிற் சினைப்பாற்பட்டதென்க, "மலர் சூழ்ந் திருடுங்கிப் புள்வளவே" என்றாற்போல. உமையொருபாக மாதலின் அவளொடுங்கூடியென்ற வும்மை யெண்ணும்மை. இன்ப நடம் - அகக்கூத்து, அர்த்தநாரீசுரமாம் என்க. உம்மையை யிழிவு சிறப்பாக்கின் காளியொடுங் கண்ணுற்கின்பமாகிய கூத்தைச் செய் தவனென்க. உம்மை: அசையுமாம். பார்ப்பதிக்கு மின்பத்தினால்வரு நடத்தை யுண்டாக்கிய தெய்வநாயக னெனினுமாம். உம்மை : எச்ச வும்மை, தனக்கும் நடத்தை யுண்டாக்கலின். குழலொடு : உருபு மயக்கம். இன்பத்தினால்வரு நடமாவது - இமையபருப்பதத்திற் சிவ னோடு கூடுதற்பொருட் டனேககோடிகாலந் தவம்பண்ணிக்காணாது யோகத்திற் பார்த்துக் கூடும்படி யாடிய விலாசியம், அதற்குச் சித் திரகுண்டலி யென்றுபெயர்.

'அருவியுடல்' என்பதுமுதல் 'நண்ணுவன்' என்னும்வரை.
(29—34 வரிகள்.)

(ப-ரை) அருவியுடல் கயிறும் - அருவியாகிய புரோசைக்கயி றும், சுனைமதக்குழியும் - சுனையாகிய மதக்குழியும், பெருந்தேன் செவி யும் - பெருகிய தேன்கூடாகிய செவியும், கருந்தேன் தொடர்ச்சி யும் - கருவண்டி னொழுங்காகிய சங்கிலியும், ஒவா - நீங்காத, பெரு மலை குஞ்சரம் - பெரியமலையாகிய யானையின்கண், மணக்க வளம் தரும் - பொருந்த வளஞ்சொரிக்கும், உங்கள் தொல் குடி - உங்கள் பழைய குடியினையுடைய, சீறூர் - சீறூர்க்கு, கண்ணிய விருந்தினன் ஆகி - பொருந்திய விருந்தினனாகி, நண்ணுவன் - யான் பொருந்து வேன் (என்னை யேற்றுக்கொண்மின்).

(வி-ரை.) 'இனமழை சான்றது' என்றதனால் போதலருமை கூறுவான்போன் றிரவுக்குறி மாட்சிமைப்படுமென்றும், 'கந்தல் பரந்தது' என்றதனால் ஒருவருங்காணாக்குறிவந்து நிற்கின்றனனென் றும், 'வழிதெரியாது' என்றதனால் ஆண்டுவரவேண்டுமென்றும், 'சிங்

கஞ் சூழ்ந்தன' என்றதனால் அஞ்சுவான்போன்று கொலைக்குடன்படுத லருளன்றென்றார், இரவுவந்த விருந்தினை மாற்ற லறனன்றென்பது தோன்ற 'விருந்தினன்' என்றும் கூறினான். 'வளந்தரு முங்க டொல்குடிச்சீறூர்' என்றமையால், யானும் வளம்பெறநின்னை வந்து சேர்ந்தேனென்பது போதரும். தருமென்பது "செலவினும் வரவினும்" என்னுஞ் சூத்திரவிதி. புரோசை - கழுத்திடு கயிறு. சீறூர் - சிற்றூர்.

பெரிய விழியினையுடையாய்! எண்டிசையினு மழைசான்றது, கங்குல் பரந்தது, புற்புரண்டது, சிங்கஞ் சூழ்ந்தன, ஆதலால்; நாயகன் வரையில் உங்கள் பழைய குடியினையுடைய சீறூர்க்கு விருந்தினனாகிய யான் பொருந்துவன் ஏற்றுக்கொண்மின் என வினைமுடிவு செய்க. (உஎ)

திருக்கோவையார் உஉக-ம் செய்யுள்.

நகராணிமை கூறல்.

நகராணிமை கூறலென்பது—இருவருந் தம்மு ளின்புற்றுச் செல்லாநின்றமை கண்டு, இனிச் சிறிதுநெறி சென்று அக்குன்றத்தைக் கடந்தால் நம்பதியாகிய நகர் விளங்கித் தோன்றாநிற்கும், அத்துணையுங் கடிது செல்வீராமினென எதிர்வருவார் அவர் நகராணிமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மின்றங் கிடையொடு நீவியன் றில்லைச் சிற்றம்பலவர்
குன்றங் கடந்துசென் றானின்று தோன்றுங் குருஉக்கமலந்
துன்றங் கிடங்குந் துறைதுறை வள்ளை வெள்ளைநகையார்
சென்றங் கடைதட மும்புடை சூழ்தரு சேணகரே.

வண்டமர் குழலியொடு
கண்டவ ருரைத்தது.

(இ-ள்.) மின்தங்கு இடையொடு - மின்போலு மிடையை யுடையாளோடு, நீ - நீ, வியன் தில்லை - அகன்றதில்லையில், சிற்றம்பலவர் - சிற்றம்பலத்தை யுடையாரது, குன்றம் கடந்து - குன்றத்தைக்கடந்து, சென்றால் - (அப்பாற் சிறிது நெறியைச்) சென்றால், குருஉக்கமலம் - நிறத்தையுடைய தாமரைப்பூ, துன்று - நெருங்கிய, அம் கிடங்கும் - அழகிய கிடங்கும், வள்ளை - வள்ளைப்பாடலைப்

பாடும், வெள்ளை நகையார் - வெள்ளை முறுவலையுடைய மகளிர், துறை துறை - துறைதோறுந் துறைதோறும், சென்று - போய் அங்கு - அவ்விடத்து, தடைதடமும் - சேரும் பொய்கைகளும், புடை சூழ்தரு - பக்கத்துச் சூழ்ந்த, சேண் நகர் - (அத்தில்லையாகிய) உயர்ந்தநகர், நின்றுதோனறும் - இடையறாதுதோன்றும், (அத்துணையுங் கடிது செல்வாயாக), எ-று.

(வி-ரை.) மின்னதங்கு என்பதில் தங்கு உவமவுருபு. இடை: ஆகுபெயர். மின்றங்கிடை: அன்மொழித்தொகையாகக் கோடலு மாம். முறுவல்-பல். குழலியொடு கண்டவர் - குழலியொடு தலைமகளைக்கண்டவர். மெய்ப்பாடு - பெருமிதம், பயன் - இடமணித்தென்றல்.

நேரிசையாசிரியப்பா.

புயற்கார்ப் பாசடை யெண்படப் படர்ந்த
வெள்ளப் பெருநதி கொள்ளைமுகம் வைத்து
நீடநிறை பாயும் வான வாவிக்கு
ளொருசெந் தாமரை நடுமலர்ந் தென்ன
மூவடி வழக்கிற் கோரடி மண்கொண்
டொருதாள் விண்ணத் திருமைபெற நீட்டிய
கருங்கடல் வண்ணன் செங்கருங் கரத்
தொன்று விருமலை யன்றேந் தியதென
வுந்தியொழுக் கேந்திய வனமுலை யாட்டியும்
வரைபொரு மருமத் தொருதிற னீயு
முழைவா யரக்கர் பாடுகிடந் தொத்த
நிறைகிடைப் பொற்றை வரைகடந் திறந்தா
னெரிதழற் குஞ்சிப் பொறிவிழிப் பிறழெயிற்
றிருளுட லந்தகன் மருள்கொள வுதைத்த
மூவாத் திருப்பதத் தொருதனிப் பெருமா
னெண்ணிற் பெருந வண்டப் பெருந்திர
ளடைவின் றளித்த பிறைநுதற் கன்னியொடு
மளவாக் கற்ப மளிவைத்து நிலைஇய
பாசடை நெடுங்காடு காணிகொ ணீர்நாய்
வானவி னிறத்த நெட்டுடல் வாளைப்
பேழ்வா யொளிப்ப வேட்டுவப் பெயரளி

யிடையுழ் நுசுப்பிற் குரனைவாய்க் கடைசியர்
களைகடுந் தொழில்விடுத் துழவுசெறு மண்டப்
பண்கா லுழவர் பகடுபிடர் பூண்ட
முடப்புது நாஞ்சி லள்ளல்புக நிறுத்திச்
சூடுநிலை யுயர்த்துங் கடுந்தலை யேறப்
பைங்குவளை துய்க்குஞ் செங்கட் கவரி
நாகொடு வெருண்டு கழைக்கரும் புழக்க
வழுதவாய் மொழிச்சியர் நச்சுவிழி போல
நெடுங்குழை கிழிப்பக் கடுங்கயல் பாயுந்
தண்ணம் பழனஞ் சூழ்ந்த
கண்ணிவர் கூடற் பெருவளம் பதியே.

புயற்கார்ப்பாசடை - பெருவளம்பதியே. பாகி-உடன்போக்கு. துறை - நகரணியைகூறல்.

‘புயற்கார்’ என்பதுமுதல் ‘வானவாவிக்குள்’ என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) எண்பட படர்ந்த - (உலகம்) கருதலுண்டாகப் பரந்த, புயல் கார் - நீரினையுண்ட மேகமாகிய, பாசடை - பசியவிலையினையும், நீட - காலநீட்டிப்ப, கொள்ளை முகம் வைத்து - ஆயிரமுகம்வைத்து, நிறை பாயும் - பெருகப்பாயும், வெள்ளப் பெருநதி - கங்கையாகிய நீரினையுமுடைய, வானவாவிக்குள் - ஆகாசமாகிய வாவிக்குள்.

(வி-ரை.) எண் வினைமாத்திரையாய் நின்றது. புயல் - நீர், “சோரபுயன் முகிறலை விலக்கி” என்றூர்போல. நிறையவென்பது நிறையென விகாரம், “அறுகா னிரைமல ரைம்பா னிறையணிந் தேன்” என்றூற்போல; இது வியனிலையுருவகம், ஒன்றினங்கம் பலவற்றையுமுருவகித்தும் உருவகியாதும் அவயவியு முரைத்தமையின்.

‘ஒருசெந்தாமரை’ என்பதுமுதல் ‘இருமலையன்றேந்தியதேன’ என்பதுவரை.

(4—8 வரிகள்.)

(ப-ரை.) நடு - நடுவே, ஒரு செந்தாமரை - ஒரு செந்தாமரை, மலர்ந்தென்ன - மலர்ந்தாற்போல, மூவடி வழக்கிற்கு-(மாவலியால்)

மூவடி மண்கேட்டோரடியண் பெறுற் வழக்கிற்றாக, ஓர் அடி - ஒரு தாளால், மண் கொண்டு - மண்ணையளந்த, இருமை பெற - பெருமை பெற, ஒரு தாள் - ஒரு பாதத்தை, விண்ணத்து - விண்ணிடத்தில், நீட்டிய - நீட்டிய, கரும் கடல் வண்ணன் - கரிய கடல்போலு நிறத்தினையுடையான், செங்கரும் - சிவந்த கரிய, கரத்து ஒன்றால் - கையொன்றினால், இருமலை அன்று ஏந்திபது என்ன - கோவர்த்தனகிரியேந்திய நாளை ஒன்றன்றி இரண்டு மலையைத் தாங்கியது போல.

(வி-ரை.) மலர்த்தாற்போலத் தாணீட்டியது தொழிலுவமம். ஒரு கையி லிரண்டுமலை யேந்தியது அபூதம். அத்து : அல்வழிச் சாரியை. அது: பகுதிப்பொருள் விகுதி. செங்கருங்கரமெனவே அகங்கை சிவப்பாதல் கூறினர்.

'உந்தி' என்பது முதல் 'நீயும்' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) உந்தி - கொப்பூழினின்று, ஒழுக்கேந்திய - எழுந்த மயிரொழுக்கினை மேற்றாங்கிய, வனம் முலையாட்டியும் - அழகிய முலையினையுடையாளும், வரை பொரும் - மலையகன்றாற்போலுமகன்ற, மருமத்து - மார்பினையும், ஒரு - ஒப்பற்ற, திறன் - வெற்றியினையுமுடைய, நீயும் - நீயும்.

(வி-ரை.) மருமம் - மார்பு. ஒழுக்கம் : ஆகுபெயர்.

'முழைவாய்' என்பது முதல் 'கடந்தால்' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) முழைவாய் - மலைமுழைபோலும் பெரிய வாயினையுடைய, அரக்கர் - அரக்கர், பாடுகிடந்தொத்த - உடல்கிடந்தாற்போன்ற, நிறை கிடைப்பொற்றை - நிறையாகிய சிறுமலைக் கிடக்கையினையுடைய, வரை கடந்திறந்தால் - மலையைக் கடந்தப்பாற் சென்றால்.

(வி-ரை.) பட்டது-பாடு, அது உடலாயிற்று. "வழக்கினிற் பாடெடுக்க" என்றார். கிடந்தது: விகாரம், வழியிடத் தரக்கர் கிடந்தாலனைய பொற்றையெனினுமாம், "பாடமை மயிலந்தோகை" என்றாற்போல.

"எரிதழல்" என்பது முதல் "தனிப்பெருமான்" என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) எரி தழல் - எரியாநின்ற தழல்போன்ற, குஞ்சி - மயிரினையும், பொறி விழி - அழற்பொறியினையுடைய கண்ணினையும்,

பிறழ் எயிறு - நிரைபோல்வா எயிற்றினையும், இருள் உடல் - இருண்ட வுடலினையுமுடைய, அந்தகன் - யமனும், மருள்கொள - மருட்சி கொள்ளும்படி, உதைத்த - உதைத்த, மூவா - அளவுகாணப்படாத, திருப்பதத்து - திருவடியினையுடைய, ஒரு - ஒப்பற்ற, தனிப்பெருமான் - ஏகநாயகன்.

(வி-ரை.) உதைத்த அடியென வியையும். மருள்: வினைமாத்திரையாய் நின்றது. சிறப்பும்மை தொக்கது. காலவரையறையாமையின் 'மருள்கொள' என்றார். மூவாத்திருவடி - "மூவா முதலாவுலகம்" என்றாற்போலக் கொள்க. நிரை - வரிசை. எயிறு - பல்.

'எண்ணில்' என்பதுமுதல் 'நிலைஇய' என்பதுவரை.
(16—18 வரிகள்.)

(ப-ரை.) எண்ணில் - எண்ணில், பெருத - அளவுபடாத, அண்டப்பெருந்திரள் - பெரிய அண்டக்கூட்டத்தை, உடைவு - முறை முறையாக, ஈன்றளித்த - படைத்தளித்த, பிறை நுதல் - பிறைபோலு நுதலினையுடைய, கன்னியொருத்தி - உமையோள், அளவா - ஒருவராலு மளவுபடுத்தப்படாத, கற்பம் - கற்பகாலம், அளிவைத்து - (இக்கீழுலகினை யெல்லாம்...) இருப்பவைத்து, நிலைஇய - நிலைபெற்ற.

'பாசடை' என்பதுமுதல் 'ஒளிப்ப' என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(ப-ரை.) பாசடை நெடுங்காடு - அளவிறந்த பசியவடைத்திரள், காணி கொள் - காணியாகக்கொண்ட, நீர் நாய் - நீர்நாயானது, வானவில் - இந்திரவில்லின், நிறத்த - நிறத்தையுடைத்தாய, நெட்டுடல் - நெடியவுடலினையுடைய, வாளை - வாளைமீன்களினது, பேழ்வாய் - பெரியவாயில், ஒளிப்ப - புக.

(வி-ரை.) அடை - இலை.

'வேட்டுவப்பெயர்' என்பதுமுதல் 'மண்ட' என்பதுவரை.
(21—23 வரிகள்.)

(ப-ரை.) வேட்டுவப்பெயர் - வேட்டுவர். ஒளியிடை உற - ஒளியிடையோடு, நுசுப்பின் - நுசுப்பினையும், குரவ வாய் - குரவ [illegible] வாயினையுமுடைய, கடைசியர் - உழத்தியர். களைகடும் - களைகளையும், [illegible] - [illegible], உழவு செறு - உழவினையுடைய வயலில், மண்ட - நெருங்க.

(வி-ரை) கடிசல் - கமிதல், கடுங்காழி லென்ன விகாரமாயி
ற்று. கடி யென்னு முரிச்சொல் மிகுதியின்கணது வரைதற்பொருளிக்
கினுமமையும்.

'பண்காலுழவர்' என்பதுமுதல் 'கடுங்குலையேற' என்பதுவரை.
(24—26 வரிகள்.)

(ப-ரை.) பண்கால் உழவர் - பண்ணொடு கூடப்பட்ட வுழவரா
னவர், பகடு - பகடானது, பிடர் பூண்ட - பிடரிற்சுமந்த, முடப்
புது நாஞ்சில் - வளைவினையுடைய புதிய கலப்பையை, அள்ளல் புக
நிறுத்தி - சேற்றிலழுந்த நிறுத்தி, சூடு நிரை உயர்த்தும் - அரியைப்
போராக வுயர்த்தும், கடுங்குலையேற - சிறப்பினையுடைய செங்கரையி
லேற.

(வி-ரை.) பண்சாலுழவர் - "பண்ணொடு ழுத் தியல்படப் பரப்பி
யிட்டனர், தண்வயலுழவர்" என்றாற்போல. பண் - மருதப்பண்.
உழவர் நிறுத்தியென வியையும், பகடு பிடரிலென்னினு மமையும்.
சூடு - நெல்லரி. அரியை நிலையாக வுயர்த்தலவனவே போராயிற்று.
கடுங்குலை - உரிச்சொலீறு திரிந்துநின்றது.

'பைங்குவளை' என்பதுமுதல் 'உழக்க' என்பதுவரை.
(27—28 வரிகள்.)

(ப-ரை.) பைங்குவளை - பசிய குவளைமலரை, துய்க்கும் -
அருந்தும், செம் கண் கவரி நாகொடு - சிவந்த கண்ணினையுடைய
இளைய வெருமையோடு முதியவெருமை, வெருண்டு - பயந்து, கழை
கரும்பு உழக்க - கழையாகிய கரும்பினை யுழக்க.

(வி-ரை.) "சொல்லிய மரபி னிளமை தானே, சொல்லுங்
காலை யவையல திலவே" என்ற சூத்திரத்திற் சொல்லுங்காலை யென்
றதனால் நாகு பெண்மையேயன்றி யிளமையு முணர்த்திற்று; "எரு
மை நல்லான் கருநாகு பெறூஉம்" என்றாற்போல. இளையவெருமை
யெனவே யதற்கு மறுதலையாகிய முதியவெருமையும் வருவிக்கப்
பட்டது.

'அமுதவாய்' என்பதுமுதல் 'பாயும்' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) அமுதவாய் மொழிச்சியர் - அமுதம்போலும் வாய்
மொழியினையுடையார், நச்சு விழி கடால - நஞ்சுபோலும் விழியா
னவை, குழை கிழிப்ப - குழையைக் கிழிக்கப் பாய்ந்தாற்போல,

நெடும்-நெடிதாகிப் பசியவிலைகளைக் கிழிக்கும்படி, கடுங்கயல் பாயும்- மிகுந்தகயல்கள் பாயும்.

(வி-ரை.) அமுதமொழி விரவிவந்த வுவமை, நஞ்சிற்கும் விழிக்கு மொத்த பண்பு-குரூரம், விழிக்குங் கயற்கு மொத்த பண்பு-தடுமாற்றம், ஆதலா லுவமைக்குவமையன்று. நஞ்சு விழிக்கடையெனினுமாம். "செங்கொத் தலர்ந்த செழுந்தாமரை யன்ன வாட்கண்" போல, குழைகிழிப்பவென்பது சிலேடை. செயவெனெச்சவடுக்குப் பாயுமென்னும் பிறவினை கொண்டது. கடுங்கயல்-உலுரிச் சொலீறு திரிந்தது.

'தண்ணம்' என்பதுமுதல் 'வளம்பதியே' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப-ரை.) தண்ணம் பழனம் சூழ்ந்த-குளிர்ச்சியினையுடைய வயல்கள் வளைந்த, கண்ணிவர்-நோக்கினோர் கண்கள் விரும்பப்பட்ட, பெரு வளம்-பெருவளத்தினையுடைய, கூடற்பதி-கூடலாகிய பதி தோன்றும், (அத்துணையுங் கடிதிற் செல்வீராகவென்க).

(வி-ரை.) தோன்றுங் கடிதிற் செல்வீராகவென்பது வருவிக்கப்பட்டது. தண்ணம்பழனம்: விகாரம். சூழ்தற்கிடமாகிய பதியெனவும் சூழ்தற்குக் காரணமாகிய பெருவளமெனவுமாம். கண்ணிவர் பெருவளம், "உறைபதி செய்குன்று" போலநின்றது. கண் விரும்புதற்குக் காரணமாகிய வளமெனினும் கண் விரும்புதற் கிடமாகிய கூடலெனினுமாம். இவர்தல்-ஏறுதலுமாம்.

முலையாட்டியு நீயு மிம்மலையைக்கடந் தப்பாற் சென்றாலொரு தனிப்பெருமானுமைமெ ாடு நிலைபெற்ற கூடற்பதி தோன்றும், அத்துணையுங் கடிதற் செல்வீராகவென வினைமுடிவுசெய்க. (உஅ)

திருக்கோவையார் கஎ-ம் செய்யுள்.

அறியாள்போன்று நினைவுகேட்டல்.

அறியாள்போன்று நினைவுகேட்டலென்பது—தலைமகனது மகிழ்ச்சிகண்டு இவன் வாடாமற் றழைவாங்குவேனென உட்கொண்டு, என்னுடைய தோழிமார்பலர், அவருள் நின்கருத்து எவர்கண்ணதோவெனத் தோழி தானறியாள்போன்று அவனினைவு கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

விண்ணிறந் தார்நிலம் விண்டவ ரென்னுமிக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத் தார்கழுக் குன்றினின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச் சோலைப்பந் தாடுகின்றா
ரெண்ணிறந் தாரவர் யார்கண்ண தோமன்ன நின்னருளே.

வேந்தன் சொன்ன மாந்தளிர் மேனியை
வெறியார் கோதை யறியே னென்றது.

(ப-ரை.) விண் இறந்தார் - விண்ணைக்கடந்தவர், நிலம் விண்டவர்-நிலத்தைப் பிளந்தவர், என்னும்-என்று சொல்லப்படும், மிக்கார் இருவர் - பெரியோரிருவருடைய, கண் இறந்தார் - கண்ணைக் கடந்தவர், தில்லை அம்பலத்தார் - தில்லையம்பலத்தின்கண்ணார், கழுக் குன்றில் நின்று-(அவரது) கழுக்குன்றின்கணின்று, தண்நறும் - தண்ணிதாகிய நறிய, தாது இவர்-தாது பரந்த, சந்தனச்சோலை-சந்தனச் சோலையிடத்து, பந்தாடுகின்றார் - பந்தாடுகின்றவர், எண் இறந்தார்-இறப்பப்பலர், மன்ன - மன்னனே, நின் அருள் - நினதருள், அவர்-அவருள், யார் கண்ணதோ - யார்கண்ணதோ (கூறுவாயாக), எ-று.

(வி-ரை.) விண்ணிறந்தார் - பிரமன். நிலம்விண்டவர் - விட்டுணு. தாது-மகரந்தம். இறப்ப - மிக. விண்டவரென்பதற்கு முன்னுரைத்தது ரைக்க. அன்னோர்க்கு அரியராயினும், எம்மனோர்க்கு எளியரென்னுங் கருத்தால் 'தில்லையம்பலத்தார்'என்றார். சோலைக்கணின்றென்று கூட்டினு மமையும். எண்ணிறந்தார் பலரென்பதூஉம் பாடம். மெய்ப்பாடு-மருட்கையைச் சார்ந்த பெருமிதம். நும்மாற் கருதப்படுவாளை அறியே னென்றாளாக என்குறை இன்னாள் கண்ணதென அறிவித்தால் இவள் முடிக்குமென நினைந்து ஆற்றுவானாமென்பது - பயன்.

நேரிசையாசிரியப்பா.

பற்றலர்த் தெறுதனு முவந்தோர்ப் பரித்தலும்
வெஞ்சுடர் தண்மதி யெனப்புகழ் நிறீஇய
நெட்டிலைக் குறும்புகர்க் குருதி வேலவ
வேதியன் படைக்க மாலவன் காக்கப்
பெறுதகுதோர் திருவுருத் தான்பெரி திறுத்தி
யமுதயில் வாழ்க்கைத் தேவர்கோ னிழிச்சிய
மதமலை யிருநான்கு பிடர்சுமந் தோங்கிச்
செம்பொன் மணி குயிற்றிய சிகரக் கோயிலு

ளமையாத் தண்ணளி யுமையுட னிறைந்த
வாலவா யுறைதரு முலக் கொழுஞ்சுடர்
கருவி வான மடிக்கடி பொழியுங்
கூடஞ் சூழ்ந்த நெடுமுடிப் பொதியத்துக்
கண்ணுழையாது காட்சிகொளத் தோற்றிய
வெறிவீச் சந்தி னிரையிடை யெறிந்து
மற்றது வேலிகொள வளைத்து வளரேன
னெடுங்காற் குற்றுழி யிதனுழை காத்துந்
தேவர் கோமான் சிறையரி புண்ணினுக்
காற்றுது பெருமுழை வாய்விட்டுக் கலுழ்ந்தெனக்
கமஞ்சூற் கொண்மூ முதுகுகுடி யிருந்து
வானுட்க முரற்று மலைச்சுனை குடைந்தும்
பிரசமும் வண்டு மிரவிதெறு மணியும்
வயிரமும்பொன்னு நிரைநிரை கொழித்துத்
துகிறுன்று நுடங்கு மருவி யேற்று
மறுவறு செம்மணி காற்கவ ணிறுத்தி
நிறைமதி கிடக்கு மிருல்விழ வெறிந்து
மெதிர்சொற் கேட்பக் கால்புகத் திசைத்த
நெருக்குபொழிற் புக்கு நெடுமலை கூயு
நுசுப்பின் பகைக்கு நூபுர மரற்றப்
பைங்காடு நிரைத்த வெண்மலர் கொய்து
மனத்தொடு கண்ணு மடிக்கடி கொடுபோஞ்
செம்பொன் செய்த வரிப்பந்து தூரந்து
மினைய பன்னெறிப் பண்ணை யெங்கு
மளவாக் கன்னிய ரிவரு
ளுளமாம் வேட்கைய ளின்னளென் றுரையே.

பற்றலர்த்தெறுதலும் - இன்னளென்றுரையே. பகுதி - சேட்படை. துறை - அறியாள்போன்று நினைவுகேட்டல்.

'பற்றலர்' என்பதுமுதல் 'வேலவ' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) பற்றலர் - சத்துருக்களை, தெறுதலும் வெஞ்சுடர் - தெறும்படி யாதித்தனைக் காய்தலும், உவந்தோர் - மித்துருக்களை,

பரித்தலும் தண்மதி என - காக்கும்படி சந்திரனைக் குளிர்தலும் போல, புகழ் நிறீஇய - புகழை நிறுத்திய, நெடு இலை - நெடிய தகட்டினையும், குறு - குறிய, புகர் குருதி - குருதிப்பொறியினையுமுடைய, வேலவ - வேலினையுடையாய்.

(வி-ரை.) எண்ணும்மை தொக்கது. இது நிரணிறையுவமை. தெறுதலும் பரித்தலு மென்னுமும்மீற்று வினையெச்சம், "வினையெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய" என்பதனாற் கொள்க. "நனவிற் புணர்ச்சி நடக்கலு மாங்கே, காண்டலு மிவைவ" என்றாற்போல தெறுதலானும் பரித்தலானு மெனினுமாம். நிறீஇய வேலவவென வியையும்.

'வேதியன்' என்பதுமுதல் 'கோழுஞ்சுடர்' என்பதுவரை.

(4—10 வரிகள்.)

(ப-ரை.) ஆலவாய் - (தான் பொருந்தும்) ஆலவாயென்னுந் திருப்பதியில், அமுது அயில் வாழ்க்கை - அமுதமுண்ணும் வாழ்க்கையினையுடைய, தேவர்கோன் - தேவேந்திரன், மதமலை - அயிராவத முதலிய, இரு நான்கு - யானையெட்டும், பிடர் சுமந்து - தம்பிடரிற் சுமந்து, ஓங்கி - ஓங்கும்படி, வேதியன் படைக்க - பிரமாபடைக்கவும், மாலவன் காக்க - விட்டுணுகாக்கவும், பெறுதவோர் திரு - பெறுதவோராழகிய, உருத்தான் பெரிது-உருவினைப் பெரிதாக, நிறுத்தி - நிறுத்தி, இழிச்சிய - இறக்கிய, செம்பொன்-செம்பொன்னும், மணி - மணியும், குயிற்றிய - அழுத்திய, சிகரம் - முடியினையுடைய, கோயிலுள் - கோயிலுள், அமையா - அடங்கி, தண்ணளி - கிருபையினையுடைய, உமையுடன் - அங்கயற்கண்ணம்மைவசமாக, நிறைந்த - பொலிவுபெற்ற, மூலம் - முதன்மையாகிய, கொழுஞ்சுடர் - வளவிய சோதியானவன்.

(வி-ரை.) இருநான்குமென்னு முற்றும்மை தொக்கது. எண்ணும்மை தொக்கது. காக்கப்படைக்கவென்னுஞ் செயவெனெச்சம் பெறுதவென்னு மெதிர்மறையுட் பெறுதலோடு முடிந்தது, தான்: அசை. ஓங்க நிறுத்தியிழிச்சிய கோயிலென வியையும். ஆகவென வொருசொல் வருவிக்க, "உடனுக வைம்பொறியும்" என்றார் கேமசரியிலம்பகத்தினும். உடலோடுகூடி நிறைந்தவெனினுமாம்.

'கருவி' என்பதுமுதல் 'பொதியத்து' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை) அடிக்கடி - அடிக்கடி, கருவி - (மின்னுமிடியு முதலிய) கூட்டத்தினையுடைய, வானம் - மேகம், பொழியும் - பொழிதற்கிடமாகிய, கூடம் சூழ்ந்த - கூடஞ்சூழ்ந்த, நெடு முடி - நெடிய முடியினையுடைய, பொதியத்து - பொதியமலையிடத்து.

(வி-ரை) கருவி - தொகுதி. கூடம்-மன்றாகச்சூழப்பட்டதோர் தேவகோட்டம், "கூடஞ்செய்சாரல்" என்றாற்போல. சூழ்ந்த - வளைந்த. முடி - சிகரம்.

'கண்ணுழையாது' என்பதுமுதல் 'காத்தும்' என்பதுவரை.
(13—16 வரிகள்.)

(ப-ரை.) கண் நுழையாது - தன்னிடத்திலொருவருஞ் செல்லப்படாது, காட்சிகொள-புறத்திற் காணுதல்கொள்ள, தோற்றிய - தோற்றிய, வெறி - வாசத்தினையுடைத்தாகிய, வீ - பூவினையுடைய, சந்தின் நிரை - சந்தநிரையை, இடை எறிந்து - புனத்திடையில் வெட்டி, மற்றது - வேற்றுமரத்தினை, வேலிகொள வளைத்து-வேலியாக வளைத்ததினால். வளர்-வளராநின்ற, ஏனல்-தினையினை, நெடுங்கால் - நெடிய காலினையும், குற்றுழி - சிறியவிடத்தினையுமுடைய, இதண் உழை - பரணிடத்திருந்து, காத்தும் - காத்தும்.

(வி-ரை.) கண்ணென்பது—"கண்ணகன்ஞாலம்" போன்றது, முழுதுஞ் செல்லாமையின் கண்ணனது நுழையாதெனினுமாம். உம்மை:சிறப்பும்மை. மற்று வினைமாற்று.வளைந்தென்னு முதல்வினை பிறமுதல்வினையோடு முடிந்து காரணகாரியப் பொருட்டாய் நின்றது. இருந்தென வொருசொல் வருவிக்க.

'தேவர்கோமான்' என்பதுமுதல் 'குடைந்தும்' என்பதுவரை.
(17—20 வரிகள்.)

(ப-ரை.) தேவர்கோமான் - இந்திரன், சிறை அரி - (முன்) சிறையரிந்ததனால் வந்த, புண்ணினுக்கு-புண்ணோவுக்கு. ஆற்றாது - ஆற்றாது, பெருமுழை-பெரிய முழைபோன்ற, வாய்விட்டு-வாயினைப் பிளந்து, கலுழ்ந்தென - அழுதாற்போல, கமம் சூல்-நிறைந்தசூலினையுடைய, கொண்மூ - மேகமானது, முதுகு குடியிருந்து - தன்புறத்திற் குடியாகவிருந்து, வான் உட்க - தேவர்களுமுட்கும்படி, மூரற்

றும் - முழங்கும், மலைச்சுனை - மலையினிடத்திற் சுனையை, குடைந்தும் - குடைந்தாடியும்.

(வி-ரை.) அரிதல் - வெட்டுதல். ஆற்றாது - பொறுக்காமல்: முழை - குகை. அரிபுண் -"உண்டவெச்சில்" போன்றது. புண்ணும் வானும் ஆகுபெயர். கலுழ்ந்தது: விகாரம். அழுதாற்போல முழங்குமென்பது, "அன்னபோ லென்னு மவையுழுத லாகிய, சொன்னிலை விளக்குந் தோற்றமு முடைத்தே" என்பதனால் வந்த தற்குறிப்பேற்றம். வினைமுதலல்லாத சருவி முதலாயின அவ்வினைமுதல் வினைக்குச் செய்விப்பதாகக் கூறினர், "வேய்தந்த வெண்முத்தஞ் சிந்து பைங் கார்வரை மீன்பரப்பி" என்றாற்போல.

'பிரசமும்' என்பதுமுதல் 'அருவியேற்றும்' என்பதுவரை.

(21—23 வரிகள்.)

(ப-ரை.) பிரசமும் வண்டும் - தேனையும் வண்டையும், இரவி தெறு மணியும் - மாணிக்கத்தையும், வயிரமும் - வயிரத்தையும், பொன்னும் - பொன்னையும், நிரைநிரை - பத்தியதாக, கொழித்து - கொழித்து, துகில் - (பலநிறத்) துகிலானது, நான்று - தாழ்ந்தாற்போல, நுடங்கும் - வீழ்ந்தசையும், அருவி ஏற்றும் - அருவியாடியும்.

(வி-ரை.) இரவிதெறுமணியெனவே சாதுரங்கமென்னும் வருணத்தையுடைய மாணிக்கமென்பது விளங்கிற்று. ஆதித்தனுக்கு மணிக்குமொளிபற்றியும் மணிக்குந் துகிற்கு நிறம்பற்றியுமுவமை கூறலி னுவமைக்குவமை யன்று. துகிலென்பது பலநிறத் துகிலுக்கும் பொதுப்பெயர். நான்றென்னு முவமவினை யொற்றுமை நயத்தாற் பொருளின்றொழின்மே னின்றது, இது தொழிலு நிறமும் பற்றியவுவமம், "விரவியும் வருஉ மரபின வென்ப" என்பது விதி. கொழித்து வீழ்ந்தசையுமென வியையும். உம்மைவிரிந் திரண்டா முருபு தொக்கது, "தூதையும் பாவையும் விளையாட" என்றாற்போல.

'மறுவறு' என்பதுமுதல் 'எறிந்தும்' என்பதுவரை.

(24—25 வரிகள்.)

(ப-ரை.) மறுஅறு - குற்றமற்ற, செம்மணி - மாணிக்கத்தை, கால் கவண் நிறுத்தி - காலிணையுடைய கவணில்வைத்து, நிறை மதி கிடக்கும் - பூரணச்சந்திரன் கிடந்தாற்போலக் கிடக்கும், இருள் விழ - இருட்டு விழும்படி, எறிந்தும் - (அதனை) எறிந்தும்.

(வி-ரை.) குற்றமாவன - திட்டையேறு சிவந்த விகாயமுதலியன. மதிபிடக்குமிருல் "வடுத்தான் வகிர்மலர்க் கண்ணி" போன்றதெனினுமாம்.

'எதிர்சோல் கேட்ப' என்பதுமுதல் 'கூயும்' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) எதிர் சொல் கேட்ப - கூவிய சொல் லெதிர்கேட்ப, நெடு மலை - நெடியமலை, கூயும் - எதிர்கூவியும், கால்புக திகைத்த - எடுத்தடிவைக்கப்படாத, நெருக்கு பொழில்-நெருங்கிய சோலையில், புக்கும் - புகுந்தும்.

(வி-ரை.) காலானது புகத்திகைத்தவெனவே எடுத்தடி வைக்கப்படாதாயிற்று. உயிரினது தொழில் துணையாகிய காலின்மேலேற்றப்பட்டது, காற்றுஞ் செல்லப்படாத வெனினுமாம் உம்மை - சிறப்பு.

'நுசுப்பின்' என்பதுமுதல் 'கோய்தும்' என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(ப-ரை.) எண் மலர் - எண்ணப்பட்ட மலர்கள், நுசுப்பின் பகைக்கு - நுசுப்பொடு பகைத்தற்கு, பைங்காடு - பசியசோலை, நிரைத்த - நிரைத்த அம்மலர்களை, நூபுரம் அரற்ற - கிங்கிணிகள் அரற்றும்படி, கொய்தும் - கொய்தும்.

(வி-ரை.) நுசுப்பு - இடை. இன்: உருபுமயக்கம். பகை: வினைமாத்திரையாய்நின் றுருபேற்றது. காடு-திரள். பைங்காடு: அன்மொழித்தொகை. நிரைத்த: தொழிற்பெயர். மலர்சூடுதல் இடைக்குப் பகையாதலின் 'பகைத்தற்குக் கொய்தும்' என்றார். சிலம்பரற்றக் கொய்தெனவே நடந்து கொய்தமை விளங்கிற்று. அரற்றல் - சத்தித்தல். கொய்தல் - பறித்தல்.

'மனத்தோடு' என்பதுமுதல் 'துரந்தும்' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) அடிக்கடி - அடிக்குந்தோறு மடிக்கடி, மனத்தொடு கண்ணும் - மனமுங்கண்ணும், கொடுபோம் - கூடக்கொண்டுசெல்லும், செம் பொன் செய்த - சிவந்த பொன்னுற் செய்த, வரி - வரியினையுடைய, பந்து துரந்தும் - பந்தாடுதலை முயன்றும்.

(வி-ரை.) ஒடு - எண்ணொடு. பொன்னென்பதனீற்றில் மூன்ற னுருபு தொக்கது. பந்து: ஆகுபெயர்.

'இனைய' என்பதுமுதல் 'உரையே' என்பதுவரை.
(32—34 வரிகள்.)

(ப-ரை.) இனைய-இத்தன்மையவாகிய, பல் நெறி-பலமுறைமை களையுடைய, பண்ணை எங்கும் - புன்முதலிய விடங்கடோறும்' அளவா - அளவுபடுத்தப்படாத, கன்னியர்-கன்னியர், இவருள் - இவர்க்குள், உளம் ஆம் - நின்னுள்ளத்திலுண்டாம், வேட்கையள் - வேட்கையையுடையவள், இன்னள் என்று - இத்தன்மையளென்று, உரை - சொல்லுவாயாக.

(வி-ரை.) அளவாக் கன்னியரெனவே பலராயினர். வினையெச்ச வடுக்கு ஆகிய வென்பதனோடு முடிந்தது.

வேலவ! சோதியானவன் பொதியத்திடத்துக் காத்தும் குடைந் தும் எற்றும் எறிந்தும் கூவியும் புகுந்தும் கொய்தும் முயன்றும் இத் தன்மையவாகிய பல முறைமைகளையுடைய விடந்தோறும் அளவாக் கன்னியர் பலர், அவர்க்குள் நின்னுள்ளத்தி லுண்டாம் வேட்கையினை யுடையாள் இன்னளென்று நீ சொல்லென வினைமுடிவுசெய்க.(உ௩)

திருக்கோவையார் உ௬உ-ம் செய்யுள்.

சுடரோடிரத்தல்.

சுடரோடிரத்தலென்பது—கிளிமொழிகேட் டிரங்காநின்றவள் பெற்ற வென்னோடு தன் கிளியிருந்து வருந்த இதனையுந் துறந்து அறிவு முதிர்ந்து, அழற்கடன் சென்றுண் முகத்தை, நின்கதிர் களான் வாட்டாது, தாமரைமலர்போல மலர்த்துவாயாகவெனச் சுடரோடிரந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பெற்றே னொடுங்கிள்ளை வாடமு துக்குறை பெற்றிமிக்கு
நற்றேன் மொழியழற் கானடந் தாண்முக நானணுசப்
பெற்றேன் பிறவிபெறுமற்செய் தோன்றில்லைத் தேன்பிறங்கு
மற்றேன் மலரின் மலர்த்திரந் தேன்சுடர் வானவனே.

வெஞ்சுரந் தணிக்கெனச் செஞ்சுடரவற்கு
வேயமர் தோளி தாயர் பராயது.

(ப-ரை.) சுடர் வானவனே - சுடராகிய வானவனே, பெற்றே னொடும்-பெற்றவென்னோடும், கிள்ளை வாட - தன் கிளியிருந்து வரு

ந்த (இதனையுந் துறந்து), முதுக்குறை - அறிவு முதிர்ந்த, பெற்றி மிக்கு - இயல்புமிக்கு நல்தேன் மொழி - நல்ல தேன்போலு மொழியையுடையாள், அழல்கான் நடந்தாள்-அழலையுடைய காட்டின்கணடந்தவளது, முகம்-முகத்தை (நின்வெங்கதிர்களான்வாட்டாது), நான் அணுகப்பெற்றேன் - ஒருவாற்றாற் றன்னையணுகப்பெற்றேனாகிய யான், பிறவி பெறாமல் செய்தோன் - பின்பிறவியைப் பெறாதவண்ணஞ் செய்தவனது, தில்லை - தில்லையில், தேன் பிறங்கும் - மது மிகுந்த, மல் தேன் மலரின்-வளவிய வண்டையுடைய தாமரைமலர் போல, மலர்த்து - மலர்த்துவாயாக, இரந்தேன் - (நின்னை) யானிரந்தேன், எ - று.

(வி-ரை.) சுடர் - சூரியன். வானவன்-தேவன். தேன்மொழி: அன்மொழித்தொகை. பெற்றேனெனடுமென்பது எண்ணெனடுவுமாம். தணிக்கவென்னு மிறுதியகரங் குறைந்துநின்றது. மெய்ப்பாடும் பயனும் அவை. நணுகப்பெற்றேன் எனப் பிரித்தலுமாம். மலரின் என்பதில் இன் ஐந்தாவதனுப்புப்பொருட்டு.

நேரிசையாசிரியப்பா.

ஈன்றவென் னுளமுந் தோன்றமொழி பயின்ற
வளைவாய்க் கிள்ளையும் வரிப்புனை பந்தும்
பூவையுங் கோங்கின் பொன்னலர் சூட்டிய
பாவையு மானுந் தெருள்பவ ரூரு
நெடுந்திசை நடக்கும் பொருணிறை கலத்தினைப்
பெருவளி மலக்கச் செயன்மறு மறந்தாங்குச்
சேர மறுக முதுக்குறை வுறத்தி
யெரிதெறுங் கொடுஞ்சுரத் திரந்தன ளாக
நதிக்கடத் தறுகட் புகர்க்கொலை மறுத்த
கல்லிப மதனைக் கரும்புகொள வைத்த
வாலவா யமர்ந்த நீலநிறை கண்டன்
மறிதிரைப் பரவைப் புடைவயிறு குழம்பத்
துலக்குமலை யொருநாட் கலக்குவ போல
வுழுவையுகி ருழக்கு மேந்துகோட் டும்ப
லுரிவை மூடி யொளியினை மறைத்துத்
தரைபடு மறுக்கந் தடைந்தன போல

விண்ணுற விரித்த கருமுகிற் படாங்கொடு
மண்ணக முருகக் கனற்றுமழன் மேனியை
யெடுத்து மூடி யெறிதிரைப் பழனத்துப்
பணிச்சிறுமை கொள்ளா முள்ளரை முளரி
வண்டொடு மலர்ந்த வண்ணம் போலக்
கண்ணு மனமுங் களிவர மலர்த்துதி
மலர்தலை யுலகத் திருளெறி விளக்கு
மன்னுயிர் விழிக்கக் கண்ணிய கண்ணு
மறையுகு நீர்க்குக் கருவுங் கரியும்
வடிவ மெட்டினுண் மகிழ்ந்த வொன்றுஞ்
சேண்குள மலர்ந்த செந்தா மரையுஞ்
சோற்றுக்கடன் கழிக்கப் போற்றுயிர் கழிக்கு
மாசைச் செருநர்க் கடைந்துசெல் வழியு
மருளும் பொருளு மாகித்
திருவுல களிக்கும் பரிதிவா னவனே.

ஈன்றவென்னுளமும் - பரிதிவானவனே. பகுதி-உடன்போக்கு, துறை - சுடரோடிரந்து கூறல்.

மலர்தலை யுலகத் திருளெறி விளக்கும்.

(23—வது வரி.)

(ப-ரை.) மலர்தலை உலகத்து - பரந்தவிடத்தையுடைய பூமியின்கண் ணுண்டாகிய, இருள் எறி - இருளை நீக்கும், விளக்கும் - விளக்குமாகி.

மன்னுயிர் விழிக்கக் கண்ணிய கண்ணும்.

(24—வது வரி.)

(ப-ரை.) மன்-அவ்வுலகத்து நிலைபெற்ற, உயிர் விழிக்க-உயிர்கள் விழிக்கும்படி, கண்ணிய கண்ணும் - கருதவேண்டிய கண்ணுமாகி.

(வி-ரை.) கண்ணிய கண்ணுமாகி யென்றதற்குக் கருதப்பட்ட கண்ணுமாகி யெனினுமாம். "உரையிடத்தியலு முடனிலை யறிதல்" என்பதனாற் கண்ணியவென்பது வினையெச்சமாகவும் பெயரெச்சமாக

வுங் கொள்ளக்கிடந்தது. எல்லாப்பொருளும் விளக்குதற்குக் கருவியாதலின் ஆதித்தனைக் 'கண்' என்றார், "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்றாற் போல.

மறையுகு நீர்க்குக் கருவுங் கரியும்.

(25—வது வரி.)

(ப-ரை.) மறை உகு நீர்க்கு-மறையோர் அர்க்கியங் கொடுத்தற்குக் காரணமாய நீர்க்கு, கருவும்-கருவுமாகி, கரியும்-(எல்லாப்பொருட்குஞ்) சான்றுமாகி.

(வி-ரை.) மறை: ஆகுபெயர். தன் கிரணங்களான் மழையைப் பெய்வித்தலின், 'கரு' என்றார். சான்று - சாக்ஷி.

சேண்குள மலர்ந்த செந்தா மரையும்.

(27—வது வரி.)

(ப-ரை.) சேண் - ஆகாசமாகிய, குளம் - வாவியில், மலர்ந்த - (பொருந்தும்படி) மலர்ந்த, செந்தாமரையும் - செந்தாமரையுமாகி.

(வி-ரை.) சேண்: ஆகுபெயர்.

'சோற்றுக்கடன்' என்பதுமுதல் 'செல்வழியும்' என்பதுவரை.

(28—29 வரிகள்.)

(ப-ரை.) சோற்றுக்கடன் கழிக்க - (பகைவர் வேற்றுப்புலத்தை நமக்குத் தருவரென்று கொடுத்த) சோற்றுத்திரளையை வாங்கிய கடன்றீர, போற்று உயிர் - போற்றாநின்றவுயிரை, கழிக்கும் - அமர்க்களத்தினீக்கும், ஆசை செருநர்க்கு - ஆசை பொருந்திய வீரர்க்கு, அடைந்து செல்வழியும் - வீரசொர்க்கமடையச் செல்லாநின்ற வழியுமாகி.

(வி-ரை.) சோறு: ஆகுபெயர். சோற்றுக்கடனும்பொருளும் நோக்கன "திருந்தார் தம்மூனை தருகுவ ரிவனெனப், பெருஞ்சோறுடவர் பெறுமுறை வகுத்தன்று" என்றார்வெண்பாமாலையினும். கதிபெறுவார்க்குத் தன் மண்டலத்தூடு செல்ல விடங்கொடுத்தலான் 'வழியாகியும்' என்றார். அடைந்து - அடைய, வீரசொர்க்கமென ஒருசொல் வருவிக்க. அமர்க்களம்-யுத்தபூமி.

'அருளும்' என்பதுமுதல் 'வானவனே' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) அருளும் - (எவ்வுயிர்க்கண்ணுந் தொடர்பின்றி யியல்பாற் செல்லும்) கருணையுமாகி, பொருளும் ஆகி - (இவை யொழிந்த வெல்லாப்) பொருளுமாகி, திருவுலகு அளிக்கும்-உலகத்தினை யளிக்கும், பரிதி வானவனே - பரிதியாகிய வானவனே.

(வி-ரை.) விளக்காய்ச் சிறப்பினைக் கொடுத்தலானும், கண்ணு யெல்லாப் பொருளுந் தெரியப்பண்ணுதலானும், கருவா யெல்லாப் பொருளையு முண்டாக்குதலானும், சான்றாயவரவர் செய்த நல்வினை தீவினை தவறாதுண்மையாய் நிற்றலானும், தாமரையாய்க் கண்டோர்க்கு உவகையும் விருப்பமுமுண்டாக்குதலானும், வழியாய்க்கதியிற் செலுத்தலானும் அருளும் பொருளுமா யிடுக்கண் டீர்த்தலானும் 'அளிக்கும்' என்றார். இது - பலபொருளுருவகம். ஆகி யென்பதனை எங்குங் கூட்டுக.

'தெருள்பவர்' என்பதுமுதல் 'மறந்தாங்கு' என்பதுவரை.
(4—6 வரிகள்.)

(ப-ரை.) தெருள்பவர்-திசையறிந்து செலுத்துவார், ஊரும் - செலுத்தும், நெடுந்திசை நடக்கும்-திசை பிழைக்கும்,பொருள்நிறை கலத்தினை - பொருணிறைந்த சம்பானை, பெருவளி-பெருங்காற்று, மலக்க - மலக்குதலால், செயன் மறு மறந்தாங்கு - செயன் மறந்து மறுகினாற்போல.

(வி-ரை.) தெருள்பவர் மறுகினாற்போல வெனவினையும்.புயல் சொரிந்தாங் கென்பதும் பாடம். மலக்குதல் - சுழற்றுதல். செயல் - தொழில். மறுகல் - மயங்குதல்.

'ஈன்ற' என்பதுமுதல் 'சேரமறுக' என்பதுவரை.
(1—4—7 வரிகள்.)

(ப-ரை.) ஈன்ற என் உளமும் - பெற்ற என்னுளமும், தோன்ற - (கேட்டார்க்கு) வெளிப்பட, மொழி பயின்ற - வார்த்தையைக்கற்ற,வளை வாய் கிள்ளையும் - வளைந்த வாயினையுடைய கிளியும், பூவையும்-நாகணவாய்ப்புள்ளும், மானும்-மானும், வரிப்புனை பந்தும்-(பாம்புரிபோலக்குத்தியேறிட்ட)வரியினையுடையபந்தும்,கோங்கின்-

சோங்கினது, பொன் அலர்-பொன்போலு மலரை, சூட்டிய பாவையும் - சூட்டியபாவையும், சேரமறுக - கூடவருந்தும்படி.

(வி-ரை.) பந்தும் பாவையு மறுகவெனமிகுதிபற்றிக் கூறினர். பாவை-பிரதிமை. வரிப்புனை பந்து என்பதற்கு வரிந்து புனையப் பட்ட பந்து என்றுரைப்பினுமாம்.

'முதுக்குறை' என்பதுமுதல் 'இறந்தனளாக' என்பதுவரை. (7—8 வரிகள்.)

(ப-ரை.) முதுக்குறை - (தான் பெற்ற)பேரறிவினை, உறுத்தி-எல்லாருமறியும்படி பண்ணி, எரிதெறும் - நெருப்புச்சுடுதற்கிடமாகும், கொடுஞ்சுரத்து - கொடியபாலையில், இறந்தனளாக-சென்றனளாக.

(வி-ரை.) "ஆக வாக வென்ப தென்னு,மாவயின்மூன்று ம் பிரிவி லசைநிலை" என்பதனன் இறந்தனளாகவென்பதுசெயவெனெச்சமுற்றாய்த்திரிவுழி, ஆகவென்னு மிடைச்சொல் வந்ததன்பொருளுணர்த்திப் பிரிவிலசைநிலையாய்ச் செயவெனெச்சமாய் நின்றது, "இனைதலானாளாகிசொல் விற்பாணி நின்றனளாக" என்றாற்போல.

'நதிக்கடம்' என்பதுமுதல் 'மகிழ்ந்தவொன்றும்'என்பதுவரை. (9—11—26 வரிகள்.)

(ப-ரை.) ஆலவாய் - ஆலவாயென்னும் பதியில், நதி-நதிபோலவொழுகும், கடம் - மதத்தினையும், தறுகண்-தறுகண்மையினையும், புகர் - புகரினையும், கொலைமறுத்த - கொலைத்தொழிலையுநீத்த, கலிபமதனை - கல்யானையை, கரும்புகொள வைத்த - (யானையைப் போலக்) கரும்பு தின்னும்படி வைத்த, நீலநிறைகண்டன் - கருமை நிறைந்த கண்டன், அமர்ந்த - பொருந்திய, வடிவம் எட்டின் - வடிவமெட்டில், மகிழ்ந்த ஒன்றும் - எல்லாரு மகிழ்தற் [illegible]கிய வொருவடிவமுமாகி.

(வி-ரை.) ஆலவாய் - கூடற்பதி. தறுகண்மை - அஞ்சாமை. புகர் - புள்ளி. அன்னும் ஐயும் அசை. அதுவென்பதியானை [illegible]யைச் சுட்டிற்று, "யானையது வந்தது"என்றாற்போல.வினைக்[illegible]கியன்றதெனக் கொள்ளின் அது வழக்கிற்கென மறுக்க. [illegible]துக் "கல்லார் மணிப்பூண்" என்னுஞ் சிந்தாமணிப் ப[illegible] காண்க. வடிவமெட்டாவன:—பஞ்சபூதமும் இருசுடரும் இயமானும். உம்மை ஆக்கவும்மை. ஆகியென்பது வருவிக்கப்பட்டது.

'உழுவையுகிர்' என்பதுமுதல் 'படாங்கோடு' என்பதுவரை.
(14—17 வரிகள்.)

(ப-ரை.) உழுவை உகிர் - (அவன்) புலியுகிரால், உழக்கும் - உழக்குதற்கிடமாகிய, ஏந்து கோட்டு - உயர்ந்த கோட்டினையுடைய, உம்பல் உரிவை மூடி - யானையினது தோலைப் போர்த்து, ஒளியினை மறைத்து - சுடரினை மறைத்ததினால், தரைபடு - பூமியின்கண்ணுண்டாகிய, மறுக்கம் - மறுக்கங்கள், தடைந்தனபோல - தடைபட்டனபோல, விண்ணுற - விண்ணாகிய வடிவத்திற் பொருந்துதலால், விரித்த கருமுகிற்படாம் கொடு - அவ்வடிவிற் போர்த்த துகிலாகிய மேகத்தினால்,(மூடப்பட்டு)- ஒளிமறைந்து அவன் வடிவமாய பூமியின்கணுண்டாகிய மறுக்கங்களைத் தடுத்து.

(வி-ரை.) உகிர் - நகம். தடைதல் - தடைபடுதல். கோடு - கொம்பு. மறுக்கம் - தடுமாற்றம். "சமஞ்செய்து சீர்தூக்குங் கோல்போல மைந்தொருபாற், கோடாமை சான்றோர்க் கணி" என்றாற்போல உவமையடையைப் பொருட்குங் கொள்க.

'மறிதிரை' என்பதுமுதல் 'அழன்மேனியை' என்பதுவரை.
(12—13—18 வரிகள்.)

(ப-ரை.) மறிதிரை ஒருநாள் - அவள் ஒருநாள் மறியுந் திரையையுடைய, பரவை புடைவயிறு - கடலினடுவிடம், குழம்ப - குழம்பும்படி, துலங்கு மலை - விளங்காநின்ற மலையினால், கலக்குவபோல - (தேவர் பயன்கொள்ளக்) கலக்கியதுபோலப் (புனலாகிய வடிவத்தினால்), மண்ணக முருக - அம்மண்ணாகிய வடிவமுருகும்படி, கனற்றும் - கனலப்பண்ணும், அழல் மேனியை - அழலாகிய வடிவையுடைய நீ.

(வி-ரை.) கலக்குவதுபோலக் கனற்றுமழல் எனவியையும். உருகவெனவே புனல் வருவிக்கப்பட்டது. இது பயனுவமத்தின் பகுதி. என்னை? கலக்கியதினாலுண்டா மமுதமுங் கனற்றுதலாலுண்டாகிய புனலுமொக்கும் எனத் தொழின்முகத்தாற் கூறினாரேனும், "மாரியன்ன வண்கை" என்றாற்போல மழைத்தொழிலாகிய பெயலாற்பயந்த பொருளிடையிட்டுப்போ யுவமங்கொள்ளாது தோற்றும் பொருளிரண்டு மொத்தமையிற் றொழிலுவமமெனப்படாது கொள்வார்க்குப் பயமொத்தலால் ஐயவுவமத்தின்வகையாயிற்று. "வானின் றுலகம் வழங்கி வருதலாற், றானமிழ்த மென்று

ணரற் பாற்று"என்றமையால், புனலையும் அமுதம் என்றார். "வினை, யெஞ்சு கிளவியும் வேறுபல் குறிய' என்றதனால் முன்னிலைக் குறிப்புமுற்றுப் பெயரெச்சக் குறிப்பாயிற்று. "எவ்வயிற் பெயரும் வெளிப்படத் தோன்றி, யவ்விய னிலையல் செவ்வி தென்ப" என்பதனால் தோன்றுவெழுவாய் வருவிக்கப்பட்டது. கனற்றல் - சுடப்பண்ணுதல்.

'எடுத்துமூடி' என்பதுமுதல் 'மலர்த்துதி' என்பதுவரை.

(19—22 வரிகள்.)

(ப-ரை.) எடுத்து மூடி எறிதிரை - திரைதள்ளி மறியாநின்ற நீர், பழனத்து - அப்பழனத்து, பனிச்சிறுமை கொள்ளா - பனியால் வாடாது, முள் அரை - முள்ளையரையிலேயுடைய, முளரி - தாமரையானது, வண்டொடு மலர்ந்த - வண்டிருக்க மலர்ந்த, வண்ணம் போல - தன்மைபோல, கண்ணும் மனமும் களிவர-அவள் கண்ணு மனமுங் களிபெறும்படி, மலர்த்துதி - (நின் கதிர்களால் வாட்டாது) மலர்த்துவாயாக.

(வி-ரை.) எடுத்து உயர்ந்தெனினுமாம். கொள்ளாதென்பது குறைந்துநின்றது. ஒடு-வேறுவினையொடு. "நில்லாங்கு" என்னு மருதக்கலியுள், முகந்தானே காட்டிக்கொடுக்கும் குறிப்பென்று மனத்தை முகமென்றமையால், இவரும் முகத்தை 'மனம்'என்றார். மனத்தினுணர்ந்ததை முகங்காட்டலி னொற்றுமைபற்றித் துணையாதற் சிறப்புநோக்கி உயிர்க்களிப்புக் கண்ணினு முகத்தினு மேற்றப்பட்டது. மனத்தாமரையை மலர்த்துதியெனி னுவமைக்கொவ்வாமை யுணர்க. பழனம் - வயல்.

வானவனே! மறுகினூற்போல மறுகச்சென்றனளாக, அழலாகிய வடிவையுடைய நீ, அவள் முகத்தை வாட்டாது மலர்த்துவாயாக வென வினைமுடிவுசெய்க. பின்னுறுதிபயப்பினுங் கொடுமையு மருமையும்பற்றி வாட்டாது மலர்த்துதியென்றாள். (௩0)

திருக்கோவையார் உ௲௭-ம் செய்யுள்.

இன்னலெய்தல்.

இன்னலெய்தலென்பது—வெறியாடுதற்குத் தாயார் வேலனையழைப்பக்கேட்ட தலைமகள், இருவாற்றானும் நமக்குயிர்வாழ்நெறி

யில்லையெனத் தன்னுள்ளேகூறி, இன்னலெய்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

அயர்ந்தும் வெறிமறி யாவிசெ குத்தும்வி ளர்ப்பயலார்
பெயர்ந்து மொழியா விடினென்னை பேசுவ பேர்ந்திருவ
ருயர்ந்தும் பணிந்து முணரா னதம்பல முன்னலரிற்
றுயர்ந்தும் பிறிதி னொழியினென் னாதுந் துறைவனுக்கே.

ஆடிய வெறியிற் கூடுவ தறியாது
நன்னறுங் கோதை யின்னலெய் தியது.

(ப-ரை.) வெறி அயர்ந்தும் - வெறியை விரும்பி யாடியும், மறி-மறியினது, ஆவி செகுத்தும் - ஆவியைக் கெடுத்தும், பெயர்ந்தும்-பின்னும், ஒழியாவிடின் - நிற வேறுபா டொழியாதாயின், அயலார் என்னை பேசுவ - அயலார் கூறுவனவென்னாகும், பிறிதின் - (வெறியாட்டாகிய)பிறிதினால்,விளர்ப்பு ஒழியின்-இவ்விளர்ப்புஒழியுமாயின், இருவர்-(யான் தலைவன் யான் தலைவன் என்று தம்முள் மாறுபட்ட) பிரமனு மாலுமாகிய விருவர், பேர்ந்து - (தம் நிலைமையினின்றும்) பெயர்ந்து (தழற்பிழம்பாகிய தன்வடிவை யறியலுற்று), உயர்ந்தும்-ஆகாயத்தின்மேற் சென்றுயர்ந்தும், பணிந்தும் - நிலத்தின்கீழ்ப் புக்குத் தாழ்ந்தும், உணரானது - அறியப்படாதவனது, அம்பலம்-அம்பலத்தை, உன்னலரின் - நினையாதாரைப்போல, துயர்ந்தும் - துயாமுற்றும், துறைவனுக்கு என்னாதும் - அத்துறைவனுக்கு நாம் என்னாதும் (இருவாற்றானும் உயிர் வாழ்தலரிது), எ-று.

(வி-ரை.) மறியறுத்தற்கு முன்னுரைத்த துரைக்க. பெயர்ந்துமென மெலிந்து நின்றது. உணரானென்றது செயப்படு பொருட்கண் வந்தது. தன்னைப் பிரிதல் துன்பமாய் இன்றியமையாத யாம் இத்தன்மையமாகவும் அளிக்கின்றிலனென வுட்கொண்டு, அவனை நாமுன்ன நெருங்க முயங்கு மன்பாமா றெல்லாம் இன்றென்னு மென்னுங் கருத்தால் 'என்னாதும்' என்றாள். பிறிதுமொழியி னென்பது பாடமாயின், வெறியினாற் றணியாதாதலின் இந்நோய் பிறிதென்று பிறர்மொழியினென் றுரைக்க. மெய்ப்பாடு - அச்சத்தைச் சார்ந்த மருட்கை, பயன் - தலைமகள் தன்னெஞ்சொடு சொல்லி யாற்றுதல்.

நேரிசையாசிரியப்பா.

வள்ளுறை கழித்துத் துளக்குவேள் மகனு
மன்பும யிற்கழுத் தும்மலை யடியு

நெற்பிடித் துரைக்குங் குறியி னேரு
நடுங்கஞ ருற்ற பழங்கண னினையரு
மயரா வெறியிற் றண்டா வருநோ
யீயா துண்ணுநர் நெடும்பழி போலப்
போகாக் காலைப் புணர்க்குவ வென்னும்
நான்கெயிற் றெருத்தற் பிடர்ப்பொலி வரைப்பகை
யறுகால் குளிக்கு மதுத்தொடை யேந்த
முட்டாட் செம்மலர் நான்முகத் தொருவ
னெண்ணிநெய் யிறைத்து மணவழ லோம்பப்
புவியளந் துண்ட திருநெடு மாலோ
னிருகர மடுக்கிப் பெறுநீர் வார்ப்ப
வொற்றை யாழியன் முயலுடற் றண்சுட
ரண்டம் விளர்ப்பப் பெருவிளக் கெடுப்ப
வளவாப் புலன்கொள விஞ்சைய ரெண்மரும்
வள்ளையிற் கருவியிற் பெரும்புகழ் விளைப்ப
முனிவர் செங்கரஞ் சென்னி யாக்க
வுருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப
மும்முலை யொருத்தியை மணந்துல காண்ட
கூடற் கிறைவ னிருதா ளிருத்துங்
கவையா வென்றி நெஞ்சினர் நோக்கப்
பிறவியுங் குற்றமும் பிரிந்தன போலப்
பீரமு நோயு மாறின்
வாரித் துறைவற் கென்னு தும்மே.

வள்ளுறைகழித்து - என்னுதும்மே. பகுதி - வரைபொருட்பிரிதல். துறை-வெறிக்கின்னலெய்தல்.

'தாண்டாவருநோய்' என்பதுமுதல் 'பழிபோல' என்பதுவரை,
(5—6 வரிகள்.)

(ப-ரை.) ஈயாது உண்ணுநர்-வழங்காதுண்பார்க்கு, நெடும்பழி போல - அதனால் வரும் பழி நீங்காததுபோல, தண்டா வருநோய் - நீங்காது வருநோய்.

(வி-ரை.) வழங்காதுண்டல் - ஐயம்பெய்யாதுண்டல். தண்டாது என்பது ஈறு தொகுத்தலாய் தண்டாவென நின்றது.

வள்ளுறை கழித்துத் துளக்குவேன் மகனும்.

(1—வது வரி.)

(ப-ரை.) வள்ளுறை கழித்து - வலிய வுறையினை நீக்கி, துளக்கு - திரியாநின்ற, வேல் மகன் - வேலன்.

(வி-ரை.) உம்மையை அயர்தலோடு கூட்டுக. திரித்தல்-சுழற்றல். வேலன்-வெறியாட்டாளன் (படிமத்தான்).

அயரா வெறியின்.

(5—வது வரி.)

(ப-ரை.) அயரா வெறியின் - வெறியாடியும்.

(வி-ரை.) "இன்னிசைச் சில்லரிச் சிலம்பின் வள்வார் சிறுபறை" போல அயரா வென்பது, "கல்லாக் களிப்பர் தலையாயார்" என்பது போன்றது. உம்மை-சிறப்பு, எச்ச வும்மையுமாம், மறிசெகுத்துமென வருதலின்.

போகாக் காலை.

(7—வது வரி.)

(ப-ரை.) போகாக் காலை - (அதனால்) தீராதபோது.

'அன்பும்' என்பதுமுதல் 'பழங்கணன்னையரும்' என்பதுவரை.

(2—4 வரிகள்.)

(ப-ரை.) நெற்பிடித்து - பரப்பிய நெல்லினை மூன்றிரண்டொன்றுபடப் பிடித்து, அன்பும் - முருகணங்கின்வேலிது, மயிற் கழுத்தும் - கழுத்தினையுடைய மயிலிது, மலையடியும் - கோழிக் கொடியிது, உரைக்கும் - (தோன்றுகின்றனவென்று) சொல்லும், குறியினோரும் - கட்டுவித்தி குறியினாற் றெய்வத்தினுடையதென்றறிதலால், நடுங்கு-(அவரும்)நடுங்குதற்குக் காரணமாகிய, அஞர் உற்ற - துன்பத்தினால் வந்த, பழங்கண் அன்னையரும் - மெலிவினையுடைய தாயரும்.

(வி-ரை.) குறிக்கிலக்கணம் - நென் மூன்று மிரண்டு மொன்றும் படுகை. அஃதாவது—அன்புங் கொடியு மயிலும், "குயிலிதன்றேயென்ன லாஞ்சொல்லி கூறன்சிற் றம்பலத்தா, னியலிதன் றேயென்ன லாகா விறைவிறற் சேய்கடவு, மயிலிதன் றேகொடி வாரணங் காண்கவன் சூர்தடிந்த, வயிலிதன் றேயிதன்றே நெல்லிற் றோன்று மவன்வடிவே" என்னும் பாட்டில், பேராசிரியர் குறிக்கில

க்கணம் கூறுதற்க ணுவகையை வேலென்றாற்போல, அன்பென்றது வேலாயிற்று. போர் செய்யாநின்ற வடியினையுடைய கோழியை மலையடியென்றா ரன்மொழித்தொகையான். மயிற்கழுத்துப் பின்மொழிநிலையல்-மயிற்கழுத்துத் தோன்றிய தெனினுமாம். உம்மை - எச்சவும்மை. மலைதல் - சண்டை செய்தல். அடி - கால். இதுபற்றியன்றே இதனைக் காலாயுதமென வழங்குவது.

புணர்க்குவ வென்னும்.

(7—வது வரி.)

(ப-ரை.) புணர்க்குவ - இங்ஙனஞ் சொல்லப்படுவன, என்னும் - என்னும்.

(வி-ரை.) போகாக்காலை யென்னுமென வியையும்.

'நான்கெயிற்று' என்பதுமுதல் 'ஏந்த' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) நான்கு எயிறு - நான்கு மருப்பினையுடைய, ஒருத்தல் - அயிராபதத்தின், பிடர்ப்பொலி - பிடரிற் பொலியும், வரைப்பகை - தேவேந்திரன், அறுகால் - வண்டுகள், குளிக்கும் - மூழ்குதற்கிடமாகிய, மதுத்தொடை - மதுவினையுடைய மாலையினை, ஏந்த - ஏந்த.

(வி-ரை.) வரைக்குப் பகையாதலி னிந்திரனை 'வரைப்பகை' என்றார், பனிப்பகை சூர்ப்பகை யென்றாற்போல.

'முட்டாள்' என்பதுமுதல் 'மணவழலோம்ப' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) முள் தாள்-முள்ளைத் தாளின்கணுடைய, செம்மலர் - சிவந்த தாமரையிலிருக்கும், நான்முகத்தொருவன் - நான்கு திருமுகங்களையுடைய பிரமன், எண்ணி - விதிப்படி விசாரித்து, நெய் இறைத்து - நெய்யினை வார்த்து, மணவழல் ஓம்ப - மணவேள்வித் தீயினை வளர்க்க.

(வி-ரை.) தேவரன்றித் தெய்வமானிடராதலின் 'எண்ணி' என்றார். தாள் - நாளம். நான்முகத்தொருவன் என மேல்வருதலால் மலர் தாமரைமலரைக் குறித்தது.

'புவியளந்து' என்பதுமுதல் 'பெறுநீர்வார்ப்ப' என்பதுவரை.

(12—13 வரிகள்.)

(ப-ரை.) புவி அளந்து - பூமியையளந்த, உண்ட - பின்னுகர்ந்த, திருநெடுமாலோன் - விட்டுணு, இருகரமடுக்கி - இருகையுங் கூட்டி, பெறு நீர் வார்ப்ப - உதகக்கிரியை பண்ண.

(வி-ரை.) பெறுதற்கிடமாகிய நீர் பெறுநீர்.

'ஒற்றையாழியன்' என்பதுமுதல் 'பெருவிளக்கெடுப்ப' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) அண்டம் விளர்ப்ப - அண்டமெங்கும் விளங்கும்படி, ஒற்றை ஆழியன் - ஒற்றை வண்டியினையுடைய வாதித்தனும், முயலுடன் - உடலில் முயலினையுடைய, தண்சுடர் - சந்திரனும், பெருவிளக்கு எடுப்ப - பெருவிளக்கேந்த.

(வி-ரை.) "மின்னேர் தன்யாழி வெங்கதி ரொன்று" என்றார் பிறரும். அண்டம் - உலகம். ஆழி - உருளை, இது ஆகுபெயராய்த் தேரை யுணர்த்திற்று.

'அளவா' என்பதுமுதல் 'பெரும்புகழ்விளைப்ப' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) விஞ்சையர் எண்மரும் - விஞ்சைய ரெண்மரும், அளவா - எட்டுத்தானங்களினு மந்தந்தத் தானங்களுக்குச் சொன்ன வளவாக, புலன் கொள - தொழில் கொள்ளும்படி போர்த்த, வள்ளையில் - தோலினையு மழகினையுமுடைய, கருவியில் - யாழில், பெரும் புகழ் விளைப்ப - மிக்க புகழை வாசிப்ப.

(வி-ரை.) புலன்-சாதியொருமை. உம்மையுமுருபுந்தொக்கன. புலன்களெனவே தான மெட்டாயிற்று. அவை: நெஞ்சு முதலியன. இடைபிங்கலை யியக்கமறுத்து மூலாதாரமுதற் பிரமரந்திரமளவு மியக்கமாக்கி நடுவே தொழில்கொள்ளப் பாடுதன்மரபு. வள்-தோல், "விளக்கு ஒருவின் விசியுறு பச்சை" என்றார் பாணாற்றினும் கருவி யாழ்முனிவர்.

முனிவர் செங்கரஞ் சென்னி யாக்க.
(18—வது வரி.)

(ப-ரை.) முனிவர் - முனிவர்கள், செங்கரம் சென்னி ஆக்க - சென்னியில் செய்ய கரத்தைக் கூப்ப.

(வி-ரை.) ஆக்கவெனவே கூப்பவென்றாயிற்று.

உருப்பசி முதலோர் முன்வாழ்த் தெடுப்ப.
(19—வது வரி.)

(ப-ரை.) உருப்பசி முதலோர் - உருப்பசி முதலாகிய பஞ்ச வேசையர், முன்வாழ்த்து எடுப்ப - பழைய வாழ்த்தினைச் சொல்ல.

'மும்முலை' என்பதுமுதல் 'நெஞ்சினர்' என்பதுவரை.
(20—22 வரிகள்.)

(ப-ரை.) மும்முலை ஒருத்தியை - மூன்று முலையினையுடைய தடாதகையை, மணந்து - கல்யாணம் பண்ணி, உலகு ஆண்ட-உலகினைப்புரந்த, கூடற்கு இறைவன்-மதுரைக்கிறைவனானவனுடைய, இரு தாள் - இரண்டு பாதங்களையும், இருத்துங்கவையா - வேறுபடா திருத்துதற்கிடமாகிய, வென்றி நெஞ்சினர் - வென்றியினையுடைய நெஞ்சினர்.

(வி-ரை.) கவைத்தல் - இருகூறுபடுதல். கவையாதென்பது விகாரம். வென்றி - புலன்களின்வழி மனத்தை விடாமை.

'நோக்க' என்பதுமுதல் 'என்னதும்மே' என்பதுவரை.
(22—25 வரிகள்.)

(ப-ரை.) நோக்க - கருதிநோக்க, பிறவியும் - பிறவியும், குற்றமும் - (பிறந்ததனால் வந்த) குற்றமும், பிரிந்தன போல - நீங்கினாற்போல, பீரமும் - பசலையும், நோயும் - (பசலை முதிர்ந்ததனால் வந்த) துன்பமும், மாறின்-நீங்குமாயின், வாரித்துறைவற்கு - கடற்றுறைவற்கு, என்னதும் - யாமென்னவேம் (இருவாற்றானு முயிர்வாழ்தலரிதென்க).

(வி-ரை.) நோய் - துன்பம், "நோயு மின்பமு மிருவகை நிலையின்" என்றாற்போல. பீரம் - முதிர்நோய், பசப்புறுபருவரல்போல. போன்றது - சுட்டாய்நின்றது. உம்மை - சிறப்பும்மை. எவனென்னும் வினாப்பெயர் என்னென்றாய் யீண்டின்மை குறித்துநின்றது.

பிரிதற்கரிய யாம் வருந்தவு மிரங்கிலரெனக் கருதி முன்கூடிய வன்பெல்லா மின்றென்று மென்னுங் கருத்தான்'என்றும்' என்றாள்.

வேலன் வெறியாடியும் நோய் நீங்காதாயின் அன்னையர் புணர்ப்பதுமென்னும். அந்நோய் நீங்கிற் கடற்றுறைவர்க் கியாமென்றுவேம், இவ்விருவாற்றானு முயிர்வாழ்த லரிதெனெ வினைமுடிவுசெய்க. ஏகாரம் - ஈற்றசை.

(நக)

திருக்கோவையார் ௱௬உ-ம் செய்யுள்.

நெஞ்சொடுநோதல்.

நெஞ்சொடு நோதலென்பது—மீளநினைந்த தலைமகன், பின்னும் பொருண்மேற் செல்லாநின்ற வுள்ளத்தனாய்நின்று மீளமாட்டாது, இவ்விரண்டனுள் இப்பொழுது நீயேதுக்குப் போகமுயல்கின்றாயெனத் தன்னெஞ்சொடு நொந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பொன்னணி யீட்டிய வோட்டரு நெஞ்சமிப் பொங்குவெங்கா
னின்னணி நிற்குமி தென்னென்ப தேயிமை யோரிறைஞ்சு
மன்னணி தில்லை வளநக ரன்னமன் னந்நடையாண்
மின்னணி நுண்ணிடைக் கோபொருட் கோநீ விரைகின்றதே.

வல்லழற் கடத்து மெல்லியலை நினைந்து
வெஞ்சுடர் வேலோ னெஞ்சொடு நொந்தது.

(ப-ரை.) பொன் அணி - பொற்றிரளை, ஈட்டிய - ஈட்டுவான், ஓட்டரு - ஓட்டந்தரும், நெஞ்சம்-நெஞ்சமே, நீ விரைகின்றது-(இப்பொழுது) நீவிரைகின்றது, இமையோர்-இமையோர், இறைஞ்சும்-சென்று வணங்கும், மன் - இறைவனது, அணி - அழகிய, தில்லை - தில்லையாகிய, வளம் நகர் அன்ன-வளம்பொருந்திய நகரையொக்கும், அன்ன நடையாள் - அன்னத்தினது நடைபோலு நடையையுடையாளது, மின் அணி-மின்போலும், நுண்ணிடைக்கோ - நுண்ணியவிடைக்கோ, பொருட்கோ - (எடுத்துக்கொண்ட) பொருளுக்கோ (அன்றிது இரண்டிற்குமல்லவோ), இப்பொங்கு-இவ்வழல் பொங்குகிற, வெம் கானில் - வெங்கானத்தை, நண்ணி - சேர்ந்து, நிற்கும் - (போவதும் மீள்வதுஞ் செய்யாது) நிற்கின்ற, இது - இந்நிலை, என் என்பது - யாதென்று சொல்லப்படுவது, எ - று.

(வி-ரை.) நண்ணி யென்பது நணியென விடைக்குறைந்து நின்றது. அணியென்று பிரித்து வெங்கானின்க ணணித்தாகநிற்ப

தென் றுரைப்பினுமமையும். இமையோ ரிறைஞ்சுந் தில்லைவளாக மென வியையும்.

நேரிசையாசிரியப்பா.

பொருள்செய லருத்தியி னெண்வழி தடைந்து
நாற்றிசை நடக்கு மணங்கின வயவத்
தலைதரு தட்டைக் கரும்புற மலைமடல்
கடற்றிரை யுகளுங் குறுங்கயன் மானுங்
கடுங்கான் றள்ளித் தடைதரு நெஞ்சங்
கயிலைத் தென்பாற் கானகந் தனித்த
தேவர்நெஞ் சுடைக்குந் தாமரை யேவின்
மணக்கோ றுரந்த குணக்கோ மதனைத்
திருக்குள முளைத்த கட்டா மரைகொடு
தென்கீழ்த் திசையோ னாக்கிய தனிமுதற்
றிருமா மதுரை யெனுந்திருப் பொற்றொடி
யென்னுயி ரடைத்த பொன்முலைச் செப்பி
னளவம ரின்பங் கருதியோ வன்றிப்
புறன்பயன் கொடுக்கும் பொருட்கோ வாழி
வளர்முலை யின்பெனின் மறித்துநோக் குமதி
பெரும்பொரு ளின்பெனிற் பிறிதுதடை யின்றே
யோதல் வேண்டும் வாழிய பெரிதே.

பொருள்செயலருத்தியின் - வாழியபெரிதே. பகுதி - பொருள்வயிற்பிரிதல். துறை - நெஞ்சொடுநோதல்.

'பொருள்செயல்' என்பதுமுதல் 'கடுங்கான்றள்ளி' என்பதுவரை.

(1—3—5 வரிகள்.)

(ப-ரை.) பொருள் செயல் - பொருளைத் தேடுதலையுடைய, அருத்தியின் - ஆசையினால், அலைதரும் - என்னை யலைதலைச்செய்யும், கடுங்கான் தள்ளி - கடிய கானிடத்திற் செலுத்தி.

(வி-ரை.) அலைதரும் என்பதற்குப் பகுதி அலைதா.

எண்வழி தடைந்து.

(1—வது வரி.)

(ப-ரை.) எண்வழி தடைந்து - அணங்கினை எண்ணாது பண்ணி.

(வி-ரை.) எண்ணும் வழியைத் தடைபடுத்தியது எண்ணாது பண்ணியதென்க.

'நாற்றிசைநடக்கும்' என்பதுமுதல் 'வாழிய' என்பதுவரை.
(2—5—17 வரிகள்.)

(ப-ரை.) நாற்றிசை நடக்கும் - (பார்க்கும்பொழுது) நான்கு திசையினும் வெளிப்படும், தட்டைக் கரும்புற - கரும்புறு மூங்கிலும், மலை - (அழகிய) மலையும், மடல் - பூவிதழும், கடல் திரை - திரைக்கடலில், உகளும் - திரியும், குறுங்கயல் மானும் - குறிய கயலும்போலும், அணங்கின் அவயவத்து - கரும்பெழுதிய தோளும் அழகிய முலையும் வாயும் கண்ணுமாகிய அணங்கினுடைய அவயவத்தால் வரும், அருத்தியில் - ஆசையில், எண்வழி தடைதரும் - பொருளீட்டுதலை யெண்ணாது பண்ணும், நெஞ்சம் - நெஞ்சமே, வாழிய - நீ வாழ்வாயாக.

(வி-ரை.) அருத்தியிலெண்வழி யென்றதை அவயவத்திற்குங் கூட்டுக. உவமை "ஆய்தூவி யனமென வணிமயிற் பேடையெனத், தூதுணம் புறவெனத் துதைந்தநின் னெழினலம்" என்றாற்போலக் கொள்க.

'கயிலைத்தென்பால்' என்பதுமுதல் 'கோமதனை'
என்பதுவரை.
(6—8 வரிகள்.)

(ப-ரை.) கயிலைத்தென்பால்-கைமலைலைக்குத் தெற்காய, கானகம் - காட்டிடத்தில், தனித்த - தேவியரைவிட்டுப் பிரிந்த, தேவர் நெஞ்சு - தேவர் மனத்தை, உடைக்கும் - உடைத்தற்குக் காரணமாகிய, தாமரை எவின் - தாமரையம்பை யேவினாற்போல, மணக்கோல் துரந்த - சில தாமரையம்பை யேவுதற்கேதுவாய், குணம் - குணத்தினையுடைய, கோமதனை - கோவாகிய மன்மதனை.

(வி-ரை.) மணக்கோலென்றமையின் மலராயிற்று. துரந்த குணம் - ஏவுதலான் வந்த சிலையொலி யெனினுமாம்.

'திருக்குளம்' என்பதுமுதல் 'போற்றேடி' என்பதுவரை.
(9—11 வரிகள்.)

(ப-ரை. [illegible]ருக்குளம் - அழகிய நெற்றியில், முளைத்த-தோன்றிய, கண் [illegible]ர கொடு - கண்ணாகிய தாமரையைக்கொண்டு,

தென் கீழ்த்திசையோன் ஆக்கிய - நெருப்பாக்கிய, தனி முதல்-ஒப்பற்ற முதலானவன், திரு மா-அழகினையும் பெருமையினையுமுடைய, மதுரை என்னும் - மதுரைபோலும், திரு பொற்றொடி - அழகினையுஞ் செல்வத்தினையுமுடைய பொற்றொடி.

(வி-ரை.) சிறப்புநிலைக்களனாக வுவமை வந்தது. கொடு கொண்டு என்பன மூன்றுவதன் சொல்லுருபுகள். தென்கீழ்த்திசையோன்-தீ. தனிமுதல் என்றது சிவபிரானை.

'என்னுயிர்' என்பதுமுதல் 'பொருட்கோ' என்பதுவரை. (12—14 வரிகள்.)

(ப-ரை.) என் உயிர்-என்னுயிராகிய, பொன் அடைத்த-பொன்னையடைத்த, முலை - முலையாகிய, செப்பின் அளவு அமர் - செப்பினளவாயமர்ந்த, இன்பம் கருதியோ - இன்பத்தைக் கருதியோ, அன்றி - அதுவன்றி, புறன்பயன்-பின் பயனை, கொடுக்கும்-கொடுக்கும், பொருட்கோ - பொருளைக் கருதியோ.

(வி-ரை.) கருதி யென்பதனைப் பொருளைக் கருதியோவெனவுங் கூட்டுக. பொருட்கென்பது உருபுமயக்கம். அளவமர்தல்—"அல்குல்போல வளர்கின்றது" என்றாற்போல நின்றது.

'ஆழிவளர்' என்பதுமுதல் 'பெரிதே' என்பதுவரை. (14—17 வரிகள்.)

(ப-ரை.) ஆழிவளர் - (தடைப்பட்டது யாதினால் இவற்றுள்) வட்டமாக வெழாநின்ற, முலை இன்பெனின் - முலையால்வரு மின்பத்தினாலெனின், மறித்து நோக்கு - திரும்பிச் செல்வாயாக, பெரும் - அதுவன்றி மிகுந்த, பொருள் இன்பெனில்-பொருளால் வருமின்பத்தினாலெனில், பிறிது தடை இன்றே-அதற்கு வேறு தடையிலையாதலால், (யாதினைக் கருதியதொன்றை-நீ கருதியதை); ஓதல் வேண்டும் பெரிது - பெரிதாகச் சொல்வாய்.

(வி-ரை.) மதி - முன்னிலையசைச்சொல். யாதினையென்பது உருபுமயக்கம்.

பொருளாசையாற் கானிற்றள்ளி யணங்கினை யெண்ணாது பண்ணி அவயவத்தாசையாற் பொருளீட்டுதலை யெண்ணாது பண்ணு நெஞ்சமே, வாழ்வாயாக, இன்பத்தைக் கருதியோ பொருளைக் கருதியோ தடைப்பட்டது யாதினால், இவற்றுளின்பத்தினாலெனின் மீள்

வாயாக, பொருளாலெனிற் செல்வாயாக, ஆதலாலிவற்றுட் கருதிய தொன்றை சொல்வாயாகவென வினைமுடிவு செய்க.

இது "நோயுமின்பமும்" என்னும் பொருளியற் சூத்திரத்து "உறுப்புடையதுபோ லுணர்வுடையதுபோல், மறுத்துரைப்பதுபோ னெஞ்சொடு புணர்த்தும்" என்பதனால், உணர்வுடையதுபோலவு முறுப்புடையதுபோலவு மறுத்துரைப்பதுபோலவுங் கூறினர்.

அணங்கினை யெண்ணுதுபண்ணிப் பொருளீட்டுதலை யெண்ணுதுபண்ணு நெஞ்சே யென்றமையான் உணர்வுடையதுபோல வும் கூறி, செல்வாயாக மீள்வாயாக என்றமையான் உறுப்புடை யதுபோலவும், செல்வாயாக என்றமையான் மறுத்துரைப்பதுபோல வுங் கொள்க. (௩௨.)

திருக்கோவையார் ருஉ-ம் செய்யுள்.

வேழம் வினுதல்.

வேழம் வினுதலென்பது—குறைகூறத் துணியாநின்றவன் என்குறை யின்னதென்று இவளுக்கு வெளிப்படக் கூறுவேனாயின், இவள் மறுக்கவுங் கூடுமென உட்கொண்டு, என்குறை இன்னதெ ன்று இவடானே யுணருமளவும் கரந்த மொழியாற் சில சொல்லிப் பின் குறையுறுவதே காரியமென, வேட்டை கருதிச்சென்றானாக, அவ்விருவருழைச் சென்று நின்று, தன் காதல் தோன்ற இவ்விடத் தொரு மதயானை வரக்கண்டீரோவென வேழம் வினுவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

இருங்களி யாயின்றி யானிறு மாப்பவின் பம்பணிவோர்
மருங்களி யாவன லாடவல் லோன்றில்லை யான்மலையீங்
கொருங்களி யார்ப்ப வுமிழ்மும் மதத்திரு கோட்டொருநீள்
கருங்களி யார்மத யானையுண் டோவரக் கண்டதுவே.

ஏழைய ரிருவரு மிருந்த செவ்வியுள்
வேழம் வினுஅய் வெற்பன் சென்றது.

(ப-ரை.) பணிவோர் மருங்கு - அடியவரிடத்தே யவரொடு கூடி, இருங்களியாய் - பெரியகளிப்பையுடையேனாய், இன்று யான் இறுமாப்ப - யானின்றிறுமாக்கும்வண்ணம், இன்பம் - இன்பத்தை, அளியா - எனக்களித்து, அனல் ஆட வல்லோன் - தீயாடல் வல் லோன், தில்லையான் - தில்லையான், மலை-(அவனது) மலையின்கண்,

ஈங்கு - இவ்விடத்து, ஒருங்கு அளி ஆர்ப்ப - அளிகளொருங்கார்ப்ப, உமிழ் - உமிழப்படாநின்ற, மும்மதத்து - மூன்றுமதத்தையும், இரு கோட்டு - இரண்டு கோட்டையுமுடைய, நீள் - நீண்ட, கரு - கரிய, களி ஆர் - களியார்ந்த, ஒரு மதயானை-ஒருமதயானை, வர-வராநிற்ப, கண்டது உண்டோ - கண்டதுண்டோ (உரைமின்), எ-று.

(வி-ரை.) மருங்கிறுமாப்பவெனக் கூடிற்று. அனலாடவென்பது அனலோடாடவென விரியும். ஆர்ப்ப வரவெனக் கூட்டுக. ஆர்ப்பவு மிழுமெனினுமமையும். நீட்சி-விலங்குண்டாகிய நெடுமை. களி-உள்ளச்செருக்கு. மதயானை - மதமிடையறாத யானை.

நேரிசையாசிரியப்பா.

தன்னுட லன்றிப் பிறிதுண் கனையிருள்
பகல்வலிக் கொதுங்கிய தோற்றம் போலப்
பெருநிலவு கான்ற நீறுகெழு பரப்பி
லண்ட நாடவர்க் காருயிர் கொடுத்த
கண்டக் கறையோன் கண்டரு நுதலோன்
முன்னொரு நாளி னற்படை யுடன்று
செழிய னடைத்த சென்னி பாட
வெள்ளருங் கருணையி னள்ளிரு ணடுநா
ளவனெனத் தோன்றி யருஞ்சிறை விடுத்த
முன்னவன் கூடன் மூதூ ரன்ன
வெண்ணகைச் செவ்வாய்க் கருங்குழன் மகளிர்
செம்மணி கிடந்தநும் பசும்புனத் துளறி
வாய்சொரி மழைமதத் தழைசெவிப் புழைக்கைக்
குழிகட் பருஉத்தாட் கூர்ங்கோட் டொருத்தல்
சினைதழை விளைத்த பழுமர மென்ன
வறுகாற் கணமும் பறவையுங் கணையு
மேகமும் பிடியுந் தொடர
வேகிய துண்டே கூறுதிர் புரிந்தே.

தன்னுடலன்றி - கூறுதிர்புரிந்தே. பகுதி - மதியுடம்படுத்தல், துறை - வேழம்வினாதல்.

'தன்னுடல்' என்பதுமுதல் 'நுதலோன்' என்பதுவரை.
(1—5 வரிகள்.)

(ப-ரை.) தன்னுடல் அன்றி - (ஆதித்தன்) தன்னுடலையன்றி, நீறுகெழுபரப்பில் - நிலப்பரப்பில், பெருநிலவு கான்ற - மிகுந்த நிலவைக்கான்ற, பிறிதுண்-பிறிதுடலை மறையாநின்ற, கனையிருள்-செறிந்த விருளானது, பகல்வலிச்கு-ஆதித்தன்வலிக்காற்றாது, ஒதுங்கிய தோற்றம்போல - அவனிடத்தொதுங்கிய தோற்றம்போல, அண்டநாடவர்க்கு - தேவர்கட்கு, ஆருயிர் - அவர்களாற் பெறுதற்கரியவுயிரை, கொடுத்த - கொடுத்தனுல்உந்த, கண்டக்கறையோன்-கண்டத்திற் றோன்றுங் கறுப்பையுடையோனாய், கண் தரு நுதலோன் - கண்ணையுண்டாக்கிய நுதலினையுடையோன்.

(வி-ரை.) இது இல்பொருளுவமை. ஆதித்தனுக்குப் பிறிது மதி, பிறிது-ஆகுபெயர், "உண்டற் குரிய வல்லாப் பொருளை, யுண்டன போலக் கூறலு மரபே" என்றமையால் 'பிறிதுண் கனையிருள்' என்றார். "வாயவன் காக்கையுங் கூகையுங் கூடி" என்றாற்போலக் கண்டக்கறையோனென்பது நவம்பற்றி மயங்கிவந்தது.

'முன்னொரு' என்பதுமுதல் 'மகளிர்' என்பதுவரை.
(6—11 வரிகள்.)

(ப-ரை.) செழியன் - பாண்டியன், நாற்படை - சதுரங்கசேனையால், உடன்று - போர்செய்து, அடைத்த - முன்காவலிடப்பட்ட, சென்னி - சோழன், பாட - பாட, முன்னொருநாளில் நள்ளிருண்டுநாள் - ஒருநாள் செறிந்த விருளினையுடைய யாமத்தில், அவனெனத் தோன்றி - பிறராயிராமற் பாண்டியனெனத்தோன்றி, எள்ளருங் கருணையின் - இகழ்தற்கரிய கருணையினால், அருஞ்சிறை விடுத்த - விடப்படாத சிறையினைவிட்ட, முன்னவன் - எல்லாப் பொருட்கு முன்னானவன், கூடல் - மதுரையாகிய, மூதூர் அன்ன - முதியவூர் போன்ற சிறப்பினையுடைய, வெள் நகை - வெள்ளிய நகையினையும், செவ்வாய்-சிவந்தவாயினையும், கருங்குழல்-கரிய குழலினையுமுடைய, மகளிர் -மகளீர்.

(வி-ரை.) நாற்படை-"ஆறறியந்தணர்" என்றாற்போல, நான்கு குணத்தினையுடைய படையெனினுமாம். அது -"மறமான மாண்டவழிச்செலவு தேற்ற, மெனநான்கே யேமம் படைக்கு" என்பதனானறிக. நாற்படை : கூலிப்படை, துணைப்படை, நாட்டுப்படை,

காட்டுப்படை யெனினுமாம். உடன்றடைத்தவென்பது "ஒகணமர்ந்து செய்யா ளூறையும்" என்றாற்போல நின்றது. அடைத்த வென்னும் பெயரெச்சஞ் செயப்படுபொருள் கொண்டது. மகளிர் - அண்மைவிளி.

'செம்மணி' என்பதுமுதல் 'புரிந்தே' என்பதுவரை.

(12—18 வரிகள்.)

(ப-ரை.) சொரி மழை - மழைபோலச் சொரியாநின்ற, மதம் - மதத்தினையும், தழை செவி - தழைத்த செவியினையும், புழைக்கை-துளையுடைக் கையினையும், குழி கண்-குழிந்த கண்ணினையும், பருத்தாள் - பெரியகாலினையும், கூர் கோட்டு - வளைந்த கோட்டினையுமுடைய, ஒருத்தல் - யானையானது, அறுகால் கணமும்-வண்டின் கூட்டமும், பறவையும்-பறவைகளும் (இத்தைத் தொடர்ந்தாற்போலத் தொடரவும்), கணையும் - என்னம்பும், மேகமும் - மேகமும்,பிடியும் தொடர - பிடியும் தொடர்ந்தாற்போல, தழை விளைத்த - இலை தழைத்த, சினை-கோட்டினையுடைய, பழுமரம் என்ன-பழுமரம் பின்றொடரவும், வாய் உலறி - வாய்விட்டலறி, செம்மணி கிடந்த - சிவந்தமாணிக்கங்கள் கிடந்த, நும் பசும்புனத்து - நும்முடைய பசிய புனத்திடத்து, எகியது உண்டே - வந்ததுண்டோ, புரிந்து - விரும்பி, கூறுதிர் - சொல்வீராக.

(வி-ரை.) பழுமரம் பெயராய்நின்றது. எனவென்பதனைப் பின்னுங்கூட்டி உம்மை யிரண்டு மாறுக.

மகளீர், யானையானது நும் புனத்திடத்து வந்ததுண்டோ, விரும்பிச் சொல்வீரென வினைமுடிவு செய்க. (௩௩)

திருக்கோவையார் ௭௬ ம் செய்யுள்.

உலகின்மேல் வைத்துரைத்தல்.

உலகின்மேல்வைத்துரைத்தலென்பது—ஆற்றாமை கூறி அதுவழியாகநின்று, ஆடவர் தம்முள்ளமாகியமீன் மகளிரது கண்வலைப்பட்டால் அதனைப் பெறுதற்கு வேறுபாய மில்லாதவிடத்து, மடலூர்ந்தும் அதனைப் பெறுவரென, உலகின்மேல் வைத்துக் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

காய்சின வேலன்ன மின்னியல் கண்ணின் வலைகலந்து
வீசின போதுள்ள மீனிழந் தார்வியன் றென்புலியூ,

ரீசன சாந்து மெருக்கு மணிந்தோர் கிழிபிடித்துப்
பாய்சின மாவென வேறுவர் சீறூர்ப் பனைமடலே.

புலவேலண்ணல் புனைமடலேற்
றுலகின்மேல்வைத் துய்த்துரைத்தது.

(ப-ரை.) காய் சினம் - காய் சினத்தையுடைய, வேல் அன்ன - வேல்போலும், மின் இயல் - ஒளியியலும், கண்ணின் - கண்ணாகிய, வலை கலந்து - வலையை மகளிர்கலந்து, வீசினபோது-வீசினபோது, உள்ளம் மீன் இழந்தார் - அவ்வலைப்படுதலான் உள்ளமாகிய மீனை யிழந்தவர்கள், வியன் - பெரிய, தென்புலியூர் - தென்புலியூர்க்கணுள ளாகிய, ஈசன - ஈசனுடைய, சாந்தும் - நீற்றையும், எருக்கும் - எருக்கம்பூவையும், அணிந்து - அணிந்து, ஓர் கிழி பிடித்து-ஒருகிழியைக் கையிற்பிடித்து, பாய்சினம்-பாயவல்ல சினத்தையுடைய, மா என - மாவென, பனைமடல் - பனைமடலை, சீறூர் - சீறூர்க்கண், ஏறுவர் - ஏறுவர் (தம்முள்ளம் பெறுதற்கு வேறுபாயமில்லாத விடத்து), எ-று.

(வி-ரை.) மின்னியல் வேலென்று கூட்டினுமமையும். இன் - அல்வழிச்சாரியை. 'கண்ணென் வலை' என்பதூஉம் பாடம். மகளி ரென ஒருசொல் வருவியாது கருவி கருத்தாவாக உரைப்பினுமமை யும். உள்ளமிழந்தவர் உள்ளம் பெறுமளவும் தம் வயமன்றி மடலின் வயத்தாய் நிற்றலால் கருவி கருத்தாவாகக் கொள்க. சாந்தும் எரு க்குமென இரண்டாகலின் ஈசனவெனப் பன்மையுருபு கொடுத்தார். பாய்சின மென்புழிச் சினம்-உள்ளமிகுதி. உய்த்துரைத்தது - குறிப் பாலுரைத்தது.

நேரிசையாசிரியப்பா.

இருளொடு தாரகை யிரண்டினை மயக்கிக்
குழலென மலரென மயல்வரச் சுமந்து
வில்லினைக் குனித்துக் கணையினை வாங்கிப்
புருவங் கண்ணென வுயிர்விடப் பயிற்றி
மலையினைத் தாங்கி யமுதினைக் கடைந்து
முலையெனச் சொல்லென வரவர வைத்து
மெய்யினைப் பரப்பிப் பொய்யினைக் காட்டி
யல்குலிடை யெனநெஞ் சுழலக் கொடுத்து
முண்டக மலர்த்தி மாந்தளிர் மூடி

யடியென வுடலென வலமர நிறீஇ
மூரி வீழ்ந்த நெறிச்சடை முனிவர்
சருக்கங் காட்டு மருமறை சொல்லி
யுள்ளங் கறுத்துக் கண்சிவந் திட்ட
மந்திரத் தழற்குழி தொட்டுவயிறு வருந்தி
முன்பி னீன்ற பேழ்வாய்ப் புலியினைக்
கைதைமுட் செறித்த கூரெயிற் றரவினைக்
காருடல் பெற்ற தீவிழிக் குறளினை
யுரிசெய் துடுத்துச் செங்கரந் தரித்துச்
செம்மலர் பழித்த தாட்கீழ்க் கிடத்தி
யருணடம் புரிந்த தேவர் நாயக
னொருநாண் மூன்று புரந்தீக் கொளுவப்
பொன்மலை பிடுங்கிக் கார்முக மென்ன
வளைத்த ஞான்று நெடுவிண் டடையக்
கால்கொடுத் தன்ன கந்திக ணிமிர்ந்து
நெருக்குபொழிற் கூட லன்னசெம் மகளிர்
கண்ணெனுந் தெய்வக் காட்சியுட் பட்டோர்
வெண்பொடி யெருக்க மென்புபனை கிழியினைப்
பூசி யணிந்து பூண்டுபரி கடவிக்
கரத்த தாக்கி யங்ஙோ
வருத்தி மீட்பர் நிலைவல் லோரே.

இருளொடுதாரகை - நிலைவல்லோரே. **பகுதி** - மடல், துறை - உலகின்மேல்வைத்துரைத்தல்.

'இருளொடு' என்பதுமுதல் 'சுமந்து' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(**ப-ரை.**) மயல்வர - எல்லாமயங்கும்படி, இருளொடு தாரகை - இருளுந்தாரகையுமாகிய, இரண்டினை மயக்கி - இரண்டினையுமயக்கி, குழல் என-குழலெனவும், மலர் என-மலரெனவும், சுமந்து-சுமந்து.

(**வி-ரை.**) இது உண்மையுவமை. ஒடு எண்ணொடு. எண்ணும்மை தொக்கது.

'வில்லினைக்குனித்து' என்பதுமுதல் 'பயிற்றி' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) உயிர் விட - நோக்கினருயிர்விடும்படி, வில்லினை குனித்து - வில்லினை வளைத்து, கணையினை வாங்கி-கணையையேற்று, புருவம் கண் என - புருவமெனவுங் கண்ணெனவும், பயிற்றி - பயிலப்பண்ணி.

'மலையினைத்தாங்கி' என்பதுமுதல் 'வரவரவைத்து' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) முலை என வர - முலையென்று சொல்லவரும்படி, மலையினைத் தாங்கி - மலையினைத்தாங்கி, சொல் எனவர - சொல்லென்று சொல்லவரும்படி, அமுதினைக் கடைந்துவைத்து-அமுதினைக் கடைந்து வைத்து.

'மெய்யினை' என்பதுமுதல் 'கோடுத்து' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) அல்குல் என-அல்குலுண்டென்னும்படி, மெய்யினை பரப்பி - உண்மையைக்காட்டி, இடை (என) - இடையில்லை யென்னும்படி, பொய்யினை காட்டி - பொய்யினைக்காட்டி, நெஞ்சு உழல கொடுத்து - நோக்கினர் நெஞ்சு தடுமாறப்பண்ணி.

(வி-ரை.) உண்டில்லை யெனவிருக்க, அல்குலுண்மையி னுண்மையைப் பரப்பி என்றும், இடையென்றுங் கட்புலனாகாமையிற் பொய்யினைக்காட்டி யென்றுங் கூறினர்.

'முண்டகம்' என்பதுமுதல் 'அலமரநிறீஇ' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) அடி என-அடியென்னும்படி, முண்டகம் மலர்த்தி - தாமரையை மலரப்பண்ணி, உடல் என-மேனியென்னும்படி, மாந்தளிர் மூடி - மாந்தளிரைப் போர்த்து, அலமர நிறீஇ - நோக்கினரலமரப்பண்ணி.

(வி-ரை.) இவையெல்லாம் விகாரம்பண்ணி யுருவகமாக்கலின் விகாரவுருவகமாம்.

'மூரிவீழ்ந்த' என்பதுமுதல் 'தேவர்நாயகன்' என்பதுவரை.
(11—20 வரிகள்.)

(ப-ரை.) மூரிவீழ்ந்த - முதன்மையாக வீழ்ந்த, நெறி சடை - நெறித்தலையுடைய சடையினையுடைய, முனிவர்-தாருகவனத்திருடிகள், கண் சிவந்து-கண்சிவப்ப, உள்ளம் கறுத்து-உள்ளம்வெருண்டு, தழல் குழி தொட்டு-ஓமகுண்டந் தோண்டி, சருக்கம் காட்டும் - அதனிடத்து சருக்கங்காட்டும், அருமறை மந்திரம்சொல்லியிட்ட-அரிய வேதமந்திரத்தைச் சொல்லியிட்ட, வயிறு வருந்தி முன்பினீன்ற - ஓமத்தீயி லுண்டாக்குதலரிய, பேழ்வாய்-(பல்வலியோடு கூடிநின்ற) பெரிய வாயினையுடைய, புலியினை - புலியினை, உரிசெய்து உடுத்து - உரித்துடுத்து, கைதை முள் செறித்த - தாழைமுள்ளினைச் செறித்தாற்போன்ற, கூர் எயிறு அரவினை - கூரியபல்லினையுடைய பாம்பினை, செம் கரம் தரித்து-செய்யகரத்திலணிந்து, கரு உடல்பெற்ற-கரிய வுடலினையும், தீவிழி-நெருப்புமிழ்ந்த விழியினையுமுடைய, குறளினை-முயலகனை, செம்மலர் பழித்த-செந்தாமரையைப்பழித்த, தாள் கீழ் கிடத்தி-திருவடியின் கீழேகிடத்தி, அருள்-எல்லார்க்குங் கிருபை பண்ணுகின்ற, நடம் புரிந்த - திருநடஞ்செய்த, தேவர்நாயகன் - தேவர்நாயகன்.

(வி-ரை.) அருணடம்-அருளுதற்குக் காரணமாகிய நடம்; பஞ்சாக்கரமே திருக்கூத்தாதலின், "வயிறு நடுகடல் வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினை" என்றார் சிலப்பதிகாரத்தினும். எண்ணும்மை தொக்கது. இது பெயர்வினை கிரணிறை.

'ஒருநாள்' என்பதுமுதல் 'உட்பட்டோர்' என்பதுவரை.
(21—26 வரிகள்.)

(ப-ரை.) மூன்று புரம் - மூன்றுபுரமும், ஒருநாள் - ஒருநாளையில், தீக்கொளுவ - தீப்பற்ற, பொன்மலை பிடுங்கி - மகமேருவைப் பிடுங்கி, கார்முகம் என்ன வளைத்த-வில்லென வளைத்த, ஞான்று - அன்று, நெடு விண் தடைய - நெடியவாகாசம் வீழாது தடைபடும்படி, கால்கொடுத்தன்ன-காலாகக் கொடுத்தாற்போல, கந்திகள் நிமிர்ந்து - கமுகுகளுயர்ந்து, நெருக்கு-நெருங்காநின்ற, பொழில்-சோலை சூழ்சதற்கிடமாகிய, கூடல் அன்ன - மதுரைபோன்ற, செம்மகளிர் - அழகினையுடைய பெண்களுடைய, கண் எனும் தெய்வம் - கண்ணாகிய தெய்வத்தினது, காட்சியுள் பட்டோர்-தோற்றத்தி லகப்பட்டோர்.

(வி-ரை.) இம்மையுகமென்னு மகத்திற் காட்சியை அழகென்றமையா லழகிலகப்பட் டெனினுமாம். தெய்வம், சூரரமகளிர், அவர்கள் தங்களை வழிபட்டணைந்தாரை வருத்தாமையு மணையாதாரை வருத்துதலு முடைமையின் 'கண்ணெனுந் தெய்வம்' என்றார். இனைத்தெனவறிந்த வும்மை தொக்கது. நெருங்குதல் - நெருக்குதல், விகாரம். "ஓரசை அரிநிலை பெறாது" என்னு மகப்பாட்டில் தோற்றத்தைக் காட்சியென்றமையாற் காட்சி தோற்றமாயிற்று.

நிலைவல் லோரே.
(30—வது வரி.)

(ப-ரை.) நிலைவல்லோர் - நிற்றற்கு மாட்டாதார்.

(வி-ரை.) உள்ளம் பெறுமளவுந் தம்வயமன்றி மடல் வயத்தராய் நிற்றற்கு வல்லமையுடையோரெனப் பொருள்கூறிற் செய்யுளாய் மறையாகாது வழக்காய் உடன்பா டுணர்த்திற்று, "வேண்டுவனென்று சொன்னான் வில்வலான்" என்றாற்போல.

'வெண்பொடி' என்பதுமுதல் 'மீட்பர்' என்பதுவரை.
(27—30 வரிகள்.)

(ப-ரை.) வெண்பொடி பூசி - உள்ளம் பெறுதற்கு வேறுபாயமில்லாதவிடத்து திருநீற்றைப் பூசி, எருக்கம் அணிந்து - எருக்கம் பூவையணிந்து, என்பு பூண்டு-எலும்பினைப்பூண்டு, பனை பரி கடவி-பரியெனப் பனைமடலைச் செலுத்தி, கிழியினைக் கரத்ததாக்கி - கிழியைக் கையிற் பிடித்து, அங்கோ ஒருத்தி - அவளைப் பெறவேண்டுமென்னும் வருத்தமுடைய வுள்ளத்தை, மீட்பர்-தன்வயமாக்குவர்.

(வி-ரை.) அருத்தி - ஆகுபெயர்.

மகளிர் காட்சியா லகப்பட்டு நிற்றற்கு மாட்டாதார் பூசியணிந்து பூண்டு கடவியாக்கி யங்கோவையுடைய வுள்ளத்தை மீட்பரென வினைமுடிவு செய்க. (கூச)

திருக்கோவையார் களஉ-ம் செய்யுள்.

அல்லகுறி யறிவித்தல்.

அல்லகுறி யறிவித்தலென்பது — குறியல்லாத குறியெதிர்ப்பட்டு மீண்டமை, பிற்றைஞான்று தலைமகன் சிறைப்புறம் வந்து நிற்ப, தோழி தலைமகளுக்குக் கூறுவாள்போன்று, அன்னத்தின் மேல்வைத்து அறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மின்னங் கலருஞ் சடைமுடி யோன்வியன் றில்லையன்னா
யென்னங் கலமர லெய்திய தோவெழின் முத்தந் தொத்திப்
பொன்னங் கலர்புன்னைச் சேக்கையின் வாய்ப்புலம் புற்றுமுற்று
மன்னம் புலரு மளவுந் துயிலா தழுங்கினவே.

வல்லி யன்னவ ளல்ல குறிப்பா
டறைப்புனற் றுறைவற்குச் சிறைப்புறத் துரைத்தது.

(ப-ரை.) மின் அங்கு அலரும்-ஒளி யவ்விடத்துவிரியும், சடைமுடியோன் - சடையாணியன்ற முடியை யுடையவனது, வியன் தில்லை அன்னாய் - அகன்ற தில்லையை யொப்பாய், எழில் - எழிலையுடைய, முத்தம் தொத்தி - (அரும்பாகிய) முத்தந்தொத்தி, பொன் அங்கு அலர் புன்னை-அவ்விடத்துத் (தாதாகிய) பொன்மலரும் புன்னைக்கணுண்டாகிய, சேக்கையின் வாய்-தம் படுக்கையிடத்து, அன்னம் முற்றும் - அன்னமெல்லாம், புலம்புற்று - துன்புற்று, புலரும் அளவும் - புலருமளவும், துயிலாது - துயிலாது, அழுங்கின - ஆரவாரித்தன, அங்கு எய்தியது-அவ்விடத் தெய்தியதாகிய, அலமரல்-வருத்தம், என் - என்னும் (அறிகின்றிலேன்), எ - று.

(வி-ரை.) மின்னங்கலருமென்பதற்கு மின்னவ்விடத் தலர்ந்தாற்போலுஞ் சடை யெனினுமமையும். என்னங் கலமர லெய்திய தோ வென்பதற்கு என்ன அலமரல் ஆண்டெய்திற்றோவென்று கூட்டியுரைப்பினுமமையும். இப்பொருட்கு என்னவென்பது கடைக்குறைந்துநின்றது. முத்தந் தொத்துதலும் பொன்மலர்தலுமாகிய உறுப்பின்றொழில் முதன்மேலேறி நின்றன. சேக்கையின்வா யழுங்கினவென வியையும். நெடும்பொழுது துயின்றில வென்பாள் 'புலருமளவும்' என்றாள். பிற்றைஞான்று பகற்குறி வந்து நிற்பக் கூறினாளெனினுமமையும். அழுங்கல் - இரக்கமெனினுமமையும். அறைப்புனல்-அறைதலையுடைய புனல். மெய்ப்பாடு-அழுகை. பயன்-அல்லகுறிப்பட்டமை தலைமகற் குணர்த்துதல். இனித்திணை நெய்தல்.

நேரிசையாசிரியப்பா.

வற்றிய நரம்பி னெடுங்குரற் பேழ்வாய்க்
குழிவிழிப் பிறழ்பற் றெற்றற் கருங்காற்
றாளிப் போந்தின் றருமயிர்ப் பெருந்தலை
விண்புடைத் தப்புறம் விளங்குடற் குணங்கினங்
கானம் பாடிச் சுற்றிநின் றாடச்

சுழல்விழிச் சிறுநகைக் குடவயிற் றிருகுழைச்
சங்கக் குறுந்தாட் பாரிடங் குனிப்பத்
தேவர்கண் பனிப்ப முனிவர்வாய் குழறக்
கல்லவ டத்திரண் மணிவாய்த் தண்ணுமை
மொந்தைகல் லலசு துத்திரி யேங்கக்
கட்செவி சுழலத் தாழ்சடை நெறிப்ப
விதழிதா துதிர்ப்பப் பிறையமு துகுக்க
வெள்ளியம் பலத்துட் டுள்ளிய பெருமான்
கூடன் மாநக ரன்னை பொற்கொடி
யிரவிக் கண்ணிய வைகறை காறு
மலமர லென்னைகொ லறிந்திலம் யாமே
வெண்முத் தரும்பிப் பசும்பொன் மலர்ந்து
கடைந்தசெம் பவளத் தொத்துடன் காட்டு
மிரும்புக வைத்தன்ன கருங்கோட்டுப் புன்னைச்
சினைமுக மேந்திய வினர்கொள்வாய்க் குடம்பைபி
னெக்கர் புளினம் வெண்மையிட மறைக்குஞ்
சிறைவிரி தூவிச் செங்கா லன்னங்
குறும்பார்ப் பணைக்கும் பெடையொடு வெரீஇச்
சேவலு மினமுஞ் சூழுங்
காவின் மாறித் துயிலழுங் குதற்கே.

வற்றியநரம்பு - துயிலழுங்குதற்கே. பகுதி-இரவிற்குறி. துறை-அல்லகுறியறிவித்தல்.

'வற்றிய' என்பதுமுதல் 'நின்றாட' என்பதுவரை.

(1—5 வரிகள்)

(ப-ரை.) நெடுங்குரல் - மிகுந்த சத்தத்தினையும், பேழ் வாய் - பெரியவாயினையும், குழி விழி - குழிந்த கண்ணினையும், பிறழ் பல் - நிரையொவ்வாப் பல்லினையும், வற்றிய நரம்பின் - வற்றிய நரம்பினையும்,தெற்றற்கருங்கால்-தெற்றுதலையுடைய கரியகாலினையும்,தாளிப் போந்தின் - பனைத்தலை விரித்தாற்போல, தருமயிர் - விரிந்தமயிரினையுடைய, பெருந்தலை - பெரிய தலையினையும், விண்புடைத்தப் புறம் - விண்ணின்றும் புறம்புடைத்து, விளங்குடல்-விளங்காநின்ற வுடலினையுமுடைய, குணங்கினம் - பேய்கள், கானம்பாடி - கானத்தைப்பாடி, சுற்றி நின்றாட - சூழ்ந்து நின்றாட.

(வி-ரை.) எண்ணும்மை தொக்குடைய வென்பதனோடு முடிந்தது. கருமை பெருமையுமாம். தாளிப்பணை - பணைவிசேடம். போத்தின் றருமயிர்-தொழிலுவமம். புடைத்து-தட்டியெனினுமாம். காளமிசைப்பாட்டன்று.

'சுழல்விழி' என்பதுமுதல் 'குனிப்ப' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) சுழல் விழி-சுழன்ற கண்ணிணையும், சிறு நகை-சிறிய நகையினையும், குடவயிற்று - குடம்போன்ற வயிற்றினையும், இரு குழைச்சங்கம் - இரண்டு சங்கக் குழையினையும், குறுந்தாள் - குறிய தாளினையுமுடைய, பாரிடம் குனிப்ப - பூதமாட.

(வி-ரை.) குழைச் சங்கம் - பின்மொழி நிலையல்.

தேவர்கண் பனிப்ப.

(8—வது வரி.)

(ப-ரை.) தேவர் - தேவர்களெல்லாரும், கண் பனிப்ப-ஆநந்தமாகிக் கண்ணீர் சொரிய.

(வி-ரை.) கண் - ஆகுபெயர். பனிப்பவெனச் சினைவினை முதலோடு முடிந்தது, "குடமொழுகும்" என்றாற்போல நின்றதன்று.

முனிவர்வாய் குழற.

(8—வது வரி.)

(ப-ரை.) முனிவர்-இருடிகளெல்லாம், வாய்குழற-வாய்குழற.

(வி-ரை.) குழறவெனச் சினைவினை முதலோடு முடிந்தது.

'கல்லவடத்திரள்' என்பதுமுதல் 'ஏங்க' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) கல்லவடத்திரள்-கல்லவடத்திரளென்னும் வாச்சியமும், மணி வாய்-அழகிய வாயினையுடைய, தண்ணுமை-தண்ணுமையென்னும் வாச்சியமும், மொந்தை - ஒரு கட்பறையாகிய மொந்தையென்னும் வாச்சியமும், கல்லலசு - கல்லலசென்னும் வாச்சியமும், தத்திரி - தத்திரியென்னும் வாச்சியமும், ஏங்க - முழங்க.

(வி-ரை.) ஏங்கவெனக் கருவி கருத்தாவாய் நின்றது, "எங்கொலிநீர் ஞாலம்" என்றார் பிறரும்.

'கட்சேவிசுழல' என்பதுமுதல் 'போற்கோடி' என்பதுவரை.

(11—14 வரிகள்.)

(ப-ரை.) கட்செவி சுழல-புனைந்த பாம்பு சுற்ற, இதழி-கொன்றைமலர், தாது-தாதினை, உதிர்ப்ப-உதிர்ப்ப, பிறைஅமுது உருக்க-பிறை அமுதினைத் துளிப்ப, தாழ் - இவை தங்கிய, சடை நெறிப்ப - சடையானது நிமிரும்படி, வெள்ளியம்பலத்துள் - வெள்ளியம்பலத்தில், துள்ளிய-மாறியாடிய, பெருமான்-பெருமானுறையும், கூடன்மாநகரன்ன-கூடன்மாநகர்ப் பொலிவுபோன்ற, பொற்கொடி-பொலிவினையுடையாய்.

(வி-ரை.) கட்செவி, பொற்கொடி-அன்மொழித்தொகை. சுழல உதிர்ப்ப உருப்ப நெறிப்ப என்பன "குளநிறைய மழைபெய்தது" போல நின்றன.

சூழுங் காவின்.

(24—25 வரிகள்.)

(ப-ரை.) சூழும் காவில் - நாஞ்சூழ்ந்து விளையாடுதற் கிடமாய காவிடத்தில்.

'எக்கர்' என்பதுமுதல் இனமும் என்பதுவரை.

(21—24 வரிகள்.)

(ப-ரை.) எக்கர் - இடுமணலாகிய, புளினம் - மணற்குன்றின், வெண்மையிட மறைக்கும் - நிறந்தெரியாது மறைக்கும், சிறை-சிறகினையும், விரி தூவி - விரிந்த சூட்டினையும், செம் கால் - செவ்விய காலினையுடைய, அன்னச்சேவலும் - அன்னச்சேவலும், இனமும் - அதனினமும், குறும்பார்ப்பு அணைக்கும்-குறியபார்ப்பினையணைக்கும், பெடையொடு - பெடையொடு, வெரீஇ - வெருவி.

(வி-ரை.) ஒடுவொருவினை, எண்ணொடுவுமாம்.

இரவிக் கண்ணிய வைகறை காறும்.

(15—வது வரி.)

(ப-ரை.) இரவிக் கண்ணிய - ஆதித்தனுதிக்கும், வைகறை காறும் - விடியற்காலமளவும்.

(வி-ரை.) இரவி-ஆகுபெயர். கங்குல் வைகிய வறுதியாதலின் 'வைகறை' என்றார்.

'வெண்முத்தரும்பி' என்பதுமுதல் 'குடம்பையின்' என்பதுவரை.

(17—20 வரிகள்.)

(ப-ரை.) வெண்முத்து அரும்பி - அரும்பாகிய வெண்முத்தரும்பி, பசும்பொன் மலர்ந்து-தாதாகிய பசியபொன் மலர்ந்து, கடைந்த-பூங்கொத்தாகிய வொப்பமிட்ட, செம்பவளத் தொத்துடன் காட்டும் - செம்பவளக் கொத்தெல்லாங் காட்டும், இரும்புகவைத்தன்ன-இரும்புகவை பட்டாற்போன்ற, கருங்கோட்டு - கரிய கோட்டினையுடைய, புன்னை - புன்னையினது, சினைமுகம் - கொம்பிடத்தில், எந்திய - வாயாலெடுத்த, இணர்கொள்வாய்க் குடம்பையின் - மலராற் சேக்கையாகக்கொண்ட கூட்டினிடத்து.

(வி-ரை.) அரும்புதலும் மலர்தலும் காட்டுதலுமாகிய வுறுப்பின்றொழின் முதன்மேலேறி நின்றன. ஒப்பமிட்ட பவளமும் பொன்னு முத்துடனரும்பி யலர்ந்தாற்போன்ற பூங்கொத்தினைக் காட்டுதற் கிடமாகிய வெனினுமாம். அது மலர்ந்தவென்பது "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை"என்றாற்போல மலர்ந்தென விகாரமாய்க் "குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடை" என்றாற்போல நின்றது. "முத்தொடு பொன்பவள மழுத்த முப் புன்னைக்கீழ்" என்றார் சிற்றகத்தியத்தினும். "காவிற்கூ டடுக்கிய கவ்விக்கொண் டிருந்தன" என்று சிந்தாமணியிற் கூறியவதனு லன்னம் பூவாற் கூடெடுத்தல் பெற்றாம்.

மாறித் துயிலழுங் குதற்கே.

(25—வது வரி.)

(ப-ரை.) மாறித்துயிலழுங்குதற்கு - துயில் கொள்ளாதாரவாரித்தற்கு.

(வி-ரை.) எகாரம் - ஈற்றசை. அழுங்கல் - இரக்கமுமாம்.

அலமர லென்னைகொ லறிந்திலம் யாமே.

(16—வது வரி.)

(ப-ரை.) அலமரல் - அவ்விடத்தெய்திய அலமரல், என்னை கொல் - என்னும், அறிந்திலம் யாமே - யாமறிகின்றிலம்.

(வி-ரை.) கொல் - அசை.

பொற்கொடி சூழுங்காவி லன்னமு மினமும் பெடையொடு வெருவிப் புலருமளவுங் கூட்டிற் றுயில்கொள்ளா தாரவாரித்தற் கவ்விடத்தெய்திய வலமரலென்னு மறிகின்றிலமென வினைமுடிவு செய்க. புலருமளவுமென்றது - பிற்றைஞான்று பகற்குறி வந்து நிற்பக் கூறிஞளெனினுமாம். (கூ௫)

திருக்கோவையார் கக-ம் செய்யுள்.

நலம்புனைந்துரைத்தல்.

நலம்புனைந் துரைத்தலென்பது — கிளவி வேட்டு வருந்தக் கண்ட தலைமகள் மூரன் முறுவல் செய்ய, தலைமகன் அது பெற்றுச் சொல்லாடாமையா னுண்டாகிய வருத்த நீங்கி, நுமதகன்ற மருத நிலத்துக் குறிஞ்சிநிலத்து இவள் வாய்போல நாறும் ஆம்பற் பூக்களுளவோவென அந்நிலத்து வண்டோடு வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரிற்
றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ டீங்கனி வாய்கமழு
மாம்பலம் போதுள வோவளி காணும் மகன்பணையே.

போங்கிழையைப் புனைநலம்புகழ்ந்
தங்கதிர்வேலோ னயர்வுநீங்கியது.

(ப-ரை.) அளிகாள்-வண்டுகாள், நும் அகன் பணை-நுமதகன்ற மருதநிலத்து, கூம்பு கைத்தலத்து-கூம்புங் கைத்தலங்களையுடைய, அன்பர்-அன்பரது, என்பு ஊடுருக - என்பு முள்ளுருக, குனிக்கும் - கூத்தாடாநின்ற, பாம்பு அலங்காரம்-பாம்பாகிய வணியையுடைய, பரன் - பரமனது, தில்லையம்பலம்-தில்லையம்பலத்தை, பாடலரின் - பாடாதாரைப்போல, தேம்பு சிறு இடை-தேம்புஞ் சிறிய விடையை யுடைய, ஈங்கிவள் - இவளது, தீம் கனி வாய்-இனியதாகிய கனிந்த வாய்போல, கமழும் - நாறும், ஆம்பல்போது உளவோ-ஆம்பற் பூக்களுளவோ சொல்லுமின், எ - று.

(வி-ரை.) அல்லும் அம்மும் அல்வழிச்சாரியை. பாம்பலங்காரம் மெலிந்து நின்றது. ஈங்கிவளென்பது ஒருசொல். கனிவாய்-கனிபோலும் வாயெனினு மமையும். புனைநலமென்றது புனையப்பட்ட வியற்கைநலத்தை. அயர்வு நீங்கியது - சொல்லாடாமையி னுண்டாகிய வருத்த நீங்கியது. மெய்ப்பாடு - உவகை. பயன்-நயப்புணர்த்து

தல். இயற்கையன்பினாலும் அவள் குணங்களாற் றோன்றியசெயற்கை யன்பினானும் கடாவப்பட்டு நின்ற தலைமகன் றனதன்பு மிகுதியை யுணர்த்துதல் நயப்புணர்த்துத லென்பது.

நேரிசையாசிரியப்பா.

அருடருங் கேள்வி யமையத் தேக்கப்
பற்பல வாசான் பாங்குசெல் பவர்போன்
மூன்றுவகை யடுத்த தேன்றரு கொழுமலர்
கொழுதிப் பாடுங் குணச்சுரும் பினங்கா
ளுளத்துவே றடக்கி முகமன் கூறுது
வேட்கையி னீயிர் வீழ்நாட் பூவினத்துட்
காருடற் பிறையெயிற் றரக்கனைக் கொன்று
வச்சிரத் தடக்கை வரைப்பகை சுமந்த
பழவுடற் காட்டுந் தீராப் பெரும்பழி
பனிமலை பயந்த மாதுடன் றீர்த்தருள்
பெம்மான் வாழும் பெருநகர்க் கூட
லொப்புறு பொற்றொடிச் சிற்றிடை மடந்தைதன்
கொலையின ருள்ளமுங் குறைகொள விருண்டு
நான நீவி நாண்மலர் மிலைந்து
கூடி யுண்ணுங் குணத்தினர் கிளைபோ
னீடிச் செறிந்து நெய்த்துடல் குளிர்ந்த
கருங்குழற் பெருமணம் போல
வொருங்கு முண்டேல் பேசுவி ரெமக்கே.

அருடருங் கேள்வி-பேசுவிரெமக்கே. பநதி - இயற்கைப்புணர்ச்சி. துறை-நலம்புனைந்துரைத்தல்.

'அருடரும்' என்பதுமுதல் 'சுரும்பினங்காள்' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(ப-ரை.) அருடரும் - கற்றவறிவன்றி அருளை விளைக்கும், கேள்வி - கேள்வியாலாய வறிவினை, அமைய தேக்க - நிறைத்தடங்கும்படி, பற்பல ஆசான் - பலபலவாசாரியன், பாங்கு - இடத்து, செல்பவர்போல்-சென்று கேட்கின்றவர்போல, மூன்றுவகையடுத்த தேன்றரு - உண்டதேனன்றிப் பலமலர் தருந்தேனை யுண்டமை

யும்படி சோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூவென்னு மூன்று வகையாக வடுத்த, கொழுமலர்-கொழுவிய மலர்களை, கொழுதிபாடும்-கோதிப் பாடாநிற்கும், குணம் - குணத்தினையுடைய, சுரும்பினங்காள் - வண்டினங்காள்.

(வி-ரை.) உண்ட தேனுக்குக் கற்றவறிவுவமை அது வருவிக்கப்பட்டது. மலர்த்தேனுக்குவமை கேள்வியானுயவறிவு. கேள்வி-ஆகுபெயர். மூவகைப் பூவிற்கும் பலவாசிரிய ருவமை. தேக்கியமைவரவென்பதனைப் பொருட்குங் கொள்க. செல்பவரெனக் காரியமாகக் கூறினர். மயக்கத்தா னெதிர்காலச்சொல் நிகழ்கால முணர்த்திற்று, “நறைப்பாடலம் புனைவார் நினைவார்”என்றாற்போல ஆசிரியனென்ப தொருமைப் பன்மை மயக்கம். கேட்கின்றார்-மகிழ்ச்சியெய்தினாற்போலப் பாடும்வண்டு மகிழ்ச்சியெய்துமெனத் தொழிலுவமங் கொள்ளக்கிடந்தது,“இணருழ்த்து நாறுமலரனையர் கற்றதுணரவிரித்துரை யாதார்” என்றாற்போல.

‘உளத்துவேறடக்கி’ என்பதுமுதல் ‘நாட்பூவினத்துள்’ என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) உளத்து வேறடக்கி-ஒரு நிலத்து வண்டாயினு மநத்தினடுவாகக் கண்டிருக்க, வேட்கையின் - வேட்கையாக, முகமன் கூறாது - முகமன் சொல்லாது, நீயிர்வீழ் - நீங்கள் சேரத்தங்கும், நாட்பூ இனத்துள் - நாண்மலர்க் கூட்டத்துள்.

(வி-ரை.) இதனால் நிலமொன்றுதல் பெற்றாம்.

‘காருடல்’ என்பதுமுதல் ‘பெரும்பழி’ என்பதுவரை,

(7—9 வரிகள்.)

(ப-ரை.) காருடல் - கரிய வுடலினையும், பிறை எயிறு - பிறைபோன்ற வெயிற்றினையுமுடைய, அரக்கனை - அரக்கனை,கொன்று - கொன்றதினால், வச்சிரம் - வச்சிராயுதத்தையுடைத்தாய, தடக்கை - தடக்கையினையுடைய, வரைப்பகை-இந்திரன், சுமந்த - சுமந்தும், பழவுடல் - பழைய வடிவினை, காட்டும்-காட்டுதற்குக்காரணமாகிய, தீரா பெரும்பழி - தீராத பெரும்பழியினை.

(வி-ரை.) பழவுருக் காட்டுதல் - கொல்லப்பட்ட வடிவத்தைக் காட்டுதல். தீராப்பழி-ஒரு காலத்தினுந் தீராத பிரமகத்தி வீரகத்திகாதலின் ‘பெரும்பழி’ என்றார். உம்மை - சிறப்பும்மை.

'பனிமலை' என்பதுமுதல் 'எமக்கே' என்பதுவரை.
(10—18 வரிகள்.)

(ப-ரை.) பனிமலை பயந்த-இமயவரைபெற்ற, மாதுடன்-உமையுடன்கூடி, தீர்த்தருள்-தீர்த்தருள் செய்யாநின்ற, பெம்மான் வாழும்-பெம்மான் வாழாநிற்கும், பெருநகர்-பெரிய நகராகிய, கூடல்ஒப்புறு-மதுரையைப்போலும், சிறு இடை - சிற்றிடையினையும், பொன்தொடி-பொன்னாற்செய்த தொடியினையுமுடைய, மடந்தைதன்-மடந்தைதனது, கொலையினர் உள்ளமும் - கொலைசெய்வாருள்ளமும், குறைகொள - குறைய, இருண்டு-இருண்டு, நானம் நீவி-புழுகினைப் பட்டு, நாள் மலர் - காலத்துக்கேற்ற மலர்களை, மிலைந்து-அணிந்து, கூடி உண்ணும் - இருவகை விருந்தினரையுங் கூட்டி நுகர்தற்குக் காரணமாகிய, குணத்தினர்-குணத்தினையுடையார், கிளைபோனீடி - கிளைநீண்டாற்போனீண்டு, செறிந்து - செறிந்து, நெய்த்துடல் குளிர்ந்த - நெய்த்துடல் குளிர்ச்சிபெற்ற, கரு குழல் - கரிய குழலில், பெருமணம்போல-மிகுந்த வாசம்போல, ஒருங்குமுண்டேல்-மணக்கும் பூக்களுண்டாயின், பேசுவிர் எமக்கு - நீங்களெமக்குச் சொல்வீராக.

(வி-ரை.) இருவகை யன்பினானுஞ் சொல்லப்பட்டு நின்ற தலைமகன், அவள்பெருநாணினளாதலி னன்பு மிகுதியை யுவகையினால் வண்டொடு கூறினானென்க. "இது நோயுமின்பமும்" என்னுஞ் சூத்திரத்தா னழுகைபற்றிக் கூறியதன்று. "வண்டுந் தும்பியும் நான்கறி வினவே, பிறவுமுளவே யக்கிளைப் பிறப்பே" என்னுஞ் சூத்திரத்தில் நான்கறிவன்றி யையறிவு கூறிற்றிலரேனும் வாராததனால் வந்துமுடித்தலென்னு முத்தியாற் பிற்கூறிய "மாவுமாக்க ளுமையறி வென்ப" என்னுஞ் சூத்திரத்திற் செவியறிவுங் கூறினார்.

ஆதலின் முன்னிலையாக்கினார். "மங்கை நல்லவர் கண்ணு மனமும் போன் றெங்குமோடி யிடறுஞ் சுரும்புகாள் வண்டுகாள் மகிழ்தேனினங்காள் மதுவுண்டு தேக்கிடு மொண்மிஞிறீட்டங்காள்" என்றாற்போல.

சுரும்பினங்காள்! முகமன் கூறாது நீங்கள் சோத்தங்கு நாட்பூவினுண் மடந்தை தன் குழற் பெருமணம்போல வுண்டேலெமக்குப் பேசுவீரென வினைமுடிவுசெய்க. (கூ௫)

திருக்கோவையார் உ0வு-ம் செய்யுள்:

நாணிழந்து வருந்தல்.

நாணிழந்து வருந்தலென்பது—உடன்கொண்டு போகைக்குக் காரணங் கேட்ட தலைமகள், ஒருநாளு மென்னைவிட்டு நீங்காது என்னுடனே வதிந்த பொலிவுடைத்தாகிய நாண் கற்பினெதிர் நிற்கமாட்டாது தன்னைவிட்டு நிற்காத என்னைக் கழிவதாக மகளிர் எழுபிறப்பின்கண்ணுங் குடியிற் பிறவா தொழிகவெனத் தானதற் குப் பிரிவாற்றாமையான் வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மற்பாய் விடையோன் மகிழ்புலி யூரென் னொடும்வளர்ந்த
பொற்பார் திருநாண் பொருப்பர் விருப்புப் புகுந்துநுந்தக்
கற்பார் கடுங்கால் கலக்கிப் பறித்தெறி யக்கழிக
விற்பாற் பிறவற்க வேழையர் வாழி யெழுமையுமே.

கற்பு நாணினு முற்சிறந் தமையிற்
சேணெறி செல்ல வாணுத றுணிந்தது.

(ப-ரை.) மல் - வளத்தையுடைய, பாய்-பாயும், விடையோன் - விடையையுடையவன், மகிழ் - விரும்பும், புலியூர் - புலியூரில், என் னொடும் - என்னோடுந்தோன்றி, வளர்ந்த-என்னோடொக்க வளர்ந்த, பொற்புஆர்-பொலிவார்ந்த, திருநாண்-திருவையுடைய நாண், பொரு ப்பர் – பொருப்பர்மேல் யான்வைத்த, விருப்பு-விருப்பம், புகுந்து - இடையே புகுந்து, நுந்த - தள்ளநின்றநிலைகுலைந்து, கற்பார் - கற்பாகிய நிறைந்த, கடுங்கால் - கடியகாற்று, கலக்கி – அலைத்து, பறித்து - பிடுங்கி, எறிய - என்வயிற் கிடவாமைப் புறத்தெறிய, கழிக - என்னைக் கழிவதாக, ஏழையர் - ஆகலான் (இனி) மகளிர், எழுமையும் - எழுபிறப்பின்கண்ணும், இற்பால் - குடியில், பிற வற்க - பிறவாதொழிக, எ – று.

(வி-ரை.) நாண்கழிக வெனவியையும். வாழி - அசைநிலை. 'கற் பாங் கடுங்கால்' என்பதூஉம் பாடம். முற்சிறந்தமையின்-முன்னெ ண்ணச் சிறந்தமையின். மல்லல் மல்லெனக் கடைக்குறைந்து நின் றது. மெய்ப்பாடு - அது. பயன்-உடன்போக்குவலித்தல்.

நேரிசையாசிரியப்பா.

மைகுழைத் தன்ன தொள்ளியஞ் செறுவிற்
கூர்வாய்ப் பறைதபு பெருங்கிழ நாரை

வஞ்சனை தூங்கி யார லுண்ணு
நீங்காப் பழனப் பெருநகர்க் கூடற்
கரமான் றரித்த பெருமா னிறைவன்
பொன்பழித் தெடுத்த வின்புறு திருவடி
யுளம்விழுங் காத களவினர் போலவென்
னுயிரொடும் வளர்ந்த பெருநாண் டறியினை
வெற்பன் காதற் காலுலை வேலையின்
வலியுடைக் கற்பி னெடுவெளி சுழற்றிக்
கட்புலங் காணாது காட்டைகெட வுந்தலி
னென்போ லிங்நிலை நீன்றவர் படைக்கும்
பேருங் கொழிக பெருநாண் கற்பின
ரெற்பே றுடைய ராயிற்
கற்பிற் றோன்றாக் கடனா குகவே.

மைகுழைத்தன்ன - கடனாகுகவே. பகுதி - உடன்போக்கு, துறை - நாணிழந்துவருந்தல்.

'மைகுழைத்தன்ன' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை.
(1—4 வரிகள்.)

(ப-ரை.) மை குழைத்தன்ன-மையினைக் குழைத்தாற்போன்ற, தொள்ளியஞ் செறுவில் - கருஞ்சேற்றினையுடைய வழகிய வயலிடத்தில், பறைதபு - பறத்தலில்லாத, பெரு கிழநாரை - பெரிய கிழட்டு நாரை, வஞ்சனை - வஞ்சனையாக, தூங்கி - தூங்கியிருந்து, நீங்கா - வாய்த்தவழி நீங்காது, கூர் வாய்-கூரிய வாயினால், ஆரல் உண்ணும்-ஆரன்மீனை நுகர்தற்கிடமாகிய, பழனம் - மருதநிலஞ்சூழ்ந்த, பெரு நகர் - பெரிய நகராகிய, கூடல் - மதுரையிடத்து.

(வி-ரை.) பறைதபுநாரை - சிறகுதிர்ந்த நாரை யெனினுமாம். வஞ்சனையாகத் தூங்கல் - ஆரல் வந்தெய்துமளவுமிருந்து பிழையாம லுறங்குவனபோலத் தூங்கல். வாய்த்த வழியென வொருசொல் வருவிக்க. நீங்காதென்பது நீங்காவென நின்றது.

'கரமான்றரித்த' என்பதுமுதல் 'களவினர்போல' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) கரம் மான் தரித்த - கையின் மானைத்தரித்த, பெருமான்-பெருமான், இறைவன்-இரணியவன்மன், பொன் - செல்வத்

தினை, பழித்து - வெறுத்து, எடுத்த-உயர்த்த, இன்புறு - இன்பம் பெறுதற்குக் காரணமாகிய, திருவடி - திருவடியை, உளம் விழுங்காத-உள்ளத்தடக்காத, களவினர்போல - கூடாவொழுக்கத்தாரை நீக்குதல்போல.

(வி-ரை.) பெருமானது திருவடியெனவியையும். இறைவனதடியென்னிற் பொன்னைப்போன்றுயர்ந்த வடியென்க.

'என்னுயிரோடும்' என்பதுமுதல் 'வேலையில்' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) என் உயிரொடும் - என்னுயிரோடு கூடி, வளர்ந்த - வளரவந்த, பெருநாண்-பெரிய நாணாகிய, தறியினை-தூணினை, வெற்பன் - தலைவன்மேல், காதல்-(யான் வைத்த) காதலாகிய, காலுலை-காற்றுலைக்கும், வேலையில் - பொழுதில்.

'வலியுடை' என்பதுமுதல் 'உந்தலின்' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) வலியுடை - அந்நாணினும் வலியுடைய, கற்பின்-கற்பாகிய, நெடு வளி-பெருங்காற்று, சுழற்றி-சுற்றி, கட்புலம் காணாது-மிகவுமென்னிடத்திற் காணாது, காட்டை-காட்டையென்னுங் காலத்தில், கெட - கெடும்படி, உந்தலின் - புறத்துத் தள்ளுதலால்.

(வி-ரை.) கட்புலம்-மீமிசைபோன்றது. கணமெட்டுக்கொண்டது இலவம். இலவமெட்டுக்கொண்டது காட்டை யென்க.

'என்போல்' என்பதுமுதல் 'ஆங்கொழிக' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) என்போல் - என்னைப்போல, இந்நிலை நின்றவர் - நாணழியு நிலையுணின்றவர், படைக்கும் பேறு - படைத்ததனால் வரும் பிறவியிடத்துய்ய, ஆங்கு ஒழிக - ஐயோ குடியிற் பிறத்தலொழிக.

(வி-ரை.) படைக்கும் பேறெனவே பிறவியாயிற்று.

'பெருநாண்' என்பதுமுதல் 'கடனாகுகவே' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) பெருநாண் கற்பினரெற்பேறுடையார் ஆயின் - என்னைப்பெற்றவர் பெருநாணோடு கூடிய கற்பினையுடையாராயின், கற்பிற்றோன்றி - கற்பிறத்தலையுடைய குடியிற் பிறந்த, கடனாகுகவே-

முறைமையையுடையராக, கற்பினெதிர் நிற்கமாட்டாத நாண் பிரிய அதற்காற்றாமையான் வருந்தாநின்றாள்.

(வி-ரை.) களவினரை நீக்குதல்போல நாணுகிய தூணினைக் காதலாகிய காற்றுலைக்கும்போதிற் கற்பாகிய காற்றுத் தள்ளுதலால் என்னைப்போன்றவர் பிறவியிடத்து ஐயோ ஐயோ குடியிற் பிறத்தலொழிக, என்னைப் பெற்றவருடையராயிற் குடியிற் பிறந்த முறைமையை யுடையராகுகவென வினைமுடிவு செய்க. (கூஎ)

திருக்கோவையார் கூஎகூ-ம் செய்யுள்.

தோழியியற்பழித்தல்.

தோழியியற்பழித்த லென்பது—பாணன் வரவுரைத்த தோழி, இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால் எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந்திலனெனத் தலைமகனை யியற்பழித்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

திக்கினி லங்குதிண் டோளிறை தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கி னிறகத ணிந்துநின் றாடிதென் கூடலன்ன
வக்கின் னகையிவ ளையவ யல்வயி னல்குதலாற்
றக்கின் றிருந்தில னின்றசெவ் வேலெந் தனிவள்ளலே.

தலைமகனைத் தகவிலனெனச்
சிலைநுதற்பாங்கி தீங்குசெப்பியது.

(ப-ரை.) திக்கின் - திக்கின்கண், இலங்கு - விளங்காநின்ற, திண் தோள் - திண்ணிய தோள்களையுடைய, இறை - இறைவன், தில்லைச்சிற்றம்பலத்து - தில்லையிற்சிற்றம்பலத்தின்கண், கொக்கின் இறகு அணிந்து - கொக்கினிறகதனையணிந்து, நின்றாடி - நின்றாடுவான், தென் கூடல் அன்ன - (அவனது) தெற்கின்கணுண்டாகிய கூடலையொக்கும், அக்கு - அக்குமணிபோலும், இன்னகை இவள் - இனிய நகையையுடையவிவள், நைய - வருந்த, அயல்வயின் - அயலாரிடத்து, நல்குதலால் - நல்குதலால், நின்ற-எல்லாரானு மறியப்பட்டு நின்ற, செவ்வேல் - செவ்வேலையுடைய, எம் - எம்முடைய, தனி வள்ளல் - ஒப்பில்லாத வள்ளல், தக்கு இன்று இருந்திலன் - இன்று தக்கிருந்திலன், எ-று.

(வி-ரை.) அயல்வயி னென்பதற்குப் பொருணசை யுள்ளத்தராகலிற் காமத்திற்கயலென் றுரைப்பினு மமையும். தலைமகனது தகவின்மை யென்பதூஉம் பாடம்.

நேரிசையாசிரியப்பா.

வடமீன் கற்பினெம் பீடுகெழு மடந்தை
பெருங்கடன் முகந்து வயிறுநிறை நெடுங்கார்
விண்டிரிந்து முழங்கி வீழா தாகக்
கருவொடு வாடும் பைங்கூழ் போலக்
கற்புநாண் மூடிப் பழங்கண் கொள்ள
வுயர்மர முளைத்த வூரி போல
வோருடல் செய்து மறுமனங் காட்டு
மாணிழை மகளிர் வயினல் குதலாற்
கருமுகிற் கணிநிறத் தழற்கட் பிறையெயிற்
றரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச்
செங்கோன் முளையிட் டருணீர் தேக்கிக்
கொலைகளை யென்னும் படர்களை கட்டுத்
திக்குப் படரா ணைவேலி கோலித்
தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கு
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்
முள்ளுடைப் பேழ்வாய்ச் செங்கண் வராலினம்
வளைவாய்த் தூண்டிற் கருங்கயிறு பரிந்து
குவளை பாசடை முண்டக முழக்கி
நெடுங்கால் பாய்ந்து படுத்த வொண்டொழிற்
சுருங்கைவழி யடைக்கும் பெருங்கழிப் பழனக்
கூடற் கிறைவ னிருதாள் விடுத்த
பொய்யினர் செய்யும் புல்லம் போலப்
பேரா வாய்மை யூரன்
றூரொடு மயங்கிப் பெருமையு மிலனே.

வடமீன்கற்பின் - பெருமையுமிலனே. பகுதி - பரத்தையிற் பிரிவு. துறை - தோழியியற்பழித்தல்.

'வடமீன்' என்பதுமுதல் 'கொள்ள' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை.) பெருங்கடல்-பெரிதாகிய சமுத்திரத்தை, முகந்து - முகத்தற்குக் காரணமாகிய, வயிறு நிறை -வயிறு நிறைந்த, நெடுங்

கார்-நெடிய மேகம், விண் திரிந்து-விண்ணிற் சஞ்சரித்து, முழங்கி - முழங்கி, வீழாதாக - பெய்யாதிருக்க, கருவொடு - கருவோடுகூடி, வாடும் - வாடும், பைங்கூழ்போல - பயிர்போல, வடமீன் - அருந்ததியின், கற்பின் - கற்பினையுடைய, எம் - எமது, பீடு கெழு-பெருமைபொருந்திய, மடந்தை - மடந்தையானவள், கற்பு நாண் மூடி - பெருமிதம்பொருந்திய கற்பு நாணு மேலிடாதென, பழங்கண் கொள்ள - மெலிய.

(வி-ரை.) கற்பு நாணு மேலிடின் வருந்துதலின்மையி னடக்கங் கூறினர். பெய்யாது வாடினாற்போல மேலிடாது மெலியவென்றமையிற் றொழிலுவமம்.

'பேராவாய்மை' என்பதுமுதல் 'மயங்கி' என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை.) வாய்மை பேரா ஊரன் - வாய்மை தவறுதலூரன், தாரொடு மயங்கி - இன்பத்தளவுடனே மயங்கி.

(வி-ரை.) பேராவாய்மை - பிறிதோருயிர்க்குத் தீங்கு சிறிதும் பயவாத சொன்னிலை. இது இகழ்ச்சிக் குறிப்பு. ஒடு - உடனிகழ்ச்சி.

'உயர்மரம்' என்பதுமுதல் 'நல்குதலால்' என்பதுவரை.
(6—8 வரிகள்.)

(ப-ரை.) உயர் மரம் - உயர்ந்த மரத்தில், முளைத்த - ஒன்றுபட்டதின்வேறுகாட்டித் தோன்றிய, ஊரிபோல - ஊரிபோல (கல்லுருவிபோல), ஒருடல் செய்து - (கூடினுருடன்)வேறுபடாதொன்றுபட்டு, மறுமனம் காட்டும்-வேறு மனம் வைக்கும், மாண் இழை-மாட்சிமையுடைத்தாய விழையினையுடைய, மகளிர் வயின்-பரத்தையரிடத்து, நல்குதலால் - அருள் செய்தலால்.

(வி-ரை.) மரம்: உயர்ச்சியானுமெல்லாப்பொருட்கு நிழலானுமடைந்தபொருளைத் தாங்குதலானுந் தலைவற் குவமை. ஊரி-ஒன்றுபட்டுத் தன்னை வேறு காட்டுதலாற் பரத்தையர்க் குவமை.

'கருமுகிற்கு' என்பதுமுதல் 'பன்னிரண்டினை' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) கருமுகிற்கு-கரிய முகிலினிறம்போல, அணி நிறம் - நிறைந்த நிறத்தினையும், தழல் கண் - தழல்போலுங் கண்ணினையும், பிறை எயிறு - பிறை வளைந்தாற்போல வளைந்த கொம்பினையு

முடைத்தாய, அரிதரு குட்டியாய - பன்றியின் குட்டியாகிய, பன்னி ரண்டினை - பன்னிரண்டினையும்.

(வி-ரை.) முற்றும்மை தொக்கது.

'செங்கோல்' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.
(11—15 வரிகள்.)

(ப-ரை.) செங்கோல் - செங்கோல்போலச் செவ்விய முறை மையாகிய, மூளையிட்டு - மூளையினை வித்தி, அருள் நீர் தேக்கி-அருளாகிய நீரைநிறைத்து, கொலை களவு என்னும்-கொலையுங்களவுமாகிய, படர் களை கட்டு - மிகுந்த களையைப்பறித்து, திக்குப்படர் ஆணை - திக்கெங்குஞ் செல்லுமாக்கினையாகிய, வேலி கோலி - வேலியையிட்டு, தருமப்பெரும்பயிர் - தருமமாகிய பெரும்பயிரினை, உலகு பெற விளைக்கும் - உலகமாகிய செய்யிற் பயன்பெற விளையப்பண்ணும், நாற்படை-நாற்படையினையுடைய, வன்னியராக்கிய-வன்னியராக்கிய, பெருமான் - பெருமான்.

(வி-ரை.) உருவக அவயவியை வாளாது கூறி அவயவத்தை யுருவகஞ்செய்தமையின் செங்கோலெனவுவமையின் பெயர்பொருண் மேனின்றது. பன்னிரண்டினையும் வன்னியராக்கிய வெனவியையும்.

'முள்ளுடை' என்பதுமுதல் 'புல்லம்போல' என்பதுவரை.
(16—22 வரிகள்.)

(ப-ரை.) முள் உடை - முள்ளினையுடைய, பேழ் வாய்-பெரிய வாயினையும், செம் கண்-சிவந்த கண்ணினையுமுடைய, வரால் இனம்-வராலின் கூட்டங்களானவை, வளை வாய்-வளைந்த வாயினையுடைய, தூண்டில்-தூண்டிலிலிட்ட, சருங்கயிறு-பெரிய கயிற்றினை, பரிந்து-அறுத்து, குவளை - குவளையினது, பாசடை - பசியவிலையினையும், முண்டகம் - தாமரையையும், உழக்கி-கலக்கி, நெடுங்கால் - நெடிய வாய்க்கால்களில், பாய்ந்து - குதித்து, படுத்த-நீர்பாயவுண்டாக்கிய, ஒள்தொழில் - நுண்ணிய தொழிலினையுடைய, சுருங்கை வழி - மதகின் வழியை, அடைக்கும்-(நீர் பாயாது) மறித்தற்கிடமாகிய, பெருங்கழி - மிகுந்த சிறப்பினையுடைய, பழனம் - மருதநிலஞ்சூழ்ந்த, கூடற்கு - மதுரைக்கு, இறைவன் - தலைவனானவன், இருதாள்-இருதிருத்தாளில், விடுத்த - பற்றுவிட்டதனால் வந்த, செய்யும்பொய்யினர் - கீழ்மைக் குணஞ்செய்யும் பொய்யினர்க்கு, புல்லம்போல - பெருமையில்லாததுபோல.

(வி-ரை.) வரால் - ஓர்வகைமீன். கருமை - பெருமை. விடுத்த-காரணப்பொருட்டாகிய பெயரெச்சம். புல்லம் என்பதில் அம் பண்புப்பெயர், விகுதி (புன்மை).

பெருமையு மிலனே.

(24—வது வரி.)

(ப-ரை.) பெருமையும் இலன் - பெருமையுமிலனாயினான்.

(வி-ரை.) பெருமை - பழியும் பாவமு மஞ்சுதல். (௩௮)

திருக்கோவையார் ௧௮௮-ம் செய்யுள்.

பொழுதுகண்டு மயங்கல்.

பொழுதுகண்டு மயங்கலென்பது—சுடரொடு புலம்பாநின்றவள், கதிரவன் மறைந்தான், காப்பவர் சேயர், அதன்மேலிவ்விடத்து மீனுண்ட வன்னங்களும் போய்த் தஞ்சேக்கைகளை யடைந்தன, இனியானாற்றுமா றென்னோவென மாலைப்பொழுதுகண்டு மயங்காநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கைக ணோக்கினவா
லகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே.

மயறரு மாலை வருவது கண்டு
கயறரு கண்ணி கவலை யுற்றது.

(ப-ரை.) பகலோன் - கதிரவன், கரந்தனன் - மறைந்தான்; காப்பவர் சேயர் - (இம்மாலைக்காலத்து வருந்துன்பத்தைக்) காக்குமவர் சேயராயிருந்தார்; (அதுவேயுமன்றி) அகல் ஓங்கு இரும் கழிவாய் - அகன்று நீருயர்ந்த பெரிய கழியிடத்து, கொழுமீன் உண்ட-கொழுமீனையுண்ட, அன்னங்கள்-அன்னங்கடாமும், (இவ்விடத்தை விட்டு) பற்று அற்றவர்க்கு-புலன்களிற் பற்றற்றவர்க்கு, புகலோன்-புகலிடமாயுள்ளவன், புகுநர்க்கு-தன்கட் புகுவார்க்கு, போக்கு அரியோன் - பின்போதரவரியவன், எவரும் புகல-எல்லாருமேத்த, தகலோன்-தகுதலையுடையவன், பயில்-(அவன்)பயிலும், தில்லை-தில்லைவரைப்பில், பைம்பொழில் - பசிய சோலைகளின்கணுளவாகிய, சேக்கைகள் நோக்கின - இவ்விடத்தை விட்டுத் தஞ்சேக்கைகளை நோக்கின (இனி யென்செய்வேன்), எ-று.

(வி-ரை.) ஓங்குதல் - ஓதமெறிநீருயர்தல். கொழுமீனென்பது ஓர் சாதிமீன். ஆல் - அசை. சேக்கை - கூடு. பொழில்-சோலை. பயிலல் - நடித்தல். (கஅஅ)

நேரிசையாசிரியப்பா.

கோடிய கோலினன் செருமுகம் போலக்
கனைகதிர் திருகிக் கல்சேர்ந்து முறைபுகப்
பதினெண் கிளவி யூர்துஞ் சியபோற்
புட்குலம் பொய்கை வாய்தாட் கொள்ள
வேள்சரத் துடைகுநர் கோல நோக்கி
யிருண்மகள் கொண்ட குறுநகை போல
முல்லையு மௌவலு முருகுயிர்த் தவிழத்
தணந்தோ ருளத்திற் காமத் தீப்புக
மணந்தோர் நெஞ்சத் தமுத நீர்விட
வன்றில்புற் சேக்கை புக்கலகு பெடையணைய
வந்தண ரருமறை யருங்கிடை யடங்க
முதிர்கனி மூல முனிக்கண மறுப்பக்
கலவையும் பூவுந் தோண்முடி கமழ
விரிவலை நுளையர் நெய்த லேந்தித்
துத்தங் கைக்கிளை யளவையின் விளைப்ப
நீரர மகளிர் செவ்வாய் காட்டிப்
பசுந்தாட் சேக்கொ ளாம்பன் மலரத்
தோளு மிசையுங் கூறிடுங் கலையு
மருட்டிரு வெழுத்தும் பொருட்டிரு மறையும்
விரும்பிய குணமு மருந்திரு வுருவு
முதலெண் கிளவியும் விதமுட னிரையே
யெட்டு மேழுஞ் சொற்றன வாறு
மைந்து நான்கு மணிதரு மூன்றுந்
துஞ்சலி லிரண்டுஞ் சொல்லரு மொன்று
மாருயிர் வாழ வருள்வர நிறுத்திய
பேரருட் கூடற் பெரும்பதி நிறைந்த
முக்கட் கடவுண் முதல்வனை வணங்கார்
தொக்கதீப் பெருவினை சூழ்ந்தன போலவுங்

துறவர் லறனுற் பெறலின் மாந்தர்
விள்ளா வறிவி னுள்ளமு மென்னவுஞ்
செக்கர்த் தீயொடு புக்கநன் மாலை
யென்னுயிர் வளைந்த தோற்றம் போல
நாற்படை வேந்தன் பாசறை
யோர்க்கு முளையோ மனத்திற னேதுகவே.

கோடிய கோலினன் - திறனேதுகவே. பநதி-ஒருவழித்தணத்தல். துறை - பொழுதுகண்டு மயங்கல்.

கோடிய கோலினன் செருமுகம் போல.

(1—வது வரி.)

(ப-ரை.) கோடிய-மாறுபட்ட, கோலினன்-கோலினையுடையவனாகிய அரசன், செருமுகம்போல-போர்க்களத்தில் வீழ்ந்ததுபோல.

(வி-ரை.) கோடியகோல் - கொடுங்கோல்.

கனைகதிர் திருகிக் கல்சேர்ந்து முறைபுக.

(2—வது வரி.)

(ப-ரை.) கனை-நெருங்கிய, கதிர்-கிரணங்களையுடைய சூரியன், திருகி - மாறுபட்டு, கல் சேர்ந்து-அத்தமனகிரியைச் சேர்ந்து, முறை புக - முறையேபுகவும்.

(வி-ரை.) கதிர் - ஆகுபெயர், கல்லும் அது.

'பதினேண்கிளவி' என்பதுமுதல் 'தாட்கோள்ள' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) பதினெண்கிளவி - பதினெண்பாடைச் சொற்களும், ஊர் - ஊரிடத்து, துஞ்சியபோல - அடங்கியனபோல, புள் குலம் - பலபறவைத்திரள்கள், பொய்கைவாய்-பொய்கையினிடத்து, தாள் கொள - துயிலுதலாகிய முயற்சியைக் கொள்ளவும்.

(வி-ரை) 'தாழ்க்கொள்ள' எனவும் பாடமுளது, தங்காநிற்கவும் என்பதிதன்பொருள். பொய்கை - தடாகம். தாள் - முயற்சி. துயிலுதல் - தூங்குதல்.

'வேள்சரத்து' என்பதுமுதல் 'அவிழ' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) வேள் சரத்து - மன்மத பாணங்களினால், உடைகுநர்-தளர்பவர்களாகிய மாதரது, கோலம்-அழகை (வேடத்தை), நோக்கி-பார்த்து, இருள் மகள் - இருளாகிய பெண், கொண்ட - தான் கொண்ட, குறுநகைபோல - இளநகைபோல, முல்லையும் - முல்லையரும்பும், மௌவலும் - வனமல்லிகை யரும்பும், முருகு உயிர்த்து - மணம்வீசி, அவிழ - மலரவும்.

(வி-ரை.) சரம்-பாணம். உடைதல் - மனந்தளர்தல். முல்லை மௌவல் என்பன ஆகுபெயர்கள்.

'தணந்தோர்' என்பதுமுதல் 'அமுதநீர்விட' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) தணந்தோர் - (தலைவனைப்) பிரிந்த மாதரது, உளத்தில் - மனத்தில், காமத்தீ - காமமாகிய நெருப்பு, புக-நுழையவும், மணந்தோர் - தலைவரைக் கூடியமாதரது, நெஞ்சத்து - மனத்தில், அமுத நீர்விட - இனிய நீர்மை சுரக்கவும்.

(வி-ரை.) தணத்தல் - பிரிதல், அமுதம் - இனிமை. நீர்மை - குணம்.

அன்றில்புற் சேக்கை புக்கலகு பெடையணைய.
(10—வது வரி.)

(ப-ரை.) அன்றில் - அன்றிற் பறவைகள், புல்சேக்கை புக்கு-பனைமரத்திற் கட்டிய கூட்டிற் புகுந்து, அலகு பெடை - மூக்கினையுடைய தத்தம் பெடைகளை, அணைய - தழுவியுறங்கவும்.

(வி-ரை.) புல் - பனைமரம். பெடை - பெண்ணன்றில்.

'அந்தணர்' என்பதுமுதல் 'மறப்ப' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) அந்தணர் - அந்தணர்க்குரிய, அருமறை - எழுதற்குரிய வேதங்கள், அருங்கிடையடங்க - அரிய கிடையினிடத் தடங்கவும், முதிர் கனி மூலம் - கனிந்த பழங்களையுங் கிழங்குகளையும், முனிக்கணம்-முனிவர் கூட்டங்கள், மறப்ப-(அகாலமென்று) மறக்கவும்.

(வி-ரை.) அருமை-எழுதற்கருமை, இதுபற்றியன்றே இதனை எழுதாக்கிளவியென வழங்குவது. கிடை - வேதமோதுமிடம்.

‘கலவையும்பூவும்’ என்பதுமுதல் ‘விளைப்ப’ என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) கலவையும் பூவும் - சந்தனக் குழம்பும் மலர்மாலைகளும், தோள் முடி கமழ-தோளினு முடியினும் பரிமளிக்க, விரி வலை-விரிந்த வலையினையுடைய, நுளையர் - நெய்தனிலமாக்கள், நெய்தல் ஏந்தி - நெய்தற்பறையைக் கையிற்றாங்கி, துத்தம் - துத்தமென்னு மொலியையும், கைக்கிளை - கைக்கிளையென்னு மொலியையும், அளவையின் - நூலளவைபெற, விளைப்ப - எழுப்பவும்.

(வி-ரை.) கலவை - கலவைச்சாந்து. பூ-ஆகுபெயர்.

‘நீரரமகளிர்’ என்பதுமுதல் ‘மலர’ என்பதுவரை.
(16—17 வரிகள்.)

(ப-ரை.) நீர் அரமகளிர் - நீரரமகளிரது, செவ்வாய் காட்டி-சிவந்த வாய்போற்காட்டி, பசுந்தாள்-பசிய தாளினையும், சேக்கொள்-சிவந்த நிறத்தையுங்கொண்டிருக்கின்ற, ஆம்பல் - செவ்வல்லியரும்புகள், மலர - விரியவும்.

(வி-ரை) நீரரமகளிர் - நீரில்வாழும் தெய்வமாதர். தாள் - நாளம். ஆம்பல்-ஆகுபெயர்.

‘தோளுமிசையும்’ என்பதுமுதல் ‘சூழ்ந்தனபோலவும்’ என்பதுவரை.
(18—28 வரிகள்.)

(ப-ரை.) தோளும் - தோள்களும், இசையும் - இசைகளும், கூறிடும் கலையும் - சொல்லாநின்ற சாத்திரங்களும், அருள் திரு எழுத்தும் - அருளாகிய அழகுளவக்கரங்களும், பொருள் திரு மறையும்-பொருளையுடைய சிறப்புள்ள வேதங்களும், விரும்பிய குணமும்-யாவரும்விரும்பிய குணங்களும், அருந்திரு உருவும் - கிடைத்தற்கரிய அழகாகியவடிவும், முதலெண் கிளவியும் - இவை முதலாகிய வெட்டுச்சொற்களும் (முன்னெழுத்தாக வெண்ணுஞ் சொல்லும்), விதமுடனிரையே-பகுப்பான முறையே முதலில், எட்டும்-எட்டாகவும், எழும் - ஏழாகவும், சொற்றனவாறும் - சொல்லின ஆறாகவும், ஐந்தும் - ஐந்தாகவும், நான்கு - நான்காகவும், அணிதரு மூன்றும் - அணிமை தருகின்ற மூன்றாகவும், துஞ்சல் இல் இரண்டும்-கெடாத

விரண்டாகவும், சொல் அரும் ஒன்றும் - சொல்லுதற்கரிய வொன்றாகவும், ஆருயிர் வாழ-அரியவுயிர்ப்பரப்புக ளுடலோடு வாழ்ந்திருப்ப, அருள்வர நிறுத்திய - அருள்வருமாறு நிலைபெறச்செய்த, பெரு அருள் - மிகுந்த கிருபையுள்ள, கூடல் பெரும்பதி - கூடலென்னும் பெரிய நகரத்தில், நிறைந்த - நிறைந்திருக்கின்ற, முக்கண் கடவுள்-திரிநேத்திரத்தையுடைய சோமசுந்தரக் கடவுளாகிய, முதல்வனை - தலைவனை, வணங்கார் - தொழாதவரை, தொக்க தீப்பெருவினை - கூடிய கொடிய பெருவினைகள், சூழ்ந்தனபோலவும் - மூடிக்கொண்டாற்போலவும்.

'துறவால்' என்பதுமுதல் 'உள்ளமுமென்னவும்' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) துறவால் - துறவினாலும், அறனல் - இல்லறத்தினாலும், பெறல் இல் மாந்தர்-(பயனைப்பெறாத) மனிதர்களது, விள்ளா அறிவின் - புடைபெயர்ச்சி யில்லாதவறிவும், உள்ளமுமென்னவும்- விளக்கமில்லாத மனமும்போலவும்.

(வி-ரை.) விள்ளல் - புடைபெயர்தல். விளக்கம் - ஒளி.

செக்கர்த் தீயொடு புக்கநன் மாலை.
(31—வது வரி)

(ப-ரை.) செக்கர் தீயொடு - செவ்வானமாகியவக்கினியோடு, புக்க நல் மாலை - வந்தமிக்க மாலைக்காலமே.

(வி-ரை) மாலை - அண்மைவிளி.

'என்னுயிர்வளைந்த' என்பதுமுதல் 'ஓதுகவே' என்பதுவரை.
(32—34 வரிகள்.)

(ப-ரை.) என் உயிர் வளைந்த - என்னுயிரை நீ சூழ்ந்த, தோற்றம்போல - காட்சியைப்போல, நாற்படை வேந்தன் - நால்வகைச் சேனைகளையுடைய வரசனையும், பாசறையோர்க்கும் - அவன் பாசறையி லுள்ளோரையும், உளையோ - சூழ்ந்துகொண்டனையோ, மனத்திறன் - உன்மனக்கூறுபாட்டை, ஓதுக - சொல்லக்கடவை.

(வி-ரை.) பாசறையோர்க்கென்பது உருபுமயக்கம். பாசறை - படைவீடு.

செக்கர்த் தீயொடு புக்க நன்மாலையே! என்னுயிர் வளைந்த தோற்றம்போல நாற்படைவேந்தன் பாசறையோர்க்கு முளையோ மனத்திற னோதுகவென வினைமுடிவு செய்க. (௩௬)

திருக்கோவையார் ககூ-ம் செய்யுள்.

ஆடிடத்துய்த்தல்.

ஆடிடத்துய்த்த லென்பது—அணிமைகூறி யகலாநின்றவன், இனி நீ முற்பட்டு விளையாடு, யான் இங்ஙனம்போய் அங்ஙனம் வாராநின்றேனென அவளை ஆடிடத்துச் செலுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

தெளிவளர் வான்சிலை செங்கனி வெண்முத்தந் திங்களின்வாய்ந்
தளிவளர் வல்லியன் னாய்முன்னி யாடுபின் யானளவா
வொளிவளர் தில்லை யொருவன் கயிலையுகு பெருந்தேன்
றுளிவளர் சாரற் கரந்துங்ங னேவந்து தோன்றுவனே.

வன்புறையின் வற்புறுத்தி
அன்புறுமொழியை யருககன்றது.

(ப-ரை.) வளர்-கால் நிமிர்ந்த, வான் சிலை - பெரிய சிலைகளும், செம் கனி - சிவந்த கொவ்வைக்கனியும், வெள் முத்தம் - வெள்ளிய முத்தங்களும், திங்களின் வாய்ந்து-(ஒரு) திங்களின்கண்ணே வாய்ப்ப, அளி வளர் - வண்டுகள் தங்கும், வல்லி அன்னாய் - சொடியையொப்பாய், தெளி-(யான் சொன்னவற்றைத்) தெளிவாயாக;முன்னி ஆடு-இனிமுற்பட்டு விளையாடுவாயாக; ஒளி வளர் - ஒளிவளராநின்ற, தில்லை - தில்லைக்கணுளனாகிய, அளவா-அளக்கப்படாத, ஒருவன் - ஒருவனது, கயிலை - கைலையிடத்து, உகு-சிந்தாநின்ற, பெருந்தேன் துளி - பெருந்தேன்றுளிகள், வளர் சாரல்-பெருகுஞ்சாரற் (பொதும்பரில்), கரந்து - ஒளித்து, யான் பின் - யான்பின்னும், உங்ஙனே வந்து - உவ்விடத்தே வந்து, தோன்றுவன்-தோன்றுவேன், எ - று.

(வி-ரை.) தெளிவளர் வான்சிலை என்பதற்கு ஒளிவளருஞ் சிலையென்றுரைப்பினு மமையும். திங்களை வல்லிக் கண்ணதாகக்கொள்க. வாய்ந்தென்பது வாய்ப்பவென்பதன்றிரிபாகலின், அளிவளரென்னும் பிறவினை கொண்டது. சாரலென்பது ஆகுபெயர். வன்புறையின் - வற்புறுத்துஞ் சொற்களால். மெய்ப்பாடு-அது. பயன் - இடங்குறித்து வற்புறுத்தல்.

நேரிசையாசிரியப்பா.

முன்னி யாடுக முன்னி யாடுக
குமுதமும் வள்ளையு நீலமுங் குமிழுந்
தாமரை யொன்றிற் றடைந்துவளர் செய்த
முளரிநிறை செம்மகண் முன்னி யாடுக

நிற்பெறு தவத்தினை முற்றிய யானும்,
பல்குறி பெற்றிவ் வுலகுயி ரளித்த
பஞ்சின் மெல்லடிப் பாவைகூ றாகிக்
கருங்குரு விக்குக் கண்ணருள் கொடுத்த
வெண்டிரு நீற்றுச் செக்கர் மேனியன்
கிடையிற் றுபதர் தொடைமறை முழக்கும்
பொங்கர்க் கிடந்த சூல்கார்க் குளிறலும்
வல்லியைப் பரியும் பகடுவிடு குரலும்
யாணர்க் கொடிஞ்சி நெடுந்தே ரிசைப்பு
மொன்றி யழுங்க நின்றநிலை பெருகி
மாதிரக் களிற்றினைச் செவிடுறக் கொடுக்கும்
புண்ணியக் கூட லுண்ணிறை பெருமான்
றிருவடி சுமந்த வருளினர் போலக்
கருந்தே னுடைத்துச் செம்மணி சிதறிப்
பாகற் கோட்டிற் படர்கறி வணக்கிக்
கல்லென் றிழிந்து கொல்லையிற் பரக்குங்
கறங்கிசை யருவியஞ் சாரற்
புறம்பு தோன்றிநின் கண்ணா குவனே.

முன்னியாடுக - கண்ணாகுவனே. பந்தி - இயற்கைப்புணர்ச்சி. துறை - ஆடிடத்துய்த்தல்.

முன்னி யாடுக முன்னி யாடுக.
(1—வது வரி.)

(ப-ரை.) முன்னி - (தோழிகளுடன்) முற்பட்டு, ஆடுக-விளையாடக்கடவாய், முன்னியாடுக—.

(வி-ரை.) முன்னல் - முற்படல்.

'குமுதமும்' என்பதுமுதல் 'செம்மகள்' என்பதுவரை.
(2—4 வரிகள்.)

'(ப-ரை.) குமுதமும் - குமுதமலரும், வள்ளையும் - வள்ளைக் கொடியும், நீலமும் - நீலோற்பலமலரும், குமிழும் - குமிழமலரும், தாமரை ஒன்றில் - ஒரு தாமரைமலரில், தடைந்து - அடங்கி, வளர்செய்த - வளர்தலைச்செய்த, முளரிநிறை - தாமரைமலரின்கண் அழகுநிறைந்த, செம்மகள் - இலக்குமிபோல்வாய்.

(வி-ரை.) குமுதம் வள்ளை நீலம் குமிழ் தாமரை முளரி என்பன ஆகுபெயர்கள். வளர் - முதனிலைத்தொழிற்பெயர். செம்மகள் - அண்மைவிளி.

முன்னி யாடுக.

(4—வது வரி.)

(ப-ரை.) முன்னி ஆடுக - (நெருநல் விளையாட்டைக்) கருதி விளையாடக்கடவாய்.

'பலகுறிபெற்று' என்பதுமுதல் 'அருளினர்போல' என்பதுவரை.

(6—17 வரிகள்.)

(ப-ரை.) பலகுறி பெற்று-பலவகைத் தோற்றத்தைப்பெற்ற, இவ்வுலகு - இவ்வுலகத்தின்கண், உயிர் - ஆன்மகோடிகளை, அளித்த - ஈன்றருளிய, பஞ்சின் - பஞ்சினும், மெல்லடி - மென்மையாகிய திருவடிகளையுடைய, பாவை-பாவைபோலும் உமை, கூறு ஆகி-ஒரு பாகமாகி, கருங்குருவிக்கு - (பாரத்துவாசமென்னும்) கருங்குருவிக்கு, கண்ணருள் - தனது கண்ணருளை, கொடுத்த - கொடுத்துப் பாதுகாத்த, வெள் திருநீற்று - வெள்ளிய திருநீறுள்ள, செக்கர் மேனியன் - செவ்வானம்போன்ற திருமேனியை யுடையவனாகிய, கிடையில் தாபதர் - முனிவர் தமதிருக்கையிலோதும், தொடை - தொடையோடுங் கூடிய, மறை முழக்கும் - வேதவொலியும், பொங்கர்-சோலையின்மீது, கிடந்த-இருந்த, சூல் கார்-சூலையுடைய மேகங்களின், குளிறலும் - ஒலியும், வல்லியை - கால்விலங்கை, பரியும் - அறுத்தற்குக் காரணமான, பகடு விடு குரலும் - யானைகள் வெளிப்படுத்துகின்ற வொலியும், யாணர் - அழகு பொருந்திய, கொடிஞ்சி - மேன்மொட்டினையுடைய, நெடு - நெடுமையாகிய, தேர் இசைப்பும் - தேரினதொலியும், ஒன்றி - கூடி, அழுங்க - ஒலித்தலால், நின்ற நிலை பெருகி - அவ்வொலிசுணின்றநிலையினின்றும் பெருகி, மாதிரக் களிற்றினை - திசையானைகளை, செவிடுறக் கொடுக்கும் - செவிடுபடுத்துகின்ற, புண்ணியக்கூடலுள் - புண்ணியத்தைத் தருகின்ற மதுரையினிடத்து, நிறை பெருமான் - பெருமையோ டெழுந்தருளியுள்ள சோமசுந்தரப்பெருமானது, திருவடி - திருவடிகளை, சுமந்த - மனத்தின்கட்டாங்கிய, அருளினர்போல - அருளாளர்போல.

(வி-ரை.) பாவை - பிரதிமை; இது ஆகுபெயராய் உமாதேவியை யுணர்த்திற்று. பரிதல் - அறுத்தல்.

நிற்பெறு தவத்தினை முற்றிய யானும்.
(5—வது வரி.)

(ப-ரை.) நின் பெறு தவத்தினை - நின்னையடையுந் தவத்தை, முற்றிய யானும் - நிறைவேற்றிய யானும்.

'கருந்தேன்' என்பதுமுதல் 'சண்ணுதுவனே' என்பதுவரை.
(18—22 வரிகள்.)

(ப-ரை.) கரு - பெரிய, தேன் - இருட்டை, உடைத்து - கிழித்து, செம் மணி - சிவந்த மாணிக்கங்களை, சிதறி-பலவிடங்களிலுஞ் சிதறி, பாகல் கோட்டில் - பலாவினது கிளைகளில், படர் கறி - படர்ந்த மிளகுக்கொடிகளை, வணக்கி - வளைத்து, கல்லென்றிழிந்து-கல்லென்னு மொலியினிழிந்து, கொல்லையில் - புனங்களில், பரக்கும் - பரவுகின்ற, கறங்கிசை - மிகுந்த வொலியுள்ள, அருவி-அருவிநீரினையுடைய, அம் சாரல்-அழகிய மலைச்சாரலின், புறம்பு தேன்றி-புறத்திற்சென்று, நின் கண்ணுதுவன் - உன்னிடத்து வருவேனாக.

முளரிநிறை செம்மகள், புண்ணியக்கூட லுண்ணிறை பெருமான் றிருவடி சுமந்த வருளினர்போல, நிற்பெறு தவத்தினை முற்றியயானும் கறங்கிசை யருவியஞ்சாரல் புறம்புதோன்றிநின்கண்ணுதுவனென வினைமுடிவு செய்க. (௬௦)

திருக்கோவையார் உசஉ-ம் செய்யுள்.

விரதியரை வினவல்.

விரதியரைவினவலென்பது—சுராவொடுவெருந்திச்செல்லாநின்றவள், பத்தியர்போல ஒரு பித்தி தன் பின்னேவர ஒரு பெருந்தகை முன்னே செல்லக் கண்டீரோவென விரதியரை வினவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சுத்திய பொக்கணத் தென்பணி கட்டங்கஞ் சூழ்சடைவெண்
பொத்திய கோலத்தி னீர்புலி யூரம் பலவர்க்குற்ற
பத்தியர் போலப் பணைத்திறு மாந்த பயோதரத்தோர்
பித்திதற் பின்வர முன்வரு மோவொர் பெருந்தகையே.

வழிவரு கின்ற மாவிர தியரை
மொழிமின் களென்று முன்னி மொழிந்தது.

(ப-ரை.) சுத்திய - சுத்தியையுடைத்தாகிய, பொக்கணத்து - பொக்கணத்தையும், என்பு - என்பாலாகிய, அணி - அணியையும், கட்

டங்கம்-கட்டங்கமென்னும் படைக்கலத்தையும், சூழ் சடை-சூழ்ந்த சடையினையும், வெண் பொத்திய கோலத்தினீர் - மெய்ம்முழுது மூடிய வெண்கோலத்தையுமுடையீர், புலியூர் - புலியூர்க்கணுண்டாகிய, அம்பலவர்க்கு உற்ற பத்தியர்போல - அம்பலத்தையுடையவர்கண் மிக்க பத்தியையுடையாரைப்போல, பணைத்து இறுமாந்த - பெருத்திறுமாந்த, பயோதரத்து ஓர் பித்தி - முலைகளையுடையாளொருபேதை, தன் பின் வர - தனக்குப்பின்வர, ஓர் பெருந்தகை - ஒருபெருந்தகை, முன் வருமோ - முன்னே வருமோ (உரைமின்), எ - று.

(வி-ரை.) சுத்தி - பிறர்க்குத் திருநீறு கொடுத்தற்கு இப்பி வடிவாகத் தலையோட்டா னமைக்கப்படுவதொன்று. என்பணியென்புழி இயல்பும், கட்டங்கமென்புழித் திரிபும் விகாரவகையாற்கொள்க. கடங்கமென்பது மழு; இது கட்டங்கமென நின்றது. வெண்கோலம் - நீறணிந்தகோலம். பத்தியர்க்குப் பணைத்தல் - உள்ளத்து நிகழும் இன்புறவால் மேனிக்கண் வருமொளியும், ஒடுங்காமையும். இறுமாத்தல் - தாழாத வுள்ளத்தராய்ச் செம்மாத்தல். முலைக்குப் பணைத்தல் - பெருத்தல். இறுமாத்தல் - ஏந்துதல். வெண்பத்திய கோலத்தினீரென்ற பாடத்திற்கு வெண்ணீற்றாற் பத்திபடவிட்ட முண்டத்தையுடைய கோலமென்றுரைக்க. இப்பி - முத்துச்சிப்பி. இறுமாத்தல் செம்மாத்தல் என்பவற்றிற்குப் பகுதிகள் முறையே இறுமா செம்மா என்பன. பெருந்தகை - அன்மொழித்தொகை.

நேரிசையாசிரியப்பா.

நிலவுபகல் கான்ற புண்ணிய வருட்பொடி
இருவினை துரந்த திருவுடன் மூழ்கி
நடுவுடல் வரிந்த கொடிக்காய்ப் பத்தர்
சுத்தியமர் நீறுடன் றோள்வலன் பூண்டு
முடங்குவி ழன்ன வேணிமுடி கட்டி
யிருநான்கு குற்ற மடியறக் காய்ந்திவ்
வாறெதிர்ப் பட்ட வருந்தவத் திருவினிர்
தணியாக் கொடுஞ்சுரந் தருந்தழ றுவிப்
பொன்னுடற் றேவ ரொக்கலொடு மயங்கிக்
கொண்மூப் பஃறிரைப் புனலுடன் றூழ்த்திப்
பொதுளிய தருவினுட் புகுந்திமை யாது

மருந்துபகுத் துண்டு வல்லுயிர் தாங்கும்
வட்டைவந் தனையென வழங்குமொழி நிற்க
தாய்கா ணுழ்ந்தன ளாயம் வினவினள்
பாங்கியைப் புல்லின ளயலுஞ் சொற்றனள்
மக்கட் பறவை பரிந்துள மாழ்கினள்
பாடலம் புதுத்தார்க் காளைபின் னொன்றூற்
றள்ளா விதியிற் செல்குந ளென்று
தழல்விழிப் பேழ்வாய்த் தரக்கின் றுளிமுலை
பைங்கட் புல்வாய் பாலுணக் கண்ட
வருணிறை பெருமா னிருணிறை மிடற்றோன்
மங்குனிறை பூத்த மணியுடுக் கணமெனப்
புன்னையம் பொதும்பர்ப் பூநிறை கூடனும்
பொன்னடி வருந்தியுங் கூடி
யன்னையர்க் குதவல் வேண்டுமிக் குறியே.

நிலவுபகல்கான்ற - வேண்டுமிக்குறியே. **பகுதி-உடன்போக்கு. துறை** - விரதியரோடுரைத்தல்.

'நிலவுபகல்' என்பதுமுதல் 'அருந்தவத்திருவினிர்' என்பதுவரை.

(1—7 வரிகள்.)

(ப-ரை.) நிலவுபகல் - சந்திரசூரியரதொளியை, கான்ற - வீசாநின்ற, புண்ணிய - தூய்மையான, அருட்பொடி - அருளே கவசமாக அணியத்தக்க திருநீற்றினல், இருவினை - நல்வினை தீவினைகளை, துரந்த - ஓட்டிய, திருவுடல் - திருமேனியானது, மூழ்கி - மூழ்கப்பெற்று, உடல் நடு வரிந்த - உடலின் நடுவிற் கட்டிய, கொடிக்காய்-கொடியிற் காய்க்குஞ் சுரைக்காயாகிய, பத்தர் - கமண்டலம், சுத்தியமர் நீறுடன்-பரிசுத்தியுள்ளநீற்றுப்பையொடு, தோள்வலன் பூண்டு-வலத்தோளில்மாட்டி, முடங்குவீழ் அன்ன - முடங்கிய விழுதுபோன்ற, வேணி-சடையை, முடி கட்டி-முடியாக முடித்து, இருநான்கு குற்றமும் - ஞானாவரணியமாதி யெட்டுக்குற்றங்களையும், அடியறக் காய்ந்து - முதலறக்கெடுத்து, இவ்வாறு எதிர்ப்பட்ட-இவ்வழியிலெதிர்ப்பட்ட, அருந்தவத்திருவினிர் - செய்தற்கரிய தவச்செல்வத்தையுடையீர்.

(வி-ரை.) நிலவுபகல்-ஆகுபெயர்கள். வலன்-போலி. ஆறு-வழி.

'தணியாக்கொடுஞ்சுரம்' என்பதுமுதல் 'நிற்க' என்பதுவரை.
(8—13 வரிகள்.)

(ப-ரை.) தணியா - (வெப்பம்) தணியாத, கொடுஞ்சுரம் - கொடியவிப்பாலைநிலமானது, தரும்-தராநின்ற, தழல்-அக்கினியானது, தாவி - மேலெழுந்துபோய், பொன் உடல்-பொன்னிறமான வுடலையுடைய, தேவர் - தேவர்கள், ஒக்கலொடு - தத்தஞ்சுற்றத்துடனே, மயங்கி - (அவ்வுட்டணத்தால்) மயக்குற்று, கொண்மூ-மேகங்களை, பல்திரை - பல அலைகளையுடைய, புனலுடன் தாழ்த்தி - ஆகாயகங்கையுடன் தம்முலகின்கீழிருத்தி, பொதுளிய - நன்றாகத் தளிர்த்த, தருவினுள் - கற்பகச்சோலையுள், புகுந்து - நுழைந்து, இமையாது - கண்களிமையாமல், மருந்து-அமிர்தத்தை, பகுத்து உண்டு-தம்முட்பகுத்துண்டு, வல் உயிர் - தமது வலியவுயிரை, தாங்கும் - தாங்கும்படியுள்ள, வட்டை-பாலைவழியில், வந்தனை என - நீ வந்தாயென்று, வழங்கும் மொழி நிற்க - நீவிரென்னை யுபசரிக்கின்ற முகமனுரையொழிக.

(வி-ரை.) தரு - ஆகுபெயர். முகமனுரை - இன்சொல்.

'பாடலப்புதுத்தார்' என்பதுமுதல் 'செல்குநளென்று' என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(ப-ரை.) புது பாடலம் தார் - புதுமையான பாதிரிமலர்மாலையையணிந்த, காளைபின் - காளைப்பருவத்தை யுடையவனோடு, ஒன்றால் - எவ்வகை யுபாயத்தினாலும், தள்ளா விதியில் - நீக்கக்கூடாத ஊழ்காரணமாக, செல்குநள் என்று - செல்லுந் தலைவியானவள் செல்கின்றாளென்று.

(வி-ரை.) பாடலம் - ஆகுபெயர்.

'தாய்காறுழ்ந்தனள்'என்பதுமுதல்'மாழ்கினள்' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) தாய் கால் தாழ்ந்தனள்-தாயினது பாதங்களை வணங்கினளென்றும், ஆயம் வினவினள் - தன்னாயத்திலுள்ளாரையுசாவினளென்றும், பாங்கியை புல்லினள் - தோழியைத் தழுவினளென்றும், அயலும் சொற்றனள்-மற்றையோருக்கு முபசாரஞ் சொல்லினளென்றும், மக்கட்பறவை - கிள்ளை முதலிய பறவைகளை (உன்னி), பரிந்து உளம் மாழ்கினள் - இரங்கியுள்ளமயங்கினளென்றும்.

(வி-ரை.) ஆயம்-தோழிக்கூட்டம். அயல் - ஆகுபெயர். கிள்ளை முதலியவை மக்களோடு பழகி வாழ்வனவாதலான் அவற்றை 'மக்கட் பறவை' என்றார். மாழ்கல் - மயங்கல்.

'தழல்விழி' என்பதுமுதல் 'வருந்தியுங்கூடி' என்பதுவரை. (19—24 வரிகள்.)

(ப-ரை.) தழல் விழி - கனல்கின்ற விழியினையும், பேழ் வாய் - பெரிய வாயினையுமுடைய, தரக்கின் - புலியினது, துளி முலை-பால் துளிக்கும் முலையின்கண், பைங்கண் - பசிய கண்களையுடைய, புல்வாய் - மான்கன்று, பால் உணக்கண்ட - பாலுண்ணும்படி யருளியல் செய்தருளிய, அருள்நிறை பெருமான்-அருணிறைந்த எம்பெருமான், இருள் நிறை மிடற்றோன்-இருண்மலிந்தகண்டத்தினையுடையோன் அவனது, மங்குல் நிறை பூத்த-ஆகாயம்நிறைவாகத்தோன்றிய, மணி உடுக்கணம் என - அழகுள்ள தாராகணம்போல, புன்னை பொதும்பர் - புன்னைச்சோலைகளில், பூ நிறை - மலர்கள் நிறைந்த, கூடல் - மதுரையில், நும் பொன்னடி - அழகிய நுமது திருவடி, வருந்தியும் - வருத்தப்பட்டாயினும், கூடி - போய்ச்சேர்ந்து.

(வி-ரை.) தழல்விழி-வினைத்தொகைநிலைத்தொடர். தரக்கு - தரக்ஷு என்னும் வடசொற்றிரிபு. புன்னையம் பொதும்பர் என்பதில் அம் சாரியை.

அன்னையர்க் குதவல் வேண்டுமிக் குறியே. (25—வது வரி.)

(ப-ரை.) அன்னையர்க்கு - என்னன்னைமார்களுக்கு, இக்குறி - இக்குறிகளை, உதவல் வேண்டும் - சொல்லல்வேண்டும்.

(வி-ரை.) உதவல் ஈண்டுச் சொல்லுதன் மேற்று. அருந்தவத் திருவினிர், வட்டை வந்தனையென வழங்கு மொழிநிற்க, காளைபின் ஞென்றால் தள்ளாவிதியிற் செல்குநளெனவும், தாழ்ந்தனள் வினவினள் புல்லினள் சொற்றனள் மாழ்கினளெனவும், அன்னையர்க்கு இக்குறியுதவல் வேண்டுமென வினைமுடிவு செய்க. (சுக)

திருக்கோவையார் கoஅ-ம் செய்யுள்.

அவயவங்கூறல்.

அவயவங்கூறலென்பது — இன்னும் அவளை யிவள் அறிந்திலள், அறிந்தாளாயிற் றழைவாங்குவாளென உட்கொண்டுநின்று,

என்னுற் கருதப்பட்டாளுக்கு அவயவம் இவையெனத் தோழிக்குத் தலைமகன் அவளுடைய அவயவங் கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:-

குவவின கொங்கை குரும்பைகுழல் கொன்றைகொவ்வைசெவ்வாய்
கவவின வாணகை வெண்முத்தங் கண்மலர் செங்கழுநீர்
தவவினை தீர்ப்பவன் றாழ்பொழிற் சிற்றம் பலமனையாட்
குவவின நாண்மதி போன்றொளிர் கின்ற தொளிமுகமே.

அவயவ மவளுக்
கிவையிவை யென்றது.

(ப-ரை.) தவ வினை தீர்ப்பவன் - (விரதங்களான் வருந்தாமல்) தவத்தொழிலை நீக்கி (அன்பர்க்கின்புறுநெறி) அருளியவனது, தாழ் பொழில் - தாழ்ந்த சோலையையுடைய, சிற்றம்பலம் அனையாட்கு - சிற்றம்பலத்தை யொப்பவளுக்கு, குவவின - குவிந்த, கொங்கை - கொங்கைகள், குரும்பை - குரும்பையையொக்கும்; குழல் - குழல், கொன்றை - கொன்றைப்பழத்தை யொக்கும்; செவ்வாய் - செவந்த வாய், கொவ்வை - கொவ்வைக்கனியை யொக்கும்; கவவின - (அதனகத்து இடப்பட்ட, வாள் நகை - ஒளிபொருந்திய பற்கள், வெள் முத்தம் - வெண்முத்தையொக்கும்; கண் மலர்-கண்மலர்கள், செங் கழுநீர்-செங்கழு நீர்மலரையொக்கும்; ஒளி முகம் - ஒளியையுடைய முகம், உவவின - பூரணையின்கணுளதாகிய, நாள் மதி போன்று- செவ்விய சந்திரனையொத்து, ஒளிர்கின்றது-பிரகாசிக்கின்றது,எ-று.

(வி-ரை.) தவவினை தீர்ப்பவன் என்பதற்கு மிகவும்வினைகளைத் தீர்ப்பவ னெனினுமமையும். உவவினமதி - பலகலைகள் கூடி நிறைந்தமதி. நாண்மதி - உவாவான நாளின்மதி.

நேரிசையாசிரியப்பா.

வீதி குத்திய குறுந்தாட் பாரிடம்
விண்டலை யுடைத்துப் பிறைவாய் வைப்பக்
குணங்கினந் துள்ளக் கூளியுங் கொட்ப
மத்தி யந்தணன் வரஞ்சொலி விடுப்பத்
தில்லை கண்ட புலிக்கான் முனிவனுஞ்
சூயை கைவிடப் பதஞ்சலி யாகிய
வாயிரம் பணாடவி யருந்தவத் தொருவனுங்
கண்ணால் வாங்கி நெஞ்சறை நிறைப்பத்
திருநட நவின்ற வுலகுயிர்ப் பெருமான்

கடன்மாக் கொன்ற நீப்படர் நெடுவே
லூருளிணர்க் கடம்பி னெடுந்தார்க் கண்ணிய
னரிமகள் விரும்பிப் பாகஞ் செய்து
களியுட னிறைந்த வொருபரங் குன்றமும்
பொன்னந் தோகையு மணியரிச் சிலம்பு
நிரைத்தலைச் சுடிகை நெருப்புமி ழாரமும்
வண்டுகிளை முரற்றிய பாசிலைத் துளவு
மரகத முடற்றிய வடிவொடு மயங்க
மரக்கா லாடி யரக்கர்க் கொன்ற
கவைத்தலை மணிவேற் பிறைத்தலைக் கன்னி
வடபாற் பரிந்த பலிமணக் கோட்டமுஞ்
சூடகந் தோள்வளை கிடந்துவில் வீச
யாவர்தம் பகையும் யாவையிற் பகையும்
வளனிற் காத்து வருவன வருளு
மூழியுங் கணமென வுயர்மகன் பள்ளியு
முவாமதி கிடக்குங் குண்டுகடல் கலக்கி
மருந்துகைக் கொண்டு வானவர்க் கூட்டிய
பாகப் பக்க நெடியோ னுறையுளுந்
தும்பி யுண்ணுத் தொங்கற் றேவர்
மக்களொடு நெருங்கிய வீதிப் புறமு
மதுநிறை பிலிற்றிய பூவொடு நெருங்கிச்
சூரர்க் கன்னிய ருடல்பணி செய்யுங்
கடைக்கான் மடியும் பொங்கர்ப் பக்கமு
மூடி யாடுநர்த் திரையொடு பிணங்கித்
தோழியிற் றீர்க்கும் வையைத் துழனியு
மளவா வூழி மெய்யொடு சூழ்ந்து
நின்றுநின் றோங்கி நிலையறம் பெருக்கு
மானுப் பெரும்புக ழருணகர்க் கூடற்
பெண்ணுடல் பெற்ற சென்னியம் பிறையோன்
பொற்றகடு பரப்பிய கருமணி நிரையென
வண்டுந் தேனு மருள்கிளை முரற்றி
யுடைந்துமிழ் நறவுண் டறங்குதார்க் கொன்றையன்

திருவடிப்புகழுநர் செல்வம் போலு
மண்ணுந் தெடுத்த வணியுறு வனமுலை
யவன்கழல் சொல்லுந ரருவினை மானு
மலைமுலைப் பகையட மாழ்குறு நுசுப்பு
மற்றவ னசைத்த மாசுணம் பரப்பி
யமைத்தது கடுக்கு மணிப்பாம் பல்கு
லாங்கவன் றரித்த கலைமான் கடுக்கு
மிருகுழை கிழிக்கு மரிமதர் மலர்க்கண்
புகர்முகப் புழைக்கை துயிறரு கனவின்
முடங்குளை கண்ட பெருந்துயர் போல
வுயிரினு நுனித்த வவ்வவ் வுருக்கொடு
பொன்மலை பனிப்பினும் பனியா
வென்னுயிர் வாட்டிய தொடியிளங் கொடிக்கே.

வீதிருத்திய - தொடியிளங்கொடிக்கே. பகுதி - சேட்படை. துறை - அவயவங்கூறல்.

'புகர்முகம்' என்பதுமுதல் 'இளங்கொடிக்கே' என்பதுவரை.
(50—54 வரிகள்.)

(ப-ரை.) உயிரினும் நுனித்த - (மிகவும் நுட்பமான) உயிரினும் அருமையதாகிய, அவ்வவ்வுருக்கொடு - அந்தந்த அவயவத்தைக் கொண்டு, பொன்மலை - மாமேருவானது, பனிப்பினும் - நடுங்கினாலும், பனியா - நடுங்குறாத, என் உயிர் - எனதுயிரை, புகர் முகம் - புள்ளிதங்கிய முகத்தினையும், புழை கை - துளையுள்ள கையினையுமுடைய யானையினது, துயில்தரு கனவில் - நித்திரையி லுண்டாகுங் கனவிலே, முடங்கு உளை கண்ட - சிங்கத்தைக்கண்ட, பெரு துயர் போல - மிக்கதுன்பம்போல, வாட்டிய - துன்பப்படுத்திய, தொடி - வளையலணிந்த, இளங்கொடிக்கு - இளங்கொடிபோன்ற தலைவிக்கு.

(வி-ரை.) கொடு கொண்டு என்பன மூன்றாவதன்சொல்லுருபுகள். புழைக்கை-அன்மொழித்தொகை; முடங்குளையும் அது. இளங்கொடி - ஆகுபெயர்.

'வீதிகுத்திய' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.
(1—9 வரிகள்.)

(ப-ரை.) வீதி குத்திய - ஒடியாடுதல் புரிந்த, குறுந்தாள்பாரிடம் - குறுமையாகிய கால்களையுடைய பூதங்கள், விண்தலை உடை

த்து - விண்ணிடத்தைக் கிழித்து, பிறை வாய் வைப்ப - ஆங்குள்ள பிறையை வாயின்கண்வையாநிற்பவும், குணங்கு இனம் துள்ள - பைசாசங்கள் துள்ளாநிற்பவும், கூளியுங் கொட்ப-பேய்களுந் திரிந்தாடாநிற்பவும், மத்தியந்தணன் - மத்தியந்தனனென்னு முனிவரன், வரம் சொலி விடுப்ப - வரம்பெறுமாறு சொல்லியனுப்புதலும், தில்லை கண்ட - தில்லையென்னுந் தலத்தைக்கண்ட, புலிக்கால் முனிவனும் - வியாக்கிரபாத முனிவனும், சூயை கைவிட - அநசூயையென்னும் பார்ப்பினி தனது கையிலிருந்து தரையில் விட்டதால், பதஞ்சலியாகிய - பதஞ்சலிமுனிவனாகிய, ஆயிரம் பணடவி-ஆயிரம் படநிரையுள்ள, அருந்தவத்து ஒருவனும் - தவத்தால் அரியவொருவனும், கண்ணால் வாங்கி - கண்களாற் பெற்று, நெஞ்சு அறை-மனமாகிய வீட்டில், நிறைப்ப - நிறைக்காநிற்கவும், திருநடம் நவின்ற - முத்தித்திருவை யளித்தற்குரிய நடனஞ்செய்த, உலகு உயிர் பெருமான் - உலகிற்குயிராகநின்ற பிராணனவனும்.

(வி-ரை.) அநசூயை யெனற்பாலது முதற்குறையாய் சூயை யென நின்றது. பணடவி - படக்காடு.

'கடன்மாக்கொன்ற' என்பதுமுதல் 'குன்றமும்' என்பதுவரை.

(10—13 வரிகள்.)

(ப-ரை.) கடல் மா கொன்ற - கடலிடத்தே முளைத்து நின்ற மாமரமாகிய சூரபற்பனைத்தடிந்த, தீ படர் நெடு வேல் - தீத்தவழாநின்ற நெடிய வேலாயுதத்தையுடைய, உருள் இணர்க்கடம்பின் நெடுந்தார்க் கண்ணியன் - தேருருள்போலுங் கடப்பங்கொத்துக்களாகிய பெரிய மலர்மாலையையுடையவன், அரி மகள் - இந்திரன்மகளாகிய தெய்வயானை நாய்ச்சியாரை, விரும்பி - விரும்பி, பாகம் செய்து - (பராசரன் புத்திரரைப்) பரிபாகமுற்றுவித்து, களியுடன் - களிப்போடு, நிறைந்த - நிறைந்துள்ள, ஒரு பரங்குன்றமும் - ஒப்பற்ற திருப்பரங்குன்றமும்.

(வி-ரை.) தடிதல் - வெட்டல்.

'பொன்னந்தோகை' என்பதுமுதல் 'மயங்க' என்பதுவரை.

'உவாமதி' என்பதுமுதல் 'உறையுளும்' என்பதுவரை.

(14—17, 25—27 வரிகள்.)

(ப-ரை.) பொன்னந்தோகையும் - பீதாம்பரமும், மணி அரி சிலம்பும் - மணிப்பரல்களையுடைய சிலம்பும், நிரைத்தலைச் சுடிகை-

நிரையான தலைச்சுடிகையுள்ள, நெருப்பு உமிழ் ஆரமும் - நெருப்புப் போலும் ஒளியை வெளிப்படுக்கின்ற கௌத்துவாபரணமும், வண்டு கிளை முரற்றிய - வண்டுகள் இசைபாடுகின்ற, பாசிலை துளவும்-பச்சிலையாகிய துழாய்மாலையும், மரகதம் உடற்றிய-மரகதமணி நிறத்தை மாழ்கப்பண்ணின, வடிவொடு - திருமேனியிடத்து, மயங்க - தலை மயங்கும்படி, உவாமதி கிடக்கும் - நிறைமதியிருத்தற் கிடமாகிய, குண்டுகடல் - ஆழமானகடலை, கலக்கி - (மந்தரமத்தால்) கலக்கி, மருந்து கைக்கொண்டு - அமுதத்தைக் கையிலேந்தி, வானவர்க்கு ஊட்டிய - தேவரையுண்பித்த, பாகப்பக்கம் - பரமேச்சுரனது ஒரு பாகத்திலுள்ள, நெடியோன் - திருமால் வீற்றிருக்கின்ற, உறையுளும் - கோயிலும்.

(வி-ரை.) பொன்னர் தோகையென்பதில் அம் சாரியை, அழகெனினுமாம். தோகை - ஆடை. பீதர்-பொன். அம்பரம் - ஆடை. சுடிகை - உச்சி. தலைமயங்கல் - கலத்தல்.

'மரக்காலாடி' என்பதுமுதல் 'கோட்டமும்' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

(ப-ரை.) மரக்கால் ஆடி-மரக்கால் என்னும் தனது ஆடல் புரிந்து, அரக்கர் கொன்ற - அரக்கரை வீழ்த்தின, பிறைத்தலை-பிறைத்தலைபோலும், கவைத்தலை - கவராகிய தலையுள்ள, மணி வேல் - வலிய சூலமேந்திய, கன்னி - துர்க்கையானவள், வடபால் - வடக்கின்கண், பரிந்த - விரும்பிய, பலி மணம் - ஊன்மணங்கொண்ட, கோட்டமும் - ஆலயமும்.

(வி-ரை.) மரக்கால்-ஓர் விளையாட்டு. மணிவேல்-அழகிய வேல் எனினுமாம்.

'சூடகம்' என்பதுமுதல் 'பள்ளியும்' என்பதுவரை.

(21—24 வரிகள்.)

(ப-ரை.) சூடகம் - சங்கணமும், தோள்வளை - தோள்வளையும், கிடந்து-இருந்து, வில் வீச - ஒளிபெருக்காநிற்ப, யாவர்தம் பகையும்-யாவரது பகைமையையும், யாவையின் பகையும் - யாதொன்றனது பகைமையையும், வளனில் காத்து - (ஒழியும்படி தனது) வளத்தால் பாதுகாத்து, வருவன அருளும் - வருகின்ற நன்மைகளைத் தந்தருள்

கின்ற, ஊழியும் - ஊழிக்காலமும், கணம் என - ஓர்கணப்போதாக, உயர்மகன் பள்ளியும் - வளர்கின்ற வடுகக்கடவுளது ஆலயமும்.

(வி-ரை.) வளனிற் காத்து என்பதில் இன் மூன்றுவதன் கருவிப்பொருளில் வந்தது.

‘தும்பி’ என்பதுமுதல் ‘வீதிப்புறமும்’ என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(ப-ரை.) தும்பி உண்ணு - வண்டுகளாலுண்ணப்படாத, தொங்கல் தேவர் - பொன்னரிமாலைகளையுடைய தேவர்களும், மக்களோடு - மனிதர்களும், நெருங்கிய - நெருங்கியுலாவுகின்ற; வீதிப்புறமும் - வீதியினிடங்களும்.

(வி-ரை.) தொங்கல் - மாலை, அது ஈண்டைக்கேற்பப் பொன்னரிமாலை யெனப்பட்டது.

‘மதுநிறை’ என்பதுமுதல் ‘பொங்கர்ப்பக்கமும்’ என்பதுவரை.
(30—32 வரிகள்.)

(ப-ரை.) மதுநிறை பிலிற்றிய - நிறைந்த மதுவைத் துளிக்கின்ற, பூவொடு நெருங்கி-மலர்களொடு நெருக்குற்று, சூரரக்கன்னியர் - சூரரமகளிர்கள், உடல்பனிசெய்யும்-தமதுடலை நடுங்குதல் செய்கின்ற, கடைக்கால் மடியும் - ஊழிக்காற்றுத் தடைபடுகின்ற, பொங்கர் பக்கமும் - சோலைப்பக்கங்களும்.

(வி-ரை.) மது-தேன். பிலிற்றல் - துளித்தல். பனித்தல்-நடுங்கல்.

‘ஊடியானோர்’ என்பதுமுதல் ‘வையைத்துழனியும்’ என்பதுவரை.
(33—34 வரிகள்.)

(ப-ரை.) ஊடி ஆடுநர் - தத்தந்தலைவரோடூடி நீராடுமகளிரை, திரையொடு - அலைகளாகிய கையைக்கொண்டு, பிணங்கி - பின்னி, தோழியின் - தோழியைப்போல, தீர்க்கும் - அவ்வூடலைத் தீர்க்கா நின்ற, வையைத் துழனியும் - வையைநதியினொலியும்.

(வி-ரை.) தோழியின் என்பதில் இன் ஐந்தாவதனுப்புப் பொருட்டு.

'அளவாவூழி' என்பதுமுதல் 'அருணகர்க்கூடல்'
என்பதுவரை.

(35—37 வரிகள்.)

(ப-ரை.) அளவா ஊழி-அளவுபடுத்தொணாத வுகாந்தத்திலும், மெய்யொடு சூழ்ந்து - மெய்மையாற் சூழப்பெற்று, நின்று நின்று - என்றும் நிலைபெற்று, ஓங்கி - உயர்ந்து, நிலை அறம் பெருக்கும் - கேடிலாத தருமத்தை வளர்க்காநின்ற, ஆறு பெரும்புகழ் - நீங்காத மிக்க புகழையுடைய, அருள் நகர் கூடல் - சத்திபீடங்களுயர்வாகிய கூடன்மாநகரத்தே.

(வி-ரை.) அளவாவூழி - பல்லூழிக் காலங்கள்.

'பெண்ணுடல்' என்பதுமுதல் 'கோன்றையன்'
என்பதுவரை.

(38—41 வரிகள்.)

(ப-ரை.) பெண்ணுடல் பெற்ற - பெண்ணைத் தன்னுடற்பாதியிற்கொண்ட, சென்னி பிறையோன் - முடியிற் பிறையைத்தரித்தவனும், பொற்றகடு பரப்பிய - பொற்றகட்டின்மேற் பரப்பிய, கருமணி நிரையென - நீலமணியினொழுங்கென்று சொல்ல, வண்டும் தேனும் - ஆண்வண்டுகளும் பெண்வண்டுகளும், மருள்கிளை முரற்றி - மருளப்படும் இசையைப்பாடி, உடைந்து உமிழ்-மலர்தலானுமிழாநின்ற, நறவு உண்டு - தேனையுண்டு, உறங்கு - தங்காநின்ற, தார் கொன்றையன் - கொன்றைமாலையையுடையவனுமாகிய சோமசுந்தரக்கடவுளது.

(வி-ரை) சென்னியம்பிறை யென்பதில் அம் சாரியை, அழகெனினும் கங்கையெனினு மமையும். உடைதல் - மலர்தல். உறங்கல்-ஈண்டுத் தங்கலென்னும்பொருட்டு.

'திருவடி' என்பதுமுதல் 'வனமுலை' என்பதுவரை.

(42—43 வரிகள்.)

(ப-ரை.) திருவடி புகழுநர் - ஸ்ரீபாதத்தைப் புகழ்வோரது, செல்வம்போலும் - செல்வம் வளர்வதுபோலும் வளராநிற்கும், அண்ணாந்து எடுத்த் - மேலோங்கித் தலைநிமிர்ந்த, அணி உறு வனமுலை - ஆபரணங்கள் முற்றிய அழகுள்ள முலைகளானவை.

'அவன்கழல்' என்பதுமுதல் 'நுசுப்பு' என்பதுவரை.
(44—45 வரிகள்.)

(ப-ரை.) மலை முலைப்பகை அட - மலைபோன்ற முலைப்பகை வருத்துதலால், மாழ்குறும் நுசுப்பு - ஒல்குதலைப் பொருந்திய இடையானது, அவன் கழல்-அக்கடவுள் திருவடியை, சொல்லுநர்-பாடுகின்றவரது, அருவினை மானும் - தேய்தற்கரியவினை தேய்வது போன்றிருக்கும்.

(வி-ரை.) மலைமுலை-உவமைத்தொகைநிலைத்தொடர். அடி-காரணப்பொருட்டாகிய வினையெச்சம். மாழ்கல் - ஒல்கல் (துவளல்). கழல் - ஆகுபெயர்.

'மற்றவனசைத்த' என்பதுமுதல் 'அல்குல்' என்பதுவரை.
(46—47 வரிகள்.)

(ப-ரை.) மணிப்பாம்பு அல்குல் - மணிமுற்றிய பாம்பின் படமாகிய அல்குலானது, அவன் அசைத்த - அச்சோமசுந்தரமூர்த்தி அரையிற்கட்டின, மாசுணம் பரப்பி அமைத்தது கடுக்கும் - பாம்பானது படத்தை விரித்ததை யொக்கும்.

(வி-ரை.) மற்று - அசை, வினைமாற்றெனினும் பிறிதெனினுமாம். அசைத்தல் - கட்டல். கடுத்தல் - நிகர்த்தல்.

'இருகுழை' என்பதுமுதல் 'கலைமான்கடுக்கும்' என்பதுவரை.
(48—49 வரிகள்.)

(ப-ரை.) இரு குழை கிழிக்கும் - இரண்டு காதையுங் கிழித்துருவுகின்ற, அரி மதர் மலர் கண் - செவ்வரி பரந்த மதர்த்த மலர்க் கண்களானவை, ஆங்கவன் தரித்த - அப்பெருமான் கையின்கணேந்திய, கலைமான் கடுக்கும் - கலைமானை யொத்திருக்கும், எ-று.

(வி-ரை.) ஆங்கவன் - ஒருசொல், "ஈங்கிவள் வாய்கமழும்", "ஆங்க துங்காட்டிடென்று", "ஆங்கவன் பூங்கழல்" என்புழிப் போல.

என்னுயிர் வாட்டிய தொடியிளங்கொடிக்கு, அண்ணூந்தெடுத்த வனியுறு வனமுலை தார்க்கொன்றையன் திருவடிபுகழுநர் செல்வம்போலும், மாழ்குறும் நுசுப்பு அவன்கழல் சொல்லுந ரருவினை மானும், அணிப்பாம்பல்குல் மற்றவனசைத்த மாசுணம்பரப்பி யமைத்ததுகடுக்கும், அரிமதர்மலர்க்கண் ஆங்கவன்றரித்த கலைமான்கடுக்கும் என வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் கககக-ம் செய்யுள்.

அன்னமோடழிதல்.

அன்னமோடழிதலென்பது — பங்கயத்தை நோக்கிப் பரிவுறு கின்றவள், உலகமெல்லாம் துயிலாநின்ற விந்நிலைமைக்கண்ணும் யான் றுயிலாமைக்குக் காரணமாகிய என் வருத்தத்தைச் சென்று அவர்க்குச் சொல்லாது, தான் றன் சேவலைப்பொருந்திக் கவற்சியின்றித் துயிலாநின்றதென, அன்னத்தோடழிந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மூவறழீஇயவருண் முதலோன்றில்லைச்செல்வன்மூந்நீர்
நாவறழீஇயவிந்நானிலந்துஞ்சுநயந்தவின்பச்
சேவறழீஇச்சென்று தான்றுஞ்சும்யான்றுயிலாச்செயிரெங்
காவறழீஇயவர்க்கோதாதளியகளியன்னமே.

இன்னகையவ ளிரவருதுயா
மன்னத்தோ டழிந்துரைத்தது.

(ப-ரை.) மூவல் தழீஇய - மூவலைப்பொருந்திய, அருள் முதலோன் - அருளையுடைய முதல்வன், தில்லை செல்வன் - தில்லைக்கணுள்ளனாகிய செல்வன், மூந்நீர் நாவல் தழீஇய - (அவனுடைய) கடலாற் சூழப்பட்ட நாவலைப்பொருந்திய, இ நால் நிலம் துஞ்சும்-இந்த நானிலமுழுதுந் துஞ்சாநின்றது; யான் துயிலா செயிர் - (இப்பொழுதினும்) யான் தயிலாமைக்குக் காரணமாகிய வருத்தத்தை, எம் காவல் தழீஇயவர்க்கு-எமது காவலைப் பொருந்தினவர்க்கு, ஓதாது- உரையாதே, அளிய - அளித்தாகிய, களி அன்னம் - களியன்னமானது, சென்று-(இவ்விடத்தினின்றும்) போய், நயந்த இன்பம் - தான் நயந்தவின்பத்தைச் செய்யும், சேவல் தழீஇ-சேவலைத்தழுவி, தான் துஞ்சும் - (ஒரு கவற்சியின்றித்) தான்றுயிலாநின்றது (இனி யிது கூறுவார் யாவர்), எ - று.

(வி-ரை.) பாலைக்கு நிலமின்மையின் நானிலமென்றார். ஓதாது என்பது முற்றெனினுமமையும்.

நேரிசையாசிரியப்பா.

கறைத்துகிர் வடவையிற் றிரட்சிகை பரப்பி
யரைபெறப் பிணித்த கற்குளி யாக்க
லுள்ளந் தீக்கு மூவர்க்கட லுடுத்த
நாவலந் தண்பொழி லின்புடன் றுயில

வுலகற விழுங்கிய நள்ளென் கங்கு
றுயிலாக் கேளுட னுயிரிரை தேரு
நெட்டுடற் பேழ்வாய்க் கழுது முறங்கப்
பிள்ளையும் பெடையும் பறைவரத் தழீஇச்
சுற்றமுஞ் சூழ்ந்து குருகுகண் படுப்பக்
கீழரும் பணைத்த முள்ளரை முளரி
யிதழ்க்கத வடைத்து மலர்க்கண் டுயில
விரிசினை பொதுளிய பாசிலை யொடுக்கிப்
பூவொடும் வண்டொடும் பொங்கரு முறங்கப்
பான்முகக் களவின் குறுங்காய்ப் பச்சிணர்
புட்காற் பாட்டினர்க் குறையுள் கொடுத்த
மயிர்குறை கருவித் துணைக்குழை யலைப்ப
வரிந்தவிந் தனச்சுமை மதியர விதழி
யகன்றுகட் டவிழ்ந்த சேகரத் திருத்தி
விதியுங் கவலையு மிகவளம் புகன்று
பொழுதுகண் மறைந்த தீவாய்ச் செக்கர்
தணந்தோ ருள்ளத் துள்ளுறப் புகுந்தபின்
காருடல் காட்டிக் கண்டகண் புதைய
அல்லெனு மங்கை மெல்லெனப் பார்க்க
முரன்றெழு காந முயன்றுவா தியைந்த
வடபுல விஞ்சையன் வைகிடத் தகன்கடைத்
தென்றிசைப் பாண னடிமை யானெனப்
போகா விறகுடன் றலைக்கடை பொருந்தி
யுந்தித் தோற்ற மோசைநின் றெடுங்கப்
பாலையி லெழுப்பி யமரிசை பயிற்றித்
தூங்கலுந் துள்ளலுஞ் சுண்டிநின் றெழுதலுந்
தாரியிற் காட்டித் தருஞ்சா தாரி
யுலகுயி ருள்ளமு மொன்றுபட் டொடுங்க
விசைவிதி பாய விசைப்பகை துரந்த
கூடற் கிறையோன் றுள்விடுத் தோரென
என்கண் டுஞ்சா நீர்மை
முன்கண் டோதா தவர்க்குநங் குருகே.

கவைத்துகிர்வடவை - அவர்க்கு நங்குருகே. **பகுதி-ஒருவழித் தணத்தல். துறை - அன்னமோடழிதல்.**

'கவைத்துகிர்' என்பதுமுதல் 'இன்புடன்றுயில' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(ப-ரை.) கவை - கிளைகளாகிய, துகிர்-பவளக்கொடிகள், வடவையின் - வடவாமுகாக்கினியைப்போல, திரள் சிகை பரப்பி - திரட்சியுள்ளனவாய்ப் பக்கங்களிற் பரப்பி, அரை பெற பிணித்த-அரையிற் கயிறுபெறக்கட்டிய, கல் குளி மாக்கள் - முத்து முதலிய மணிகளைக் குளித்தெடுக்கு மாந்தர்களது, உள்ளம் நீக்கும் - உள்ளத்தையெரிக்காநின்ற, உவர் கடல் உடுத்த-உப்புக்கடல்சூழ்ந்த, நாவலம் தண் பொழில்-தட்பமான நாவலந்தீவிலுள்ளார், இன்புடன் துயில- இன்புடனே கண்ணுறங்காநிற்பவும்.

(வி-ரை.) வடவையின் என்பதில் இன் ஐந்தாவதனுருபுப் பொருட்டு.

'உலகற' என்பதுமுதல் 'உறங்க' என்பதுவரை.

(5—7 வரிகள்.)

(ப-ரை.) உலகு அற விழுங்கிய - உலகத்தை முழுதும் விழுங்கிய, நள்ளென் கங்குல் - நடுராத்திரியில், துயிலா கேளுடன் - உறங்குதலில்லாத சுற்றத்தோடு, உயிர் இரை தேரும் - உயிர்களாகிய இரையைத் தேடுகின்ற, நெடு உடல் - நெடிய வுடலினையும், பேழ் வாய் - பெரிய வாயினையுமுடைய, கழுதும் உறங்க - பேய்க்கணங்களுந் தூங்காநிற்பவும்.

'பிள்ளையும்' என்பதுமுதல் 'கண்படுப்ப' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) பிள்ளையும் - தம்குஞ்சுகளையும், பெடையும்-பெடையையும், பறைவரத்தழீஇ - சிறகினுள்ளே தழுவி, சுற்றமும் சூழ்ந்து - தஞ்சுற்றத்தோடுஞ் சூழ்ந்து, குருகு - குருகினங்கள், கண்படுப்ப - கண்ணுறங்காநிற்பவும்.

(வி-ரை.) பறை - ஆகுபெயர், பறத்தற் றொழிலுள்ள தென்பதுபொருள். குருகு-பறவை, "கோலித்திகழ்சிற கொன்றினொடுக்கிப் பெடைக்குருகு" என்றார் பிறரும்.

'கீழரும்பணைத்த' என்பதுமுதல் 'கண்டுயில' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) கீழ் அரும்பு அணைத்த - கீழே யரும்புகளையணைத்த, முள்ளரை முளரி-முள்ளரைத் தாமரைகள், இதழ் கதவு அடைத்து-இதழ்களாகிய கதவங்களை மூடிக்கொண்டு, மலர் கண் துயில-மலர்களாகிய கண் ணுறங்காநிற்பவும்.

'விரிசினைபோதுளிய' என்பதுமுதல் 'பொங்கருமுறங்க' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) விரிசினை பொதுளிய - விரிந்த கிளைகளிற்றளிர்த்த, பாசிலை ஒடுக்கி - பசியவிலைகளை யொடுக்கிக்கொண்டு, பூவொடும் வண்டொடும் - மலர்களோடும் வண்டுகளோடும், பொங்கரும் உறங்க - சோலைகளுந் துயிலாநிற்பவும்.

(வி-ரை.) பொதுளல் - தளிர்த்தல்.

'பான்முகம்' என்பதுமுதல் 'அலைப்ப' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) புள் கால் பாட்டினர்க்கு - புள்ளின்கால்களையுடைய தும்புருநாரதராகிய யாழ்வலவர் பாடலுக்கு, உறையுள் கொடுத்த - உறையுளாகக் கொடுத்த, பால் முகம் - பாலைத் தன்னிடத்திலுள்ள, களவின் - களவினது, குறுங்காய் பச்சிணர் - குறிய காயுடன் பொருந்திய பச்சிலைக்கொத்துகள், மயிர் குறை கருவி - மயிரைக் குறைக்கின்ற கத்திரிகைபோன்ற, துணை குழை - இரண்டு காதிலும், அலைப்ப - அசையாநிற்ப.

(வி-ரை.) தும்புரு நாரதர்கள் பறவைக்காலும் பாடல் வளமையுமுடையராதல்பற்றி அவர்களைப் 'புட்காற் பாட்டினர்' என்றார். மயிர்குறைகருவி - கத்தரிகை.

'வரிந்த' என்பதுமுதல் 'சேகரத்திருத்தி' என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(ப-ரை.) வரிந்த - கட்டப்பட்ட, இந்தனச்சுமை - விறகுக் கட்டை, மதி அரவு இதழி-திங்களும் பாம்புங் கொன்றையும், அகன்று-நீங்கி, கட்டு அவிழ்ந்த-கட்டு நீங்கிய, சேகரத்து இருத்தி-முடிமேல்வைத்து.

(வி-ரை.) இந்தநம் விறகென்னும் பொருள் பயப்பதோர் வடசொல். சேகரம் - திருமுடி.

'வீதியுங்கவலையும்' என்பதுமுதல் 'மெல்லெனப்பார்க்க' என்பதுவரை.

(19—23 வரிகள்.)

(ப-ரை.) வீதியும் கவலையும் - வீதிகளினுஞ் சந்துகளினும், மிக வளம் புகன்று - அதிகவிலைபகர்ந்து, பொழுது கண் மறைந்த - சூரியன் கண்ணினின்று மறைந்த, தீவாய் செக்கர் - தீயையொத்த செவ்வானமானது, தணந்தோர் உள்ளத்துள் - பிரிந்தோருள்ளத்தூடே, உற புகுந்தபின் - உருவி நுழைந்தபின்னர், காருடல் காட்டி-கரியவுடலை யாவருக்குங்காட்டி, கண்ட கண் புதைய-கண்ட கண்கள் தன்னிற்புதையுமாறு, அல் எனும் மங்கை - இருளென்னும் பெண்ணும், மெல்லென பார்க்க - மெல்லப்பாராநிற்கவும்.

(வி-ரை.) வளம்புகறல் - விலைகூறல். தணத்தல் - பிரிதல்.

'முரன்றெழுகாநம்' என்பதுமுதல் 'தலைக்கடைபொருந்தி' என்பதுவரை.

(24—27 வரிகள்.)

(ப-ரை.) முரன்று எழு காநம் - சத்தித்தெழாநின்ற இசைநூலில், முயன்று-முயற்சியுள்ளவனாகி, வாது இயைந்த-வாதுசெய்ய விசைந்த, வடபுல விஞ்சையன் - வடதேயத்தினின்றும் வந்த (ஏமநாதனென்னும்) பாணன், வைகு இடத்து அகன் கடை-தங்கியிருக்கும் வீட்டின்கண் பெரிய வாய்தலில், தென் திசை பாணன்-தென் மதுரையிலுள்ள பாணபத்திரனது, அடிமை யான் என-அடிமையானவனென்றுரைத்து, போகா விறகுடன்-விலைபோகாத விறகோடு, தலைக்கடை பொருந்தி - தலைக்கடையிலிருந்து.

(வி-ரை.) முரலல் - சத்தித்தல். காநம்-இசைநூல். வைகல் - தங்கல். விஞ்சையன் - (காந) வித்தையையுடையவன். புலம்-இடம், இது ஆகுபெயராய் தேசத்தை யுணர்த்திற்று.

'உந்தித்தோற்றம்' என்பதுமுதல் 'விடுத்தோரேன' என்பதுவரை.

(28—34 வரிகள்.)

(ப-ரை.) உந்தி தோற்றம் - நாபியினின்றுந் தோற்றமாகிய, ஓசை நின்று ஒடுங்க-ஓசையானது அங்ஙனநின்றொடுங்க, பாலையில்

எழுப்பி - பாலையென்னும் பண்ணில் ஆரோகணமாக எழுப்பி, அமரிசை பயிற்றி - அவரோகணமாக இறக்கி, தூங்கலும் - தூங்கலும், துள்ளலும் - துள்ளலும், சுண்டிநின்று எழுதலும் - மெலிந்துநின்றெழுதலும், தாரியிற்காட்டி-ஒழுங்காகக்காட்டி, தரும்-தந்த, சாதாரி - சாதாரியென்னும் இசையை, உலகு உயிர் - உலகத்திலுள்ள உயிர்கள், ஒன்றுபட்டு ஒடுங்க-ஒருமைப்பட்டடங்க, இசை விதி பாடிய - கந்தருவ நூன்முறை பாடியருளிய, இசை பகை துரந்த-பத்திரன் பகைவனாகிய பாணனை ஒட்டிய, கூடற்கு இறையோன் - மதுரைக்கிறைவனாகிய சோமசுந்தரமூர்த்தியினது, தாள் விடுத்தோர் என - திருவடியை நினையாதுவிட்டார்போல.

(வி-ரை.) தாரி - ஒழுங்கு. பகை - ஆகுபெயர். துரத்தல் - ஓட்டல்.

‘எண்கண்டுஞ்சா’ என்பதுமுதல் ‘நங்குருகு’ என்பதுவரை.
(35—36 வரிகள்.)

(ப-ரை.) என் கண் துஞ்சா - என் கண்ணுறங்காத, நீர்மை - தன்மையை, நம் குருகு-நமது குருகானது, முன் கண்டு-முன்னறிந்தும், அவர்க்கு - அந்தத் தலைவர்க்கு, ஓதாது-சொல்லாது (என்செய்கேன்).

(வி-ரை.) துஞ்சல் - உறங்கல்.

நாவலந் தண்பொழி லின்புடன் றுயில,கழுதுமுறங்க,முள்ளரை முளரி இதழ்க்கதவடைத்து மலர்க்கண்டுயில, பூவொடும் வண்டொடும் பொங்கருமுறங்க, இந்தனச்சுமை சேகரத்திருத்தி, அல்லெனு மங்கையு மெல்லெனப் பார்க்க, வாதியைந்த வடபுல விஞ்சையன் வைகிடத் தகன்கடை தென்திசைப் பாண னடிமை யாமெனப் போகா விறகுடன் தலைக்கடைப் பொருந்தி இசைவிதிபாடிய இசைப்பகை துரந்த கூடற் கிறையோன் றாள்விடுத்தோரென, என்கண் டுஞ்சாநீர்மை, நங்குருகு அவர்க்கு ஓதா தென்செய்கேனென, வினைமுடிவுசெய்க. (சுசு)

திருக்கோவையார் உஎ௦ - ம் செய்யுள்.
சொல்லாதேகல்.

சொல்லாதேகலேன்பது—நீயே கூறென்ற தோழிக்கு, யானெவ்வாறு கூறினும் அவள் பிரிவுடம்படா ளாதலின் ஒருகாலும் வரைந்துகொள்கையில்லை, யான் விரைய வருவேன், அவ்வளவும்

நீ யாற்றுவித்துக்கொண் டிருப்பாயாகவெனக் கூறித், தலைமகன் றலைமகளுக்குச் சொல்லாது பிரியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

வருட்டிற் றிகைக்கும் வசிக்கிற் றளங்கு மனமகிழ்ந்து
தெருட்டிற் றெளியலள் செப்பும் வகையில்லை சீரருக்கன்
குருட்டிற் புகச்செற்ற கோன்புலி யூர்குறு கார்மனம்போன்
றிருட்டிற் புரிகுழலாட் கெங்ஙனே சொல்லி யேகுவனே.

நிரைவளை வாட
வுரையா தகன்றது.

(ப-ரை.) வருட்டில் - (நுதலுந்தோளு முதலாயினவற்றைத்) தைவந்து ஒன்றுசொல்லக் குறிப்பேனாயின், திகைக்கும் (இஃதென் கருதிச்செய்கின்றானென்று) மயங்காநிற்கும்; வசிக்கில்-இன் சொல்லின் வசித்து ஒன்று சொல்லலுறுவேனாயின், துளங்கும் - (அக் குறிப்பறிந்து) உள் நடுங்காநிற்கும்; தெருட்டில்-(இனி வெளிப்படப் பிரிவுணர்த்திப் பொருண்முடித்துக் கடிதின் வருவலென்று கூறுற்றுத்) தெளிவிப்பேனாயின், மனம் மகிழ்ந்து - மனமகிழ்ந்து, தெளியலள்-(அதனைத்) தேறாள்; (ஆகலான்) செப்பும் வகை இல்லை-(இவ்வாறொழிய) அறிவிக்கும் வகை வேறில்லை; சீர் அருக்கன்-பெருமையையுடைய அருக்கன், குருட்டில் புக - குருடாகிய இழிபிறப்பிற் புகும் வண்ணம், செற்ற கோன்-(அவனை) வெகுண்ட தலைவனது, புலியூர்-புலியூரை, குறுகார்-அணுகாதாரது, மனம்போன்று-மனம்போன்று, இருட்டின் - இருட்டுதலையுடைய, புரிகுழலாட்கு - சுருண்ட குழலையுடையாட்குப் (பிரிவை), எங்ஙனே - எவ்வண்ணம், சொல்லி ஏகுவன் - சொல்லிப்போவேன் (ஒருவாற்றானுமரிது), எ - று.

(வி-ரை.) வருடல் - தைவரல். துளங்கல்-நடுங்கல். அருக்கன்-சூரியன். செற்ற என்பதற்குப் பகுதி செறு. வியாக்கிரபாதரால் பூசிக்கப்பட்டமையாற் றில்லை 'புலியூர்' எனப்பட்டது.

நேரிசையாசிரியப்பா.

இலதெனி னுளதென் றுள்ளமொடு விதித்துஞ்
சொல்லா நிலைபெறுஞ் சூளுறின் மயங்கிச்
செய்குறி குணனுஞ் சிந்தையுட் டிரிவு
முழைநின் றறிந்து பழங்கண் கவர்ந்துங்
கண்ணெதிர் வைகி முகன்கொளிற் கலங்கியும்
வழங்குரு கிளவியிற் றிசையென மாழ்கியு

மொருதிசை நோக்கினு மிருக்கினு முடைந்தும்
போக்கென வுழைய ரயர்ப்பிடை கிளப்பினு
மூலக்குவட் டொழுக்கிய வருவிதண் டாளஞ்
செம்மணி கரிந்து தீத்தர வுயிர்த்தும்
போமென் வாய்ச்சொற் கேட்பினும் புகைந்துங்
கொள்ளா ரறுதியுங் கொண்டோ ரிசைத்தலு
மீதெனக் காட்டிய மயின்மட வரற்கு
முன்னொரு வணிகன் மகப்பே றின்மையின்
மருமான் றன்னை மகவெனச் சடங்குசெய்
துள்ளமுங் கரணமு மவனுழி யொருக்கி
முக்கவர்த் திருநதி துணையுடன் மூழ்கி
யப்புலத் துயிர்கொடுத் தருட்பொருள் கொண்டபின்
மற்றவன் றாயம் வவ்வுறு மாக்கள்
காணிகைக் கொண்ட மறுநிலை மைந்தனை
நிரைத்துக் கிளைகொ ணெடுவழக் குய்த்தலு
மைந்தனுங் கேளிரு மதிமுடிக் கடவுணின்
புந்தியொன் றன்றிப் புகலில னென்றய
ரவ்வுழி யொருசா ரவன்மா துலனென
வறிவொளி நிறைவே யோருருத் தரித்துவந்
தருள்வழக் கேறி யவர்வழக் குடைத்த
கூட னாயகன் றாள்பணி யாரென
எவ்வழிக் கிளவியிற் கூறிச்
செவ்விதிற் செல்லுந் திறனினி யானே.

இலதெனினுளதென்று-திறனினியானே. பகுதி-வரைபொருட் பிரிதல். துறை - சொல்லாதேகல்.

'இலதேனில்' என்பதுமுதல் 'சிந்தையுட்டிரிவும்' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) இலது எனில் - யான்பிரிவேனில்லையெனச் சொல்லின், உளது என்று-(பிரிவு) உளதென்று கருதி, உள்ளமொடு விதித்தும் - தன்னுள்ளத்தி னிச்சயித்தும், சொல்லா நிலைபெறும் -

ஒன்று சொல்லாது மௌனமாகவிருக்கும், சூள் உறின்-சபதங்கொண்டால், செய்குறி குணனும்-செய்கைகளுங் குணங்களும், மயங்கி - பிறழ்ந்து, சிந்தையுள் திரிவும் - மனம் வேறுபட்டும்.

(வி-ரை.) திரிந்துமென்பது திரிவுமென நின்றது. விதித்தல் - நிச்சயித்தல். சொல்லாநிலை - மௌநநிலை.

'உழைநின்று' என்பதுமுதல் 'கலங்கியும்' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) உழை நின்று-பக்கங்களினின்று, அறிந்து - (பேசுஞ் சொல்லிற் குறிப்பு) அறிந்து, பழங்கண் கவர்ந்தும் - துன்பப்படுதற்குக் காரணமானதைக் கிரகித்தும், கண் எதிர் வைகி - கண்முன்னேநின்று, முகன் கொளின் - முகத்தைப் பார்த்தால், கலங்கியும் - மனங்கலங்கியும்.

(வி-ரை.) பழங்கண் - துன்பம். முகன் - பொலி.

'வழங்குறு' என்பதுமுதல் 'உடைந்தும்' என்பதுவரை.
(6—7 வரிகள்.)

(ப-ரை.) வழங்குறு கிளவியில் - பேசுஞ்சொற்களில், திசை என - திசையென்று சொன்னவளவில், மாழ்கியும் - மயங்கியும், ஒருதிசை நோக்கினும் - யாதொரு திசையை நோக்கினும், இருக்கினும் - (அத்திசையில்) இருக்கினும், உடைந்தும்-(இஃது பிரிவின் குறியென) மனமுடைந்தும்.

(வி-ரை.) கிளவி - சொல். மாழ்கல் - மயங்கல். வழங்குறல் - ஒருசொல்லாய் பேசுதலெனப் பொருள்பட்டு நின்றது.

'போக்கென' என்பதுமுதல் 'உயிர்த்தும்' என்பதுவரை.
(8—10 வரிகள்.)

(ப-ரை) உழையர் - ஏவலாளிகள், அயர்ப்பிடை போக்கென கிளப்பினும் - போக்குளதென்று மறவியிற் சொல்லினும், மூலை குவட்டு ஒழுக்கிய-மூலைகளாகிய மலைகளின்மேல் வீழ்த்திய, அருவி-கண்ணருவியுடன், தண் தாளம் - தட்பமாகிய முத்துக்களும், செம்மணி - சிவப்பாகிய மணிகளும், கரிந்து தீத்தர - தீந்து கரியுமாறு, உயிர்த்தும் - நெருப்பர்க பெருமூச்செறிந்தும்.

(வி-ரை.) தட்பம் - குளிர்ச்சி. உயிர்த்தல்-பெருமூச்செறிதல்.

'போமென்' என்பதுமுதல் 'மடவரற்கு' என்பதுவரை.
(11—13 வரிகள்.)

(ப-ரை.) போம் என்-(நீவிர்) செல்லுமென்னும், வாய் சொல் கேட்பினும்-பிறர் வாய்ச்சொல்லைக் காதாற்கேட்பினும், புகைந்தும் - மனம் புகைந்தும், கொள்ளார் - (பிரிவென்னுந் துன்பினைச்) கொள்ளாதவர்களது, அறுதியும் - முடிவும், கொண்டோர் - (பிரிவென்னுந் துணையினைக்) கொண்டோரது, இசைத்தலும் - சொல்லுதலாகிய முடிவும், ஈது என காட்டிய - இத்தன்மையதென்று வெளிப்படுத்திய, மயில் மடவரற்கு - மயில்போலுந் தலைவிக்கு.

(வி-ரை.) இசைத்தல் - சொல்லுதல். மயின்மடவரல் - உவமைத்தொகை நிலைத்தொடர். மடவரல்-ஆகுபெயர்.

'இனியான், முன்னொரு' என்பதுமுதல் 'கோண்டபின்' என்பதுவரை.
(29, 14—18 வரிகள்.)

(ப-ரை.) இனி யான் - இப்பொழுது யான், முன்-முற்காலத்தில், ஒரு வணிகன்-ஒரு வணிகனுனவன், மகப்பேறு இன்மையின் - பிள்ளைப்பேறில்லாமையால், மருமான் தன்னை - மருமகனை, மகவுஎன - பிள்ளையாக, சடங்கு செய்து - ஸ்வீகாரஞ் செய்து கொண்டு, உள்ளமும் கரணமும் - தன்னுயிரு மந்தக்கரணமும், அவனுழி ஒருக்கி - அப்பிள்ளையினிடத் தொருங்குவைத்து, முக்கவர் திருநதி - கங்கை யமுனை வாணியென்னு முக்கூடலாகிய மாதீர்த்தத்தில், துணையுடன் மூழ்கி - மனையவளோடு ஸ்நாநஞ்செய்து, அப்புலத்து-அவ்வடகாசியில், உயிர் கொடுத்து - வியோகமடைந்து, அருள் பொருள் - அருளாகிய பொருளை, கொண்டபின் - (அவ்வணிகன் மறுமையில்) கைக்கொண்ட பின்னர்.

(வி-ரை.) வாணி - சரசுவதி. துணை - ஆகுபெயர். வியோகம் - மரணம். பிள்ளைப்பேறு - பிள்ளைபெறுதல், இதனை புத்ரலாபம் என்பர் வடநூலார். கரணம் மேல்வருதலால் உள்ளம் என்றது ஈண்டு உயிரைக் குறித்தது.

'மற்றவன்றுயம்' என்பதுமுதல் 'உய்த்தலும்' என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(ப-ரை.) மற்று அவன் தாயம் - அவனுக்கு ஞாதியராகிய, வவ்வுறும் மாக்கள்-பொருள்கவருஞ் சுற்றத்தார், காணி கைக்கொண்ட - முன்னம் அவன் காணியைக் கைக்கொண்டிருந்த, மறுநிலை மைந்

தலை - வேறுகோத்திரப் புத்திரனை, கிளை கொள் - சுற்றத்தாரைக் கொண்டு, நிரைத்து - சபைகூட்டி, நெடு வழக்கு - நெருங்கிய வழக்கில், உய்த்தலும் - செலுத்தித்தாங் காணி கைக்கொள்ளுதலும்.

(வி-ரை.) தாயம்-ஆகுபெயர். காணி - பூமி. கிலை இங்குக்கோத்திரத்தை யுணர்த்திற்று. நிரைத்தல் - சபைகூட்டல்.

‘மைந்தனும்’ என்பதுமுதல் ‘ஒருருத்தரித்துவந்து’ என்பதுவரை.

(22—25 வரிகள்.)

(ப-ரை.) மைந்தனும் - அப்புதல்வனும், சேளிரும் - மற்றையுறவினரும், மதி முடி கடவுள்-முடியின்கண் மதியைத்தரித்த கடவுளே, நின் புந்தி ஒன்று அன்றி - உனது திருவுளமாகிய ஓர் புகலிடனல்லாமல், புகல் இலன் என்று - வேறாதரவில்லேனென்று, அயர் - வருந்துகின்ற, அவ்வுழி-அந்நிலையில், ஒருசார்-ஒருபக்கத்திலிருந்து, அவன் மாதுலன் என - அவன் மாமனைப்போல, அறிவு ஒளி நிறைவே - அறிவாகிய பூரணப்பிரகாசமே, ஓர் உரு தரித்து வந்து - ஓர் திருமேனியாகக் கொண்டுவந்து.

(வி-ரை.) மைந்து - உறுதி. மைந்தன் - மறுமைக்குறுதியாய்பவன் (நற்கதியிற் செலுத்துவோன்). மதிமுடிக்கடவுள் - அண்மைவிளி.

‘அருள்வழக்கேறி’ என்பதுமுதல் ‘சேல்லுந்திறம்’ என்பதுவரை.

(26—29 வரிகள்.)

(ப-ரை.) அருள் வழக்கு ஏறி-அருளால் வழக்குப்பேசி, அவர் வழக்கு உடைத்த - அத்தாயத்தோரது வழக்கைக் கெடுத்தருளிய, கூடல் நாயகன்-மதுரைக்கு நாயகனாகிய சோமசுந்தரமூர்த்தியினது, தாள் - திருவடிகளை, பணியார் என-வணங்காதார்போல, எவ்வழி - எவ்வாற்றான், கிளவியின் கூறி-சொல்லாற்சொல்லி, செவ்வி தின் - சேர்மையாக, செல்லும் திறன் - பிரிந்துசெல்லும் வகை.

(வி-ரை.) உடைத்தல்-கெடுத்தல். கிளவியின் என்பதில்’ இன் என்னுமைந்தாவது மூன்றாவதன் பொருளில்வந்தது.

விதிர்த்தும் திரிந்தும் சுவர்ந்தும் கலங்கியும் மாழ்கியும் உடைந்தும் உயிர்த்தும் புகைந்தும் அறுதியும் இசைத்தலும் காட்டிய மடவாற்கு யானினிக் கூடனுயகன்றாள் பணியாரென எவ்வழிக் கிளவியிற் கூறிச் செல்லுந்திறனென வினைமுடிவு செய்க. (௪௫)

திருக்கோவையார் ௩௰ம் செய்யுள்.

தெளிதல்.

தெளிதலென்பது—ஐயுற்ற பின்னர் அவயவ மியங்கக்கண்டு இவள் தெய்வமல்லளென்று தெளியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பாயும் விடையரன் றில்லையன் னாள்படைக் கண்ணிமைக்குந்
தோயு நிலத்தடி தூமலர் வாடுந் துயரமெய்தி
யாயுமன னேயணங் கல்லளம் மாமுலை சுமந்து
தேயு மருங்குற் பெரும்பணைத் தோளிச் சிறுநுதலே.

அணங் கல்லளென் றயில்வேலவன்
குணங்களை நோக்கிக் குறித்துரைத்தது.

(ப-ரை.) பாயும்-பாய்ந்து செல்லும், விடை-விடையையுடைய, அரன் - அரனது, தில்லை அன்னாள் - தில்லையை யொப்பாளுடைய, படை கண் - படைபோலுங் கண்கள், இமைக்கும் - இமையாநின்றன; நிலத்து - நிலத்தின்கண், அடி தோயும் - அடி தீண்டாநின்றன, தூ மலர்-தூய மலர்கள், வாடும்-வாடாநின்றன; (ஆதலின்)-துயரம் எய்தி-துயரத்தையெய்தி, ஆயும் மனனே - ஆராயுமனனே, அம் மா - அழகிய பெரியவாகிய, முலை சுமந்து - முலைகளைச் சுமந்து, தேயும்-தேயாநின்ற, மருங்குல்-மருங்குலையும், பெரும் பணை - பணை போலும் பெரிய, தோள் - தோள்களையுடைய, இ சிறு நுதல் - இச் சிறுநுதலாள், அணங்கு அல்லள் - தெய்வமல்லள், எ - று.

நேரிசையாசிரியப்பா.

நின்றறி கல்வி யொன்றிய மாந்தர்
புனைபெருங் கவியுட் டருபொரு ளென்ன
வோங்கிப் புடைபரந் தமுதமுள் ளூறிக்
காண்குறி பெருத்துக் கச்சது கடிந்தே
யெழுத்துமணி பொன்பூ மலையென யாப்புறு

றணிபெரு முலைமேற் கோதையு மொடுங்கின
செங்கோ லரசன் முறைத்தொழில் போல
வமுதமுங் கடுவும் வாளும் படைத்த
மதர்விழித் தாமரை மலர்ந்திமைத் தமர்த்தன
செய்குறை முடிப்பவர் செனனம் போலப்
பதமலர் மண்மிசைப் பற்றிப் படர்ந்தன
வமுதம் பொடித்த முழுமதி யென்ன
முகம்வியர்ப் புறுத்தின வுள்ளமுஞ் சுழன்றன
விதழியுந் தும்பையு மதியமுங் கரந்து
வளைவிலை மாக்கள் வடிவெடுத் தருளி
முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கால்
வீதி கூறி விதித்தமுன் வரத்தாற்
கருமுகில் விளர்ப்ப வறனீர் குளிப்பக்
கண்புதை யாப்புத் திணியிருள் விடிய
வுடன்றுறும் பிணித்த பாவமும் புலரக்
கண்டநீள் கதுப்பினர் கைகுவி பிடித்துக்
குருகணி செறித்த தனிமுத னாயகன்
குருகு மன்னமும் வால்வளைக் குப்பையை
யண்டமும் பார்ப்பு மாமென வணைக்கும்
மலைநீர்ப் பழன முதுநகர்க் கூட
லொப்புடைத் தாயவிப் பொற்றொடி மடந்தை
யணங்கின ளாமென நினையல்
பிணங்கி வீழ்ந்து மாழ்குறு மனனே.

நின்றறிகல்வி - மாழ்குறுமனனே. பகுதி-இயற்கைப்புணர்ச்சி. துறை - தெளிதல்.

பிணங்கி வீழ்ந்து மாழ்குறு மனனே.
(28—வது வரி.)

(ப-ரை.) பிணங்கி - (என்னோடு) மாறுபட்டு, வீழ்ந்து - இச்சித்து, மாழ்குறும் - மயங்காநின்ற, மனனே-மனமே (கேட்பாயாக).

(வி-ரை.) பிணங்கல் - மாறுபடல். வீழ்தல்-இச்சித்தல். மாழ்கல் - மயங்கல். விளித்தல் கேட்பித்தற்காதலின், கேட்பாயாக வென்பது வருவித்துரைக்கப்பட்டது.

'இதழியும்' என்பதுமுதல் 'வடிவெடுத்தருளி' என்பதுவரை.
(14—15 வரிகள்.)

(ப-ரை.) இதழியும் - கொன்றைமலர் மாலையையும், தும்பையும் - தும்பைமலர் மாலையையும், மதியமும்-இளமதியையும், காந்து-மறைத்து, வளைவிலை மாக்கள் - வளையல் விற்பவரது, வடிவு எடுத்தருளி - உருவங்கொண்டருளி.

(வி-ரை.) இதழி தும்பை யென்பன ஆகுபெயர்கள். மதியம் என்றது ஒரு கலையாகிய பிறையை.

முத்தமிழ் நான்மறை முளைத்தருள் வாக்கால்.
(16—வது வரி.)

(ப-ரை.) முத்தமிழ் - இயலிசை நாடகமாகிய முத்தமிழும், நால்மறை - நான்குவேதங்களும், முளைத்தருள்-பிறந்தருளிய, வாக்கால் - திருவாக்கால்.

'வீதிகூறி' என்பதுமுதல் 'புலர' என்பதுவரை.
(17—20 வரிகள்.)

(ப-ரை.) வீதி கூறி-வீதியின்கண் விலைகூறி, முன் விதித்த வரத்தால் - முற்காலத்திற் கட்டளையிட்ட வரம் காரணமாக, கருமுகில் விளர்ப்ப - கரியமேகங்கள் வெளிறுகவும், அறல் நீர் குளிப்ப-கருமணல்நீரிற் குளிப்பவும், கண்புதை -(பார்க்கின்றோர்) கண்கள் புதைந்திடத்தக்க, யாப்புத் திணியிருள் - திணிந்த இருட்பிழம்பானது, விடிய-விடியவும், உடல்தொறும்-உடல்கடோறும், பிணித்த-யாத்த, பாவமும்-பாவங்களும், புலர-வாடவும்.

(வி-ரை.) விளர்த்தல் - வெளிறுதல். பிழம்பு - கூட்டம். விடிதல் - புலர்தல். யாத்தல் - கட்டல். புலர்தல் - வாடல்.

'கண்ட' என்பதுமுதல் 'தனிமுதனாயகன்' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) கண்ட - செய்த, நீள் கதுப்பினர் - முடிகூடிய கூந்தலையுள்ள வணிகமாதர்களுடைய, கை குவி பிடித்து - கைகளை குவித்துப் பிடித்து, குருகு அணி-வளையலென்னும் அணியை,செறித்த - இசைத்த, தனிமுதல் நாயகன் - தனக்கொப்பு முயர்வுமில்லாத தலைவனது.

(வி-ரை.) தூண்டல் - செய்தல். கதுப்பு - கூந்தல். அணி-ஆபரணம்.

'குருகும்' என்பதுமுதல் 'மடந்தை' என்பதுவரை.
(23—26 வரிகள்.)

(ப-ரை.) குருகும் - நாரைகளும், அன்னமும்-அன்னப்பறவைகளும், வால் வளைக்குப்பையை - வெள்ளிய சங்கினங்களை, அண்டமும் - (தாந்தாமீன்ற) முட்டைகளும், பார்ப்பும் - குஞ்சுகளும், ஆம் என-ஆகுமென்று கருதி, அணைக்கும் - அடைகிடக்கின்ற, அலைநீர் - அலைபொருந்திய நீரினையுடைய, பழனம் - வயல்நிலங்களாற் சூழப்பட்ட, மூதுநகர் கூடல்-(நகரங்களுள்) முதுநகராகிய கூடலை, ஒப்புடைத்தாய - ஒப்புடையளாகிய, இப்பொன் தொடி மடந்தை - இந்தப் பொற்றொடியினையுடைய பெண்ணானவள்.

(வி-ரை.) ஒப்பு-நிகர். பொன்தொடி-பொன்வளையல். மடந்தை-ஈண்டுப் பெண்பொதுப்பெயராய் நின்றது.

'நின்றறிகல்வி' என்பதுமுதல் 'ஒடுங்கின' என்பதுவரை.
(1—6 வரிகள்.)

(ப-ரை.) நின்று அறி கல்வி-நிலைபெற்றறியத்தக்க கல்வியை, ஒன்றிய மாந்தர் - பொருந்திய அறிஞர்களால் செய்யப்பட்ட, புனை பெருங்கவியுள்-அலங்கரித்துச் சொல்லிய பெரியகவிதைகளிடத்தே, தரு பொருள் என்ன-தந்தபொருளைப்போல, ஓங்கி-உயர்ந்து, புடை பரந்து - பக்கங்களிற் பரந்து, அமுதம் உள் ஊறி - உள்ளே யமுதமூறி, காண் குறி பெருத்து-காணுங்குறியுடன் பெருத்து, கச்சு கடிந்து-வாரைக்கிழித்து, எழுத்து (என)-எழுத்தெனவும், மணி (என)-மணியெனவும், பொன் (என)-பொன்னெனவும், பூ (என)-பூவெனவும், மலை என - மலையெனவும், யாப்புற்று - அச்செய்யுள்போற் கொண்டு, அணி பெறு முலைமேல்-அழகுபெற்ற முலைமேற்றரித்த, கோதையும் ஒடுங்கின - மாலைகளும் வாடிநின்றன.

(வி-ரை.) அறிஞரை நின்றறி கல்வி யொன்றிய மாந்தர் என்றது அவரது நிகரறு புலமை நிலவுதற்பொருட்டென்க. குறி-அடையாளம். கவிக்கு அணி அலங்காரம் எனக்கொள்க.

'செங்கோலரசன்' என்பதுமுதல் 'இமைத்தமர்த்தன' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) செங்கோல் அரசன்-செங்கோலையுடைய அரசனது, முறைத்தொழில்போல - மநுமுறை செய்கைபோல, அமுதமும்

கடுவும் வாளும் படைத்த-அமுதமும் விஷமும் வாளும் பெற்ற, மதர் விழி - மதர்த்த விழிகளாகிய, தாமரை-தாமரைமலர்கள், மலர்ந்து - விரிந்து, இமைத்து அமர்த்தன - அமர்செய்தலுட னிமையாநின்றன.

(வி-ரை.) செவ்விய கோல்போறலின் செங்கோலெனப்பட்டது; இது உவமையாகுபெயர். அமுதம் கடுவாள் என்பனவும் அவை; தாமரை யென்பதும் அது. அமர்த்தல்-அமர்செய்தல்.

'செய்குறை' என்பதுமுதல் 'படர்ந்த' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) செய் குறை-(முன்) செய்துவிட்ட குறையை, முடிப்பவர் - நிறைவேற்ற வந்தவரது, செனனம்போல - பிறவியைப் போல, பதமலர் - பாதங்களாகிய மலர்கள், மண்மிசைப்பற்றி-மண் மீது பொருந்தி, படர்ந்தன - நடவாநின்றன.

'அமுதம்பொடித்த' என்பதுமுதல் 'சுழன்றன' என்பதுவரை.

(12—13, 27 வரிகள்.)

(ப-ரை.) அமுதம் பொடித்த - அமுதத்துளிகளரும்பின; முழு மதி என்ன-நிறைமதி யென்னுமாறு, முகம் வியர்ப்புறுத்தின-முகத்தின்கண் வியர்வு அரும்பாநின்றன; உள்ளமும் சுழன்றன - இவளுள்ளமுஞ் சுழலாநின்றன; (ஆதலால்) அணங்கினள் ஆம் என - தெய்வப்பெண்ணாமென்று, நினையல் - நீ கருதற்க.

(வி-ரை.) பொடித்தல் - அரும்புதல். நிறைமதி-பூர்ணசந்திரன்.

மாழ்குறுமனனே! இதழி முதலிய காந்து, வளைவிலைமாக்கள் வடிவெடுத்து, நீள்கதுப்பினர் கைகுவி பிடித்து, குருகணி செறித்த நாயகனது கூடலொப்புடைத்தாய மடந்தை முலைமேற் கோதையுமொடுங்கின, விழித்தாமரை மலர்ந்திமைத் தமர்த்தன, பதமலர் மண்மிசைப்பற்றிப் படர்ந்தன, முகம் வியர்ப்புறுத்தின, உள்ளமுஞ் சுழன்றன, ஆதலால், அணங்கினளாமென நினையலென வினைமுடிவு செய்க. (சசு)

திருக்கோவையார் ௩கசு-ம் செய்யுள்.

கூதிர்கண்டு கவறல்.

கூதிர்கண்டு கவறலென்பது—விழாநின்ற பனியிடத்து எல்லாரும் நெருப்புத்திரளை மேவாநிற்ப, மலைத்திரளையேறித் துணை

யில்லாதாரைத் தேடும் புயலினம் நமக்கேயன்றித் தம்மை யடைந்தார்க் குதவிசெய்யச் சென்றார்க்குஞ் சென்று பொருந்துமோ, பொருந்துமாயின் நம்மை நினைந்து ஆற்றாராய் அவ்வினை முடிக்கமாட்டாரெனத் தலைமகள் கூதிர்கண்டு கவலாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கருப்பின மேவும்பொ ழிற்றில்லை மன்னன்கண் ணாருளால்
விருப்பின மேவச்சென் றார்க்குஞ்சென் றல்குங்கொல் வீழ்பனிவாய்
நெருப்பின மேநெடு மாலெழி றோன்றச்சென் றாங்குநின்ற
பொருப்பின மேறித் தமியரைப் பார்க்கும் புயலினமே.

இருங்கூதி ரெதிர்வுகண்டு
கருங்குழலி கவலையுற்றது.

(ப-ரை) வீழ் பனிவாய் - வீழாநின்ற பனியிடத்து, நெருப்பு இனம் மேவ-எல்லோரும் நெருப்புத்திரளை மேவாநிற்ப, நெடு மால்-நெடிய மாயவனது, எழில் தோன்ற சென்று - அழகு கண்டார்க்குப் புலப்படச்சென்று, ஆங்கு நின்ற-அவ்விடத்துநின்ற, பொருப்பினம் ஏறி-மலைத்திரளை யேறி, தமியரை பார்க்கும்-துணையில்லாதாரைத் தேடும், புயல் இனம் - புயலினங்கள், கரும்பு இனம் மேவும் - கரும்புத்திரள் பொருந்தும், பொழில் தில்லை - பொழிலையுடைய தில்லையின், மன்னன்கண் - மன்னன் கணுண்டாகிய, ஆர் அருளால் - மிக்கவருளால், விருப்பு இனம் மேவ சென்றார்க்கும்-விருப்பையுடைய தமினம் (தம்மாலுதவிபெற்றுப்) பொருந்தும்வண்ணஞ் சென்றார்க்கும், சென்று அல்குங்கொல் - சென்று தங்குமோ, எ - று.

(வி-ரை.) மேவ என்பது ஈறுதொகுத்தலாய் மேயென நின்றது. கரும்பு கருப்பு என வலித்தலாயிற்று. அல்குதல் - தங்குதல். நெருப்பினமே யென்பதனைப் புயன்மேலேற்றி இடிநெருப்பென்றும், சென்றென்பதனை மலைமேலேற்றி உயர்ந்தென்றும் உரைத்தலுமாம். கூதிர்-பனிக்காற்று.

நேரிசையாசிரியப்பா.

பசிமயல் பிணித்த பிள்ளைவண் டரற்ற
வாசையிற் செறிந்த பொங்கர்க் குலத்தா
யருப்பு முலைக்கண் டிறந்துமிழ் மதுப்பால்
சினைமலர்த் துணைக்கரத் தன்புட னணைத்துத்
தேக்கிட வருத்தி யலர்மலர்த் தொட்டில்
காப்புறத் துயிற்றுங் கடிநகர்க் கூட

லருளுட னிறைந்த கருவுயிர் நாயகன்
குரவரும் புடுத்த வாலெயிற் றழல்விழிப்
பகுவாய்ப் பாம்பு முடங்க லாக
வாலவாய் பொதிந்த மதிமுடித் தனிமுதல்
சேக்கொண் முளரி யலர்த்திய திருவடி
கண்பரு காத களவின ருளம்போற்
காருடன் மிடைந்த குளிறுகுரற் கணமுகி
லெம்முயி ரன்றி யிடைகண் டோர்க்கு
நெஞ்சறை பெருந்துய ரோவா துடற்றக்
கவையா நெஞ்சமொடு பொருவினைச் சென்றோர்
கண்ணினுங் கவருங் கொல்லோ
வுண்ணிறைந் திருந்த வாழிய மனனே.

பசிமயல்பிணித்த - வாழியமனனே. **பகுதி** - பகைதணிவினைப் பிரிவு. **துறை** - கூதிர்கண்டு கவறல்.

'பசிமயல்' என்பதுமுதல் 'பொங்கர்க்குலத்தாய்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) பசி மயல் பிணித்த - பசியாகிய மயக்கத்தாற் கட்டுண்ட, பிள்ளை வண்டு அரற்ற - பிள்ளையாகிய வண்டுகள் கோஷிக்க, ஆசையின் செறிந்த - ஆசையின் மிக்க, பொங்கர் குலத்தாய்-சோலையாகிய நற்றாய்.

(வி-ரை.) பிணித்தவென்ப தீண்டுச் செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. குலத்தாய் - சிறந்ததாய் (நற்றாய்).

'அருப்பு' என்பதுமுதல் 'அன்புடனணைத்து' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) அருப்பு முலைக்கண் - அரும்புகளாகிய முலைக்கண்களை, திறந்து - திறந்து, உமிழ் மது பால் - உமிழாநின்ற மதுவாகிய பாலை, மலர்ச்சினை - பூங்கொத்துகளாகிய, துணைக்கரத்து-இருகரங்களால், அன்புடன் அணைத்து - ஆசையோடு தழுவி.

(வி-ரை.) அரும்பு அருப்பென வலித்தல்பெற்றது. மது-தேன். துணை - இரண்டு. கரம் - கை.

'தேக்கிட்' என்பதுமுதல் 'நாயகன்' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை) தேக்கிட அருத்தி - தெவிட்ட வுண்பித்து, அலர் மலர்த்தொட்டில் - விரிந்த மலர்த்தொட்டில், காப்புற - சோர்வுற, துயிற்றும் - துயில்வியாநின்ற, கடி நகர்-சிறப்பினையுடைய நகராகிய, கூடல் - நான்மாடக்கூடலில், அருளுடன் நிறைந்த - அருட்சத்தியுடனிறைந்தருளிய, கருவுயிர் நாயகன் - கருவுயிர்த்தற் காதாரத் தலைவன்.

(வி-ரை.) தேக்கல் - தெவிட்டல். அருத்தல் - உண்பித்தல். மலர்த்தொட்டில் - மலராகிய தொட்டில். துயிற்றல் - துயில்வித்தல்.

'குரவரும்பு' என்பதுமுதல் 'களவினருளம்போல்' என்பதுவரை.
(8—12 வரிகள்.)

(ப-ரை.) குரவு அரும்பு - குராவரும்புகள், உடுத்த - சூழ்ந்தாலொத்த, வால் எயிற்று - வெள்ளிய பற்களையும், அழல் விழி-அழலுகின்ற விழியினையும், பகு வாய் - பிளவாநின்ற வாயினையுமுடைய, பாம்பு - (தனது கரகங்கணமாகிய) பாம்பு, முடங்கல் ஆக - உடலை வளைத்து எல்லை காட்டுதலால், ஆலவாய் பொதிந்த - ஆலவாயாகச் செய்தருளிய, மதிமுடி - சந்திரசேகரனாகிய, தனி முதல் - ஒப்பற்ற முதல்வனது, சேக்கொள் - செந்நிறமுள்ள, முளரி - தாமரைபோல, அலர்த்திய - விரித்தாடியருளிய, திருவடி - திருவடியை, கண் பருகாத - கண்ணினாற் றரிசியாத, களவினர் உளம்போல் - வஞ்சகருள்ளத்தைப்போல.

(வி-ரை.) குரவு - குராமரம். அரும்பு - மொட்டு. வால் - வெண்மை. அழல்விழி - வினைத்தொகை நிலைத்தொடர்; பகுவாயும் அது. முடங்கல்-வளைதல். மதியென்ற நீண்டொரு கலையாகிய சந்திரனை. அலர்த்தியது ஆடுதற்காதலால் அலர்த்திய வென்பதற்கு விரித்தாடிய வெனப் பொருளுரைக்கலாயிற்று. பருகல் - தரிசித்தல்.

'காருடன்மிடைந்த' என்பதுமுதல் 'மனனே' என்பதுவரை.
(13—18 வரிகள்.)

(ப-ரை.) காருடன் மிடைந்த-கருமையாகி நெருங்கிய, முகில் கணம் - மேகஜாலம், குளிறு குரல்-முழங்காநின்ற குரலுடனே, எம்

உயிர் அன்றி - எம்முயிர்க்கும், இடை கண்டோர்க்கும் - இடையிலே தன்னைக்கண்ட ஏனையோருயிர்க்கும், நெஞ்சு அறை பெரு துயர் ஓவாது உடற்ற - நெஞ்சானது அறைபோதலாகிய நெடுந்துயரொழியாவண்ணந் தம்மை வருத்தாநிற்ப, கவையா - துன்பமுறாத, நெஞ்சமொடு - மனதுடனே, பொருவினை சென்றோர் - பகைவர்மேற் பொருந்தொழிலிற் சென்றோரது, கண்ணினும் கவரும் கொல்லோ - (மனத்திலில்லையாயினும்) கண்ணிலேனும் இக்கார்ப்பருவங் காணப்படுமோ, உள் - என்னுள்ளே, நிறைந்திருந்த-நிறைந்திருந்த, மனனே - என் மனனே.

(வி-ரை.) வாழிய வென்பது முன்னிலை யசைச்சொல். மிடைதல் - நெருங்குதல். ஜாலம் - கூட்டம். குளிறல் - முழங்கல். அறைபோதல் - ஊடறுத்துச்செல்லல். கவைத்தல் - துன்புறல். பொருந்தொழில் - போர்செய்யுந்தொழில். கவரும் - செயப்பாட்டுவினை.

மனனே ! கடிநகர்க் கூடலை ஆலவாய் பொதிந்த தனிமுதற் றிருவடி பருகாதா ருளம்போல மிடைந்த கணமுகில், ஓவாதுடற்ற, பொருவினைச் சென்றோர் கண்ணினுங் கவருங்கொல்லோவென வினைமுடிவு செய்க. (சஎ)

திருக்கோவையார் ௩௪௯-ம் செய்யுள்.

முகிலொடு கூறல்.

முகிலொடுகூற லென்பது — பருவங்கண்டிரங்கி விரைவோடு வாராநின்ற தலைமகன், இவ்விடத்தெல்லாம் முற்பட்டாயாயினும் முதுபெண்டீர் திரண்டு அவளின்றுணைமையை நீக்கற்கு இல்லுறை கடவுட்குப் பூசனை செய்யாநிற்கும் நீணகரத்திற்கு என்னின் முற்படாதொழிவாயாகவென, முந்துற்றுச் செல்லாநின்ற முகிலொடு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

அற்படு காட்டினின் றாடிசிற் றம்பலத் தான்மிடற்றின்
முற்படு நீண்முகி லென்னின்முன் னேன்முது வோர்குழுமி
விற்படு வாணுத லாள்செல்ல நீர்ப்பான் விரைமலர்தூய்
நெற்படு வான்பலி செய்தய ராநிற்கு நீணகர்க்கே.

எனைப்பல துயரமோ டேகா நின்றவன்
துனைக்கா ரதற்குத் துணிந்து சொல்லியது.

(ப-ரை.) அல் படு காட்டின்-(மாலைக்காலத்து) இருளுண்டாகாநின்ற மயானத்தின்கண், நின்று ஆடி - நின்றாடுவோன்; சிற்றம்பலத்

தான் - சிற்றம்பலத்தின்கண்ணான், மிடற்றின் - (அவனது) மிடறு போல இருண்டு, முற்படு - முற்பட்டோடுகின்ற, நீள் முகில் - நீண்ட முகிலே (இவ்விடத்தெல்லா முற்பட்டாயாயினும்), முதுவோர் குழுமி - முதுபெண்டிர் திரண்டு, வில் படு வாள் நுதலாள் - வில் தாழும்படி ஒளியையுடைய நுதலாளது, செல்லல் தீர்ப்பான் - இன்னாமையை நீக்கவேண்டி, விரை மலர் தூய் - நறுநாற்றத்தையுடைய மலர்களைத் தூவி, நெல் படு - நெல் விரவிய, வான் பலி செய்து - தூய பலியைக் கொடுத்து, அயராநிற்கும் நீள் நகர்க்கு - (இல்லுறை கடவுட் பூசனை) செய்யாநிற்கும் பெரிய இல்லத்திற்கு, என்னின் முன்னேல் - என்னின் முற்படாதொழிவாயாக, எ-று.

(வி-ரை.) துனைதல் - விரைதல். படுகாடு - புறங்காடு. மிடறு - கண்டம். நீண்முகில் - அண்மைவிளி. குழுமல் - திரளல். நுதல் - நெற்றி. இன்னாமை - துன்பம். நகர் - ஈண்டில்லத்தைக் குறித்தது.

நேரிசையாசிரியப்பா.

கருங்குழற் செவ்வாய்ச் சிற்றிடை மடந்தைக்
குளத்துய ரீந்து கண்டுயில் வாங்கிய
வாணு வின்ன லழிபடக் காண்பான்
விரிபொரி சிந்தி மணமலர் பரப்பித்
தெய்வக் குலப்புகை விண்ணொடும் விம்ம
விருநாற் றிசையு முண்பலி தூவி
நானூன் யாக்க ளணிக்குறி சொற்றுப்
பக்கஞ் சூழ்ந்த நெடுநகர் முன்றிற்
கோடகழ்ந் தெடுத்த மறிநீர்க் காலும்
வெண்கார் பெய்யு நாள்குறித் துழுநருஞ்
சூனிறைந் துளையுஞ் சுரிவளைச் சாற்று
மினக்கய லுண்ணுங் களிக்குரு கினமும்
வரைப்பறை யரிந்த வாசவற் றொழுது
நிரைநிரை விளம்பி வழிமுடி நடுநரு
நாறுகழி துற்ற சகடூர்க் குநருந்
தாமரை பாடு மறுகாற் கிளியு
முறைத்தெற்றி கம்பலை யும்பரைத் தாவி
முடித்தலை திமிர்ப்ப வடிக்கடி கொடுங்கு

மள்ளற் பழனத் தணிநீர்க் கூட
னீங்கா துறையு நிமிர்சடைப் பெருமா
னுரகன்வாய் நீண்ட மாதவன் போல
மண்ணகழ்ந் தெடுத்து வருபுனல் வையைக்
கூலஞ் சுமக்கக் கொட்டா ளாகி
நரைத்தலை முதியோ ளிடித்தடு கூலிகொண்
டடைப்பது போல வுடைப்பது நோக்கிக்
கோமக னடிக்க வவனடி வாங்கி
யெவ்வுயி ரெவ்வுல கெத்துறைக் கெல்லா
மவ்வடி கொடுத்த வருணிறை நாயகன்
றிருமிடற் றிருளெனச் செறிதரு மாமுகி
லெனதுகண் கடந்து நீங்கித்
துணைவுடன் செல்ல லொருங்குபு புரிந்தே.

கருங்குழற்செவ்வாய் - ஒருங்குபுபுரிந்தே. பகுதி-பொருள்வயிற் பிரிவு. துறை - முகிலொடுகூறல்.

'கருங்குழல்' என்பதுமுதல் 'காண்பான்' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) கருங்குழல் செவ்வாய் - கருங்குழலினையுஞ் செவ்வாயினையும், சிறு இடை - நுண்ணிடையையுமுடைய, மடந்தைக்கு - தலைவிக்கு, உளத்துயர் ஈந்து-உள்ளத்திற் றுன்பத்தைக் கொடுத்து, கண் துயில் வாங்கிய - கண்ணுறக்கத்தை நீக்கிய, ஆறு இன்னல் - நீங்காத துன்பத்தால், அழிபடக் காண்பான் - வருந்தக்காணும் பொருட்டு.

(வி-ரை.) அழிபட-ஒருசொல், அழியவென்பது பொருள். பான்-செயவென் வாய்பாட்டு வினையெச்சம்.

'விரிபொரிசிந்தி' என்பதுமுதல் 'சோற்று' என்பதுவரை.
(4—7 வரிகள்.)

(ப-ரை.) விரிபொரி சிந்தி-வாய்விரிந்த பொரிதெளித்து, மண மலர் பரப்பி - மணத்த மலர்களைப் பரப்பி, தெய்வக் குலப்புகை - தேவர்கோயில்களி லாராதிக்கும் குங்கிலியப்புகை, விண்ணெடும் விம்ம-ஆகாயமெங்கும் பரவ, இரு நால் திசையும் - எட்டுத் திசையினும், உண்பலி தூவி-சோற்றுப்பலி யிறைத்து, நால் நூல் மாக்கள்-

நாலுகின்ற வுபவீதத்தையுடைய வேதியர், நணிக்குறி சொற்று - வந்து குறிகளைச் சொல்லியதால்.

(வி-ரை.) குலம்-கோயில். ஒடு எழாவதன் பொருளில் வந்தது. நாலல் - தொங்கல். நூல் - பூநூல். நண்ணி நணியென விகாரமாயிற்று.

'பக்கஞ்சூழ்ந்த' என்பதுமுதல் 'களிக்குருகினமும்' என்பதுவரை.

(8—12 வரிகள்.)

(ப-ரை.) நெடு நகர் முன்றில்-நெடியநகரத்தினது முன்றிலின்கண், பக்கம் சூழ்ந்த-பக்கங்களிற்சூழ்ந்துள்ள, கோடுஅகழ்ந்தெடுத்த-கரையையகழ்ந்தெடுத்த, மறி நீர்க்காலும் - மறிக்கப்பட்ட நீரொழுகும் வாய்க்காலும், வெள் கார் பெய்யும்-வெள்ளிய கார்நெல்லைவிதைக்கும், நாள் குறித்து - நாளை நிச்சயித்து, உழுநரும் - உழுகின்றவர்களும், சூல் நிறைந்து உளையும் - சூல் நிறைந்து வருந்தாநின்ற, சுரிவளை சாற்றும் - சுரிந்தமுகமுள்ள சங்கநிரையின் கோஷமும், இனக்கயல் உண்ணும்-மீனினத்தை யுண்ணுநின்ற, களி குருகு இனமும் - களிப்பினையுடைய குருகினங்களும்.

(வி-ரை.) முன்றில் - முற்றம். அகழ்தல் - தோண்டுதல். கார்-ஆகுபெயர். குறித்தல் - நிச்சயித்தல். உளைதல்-வருந்துதல். நிரை - வரிசை. குருகு - பறவைப்பொது. கொய்யடி-நாரையுமாம்.

'வரைப்பறையரிந்த' என்பதுமுதல் 'முடிநடுநரும்' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) வரை பறை யறிந்த - மலைச்சிறகறுத்த, வாசவன் தொழுது-மருத நிலத்தேவை வணங்கி, நிரை நிரை விளம்பி - அணியணியாய்நின்று பிரார்த்தித்து, வழி - முறையே, முடி நடுநரும் - நாற்றுமுடிகளை நடுகின்றவர்களும்.

(வி-ரை.) பறை - ஆகுபெயர். வாசவன் - இந்திரன். விளம்பல்-ஈண்டுப் பிரார்த்தித்தலைக் குறித்தது.

நாறுகழி துற்ற சகடூர்க் குநரும்.

(15—வது வரி.)

(ப-ரை.) நாறுகழி துற்ற - நாற்றுமுடிகள் நிறையப்பெய்த, சகடு - வண்டில்களை, ஈர்க்குநரும் - ஈர்த்துச் செல்கின்றவர்களும்.

(வி-ரை.) கழியத்துற்றவென்பது கழிதுற்றவென விகாரமாயிற்று. ஈர்த்தல் - இழுத்தல்.

'தாமரைபாடும்' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.
(16—20 வரிகள்.)

(ப-ரை.) தாமரை பாடும் - தாமரைமலரிலிருந்து பாடாநின்ற, அறுகால் கிளியும் - வண்டுகளின் பண்ணோசையும், உறைத்து-அதிர்த்து, எறி - ஒலிக்கின்ற, கம்பலை-பேரொலியானது, உம்பரை-தேவரை, தாவி - அடைந்து, முடித்தலை - அவர் முடித்தலைகளை, திமிர்ப்ப - திமிரேற, அடிக்கடி கொடுக்கும்-இடைவிடாமற் செய்கின்ற, அள்ளல் - சேடையுழுத, அணி நீர் - மிக்க நீரையுடைய, பழனத்து-வயல்களாற் சூழப்பெற்ற, கூடல் - மதுரையின்கண், நீங்காது உறையும் - நிலைபெற்று வசித்தருளுகின்ற, நிமிர்சடை பெருமான் - நிமிர்ந்த சடையையுடைய எம்பெருமான்.

(வி-ரை.) வண்டுகள் அறுகாற்பறவைகளாதலான் அவற்றை 'அறுகாற்கிளி' என்றார். உம்பர்-ஆகுபெயர். அள்ளல் - சேறு எனினுமாம். பழனம் - வயல். நிமிர்சடை - நீள்சடை.

'உரகன்வாய்கீண்ட' என்பதுமுதல் 'உடைப்பதுநோக்கி' என்பதுவரை.
(21—25 வரிகள்.)

(ப-ரை.) உரகன் வாய் கீண்ட - பாம்பினது வாயைக் கிழித்த, மாதவன்போல-திருமால்போல, மண் அகழ்ந்து எடுத்து-மண்ணைப் பிளந்தெடுத்து, வரு புனல் - பெருகிவருகின்ற புனலையுடைய, வையை - வையைநதியின், கூலம் - கரையை, சுமக்க - (அடைக்குமாறு) மண்சுமக்க, கொட்டாள் ஆகி-கொட்டுத்தொழிற்குரிய ஆளாகி வந்து, நரை தலை முதியோள் - நரைத்தலையினையுடைய மூதாட்டியாகிய வந்தியென்பவள், இடித்த அடு - இடித்தமாவால் அட்டபிட்டுணவை, கூலிகொண்டு - கூலியாயேற்று, அடைப்பதுபோல-கரையையடைக்கிறதுபோல, உடைப்பது நோக்கி - உடைத்திடுவது பார்த்து.

(வி-ரை.) உரகன் - பாம்புருவான வோரசுரன். கீளல் - கிழித்தல். மாதவன் - திருமகட்கு நாயகன். அகழ்தல்-பிளத்தல். புனல் - நீர். கொட்டுத்தொழில் - மண்டொழில். இடித்த அடு இடித்தடுவென விகாரமாயிற்று. அடு - ஆகுபெயர்.

'கோமகன்' என்பதுமுதல் 'நாயகன்' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) கோமகன் - பாண்டியன், அடிக்க - (பிரம்பால்) அடிக்க, அவன் அடி வாங்கி-அவனடியையேற்று, அ அடி-அந்தவடியை, எவ்வுயிர் - எந்தவுயிர்களுக்கும், எவ்வுலகு - எந்தவுலகத்திற்கும், எத்துறைக்கு - எவ்வகைக் கருவினுக்கும், எல்லாம்-முழுதுமாக, கொடுத்த - படும்படிதந்த, அருள் நிறை நாயகன் - அருணிறைந்த சோமசுந்தரமூர்த்தியினது.

(வி-ரை.) கோமகன் - அரசன், அது ஈண்டைக்கேற்ப பாண்டியனை யுணர்த்திற்று.

திருமிடற் றிருளெனச் செறிதரு மாமுகில்.
(29—வது வரி.

(ப-ரை.) திரு மிடற்று-அழகிய கண்டத்தின்கணுள்ள, இருள் என்ன - இருள்போல, செறிதரும்-நெருங்கிவந்த, மா முகில்-பெரிய முகிலே.

(வி-ரை.) மாமுகில் - அண்மைவிளி.

'எனதுகண்' என்பதுமுதல் 'புரிந்தே' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) எனது கண் - என்னுடைய கண்ணை, கடந்து நீங்கி - தாண்டிப்போய், ஒருங்குபு புரிந்து - ஒன்றாய்க்கூடி, துனைவுடன் - வேகத்தோடும், செல்லல் - நீ செல்லற்க.

(வி-ரை.) ஒருங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு வினையெச்சம். துனைவு - விரைவு.

சிந்திபரப்பி விம்மதூவி சொற்று, நகர்முன்றிலில் நீர்க்காலும் உழுநரும் வளைச்சாத்தும் குருகினமும் பகடீர்க்குநரும் அறுகாற்கிளையும் தாவி திமிர்ப்பக் கொடுக்கும் நீர்க்கூடற் பெருமான், மாதவன்போல வரும் வையைக் கூலஞ்சுமக்க ஆளாகிக் கூலிகொண்டு அடிவாங்கி அவ்வடி கொடுத்த நாயகன், மிடற்றிருளெனச் செறிதரு முகிலே, கண்கடந்து நீங்கி மடந்தைக்குத் துயரீந்து, துயில் வாங்கிய இன்னல் காண்பான், புரிந்து செல்லலெனை வினைமுடிவு செய்க.

திருக்கோவையார் ௧௧௫ - ம் செய்யுள்.

தழைவிருப்புரைத்தல்.

தழைவிருப்புரைத்தலென்பது—தலைமகளைத் தழையேற்பித்துத் தலைமகனுழைச் சென்று, நீதந்த தழையை யான்சென்று கொடுத்தேன், அது கொண்டு அவள் செய்தது சொல்லிற் பெருகுமெனத் தலைமகளது விருப்பங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பாசத் தளையறுத் தாண்டுகொண் டோன்றில்லை யம்பலஞ்சூழ்
தேசத்தன செம்மனீ தந்தன சென்றியான் கொடுத்தேன்
பேசிற் பெருகுஞ் சுருங்கு மருங்குல் பெயர்ந்தரைத்துப்
பூசிற்றில ளன்றிச் செய்யாதன வில்லை பூந்தழையே.

விருப்பவ டோழி
பொருப்பற் குரைத்தது.

(ப-ரை.) பாசம் - பாசமாகிய, தளை - தளையிற்பட்டு கிடப்ப, அறுத்து - அத்தளையை யறுத்து, ஆண்டுகொண்டோன் -(தனக்குக் குற்றேவல் செய்ய) என்னை யடிமைகொண்டோனது, தில்லையம்பலம் சூழ் - தில்லையம்பலத்தைச் சூழ்ந்த, தேசத்தன - தேசத்தின்கணுள்ளன; (அச்சிறப்பேயன்றி) செம்மல்-அரசனே, நீ தந்தன - நின்னாற்றரப்பட்டன; சென்று யான் -(அவற்றைச்)சென்று யான், கொடுத்தேன் - கொடுத்தேன் (கொடுப்ப), பேசின் - ஆண்டு (நிகழ்ந்தனவற்றைச்) சொல்லுவேனாயின், பெருகும் - பெருகும்; சுருங்கும் - சுருங்கிய, மருங்குல் - மருங்குலையுடையாள், பூந்தழை - அப்பூந்தழையை, அரைத்து - அரைத்து, பூசிற்றிலள் அன்றி - (தன் மேனியெங்கும்) பூசிக்கொள்ளவில்லையே யன்றி, பெயர்ந்து செய்யாதன இல்லை - பெயர்த்துச் செய்யாதவைகளொன்றுமில்லை, எ - று.

நேரிசையாசிரியப்பா.

அறுகுந் தும்பையு மணிந்தசெஞ் சடையுங்
கலைமான் கணிச்சியுங் கட்டிய வரவமும்
பிறவுங் கரந்தொரு கானவ னாகி
யருச்சுன னருந்தவ மழித்தமர் செய்தவன்
கொடுமரத் தழும்பு திருமுடிக் கணிந்து
பொன்னுடை யாவந் தொலையாது சுரக்கப்
பாசுப தக்கணை பரிந்தருள் செய்தோன்

வாசவன் மகட்புணர்ந்து மூன்றெறி வாழத்
தென்கட னடுத்திடர் செய்துறைந் திமையவ
ருருடைத் துண்ணுஞ் சூருட றுணித்த
மணிவேற் குமரன் களிமகிழ் செய்த
பேரருட் குன்ற மொருபாற் பொலிந்த
வறப்பெருங் கூடற் பிறைச்சடைப் பெருமான்
றிருவடிப் பெருந்தேன் பருகுநர் போல
மணமுடன் பொதுளிய வாடா மலர்த்தழை
யொருநீ விடுத்தனை யானவை கொடுத்தன
னவ்வழி கூறி னத்தழை வந்து
கண்மலர் பயர்க்கும் மைகமமலர் குவளையு
நெட்டுயிர்ப் பெறிய முலைமுக நெருக்கியு
முடியும் வணங்கியு முவந்தளி கூறியும்
பொறையழி காட்சிய ளாகி
நிறையழிந் தவட்கு நீயா யினவே.

அறுகுந்தும்பையும் - நீயாயினவே. பநுதி - சேட்படை. துறை- தழை விருப்புரைத்தல்.

'அறுகும்' என்பதுமுதல் 'கானவனாகி' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) அறுகும் - அறுகம்புல்லையும், தும்பையும் - தும்பை மலரையும், அணிந்த - தரித்த, செஞ்சடையும் - சிவப்பாகிய சடையையும், கலைமான் - கலைமானையும், கணிச்சியும்-மழுவையும், கட்டிய அரவமும் - அரைக்கு அசைத்த பாம்பையும், பிறவும் - மற்றவைகளையும், கரந்து (தோன்றாமல்) மறைத்து, ஒரு கானவன் ஆகி - ஒரு வேடுவனாகி.

(வி-ரை) தும்பை - ஆகுபெயர். அரைக்கு - உருபுமயக்கம், அசைத்தல் - கட்டல். கரத்தல் - மறைத்தல். வேடுவன் காடே வீடாகக்கொண்டு சஞ்சரிப்பவனாதலால் அவனைக்'கானவன்'என்றார்.

'அருச்சுனன்' என்பதுமுதல் 'செய்தோன்' என்பதுவரை.
(4—7 வரிகள்.)

(ப-ரை.) அருச்சுனன் - அருச்சுனனது, அருந்தவம் அழித்து - செயற்கரிய தவத்தை யூறுபடுத்தி, அமர் செய்து - போராடி, அவன்

கொடுமரத்தழும்பு - அவன் வில்லாலடித்த வடுவை; திருமுடிக்கு அணிந்து - தனது திருமுடியிற்றாங்கி, பொன் உடை ஆவம் - அழகினையுடைய அம்புக்கூடு, தொலையாது சுரக்க - வற்றாது விளையுமாறு, பாசுபதக்கணை - பாசுபதமென்னும் சிவாஸ்திரத்தை, பரிந்து - அன்பாய், அருள் செய்தோன் - அருள்புரிந்தவனது.

(வி-ரை.) கொடுமரம் - வில், இது கோடுமரம் என்பதன் விகாரம், கோடுங்கோல் கொடுங்கோ லென்றாயவாறுபோல. பொன் - அழகு. ஆவம் - அம்புக்கூடு (அம்பறாத்தூணி), இதனைத் தூணீரம் என்பர் வடநூலார்; "அம்பஞ்சியாவம்புக மிக நீண்டரி சிந்து கண்ணாள்" என்றார் மேலோரும்.

'வாசவன்' என்பதுமுதல் 'குன்றம்' என்பதுவரை. (8—12 வரிகள்.)

(ப-ரை.) தென் கடல் நடு - தென்சமுத்திரத்து நடுவிடத்தை, திடர் செய்து - (மகேந்திரமென்னு நகரால்) திடர்பண்ணி, உறைந்து - அதிலிருந்து, இமையவர் - தேவர்களுடைய, ஊர் உடைத்து உண்ணும் - பட்டினங்களை யழித்துண்ட, சூருடல் - சூரபன்மனுடலை, மூன்று எரிவாழ - அந்தணர் முதலியோரது மூவகைத் தழலும் வளருமாறு, துணித்த - இருகூறாக்கிய, மணிவேல் குமரன் - மணிகட்டிய வேலுடைக் குமாரக்கடவுள், வாசவன் மகள்புணர்ந்து - தெய்வயானை நாய்ச்சியாரை மணந்து, களி மகிழ் செய்த - மிக மகிழ் சிறந்த, பேரருள் குன்றம் - பராசரன் புதல்வர்க்கு அருள்செய்தற்கிடனாகிய திருப்பரங்குன்றம்.

(வி-ரை.) திடர் - மேடு. தேவரை இமையவர் என்றது மங்கல வழக்கு.

'ஒருபால்' என்பதுமுதல் 'பெருந்தேன்' என்பதுவரை. (12—14 வரிகள்.)

(ப-ரை.) ஒருபால் பொலிந்த - ஒருதிசையில் விளங்கியுள்ள, அறம் பெரும் கூடல் - மிக்க புண்ணியப்பலனைத் தருகின்ற கூடலிலே, பிறைச்சடை பெருமான் - சடையிற் பிறையணிந்த பெருமானது, திருவடி பெருந்தேன் - சீபாதங்களி னருட்பெருந்தேனை.

(வி-ரை.) ஒருபால் - ஒருபக்கம் எனினுமாம். அறப்பெருங் கூடல் - மிகப்பெரியகூடல் என்றலுமொன்று. பிறைச்சடைப் பெருமான் என்றது சிவபிரானை.

'பருகுநர்' என்பதுமுதல் 'கோடுத்தனன்' என்பதுவரை.

(14—16 வரிகள்.)

(ப-ரை.) பருகுநர் போல - உண்கின்றவர்போல, மணமுடன் பொதுளிய - மணத்தோடு தளிர்த்த, வாடா மலர் தழை - வாடாத மலருள்ள தழைகளை, ஒரு நீ விடுத்தன - ஒப்பற்ற நீ விடுத்தாய், யான் அவை கொடுத்தனன் - அவற்றைத் தலைமகட்கு யான் கொடுத்தேனாக.

(வி-ரை.) பொதுளல் - தளிர்த்தல். தழை - ஆகுபெயர். விடுத்தல் - அனுப்புதல்.

'அவ்வழி' என்பதுமுதல் 'நீயாயினவே' என்பதுவரை.

(17—22 வரிகள்.)

(ப-ரை.) அவ்வழி கூறின் - அம்முறையைச் சொல்லுங்கால், அத்தழை வந்து - அந்தத் தழைகள்வந்து, கண் மலர் கவர்ந்தும் - தலைவி கண்மலர்களாற் கவரப்பட்டும், கை மலர் குவித்தும் - கைம் மலர்களால் அஞ்சலிக்கப்பட்டும், நெடு உயிர்ப்பு எறிய - பெருமூச் செறியுமாறு, முலைமுகம் - முலையிடத்தே, நெருக்கியும் - ஒற்றிக் கொள்ளப்பட்டும், ஊடியும் - சற்றே யூடப்பட்டும், வணங்கியும் - மீண்டு தொழப்பட்டும், உவந்து அளி கூறியும் - களித்து முகம னுரைக்கப்பட்டும், பொறை அழி காட்சியள் ஆகி-காமநோய் பொறுத்தலில்லாத் தோற்றத்தையுடையளாய், நிறை அழிந்தவட்கு - நிறையாற் கைவிடப்பட்ட அத்தலைவிக்கு, நீயே ஆயின-நீயேயாயினவாம்.

(வி-ரை.) கண்மலர் - கண்களாகிய நீலமலர். கைம்மலர் - கைகளாகிய தாமரைமலர். முலைமுகம் என்பதில் முகம் ஏழனுருபு. முலைமுகம் என்பதற்கு முலைமுகடு என்றுரைப்பினுமமையும், முலை நுனியுமாம். ஊடல் - பிணங்கல். முகமன் - இன்சொல் (உபசார வார்த்தை).

கானவனுகித் தழும்பணிந்து கணையருள் செய்தோன் மூன்றெரிவாழச் சூருடலுணித்த வேற்குமரன் புணர்ந்துமகிழ்செய்த குன்றம்பொலிந்த கூடற்பெருமான் அடித்தேன் பருகுநர்போல,நீவிடுத்த மலர்த்தழை யான் கொடுத்தன னத்தழை நிறையழிந்தவட்கு நீயேயாயினவென வினைமுடிவுசெய்க. (சகூ)

திருக்கோவையார் அசு-ம் செய்யுள்.

விரவிக்கூறல்.

விரவிக்கூற லென்பது—வன்மொழியாற் கூறின் மனமெலியு மென்றஞ்சி ஓரலவன் தன்பெடைக்கு நாவற்கனியை நல்கக்கண்டு ஒருபெருந்தகை பேய்கண்டாற்போல நின்றான், அந்நிலைமையை நீ கண்டாயாயின் உயிர்வாழமாட்டாய், யான் வன்கண்மையேனாதலான் ஆற்றியுளேனாய்ப் போந்தேனென, மென்மொழியோடு சிறிது வன் மொழிபடக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

நீகண் டனையெனின் வாழலை நேரிழை யம்பலத்தான்
சேய்கண் டனையன் சென்றாங்கோ ரலவன்றன் சீர்ப்பெடையின்
வாய்வண் டனையதோர் நாவற் கனிநனி நல்கக்கண்டு
பேய்கண் டனையதொன் றாகிநின் றானப் பெருந்தகையே.

வன்மொழி யின்மன மெலிவ தஞ்சி
மென்மொழி விரவி மிகுத்து ரைத்தது.

(ப-ரை.) நேரிழை - நேரிழாய், அம்பலத்தான் - அம்பலத்தானது, சேய் கண்டனையன் - புதல்வனை கண்டாற்போன்றிருக்கு மொருவன், ஆங்கு ஓர் அலவன் - அவ்விடத்து ஓரலவன், தன் சீர் பெடையின் - தனதழகையுடைய பெடையின், வாய் - வாயின்கண், வண்டனையது ஓர் - வண்டனையதொரு, நாவல் கனி-நாவற்கனியை, சென்று - சென்று, நனி நல்க-மிகவுங் கொடுப்ப, கண்டு - (அதனைக்) கண்டு, அ பெருந்தகை - அப்பெருந்தகை, பேய் கண்டனையது ஒன்றாகி நின்றான் - பேயாற் காணப்பட்டாற் போல்வதோர் வேறுபாட்டையுடையவனாகி நின்றான், (அந்நிலையை) நீ கண்டனை எனின் - நீ கண்டாயாயின், வாழலை - (உயிர்) வாழமாட்டாய், (யான் வன்கண்மையேனாதலின் அதனைக்கண்டும் ஆற்றியுளேனாயினேன்), எ-று.

(வி-ரை.) நேரிழை - அன்மொழித்தொகை, அண்மைவிளி. அம்பலத்தான் என்பதனீற்றில் ஆறனுருபு தொக்கது. அம்பலத்தான் சேய் - பொன்னம்பலவனது புதல்வனாகிய முருகவேள். அலவன் - ஞண்டு.

நேரிசையாசிரியப்பா.

வியரமு தரும்பி முயற்கண் கறுத்துத்
தண்ணொநின் றுதவலி னிறைமதி யாகிப்
பொன்னம் பொகுட்டுத் தாமரை குவித்து

நிறையளி புரக்கும் புதுமுகத் தணங்குநின்
னொளிவளர் நோக்க முற்றனை யாயி
னின்னுயிர் வாழ்க்கை யுடலொடும் புரக்கலை
யொருதனி யடியாற் குதவுதல் வேண்டி
மண்ணவர் காண வட்டணை வாளொடுத்
தாதி சாரணை யடர்நிலைப் பார்வை
வாளுட னெருக்கன் மார்பொடு முனைதல்
பற்றிநின் றடர்த்தலுட் கையின் முறித்த
லாநநத் தொட்ட லணிமயிற் புரோக
முட்கலந் தெடுத்த லொசிந்திட மழைத்தல்
கையொடு கட்டல் கடிந்துள் ளழைத்தலென்
றிவ்வகைப் பிறவு மெதிரம ரேறி
யவன்பகை முறித்த வருட்பெருங் கடவுள்
கூடலங் கானற் பெடையுடன் புல்லிச்
சேவ லன்னந் திருமலர்க் கள்ளினை
யம்மலர் வள்ள மாகநின் றுதவுதல்
கண்டுகண் டொருவன் மாழ்கி
விண்டுயிர் சோர்ந்த குறிநிலை மயக்கே.

வியரமுதரும்பி - குறிநிலைமயக்கே. பகுதி - குறைநயப்பித்தல். துறை - விரவிக்கூறல்.

'வியரமுது' என்பதுமுதல் 'மதியாகி' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) வியர் அமுது - வியர்வாகிய அமுதம், அரும்பி-முகிழ்த்து, முயல் கண் கறுத்து - போர் முயலுதலையுடைய கண்கறுத்து, தண்ணம் - குளிர்ச்சியை, நின்று உதவலின் - தந்து நிற்றலால், நிறை மதி ஆகி - உவாமதியாகி.

(வி-ரை.) தண்ணம் என்பதில் அம் பண்புப்பெயர்விகுதி. நிறைமதி - பூர்ணசந்திரன்.

'பொன்னம்பொகுட்டு' என்பதுமுதல் 'புதுமுகத்தணங்கு' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) பொன்னம் பொகுட்டு - பொன்னிறமாகிய கன்னிகையுள்ள, தாமரை குவித்து - தாமரைப்பூவைக் கூம்பச்செய்து, நிறை

அளிபுரக்கும் - குறைவில்லாத தண்ணளியைத் தன்னிடத்துப் பாதுகாவாநின்ற, புதுமுகத்து அணங்கு-(பார்க்குந்தோறும்) புதுமைபயக்கு முகத்தையுடைய திருவே.

(வி-ரை.) பொன்னம் என்பதில் அம் அழகெனினுமாம். தாமரை-ஆகுபெயர். தண்ணளி-கிருபை. அணங்கு-அண்மைவிளி.

'நின்னொளிவளர்' என்பதுமுதல் 'புரக்கலை' என்பதுவரை. (4—6 வரிகள்.)

(ப-ரை.) நின் ஒளிவளர்-உன்னுடைய விளக்கமிக்க, நோக்கம்-கண்களாலே, உற்றனையாயின் - நோக்குவையாயின், இன் உயிர் வாழ்க்கை - இனிய உயிர்வாழ்க்கையை, உடலொடும் புரக்கலை - நின்னுடலிடத்தே காப்பாற்றவல்லையல்லை.

(வி-ரை.) உயிர்வாழ்க்கை - உயிரோடுகூடி வாழ்தல். புரத்தல்-காப்பாற்றல்.

'ஒருதனியடியாற்கு' என்பதுமுதல் 'ஆநநத்தோட்டல்' என்பதுவரை. (7—12 வரிகள்.)

(ப-ரை.) ஒருதனி அடியாற்கு - தனிமையான அடியானுக்கு, உதவுதல் வேண்டி - உதவி செய்யும்படி திருவுளங்கொண்டு, மண்ணவர் காண - பூமியிலுள்ளா ரறியுமாறு, வட்டணை - கேடகமும், வாள் - வாளும், எடுத்து - கையிலெடுத்து, ஆதிசாரணை - முதலில் சார்ந்து நிற்றலும், அடர்நிலை பார்வை - நெருங்குநிலையிலே பார்வை வைத்தலும், வாளுடன் நெருக்கல்-வாளொடு கிட்டுதலும், மார்பொடு முனைதல் - வாளை மார்பிலேற்று எதிர்த்தலும், பற்றிநின்று அடர்த்தல் - ஒருவரொருவரைப்பற்றிநின்று பொருதலும், உட்கையின் முறித்தல் - கைக்குள்ளடக்கி முறித்தலும், ஆநநத்தொட்டல் - (கேடகத்துள் தாழ்ந்து) முகத்தோ டடங்குதலும்.

(வி-ரை.) வட்டணை - வட்டவடிவு, அது அவ்வடிவையுடைய கேடகத்துக் காயிற்று, ஆநநம்-முகமென்னும் பொருள் பயப்பதோர் வடசொல்.

'அணிமயிற்புரோகம்' என்பதுமுதல் 'உள்ளழைத்தல்' என்பதுவரை. (12—14 வரிகள்.)

(ப-ரை.) அணிமயிற் புரோகம்-அழகுள்ள மயில்போலும் ஞமலி போலு முறையே பின்னே பறிந்து முன்னே நடத்தலும், உள் கல

ந்து எடுத்தல் - ஒருவருட லொருவருடலொடுமெயங்கி மேலுறவெடுத்தலும், ஒசிந்து - வளைந்து, இடம் - இடம்புறமாக, அழைத்தல் - அறைகூவலும், கையொடு கட்டல் - ஒருவர்கையொ டொருவர் கையேறச் சேர விறுக்குதலும், கடிந்து - குறிவழிபிழைத்து, உள் அழைத்தல் - தாந்தாநிற்கு நிலைக்களத்தே யீர்த்தலும்.

(வி-ரை.) அறைகூவல் - வலாற்கரித்தல்.

‘என்றிவ்வகை’ என்பதுமுதல் ‘பெருங்கடவுள்’என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) என்று - என்று சொல்லப்படும், இவ்வகை-இவ்வகுப்புக்களாகிய, பிறவும் - பிறவாள் விஞ்சைத் தொழில்களும், எதிர் - காணப்படுகின்ற, அமர் எறி - வாட்போரின் மிகமுயன்று, அவன் - அவ்வடியவனது, பகை - பகைவனாகிய சித்தனென்னுஞ் சாதகனை, முறித்த - அவன் அங்கங்களைத் தனித்தனி தடிந்த, அருள் பெருங் கடவுள் - அருளே திருமேனியாகிய மாதேவனது.

(வி-ரை.) பிறவுமென்றதனால் வாள்விதிர்த்தல் சாரிகை திரிதல் வெட்டிவிலக்கி மீளுதல் சுழன்றுவிளித்தல் ஆண்மைகூறல் முதலியவுங் கொள்க. வாள்விஞ்சை - வாள்வித்தை. அமர் - வாட் போர். சாதகன் - பூதன். மாதேவன் - பரமசிவன்.

‘கூடல்’ என்பதுமுதல் ‘குறிநிலைமயக்கே’ என்பதுவரை.
(17—21 வரிகள்.)

(ப-ரை.) கூடல் - மதுரையினிடத்தே, அம் கானல் - அழகுள்ள நெய்தலில், சேவல் அன்னம் - ஆணன்னம், பெடையுடன் புல்லி - தனது பெடையைத் தழுவி, திரு மலர் கள்ளினை - திருமகட்கிடனாகிய தாமரைப்பூவின் மதுவை, அம் மலர் - அந்தத் தாமரை மலரே, வள்ளம் ஆக-கிண்ணமாகக்கொண்டு, நின்று-தானின்று, உதவுதல் - உண்பித்தலை, கண்டு கண்டு - பார்த்து பார்த்து, ஒருவன் - ஓரரசன், மாழ்கி - மயங்கி, விண்டு-நிலைமாறி, உயிர் சோர்ந்த- உயிர் தளர்ந்த, குறிநிலை மயக்கே - மயக்கநிலைக் குறிப்பினை.

(வி-ரை.) திருமகட்கிடனாயிருத்தலின் தாமரை மலரைத் திரு மலர் என்றார்.

புதுமுகத்தணங்கே! வேண்டி வாளெடுத்தமரேறி பகைமுறித்த கடவுள் கூடற்கானலன்னம் பெடையுடன் புல்லி கள்ளினை

யுதவுதல் கண்டுகண்டொருவன்மாழ்கியுயிர்சோர்ந்த குறிப்பைநோக்க முற்றனையாயின் உயிர்வாழ்க்கை புரக்கலையென வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் ௩அ௬-ம் செய்யுள்.

ஊடறணிவித்தல்.

ஊடறணிவித்தலென்பது — விருந்தேற்றுக்கொண்ட தலைமகளுழைச்சென்று நம்முடைய தோன்றலைத் தனக்குத் துணையாகக் கொண்டுவந்து தோன்றுதலான், நினதுளத்துக் கவற்சியை யொழிந்து இனி நம்மரசற்குக்குற்றேவல்செய்வாயாகவெனத்தோழி அவளையூடறணிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கவலங்கொள் பேய்த்தொகை பாய்தரக் காட்டிடை யாட்டுவந்த
தவலங்கி லாச்சிவன் றில்லையன் னாய்தழு விம்முழுவிச்
சுவலங்கி ருந்தநந் தோன்ற றுணையெனத் தோன்றுதலா
லவலங் களைந்து பணிசெயற் பாலை யரசனுக்கே.

தோன்றலைத் துணையொடு தோழி கண்டு
வான்றகை மடந்தையை வருத்தந் தணித்தது.

(ப-ரை.) கவலம் கொள் - கவற்சிகொள்ளுதற்கேதுவாகிய, பேய்த்தொகை - பேய்த்திரள், பாய்தர - கரணங்களைப்பாயாநிற்ப, காட்டிடை-புறங்காட்டின்கண், ஆட்டு உவந்த-ஆடுதலை விரும்பிய, தவல் அங்கு இல்லா-கேடங்கில்லாத, சிவன் - சிவனது, தில்லை அன்னாய் - தில்லையை யொப்பாய், தழுவி முழுவி - தழுவி முத்தங்கொண்டு, சுவல் அங்கு இருந்த - சுவலிடத்தேறியிருந்த, நம் தோன்றல் - நம்முடைய தோன்றலை, துணை என - தமக்குத் துணையெனக் கருதிவந்து, தோன்றுதலால் - தோன்றுதலான், அவலம் களைந்து - நினதுள்ளத்துக் கவற்சியை நீக்கி, அரசனுக்கு-(இனி) அரசனுக்கு, பணி செயற்பாலை - குற்றேவல் செயற்பாலை, எ-று.

(வி-ரை.) கவலம்-தொழிற்பெயர். பாய்தர என்பதற்குப் பகுதி பாய்தா. தவல்-கேடு, பகுதி தவு. முழுவல் - முத்தங்கொள்ளல். சுவல் - பிடர். தோன்றல் - புதல்வன். கவற்சி - கவலை.

நேரிசையாசிரியப்பா.

அவ்வுழி யவ்வுழிப் பெய்யுண வுன்னி
முகன்றரு மிருசெய லகன்பெறக் கொளுவும்
புல்லுப் பாண்மகன் சில்லையு மின்றி

யின்பக் கிளவி யன்பினர்ப் போக்கி
முடித்தலை மன்னர் செருக்குநிலை யொருவிப்
பொன்னுறு ஞாழற் பூவுடன் கடுக்கும்
பேழ்வாய்ப் புலியுகிர் சிறுகுரல் விளங்க
வமுதந் துளிக்குங் குமுதவாய் குதட்டிப்
பழங்கொ டத்தை வழங்குசொற் போலு
மழலைக் கிளவியு மிருநிலத் தின்பமு
மொருவழி யளிக்கு மிருங்கதிச் சிறுவனைத்
தழல்விழி மடங்கற் கொலையரிக் குருளையைப்
பொன்மலை கண்ட பொலிவு போல
மணிகெழு மார்பகத் தணிபெறப் புகுத்தலிற்
கறங்கிசை யருவி யறைந்துநிமிர் திவலையுந்
துருத்திவா யதுக்கிய குங்குமக் காண்டமுங்
குறமகார் கொழிக்குங் கழைநித் திலமு
நெடுநிலை யரங்கிற் பரிபெறு தரளமும்
புனம்பட வெறிந்த காரகிற் றாமமு
மந்தணர் பெருக்கிய செந்தீப் புகையும்
வேங்கையின் றாதுடன் விரும்பிய சுரும்புஞ்
சந்திவிரி படிந்த மென்சிறை வண்டுஞ்
சந்தனப் பொங்கர்த் தழைசிறை மயிலு
மூன்றிலம் பெண்ணைக் குடம்பைகொ ளன்றிலு
மொன்றினோ டொன்று சென்றுதலை மயங்குங்
குழகன் குன்றக் கூடலம் பதிநிறை
மஞ்சடை குழற்பெறு செஞ்சடைப் பெருமா
னருந்தமிழ்க் கீரன் பெருந்தமிழ்ப் பனுவல்
வாவியிற் கேட்ட காவியங் களத்தினன்
றிருக்கண் கண்ட பெருக்கினர் போல
முளரியங் கோயிற் றளைவிட வந்து
நல்லறம் பூத்த முல்லையந் திருவின
ணின்னுளத் தின்னன் மன்னறக் களைந்து
பொருத்தங் காண்டிவண் டாரு
மருத்தியங் கோதை மன்னவன் பாலே.

அவ்வுழி யவ்வுழி-மன்னவன்பாலே. பகுதி-பரத்தையிற்பிரிவு. துறை-ஊடறணிவித்தல்.

'கறங்கிசை' என்பதுமுதல் 'குங்குமக்காண்டமும்' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-ரை.) கறங்கு இசை - முழங்காநின்ற வொலியையுடைய, அருவி-அருவியானது, அறைந்து-எறிய, நிமிர்-எழுகின்ற, திவலையும்-துளிகளும், துருத்திவாய் - நீர்சொரி கருவியின்வாயை, அதுக்கிய-அழுத்துவதாற் சிந்தும், குங்குமக் காண்டமும்-குங்குமங்கலந்த நீரும்.

(வி-ரை.) அறைந்து-எச்சத்திரிபு. காண்டம்-நீர்.

'குறமகார்' என்பதுமுதல் 'தரளமும்' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) குறமகார் - குறப்பெண்கள், கொழிக்கும் - (வண்டலாடலிற்) கொழிக்கின்ற, கழை நித்திலமும் - மூங்கின் முத்தங்களும், நெடு நிலை - நெடிய மேனிலையினையுடைய, அரங்கில்-நர்த்தநசாலையில், பரிபெறு தரளமும் - மாலைகளி லறுந்து சிந்துகின்ற முத்தங்களும்.

(வி-ரை.) நர்த்தநசாலை - நாட்டியசாலை. மேனிலை - மேல் முற்றம். முத்தம் - முத்து.

'புனம்பட' என்பதுமுதல் 'வண்டும்' என்பதுவரை.

(19—22 வரிகள்.)

(ப-ரை.) புனம்பட எறிந்த-காடுகெட வெட்டிய, காரகில் தூமமும் - சேகாகிய அகிற்கட்டையின் புகையும், அந்தணர் பெருக்கிய - அந்தணரால் வளர்க்கப்பட்ட, செம் தீ புகையும் - சிவந்த வேள்வித் தீயின் புகையும், வேங்கையின் தாதுடன் - வேங்கைமலர்த் தாதுகளை, விரும்பிய சுரும்பும் - இச்சித்த பெடைவண்டுகளும், விரிகந்தி-விரிவாகிய கமுகில், படிந்த-தங்கிய, மெல் சிறை - மெல்லிய சிறைகளையுடைய, வண்டும் - ஆண்வண்டுகளும்.

(வி-ரை.) படுதல் - கெடுதல். எறிதல் - வெட்டுதல். தாது - மகரந்தம்.

'சந்தனப்போங்கர்' என்பதுமுதல் 'அன்றிலும்' என்பதுவரை.

(23—24 வரிகள்.)

(ப-ரை.) சந்தனப் பொங்கர் - சந்தனச் சோலையில், தழை சிறை மயிலும் - சிறைவிரித்தாடுகின்ற மயில்களும், முன்றிலம் பெண்ணை - நீட்சியாகிய பனைமரத்தின்மேல், குடம்பைகொள் - கூட்டிற்றங்குகின்ற, அன்றிலும் - அன்றிற்பறவைகளும்.

'ஒன்றினோடொன்று' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(25—27 வரிகள்.)

(ப-ரை.) ஒன்றினோடு ஒன்று - ஒன்றுடனொன்று, சென்று - சேர்ந்து, தலைமயங்கும் - தம்மில் மயங்குதற்கிடமாகிய, குழகன் - முருகக்கடவுளது, குன்றம் - திருப்பரங்கிரிசூழ்ந்த, கூடலம்பதி நிறை - கூடலென்னும்பதியில் நிறைந்திருக்கின்ற, மஞ்சு அடை குழல் பெறு - மேகத்தையொத்த அளகத்தையுடைய கங்கைப்பெண் தனக்கிடமாகப் பெற்றுள்ள, செஞ்சடை பெருமான் - செஞ்சடைக் கடவுள்.

(வி-ரை.) தலைமயங்கல்-ஒருசொல், கலத்தல் என்பது பொருள். செஞ்சடைக்கடவுள் - சிவபிரான்.

'அருந்தமிழ்' என்பதுமுதல் 'பெருக்கினர்போல' என்பதுவரை.

(28—30 வரிகள்.)

(ப-ரை.) அருந்தமிழ் - அரிய தமிழிற் கைவந்த, கீரன் - நக்கீர தேவன், பெருந்தமிழ் - பெரிய தமிழாகிய, பனுவல்-பெருமையுள்ள தமிழ்ப் பனுவலை, வாவியில்-பொற்றாமரையினின்று பாட, கேட்ட - காதாற் கேட்டருளிய, காவியங்களத்தினன் - நீலகண்டனது, திருக் கண் கண்ட - திருக்கோலத்தைக் கண்ணுற்கண்ட, பெருக்கினர் போல - (செல்வப்) பெருக்கினர்போல.

(வி-ரை.) கைவரல் - தேறுதல். வாவி - ஆகுபெயர். காவி - நீலமலர். திரு - திருக்கோலம்.

'முளரியங்கோயில்' என்பதுமுதல் 'திருவினள்' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப-ரை.) முளரியங்கோயில் - தாமரையாகிய ஆலயமானது, தளைவிட வந்து-இதழ்க்கதவந்திறக்கவந்து, நல் அறம் பூத்த முல்லையந்திருவினள் - நன்மை பயக்கும் இல்லறத்தருமமுண்டான அறக் கற்பினையுடைய திருமகளே.

(வி-ரை.) நல்லறம் என்றது இல்லறத்தை. முல்லை - கற்பு. திருவினள் - அண்மைவிளி.

'அவ்வுழியவ்வுழி' என்பதுமுதல் 'நிலையொருவி' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை.) அவ்வுழி அவ்வுழி - வீடுகள்தோறும், பெய் உணவு உன்னி-இடப்பட்ட பலியைக்கருதி, முகன் தரும் இரு செயல்-முகந் தராநின்ற உவப்பு வெறுப்பென்னு மிருசெயலையும், அகன் பெற - மனத்திற் பொருந்த, கொளுவும் - கொள்ளுகின்ற, புல்லப்பாண் மகன் - புன்மையுள்ள பாணன், சில்லையும் இன்றி - கீழ்மகளுமில் லாமல், இன்பக்கிளவி-இன்பம்போல்வதாகிய சொற்களுடன், அன்பினர் - அன்பையுடைய பரத்தையரை, போக்கி - நீக்கி, முடித்தலை மன்னர் - முடியணிந்த தலையினையுடைய அரசர்க்குரிய, செருக்கு - (நிலையான) செருக்கையும், நிலை ஒருவி - தன்னினீங்கி.

(வி-ரை.) உழி - இடம். உவப்பு - விருப்பு. செயல் - தொழில். முகன் அகன் - முகம் அகம் என்பவற்றின் போலி... புல்லப்பாண் மகன்-கீழ்மகனாகிய பாணன். சில்லை-கீழ்மகள். கிளவி - சொல். ஒருவல் - நீங்கல்.

'பொன்னுறு' என்பதுமுதல் 'சிறுவனே' என்பதுவரை.

(6—11 வரிகள்.)

(ப-ரை.) பொன்னுறு-பொன்மையாகிய, ஞாழல் பூவுடன் கடுக்கும் - ஞாழற்பூவையொத்த, பேழ்வாய் புலி உகிர்-வாயாற் பெரிய புலிநகமாகிய அணி, சிறு குரல் விளங்க - சிறிய கழுத்தில் விளங்கா நிற்க, அமுதம் துளிக்கும் - அமுதஞ் சிந்துகின்ற, குமுதவாய் குதட்டி-செங்குமுதம்போலும் வாயைக்குதட்டி, பழம் கொள்-பழத்தை நுகர்கின்ற, தத்தை - கிள்ளை, வழங்கு சொல்போலும் - பேசுஞ் சொற்கள் போல்கின்ற, மழலை கிளவியும் - மழலைச்சொல்லும், இரு

நிலத்து இன்பமும்-இகபரங்களினின்பமும், ஒருவழி அளிக்கும்-ஓரிடத்துதவுகின்ற, இருங்கதி - பெருங்கதியிற் செலுத்தத்தக்க, சிறுவனை - பிள்ளையை.

(வி-ரை.) வாய்க்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் குமுதம் செங்குமுதத்தை யுணர்த்திற்று. மழலைச்சொல் - நிரம்பாமொழி. இருநிலம் - இவ்வுலகமும் அவ்வுலகமும். இருங்கதி யென்பதில் இருமை பெருமை.

'தழல்விழி' என்பதுமுதல் 'புகுத்தலில்' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) தழல் விழி - அழற்கண்களையுடைய (வேற்றுமிருகங்கள்),மடங்கல் - மடங்குதற்குக் காரணமாகிய, கொலை அரிக்குருளையை - கொலைத்தொழிலையுடைய சிங்கக்குருளையை, பொன்மலை கண்ட-பொன்மலைமேற்கண்ட, பொலிவுபோல - காட்சியையொப்ப, மணிகெழு-மணிவடமணிந்த, மார்பகத்து-(அவன்) மார்பினிடத்தே, அணி பெற - இனிமைபெற, புகுத்தலின் - ஏந்திவிளையாடலால்.

(வி-ரை.) தழல் அழல் என்பன நெருப்பின் பரியாய நாமங்கள். அணிபெற என்பதற்கு அழகுபெற என்றுரைத்தலுமாம். குருளை - குட்டி, இது மரபுப்பெயர்; "சிங்கக்குருளைக் கிடுதீஞ்சுவையூணை நாயின், வெங்கட் கடுங்குட்டியை யூட்ட விரும்பினுயே" என்றார் மஹாகவியும்.

'நின்னுளத்தின்னல்' என்பதுமுதல் 'மன்னவன்பாலே' என்பதுவரை.

(33—35 வரிகள்.)

(ப-ரை.) வண்டு ஆரும் - வண்டுகள் மொய்த்தற் கேதுவாகிய, அருத்தி - ஆசைதரத்தக்க, அம் கோதை - அகவிதழ் செறிந்த மலர் மாலை பூண்ட, மன்னவன்பால்-(நமது) தலைவனிடத்தேயுள்ள, நின் உளத்து இன்னல்-உனது மனக்கோட்டத்தை, மன் அற களைந்து - முழுது மறக்களைந்து, பொருத்தம் காண்டி - ஒற்றுமை கொள்வாயாக.

(வி-ரை.) இன்னல் - துன்பமுமாம். மன்-மிகுதி, அது ஈண்டு முழுதுமெனப் பொருள்பட்டு நின்றது. களைதல்-கல்லுதல். காணுதி காண்டி யென்றாயிற்று.

திவலைமுத லன்றில்காறும் தலைமயங்கும் குன்றக்கூடற் பெருமானாகிய காவிக்களத்தினன் திருக்கண்டார்போலத் திருவினளே! இன்றி போக்கி ஒரு இருங்கதிச் சிறுவனை, மலைகண்ட பொலிவு போல மார்பகத்துப் புகுத்தலால், மன்னவன்பால் உன் இன்னல் களைந்து பொருத்தங் காண்டியென வினைமுடிவு செய்க. (௩௧)

திருக்கோவையார் ௬௦௦-ம் செய்யுள்.

குலமுறைகூறி மறுத்தல்.

குலமுறைகூறி மறுத்தலென்பது—நீயே கூறெனச் சொல்லக் கேட்டு, உலகத்து ஒருவர்கண் ஒருவர் ஒருகுறை வேண்டிச்சென்றால் அக்குறை நீயே முடித்துக்கொள்ளென்பாரில்லை, அவ்வாறன்றி, இவளிந்நாளெல்லாம் என்குறை முடித்துத் தருவேனென்று என்னை யவமே யுழற்றி, இன்று நின்குறை நீயே முடித்துக்கொள்ளென்று நின்றாளெனத், தலைமகன் ஆற்றாது நிற்ப, அவனை யாற்றுவிப்பது காரணமாக, நீர் பெரியீர், யாஞ்சிறியேம், ஆதலான் எம்மோடு நுமக்குச் சொல்லாடுதல் தகாதெனக் குலமுறைகூறி மறுத்துரையா நிற்றல். அதற்குச் செய்யுள்:—

தேங்கம் பழங்கமு கின்குலை சாடிக் கதலிசெற்றுக்
கொங்கம் பழனத் தொளிர்குளிர் நாட்டினை நீயுமைகூர்
பங்கம் பலவன் பரங்குன்றிற் குன்றன்ன மாபதைப்பச்
சிங்கந் திரிதரு சீறூர்ச் சிறுமியெந் தேமொழியே.

தோழிகுலத்தீர் சொற்காகேம்
இழிகுலத்தே மெனவுரைத்தது.

(ப-ரை.) தெங்கம் பழம் - (மூக்கூழ்த்து விழுகின்ற) தெங்கினது பழங்கள், கமுகின் குலை - பாக்குமரத்தின் குலையை, சாடி - (உதிர) மோதி, கதலி செற்று - வாழைகளை முறித்து, கொங்கு - பூந்தாதையுடைய, அம் பழனத்து - அழகிய (பழனத்துக்) கிடந்து, ஒளிர் - விளங்கும், குளிர் நாட்டினை நீ - குளிர்ந்த நாட்டினுள்ளாய் நீ, எம் தே மொழி - எம்முடைய தேமொழி, உமை - உமையவளது, கூர் - சிறந்த, பங்கு - பாகத்தையுடைய, அம்பலவன் - சிற்றம்பலவனது, பரங்குன்றில் - திருப்பரங்குன்றினிடத்து, குன்று அன்ன - மலைபோன்ற, மா - யானைகள், பதைப்ப - நடுங்க, சிங்கம் - சிங்கங்கள், திரிதரு - (வேட்டம்) திரியும், சிறு ஊர் - சிறிய ஊரினிடத்து

உள்ளாளாகிய, சிறுமி-(ஓர்) சிறியாள் (அதனால் எம்மோடு நீ சொல்லாடுதல் தகாது), எ - று.

(வி-ரை.) தெங்கம்பழம் - முதிர்ந்த தேங்காய். குலை - தாறு. சாடல் - மோதல். பழனம் - வயல். குளிர்நாடு - மருதநிலம். தேமொழி - அன்மொழித்தொகை. மா - விலங்கின் பொதுப்பெயரேயாயினும் சிங்கந்திரிதரு என மேல் வருதலால் யானையெனப் பொருள் கூறலாயிற்று. வேட்டம் - வேட்டை. திரிதரு என்பதற்குப் பகுதி திரிதா.

நேரிசையாசிரியப்பா.

பெருமறை நூல்பெறு கோன்முறை புரக்கும்
பெருந்தகை வேந்த னருங்குணம் போல
மணந்தோர்க் கமுதுந் தணந்தோர்க் கெரியும்
புக்குழிப் புக்குழிப் புலன்பெறக் கொடுக்கு
மலையத் தமிழ்க்கால் வாவியுட் புகுந்து
புல்லிதழ்த் தாமரைப் புதுமுகை யவிழ்ப்ப
வண்டினம் படிந்து மதுக்கவர்ந் துண்டு
சேயிதழ்க் குவளையி னிரைநிரை யுறங்கு
நிலைநீர் நாட னீயே யிவளே
மலையுறை பகைத்து வானுறைக் கணக்கும்
புட்குலஞ் சூழ்ந்த பொருப்புடைக் குறவர்தம்
பெருந்தேன் கவருஞ் சிறுகுடி மகளே
நீயே, ஆபமோ டார்ப்ப வரிகிணை முழக்கி
மாயா நல்லறம் வளர்நாட் டினையே
இவளே, தொண்டகந் துவைப்பத் தொழிற்புனம் வளைந்து
பகட்டினங் கொல்லும் பழிநாட் டவளே
நீயே, எழுநிலை மாடத் திளமுலை மகளிர்
நடஞ்செயத் தாள வடந்தெறு நகரோய்
இவளே, கடம்பெறு கரிக்குல மடங்கல் புக்ககழத்
தெறித்திடு முத்தந் திரட்டுவைப் பினளே
நீயே, அணிகெழு நவமணி யலரெனத் தொடுத்த
பொற்கொடித் தேர்மிசைப் பொலிதுவை யன்றே
இவளே, மணிவாய்க் கிள்ளை துணியா தகற்ற
நெட்டித ணேறு மிப்புனத் தினளே

யாதலிற் பெரும்புக ழணைகுதி யாயி
ஞாணன் படரத் தேவர்கெட் டோட
வளிசுழல் விசும்பின் கிளர்முக டணவிக்
கருமுகில் வளைந்து பெருகிய போல
நிலைகெடப் பரந்த கடல்கெழு விடத்தை
மறித்தவ ருயிர்பெறக் குறித்துண் டருளித்
திருக்களங் கறுத்த வருட்பெரு நாயகன்
கூடல் கூடினர் போல
நாட னீயிவள் கழைத்தோ ணசையே.

பெருமறைநூல்பெற - கழைத்தோணசையே. **பகுதி** - சேட்படை. **துறை** - குலமுறைகூறி மறுத்தல்.

'**நீயே, பெருமறை**' என்பதுமுதல் '**அருங்குணம்போல**' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நீயே - நீயோவென்றால், பெரு மறை-பெரிய வேதத்தினின்றும், நூல் பெறு-மநுநூல் விதிவழியே பிறந்த, கோல்-செங்கோலாகிய, முறை புரக்கும் - அரசியல் செய்யும், பெருந்தகை-மேம்பாடுள்ள, வேந்தன்-அரசனது, அருங்குணம்போல-(பிறராற்பெறல்) அரிய நற்குணமென்ன.

(வி-ரை.) மநுநூல் விதிவழியே பிறந்த என்றதனால், கோல் செங்கோலென் றுரைக்கலாயிற்று.

'**மணந்தோர்க்கு**' என்பதுமுதல் '**நிலைநீர்நாடன்**' என்பதுவரை.
(3—9 வரிகள்.)

(ப-ரை.) மணந்தோர்க்கு-பிரிவில்லாதவர்களுக்கு, அமுதும் - அமுதத்தையும், தணந்தோர்க்கு - பிரிந்தவர்க்கு, எரியும் - அழலையும், புக்குழி புக்குழி - புகுந்த புகுந்த விடங்களில், புலன்பெற கொடுக்கும் - இந்திரிய வுணர்ச்சிபெறக் கொடுக்காநின்ற, மலையத் தமிழ்க்கால் - தமிழுக்கிடமாகிய பொதிகையினின்றும் தென்றலானது, வாவியுள் புகுந்து - தடங்களிற் படிந்து, புல் இதழ் தாமரை - புறவிதழ்த் தாமரைகளின், புது முகை அவிழ்ப்ப-புதியவரும்புகளை மலர்த்தலால், வண்டு இனம் படிந்து - வண்டினம் புகுந்து, மது - தேனை, கவர்ந்து உண்டு - விரும்பியுண்டு, சேபிதழ்க்குவளையினிரை-

நிரையாகிய செவ்விதழ்க் குவளைமலர்களில், நிரை உறங்கும் - வரிசையாகத் தங்குதற்கிடமாகிய, நீர்நிலை நாடன்-நீர்நிலைசூழ்ந்த மருதத் தலைவனாகுவை.

(வி-ரை.) மணந்தோர் என்றதனால் பிரிவின்மை பெறப்பட்டது. மணத்தல்-கூடுதல். தணத்தல் - பிரிதல். பொதியத்தினின்றும் வருதலால் 'தென்றலைத் தமிழ்க்கால்' என்றார். வாவி-வாபீயென்னும் வடமொழித் திரிபு. அவிழ்த்தல் - மலர்த்தல். கவர்தல் - விரும்புதல்.

'இவளோ மலையுறை' என்பதுமுதல் 'சிறுகுடிமகளோ' என்பதுவரை.

(9—12 வரிகள்.)

(ப-ரை.) இவளோ - (உன்னால் விரும்பப்பட்ட) இவளோவென்றால், மலை உறை-மலையருவியை, பகைத்து-வெறுத்து, வான் உறைக்கு - மழைத்துளிக்கு, அணக்கும் - அங்காத்தல் செய்கின்ற, புள்குலம் - (சக்கிரவாகப்) புள்ளினம், சூழ்ந்த-சூழ்ந்திருக்கின்ற, பொருப்பு உடை - மலையையிடமாகவுடைய, குறவர்தம் - குறவர்களது, பெருந்தேன் - இறாலிலுள்ள தேனை, கவரும் - விரும்புகின்ற, சிறுகுடி - சிறிய குடியிற்பிறந்த, மகளோ - பெண்ணாவள்.

(வி-ரை.) உறை - நீர், அது இங்கு அருவிக்காயினமையால் ஆகுபெயர். உறை - மழைத்துளி. அணத்தல் - அங்காத்தல் (வாய் திறத்தல்). குறவர்தம் என்பதில் தம் சாரியை. இறால் - தேன்கூடு.

'நீயே, ஆயமோடு' என்பதுமுதல் 'நாட்டினையே' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) நீயே - நீயோவென்றால், ஆயமோடு-மகளிர் கூட்டத்தோடு, ஆர்ப்ப - ஆரவாரிக்க, அரிகிணை முழக்கி - மரவயிரத்தாற் செய்த மருதப்பறை கொட்டி, மாயா நல் அறம் - அழியாத நல்லறத்தை, வளர் நாட்டினை - வளர்க்காநின்ற நாட்டினையுடையாய்.

(வி-ரை.) அரி-மரவயிரம். கிணை-மருதநிலப்பறை. வளர்நாடு - வினைத்தொகை நிலைத்தொடர்.

'இவளே, தோண்டகம்' என்பதுமுதல் 'பழிநாட்டவளே' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-ரை.) இவளே-இவளோவென்றால், தோண்டகம் - குறிஞ்சிப்பறை, துவைப்ப - முழங்க, தொழில்-தன்றொழில் சாத்தற்றொழில் செய்யப்பட்ட, புனம் வளைந்து - புன்பயிர்க் கொல்லைகளைச் சுற்றி, பகடு இனம் - யானைக்குலங்களை, கொல்லும் - வருத்துகின்ற, பழி நாட்டவள் - சீறூருடையவள்.

(வி-ரை.) தொண்டகம் - குறிஞ்சிநிலப்பறை. துவைத்தல் - முழக்கல். கொலைத்தொழி னிகழுமிடமாதலால் சீறூரைப் 'பழிநாடு' என்றார்.

'நீயே, எழுநிலைமாடத்து' என்பதுமுதல் 'நகரோய்' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) நீயே - நீயோவென்றால், எழுநிலை மாடத்து - நிலைமைகளான் மேலெழுந்த மாளிகைகளில், இளமுலை மகளிர் - பருவமங்கையர், நடம் செய - ஆடல்செய்ய, தாளவடம் - முத்துவடங்கள், தெறும் - சிந்துதற்கிடமாகிய, நகரோய் - நகரத்தையுடையாய்.

(வி-ரை.) நிலை - நிலைமை. வடம் - மாலை.

'இவளே, கடம்' என்பதுமுதல் 'வைப்பினளே' என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) இவளே - இவளோவென்றால், கடம் பெறு-மதமொழுக்காகின்ற, கரிக்குலம் - யானைக்குலங்களை; மடங்கல் புக்கு-சிங்கமெதிர்ந்து, அகழ-மத்தகத்தைப் பிளத்தலால், தெறித்திடு முத்தம்-தெறித்திட்ட முத்தங்களை, திரட்டு-சேர்க்கின்ற, வைப்பினள்-நிலத்தினளாவள்.

(வி-ரை.) குலம் - கூட்டம். அகழ்தல் - பிளத்தல், அதற்கு மத்தகத்தைப் பிளத்தலென்னும் பொருள் போந்தவா றென்னெனின், கரிக்குலம் என்றதனாலென்க.

'நீயே, அணிகெழு' என்பதுமுதல் 'பொலிகுவையன்றே' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) நீயே - நீயோவெனின், அணிகெழு நவமணி - அலங்கரிக்கப்பட்ட வொன்பான்மணிகளும், அலர் என தொடுத்த - மலர் மாலைபோலக் கோத்துள்ள, பொன்கொடி தேர்மிசை - கொடிகளாடாநின்ற பொற்றேர்மேல், பொலிகுவை - விளங்குவை.

(வி-ரை.) அலர்-ஆகுபெயர். மிசை-ஏழனுருபு, இடப்பொருட்டு.

'இவளே, மணிவாய்க்கிள்ளை' என்பதுமுதல் 'ஆதலின்' என்பதுவரை.

(23—25 வரிகள்.)

(ப-ரை.) இவளே - இவளோவெனின், மணிவாய் கிள்ளை - செவ்வாய்க்கிளிகளை, துணியாது - தெளியாமல், அகற்ற-ஓச்சுமாறு, நெட்டிதண் - நெடுமையாகிய பரண்மேல், ஏறும் - ஏறுதற்கிடமாகிய, இப்புனத்தினள் - இத்தினைப்புனத்தினள், ஆதலின்-ஆகையால்.

(வி-ரை.) கிள்ளையின்செவ்வாயைக் குறிக்கவேண்டுதலால் மணியென்ற தீண்டுச் செம்மணியைக் குறித்தது. செம்மணி-மாணிக்கம்.

'பெரும்புகழ்' என்பதுமுதல் 'கழைத்தோணசையே' என்பதுவரை.

(25—33 வரிகள்.)

(ப-ரை.) பெரும்புகழ் - மிக்கபுகழை, அணைகுதியாயின்-பெற வேண்டினையாயின், நாரணன் படர - திருமால் பின்னிட, தேவர் கெட்டு ஓட - தேவர்க ணிலைகெட் டோடாநிற்ப, வளி சுழல் - வீசுகின்ற காற்றுக்கிடனாகி, விசும்பின் கிளர் முகடு அணவி-மாசில்லாத விண்மீதிலளாவி, கரு முகில் - கரியமுகில்கள், வளைந்து - சூழ்ந்து, பெருகியபோல - பரந்தாற்போல, நிலை கெட - கீழ்மேலாக, பரந்த - பரவிய, கடல் கெழு - கடலிற்பிறந்த, விடத்தை-ஆலாலத்தை, மறித்து - தடுத்து, அவர் உயிர் பெற-அத்தேவர் முதலியோ ருயிருடன் வாழுமாறு, குறித்து - கடைக்கணித்து, உண்டருளி - உட்கொண்

டருளி, திரு களம் கறுத்த-ஸ்ரீகண்டங்கறுத்த, அருள்பெருநாயகன்-பேரருட்கடவுளது, கூடல் - மதுரையை, கூடினர்போல - அடைந்தவர் (பற்றற்றூற்) போல, இவள் - (இழிகுலத்தளாகிய) இவளது, கழைத்தோள் - (பசிய) மூங்கில்போலும் தோளைப் புணரும், நசையை - ஆசையை, நாடல் - நீ நாடாதொழிக.

(வி-ரை.) அணவல் - அளாவல். ஆலாலம் - பாற்கடல் கடையப்பட்டபோழ்தத் ததினின்றெழுந்த நஞ்சு. கடைக்கணித்தல்-கடாக்ஷித்தல். கழை - மூங்கில், அது ஈண்டுப் பசிய மூங்கிலை யுணர்த்திற்று, மகளிர் தோளுக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையின்.

நீயே நிலைநீர்நாடன், இவளே சிறுகுடிமகள்; நீயே அறம் வளர் நாட்டினை, இவள் பழிநாட்டவள்; நீ நகரோய், இவள் முத்தந்திரட்டு வைப்பினள்; நீ தேர்மிசைப் பொலிகுவை, இவள் இதணேறு மிப்புனத்தினள்; ஆதலின், புகழிணைகுதியாயின், அருட்பெருநாயகன் கூடல் கூடினர்போல, இவள் தோணசை நாடனீயென வினைமுடிவு செய்க. (௯௨)

திருக்கோவையார் ௬௧௨-ம் செய்யுள்.

காவற்பிரிவறிவித்தல்.

பிரிவறிவித்தலென்பது—தருமநூல் விதியால் நமர் உலகத்தைப் பாதுகாப்பான் பிரியக் கருதாநின்றூரெனத் தலைமகன் காவலுக்குப் பிரியக் கருதாநின்றமை தோழி தலைமகளுக் கறிவியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்றில்லை யானரு ளால்விரி நீருலகங்
காப்பான் பிரியக் கருதுகின் றூர்நமர் கார்க்கயற்கட்
பூப்பா னலமொளி ரும்புரி தாழ்குழற் பூங்கொடியே.

இருநிலங் காவற் கேகுவர் நமரெனப்
பொருசுடர் வேலோன் போக்கறி வித்தது.

(ப-ரை.) கார் - கரிய, கயல் - கயல்போலும், கண் - கண்ணினையும், பூப்பால் - பூவின்கண், நலம் ஒளிரும் - (நறுநாற்றமுடைமையாகிய) நன்மை விளங்கும், புரி தாழ் குழல் - சுருண்ட தாழ்ந்த குழலையுமுடைய, பூங்கொடியே - பூங்கொடியை யொப்பாய், மூப்பான் - (எல்லார் யாக்கைக்கு முன்னே தனதிச்சையாற் கொள்ளப்

பட்ட திருமேனியை யுடையனாதலின் எல்லார்க்கும் தான்) மூப்பான், இளையவன் - (பின்றோன்றிய யாக்கையையுடையா ரெல்லாரு மூப்பவுந் தானிளமைபெற்ற விளமையை யுடையனாதலின் எல்லார்க்கும்) இளையான், முன்னவன் பின்னவன் - உலகத்திற்கு முன்னுள்ளோன் அதற்குப் பின்னுமுள்ளோன், முப்புரங்கள் - மூன்று புரங்களையும், வீப்பான் - கெடுப்பான், வியன் தில்லையான் - அகன்ற தில்லைக்கண்ணுள்ளான், ஆதலால்-(அவனது) ஆதலால், நமர்-நம்மவர், விரி நீர் உலகம் - விரிந்த நீரால் சூழப்பட்ட வுலகத்தை, காப்பான் - காக்க வேண்டி, பிரியக் கருதுகின்றார் - பிரியக் கருதாநின்றார், எ - று.

(வி-ரை.) பூப்பால் என்பதில் பால் ஏழனுருபு. மலருக்கு நறு நாற்றமுடைமையே நன்மையாதலால், பூப்பானலம் என்றதற்கு பூவின்கண் நறுநாற்றமுடைமையாகிய நன்மையென விரித்துரைக்க லாயிற்று. வீத்தல் - கெடுத்தல் (அ[illegible]). காப்பான் என்பதில் பான் செயவெனெச்ச வாய்ப்பாட்டு வினையெச்சம்.

நேரிசையாசிரியப்பா.

நடைத்திரைப் பரவை நாற்கட லணைத்து
வரையறுத் தமைந்த வகைநான் காக
விதிவரத் திருத்திய மேதினிப் பொறையைக்
குருமணி விரித்தலிற் றேனொடு கிடந்து
மாயாது தொடுத்த மணமலர் சுமத்தலின்
வரையென நிறுத்திய திருவளர் பெருந்தோ
ளரித்து மணைத்துந் தானெனக் கண்டுஞ்
செய்தது மன்றித் திருமனம் பணைத்துக்
காக்கவுங் குரிசில் கருத்துறும் போலும்
விடையா வடக்கெழு செப்பு வெள்ளியஞ் சிலம்பினுந்
தென்கால் விடுத்துச் செப்பிற் பொருப்பினுங்
கொண்டல்வந் துலவு நீலக் குவட்டினுங்
கோடைசென் றடைதருஞ் செம்பொற் கிரியினும்
பிறந்தவர் பிறவாப் பெரும்பதி யகத்து
முடிந்தவர் முடியா மூதா ரிடத்துங்
கண்டவர் காணுக் காட்சிசெய் நகரினும்
வேதத் தலையினும் விதியாக மத்தினுங்

கல்விய ருளத்துங் கவர்நெஞ் சகத்துந்
தெய்வம் விடுத்துப் பொய்கொள்சிந் தையினுங்
கொலையினர் கண்ணுங் குன்று தியைந்து
வெளியுறத் தோன்றி யிருளுற மறைந்த
விஞ்சைவந் தருளிய நஞ்சணி மிடற்றோன்
சந்தமும் பதமுஞ் சருக்கமு மடக்கமுஞ்
சின்னக் குறளுஞ் செழுங்கார் போலப்
பெருமறை முழங்குந் திருநகர்க் கூட
லொப்புற் றடைமலர் சுமந்த
மைப்புறக் கூந்தற் கொடிவணங் கிடையே.

நடைத்திரைப்பரவை - கொடிவணங்கிடையே. பகுதி - காவற் பிரிவு. துறை - பிரிவறிவித்தல்.

'விடையா' என்பதுமுதல் 'கோல்லிக்கிரியினும்' என்பதுவரை.
(10—13 வரிகள்.)

(ப-ரை.) விடையா - வருத்தஞ்செய்யாத, வடந்தை - வடகாற்றை, செய்-விடுக்கின்ற, வெள்ளியஞ் சிலம்பினும்-கைலைக்கிரியினும், தென் கால் - தென்றற்காற்றை, விடுக்கும் - வெளிப்படுத்தாநின்ற, செம்பிற் பொருப்பினும் - தாமிரபர்ணியென்னு நதியையுடைய பொதிகைமலையினும், கொண்டல்-கீழ்காற்று, வந்துலவும்-வந்துலவுகின்ற, நீலக்குவட்டினும் - நீலமலையிலும், கோடை - மேல்காற்று, சென்று-வந்து, உடற்றும்-வெப்பஞ்செய்கின்ற, கொல்லிக்கிரியினும்-கொல்லி மலையினும்.

(வி-ரை.) விடைதல் - வருத்துதல். வெள்ளியஞ்சிலம்பு என்பதில் அம் சாரியை, அழகெனினுமாம்; வெள்ளிச்சிலம்பு - வெள்ளியாணியன்றமலை.

'பிறந்தவர்' என்பதுமுதல் 'வெளியுறத்தோன்றி' என்பதுவரை.
(14—21 வரிகள்.)

(ப-ரை.) பிறந்தவர் - (தன்னிடத்தில்) பிறந்தவர்கள், பிறவா - (பின்னும்) பிறவாத, பெரும்பதி அகத்தும்-பெருமையாகிய திருவாரூரிலும், முடிந்தவர் - இறந்தவர்கள், முடியா - பின்னும் பிறந்திறவாத, மூதூரிடத்தும் - பழமையான வடகாசியிலும், கண்டவர் - தரிசித்தவர்கள், காணா - பின்னும்பிறந்து காணப்படாத, காட்சி செய் -

தம்மை அறிவுருவாக்குகின்ற, நகரினும் - சிதம்பரத்திலும், வேதத் தலையினும் - வேதத்தினுச்சியிலும், விதி ஆகமத்தினும் - விதித்த ஆகமங்களிலும், கல்வியர் உளத்தும் - கற்றறிந்தவருள்ளத்திலும், குன்றாது இயைந்து - குறையாது பொருந்தி, வெளியுற தோன்றி - வெளிப்படத் தோன்றியும்.

(வி-ரை.) முடிதல் - இறத்தல். காட்சி - அறிவு.

'கவர்நெஞ்சகத்தும்' என்பதுமுதல் 'கொலையினர்கண்ணும்' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

'இருளுற' என்பதுமுதல் 'மிடற்றோன்' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) கவர் நெஞ்சகத்தும் - தவத்தினிடையூறுகிய சினமுள்ள மனத்தினிடத்தும், தெய்வம் விடுத்து - தெய்வமுண்டென்பதைவிட்டு, பொய் கொள் - பொய்மையை மேற்கொண்ட, சிந்தையினும் - உள்ளத்தும், கொலையினர் கண்ணும்-கொலைத்தொழிலினரிடத்தும், இருள் உற - இருளாகப்பொருந்த, மறைந்த - மறையும், விஞ்சை வந்தருளிய-வித்தையிற் கைவந்த, நஞ்சு அணி மிடற்றோன் - விடத்தைத் தரித்த கண்டத்தையுடையவனது.

(வி-ரை.) கவர்-இடையூறு. விஞ்சை வித்தை என்பன வித்யா என்னும் வடசொற்றிரிபு. மிடறு - கண்டம்.

'சந்தமும்' என்பதுமுதல் 'வணங்கிடையே' என்பதுவரை.

(23—27 வரிகள்.)

(ப-ரை.) பெருமறை - பெருமையான வேதத்திலுள்ள, சந்தமும் - சந்தங்களும், பதமும் - பதங்களும், சருக்கமும் - சருக்கங்களும், அடக்கமும் - அடக்கங்களும், சின்னக்குறளும் - சின்னக்குறளுமாகிய சாகைகள், செழுங்கார்போல - கார்கால மேகம்போல, முழங்கும் - முழங்குகின்ற, திருநகர் - அழகிய நகராகிய, கூடல் ஒப்புற்று - மதுரைக்கு ஒப்பாகி, அடை மலர் - தேன்பொருந்திய மலர்கள், கமழ்ந்த - பரிமளித்த, புறம் - பின்புறத்திலுள்ள, மை - கரிய, கூந்தல் - கூந்தலையும், வணங்கு - வளைகின்ற, கொடி - கொடிபோலும், இடையே - இடையையும் உடை[illegible]).

(வி-ரை.) முழங்குதல் - முழங்குதற் கிடமாயிருத்தல். கமழ்தல் - பரிமளித்தல்.

'நடைத்திரை' என்பதுமுதல் 'குரிசில்' என்பதுவரை.

(1—3, 9 வரிகள்.)

(ப-ரை.) குரிசில் - நமதரசனுக்கு, நடை-எழுதலுள்ள, திரை - அலைசூழ்ந்த, பரவை - பரப்பாகிய, நாற்கடல் அணைத்து-நாற்றிசைக் கடல்களாற் கோலி, வரையறுத்து - எல்லைப்படுத்தி, அமைந்த-(எல்லாவளமும்) நிறைந்த, வகை நான்கு ஆக-நான்குவகை நிலத்ததாக, விதிவர திருத்திய-மநுநூல் விதியோடு பொருந்துமாறு திருத்திய, மேதினி பொறையை - பூமியாகிய பாரத்தை.

(வி-ரை.) பரவை - பரத்தல். வரையறுத்தல் - எல்லைப்படுத்தல். அமைதல் - நிறைதல். நாலு-ஆகுபெயர். நால்வகை நிலமாவன- குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன.

'குருமணிவிரித்தலின்' என்பதுமுதல் 'கருத்துறும்போலும்' என்பதுவரை.

(4—9 வரிகள்.)

(ப-ரை.) குருமணி விரித்தலின் - (தோளணியில்) குருவிந்த மணிகள் பதிந்திருத்தலாலும், தேனொடு கிடந்து - வண்டுகளோடு பொருந்தி, மாயாது தொடுத்த - வாடாது தொடுக்கப்பட்ட, மணமலர் - நறுமலர் மாலைகளை, சுமத்தலின் - மேற்கொண்டிருத்தலாலும், வரை என - மலைகளிவையென, நிறுத்திய - நிலைபெறுத்திய, திரு உறை - சயமகள் வசிக்கின்ற, பெருந்தோள் - திரண்ட தோளினிடத்தே, தரித்தும் - தாங்கியும், அணைத்தும் - தழுவியும், தான் என கண்டும் - (மன்னுயிர்களைத்) தன்னுயிரென நினைந்தும், செய்ததும் அன்றி-(அரசியல்)செய்துவந்ததுமல்லாமல், திரு மனம் பணைத்து - மாசின்மையான மனம் பூரித்து, காக்கவும் - (பகைக்குட்படாவண்ணம்) பாதுகாக்கவும், கருத்துறும்போலும் - கருத்துளான் போலும்.

(வி-ரை.) மலர் - ஆகுபெயர். திரு - வெற்றித்திரு. தான் என்றது தன்னுயிரை. பணைத்தல் - பூரித்தல்.

கூடலை யொப்பாகிய கொடிவணங்கிடையாய்! குரிசில் விதிவரத்திருத்திய மேதினிப் பொறையைப் பெருந்தோடரித்தும் அணை

த்தும் தானெனக் கண்டும் செய்ததுமன்றி, திருமனம் பணைத்துக் காக்கவுங் கருத்துறும்போலுமென வினைமுடிவு செய்க. (௫ு)

திருக்கோவையார் ௩௬௧-ம் செய்யுள்.

உண்மகிழ்ந்துரைத்தல்.

உண்மகிழ்ந்துரைத்தலென்பது—பொருண் முடித்து இளைஞரெதிர்கொள்ள வந்து புகுந்த தலைமகன், தலைமகளுடன் பள்ளியிடத்தனாயிருந்து, இம்மானைப் பிரிந்து பொருள்தேட யான் வெய்யசுரஞ் சென்ற துன்பமெல்லாம் இவள் கொங்கைகள் என்னுறுப்புக்களிடை மூழ்க இப்பூவணைமே லணையாமுன்னம் துவள்வுற்றதெனத் தன்னுள்ளே மகிழ்ந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மயின்மன்னு சாயலிம் மானைப் பிரிந்து பொருள்வளர்ப்பான்
வெயின்மன்னு வெஞ்சுரஞ் சென்றதெல் லாம்விடை யோன்புலியூர்க்
குயின்மன்னு சொல்லிமென் கொங்கையென் னங்கத் திடைக்குளிப்
துயின்மன்னு பூவணை மேலணை யாமுன் றுவளுற்றதே. [பத்

பெருநிதி யோடு திருமனை புகுந்தவன்
வளமனைக் கிழத்தியோ டுளமகிழ்ந் துரைத்தது.

(ப-ரை.) மயில் மன்னு சாயல் - மயில்போலு மென்மையையுடைய, இ மானை பிரிந்து - இந்த மானைப்பிரிந்து, பொருள் வளர்ப்பான் - பொருளை யீட்டுதற்கு, வெயில் மன்னும்-வெயில் நிலைபெற்ற, வெம் சுரம் சென்றது எல்லாம்-வெய்யசுரத்தைச் சென்ற துன்பமெல்லாம், விடையோன் - விடையையுடையவனது, புலியூர் - புலியூரிடத்துள்ளாகிய, குயில் மன்னு சொல்லி - குயிலோசைபோலுஞ் சொல்லையுடையாளுடைய, மெல் கொங்கை - மெல்லிய கொங்கைகள், என் அங்கத்திடை குளிப்ப-என்னுறுப்புக்களினிடையே மூழ்கும் வகை, துயில் மன்னு - துயினிலைபெறும், பூவணைமேல்-பூவணையிடத்து, அணையாமுன் - அணைவதன்முன்னம், துவளுற்றது-மாய்ந்தது, எ - று.

(வி-ரை.) மான்-ஆகுபெயர். வளர்ப்பான் என்பதில் பான் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். ஈட்டல்-சம்பாதித்தல். விடை-இடபம். விடையோன் - இடபவாகனன் (சிவபெருமான்). வியாக்கிரபாதர் பூசித்த தலமாதலின் சிதம்பரம் புலியூர் எனப்பட்டது. குளித்தல் - அழுந்தல் எனினுமாம். அங்கம் என்றது மார்பு முதலிய வுறுப்புக்களை. பூவணை - மலர்ச்சேக்கை. துவளல் - அழிதல்.

நேரிசையாசிரியப்பா.

நுனிக்கவி னிறைந்த திருப்பெரு வடிவின
ளுயிர்வைத் துடல முழன்றன போல
நெடும்பொரு ளீட்ட நிற்பிரிந் திறந்து
கொன்றுண லஞ்சாக் குறியினர் போகுங்
கடுஞ்சுரந் தந்த கல்லதர் வெப்பந்
தேவர் மருந்துந் தென்றமிழ்ச் சுவையு
மென்னுயிர் யாவையு மிட்டடைத் தேந்திக்
குருவியுங் குன்றுங் குரும்பையும் வெறுத்தநின்
பெருமுலை மூழ்கவென் னுளத்தினிற் றொடாமுன்
வீழ்சுற் றொழுக்கிய பராரைத் திருவடக்
குளிர்நிழ லிருந்து குணச்செயன் மூன்று
முடலொடு படரு நிலைநிழல் போல
நீங்காப் பவத்தொகை நிகழ்முத னான்கு
முடனிறைந் தொழியா வுட்பகை யைந்து
மதிஞரிற் பழித்த வடிவிரு மூன்று
மணுகா தகற்றிப் பணிமுனி நால்வர்க்
கறமுத னான்கும் பெறவருள் செய்த
கூடற் பெருமா னீடருண் மூழ்கி
யிருபத முள்வைத் திருந்தவர் வினைபோற்
போயின துணைவினை நோக்கி
யேகின வெனக்கே யற்புதந் தருமே.

நுனிக்கவினிறைந்த - அற்புதந்தருமே. பகுதி - பொருள்வயிற்பிரிவு. துறை - உண்மகிழ்ந்துரைத்தல்.

நுனிக்கவி னிறைந்த திருப்பெரு வடிவினள்.

(1—வது வரி.)

(ப-ரை.) நுனி கவின் - (உணர்வுடையோர்) நுனிக்கத்தக்க அழகு, நிறைந்த-குறைபடாத, திரு பெரு வடிவினள் - திருமகளினு மிக்க வடிவையுடையாய்.

(வி-ரை.) நுனித்தல்-ஆராய்தல். வடிவினள் - அண்மைவிளி.

'உயிர்வைத்து' என்பதுமுதல் 'பிரிந்திறந்து' என்பதுவரை.
(2—3 வரிகள்.)

(ப-ரை.) உயிர் வைத்து - உயிரை யோரிடத்தேவைத்து, உடலம் - தேகமானது, உழன்றனபோல - தனியே திரிந்தாற்போல, நெடு பொருள் - பெரியபொருளை, ஈட்ட - சம்பாதிக்கும் பொருட்டு, நின் பிரிந்து இறந்து - நின்னைவிட்டுப் பிரிந்துபோய்.

(வி-ரை.) உடலம்-ஆகுபெயர். இதில் அம் சாரியை. இறத்தல்-போதல்.

'கொன்று' என்பதுமுதல் 'வெப்பம்' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) கொன்று - (உயிர்களைக்) கொன்று, உணல் அஞ்சா - உண்ணுதற்கு அச்சப்படாமையாகிய, குறியினர்-குணமுடையார் (பாவிகள், போகும்-செல்லுமிடமாகிய, கடு சுரம் தந்த-கொடிய பாலையிலுண்டான, கல் அதர் வெப்பம் - கல்வழியின் வெம்மையானது.

(வி-ரை.) அஞ்சாமை அஞ்சா என ஈறு தொகுத்தது, "பொய்யா விளக்கு" என்புழிப்போல. அதர்-வழி.

'தேவர்' என்பதுமுதல் 'தோடாமுன்' என்பதுவரை.
(6—9 வரிகள்.)

(ப-ரை.) தேவர் - தேவருண்ணுகின்ற, மருந்தும்-அமிர்தமும், தென் தமிழ் சுவையும் - இனிமையுள்ள தமிழின் மதுரமும், என் உயிர் யாவையும் - என்னுயிரெல்லாமும், இட்டு அடைத்து ஏந்தி - தமக்குள்ளே யடைத்துவைத் திறுமாந்து, குருவியும் - சக்கரவாகப் பறவையையும், குன்றும் - மலைகளையும், குரும்பையும்-இளநீரையும், வெறுத்த-கோபித்த, நின் பெரு முலை - நினது பெரிய தனங்களில், மூழ்க - மூழ்குதற்கு, என் உளத்தினில் - என் மனத்தே, தொடா முன் - நினைப்பதற்கு முன்னே.

(வி-ரை.) ஏந்தல்-இறுமாத்தல். தனத்துக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் குருவியென்ற தீண்டுச் சக்ரவாகப் பறவையைக் குறித்தது. தொடல் - நினைத்தல்.

'வீழ்' என்பதுமுதல் 'நிலைநிழல்போல' என்பதுவரை.
(10—12 வரிகள்.)

(ப-ரை.) வீழ்-விழுதுகளை, சுற்று ஒழுக்கிய - சுற்றிலுமிறக்கிய, பரு அரை-பருமையான அடியுள்ள, திரு வடம் - அழகாகிய கல்லால

மரத்தின், குளிர் நிழல் இருந்து - குளிர்ந்த நிழலின்கண் குருமூர்த்த மாக விருந்தருளி, குணச்செயல் மூன்றும் - இராசதாதி முதலிய முக் குணச்செய்கைகளும், உடலொடு படரும் - உடலோடு செல்கின்ற, நிலைநிழல்போல - நிழலின் தன்மைபோல.

(வி-ரை.) ஒழுக்கல் - இறக்கல். அரை - அடிமரம். வடம்-வட சொல்; ஆலமரமென்பது பொருளாயினும் ஈண்டைக்கேற்பக் கல் லாலமரமென் றுரைக்கலாயிற்று; "கல்லா ணிழன்மலை, வில்லா ரரு ளிய, பொல்லா ரடிமலர், நல்லார் புனைவரே" என்றார் மேலோரும்.

'நீங்கா' என்பதுமுதல் 'அணுகாதகற்றி' என்பதுவரை.

(13—16 வரிகள்.)

(ப-ரை.) நீங்கா - (தம்மைவிட்டு)நீங்காத, பவம் தொகை - பிற விக் கேதுவாகிய வினைக்கூட்டம், நிகழ் முதல் - நிகழ்தற் காதாரமா கிய, நான்கும் - மனமுதலிய நான்கும், உடன் நிறைந்து-தம்முடன் அநாதியாயிருந்து, ஒழியா-நீங்கற்கரிய, உள் பகை ஐந்தும்-உட்பகை யாகிய ஆவரணமைந்தும், மதிஞரின்-அறிஞரால், பழித்த-பழிக்கப் பட்ட, வடு இருமூன்றும்-காமமுதலிய குற்றங்களாறும், அணுகாது அகற்றி - தம்மை நெருங்காமற்றுரத்தி.

(வி-ரை.) பவம்-வடசொல், பிறப்பு என்பது பொருள். முதல்- ஆதாரம், காரணம் எனினுமாம். மனமுதலிய நான்கு என்றது மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பவற்றை. ஆவரணம் - மறை ப்பு. காமமுதலிய குற்றங்களாறு என்றது, காமம் க்ரோதம் லோ பம் மோகம் மதம் மத்ஸரம் என்பவற்றை.

'பணி' என்பதுமுதல் 'வினைபோல்' என்பதுவரை.

(16—19 வரிகள்.)

(ப-ரை.) பணி-(தன்னை) வணங்கப்பெற்ற, முனி நால்வர்க்கு- சனகாதி நான்கு பிரமருஷிகட்கும், அறமுதல் நான்கும் - அறமுத லிய புருடார்த்த நான்கையும், பெற-(அவர்கள்) அடையுமாறு, அருள் செய்த - சொல்லாமற் சொல்லியருளிய, கூடல் பெருமான்-மதுரை நாயகனது, நீடு அருள்-அழிவில்லாத திருபாசமுத்திரத்தில், மூழ்கி- முழுகி, இருபதம் - (அவனது) இரண்டு திருவடிகளையும், உள் வைத்து-உள்ளத்திலிருத்தி, இருந்தவர் - சிவாநுபூதியிலிருந்தவர்க ளுடைய, வினைபோல் - வினை ஒழிந்தாற்போல.

(வி-ரை.) சனகாதி நான்கு பிரம விருடிகளாவார்:-ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநத்ஸுஜாதர் என்பவர். அறமுதலிய புருடார்த்தம் நான்காவன: அறம் பொருள் இன்பம் வீடு என்பன. சொல்லாமற் சொல்லல் - கைகாட்டல். "கல்லாலி னீழறனி லொருநால்வர்க்கும்,கடவுணி யுணர்த்தியதுங் கைகாட் டென்றாற்,சொல்லாலே சொலப்படுமோ சொல்லுந் தன்மை, துரும்புபற்றிக் கடல்கடக்குந் துணிபே யன்றோ." "கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்க முதற் கற்ற கேள்வி, வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய், எல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாமனினைந்துபவத் தொடக்கை வெல்வாம்" என்றார் பிறரும்.

'போயின' என்பதுமுதல் 'தருமே' என்பதுவரை.

(20—21 வரிகள்.)

(ப-ரை.) போயின - நீங்கிப்போன, துனைவினை - விரைவை, நோக்கி - ஆராயுமிடத்து, ஏகின எனக்கே - பொருண்மேற் சென்ற வெனக்கே, அற்புதம் தரும்-அதிசயத்தைத் தராநிற்கும், எ - று.

(வி-ரை.) நோக்கி என்பது வினையெச்சத்திரிபு. துனைவு - விரைவு.

திருப்பெரு வடிவினளே! நிற்பிரிந் திறந்துபோகுங் கடுஞ்சுரந் தந்த கல்லதர் வெப்பமானது (நின்பெருமூலை மூழ்க வென்னுளத்தினிற் றொடாமுன் கூடற்பெருமா னீடருண்மூழ்கி யிருபத முள்வைத் திருந்தவர் வினைபோற்) போயின துனைவினை நோக்கி, ஏகின வெனக்கே யற்புதந் தருமென வினைமுடிவு செய்க. (௩௯)

திருக்கோவையார் ௩௯௧-ம் செய்யுள்.

புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தல்.

புனலாட்டுவித்தமை கூறிப் புலத்தலென்பது:— அணைந்தவழி யூடாநின்ற தலைமகள், ஊடறீராநின்ற தலைமகனோடு, இவர் செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம், பலருமறிய வொருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல என் மனையின்கணிவர் வந்து நிற்கின்றவிது எனக்குப் பொறுத்த லரிதெனத் தணிக்கத் தணியாது, பரத்தையைப் புனலாட்டுவித்தமை கூறிப் புலவா நிற்றல். அதற்குச் செய்யுள்:—

செந்தார் நறுங்கொன்றைச் சிற்றம் பலவர் தில்லைநகரோர்
பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன் பாவியெற்கு
வந்தார் பரிசுமன் றாய்நிற்கு மாறென் வளமனையிற்
கொந்தார் தடந்தோள் விடங்கா லயிற்படைக் கொற்றவரே.

ஆங்கதனுங் கழுக்கமெய்தி
வீங்குமென்முலை விட்டுரைத்தது.

(பொ-ரை.) கொந்து ஆர்-கொத்துமாலை நிறைந்த, தடம் தோள்-பெரிய தோளினையும், விடம் கால் - நஞ்சைக்காலுர், அயில் படை - கூரிய படையினையுமுடைய, கொற்றவர் - தலைவர், பாவியெற்கு - தீவினையேற்கு, வந்தார்-வந்து, என் வளமனையில் நிற்குமாறு-எனது வளமனையில் நிற்கின்றபடி, பந்து ஆர்-பந்துபயின்ற, ஓர் விரலியை - விரலாளொருத்தியை, செம் தார்-செய்யதாராகிய, நறுங்கொன்றை - நறிய கொன்றைப்பூவினையுடைய, சிற்றம்பலவர் - சிற்றம்பலவரது, தில்லைநகர் - தில்லையாகிய நகர் (வரைப்பில்), பாய்-பாய்ந்த, புனல் ஆட்டி - புனலை யாட்டுவித்து, வந்தார்-(வெளிப்படத் தவறுசெய்து) வந்தார், பரிசும் அன்றாய்-(சிலர் நிற்கும்) பரிசுமன்றாய், (மனத்தவறு செய்யாதார் வந்து வந்து நிற்குமாறு வந்து நின்றாராயின், அது பொறுத்தலரிது), எ - று.

(வி-ரை.) கொத்து கொந்து என மெலித்தலாயிற்று. தடம் - மலையுமாம். காலல் - உமிழ்தல். படை - ஆயுதம், படுத்தற்குரியது. படுத்தல் - கொல்லுதல். வந்தார் - வந்து என்னும் பொருடரலால் முற்றெச்சம். வளம் - செல்வம். பயிலல் - பழகல் (ஆடல்). பந்தார் விரலியென்றது பரத்தையை. நறிய - மணமுள்ள. புனலாட்டல் - நீராட்டல்.

நேரிசையாசிரியப்பா.

கொன்றையந் துணரிற் செவ்வழி குறித்தும்
வாலுழை யெருக்கில் வளருழை பாடியுங்
கூவிளங் கண்ணியிற் குலக்கிளை முரற்றியும்
வெண்கூ தளத்தின் விளரிநின் றிசைத்தும்
வண்டுந் தேனு ஞிமிறுஞ் சுரும்பு
முழ்நற வருந்தி யுறங்குசெஞ் சடையோன்
மதுமலர் பறித்துத் திருவடி நிறைத்த
நான்மறைப் பாலனை நலிந்துயிர் கவருங்
காலனைக் காய்ந்த காலினன் கூடற்

திருமருங் கணைந்து வருபுனல் வையை
வரைபுரண் டென்னத் திரைநிரை துறையகத்
தணந்தெடுத் தேந்திய வரும்புமுகிழ் முலையோண்
மதிநுதற் பெருமதி மலர்முகத் தொருத்தியை
யாட்டியு மணைத்துங் கூட்டியுங் குலவியு
மேந்தியு மெடுத்து மொழுக்கியு மீர்த்து
முழுக்கியுந் தபுத்தியு முலையொளி நோக்கியும்
விளிமொழி யேற்றும் விதலையிற் றிளைத்தும்
பூசியும் புனைந்தும் பூட்டியுஞ் சூட்டியு
நிறுத்தியு நிறைத்து நெறித்துஞ் செறித்து
மெழுதியுந் தப்பியு மிசைத்தும் பிணித்துங்
கட்டியுங் கலத்தியுங் கமழ்த்தியு மறைத்துச்
செய்தன வெல்லாஞ் செய்யலர் போலவென்
னெட்டிலை பொலிந்தபொன் னிறைதிரு வுறைபுளிற்
பாசடைக் குவளைச் சுழன்மணக் காட்டினைக்
கருவரிச் செங்கண் வராலினங் கலக்க
வெரியலர் முண்டகத் தடவிதிக் கெறிய
வெள்ளுடற் கருங்கட் கயனிரை யுகைப்ப
மரகதப் பன்னத் தாம்பலங் குப்பையைச்
சொரியெயிற்றுப் பேழ்வாய் வாளைகடி வைப்பப்
படிந்துசே டெறியுஞ் செங்கட் கவரியு
மலைசூழ் கிடந்த பெருங்குலப் பரப்பை
மலைகொடு மலைந்த முதுநீர் வெள்ளமு
மிடைந்துவயல் திரிந்து முதுகுசரிந் துடைந்து
சிறியோன் செருவென முறியப் போகி
யுழவக் கணத்தைக் குலக்குடி புகுத்தும்
பெருநீ ரூரர் நிறைநீர் விடுத்துச்
செறிந்த தென்னெனக் கேட்டி
மறிந்துழை விழித்த மறிநோக் கினளே.

கொன்றையந்துணரில் - மறிநோக்கினளே. பகுதி - பரத்தையிற்பிரிவு. துறை - புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்.

மறிந்துழை விழித்த மறிநோக் கினளே.
(3௪—வது வரி.)

(ப-ரை.) மறிந்துழை - மறிபட்ட இடத்தே, விழித்த - விழிக்கின்ற, மறி நோக்கினளே - மான்போலும் பார்வையினையுடையாய்.

(வி - ரை.) மறிந்தவுழை மறிந்துழையென நிலைமொழியீற்றகரந் தொகுத்தது. மறிபடல் - வலையால் தடுக்கப்படல்.

'பாசடை' என்பதுமுதல் 'கலக்க' என்பதுவரை.
(24—25 வரிகள்.)

(ப-ரை.) சுழல் - சுற்றுகின்ற, மணம் - மணம் பொருந்திய, பாசடை-பசியவிலைகளையுடைய, குவளைக்காட்டினை - குவளை மலர்த்திரளை, கரு வரி - கரிய வரியினையும், செம் கண் - சிவப்பாகிய கண்களையுமுடைய, வரால் இனம்-கூட்டமாகிய வரால்கள், கலக்க-கலக்கா நிற்கவும்,

(வி-ரை.) குவளை - ஆகுபெயர். வரி - கீற்று.

'எரியலர் அடவி' என்பதுமுதல் 'உகைப்ப' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) முண்டகத்து - தாமரைகளின், எரி அலர் அடவி - எரிபோல மலர்கின்ற பூத்திரளை, திக்கு எறிய-திசைதோறுஞ் சிந்துமாறு, வெள் உடல் - வெள்ளிய வுடலையும், கருங்கண் - கரிய கண்ணையுமுடைய, கயல் நிரை - சேன்மீன் கூட்டம், உகைப்ப - பாயாநிற்பவும்.

(வி-ரை.) எரி - நெருப்பு. அடவி - காடு, அது இங்குத் திரளுக்காயிற்று. உகைத்தல் - பாய்தல்.

'மரகதப்பன்னத்து' என்பதுமுதல் 'துவைப்ப' என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(ப-ரை.) மரகதப்பன்னத்து - மரகதமணிபோன்ற இலைகளோடு, ஆம்பலங்குப்பையை - ஆம்பற்பூத்திரளை, சொரி எயிறு - சொரிந்தாலொத்த பற்களையும், பேழ் வாய் - பெரிய வாயையுமுடைய, வாளைகள் - வாளைமீன்கள், துவைப்ப-பாய்ந்து துவைக்காநிற்கவும்.

(வி-ரை.) மரகதமணி - பச்சைமணி. ஆம்பல் - ஆகுபெயர். துவைத்தல் - மிதித்தல்.

'படிந்து' என்பதுமுதல் 'முறியப்போகி' என்பதுவரை.
(30—34 வரிகள்.)

(ப-ரை.) படிந்து - (நீரில்) குளித்து, சேடு எறியும்-சேறுக்கு கின்ற, செம் கண் - சிவப்பாகிய கண்ணையுடைய, கவரியும் - எருமை களும், மலை சூழ் கிடந்த-மலை சூழ்ந்திருந்தாலொத்த, பெரு - உயர் வாகிய, கூலப்பரப்பை-கரையின் பரப்பை, மலைகொடு-தான் பேர்த் துக்கொண்டு வரும் மலைகளால், மலைந்த - உடைக்கின்ற, முதுநீர் வெள்ளமும் - கடல்போலு நீர்ப்பெருக்கும், மிடைந்து - நெருங்கி, வயல் திரிந்து - வயல்கள் மாறுபட்டு, முதுகு சரிந்து உடைந்து-அவ் வரப்பு மேடுகள் சரிந்துடைபட்டு, சிறியோன் - குறுநிலமன்னன் செய்யும், செரு என - போர்போல, முறியப்போகி - முறியுமாறு சென்று.

(வி-ரை.) படிதல் - குளித்தல். கூலம் - கரை, அது குலம் எனக் குறுகிற்று. மலைதல் - உடைத்தல். முதுநீர்-கடல். மிடைதல்- நெருங்குதல். திரிதல் - மாறுபடல்.

'உழவக்கணத்தை' என்பதுமுதல் 'பெருநீரூரர்' என்பதுவரை.
(35—36 வரிகள்.)

(ப-ரை) உழவக்கணத்தை - உழவர் கூட்டங்களை, குலக் குடி புகுத்தும் - செய்கரையினிடத்துக் குடிபோகச் செய்கின்ற, பெரு நீர் ஊரர்-பெருமைத் தன்மையுள்ள நாட்டையுடைய தலைவர்.

(வி-ரை.) கணம் - கூட்டம். குலம் - செய்கரை. நீர்-தன்மை. ஊர் என்றது ஈண்டு நாட்டுக்காயிற்று.

'கொன்றையந்துணரில்' என்பதுமுதல் 'செஞ்சடையோன்' என்பதுவரை.
(1—6 வரிகள்.)

(ப-ரை.) கொன்றையந்துணரில்-கொன்றைப் பூங்கொத்தில், செவ்வழி குறித்தும்-செவ்வழியென்னும் பண்ணை இசைத்தும், வால் உழை எருக்கில் - வெண்மையான எருக்கமலரிடத்தே, வளர் உழை பாடியும் - உழையென்னும் பண்ணை மிகப்பாடியும், கூவிளக் கண் ணியில் - வில்வமாலையில், குலக்கிளை முரற்றியும் - சிறப்புள்ள கிளை யென்னும் பண்ணைப்பாடியும், வெள் கூதளத்தில்-வெள்ளிய கூதாள மலரில், விளரிநின்று இசைத்தும் - விளரியென்னும் பண்ணை ஒழி வறப்பாடியும், வண்டும் தேனுஞ் சிமிறும் சுரும்பும் - ஆகிய இந்நால்

வகை அளிக்குலம், உமிழ் நறவு அருந்தி - அம்மலர்களுமிழ்கின்ற மதுவையுண்டு, உறங்கும் - களிகூர்தற் கிடனுகின்ற, செஞ்சடையோன் - செஞ்சடையன்.

(வி-ரை.) கொன்றையந்துணர் என்பதில் அம் சாரியை, அழகெனினுமமையும். துணர் - பூங்கொத்து. செவ்வழி-ஓர்பண். எருக்கு - ஆகுபெயர். உழை - ஓர்பண். கிளை - ஓர்பண். வண்டு, தேன், ஞிமிறு, சுரும்பு என்பன வண்டின் வகைகள். அளிகுலம்-வண்டின் கூட்டம். நறவு - தேன். மதுவும் அது.

'மதுமலர்பறித்து' என்பதுமுதல் 'காலினன்' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) மது மலர் பறித்து-தேனுள்ள மலர்களைக் கொய்து, திருவடி நிறைத்த - திருவடியின்கண் ணருச்சித்து நிறைத்த, நான்மறை பாலனை - வேதியச் சிறுவனை, நலிந்து - வருத்தி, உயிர் கவரும் - அவனுயிரைக் கவரவந்த, காலனை - இயமனை, காய்ந்த - சினந்த, காலினன் - திருவடியுள்ள கடவுளது.

(வி-ரை.) பறித்தல் - கொய்தல். நான்மறைப் பாலன் என்றது மார்க்கண்டனை. நலிதல் - வருத்தல்.

'கூடல்' என்பதுமுதல் 'முகத்தோருத்தியை' என்பதுவரை.
(9—13 வரிகள்.)

(ப-ரை.) கூடல்-மதுரைநகரின், திரு மருங்கு அணைந்து-செல்வமிக்க அந்நகரி னருகணைந்து, வரும் - பெருகிவந்த, புனல் - நீர் நிறைந்த, வையை - வையைநதியின், வரை புரண்டென்ன - மலை புரண்டாற்போன்ற, திரைநிரை - நிரையாகிய அலைகள்வீசும், துறையகத்து - துறையினிடத்தே, அணந்து எடுத்து எந்திய - அண்ணாந்துயர்ந்தோங்கிய, அருப்பு-அரும்பு முகிழ்த்தாலொத்த, முகிழ் முலையோள் - குவிந்த முலையையுடையாளாகிய, மதி நுதல் - இளமதி போன்ற நெற்றியையும், பெருமதி - நிறைமதிபோன்ற, மலர் - பரந்த, முகத்து ஒருத்தியை - முகத்தையுமுடைய வொருத்தியை.

(வி-ரை.) மருங்கு - அருகு. திரு - செல்வம். அண்ணாந்து என்பது அணந்து எனக் குறுகிற்று. அண்ணாத்தல் - நிமிர்தல். முகிழ்தல்-குவிதல். பெருமதி-பூர்ணசந்திரன். இளமதி-பூர்வபக்ஷத்தஷ்டமீ சந்திரன்.

'ஆட்டியும்' என்பதுமுதல் 'செய்யலர்போல' என்பதுவரை.
(14—22 வரிகள்.)

(ப-ரை.) ஆட்டியும் - நீராடச்செய்தும், அணைத்தும்-தோளோ டணைத்தும், கூட்டியும் - தோழிகளோடு சேர்த்தும், குலவியும் - கொண்டாடியும், ஏந்தியும்-தாங்கியும், எடுத்தும்-தூக்கியும், ஒழுக்கி யும் - நடத்துவித்தும், ஈர்த்தும் - இழுத்தும், முழுக்கியும் - நீரின் முழுத்தியும், தபுத்தியும் - மேலேயெடுத்தும், முலையெழில் - முலையி னிறுமாப்பை, நோக்கியும் - பார்த்தும், விளிமொழி - தன்முகமாக அழைக்கும் விளிமொழியை, ஏற்றும்-காதாற்கேட்டும், விதலையில் - அவள் குளிரால் நடுங்கும்போது, திளைத்தும் - கட்டியணைத்தும், பூசியும் - சந்தன முதலிய சாந்தங்களைப் பூசியும், புனைந்தும் - மாலை அணிந்தும், பூட்டியும் - பூணத்தக்க அணிகளைப் பூட்டியும், சூட்டி யும் - சூட்டத்தக்கவற்றைச் சூட்டியும், நிறுத்தியும் - ஊடாவகை நிறுத்தியும், நிறைத்தும் - திருத்திசெய்தும், நெறித்தும் - பெருமித முற்றும், செறித்தும் - நெருக்கியும், எழுதியும்-தொய்யிலெழுதியும், தப்பியும் - எழுதுங்கால் தப்பியும், இயைத்தும் - பின்னும் திருத்தி யும், பிணித்தும் - கச்சைத்தனத்தில் விசித்தும், கட்டியும் - துகிலை யுடுத்தும், கலத்தியும் - கலப்புறத்தியும், கமழ்த்தியும்-பனிநீர் முத லியவற்றால் பரிமளிக்கப்பண்ணியும், மறைத்து - மறைவாய், செய் தன எல்லாம் - தாம்செய்த குற்றங்களெல்லாம், செய்யலர்போல - செய்யாதவர்போல.

(வி-ரை.) ஒழுக்குதல் - நடத்தல். ஈர்த்தல் - இழுத்தல். தபுத் தல் - மேலெடுத்தல். இறுமாப்பு - நிமிர்ச்சி. விளிமொழி - அழைக் குஞ் சொல். விதலை - நடுக்கம். அணிகள் - ஆபரணங்கள். தொய் யில் - சந்தனக்கோலம். விசித்தல் - கட்டல். கலத்தல் - கலக்கப் பண்ணுதல்.

'என்' என்பதுமுதல் 'கேட்டி' என்பதுவரை.
(22—23, 36—37 வரிகள்.)

(ப-ரை.) என் - எனது, பொன் நெடு இலை பொலிந்த - நெடிய பொற்றகட்டால் விளங்கிய, திருநிறை - எல்லா வளத்தாலும் நிறை ந்த, உறையுளில் - மாளிகையினின்றும், நிறை நீர் விடுத்து - மேன் மைக்குணத்தைக் கைவிட்டு, செறிந்தது - நெருங்கி வந்தது, என் என - யாது காரணமென்று, கேட்டி - நீ கேட்பாயாக, எ-று.

(வி-ரை.) நிறை நீர் - நிறைகுணம் (மேன்மைக்குணம்),

மறிநோக்கினனே ! பெருநீருரர், செஞ்சடையோன் காலினன் கூடற் றிருமருங்கணைந்து, வருபுனல் வையைத் துறையகத்து, மலர் முகத் தொருத்தியை மறைந்துச் செய்தனவெல்லாம், செய்யலர் போல வென் னுறையுளிற் செறிந்த தென்னெனக் கேட்டி என வினைமுடிவுசெய்க. (௫௯)

திருக்கோவையார் ருஎஉ-ம் செய்யுள்.

தன்னை வியந்துரைத்தல்.

தன்னை வியந்துரைத்தலென்பது — சேடிமார் பின்வருந்தாது முன்னுறக் காப்பேமென்று தம்முட் கூறுவதனைக் கேட்டு, இவனை அமரப் புல்லும் பரத்தையர்மாட்டு இவனருள் செல்லாமல் விலக்கேனாயின், என்மாட் டிவனைத்தந் தழாநின்ற இவன் மனைக்கிழத்தியா கின்றேனெனப் பரத்தைத் தலைவி, தன்னை வியந்து கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கனலூர் கணைதுணை யூர்கெடச் செற்றசிற் றம்பலத்தெம்
மனலூர் சடையோ னருள்பெற் றவரின மரப்புல்லு
மினலூர் நகையவர் தம்பா லருள்விலக் காவிடின்யான்
புனலூ ரனைப்பிரி யும்புன லூர்கணைப் பூங்கொடியே.

அரத்தத் துவர்வாய்ப் பரத்தைத் தலைவி
முனிவு தோன்ற நனிபு கன்றது.

(ப-ரை.) கனல் ஊர் - கனல்பரந்த, கணை - கணையான், துணை ஊர் கெட - ஒத்தவூர்கெட, செற்ற - வெகுண்ட, சிற்றம்பலத்து - சிற்றம்பலத்தின்கணுளனாகிய, எம்-எம்முடைய, அனல் ஊர் சடையோன் - அனலையொக்குஞ் சடையையுடையவனது, அருள் பெற்றவரின் - அருளைப்பெற்றவர்போல, அமர புல்லும் - (செம்மாந்து அவனைச்) செறியப்புல்லாநின்ற, மின்னல் ஊர் - ஒளிபரந்த, நகையவர் - நகையையுடையவர், தம்பால் - தம்மிடத்து, அருள் விலக்காவிடின் - அவன் அருள் செல்லாமை விலக்கேனாயின், யான் புனலூரனை-யான் புனலூரனை, பிரியும் - பிரிந்திருக்கும், புனல் ஊர் கண் - புனல் பரக்குங் கண்ணையுடைய, அ பூங்கொடியே - (அவன் மனைக் கிழத்தியாகிய) அப்பூங்கொடியே யாகின்றேன், எ-று.

(வி-ரை) கனல் - நெருப்பு. கணை-அம்பு. துணை-ஒப்பு. ஊர்-என்றது முப்புரத்தை. அனல் - நெருப்பு. மின்னல் மினல் என விகாரமாயிற்று. நகை - பல். புனல் - நீர். பூங்கொடி - அன்மொழித் தொகை.

நேரிசையாசிரியப்பா.

விடங்கொதித் துமிழும் படங்கெழு பகுவாய்க்
கண்டன்முன் முளைத்த கடியெயிற் றரவக்
குழுவினுக் குடைந்து குளிர்மதி யொதுங்கத்
தெய்வப் பிறையிருந்த திருநுதற் பேதையைக்
கண்டுகண் டரவ மயிலெனக் கலங்க
நெடுஞ்சடைக் காட்டினை யடுந்தீக் கொழுந்தெனத்
தலையே தலையா நகுதலை தயங்க
வணிதலை மாலையை நிறைமதித் திரளெனப்
புடைபுடை யொதுங்கி யரவுவாய் பிளப்ப
வொன்றினுக் கொன்று துன்றிய நடுக்கொடு
கிடந்தொளி பிறழு நெடுஞ்சடைப் பெருமான்
படைநான் குடன்று பஞ்சவற் றுரந்து
மதுரை வவ்விய கருநடர் வேந்த
னருகர்ச் சார்ந்துநின் றரன்பணி யடைப்ப
மற்றவன் றன்னை நெடுந்துயில் வருத்தி
யிறையவன் குலத்து முறையரின் மையினூற்
குருதித் தாரை கல்லொடு பிறங்க
மெய்யணி யளறுக் கைம்முழுந் தேய்த்த
பேரன் புருவப் பசுக்கா வலனை
யுலகினிற் றமது முக்குறி யாக
மணிமுடி வேணியு முருத்திரக் கலனு
நிலவுமிழ் புண்ணியப் பாணிறச் சாந்தமு
மணிவித் தருள்கொடுத் தரச னாக்கி
யடுமா லகற்றி நெடுநாள் புரக்க
வையக மளித்த மணியொளிக் கடவு
ணெடுமதிற் கூடல் விரிபுனல் வையையுட்
பிடிகுளி செய்யுங் களிறது போல
மயிலெனுஞ் சாய லொருமதி நுதலியை
மருமமுந் தோளினும் வரையறப் புல்லி
யாட்டுறு மூர னன்புகொ ணலத்தினைப்
பொன்னுல குண்டவர் மண்ணுல கின்பந்

தலைநடுக் குற்ற தன்மை போல
வொன்றற வகற்றி யுடன்கலந் திலனே
லன்ன வூரனை யெம்மிற் கொடுத்துத்
தேரினுங் காவினு மடிக்கடி கண்டு
நெட்டுயிர்ப் பெறிந்து நெடுங்கணீ ருகுத்துப்
பின்னுந் தழூவ வுன்னுமவ் வொருத்தி
யவளே யாகுவல் யானே தவலருங்
கருநீர்க் குண்டக ழுடுத்த
பெருநீ ராழித் தொல்லுல குழிக்கே.

விடங்கொதித்துமிழும்-தொல்லுலகுழிக்கே. பகுதி - பரத்தையிற் பிரிவு. துறை - தன்னை வியந்துரைத்தல்.

'விடங்கோதித்து' என்பதுமுதல் 'தோல்லுலகுழிக்கே' என்பதுவரை.

(1—3, 38 – 40 வரிகள்.)

(ப - ரை.) தவல் அரும் - வற்றுதலில்லாத, கரு நீர் - கருமை நீராகிய, குண்டு அகழ் உடுத்த - ஆழ்கடலைத் துகிலாயுடுத்த, பெரு நீர் - பரப்பாகிய நீர்மையுள்ள, ஆழி - வட்டவடிவாகிய, தொல் உலகு உழிக்கு-பழைமையான இவ்வுலகினிடத்தே, குளிர் மதி-தண்ணிலவானது, விடம் கொதித்து - நஞ்சு கொப்புளித்து, உமிழும்-வெளிப்படுக்கின்ற, படம் கெழு - படமுள்ள, பகு வாய் - பிளவுபட்ட வாயிடத்தே, கண்டல் முள் - தாழை முட்போல், முளைத்த - அரும்பியுள்ள, கடி எயிறு - கடிக்கும் பற்களையுடைய, அரவக்குழுவினுக்கு - பாம்பினத்தை, உடைந்து - அஞ்சி, ஒதுங்க - ஒதுங்கவும்.

(வி-ரை.) தவல் - வற்றல். குண்டு-ஆழம். உடுத்தவென்னும் வினைக்கேற்பத் துகிலாயென்பது வருவிக்கப்பட்டது. உலகுழிக்கு-உருபுமயக்கம்.

'தேய்வப்பிறையிருந்த' என்பதுமுதல் 'உகண்டுகேலங்க' என்பதுவரை.

(4—5 வரிகள்.)

(ப - ரை.) அரவம் - அப்பாம்பினம், தெய்வப்பிறை இருந்த - அழியாத்தன்மையுள்ள, திரு நுதல் பேதையை-நன்னுதற் பிராட்டியை, கண்டு - நோக்கி, மயில் என - மயிலென்று கருதி, உகண்டு கலங்க - வெளிந்து மனங்கலங்கவும்.

(வி-ரை.) தெய்வம் - தைவிகம் (அழியாத்தன்மை). உகளல் - செளிதல்.

'நெடுஞ்சடைக்காட்டினை' என்பதுமுதல் 'தயங்க' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) நகுதலை - நகுவெண்டலையானது, நெடுஞ்சடை காட்டினை - நெடிய சடாடவியை, அடும் - கொல்லத்தக்க, தீ கொழுந்து என - தன்னைக் கொளுத்துந் தீக்கொழுந்தென்றெண்ணி, தலை எது என - இனி நமக்கிடமேதென்று, அலையா-அலைந்து, தயங்க - தயங்கவும்.

(வி-ரை.) சடா அடவி - சடைக்காடு. அடுதல் - கொல்லுதல். கொழுந்து - சிகை. தலை - எழனுருபு, இடப்பொருட்டு. அலையா - செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். தயங்கல்-விளங்கல்.

'அணி' என்பதுமுதல் 'வாய்பிளப்ப' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) அரவு - பாம்புகள், அணி - அணியப்பட்ட, தலை மாலையை - சிரமாலையை, நிறை மதி திரள் என-முழுமதிக் குலமென்று கருதி, புடைபுடை யொதுங்கி-பக்கங்களிற் பதுங்கி, வாய் பிளப்ப - தம் வாயைத் திறக்கவும்.

(வி-ரை.) ஒதுங்குதல் - பதுங்குதல்.

'ஒன்றினுக்கொன்று' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) ஒன்றினுக்கு ஒன்று - (இவ்வாறு) ஒன்றின்பொருட்டு மற்றொன்று, துன்னிய நடுக்சொடு-மிக்க அச்சத்துடனே, கிடந்து- இருக்க, ஒளி பிறழும் - ஒளிமிகுந்த, நெடு சடை பெருமான் - நெடுஞ்சடையையுடைய பெருமான்.

(வி-ரை.) துன்னிய - மிக. இது செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

'படைநான்கு' என்பதுமுதல் 'அடைப்ப' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) படை நான்கு - நாற்கருவிச் சேனையுடன், உடன்று - போருடற்றி, பஞ்சவன் துரந்து - பாண்டியனைத் துரத்தி, மதுரை

வவ்விய - மதுரையைக் கைக்கொண்ட, கருநடர் வேந்தன் - கருநடர் நாட்டரசன், அருகர் சார்ந்து - சமணரைச் சார்ந்து, நின்று - ஆருகதநெறியிலொழுகி, அரன் பணி - சிவபணிவிடையை, அடைப்ப - செய்யாமற் றடுத்ததனால்.

(வி-ரை.) படை நான்கு - ரதம், கஜம், துரகம், காலாள்.

'மற்றவன்றன்னை' என்பதுமுதல் 'பசுக்காவலனை'
என்பதுவரை.
(15—19 வரிகள்.)

(ப-ரை.) மற்றவன் தன்னை - அக்கருநடநாட்டரசனை, நெடு துயில் வருத்தி - நெடுந் தூக்கத்திலிறக்க, இறையவன் குலத்து - அம்மன்னவன் குலத்திலே, முறையர் இன்மையினால் - அரசியற்குரியோ ரில்லாமையால், குருதி தாரை - இரத்தத் தாரை, கல்லொடு பிறங்க - சந்தனக்கல்லிற் பெருகுமாறு, மெய் அணி - சிவபிரான் திருமேனிப் பூச்சாகிய, அளறு - சந்தனக் குழம்பாக, முழங்கை தேய்த்த - முழங்கையாற் றேய்த்த, பேரன்பு உருவம் - சிவநேச வுருவமாகிய, பசுக்காவலனை - கோவைசியராகிய மூர்த்திநாயனாரை.

(வி-ரை.) மற்று - அசை. முறையர் - அரசியற்குரியவர். மெய்யணி - ஈண்டைக்கேற்பச் சந்தனப்பூச்சுக்காயிற்று. முழங்கையெனற்பாலது கைமுழம் என முன்பின்னாக மாறிநின்றது.

'உலகினில்' என்பதுமுதல் 'சாந்தமும்' என்பதுவரை.
(20—22 வரிகள்.)

(ப-ரை.) உலகினில் - இவ்வுலகத்தின்கண், தமது - சிவபிரானரது, முக்குறி ஆக - அடையாள மூன்றும் விளங்குமாறு, மணிமுடி வேணியும் - சடைமுடியாகிய அழகிய மகுடமும், உருத்திரக்கலனும் - உருத்திராக்கமென்னு மாபரணமும், நிலவு உமிழ் - சந்திரிகையை விரிக்கின்ற, பால்நிறப் புண்ணியச் சாந்தமும், தூய்மையாகிய நிறமுள்ள திருநீறும்.

(வி-ரை.) புண்ணியச்சாந்தம் - திருவெண்ணீறு.

'அணிவித்து' என்பதுமுதல் 'கடவுள்' என்பதுவரை.
(23—25 வரிகள்.)

(ப-ரை.) அணிவித்து அருள் கொடுத்து - அணியும்படியனுக்கிரகித்தருளி, அரசன் ஆக்கி - (மதுரைக்கு) அரசனாகச்செய்து, அடு

மால் அகற்றி, - கொலைக்குக் காரணமாகிய ஆருகதசமயக்கத்தைத் தொலைத்து, நெடுநாள் புரக்க-பல்லாண்டுகின்று புரக்குமாறு, வையகம்-மன்னுயிர்களை, அளித்த-(புறச்சமயங்களினின்றும்) பாதுகாத்த, மணி ஒளி கடவுள் - மணியுமொளியும்போலுமுள்ள கருணைக்கடவுளது.

(வி-ரை.) அடுதல் - கெடுத்தல். மால் - மயக்கம், அது ஈண்டைக்கேற்ப ஆருகதசமய மயக்கத்துக்காயிற்று.

'நெடுமதில்' என்பதுமுதல் 'களிறதுபோல' என்பதுவரை.
(26—27 வரிகள்.)

(ப-ரை.) நெடுமதில்-நெடியமதில் சூழ்ந்த, கூடல்-நான்மாடக் கூடலில், விரி புனல் வையையுள் - புனனிறைந்த வையையாற்றில், பிடி குளிசெய்யும்-பெண்யானையை நீராட்டுகின்ற, களிறதுபோல-யானைப்பகடுபோல.

(வி-ரை.) பிடி - பெண்யானை. பகடு - ஆண்யானை.

'மயிலெனுஞ்சாயல்' என்பதுமுதல் 'நலத்தினை' என்பதுவரை.
(28—30 வரிகள்.)

(ப-ரை.) மயில் எனும் சாயல் - மயிற்சாயலையும், ஒரு மதிநுதலியை - மதிநுதலையுமுடைய ஒருத்தியை, மருமமும்-மார்பினிடத்தும், தோளினும் - தோளினிடத்தும், வரையற புல்லி - பலகாற்றழுவி, ஆட்டுறும்-தன்னுடனீராடல் செய்வித்த, ஊரன்-தலைவன், அன்புகொள் - அன்பானுகர்ந்த, நலத்தினை - இன்பத்தை.

(வி-ரை.) மதிநுதல்-பூர்வபக்ஷத்து அஷ்டமீசந்திரன்போலும் நெற்றி. வரையற-எல்லையற, இது பலகாற்றழுவி யென்னும்பொருட்டு. நலம் - இன்பம்.

'பொன்னுலகு' என்பதுமுதல் 'அவளே யாகுவல்யானே' என்பதுவரை.
(31—38 வரிகள்)

(ப-ரை.) பொன் உலகு - சுவர்க்கலோகத்தில், உண்டவர் - போகநுகர்ந்தோர், மண் உலகு இன்பம் - மண்ணுலகத்தி னின்பத்தை, தலைநடுக்குற்ற தன்மைபோல - அருவருப்புற்ற தன்மைபோலாமாறு, ஒன்று அற அகற்றி - ஒருங்கே நீக்குவித்து, உடன் கலந்திலனேல்-அத்தலைவனுடன் கலவேனாயின், யானே-நான்றானே, அன்ன

ஊரனை-அத்தலைவனை, எம் இல் கொடுத்து-எமதில்லின்கண் போக விடுத்து, தேரினும்-தேர்மேற் செல்லுந்தோறும், காவினும் - சோலைகளிற் பாங்கருடன் விளையாடுந்தோறும், அடிக்கடி கண்டு - இடைவிடாமற் கண்டு, நெடு உயிர்ப்பு எறிந்து-பெருமூச்சு விட்டு, நெடுகண்ணீர் உகுத்து - கண்ணினிடத்தே மிகவும் நீர்சிந்தி, பின்னும் - மீண்டும், தழுவ - புணர, உன்னும் - எண்ணுகின்ற, அவ்வொருத்தி-அவ்வொருத்தியாகிய, அவளே ஆகுவல் - பொதுமகளேயாகக்கடவன்.

(வி-ரை.) தலைநடுக்குறல் - அருவருத்தல். கா - சோலை.

(வி-ரை.) செடுஞ்சடைப் பெருமான், வேந்தன் சார்ந்து, பணியடைப்பத் துயில்வருத்தி, முழங்கை தேய்த்த பசுக்காவலனை முக்குறியாக வேணியுங் கலனுஞ் சாந்தமு மணிவித் தரசனுக்கிப், புரக்க வளித்த கடவுளது கூடல் வைவையுள், களிறுபோல மதிநுதலியைப் பல்லி யாட்டுறு முரனது நலத்தை யகற்றிக் கலந்திலனேல், ஊரனைக் கொடுத்துக் கண்டு எறிந்து நீருகுத்துத் தழுவ வுன்னுமவளேயாகுநவது இத்தொல்லுலகிலெ்ன வினைமுடிவு செய்க. (௹௬)

திருக்கோவையார் ௩௯௬-ம் செய்யுள்.

புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்.

புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தலென்பது — தனிமொழித்துக் கூடிப் பிரிந்தவழிப் பின்னும் பரத்தைமாட்டுப் பிரிந்தானென்று கேட்டுப் புலந்து வாயின்மறுக்க, வாயிற்கணின்று விளையாடாநின்ற புதல்வனை யெடுத்தணைத்துத் தம்பலமிட்டு முத்தங்கொடுத்து அதுவாயிலாகக்கொண்டு தலைமகன் செல்லாநிற்ப, அப்புதல்வனை வாங்கி யணைத்துக்கொண்டு, அவன்வாயிற் றம்பலந் தன்மெய்யிற் படுதலான் எல்லார்க்கும் பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டுவந்தோ நீ யெம்மைக் கொண்டாடுவது, அதுகிடக்க, இதனை நினக்குத் தந்தவாறு சொல்லுவாயாக வெனப் புதல்வன் மேல்வைத்துத் தலைமகள் புலவி தீராநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கதிர்த்தநகை மன்னுஞ் சிற்றவ்வை மார்களைக் கண்பிறைப்பித்
தெதிர்த்தெங்கு நின்றெப் பரிசளித் தானிமை யோரிறைஞ்சு
மதுத்தங் கியகொன்றை வார்சடை யீசர்வண் டில்லைநல்லார்
பொதுத்தம் பலங்கொணர்ந் தோபுதல் வாவெம்மைப் பூசிப்பதே.

'புதல்வனது திறம்புகன்று
மதாரிக்கண்ணி வாட்டந்தவிர்ந்தது.'

(ப-ரை.) மது தங்கிய - தேன் தங்கிய, கொன்றை - கொன்றைப் பூவையுடைய, வார் சடை ஈசர் - நீண்ட சடையையுடையவீசரது, இமையோர் இறைஞ்சும்-இமையோரால் வணங்கப்படும், வண் தில்லை - வளவிய தில்லையிலுள்ளராகிய, நல்லார் - நல்லோரெல்லார்க்கும், பொது தம்பலம் கொணர்ந்தோ - பொதுவாகிய தம்பலத்தைக் கொண்டுவந்தோ, புதல்வா-புதல்வனே, எம்மைப் பூசிப்பது- நீ யெம்மைக் கொண்டாடுவது; (அது நிற்க - இது நினக்குத் தருகின்றவிடத்து நின் தந்தை), கதிர்த்த - ஒளிவிட்ட, நகை மன்னும் - முறுவல் பொருந்திய, சிறு அவ்வைமார்களை - நின் சிறிய அன்னைமாரை, கண் பிழைப்பித்து - கண்ணைத் தப்புவித்து (அவர் காணுவண்ணம்), எதிர்த்து - ஒருவாற்றால் நின்னை யெதிர்ப்பட்டு, எங்கு நின்று - எவ்விடத்துநின்று, எப்பரிசு - எவ்வண்ணமிதனை, அளித்தான் - நினக்குத் தந்தான் (நீ யிது சொல்லவேண்டும்), எ-று.

(வி-ரை) கொன்றை - ஆகுபெயர். இமையோர் - தேவர். நல்லார் - மாதர். புதல்வன் - மகன். கதிர்த்தல்-ஒளிசெய்தல், இது கதிரென்னும் பெயரடியாகப் பிறந்தவினை. முறுவல்-பல்.

நேரிசையாசிரியப்பா.

அடியவ ருளத்திரு ளகற்றலின் விளக்கு
மெழுமலை பொடித்தலி னனமெறு மசனியுங்
கருங்கடல் குடித்தலிற் பெருந்தழற் கொழுந்து
மாவுயிர் வௌவலிற் றீவிழிக் கூற்று
மென்னுள மிருத்தலி னிமையந்துண ருயிரு
நச்சின கொடுத்தலி னளிர்தரு வைந்துங்
கருவழி நீக்கலி னுயர்நிலைக் குருவு
மிருநிலங் காத்தலின் மதியுடை வேந்து
மாகிய மணிவேற் சேவலங் கொடியோன்
வானக மங்கையுந் தேன்வரை வள்ளியு
மிருபுரந் தழைத்த திருநிழ லிருக்கு
மொருபரங் குன்ற மருவிய கூடற்
பெருநதிச் சடைமிசைச் சிறுமதி சூடிய
நாயகன் றிருவடி நண்ணலர் போலப்
பொய்பல புகன்று மெய்மொழித் தின்பம்
விற்றுணுஞ் சேரி விடாதுறை யூர

னூநுணி யொத்த பொதுவாய்த் தம்பல
நீயுங் குதட்டினை யாயிற் சேயாய்
நரம்பெடுத் துமிழும் பெருமுலைத் தீம்பாற்
குள்ளமுந் தொடாது விள்ளமு தொழுகுங்
குதலைவாய் துடிப்பக் குலக்கடை யுணங்கியு
மண்ணுறு மணியெனப் பூழிமெய் வாய்த்தும்
பொலன்மணி விரித்த வுடைமணி யிழுக்கியுஞ்
சுட்டியுஞ் சிகையுஞ் சோர்ந்துகண் பனித்தும்
பறையுந் தேரும் பறிபட் டணங்கியு
மறிக்கட் பிணாவின ரிழைக்குஞ் சிற்றிலிற்
சென்றழி யாது நின்றயர் காண்ப
னுறுவது மிப்பய னன்றேற்
பெறுகுவ தென்பா லின்றுநின் பேறே.

அடியவருளத்திருள் - இன்றுநின்பேறே. பகுதி - பரத்தையிற் பிரிவு. துறை - புதல்வன்மேல்வைத்துப் புலவிதீர்தல்.

'அடியவர்' என்பதுமுதல் 'அசனியும்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) அடியவர் - அடியாரது, உளத்து இருள்-மனவிருளை, அகற்றலின் - நீக்கலால், விளக்கும் - தீபமும், எழுமலை - எழுமலையையும், பொடித்தலின் - நீறுசெய்தலால், அனல் தெறும் - அனல்போல விழுகின்ற, அசனியும் - இடியேறும்.

(வி-ரை.) மனவிருள்-அறியாமை. அகற்றலின் பொடித்தலின் என்பவற்றின்னுருபுகள் மூன்றாவதன் கருவிப்பொருள.

'கருங்கடல்' என்பதுமுதல் 'கூற்றும்' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) கரும் கடல் - கரியகடல்நீரை, குடித்தலில் - உண்ணுதலால், பெருஞ்சழற்கொழுந்தும் - வடவாக்கினியும், மா உயிர் - மாமரவுருவாகிய சூரனுயிரை, வௌவலின் - கைக்கொள்ளுதலால், தீ விழி - தீக்கண்ணையுடைய, கூற்றும் - இயமனும்.

(வி-ரை.) கடல் - ஆகுபெயர். கருங்கடல் குடித்தலின் என்றமையால் பெருந்தழற்கொழுந்து வடவைத்தீயை யுணர்த்திற்று. மா-ஆகுபெயர்.

'என்னுளம்' என்பதுமுதல் 'ஐந்தும்' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(பொ-ரை.) என் உளம் - எனதுள்ளத்தே, இருத்தலின்-இருத்தலால், இயைந்து - பொருந்தி, உணர் - அறிவாகிய, உயிரும் - ஆன்மாவும், நச்சின - விரும்பினவற்றை, கொடுத்தலின் - கொடுத்தலால், நளிர் தரு ஐந்தும் - பெருமையுள்ள ஐந்தருவும்.

(வி-ரை.) உணர் - முதனிலைத் தொழிற்பெயர். நச்சல் - விரும்பல். ஐந்தருவாவன:—அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்பன.

'கருவழி' என்பதுமுதல் 'வேந்தும்' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(பொ-ரை.) கரு வழி - பிறவி வருதற்கேதுவாகிய வழியை, நீக்கலின் - அடைத்தலால், நிலை உயர் - நிலைமையுயர்ந்த, குருவும் - ஆசிரியனும், இரு நிலம் - பேருலகத்தை, காத்தலின் - பாதுகாத்தலால், மதியுடை வேந்தும் - மதிமரபின் அரசனும்.

(வி-ரை.) இருமை - பெருமை. மதிமரபு - சந்திரவமிசம்.

'ஆகிய' என்பதுமுதல் 'மருவியகூடல்' என்பதுவரை.

(9—12 வரிகள்.)

(பொ-ரை.) ஆகிய - நிகராகிய, மணி வேல் - மணியுள்ள வேலை (சத்தி), சேவல் அம் கொடியோன் - சேவற்கொடியை யுயர்த்த கடவுள், ஏனக மங்கையும்-தெய்வயானை நாய்ச்சியாரும், தேன் வரை-தேனொழுகுகின்ற மலையிடத்தே வளர்ந்த, வள்ளியும்-வள்ளி நாய்ச்சியாரும், இரு புறம் - இரு பக்கங்களிலும், தழைத்த - தழைத்திருக்கின்ற, திரு நிழல் - தண்ணிழலின்கண், இருக்கும் - வீற்றிருத்தற்கிடமாகிய, ஒரு பரங்குன்றம் - ஒப்பற்றதான ஸ்ரீ பராசலம், மருவிய கூடல்-பொருந்திய மதுரை உள்.

(வி-ரை.) சேவலங்கொடியோன் என்பதில் அம் சாரியையென்றேனும் அழகென்றேனுங் கொள்க. பராசலம் - பரங்குன்றம். வரை-மலை, ஆகுபெயர். திரு நட்பத்தை யுணர்த்திற்று, கட்புலனாகாமையின். பராசலம் என்பதை பரம் அசலம் எனப் பிரித்துக் கொள்க; பரம் - மேன்மை, அசலம் - மலை, அசையா நிலையுள்ளது என்பது பொருள். சலம் - அசைவு, அ - இன்மை.

'பெருநதிச்சடை' என்பதுமுதல் 'நண்ணலர்போல' என்பதுவரை.
(13—14 வரிகள்.)

(ப-ரை.) பெரு நதி சடைமிசை - பெரிய கங்கையை யேற்ற சடைமேல், சிறு மதி - இளநிலவை, சூடிய-தரித்தருளிய, நாயகன் திருவடி - இறைவனது திருவடியை, நண்ணலர்போல - அடையாதார்போல.

(வி-ரை.) கங்கையின் மிக்க நதியொன் றின்மையான் அதனை 'பெருநதி' என்றார். நிலவு-பிறை.

'பொய்பலபுகன்று' என்பதுமுதல் 'உணங்கியும்' என்பதுவரை.
(15—21 வரிகள்.)

(ப-ரை.) சேயாய் - புதல்வனே, பல பொய் புகன்றும் - பல பொய்களைச் சொல்லியும், மெய் ஒழித்து-உண்மையைக் கைவிட்டு, இன்பம்-இன்பத்தை, விற்று உணும்-விற்றுண்டு வாழ்கின்ற, சேரி-பரத்தையர் சேரியில், விடாது உறை - இடைவிடா திருக்கின்ற, ஊரன் - உன் தந்தைபோல், ஊருணி ஒத்த - ஊர்ப்பொதுவாகிய ஊருணியையொத்த, பொது - யாவர்க்கும் பொதுவாகிய, வாய் தம்பலம் - பரத்தையர் வாய்த்தம்பலத்தை, நீயும் - நீயும், குதட்டினையாயின் - மென்றனையாயின், நரம்பு எடுத்து - நரம்பு தோன்றி, உமிழும்-வெளிப்படுகின்ற, பெருமுலை தீம் பாற்கு உள்ளமும் தொடாது-மிக இனிய முலைப்பாலைக்குறித்து மனத்தாலும் நினையாமல், விள் அமுது ஒழுகும்-அமுதம் விண்டொழுகாநின்ற, குதலை வாய்-மழலை வாயானது, துடிப்ப - துடிக்கும்படி, குலக்கடை - பெரிய கடைவாய்தலில், உணங்கியும் - வருந்தியும்.

(வி-ரை.) ஊருணி-ஊராரெல்லாரும் நீருண்ணுங்குளம். குதட்டல் - மெல்லல். குலம் - பெருமை. மழலைவாய் - மழலைச்சொல்லையுடையவாய்.

'மண்ணுறும் என்பதுமுதல் 'அணங்கியும்' என்பதுவரை.
(22—25 வரிகள்.)

(ப-ரை.) மண் உறும் - மண்ணிற் புதைத்த, மணி என - மணிபோல், பூழி - மட்புழுதி, மெய் வாய்த்தும் - உடலிற் பொதியவும், பொலன் மணி விரித்த-பொன்னுமணியும் விரித்த, உடைமணி- அரைமணியானது, இழுக்கியும் - சரிந்தும், சுட்டியும் - நெற்றிச்சுட்டியும், சிகையும் - தலைமயிரும், சோர்ந்து - அவிழ, கண் பனித்தும்- கண்ணீர் சிந்தியும், பறையும் - (முழக்குஞ்) சிறுபறையும், தேரும் - (சிறு) தேரும், பறிபட்டு - பறித்துக்கொள்ளப்பட்டு, அணங்கியும் - நொந்தும்.

(வி-ரை.) வாய்த்து சோர்ந்து - செயவெனெச்சத் திரிபுகள். கண்-ஆகுபெயர். பனித்தல் - சிந்துதல். அணங்குதல்-நோதல். பொலன்மணி என்பவற்றீற்றில் எண்ணும்மைகடொக்கன. உடைமணி- அரைமணி; "உடைமணி கட்டிச் சிறுதே ருருட்டி யுலாத்தரு மிந் நடை மணியைத் தந்தபின்னர்" என்றார் மணிவாசகர்.

'மறிக்கண்' என்பதுமுதல் 'இப்பயன்' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) மறி கண் - மான்போற்கண்களையுடைய, பிணாவினர்- பெதும்பைப் பெண்கள், இழைக்கும்-அமைத்த, சிறு இல்லில் - சிறு வீட்டினிடத்தே, சென்று - போய், அழியாது - அழித்திடாமல், நின்று - (மயங்கி) நின்று, அயர் - தளர்ச்சியுறுதலை, காண்பன்-யான் காண்பேன், உறுவதும் - நீ யடைவதும் (பொதுவாய் நீயும் தம் பலங் குதட்டினதால்), இப்பயன் - இந்தப்பயனாகும்.

(வி-ரை.) பெதும்பைகள்-ஒன்பதாண்டுப் பெண்கள். இழைத்தல்-அமைத்தல்.

'அன்றேல்' என்பதுமுதல் 'நின்பேறே' என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(ப-ரை.) அன்றேல் - அங்ஙன நீ இனிச் செய்யாயானால், என் பால் - எனது முலைப்பாலை, பெறுகுவது - பெறுவது, இன்று - இப்பொழுதே, நின் பேறு - நின்னுடைய பேறாகும்.

(வி-ரை.) அன்றேல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ. பேறு - பெறுதற்குரிய பொருள்.

சேயாய்! சேவலங் கொடியோ னிருக்கு மொரு பரங்குன்ற மருவிய கூடனாயகன் றிருவடி நண்ணலர்போல, ஊரன் ஊருணியொத்த பொதுவாய்த்தம்பல நீயுங் குதட்டினையாயின், துடிப்பவுணங்கியும் வாய்த்து மிழுக்கியும் பனித்தும் அணங்கியும் நின்றயர்தல் காண்பன், உறுவது மிப்பயனும், அன்றேல் என் பால் பெறுவதின்று நின் பேறென்ன வினைமுடிவு செய்க. (கஎ)

திருக்கோவையார் ௩௯௨-ம் செய்யுள்.

கலவிகருதிப் புலத்தல்.

கலவிகருதிப்புலத்தலென்பது—புனலாட்டுவித்தமை கூறிப் புலவாநின்ற தலைமகள், ஊடறீர்க்க நுதலுந் தோளுமுதலாயினவற்றைத் தைவந்து வருடித் தலையளிசெய்யாநின்ற தலைமகனோடு, எம்முடைய சிறியவில்லின்கண் வந்து அன்று நீயிர் செய்த தலையளி எங்கட்கு அன்று வேண்டுதுமாயினும் இன்று உமது திருவருள் எங்கட்கு நீயிர்வந்த இத்துணையுமமையும், வேறு நீயிர் தலையளிசெய்ய வேண்டுவதில்லை யெனக் கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கலவி - கலத்தல் (புணர்ச்சி). புலத்தல்-பிணங்கல்; ஊடலும் அது. தைவரல் - தடவல். வருடல்-நெருடல். இத்துணையும் - இவ்வளவும்.

மின்றுன் னியசெஞ் சடைவெண் மதியன் விதியுடையோர்
சென்றுன் னியகழற் சிற்றம் பலவன் றென்னம்பொதியி
னன்றுஞ் சிறியவ ரில்லெம தில்லநல் லூரமன்னோ
வின்றுன் றிருவரு ளித்துணை சாலுமன் னெங்களுக்கே.

கலைவள ரல்கு றலைமகன் றன்னொடு
கலவி கருதிப் புலவி புகன்றது.

(ப-ரை.) மின் துன்னிய - மின்னையொத்த, செஞ்சடை-செஞ்சடைக்கண் வைத்த, வெண்மதியன் - வெண்பிறையை யுடையான், விதியுடையோர் - நற்பாலை யுடையோர், சென்று உன்னிய - (சிற்றின்பத்திற்குக் காரணமான புலன்களை விட்டுச்) சென்று நினைந்த,

கழல் - கழலையுடைய, சிற்றம்பலவன் - சிற்றம்பலவன், தென்னம் பொதியில்- (அவனது) தெற்கின்க ணுண்டாகிய பொதியிலிடத்து, எமது இல்லம் - எமதுகுடி, நன்றும் சிறியவர் இல் - பெரிதுஞ் சிறியவரது குடி (அதனான்), நல்லூர-நல்லவூரையுடையாய், மன்னே, முற்காலத்து நின்றலையளி வேண்டுதுமாயினும், இன்று - இப்பொழுது, உன் திருவருள் - உனது திருவருள், எங்களுக்கு - எங்கட்கு, இத்துணை சாலும் - (நீவந்த)இத்துணையுமமையும்(நீ தலையளி செய்ய வேண்டுவதுண்டோ), எ-று.

(வி-ரை.) துன்னல்-ஒத்தல் என்னும்பொருட்டு. செஞ்சடை வெண்மதி மூரண்டொடை. நற்பால் - நல்லூழ். கழல் - ஆகுபெயர். நன்றும் நல்லூர என்பவற்றுள் நன்மை பெருமை குறித்து நின்றன, நல்லமழை யென்புழிப்போல.

நேரிசையாசிரியப்பா.

நடைமலை பிடித்த சொரியெயிற் றிடங்கரை
யாழி வலவ னடர்த்தது போலப்
புன்றலை மேதியைப் புனலெழ முட்டிய
வரியுடற் செங்கண் வராலுடன் மயங்க
வுட்கவைத் தூண்டி லூரப்புகுந் துழக்கு
நிறைநீ ரூர நெஞ்சகம் பிரிக்கும்
பிணிமொழிப் பாண னுடனுறை நீக்கி
நூலொடு துவளுந் தோறிரை யுரத்தின்
மால்கழித் தடுத்த நரைமுதிர் தாடிசெய்
வெள்ளி முகிழ்த்த வொருகட் பார்ப்பான்
கோலுடன் படருங் குறுநகை யொருவிப்
பூவிலைத் தொழின்மகன் காவல்கை விட்டுத்
திக்குவிண் பெருகத் திருமதி கைலை
நாமகள் பெருங்கட னாற்கோட் டொருத்தல்
புண்ணிய மிவைமுதல் வெள்ளுடற் கொடுக்கும்
புகழ்க்கவிப் பாடகர் புணர்ச்சியின் பகற்றி
பெல்லாக் கல்வியு மிகழ்ச்சிசெய் கலவியர்
பெருநகைக் கூட்டமுங் கழிவுசெய் திவ்விடை
மயக்குறு மாலை மாமக ளெதிர

வொருவழி படர்ந்த தென்னத் திருமுக
மாயிர மெடுத்து வான்வழி படர்ந்து
மண்ணே ழுருவி மறியப் பாயும்
பெருங்கதத் திருநதி யொருங்குழி மடங்க
வைம்பகை யடக்கிய வருந்தவ முனிவ
னிரந்தன வரத்தா லொருசடை யிருத்திய
கூடற் பெருமான் குரைகழல் கூறுஞ்
செம்மையர் போலக் கோடா
தெம்மையு நோக்கிச் சிறிதுகண் புரிந்தே.

நடைமலை பிடித்த - சிறிதுகண்புரிந்தே. **பகுதி** - பரத்தையிற் பிரிவு. **துறை** - கலவிகருதிப் புலத்தல்.

'நடைமலை' என்பதுமுதல் 'அடர்த்ததுபோல' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நடை மலை - நடையுள்ள மலையையொத்த யானையை, பிடித்த - பற்றிக்கொண்ட, சொரி - (புழு)சொரிகின்ற, எயிறு - பற்களையுடைய, இடங்கரை - முதலையை, ஆழி வலவன் - சக்கரத்தை வலக்கையிலேந்திய திருமால், அடர்த்ததுபோல - கொன்றதுபோல.

(வி-ரை.) கிடை மலையோடு வேற்றுமை தோன்ற யானையை 'நடைமலை' என்றார். இடங்கர் - முதலை. ஆழிவலவன் - சக்ராயுத ப்ரயோகத்தில் வல்லவன் எனினுமாம்.

'புன்றலை' என்பதுமுதல் 'நிறைநீரூர' என்பதுவரை.
(3—6 வரிகள்.)

(ப-ரை.) புன் தலை-புன்மையாகிய தலையையுடைய, மேதியை-எருமையை, புனல் எழ - நீரினின்று மேலே எழுமாறு, முட்டிய - தாக்கிய, வரி உடல் செம் கண் - வரியுடலையும் சிவந்த கண்களையுமுடைய, வரால் - வரால்மீன், உடன் மயங்க-உடனே மயங்கும்படி, உள் கவை தூண்டில்-உள்ளே பிளப்பாகிய தூண்டிலினுள்ளே, உரம் புகுந்து - விசையுடன் புகுந்து, உழக்கும்-கலக்காநின்ற, நிறை நீர்-தடாகஞ் சூழ்ந்த, ஊர - ஊரனே.

(வி-ரை.) உடற்கேற்றதலை மேதிக்கின்மையால் 'புன்றலை' என்றார். வரி - கீற்று. விசை - வேகம்.

'திருமுகம்' என்பதுமுதல் 'திருநதி' என்பதுவரை.
(20—23 வரிகள்.)

(ப-ரை.) திரு முகம் ஆயிரம் எடுத்து - வளம்பயக்கும் அநந்த முகமுடனே, வான்வழி படர்ந்து - விண்ணில் பாவி, மண் ஏழ் உருவி - எழுலகமும் ஊடுருவி, மறிய - அங்கங்குள்ளவை தலைதடுமாறும்படி, பாயும் - பெருகின, அப்பெருங்கதம் - அந்த மிக்க வேகமுள்ள, திருநதி - ஆகாய நதியானது.

(வி-ரை.) மறிதல் - தலைதடுமாறல், இது ஒருசொல்.' ஆகாய கங்கையின் மிக்க அழகுள்ள நதி வேறின்றின்மையின் அதனைத் 'திருநதி' என்றார்.

'ஒருங்குழி' என்பதுமுதல் 'செம்மையர்போல' என்பதுவரை.
(23—27 வரிகள்.)

(ப-ரை.) ஒருங்குழி - ஓரிடத்து ஒருங்கே, மடங்க - அடங்குமாறு, ஐம்பகை அடக்கிய - புலப்பகையைந்தையும் தன்னுள் தணிய அடக்கிய, அருந்தவ முனிவன்-செய்தற்கரிய தவத்தை முப்பதினாயிரம் ஆண்டளவு நோற்ற பகீரதனென்னு முனிவன் (தன் மூதாதைகள் கதியடைய), இரந்தன - கேட்டனவாகிய, வரத்தால் - வரங்களால், ஒருசடை இருத்திய - சடை யொன்றில் வைத்தருளிய, கூடற்பெருமான் - மதுரைநாயகனது, குரை கழல் - வேதநூபுரமடைந்த சீர்பாதங்களை, கூறும் - ஏத்துகின்ற, செம்மையர்போல - நடுவு நிலைமையுடையார்போல.

(வி-ரை.) பகீரதன் அரசனேயாயினும் செய்தற்கரிய தவஞ் செய்தமையான் அவனை 'முனிவன்' என்றார்.

'கோடாது' என்பதுமுதல் 'கண்புரிந்தே' என்பதுவரை.
(27—28 வரிகள்.)

'நெஞ்சகம்' என்பதுமுதல் 'நீக்கி' என்பதுவரை.
(6—7 வரிகள்)

(ப-ரை.) கோடாது - மாறுபடாமல், எம்மையும் - எம்மையும், நோக்கி - நோக்கி, சிறிது கண்புரிந்து - சிறிது கடாக்ஷித்து, நெஞ்சகம் - மனத்தை, பிரிக்கும்-வேறுபடுத்துகின்ற, பிணிமொழி பாணனுடன் - பிணிப்பையுள்ள பாடல்வல்ல பாணனுடன், உறை நீக்கி- உறைதலைவிட்டு.

(வி-ரை.) கோடுதல் - கோணுதல், அது ஈண்டு மாறுபடுதலுக்காயிற்று. உறை - முதனிலைத் தொழிற்பெயர்.

'நூலோடுதுவளும்' என்பதுமுதல் 'ஒருவி' என்பதுவரை.
(8—11 வரிகள்.)

(ப-ரை.) நூலொடு துவளும் - முந்நூலொடு அசைகின்ற, தோல் திரை - தோல் திரைந்த, உரத்தின் - மார்பினிடத்தே, மால் கழித்து - கருமைநீங்கி, அடுத்த - நெருங்கிய, நரை முதிர் - நரை மிக்கு, தாடி செய் - தாடியைவளர்த்த, வெள்ளி - சுக்கிரன்போல, முகிழ்த்த-அரும்பின, ஒருகண் பார்ப்பான் - ஒற்றைக்கண் பார்ப்பானாகிய, கோலுடன் - ஊன்றுகோலுடனே, படரும் - உண்டாகின்ற, குறு நகை - சிறுநகையை, ஒருவி - விட்டு.

(வி-ரை.) மால் - கருநிறம். செய்தல் - வளர்த்தல். ஒருவல் - விடல்.

'பூவிலைத்தொழின்மகன்' என்பதுமுதல் 'அகற்றி' என்பதுவரை.
(12—16 வரிகள்.)

(ப-ரை.) பூ விலை தொழில் மகன்-பூவிற்குந் தொழிலையுடையவனது, காவல் - பாதுகாத்தலை, கைவிட்டு - நீங்கி, திக்கு - எட்டுத் திசையினும், விண் - விண்ணுலகத்தினும், பெருக - பெருகும்படி, திருமதி - நிறைமதியும், கைலை - கைலைமலையும், நாமகள் - கலைமகளும், பெருங்கடல் - பாற்கடலும், நால் கோட்டு - நாற்கொம்புள்ள, ஒருத்தல்-ஐராவதமும், புண்ணியம் - புண்ணியமும், இவை முதல்-இவை முதலானவற்றிற்கு, வெள் உடல் - உடல் வெளுத்தலை, கொடுக்கும் - செய்யாநின்ற, புகழ் - புகழை, கவிப்பாடகர் - கவியிற் கட்டிப் பாடுகின்றவரது, புணர்ச்சி இன்பு - சேர்க்கையின்பத்தை, அகற்றி - விட்டு.

(வி-ரை.) நிறைமதியைத் 'திருமதி' என்றார் அழகிற் சிறந்திருத்தலான். ஒருத்தல்-யானை, அது ஈண்டைக்கேற்ப ஐராவதத்தைக் குறித்தது. கவிப்பாடகர்-புலவர். கடல் என வாளா கூறினரேனும் ஈண்டைக்கேற்ப வெண்மை குறிக்கவேண்டுதலின் பாற்கடலென்றுரைக்கலாயிற்று. நிறைமதி முதலாயின் வெளுப்படைந்தது புகழுக்குத் தோற்றென்க.

'எல்லாக்கல்வியும்' என்பதுமுதல் 'கழிவுசெய்து' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) எல்லாக்கல்வியும்-சகலகல்விகளையும், இகழ்ச்சிசெய்-பழிக்கின்ற, கலவியர் - கலவித்தொழிலில் வல்ல பரத்தையரது, பெரு நகை - மிகுந்த மகிழ்ச்சிக்குக் காரணமாகிய, கூட்டமும் - சேர்க்கையையும், கழிவுசெய்து - தொலைத்து.

(வி-ரை.) நகை - மகிழ்ச்சி.

'இவ்விடை' என்பதுமுதல் 'படர்ந்ததேன்' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

(ப-ரை.) இ இடை - இந்த இடத்தில், மாலை மயக்குறு-மாலை இருளுகின்றகாலமென்னும், மா மகள் எதிர-பெரிய பெண்ணெதிர்ப்ப, ஒருவழி - ஒரோவழியாய், படர்ந்தது என் - வந்தது யாதுகாரணம்.

நிறைநீருர!கூடற்பெருமான்குழைகழல் கூறுஞ்செம்மையர்போல,கோடாது எம்மையு நோக்கி,சிறிதுகண் புரிந்து, பாணனுடனுறை நீக்கி, பார்ப்பான் கோலுடன் படருங் குறுநகையொருவி, பூவிலைத் தொழின்மகன் காவல்கைவிட்டு, கவிபாடகர் புணர்ச்சி யின்பகற்றி, பெருநகைக்கூட்டமுங் கழிவுசெய்து, இவ்விடைமாலைமாமகளெதிர ஒருவழிபடர்ந்த தென்னென வினைமுடிவு செய்க. (௫அ)

திருக்கோவையார் ௩௦௪-ம் செய்யுள்.

வழிபாடு கூறல்.

வழிபாடுகூறலென்பது—மணஞ்செய்தபின்னர் மணமனைகாண வந்த செவிலிக்கு, காவலர் உடம்பு முயிரும்போல ஒருவரையொருவர் இன்றியமையாமல் இவள் கருத்தைக் கடவார், கமலங்கலந்த தேனுஞ் சந்தனமரமும்போல வியைந்து இவள் கற்புவழியிலே நிற்றலையுடையராய் இவள்வழியே நின்றொழுகாநின்றாரெனத், தோழி தலைமகன் றலைமகள் வழி யொழுகாநின்றமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சீரிய லாவியும் யாக்கையு மென்னச் சிறந்தமையாற்
காரியல் வாட்கண்ணி யெண்ணக லார்கம லங்கலந்த

வேரியுஞ் சந்தும் வியறந்தெ னக்கற்பி னிற்பரன்னே
காரியல் கண்டர்வண் டில்லைவ ணங்குமெங் காவலரே.

மணமனை காண வந்த செவிலிக்குத்
துணைமலர்க் குழலி தோழி சொல்லியது.

(ப-ரை.) அன்னே - அன்னாய், கார் இயல் கண்டர்-கார்போலுங் கண்டத்தை யுடையவராகிய சிவபெருமானாது, வள் தில்லை - வளவிய தில்லையை, வணங்குர்-வணங்குகிற, எம் காவலர்-எம்முடைய காவலர், சீர் இயல் - சீர்மையியலும், ஆவியும் யாக்கையும் என்ன - உயிருமுடம்பும்போல, சிறந்தமையால் - ஒருவரை யொருவர் இன்றியமையாமையால், கார் இயல் - கரிய வியல்பையுடைய, வாள் கண்ணி - வாள்போலுங் கண்ணையுடையாளது, எண் அகலார்-எண்ணத்தைக் கடவார்; கமலம் கலந்த-தாமரைப்பூவைச் சேர்ந்த, வேரியும் சந்தும்-தேனுஞ் சந்தனமரமும், வியல் தந்தென-(இடத்து நிகழ் பொருளு மிடமுமாயியைந்து) தம்பெருமையைப் புலப்படுத்தினாற் போலவியைந்து, கற்பில் நிற்பர் - இவளது வழிபாட்டின்கண்ணே நிற்பர், எ-று.

(வி-ரை.) 'எண்ணகலார்' என்றமையால் காதலியாதலும், 'கற்பினிற்பர்' என்றதனால் வாழ்க்கைத் துணையாதலுங் கூறப்பட்டன. ஆவியும் வேரியும் தலைமகட் குவமையாகவும், யாக்கையும் சந்தும் தலைமகற் குவமையாகவு முரைக்க. பிரித்துவமையாக்காது இவரது கூட்டத்திற்குஅவற்றது கூட்ட முவமையாக வுரைப்பினுமாம். "காரியல் கண்டர்வண் டில்லைவ ணங்குமெங் காவலர்" என்றமையால் இவரது இல்வாழ்க்கை இன்றுபோல என்றும் நிகழுமென்பது கூறினானாயிற்று.

நேரிசையாசிரியப்பா.

நிறையிதழ் திறந்து மதுவுண் டருந்தும்
விருந்துகொண் மலரும் புரிந்துறை மணமுஞ்
செந்தமிழ்ப் பாடலுந் தேக்கிய பொருளும்
பாலுஞ் சுவையும் பழமு மிரதமு
முடலு முயிரு மொன்றிய தென்னக்
கண்டுந் தெளிந்துங் கலந்தவுள் ளுணர்வாற்
பாலு மமுதமுந் தேனும் பிலிற்றிய
வின்பமர் சொல்லி நண்புமனக் குறியும்

வாய்மையுஞ் சிறப்பு நிழலெனக் கடவார்
விண்ணவர் தலைவனும் வீயா மருந்து
மளகைக் கிறையு மரும்பொரு ளீட்டமுங்
கண்ணனுங் காவலு முனியும் பசுவு
மொன்றினுந் தவறு வொருங்கியைந் தனபோ
னீடிநின் றுதவுங் கற்புடை நிலையினர்
தவங்கற் றீன்ற நெடுங்கற் பன்னை
முன்னொரு நாளின் முதற்றொழி லிரண்டினர்
பன்றியும் பறவையு மென்றுரு வெடுத்துக்
கவையா வுளத்துக் காணுங் கழலுங்
கல்வியி லறிவிற் காணு முடியு
மளவுசென் றெட்டா வளவின ராகி
மண்ணு மும்பரு மகழ்ந்தும் பறந்து
மளவா நோன்மையி னெடுநாள் வருந்திக்
கண்ணினிற் காணு துளத்தினிற் புணராது
நின்றன கண்டு நெடும்பயன் படைத்த
திருவஞ் செழுத்துக் குறையா திரட்ட
விருநில முருவிய வொருதழற் றாணத்
தெரிமரு நவ்வி தமருக மமைத்த
நாற்கர நுதல்விழித் தீப்புகை கடுக்கள
முலகுபெற் றெடுத்த வொருதனிச் செல்வி
கட்டிய வேணி மட்டலர் கடுக்கை
யாயிரந் திருமுகத் தருணதி சிறுமதி
பகைதவிர் பாம்பு நகைபெறு மெருக்கமு
மொன்றிய திருவுரு நின்றுநனி காட்டிப்
பேரருள் கொடுத்த கூடலம் பதியோன்
பதமிரண் டமைத்த வுள்ளக்
கதியிரண் டாய வோரன் பினரே.

நிரையிதழ்திறந்து-ஓரன்பினரே. பகுதி - மணச்சிறப்புரைத்தல். துறை - வழிபாடுகூறல்.

'விண்ணவர்' என்பதுமுதல் 'ஒருங்கியைந்தனபோல்'
(10—13 வரிகள்.)

(ப-ரை.) விண்ணவர் தலைவனும் - விண்ணிலுள்ளார்க்கு அரையனும், வீயா மருந்தும்-(அவனது) இறவாமைக்குக்காரணமான அமிர்த

மும், அளகைக்கு இறையும் - அளகைக்குத் தலைவனும், அரும் பொருள் ஈட்டமும் - (அவனது) கிடைத்தற்கருமையான பொருட் குவையும், கண்ணனும் - திருமாலும், காவலும் - அவனது காத்தற் றொழிலும், முனியும் - வசிட்ட முனிவனும், பசுவும் - அவனது காம தேனுவும், ஒன்றினும் - யாதொன்றினாலும், தவறு - தவறுபடாமல் ஒருங்கியைந்தனபோல் - ஒன்றுபட்டியைந்தனபோல்.

(வி-ரை.) விண்ணவர்தலைவன் - இந்திரன். வீதல்-இறத்தல். அளகைக்கிறை - குபேரன்.

'நீடிநின்று' என்பதுமுதல் 'அன்னை' என்பதுவரை.
(14—15 வரிகள்.)

(ப-ரை.) நீடிநின்று - மிகவு நிலைபெற்று, உதவும் - பயனைத் தருகின்ற, கற்புடை நிலையினர்-கற்பைத் தம்மிடத்தேயுடைய நிலையினரது, தவம் கற்று - தவத்தை நோற்று, ஈன்ற - தலைவியைப் பெற்ற, நெடும் கற்பு-மிகுந்த கற்பினையுடைய, அன்னை - தாயே.

(வி-ரை.) நெடுமை-ஈண்டு மிகுதிப் பொருட்டு நின்றது.

'முன்னொருநாளில்' என்பதுமுதல் 'முடியும்' என்பதுவரை.
(16—19 வரிகள்.)

(ப-ரை.) முன் ஒருநாளில் - முன்னொரு காலத்தில், முதல் தொழில் இரண்டினர் - (முத்தொழிலுள்) முதலனவாகிய இரண்டு தொழில்களையுடையவ ரிருவரும், பன்றியும் பறவையும் - வராகமு மன்னப்பறவையும், என்று - என்று சொல்லும்படியான, உருவு எடுத்து - உருவமெடுத்து, கவையா உளத்து - பேதியாத வுள்ளத்தி னாலே, காணும் - காணத்தக்க, கழலும் - திருவடியையும், கல்வியில் - நூற்கல்வியினாலும், அறிவில் - அறிவினாலும், காணும் - காணத்தக்க, முடியும் - திருமுடியையும்.

(வி-ரை.) முதற்றொழிலிரண்டு - படைத்தல் காத்தல்; இவ் விரண்டு தொழில்களை யுடையராவார்-பிரமவிட்டுணுக்கள். கவைத்தல் - பிளவுபடல், அது ஈண்டுப் பேதித்தலுக்காயிற்று.

'அளவுச்சென்றெட்டா' என்பதுமுதல் 'வருந்தி' என்பதுவரை.
(20—22 வரிகள்.)

(ப-ரை.) அளவு சென்று எட்டா-தம்மாற்கூடிய அளவினாலே சென்றும் எட்டாத, அளவினர் ஆகி - அளவினையுடையவராகி, மண்

னும் - பூமியினும், உம்பரும் - ஆகாயத்தினும், அகழ்ந்தும் - பிளந்தும், பறந்தும் - பறந்தும், அளவா-அணியராகாத, நோன்மையின் - வலிமையினாலே, நெடுநாள் - நெடுங்காலம், வருந்தி-வருத்தமுற்று.

(வி-ரை.) அகழ்தல் - பிளத்தல்.

'கண்ணினில்' என்பதுமுதல் 'குறையாதிரட்ட' என்பதுவரை.
(23—25 வரிகள்)

(ப-ரை.) கண்ணினில் - கண்ணினாலும், காணாது - காணாமல், உளத்தினின் - உள்ளத்தினாலும், புணராது-அணுகாமல், நின்றன கண்டு - நின்ற நிலைகளைக்கண்டு, நெடும்பயன் படைத்த - அழியாப் பயன் பொதிந்துள்ள, திரு அஞ்செழுத்து - ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை, குறையாது இரட்ட - நிறைவாக வுச்சரிக்க.

(வி-ரை.) கண்ணினின் உளத்தினின் என்பவற் றீற்றின்னுருபுகள் மூன்றுவதன் கருவிப்பொருடந்து நின்றன.

'இருநிலமுருவிய' என்பதுமுதல் 'கடுக்களம்' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) இரு நிலம் உருவிய-பெரிய பூமியைக்கடந்துசென்ற, ஒருதழல் தூணத்து - ஒரு அக்கினிஸ்தம்பத்தினின்றும், எரி - எரிகின்ற, மழு - மழுவும், நவ்வி-மானும், தமருகம்-தமருகமும், அமைத்த - வைத்த, நால் காம் - நான்குகைகளும், நுதல் விழி - நெற்றிக் கண்ணும், தீ புகை - தீப்புகையாநின்ற, கடு களம்-காளகண்டமும்.

(வி-ரை.) தமருகம் - உடுக்கை. கடுக்காளம் என்பன நஞ்சின் பரியாய நாமங்கள்.

'உலகு' என்பதுமுதல் 'அருணதி' என்பதுவரை.
(29—31 வரிகள்.)

(ப-ரை.) உலகு - உலகங்களையெல்லாம், பெற்று எடுத்த - பெற்றுவளர்த்த, ஒரு தனி செல்வி - ஒப்பற்ற தன்னுடன் பிரிவில்லாத அருட்சத்தியும், கட்டிய - சுற்றிக்கட்டிய, வேணி - சடைமுடியும், மட்டு அலர் கடுக்கை - தேனொடுமலர்ந்த கொன்றைப்பூமாலையும், ஆயிரம் திருமுகத்து - பயனுள்ள அநந்தமுகங்களா யொழுகும், அருள் நதி - அருள்போலுள்ள கங்கையும்.

(வி-ரை.) கடுக்கை - ஆகுபெயர்.

'சிறுமத்' என்பதுமுதல் 'கூடலம்பதியோன்' என்பதுவரை.
(31—34 வரிகள்.)

(ப-ரை.) சிறு மதி - இளம்பிறையும், பகை தவிர் - நண்புள்ள, பாம்பும் - அரவமும், நகை பெறும் எருக்கமும் - வெண்மைபெற்ற எருக்கலர்மாலையும், ஒன்றிய திருவுரு-பொருந்திய திருவுருவத்தை, நின்று - நீங்காமல், நனி காட்டி - வெளிப்படக்காட்டி, பொருள் கொடுத்த - பொருளைத்தந்த, கூடலம்பதியோன் - மதுரைத் திருப்பதியை யிடமாக வுடையவனது.

(வி-ரை.) பகைதவிர்என்றதனால் நண்புண்மை பெறப்பட்டது. நகை-ஈண்டு வெண்மை குறிக்கவந்தது. எருக்கம் - ஆகுபெயர். கூடலம்பதியோன் - சிவபிரான்.

'பதமிரண்டமைத்த' என்பதுமுதல் 'ஓரன்பினர்' என்பதுவரை.

'பாலுமமுதமும்' என்பதுமுதல் 'இன்பமர்சொல்லி' என்பதுவரை.
(7—8 வரிகள்)

(ப-ரை.) பதம் இரண்டு அமைத்த - இரண்டு திருவடிகளையும் வைத்த, உள்ளம் - உள்ளத்தையுடைய, கதியிரண்டாய - அநுசந்தானராகிய, ஓர் அன்பினர் - பகுப்பற்ற அன்பையொத்த தலைவரும், பாலும் - ஆன்பாலும், அமுதமும் - தேவாமிர்தமும், தேனும் - செந்தேனும்போல, பிலிற்றிய - வெளிப்படுகின்ற, இன்பு அமர் சொல்லி-இனிமை பயக்கும் சொல்லையுடைய தலைவியும்.

(வி-ரை.) ஓர் என்றமையால் பகுப்பறுதி பெறப்பட்டது.ஆன்-பசு.

'நிரையிதழ்' என்பதுமுதல் 'ஒன்றியதேன்ன' என்பதுவரை.
(1—5 வரிகள்.)

(ப-ரை.) நிரை இதழ் - நெருங்கிய விதழ்களை, திறந்து-விரித்து, வண்டு - வண்டுகள், விருந்து - விருந்ினர்போல, கொண்மது - உள்ளதேனை, அருந்தும் - அருந்துகின்ற, மலரும் - மலரும், புரிந்துறை - அம்மலருட னீங்காதிருக்கின்ற, மணமும் - மணமும்,செந்தமிழ் பாடலும் - செந்தமிழ்ச்செய்யுளும், தேக்கிய பொருளும் - நிறைந்த அதன் பொருளும், பாலும் - பாலும், சுவையும் - அதன்

மதுரமும், பழநும் - பழமும், இரதமும் - அதன் இரசமும், உடலும் உயிரும் - உடலும் அதனுள் உயிரும், ஒன்றியது என்ன - பொருந்தியதுபோல.

(வி-ரை.) நிரை - வரிசை, அது ஈண்டு நெருக்கத்துக்காயிற்று. புரிந்துறை யென்றமையால் நீங்காமை பெற்றும்.

கண்டுந் தெளிந்துங் கலந்தவுள் ளுணர்வால்.
(6—வது வரி.)

(ப-ரை.) கண்டும் - கண்டும், தெளிந்தும்-தெளிந்தும், கலந்த உள்ளுணர்வால்-இருவரிடத்தும் வேறின்றிக் கலந்த வுள்ளுணர்ச்சியால்.

(வி-ரை.) உணர்ச்சி - அறிவு.

'நண்பும்' என்பதுமுதல் 'கடவார்' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) நண்பும் - நண்பினாலும், மனக்குறியும் - மனக்குறிப்பினாலும், வாய்மையும் - உண்மையினாலும், சிறப்பும் - தமக்குரிய பல வகைச் சிறப்பினாலும், நிழல் என - தத்தம் நிழலைப்போல, கடவார்-பிரிதலிலர்.

(வி-ரை.) நண்பு முதலிய நான்கினீற்றும் மூன்றனுருபு தொக்குநின்றது.

நெடுங்கற்பன்னையே! கூடலம்பதியோன் பதமிரண்டமைத்த வுள்ளக் கதியினராய வோரன்பினரும், இன்பமர் சொல்லியும், நண்பும் மனக்குறியும் வாய்மையும் சிறப்பும் நிழலெனக் கடவாரென வினைமுடிவு செய்க. (௫௯)

திருக்கோவையார் உ0உ-ம் செய்யுள்.

ஆதரங்கூறல்.

ஆதரங்கூறலென்பது—போக்கருமை கூறிய தலைமகனுக்கு நின்னோடு போகப்பெறின் அவளுக்கு வெஞ்சுரமுந் தண்சுரமாம். நீ யருமை கூறாது அவளைக் கொண்டுபோவெனத் தோழி தலைமகளாதாரங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பிணையுங் கலையும்வன் பேய்த்தேரி னைப்பெரு நீர்நசையா
லணையுமு ரம்புநி ரம்பிய வத்தமு மையமெய்யே
யிணையு மளவுமில் லாவிறை யோனுறை தில்லைத்தண்பூம்
பணையுந் தடமுமன் றேநின்றொ டேகினெம் பைந்தொடிக்கே.

அஃதற்றடம்புரையு மருஞ்சுரமதுவு
நிழற்றடமவட்கு நின்னொடேகினென்றது.

(ப-ரை.) பிணையுங் கலையும் - பிணையுங்கலையுங், பெருநீர் நசையால் - மிக்க நீர்வேட்கையால், வன் பேய்த்தேரினை - பெரியபேய்த்தேரினை, அணையும் - சென்றணுகும், முரம்பு நிரம்பிய - முரம்புநிரம்பின, அத்தமும் - சுரமும், ஐய - ஐயனே, நின்றொடு ஏகின் - நின்னொடு செல்லின், மெய்யே - மெய்யாகவே, எம் பைந்தொடிக்கு - எம் பைந்தொடிக்கு, இணையும் அளவும் இல்லா - ஒப்புமெல்லையு மில்லாத, இறையோன் உறை - இறையோனுறைகின்ற, தில்லை - தில்லைவரைப்பில், தண் பூம்பணையும் - பூக்களையுடைய குளிர்ந்த மருதநிலமும், தடமும் - பொய்கையும், அன்றே - அல்லவோ (நீ யிவ்வாறு கூறுவதென்), எ-று.

(வி-ரை.) பிணை - பெண்மான். கலை - ஆண்மான். பேய்த்தேர் - கானற்சலம். முரம்பு - கல்விரவியுயர்ந்திருக்கு நிலம். ஏகினென்னும் வினையெச்சம் பணையுந்தடமுமாமென விரியுமாக்கத்தோடு முடிந்தது. தடா - தடமென விகாரமாயிற்று.

நேரிசையாசிரியப்பா.

நெடுவரைப் பொங்கர்ப் புனமெறி காழகிற்
கடும்புகை வானங் கையுறப் பொதிந்து
தருநிழற் றேவர் தம்முடல் பனிப்பப்
படர்ந்தெறி கங்கை விடுங்குளி ரகற்றும்
பொன்னம் பொருப்ப நின்னுளத் தியையிற்
கனறலைப் பழுத்த திரள்பரண் முரம்பு
வயல்வளை கக்கிய மணிநிரைப் பரப்பே
யதர்விரிந் தெழுந்து படர்புகை நீழல்
பொதுளிய காஞ்சி மருதணி நிழலே
தீவாய்ப் புலிப்பற் செறிகுர லெயிற்றியர்
சழுநீர் மலையும் வயன்மா தினரே
யயற்புல மெறியு மெயினர் மரத்துடி

நெடுநக ரிரட்டுங் களியரி கிணையே
யிருட்கலர் புலனெனச் சுழற்றருஞ் சூறை
மதுமல ரளைந்த மலயக் காலே
யெழுசிறை தீயு மெருவையும் பருந்துங்
குவளையங் காட்டுக் குருகொடு புதாவே
வலியழி பகடு வாய்நீர்ச் செந்நாய்
தழைமடி மேதியும் பிணரிடங் கருமே
பட்டுலர் கள்ளி நெற்றுடை வாகை
சுருள்விரி சாலியுங் குலையரம் பையுமே
வடதிரு வால வாய்திரு நடுவூர்
வெள்ளி யம்பல நள்ளா றிந்திரை
பஞ்சவ னீச்சர மஞ்செழுத் தமைத்த
சென்னி மாபுரஞ் சேரன் றிருத்தளி
கன்னிசெங் கோட்டங் கரியோன் றிருவுறை
விண்ணுடைத் துண்ணுங் கண்ணிலி யொருத்தன்
மறிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த
களவுடல் பிளந்த வொளிகெழு திருவேற்
பணிப்பகை யூர்தி யருட்கொடி யிரண்டுடன்
முன்னும் பின்னு முதுக்கொள நிறைந்த
வருவியஞ் சார லொருபரங் குன்றஞ்
சூழ்கொள விருந்த கூடலம் பெருமான்
முழுதுற நிறைந்த விருபதம் புகழார்
போம்வழி யெனுஞ்சுர மருத
மாமை யூர்தரு மணிநிறத் திவட்கே.

நெடுவரைப்பொங்கர் - மணிநிறத்திவட்கே. **பகுதி** - உடன் போக்கு. **துறை** - ஆதரங்கூறல்.

‘நெடுவரை’ என்பதுமுதல் ‘உடல்பணிப்ப’ என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) நெடு வரை - நெடிய மூங்கில் (செறிந்த), பொங்கர் - மலைச்சார்பினில், புனம் - தினைப்புனம் (ஒம்பும்பொருட்டு), எறி வெட்டப்படுகின்ற, காழ் அகில் - வயிரம்பற்றிய அகில் மரங்களைக்

(கொளுத்துகின்ற), கடும்புகை - மிக்கபுகையானது, வானம் - விண்ணில், கையுறப்பொதிந்து - மூடிக்கொண்டு, தரு நிழல் - கற்பக நீழலை யிடமாகவுடைய, தேவர்தம் - தேவர்களது, உடல் பனிப்ப - உடல் நடுங்கும்படி.

(வி-ரை.) எறிதல் - வெட்டுதல். கடுமை - மிகுதிப்பொருட்டு. கையுறப் பொதிதல்-மூடுதலெனப் பொருடரு மொருசொல். தேவர் என மேல் வருதலால் தரு என்னு மரப்பெயர் கற்பகத்தருவை யுணர்த்திற்று. பனித்தல் - நடுங்கல்.

'படர்ந்து' என்பதுமுதல் 'இயையின்' என்பதுவரை.

(4—5 வரிகள்.)

(ப-ரை.) படர்ந்து-பரவி, எறி-(அலைகளை) வீசுகின்ற, கங்கை - ஆகாயகங்கை, விடும் - தருகின்ற, குளிர்-குளிரை, அகற்றும் - நீக்குகின்ற, பொன்னம் பொருப்ப - அழகிய மலையையுடையாய், நின் உளத்து - உன்னுளத்தே, இயையின் - சம்மதிப்பையானல்.

(வி-ரை.) பொன்னம் பொருப்ப என்பதில் அம் சாரியை, பொன்மலைபோல அழகிய பொருப்பினையுடையாய் என்றுரைத்தலுமாம்.

மாமை யூர்தரு மணிநிறத் திவட்கே.

(56—வது வரி.)

'கனறலைப்பழுத்த' என்பதுமுதல் 'பரப்பே' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) மாமை ஊர்தரும்-இளமைப்பருவமிக்க, மணி நிறத்து இவட்கு - மணிபோலு நிறத்தினளாகிய இத்தலைவிக்கு, கனல் தலை பழுத்த - அழலுதல் தம்மிடத்து முதிர்ந்த, திரள் - திரண்ட, பரல்-பரற்கற்களையுடைய, முரம்பு - பாறைகள், வயல் வளை - வயற்சங்குகள், கக்கிய - உமிழ்ந்த, மணி நிரை பரப்பே - கூட்டமாகிய முத்தினமேயாகும்.

(வி-ரை.) தலை - ஏழனுருபு. மாமை - வேறுபாடான நிறம் (பசலைநிறம்), இதனை வைவர்ண்யம் என்பர் வடநூலார். கனல்-முதனிலைத் தொழிற்பெயர். திரள் பரல்-வினைத்தொகை நிலைத்தொடர்.

'அதர்விரிந்து' என்பதுமுதல் 'அணிநிழலே' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) அதர் விரிந்து - அக்கல்வழியிற் கிளைத்து, எழுந்து - மேலெழுந்து, படர் - படராநின்ற, புகை நீழல் - புகைநிழலானது, பொதுளிய - தளிர்நிறைந்த, காஞ்சி - காஞ்சியும், மருது - மருது மாகிய மரங்களின், அணி நிழலே - நல்லநிழலேயாகும்.

(வி-ரை.) அதர் - வழி, அது ஈண்டுக் கல்வழிக்காயிற்று. பொதுளல் - தழைத்தல். அணிநிழல் - அழகிய நிழல் என்றலுமொன்று; நிழலுக்கணியாவது குளிர்ச்சி.

'தீவாய்' என்பதுமுதல் 'வயன்மாதினரே' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) தீ வாய் - தீப்போற்புகையாநின்ற வாயினையுடைய, புலிப்பல் - புலிப்பற்கள், செறி - அணிந்துள்ள, குரல் - கழுத்தை யுடைய, எயிற்றியர் - பாலைநிலப்பெண்கள், கழுநீர் - கழுநீராகிய களைகளை, மலையும்-பறிக்கின்ற, வயன்மாதினரே-கடைசியரேயாவர்.

(வி-ரை.) தீவாய்ப்புலியென வியையும்.

'அயற்புலமேறியும்' என்பதுமுதல் 'அரிகிணையே' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) அயல் புலம் எறியும் - (அப்பாலையின்) அயலிடத்தில் முழக்குகின்ற, எயினர் - மறவர்களது, மரத்துடி - மரத்தாற் செய்த துடிப்பறையானது, நெடு நகர் இரட்டும்-நெடிய நகரத்தில் முழக்கா நின்ற, களி - இனிமைபயக்கும், அரிகிணையே - இந்திரனுக்குரிய மருதநிலப்பறையேயாகும்.

(வி-ரை.) எறிதல் - முழக்குதல். இரட்டல் - முழக்கல். களி - களிப்பு, அது இவ்விடத்து இனிமைப்பொருட்டு. பயத்தல் - தருதல். அரி - இந்திரன்.

'இருட்கலர்' என்பதுமுதல் 'மலயக்காலே' என்பதுவரை.
(14—15 வரிகள்)

(ப-ரை.) இருள் கலர்-மயக்கமேலிட்ட கீழ்மக்களது,புலன்என-ஐம்புலன்போல, சுழல்தரும்-சுழற்சியைத்தருகின்ற, சூறை-சூறைக்

காற்றானது, மலர்மது அளைந்த-மலர்த்தேனொடு புரந்து வீசுகின்ற, மலயக்காலே - தென்றற்காற்றேயாகும்.

(வி-ரை) சூறை - சுழற்காற்று. சலர் - கீழ்மக்கள். "அம்பலம் பணியாக் கலரைப்பொ ருச்சிறி யானென்னை சொல்லோ கருதியதே" என்றார் மணிவாசகரும்.

'எழுசிறைதீயும்' என்பதுமுதல் 'குருகொடுபுதாவே' என்பதுவரை.

(16—17 வரிகள்.)

(ப-ரை.) எழு சிறை தீயும்-எழாநின்ற சிறைகள் தீந்திடுகின்ற, எருவையும் - கழுகுகளும், பருந்தும் - பருந்துகளும், குவளையங்காடு-குவளைமலர்களாகிய வனத்திலுள்ள; குருகொடு புதாவே-நாரைகளுங் கொக்குகளுமேயாகும்.

(வி-ரை.) எழுசிறை - வினைத்தொகை நிலைத்தொடர். சிறை - சிறகு. குவளையங்காடு என்பதில் அம் சாரியை.

'வலியழிபகடு' என்பதுமுதல் 'பிணரிடங்கருமே' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) வலி அழி பகடு-(வெப்பத்தால்)வன்மைகுன்றிய யானைகளும், நீர் வாய் - நீர் சொரியும் வாயுள்ள, செந்நாய் - செந்நாய்களும், தழை மடி - பால்பெருகும் மடியினையுடைய, மேதியும்-எருமைகளும், பிணர் இடங்கருமே-பொருக்குடலுள்ள முதலைகளுமேயாகும்.

(வி-ரை.) அழிபகடு - வினைத்தொகை நிலைத்தொடர். பிணர் - சருச்சரை. இடங்கர் - முதலை.

'பட்டலர்கள்ளி' என்பதுமுதல் 'குலவரம்பையுமே' என்பதுவரை.

(20—21 வரிகள்)

(ப-ரை) பட்டலர் கள்ளி - கிளைகள் வெந்து உலர்ந்த கள்ளிமரமும், நெற்று உடை வாகை-நெற்றையுடைய வாகைமரம், சுருள் விரி-சுருள்விரிந்த, சாலியும் - நெற்பயிரும், குலை அரம்பையுமே - குலைகள் தூங்குகின்ற வாழையுமேயாகும்.

'வடதிருவாலவாய்' என்பதுமுதல் 'திருவுறை' என்பதுவரை.
(22—26 வரிகள்.)

(ப-ரை.) வட திருவாலவாய்-(இடைக்காடன் பொருட்டுக் கோயில்கொண்டருளிய) வடமதுரையும், திருநடுவூர் - திருநடுவூரென்னுந் திருப்பதியும், வெள்ளி அம்பலம்-வெள்ளியம்பலமும், நள்ளாறு-திருநள்ளாறும், இந்திரை - இந்திரையும், பஞ்சவனீச்சரம் - பஞ்சவனீச்சரமும், அஞ்செழுத்து அமைத்த-பஞ்சாக்ஷரமமைத்த, சென்னி மாபுரம்-பெருமையுள்ள சோழபுரமும், சேரன் றிருத்தளி-சேரன் றிருத்தளியும், கன்னி செங்கோட்டம் - அழிவில்லாத திருச்செங்கோட்டமும், கரியோன்-திருமாலது, திருவுறை - அழகிய சோலையும்.

(வி-ரை.) சென்னி - சோழன். கன்னி - அழிவின்மை.

'விண்ணுடைத்துண்ணும்' என்பதுமுதல் 'திருவேல்' என்பதுவரை.
(27—29 வரிகள்.)

(ப-ரை.) விண் உடைத்து உண்ணும்-விண்ணுலகத்துள்ளாரையழித்துண்ட, கண் இலி - கண்ணோட்டமில்லானாகிய, ஒருத்தன் - ஒரு சூரபன்மனுடைய, மறி திரை கடலுள் - மறித்து வீசாநின்ற அலைகடலில், மா என கவிழ்ந்த - மாமரமாகத் தலைகீழாக முளைத்த, களவுடல் பிளந்த - களவானவுடலைக் கூறாக்கிய, ஒளி கெழு - ஒளியிடைவிடாத, திரு வேல் - கூரியவேலேந்திய.

(வி-ரை.) கண் - கண்ணோட்டம், இலி - இல்லாதவன்; இது பிளந்தவேல் என மேல் வருதலால் சூரனை யுணர்த்திற்று. வேலுக்கழகு கூர்மையாதலால் அதனைத் 'திருவேல்' என்றார்.

'பணிப்பகையூர்தி' என்பதுமுதல் 'குன்றம்' என்பதுவரை.
(30—32 வரிகள்.)

(ப-ரை.) பணி பகை ஊர்தி - பாம்புக்குப் பகையாகிய மயிலை நடத்து முருகக்கடவுள், அருள் கொடி இரண்டுடன் - தன தருளாகிய தெய்வயானைநாச்சியாரும் வள்ளிநாச்சியாருமாகிய இரண்டு தேவியருடனே, முன்னும் பின்னும்-முன்னரும் பின்னரும், முதுக்கொள நிறைந்த - பழமை கொள்ளும்படி நிறைந்துள்ள, அருவி அம் சாரல் - அருவிய சாரலையுடைய, ஒரு பரங்குன்றம் - ஒப்பற்ற திருப்பரங்குன்றமும்.

(வி-ரை.) பணிப்பகை - மயில். அருவியஞ்சாரல் என்பதில்அம் சாரியை.

'சூழ்கோளவிருந்த' என்பதுமுதல் 'மருதம்' என்பதுவரை.
(33—35 வரிகள்.)

(ப-ரை.) சூழ்கொள இருந்த-புடைசூழவிருந்த, கூடலம்பெருமான் - மதுரைநாயகனது, முழுதுற நிறைந்த - இடையற நிறைந்த, இரு பதம்-இரண்டுதிருவடிகளையும், புகழார்-புகழ்ந்துரையார், போம் வழி எனும் - போகும்வழியென்று சொல்லப்படுகின்ற, சுரம்-பாலை நிலமும், மருதம் - மருதநிலமேயாகும்.

(வி-ரை.) சூழ்கொள - ஒருசொல். சுரம் - வெப்பம், அதனை இடையறாது உடைத்தாதலால் பாலைநிலத்தைச் சுரமென்றே வழங்கலாயினர். மருத நிலம் - வயல்சூழ்ந்த நிலம்.

பொன்னம் பொருப்ப! நின்னுளத்தியையின், மணிநிறத்திலட்டு, பரன்முரம்பு மணிநிரைப் பரப்பே, புகைநிழல் மருதணி நிழலே, எயிற்றியர் வயன்மாதினரே, எயினர் மாத்துடி களியரிகிணையே, சூறை மலயச்சாலே, எருவையும் பருந்தும் குருகொடு புதாவே, பகடு செந்நாய் மேதியுமிடங்கருமே, கள்ளிவாகை சாலியு மாம்பையுமே, கூடற் பெருமான் பதம் புகழார் போம்வழியெனுங் கடுஞ்சுரம் மருதமேயென வினைமுடிவு செய்க. (சு0)

திருக்கோவையார் கசுசு-ம் செய்யுள்.

முகங்கண்டு மகிழ்தல்.

முகங்கண்டு மகிழ்தலென்பது—மருங்கணைவிறுதிக்கண் தலைமகளது முகமகிழ்தல் கண்டு, இவளும் யானும் மலருமதியுமெனத் தலைமகன் றன்னயப்புணர்த்தி மகிழாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

அழுந்தே ன்ரகத் தியானென் றிருப்பவந் தாண்டுகொண்ட
செழுந்தேன் றிகழ்பொழிற் றில்லைப் புறவிற் செறுவகத்த
கொழுந்தேன் மலர்வாய்க் குமுதமிவள் யான்குருஉச் சுடர்கொண்
டெழுந்தாங் கதுமலர்த் தும்முயர் வானத் திளமதியே

முசையவிழ் குழலி முகமதி கண்டு
திகழ்வே லண்ணல் மகிழ்வுற்றது.

(ப-ரை.) அழுந்தேன் நரகத்து யான் என்று இருப்ப-யானினி நரகத்திற் புக்கழுந்தேனென்று செம்மாந்திருக்கும் வண்ணம், வந்து ஆண்டுகொண்ட - (தானே) வந்தாண்டுகொண்ட, செழுந்தேன் திகழ் பொழில் - செழுந்தேன்போல்வானது விளங்கும் பொழிலையுடைய, தில்லை புறவில் - தில்லையைச் சூழ்ந்த (இளங்) காட்டில், செறு அகத்த - செய்யின்கண்ணவாகிய, கொழு தேன் - கொழுவியதேனையும், மலர் வாய் - மலராநின்ற வாயையுமுடைய, குமுதம் இவள் - குமுதமலர் இவள், யான் குரூஉச்சுடர் கொண்டு எழுந்து - யான் நிறத்தையுடைய நிலாவைக்கொண் டெழுந்து, ஆங்கது - அக்குமுதத்தை, மலர்த்தும் - மலர்த்தும், உயர் வானத்து இளமதி - உயர்ந்த வானத்தின்கண் திகழு முதிராமதி, எ-று.

(வி-ரை.) செம்மாந்திருத்தல்-இறுமாந்திருத்தல். செழுந்தேன்-ஆகுபெயர். புறவம் - இளங்காடு. ஆங்கது-ஒருசொல். குமுதம் - ஆகுபெயர்.

நேரிசையாசிரியப்பா.

நிறைமதி புரைபாது நிறைமதி புரையாது
தேரான் றெளிவெனுந் திருக்குறட் புகுந்தும்
குறைமதி மனனே நிறைமதி புரையா
துவர்க்கடற் பிறந்துங் குறையுடற் கோடியுங்
கருங்கறைத் தீராப் பெரும்பொறிப் பகுவாய்த்
தழல்விழிப் பாந்த டானிரை மாந்தியு
மிச்சி லுமிழ்ந்து மெய்யுட் கறுத்துந்
தணந்தோர்ச் சினத்து மணந்தோர்க் களித்துங்
குமுத மலர்த்தியுங் கமலங் குவித்துங்
கடல்சூ ழுலகின் மதிநடு விகந்தும்
பெருமறை கூறி யறைவிதி தோறு
முத்தழற் குடையோன் முக்கட் கடவுளென்
றறுத்திடும் வழக்குக் கிடக்க வொருகால்
வான்வர நதிக்கரை மருண்மக வெடுத்த
திக்குணத் தக்கன் செருக்களந் தன்னுட்
கண்டொறும் விசைத்த கருப்புத் தரளமும்
வளையுமி ழாரமுஞ் சுரிமுகச் சங்கும்
வலம்புரிக் கூட்டமுஞ் சலஞ்சலப் புஞ்சமு

நந்தினக் குழுவும் வளவயி னந்தி
யுழவக் கணத்தர் படைவா ணிறுத்துங்
கூடற் கிறையோன் குரைகழற் படையா
வீரெண் கலையும் பூழிபட் டுதிர
நிலனொடு தேய்ப்புண் டலமந் தலறியுஞ்
சிதைந்துறைந் தெழுபழித் நிமதி புரையாது
முண்டகம் விளர்த்தி முதிரா தலர்ந்து
மீமுதநின் றுணறந்து மறிவறி வித்துந்
தீக்கதி ருடலுட் செல்லா திருந்துந்
திளையாத் தாரைகள் சேரா
முளையா வென்றி யிவண்முக மதிக்கே.

நிறைமதிபுரையாது - இவண்முகமதிக்கே. பகுதி-இரவுக்குறி. துறை - முகங்கண்டுமகிழ்தல்.

‘நிறைமதி’ என்பதுமுதல் ‘புரையாது’ என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) தேரான்றெளிவுஎனும்-தேரான்றெளிவுஎன்னு முதற் குறிப்பையுடைய, திருக்குறள் புகுந்தும் - திருக்குறளின் பொருளை யாராய்ந்தறிந்தும், குறைமதி மனனே - அறிவுகுறைந்த மனனே, நிறைமதி புரையாது - முழுமதி என்று மொவ்வாது, நிறைமதி புரையாது - முழுமதி யெத்துணையு மொவ்வாது, நிறைமதி புரையாது - முழுமதி எவ்வாற்றானு மொவ்வாது.

(வி-ரை.) தேரான் றெளிவெனுந் திருக்குறள்— “தேரான் றெளிவுந் தெளிந்தான் கணையுறவும், தீரா விடும்பை தரும்” என்பது. புகுதல் - நுண்ணிதாயாராய்தல். புரைதல் - நிகர்த்தல்.

‘உவர்க்கடற்பிறந்தும்’ என்பதுமுதல் ‘கறுத்தும்’
என்பதுவரை.
(4—7 வரிகள்.)

(ப-ரை.) உவர் கடல் பிறந்தும் - உப்புக்கடலிற் பிறந்தும், குறை உடல் கோடியும் - குறைகின்ற வுடலானது கூனியும், கரு - கருமையாகிய, கவை - பிளவுள்ள, தீ நா-நெருப்புமிழ்கின்ற நாக்கையும், பெரு - பெரிய, பொறி - புள்ளியமைந்த, பகு வாய் - பேழ்

வாயையும், தழல் விழி-கனலும் விழியையுமுடைய,பாந்தள் - இராகு வென்னும் பாம்பினால், இரை மாந்தியும்-இரையாகவுண்டும், மிச்சில் உமிழ்ந்து - உச்சிட்டமாக உமிழப்பட்டு, மெய்யுள் கறுத்தும் - தன்னுடலினுண் மறுப்பட்டும்.

(வி-ரை.) கோடுதல் - கூனுதல் பேழ்வாய்-பெரியவாய். தழல் விழி - வினைத்தொகை நிலைத்தொடர். தான்-அசை. மாந்தல்-உண்டல். உமிழ்தல் - கக்குதல்.

'தணந்தோர்' என்பதுமுதல் 'மதிநடுவிசுந்தும்' என்பதுவரை.

(8—10 வரிகள்.)

(ப-ரை.) தணந்தோர் சினத்தும் - பிரிந்தவரைக் கோபித்தும், மணந்தோர் களித்தும் - புணர்ந்தவரைத் தண்ணளிசெய்தும், குமுதம்அலர்த்தியும் - குமுதமலரை யலரச்செய்தும், கமலம் குவித்தும்-தாமரைமலரைக் கூம்பச்செய்தும், கடல் சூழ் உலகில்-கடலாற் சூழப்பட்ட வுலகத்தே, மதிநடு இசுந்தும் - மாதமத்தியின் மறைந்தும்.

(வி-ரை.) தணத்தல்-பிரிதல். சினத்தல் - கோவித்தல். தண்ணளிசெய்தல் - க்ருபைசெய்தல். குமுதம் - ஆகுபெயர்; கமலமும் அது. மதி-மாசம். இசுத்தல் - மறைதல்.

'பெருமறை' என்பதுமுதல் 'கிடக்க' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) பெரு மறை-பெரிய வேதங்கள்,கூறி அறை-வெளிப்படையாய் முரசறைகின்ற, விதிதோறும் - விதிகளெல்லாம், முத்தழற்கு உடையோன் - முத்தழலாலாகியவேள்விக்கருத்தன்,முக்கண் கடவுள் என்று - சோம சூரியாக்கினிகளாகிய மூன்று கண்ணுள்ள பரமசிவனென்று, அறுத்திடும் வழக்கு - கண்டித்துச் சொல்லிய முறைமை, கிடக்க - ஒருசாரிருக்க.

(வி-ரை.) முத்தழல் - த்ரேதாக்கி. முதனூலாதலான் வேதத்தைப் 'பெருமறை' என்றார். கூறியறை யென்றமையான் வெளிப்படையாய் முரசறைதலென் றுரைக்கலாயிற்று. வேள்விக்கருத்தன் - யாககர்த்தா.

'ஒருகால்' என்பதுமுதல் 'தக்கன்' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) ஒருகால் - ஓர்காலத்தில், வான் - தேவர்களுடனே, வாரநதிக்கரை - (காசிக்) கங்கைக்கரையிடத்தே, மருள் - தனதுமருளால், மகம் எடுத்த - யாகம் பண்ணத்தொடுத்த, தீ குணம் தக்கன் - குணத்தால் தீயனாகிய தக்கனுடைய.

(வி-ரை.) கங்கையிற் சிறந்தன வேறொன்றின்மையான் அதனை 'வரநதி' என்றார்.

'செருக்களந்தன்னுள்' என்பதுமுதல் 'நந்தினக்குழுவும்' என்பதுவரை.
(15—19 வரிகள்.)

(ப-ரை.) செருக்களந்தன்னுள் - போர்க்களத்தில், கண்தொறும் - கணுக்கள்தோறும், விசைத்த - சிதறிய, கருப்பு தரளமும் - கரும்பின் முத்தங்களும், வளை உமிழ் ஆரமும் - சங்கங்களீன்ற முத்தங்களும், சுரி முகம் சங்கும் - சுரிந்த முகமுள்ள இடம்புரிச் சங்கங்களும், வலம்புரி கூட்டமும் - வலம்புரிச்சங்கின் கூட்டமும், சலஞ்சலப்புஞ்சமும் - சலஞ்சலச் சங்கத்திரளும், நந்து இனம் குழுவும் - இப்பியென்னும் சங்கக்கூட்டமும்.

(வி-ரை.) தன்-சாரியை. கண் - கணு. வளை-ஆகுபெயர். புரி - முறுக்கு.

'வளவயினந்தி' என்பதுமுதல் 'அலமந்தலறியும்' என்பதுவரை.
(19—23 வரிகள்.)

(ப-ரை.) வளம்வயின் நந்தி - வளத்தவிடத்தே பெருகி, உழவக் கணத்தர்-கூட்டமாகிய உழவர்கள் (ஓட்டும்), படை வாள்-கலப்பைக் கொழுவை, நிறுத்தும் - இடறப்பண்ணு மருதஞ்சூழ்ந்த, கூடற்கு இறையோன் - மதுரைநாயகனது, குரை கழல் படை யால் - நூபுர மொலிக்கின்ற திருவடியாகிய ஆயுதத்தால், இருஎண் கலையும் - பதினாறு கலைகளும், பூழிபட்டு உதிர - புழுதிபட்டுச் சிந்துமாறு, நிலனொடு தேய்ப்புண்டு - நிலத்தோடு தேய்க்கப்பட்டு, அலமந்து அலறியும் - சுழன்றலறியும்.

(வி-ரை.) வயின் - இடம். நந்தல் - பெருகல். அலமந்து என்பதற்குப் பகுதி அலமா. நிலன்-போலி.

சிதைந்துறைந் தெழுபழித் தீமதி புரையாது.
(19—வது வரி.)

(ப-ரை.) சிதைந்து உறைந்து - அழிந்திருந்து, எழும் - எழாநின்ற, பழி - பழியுள்ள, தீ மதி புரையாது - கொடியதிங்க ளொவ்வாது.

(வி-ரை.) சிதைதல்-அழிதல். புரைதல் - நிகர்த்தல்.

'முண்டகம்' என்பதுமுதல் 'முகமதிக்கே' என்பதுவரை.
(25—29 வரிகள்.)

(ப-ரை.) முண்டகம்-செந்தாமரைப்பூவை, விளர்த்தி-வெளுக்கச்செய்து, முதிராது அலர்ந்தும் - வாடாது எப்போது மலர்ந்தும், அமுதம் நின்று உறைந்தும் - அமுதம் ஒழியாமற் பொருந்தியும், அறிவு அறிவித்தும்-தன்கருத்தை யறிவித்தும், தீ கதிர் உடலுள் - வெம்மையான கதிருடலில், செல்லாதிருந்தும் - மறையாதிருந்தும், தாரைகள் திளையா - விண்மீன்களோடுகூடி, சோரா - சோராமலும், முளையா - (காலையிற்பட்டு மாலையில்) முளையாமலுமுள்ள, வென்றி - வெற்றிகொண்ட, இவள் முகம் மதிக்கு - இவள் முகமாகிய மதிக்கு.

(வி-ரை.) முண்டகம்-ஆகுபெயர். திளைத்தல் - கூடல். மதி - சந்திரன்.

குறைமதி மனனே! இவள் முகமதிக்கு, கூடற் பெருமான் கழற்படையால் தக்கன் யாகசாலையாகிய செருக்களத்தில் நிலனொடு தேய்ப்புண்டலறிச் சிதைந்தெழுந் தீமதியாகிய நிறைமதி புரையாது புரையாதெனர வினைமுடிவுசெய்க.

(௬௧)

திருக்கோவையார் ௩௦௫-ம் செய்யுள்.

கற்புப்பயப்புரைத்தல்.

கற்புப்பயப்புரைத்த லென்பது — கற்பறிவித்த செவிலி அவள் அவனையொழிய வணங்காமையின், அவனூருங்களிறும் வினைவயிற் சென்றால் அவ்வினை முடித்துக்கொடுத்து வந்து, தன்பந்தி யிடத்தல்லது ஆண்டுத் தங்காதாதலான், அவளது கற்பு, அந்திக்காலத்து வடமீனையும் வெல்லுமெனா, அவளது கற்புப்பயந்தமை நற்றாய்க்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்;—

சிற்பந் திகழ்தரு திண்மதிற் றில்லைச்சிற் றம்பலத்துப்
பொற்பந்தி யன்ன சடையவன் பூவண மன்னபொன்னின்
கற்பந்தி வாய்வட மீனுங் கடக்கும் படிகடந்து
மிற்பந்தி வாயன்றி வைகல்செல் லாதவ னீர்ங்களிறே.

கற்புப் பயந்த
அற்புத முரைத்தது.

(ப-ரை.) சிற்பம் திகழ்தரு-நுண்டொழில் விளங்கும், திண் மதில் - திண்ணிய மதிலையுடைய, தில்லை சிற்றம்பலத்து - தில்லையிற் சிற்றம்பலத்தின்கணுள்ளனாகிய, பொன் பந்தி அன்ன - பொற்றகட்டு நிரைபோலும், சடையவன்-சடையையுடையவனது, பூவணம் அன்ன - பூவணத்தை யொக்கும், பொன்னின் - பொன்னினது, கற்பு - கற்பு, அந்திவாய் - அந்திக்காலத் துளதாகிய, வடமீனும் கடக்கும் - வடமீனையும் வெல்லும், (அதனால் எடுத்துக்கொண்ட வினையை யிடையூறின்றி யினிதின் முடித்து) அவன் ஈர் களிறு - அவனூரும் (மதத்தான்) ஈரியகளிறு, படி கடந்தும்-நிலத்தைக் கடந்தும், இல் பந்திவாயன்றி - இல்லின்கண் தன்பந்தியிடத்தல்லது, வைகல் செல்லாது - தங்காது, எ-று.

(வி-ரை.) பொன்பந்தி - பொற்றகட்டுவரிசை. பூவணம் - ஓர் திருப்பதி. பொன் - ஆகுபெயர். வடமீன் - அருந்ததி. கடத்தல் - வெல்லல். வைகல்செல்லாது - ஒருசொல்.

நேரிசையாசிரியப்பா.

ஏழ்கடல் வளைந்த பெருங்கட ணுப்பண்
பத்துடை நூறு பொற்பமர் பரப்பு
மாயிரத் திரட்டிக் கீழ்மே னிலையும்
யோசனை யடுத்த மாசறு காட்சிப்
பளிங்கப் பொருப்பிற் றிடர்கொண் மூதூர்
களவுடை வாழ்க்கை யுளமனக் கொடியோன்
படர்மலை யேழுங் குருகமர் பொருப்பு
மாவெனக் கவிழ்ந்த மறிகட லொன்றுங்
கடுங்கனற் பூழி படும்படி நோக்கிய
தாரையெட் டுடைய கூரிலை நெடுவேற்
காற்படைக் கொடியினன் கருணையோ டமர்ந்த
புண்ணியக் குன்றம் புடைபொலி கூடற்

பிறைச்சடை முடியினன் பேரரு ளடியவர்க்
கொருகாற் றவறு வுடைமைத் தென்னப்
பிரியாக் கற்பெனு நிறையுடன் வளர்ந்த
நெடுங்கய லெறிவிழிக் குறுந்தொடித் திருவின
டெய்வமென் றொருகாற் றெளியவு முளத்திலள்
பலவுயிர் தழைக்க வொருகுடை நிழற்று
மிருபுல வேந்தர் மறுபுலப் பெரும்பகை ,
நீர்வடுப் பொருவ நிறுத்திடப் படரினு
மேழுய ரிரட்டி மதிலைநட் டமைத்த
தன்பழங் கூடந் தனிநிலை யன்றி
யுடுநிறை வானப் பெருமுக டுயரச்
செய்யுமோர் கூடம் புணர்த்தி
னெய்ம்மிதி யுண்ணு தவன்கடக் களிறே.

ஏழ்கடல்வளைந்த - அவன்கடக்களிறே - பந்தி. மணஞ்சிறப்புரைத்தல், துறை-கற்புப்பயப்புரைத்தல்.

'ஏழ்கடல்' என்பதுமுதல் 'மாசறுகாட்சி' என்பதுவரை.
(1—4 வரிகள்.)

(ப-ரை.) ஏழ்கடல் வளைந்த- ஏழுகடலாற் சூழப்பெற்ற, பெருங்கடல் நாப்பண் - பெரும்புறக்கடனடுவில், பத்துடைநூறு - ஆயிரம், யோசனை - யோசனையளவுள்ள, பொற்பு அமர் பரப்பும் - சிற்பவிதியமைந்த அகலமும், ஆயிரத்துஇரட்டி-இரண்டாயிரம், (யோசனை-யோசனையளவுள்ள), கீழ்மேல் நிலையும் - கீழ்நிலையு மேனிலையும், அடுத்த-பொருந்திய, மாசு அறு காட்சி-குற்றமற்ற தோற்றத்தினையுடைய.

(வி-ரை.) பொற்பு - அழகெனினுமாம்.

'பளிங்கப்பொருப்பில்' என்பதுமுதல் 'நோக்கிய' என்பதுவரை.
(5—9 வரிகள்.)

(ப-ரை.) பளிங்கப்பொருப்பின் - பளிங்கு மலைபோலும், திடர் கொள் - உயர்ச்சிகொண்ட, மூதூர் - (மகேந்திரமென்னும்) பேருரிடத்தே, களவு உடை-மாயமுடைய, வாழ்க்கையுள-வாழ்க்கையுள்ள, மனக்கொடியோன் - கொடியமனத்தை யுடையோன், படர்மலை

எழும்-அகன்றுள்ள வேழமலையும், குருகு அமர் பொருப்பும்-கிரவுஞ்சமென்னும் பறவைவடிவாகிய மலையும், மா என கவிழ்ந்த - மாமரமாகத் தலைகீழாகவிருந்த, மறி கடல் ஒன்றும் - அலைகளை மறித்தெறியாநின்ற கடலொன்றும், கடுங்கனல் பூழி படும்படி - வேகமாகிய நெருப்புப் பொடிகளாகும்படி, நோக்கிய - சினந்த.

(வி-ரை.) குருகு - பறவை.

'தாரையெட்டுடைய' என்பதுமுதல் 'புடைபொலி' என்பதுவரை.

(10—12 வரிகள்.)

(ப-ரை.) தாரை எட்டு உடைய-எட்டுக் கண்களையுடைய, கூர் இலை நெடு வேல் - கூரிய இலைத்தொழில்வாய்ந்த நெடியவேலையேந்திய, கால்படை கொடியினன் - கோழிக்கொடியை யுடையவன், கருணையோடு-கிருபையோடு, அமர்ந்த-எழுந்தருளிய, புண்ணிய குன்றம்-மோக்ககாரணமாகிய திருப்பரங்குன்றம், புடை பொலி - பக்கத்திலழகுபெற்றிருக்கின்ற.

(வி-ரை.) காலில் ஆயுதமாக முள்ளையுடையதாதலால் அதனைக் 'காற்படை' என்றார். புண்ணியம் அதன் பயனாகிய மோக்ஷத்தைக் குறித்தது.

'கூடல்' என்பதுமுதல் 'தவறுவுடைமைத்தென்ன' என்பதுவரை.

(12—14 வரிகள்.)

(ப-ரை.) கூடல் - மதுரையில், பிறை சடை முடியினன் - பிறையைத்தரித்த சடைமுடிக்கடவுட்குரிய, பேரருள் அடியவர்க்கு-பேரருள்பெற்ற தொண்டர்க்கு, ஒருகால் - ஒருகாலத்திலும், தவறு உடைமைத்து என்ன - தப்பிப்போகாத பொருள்போல.

(வி-ரை.) பிறைச்சடை முடியினன் - சிவபெருமான்.

பிரியா' என்பதுமுதல் 'தேளியவுமுளத்திலள்' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) பிரியா - (தன்னை) விட்டு நீங்காத, கற்பு என்னும் - கற்பென்று சொல்லுகின்ற, நிறையுடன் வளர்ந்த - மாட்சிமையுடன் வளர்ந்த, நெடு கயல் எறி விழி-நெடுமையாகிய கயலைத் தோல்வித்த

விழியையும், குறுந்தொடி - சிறிய தொடியையுமுடைய, திருவினள்- திருவையொத்தவள், ஒருகால் - ஒருகாலத்திலேனும், உளத்து-தன துள்ளத்தில், தெய்வம் என்று -(நாயகனைப்பார்க்கிலும்) பிறதெய்வ முண்டென்று, தெளியவும் இலள் - ஆராயவுமெண்ணாள்.

(வி-ரை.) மாட்சிமை - மேன்மை. எறிதல் இவ்விடத்தில் வேறல் என்னும் பொருளது. தொடி - வளையல்.

'பலவுயிர்தழைக்க' என்பதுமுதல் 'படரினும்' என்பதுவரை.
(18—20 வரிகள்.)

(ப-ரை.) பல உயிர் தழைக்க-பலவுயிர்களுந்தழைக்குமாறு, ஒரு குடை நிழற்றும் - ஒருகுடையால் தண்ணளிசெய்கின்ற, இருபுல வேந்தர் - இரண்டுதேயத் தரையர்களுக்குள், மறு புலம் - வேற்றுப் புலத்தின்பொருட்டு விளைந்த, பெரும்பகை-நெடுநாட் பகைமையை, நீர் வடு பொருவ - நீரானது பிளவுபடவந்த வடுவைப்போல, நிறுத்திட - நீக்கி யொன்றுபடுத்தும்படி, ... ினும்-அரசன் சென்றாலும்.

(வி-ரை.) புலம் - தேயம். பொருவல் - ... கர்த்தல், படர்தல் - செல்லுதல்.

'எழுயரிரட்டி' என்பதுமுதல் 'கடக்களிறே' என்பதுவரை.
(21—25 வரிகள்.)

(ப-ரை.) எழிரட்டி-பதினான்குமுழவளவையின், உயர்-உயர்ந்துள்ள, மதலை நட்டு - தூண்களை நிறுத்தி, அமைத்த-செய்த, தன் பழங்கூடம் தனிநிலையன்றி - தனது பழமையான கூடமாகிய ஒரே விடத்தன்றி, அவன் கட களிறு - தலைவனது மதயானையானது, உடு நிறை - உடுக்கணிறைந்த, வானம் - வானளவும், பெரு முகடு - நெடிய சிகரமானது, உயர செய்யும் - உயரும்படி இயற்றப்பட்ட, ஓர் கூடம்-பிறிதோர் கூடத்தில், புணர்த்தின்-இருத்தினால், நெய்ம் மிதி - நெய்யோடு கலந்த கவளத்தை, உண்ணாது-உண்ணப்பெறாது.

(வி-ரை.) யானைக் குண்பிக்குங் கவளம் காலால் துவைத்துச் செய்யப்படுவதாதலால், அதனை 'நெய்ம் மிதி' என்றார். மிதவை யென்பது மிதியென்றாயது செய்யுள் விகாரம் என்பாருமுளர். மதலை - தூண். கடம் - மதம். கூடம் - யானைப் பந்தி.

காற்படைக் கொடியினன் புண்ணியக்குன்றம் புடை பொலி கூடற் சடைமுடியினன் போரு ளடியவர்க்குத் தவறாவுடைமைத் தென்ன, பிரியாக் கற்பெனு நிறையுடன் வளர்ந்த திருவின ளாளத்

தில் பிறதெய்வமுண்டெனத் தெளிந்திலளாதலால், தலைவன் வேந்தர் பெரும்பகையை நீர்வடிப்பொருவ நிறுத்திடப் படரினும அவன் களிறு தன் பழங் கூடத்தன்றி பிறிதோர்கூடம் புணர்த்தின் செய்ம்மிதி யுண்ணுமெ்தன வினைமுடிவு செய்க. (கூஉ)

திருக்கோவையார் ௩0௨-ம் செய்யுள்.

வாழ்க்கைநலங்கூறல்.

வாழ்க்கைநலங்கூறலென்பது—மணமகனைக்கண்ட செவிலி, மகிழ்வோடு சென்று நின்மகளுடைய இல்வாழ்க்கை நலத்திற்கு உவமை கூறின், நின்னுடைய இல்வாழ்க்கை நலமல்லது வேறுவமையில்லையென நற்றாய்க்குத் தலைமகளது வாழ்க்கைநலங் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

தோண்டின மேவுஞ் சுடர்க்கழ லோன்றில்லைத் தொன்னகரிற்
கண்டின வேவுமி னீயவ ணின்கொழு நன்செழுமென்
றண்டின மேவுதிண் டோளவன் யானவ டற்பணிவோள்
வண்டின மேவுங் குழலா ளயன்மன்னு மிவ்வயலே.

மணமனைச் சென்று மகிழ்தரு செவிலி
யணிமனைக் கிழத்திக் கதன்சிறப் புரைத்தது.

(ப-ரை.) தொண்டு இனம் மேவும் - தொண்டாது இனத்தைப் பொருந்தும், சுடர் கழலோன் - சுடர்க்கழலை யுடையவனது, தில்லை - தில்லையாகிய, தொல் நகரில் - பழைய நகரிடத்து, கண்ட இல் - (யான்) கண்ட (அவளது) இல்லம், மேவும் நம்இல்-மேவப்படு நமதில்லத்தோடொக்கும், அவள் நீ - அவள் நின்னோடொக்கும், தண்டு இனம் மேவும் - தண்டாகிய இனத்தை யொக்கும், செழு மெல் - வளவியல் மெல்லியவாகிய, திண் தோளவன் - திண்ணிய தோள்களையுடையான், நின் கொழுநன்-நின் கொழுநனோடொக்கும், அவள்தன் பணிவோள் - அவடன்னைப் பணிந்து குற்றேவல் செய்வாள், யான் - என்னோடொக்கும், வண்டு இனம் மேவுங் குழலாள் அயல்-வண்டினம் பொருந்துங் குழலையுடையாளது அயல், இ அயல்-இவ்வயலோடொக்கும் (வேறு சொல்லலாவதில்லை), எ-று.

(வி-ரை.) தண்டு - தூண். கொழுநன் - கணவன்.

நேரிசையாசிரியப்பா.

பெண்ணெனப் பெயரிய பெருமகட் குலனு
ளுணநில னுண்டு பராயவப் பெருந்தவங்

கண்ணுற் வுருப்பெறுங் காட்சிய தென்னக்
கருவுயிர்த் தெடுத்த குடிமுத லன்னை
நின்னையுங் கடந்த தன்னவ ளருங்கற்
பரிகடன் மூழ்கிப் பெறுமருள் பெற்ற
நிலமகட் கடந்தது நலனவள் பொறையே
யிருவினை நாடி யுயிர்தொறு மமைத்த
வூழையுங் கடந்தது வாய்மையின் மதனே
கற்பகம் போலு மற்புதம் பழுத்த
நின்னிலங் கடந்த தன்னவ ளில்லம்
பேரா வாய்மைநின் னூரனைக் கடந்தது
மற்றவ ளூரன் கொற்றவெண் குடையே
யேழுளைப் புரவியோ டெழுகதிர் நோக்கிய
சிற்றிலை நெரிஞ்சிற் பொற்பூ வென்ன
நின்முகக் கிளையினர் தம்மையுங் கடந்தனர்
மற்றவட் பார்த்த மதிக்கிளை யினரே
யுடனிழன் மான வுனதரு ணிற்கு
மென்னையுங் கடந்தன ளன்னவட் கினியோள்
கொலைமதின் மூன்று மிகலறக் கடந்து
பெருநில வெறித்த புகர்முகத் துளைக்கைப்
பொழிமதக் கறையடி யழிதரக் கடந்து
களவுத் தொழில்செ யரிமக னுடலந்
திருநுத னோக்கத் தெரிபெறக் கடந்து
மாறுகொண் டறையு மதிநூற் கடல்கிளர்
சமயக் கணக்கர் தந்திறங் கடந்து
புலனொடு தியங்கும் பொய்யுளங் கடந்த
மலருட னிறைந்து வான்வழி கடக்கும்
பொழினிறை கூடற் புதுமதிச் சடையோன்
மன்னிலை கடவா மனத்தவர் போல
வொன்னல ரிடுந்திறைச் செலினுந்
தன்னிலை கடவா தவன்பரித் தேரே.

பெண்ணெனப்பெயரிய - அவன்பரித்தேரே. பகுதி - மணஞ் சிறப்புரைத்தல். துறை - வாழ்க்கைநலங் கூறல்.

'பெண்ணென' என்பதுமுதல் 'பெருந்தவம்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) பெண் என-பெண்ணென்று, பெயரிய-பெயருள்ள, பெருமகள் குலனுள் - நல்ல மகளிர் கூட்டத்துள், உணு-உணவை, நிலன் உண்டு - நிலத்தை மெழுகி அதிலுண்டு, பராய - (மகட்பேறு கருதி) நோற்ற, அப்பெருந்தவம் - அம்மாதவமானது.

(வி-ரை.) மகட்பேறு - மகளைப்பெறுதல்.

'கண்ணுற' என்பதுமுதல் 'குடிமுதலன்னை' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) கண்ணுற - கண்கூடாகக் காணுமாறு, உருப்பெறும் - ஓர்வடிவெடுத்துவந்த, காட்சியது என்ன - காட்சிபோல, கரு உயிர்த்து எடுத்த - கருப்பங்கொண்டு பெற்றெடுத்த, குடி முதல் அன்னை - நங்குடிக்கு முதல்வியாகிய அன்னையே.

(வி-ரை.) கண்கூடு - பிரத்தியக்ஷம். காட்டியது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி. முதல்வி - தலைவி.

நின்னையுங் கடந்த தன்னவ ளருங்கற்பு.
(5—வது வரி)

(ப-ரை.) அன்னவள் - அம்மகளது, அருங்கற்பு-பெறுதற்கரிய கற்பு, நின்னையும் கடந்தது - நினது கற்பினு மேற்பட்டது.

(வி-ரை.) கடத்தல் - ஈண்டு மேற்படலென்னும் பொருளில் வந்தது.

'அரிகடல்' என்பதுமுதல் 'நலனவள்பொறையே'
என்பதுவரை.
(6—7 வரிகள்.)

(வி-ரை.) நலன் அவள் பொறை - அந்நல்லாளது பொறுமை, கடல் மூழ்கி - கடலின் மூழ்கி, அரி - திருமாலிடத்தே, பெறும் அருள் பெற்ற - பெறத்தக்க அருளைப்பெற்ற, நிலமகள் - நிலமகள் பொறுமையினும், கடந்தது - மேற்பட்டது.

(வி-ரை.) கடல்சூழ்ந்த என்பதை, கடன்மூழ்கி யென்றது இலக்கணை. நிலமகள் - ஆகுபெயர்.

'இருவினைநாடி' என்பதுமுதல் 'வாய்மையின்மதனே' என்பதுவரை.

(8—9 வரிகள்)

(ப-ரை.) வாய்மையின் மதன் - அவளது சத்திய நிலைமையானது, இருவினை நாடி-இருவினை காரணமாக, உயிர்தொறும் அமைத்த - எல்லாவுயிரிடத்துமமைத்த, ஊழையும் கடந்தது - ஊழ்முறைமையினும் மேற்பட்டது.

'கற்பகம்' என்பதுமுதல் 'அன்னவளில்லம்' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) அன்னவள் இல்லம் - அவளது மனைச்செல்வமானது, கற்பகம் போலும் - கற்பகத்தருப்போலும், அற்புதம் பழுத்த-அதிசயமிருந்த, நின் இல்லம் கடந்தது - உனது மனைச்செல்வத்தினு மேற்பட்டது.

(வி-ரை.) இல்லம் - ஆகுபெயர்.

'பேராவாய்மை' என்பதுமுதல் 'வெண்குடையே' என்பதுவரை.

(12—13 வரிகள்.)

(ப-ரை.) அவள் - அவள், ஊரன் - தலைவனது, கொற்றம் - வெற்றியாலாகிய, வெண்குடை - அரசியல், பேரா வாய்மை - தவறுபடாத வாய்மையுள்ள, நின் ஊரனை - உனது தலைவனரசியலினும், கடந்தது - மேற்பட்டது.

(வி-ரை.) வெண்குடை-ஆகுபெயர். ஊரனை-ஆகுபெயர் (உருபு மயக்கம்). மற்று-அசை.

'எழுனைப்புரவி' என்பதுமுதல் 'கிளையினரே' என்பதுவரை.

(14—17 வரிகள்.)

(ப-ரை.) அவள் . அவளை, பார்த்த - ஆதரவாக நோக்கியுள்ள, மதி - மதிப்புள்ள, கிளையினர் - உறவினர், உளை - பிடரிமயிரினையுடைய, எழு புரவியோடு - எழுபுரவித்தேரோடு, எழும் - தோன்றுகின்ற, கதிர் நோக்கிய - சூரியனைப் பார்த்திருந்த, சிறு இலை - சிறிய இலை நெருங்கிய, நெரிஞ்சில் பொன் பூ என்ன - நெரிஞ்சிற்செடியின் பொன்மையுள்ள மலர்போல, நின் முகம் - நின்முகநோக்கிய:

கிளையினர் தம்மையும் - உறவினரைப்பார்க்கினும், கடந்தனர் - அதிகரித்தனர்.

(வி-ரை.) மற்று - அசை. பொன்மை - பொன்னிறம்.

‘உடனிழன்மான’ என்பதுமுதல் ‘இனியோள்’ என்பதுவரை.
(18—19 வரிகள்.)

(ப-ரை.) அன்னவட்கு - அத்தலைவிக்கு, இனியோள் - அன்புள்ள பார்க்கியானவள், உடல் நிழல்மான - உன்னுடலி னிழலைப் போல, உனது அருள் நிற்கும் - உனதருள்வயத்தே நிலைபெற்ற, என்னையும் - என்னினும், கடந்தனள் - உயர்ந்தனள்.

(வி-ரை.) மானுதல் - போலுதல்.

‘புலனொடுதியங்கும்’ என்பதுமுதல் ‘சடையோன்’ என்பதுவரை.
(27—29 வரிகள்.)

(ப-ரை.) மலருடன் நிறைந்து-மலர்களுட னிறைந்து,வான்வழி கடக்கும் - ஆகாயவீதியை யூடுருவிச் செல்லுகின்ற,பொழில் நிறை-சோலைகளா னிறைந்த, கூடல் - மதுரையினிடத்து, புலனொடு தியங்கும் - புலனொடுகூடி மயங்குகின்ற, பொய் உளம் கடந்த - உண்மைப்பொரு ளறிதலில்லா உள்ளத்துக்கெட்டாத, புதும்தி-இளமதியைத்தரித்த, சடையோன் - வேணியனாகிய கடவுளது.

(வி-ரை.) புலன் - ஐம்புலன்கள். புதுமதிச் சடையோன் - சிவபெருமான்.

‘கோலை’ என்பதுமுதல் ‘கறையடி’ என்பதுவரை.
(20—22 வரிகள்.)

(ப-ரை.) கொலை - கொலைத்தொழில்கண்ட, மதில் மூன்றும் - முப்புரத்தையும், இகல் அற கடந்து - பகையறவென்று, பெரு நில எறித்த - மிகுந்த சந்திரிகையைவீசிய தந்தங்களுள்ள, புகர் முகம் - புள்ளியுள்ள முகத்தினிடத்து, துளை கை - துளையாகிய துதிக்கையையும், மதம் பொழி - மதமழையையுமுடைய, கறையடி - யானையானது.

(வி-ரை.) முப்புரம் மதிலுருவா யிருத்தலின் அவற்றை‘மதில்’ என்றே கூறினர். இவை இரும்பு பொன் வெள்ளி யென்பவற்று

ணியன்றுள்ளன;"இரும்புறு மாமதில்பொன்னிஞ்சி வெள்ளிப்புரிசை யன்றோர், துரும்புறச் செற்ற கொற்றத் தெம்பிரான் றில்லைச்சூழ் பொழிற்கே" என்பது திருக்கோவையார். நில - ஆகுபெயர்.

'அழிதரக்கடந்து' என்பதுமுதல் 'எரிபெறக்கடந்து' என்பதுவரை.

(22—24 வரிகள்.)

(ப-ரை.) அழிதர கடந்து - அழியும்படிவென்று, களவு தொழில் செய் - களவாகிய போர்த்தொழில் புரிந்த, அரிமகன் உடலம் - மன்மதனுடலானது, திரு நுதல் நோக்கத்து - அழகிய நெற்றிக் கண்ணினால், எரிபெற கடந்து - நெருப்பிற் பொடியும்படிவென்று.

(வி-ரை.) அழிதர-ஒருசொல், பகுதி அழிதா. அரிமகன்-விட்டுணுவின்மகன்.

'மாறுகொண்டு' என்பதுமுதல் 'கடந்து' என்பதுவரை.

(25—26 வரிகள்.)

மன்னிலை கடவா மனத்தவர் போல.

(30—வது வரி.)

(ப-ரை.) மாறுகொண்டு - ஒன்றுக்கொன்றொவ்வாமல், அறையும் - தருக்கஞ் செய்கின்ற, மதி நூல்கடல் கிளர் - புத்தியானது பன்னூற்பொருளை யாராய்தலி னூக்கமிக்க, சமயக்கணக்கர்தம்-சமயவாதிகளது, திறம் கடந்து - விகற்பங்களுக் கப்பாலாய், மன் - நிலைபெற்ற, நிலை கடவா - அருணிலையிற் பிறழாத, மனத்தவர்போல - மனமுள்ள அன்பர்போல.

(வி-ரை.) மதிநூல் - அறிவுநூல்.

'ஒன்னலர்' என்பதுமுதல் 'பரித்தேரே' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப ரை.) ஒன்னலர் - பகைவரால், இடு - செலுத்தப்படுகின்ற, திறை - திறைப்பொருட்டு, செலினும் - அரசன் சென்றாலும், அவன் - அத்தலைவனது, பரித்தேர் - குதிரைபூண்ட தேரானது, தன் நிலை கடவாது - தன்னிடம்விட்டுத் தங்குதலில்லை.

(வி-ரை.) ஒன்னலர் - சேராதவர் (பகைவர்). திறை, - இறைப்பொருள்.

கருவுயிர்த்தெடுத்த அன்னை, அன்னவள் கற்பு நின்னையுங் கடந்தது, அவள் பொறை நிலமகட் கடந்தது, வாய்மையின் மதன் ஊழையுங் கடந்தது, அன்னவ ளில்லம் நின்னில்லங் கடந்தது, மற்றவ ளூரன் கொற்ற வெண்குடை நின்னூரனைக் கடந்தது, மதிக்கிளையினர் தம்மையும் கடந்தனர், பொன்னவட் கினியோள் என்னையுங் கடந்தனள், புதுமதிச் சடையோன் மன்னிலை கடவா மனத்தவர் போல ஒன்னல ரிடுந்திறை செலினும் அவன் பரித்தேர் தன்னிலை கடவாதென வினைமுடிவு செய்க. (௬௫)

திருக்கோவையார் ௩௫௪-ம் செய்யுள்.

பள்ளியிடத்தூடல்.

பள்ளியிடத்தூடலென்பது—வாயின் மறுத்த தலைமகள், ஆற்றாமையே வாயிலாகப்புக்குப் பள்ளியிடத்தானாகிய தலைமகனோடு, நின்னை யிடைவிடாது நுகர்தற்கு, முற்காலத்துத் தவத்தைச் செய்யாத தீவினையேனை நோவாது, இன்றிவ்வாறாகிய நின்னை நோவதென்னோ அதுகிடக்க, நின்காதலிமார் புறமேகற்று நினக்குப் புதிதாகச்செய்த அப்புல்லுதலை யாஞ்செய்யமாட்டோம், அதனாலெம்மைத் தொடாதே, எங்கலையை விடுவாயாகவெனக் கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

தவஞ்செய் திலாதவெந் தீவினை யேம்புன்மைத் தன்மைக்கெள்ளா
தெவஞ்செய்து நின்றினி யின்றுனை நோவதெ னத்தன்முத்தன்
சிவன்செய்த சீரரு ளார்தில்லை யூரநின் சேயிழையார்
நவஞ்செய்த புல்லங்கண் மாட்டேந்தொ டல்விடு நற்கலையே.

பீடிவர் கற்பிற் றேடிவர் கோதை
ஆடவன் றன்னோடு யுரைத்தது.

(ப-ரை.) அத்தன்-(உலகத்துள்ளா ரெல்லாருக்கும்) தந்தை, முத்தன் - (இயல்பாகவே) பாசங்களி னீங்கியவன், சிவன் - (எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற்) சிவன், செய்த - அவனாற் செய்யப்பட்ட, சீர் அருள் ஆர்-சீரிய அருள்நிறைந்த, தில்லை ஊர-தில்லையிலூரனே, தவம் செய்திலாத - முற்காலத்துத் தவத்தைச் செய்யாத, வெம் தீவினையேம் - வெய்ய தீவினையையுடைய யாம், புன்மை தன்மைக்கு - (நின்னா லாதரிக்கப்படாத எமது) புன்மைத்தன்மை காரணமாக; எள்ளாது-எம்மையேயிகழாது, எவ்வம் செய்து நின்று - நினக்குத் துன்பத்தைச் செய்யாநின்று, இன்று-இப்பொழுது, இனி

உன்னை நோவது என் - இனி உன்னை நோதலென்னும், (அது கிடக்க) நின் சேயிழையார் - நின்னுடைய சேயிழையார், நவம் செய்தனிக்குப் புதிதாகச் செய்த, புல்லங்கள்-புல்லுதல்களை, மாட்டேம் - யாமாட்டேம், (அதனால் எமது) நல் கலை - நல்ல மேகலையை, தொடல் - தொடாதொழி, விடு - விடுவாயாக, எ-று.

(வி-ரை.) முத்தன்-முக்தன் என்னும் வடசொற்றிரிபு; முக்தம்-விடுதல். தீவினை-துஷ்கர்மம், எள்ளல் - இகழ்தல். எவ்வம்-துன்பம், அது எவம் என விகாரமாயிற்று. நின்சேயிழையார் என்றது பரத்தையரை. நவம் - புதுமை.

நேரிசையாசிரியப்பா.

நீரர மகளிர் நெருங்குறப் புகுந்து
கண்முகங் காட்டிய காட்சிய தென்னப்
பெருங்குலை மணந்த நிறைநீர்ச் சிறைப்புனன்
மணிநிறப் படாமுது கிடையறப் பூத்துச்
சுரும்பொடு கிடந்த சொரியிதழ்த் தாமரை
கண்ணினுங் கொள்ளா துண்ணவும் பெறாது
நிழறலை மணந்த புனல்கிட வாது
விண்ணுடைத் துண்ணும் வினைச்சூர் கவர்ந்த
வானவர் மங்கையர் மயக்கம் போலப்
பிணர்க்கரு மருப்பிற் பிதிர்பட வுழக்கி
வெண்கார்க் கழனிக் குருகெழப் புகுந்து
கடுக்கைச் சிறுகா யமைத்தவாற் கருப்பை
யிணையெயி றென்ன விடையிடை முட்பயில்
குறும்புதன் முண்டகங் கரும்பெனத் துய்த்துச்
செங்கட் பகடு தங்குவய லூரர்க்
கருமறை விதியு முலகியல் வழக்குங்
கருத்துறை பொருளும் விதிப்பட நினைந்து
வடசொன் மயக்கமும் வருவன புணர்த்தி
யைந்திணை வழுவா தகப்பொரு ளமுதினைக்
குறுமுனி தேறவும் பெறுமுதற் புலவர்க
ளேழெழு பெயருங் கோதறப் பருகவும்
புலனெறி வழக்கிற் புணருல கவர்க்கு

முற்றவம் பெருக்கு முதற்று பதர்க்கு
நின்றறிந் துணர்த்தவுந் தமிழ்ப்பெயர் நிறுத்தவு
மெடுத்துப் பரப்பிய விமையவர் நாயகன்
மெய்த்தவக் கூடல் விளைபொருண் மங்கையர்
முகத்தினுங் கண்ணினு முண்டக முலையினுஞ்
சொல்லினுந் தொடக்கும் புல்லம் போல
வெம்மிடத் திலதா லென்னை
தம்முளந் தவறிப் போந்த திவ் விடனே.

நீரரமகளிர் - போந்த திவ்விடனே. பகுதி - பரத்தையிற்பிரிவு. துறை - பள்ளியிடத்தூடல்.

'நீரரமகளிர்' என்பதுமுதல் 'காட்சியதென்ன' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) நீர் அர மகளிர் - நீரில்வாழும் அரமகளிர், நெருங்குற புகுந்து - நெருங்கப்புகுந்து, கண் முகம் காட்டிய - கண்களு முகங் களுங் காட்டுகின்ற, காட்சியது என்ன - தோற்றத்தைப்போல.

(வி-ரை.) அரமகளிர் - தெய்வப்பெண்கள். நெருங்குற - ஒரு சொல்.

'பெருங்குலைமணந்த' என்பதுமுதல் 'சோரியிதழ்த்தாமரை' என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) பெருங்குலை மணந்த - பெரியகரை செறிந்த, நிறை - நிறைவுள்ள, நீர் சிறைப்புனல்-நீர்த்தடாகத்தின், மணிநிறப்படாம் - மணிநிறமாகியபடாம் போர்த்த, முதுகு - முதுகில், இடையற பூத்து - வெற்றிடையின்றி மலர்ந்து, சுரும்பொடு கிடந்த - வண்டுகள் சூழவிருந்த, சோரி இதழ் தாமரை - தேன்சொரியுமகவிதழ்த் தாமரைப்பூவை.

(வி-ரை.) குலை - செய்கரை. படாம் - ஆடை. வெற்றிடை - வெற்றிடம். சுரும்பு - வண்டு. அகவிதழ் - உள்ளிதழ். தாமரை - ஆகுபெயர்.

'கண்ணினுங்கொள்ளாது' என்பதுமுதல் 'புனல்கிடவாது' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) கண்ணினும் கொள்ளாது - கண்ணாலு நோக்காமல், உண்ணவும் பெறாது - உண்ணவும் விருப்பம் பெறாமல், நிழல்தலை மணந்த - குளிர்ச்சியைத் தன்னிடத்தேகொண்ட, புனல் கிடவாது - நீரிலும் படுத்திராமல்.

(வி-ரை.) கண்ணினும் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது. தலை - ஏழனுருபு, இடப்பொருட்டு. கிடத்தல் - படுத்திருத்தல்.

'விண்ணுடைத்துண்ணும்' என்பதுமுதல் 'மயக்கம்போல' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) விண் உடைத்து உண்ணும் - விண்ணுலகத்தை யழித்துக்கவர்ந்த, வினை - (தீத்) தொழிலையுடைய, சூர் - சூரபன்மனாலே, கவர்ந்த - சிறைகோட்பட்ட, வானவர் மங்கையர்-தேவமங்கையர்களது, மயக்கம்போல - தடுமாற்றம்போல.

(வி-ரை.) விண் - ஆகுபெயர். உடைத்தல் - அழித்தல். வினை - உண்டைக்கேற்பத் தீவினைக்காயிற்று.

'பிணர்' என்பதுமுதல் 'துய்த்து' என்பதுவரை.

(10—14 வரிகள்.)

(ப-ரை.) பிணர் - பொருக்காகிய, கரு மருப்பின்-கருங்கொம்புகளால், பிதிர்பட - சேறுகும்படி, உழக்கி - நீரைக்கலக்கி, வெண்கார் - வெண்மையான கார்நெற்பயிருள்ள, கழனி-கழனிகளிடத்தே, குருகு எழ - பறவைகள் சிறையடித்தெழுமாறு, புகுந்து - பாய்ந்து, கடுக்கை சிறுகாயமைத்த - கொன்றையினது சிறிய காய்போன்ற, வால் - வாலையுடைய, கருப்பை - காரெலியின், இணை எயிறு என்ன - தம்மிலொத்த பற்கள்போல, இடையிடை - நடுவே நடுவே, முள் பயில் - முள்ளுகள் பொருந்திய, குறு புதல்-குறிய புதலாகிய, முண்டகம் - நீர்முள்ளிச்செடியை, கரும்பு என - கரும்பை யுண்ணுதல் போல, துய்த்து - தின்று.

(வி-ரை.) மருப்பு - கொம்பு. உழக்கல் - கலக்கல். அமைத்தல் - நீகர்த்தல்.

'சேங்கட்பகடு' என்பதுமுதல் 'விதிப்படநினைந்து' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) செங்கண் பகடு - செங்கணெருமை, தூங்கும் - மேய்கின்ற, வயலூரர்க்கு-மருதநாட்டுத் தலைவர்க்கு, அரு மறை விதியும் - எழுதற்கரிய வேத நிபந்தனைகளும், உலகியல் வழக்கும்-உலகவழக்கமும், கருத்து உறை பொருளும் - கருத்திலுள்ள பொருளும், விதிப்பட நினைந்து - முறைப்படத் திருவுளங்கொண்டு.

(வி-ரை.) வேத நிபந்தனை - வைதிகாசாரம். உலகவழக்கு - லௌகிகாசாரம்.

'வடசோன்மயக்கமும்' என்பதுமுதல் 'அமுதினை' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) வடசொல் மயக்கமும் - வடமொழிப் புணர்ச்சியும், வருவன புணர்த்தி - வருவனவற்றைச் சேர்த்து, ஐந்திணை வழுவாது - ஐவகைத்திணைமுறைமையும் வழுவாமே, அகப்பொருள் அமுதினை - அன்பினைந்திணையென முதலெடுத்த அமிர்தத்தை.

(வி-ரை.) அன்பினைந்திணையென முதலெடுத்த அமிர்தம் என்றது இறையனாரகப்பொருளை.

'குறுமுனி' என்பதுமுதல் 'மேய்த்தவக்கூடல்' என்பதுவரை.

(20—26 வரிகள்.)

(ப-ரை.) குறுமுனி தேறவும் - அகத்தியமுனிவன் றெளியவும், முதல் பெறு - தலைமைபெற்ற, புலவர்கள் எழ் எழு பெயரும்-சங்கப்புலவர்களாகிய நாற்பத்தொன்பதின்மரும், கோது அற - ஐயந்திரிபின்றி, பருகவும் - உண்ணவும், புலன்நெறி - ஐம்புல நெறியின்கண், வழக்கில் - இயக்கத்தில், புணர் - கலவாநின்ற, உலகவர்க்கும் - உலகவியலினர்க்கும், முன் தவம் பெருக்கும் - இளமை தொட்டுத் தவத்தை வளர்க்காநின்ற, முதல் தாபதர்க்கு-ஐந்தவித்த முனிவரர்க்கும், நின்று அறிந்து-தாந்தா நிலைபெற்றுணர, உணர்த்தவும் - அறிவுறுத்தவும், தமிழ் பெயர் நிறுத்தவும் - தமிழென்னும்

பெயரை நிலைபெறுத்தவும், எடுத்து பரப்பிய - திருவாக்கெடுத்து விரித்த, இமையவர் நாயகன் - தேவர்பெருமானது, மெய்த்தவம் - தவத்தான் மெய்மையுள்ள, கூடல் - மதுரையினிடத்து.

(வி-ரை.) அங்குஷ்டப்ரமாண வுருவினராதலால் அகத்திய முனிவரைக் 'குறுமுனி' என்றார். கோது - குற்றம், அது ஈண்டு ஐயந்திரிபுகளுக்காயிற்று. பருகல் - உண்டல். தாபதர் - தவஞ்செய்வோர். இமையவர் - மங்கல வழக்கு.

'விளைபொருள்' என்பதுமுதல் 'புல்லம்போல' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) விளைபொருள் - பொருளைச் சம்பாதிக்கின்ற, மங்கையர் - பரத்தையர்கள், முகத்தினும் - முகத்தினாலும், கண்ணினும் - கண்களினாலும், முண்டகம் - தாமரையரும்பையொத்த, முலையினும் - முலைகளாலும், சொல்லினும் - சொற்களாலும், தொடக்கும் - வயப்படுத்தும், புல்லம்போல - அபிநயம்போல.

(வி-ரை.) விளைத்தல் - சம்பாதித்தல். முண்டகம் - ஆகுபெயர். பொருளீட்டற்குரிய பருவங்குறிப்பாராய், பரத்தையரை 'மங்கையர்' என்றார். முகத்தினும் கண்ணினும்என்பவற்றில் இன்னுருபுகள் மூன்றனுவதன் பொருள.

'எம்மிடத்து' என்பதுமுதல் 'இவ்விடனே' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) எம்மிடத்து - எம்போலியாளிடத்து, இலது - இல்லையாக, இவ்விடன் - இந்தவிடத்தில், தம்முளம் - நமதுள்ளம், தவறி - இடந்தெரியாமல், போந்தது - வந்தவாறு, என்னை - யாதோவறியேன்,

(வி-ரை.) தவறல் - தடுமாறல். போதந்தது போந்தது என விகாரமாயிற்று.

ஊரர்க்கு, விதியும் வழக்கும் பொருளும் நினைந்து புணர்த்தி, அகப்பொருளமுதைத் தேறவும் பருகவும் உலகவர்க்குந் தாபதர்க்கும் உணர்த்தவும் நிறுத்தவும் பரப்பிய நாயகன் கூடலில், பொருண் மங்கையர் புல்லம்போல எம்மிடத்திலது, அற்றாகவும் இவ்விடத்தே யுள்ளந்தவறித் தாம்போந்த தென்னையென வினைமுடிவுசெய்க. ()

திருக்கோவையார் உ௪௬-ம் செய்யுள்.

வழிப்படுத்துரைத்தல்.

வழிப்படுத்துரைத்தலென்பது — ஒம்படுத்துரைத்த தோழி, ஆயமு மன்னையும் பின்வாராமல் இவ்விடத்தே நிறுத்தி, இவ்வூரிடத்துள்ள அலரையுமொருவாற்றானீக்கி, யானும் வந்து நுங்களைக்காண்பேனாக, நீ யிருந்திருவொடு சென்று நும்பதியிடைச்சேர்வீராமினென இருவரையும் வழிப்படுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

ஈண்டொல்லை யாயமு மௌவையு நீக்கவிவ் வூர்க்கவ்வைதீர்த்
தாண்டொல்லை கண்டிடக் கூடுக நும்மையெம் மைப்பிடித்தின்
றாண்டெல்லை தீரின்பந் தந்தவன் சிற்றம் பலநிலவு
சேண்டில்லை மாநகர் வாய்ச்சென்று சேர்க திருத்தகவே.

மதிநுதலியை வழிபடுத்துப்
பதிவயிற்பெயரும் பாங்கிபகர்ந்தது.

(ப-ரை.) எம்மை பிடித்து - எம்மைவலிந்துபிடித்து, இன்று ஆண்டு - இன்றாண்டு, எல்லை தீர் - எல்லை நீங்கிய, இன்பம் தந்தவன் - இன்பத்தைத் தந்தவனது, சிற்றம்பலம் நிலவு - சிற்றம்பலம் நிலைபெற்ற, சேண் தில்லை - சேய்த்தாகிய தில்லையென்கிற, மா நகர் வாய் - பெரியநகரிடத்து, திருத்தக சென்று - (நீர்) பொலிவுதகச் சென்று, சேர்க - சேர்வீராயின், ஆயமும் ஔவையும் ஈண்டு நீங்க - மகளிர் கூட்டமும் அன்னையும் பின்வராது இவ்விடத்தே நீங்க, இவ்வூர் கவ்வை ஒல்லை தீர்த்து - இவ்வூரின்கணுண்டாகிய அலரை (ஒருவாற்றான்) விரையநீக்கி, ஆண்டு நும்மை ஒல்லை கண்டிடக் கூடுக - யான் ஆண்டுவந்து நும்மை விரையக்காணக் கூடுவதாக, எ-று.

(வி-ரை.) எல்லைதீரின்பம் - பேரின்பம் (அபாராநந்தம்).

நேரிசையாசிரியப்பா.

செங்கோற் றிருவுடன் றெளிந்தறம் பெருக்கிய
மறுபுல வேந்த னுறுபடை யெதிர்ந்த
கொடுங்கோற் கொற்றவ னெடும்படை யனைத்துஞ்
சேர வறந்த திருத்தகு நாளி
லவன்பழி நாட்டு நடுங்குநற் குடிகள்
கண்ணொடு கண்ணிற் கழறிய போல
வொருவரி னொருவ ருள்ளத் தடக்கித்

தோன்று, நகையுடன் றுண்டமுஞ் சுட்டி
யம்ப றாற்று மிவ்வூ ரடக்கித்
கடல்கிடந் தன்ன நிரைநிரை யாய
வெள்ளமு மற்றையர் கள்ளமுங் கடந்து
தாயவர் மயங்குந் தனித்துயர் நிறுத்திப்
பறவை மக்களைப் பரியுநர்க் கொடுத்துக்
கிடைப்பல்வல் யானே நும்மைத் தழைத்தெழு
தாளியுங் கொன்றையுந் தழைந்தலின் முல்லையும்
பாந்தளுந் தரக்கும் பயிறலிற் குறிஞ்சியு
முடைத்தலை யெரிபொடி யுடைமையிற் பாலையு
மாமையுஞ் சலமு மேவலின் மருதமுங்
கடுவுஞ் சங்கமு மொளிர்தலி னெய்தலு
பாகத் தனது பேருண் மேனியிற்
றிணையைந் தமைத்த விணையிலி நாயகன்
வருந்தொழி லனைத்தும் வளர்பெரும் பகலே
யெரிவிரிந் தன்ன விதழ்ப்பஃ றாமரை
யருண்முகத் திருவொடு மலர்முகங் குவிய
மரகதப் பாசடை யிடையிடை நாப்ப
ணீலமு மணியு நிரைகிடந் தென்ன
வண்டொடு குமுத மலர்ந்திதழ் விரிப்பக்
குருகுஞ் சேவலும் பார்ப்புடன் வெருவிப்
பாசடைக் குடம்பை யூடுகண் படுப்பத்
துணையுடன் சகோரங் களியுடன் பெயர்ந்து
விடுமமு தருந்த விண்ணத் தணக்கச்
சுரிவளைச் சாத்து நிறைமதி தவழு
மெறிதிரைப் பழனக் கூடற்
செறிகவின் றம்ம திருவொடும் பொலிந்தே.

செங்கோற்றிருவுடன் - திருவொடும்பொலிந்தே. பகுதி-உடன் போக்கு. துறை - வழிப்படுத்துரைத்தல்.

'செங்கோல்' என்பதுமுதல் 'கோற்றவன்' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) செங்கோல் - செங்கோலாகிய, திருவுடன் - திரு மகளுடனே, தெளிந்து - மநுநூலாராய்ந்து, அறம் பெருக்கிய-அர சி

யற்றருமத்தை விருத்திசெய்த, மறுபுல வேந்தன் - வேற்றுப்புலத்தரசனது, உறுபடை-பெருஞ்சேனையால், எதிர்ந்த-எதிர்க்கப்பட்ட, கொடுங்கோல் கொற்றவன் - கொடுங்கோலரசனது.

(வி-ரை.) கொடுங்கோல்-கோடுங்கோல் என்பதன் விகாரம்.

'நெடும்படை' என்பதுமுதல் 'குடிகள்' என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) நெடும்படை அனைத்தும்-அளவிறந்த சேனைமுற்றும், சேர வறந்த-ஒருசேர மாய்ந்திட்ட, திருத்தகு நாளில் - நன்மை பயக்குநாளையில், அவன் - அக்கொடுங்கோன் மன்னனது, பழி நாட்டு-பழிபட்ட நாட்டிலுள்ள, நடுங்கும் நல் குடிகள் - அவனது கொடுமையால் நடுங்கின நல்லகுடிகள்.

(வி-ரை.) வறத்தல் - மாய்தல்.

'கண்ணொடு' என்பதுமுதல் 'அடக்கி' என்பதுவரை.

(6—9 வரிகள்.)

(ப-ரை.) கண்ணொடு கண்ணில் - பிறர் கண்களோடு தமது கண்களால், கழறியபோல - பேசிக்கொண்டதுபோல, ஒருவரின் ஒருவர் - ஒருவரோடொருவர் சொல்லி,உள்ளத்து - தத்தமுள்ளத்தினிடத்தே, அடக்கி - வெளிவிடாதடக்கி, தோன்றா நகையுடன் - வெளிப்படாத சிரிப்புடன், துண்டமும் சுட்டி - மூக்கின்மேல் விரலிட்டுக் குறித்து, இவ்வூர் தூற்றும் - இவ்வூரார் புறங்கூறுகின்ற, அம்பல் அடக்கி - அலர்தூற்றலை யடக்கி.

(வி-ரை.) துண்டம் - மூக்கு.

'கடல்கிடந்தன்ன' என்பதுமுதல் 'கடந்து' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) கடல் கிடந்தன்ன - கடலிருந்தாலொத்த, நிரைநிரை-பெருங்கூட்டமாகிய, ஆய வெள்ளமும் - மகளிர் கூட்டத்தையும், மற்றையர் - பிறசுற்றத்தாரது, கள்ளமும்-களவடத்தையும், கடந்து-நீங்கி.

(வி-ரை.) கிடந்தாலன்னவென்பது கிடந்தன்னவென விகாரமாயிற்று.

'தாயவர்', என்பதுமுதல் 'நும்மை' என்பதுவரை.
(12—14 வரிகள்.)

(ப-ரை.) தாயவர் - நமது தாய்மார், மயங்கும் - (நின்னைக்குறித்து) மயங்கும், தனித்துயர் நிறுத்தி - பெருந்துன்பத்தை ஆற்றி, பறவை மக்களை - கிள்ளைமுதலிய பறவைப் பார்ப்புக்களை, பரியுநர் - நம்போற் பரிவுள்ளவரிடத்து, கொடுத்து - வளர்க்கும்படி சேர்ப்பித்து, வல் - விரைவில், நும்மை - நுங்களிடத்தே, யானே கிடைப்பல் - யானே வந்து சேருவேனாக.

(வி-ரை.) நிறுத்தல்- தணித்தல். பார்ப்புக்கள் - குஞ்சுகள். பரிதல் - அன்புசெய்தல். கிடைத்தல் - சேர்தல்.

'தழைத்தெழு' என்பதுமுதல் 'குறிஞ்சியும்' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) தழைத்து எழு - தளிர்த்தெழுந்த, தாளியும் - தாளிமலரும், கொன்றையும்-கொன்றைமலரும், தழைத்தலின் - தழைத்திருத்தலால், முல்லையும் - முல்லைநிலமும், பாந்தளும் - பாம்பும், தரக்கும் - புலியும், பயிறலில் - கூடியிருத்தலினால், குறிஞ்சியும் - குறிஞ்சிநிலமும்.

(வி-ரை.) தாளி கொன்றை யென்பன ஆகுபெயர்கள். தரக்கு-தரக்ஷு என்னும் வடசொற்றிரிபு.

'முடைத்தலை' என்பதுமுதல் 'மருதமும்' என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(ப-ரை.) முடை தலை - தீநாற்றம் வீசுமிடமாய், எரி - நெருப்பும், பொடி - சாம்பரும், உடைமையின்-உண்டாயிருத்தலால்; பாலையும் - பாலைநிலமும், ஆமையும் - ஆமையும், சலமும் - நீரும், மேவலின் - பொருந்தியிருத்தலால், மருதமும் - மருதநிலமும்.

(வி-ரை.) எரி - ஆகுபெயர்.

'கடுவும்' என்பதுமுதல் 'அமைத்த' என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(ப-ரை.) கடுவும் - விடமும், சங்கமும் - சங்கங்களும், ஒளிர்தலின் - விளங்குதலால், நெய்தலும் - நெய்தனிலமும், ஆக - ஆக, தனது பேரருள் மேனியில் - தன்னுடைய பேரருளாகிய திருமேனியில், திணை ஐந்து அமைத்த - ஐந்திணைகளையுமேற்ற.

(வி-ரை.) கடு - ஆகுபெயர். திணையைந்தாவன: குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், னெய்தல் பன.

'இணையிலி' என்பதுமுதல் 'முகங்குவிய' என்பதுவரை.
(21—24 வரிகள்.)

(ப-ரை.) இணையிலி - ஒப்பில்லாதவனாகிய, நாயகன் - முதல்வனது, வரும் தொழில் அனைத்தும்-நடத்துந்தொழில்யாவும், வளர்-வளர்தற்கிடமாகிய, பெரும்பகலே - பெரிய மத்தியானத்திலே, எரிவிரிந்தன்ன - நெருப்பு விரிந்தாற்போல, இதழ் பல் தாமரை - இதழையுள்ள பலதாமரைமலர்கள், அருள்முகம் திருவொடு - முகத்திலருணிறைந்த திருமகளுடனே, மலர்முகம் குவிய - தமது முகமலர்ச்சி கூம்பவும்.

(வி-ரை.) தாமரை - ஆகுபெயர்.

'மரகதப்பாசடை' என்பதுமுதல் 'மலர்ந்திதழ்விரிப்ப' என்பதுவரை.
(25—27 வரிகள்.)

(ப-ரை.) மரகதப் பாசடை - மரகதமணிபோன்ற பச்சிலைகளின், இடையிடை நாப்பண் - நடுவே நடுவே, நீலமும் மணியும் - நீலமணியும் மாணிக்கமணியும், நிரைகிடந்து என்ன - அணிபெறக்கிடந்தாலொத்த, வண்டொடு குமுதம் - வண்டுடனே செவ்வல்லிமலர்கள், மலர்ந்து இதழ் விரிப்ப-முகைவிண்டிதழ்களை விரிப்பவும்.

(வி-ரை.) குமுதம் - ஆகுபெயர். முகை - மொட்டு.

'குருகுஞ்சேவலும்' என்பதுமுதல் 'கண்படுப்ப' என்பதுவரை.
(28—29 வரிகள்.)

(ப-ரை.) குருகும் சேவலும்-குருகுகளுஞ் சேவல்களும், பார்ப்புடன் - தத்தங்குஞ்சுகளுடனே, வெருவி - பொழுதுபோயிற்றென்றஞ்சி, பாசடை குடம்பையூடு - பச்சிலைகளாகிய கூடுகளிடத்தே, கண்படுப்ப - கண்ணுறங்கவும்.

(வி-ரை.) பார்ப்பு - குஞ்சு. வெருவல் - அஞ்சல். பாசு-பச்சை. அடை - இலை.

'துணையுடன்' என்பதுமுதல் 'அணக்க' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) சகோரம் - சகோரப்பறவைகள், துணையுடன் - தத்தம் பேடுகளுடனே, களியுடன் பெயர்ந்து - மகிழ்ச்சியாய்ப் பறந்து,

விடும் அமுது - உமிழாநின்ற கிரணாமிர்தத்தை, அருந்த - உண்ணும் படி, விண்ணத்து - ஆகாயத்தில், அணக்க - அண்ணாந்திடவும்.

(வி-ரை.) சகோரம் - நிலாமுகிப்புள். அண்ணாக்க என்பது அணக்கவென விகாரமாயிற்று.

'சுரிவளைசாத்து' என்பதுமுதல் 'திருவோடும்பொலிந்தே' என்பதுவரை.

(32—34 வரிகள்.)

(ப-ரை.) சுரி வளை சாத்து-முகஞ்சுரிந்தசங்கநிரையாகிய முத்த வரிசைகளினின்றும், நிறைமதி தவழும்-சந்திரிகை நிறைந்த நிலாத் தவழ்கின்ற, எறி திரை - அலையெறிகின்ற நிரையையுடைய,பழனக் கூடல் - வயல்சூழ்ந்த மதுரையினிடத்து, திருவொடும் பொலிந்து- நீவிர் சுகமாகச் செழித்து, செறிக இன்று-இந்நாளிற் சேர்ந்துவாழ்க.

(வி-ரை.) பழனம் - வயல். பொலிதல் - செழித்தல். செறிதல் - சேர்தல்.

ஒருவரினொருவ ருள்ளத்தடக்கி, ஊரடக்கி, வெள்ளமுங் கள்ளமுங் கடந்து, தனித்துயராற்றிக்கொடுத்து, யானே நும்பாற்கிடைப் பன், இணையிலிநாயகன் பழனக் கூடலில், திருவுடன் பொலிந் திந் நா ணீவிர் செறிகவென வினைமுடிவு செய்க. (கூரு)

திருக்கோவையார் களரு-ம் செய்யுள்.

கடலிடைவைத்துத் துயரறிவித்தல்.

கடலிடைவைத்துத் துயரறிவித்தலென்பது—தலைமகளிரவுறு துயரம், தலைமகன் சிறைப்புறமாக, இவள் வாட, நீ யிரையாநின்றாய், இது நினக்கு நன்றோவெனத் தோழி, கடலொடு புலந்து கூறாநிற் றல். அதற்குச் செய்யுள்:—

சோத்துன் னடியமென் றோரைக் குழுமித்தொல் வானவர்சூழ்ந்
தேத்தும் படிநிற்ப வன்றில்லை யன்னா ளிவடளவ
வார்த்துன் னமிழ்துந் திருவு மதியு மிழந்தவநீ
பேர்த்து மிரைப்பொழி யாய்பழி நோக்காய் பெருங்கடலே.

எறிகடன் மேல்வைத் திரவரு துயரம்
அறைகழ லவற் கறியவு ரைத்தது.

(ப-ரை.) பெருங்கடலே - பெருங்கடலே, ஆர்த்து - (முற்கா லத்து மிவ்வாறு) ஒலித்து, உன் அமிழ்தும் - உன்னமிர்தத்தை

யும், திருவும் - திருவையும், மதியும் - திங்களையும், இழந்து - இழந்துவைத்தும், பேர்த்தும் அவம் - பெயர்த்து மொருபய னின்றியே, சோத்தம் உன் அடியம்என்றோரை-சோத்தம் உன்னடியம் என்றொருகாற் சொன்னோரை,தொல் வானவர் குழூமி சூழ்ந்து-பழையராகிய வானவர் கூடிப் பரிவாரமாய்ச் சூழ்ந்துநின்று, எத்தும்படி - எத்தும் வண்ணம், நிற்பவன் - நிற்குமவனது, தில்லையன்னாள் - தில்லையன்னாளாகிய, இவள் துவள-இவள் வாட, நீ இரைப்பொழியாய்-நீ இரையாநின்றாய், பழிநோக்காய்-(காரணமின்றிப் பிறரை வருத்துதலான் வரும்) பழியையும் நோக்குகின்றிலை (நினக்கிது நன்றோ), எ-று.

(வி-ரை.) சோத்தம் - இழிந்தார் செய்யுமஞ்சலி, அது சோத்தெனக் கடைக்குறைந்து நின்றது. சோத்தயடிய மென்பதூஉம், அடியமெனிற் குழூமித்தொல்லை வானவரென்பதூஉம், குழீஇத் தொல்லை வானவர் சூழ்ந்தேத்தும்படி வைப்பவனென்பதூஉம் பாடம். திருவுமதியு மென்பது செல்வமு மறிவுமென வேறொரு பொருடோன்ற நின்றதென்பாருமுளர். இரா - குறுகிநின்றது.

நேரிசையாசிரியப்பா.

இருநிலந் தாங்கிய வலிகெழு நோன்மைப்
பொன்முடிச் சயிலக் கணவற் புணர்ந்து
திருவெனுங் குழவியு மமுதெனும் பிள்ளையு
மதியெனு மகவு மலருல கறியக்
கண்ணொடு முத்தங் கலுழ்ந்துடல் கலங்கி
வாய்விட் டலறி வயிறுநொந் தீன்ற
மனனெழு வருத்தம துடையை யாகலிற்
பெருமய லெய்தா நிறையின ளாக
வென்னொரு மயிலையு நின்மகட் கொண்டு
தோன்றிநின் றழியாத் துகளறு பெருந்தவ
நிதியெனக் கட்டிய குறுமுனிக் கருளுடன்
றரளமுஞ் சந்து மெரிகெழு மணியு
முடங்குளை யகழ்ந்த கொடுங்கரிக் கோடு
மகிலுங் கனகமு மருவிகொண் டிறங்கிப்
பொருநையங் கன்னிக் கணியணி பூட்டுஞ்
செம்புடற் பொதிந்த தெய்வப் பொதியமு
முவட்டா தமையா வுணர்வெனும் பசியெடுத்

துள்ளமுஞ் செவியு முருகிநின் றுண்ணும்
பெருந்தமி ழமுதும் பிரியாது கொடுத்த
தோடணி கடுக்கைக் கூடலெம் பெருமா
னெவ்வுயி ரிருந்து மவ்வுயி ரதற்குத்
தோன்று தடங்கிய தொன்மைத் தென்ன
வார்த்தெழு பெருங்குர லைமைந்துநின் றொடுங்கிநின்
பெருந்நீக் குணனு மொழிந்துளங் குளிரு
மிப்பெரு நன்றி யின்றெறற் குதவுதி
யெனிற்பதம் பணிகுவ லன்றே நன்கமர்
பவள வாயுங் கிளர்பச் சுடம்பு
நெடுங்கயல் விழியு நிறைமலை முலையு
மாசறப் படைத்து மணியுட னிறந்த
பெருமுகில் வயிறள வூட்டித்
திருவுல களிக்குங் கடன்மட மகளே.

இருநிலந்தாங்கிய கடன் மடமகளே. பகுதி - இரவுக்குறி. துறை - கடலிடைவைத்துத் துயரறிவித்தல்.

'நன்கமர்' என்பதுமுதல் 'மாசறப்படைத்து' என்பதுவரை.
(26—29 வரிகள்.)

(ப-ரை.) நன்கு அமர் - நன்மையாகப் பொருந்திய, பவளவாயும் - பவளமாகியவாயும், கிளர் - ஒளிமிகுந்த, பச்சுடம்பும் - மிக்க பசுமையாகிய மேனியும், நெடு கயல் விழியும் - நீண்ட கயலாகிய கண்ணும், நிறை மலை முலையும் - பெரிய மலைகளாகிய முலைகளும், மாசு அற படைத்து - குற்றமறப் படைத்து.

(வி-ரை.) கயல் - சேல்மீன், பெருங்கெண்டையுமாம்.

'மணியுடன்' என்பதுமுதல் 'மடமகளே' என்பதுவரை.
(29—31 வரிகள்.)

(ப-ரை.) மணியுடன்-மணிகளுடனே, நிறந்த - ஒண்ணிறத்தை யுடைய, பெரு முகில் - பெரிய முகிலை, வயிறு அளவு - வயிறுநிரம்ப, ஊட்டி - (நீராகியவமுதத்தை) ஊட்டி, திரு - வளப்பத்தை, உலகு அளிக்கும் - உலகத்துக்குக் கொடுக்கின்ற, கடல் மடமகளே - கடலாகிய மடந்தையே.

(வி-ரை.) முகில் - மேகம்.

'இருநிலந்தாங்கிய' என்பதுமுதல் 'புணர்ந்து' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) இரு நிலம் தாங்கிய - பெரிய பூமியைத் தாங்கிய, வலிகெழு - வன்மையுள்ள, நோன்மை - அசைவில்லாத, பொன்முடி - பொன்முடியையுடைய, சயிலக்கணவன் - மந்தரகிரியென்னுங் கணவனை, புணர்ந்து - கூடி.

(வி-ரை.) இருமை - பெருமை. முடி - சிகரம்.

'திருவெனுங்குழவியும்' என்பதுமுதல் 'மலருலகறிய' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) திருவெனும் குழவியும் - திருமகளாகிய பெண்ணையும், அமுது எனும் - அமுதமாகிய, பிள்ளையும் - பிள்ளையையும், மதி எனும் மகவும் - சந்திரனாகிய மகவையும், மலர் உலகு அறிய - பரந்தவுலகமறியும்படி.

(வி-ரை.) மகவு - குழந்தை.

'கண்ணுேடு' என்பதுமுதல் 'உடையையாகலின்' என்பதுவரை.

(5—7 வரிகள்.)

(ப-ரை.) கண்ணுேடு - கண்ணில், முத்தம் கலுழ்ந்து - முத்தங்கலுழ, உடல் கலங்கி - உடல் நொந்து, வாய்விட்டு அலறி-வாய்திறந்தலறி, வயிறு நொந்து - கருப்பவேதனை யடைந்து, ஈன்ற - பெற்றதனுல், மனன் எழு வருத்தம் - மனத்திலுண்டான வருத்தத்தை, உடையை ஆகலின் - உடையளாயிருக்கின்றனை யாதலால்.

(வி-ரை.) கண்ணுேடு-உருபுமயக்கம். கலுழ்ந்து - செயவெனெச்சத்திரிபு. அது - பகுதிப்பொருள் விகுதி.

'பெருமயலெய்தா' என்பதுமுதல் 'குறுமுனிக்கு' என்பதுவரை.

(8—11 வரிகள்.)

(ப-ரை.) பெருமயல் எய்தா-மிக்க மயக்கத்தைப் பொருந்தாத, நிறையினளாக-மாட்சிமையுடையளா யிருக்குமாறு, என் ஒரு மயிலையும் - மயில்போன்ற வென [illegible] [illegible]ன்னேயும், நின் மகள் கொண்டு - நின்மகளாகவெண்ணி, [illegible] [illegible]ன்று அழியா-பிறந்திருந்

திறலாமைக்குக் காரணமான, துகள் அறு பெருந்தவம் - (காமாதிக ளாகிய) துகளற்ற மாதவமே, நிதியென கட்டிய - தனது நிக்ஷேப மாகச் சேர்த்துள்ள, குறுமுனிக்கு - அகத்தியனார்க்கு.

(வி-ரை.) மயில் - ஆகுபெயர். துகள் - குற்றம்.

'அருளுடன்' என்பதுமுதல் 'கன்னிக்கு' என்பதுவரை.

(11—15 வரிகள்.)

(ப-ரை.) அருளுடன் - அன்புடனே, தாளமும் - முத்தங்களை யும், சந்தும் - சந்தனத்தையும், எரிசெழு மணியும் - ஒளிபொருந்திய மாணிக்கங்களையும், முடங்குளை அகழ்ந்த - சிங்கத்தினாற் பிளக்கப் பட்ட, கோடு கரி கோடும் - யானையினது கோணிய கொம்புகளை யும், அகிலும் - அகிலையும், கனகமும் - பொன்னையும், அருவிகொ ண்டு - அருவிநீராற் கைக்கொண்டு, இறங்கி - இழிந்து, பொருநை அம் கன்னிக்கு - பொருநையாகிய திருமகட்கு.

(வி-ரை.) பொருநை - தாமிரபர்ணியாறு.

'அணியணிபூட்டும்' என்பதுமுதல் 'கூடலெம்பெருமான்' என்பதுவரை.

(15—20 வரிகள்.)

(ப-ரை.) அணி அணிபூட்டும்-அழகிய ஆபரணங்களைத் தரிக்கா நின்ற, செம்பு உடல் பொதிந்த - தாமிரவுடலால் மூடப்பெற்ற, தெய்வப் பொதியமும் - தெய்வத்தன்மையுள்ள பொதியமலையும், உவட்டாது-தெவிட்டாமல், அமையா உணர்வு எனும் - அடங்காத அறிவென்கிற, பசியெடுத்து - பசிதோன்றி, நின்று-நிலைத்து, உள்ள மும் உருகி-மனமுமுருகி, செவி உண்ணும்-செவியாகிய வாயாலுண் ணத்தக்க, பெருந்தமிழ் அமுதும் - பெருமையாகிய தமிழென்னும் அமுதத்தையும், பிரியாது கொடுத்த - பிரிவற்றிருக்குமாறு தந்தரு ளிய, தோடு அணி கடுக்கை-இதழ் நெருங்கிய சங்கத்தோட்டினையும் கொன்றை மலரையுமணிந்த, கூடல் எம்பெருமான் - மதுரைநாயக னது.

(வி-ரை.) உவட்டல் - தெவிட்டல். கடுக்கை - ஆகுபெயர்.

'எவ்வுயிரிருந்தும்' என்பதுமுதல் 'இப்பெருநன்றி' என்பதுவரை.

(21—25 வரிகள்.)

(ப-ரை.) எவ்வுயிர் இருந்தும் - எவ்வகைப்பட்ட வுயிரிடத்துங் கலந்திருந்தும், அவ்வுயிர்-அந்தவுயிர்கள், அதற்கு-அத்தொன்மையை

யறியும்படி, தோன்றாது அடங்கிய - வெளிப்படாதடங்கிய, தொன்மைத்து என்ன - அனாதித் தன்மைபோல, ஆர்த்து எழு - ஆரவாரித்து மேலெழுகின்ற, பெருங்குரல் அமைந்துநின்று - பெருங்குரலடங்கிநின்று, ஒடுங்கி - தணிந்து, நின் பெரு தீக்குணனும்-உனது மிக்க கொடுங்குணனும், ஒழிந்து-நீங்கி, உளம் குளிரும் - என்னுளங் குளிரத்தக்க, இப்பெருநன்றி - இந்தப் பேருதவியை.

(வி-ரை.) தொன்மை-பழமை. ஆர்த்தல்-ஆரவாரித்தல். குணன்-போலி.

'இன்று' என்பதுமுதல் 'அன்றே' என்பதுவரை.

(25—26 வரிகள்.)

(ப-ரை.) இன்று - இப்பொழுது, எற்கு - எனக்கு, உதவுதியெனின்-தருவாயெனின், நின்பதம் பணிகுவல்-நின்பாதம் பணிவேனாக.

(வி-ரை.) அன்று, எ - அசைநிலைகள். உதவல் - தரல்.

கடன் மடமகளே! புணர்ந்து, உலகறியக் கலுழ்ந்து, கலங்கி, அலறி, நொந்து, குழவியும் பிள்ளையும் மிகவுமீன்ற வருத்தமுடையையாதலால் நிறையினளாக என்மயிலையு நின்மகளாகக் கொண்டு, கூடற்பெருமானது தொன்மைத்தென்ன, குரலமைந் தொடுங்கி, தீக்குண மொழிந்து உள்ளங் குளிரும் பெருநன்றி யுதவுதியெனின், நின்பதம் பணிகுவலென வினைமுடிவு செய்க. (கூகூ)

திருக்கோவையார் கஉ -ம் செய்யுள்.

பிரிவுணர்த்தல்.

பிரிவுணர்த்தலென்பது—ஐவகைப்புணர்ச்சியும் பெற்றுப்புணர்வதன்முன்னும் புணர்ந்தபின்னும் ஒத்தவன்பினனாய் நின்ற தலைமகன் பிரியுமா றென்னையெனின், இப்புணர்ச்சி நெடுங்காலஞ் செல்லக்கடவதாக இருவரையுங் கூட்டிய தெய்வந்தானே பிரியாமற் பிரிவிக்கும், அது பிரிவிக்குமாறு, தலைமகன் தனதாதரவினால் நலம்பாராட்டக் கேட்டு, எம்பெருமான் முன்னின்று வாய்திறந்து பெரியதோர் நாணின்மை செய்தேனெனத் தலைமகள் நாணி வருந்தாநிற்ப, அதுகண்டு இவள் வருந்துகின்றது யான் பிரிவேனாக நினைந்தாக வேண்டுமென் றுட்கொண்டு, அவளுக்குத் 'தான்' பிரிவின்மை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சிந்தா மணிதெண் கடலமிர் தந்தில்லை யானருளால்
வந்தா லிகழ்ப் படுமே மடமான் விழிமயிலே
யந்தா மரையன்ன மேநின்னை யானகன் றாற்றுவனே
சிந்தா குலமுற்றென் னோவென்னை வாட்டந் திருத்துவதே.

பணிவளாசல்குலைப் பயிர்ப்புறுத்திப்
பிணிமலர்த்தாரோன் பிரிவுணர்த்தியது.

(ப-ரை.) சிந்தாமணி - (ஒருவன் தவஞ்செய்து பெறுஞ்) சிந்தா மணியும், தெள் கடல் அமிர்தம்-தெளிந்த கடலினமிர்தமும், தில்லை யான் அருளால் - (வருத்தமின்றித்) தில்லையானருளால், வந்தால்- (தாமே) வந்தால், இகழப்படுமே - (அவை அவனால்) இகழப்படுமோ, மடமான் விழி மயிலே - மடமான் விழிபோலும் விழியையுடைய மயிலே, அம் தாமரை அன்னமே - அழகிய தாமரைக்கண் வாழுமன் னமே, நின்னை யான் அகன்று ஆற்றுவனோ - நின்னையான் பிரிந்தா ற்றி யுளனாவனோ, சிந்தாகுலம் உற்று - சிந்தையின் மயக்கமுற்று, என்னை வாட்டந்திருத்துவது - என்னை வாட்டுவது, என்னோ - என்னோ, எ-று.

(வி-ரை.) அந்தாமரை யன்னம் திருவென்பாருமுளர். நின்னை யென்புழி உயிரினுஞ் சிறந்த நின்னையென்றும், யானென்புழி இரு தலைப்புள்ளினோருயிரேயாகிய யானென்றும், அச்சொற்களான் விளங் கின. வாட்டந்திருத்துவதே யென்னுஞ் சொற்கள் ஒருசொன்னீர வாய், வாட்டுவதே யென்று பொருள்பட்டு, இரண்டாவதற்கு முடி பாயின. வாட்டத் திருத்துவதென்று பாடமாயின், வாட்டத்தின்க ணிருத்துவ தென்றுரைக்க. பயிர்ப்பு - பயிலாத பொருட்கண்வந்த அருவருப்பு; ஈண்டுப் பயிலாதபொருள் பிரிவு. பிரிவுணர்த்தல் - அகன்றாற்றுவனோவெனப் பிரிவென்பது மொன்றுண்டென்பதுபட மொழிதல்.

நேரிசையாசிரியப்பா.

நிலையுடைப் பெருந்திரு நேர்படு காலைக்
காலாற் றடுத்துக் கனன்றெதிர் கறுத்தும்
நணிநிறை செல்வ நாடுநன் பொருளு
மெதிர்பெறிற் கண்சிவந் தெடுத்தவை களைந்துந்
தாமரை நிதியும் வால்வளைத் தனமு
மில்லம் புகுதரி னிருங்கத வடைத்து
மரியய னமரர் மலைவடம் பூட்டிப்

பெருங்கடல் வயிறு கிடங்கெழக் கடைந்த
வமுதமுட் கையி லுதவுழி யூற்றிய
மெய்யுல கிரண்டினுட் செய்தரு ளுளரே
லெழுகதிர் விரிக்கு மணிகெழு திருந்திழை
நிற்பிரி வுள்ளு மனனுள னுருவன்
முழுதற நிறைந்த பொருண்மன நிறுத்திமுன்
வேடந் துறவா விதியுடைச் சாக்கிய
னருட்கரை காணு வன்பெனும் பெருங்கடல்
பலநாட் பெருகி யொருநா ளுடைந்து
கரைநிலை யின்றிக் கையகன் றிடலு
மெடுத்தடை கன்மலர் தொடுத்தவை சாத்திய
பேரொளி யிணையாக் கூடன் மாமணி
குலமலைக் கன்னியென் றருள்குடி யிருக்கும்
விதிநிறை தவறு வொருபங் குடைமையும்
பறவைசெல் லாது நெடுமுக டுருவிய
சேகரத் திறங்குந் திருநதித் துறையு
நெடும்பக லூழி நினைவுட னீந்தினு
மருங்கரை யிறந்த வாகமக் கடலு
மிளங்கோ வினர்க ளிரண்டறி பெயரு
மன்னமும் பன்றியு மொல்லையி னெடுத்துப்
பறந்து மகழ்ந்தும் படியிது வென்று
வறிவகன் றுயர்ந்த கழன்மணி முடியு
முடைமையன் பொற்கழல் பேணி
யடையலர் போல வருண்மனந் திரிந்தே.

நிலையுடைப்பெருந்திரு - அருண்மனந்திரிந்தே. பகுதி - இயற்கைப்புணர்ச்சி. துறை - பிரிவுணர்த்தல்.

எழுகதிர் விரிக்கு மணிகெழு திருந்திழை.

(11—வது வரி.)

(ப-ரை.) எழு கதிர் - உதயஞ் செய்கின்ற சூரிய கிரணங்களை, விரிக்கும் - பரப்புகின்ற, மணி கெழு-மாணிக்கங்-குயிற்றிய, திருந்து இழை - திருந்திய வணிகளையுடையாய்.

(வி-ரை.) திருந்திழை-அன்மொழித்தொகை, இது அண்மை விளியாதலால் இயல்பாயிற்று.

'நிலையுடை' என்பதுமுதல் 'கறுத்தும்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நிலையுடை - நிலைமையுள்ள, பெருந்திரு - பெருஞ் செல்வமானது, நேர்படுகாலை - கிடைத்தகாலத்து, காலால் தடுத்து- அதனைக் காலாற்றள்ளி, எதிர் - எதிராக, கனன்று - அழன்று, கறுத்தும் - கோபித்தும்.

(வி-ரை.) நேர்படுதல் - கிடைத்தல். கனலல் - அழலல். கறுத்தல் - கோபித்தல்.

'நனிநிறை' என்பதுமுதல் 'களைந்தும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) நனி நிறை - ஒழியாது நிரம்பிய, செல்வ நாடும்-வளப் பத்தைத்தருகின்ற நாடும், நன்பொருளும் - அதனை யாளுதற்குரிய கருவிகளும், எதிர்பெறின் - நேரிடின், கண்சிவந்து எடுத்து அவை களைந்தும் - அவையிற்றை முனிந்து எடுத்தெறிந்தும்.

(வி-ரை.) பொருள் - ஈண்டுக் கருவிகளுக்காயிற்று. கண்சிவத்தல் - முனிதல்.

'தாமரை' என்பதுமுதல் 'அடைத்தும்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) தாமரை நிதியும்-பதுமநிதியும், வால்வளை தனமும்- வெள்ளிய சங்கநிதியும், இல்லம் புகுதரில் - வீடுதேடிவரின், இரும் கதவு அடைத்தும் - பெரியகதவை மூடித்தடுத்தும்.

(வி-ரை.) வளை-சங்கு. புகுதரின் என்பதற்குப் பகுதி புகுதா.

'அரியயன்' என்பதுமுதல் 'ஊற்றியும்' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) அரி - திருமாலும், அயன் - பிரமனும், அமரர்-தேவர் களும், மலை-(மந்தரமென்னும்) மலையை நட்டு, வடம் பூட்டி-(வாசுகி யென்னும்) வடத்தைப் பூட்டி, பெரு கடல் - பெரிய கடலினது, வயிறு - வயிறானது; கிடங்கு எழ - பள்ளம் படுமாறு, கடைந்த - கடைந்ததனாலுண்டான, அமுதம் - அமுதமானது, உள் கையில் -

உள்ளங்கையில், உதவுழி - கிடைக்குங்கால், ஊற்றியும் - அதனைத் தரையிற் கவிழ்த்தும்.

(வி-ரை.) வடம் - கயிறு. கடைந்த - காரணப்பொருட்டாகிய பெயரெச்சம்.

மெய்யுல கிரண்டினுட் செய்நரு ளரேல்.
(10—வது வரி.)

(ப-ரை.) மெய் உலகு இரண்டினுள்-மெய்ம்மையுள்ள விண்ணு மண்ணுமாகிய விரண்டுலகத்திலும், செய்நர் உளரேல் - செய்தா ருண்டாயிருந்தால்.

(வி-ரை.) ஏல் - எனின் என்பதன் மரூஉ.

'முழுதுறநிறைந்த' என்பதுமுதல் 'கையகன்றிடலும்' என்பதுவரை.
(13—17 வரிகள்.)

(ப-ரை.) முழுதுற நிறைந்த - உள்ளும் புறம்புமாக எங்கு நிறைந்துள்ள, பொருள் - சிவமெனும் பொருளை, மனம் நிறுத்தி - சித்தத்தின்கண்ணே நிலைபெறவைத்து, முன் - ஆதியிலுள்ள, வேடம் துறவா - சமணர்க்குரிய வேடத்தைக் கைவிடாத, விதி உடை - முறைமையையுடைய, சாக்கியன் - சாக்கியநாயனார், அருள் கரை காணு - அருளாகிய கரையைக் காணப்பெற்று, அன்பு என்னும் பெரும் கடல் - அன்பாகிய பெருங்கடலானது, பல நாள் பெருகி - அனேகநாளாகப் பெருக்கெடுத்து, ஒருநாள் உடைந்து - ஒருநாளு டைபட்டு, கரை நிலையிற்றி-கரையானது நிலைபெறாமல், கையகன் றிடலும் - செயலற்றுச் செல்லுதலும்.

(வி-ரை.) காணு-செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். கையகறல்-ஒருசொல்.

'எடுத்தடை' என்பதுமுதல் 'ஆகமக்கடலும்' என்பதுவரை.
(18—25 வரிகள்.)

(ப-ரை.) எடுத்து அடை - எடுத்துச் சேர்த்துவைத்த, கல் மலரவை - கல்லாகிய மலர்களை, தொடுத்து சாத்திய - அடுக்காக அருச்சித்த, இணையா - ஒப்பில்லாத, பேரொளி - பேரொளிபாகிய, கூடல் மாமணி - மதுரையிலுள்ள மாணிக்கம், குலம் - மேன்மையா

கிய, மலை கன்னி என்று - மலைமகளென்று சொல்லப்பட்டு, அருள் - தனது கருணையானது, குடியிருக்கும் - பிரியாதிருக்கின்ற, விதி - வேதத்தால் விதிக்கப்பட்ட, நிறை தவறு - விபுத்துவம் தவறாத, ஒருபங்கு உடைமையும்-ஒருபாகமுடைய தன்மையும், பறவை செல்லாது-பறவைகள் செல்லாமல், நெடு முகடு-நெடிய ஆகாயமுகட்டை, உருவிய - கடந்தப்பாற்சென்ற,சேகரத்து - திருமுடியில், இறங்கும்-இறங்கித் தங்கிய, திருநதி துறையும் - கங்காதீரமும், நெடும் பகல் ஊழி - அனேக ஊழிக்காலங்களை, நினைவுடன் நீந்தினும் - நினைப்புடனே கடந்தாலும், அருங்கரை இறந்த-அருமையாகிய கரைகாணக் கூடாத, ஆகமக்கடலும் - ஆகம சமுத்திரமும்.

(வி-ரை.) அடைத்தல் - சேர்த்தல். விபுத்துவம் - பெருமை. சேகரம் - முடி. தீரம் - கரை.

'இளங்கோவினர்கள்' என்பதுமுதல் 'அகழ்ந்தும்' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) இளம் கோவினர்கள் - இளவரசராகிய, இரண்டு அறிபெயரும் - படைப்பு அளிப்பு என்னுந் தொழிலறிந்த இருவரும், அன்னமும் பன்றியும் எடுத்து - அன்னமாகவும் பன்றியாகவும் உருவெடுத்து, ஒல்லையில் பறந்தும் அகழ்ந்தும் - காலந் தாழ்க்காமல் விண்ணிற் பறந்தும் மண்ணைப் பிளந்தும்.

(வி-ரை.) படைப்பு - சிருட்டித்தல். அளிப்பு - காத்தல். அகழ்தல் - பிளத்தல். தாழ்த்தல் - தாமதித்தல்.

'படியிதுவென்று' என்பதுமுதல் 'உடைமையன்' என்பதுவரை.

(28—30 வரிகள்.)

(ப-ரை.) படி இது என்று - அளவு இதுவாமென்று, அறிவு அகன்று - அறியப்படாமல், உயர்ந்த - மேலுங்கீழு மூடுருவிய, கழல் மணிமுடியும்-திருவடியும் திருமுடியும், உடைமையன் - உடையவனது.

(வி-ரை.) மணியென்பதனைக் கழலுக்குங் கூட்டுக. கழல் என்பதனிற்றில் எண்ணும்மை தொக்கது.

'போற்கழல்' என்பதுமுதல் 'திரிந்தே' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

நிற்பிரி வுள்ளு மனனுள னொருவன்.
(12—வது வரி.)

(ப-ரை.) பொன் கழல் பேணி - பொன்னடியை யருச்சித்து, அருள் திரிந்து - அருட்பேறுதிரிந்து, அடையலர் மனம்போல - அடையாதார் மனம்போல, நின் பிரிவு - நின்னைப் பிரிதலுக்கு, உள்ளும் - நினையாநின்ற, மனன் உளனொருவன் - எண்ணமுடையே னொவேனாக.

(வி-ரை.) அடையலர் - பகைவர். உள்ளல் - நினைத்தல். ✱

திருந்திழையே ! பெருந்திருவை கறுத்தும் நாடும் பொருளும் பெறின், கண்சிவந்து களைந்தும், நிதியுந் தனமும் புகின்-கதவடைத்தும், அமுத முதவுழி யூற்றியும் செய்தாருளரேல், கூடன்மாமணியாகிய வுடைமையன் கழல்பேணி, அடையலரது, அருள் திரிந்த மனம்போல நிற்பிரிவுள்ளு மனனுளனுவேனென வினைமுடிவு செய்க. (கூஎ)

திருக்கோவையார் ௩௬௪-ம் செய்யுள்.

ஊடனீட வாடியுரைத்தல்.

ஊடனீடவாடியுரைத்தலென்பது—தணிக்கத்தணியாது மிகுத்துரைத்துத் தலைமகள் மென்மேலு மூடாநிற்ப, அன்று அம்மலையிடத்துத் தன்னை யெய்துதற் சோருபாயமின்றி வருந்தாநிற்ப யானுய்யும்வண்ணந் தன்னிணைமலர்க் கண்ணினது இனிய நோக்கத்தைத் தந்தருளி, என்னைத் தன்வசமாக்கிய நம்பெண்ணமுதம் அதுவன்று, இது நம்மை வருத்துவதோர் மாயமாமெனத் தன்னெஞ்சிற்குச் சொல்லி, ஊடனீடத் தலைமகன் வாடாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

திருந்தே னுயநின்ற சிற்றம் பலவர்தென் னம்பொதியி
லிருந்தே னுயவந் திணைமலர்க் கண்ணினின் னோக்கருளிப்
பெருந்தே னெனநெஞ் சுகப்பிடித் தாண்டநம் பெண்ணமிழ்தம்
வருந்தே லதுவன் றிதுவோ வருவதோர் வஞ்சனையே.

வாடா வூட
னீடா வாடியது.

(ப-ரை.) இருந்தேன் உய்ய நின்ற-(ஒருவாற்றானும்) திருந்தாத யான் பிறவித் துன்பத்திற் பிழைக்கவந்து நின்ற, சிற்றம்பலவர் - சிற்றம்பலவரது, தென்னம் பொதியில் - தெற்கின்கணுளதாகிய பொதியிலிடத்து, இருந்தேன் - ஒரு முயற்சியுமின்றி யிருந்தயான், உய்ய வந்து - உய்யும்வண்ணம்வந்து, இணை மலர் கண்ணின் - (தன்னுடைய) இணைந்த மலர்போலுங் கண்களினது, இன் நோக்கு அருளி-(உள்ளக்கருத்தை வெளிப்படுத்தும் நாணேடுகூடிய நோக்கமாகிய) இனிய கடைக்கணேக்கத்தை முன்னெனக்குத்தந்து, பெருந்தேன் என-பெருந்தேன்போல இனிதாய், நெஞ்சு உக-என்னெஞ்சமுருக, பிடித்து ஆண்ட - என்னைப் பிடித்துத் தன்வயமாக்கிய, நம் பெண் அமிழ்தம் - நமது பெண்வடிவையுடைய அமிழ்தமாகிய, அது - அது, அன்று - இதுவன்று, இதுவோ வருவதோர் வஞ்சனை - இதுவோ வருவதொரு மாயம், வருந்தேல் - அதனால் நீ வருந்தா தொழி, எ-று.

(வி-ரை.) ஒகாரம் - ஒழியிசைக்கண் வந்தது. தன்னை நோக்கி யொருமுயற்சியு மில்லாத யான் பிறவித் துன்பத்திற் பிழைக்கத் தானேவந்து தன்னிணைமலர்க் கண்ணினதினிய கடைக்கணேக்கத்தைத்தந்து பெருந்தேன்போன் றினிதாய், என்வன்மனம் நெகிழ என்னை வலிந்துபிடித் தடிமைகொண்ட பெண்ணமிழ்தமென வேறுமொரு பொருள் விளங்கியவாறு கண்டுகொள்க.

நேரிசையாசிரியப்பா.

நிரைவளை யீட்டமுந் தரளக் குப்பையு
மன்னக் குழுவுங் குருகணி யினமுங்
கருங்கோட்டுப் புன்னை யரும்புதிர் கிடையு
முடவெண் டாழை யூழ்த்தமுண் மலரு
மலவன் கவைக்கா லன்னவெள் ளலகும்
வானுகம் பரப்பி வலைவலி தொற்றினர்க்
கீதென வறியா தொன்றிவெள் ளிடையா
மாதுறைக் கழிக்கரைச் சேரியோர் பாங்கர்ப்
புன்னையொடு பிணங்கும் புட்கவ ராது
வொளிற வுணங்கல் காவ லாக
வல[illegible] கவருங் கொடுநிலைக் கூற்ற
ப[illegible]த [illegible]நிலையறி குவனேல்

விண்குறித் தெழுந்து மேலவர்ப் புடைத்து
நான்முகற் றூங்குந் தேனுடைத் தாமரை
யிதழுங் கோட்டையுஞ் சிதறக் குதர்ந்து
வானவ ரிறைவன் கடவுகார் பிடித்துப்
பஞ்செழப் பிழிந்து தண்புனல் பருகி
மைந்தெனப் பெயரிய நெடுமர மொடித்துக்
கண்ணுளத் தளவா வெள்ளுணா வுண்டு
பொரியெனத் தாரகைக் கணனுடல் குத்தி
யடுந்திற லினைய கொடுந்தொழில் பெருக்கிய
மாயா வரத்த பெருங்குரு கடித்து
வெண்பிறை முடித்த செஞ்சடைப் பெருமான்
கூடற் கிறையோன் குறியுருக் கடந்த
விருபத முள்வைத் தவர்போன்
மருவுத லொருவு மதியா குலனே.

நிரைவளையீட்டமும்-மதியாகுலனே. பகுதி-பரத்தையிற்பிரிவு. துறை - ஊடனீட வாடியுரைத்தல்.

'நிரைவளை' என்பதுமுதல் 'இனமும்' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நிரை வளை ஈட்டமும் - வரிசையான சங்கினமும், தாளக்குப்பையும் - முத்தக்குவையும் அன்னக்குழுவும் - அன்னக்கூட்டங்களும்; அணி குருகு இனமும் - அழகிய கொக்குக் கூட்டங்களும்.

(வி-ரை.) தாளம் - முத்து. அன்னம் - அன்னப்பறவை.

'கருங்கோட்டு' என்பதுமுதல் 'முண்மலரும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) கரும் கோட்டு புன்னை - கரியகோட்டினையுடைய புன்னையினது, அரும்பு உதிர் கிடையும் - அரும்பு உதிர்கின்ற விடமும், முடம் வெண் தாழை - முடக்காகிய வெண்டாழையானது, ஊழ்த்த - உதிர்த்த, முள் மலரும் - முள்பொருந்திய மலர்களும்.

(வி-ரை.) கோடு - கொம்பு (கிளை). கிடை - இடம். முடம் - வளைவு. ஊழ்த்தல் - உதிர்த்தல்.

'அலவன்' என்பதுமுதல் 'வலிதோற்றினர்க்கு' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) அலவன் - நண்டினது, கவை கால் அன்ன - பிளவாகிய கால்போன்ற, வெள் அலகும்-வெள்ளைப் பலகறையும், வாலுகம் பரப்பி - மணன்மேட்டில் விரித்து, வலை - வலையை, வலிதொற்றினர்க்கு - வலிதாக ஈர்த்துக் கட்டின நெய்தனில மாக்களுக்கு.

(வி-ரை.) கவை - பிளவு. அலகு - பலகறை. வாலுகம் - மணல்மேடு. ஈர்த்தல் - இழுத்தல்.

'ஈதேனவறியாது' என்பதுமுதல் 'சேரியோர்பாங்கர்'
என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) ஈது என அறியாது - இன்னதென அறியப்படாமல், ஒன்றி-தலைமயங்கி, வெள்ளிடையாம்-வெளியிடமாகிய, மாது உடை அழகையுடைய, கழிக்கரை - கழிக்கரையின்கண்ணுள்ள, சேரி ஓர் பாங்கர் - சேரியினொரு பக்கத்தில்.

(வி-ரை.) இடை - இடம். மாது - அழகு.

'புள்ளோடுபிணங்கும்' என்பதுமுதல்'காவலாக' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) புள்ளொடு பிணங்கும் - புள்ளுகளோடும், புள் கவராது - பறவைகள் கவர்ந்து செல்லாது, வெள்ளிற உணங்கல் - வெள்ளிய விருவுணங்கற்கு, காவலாக - காவலாயுள்ளாள்போல.

(வி-ரை.) இரு - ஓர்வகைமீன், இது "குறியதன்கீழா" ஆதலால் இற எனக் குறுகிற்று. உணங்கல் - வற்றல்.

'உலகுயிர்கவரும்' என்பதுமுதல் 'நிலையறிகுவனேல்'
என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) உலகு உயிர் கவரும் - உலகத்திலுள்ள வுயிர்களைக் கவராநின்ற, கொடுநிலை கூற்றம்-கொடுந்தன்மையையுடைய யமனே, மகள் என தரித்த - பெண்ணென வேடம்பூண்டிருக்கிற, நிலை அறிகுவனேல் - நிலையை முன்னரே யறிவேனாயின்.

(வி-ரை.) உயிர் - ஜீவராசிகள். தரித்தல் - பூணல்.

'விண்குறித்து' என்பதுமுதல் 'குதர்ந்து' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) விண் குறித்து எழுந்து-விண்ணுலகத்தைக் குறித்து மேலெழுந்து, மேலவர் புடைத்து - தேவர்களையடித்து, நான்முகன் தாங்கும் - பிரமனைச் சுமக்கின்ற, தேன் உடை தாமரை - தேனுடைய தாமரையினது, இதழும் - இதழும், கொட்டையும் - பொகுட்டும், சிதற - சிதறும்படி, குதர்ந்து - அழித்து.

(வி-ரை.) விண் - ஆகுபெயர். மேலுலகத் திருப்பவராதலால் தேவர்களை 'மேலவர்' என்றார். குதர்தல் - அழித்தல்.

'வானவரிறைவன்' என்பதுமுதல் 'தண்புனல்பருகி' என்பதுவரை.
(16—17 வரிகள்.)

(ப-ரை.) வானவர் இறைவன் - தேவர்களுக் கிறைவனாகிய இந்திரன், கடவு கார் - நடத்துகின்ற மேகத்தை, பிடித்து - பிடித்து, பஞ்சு எழ - பஞ்செழும்படி, பிழிந்து - பிழிந்து, தண் புனல் பருகி - அதிலுள்ள தண்ணிய புனலையுண்டு.

(வி-ரை.) கடவல் - நடத்தல். புனல் - நீர்.

'ஐந்தேனப்பெயரிய' என்பதுமுதல் 'எள்ளுணவுண்டு' என்பதுவரை.
(18—19 வரிகள்.)

(ப-ரை.) ஐந்தென பெயரிய - ஐந்தென்று பெயருள்ள, நெடு மரம் ஒடித்து - நெடிய கற்பகமரங்களை யொடித்து, கண் உளத்து அளவா - கண்களுக்கு முள்ளத்துக்கும் பொருந்தாத, எள் உணவு உண்டு - இகழத்தக்க வுணவையுண்டு.

(வி-ரை.) நெடுமை - மேன்மைமேற்று. எள்ளல் - இகழ்தல்.

'பொரியென'என்பதுமுதல் 'கூடற்கிறையோன்'என்பதுவரை.
(20—24 வரிகள்.)

(ப-ரை.) தாரகை கணன் - தாரகைக் கூட்டங்களை, பொரி என - நெற்பொரிபோல, உடல் குத்தி - அவற்றைக்குத்தி, அடும் திறல் - சொல்லுந் திறலாகிய, இனைய - இவைபோன்ற, கொடு தொழில்-தீத்தொழிலை, பெருக்கிய-பெருகச்செய்த, மாயா வரத்த -

அறியாத வரத்தினையுடைய, பெருங்குருகு - பெரிய குருகாகிய அசுரனை, அடித்து - மடித்து, வெள் சிறை - அதனது வெள்ளிய சிறகினை, முடித்த - தரித்த, செஞ்சடை பெருமான் - செஞ்சடையுள்ள கடவுளாகிய, கூடற்கு இறையோன் - மதுரை நாயகனது.

(ப-ரை.) கணன்-போலி. உடல் - ஆகுபெயர். திறல்-வெற்றி.

'குறியுருக்கடந்த'என்பதுமுதல் 'மதியாகுவனே'என்பதுவரை (24—26 வரிகள்.)

(ப-ரை.) குறி உரு கடந்த-குறியுமுருவுமில்லாத, இரு பதம்-இரண்டு திருவடியினையும், உள் வைத்தவர்போல்-உள்ளத்தின்கண் வைத்தவர்போல, மருவுதல் - கூடுதலை, ஒருவும் - நீங்காநின்ற, மதியாகுவன் - மதியினனாவேன். (கூஅ)

(வி-ரை.) குறி உரு என்பவற்றீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. மதி-ஆகுபெயர்.

கழிக்கரைச் சேரியோர் பாங்கர், உணங்கல் காவலாகக், கொடு நிலைக்கூற்ற மகளெனத்தரித்த நிலையறிகுவனேல், கூடற்கிறையோனது இருபத முள்வைத்தவர்போல மருவுதலொருவு மதியாகுவனென வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் கக௦ -ம் செய்யுள்.

பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்.

பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தலென்பது :—பறவையோடு வருந்தாநின்றவள், இவை யென் வருத்தங்கண்டு, இவள்வருந்தாமல், விரைய வரவேண்டுமென்று ஞாயிற்றைநோக்கித் தங்கை குவியாநின்றனவாதலால், என்மாட் டன்புடையன போலுமெனப் பங்கயத்தோடு பரிவுற்றுக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கருங்கழி காதற்பைங் கானலிற் றில்லையெங் கண்டர்விண்டா
ரொருங்கழி காதர மூவெயில் செற்றவொற் றைச்சிலைசூழ்ந்
தருங்கழி காத மகலுமென் றாழென் றலந்துகண்ணீர்
வருங்கழி காதல் வனசங்கள் கூப்பு மலர்க்கைகளே.

முருசவிழ் கான
லொடுபரி வுற்றது.

(ப-ரை.) தில்லை - தில்லைக்கணுள்ளராகிய, எம் கண்டர்-எம்முடையகண்டர், விண்டார் ஒருங்கு அழி-பகைவ ரொருங்கே யழியும்,

காதரம் - அச்சத்தையுடைய, மூ எயில் செற்ற - மூவெயிலைச்செற்ற, ஒற்றை சிலை சூழ்ந்து - தனிவில்லைச் சூழ்ந்து, அரு கழி காதம் - அரியவாகிய மிக்ககாதங்களை, அகலும் என்றாழ் என்று - போகா நின்றது என்றாழ் இனியிவளெங்ஙன மாற்றும் என்று, அலந்து - வருந்தி, கரு கழி - கருங்கழியின்கண்ணும், காதல் - காதலையுடைய, பை கானலில்-பசியகானலின்கண்ணும் உளவாகித் துன்புற்று, கண் நீர் வரும் - கண்ணீர் வராநின்ற, கழிகாதல் - கழிகாதலையுடைய, வனசங்கள்-தாமரைகள் (விரைந்து வரவேண்டுமென்று அஞ்ஞாயிற்றை நோக்கி), மலர் கைகள் - (தம்) மலராகிய கைகளை, கூப்பும் - கூப்பி யிரவாநின்றன (இவையென்மாட் டன்புடையன போலும்), எ-று.

(வி-ரை.) கானலின் வனசங்களெனவும், தில்லையெங்கண்டர் செற்றவெனவுங் கூட்டுக. கானலிற் கைகூப்புமென வியைப்பினுமமையும். கானற்பொய்கையின் வனசம் கானலின் வனசமெனப் பட்டன. அலந்து கண்ணீர் வருமென்பது இருபொருட் டாகலின், மலர்ந்து கள்ளாகிய நீர் வருமென்றுரைக்க. இப்பொருட்கு அலர்ந் தென்ப திடைக்குறைந்து நின்றதாகக் கொள்க. கதிரோன்றம்மைப் பிரியவாற்றாது கடிது வரவேண்டுமென வனசங்கள் கைகூப்பா நின்றனவென்று அவற்றிற்கு இரக்கினளாக வுரைப்பினுமமையும். அலர்ந்த வென்பது பாடமாயின், அலர்ந்த வனசமென வினையும்.

நேரிசையாசிரியப்பா.

சிலைநுதற் கணைவிழித் தெரிவைய ருளமென
வாழ்ந்தகன் றிருண்ட நிறைநீர்க் கயத்து
ளெரிவிரிந் தன்ன பலவிதழ்த் தாமரை
நெடுமயல் போர்த்த வுடலொரு வேற்குக்
குருமணி கொழிக்கும் புனன்மலைக் கோட்டுழி
நின்பதி மறைந்த நெட்டிர வகத்துட்
குருகும் புள்ளு மருகணி சூழத்
தேனொடும் வண்டொடுந் திருவொடுங் கெழுமிப்
பெருந்துயி லின்பம் பொருந்துபு நடுநாட்
காணுநின் கனவினுட் கவர்மனத் தவரைக்
கொய்யுளைக் கடுமான் கொளுவிய தேரொடு
பூவுதிர் கானற் புறங்கண் டனனெனச்

சிறிதொரு வாய்மை யுதவினை யாயிற்
சேகரங் கிழித்த நிறைமதி யுடலங்
கலைகலை சிந்திய காட்சிய தென்னக்
கடுமான் கீழ்ந்த கடமலைப் பன்மருப்
பெடுத்தெடுத் துந்தி மணிக்குலஞ் சிதறிக்
கிளைஞர்க ணச்சாப் பொருளினர் போலச்
சாதகம் வெறுப்பச் சரிந்தகழ்ந் தார்த்துத்
திரள்பளிங் குடைத்துச் சிதறுவ தென்ன
வழியெதிர் கிடந்த வுலமுடன் றாக்கி
வேங்கையும் பொன்னு மோருழித் திரட்டி
வரையர மகளிர்க் கணியணி கொடுத்துப்
பனைக்கைக் கடமா வெறுத்துறு பூழி
வண்டெழுந் தார்ப்ப மணியெடுத் தலம்பி
மயில்சிறை யால வலிமுகம் பனிப்ப
வெதிர்சுனைக் குவளை மலர்ப்புறம் பறித்து
வரையுட னிறைய மாலையிட் டாங்கு
நெடுமுடி யருவி யகிலொடு கொழிக்குங்
கைலைவீற் றிருந்த கண்ணுதல் விண்ணவ
னாடகக் கடவுள் கூட னாயகன்
றாமரை யுடைத்த காமர் சேவடி
நிறையுளந் தரித்தவர் போலக்
குறையுள நீங்கி யின்பா குவனே.

சிலைநுதற்கணைவிழி - இன்பாகுவனே. பகுதி - ஒருவழித் தணத்தல். துறை - பங்கயத்தோடு பரிவுற்றுரைத்தல்.

'சிலைநுதல்' என்பதுமுதல் 'கயத்துள்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) சிலை நுதல் - வில்லையொத்த நுதலையும், கணை விழி - அம்பையொத்த விழியையுமுடைய, தெரிவையர் உளம் என - மாதர் மனம்போல, ஆழ்ந்து - ஆழமுடைத்தாய், அகன்று - பரவி, இருண்ட - கறுத்த, நிறை நீர் கயத்துள் - நிறைந்த நீர்வாவியில்.

(வி-ரை.) நுதல் - நெற்றி.

'எரிவிரிந்தன்ன' என்பதுமுதல் 'ஒருவேற்கு' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) எரி விரிந்தன்ன - நெருப்பு விரிந்தாற்போன்ற, பல இதழ் தாமரை - பலவிதழ்த் தாமரைமலரே, நெடு மயல் போர்த்த - மிக்க மயலான் மூடப்பட்ட, உடல் - உடலுள்ள, ஒருவேற்கு - ஒருத்தியாகிய வெனக்கு.

(வி-ரை.) எரி-ஆகுபெயர். தாமரை-ஆகுபெயர், அண்மை விளியாதலால் இயல்பாயிற்று. மயல் - மயக்கம்.

'குருமணி' என்பதுமுதல் 'நெட்டிரவகத்துள்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) குரு மணி - மாணிக்க மணிகளை, கொழிக்கும் - ஒதுக்குகின்ற, புனல் - (அருவி) நீரையுடைய, மலைக்கோட்டுழி - மலைச்சிகரத்து, நின் பதி - நின்னாயகனாகிய சூரியன், மறைந்த - ஒளித்த, நெடு இரவகத்துள் - நெடிய இரவில்.

(வி-ரை.) குருமணி - ஒளியிற் சிறந்தமணி, அது மாணிக்கமேயாதலால் அதனைக் 'குருமணி' என்றே கூறினர். கோடு - சிகரம்.

'குருகும்' என்பதுமுதல் 'கெழுமி' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) குருகும் - கொக்கும், புள்ளும் - (மற்றைப்) பறவைகளும், அருகு - சமீபத்தில், அணி - அணியாக, சூழ - சூழாநிற்ப, தேனொடும் - பெண்வண்டும், வண்டொடும் - ஆண்வண்டும், திருவொடும் - திருமகளும், கெழுமி - கூடி.

(வி-ரை.) அணி - வரிசை. சூழ்தல் - சுற்றிநிற்றல். திரு-ஆகுபெயர்.

'பெருந்துயிலின்பம்' என்பதுமுதல் 'கவர்மனத்தவரை' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) பெருதுயில் இன்பம்-பெரியதுயிலாகிய வின்பத்தை, பொருந்தும்- பொருந்தி, நடுநாள் - அத்தயாமத்தில், காணும்-காணாநின்ற, நின் கனவினுள் - நின் சொப்பனத்துள், கவர் மனத்தவரை- வேறுபட்ட மனத்தினரை.

(வி-ரை.) பொருந்துபு - செய்பு என்னும் வாய்ப்பாட் டிறந்த காலவினையெச்சம். கவர் - பிளவு, அது இங்கு வேறுபாட்டிற் காயிற்று.

'கோய்யுளை' என்பதுமுதல் 'உதவினையாயின்' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) கொய் உளை - கொய்த பிடரிமயிரையுடைய, கடுமான் - வேகமான குதிரைகளை, கொளுவிய - பூட்டிய, தேரொடு - தேருடனே, பூ உதிர் - மலர்களுதிராநின்ற, கானல் புறம் - கானற் புறத்தில், கண்டனன் என - யான்கண்டேனென்று, சிறிதொரு வாய்மை - சற்றேனுண்மை, உதவினையாயின் - சொல்வாயெனின்.

(வி-ரை.) கானல் - கழிக்கரைச் சோலை.

'சேகரம்' என்பதுமுதல் 'காட்சியதென்ன' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) சேகரம் - முடியால், கிழித்த - கிழிக்கப்பட்ட, நிறைமதி உடலம்-நிறைந்த மதியினதுடலம், கலை - கலைந்து, கலைசிந்திய-கலைகள் சிதறிய, காட்சியது என்ன - தோற்றம்போல.

(வி-ரை.) கிழித்த - செயப்பாட்டு வினைப் பொருளில் வந்தது. கலைந்தென - வினையெச்சப் பொருள்தந்துநின்றது. காட்சியது என்பதில் அது பகுதிப்பொருள் விகுதி.

'கருமான்' என்பதுமுதல் 'போருளினர்போல' என்பதுவரை.

(16—18 வரிகள்.)

(ப-ரை.) கடுமான் கீழ்ந்த - சிங்கத்தினாற் கிழிக்கப்பட்ட, கடமலை - யானையினது, பல் மருப்பு-பலகோடுகளை, எடுத்து எடுத்து உந்தி - தூக்கித் தூக்கித் தள்ளி, மணி குலம் சிதறி - மணிக்குலங்களை வீசி, கிளைஞர்கள் - உறவினரால், நச்சா - விரும்பப்படாத, பொருளினர்போல - பொருளையுடையவர்போல.

(வி-ரை.) நச்சா - செயப்பாட்டு வினைப்பொருளில்வந்தது. கீழ்தல் - கிழித்தல். கடமலை - மதநீர் சொரிகிறமலை (யானை). சிங்கத்தினும் வேகமுள்ள விலங்கு வேறின்று திண்மையான் அதனை 'கடுமான்' என்றார். மா-ன்கரச்சாரியை பெற்று மான் என்றாயிற்று.

'சாதகம்' என்பதுமுதல் 'சிதறுவதென்ன' என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) சாதகம் வெறுப்ப - சகோரப்புட்கள் வெறுக்குமாறு, சரிந்தகழ்ந்து ஆர்த்து - ஒழுகிப்பெயர்ந்தொலித்து, திரள் பளிங்கு - திரண்ட பளிக்குப்பாறைகளை, உடைத்து சிதறுவது என்ன - உடைத்துச் சிதறுகின்றதுபோல.

'வழியெதிர்கிடந்த' என்பதுமுதல் 'பூழி' என்பதுவரை.

(21—24 வரிகள்.)

(ப-ரை.) வழி எதிர் கிடந்த - வழிக்கெதிராகக் கிடந்த, உலமுடன் தாக்கி - கற்றூணோடு மோதி, வேங்கையும் - வேங்கை மலரும், பொன்னும் - பொன்னும், ஒருழி திரட்டி - ஓரிடத்துச் சேர்த்து, வரை அரமகளிர்க்கு - மலையில் வாழும் அரமகளிர்க்கு, அணி அணி கொடுத்து - அணியப்பட்ட ஆபரணமாகக்கொடுத்து, பனைகை-பனைபோன்ற துதிக்கையுள்ள, கடமா-மதயானையின், எருத்து உறு - பிடரியிலுள்ள, பூழி - புழுதியை.

(வி-ரை.) உலம் - கற்றூண். அரமகளிர் - தெய்வப்பெண்கள். கடமா - (கடம் - மதம், மா - விலங்கு) யானை.

'வண்டெழுந்தார்ப்ப' என்பதுமுதல் 'மாலையிட்டாங்கு' என்பதுவரை.

(25—28 வரிகள்.)

(ப-ரை.) வண்டு எழுந்து ஆர்ப்ப - (அதன் மதத்தை யுண்ணுகின்ற) வண்டுகளெழுந் தாரவாரிக்க, மணி எடுத்து - மணிகளையெடுத்து வீசி, அலம்பி - கழுவி, மயில் - மயில்கள், சிறை-சிறையை விரித்து, ஆல - நடிக்கவும், வலிமுகம் - குரங்குகள், பனிப்ப - (குளிரால்) நடுங்கவும், எதிர் - எதிரிலுள்ள, சுனை குவளை மலர் - சுனையில் குவளை மலர்களை, புறம் பறித்து - புறத்திற் பறித்து வீசி, வரையுடல் நிறைய - மலையிடனெங்கும் நிரம்பும்படி, மாலை இட்டாங்கு - மாலை சூட்டியவாறு.

(வி-ரை.) ஆர்த்தல் - ஆரவாரித்தல். அலம்பல்-கழுவல். ஆலல் - நடித்தல். பனித்தல் - நடுங்கல். உடல் - இடம்.

'நெடுமுடியருவி' என்பதுமுதல் 'கூடனாயகன்'
என்பதுவரை.

(29—31 வரிகள்.)

(ப-ரை.) நெடு முடி அருவி - நெடிய முகட்டின்கண் அருவி யானது, அகிலொடு கொழிக்கும் - அகிற்கட்டைகளையும் பிறவற்றை யும் அலைகளாற் கொழித்தற்கிடனாகிய, கைலை வீற்றிருந்த - கைலை மலையில் வீற்றிருக்கின்ற, கண்ணுதல் விண்ணவன் - கண்ணுதற் பகவானாகிய, நாடகக்கடவுள் - நடேசமூர்த்தியெனும், கூடல் நாயகன் - மதுரைப்பெருமானது.

(வி-ரை.) முடி முகடு என்பன சிகரமென்னும் பொருள. நாடகம் - நடனம்.

'தாமரையுடைத்த' என்பதுமுதல் 'இன்பாகுவன்'
என்பதுவரை.

(32—34 வரிகள்.)

(ப-ரை.) தாமரை உடைத்த - தாமரைமலரைத் தோற்பித்த, காமர் சேவடி - அழகிய ஸ்ரீபாதங்களை, நிறை உளம் - உள்ளத்திலே நிறையும்படி, தரித்தவர்போல - தரித்த அன்பர்போல, குறையுளம் நீங்கி - மனக்குறை நீங்கி, இன்பாகுவன் - இன்பமயமாவேன்.

(வி-ரை.) உடைத்தல் - தோற்பித்தல்.

தாமரைமலரே! ஒருவேற்கு, நின்பதிமறைந்த நெட்டிரவகத்துள், நின்கனவினுள், கவர்மனத்தவரைக் கானற்புறங் கண்டனனென, சிறிதொரு வாய்மை யுதவினையாயின், கைலை வீற்றிருந்த கூடல்நாயகன் காமர்சேவடி யுளந்தரித்தவர்போல் குறையுளநீங்கி யின்பாகுவனென வினைமுடிவுசெய்க. (௬௬)

திருக்கோவையார் உ௨௬-ம் செய்யுள்.

பதிபரிசுரைத்தல்.

பதிபரிசுரைத்தலென்பது — நகர் காட்டிக்கொண்டு சென்று, அந்நகரிடைப்புக்கு, அவ்விடத்துள்ள குன்றுகள், வாவிகள், பொழில்கள், மாளிகைகள், தெய்வப்பதி, இவையெல்லாந் தனித்தனி காட்டி, இதுகாண் நம்பதியாவதெனத் தலைமகளுக்குத் தலைமகன் பதிபரிசு காட்டாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

செய்குன் றுவையிவை சீர்மலர் வாவி விசும்பியங்கி
நைகின்ற திங்களெய்ப் பாறும் பொழிலவை ஞாங்கரெங்கும்
பொய்குன்ற வேதிய ரோதிட முந்திட மிந்திடமு
மெய்குன்ற வார்சிலை யம்பல வற்கிட மேந்திழையே.

கண்ணிவர் வளநகர் கண்டுசென் றடைந்து
பண்ணிவர் மொழிக்குப் பதிபரி சுரைத்தது.

(ப-ரை.) உவை செய் குன்று - உவைசெய் குன்றுகள், இவை சீர் மலர் வாவி-இவை நல்லமலரை யுடையவாவிகள், அவை விசும்பு இயங்கி நைகின்ற திங்கள்-அவை விசும்பின்கணியங்குதலான் வருந் தும் திங்கள், எய்ப்பு ஆறும் பொழில்-அயர் உயிர்க்கும் பொழில்கள், உந்திடம் ஞாங்கர் எங்கும்-உவ்விடம் மிசையெங்கும், பொய் குன்ற-உலகத்திற் பொய் (முதலாகிய குற்றங்) கெட, வேதியர் ஓதிடம் மறையவர் மறைசொல்லுமிடம், எந்திழை-எந்திழாய், இந்திடமும் - இவ்விடமும், எய்-எய்தற்குக் (கருவியாகிய), குன்றம் வார் சிலை-குன் றமாகிய நீண்ட வில்லையுடைய, அம்பலவற்கிடம் - அம்பலவற் கிருப் பிடம் (இத்தன்மைத்திவ்வூர்), எ-று.

(வி-ரை.) இவையென்பது தன்முன் னுள்ளவற்றை. உவை யென்பது முன்னின்றவற்றிற் சிறிதுசேயவற்றை. அவையென்பது. அவற்றினுஞ் சேயவற்றை. முன் சொல்லப்பட்டவையே யன்றி இத னையுங் கூறுகின்றே னென்பது கருத்தாகலின் இந்திடமுமென்னு மும்மை இறந்ததுதழீஇய வெச்சவும்மை. உந்திடம் இந்திடமெனச் சுட்டீறு திரிந்து நின்றன. பண்ணிவர்மொழி - பண்போலுமொழி.

நேரிசையாசிரியப்பா.

எரிதெறற் கரிய பொடிபொறுத் தியங்கினை
முகிறலை சுமந்த ஞிமிறெழுந் திசைக்கும்
பொங்கருட் படுத்த மலர்கால் பொருந்துக
கருங்கடத் தெதிர்ந்த கொடும்புலிக் கொதுங்கினை
வரியுடற் செங்கண் வராலின மெதிர்ப்ப
வுழவக் கணத்த ருடைவது நோக்குக
கொலைஞர் பொலிந்த கொடித்தேர்க் கணங்கினை
வைதியர் நிதிமிக விதிமக முற்றி
யவ்விர தத்துறை யாடுதல் கெழுமிப்
பொன்னுருள் வையம் போவதுங் காண்க

வாறலை பெயினு ரமர்க்கலிக் கழுங்கிளை
பணைத்தெழு சாலி நெருங்குபு புகுந்து
கழுநீர் களைஞர்தங் கம்பலை காண்க
தழறலைப் பழுத்த பரன்முரம் படுத்தனை
சுரிமுகக் குழுவளை நிலவெழச் சொரிந்த
குளிர்வெண் டரளக் குவாவிவை காண்க
வலகைநெட் டிரதம் புனலெனக் காட்டினை
வன்மீ னெடுங்கயல் பொதுவினை யகத்துக்
கிடங்கெனப் பெயரிய கருங்கடல் காண்க
காகளம் பூசற் றுடியொலி யேற்றனை
குடுமியஞ் சென்னியர் கருமுகில் விளர்ப்பக்
கிடைமுறை யெடுக்கு மறையொலி கேண்மதி
யமரர்கண் முனிக்கணத் தவைமுன் றவறு
புரிந்துட னுமைகண் புதைப்பமற் றுமையு
மாடகச் சயிலச் சேகரந் தொடர்ந்த
வொற்றையம் பசுங்கழை யொல்கிய போல
வுலகுயிர்க் குயிரெனுந் திருவுரு வணைந்து
வளைக்காங் கொடுகண் புதைப்பவவ் வுழியே
யுலகிரு டுரக்குஞ் செஞ்சுடர் வெண்சுடர்
பிரமனுட் பட்ட நிலவுயி ரனைத்துந்
தமக்கெனக் காட்டு மொளிக்கண் கெடலு
மற்றவர் மயக்கங் கண்டவர் கண்பெறத்
திருநுதல் கிழித்த தனிவிழி நாயகன்
றங்கிய கூடற் பெருநக
ரீங்கிது காண்கமுத் தெழினகைக் கொடியே.

எரிதெறற்கரிய - எழினகைக்கொடியே. பகுதி-உடன்போக்கு.
துறை - பதிபரிசுரைத்தல்.

முத் தெழினகைக் கொடியே.
(35—வது வரி.)

(ப-ரை.) முத்து - முத்துப்போன்ற, எழில் - அழகாகிய, நகை - பற்களுள்ள, கொடியே - கொடிபோல்வாய்.

(வி-ரை.) கொடி - ஆகுபெயர்.

எரிதெறற் கரிய பொடிபொறுத் தியங்கினை.

(1—வது வரி.)

(ப-ரை.) எரி - நெருப்புப்பாலும், தெறற்கரிய - சுடுதற்குக் கூடாத, பொடி - (பாலையில் வெவ்விய) பரற்பொடிகளை, பொறுத்து - சகித்துக்கொண்டு, இயங்கினை - நடந்தனை.

(வி-ரை.) இயங்கல் - ஈண்டு நடத்தற்பொருட்டு.

'முகில்' என்பதுமுதல் 'பொருந்துக' என்பதுவரை.

(2—3 வரிகள்.)

(ப-ரை.) முகில் - மேகங்களை, தலை - தலையின்கண், சுமந்த - தாங்கிய, ஞிமிறு - வண்டுகள், எழுந்து - எழுந்து, இசைக்கும் - ஒலிக்காநின்ற, பொங்கருள் - சோலையினிடத்தே, படுத்த - கீழேபடுத்த, மலர் - மலரில், கால் - நின்காலை, பொருந்துக - வைத்திடுக.

(வி-ரை.) இசைத்தல் - ஒலித்தல். பொங்கர் - சோலை.

'கருங்கடத்து' என்பதுமுதல் 'நோக்குக' என்பதுவரை.

(4—6 வரிகள்.)

(ப-ரை.) கரு - கரிய, கடத்து - காட்டினிடத்து, எதிர்ந்த - எதிர்த்த, கொடும்புலிக்கு - கொடுமையான புலிக்கு, ஒதுங்கினை - பயந்தனை, வரியுடல் - வரியுடலும், செம் கண் - செங்கண்ணுமுள்ள, வரால் இனம் - வரால்மீன் கூட்டங்கள், எதிர்ப்ப - துள்ளியெழுதலால், உழவக்கணத்தர் - கூட்டமாகிய உழவர்கள், உடைவது - பிதிர்ந்தோடுவதை, நோக்குக - பார்ப்பாயாக.

(வி-ரை.) கடம் - காடு. எதிர்த்தல் - துள்ளியெழுதல்.

'கொலைஞர்' என்பதுமுதல் 'போவதுகாண்க' என்பதுவரை.

(7—10 வரிகள்.)

(ப-ரை.) கொலைஞர் - மறவர், பொலிந்த - எறிவந்த, கொடி தேர்க்கு - கொடியையுடைய தேர்களைக்கண்டு, அணங்கினை - வருந்தினை, வேதியர் - மறையோர், நிதி மிக-செல்வம் வளருமாறு, விதி மகம் முற்றி-யாகங்களை முறைமையான் முடித்து, அவ்விரதம்-அவ்விரதத்தின்பொருட்டு, துறையாடுதல் செழுமி - நீராடல் செய்து, பொன் உருள் வையம் - பொன்னாலாகிய ஆழித்தேர்மேல், போவது காண்க - போகின்றதை நோக்குக.

(வி-ரை.) மறவர் - கொலையையே தொழிலாக வுடையவராத லால் அவரைக் 'கொலைஞர்' என்ருர்.

'ஆறலையெயினர்' என்பதுமுதல் 'கம்பலைகாண்க' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) ஆறு அலை எயினர் - வழிபறிப்போராகிய வேடர் களது, அமர்க்கலிக்கு - போரொலிக்கு, அழுங்கின - நொந்தன, பணைத்து எழு சாலி - அடிபருத்து மேல்வளர்ந்த நெற்பயிர்களை, நெருங்குபு புகுந்து - நெருங்கிப் புகுந்து, கழுநீர் - செங்கழுநீர்க்களை யை, களைஞர் - பறிப்பவரது, கம்பலை காண்க-ஓசையைக் காண்க.

(வி-ரை.) அழுங்கல் - நோதல். பணைத்தல் - பருத்தல். தம் - சாரியை.

'தழறலைப்பழுத்த' என்பதுமுதல் 'காண்க' என்பதுவரை.

(14—16 வரிகள்.)

(ப-ரை.) தழல் தலைப்பழுத்த - நெருப்பானது தம்மிடத்தே பழுத்துள்ள, பரல் முரம்பு - பருக்கைக் கண்மேட்டை, அடுத்தன - நெருங்கிவந்தன, சுரி முக வளை குழு - சுரிந்த முகத்தினையுடைய சங்கினம், நிலவு எழ சொரிந்த - சந்திரிகை வெளிப்படவீன்ற, குளிர் வெண் தரளக்குவால் இவை காண்க - தட்பமாகிய வெண்முத்தக் குவையாகிய விவற்றைக் காண்க.

(வி-ரை.) தலை-எழனுருபு. தரளம் - முத்து. குவால் - குவியல்.

'அலகைநெட்டிரதம்' என்பதுமுதல் 'கருங்கடல்காண்க' என்பதுவரை.

(17—19 வரிகள்.)

(ப-ரை.) அலகை நெடு இரதம் - நெடிய பேய்த்தேரை, புனல் என காட்டின - நீரென்று காட்டின, வன்மீன் - முதலைகள், நெடு கயல் - நெடிய கயல்களும், பொதுவினையகத்து - முன்போக் கிய வினையகத்தையுடைய ஒன்ருேடொன்று மோதுகின்ற தொழி லைத் தன்னிடத்துள்ள, கிடங்கு என பெயரிய - அகழென்று பெ யர்பெற்ற, கருங்கடல் காண்க - பெருங்கடலைக் காண்க.

(வி-ரை.) பேய்த்தேர் - கானனீர். கிடங்கு - அகழ், இது ஆகுபெயர்.

'காகளம்' என்பதுமுதல் 'கேண்மதி' என்பதுவரை.
(20—22 வரிகள்.)

(ப-ரை.) காகளம் - காகள வோசையையும், பூசல் துடி ஒலி - போர்த்தொழிற்குரிய பம்பையொலியையும், எற்றினே - செவியேற்றனே; குமி அம்சென்னியர்-சௌளம் வருத்த தலையினராகிய பார்ப்பார், கருமுகில் விளர்ப்ப - கருமுகிலோசை நாணுமாறு, கிடை - வேதப்பள்ளியில், முறை எடுக்கும் - முறையாகச் சந்தைசொல்லும் வரலாற்று முறையே அத்தியயநஞ் செய்கின்ற, மறை ஒலி - வேதவொலியை, கேண்மதி - நீ கேட்பாயாக.

(வி-ரை.) மதியென்பது முன்னிலைக்கண் வருமோ ரிடைச்சொல். காகளம் - ஊதுகொம்பு, இதனைக் காளமெனவுங் கூறுப. பூசல் - போர். விளர்த்தல் - நாணுதல். கிடை - வேதபாடசாலை.

'அமரர்கள்' என்பதுமுதல் 'ஒல்கியபோல' என்பதுவரை.
(23—26 வரிகள்.)

(ப-ரை.) அமரர்கள்-தேவர்களும், முனி கணத்தவை - முனிவர்குழாமும், முன் - ஆதியில், தவறு புரிந்து-தவறுசெய்து, உடன்-உடனே, உமை கண் புதைப்ப-உமாதேவி கண்களைமூட, உமையும்-உமையும், ஆடகம் சயிலச்சேகரம்-பொன்மலைச் சிகரத்தை, தொடர்ந்த - தொடர்ந்த, ஒற்றை அம் பசுங்கழை - இளமையாகிய வொரு மூங்கிலானது, ஒல்கியபோல - அசைவதுபோல.

(வி-ரை.) தவறு - பிழை. புதைத்தல் - மூடல். ஆடகம் - பொன். சயிலச்சேகரம்-மலையுச்சி. கழை-மூங்கில். ஒல்கல்-அசைதல்.

'உலகுயிர்க்கு' என்பதுமுதல் 'கண்புதைப்ப' என்பதுவரை.
(27—28 வரிகள்.)

(ப-ரை.) உலகு உயிர்க்கு-உலகத்திலுள்ள வுயிர்களுக்கு, உயிர் எனும் - உயிராகிய, திருவுரு அணைந்து - சிவபிரான் திருமேனியைப் புணர்ந்து, வளை காரங்கொடு - வளையணிந்த கைகளால், கண் புதைப்ப - கண்களைமூட.

(வி-ரை.) கொடு-மூன்றுருவதன் சொல்லுருபு.

'அவ்வுழியே' என்பதுமுதல் 'தனிவிழிநாயகன்' என்பதுவரை.

(28—33 வரிகள்.)

(ப-ரை.) அவ்வுழியே-அப்பொழுதே, உலகு இருள் தூக்கும்-உலகத்திற் பரந்தவிருளை விலக்கியருளிய, செஞ்சுடர் - சூரியனும், வெண்சுடர்-சந்திரனும், பிரமன் உட்பட்ட-பிரமன்முதலாகிய, நிலவுயிர் அனைத்தும்-விளங்காநின்ற அகிலவுயிர்களும், தமக்கு என காட்டும் - தத்தமக் குரியனவாய பௌதிக பதார்த்தங்களைக் காட்டாநின்ற, ஒளி கண் கெடலும் - கட்புல வொளியானது மழுங்குதலும், அவர் மயக்கம் - அவர்களது மயக்கத்தை, கண்டு - அறிந்து, அவர் - அவர்கள், கண் பெற - மீளவுங் கண்ணொளி பெறுமாறு, திரு நுதல் கிழித்த - அழகிய நெற்றியினிடத்தே திறந்த, தனி விழி நாயகன் - ஒப்பற்ற விழியுள்ள கடவுளது.

(வி-ரை.) அகிலம் - எல்லாம். பௌதிக பதார்த்தங்கள் - பூத சம்பந்தத்தா லுண்டான பொருள்கள்.

'தாங்கிய' என்பதுமுதல் 'ஈங்கிதுகாண்க' என்பதுவரை.

(34—35 வரிகள்.)

(ப-ரை.) தாங்கிய - சோமசுந்தரச் செழியர்பிரானாகிப் பாதுகாத்த, கூடல் பெருநகர் இது - மதுரையாகிய மாநகரம் இது, ஈங்கு காண்க - இவ்விடத்தே கண்ணுற்றிடுக.

(வி-ரை.) கண்ணுறல் - ஒருசொல்.

முத்தெழில் நகைக்கொடியே! மலர்க்கால் பொருந்துக, உடைவது நோக்குக, வையம்போவது காண்க, களைஞர்தங் கம்பலைகாண்க, தரளக் குவாலிவைகாண்க, கருங்கடல் காண்க, மறையொலி கேண்மதி, திருநுதல் கிழித்த தனிவிழிநாயகன் தாங்கிய கூடற்பெருநகரிது காண்கவென வினைமுடிவுசெய்க. (௭0)

திருக்கோவையார் ௨௪௩-ம் பாடல்.

தேருந்து புலம்பல்.

தேருந்து புலம்பலென்பது—தலைமகனது வாய்மைகூறி வருத்தந் தணியாநின்ற தோழிக்கு, யான் அவர்கூறிய மொழியின்படியே மெய்ம்மையைக் கண்டுவைத்தும், என்னெஞ்சமூ நிறையும் என் வய

மாய் நிற்கின்றனவில்லை, அதுவேயுமன்றி, என்னுயிரும் பொறுத்தற் கரிதாகாநின்றது, இவை யிவ்வாறாதற்குக் காரணம் யாதென் றறி கின்றிலேனெனத் தான் றேறாமைகூறிப் புலம்பாநிற்றல். அதற் குச் செய்யுள்:—

மன்செய்த முன்னாண் மொழிவழி யேயன்ன வாய்மைகண்டு
மென்செய்த நெஞ்சு நிறையுநில் லாவென தின்னுயிரும்
பொன்செய்த மேனியன் றில்லையு ரூரிற் பொறையரிதா
முன்செய்த தீங்குகொல் காலத்து நீர்மைகொன் மொய்குழலே.

தீதறுகண்ணி தேற்றத்தேறாது
போதறுகுழலி புலம்பியது.

(ப-ரை.) மொய் குழல் - மொய்குழலையுடையாய், முன்னாள் - முற்காலத்து, மன் செய்த - மன்னன் நமக்குதவிய, மொழிவழியே- மொழியின்படியே, அன்ன வாய்மை கண்டும் - அத்தன்மைத்தாகிய மெய்மையைக் கண்டுவைத்தும், நெஞ்சும் நிறையும் நில்லா-என்னெ ஞ்சமு நிறையு மென் வயமாய் நிற்கின்றில, என் செய்த - இவை யென்செய்தன, அதுவேயுமன்றி, எனது இன் உயிரும் - எனதினிய வுயிரும், பொன்செய்த மேனியன் - பொன்னையொத்த மேனியை யுடையவனது, தில்லை உாரின் - தில்லையை யுறாதாரைப்போல, பொறை அரிதாம் - வருத்தம் பொறுத்த லரிதாகாநின்றது, முன் செய்த தீங்குகொல் - (இவை யிவ்வாறாதற்குக் காரணம்)யான் முன் செய்த தீவினையோ, காலத்து நீர்மைகொல்-(அன்றிப்) பிரியுங்கால மல்லாத இக்காலத்தி னீர்மைகொல்லோ (அறிகின்றிலன்), எ-று.

(வி-ரை.) மொழிவழியேகண்டு மெனவியையும். நெஞ்ச நில் லாமையாவது - நம்மாட்டு அவரன்பு எத்தன்மைத்தோவென் றை யப்படுதல். நிறை நில்லாமையாவது - பொறுத்த லருமையான் அந்நோய் புறத்தார்க்குப் புலனாதல். நில்லாவென்பது பாடமாயின் தனித்தனிக் கூட்டுக. பொன்செய்தவென்புழிச் செய்தவென்பது உவமச்சொல். உயிர் துன்பமுழத்தற்குக் காரணமாதலின், அதனை யுந் துன்பமாக நினைந்து 'இன்னுயிரும் பொறையரிதாம்' என்றாள்.

நேரிசையாசிரியப்பா.

புட்பெயர்க் குன்றமு மெழுவகைப் பொருப்பு
மேல்கடற் கவிழ்முகப் பொரியுடன் மாவு

நெடுங்கடற் பரப்பு மடுந்தொழி லரக்கரு
மென்னுளத் திருளு மிடைபுகுந் துடைத்த
மந்திரத் திருவேன் மதங்கெழு மயிலோன்
குஞ்சரக் கொடியொடும் வள்ளியங் கொழுந்தொடும்
கூறுக் கற்பக் குறித்துநிலை செய்த
புண்ணியங் குமிழ்த்த குன்றுடைக் கூட
னிறைந்துறை கறைமிடற் றறங்கெழு பெருமான்
பேரரு ளளித்த மாதவர் போல
முன்னொரு நாளி லுடலுயிர் நீயென
வுள்ளங் கரிவைத் துரைசெய்த வூரர்
தம்மொழி திரிந்து தவறுநின் றுளவே
லவர்குறை யன்று லொருவன் படைத்த
காலக் குறிகோ லன்றியு முன்னைத்
தியங்குடை லீட்டிய கருங்கடு வினையாற்
காலக் குறியை மனந்தடு மாறிப்
பின்முன் னறித்தநம் பெருமதி யழகுகொ
னனவிடை யிற்றக் கனவிடைக் கண்ட
வுள்ளெழு கலக்கத் துடன்மயங் கினமாற்
குறித்தவிவ் வீட்டுநிலை யொன்றே
மறிக்குலத் துணையின் விழிநோக் கினளே.

புட்பெயர்குன்றமுட்டிநோக்கினளே. **பகுதி** - வரைபொருட் பிரிதல். **துறை** - தேருதுபம்பல்.

மறிக்குலத் துழையின் விழிநோக் கினளே.
(22—ஆம் வரி.)

(ப-ரை.) மறி குலத்து - மான்கூட்டத்துள், உழையின் - பெண் மான்போல, விழி - (மருண்டு) விழிக்கின்ற, நோக்கினளே - கண்களையுடையாய்.

(வி-ரை.) இன் - ஐந்தனுருபு, ஒப்புப்பொருளது.

'புட்பெயர்க்குன்றமும்' என்பதுமுதல் 'மந்திரத்திருவேல்' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை.) புள் பெயர் குன்றமும் - க்ரௌஞ்சமென்னு மலையும், எழுவகை பொருப்பும் - எழுவகையாகிய மலையும், கடல்மேல்-கடலினிடத்து, கவிழ் முகம் - கவிழ்ந்த முகமுடைய, பொரியுடல்-பொரியரையாகிய வுடலையுடைய, மாவும் - மாமரவடிவான சூரனையும், நெடு கடல் பிரப்பும் - பரவிய நெடிய கடலும், அடுந்தொழில் அரக்கரும் - கொல்லுந்தொழிலையுடைய அரக்கர்களும், என் உளத்து இருளும் - என்னுள்ளத்தின்கண்ணுள்ள இருளுமாகிய இவற்றை, இடைபுகுந்து - நடுவிற் புகுந்து, உடைத்த - அழித்த, மந்திரத் திருவேல்-மந்திரம்பொருந்திய அழகிய வேலினையும்.

(வி-ரை.) எழுவகைமலை - ஸப்தகுலாசலங்கள். மேல் - ஏழனுருபு. அடுதல் - கொல்லுதல்.

'மதங்கெழு' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை.

(5—8 வரிகள்.)

(ப-ரை.) மதம் கெழு - வலிமை பொருந்திய, மயிலோன்-மயிலையுமுடைய முருகக்கடவுள், குஞ்சரக் கொடியொடும்-தெய்வயானை நாச்சியாரோடும், வள்ளி அம் கொழுந்தொடும் -இவள்ளிநாச்சியாரோடும், குறித்து கூறு கற்பம் - குறித்துக் கூறப்படாத கற்பந்தோறும், நிலைசெய்த - நிலைபெற்றிருந்த, புண்ணியம் குமிழ்த்த - புண்ணியமே திரண்டு வடிவங்கொண்ட, குன்று - திருப்பரங்குன்றமென்னு மலையை யொருபாலுடைய, கூடல் - மதுரைப்பதியில்.

(வி-ரை.) குமிழ்த்தல் - திரளல். குஞ்சரம் - யானை, இது அண்மைக்கேற்பத் தெய்வயானையென் றுபசாரமாயிற்று.

'நிறைந்து' என்பதுமுதல் 'மாதவர்போல' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) நிறைந்து - நிறைந்து, உறை - வாசமாயிருக்கின்ற, கறை மிடறு-காளகண்டத்தையுடைய, அறம் கெழு-தருமமே யுருவமாகிய, பெருமான் - எமது பெருமானாகிய சோமசுந்தரம், பொருள் அளித்த- தனது பெரிய கிருபையைத்தந்த, மாதவர்போல - பெரிய தவர்களைப்போல.

(வி-ரை.) உறைதல் - வசித்தல். கறை, காளம் என்பன விடத்தின் பரியாய நாமங்கள்.

'முன்னொருநாளில்' என்பதுமுதல் 'நின்றுளவேல்' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) முன் ஒருநாளில் - முன்னமொருகாலத்தில், உடல் உயிர் நீ என - எனதுடலுக்கு நீயுயிரென்று, உள்ளம் கரி வைத்து - நமதுள்ளத்தைச் சாட்சியாகவைத்து, உரை செய்த ஊரர் - உறுதியுரைத்த நந்தலைவர், தம் மொழி திரிந்து - தமது சொல் மாறுபட்டு, தவறு - குற்றம், நின்றுளவேல் - உண்டாகுமானால்.

(வி-ரை.) திரிதல் - மாறுபடுதல்.

'அவர்குறையன்றால்' என்பதுமுதல் 'அழகுகோல்' என்பதுவரை.

(14—18 வரிகள்.)

(ப-ரை.) அவர் குறை அன்று - அஃது அவர் குற்றமன்று, ஒருவன் படைத்த - ஒருவனாகிய பிரமனாலே படைக்கப்பட்ட, காலம் குறிகொல் - காலத்தினியல்போ, அன்றியும் - அல்லாமலும், முன்னை - முற்பிறப்பில், தியங்கி - மயங்கி, உடல் - தேகமானது, ஈட்டிய - சம்பாதித்த, கரு கடு வினையால் - கரிய தீவினையால் வந்த, காலக்குறியை - காலக்குறியை, மனம் தடுமாறி - மனந் தடுமாற்றத்தைப் பொருந்தி, பின்முன் குறித்த - பின்முன்குறித்த, நம் - நமது, பெரு மதி - பெரிய புத்தியினது, அழகுகொல் - தன்மையோ.

(வி-ரை.) ஆல்-அசை. கொல் - ஐயம்.

'நனவிடைநவிற்ற' என்பதுமுதல் 'நிலையோன்றே' என்பதுவரை.

(19—21 வரிகள்.)

(ப-ரை.) நனவு இடை நவிற்ற - நனவிலேசொல்ல, கனவு இடை கண்ட - அதைக் கனவின்கண்கண்ட, உள் எழு கலக்கத்துடன் - மனதிற்றோன்றுங் கலக்கத்தோடு, மயங்கினம் ஆல் - யாம மயங்கினமாதலால், குறித்த - துன்பமாக நினைந்த, இ இடையில் ஒன்

றே-இதுபோழ்து உயிருடனிலேத்திருத்த லொன்றுமே (பொறுத்த லரிது).

(வி-ரை.) நனவு - ஜாக்ராவஸ்த்தை. ஆல் - ஆதலால். குறித்தல் - நினைத்தல். இடை - பொழுது.

நோக்கினளே! மயிலோன் குன்றுடைக் கூடற்பெருமானளித்த மாதவர்போல, முன்னொருநா ளிவ்வுள்ளங் கரிவைத்து உரைசெய்த ஆரர் தம்மொழிதிரிந்து தவறுகின்றுளவேல், அவர் குறையன்றால், காலக்குறிகொல், அன்றியும் நம் பெருமதி யழகுகொல், உள்ளெழு கலக்கத்துடன் மயங்கினமால்; இவ்விடையிலே யொன்றேயென வினைமுடிவுசெய்க. (எச)

திருக்கோவையார் கஅஅ-ம் செய்யுள்.

பொழுதுகண்டு மயங்கல்.

பொழுதுகண்டுமயங்க லென்பது — சுடரொடு புலம்பாநின்றவள், கதிரவன் மறைந்தான், காப்பவர்சேயர், அதன்மேலிவ்விடத்து மீனுண்ட அன்னங்களும் போய்த் தஞ்சேக்கைகளை யடைந்தன, இனியான் ஆற்றுமா றென்னோவென, மாலைப்பொழுதுகண்டு மயங்காநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புகுநர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கைக ணோக்கினவா
லகலோங் கிருங்கழி வாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே.

மயறரு மாலே வருவது கண்டு
கயறரு கண்ணி கவலே யுற்றது.

(ப-ரை.) பகலோன் - கதிரவன், கரந்தனன் - மறைந்தான்; காப்பவர் சேயர்-(இம்மாலைக்காலத்து வருந்துன்பத்தைக்)காக்குமவர் சேயராயிருந்தார்; அதுவேயுமன்றி, அகல் ஓங்கு இரும் கழிவாய்- அகன்று நீருயர்ந்த பெரிய கழியிடத்து, கொழுமீன் உண்ட-கொழுமீனை யுண்ட, அன்னங்கள்-அன்னங்கடாமும்(இவ்விடத்தைவிட்டு), பற்று அற்றவர்க்கு - புலன்களிற் பற்றற்றவர்க்கு, புகலோன் - புகலிடமாயுள்ளான், புகுநர்க்கு - தன்கட் புகுவார்க்கு, போக்கு அரியோன் - பின் போதரவரியவன், எவரும் புகல - எல்லாருமேத்த, தகலோன் -

தகுதலையுடையவன், பயில் - (அவன்) பயிலும், தில்லை - தில்லை வரைப்பில், பைம்பொழில் - பைம்பொழில்களினுள்ளவாகிய, சேக்கைகள் நோக்கின-(இவ்விடத்தை விட்டுத் தம்படுக்கைகளை நோக்கின, (இனி யென்செய்வேன்), எ-று.

(வி-ரை.) ஓங்குதல் - ஓதமெறி நீருயர்தல். கொழுமீனென்பது ஓர் சாதிமீன்.

நேரிசையாசிரியப்பா.

ஆயிரம் பணுடவி யரவுவா யணைத்துக்
கருமுகி னிறத்த கண்ணனிற் சிறந்து
நிலையுட லடங்கத் திருவிழி நிறைத்துத்
தேவர்நின் றிசைக்குந் தேவனிற் பெருகிக்
குருவளர் மரகதப் பறைதழை பரப்பி
மணிதிரை யுகைக்குங் கடலினிற் கவினி
முள்ளெயிற் றரவ முறித்துயிர் பருகிப்
பொள்ளென வானத் தசனியிற் பொலிந்து
பூதமைந் துடையுங் காலக் கடையினு
முடறழை நிலைத்த மறமிகு மயிலோன்
புரந்தரன் புதல்வி யெயினர்தம் பாவை
யிருபா லிலங்க வுலகுபெற நிறைந்த
வருவியங் குன்றத் தணியணி கூடற்
கிறையவன் பிறையவன் கறைகெழு மிடற்றோன்
மலர்க்கழல் வழுத்துநங் காதலர் பாசறை
முனைப்பது நோக்கிவேன் முனையவி ழற்றத்துப்
பெரும்பக லிடையே பொதும்பரிற் பிரிந்த
வளைகட் கூருகிர்க் கூக்குரன் மொத்தையைக்
கருங்கட் கொடியினங் கண்ணறச் சூழ்ந்து
புகையுடல் புடைத்த விடவினை போல
மனங்கடந் தேறு மதில்வளைத் தெங்குங்

கருநெருப் பெடுத்த மறமருண் மாலை
நின்வரற் கேவர் நல்குநர் நின்வரல்
கண்டுட லிடைந்தன காட்டுவல் காண்மதி
மண்ணுடல் பசந்து கறுத்தது விண்ணமு
மாற்று தழன்றுகாற் றின்முக மயங்கி
யுடுவெனக் கொப்பு ளுடனிறை பொடித்த
தீங்கிவற் றடங்கிய விருதிணை யுயிர்களுந்
தம்முடன் மயங்கின வொடுங்கின வுறங்கின
வடங்கின வவிந்தன வயர்ந்தன கிடந்தன
வெனப்பெறின் மாலை யென்னுயி ருளைப்பது
மவர்திற னிறப்பது மொருபுடை கிடக்க
வுள்ளது மொழிமோ நீயே விண்ணுழை
வந்தனை யென்னில் வருகுறி கண்டிலன்
மண்ணிடை யெனிலோ வவ்வயி னுன
கூடிநின் றனையெனிற் குறிதவ றுவாற்
றேம்படர்ந் தனனெனிற் றிசைகுறிக் குநரா
லாதலி னின்வர வெனக்கே
யோதல் வேண்டும் புலன்பெறக் குறித்தே.

ஆயிரம்பணுடைவி - புலன்பெறக்குறித்தே. பருதி - ஒருவழித் தணத்தல். துறை - பொழுதுகண்டு மயங்கல்.

'ஆயிரம்' என்பதுமுதல் 'கண்ணனிற்சிறந்து' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) ஆயிரம் - ஆயிரமென்னு மெண்ணைப்பெற்ற, பண அடவி - படக்காட்டினையுடைய, அரவு - (சேடனெனனும்) பாம்பை, வாய் அணைத்து - வாயிற்கவ்வி, கருமுகில் நிறத்த - கருமுகில் போலு நிறமுள்ள, கண்ணனிற் சிறந்து - கண்ணன்போற் சிறப்புற்று.

(வி-ரை.) பணம் - படம். முகில் - மேகம். இன் - ஐந்சனுருபு, ஒப்புப்பொருட்டு.

'நிலையுடலடங்க' என்பதுமுதல் 'தேவனிற்பெருகி'

(3—4 வரிகள்.)

(ப-ரை.) நிலை உடல் அடங்க-நிலையான தன்னுடன் முழுதும், திரு விழி நிறைத்து - அழகிய கண்களை நிறைத்து, தேவர் நின்று இசைக்கும் - தேவர்களின்று துதிக்கும், தேவனிற்பெருகி - இந்திரன்போல பெருமைபெற்று.

(வி-ரை.) அடங்க - முழுதும். இன் - ஐந்தாவதனுருப்புப் பொருளது.

'குருவளர்' என்பதுமுதல் 'கவினி' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) குரு வளர் - நிறம் மிகுகின்ற, மரகதம் - மரகதமணி போலும், பறை தழை பரப்பி - இறகுகளைத் தழைவாக விரித்து, மணி - (முத்துமுதலிய) மணிகளை, திரை உதைக்கும் - அலைகளொதுக்காகின்ற, கடலினில் - கடலைப்போல, கவினி-அழகுற்று.

(வி-ரை.) குரு - ஒளியெனினுமாம். மரகதம் - பசைமணி. பறைதழை - சிறகு.

'முள்ளெயிற்றரவம்' என்பதுமுதல் 'மறமிகுமயிலோன்' என்பதுவரை.

(7—10 வரிகள்.)

(ப-ரை.) முள் எயிறு அரவம் - முட்போன்ற பற்களையுடைய பாம்புகளை, முறித்து - முறித்து, உயிர் பருகி - அவற்றினுயிரை யுண்டு, பொள் என - விசையாக, வானத்து அசனியின் - மேகத்தின் இடிமுழக்கம்போல், பொலிந்து - முழங்கி, பூதம் ஐந்து உடையும் - (பிருதுவி முதலிய) பஞ்ச பூதங்களுமழியும், காலக்கடையினும் - உகாந்தகாலத்தினும், உடல் தழை நிலைத்த - உடறழைந்து நிலைபெற்ற, மறம் மிகு மயிலோன் - வலிமைமிக்க மயிலை வாகனமாக வுடையவன்.

(வி-ரை.) முறித்தல் - துண்டித்தல்.

'புரந்தரன்புதல்வி' என்பதுமுதல் 'அணியணிகூடல்' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) புரந்தரன் புதல்வி-இந்திரகுமாரியாகிய தெய்வயானையும், எயினர் தம் பாவை - வேடுவர் குமாரியாகிய வள்ளியம்மையும்,

இருபால் இலங்க - இருபுடையினும் விளங்க, உலகு பெற - உலகிலுள்ளார் வேண்டும் வரங்களைப்பெற, நிறைந்த - நிறைந்தெழுந்தருளிய, அருவி அம் குன்றத்து - அருவிநீரினையுடைய திருப்பரங்குன்றத்தை, அணி அணி கூடல் - அழகாகவணிந்த கூடலென்னுந் திருப்பதிக்கு.

(வி-ரை.) பாவை - ஆகுபெயர். புடை - பக்கம். இலங்குதல் - விளங்குதல். உலகு - ஆகுபெயர்.

'இறையவன்' என்பதுமுதல் 'காதலர்' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

(ப-ரை.) இறையவன் - கடவுள், பிறையவன் - பிறையையணிந்தவன், கறை கெழு மிடற்றோன் - காளகண்டத்தையுடைய சோமசுந்தரத்தினது, மலர் கழல் - மலர்போன்ற திருவடியை, வழுத்தும் - துதிக்காநின்ற, நம் - நமது, காதலர் - தலைவர்.

(வி-ரை.) பிறையென்றது ஒருகலையாகிய சந்திரனை, இது "தாரென்ன வோங்குஞ் சடைமுடி மேற்றனித் திங்கள்வைத்த, காரென்ன வாருங் கறைமிடற் றம்பலவன்" என்னுந் திருக்கோவைச் செய்யுளுரையா லினிதுவிளங்கும்.

'பாசறை' என்பதுமுதல் 'அற்றத்து' என்பதுவரை.

(15—16 வரிகள்.)

(ப-ரை.) பாசறை - பகைவர் பாசறையிலுள்ளார், முனைப்பது நோக்கி-எதிர்ப்பதைநோக்கி, வேல் முனை அவிழ் - வேலினது முனையுறையினின்றவிழ்ந்த, அற்றத்து - சமயத்தில்.

(வி-ரை.) பாசறை - படைவீடு. முனைத்தல் - எதிர்த்தல். முனை - நுனி. அற்றம் - சமயம்.

'பெரும்பகலிடையே' என்பதுமுதல் 'மோத்தையை' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) பெரும் பகலிடையே-நல்ல மத்தியானத்திற்றானே, பொதும்பரிற்பிரிந்த-மரப்பொந்துகளினின்றும் வெளிப்பட்ட, வளை கண் - வளைந்த கண்களையும், கூர் உகிர் - கூரிய நகங்களையும், கூக்குரல் - கூவுகின்ற குரலினையுமுடைய, மோத்தையை - கோட்டானை.

(வி-ரை.), பொதும்பர் - மரப்பொந்து. மொத்தை - கோட்டான்.

'கருங்கண்' என்பதுமுதல் 'விடவினைபோல' என்பதுவரை.
(19—20 வரிகள்.)

(ப-ரை.) கரு கண் - கரிய கண்களையுடைய, கொடி இனம் - காக்கைக் கூட்டங்கள், கண்ணற - கண்ணோட்டமின்றி, சூழ்ந்து - (அதனைச்) சூழ்ந்து, புகை உடல் - புகைபோன்ற நிறத்தினையுடைய அதனுடலை, புடைத்த - குத்திய, விடவினைபோல - கொடிய செய்கைபோல.

(வி-ரை.) கொடி - காக்கை. கண் - கண்ணோட்டம். சூழ்தல் - வளைதல். விடம் - கொடுமை. வினை - செயல்.

'மனங்கடந்தேரு' என்பதுமுதல் 'மறமருண்மாலை' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) மனம் கடந்தேரு - மனத்தாலுங் கடக்கவொண்ணாத, மதில் வளைத்து - மதிலைச் சூழ்ந்து, எங்கும் - எவ்விடங்களினும், கருநெருப்பு எடுத்த - கரிய நெருப்பை எடுத்துக்கொட்டிய, மறம் அருண்மாலை - கொடுமையைத்தராநின்ற மாலைக்காலமே.

(வி-ரை.) மாலை - அண்மைவிளி.

'நின்வரற்கு' என்பதுமுதல் 'காண்மதி' என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை.) நின் வரற்கு - நின்வருதலுக்கு, எவர் நல்குநர் - யாவர் நின்னைத்தந்தவர், நின் வரல் கண்டு - நின் வருதலைக்கண்டு, உடல் இடைந்தன - உடல் வருந்தினவற்றை, காட்டுவல் - யான் காட்டுவேன், காண் - நீ பார்ப்பாயாக.

(வி-ரை.) நல்குதல் - கொடுத்தல். மதி - முன்னிலையசையிடைச்சொல்.

'மண்ணுடல்' என்பதுமுதல் 'பொடித்த' என்பதுவரை.
(25—27 வரிகள்.)

(ப-ரை.) மண் உடல் பசந்து - பூமியானது நின்வரவாலுடம்பு பசப்படைந்து, கறுத்தது - பின் கறுத்தது; விண்ணமும் - ஆகாய

மும், ஆற்ருது - (நின்வரவாற்) சகியாது, அழன்று - புழுங்கி, காற்றின் முகம் மயங்கி - காற்றினுல் முகம் வேறுபட்டு, உடு என - உடுவென்று சொல்லும்படியான, கொப்புள் - கொப்புளம், உடல் நிறை பொடித்தது - உடனிறைய வுண்டாயிற்று.

(வி-ரை.) பசப்பு - பசலைநிறம். விண்ணமும் என்பதில் அம் சாரியை. அழலல் - புழுங்கல். மயங்கல் - வேறுபடல். உடு - நாண்மீன்.

'ஈங்கிவற்று' என்பதுமுதல் 'எனப்பெறின்' என்பதுவரை.
(28—31 வரிகள்.)

(ப-ரை.) ஈங்கிவற்று - இவ்விரண்டுலகினும், அடங்கிய - அடங்கியிருக்கின்ற, இருதிணை யுயிர்களும் - இருதிணையாகிய உயிர்களும், தம் உடல் - தமதுடல், மயங்கின - சில மயங்கின, ஒடுங்கின - சில இளைத்தன, உறங்கின - சில உறங்கின, அடங்கின - சில வாய் திறவாதடங்கின, அவிந்தன - சில இறந்தன, அயர்ந்தன - சில தவிர்ந்தன, கிடந்தன - சில படுத்தன, என பெறின் - என்று சொல்லப்படுவாயாகுல்.

(வி-ரை.) இருதிணை - நிலைத்திணை இயங்குதிணை; இவற்றை சரம் அசரம் என்பர் வடநூலார். சரம் - சஞ்சரிப்பன, அசரம் - சஞ்சரியாதன.

'மாலை' என்பதுமுதல் உள்ளதுமொழிமோ'
என்பதுவரை.
(31—33 வரிகள்.)

(ப-ரை.) மாலை - ஓ மாலைக்காலமே, என் உயிர் உளைப்பதும் - என்னுயிரை வருத்துவதும், அவர் திறம் நிற்பதும் - அவரது பக்ஷமாக நீ நிற்பதும், ஒரு புடை கிடக்க-ஒருபுறமாகவிருக்க, உள்ளது மொழிமோ - உள்ளது சொல்லுவாயாக.

(வி-ரை.) உளைத்தல் - வருத்தல். பக்ஷம் - பக்கம். மோ - முன்னிலையசை யிடைச்சொல்.

'நீயே' என்பதுமுதல் 'அவ்வயினுனை' என்பதுவரை.
(33—35 வரிகள்.)

(ப-ரை.) நீயே - நீதானே, விண் உழை - விண்ணிடத்திருந்து, வந்தனை என்னில் - வந்தனையென்று சொல்லுவாயாகுல்,

வருகுறி கண்டிலன் - வருதற்சோரடையாள மறிந்தேனில்லை, மண்ணிடை எனிலோ - மண்ணிடத்திருந்து வந்தனனென்று சொல்லுவாயானல், அவ்வயினுன - அதுவுமப்படியே.

(வி-ரை.) உழை - எழனுருபு. விண் - ஆகாயம்.

'கூடிநின்றனே' என்பதுமுதல் 'திசைகுறிக்குநரால்' என்பதுவரை.

(36—37 வரிகள்.)

(ப-ரை.) கூடி நின்றனே எனின் - இரண்டிடத்துங் கூடி நின்றன னென்பாயானல், குறிதவறு ஆல் - உண்மைக்குறி தவறுத லில்லையாதலால், தேம்படர்ந்தன என்னில் - ஒரு தேயத்திலிருந்து வந்தனனென்று சொல்லுவாயானல், திசை குறிக்குநரால் - இருந்து வந்ததிக்கை யாவராலேனுங் குறிக்கப்படவேண்டும்.

(வி-ரை.) தேம்-இடம், அது இங்குத் தேயத்தைக் குறித்தது.

'ஆதலின்' என்பதுமுதல் 'குறித்தே' என்பதுவரை.

(38—39 வரிகள்.)

(ப-ரை.) ஆதலின் - ஆதலால், நின்வரவு - நின்வருதலை, எனக்கு - எனக்கு, புலன் பெற - அறிவு பெற, குறித்து - சுட்டி, ஓதல் வேண்டும் - சொல்லவேண்டும்.

(வி-ரை.) அறிவுபெற - நன்குணருமாறு. குறித்தல் - சுட்டல்.

மறமிகு மயிலோன் அருவியங் குன்றத் தணியணிகூடற் கிறையவன் சழல் வழுத்து நங்காதலர், பாசறை முனைப்பது நோக்கி, வேன்முனையவி ழற்றத்து, மொத்தையைக் கருங்கண் கொடியினஞ் சூழ்ந்து புடைத்த விடவினைபோல எங்குங் கருநெருப்பெடுத்த மறமருண்மாலை நின்வரல் கண்டு உடலுடைந்தன, காட்டுவல் காண் மதி, மண்ணுடல் பசந்தது, கறுத்தது, விண்ணமும் உருவெனக் கொப்புளுடனிறை பொடித்தது, இவற்றடங்கிய இருதிணை யுயிர்களும் உடல்மயங்கின, ஒருங்கின, உறங்கின, அடங்கின, அவிந்தன, அயர்ந்தன, கிடந்தன, எனப்பெறின், மாலை என்னுயி ருளேப்பதும் அவர் திறம் நிற்பதும் ஒழிபுடை கிடக்க, உள்ளது மொழிமோ, வருகுறி கண்டிலன், அவ்வயினுன, ஆதலின், நின்வரவெனக்கு ஓதல் வேண்டுமென வினைமுடிவு செய்க. (எஉ)

திருக்கோவையார் உளஎ - ம் செய்யுள்.

வாய்மைகூறி வருத்தந்தணித்தல்.

வாய்மைகூறி வருத்தந்தணித்தலென்பது — வரவு நீடுதலான் வன்புறை யெதிரழிந்து வருந்தாநின்ற தலைமகளுக்கு, அவர்சொன்ன வார்த்தை நினக்குப் பொய்யென்பதே கருத்தாயின், இவ்வுலகத்து மெய்யென்பது சிறிதுமில்லையெனத், தோழி தலைமகனது வாய்மை கூறி, அவள் வருத்தந் தணியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மொய்யென்ப தேயிழை கொண்டவ னென்னைத்தன் மொய் கழற்காட், செய்யென்ப தேசெய்த வன்றில்லைச் சூழ்கடற் சேர்ப்பர் சொல்லும், பொய்யென்ப தேகருத் தாயிற் புரிகுழற் பொற்றொடி யாய், மெய்யென்ப தேதுமற் றில்லைகொ லாமிவ் வியலிடத்தே.

வேற்றடங் கண்ணியை
யாற்று வித்தது.

(ப-ரை.) மொய் என்பு அதே இழை கொண்டவன்-வலிமையை யுடைய என்பதனையே தனக்கணியாகக் கொண்டவன், என்னை தன் மொய் கழற்கு ஆள் செய் என்பதே செய்தவன்-என்னைத் தன்னுடைய வலிய திருவடிகட் காட்செய்யென்று (வெளிப்பட்டுநின்று) சொல்லுதலையே செய்தவன், தில்லை சூழ் கடல் சேர்ப்பர் சொல்லும் - அவனது தில்லைவரைப்பி னுண்டாகிய சூழ்ந்தகடலை யுடைத்தாகிய சேர்ப்பையுடையவரது சொல்லும், பொய் என்பதே கருத்து ஆயின்-பொய்யென்பதே (நினக்குக்)கருத்தாயின், புரி குழல் பொன் தொடியாய் - சுருண்ட குழலையுடைய பொற்றொடியாய், இவ்வியல் இடத்து மெய் என்பது எதும் இல்லைகொல் - இவ்வுலகத்து மெய் யென்பது சிறிதுமில்லைபோலும், எ-று.

(வி-ரை.) அரிமுதலாயினு ரென்பாகலின், 'மொய்யென்பு'என்றார். இழிந்தன கைக்கொள்வானகலின், என்பை யணியாகவும் என்னை யடிமையாகவும் கொண்டானென்பது கருத்து.

நேரிசையாசிரியப்பா.

திருமல ரிருந்த முதியவன் போல
நான்முகங் கொண்டறி நன்னர்நெஞ் சிருந்து
வேற்றருட் பிறவி தோற்றுவித் தெடுத்து
நிலமிரண் டளந்த நெடுமுகின் மான

வரக்கர்தங் கூட்டந் தொலைந்துநெய் யுண்டு
களிற்றுரி புனைந்த கண்ணுதல் கடுப்ப
வில்லெடுத் தொன்னலர் புரமெரி யூட்டி
யிணையவெவ் வுலகுந் தொழுதெழ திருவேற்
சரவணத் துதித்த வறுமுகப் புதல்வன்
பரங்குன் றுடுத்த பயன்கெழு கூடற்
பெருநகர் நிறைந்த சிறுபிறைச் சென்னியன்
மாலயன் றேடி மறைபறிந் தறியாத்
தன்னுரு வொன்றி லருளுரு விருத்திய
வாதி நாயக னகன்மலர்க் கழலிணை
நண்ணலர் கிளைபோற் றம்மனந் திரிந்துநந்
துறைவன் றணக்க வறிகிலம் யாமே
பிணர்முடத் தாழை விரிமலர் குருகென
நெடுங்கழிக் குறுங்கய னெய்தலுண் மறைந்தும்
புன்னையம் பொதும்பர்க் குழைமுகங் குழைமுகங்
கருந்திரை சுமந்தெறி வெண்டர ளத்தினை
யரும்பெனச் சுரும்பின மலரநின் றிசைத்துங்
கலஞ்சுமந் திறக்குங் கரியினம் பொருப்பெனப்
பருகிய முகிற்குலம் படிந்துகண் படுத்தும்
பவளமின் கவைக்கொடி வடவையின் கொழுந்தெனச்
சுரிவளை குளிக்குநர் கலனிடைச் செறிந்தும்
வெள்ளிற வுண்ண விழைந்துபுகு குருகினங்
கருங்கழி நெய்தலைக் காவல்செய் கண்ணென
வரவெயிற் றணிமுட் கைதையு ளடங்கியும்
விண்டொட வெழுந்து விழுந்திரைக் குழுவினை
யரிவினைக் கடங்கிய மலையினம் வரவெனக்
குளிர்மணற் கேணியுட் கொம்பினர் படர்ந்து
முயங்கிய வுள்ளம் போகி
மயங்கிய துறையின மொருங்குழி வளர்ந்தே.

திருமலரிருந்த-ஒருங்குழிவளர்ந்தே. பகுதி-வரைபொருட் பிரிதல். துறை-வாய்மைகூறி வருத்தந்தணித்தல்.

'திருமலரிருந்த' என்பதுமுதல் 'நன்னர்நெஞ்சிருந்து' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) திருமலர் இருந்த-தாமரைப்பூவில் வீற்றிருந்த, முதியவன்போல - பிரமனைப்போல, நான்முகம் கொண்டு - நாலுமுகத்தைக்கொண்டு, அறி - அறியத்தக்கவற்றை யறிந்த, நன்னர் நெஞ்சு இருந்து - நல்ல வுள்ளத்தில் வசித்து.

(வி-ரை.) உலகுயிர்க ளெல்லாவற்றையும் படைத்த பழையோனாதலால் பிரமனை 'முதியவன்' என்றார்.

'வேற்றருட்பிறவி' என்பதுமுதல் நெடுமுகின்மான' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) வேறு அருள் பிறவி - வேறாகிய அருளுக்குரிய பிறவியை, தோற்றுவித்து எடுத்து-பிறப்பித்துக்காட்டி, நிலம் இரண்டு-மண்ணும் விண்ணுமாகிய விரண்டனையும், அளந்த - திருவடியாலளந்த, நெடு முகில்மான - ஒர்கால் விளர்த்தலும் ஒர்கால் கறுத்தலுமில்லாத பெரிய முகிலாகிய திருமால்போல.

(வி-ரை.) நிலமிரண்டளந்த நெடுமுகில் என்றது திரிவிக்கிரமனை. மானல்-நிகர்த்தல். நெடுமுகில்என்றமையால், ஓர்கால் விளர்த்தலும் ஓர்கால் கறுத்தலுமில்லாத பெரியமுகில் என்றுரைக்கலாயிற்று.

'அரக்கர்' என்பதுமுதல் 'கடுப்ப' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) அரக்கர் தம் கூட்டம் - அரக்கர் குலத்தை, தொலைத்து - அழித்து, நெய் உண்டு - நெய்யையுண்டு, களிறு உரி-யானைத்தோலை, புனைந்த - போர்த்த, கண்ணுதல் கடுப்ப - சிவன்போல.

(வி-ரை.) அரக்கர்தம் கூட்டம் என்பதில் தம் சாரியை. தொலைத்தல் - அழித்தல். கண்ணுதல் - நெற்றிக்கண்ணையுடையவன். கடுத்தல் - நிகர்த்தல்.

'வில்லெடுத்து' என்பதுமுதல் 'பெருநகர்' என்பதுவரை.
(7—11 வரிகள்.)

(ப-ரை.) வில் எடுத்து - மேருவில்லைத்தாங்கி, ஒன்னலர் - உலகப்பகைஞராது, புரம் எரி ஊட்டி - முப்புரங்களையு மெரித்து,

இனைய - இத்தன்மையதாக, எவ்வுலகும் - எந்தவுலகமும், தொழுது எழு - தொழுதெழுதற்குக் காரணமான, திரு வேல் - அழகுள்ள வேலாயுதத்தையுடைய, சரவணத்து உதித்த - சரவணப்பொய்கையி லுதயஞ்செய்த, அறுமுகப்புதல்வன் - சண்முகப் பிள்ளையாரது, பரங்குன்றுடுத்த - ஸ்ரீபராசலஞ் சூழ்ந்துள்ள, பயன் கெழு - பயன் மிக்க, கூடல் பெருநகர் - மதுரைமாநகரில்.

(வி-ரை.) புரமெரியூட்டியென மேல் வருதலால், வில் மேருவைக் குறித்தது. எரியூட்டல் - நெருப்புக்கிரையாக்குதல்.

'நிறைந்த' என்பதுமுதல் 'கிளைபோல்' என்பதுவரை.

(11—15 வரிகள்.)

(ப-ரை.) நிறைந்த - நிறையுள்ள, சிறு பிறை சென்னியன் - இளம்பிறையணிந்த சென்னியன், மால் அயன் தேடி - மாலுமயனுந் தேடாநிற்ப, மறையறிந்தறியா - வேதங்களறிந்து மறியாத, தன் உரு ஒன்றில் - தனதுவடிவி னோர்பாகத்தில், அருள் உரு இருத்திய - அருளாகிய பராசத்தியை வைத்த, ஆதிநாயகன் - எவற்றிற்கு முதல்வனது, அகன் மலர் இணைகழல் - மலர்ந்த தாமரை மலர்போன்ற உபயபாதங்களை, நண்ணலர் கிளைபோல் - சேராதவர்கள் சுற்றம்போலவும்.

(வி-ரை.) 'சிறுபிறை' என்றார் ஒற்றைக்கலையாதலான். அயன் - பிரமன். ஓர்பாகம் என்றது இடப்பாகத்தை. உபயம் - இரண்டு. நண்ணல் - சேர்தல்.

'பிணர்' என்பதுமுதல் 'மறைந்தும்' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) பிணர் - பொருக்காகிய, முடத்தாழை - வளைவாகிய தாழையினிடத்தே, விரி மலர்-விரிந்தமலரை, குருகு எனா - கொக்கென்று கருதி, நெடுங்கழி - நீண்டகழியிலுள்ள, குறுங்கயல்-குறிய கயல்கள், நெய்தலுள் மறைந்தும் - நெய்தன் மலர்க்குள்ளே மறைந்தும்.

(வி-ரை.) முடம் - வளைவு. குருகு - கொக்கு. கயல் - சேல்மீன். நெய்தல்மலர் - நீலமலர்.

'புன்னையம்போதும்பர்' என்பதுமுதல் 'நின்றிசைத்தும்' என்பதுவரை.

(19—21 வரிகள்.)

(ப-ரை.) புன்னை அம் பொதும்பர் - புன்னைமரச் சோலையில், குழைமுகம் - குழைகின்ற முகத்தினையுடைய, குழைமுகம் - தளிரினிடத்து, கருதிரை-பெரிய அலைகள், சுமந்து எறி - எடுத்தெறியாநின்ற, வெள் தாளத்தினை - வெள்ளிய முத்தங்களை, அரும்பு என - புன்னையரும்பென்று கருதி, சுரும்பு இனம் - வண்டினம், அலர நின்று இசைத்தும் - மலரும்படி நின்றிசைபாடியும்.

(வி-ரை.) புன்னையம் பொதும்பர் என்பதில் அம் சாரியை. குழையிரண்டனுள் பின்னது தளிர். கருமை - பெருமை தாளம் - முத்து. சுரும்பு - வண்டு.

'கலஞ்சுமந்து' என்பதுமுதல் 'கண்படுத்தும்' என்பதுவரை.

(22—23 வரிகள்.)

(ப-ரை.) கலம் சுமந்து - கப்பல் சுமந்துவந்து, இறக்கும் - கரையிலிறக்குகின்ற, கரி இனம் - யானைக்கூட்டங்களை, பொருப்பு என - மலையென்றுகருதி, பருகிய - (கடனீரை) உண்ட, முகில் குலம் - மேகக்கூட்டம், படிந்து - அதன்மேற் கவிந்து, கண்படுத்தும் - கண்ணுறங்கியும்.

(வி-ரை.) பருகல் - உண்டல். படிதல் - கவிதல். கண்படுதல்- உறங்கல்.

'பவளமின்கவைக்கோடி' என்பதுமுதல் 'சேறிந்தும்' என்பதுவரை.

(24—25 வரிகள்.)

(ப-ரை.) மின் பவளம் - விளங்காநின்ற பவளங்களின், கவை கொடி - கிளைக்கொடிகளை, வடவையின் கொழுந்து என-வடவாக்கினியின் சுடரென்று கருதி, சுரி வளை குளிக்குநர் - சுரிசங்கங் குளித்தெடுக்கிறவர்கள், கலனிடை சேறிந்தும் - கப்பன்மேலேறியும்.

(வி-ரை.) மின்பவளம்-வினைத்தொகை நிலைத்தொடர். கொழுந்து - சுவாலை. கலன் - கலம் என்பதன் போலி. செறிதல் - ஏறுதல்.

'வெள்ளிறவுண்ண' என்பதுமுதல் 'கைதையுளடங்கியும்' என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) வெள் இற உண்ணவிழைந்து-வெள்ளிய இறான்மீனை உண்ணவிரும்பி, புகு குருகு இனம்-பாய்கின்றகொக்கினங்கள், கருங் கழி நெய்தலை - கரிய கழியின்கண் மலர்ந்துள்ள நெய்தற்பூவை, காவல் செய் - காவல்செய்கின்றவர்கள், கண் என - கண்களென்று கருதி, அரவு எயிறு - அரவினது பற்கள்போன்ற, அணி, முள்-நெருங்கிய முட்களையுள்ள, கைதையுள் அடங்கியும் - தாழைப்புதலிலொளித்தும்.

(வி-ரை.) விழைதல் - விரும்புதல். எயிறு - பல். அணிதல் - நெருங்குதல்.

'விண்டோடவெழுந்து' என்பதுமுதல் 'படர்ந்தும்' என்பதுவரை.
(29—31 வரிகள்.)

(ப-ரை.) விண் தொட எழுந்து - ஆகாயத்தைத் தொடும்படியெழுந்து, விழும் - மறிகின்ற, திரை குழுவினை - அலைக்கூட்டத்தை, அரி வினைக்கு - இந்திரன் மலைகளைச் சிறகரிந்த கொடுந்தொழிற்காக, அடங்கிய - கடலுளொளித்திருந்த, மலை இனம் - மலைகளின், வரவு என-வரவென்று கருதி, குளிர் மணல் கேணியுள்-குளிர்ந்த மணற்கயத்தில், கொம்பினர் - மாதர்கள், படர்ந்து - போய் மறைந்தும்.

(வி-ரை.) அரி - இந்திரன். கொம்பினர் - பூங்கொடிபோல்பவர் (மாதர்).

'முயங்கிய' என்பதுமுதல் 'வளர்ந்தே' என்பதுவரை.
(32—33 வரிகள்.)

'சம்மனம்' என்பதுமுதல் 'அறிகிலம்யாமே' என்பதுவரை.
(15—16 வரிகள்.)

(ப-ரை.) துறை இனம்-(இவ்வாறு)நெய்தற்றுறையிலுள்ளவை, ஒருங்குழி வளர்ந்து - ஓரிடத்தே வளர்ந்திருந்தும், முயங்கியவுள்ளம் போகி - ஒன்றோடொன்று தழுவிய வுள்ளமாறி, மயங்கிய - மயங்

கியவகைபோலவும், தம் மனம் திரிந்து - தமது மனம் வேறுபட்டு, நம் துறைவன் - நமது தலைவன், தணக்க - நம்மைவிட்டு நீங்குதற் கோர் காரணம், யாம் அறிகிலம் - யாமின்னதென் றறிந்தோமில்லை.

(வி-ரை.) உழி - இடம். முயங்கல் - தழுவல். தணத்தல் - நீங்குதல்.

நாயகன் சுழலிணை நண்ணலர் கிளைபோலவும், துறையினம் குருகின மறைந்தும், அரும்பென வினசத்தும், பொருப்பெனப்படுத் தும், கொழுந்தெனச் செறிந்தும், கண்ணென வடங்கியும், வரவெனப் படிந்தும் ஒருங்குழிவளர்ந்து முயங்கியவுள்ளம் போகிமயங்கிய வகை போலவும், நந்துறைவன் மனந்திரிந்து தணந்ததை யாமறிகிலமென வினைமுடிவுசெய்க. (எரு)

திருக்கோவையார் ருசுo - ம் செய்யுள்.

அயலறிவுரைத்தவ ளழுக்கமெய்தல்.

அயலறிவுரைத்தவ ளழுக்கமெய்தலென்பது—இல்லோர் செவ் வணி விடுக்க நினையாநிற்ப, அயலார் முன்னே இவளால் இக்குறி யறிந்தவிடத்து, ஒருத்தி நமக்குத்தர நாமவனை யெய்தும்படியாயிற்று நம்முடைய பெண்டன்மையென அயலறிவுரைத்துத் தலைமகள் அழுக்கமுற்றுக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

இரவணை யும்மதி யேர்நுத லார்நுதிக் கோலஞ்செய்து
குரவணை யுங்குழ லிங்கிவ ளாலிக் குறியறிவித்
தரவணை யுஞ்சடை யோன்றில்லை யூரனை யாங்கொருத்தி
தரவணை யும்பரி சாயின வாறுநந் தன்மைகளே.

உலகிய லறியச் செலவிட லுற்ற
விழுத்தகை மாதர்க் கழுக்கஞ் சென்றது.

(ப-ரை.) இரவு அணையும் - இரவைச் சேர்கின்ற, மதி ஏர் - பிறைபோன்ற, நுதலார் - நெற்றியையுடைய மாதருக்கு, நுதி - முன்னே, கோலம் செய்து - செவ்வணியாகிய கோலத்தைச் செய்து, குரவு அணையும் - குராமலர்கள் சேர்ந்த, குழல் - கூந்தலையுடைய, இங்கிவளால் - இவளால், இக்குறி அறிவித்து - இந்தக்குறியை யறிவித்து, அரவு அணையும் சடையோன் - சிவபெருமானது, தில்லை யூரனை - தில்லையிலுள்ள ஊரனை, ஆங்கு ஒருத்தி தர - (பின்) அவ்வி டத்தொருத்தி (நமக்குத்) தர, அணையும் பரிசு - (நாம் அவனை) எய்தும்

படி, ஆயினவாறு நம் தன்மைகள் - ஆயினவாறென் நம்முடைய பெண்டன்மைகள், எ-று.

(வி-ரை.) நுதலார் நுதியறிவித் தெனவியையும். குறி - பூப்பு நிகழ்தற்குறி.

நேரிசையாசிரியப்பா.

ஆடகச் சயிலத் தோருடல் பற்றிக்
கலிதிரைப் பரவையுங் கனன்றெழு வடவையு
மடியினு நடுவினு மணைந்தன போலப்
பசுந்தழைத் தோகையுஞ் செஞ்சிறைச் சேவலுந்
தாங்கியு மலர்க்கரந் தங்கியு நிலைத்த
பேரொளி மேனியன் பாருயிர்க் கோருயிர்
மாவுடைக் கூற்ற மலரயன் றண்டங்
குறுமுனி பெருமறை நெடுமறை பெருமுதல்
குஞ்சரக் கோதையுங் குறமகட் பேதையு
மிருந்தன விருபுறத் தெந்தையென் னமுதம்
பிறந்தருள் குன்ற மொருங்குறப் பெற்ற
மாதவக் கூடன் மதிச்சடைக் காரண
னிருபதந் தேரு விருளுள மாமென
விவளுளங் கொட்ப வயலுளங் களிப்ப
வரும்பொருட் செல்வி யெனுந்திரு மகட்கு
மாணிட மகளிர் தாமுநின் றெதிர்ந்து
புல்லிதழ்த் தாமரை யில்லளித் தெனவு
முலகுவிண் பணிக்கு மொருசய மகட்குத்
தேவர்தம் மகளிர் செறுமுக நேர்ந்து
வீரமங் கீந்தபின் விளிவது மானவு
மிருளுட லரக்கியர் கலைமகட் கண்டு
தென்றமிழ் வடகலை சிலகொடுத் தெனவு
நீரர மகளிர் பாந்தளங் கன்னியர்க்
காரெரி மணித்திர ளருளிய தெனவுஞ்
செம்மலர்க் குழலிவன் போயறி வுறுத்தக்
கற்றதுங் கல்லா துற்ற வூரனை

யவடர விவள்பெறு மரந்தையம் பேரினுக்
கொன்றிய வுவம மின்றிவ னுளவான்
மற்றவ டரநெடுங் கற்பே
யுற்றிவள் பெற்றூ ளென்பதுந் தருமே.

ஆடகச்சயிலத்து - என்பதுந்தருமே. பகுதி-பரத்தையிற் பிரிவு. துறை - அயலறிவுரைத்தவ ளழுக்கமெய்தல்.

'ஆடகச்சயிலத்து' என்பதுமுதல் 'அணைந்தனபோல' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) ஆடகம் சயிலத்து - பொன்மலையினது, ஓர் உடல் பற்றி - ஒப்பற்றவுடலைப்பற்றி, கலிதிரை பரவையும் - ஒலிக்காநின்ற அலைகடலும், கனன்று எழு வடவையும் - எரிந்தெழாநின்ற வடவாக்கினியும், அடியினும் - அடியிலும், நடுவினும்-நடுவிலும், அணைந்தன போல - பொருந்தியிருந்தனபோல.

'பசுந்தழைத்தோகையும்' என்பதுமுதல் 'நிலைத்த' என்பதுவரை.

(4—5 வரிகள்.)

(ப-ரை.) பசுந்தழை தோகையும் - பசிய தோகையினையுடைய மயிலும், செஞ்சிறை சேவலும் - சிவப்பாகிய சிறகுதழைத்த சேவலும், தாங்கியும் - முறையே தாங்கியும், மலர் கரம் தங்கியும் - மலர்க்கரத்திற்றங்கியும், நிலைத்த - நிலைபெற்றுள்ள.

'பேரொளிமேனியன்' என்பதுமுதல் 'பெருமுதல்' என்பதுவரை.

(6—8 வரிகள்.)

(ப-ரை.) பேரொளி மேனியன் - தேசோமயமாகிய திருமேனியன், பார் உயிர்க்கு-உலகின்கண்ணுள்ள வுயிர்களுக்கு, ஓர் உயிர்-ஒருயிரானவன், மாவுடை கூற்றம் - மாமரவடிவான சூரபன்மனுக்கியமன், மலரயன் தண்டம் - பிரமனைத் தண்டித்தவன், குறுமுனி பெருமறை - அகத்தியனார்பெற்ற மந்திரார்த்தம், நெடு மறை பெரு முதல் - என்றுமுள்ளவேதம் பெறுதற்கரிய ஆதி.

'குஞ்சரக்கோதையும்' என்பதுமுதல் 'ஒருங்குறப்பெற்ற' என்பதுவரை.

(9—11 வரிகள்.)

(ப-ரை.) குஞ்சரக்கோதையும் - தெய்வயானை நாச்சியாரும், குறமகள் பேதையும் - வள்ளிநாச்சியாரும், இருபுறத்து இருந்தன - இருபாலுமிருக்கின்ற, எந்தை - எந்தந்தை, என் அமுதம் - என்னுடையவமுதம், பிறந்தருள் குன்றம் - தோன்றியருளிய திருப்பரங்குன்றமானது, ஒருங்குற பெற்ற - தன்னுடனிருக்கப்பெற்ற,

'மாதவக்கூடல்' என்பதுமுதல் 'இருளுளமாமென' என்பதுவரை.

(12—13 வரிகள்.)

(ப-ரை.) மா தவக் கூடல் - பெரிய தவருக்கிடமாகிய மதுரையில், மதி சடை - சந்திரமௌலியாகிய, காரணன் - காரணனுடைய, இரு பதம்-இரண்டுதிருவடிகளின் மகிமையையும், தேரு - தெளியாத, இருள் உளம் ஆம் என - இருண்டவுள்ளமாமென்று சொல்லும்படி.

'இவளுளம்' என்பதுமுதல் 'இல்லளித்தேனவும்' என்பதுவரை.

(14—17 வரிகள்.)

(ப-ரை.) இவள் உளம் - இவளுள்ளமானது, கொட்ப - சுழலாநிற்பவும், அயல் உளம் களிப்ப-அயலாராகிய பரத்தையருள்ளம் களியாநிற்கவும், அரும் பொருள் செல்வி எனும் - அரியபொருட் செல்வியென்னும், திருமகட்கு - திருமகட்கு, மாணிடமகளிர்தாமும்-மானிடப்பெண்கள், எதிர்ந்து நின்று - எதிர்நின்று, புல் இதழ் தாமரை - புறவிதழுள்ள தாமரைப்பூவாகிய, இல் அளித்து எனவும் - இருக்கையை யளித்தாற்போலவும்.

'உலகுவிண்பணிக்கும்' என்பதுமுதல் 'விளிவதுமானவும்' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

(ப-ரை.) உலகு விண் பணிக்கும்-மண்ணையும் விண்ணையு நடுக்காகின்ற, ஒரு சயமகட்கு - ஒப்பற்ற வீரலட்சுமிக்கு, தேவர்தம் மகளிர் - தேவமகளிர், செருமுகம் நேர்ந்து - போர்முகத்தவந்து, வீரம்

அங்கு ஈந்தபின் - வீரத்தைக் கொடுத்தபின்னர், விளிவதுமானவும்-இறப்பதுபோலவும்.

'இருளுடலரக்கியர்' என்பதுமுதல் 'சிலகோடுத்தேனவும்' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) இருள் உடல் அரக்கியர் - இருளையொத்த வடலையுடைய அரக்கியர், கலைமகள் கண்டு-நாமகளைக்கண்டு, தென் தமிழ்-தென்சொல்லாகிய தமிழிலும், வடகலை - வடசொல்லாகிய ஆரியத்திலும், சில கொடுத்து எனவும்-இன்றியமையாத சிலவற்றைக் கொடுத்தாற்போலவும்.

'நீரரமகளிர்' என்பதுமுதல் 'அருளியதேனவும்' என்பதுவரை.

(23—24 வரிகள்.)

(ப-ரை.) நீர் அரமகளிர்-நீரில்வாழும் அரமகளீர், பாந்தள் அம் கன்னியர்க்கு - நாக கன்னியர்க்கு, ஆரெரி மணி திரள் - நெருப்புப்போன்ற மாணிக்கக்கூட்டங்களை, அருளியது எனவும் - தந்தது போலவும்.

'செம்மலர்க்குழலிவள்' என்பதுமுதல் 'உவமமின்று' என்பதுவரை.

(25—28 வரிகள்.)

(ப-ரை.) செம்மலர் குழல் இவள் - புதுமலர்க் கூந்தலையுடைய இத்தோழியானவள், போய் அறிவுறுத்த-போயறிவிக்க, கற்றதும் - அப்பரத்தை யறிந்ததும், கல்லாது உற்ற ஊரனை-அறியாதங்கிருந்த தலைவனை, அவள் தர - அப்பரத்தை தர, இவள் பெறும் - இத்தலைவி பெற்ற, அரங்கை அம் பேறினுக்கு-வருத்தமான பேற்றினுக்கு, ஒன்றிய உவமம் - தக்கவுவமானம், இன்று - இல்லை (ஆயினும்).

'இவணுளவால்' என்பதுமுதல் 'தகுமே' என்பதுவரை.

(28—30 வரிகள்.)

(ப-ரை.) இவண் உளவால்-அஃது ஈங்கு உள்ளதெனின், மற்றவள் தர - அப்பரத்தை தருதலால், நெடு கற்பே - நெடியகற்பே (ஆதாரமாக), இவள் உற்று - இவள் சென்று, பெற்றாள் என்பது - பெற்றாளென்று சொல்வது, தகும் - ஒருவாறு தக்கதாயிருக்கும்.

ஆடக சயிலத்துடல்-பேரொளிமேனிக்கும், பாவைமயிலுக்கும், வடவைசேவலுக்கும் உவமை. (தோகை ஆடக சயிலத்தடியினும், சேவல் அதன் நடுவினும், முறையே பிள்ளையாரை வாகனமாகித் தாங்கியும், மலர்க்கரத்திற் கொடியாகித் தங்கியு நிலைத்தவெனக் கூட்டுக.)

குருமுனிபெற்ற மறையென்பது-பிள்ளையாரவற்குபதேசித்த பிரணவப்பொருளை.

எழுந்தருளிய குன்றமென்பதற்கு அவ்வரையில் பராசாமுனிவன் புத்திரராறுவர்க்குந் தரிசனந் தந்தருளியவாற்றால் அமுதம் பிறந்தருள் குன்றமெனக் கூறியதிலக்கணே.

ஒரு சிருட்டிகாலத்தில் கண்ணுவராதிமுனிவர் வேதப்பொருளை யுணராதவர்களாய் அரபத்தனென்னும் வேதியன் வழிப்படுத்த அம்முனிவர் மதுரைக்கணெய்தி தக்ஷிணாமூர்த்தியை யுபாசனை செய்து அப்பொருளுணர்த்தப் பெற்றதாதலால் 'மாதவக்கூடல்'என்றார்.

மாதவக்கூடன் மதிச்சடைக்காரணன் பதந்தேறு விருளுளமாமென இவள் கொட்ப அயல்களிப்ப திருமகட்கு இல்லளித்தெனவும் சயமகட்கு வீரமீந்து விளிவதுமானவும் கலைமகளுக்குத் தென்றமிழ் வடகலை கொடுத்தெனவும் பாந்தளங்கன்னியர்க்கு மணித்திரளருளிய தெனவும் இவள்போ யறிவுறுத்த ஆரனை அவள்தர இவள் பெறும் பேற்றுக்கு உவமமின்று, ஒருகா லுளதாயின் இவள் நெடுங் கற்பே துணையாகச்சென்று பெற்றாளென்பது தகுமென வினை முடிவுசெய்க. (எ௪)

திருக்கோவையார் ௩௧௬-ம் செய்யுள்.

பிரிந்தமை கூறல்.

பிரிந்தமை கூறலென்பது — தம்மைவந்தடைந்த வேந்தனுக்குத் தாமுதவி செய்வாராக வெய்ய போரையுடைய பாசறைமேல் நமர் சென்றார். இனி யவ்வேந்தன் பகைவரா விடப்பட்ட மதில் இன்றென்னாய் முடியுமோவெனத் தலைமகன் வேந்தற்குற்றுழிப் பிரிந்தமை தோழி தலைமகளுக்குக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

போதுகு லாய புனைமுடி வேந்தர்தம் போர்முனைமேன்
மாதுகு லாயமென் னோக்கிசென் றார்நமர் வண்புலியூர்க்
காதுகு லாய குழையெழி லோனைக் கருதலர்போ
லேதுகொ லாய்விளை கின்றதின் றென்னா ரிமெதிலே.

விறல்வேந்தர் வெம்முனைக்கட்
டிறல்வேந்தர் செல்வரென்றது.

(ப-ரை.) மாது குலாய மெல் நோக்கி - மடமைபொருந்திய அழகுபெற்ற மெல்லிய நோக்கத்தையுடையாய், போது குலாய புனை முடி வேந்தர் தம் போர் முனைமேல் - பூவழகு பெற்ற பேணிச்செய்யப்பட்ட முடியையுடைய வேந்தர்தமது போரையுடைய பாசறைமேல், நமர் சென்றார் - நம்மவர் சென்றனர், வண் புலியூர் காது குலாய குழை எழிலோனை கருதலர்போல் - வளவிய புலியூரிற் காதழகுபெற்ற குழையாலுண்டாகிய எழிலையுடையவனைக் கருதாதாரைப்போல, ஒன்னார் இடு மதில் இன்று எதாய் விளைகின்றது - ஒன்னாரலிடப்பட்ட மதில் இன்று யாதாய் முடியுமோ, எ - று.

(வி-ரை.) வினைமுடித்துக் கடிது மீள்வரென்பது பயப்ப, ஒன்னாரிடுமதிலின்றே யழியுமென்று கூறினாளாம். கொல்லென்பது அசைநிலை. சென்றாரெனத் துணிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறினாள். திறல்வேந்தரென்றது சாதிபற்றியன்று தலைமைபற்றி.

நேரிசையாசிரியப்பா.

மலரவன் பனிக்குங் கவினுங் குலமீ
னருகிய கற்புங் கருதியுண் ணடுங்கித்
திருமகண் மலர்புகு மொருதனி மடந்தையின்
றிருகட லோருழி மருவிய தென்னச்
செருப்படை வேந்தர் முனைமேற் படர்ந்தநங்
காதலர் முனைப்படை கனன்றுடற் றெரியான்
முடம்படு நாஞ்சிற் பொன்முகங் கிழித்த
நெடுஞ்சால் போகிக் கடுங்கய றுரக்கு
மங்கையர் குழைபெறு வள்ளையிற் றடைகொண்
டவர்கருங் கண்ணெனக் குவளைதழை பூத்த
விருளகச் சோலையு ளிரவெனத் தங்கிய
மற்றதன் சேக்கையுள் வதிபெறுஞ் செங்கால்
வெள்ளுட லோதிமந் தன்னுடைப் பெடையெனப்
பறைவரத் தழீஇப்பெற் றுவைதங் கம்பலைக்
காற்றா தகன்று தேக்குவழி கண்ட
கால்வழி யிறந்து பாசடை பூத்த
கொள்ளம் புகுந்து வள்ளுறை வானத்

தெழின்மதி காட்டி நிறைவளை சூலுளைந்
திடங்கரு மாமையு மெழுவெயிற் கொளுவு
மலைமுது கன்ன குலைமுக டேறி
முழுமதி யுடுக்கண மகவயின் விழுங்கி
யுமிழ்வன போலச் சுரிமுகச் சூல்வளை
தரளஞ் சொரியும் பழனக் கூடற்
குவளைநின் றலர்ந்த மறையெழு குரலோ
னிமையவர் வேண்ட வொருநகை முகிழ்ப்ப
வோருழிக் கூடா தும்பரிற் படர்ந்து
வானுடைத் துண்ணு மறக்கொலை யரக்கர்முப்
பெருமதில் பெற்றன வன்றோ
மருவல ரடைத்தமுன் மறங்கெழு மதிலே.

மலரவன்பனிக்கு - மறங்கெழுமதிலே. பகுதி-உற்றுழிப்பிரிவு. துறை - பிரிந்தமைகூறல்.

'மலரவன்' என்பதுமுதல் 'மடந்தை' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) மலரவன் - பிரமனானவன், பனிக்கும் - (இவ்வடிவு நம்மாற் படைத்தற் கரிதென்று) அஞ்சுகின்ற, கவினும் - உருவமும், குலமீன் - அருந்ததியானவள், அருகிய - (கற்பில்) குறைந்த, கற்பும் - கற்பையும், கருதி - உன்னி, உள் நடுங்கி - மனம் நடுங்கி, திருமகள் - இலக்குமியானவள், மலர் புகும் - மலரிலொளித்திருக்கின்ற, ஒருதனி மடந்தை - ஒப்பற்ற பெண்ணே.

(வி-ரை.) பனித்தல் - நடுங்கல். கவின் - உருவம். அருகல் - குறைதல்.

'இன்று' என்பதுமுதல் 'நங்காதலர்' என்பதுவரை.
(3—6 வரிகள்.)

(ப-ரை.) இன்று - இந்நாளில், இரு கடல்-இரண்டு கடல்கள், ஒருழி - ஓரிடத்தில், மருவியது என்ன - சேர்ந்ததுபோல நெருங்கிய, செரு - செருச்செய்தற்குரிய, படை வேந்தர்-படையையுடைய அரசர்களது, முனைமேல் - போரைக் கருதி, படர்ந்த - சென்ற, நம் காதலர் - நமதுதலைவர்.

(வி-ரை.) மருவல்-சேர்தல். செரு - போர். படர்தல்-செல்லல்.

'முனைப்படை' என்பதுமுதல் 'கிழித்த' என்பதுவரை.
(6—7 வரிகள்.)

(ப-ரை.) முனை படை - கூர்மைபொருந்திய ஆயுதமானது, சனன்று - கோபித்து, உடற்றும் - போர்செய்கின்ற, எரியால் - நெருப்பால், முடம்படு நாஞ்சில் - வளைவுள்ள கலப்பையில் பொருந்திய, பொன் முகம் கிழித்த - இரும்பாற் செய்த காறினது நுனியாற் கிழிக்கப்பட்ட.

(வி-ரை.) சனலல் - கோவித்தல். உடற்றல் - போர்செய்தல். பொன் - இரும்பு, இதனைக் கரும்பொன் என வழங்குதலுமுண்டு.

'நெடுஞ்சால்போகி' என்பதுமுதல் 'தடைகொண்டு' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) நெடும் சால் போகி - நீண்ட படைச்சாலின் வழியாகச் சென்று, கடு கயல் - வேகமுள்ள கயல்கள், தாக்கும் - ஓட்டுகின்ற, மங்கையர் - மாதர்களது, குழை பெறு - பொற்குழையணிந்த, வள்ளையில் - காதுபோன்ற வள்ளைச்செடியில், தடைகொண்டு - தடைபட்டு.

(வி-ரை.) தாத்தல் - ஓட்டுதல். மங்கையர் என்றது பருவங் குறியாது பெண் பொதுவைக் குறித்தது. குழை - காதணி.

'அவர்சருங்கண்' என்பதுமுதல் 'பெற்று' என்பதுவரை.
(10—14 வரிகள்.)

(ப-ரை.) அவர் கரு கண் என - அம்மங்கையாது கரியகண்ணைப்போல, குவளை தழை பூத்த - குவளை தழைவாக மலர்ந்த, இருள் அக சோலையுள் - தன்மாட்டிருளுள்ள சோலையுள், இரவு என தங்கிய - இராப்போதென்று கருதித்தங்கிய, மற்ற தன் சேக்கையுள் - அச்சோலையுள் கட்டிய கூட்டினுள், வதிபெறும் - வாசஞ்செய்யுகின்ற, செங்கால் - சிவந்த காலினையும், வெள் உடல் - வெள்ளியவுடலினையுமுடைய, ஓதிமம் - அன்னமானது, தன்னுடை பெடை என - தன்பேடென்று கருதி, பறைவரத்தழீஇப்பெற்று - சிறையாற் பொருந்தத் தழுவப்பெற்று.

(வி-ரை.) இராப்போது - இராக்காலம். பறை-சிறை (இறகு).

'உவைதம்' என்பதுமுதல் 'எழின்மதிகாட்டி' என்பதுவரை.
(14—18 வரிகள்.)

(ப-ரை.) உவைதம் - அவ்வன்னங்களின், கம்பலைக்கு-ஒலிக்கு, ஆற்றாது-சகிக்காது, அகன்று-நீங்கி, தேக்கு வழி கண்ட-அச்சோலையிற் றேன்பெருக்கமானது வழியுண்டுபண்ணிய, கால் வழி இறந்து - வாய்க்கால்வழியே சென்று, பாசடை பூத்த - பாசிமலர்ந்த, சொள்ளம் புகுந்து - குழைசேற்றிற் புகுந்து, வள் உறை - மிக்க நீர்த்துளியையிறைக்கின்ற, வானத்து-வானத்தெழுகின்ற, எழில் மதி காட்டி-விளக்கமான சரற்காலச் சந்திரனைக்காட்டி.

(வி-ரை.) உவை - பொதுமைச்சுட்டு. கம்பலை - ஒலி. ஆற்றல்-சகித்தல். அகலல் - நீங்கல். இறத்தல் - செல்லல். உறை-நீர்த்துளி. எழில் - அழகெனினுமாம்.

'நிறைவளை' என்பதுமுதல் 'குலைமுகடேறி' என்பதுவரை.
(18—20 வரிகள்.)

(ப-ரை.) நிறை வளை சூல் உளைந்து - நிரம்பிய கருப்பமுதிர்ந்த வயிறு வருந்தி, இடங்கரும் ஆமையும்-முதலையும் ஆமையும், எழு வெயில் கொளுவும் - இளவெயில் காய்கின்ற, மலைமுதுகு அன்ன-மலையினது முதுகையொத்த, குலை முகடு ஏறி - செய்கரைமேலேறி.

(வி-ரை.) வளை - சங்கு. உளைதல் - வருந்தல், இடங்கர் - முதலை. குலை - செய்கரை.

'முழுமதி' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை.
(21—23 வரிகள்.)

(ப-ரை.) முழு மதி - நிறைமதியானது, உடு கணம் - தாராகணங்களை, அகவயின் விழுங்கி - தன்னுள்ளே விழுங்கி, உமிழ்வன போல - மீண்டுமுமிழ்கின்றனபோல, சுரி முகம் சூல் வளை-சுரிமுகமுள்ள அச்சூற்கொண்ட சங்கங்கள், தரளம் சொரியும்-முத்தங்களையீனுகின்ற, பழனம் - வயல் நெருங்கிய, கூடல்-மதுரையினிடத்தே.

(வி-ரை.) முழுமதி - பூர்ணசந்திரன். உமிழ்தல் - கக்குதல்.

'குவளைநின்றலர்ந்த' என்பதுமுதல் 'முகிழ்ப்ப' என்பதுவரை.
(24—25 வரிகள்.)

(ப-ரை.) குவளை நின்று அலர்ந்த-குவளை மலர் தங்கி விரிந்தாலொத்த, மறை எழு குரலோன் - வேதம் பிறத்தற்கிடமாகிய நீல

கண்டன், இமையவர் வேண்ட - தேவர் வேண்டுதலால், ஒருநகை முகிழ்ப்ப - சிறுநகையரும்ப.

(வி-ரை.) குரல் - கண்டம்.

'ஒருழிக்கூடாது' என்பதுமுதல் 'பெற்றனவன்றே' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) ஒருழி கூடாது - ஒரிடத்திற் கூடியிராமல், உம்பரின் படர்ந்து - விண்ணுலகங்கடோறுஞ்சென்று, வான் உடைத்து உண்ணும் - தேவரூர்களை யழித்துக்கெடுத்த, மறம் கொலை அரக்கர் - கொடிய கொலைத்தொழிலரக்கர்களுடைய, முப்பெருமதில் - பெருமையாகிய முப்புரங்கள், பெற்றன அன்றே - பட்டபாடாமல்லவோ.

(வி-ரை.) உம்பர் - ஆகுபெயர்; வான் என்பதுமது. மறம் - கொடுமை.

மருவல ரடைத்தமுன் மறங்கெழு மதிலே.

(29—வது வரி.)

(ப-ரை.) முன் - அங்கெருப்புக்கெதிரே, மருவலர் அடைத்த - மருவலராலடைக்கப்பட்ட, மறம் கெழு மதில் - வலிமை மிக்க அரண்.

(வி-ரை.) மருவலர் - பகைவர்.

மடந்தையே! முனைமேற் படர்ந்த காதலரது படையுடற்றுமெரியால் எதிரே மருவலரடைத்த மறங்கெழு மதிலானது கூடல் மறையெழு குரலோன் ஒருநகை முகிழ்ப்ப அரக்கர் மும்மதில் பெற்றபடியாகு மன்றோவென வினைமுடிவுசெய்க. (எ-று)

திருக்கோவையார் ௩௯௦-ம் செய்யுள்.

கலக்கங்கண்டுரைத்தல்.

கலக்கங்கண்டுரைத்த லென்பது—பிரிவு நினைவுரைப்பக்கேட்ட தலைமகளது கலக்கங்கண்ட தோழி, அன்பர்சொற்பா விரும்பினரென்ன, அச்சொல் இவள் செவிக்கட் காய்ந்த வேல்போலச் சென்றெய்திற்று, இனி மற்றுள்ள பிரிவை எங்ஙனமாற்றுவளெனத் தன்னுள்ளே கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கற்பா மதிற்றில்லைச் சிற்றம் பலமது காதல்செய்த
விற்பா விலங்கலெங் கோனை விரும்பலர் போலவன்பர்

சொற்பா விரும்பின ரென்னமெல் லோதி செவிப்புறத்துக்
கொற்பா விலங்கிலை வேல்குளித் தாங்குக் குறுகியதே.

ஓதற் ககல்வர் மேதக் கவரென
பூங்கொடி கலக்கம் பாங்கிகண் ணுரைத்தது.

(ப-ரை.) கல் பா மதில் தில்லை சிற்றம்பலம் அது காதல் செய்த - கல்லாற்செய்யப்பட்ட பரந்த மதிலையுடைய தில்லையின் கண் சிற்றம்பல மதனைக் காதலித்த, வில் பா விலங்கல் எம் கோனை விரும்பலர் போல - வில்லாற் செய்யப்பட்ட பரந்தமலையையுடைய எம்முடைய கோனை விரும்பாதாரைப்போல், அன்பர் சொல் பா விரும்பினர் என்ன - நம் அன்பர் சொல்லாணியன்ற பாவாகிய நூல்களைக் கற்க விரும்பினரென்று சொல்ல, மெல் ஓதி செவிப்புறத்து - (அச்சொல்) மெல்லோதியை யுடையாளது செவிக்கண், கொல் பா இலங்கு இலை வேல் குளித்தாங்குகுறுகியது - கொற்றொழில் பரந்த விளங்கு மிலையையுடைய வேல்சென்று மூழ்கினாற்போலச்சென்றெய்திற்று, (இனிப்பிரிவை யெங்ஙனமாற்றுமோ) எ-று.

(வி-ரை.) பொருப்பு வில்லிமேல் விருப்புடையார் கல்விக்கடனீந்தி வருந்தாமையின் விரும்பலர்போலச் சொற்பா விரும்பின ரென்றாள். இனிவருந்த வென்பதோர் சொல்லை விரித்து விரும்பலர் போல வருந்த அச்சொற் குறுகியதென் றுரைப்பினு மமையும். பூங்கொடி கலக்கம் பாங்கி தன்னுள்ளே சொல்லியது. தலைமகற்குக் கூறியதென் றுரைப்பாரு முளர். மெய்ப்பாடு - அழிகை. பயன் - செலவழுங்குவித்தல்.

நேரிசையாசிரியப்பா.

பெருந்துய ரகற்றி யறங்குடி நாட்டி
யுளச்சுருள் விரிக்கு நலத்தகு கல்வியொன்
றுளதெனக் குரிசி லொருமொழி சாற்றப்
பேழ்வாய்க் கொய்யுளை யரிசுமந் தெடுத்த
பன்மணி யாசனத் திருந்துசெவ் வானி
னெடுஞ்சடைக் குறுஞ்சுடர் நீக்கியைந் தடுக்கிய
வாறைஞ் ஞூறெருடு வேறுநிரை யடுத்த
பன்மணி மிளிர்முடி பலர்தொழக் கவித்துப்
பஃறலைப் பாந்தட் சுமைதிருத் தோளிற்
றரித்துல களிக்குந் திருத்தகு நாளி
னெடுநாட் டிருவயிற் றருளுட னிருந்த

நெடுஞ்சடை யுக்கிரற் பயந்தரு ணிமலன்
மற்றவன் றன்னால் வடவையின் கொழுந்துசுட்
டாற்று துட்லமு மிமைக்குறு முத்தமும்
விளர்த்துநின் றணங்கி வளைக்குல முழங்குங்
கருங்கடல் பொரிய வொருங்குவேல் விடுத்த
வதற்கருள் கொடுத்த முதற்பெரு நாயகன்
வெம்மையுந் தண்மையும் வினையுடற் காற்று
மிருசுட ரொருசுடர் புணர்விழி யாக்கிமுன்
விதியவன் றூரா வுடலொடு நிலைத்த
முத்தமிழ்க் கூடன் முதல்வன் பொற்றாள்
கனவினுங் காணாக் கண்ணிலர் துயரும்
பகுத்துண் டீகுநர் நிலைத்திரு முன்ன
ரில்லெனுந் தீச்சொ லிறுத்தனர் தோழு
மனைத்துயி ரோம்பு மறத்தினர் பாங்கர்க்
கோறலென் றயலினர் குறித்தன குற்றமு
நன்றறி கல்வியர் நாட்டுறு மொழிபுக்
கவ்வர ணிழந்தோர்க் கருவிட மாயது
மொருகணங் கூடி யொருங்கே
யிருசெவிப் புக்க தொத்தன விவட்கே.

பெருந்துயரகற்றி-ஒத்தனவிவட்கே. பதீ-ஓதற்பிரிவு. துறை-கலக்கங்கண்டுரைத்தல்.

'இவட்கு, பெருந்துயர்' என்பதுமுதல் 'மொழிசாற்ற' என்பதுவரை.

(30, 1—3 வரிகள்,)

(ப-ரை.) இவட்கு - இத்தலைவிக்கு, பெருந்துயர் அகற்றி - மிக்க துன்பத்தை நீக்கி, அறம் - தருமத்தை, குடி நாட்டி - மனத்திற் குடியாகவிருத்தி, உளச்சுருள் - உணர்வின்றிச் சுருங்கிய வுள்ளத்தை, விரிக்கும் - மலர்வியாநின்ற, நலத்தகு - நலஞ்சிறந்த, கல்வியொன்று - ஒரு கல்வியானது, உளது என - உண்டாயிருக்கிறதென்று, குரிசில் - நமதரசன், ஒரு மொழி சாற்ற - ஒருவார்த்தை சொல்லலும்.

'பேழ்வாய்' என்பதுமுதல் 'இருந்து' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) பேழ்வாய் - பெரிய வாயையும், கொய் உளை - கொய்தாலொத்த பிடரிமயிரினையுமுடைய, அரி - சிங்கத்தினாலே, சுமந்து எடுத்த - சுமந்து தாங்கப்பட்ட, பல் மணி - பலவகைமணிகுயிற்றிய, ஆசனத்து இருந்து - ஆசனத்தில் வீற்றிருந்து.

(வி-ரை.) குயிற்றல் - இழைத்தல்.

'செவ்வானின்' என்பதுமுதல் 'கவித்து' என்பதுவரை.
(5—8 வரிகள்.)

(ப-ரை.) செவ்வானின் - செவ்வானம்போலும், நெடு சடை - நெடிய சடையையும், குறு சுடர் - சிறுபிறையையும், நீக்கி - மறைத்து, ஐந்து அடுக்கிய - ஐந்தென்னு மெண்ணாற் பெருக்கப்பட்ட, ஆறைஞ்ஞூற்றுடு-மூவாயிரத்தாலாகிய பதினையாயிரமென்னு மெண் பெற்ற, வேறு நிரை அடுத்த-வேறுவேறான வரிசையடுத்த, பல்மணி-பலவகை மணிகளோடு, மிளிர் - விளங்காநின்ற, முடி-திருமுடியை, பலர் தொழ - பல்லோரும் வணங்கும்படி, கவித்து - முடியிற்றரித்து.

(வி-ரை.) இன் ஐந்தாவதனொப்புப்பொருட்டு.

'பல்தலைப் பாந்தள்' என்பதுமுதல் 'திருத்தகுநாளில்' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) பல் தலை பாந்தள் - பலதலைகளையுடைய பாந்தளுக்கு, சுமை - சுமையாகிய மாநிலத்தை, திரு தோளில் - தனதழகிய தோளில், தரித்து - தாங்கி, உலகு அளிக்கும் - உலகத்தைக் காவாநின்ற, திரு தகு நாளில் - செல்வமல்கிய நாளில்.

(வி-ரை.) பாந்தள் - யாம்பு, அது இங்கு ஆதிசேடனைக் குறித்தது. அளித்தல் - காத்தல். திரு - செல்வம். மல்கல் - பெருகல்.

'நெடுநாள்' என்பதுமுதல் 'நிமலன்' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) அருள்நடன் - தடாதகைப் பிராட்டியாரது, திருவயிற்று - திருவயிற்றில், நெடுநாள் இருந்த - நெடுநாட்டங்கியிருந்த,

நெடுஞ்சடை - பாண்டிக்குலத்திற்கு முதலாகிய, உக்கிரற்பயந்தருள் - உக்கிரபாண்டியனைப் பெற்றருளிய, நிமலன் - சோமசுந்தரமூர்த்தி.

(வி-ரை.) தடாதகைப்பிராட்டி அருளுருவேயாதலால் அவரை 'அருள்' என்றார். அருளுடன்-உருபுமயக்கம். நிமலன் - மலரஹிதன்.

'மற்றவன்றன்னால்' என்பதுமுதல் 'வளைக்குலம்' என்பதுவரை.

(13—15 வரிகள்.)

(ப-ரை.) மற்றவன் தன்னால்-அந்த வுக்கிரபாண்டியனால், வடவையின் - வடவாக்கினியின், கொழுந்து சுட்டு - கொழுந்தானது சுட்டதனால், வளை குலம் - சங்கினங்கள், ஆற்றாது - சகியாது, உடலமும் - தமதுடலும், இமைக்குறும் - பிரகாசிக்கின்ற, முத்தமும் - முத்தங்களும், விளர்த்துநின்று - வெறுத்து.

(வி-ரை.) சுட்டு-காரணப்பொருட்டாகிய வினையெச்சம். இமைத்தல் - பிரகாசித்தல்.

'அணங்கிமுழங்கும்' என்பதுமுதல் பெருநாயகன்' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) அணங்கி - வருந்தி, முழங்கும் - ஒலித்தற்கிடமாகிய, கருங்கடல் - பெரியகடலானது, ஒருங்கு - ஒருமிக்க, பொரிய - வெந்து பொரியுமாறு, வேல் விடுத்த - வேலாயுதத்தை யேவுவித்த, அதற்கு - அக்காரியத்திற்கு, அருள் கொடுத்த-கிருபைசெய்த,முதல் பெரு நாயகன் - யாவர்க்குமுதல்வனாகிய பெரியகடவுள்.

(வி-ரை.) அணங்கல் - வருந்தல். கருமை - பெருமை. பெரிய கடவுள் - சிவபெருமான்.

'வெம்மையும்' என்பதுமுதல் 'விழியாக்கி' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) வெம்மையும் - வெப்பத்தையும், தண்மையும் - தட்பத்தையும், வினை உடற்கு - இருவினை காரணமாகவந்த சராசரங்களுக்கு, ஆற்றும் - செய்யாநின்ற, இரு சுடர்-சந்திரசூரியர்களாகிய இருசுடரையும், ஒரு சுடர் - மற்றொருசுடராகிய நெருப்பையும், புணர் விழி ஆக்கி - புதுமையான கண்களாகக்கொண்டு.

(வி-ரை.) ஆற்றல் - செய்தல். சுடர் - ஆகுபெயர். சராசரம் - சரம், அசரம். புணர் - நெருங்கிய எனினுமாம்.

'முன்' என்பதுமுதல் 'துயரும்' என்பதுவரை.
(19—22 வரிகள்.)

(ப-ரை.) முன் - ஆதியில், விதியவன் தாரா - எவற்றையும் விதிக்கின்றவனாகிய பிரமனாலே தரப்படாத, உடலொடு நிலைத்த - உடலொடு நிலைபெற்ற, முத்தமிழ் கூடல் முதல்வன் - இயலிசை நாடகமாகிய முத்தமிழு நிகழும் மதுரைப்பெருமானது, பொன் தாள் - பொன்னடியை, கனவினும் காணா-சொப்பனத்திலுங் காணப் பெறாத, கண் இலர் - பேதையருடைய, துயரும் - துன்பமும்.

(வி-ரை.) பொன்னடி - அழகாகிய அடி, பொன்போலும் அடியெனினுமமையும். கண் இலர் - அகக்கணில்லாதவர்; அகக்கண் - அறிவு. பேதையர் - அறிவிலார்.

'பகுத்துண்டு' என்பதுமுதல் 'தோமும்' என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை.) பகுத்து உண்டு - உள்ளதைப் பிறர்க்கும் பகுத்து உண்டு, ஈகுநர் - அறஞ்செய்வோரது, நிலைத் திருமுன்னர் - வீட்டின் முன்சென்று, இல் எனும் தீ சொல் - இல்லையென்னுங் கொடிய சொல்லை, இறுத்தனர் - சொல்லிய இரவலரது, தோமும் - துன்பமும்.

(வி-ரை.) பகுத்தல் - பகிர்தல். இரவலர் - யாசகர். தோம் - குற்றம், அது ஈண்டு துன்பத்துக்காயிற்று.

'அனைத்துயிரோம்பும்' என்பதுமுதல் 'குற்றமும்' என்பதுவரை.
(25—26 வரிகள்.)

(ப-ரை.) அனைத்து உயிர் ஓம்பும் - உயிரனைத்தும் பாதுகாக்கின்ற, அறத்தினர் பாங்கர் - புண்ணியரிடத்து, அயலினர் - பிறர், கோறல் என்று - கொல்லுதலென்று, குறித்தன குற்றமும் - சொல்லியனவாகிய குற்றமும்.

(வி-ரை.) ஓம்பல் - பாதுகாத்தல். கோறல் - கொல்தல். குறித்தல் - சொல்லுதல்.

'நன்றறிகல்வியர்' என்பதுமுதல் 'அருவிடமாயதும்' என்பதுவரை.

(27—28 வரிகள்.)

(ப-ரை.) நன்று அறி கல்வியர்-நன்மையை யறிதற்குக் கருவியாகிய கல்வியாளர், நாட்டுறு மொழி - சொல்லிய சொல்லானது, அரண் இழந்தோர்க்கு-அக்கல்வியரணைக் கைவிட்டார்மாட்டு, புக்கு - சென்று, அரு விடம் ஆயதும் - அரிய நஞ்சுபோலாய வருத்தமும்.

(வி-ரை.) அரண்-காவல். புக்கு என்பதற்குப் பகுதி புகு. இது ஒற்றிரட்டித் திறந்தகாலங் காட்டிற்று.

'ஒருகணங்கூடி' என்பதுமுதல் 'புக்கதொத்தன' என்பதுவரை.

(29—30 வரிகள்.)

(ப-ரை.) ஒரு கணம் கூடி - ஒரு கூட்டமாகக்கூடி, ஒருங்கே-ஒருமிக்க, இரு செவி - இருசெவியினிடத்தும், புக்கது ஒத்தன - புகுந்தாற்போல்கின்றன.

(வி-ரை.) 'வினையுடல் காற்றும்' எனப் பாடமுளதாயின், உடலானது வெம்மை தண்மைகளைக் காலும்படி செய்கின்ற இருசுடரென வுரைத்துக்கொள்க. வினையுடலென்பது இருவினை காரணமாக வந்த சராசரவுடல்களென்க.

விதியவன்றுரா வுடலென்றது சச்சிதானந்தமாகிய திருமேனியை.

இவளுக்குக் குரிசில், நலத்தகு கல்வி யொன்றுளதென்று கூறியவோர் மாற்றமானது, கூடன் முதல்வனது தாளைக் கனவிலுஞ் சாராதவர் துயரமும் தீச்சொலிறுத்தனர் தோமும், அறத்தினர் பாங்கர் கோறலென்றனர் குற்றமும் கல்வியர்மொழி மூடர்க்குவிடம்போலாய வருத்தமும் ஒருங்குகூடி செவிபுக்க தொத்தனவென்று வினைமுடிவுசெய்க. (எசு)

திருக்கோவையார் ருஉ० - ம் செய்யுள்.

முன்பனிக்கு நொந்துரைத்தல்.

முன்பனிக்கு நொந்துரைத்தலென்பது—மக்களேயன்றிப் புள்ளுந் தம்பெடையைச் சிறகாலொடுக்கிப் பிள்ளைகளையுந்தழுவி இனஞ்

சூழ வெருவாது துயிலப்பெறுகின்ற இம்மயங்கிருட்கண், இடையறாது விழாநின்ற பனியிடைக்கிடந்து வாடித்துயர்வாயாகவென்று என்னைப் பெற்றவளே நோவதல்லது, யான் யாரை நோவேனென முன்பனிக்காற்றாது தாயொடு நொந்து கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சுற்றின வீழ்பனி தூங்கத் துவண்டு துயர்கவென்று
பெற்றவ ளேயெனைப் பெற்றாள் பெடைசிற காலொடுக்கிப்
புற்றில வாளர வன்றில்லைப் புள்ளுந்தம் பிள்ளைதழீஇ
மற்றினஞ் சூழ்ந்து துயிலப் பெறுமிம் மயங்கிருளே.

ஆன்றபனிக் காற்றாதழிந்து
ஈன்றவளை யேழைநொந்தது.

(ப-ரை.) புற்று இல - புற்றையுடையவல்லாத, வாள்-ஒளியையுடைய, அரவன் - பாம்பையணிந்தவனது, தில்லை - தில்லையில், புள்ளும் - (மக்களேயன்றி) புட்களும், பெடை - தம்பெடைகளை, சிறகான் ஒடுக்கி - சிறகினாலொடுக்கிக்கொண்டு, தம் பிள்ளை - தம் பார்ப்புக்களை, தழீஇ - தழுவிக்கொண்டு, இனம் சூழ்ந்து - தம்மினஞ்சூழ, துயிலப்பெறும் - தூங்கப்பெறுகின்ற, இ - இந்த, மயங்கு இருள் - செறிந்த இருளில், சுற்றின - (மேனியெங்கும்) சுற்றி, வீழ் பனி - விழாநின்ற பனியானது, தூங்க - இடையறாது நிற்ப, துவண்டு - (அதற்கோர் மருந்தின்றி) வாடி, துயர்க என்று - துன்புறுக வென்று, என்னை பெற்றவளே பெற்றாள் - என்னை யீன்றவளே யீன்றாள் (இனி யான் யாரை நோவது), எ-று.

(வி-ரை.) சுற்றின தூங்கவெனவியையும். மயங்கிருட்கட் டுயர்வாயாக வெனக்கூட்டுக. சுற்றின-முற்றெச்சம், இது பெயரெச்சமுமாம். மற்று-அசைநிலை.

நேரிசையாசிரியப்பா.

கடன்மக ளுள்வைத்து வடமைமெய் காயவு
மலைமக டழற்றரு மேனியொன் றணைக்கவு
மாசறு திருமகண் மலர்புகுந் தாயிரம்
புறவிதழ்ப் புதவடைத் ததன்வெதுப் புறுக்கவுஞ்
சயமகள் சீற்றத் தழன்மனம் வைத்துத்
திணிபுகும் வென்றிச் செருவழல் கூடவு
மையர் பயிற்றிய விதியழ லோம்பவு

மவ்வனற் கமர ரணைவரு மணையவு
முன்னிடைக் காடன் பின்னெழ நடந்து
நோன்புறு விரதியர் நுகரவுள் ளிருந்தென
னெஞ்சக நிறைந்து நினைவினுண் மறைந்து
புரையறு மன்பினர் விழிபெறத் தோற்றி
வானவர் நெடுமுடி மணித்தொகை திரட்டிப்
பதுக்கைசெய் யம்பலத் திருப்பெரும் பதியினும்
பிறவாப் பேரூர்ப் பழநக ரிடத்து
மகிழ்நடம் பேய்பெறும் வடவனக் காட்டினு
மருமறை முடியினு மடியவ ருளத்தினுங்
குனித்தரு ளுயகன் குலமறை பயந்தோ
னருந்தமிழ்க் கூடற் பெருந்தவர் காண
வெள்ளியம் பலத்துட் டுள்ளிய ஞான்று
நெருப்பொடு சுழலவும் விருப்பெடுத் தவ்வழல்
கையினிற் கொள்ளவுங் கரியுரி மூடவு
மாக்கிய பனிப்பகைக் கூற்றிவை நிற்க
வாங்கவர் துயர்பெற வீன்றவென் னொருத்தி
புகல்விழு மன்பதற் கின்றி
மகவினைப் பெறலாம் வரம்வேண் டினளே.

கடன்மகளுள்வைத்து - வரம்வேண்டினளே. பதுக்கை - பகைதணிவினைப்பிரிவு. துறை - முன்பனிக்கு நொந்துரைத்தல்.

‘கடன்மகள்’ என்பதுமுதல் ‘அணைக்கவும்’ என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) கடல் மகள் - கடலாகிய பெண், வடவை - வடவாக்கினியை, உள் வைத்து - தன்னிடத்து வைத்திருந்து, மெய் - தனதுடல், காயவும் - காயவும், மலைமகள் - பார்வதி, தழல்தரு மேனி ஒன்று - நெருப்புமயமாகிய மேனியொன்றனை, அணைக்கவும் - அணைத்துக்கொண்டிருக்கவும்.

(வி-ரை.) மலைமகள்-மலைக்குமகள். பார்வதி யென்றது இதன் பொருட்டாயதோர் வடசொல்.

'மாசறு' என்பதுமுதல் 'வெதுப்புறுக்கவும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) மாசு அறு - குற்றமற்ற, திருமகள்- திருமகள், மலர்-தாமரைமலரில், புகுந்து - புகுந்து, ஆயிரம்-ஆயிரமாகிய, புறவிதழ் - புறவிதழென்னும், புதவு - கதவை, அடைத்து - சாத்தி, அதன் - அத்தன்மையாலுண்டாகும், வெதுப்புறுக்கவும் - வெப்பத்தைப்பொருந்தவும்.

(வி-ரை.) திருமகள் என்ற குறிப்பால் மலர் தாமரைமலருக்காயிற்று.

'சயமகள்' என்பதுமுதல் 'அழல்கூடவும்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) சயமகள் - விசயமகள், மனம் - மனத்தின்கண், சீற்றத்தழல்-கோபாக்கினியை, வைத்து-வைத்து, திணி புகும் - பலத்தோடு செல்லுதற்குரிய, வென்றி - வெற்றியுள்ள, செரு அழல் கூடவும் - யுத்தமாகிய வெம்மையைப் பொருந்தவும்.

(வி-ரை.) சீற்றம் - கோவம்.

'ஐயர்' என்பதுமுதல் 'அணையவும்' என்பதுவரை.
(7—8 வரிகள்.)

(ப-ரை.) ஐயர் - வேதியர், பயிற்றிய-பயிலுகின்ற, விதி அழல்-விதிமுறை வேள்வியை, ஓம்பவும் - செய்யவும், அமரர் அனைவரும் - தேவர் யாவரும், அவ்வனற்கு - அந்த யாகாக்கினியின்பொருட்டு, அணையவும் - வந்துசேரவும்.

(வி-ரை.) பயிற்றிய-தன்வினைப்பொருட்கண் வந்தது. ஓம்பல்-பாதுகாத்தல், அது ஈண்டுச் செய்தலெனப் பொருள் பயந்து நின்றது.

'முன்னிடைக்காடன்' என்பதுமுதல் 'உள்ளிருந்தேன' என்பதுவரை.
(9—10 வரிகள்.)

(ப-ரை.) இடைக்காடன்-இடைக்காடனெனவன், முன் எழ - முன்சென்றபோது, பின் நடந்து - அவன் பின்னேசென்று, நோன்

புநு விரதியர்-தவஞ்செய்கின்ற விரதியர்கள். நுகர - அமுதம் உண்ணுமாறு, உள் இருந்தென - அவர்களுள்ளத்தி லிருந்ததுபோல.

(வி-ரை.) முன் என்றது முற்காலத்தி லென்றவாறு. நுகர்தல் - உண்டல்.

'நெஞ்சகநிறைந்து' என்பதுமுதல் 'தோற்றி' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) நெஞ்சகம் நிறைந்து - நெஞ்சிடத்தே நிறைந்து, நினைவினுள் மறைந்து - நினைப்பினிடத்தே தெரியாமனின்று, புரை அறும் அன்பினர் - பற்றற்ற சிவநேசர், விழி பெற - ஞானம் பெறுமாறு, தோற்றி - குருமூர்த்தமாகத் தோன்றி.

(வி-ரை.) மறைதல் - தெரியாதுநிற்றல். விழி - கண். அது இங்கு ஞானக்கண்ணைக் குறித்தது. தோற்றுதல் - எழுந்தருளல். மூர்த்தம் - உருவம்.

'வானவர்' என்பதுமுதல் 'திருப்பெரும்பதியினும்'
என்பதுவரை.
(13—14 வரிகள்.)

(ப-ரை.) வானவர் நெடு முடி - தேவர்களது நீண்ட முடிகளிலுள்ள, மணி தொகை திரட்டி - மாணிக்கத்திரள்களைச் சேர்த்து, பதுக்கை செய் - மேடாக்குகின்ற, அம்பலம் - பொன்னம்பலமாகிய, திருப்பெரும் பதியினும் - பெரிய திருப்பதியினிடத்தும்.

(வி-ரை.) தேவர்கள் திரண்டுவந்து வணங்குங்கால், அவர்மகுடங்கள் ஒன்றோடொன்று தாக்குண்டுஉதிர்ந்த மணிகள் பொன்னம்பலத்தை மேடாக்குதலால் இவ்வாறு கூறினார். கூறவே, பொன்றீது மணிகள்வீழ்ந் தழகுசெய்தலும் பெறப்பட்டது.

'பிறவாப்பேரூர்' என்பதுமுதல் 'வடவனக்காட்டினும்'
என்பதுவரை.
(15—16 வரிகள்.)

(ப-ரை.) பிறவா பேரூர் - பிறவாமைக்குக் காரணமான பெரியவூராகிய, பழநகர் இடத்தும் - பழைமையான காசியினிடத்தும், மகிழ் நடம் - ஆனந்தத் தாண்டவக்காட்சியை, பேய் பெறும்-காரைக்காலம்மையார் பெற்ற, வடவனக் காட்டினும் - திருவாலங்காட்டினிடத்தும்.

(வி-ரை.) காரைக்காலம்மையார் தம்மைக் காரைக்காற்பேய் எனத் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத் திறுதிச்செய்யுள் முத லிய பலவிடங்களிற் கூறலான் 'பேய்' என்றிவருங் கூறினர்.

'அருமறைமுடியினும்' என்பதுமுதல் 'பெருந்தவர்காண' என்பதுவரை.

(17—19 வரிகள்.)

(ப-ரை.) அருமறை முடியினும்-எழுதற்கு அரிய வேதாந்தத்தி னிடத்தும், அடியவர் உளத்தினும் - அடியாராயுள்ளா ரிதயத்தி னிடத்தும், குனித்தருள் நாயகன்-ஆடியருளிய முதல்வன், குலமறை பயந்தோன் - நால்வேதப்பொருளையுரைத்த கடவுளினது, அருந் தமிழ் கூடல் - அருமையாகிய தமிழ்க்கிடமான நான்மாடக்கூட லில், பெருந்தவர் காண - பெரிய பதஞ்சலி வியாக்கிரபாதர் தரிசிக் கும்படி.

(வி-ரை.) குனித்தல் - நடித்தல் (ஆடல்). பெருந்தவர் என்றது பதஞ்சலி வியாக்கிரபாதரை யுணர்த்தியவா றென்னெனின், இவர் பொருட்டே இறைவனிங்கு நடித்தலானென்க.

'வெள்ளியம்பலத்துள்' என்பதுமுதல் 'கூற்றிவைநிற்க' என்பதுவரை.

(20—23 வரிகள்.)

(ப-ரை.) வெள்ளி அம்பலத்துள் - இரசிதசபையில், துள்ளிய ஞான்று-நடித்தருளியநாளில், நெருப்பொடு - அக்கினியோடு, சுழல வும் - சுழலவும், விருப்பு எடுத்து - விருப்பங்கொண்டு, அ அழல் - அந்தவக்கினியை, கையினில்கொள்ளவும்-கையிலேந்தவும், கரி உரி மூடவும் - யானைத்தோலைப் போர்த்துக்கொள்ளவும், ஆக்கிய - இவ் வகைப்பாடுபடுத்திய, பனி பகை - பனியாகிய நோயின், கூற்றிவை நிற்க - இக்கூறுபாடுகள் நிற்க.

(வி-ரை.) துள்ளல் - நடித்தல்.

'ஆங்கு' என்பதுமுதல் 'வரம்வேண்டினள்' என்பதுவரை.

(24—26 வரிகள்.)

(ப-ரை.) அவர் - அவர்களெல்லாம், ஆங்கு - அவ்வாறு, துயர் பெற - துன்பத்தையடையாநிற்ப, ஈன்ற என்றொருத்தி - என்னை

யீன்றதாயானவள், புகல் விழும் - புகலாக விரும்பத்தக்க, அன்பு அதற்கு இன்றி-அன்புதனக்கில்லாமல், மகவினை-பிள்ளையை, பெறலாம் - பெறுதற்குரிய, வரம் வேண்டினள் - வரங்கிடந்தாள்.

(வி-ரை.) விழுதல் - விரும்புதல்.

காயவும் அணைக்கவும் உறுக்கவும் கூடவும் ஓம்பவும் சுழலவும் கொள்ளவும் முடம் ஆக்கிய பணிப்பகைக் கூற்று நிற்க, அவர் துயர் பெற ஈன்ற வொருத்தி அன்பின்றி மகவுபெறலாம் வரம் வேண்டினளென வினைமுடிவுசெய்க. (எஎ)

திருக்கோவையார் ௩௩௧ - ம் செய்யுள்.

மறவாமை கூறல்.

மறவாமை கூறலென்பது — வினைமுற்றிவந்து தலைமகளோடு பள்ளியிடத்தானாகிய தலைமகன், நீயிர் வினையிடத் தெம்மைமறந்தீரே யென்ற தோழிக்கு, யான் பாசறைக்கட் டாழ்த்தவிடத்தும், கண்முத்திலங்கநின்று, இவள் என்னுடைய நெஞ்சைவிட்டு நீங்கிற்றிலள் ஆதலால், யான் மறக்குமாறென்னோவெனத் தானவளை மறவாமை கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

கருங்குவ ளைக்கடி மாமலர் முத்தங் கலந்திலங்க
நெருங்குவ ளைக்கிள்ளை நீங்கிற் றிலணின்று நான்முகனோ
டொருங்குவ ளைக்கரத் தானுண ராதவன் றில்லையொப்பாய்
மருங்குவ ளைத்துமன் பாசறை நீடிய வைகலுமே.

பாசறை முற்றிப் பைந்தொடி யோடிருந்து
மாசறு தோழிக்கு வள்ள லுரைத்தது.

(ப-ரை.) நான்முகனோடு ஒருங்கு வளை கரத்தான் உணராதவன் தில்லை ஒப்பாய் - நான்முகனோடுங்கூடச் சங்கையேந்திய கையையுடையவனு மறியாதவனது தில்லையை யொப்பாய், மருங்கு வளைத்து மன் பாசறை நீடிய வைகலும்-முனைமருங்கு சூழ்ந்து மன்னனது பாசறைக்கண் யான் தாழ்த்தவைகற்கண்ணும், கரு குவளை கடி மா மலர் முத்தம் கலந்து இலங்க நின்று - (கண்ணாகிய) கருங்குவளையினது புதிய பெரிய மலர் (கண்ணீராகிய) முத்தத்தைக் கலந்து விளங்கநின்று, நெருங்கு வளை கிள்ளை நீங்கிற்றிலள் - நெருங்கின வளையையுடைய இக்கிளியையொப்பாள் ஒருகாலமு மென்னை விட்டு நீங்கிற்றிலள் (அதனாற் பிரிவில்லை), எ-று.

(வி-ரை.) வைகலு மென்பதற்கு வைகல்தோறு மென் றுரைப்பாருமுளர்.

நேரிசையாசிரியப்பா.

மருவளர் குவளை மலர்ந்துமுத் தரும்பிப்
பசுந்தாட் டோன்றி மலர்நனி மறித்து
நெட்டெறி யூதை நெருப்பொடு கிடந்து
மணிபுறங் கான்ற புரிவளை விம்மி
விதிப்பவன் விதியா வோவநின் றெனவென்
னுள்ளமுங் கண்ணு நிலையுறத் தழீஇயின
னுவணக் கொடியின னுந்திமலர்த் தோன்றிப்
பார்முதற் படைத்தவ னடுத்தலை யறுத்துப்
புனிதக் கலனென வுலகுதொழக் கொண்டு
வட்டமுக் கோணஞ் சதுரங் கார்முக
நவத்தலைத் தாமரை வளைவாய்ப் பருந்தெனக்
கண்டன மகந்தொறுங் கலிபெறச் சென்று
நறவிரந் தருளிய பெரியவர் பெருமான்
கூக்குரல் கொள்ளக் கொலைதரு நவ்வியும்
விதிரொளி காற்றக் கனல்குளிர் மழுவு
மிருகரந் தரித்த வொருவிழி நுதலோன்
கூடலொப் புடையாய் குலவுடுத் தடவுந்
தலைமதில் வயிற்றுட் படுமவ ருயிர்க்கணந்
தனித்தனி யொளித்துத் தணக்கலு மரிதெனப்
போக்கற வளைந்து புணரிரு ணுளுங்
காவற் காட்டின வழியுந்
தேவர்க் காட்டும் பாசறை யினுமே.

மருவளர்குவளை - பாசறையினுமே. பதீ-வேந்தற்குற்றுழிப் பிரிவு. துறை - மறவாமை கூறல்.

'உவணக்கோடியினன்' என்பதுமுதல் 'தோழக்கோண்டு' என்பதுவரை.
(7—9 வரிகள்.)

(ப-ரை.) உவணக்கொடியினன் - திருமாலது, உந்தி மலர் தோன்றி - நாபிக்கமலத்திற் பிறந்து, பார்முதல் படைத்தவன் -

பார்முதலியவற்றைப் படைத்த பிரமனது, நடு தலை அறுத்து-நடுத் தலையை நகத்தாற்கிள்ளி, புனிதம் கலன் என - புனித பாத்திர மென்று, உலகு தொழ கொண்டு - உலகத்தார் வணங்கக் கைக் கொண்டு.

(வி-ரை.) உவணம் - கருடன். உவணக்கொடியினன்-கருடத் துவசத்தையுடையவன் (திருமால்). கலன்-போலி.

'வட்டம்' என்பதுமுதல் 'பெருமான்' என்பதுவரை.

(10—13 வரிகள்.)

(ப-ரை.) வட்டம்-வட்டவடிவாகவும், முக்கோணம்-முக்கோண வடிவாகவும், சதுரம் - சதுரவடிவாகவும், கார் முகம் - வில்வடிவாக வும், நவத்தலை - நவகோணமாகவும், தாமரை-தாமரைவடிவாகவும், வளை வாய் - வளைந்த வாயினையுடைய, பருந்து என - பருந்துவடிவா கவும், கண்டன - செய்தனவாகிய, மகந்தொறும் - யாககுண்டந்தோ றும், கலி பெற சென்று - வேதமுழக்கத்துடன் போய், நறவு - அவி யாகிய வுணவை, இரந்தருளிய - கேட்டருளிய, பெரியவர் பெரு மான் - நீத்தோர் பெருமான்.

(வி-ரை.) காண்டல் - செய்தல். கலி - ஒலி. மகந்தொறும் நிகழ் வது பேரொலியாதலான் முழக்கமென்றுரைக்கலாயிற்று. இரத்தல்- யாசித்தல்.

'கூக்குரல்' என்பதுமுதல் 'கூடலொப்புடையாய்' என்பதுவரை.

(14—17 வரிகள்.)

(ப-ரை.) கூக்குரல்-கூவுகின்ற குரலொலியானது, கொள்ள - (உலகமெல்லாம்) வியாபிக்க, கொலைதரு - கொலைசெய்யவந்த, நவ்வி யும் - மானையும், விதிர்-(யாவரும்) நடுங்கும்படி, ஒளி காற்ற-சோதி வீசலால், கனல் - அழற்கடவுளும், குளிர் - வெம்மையிற் குறைபடு கின்ற, மழுவும்-மழுவையும், இருகரம் தரித்த-வலக்கரத்திலும் இடக் கரத்திலுமேந்திய, ஒருவிழி நுதலோன்-ஒருவிழி பொருந்திய நெற் றியனது, கூடல்ஒப்பு உடையாய் - மதுரையை யொப்பானவளே.

(வி-ரை.) காற்றல் - வீசுதல், கால்-காற்று; இது தன்வினையில் காவல் என வரும். அழற்கடவுள் - அக்கினிதேவன். விதிர்த்தல்- நடுங்கல். ஒருவிழிநுதலோன் - சிவபெருமான்.

'குலவுடுத்தடவும்' என்பதுமுதல் 'பாசறையினுமே' என்பதுவரை.

(17—22 வரிகள்.)

(ப-ரை.) குலம்உடு தடவும் - கூட்டமான விண்மீனைத்தடவா நின்ற, தலைமதில் வயிற்றுள் - மதில்சூழ்ந்த அரணுள், படும் - துயர் பட்டிருந்த, அவர் உயிர்க்கணம் - மாற்றலருயிர்கள், தனித்தனி ஒளித்து - தனித்தனியாக வொளித்து, தணக்கலும் அரிது என - ஓடிப் போதலு மரிதென்று கருதுமாறு, போக்கு அற வளைந்து - தப்பிப் போகாதபடி மதிலைச் சூழ்ந்து, புணர் இருள் நாளும் - முத்திகை யிட்ட விருளினும், காவல் காட்டின வழியும் - காவல்காத்தவிடத்தும், தேவர் காட்டும் - தேவரைக் காட்டுகின்ற, பாசறையினும் - பாசறையிடத்தும்.

(வி-ரை.) குலம் - கூட்டம். மாற்றலர் - பகைவர். தணத்தல் - ஓடல். போக்கு - போதல்.

'மருவளர்' என்பதுமுதல் 'நெருப்போடுகிடந்து' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) மரு வளர் - வாசனைமிகுந்த, குவளை மலர்ந்து - (கண்களாகிய) குவளையலர்ந்து, முத்து அரும்பி - (பற்களாகிய) முத்தங்கள் தோன்றி, பசுந்தாள் தோன்றிமலர் - (கைகளாகிய) பசியதாளையுடைய காந்தட்பூ, நனி மறித்து - மிகவுமறித்து, நெட்டு எறி ஊதை - வேகமாய் வீசாநின்ற பனிக்காற்றாகிய, நெருப்பொடு கிடந்து நெருப்போடிருந்து.

(வி-ரை.) வளர்தல் - மிகுதல்.

'மணிபுறங்கான்ற' என்பதுமுதல் 'தழீஇனள்' என்பதுவரை.

(4—6 வரிகள்.)

(ப-ரை.) மணி புறம் கான்ற - மணிகளைப் புறத்திலுமிழ்ந்த, புரி வளை விம்மி - கழுத்தாகிய வளைபொருந்திய சங்கம் விம்மி, விதிப்பவன் விதியா - பிரமன் விதித்தற்கிசையாத, ஓவம் - சித்திரப் பாவை, நின்றென - நிலைபெற்றிருந்தாற்போல, என் உள்ளமும் -

என்னுள்ளத்தையும், கண்ணும் - கண்ணையும், நிலையுற - விட்டு நீங்காமல், தழீயினள் - தழுவியிருந்தனள்.

(வி-ரை.) விதித்தல்-படைத்தல். படைத்தற்றொழிலை யுடைய வனாதலால் பிரமனை 'விதிப்பவன்' என்றார்.

அறுத்து கொண்டு சென்று தரித்த நுதலோன் கூடலொப் புடையாய்,புணரிருளூம் வழியும் பாசறையினும் மலர்த்துஅரும்பி மறித்து கிடந்து விம்மி ஒவநின்றெென உள்ளமுங் கண்ணுந் தழீஇ யினளென வினைமுடிவு செய்க. (எஅ)

திருக்கோவையார் ௩௬௦-ம் செய்யுள்.

அணைந்தவழியூடல்.

அணைந்தவழி யூடலென்பது—தோழியா லூடல் தணிவிக்கப் பட்டுப் பள்ளியிடத்தாளாகிய தலைமகள், நீ செய்கின்றவிதனை யறி யின் நின்காதலிமார் நின்னை வெகுள்வர், அதுகிடக்க, யாம் மேனி முழுதுஞ் சிறுவனை லுண்டாக்கப்பட்ட பால்புலப்படுந் தன்மையை யுடையேம், அதன்மேல் யாமும் நீ செய்கின்ற இக்கள்ளத்தை விரும் பேம், அதனால் எங்காலைத் தொடாதொழி, எங்கையை விடுவாயாக எனத் தலைமகன் தன்னை யணைந்தவழி ஊடாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சேறான் றிகழ்வயற் சிற்றம் பலவர் தில்லைநகர்வாய்
வேறான் றிகழ்கண்ணி ளையார்வெகுள்வர்மெய்ப் பாலன்செய்த
பாறான் றிகழும் பரிசின மேவும் படிறுவவேங்
காறான் றொடேறொடே ரேல்விடு தீண்டலெங் கைத்தலமே.

தெளிபுனலூரன் சென்றணைந்தவழி
ஒளிமதிநுதலி யூடியுரைத்தது.

(ப-ரை.) சேல் - சேல்மீன்கள், திகழ் - விளங்குகிற, வயல் - வயல்சூழ்ந்த, சிற்றம்பலவர் - சிற்றம்பலவரது, தில்லை நகர்வாய் - தில்லைநகரினிடத்துள்ளராகிய, வேல் திகழ் கண்-வேல்போல விளங்கு கிற கண்ணையுடைய, இளையார் - (நின் காதலிமாராகிய) இளையவர், வெகுள்வர்-(நீ செய்யுமிதனை யறியின் நின்னை) கோவிப்பர், (அன்றி யும்) மெய் - மேனியானது, பாலன் செய்த - சிறுவனை லுண்டாக்கப் பட்ட, பால் திகழும் - பால் மணக்கின்ற, பரிசினம் - தன்மையுடை யேம் (ஆதலின் நினக்குத் தக்கிரேம்), மேவும்-(இதன்மேலே யாமும்

நீயும்) சேர்கின்ற, படிறு - (நாணின்மையோடு கூடிய) கள்ளத்தை, உவவேம் - விரும்பேம், (ஆதலால்) கால் தொடல் - (எமது) காலைத் தொடாதொழி, தொடரேல் - (எம்மைத்) தொடரவேண்டா, எம் கைத்தலம் - எமது கைத்தலத்தை, நீண்டல்-தொடற்பாலையல்லை, விடு - விடுவாயாக, எ - று.

(வி-ரை.) திகழ்வயற்றில்லை யென வியையும். பால்திகழுமெ ன்னும் இடத்து நிகழ்பொருளின் வினை மெய்யாகியவிடத்துமே லேறி நின்றது. நான்கிடத்தும் தானென்பது அசைநிலை. பரிசின மேனு மென்பதூஉம் பாடம்.

நேரிசையாசிரியப்பா.

மதியமுடல் குறைத்த வெள்ளாங் குருகினம்
பைங்கா றடவிச் செங்கய றாரந்துண்டு
கழுக்கடை யன்னதன் கூர்வாய்ப் பழிப்புல
வெழின்மதி விரித்தவெண் டளையிதழ்த் தாமரை
மலர்மலர் துவட்டும் வயலணி யூர
கோளகைக் குடிலிற் குனிந்திடைந் தப்புறத்
திடைநிலை யற்ற படர்பெரு வெளியகத்
துடன்முடக் கெடுத்த தொழில்பெறு வாழ்க்கைக்
கவைத்தலைப் பிறையெயிற் றிருளெழி லரக்க
னமுதமுண் டிமையா தவருமங் கையருங்
குறவருங் குறவத் துணையரு மாகி
நிலம்பெற் றிமைத்து நெடுவரை யிறும்பிடைப்
பறவையுண் டீட்டிய விருனற வருந்தி
யந்நிலத் தவரென வடிக்கடி வணங்கும்
வெள்ளியங் குன்றக முள்ளுறப் புகுந்தொரு
தேவனு மதன்முடி மேவு முளனு
மெனப்புயங் கொட்டி நகைத்தெடுத் தார்க்கப்
பிலந்திறந் தன்ன பெருவா யொருபது
மலைநிரைத் தொழுங்கிய கரமிரு பத்தும்
விண்ணுடைத் தரற்றவுந் திசையுட்க முரியவுந்
தாமரை யகவயிற் சேயிதழ் வாட்டிய
திருவடிப் பெருவிரற் றலைநக நுதியாற்

சிறிதுபலை யுறுத்த மதிமுடி யந்தணன்
பொன்னணி மாடம் பொலிநகர்க் கூட
லாவண வீதி யனையவ ரறிவுறி
னூருணி யன்னநின் மார்பகந் தோய்ந்தவென்
னிணைமுலை நன்ன ரிழந்தன வதுபோன்
மற்றவர் கவைமன மாழ்கிச்
செற்றநிற் பகர்வரிக் காதீண் டலையே.

மதியமுடல்குறைத்த - காதீண்டலையே. பநதி - பரத்தையிற் பிரிவு. துறை - அணைந்தவழியூடல்.

'மதியம்' என்பதுமுதல் 'வயலணியூர' என்பதுவரை.

(1—5 வரிகள்.)

(ப-ரை.) மதியம் - சந்திரனை, உடல் - உடல் நிறத்தில், குறைத்த - குறைபடுத்திய, வெள்ளாம் - வெண்மையாகிய குருகு இனம் - சொக்கினங்கள், பைங்கால் தடவி - மெல்லிய காலாற்றடவி, செங்கயல் - இளங்கயல்களை, தூர்ந்தன்று - தூர்த்திபுகுந்து, கழுக்கடை அன்ன - ஈட்டிமுனையையொத்த; தன் கூர் வாய் - தமது கூரிய வாயி லுள்ள, பழி புலவு - பழிக்கத்தக்க புலானாற்றத்தை, மதி எழில் பிரித்த - நிறைமதியி னழகைக்காட்டிய, வெண்டளை இதழ் தாமரை - முறுக்குடைந்த வெள்ளிதழ்த் தாமரையின், மலர் மலர் - மலர்ந்தமலரில், துவட்டும் - துடைத்துக்கொள்கின்ற, வயல் அணி ஊர - வயலொருங்கிய ஊரனே.

(வி-ரை.) வெள் - வெண்மை. இனம் - கூட்டம். செங்கயல் என்பதில் செம்மை இளமைப்பொருட்டு. கழு - ஈட்டி. கடை - நுனி. மலர் மலர் - வினைத்தொகை நிலைத்தொடர். துவட்டல் - துடைத்தல்.

'கோளகை' என்பதுமுதல் 'வெளியகத்து' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) கோளகை - அண்ட கோளகையாகிய, குடிலில் - வீட்டிற் செல்லும்போது, குனிந்து - தலைகுனிந்து, இடைந்து - விலகி, அப்புறத்து - பகிரண்டத்தில், இடைநிலை அற்ற - தடையற்ற, படர் பெருவெளியகத்து - மிகவும் பரந்த வெளியிடத்து.

(வி-ரை.) குடில் - வீடு. இடைதல் - விலகுதல். இடைநிலை - தடை. படர்தல் - பரத்தல்.

'உடன்முடக்கெடுத்த' என்பதுமுதல் 'அரக்கன்' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) முடக்கு உடல் எடுத்த - முடங்கிய வுடலை நிமிர்த்த, தொழில் பெறு - தொழிலைப்பெற்ற, வாழ்க்கை - வாழ்க்கையினை யுடைய, கவை தலை - பிளவான நுனியினையுடைய, பிறை - பிறை போன்ற, எயிறு - பற்களையும், இருள் எழில் - இருணிறத்தையுங் கொண்ட, அரக்கன் - இராவணன்.

(வி-ரை.) முடக்கு - வளைவு. எழில்-அழகு, அது ஈண்டு நிறத் துக்காயிற்று. 'பெருவாயொருபதும்,கரமிருபதும்' என மேல்வருத லான் அரக்கன் என்றது இராவணனை யுணர்த்திற்று.

'அமுதமுண்டு' என்பதுமுதல் 'பறவை' என்பதுவரை.

(10—13 வரிகள்.)

(ப-ரை.) அமுதம் உண்டு - அமுதத்தை யுண்ணலால், இமை யாதவரும்-கண்ணிமையாத தேவரும், மங்கையரும்-தேவமகளிரும், குறவரும்-குறவர்களும், குறவத்துணையரும் ஆகி - குறத்தியருமாகி, நிலம் பெற்று - பூமியில் வந்து, இமைத்து - கண்களிமைத்து, நெடு வரை இறும்பிடை-நெடிய மலைப்பாறையில், பறவை - தேன் ஈக்கள்.

(வி-ரை.) அமுதம் - அம்ருதம் என்னும் வடசொற் சிதைவு. இமையாதவர் - இயல்புவழக்கு. மங்கையர் - பெண் பொதுப்பெயர். இமைத்தல் - கண்ணிதழ் குவித்தல். இறும்பு - பாறை.

'உண்டீட்டிய' என்பதுமுதல் 'உள்ளுறப்புகுந்து' என்பதுவரை.

(13—15 வரிகள்)

(ப-ரை.) உண்டு ஈட்டிய - மலர்தொறுங் கவர்ந்துசேர்த்த, இறால் நறவு - இறாட்டின்கண்ணுள்ள தேனை, அருந்தி - உண்டு, அ நிலத்தவர் என - அக்குறிஞ்சி நிலத்தாரைப்போல், அடிக்கடி வணங்கும்-இடைவிடாமல் வணங்குகின்ற, வெள்ளி அம் குன்றகம்- வெள்ளிமலையிடத்து, உள்ளுற புகுந்து - உள்ளேநுழைந்து.

(வி-ரை.) ஈட்டல் - சேர்த்தல். இறால் - தேன்கூடு. வெள்ளி யங்குன்றகம்-அம்சாரியை, அழகுமாம்.

'ஒருதேவனும்' என்பதுமுதல் 'ஆர்க்க' என்பதுவரை.

(15—17 வரிகள்.)

(ப-ரை.) அதன் முடி - அதன் சிகரத்தில், ஒரு தேவனும் - (சிவனென்னும்) ஒரு தெய்வமும், மேவுமுளனும் என - இருக்கின்றானுமென்று, புயங்கொட்டி - தோளைக் கையாற்றட்டி, நகைத்து - சிரித்து, எடுத்து - அம்மலையைத்தூக்கி, ஆர்க்க - ஆரவாரிக்க.

(வி-ரை.) ஆர்த்தல் - ஆரவாரித்தல்.

'பிலந்திறந்தன்ன' என்பதுமுதல் 'மதிமுடியந்தணன்' என்பதுவரை.

(18—23 வரிகள்.)

(ப-ரை.) பிலம் திறந்து அன்ன-குகை திறந்தாலொத்த, பெருவாய் ஒருபதும் - பத்தாகிய பெரியவாயும், மலை நிரைத்து ஒழுக்கிய-மலையை வரிசையாய்வைத்தாலொத்த,கரம் இருபதும்-இருபதாகிய கைகளும், விண் உடைத்து-விண்ணுடையுமாறு முறையே, அரற்றவும்-அழவும், திசை உட்க - திக்குகள் நடுங்க, முரியவும்-நெரியவும், தாமரை - தாமரைமலரின், அகவயின் சே இதழ் - செவப்பாகிய அகவிதழை, வாட்டிய - வாடச்செய்த, திருவடி பெருவிரல்தலை - ஸ்ரீபாதத்தின் பெருவிரலது, நகம் நுதியால்-நகத்தின் நுனியால், சிறிது-சற்றே, மலை உறுத்த-அம்மலையை யழுத்திய, மதி முடி அந்தணன் - சந்திரசேகரப் பெருமானது.

(வி-ரை.) நிரை - வரிசை. அரற்றல் - அழல். உட்கல் - நடுங்கல். முரிதல் - நெரிதல். தாமரை-ஆகுபெயர்.

'பொன்னணிமாடம்' என்பதுமுதல் 'அறிவுறின்'என்பதுவரை.

(24—25 வரிகள்,)

(ப-ரை.) பொன் அணி மாடம்-பொன்னாலணியப்பட்ட மாடங்கள், பொலி நகர் கூடல் - பொலிவுபெற்ற மதுரைமாநகரில், ஆவண வீதி - கடைவீதியை, அனையவர் - ஒப்பான பரத்தையர், அறிவுறின் - அறிவாராயின்.

(வி-ரை.) அணிதல் - அலங்கரித்தல். ஆவணம் - கடைத்தெரு. அறிவுறின் - ஒருசொல், பகுதி அறிவுறு. எல்லார்க்கும் பொதுவாதலால் பரத்தையர்களைக் கடைவீதிக் குவமையாக்கினர்.

‘ஊருணியன்ன’ என்பதுமுதல் ‘தீண்டலையே’ என்பதுவரை.

(26—29 வரிகள்.)

(ப-ரை.) ஊருணி அன்ன - ஊருணியையொத்த, நின் மார்பு அகம் தோய்ந்த-நின்மார்பைப் புணர்ந்த, என்-எனது, இணை முலை - இரண்டு முலைகளும், நன்னர் இழந்தன அதுபோல் - நன்மையிழந்ததுபோல, மற்றவர் - அவர்களது, கவை மனம் - இரண்டுபட்ட மனமானது, மாழ்கி - வருந்தி, செற்றம் நின் பகர்வர் - நின்னைக் கோவிப்பார்கள் (ஆதலால்), இ கால் - என்னுடைய இந்தக்காலை, தீண்டலை - தீண்டாதொழிக.

(வி-ரை.) ஊருணி - ஊரா ரெல்லாரும் நீருண்ணுங் குளம். மற்று - அசை. கவை - பிளவு.

ஊரனே! அரக்கன் ஒருபதுவாயானு மரற்றவும் இருபதுகைகளு முரியவும் பெருவிரனகநுதியால் மலையுறுத்த மதிமுடியந்தணன் கூடல் ஆவணவிதி யனையவர், அறிவுறின், நின்மார்பகந் தோய்ந்த என்னிணைமுலை நன்னரிழந்தனபோல், மற்றவர் மாழ்கிச் செற்றம் பகர்வராதலால் இக்கால் தீண்டலையென வினைமுடிவுசெய்க. (எசு)

திருக்கோவையார் ௩௯௩-ம் செய்யுள்.

பொறையுவந்துரைத்தல்.

பொறையுவந்துரைத்தலென்பது—தலைமகனைப் பரத்தைய ரெதிர்கொண்டமை கேட்ட தலைமகள், நெஞ்சுடைந்து, புறத்து வெளிப்படாமற் பொறுத்தமைகண்ட தோழி, யானிவ்வாறாகவும் கலங்காதுநின்ற பெரும்பொறையாட்டியை, யான் இன்று பேசுவனவென்னென்று அவளை யுவந்து கூறாநிற்றல். அதற்குச்செய்யுள்:—

கரும்புறு கொண்றையன் றில்புலி யூர்ச்சுரும் கும்மருங்குற்
பெரும்பொறை யாட்டியை யென்னின்று பேசுவ பேரொலிநீர்க்
கரும்புறை யூரன்க லந்தகன் றானென்று கண்மணியு
மரும்பொறை யாகுமென் னாவியுந் தேய்வுற் றழிகின்றதே.

கள்ளவிழ்கோதையைக் காதற்றோழி
உள்ளவிழ்பொறைகண் டுவந்துரைத்தது.

(ப-ரை.) பேரொலி நீர் - பெருமுழக்கமுற்ற நீரையுடைய, கரும்பு உறை - கரும்பு தங்கும், ஊரான்-ஊரையுடையவன், கலந்து

அகன்றான் என்று - கலந்துறைந்து நீங்கினனென்று (கருதுதலான்), கண்மணியும் - என் கண்மணியும், (பயனின்மையால்) அரும் பொறை ஆகும் - (தாங்குதற்கு) அரிய பாரமாகாநின்றன; என் ஆவியும் - என் உயிரும், தேய்வுற்று அழிகின்றது - தேய்ந்தழியாநின்றது, சுரும்பு ஊறு கொன்றையன் - (யானிவ்வாறாகவும் கலங்காதுநின்ற) வண்டுகள் மொய்க்கும் கொன்றைப் பூவினையுடையானது, தொல் புலியூர் - பழையதாகிய புலியூரில், சுருங்கும் - சுருங்கின, மருங்குல் - இடையையுடைய, பெரும்பொறை யாட்டியை, பெரும்பொறை யுடையவளை, இன்று பேசுவ என் - யான் இன்று பேசுவனவென், எ-று.

(வி-ரை.) என்கண்மணியுந் தேய்வுற்றழியாநின்றது. ஆவியு மரும்பொறையாகாநின்றதென்று கூட்டுவாருமுளர். உள் ஆவிற் பொறை - நெஞ்சுடைந்து புறத்து வெளிப்படாத பொறை.

நேரிசையாசிரியப்பா.

உலர்கவட் டோமைப் பொரிசினைக் கூகையும்
வீசுகோட் டாந்தையஞ் சேவலோ டலமரத்
திரைவிழிப் பருந்தினம் வளையுகிர்ப் படையாற்
பார்ப்பிரை கவரப் பயனுறு முலகிற்
கடனறும் யாக்கைக் கவர்கடன் கழித்துத்
தழலுணக் கொடுக்க வதனுண விடைபே
கைவிளக் கெடுத்துக் கரையினங் கரையப்
பிணம்பிரித் துண்ணுங் குணங்கினங் கொடிப்பச்
சூற்பே யேற்ப விடாகினி கரப்பக்
கண்டுளந் தளிர்க்குங் கருணையஞ் செல்வி
பிறைநுத லாட்டி கடுவளர் கண்டி
யிறானற வருவி யெழுபரங் குன்றத்
துறைசூர்ப் பகையினற் பெறுதிரு வயிற்றின
ளொருபாற் பொலிந்த வுயர்நகர்க் கூடற்
கடுக்கையஞ் சடையினன் கழலுளத் திலர்போற்
பொய்வரு மூரன் புகவரு மிற்புக
வென்னுளஞ் சிகைவிட் டெழுமனற் புக்க
மதுப்பொழி முளரியின் மாழ்கின வெள்ளாற்
றோளிற் றுவண்டுந் தொங்கலுண் மறைந்தும்

தைவர லேற்றுங் கனவினுந் தடைந்துந்
திரைக்கடற் றெய்வமுன் றெளிசூள் வாங்கியும்
பொருட்கான் றடைந்தும் பாசறைப் பொருந்தியும்
போக்கருங் கடுஞ்சுரம் போகமுன் னிறந்துங்
காவலிற் கவன்றுங் கல்வியிற் கருதியும்
வேந்துவிடைக் கணங்கியும் வினைபொருட் குருகிய
நின்ற விவட் கினி யென்றுங்
கன்றிய வுடலுட் படுநனி யுயிரே.

உலர்கவட்டோமை - படுநனியுயிரே. பகுதி-பாத்தையிற்பிரிவு. துறை - பொறையுவந்துரைத்தல்.

‘உலர்கவட்டு’ என்பதுமுதல் ‘அலமர’ என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) உலர் கவட்டு - உலர்ந்த கொம்பினையுடைய, ஓமை - ஓமையென்னு மரத்தின், பொரி சினை - பொரிந்த கிளையிலுள்ள, கூகையும் - கோட்டானும், வீசு கோட்டு - அம்மரத்தினது நீண்ட கோட்டிலுள்ள, ஆந்தையும் - ஆந்தையும், சேவலோடு - தத்தஞ் சேவல்களோடு, அலமர - பறந்து சுழலாநிற்ப.

(வி-ரை.) கவடு - கொம்பு (கிளை). ஓமை - ஓர்மரம். கோடு - கிளை. அலமரல் - சுழலாநிற்றல்.

‘திரைவிழி’ என்பதுமுதல் ‘கழிந்து’ என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) திரை விழி - திரைந்த விழியினையுடைய, பருந்து இனம் - பருந்துகள், வளை உகிர் படையால் - வளைந்த நகமாகிய வாயுதத்தால், பார்ப்பு - சங்குஞ்சுகளுக்கு, இரை கவர - இரை கவர்ந்திடுமாறு, பயன் உறு உலகில் - பயனைக்கொண்டிருக்கின்ற பாலைநிலத்தில், கடன் அறும் - வந்தவினைப்போக மற்ற, யாக்கை - உடலின்பொருட்டு, கவர் கடன் - செய்யத்தகுங் கடன்களை, கழித்து - செய்துமுடித்து.

(வி-ரை.) திரைதல் - சுருங்குதல். உகிர் - நகம். உலகு - ஈண்டுப் பாலைநிலத்துக்காயிற்று. கடன் - வினைப்போகம்.

'தழலுணக்கொடுக்க' என்பதுமுதல் 'கொடுப்ப' என்பதுவரை.

(6—8 வரிகள்.)

(ப-ரை.) தழல் உண கொடுக்க-அக்கினி தகனஞ்செய்ய, அதன் உணவிடையே - அந்நெருப்பில் வேகும்போது, கை விளக்கு எடுத்து - கையில் விளக்கேந்தி, கரை-அவ்வெல்லையில், இனம் கரைய - தன்னினத்தை யழைத்து, பிணம் - பிணத்தை, பிரித்து - மூடுபிரித்து, உண்ணும் - புசிக்கின்ற, குணங்கு இனம் - பிசாசங்கள், கொடுப்ப - பொடுக்க.

(வி-ரை.) கரைய-எச்சத்திரிபு. மூடு - மூடல். குணங்கு - பிசாசம்.

'சூற்பேய்' என்பதுமுதல் 'கருணைஅஞ்செல்வி' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) சூல் பேய்-சூலையுடைய பேய்கள், எற்ப - கையேந்தி வாங்க, இடாகினி - இடாகினிகள், கரப்ப - அதனை மறைத்துக் கொள்ள, கண்டு - (இதனைக்) கண்டு, உளம் தளிர்க்கும் - உள்ளங் களிக்காநின்ற, கருணை அம் செல்வி - கருணையையுடைய அழகிய காளியாகிய.

(வி-ரை.) சூல் - கருப்பம். அம்-சாரியையுமாம்.

'பிறைநுதனாட்டி' என்பதுமுதல் 'சூர்ப்பகையினன்' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) பிறைநுதல் நாட்டி-பிறைபோன்ற நுதலில் நாட்டத்தையுடையாள், கடு வளர் கண்டி - விடந்தங்கிய கண்டத்தையுடையாள், இருல் நறவு - இருட்டினின்றும் தேனனது, அருவி எழு - அருவியாக வோடுகின்ற, பரங்குன்றத்து - திருப்பரங்குன்றத்தில், உறை - எழுந்தருளிய, சூர் பகையினன் - சூர்ப்பகையினனாகிய முருகக்கடவுளை.

(வி-ரை.) நுதல் - நெற்றி. நாட்டம் - கண். சூர்ப்பகையினன்-சூரனுக்குப் பகைவன்.

'பேறு' என்பதுமுதல் 'உளத்திலர்போல்' என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) பெறு - பெற்ற, திரு வயிற்றினள் - அழகிய வயிற்றினளாகிய வுமாதேவி, ஒருபால் பொலிந்த - ஒருபாகத்தில் விளங்கிய, உயர் நகர் கூடல் - நகரங்களு ளுயர்வாகிய மதுரையின்கண், கடுக்கை அம் சடையினன் - கொன்றை மலர்மாலை யணிந்த சடைமுடிப்பெருமானது, கழல் - திருவடி, உளத்து இலர்போல் - உள்ளத்திலில்லாதார்போல.

(வி-ரை.) கடுக்கை - ஆகுபெயர்.

'பொய்வருமூரன்' என்பதுமுதல் 'மாழ்கினவேன்றுல்' என்பதுவரை.
(16—18 வரிகள்.)

(ப-ரை.) பொய் வரும் ஊரன் - பொய்யிற் கைவைந்ததலைவன், புக அரும் - செல்லத்தகாத,இல் புக - பரத்தையரில்லிற் புகுதலால், என் உளம் - என்னுள்ளமானது, சிகை விட்டு எழும் - கொழுந்துவிட்டெரிகின்ற, அனல் புக்க - நெருப்பிற்பட்ட, மது பொழி முளரியின்-தேன்பொழிகின்ற தாமரைமலர்போல, மாழ்கின என்றுல்- கருகியதாஞல்.

(வி-ரை.) கைவரல் - தேர்தல். புகல் - செல்லல். முளரி-ஆகுபெயர். மாழ்குதல் - கருகுதல்.

'தோளிற்றுவண்டும்' என்பதுமுதல் 'தடைந்தும்' என்பதுவரை.
(19—22 வரிகள்.)

(ப-ரை.) தோளில் துவண்டும் - அத்தலைவனது தோளில் துவண்டும், தொங்கலுள் மறைந்தும் - அணிந்த மாலையுண்மறைந்தும், கைவால் ஏற்றும் - கையால் வருடுதலைப் பெற்றும், கனவினும் - அவனைக்கண்ட கனவிலும், தடைந்தும் - போகேலெனமறித்தும், திரை கடல் தெய்வம் முன் - அலைக்கடலாகிய தெய்வத்தின் முன்பு, தெளி சூள் வாங்கியும் - ஐயமில்லாத ஆணைவாங்கியும், பொருள் கான் - பொருணிமித்தம் காட்டுவழி போகாமல், தடைந்தும் - தடுத்தும்.

(வி-ரை.) தெளிவு - ஐயமின்மை. கான் - காடு, அது இங்கு அதன் வழியைக் குறித்தது.தடைதல் - தடுத்தல்.

'பாசறை என்பதுமுதல் 'நின்றவிவட்கு' என்பதுவரை.

(22—26 வரிகள்.)

(ப-ரை.) பாசறை - பாசறைக்குச் சென்றபோது, பொருந்தியும் - வருத்தத்தைப் பொறுத்திருந்தும், போக்கு அரும் கடுஞ்சுரம் - யாவருஞ் செல்லுதற்கரிய வெய்ய சுரத்தில், போத - போகத்துணிந்ததால், முன் - அதற்கு முன்னமே, இறந்தும் - மூர்ச்சித்தும், காவலில் கவன்றும் - நகரங் காத்தற்குச் சென்றபோது கவலைப்பட்டும், கல்வியில் கருதியும் - கல்விமேற் சென்றபோ தெண்ணமுற்றும், வேந்து விடைக்கு அணங்கியும் - அரசனாற் றூதுவிடுக்கப்பட்டபோது வருந்தியும், விளை பொருட்கு - மேல்நடக்குஞ் செய்திக்கு, உருகியும் - மனமுருகியும், நின்ற இவட்கு - நின்ற இவளுக்கு.

(வி-ரை.) சுரம் - பாலைநிலம். இறத்தல் - சாதல், அது இங்கு மூர்ச்சித்தலுக்காயிற்று. கவலல் - கவலைப்படல். அணங்கல் - வருந்தல்.

'இனியென்னும்' என்பதுமுதல் 'நனியுயிரே' என்பதுவரை.

(26—27 வரிகள்.)

(ப-ரை.) கன்றிய உடலுள் - நொந்த வுடலுள்ளே, படும் - இருக்கின்ற, நனி உயிர் - சிறியவுயிர், இனி என்னும் - இனி யாதாய் முடியுமோ (யானறிகின்றேனில்லை).

(வி-ரை.) கன்றுதல் - நோதல்.

கருணைச்செல்வியாகிய திருவயிற்றினை ளொருபாற் பொலிந்த கூடற் பெருமானது கழனிணையார்போல், பொய்மொழி புகன்ற ஆண், தகாத வில்லிடத்தே புகுதலால், என்னுளம் அனற்புக்க மூளரியின் மாழ்கினவென்றால், அவ்வூரன் பிரியாத காலத்தில் துவண்டும் மறைந்தும் எற்றும் தடைந்தும் வாங்கியும் நின்றாற்போல, பிரிந்தகாலத்தில் தடைந்தும் பொருந்தியும் இறந்தும் கவன்றும் கருதியும் அணங்கியும் உருகியும் நின்ற இவட்கு, கன்றிய வுடலுள்ளே சிறியவுயிர் இனியென்னாகுமென வினைமுடிவு செய்க. (அ0)

திருக்கோவையார் ஙசுஅ - ம் செய்யுள்.

வாயிலவர் வாழ்த்தல்.

வாயிலவர் வாழ்த்தலென்பது—செவ்வணி விடுக்கப் பூப்பியற் செவ்வி கேடாமல் மெலிவறிந்து இளைது பொலிவோடு வந்தமை

யான் இவன் மெய்யேதக்க வாய்மையனெனத் தலைமகனை வாயிலவர் வாழ்த்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

வில்லைப் பொலிநுதல் வேற்பொலி கண்ணி மெலிவறிந்து
வல்லைப் பொலிவொடு வந்தமை யானின்று வான்வழுத்துந்
தில்லைப் பொலிசிவன் சிற்றம் பலஞ்சிந்தை செய்பவரின்
மல்லைப் பொலிவய லூரான்மெய் யேதக்க வாய்மையனே.

தலைமகனது தகவுடைமை
நிலைதகுவாயினின் றோருரைத்தது.

(ப-ரை.) வில்லை பொலி - வில்லை நிகர்த்து விளங்குகிற, நுதல் - நெற்றியையும், வேல் பொலி - வேலைநிகர்த்து விளங்குகிற, கண்ணி - கண்களையுமுடையவளது, மெலிவு அறிந்து - வாட்டத்தையறிந்து, வல்லை - விரைவில், பொலிவொடு வந்தமையால் - இவளது பொலிவொடு வந்தமையால், வான் நின்று வழுத்தும் - வானவர் நின்று வழுத்துகிற, தில்லை - தில்லைநகரில், பொலி - விளங்குகிற, சிவன் - சிவனது, சிற்றம்பலம் - சிற்றம்பலத்தை, சிந்தை செய்பவரின் - சிந்திப்பவர்போல, மல்லை பொலி வயல் ஊரான் - வளத்தால் விளங்குகிற வயல்சூழ்ந்த ஊரையுடையவன், மெய்யே - மெய்யாகவே, தக்க வாய்மையன் - தக்க மெய்ம்மையன், எ-று.

(வி-ரை.) வில்லையென்று ஐகாரம் இசைநிறை. காதலன் வர, இவள் இடையின்றிப் பொலிந்தமையாற் பொலிவோடென ஒடுக்கொடுத்துக் கூறினார். பொலி சிற்றம்பலமென வியையும். மல்லல் கடைக்குறைந்து ஐகாரம் விரித்து நின்றது. மல்லற் பொலி யென்பதூஉம் பாடம். வில்லை - உருபுமயக்கம். வான் - ஆகுபெயர். தகுதி - ஈண்டு நன்மைமேற்று.

நேரிசையாசிரியப்பா.

நிலைநீர் மொக்குளின் விளைவாய்த் தோன்றி
வான்றவ ழுடற்கறை மதியெனச் சுருங்கிப்
புல்லர்வாய்ச் சூளெனப் பொருளுட னழியுஞ்
சிறுண வின்பத் திருந்தா வாழ்க்கையைக்
கான்றிடு சொன்றியிற் கண்டரு வருத்துப்
புலனறத் துடைத்த நலனுறு கேள்விய
ராரா வின்பப் பேரமு தருந்தித்
துறவெனுந் திருவுடை யறமெய் வாழ்க்கையர்

வாயினுங் கண்ணினு மனத்தினு மகலாப்
பேரொளி நாயகன் காரொளி மிடற்றோன்
மண்டிரு வேட்டுப் பஞ்சவற் பொருத
கிள்ளியுங் கிளையுங் கிளர்படை நான்குந்
திண்மையுஞ் செருக்குந் தேற்றமும் பொன்றிட
வெரிவா யுரக ரிருணட் டொருவக்
கொலைக்கொண் டாழி குறியுடன் படைத்து
டிறியப் புதைத்த மறங்கெழு பெருமா
னீர்மாக் கொன்ற சேயோன் குன்றமுங்
கல்வியுந் திருவுங் காலமுங் கொடியு
மாடமு மோங்கிய மணிநகர்க் கூட
லால வாயினு ளருளுட னிறைந்த
பவளச் சடையோன் பதந்தலை சுமந்த
நல்லிய லூரநின் புல்லமுண் மங்கைய
ரோவிய வில்லமெம் முறையு ளாகக்
கேளாச் சிறுசொற் கிளக்குங் கலதிய
ரிவ்வுழி யாயத் தினர்களு மாக
மௌவலிதழ் விரிந்து மணஞ்சூழ் பந்தர்செய்
முன்றிலு மெம்முடை முன்றி லாக
மலர்ச்சுமைச் சேக்கை மதுமலர் மறுத்தவித்
திருமனங் கொள்ளாச் சேக்கைய தாக
நின்னுளங் கண்டு நிகழுண வுன்னி
நாணு நவப்பொய் பேணியுட் புணர்த்தி
யாழொடு முகமன் பாணனு நீயுந்
திருப்பெறு மயலவர் காண
வரப்பெறு மாதவம் பெரிதுடை யேமே.

நிலைநீர்மொக்குளின் - பெரிதுடையேமே. பகுதி - பரத்தையிற் பிரிவு. துறை - வாயிலவர் வாழ்த்தல்.

'நிலைநீர்' என்பதுமுதல் 'சுருங்கி' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நிலை நீர் - அசைவற்ற ஓடையிலெழாநின்ற, மொக்குளின் - குமிழியைப்போல, விளைவாய் தோன்றி - விளைவாகத்

தோன்றி, வான் தவழ் - ஆகாயத்திலியங்குகின்ற, உடல் கறை - உடலிற் களங்கமுள்ள, மதி என - மதிபோல, சுருங்கி - குறைந்து.

(வி-ரை.) நிலை - அசைவின்மை. மொக்குளின் என்பதில் இன் ஐந்தாவதனுருப்புப்பொருள து.

'புல்லர்வாய்ச்சூளென' என்பதுமுதல் 'வாழ்க்கையை' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) புல்லர் வாய் சூள் என - கீழ்மக்கள் வாயிலுண்டான சபதம்போல, பொருளுடன் அழியும்-பொருளோடு கெடுகின்ற, சிறு உணவு இன்பம் - சிறியவுணவாகிய இன்பத்தையுடைய, திருந்தா வாழ்க்கையை - திருத்தமில்லாத இல்லறவாழ்வை.

(வி-ரை.) புல்லர் - பண்படியாகப்பிறந்தபெயர்.

'கான்றிடுசோன்றியின்' என்பதுமுதல் 'கேள்வியர்' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) கான்றிடு சொன்றியின் - கக்கிய சோற்றைப்போல, கண்டு - அறிந்து, அருவருத்து - அருவருப்படைந்து, புலன் - ஐம்புல வாசனையை, அற துடைத்த - முற்றுந்துடைத்த, நலன் உறு கேள்வியர் - நன்மையுண்டாதற்குக் காரணமான நூற்கேள்வியை யுடையவரும்.

(வி-ரை.) காலல் - கக்கல். சொன்றி - சோறு. புலன் - ஆகுபெயர். புலவாசனை - சப்தாதிகளின் மணம். நலன்-போலி.

'ஆராவின்பம்' என்பதுமுதல் 'வாழ்க்கையர்' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(ப-ரை.) ஆரா இன்பம் - கிடைத்தற்கரிய பேரின்பமாகிய, பேரமுது அருந்தி - பெரிய வமுதத்தையுண்டு, துறவு எனும் திருவுடன் - துறவறமென்னுஞ் செல்வியுடன், உறவு செய் - உறவுசெய்து, வாழ்க்கையர் - வாழும் வாழ்க்கையையுடையவருமான பெரியோரது.

(வி-ரை.) ஆராவின்பம் - தெவிட்டாத இன்பமெனினுமாம். செய்யென்னு முதனிலையே யீண்டு வினையெச்சப் பொருடந்து நின்றது.

'வாயினும்' என்பதுமுதல் 'காரொளிமிடற்றோன்'
என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) வாயினும் - வாயாற்சொல்லுந் துதியினும், கண்ணினும் - கண்ணின் காட்சியினும், மனத்தினும் - மனத்திற் சிந்தித்தலினும், அகலா - நீங்காத, பேரொளி - பேரொளிமயமாகிய, நாயகன் - தலைவன், காரொளி மிடற்றோன் - கரியவொளி பொருந்திய கண்டத்தையுடையவன்.

(வி-ரை.) வாய் - ஆகுபெயர். கண்ணும் மனமும் அவை. பேரொளி - பரஞ்சோதி. மயம் - உருவம். மிடறு - கண்டம்.

'மண்டிருவேட்டு' என்பதுமுதல் 'மறங்கெழுபெருமான்'
என்பதுவரை.

(11—16 வரிகள்.)

(ப-ரை.) மண் திரு வேட்டு - பூமிச்செல்வத்தை விரும்பி, பஞ்சவன் பொருத - பாண்டியனோடு யுத்தஞ்செய்த, கிள்ளியும் - சோழனும், கிளையும் - (அவன்) சுற்றமும், கிளர் படை நான்கும் - மிகுந்தவவனது நான்குவகையாக வெழுந்தசேனையும், திண்மையும் - வலிமையும், செருக்கும் - இறுமாப்பும், தேற்றமும் - (வெற்றிகொள்வேமென்னும்) தெளிவும், பொன்றிட - கெட்டு, எரி வாய் உரகர் - விஷாக்கினி பொருந்தின வாயினையுடைய நாகரது, இருள் நாட்டு ஒருவ-இருண்டநாட்டில் வீழுமாறு, கொலை கொண்டு - கொலையை மேற்கொண்டு, அழி - ஆழமாகிய மடுவில், உடன் - முற்பட்டுவீழ்ந்த பாண்டியனுடன், குறி படைத்து மறிய-குறிகொண்டு தானும் வீழ்ந்தபோது, புதைத்த - அதில் புதைந்திடும்படி செய்தருளிய, மறங்கெழு பெருமான் - வேடுருவாய் வந்தருளிய பெருமான்.

(வி-ரை.) பொருதல் - போர்செய்தல். படை நான்கு - தேர் யானை குதிரை காலாள் என்பன. பொன்றல் - கெடல். எரி - நெருப்பு;

'நீர்மாகொன்ற' என்பதுமுதல் 'ஆலவாயினுள்'
என்பதுவரை.

(17—20 வரிகள்.)

(ப-ரை.) நீர் - கடலில், மா கொன்ற - மாமரத்தைத்தடிந்த, சேயோன் - முருகக்கடவுளது, குன்றமும் - திருப்பரங்குன்றமும், கல்வியும் - கல்வியும், திருவும் - செல்வமும், காலமும் - ஆயுளும், கொடியும் - கொடிகளும், மாடமும் - மாடங்களும், ஓங்கிய - நீடித்துள்ள, மணி நகர் கூடல் - நகரங்களுள் மணியையொத்த கூடலென்னும், ஆலவாயினுள் - திருவாலவாயின்கண்.

(வி-ரை.) தடிதல் - வெட்டல்.

'அருளுடனிறைந்த' என்பதுமுதல் 'நல்லியலூர'
என்பதுவரை.

(20—22 வரிகள்.)

(ப-ரை.) அருளுடன் நிறைந்த - அங்கயற்கண்ணம்மையுடன் நிறைந்துள்ள, பவளம் சடையோன் - பவளம்போன்ற செஞ்சடைப்பிரானது, பதம் - திருவடிகளை, தலை சுமந்த - தலைமேற்கொண்ட, நல் இயல் ஊர - நல்ல அழகையுடைய தலைவனே.

(வி-ரை.) இறைவிக்குருவம் அருளேயாதலால் 'அருளுடன்' என்றார்.

'நின்புல்லமுண்மங்கையர்' என்பதுமுதல் 'முன்றிலாக'
என்பதுவரை.

(22—27 வரிகள்.)

(ப-ரை.) நின் - நினது, புல்லம் உள் மங்கையர் - புன்மையாகிய வுள்ளத்தையுடைய பரத்தையரது, ஓவிய இல்லம் - சித்திரமெழுதிய இல்லம், எம் உறையுள் ஆக - அவ்வாறில்லாத வெமதில்லமாகவும், கேளா சிறு சொல் - கேட்கத்தகாத கீழ்மைச்சொற்களை, கிளக்கும் - பேசுகின்ற, கலதியர் - கலகமியற்றுந்தோழிகள், இவ்வுழி ஆயத்தினர்களுமாக - இவ்விடத்துள்ள தோழிகளாகவும், மௌவல் இதழ் விரிந்து - மல்லிகைமலர் மலர்ந்து, மணம் சூழ் - மணத்தைச்செய்கின்ற, பந்தர் செய் - பந்தரமைந்த, முன்றிலும் - வாயிலும், எம்முடை - அவ்வாறில்லாத வெங்களுடைய, முன்றில் ஆக - வாயிலாகவும்.

(வி-ரை.) ஓவியம் - சித்திரம். உரையுள் - வீடு. இளத்தல் - பேசல். மௌவல்-ஆகுபெயர். பந்தர்-போலி. வாயில் - வீட்டின் முற்புறமாதலால் அதனை முன்றிலென வழங்குப.

‘மலர்ச்சுமைச்சேக்கை’ என்பதுமுதல் ‘நிகழுணவுன்னி’ என்பதுவரை.

(28—30 வரிகள்.)

(ப-ரை.) மலர் சுமை சேக்கை - மலர் நிறைவாகிய அவர் படுக்கையைப்போல, மது மலர் மறுத்த - தேமலர்களில்லாமையால், திரு மனம் கொள்ளா - நுமது மனம் விருப்பங்கொள்ளாத, இ சேக்கையதாக - இந்த எனது படுக்கையாகவும், நின் உளம் கண்டு - நின்னுள்ளத்தையறிந்து, நிகழ் உணவு உன்னி - தனக்கு நிகழ்கின்ற வுணவைக்கருதி.

(வி-ரை.) உன்னல் - கருதல். காண்டல்-ஈண்டு அறிதல் குறித்து நின்றது.

‘நாணு’ என்பதுமுதல் ‘பெரிதுடையேமே’ என்பதுவரை.

(31—34 வரிகள்.)

(ப-ரை.) நாணு - நாணுமல், நவம் பொய் பேணி - புதுமையான பொய்களை விரும்பி, உள் புணர்த்தி - உள்ளே கற்பித்து, முகமன் - உபசாரஞ் சொல்லுகின்ற, யாழொடு பாணனும் - யாழோடு கூடிய பாணனும், நீயும்-நீயும், திரு பெறும் - திருவின்வளம்பெற்ற, அயலவர் காண - அயலாரறிய, வரப்பெறும் - வரும்படிபெற்ற, மாதவம் - நல்லதவத்தை, பெரிது உடையேம்-மிகவுமுடையேம் யாமாக.

(வி-ரை.) நாணுமல் என்னும் எதிர்மறை வினையெச்சம் ஈறுகுறைந்து நாணு என நின்றது. நவம் - புதுமை. பேணல்-விரும்பல். புணர்த்தல் - கற்பித்தல்.

ஆலவாயினில் அருளுடனிறைந்த பவளச்சடையோன் பதந்தலைசுமந்த நல்லியலூரனே! பாணனு நீயும் அயலார்காண, எமதுறையுளாகவும் இவ்வழித் தோழியராகவும் எம்முன்றிலாகவும் மலர்மறுத்த சேக்கையாகவும் நின்னுள்ளத்தி லெண்ணி இங்கே வரப்பெறு மாதவமுடையேம் என வினைமுடிவுசெய்க. (அக)

திருக்கோவையார் ௧௪௯-ம் செய்யுள்.

வறும்புனங்கண்டு வருந்தல்.

வறும்புனங்கண்டு வருந்தலென்பது—தலைமகளுந் தோழியும் புனங்காவலேறிப் போகாநிற்ப, தலைமகன் புனத்திடைச் சென்று நின்று, இப்புனம் யாமுன் பயின்றதன்றே, இஃதின்றிருக்கின்றவா றென்னோவென்று, அதன் பொலிவழிவு கூறித் தலைமகளைத்தேடி வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பொதுவினிற் றீர்த்தென்னை யாண்டோன் புலியூ ரன்பொருப்பே
யிதுவெனி லென்னின் றிருக்கின்ற வாறெம் மிரும்பொழிலே
யெது நுமக் கெய்திய தென்னுற் றனிரறை யீண்டருவி
மதுவினிற் கைப்புவைத் தாலொத்த வாமற்றிவ் வான்புனமே.

மென்புனம்விடுத்து மெல்லியல்செல்ல
மின்பொலிவேலோன் மெலிவுற்றது.

(ப-ரை.) பொதுவினில் - (அதுவோ இதுவோ வழியென்று மயங்கிப்) பொதுவாக நின்ற நிலைமையை, தீர்த்து - நீக்கி, என்னை ஆண்டோன் - என்னையாண்டவன், புலியூர் அரன்-புலியூரில் அரன், பொருப்பே எனில்-(அவனது) மலைபோலாயின், இது இன்று இருக்கின்றவாறு என் - இஃது இன்றிருக்கின்றவாறாகிய இதென்னை, எம் இரும் பொழிலே - எமது பெரியபொழிலே, நுமக்கு எய்தியது எது-நுமக்கு (இன்று) நேர்ந்தது யாது, என் உற்றனிர் - நீர் என்றுற்றீர், இ - இந்த, வான் புனம் - பெரியபுனம், அறை ஈண்டு அருவி - ஒலிக்கின்ற பேரருவியாய் விழும், மதுவினில் - தேனில், கைப்பு வைத்தால் ஒத்தவா (என்) - கைப்புச்சுவையை வைத்தாலொத்தவா றென், எ-று.

நேரிசையாசிரியப்பா.

உள்ளிருந் தெழுந்து புறம்புநின் றெரியு
மளவாத் திருமணி யளித்த லானுங்
கொலைமுதிர் கடமான் முதிர்முகம் படர்ந்து
கொழுஞ்சினை மிடைந்து குளிரொடு பொதுளிய
நெடுமரத் திளங்கா நிலைத்த லானும்
பாசடை யும்பர் நெடுஞ்சுனை விரிந்த
பேரிதழ்த் தாமரை பெருக லானு
நெடுவிசும் பணவும் பெருமதி தாங்கி

யுடையா வமுத முறைத லானு
மிளமையுந் தொங்கலு மின்பமு மொருகால்
வாடாத் தேவர்கண் மணத்த லானும்
நூறுடை மகத்திற் பேறுகொண் டிருந்த
புரந்தரன் போலும் பொன்னெயி லெறிந்த
மணிவேற் குமரன் றிருவளர் குன்றம்
பேரணி யுடுத்த பெருநகர்க் கூடல்
தோயில்கொண் டிருந்த குணப்பெருங் குன்ற
மருந்தவக் கண்ணினோ டடைந்தமா முனிபாற்
பேரிருண் மாயைப் பெண்மக விரக்க
வவர்முதல் கிடந்த சுவையே ழமைத்துக்
கொடுத்தமெய்ப் பிண்டக் குறியுடன் றோன்றிய
வெழுநிறச் சகரர்க ளேழணி நின்று
மண்புக மூழ்கிய வான்பரி பிணிக்கப்
பன்முக விளக்கிற் பரிதியிற் றேட்டிய
வேலைக் குண்டகழ் வயிறலைத் தெழுந்த
பெருங்கார்க் கருங்கடு வருந்திய மிடற்றோ
னெறிந்துவீ ழுருவியு மெரிமணி யீட்டமு
முள்ளுதோ றுள்ளுதோ றுணவமு துறைக்குந்
திருமுத் தமிழும் பெருகுதென் மலயத்
தாரப் பொதும்ப ரடைகுளிர் சாரற்
சுரும்புடன் விரிந்த துணர்மலர்க் கொடியே
விண்விரித் தொடுக்கு மிரவிவண் கவிகைக்
கிட்டுறை காம்பென விட்டெழு காம்பே
மரகதஞ் சினைத்த சிறைமயிற் குலமே
நீலப் போதும் பேதையும் விழித்த
பொறியுட லுழையே யெறிபுன மணியே
பாசிழைப் பட்டு நூற்கழி பரப்பிய
கிளைவாய்க் கிடைத்த வளைவாய்க் கிளியே
மைந்நீர்கண் சென்று மார்தருட் டடைந்த
பொழிமதுப் புதுமலர்ப் போக்குடைச் சுரும்பே
வெறிமுதிர் செம்மன் முறிமுகங் கொடுக்குந்

சந்தனப் பொதும்பர்த் தழைசினைப் பொழிலை
கொள்ளையஞ் சுகமுங் குருவியுங் கடிய
விருகாற் கவணிற் கெரிமணி சுமந்த
நெடுங்காற் குற்றுழி நிழல்வைப் பிதணே
நெருநற் கண்டவெற் குதவிய வின்ப
மிற்றையிற் கரந்த விருண்மன மென்னே
விவணிற் கவைத்த வேலாக் கடுங்கண்
கொடுத்துண் டவர்பின் கரந்தமை கடுக்கு
மீங்கிவை கிடக்க வெண்ணிழ லிரும்புனத்
திருந்தோ ளிருந்தே னிலதா னீரு
நின்புன மல்லவின் றென்புலன் வெளிப்பட
வறைதல் வேண்டு மப்புன நிரேன்
முன்னங் கண்டவ னன்றென்
றுன்னு வுதவுத லுயர்ந்தோர் கடனே

உள்ளிருந்தெழுந்து - உயர்ந்தோர்கடனே. பகுதி - பகற்குறி. துறை - வறும்புனங்கண்டு வருந்தல்.

'உள்ளிருந்தெழுந்து' என்பதுமுதல் 'அளித்தலானும்'
என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) உள்ளிருந்து எழுந்து - உண்ணின்று மேலெழுந்து, புறம்பு நின்று எரியும் - பக்கங்களினின்று சுடர்விடுகின்ற, அளவா திரு மணி - அளவிடப்படாத அழகிய மாணிக்கத்தை, அளித்தலானும் - பாதுகாத்தலானும்.

(வி-ரை.) எரிதல் - சுடர்விடுதல். அளித்தல் - பாதுகாத்தல்.

'கோலைமுதிர்' என்பதுமுதல் 'நிலைத்தலானும்' என்பதுவரை.
(3—5 வரிகள்.)

(ப-ரை.) கொலை முதிர் - கொலைத்தொழின்முதிர்ந்த, கட மான்-கடமாக்கள், முதிர்முகம்-மிகுந்த விடங்கடோறும், படர்ந்து - சஞ்சரித்து, கொழுஞ்சினை-தழைந்தகிளைகள், மிடைந்து-நெருங்கி, குளிரொடு - குளிர்ச்சியோடு, பொதுளிய-தளிர்த்த, நெடு - நெடிய,

மரத்து இளங்கா - தருக்களையுடைய பசியசோலைகள், நிலைத்தலானும் - நிலைபெற்றிருத்தலானும்.

(வி-ரை.) முதிர்தல் - மிகுதல். கடமான் - மதம்பொருந்திய யானைகள். படர்தல்-சஞ்சரித்தல். மிடைதல் - நெருங்குதல். பொதுளல் - தளிர்த்தல்.

'பாசடையும்பர்' என்பதுமுதல் 'பெருகலானும்' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) உம்பர் - மேலிடத்தில், நெடு சுனை - பெரிய சுனையின்கண், பாசடை விரிந்த - பசிய இலைகளோடுவிரிந்த, பேரிதழ் - பெரிய விதழ்களையுடைய, தாமரை-தாமரைமலர்கள், பெருகலானும்- பெருகுதலானும்.

(வி-ரை.) பாசு - பசுமை. தாமரை - ஆகுபெயர்.

'நெடுவிசும்பணவும்' என்பதுமுதல் 'உறைதலானும்' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) நெடு விசும்பு அணவும் - பெரிய ஆகாயத்தை யளாவிய, பெரு மதி - பெரிய சந்திரனை, தாங்கி - பொறுத்து, உடையா அமுதம் - அழியாத வமுதமானது, உறைதலானும் - நீங்காதிருத்தலானும்.

(வி-ரை.) அணவல்-அளாவல். தாங்கல் - பொறுத்தல். உடைதல் - அழிதல். உறைதல் - நீங்காதிருத்தல்.

'இளமையும்' என்பதுமுதல் 'மணத்தலானும்' என்பதுவரை.

(10—11 வரிகள்.)

(ப-ரை.) இளமையும் - நரைதிரை யின்மையும், தொங்கலும் - மாலையும், இன்பமும்-மகிழ்ச்சியும், ஒருகால்-ஒருகாலத்தும், வாடா - கெடாத, தேவர்கள் - அமரர்கள், மணத்தலானும் - பொருந்தியிருத்தலானும்.

(வி-ரை.) இளமை - இளம்பருவம், அது இங்கு நரைதிரையின்மைக்காயிற்று. மணத்தல் - பொருந்தியிருத்தல்.

'நூறுடைமகத்தில்' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை.

(12—15 வரிகள்.)

(ப-ரை.) நூறு உடை மகத்தில் - நூறென்னு மெண்ணையுடைய யாகங் காரணமாக, பேறுகொண்டு இருந்த - பேற்றைக்கொண்டிருந்த, புரந்தரன்போலும் - இந்திரனைப்போலு மிருக்கின்ற, பொன் எயில் எறிந்த - பொன்மதில் சூழ்ந்த மயேந்திரபுரியையழித்த, மணி வேல் குமரன் - அழகிய வேலாயுதத்தையுடைய குமாரக்கடவுளது, திரு வளர் குன்றம் - வளமைமிக்க திருப்பரங்குன்றத்தை, பேரணி உடுத்த - பெரிய அரணைக்கொண்ட, பெரு நகர் கூடல் - நகரங்களுள் மேன்மைத்தாகிய மதுரையை.

(வி-ரை.) மகம் - யாகம். பேறு - லாபம். எயில் - ஆகுபெயர். எறிதல் - அழித்தல்.

'கோயில்கொண்டிருந்த' என்பதுமுதல் 'மகவிரக்க' என்பதுவரை.

(16—18 வரிகள்.)

(ப-ரை.) கோயில்கொண்டிருந்த - திருக்கோயில் கொண்டருளிய, குணப்பெருங்குன்றம் - பெரிய குணமலை, அருந்தவம் கண்ணினொடு - அரிய தவமாகிய கண்ணுடனே, அடைந்த - ஆரணியத்திலிருந்த, மா முனிபால் - பெரிய காசிபமுனிவனிடத்து, பேரிருள் - பெரியவிருளையொத்த, மாயைப்பெண் - மாயையென்னும் பெண்ணானவள், மகவு இரக்க - பிள்ளை வேண்டுமென்று யாசிக்க.

(வி-ரை.) குணப்பெருங்குன்றம் என்றது நிலைபேறுடைமை அசையாமை முதலியவை யுடைமைபற்றியென்க; "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது" என்னுந் திருக்குறளுரையானு மிஃதினிது விளங்கும்.

'உவர்முதல்கிடந்த' என்பதுமுதல் 'பிணிக்க' என்பதுவரை.

(19—22 வரிகள்.)

(ப-ரை.) உவர் முதல் கிடந்த - உவர்ப்பு முதலாயுள்ள, சுவை எழ் அமைத்து - எழுவகைச் சுவையையு மமைத்து, கொடுத்த மெய் பிண்டம் - அளித்த அவ்வுண்மைப் பிண்டத்தின், குறியுடன் தோன்றிய - அடையாளங்களுடன் றோன்றிய, எழு நிறம் சகரர்கள் - எழு நிறத்தினையுடைய சகரர்களும், எழ் அணி நின்று - எழுணியாகநின்று,

மண் புக மூழ்கிய - பாதலத்தி லொளிக்கப்பட்ட, வான் பரி - சிறப்புள்ள அசுவமேதக் குதிரையை, பிணிக்க - கண்டுபிடித்துக்கட்ட.

(வி-ரை) உவர்த்தல் - உப்புக்கறித்தல். பிணித்தல் - கட்டல்.

'பன்முகவிளக்கின்' என்பதுமுதல் 'அரும்பியமிடற்றோன்' என்பதுவரை.

(23—25 வரிகள்.)

(ப-ரை.) பல் முகம் விளக்கின் - பல முகங்களையுடைய விளக்குப்போல, பரிதியின் - சக்கிராயுதத்தினால், தோட்டிய-தோண்டிய, வேலைக்குண்டகழ் - ஆழமாகிய பாற்கடலின், வயிறு அலைத்து எழுந்த - வயிற்றை யலைத்துத் தோன்றிய, பெரு கார் கருங்கடு - மிகுந்த கரியநிறத்தையுடைய ஆலாலம், அரும்பிய மிடற்றோன் - காணப்படுங் கண்டத்தையுடையவனது.

(வி-ரை.) விளக்கின் என்பதில் இன் ஐந்தாவதனுருப்புப் பொருளது. பரிதியின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவது கருவிப்பொருளில் வந்தது. பரிதி-சக்ராயுதம். ஆலாலம் - பாற்கடலினெழுந்த நஞ்சு. அரும்புதல் - காணப்படுதல்.

'எறிந்துவீழருவியும்' என்பதுமுதல் 'கோடியே' என்பதுவரை.

(26—30 வரிகள்.)

(ப-ரை.) எறிந்து வீழ் அருவியும்-ஒலித்தொழுகுகின்ற அருவி நீரும், எரி மணி ஈட்டமும்-சுடர்விடுகின்ற மணிக்கூட்டமும், உள்ளுதோறுள்ளுதோறும் - நினைக்குந்தோறு நினைக்குந்தோறும், உணு அமுது உறைக்கும் - உண்ணத்தக்க வமுதஞ் சுரக்காநின்ற, திரு முத்தமிழும் - அழகிய இயலிசை நாடகமென்னு மூன்றுதமிழும், பெருகு - மலர்தற்கிடமாகிய, தென் மலயத்து - தெற்கின்கணுள்ள பொதிகையில், ஆரப்பொதும்பர் - சந்தனச்சோலைகள், அடை குளிர் சாரல் - நெருங்கிய குளிர்ந்த சாரலின்கண், சுரும்புடன்-வண்டுகளுடனே, துணர் மலர் விரிந்த கொடியே - பூங்கொத்துகள் மலர்ந்த கொடியே.

(வி-ரை.) எறிதல் - ஒலித்தல். எரிதல் - சுடர்விடுதல். உள்ளல் - நினைத்தல். உறைத்தல் - சுரத்தல். மலயம் - பொதியமலை. ஆரம் - சந்தனமரம். துணர் - பூங்கொத்து.

'விண்விரித்தொடுக்கும்' என்பதுமுதல் 'சிறைமயிற்குலமே' என்பதுவரை.

(31—33 வரிகள்)

(ப-ரை.) விண் விரித்து ஒடுக்கும் - விண்ணில் (கிரணங்களை) பரப்பிச் சுருக்காநின்ற, இரவி வண் கவிகைக்கு - சூரியனாகிய நல்லகுடைக்கு, இட்டுறை காம்பு என - அமைத்திருக்குங் காம்பு போல, விட்டு எழு காம்பே - மேலோங்கியெழுந்த மூங்கிலே, மரகதம் கிளைத்த - மரகதமணி கிளைத்தாற்போலும், சிறை மயில் குலமே - சிறையையுடைய மயிலினமே.

(வி-ரை.) கிளைத்தல் - கிளைத்தல்.

'நீலப்போதும்' என்பதுமுதல் 'எறிபுனமணியே' என்பதுவரை.

(34—35 வரிகள்.)

(ப-ரை.) நீலப்போதும் - நீலோற்பலமலரும், பேதையும் - பெண்களது கண்ணும்போல, விழித்த - விழித்த, பொறி உடல் உழையே - உடலிற் புள்ளியுள்ள மானினமே, எறி புனம் மணியே - தினையறுத்த புனங்களிலுள்ள மணியே.

(வி-ரை.) பேதை - ஆகுபெயர். எறிதல் - அறுத்தல்.

'பாசிழை' என்பதுமுதல் 'சுரும்பே' என்பதுவரை.

(36—39 வரிகள்.)

(ப-ரை.) பாசிழை பட்டு நூல் - பசியவிழையாகிய பட்டுநூலை, கழி பரப்பிய - கழியிற் பரப்பியதுபோல, கிளைவாய் கிடைத்த - மூங்கிலின்கண்ணிருக்கின்ற, வளை வாய் கிளியே - வளைந்த வாயினையுடைய கிள்ளையே, மைந்தர் கண் சென்று - ஆடவர் கண்கள்சென்று, மாதருட்டடைந்த - மாதரிடத்தே தடைப்பட்டாற்போலும், மது பொழி புது மலர் - மதுப்பொழிகின்ற நாண்மலரிடத்து, போக்கு உடை சுரும்பே - போதலையுடைய வண்டே.

(வி-ரை.) கிளை - மூங்கில். கிடைத்தல் - இருத்தல். மது - தேன். நாள்மலர் - அன்றலர்ந்த மலர்.

'வெறிமுதிர்செம்மல்' என்பதுமுதல் 'நிழல்வைப்பிதணே' என்பதுவரை.
(40—44 வரிகள்.)

(ப-ரை.) வெறி முதிர் செம்மல் - மணமுதிர்ந்த பழம்பூவை, முறி முகம் கொடுக்கும் - தளிர்முகத்தினின்றுஞ் சொரியாநின்ற, சந்தனம் பொதும்பர் - சந்தன மரங்களால், தழை சினை பொழிலே-கிளைகள் தழைந்துள்ள சோலையே, கொள்ளை அம் சுகமும் - புனமழிவுசெய்யும் அழகிய கிளிகளையும், குருவியும் கடிய - குருவிகளையும் ஏனைப்பறவைகளையு மோச்சுமாறு, இருகால் கவணிற்கு-இரண்டு நுனியையுடைய கவணில் வைத்து வீசுதற்கு, எரி மணி சுமந்த - சிவந்த பரன்மணிகளைச் சுமந்த, நெடு கால் குற்றுழி - நெடிய காலையுஞ் சிறிய விடத்தையுமுடைய, நிழல் வைப்பிதணே-பந்தலானிழல் செய்யும் பரணே.

(வி-ரை.) வெறி - மணம். செம்மல் - பழம்பூவுக்கோர் சிறப்புப் பெயர். ஓச்சல் - கடிதல். கால் - நுனி, "வரையன் ஞெருகா லிரு கால் வளைய வளைத்து" என்னுந் திருக்கோவைச் செய்யுளானு மீதினிது விளங்கும். எரிமணி - செம்மணி (மாணிக்கம்). உழி - இடம். இதண் - பரண்.

'நெருநற்கண்டவெற்கு' என்பதுமுதல் 'மனமென்னே' என்பதுவரை.
(45—46 வரிகள்.)

(ப-ரை.) நெருநல் கண்ட எற்கு - நேற்றுக்கண்டவெனக்கு, உதவிய இன்பம் - தந்தவின்பத்தை, இற்றையின் காந்த - இன்று தராமலொளித்த, இருள் மனம் என்னே-வஞ்சித்த மனமென்னே.

(வி-ரை.) காத்தல் - ஒளித்தல்.

'இவண்' என்பதுமுதல் 'கிடக்க' என்பதுவரை.
(47—49 வரிகள்.)

(ப-ரை.) இவண் - இவ்விடத்தே, நிற்கவைத்த - யான்மயங்கி நிற்கும்படிவிட்ட, எலா கடுங்கண் - தகாதகொடுமை, கொடுத்து உண்டவர் - முன்னே யொருவர்க்குப் பகிர்ந்துண்டவர், பின்-பின்பு, கரந்தமை கடுக்கும் - கொடாமலொளித்த தன்மைபோலுகின்றது, ஈங்கு இவை கிடக்க - இவை யிம்மட்டிருக்க.

(வி-ரை.) கடுங்கண்மை - கொடுமை. கடுத்தல் - நிகர்த்தல்.

'என்னிழல்' என்பதுமுதல் 'அறைதல்வேண்டும்' என்பதுவரை.

(49—52 வரிகள்.)

(ப-ரை.) என் நிழல் - எனது நிழல்போல, இரும்புனத்து - இப்பெரிய புனத்தின்கண், இருந்து ஒளிர் - விளங்கியிருந்த, அருந் தேன் - அருமையுள்ள தேனையொப்பாள், இலதால்-ஈங்கு இலளாத தால், நின் புலம் அல்ல என்று - இஃது நினது புனமன்றென்று, என் புலம் வெளிப்பட - எனதறிவிற்கு விளங்குமாறு, நீரும் அறை தல்வேண்டும் - நீவிருஞ் சொல்லல்வேண்டும்.

(வி-ரை.) இருமை - பெருமை. புலம் - அறிவு.

'அப்புனம்' என்பதுமுதல் 'உயர்ந்தோர்கடனே' என்பதுவரை.

(52—54 வரிகள்.)

(ப-ரை.) அப்புனம் - அப்புனத்திலுள்ளோர். நீரேல் - நீவிரா யிருப்பீராயின், முன்னம் கண்டவன் - முன்னமிங்கு வரக்கண்ட வன், அன்று என்று உன்னு - யான் அல்லனென்றுன்னுமல், உத வுதல் - (தேனையொப்பாள் சென்றவழி) சொல்லுதல், உயர்ந்தோர் கடன் - பெரியாராயினோர் முறைமையாகும்.

(வி-ரை.) உன்னல் - நினைத்தல். உதவல் - ஈண்டுச்சொல்லற் பொருடந்து நின்றது.

துணர்மலர் விரிந்த கொடியே! காம்பே! மயிற்குலமே! எறி புனமணியே! வளைவாய்க்கிளியே! சுரும்பே! பொழிலே! இதணே! நெருநற்கண்டவெற்கு உதவியவின்பம் இற்றையிற்கரந்தவிருண்மன மென், நிற்கவைத்த வேலாக்கடுங்கண் கொடுத்துண்டவர் பின் காந் தமை கடுக்கும், இவை கிடக்க, இரும்புனத்திருந் தொளிரருந்தேனி லதால், நின்புல மல்லவென்று என்புலம் வெளிப்பட நீரும் அறை தல்வேண்டும் அப்புனம் நீரேல், முன்னங்கண்டவன் அன்றென் றுன்னு உதவுதல் உயர்ந்தோர் கடனென வினைமுடிவு செய்க. (அஉ)

திருக்கோவையார் ௨௯௩-ம் செய்யுள்.

நெஞ்சொடு வருந்தல்.

நெஞ்சொடு வருந்தலென்பது—பிரிந்தமை கூறக்கேட்ட தலை மகள், அன்றவரை விடாது என்னைவிட்டு அவரது தேர்ப்பின்

சென்ற நெஞ்சம் இன்று இவ்வாறு செய்யாதது என்னை வருத்தாநின்ற தெனத் தன்னெஞ்சொடு வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தவ னேத்த வெழிறிகழுஞ்
சீர்ப்பொன்னை வென்ற செறிகழ லோன்றில்லைச் சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னை பொன்னவிழ் முத்த மணலிற் கலந்தகன்றூர்
தேர்பின்னைச்சென்றவென்னெஞ்சென்கொலாமின்றுசெய்கின்றதே

வெற்ப னீங்கப்
பொற்பு வாடியது.

(ப-ரை.) ஏர் - அழகையுடைய, பின்னை-பின்னை யென்கிறதே வியாருடைய, தோள் - தோள்களை, முன் - முற்காலத்தில், மணந்த வன் - சேர்ந்தவனாகிய மாயவன், ஏத்த - துதிக்க, எழில் திகழும் - அழகு விளங்குகிற, சீர் பொன்னை வென்ற-செம்பொன்னைவென்ற, செறி கழலோன் - திருவடிகளை யுடையவனது, தில்லை - தில்லைக் கண்ணே, சூழ் பொழில்வாய் - சூழ்ந்த பொழிலினிடத்து, கார் புன்னை - கரியபுன்னை, பொன் அவிழ் - பொன்போல மலராநின்ற, முத்தம் - முத்துப்போலும், மணலில் - மணலையுடைய தோரிடத் தில், கலந்து-கூடி, அகன்றூர்-நீங்கினவரது, தேர் பின்னை சென்ற- தேரின் பின்னேபோன, என் நெஞ்சு - என்மனம், இன்று செய் கின்றது என்கொலாம் - (இவ்விடத்து) இன்று செய்கின்றதெ ன்னே (யான் அறிகிலேன்), எ-று.

(வி-ரை.) ஏத்த வெழிறிகழுமென வியையும். என்னோடு நில் லாது அவர் தேர்ப்பின்போன நெஞ்சம் இன்றென்னை வருத்து கின்ற தென்னென்று நெஞ்சொடு நொந்து கூறினாளாக வுரைப்பினு மமையும். செறிகழலும் முத்தமணலும் அன்மொழித்தொகை. தேய் கின்றதே யென்பது பாடமாயின், அன்று அவரை விடாதுசென்ற நெஞ்சம் செல்லாதே யீண்டிருக்கு மென்னைப்போல, இன்று தேய் கின்றதென்னென்று கூறினாளாக வுரைக்க.

நேரிசையாசிரியப்பா.

வடமொழி விதித்த விசைநூல் வழக்குட
னடுத்தன வெண்ணான் கங்குலி யகத்தினு
நாற்பதிற் றிரட்டி நாலங் குலியினுங்
குறுமையு நெடுமையுங் கோடல் பெற்றறைதா

யாயிரந் தந்திரி நிறைபொது விசித்துக்
கோடி மூன்றிற் குறித்துமணி குயிற்றி
யிருநிலங் கிடத்தி மனங்கரங் கதுவ
வாயிரத் தெட்டி லமைந்தன பிறப்புப்
பிறவிப் பேதத் துறையது போல
வாரியப் பதங்கொ ளாரதப் பேரியாழ்
நன்னர்கொ ளன்பா னனிமுகம் புலம்ப
முந்நான் கங்குலி முழுவுடற் சுற்று
மைம்பதிற் றிரட்டி யாறுடன் கழித்த
வங்குலி நெடுமையு மமைத்துட் டேர்ந்தே
யொன்பது தந்திரி யுறுத்திநிலை நீக்கி
யறுவாய்க் காபிரண் டிணைத்துவரை கட்டித்
தோள்கால் வதிந்து தொழிற்படத் தோன்றுந்
தும்புருக் கருவியுந் துன்னிநின் றிசைப்ப
வெழுவென வுடம்புபெற் றெண்பதங் குலியின்
றந்திரி நூறு தழங்கிய முகத்த
கீசகப் பேரியாழ் கிளையுடன் முரல
நிறைமதி வட்டத்து முயலுரி விசித்து
நாப்ப ணொற்றை நரம்பு கடிப்பமைத்
தந்நரம் பிருபத் தாறங் குலிபெற
விடக்கரந் துவக்கி யிடக்கீ ழமைத்துப்
புறவிரன் மூன்றி னுனிவிர லகத்து
மறுபத் திரண்டிசை யணைத்துயிர் வணங்கு
மருத்துவப் பெயர்பெறும் வானக் கருவி
தூங்கலுந் துள்ளலுந் துவக்கிநின் றிசைப்ப
நான்முகன் முதலா மூவரும் போற்ற
முனிவருஞ் சலியுடன் முகம னியம்பத்
தேவர்க ளனைவருந் திசைதிசை யிறைஞ்ச
வின்பப் பசுங்கொடி யிடப்பாற் படர
வெள்ளியங் குன்றம் விளங்கவீற் றிருந்த
முன்னவன் கூடன் முறைவணங் காரென
வரவப் பசுந்தலை யரும்பவிழ் கணைக்கா

னெய்தற் பாசடை நெடுங்காட் டொளிக்குங்
கண்ணெனக் குறித்த கருங்கயற் கணத்தை
வெள்ளுடல் கூர்வாய்ச் செந்தாட் குருகின
மரவெயி றணைத்தமுள் ளிலைமுடக் கைதைகள்
கான்றலர் கடிமலர்க் கரந்துறைந் துண்ணுங்
கருங்கழி கிடந்த கானலங் கரைவாய்
மெய்படு கடுஞ்சூண் மின்னெனத் துறந்தவர்
சுவனுளைக் கவனப் புள்ளியற் கலிமா
னேக்க மறைத்த பரிதிகொ ணெடுந்தேர்ப்
பின்னொடு சென்றவென் பெரும்பிழை நெஞ்சஞ்
சென்றுழிச் சென்றுழிச் சேறலு முளவோ
வவ்வினைப் பயனுழி யருந்தவம் பெறுமோ
விடைவழி நீங்கியென் னெதிருறுங் கொல்லோ
வன்றியு நெடுநா ளமைந்துடன் வருமோ
யாதென நினைக்கிலன் மாதோ
பேதை கொள்ளா தொழிமனங் கடுத்தே.

வடமொழிவிதித்த - ஒழிமனங்கடுத்தே. பகுதி-வரைபொருட் பிரிதல். துறை-நெஞ்சொடுவருந்தல்.

'வடமொழிவிதித்த' என்பதுமுதல் 'ஐதாய்' என்பதுவரை.

(1—4 வரிகள்.)

(ப-ரை.) வடமொழி விதித்த - தேவபாடையில் நிருமித்த, இசை நூல் வழக்குடன் - இசைநூன் முறைப்படி, அடுத்தன - பொருந்தியனவாகிய, எண்ணான்கு - முப்பத்திரண்டு, அங்குலியகத்தினும் - விரலளவினும், நாற்பதிற்றிரட்டி நாலங்குலியினும் - எண்பத்து நான்கு விரலளவினும் முறையே, குறுமையும் நெடுமையும் - குறுக்கமும் நீட்சியும், கோடல் பெற்று - கொள்ளுதலைப்பெற்று, ஐதாய் - அழகினதாய்.

(வி-ரை.) வடதேயத்தில் மிகுதியும் பயின்று வருதலால் தேவபாடை வடமொழியென்னும் வழக்குண்டாயிற்று. கோடல் - கொள்தல்.

'ஆயிரந்தந்திரி' என்பதுமுதல் 'மணங்கரங்கதுவ' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

பிறவிப் பேதத் துறையது போல.
(9—வது வரி.)

(ப-ரை.) ஆயிரம் தந்திரி - ஆயிரந்தந்திகள், நிறை பொது விசித்து - நிறைவாச் சமனுற விறுக்கிய, கோடி மூன்றில் - மூன்று மூலையாக, குறித்து - செய்து, மணி குயிற்றி - மணிகளிழைத்து, இரு நிலம் கிடத்தி - பெரிய பூமியிற் கிடத்தி, மனம் கரம் கதுவ - மனமுங்கையும் விடாதுபற்ற, பிறவி பேதத்து உறையதுபோல - பிறப்பின் வேறுபாட்டின் தோற்றம்போல.

(வி-ரை.) விசித்தல் - இறுக்குதல். குயிற்றல் - இழைத்தல். இருமை - பெருமை. கதுவல் - பற்றுதல். பேதம் - வேறுபாடு.

ஆயிரத் தெட்டி லமைந்தன பிறப்பு.
(8—வது வரி.)

'ஆரியப்பதங்கோள்' என்பதுமுதல் 'நனிமுகம்புலம்ப' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) ஆயிரத்தெட்டில் - ஆயிரத்தெண்வகையாக, அமைந்தன பிறப்பு - தோற்றுவனவாகிய நாதங்களமைந்த, ஆரிய பதம் கொள் - ஆரியப்பதத்தைக் கொண்டிருக்கின்ற, நாரதம் பேரியாழ் - நாரதமென்னும் பெயரினையுடைய யாழ், நன்னர் கொள் அன்பால் - நன்மையைக் கொண்டிருக்கின்ற அன்புடனே, நனி முகம் புலம்ப - மிகுதியும் வாயாற்பாடவும்.

(வி-ரை.) நாதம் - ஒலி. ஆரியபதம்-வடசொல். யாழ் - வீணை. முகம் ஈண்டைக்கேற்ப வாயென் றுரைக்கலாயிற்று. புலம்பல் - பாடல்.

'முந்நான்கங்குலி' என்பதுமுதல் 'தும்புருக்கருவியும்' என்பதுவரை.
(12—18 வரிகள்.)

(ப-ரை.) முந்நான்கு அங்குலி - பன்னிரண்டு விரலளவாகிய, முழுவுடல் சுற்றும் - உடற்சுற்று முழுமையுமாகிய குறுக்கும், ஐம்

பதிற்றிரட்டி ஆறுடன் கழித்த - தொண்ணூற்று நான்கு, அங்குலி நெடுமையும் - விரலளவாகிய நெடுமையுமாக, அமைத்து - செய்து, உள் தூர்த்து-உள்ளடைத்து, ஒன்பது தந்திரி - ஒன்பது தந்திகளை, உறுத்தி - பொருத்தி, நிலை நீக்கி - நிலைகளை நீக்கஞ்செய்து, அறு வாய்க்கு - வரையறுத்த நிலையில், ஆயிரண்டணைத்து - இவ்விரண்டாகச் சேர்த்து, வரை சுட்டி - எல்லைகட்டி, தோள் கால் வதிந்து - தோளிலுங் காலிலுந் தங்கவைத்து, தொழில்பட தோன்றும்-(நாதந் தோன்றுகின்ற) தொழிலுண்டாம்படி, தும்புரு கருவியும் - தும்புருவென்னும் வீணையும்.

(வி-ரை.) உறுத்தல் - பொருத்துதல்.

'துன்னிநின்றிசைப்ப' என்பதுமுதல் 'மூரல' என்பதுவரை. (18—21 வரிகள்.)

(ப-ரை.) துன்னி நின்று இசைப்ப - பொருந்திநின்று பாடவும், எழு என உடம்பு பெற்று - வயிரமான வுடல்பெற்று, எண்பது அங்குலியின் - எண்பது விரலளவு நீட்சியுடனே, தந்திரி நூறு தழங்கிய - நூறு தந்திரிகளா லொலிக்காநின்ற, முகத்த - முகத்தினையுடைய, கீசகம் பேரியாழ் - கீசகமென்னும் பெயரினையுடைய யாழ், கிளையுடன் மூரல - பண்ணோடு பாடவும்.

(வி-ரை.) இசைத்தல் - பாடுதல். தங்கல் - ஒலித்தல்.

'நிறைமதி' என்பதுமுதல் 'துவக்கிநின்றிசைப்ப' என்பதுவரை.
(22—29 வரிகள்.)

(ப-ரை.) நிறை மதி வட்டத்து - முழுமதிபோலும் வட்டவடிவாய், முயல் உரி விசித்து - முயலின்றோலினாற் கட்டி, நாப்பண்-நடுவில், ஒற்றை நரம்பு - ஒரு நரம்பாகிய, கடிப்பமைத்து - மார்ச்சனையமைத்து, அ நரம்பு - அந்த நரம்பு, இருபத்தாறு அங்குலி பெற - இருபத்தாறு விரலளவு பெறும்படி, இடக்கரம் துவக்கி - இடக்கரத்தாற் கட்டி, இடக்கீழ் அமைத்து - இடப்பாலிலமைத்து, புறவிரல் மூன்றின் - மூன்றுவிரலின் புறத்திலும், நுனிவிரல் அகத்தும்-விரனுனியினிடத்தும், அறுபத்திரண்டு இசை - அறுபத்திரண்டு வகையாகிய இசையை, அனைத்துயிர் வணங்கும் - எல்லாவுயிரும் வணங்காநின்ற, மருத்துவம் பெயர் பெறும் - மருத்துவமென்னும் பெயர் பெற்ற, வானக்கருவி - தேவயாழ், தூங்கலும் தள்ளலும் - தூங்க

லோசையுந் துள்ளலோசையும், துவக்கின்று இசைப்ப - தழுவி நின்று பாடவும்.

(வி-ரை.) விசித்தல் - கட்டல். கடிப்பு - மார்ச்சனை. துவக்கல் - கூட்டல், தழுவல்.

'நான்முகன்முதலா' என்பதுமுதல் 'வணங்காரென' என்பதுவரை.

(30—35 வரிகள்.)

(ப-ரை.) நான்முகன் முதலா - பிரமன் முதலாகிய, மூவரும் போற்ற-முத்தேவருந்துதிக்க, முனிவர் அஞ்சலியுடன்-முனிவர்களஞ்சலியோடு, முகமன் இயம்ப - உபசரிக்க, தேவர்கள் அனைவரும் - தேவர்கள்யாரும், திசைதிசை இறைஞ்ச-திசைகள்தோறும் வணங்கவும், இன்பப் பசுங்கொடி - இன்பத்தைத்தரும் இளமையான ஆனந்தவல்லி, இடப்பால் படர-இடப்பாலிருக்க, வெள்ளி அம் குன்றம் - வெள்ளிமலையில், விளங்க வீற்றிருந்த - ஞானப்பிரகாசந் தோன்றுமாறு வீற்றிருந்தருளும், முன்னவன் - முதல்வனது, கூடல் - மதுரைத்திருப்பதியை, முறை வணங்கார் என - விதிமுறை வணங்காதார்போல.

(வி-ரை.) முத்தேவர் - பிரமன் விட்டுணு உருத்திரன். முகமன் - உபசாரவார்த்தை. பால் - பக்கம். பசுமை - ஈண்டிளமைக்காயிற்று. இன்பப் பசுங்கொடி யென்றது உமாதேவியாரை.

'அரவப்பசுந்தலை' என்பதுமுதல் 'கருங்கயற்கணத்தை' என்பதுவரை.

(36—38 வரிகள்.)

(ப-ரை.) அரவம் பசுந்தலை - பாம்பின் பசிய தலைபோலும், அரும்பு அவிழ்-அரும்பு விரிந்த, கணை கால்-திரண்டதாளையுடைய, நெய்தற் பாசடை - அல்லியினது பச்சிலைகளாகிய, நெடு காட்டு - பெரிய காட்டில், ஒளிக்கும் - மறைகின்ற, கண் என குறித்த-மாதர் கண்ணென்று குறிக்கப்பட்ட, கருங்கயல் கணத்தை - பெரிய சேல் மீன்களை.

(வி-ரை.) கணை - திரட்சி. குறித்தல் - சுட்டல், நினைத்தல் எனினுமமையும்.

'வெள்ளுடல்' என்பது முதல் 'உண்ணும்' என்பதுவரை.
(39—41 வரிகள்.)

(ப-ரை.) வெள் உடல் - வெள்ளிய வுடலையும், கூர் வாய் - கூரியவாயையும், செம் தாள் - செங்காலையுமுடைய, குருகு இனம்-நாரைக்கூட்டங்கள், அரவு எயிறு அணைந்த-பாம்பின் பல்லைப்போலும் பொருந்திய, முள் இலை-முண்மடல் நெருங்கிய, முடக்கைதைகள் - வளைவாகிய தாழைகளிடத்து, கான்றலர் கடி மலர் - வாசனையை வீசியலர்ந்த மலர்களோடு, கரந்து உறைந்து - ஒன்றுயொளித்திருந்து, உண்ணும் - கொத்தியுண்ணுகின்ற.

(வி-ரை.) வாய் - இவ்விடத்திற்கேற்ப அலகைக் குறித்தது. கான்று என்பதற்குப் பகுதி கால். காலல் - வீசல். காத்தல் - ஒளித்தல்.

'கருங்கழிகிடந்த' என்பதுமுதல் 'நெஞ்சம்' என்பதுவரை.
(42—46 வரிகள்.)

(ப-ரை.) கரு கழி கிடந்த - பெரியகழி சூழ்ந்த, கானலங்கரைவாய் - கடற்கரையில், மெய் படு கடுஞ்சூள் - உண்மையாகச்சொல்லிய பெரிய சத்தியத்தை, மின் என துறந்தவர் - மின்னலைப்போல விரைவின் மறந்தவராது, சுவல் உளை - பிடரிமயிரினையுடைய, கவனம் - விரைவுள்ள, புள் இயல் - புள்ளின்றன்மையையுடைய, கலிமான் - கனைக்கின்ற குதிரைபூண்ட, நோக்கம் மறைத்த-பார்க்கின்ற கண்களை மறைத்த, பரிதி கொள் நெடு தேர் - உருளை பூட்டிய பெரியதேரின், பின்னொடு சென்ற-பின்னாற்சென்ற, என் பெரும்பீழை நெஞ்சம் - எனது மிகுந்த துயருறுகின்ற மனம்.

(வி-ரை.) கரைவாய் என்பதில் வாய் ஏழனுருபு. கலித்தல் - ஒலித்தல், அது ஈண்டுக் கனைத்தலுக்காயிற்று. பரிதி - தேருருள்.

'சென்றுழிச்சென்றுழி' என்பதுமுதல் 'கடுத்தே' என்பதுவரை.
(47—52 வரிகள்.)

(ப-ரை.) சென்றுழி சென்றுழி - அத்தேர் சென்றவிடங்களெல்லாம், சேறலும் உளவோ - செல்லுதலுமுண்டோ, அ வினை பயனுழி - அவர் சென்றவினைமுற்றுமளவும், அருந்தவம் பெறுமோ - அரியதவத்தைச் செய்யுமோ, இடை வழி நீங்கி - நடுவழியில் அவரை விட்டு, என் எதிருறுங்கொல்லோ - எனக்கெதிராக வருமோ, அன்றி

யும் - அப்படியல்லது, நெடுநாள் அமைந்து - நெடுநாள் அவருடனிருந்து, உடன் வருமோ - அவர் வருங்காற் கூடவருமோ, யாது என - எதுவென்று, மனம் - மனனே, கடுத்து - விரைய, நினைக்கிலன் - நினைக்கவல்லேனல்லன், பேதை கொள்ளாது - பேதைமைப்படாமல், ஒழி - நிற்பாயாக.

(வி-ரை.) உழி - இடம். கடுத்தல்-விரைதல். அமைதல்-இருத்தல்.

முன்னவன் கூடல் வணங்காரென, கருங்கயற் கணத்தை செந்தாட் குருகினம் உண்ணும் கானலங் கரைவாய் கடுஞ்சூள் மின்னெனத் துறந்தவர் பரிதிகொணெடுந்தேர் பின்னொடு சென்ற நெஞ்சம், சேறலுமுளவோ, அருந்தவம் பெறுமோ, இடைவழி நீங்கி எதிருறுங்கொல்லோ, அன்றியுடன்வருமோ, யாதென நினைக்கிலன், ஒழியென வினைமுடிவுசெய்க. (அகூ)

திருக்கோவையார் ௧௮௬-ம் செய்யுள்.

காப்புச்சிறைமிக்க கையறுகிளவி.

காப்புச்சிறைமிக்க கையறுகிளவி யென்பது — காமமிக்கு எதிர்ப்பட விரும்பாநின்ற தலைமகள், இவ்விடையீடெல்லை நீந்தி ஒருவழியான் வந்தாராயினும் இஞ்ஞாளி குரைதராநின்றமையின் யாமிவரை யெதிர்ப்படுத லரிதெனக் காப்புச்சிறைமிக்கு வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

இன்னற வார்பொழிற் றில்லை நகரிறை சீர்விழவிற்
பன்னிற மாலைத் தொகைபக லாம்பல் விளக்கிருளின்
றுன்னற வுய்க்குமில் லோருந் துயிலிற் றுறைவர்மிக்க
கொன்னிற வேலொடு வந்திடின் ஞாளி குரைதருமே.

மெய்யுறு காவலிற்
கையறு கிளவி.

(ப-ரை.) இன் - இனிய, நறவு ஆர் - தேன்பொருந்திய, பொழில் - சோலைகள்சூழ்ந்த, தில்லை நகர் - தில்லை நகருக்கு, இறை - இறைவனானவனது, சீர் விழவில்-சிறப்பினையுடைய விழவின்கண், பல் நிறம் - பலநிறங்களையுடையனவாய, மாலை தொகை - மாலைத் தொகைகளால், பகல் ஆம்-(இராப்பொழுதும்) பகற்பொழுதாகாநிற்கும், (அதுவேயுமன்றி) பல் விளக்கு - பலவாகிய விளக்குகள், இருளின் துன் அற-இருளின் செறிவொழிய, உய்க்கும் - துரக்கும், இல்

லோரும் துயிலின் - (இவ்விடையீடேயன்றி ஒருபொழுதும் துயிலாத) இல்லோருந்துயில்வாராயின், துறைவர்-துறைவரானவர், கொன் மிக்க-மிக்க அச்சத்தைச்செய்கிற, நிறம்-நிறத்தையுடைய, வேலொடு வந்திடின் - வேலோடு வருவாராயின், ஞாளி - நாய்கள், குரைதரும் - குரையாநிற்கும் (அதனால் நான் அவரை யெதிர்ப்படுதல் அரிது போலும்), எ - று.

(வி-ரை.) மாலைத்தொகையும் இராப்பகலாகாநிற்கும், பல விளக்கும் இருளைத்துரக்குமென் றுரைப்பினுமமையும். இல்லோருந் துயிலினென்றதனான், அதுவுமோரிடையீடு கூறப்பட்டதாம். மிக்க வேலென் றியைப்பினு மமையும். மெய்யுறுகாவல் - பிழையாத மிக்க காவல்.

நேரிசையாசிரியப்பா.

கடுவினை யங்குரங் காட்டியுள் ளழுக்கா
றெண்டிசைச் சாகைகொண் டிருண்மனம் பொதுளிக்
கொடுங்கொலை வடுத்துக் கடும்பழிச் சடையலைந்
திரண்டைஞ் ஞூறு திரண்டவக் காவதஞ்
சுற்றுடல் பெற்றுத் துணைப்பதி னாயிர
மற்றது நீண்டு மணியுடற் போகி
யைம்பது நூறுட னகன்றுசுற் றொழுக்கிப்
பெருங்கள விணர்தந் தலைகீழ்க் குலவிய
விடமாக் கொன்ற நெடுவேற் குளவன்
குன்றமர் வள்ளியங் கொடியொடு துவக்கிப்
பன்னிரு கண்விழித் தென்வினை துரக்கு
மருட்பரங் குன்ற முடித்தணி கூடற்
குறும்பிறை முடித்த நெடுஞ்சடை யொருத்தனைத்
தெய்வங் கொள்ளார் சிந்தைய தென்னக்
கிடந்தவல் லிரவிற் கிளர்மழை கான்ற
வயனு மும்பரு மடக்குபுன லொருவித்
தேவருண் கல்லார் சிந்தையிற் புரண்ட
கவலையுங் காற்குறி கண்டுபொழிற் றுள்ளு
மிண்மயாச் சூரும் பல்கண் டொருங்காத்
துடியிற் கண்ணிற் றுஞ்சாக் கண்ணினர்
கடியுந் துனைவிற் கையகன் றெரிமணித்

தொகையிருள் கொல்லு முன்றிற் பக்கத்
திணைமுகப் பறையறை கடிப்புடைத் தோகை
வயிற்று ளடக்கி வளைக்கிடை கிடக்கு
முழக்கிமெய் கலுரு முகக்கொலை ஞாளி
யதிர்குரைப் படக்கி யிற்புறத் தணைந்தநம்
பூம்புன லூரனைப் பொருந்தா நெடுங்க
ணன்னையிற் போக்கிய வரும்பெருந் தவறு
மாலையுங் கண்ணு மேனியு முள்ளமு
மயங்காத் தேவர் மருந்துவாய் மடுக்க
முகங்கவிழ் வேலையி லறங்குடி போகிய
மாயவல் லரக்கர் தட்டிக்
காய்பா ருருத்த விதியொத் ததுவே.

கடுவினையங்குரம்-விதியொத்ததுவே. பகுதி-இரவுக்குறி. துறை-காப்புச்சிறைமிக்க கையறுகிளவி.

'கடுவினை' என்பதுமுதல் 'எண்டிசைகோண்டு' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) கடுவினை - நஞ்சையொத்த மாயையாகிய, அங்குரம் காட்டி - முளையைத் தோற்றுவித்து, உள் அழுக்காறு-உள்ளத்தின்கண் அழுக்காறாகிய, சாகை - கிளைகளை, எண் திசை கொண்டு-எட்டுத் திக்கிலும் பரப்பி.

(வி-ரை.) கடு-நஞ்சு. உள்-ஆகுபெயர். அழுக்காறு-பொறாமை. கோடல் இங்குப் பரப்புதல் என்னும் பொருள் பயந்துநின்றது.

இருண்மனம் பொதுளி.
(2—வது வரி.)

'திரண்டைஞ்ஞூறு' என்பதுமுதல் 'சுற்றுடல்பெற்று' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) இருள் மனம்-இருண்ட மனமாகிய தளிர்களை, பொதுளி - தளிர்த்து, சுற்றுடல் - மரத்தடியின் சுற்றளவானது, இரண்டு ஐஞ்ஞூறு திரண்ட அக்காவதம் பெற்று - ஆயிரங் காததூரந் திரட்சியாகப் பெற்று.

(வி-ரை.) பொதுளல் - தளிர்த்தல்.

'துணைப்பதினுயிரம்' என்பதுமுதல் 'ஒழுக்கி' என்பதுவரை. (5—7 வரிகள்.)

(ப-ரை.) மற்றது - அந்த மாமானது, துணைப்பதினுயிரம் நீண்டு - இருபதினுயிரம் காவததூரமுயர்ந்து, மணி உடல் போகி - அழகிய வுடலானது சென்று, சுற்று-சுற்றிலும், ஐம்பது நூறுடன் - ஐயாயிரங் காததூரம், அகன்று ஒழுக்கி - அகன்று பரவி.

(வி-ரை.) மற்று-அசைநிலை. துணை-இரண்டு. துணைப்பதினுயிரம் என்றமையால் இருபதினுயிரமென் றுரைக்கலாயிற்று. அகன்று-விரிந்து.

கொடுங்கொலை வடித்துக் கடும்பழிச் சடையலைந்து.
(3—வது வரி.)

'பெருங்களவு' என்பதுமுதல் 'குளவன்' என்பதுவரை. (8—9 வரிகள்.)

(ப-ரை.) பெருங்களவு - மிகுந்த வஞ்சகமாகிய, இணர் தந்து - பூங்கொத்துக்களைத் தந்து, கொடுங்கொலை - கொடிய கொலையாகிய பிஞ்சுகளை, வடித்து - அரும்பி, அவை - அக்கிளை முதலியவைகள், கீழ் குலவிய-கீழே பொருந்தியதாகி, கடும்பழி சடை அலைந்து - மிகுந்த பழியாகிய வேர்மேலே யலைந்ததாகிய, விடம் மா கொன்ற - விடத்தையொத்த மாமரத்தைத் தடிந்த, நெடு வேல் குளவன்-நெடிய வேலாயுதத்தையுடைய முருகக்கடவுள்.

(வி-ரை.) வடித்தல் - அரும்புதல். தடிதல் - வெட்டுதல், பிளத்தலுமாம்.

'குன்றமர்' என்பதுமுதல் 'கூடல்' என்பதுவரை. (10—12 வரிகள்.)

(ப-ரை.) குன்று அமர் வள்ளி அம் கொடியொடு-குன்றினிடத்தமர்ந்திருந்த வள்ளிநாச்சியா ரென்னுங் கொடியுடனே, துவக்கி - கட்டுப்பட்டு, பன்னிரு கண் விழித்து - பன்னிரண்டு கண்களாலு நோக்கி, என் வினை துரக்கும்-என திருவினையையும் போக்காநின்ற, அருள் பரங்குன்றம்-அருளுக்கிடமாகிய திருப்பரங்குன்றத்தால், உடுத்தணி - சூழ்ந்தலங்கரிக்கப்பட்ட, கூடல் - மதுரையில்.

(வி-ரை.) துவக்கல்-கட்டுண்டல். இருவினை-நல்வினை தீவினை. அணிதல் - அலங்கரித்தல்.

'குறும்பிறை' என்பதுமுதல் 'சிந்தையதென்ன' என்பதுவரை.
(13—14 வரிகள்.)

(ப - ரை.) குறும்பிறை முடித்த - சிறிய பிறையைத்தரித்த, நெடுஞ்சடை - நெடிய சடையையுடைய, ஒருத்தனை - ஒப்பற்றவனை, தெய்வம் கொள்ளார் - தெய்வமென்று மதியாதார், சிந்தையது என்ன - மனம்போல.

(வி-ரை.) நெடுஞ்சடை யொருத்தன் என்றது சிவபெருமானை.

'கிடந்தவல்லிரவில்' என்பதுமுதல் 'புரண்ட' என்பதுவரை.
(15—17 வரிகள்.)

(ப-ரை.) கிடந்த வல் இரவில் - இருண்ட பெரிய விராக்காலத்தில், கிளர் மழை கான்ற - நிறைந்த மழையைப்பொழிந்த, அயலும் உம்பரும் - மண்ணையும் விண்ணையும், அடக்கு புனல் - தனக்குளடக்கிய புனலை, ஒருவி - கடந்து, தே அருள்-தெய்வத்தினருளை, கல்லார் - அறியாதவர்களது, சிந்தையில் - மனதைப்போல, புரண்ட - மாறுபட்ட.

(வி-ரை.) கான்ற என்பதற்குப் பகுதிகால். உம்பர் எனமேலே வருதலால் அயல் மண்ணை யுணர்த்திற்று. ஒருவல் - கடத்தல்.

'கவலையும்' என்பதுமுதல் 'கையகன்று' என்பதுவரை.
(18—21 வரிகள்.)

(ப-ரை.) கவலையும் - கவர் வழியையும், கால் குறி கண்டு - காற்குறியாற் கண்டு, பொழில் துள்ளும் - சோலைகளில் நடமாடுகின்ற, இமையா சூரும் - கண்ணிமைத்தலில்லாக தெய்வங்களையும், பல் கண்டு - பலவாகக்கண்டு, ஒருங்கா - அடங்காத, துடியின கண்ணில் - குறிஞ்சிப்பறையினோசையால், துஞ்சா கண்ணினர் - உறங்காத கண்ணையுடையவர்களது, கடியும்-காவலையும், துனைவில் - சீக்கிரத்தில், கையகன்று - நீங்கி.

(வி-ரை.) துஞ்சல் - உறங்கல். துனிவு - விரைவு. கையகன்று - ஒருசொல்; பகுதி - கையகல்.

‘எரிமணித்தோகை’ என்பதுமுதல் ‘அதிர்குரைப்படக்கி’ என்பதுவரை.
(21—26 வரிகள்.)

(ப-ரை.) எரி மணி தொகை - ஒளிர்கின்ற மணிக்கூட்டங்கள், இருள் கொல்லும் - இருளை நீக்கும், முன்றில் பக்கத்து - வாய்தலின் முன்பு, இணைமுகம் பறை - இருமுகங்களையுடைய பறைகளை, அறை - அடிக்கும் கருவியாகிய, கடிப்பு உடை - குறுந்தடிபோலுமுடைய, தோகை - வாலை, வயிற்றுள் அடக்கி - வயிற்றின் கண்ணடக்கி, வளை கிடைகிடக்கும் - வளைந்து படுத்திருக்கும், முழக்கி மெய் கவரும் - குரைத்துத் தமரென்று மயலாரென்று முண்மையறிகின்ற, கொலை முகம் ஞாளி - கொலைமுகத்தையுடையநாய், அதிர் குரைப்பு அடக்கி - குரைக்கின்ற வொலியை யடக்கி.

(வி-ரை.) அறைதல் - அடித்தல். கிடைகிடத்தல்-ஒருசொல். வளையென்னு முதனிலை வளைந்து எனப் பொருள்பட்டு நின்றது, ‘‘வரிப்புனை பந்து’’ என்புழிப்போல. குரைப்பு - குரைத்தல். கவர்தல்-ஈண்டைக்கேற்ப அறிதல் எனப் பொருடந்து நின்றது.

‘இற்புறத்து’ என்பதுமுதல் ‘பெருந்தவறு’ என்பதுவரை.
(26—28 வரிகள்.)

(ப-ரை.) இல் புறத்து - வீட்டின் பின்புறத்தே, அணந்த - வந்த, நம் பூ புனல் ஊரனை - நமதழகிய நீராற் சூழப்பட்ட வூரையுடைய தலைவனை, பொருந்தா நெடு கண் - உறங்காத நெடிய கண்ணையுடைய, அன்னையின் - நந்தாயினாலே, போக்கிய - போய்விடச் செய்த, அரும்பெருந்தவறு - நீக்கற்கரிய பெரிய இடையூறானது (என்போன்றிருந்த தென்னின்).

(வி-ரை.) அன்னையின் என்பதில் இன் என்னு மைந்தாவது மூன்றாவதன் கருவிப்பொருளில் வந்தது.

‘மாலையும்’ என்பதுமுதல் ‘வாய்மடுக்க’ என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) மாலையும் - (கரிக்க) மாலைகளும், கண்ணும் - இரு கண்களும், மேனியும் - [illegible], உள்ளமும் - மனமும், மயங்கா - வேறுபடாத, தேவர் [illegible], மருந்து - அமிர்தத்தை, வாய் மடுக்க - வாயாலுண்ணுதற்கு.

(வி-ரை [illegible]

‘முகங்கவிழ்வேலையில்’ என்பதுமுதல் ‘ஒத்தது’ என்பதுவரை.

(31—33 வரிகள்.)

(ப-ரை.) முகம் கவிழ் வேலையில் - முகத்தைச் சாய்த்த சமயத்தில், அறம் குடிபோகிய - தருமந்தம்மைவிட்டுக்குடிபோன, மாய வல் அரக்கர் - வஞ்சனையில்வல்ல அரக்கர்கள், தட்டி - தட்டி, காய் - காய்ந்த, பார் - பூமியின்கண், உகுத்த - சிந்தும்படிசெய்த, விதி - முறைமை, ஒத்தது - ஒத்திருந்தது.

(வி-ரை.) காய்தல் - உலர்தல். உகுத்தல் - சிந்துதல். வேலை - சமயம்; வேளையெனவும் வழங்கும், குடிபோதல் - முற்றும் விட்டொழிதல். தட்டல் - இடறல்.

விடமா கொன்ற நெடுவேற்குளவன் பன்னிருகண் விழித்து என்வினை தூக்கு மருட்பரங்குன்ற முடித்தனிகூடல் நெடுஞ்சடையொருத்தனைக் கொள்ளார் சிந்தையதென்ன, வல்லிரவில், அயலுமும் பருமடக்குபுன லொருவி, கல்லார் சிந்தையிற் புரண்ட கவலையுங் காற்குறிகண்டு, சூரும்பலகண்டு, கடியுங் கையகன்று, ஞாளியதிர் குரைப்படக்கி, இற்புறத்தணைந்த நம்புனலூரனைப் பொருந்தா நெடுங்கணன்னையில் போக்கிய அரும்பெருந்தவறு, தேவர் மருந்து வாய் மடுக்க முகங்கவிழ்வேலையில் அரக்கர் தட்டியுகுத்த விதியொத்ததென வினைமுடிவுசெய்க. (அ௬)

திருக்கோவையார் உ௬௬-ம் செய்யுள்.

மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்.

மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தலென்பது — தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறுகின்ற அந்நிலைமைக்கண் மணமுரசு கேட்டு, மனையிலுள்ளார், இஃதிவளை நோக்கி யொலியாநின்றது மணமுரசென வுட்கொண்டு, யாம் பூரண பொற்குடந் தோரண முதலாயினவற்றான் மனையை யலங்கரிப்போமென மகிழ்வொடு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பூரண பொற்குடம் வைக்க மணிமுத்தம் பொன்பொதிந்த
தோரண நீடுக தூரிய மார்க்கதொன் மாலயற்குங்
காரண னேரணி கண்ணுத லோன்கடற் றில்லையன்ன
வாரண வும்முலை மன்றலென் றேங்கு மணமுரசே.

நிலங்காவலர் நீண்மணத்தி
னலங்கண்டவர் நயந்துரைத்தது.

(ப-ரை.) தொல் - பழையராகிய, மால் அயற்கும் - மாலுக்கும் அயனுக்கும், காரணன் - காரணனாயுள்ளவன், ஏர் அணி - அழகை யுடைய, கண் நுதலோன் - நெற்றிக்கண்ணை யுடையவன், (அவனது) கடல் - கடலையடுத்த, தில்லை அன்ன - தில்லையை நிகர்த்த, வார் அணவும் - வாரினால் கட்டப்படுமளவைச்சென் றணவுகின்ற, முலை - தனங்களையுடையாளது, மன்றல் என்று - மணமென்று, மணமுரசு எங்கும் - மணமுரசு முழங்காநின்றது, (அதனால்) பூரண பொற்குடம் வைக்க - (வாயில்கடோறும்) நீரால் நிறைக்கப்பட்ட பொற்குடங்களை வைக்க, மணி முத்தம் பொன் பொதிந்த - மணியு முத்தும் பொன்னின்கண் அழுத்திய, தோரணம் - தோரணங்கள், நீடுக - (எவ்விடத்தும்) ஓங்குவனவாக, தூரியம் ஆர்க்க - வாத்தியங் கள் முழங்குவனவாக, எ-று.

(வி-ரை.) வாரணவுமுலை யென்பதற்கு வாரைப் பொருந்து முலை யெனினுமமையும்.

நேரிசையாசிரியப்பா.

நாற்கடல் வளைத்த நானிலத் துயிரினை
யைந்தருக் கடவு ளவன்புலத் தினரை
நடந்துபுக் குண்டும் பறந்துபுக் கயின்று
முத்தொழிற் றேவரு முருங்கவுள் ளுறுத்து
நோன்றலைக் கொடுஞ்சூர்க் களவுயிர் நுகர்ந்த
தழல்வேற் குமரன் சால்பரங் குன்ற
மணியொடும் பொன்னொடு மார்பணி யணைத்த
பெருந்திருக் கூட லருந்தவர் பெருமா
னிருசர ணகலா வொருமைய ருளமெனச்
சுடர்விளக் கெடுமின் கோதைக டுக்குமின்
பூவும் பொரியுந் தூவுமி னெழுதுமின்
சுண்ணமுந் தாதுந் துணைத்துக டேற்றுமின்
கரும்பெயற் குளிறிற் களிமயி லென்னக்
கிளர்ந்தயர் வட்குமுன் கிளர்வினைச் சென்றோ
ருடலுயிர் தழைக்கு மருள்வர வுணர்த்த
முல்லையம் படர்கொடி நீக்கிப் பிடவச்

சொரியலர் தள்ளித் துணர்ப்பொலங் கடுக்கைக்
கிடைதர வொருவிக் களவலர் கிடத்திப்
பூவையம் புதுமலர் போக்கியரக் கடுத்த
கழுவிய திருமணி கால்பெற் றென்ன
நற்பெருந் தூது காட்டு
மற்புதக் கோபத் திருவர வதற்கே.

நாற்கடல்வளைத்த - திருவரவதற்கே. பகுதி - வரைபொருட் பிரிதல். துறை - மணமுரசுகேட்டு மகிழ்ந்துரைத்தல்.

'நாற்கடல்' என்பதுமுதல் 'புலத்தினரை' என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) நால் கடல் வளைத்த - நான்குதிசைக்கடலுந் தம்மு ளடக்கிய, நால் நிலத்து உயிரினை-நான்கு நிலத்திலுமுள்ள வுயிரை யும், ஐந்தருக்கடவுள் - இந்திரனையும், அவன் புலத்தினரை - அவ னது நிலத்திலுள்ள தேவரையும்.

(வி-ரை.) நான்கு நிலமாவன - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. நிலமைந்தாயினும் பாலைக்கு நிலமின்மையின் அதனையொழித்து 'நானிலம்' என்றார்.

'நடந்துபுக்குண்டும்' என்பதுமுதல் 'உள்ளுறுத்தும்' என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) நடந்துபுக்கு உண்டும்-நடந்துபோயழித்தும், பறந்து புக்கு அயின்றும் - பறந்துபோயுண்டும், முத்தொழில் தேவரும் - முத்தொழிலையுடைய தேவர்களும், முருங்க உள்ளுறுத்தும் - உள நடுங்கச்செய்யும்.

(வி-ரை.) அயின்று என்பதற்குப் பகுதி அயில். முத்தொழிற் றேவர் என்றது படைத்தல் காத்தல் அழித்தல் என்னு மூன்று தொழில்களையுடைய பிரமன் விட்டுணு உருத்திரன் என்பவர்களை.

'நோன்றலை' என்பதுமுதல் 'குமரன்' என்பதுவரை.
(5—6 வரிகள்.)

(ப-ரை.) நோன்றலை - வலியதலையையுடைய, கொடுஞ்சூர் - கொடியசூரனது, களவு உயிர் நுகர்ந்த - கள்ளத் தன்மையதாகிய வுயிரையுண்ட, தழல் வேல் குமரன் - அழலுகின்ற வேலையுடைய குமரக்கடவுள்.

(வி-ரை.) நோன்மை - வலிமை. தழல்வேல் - வினைத்தொகை நிலைத்தொடர். சூர்-ஆகுபெயர். நுசர்தல் - உண்டல்.

'சால்' என்பதுமுதல் 'அணைத்த' என்பதுவரை.

(6—7 வரிகள்.)

(ப-ரை.) சால் - நிறைந்துள்ள, பரங்குன்றம்- திருப்பரங்குன்றத்தை, மணியொடும் - மாணிக்கங்களோடும், பொன்னொடும் - பொன்னோடும், மார்பு அணி - மதாணிப் பதக்கமாக, அணைத்த - தரித்த.

(வி-ரை.) உம்மை யிரண்டும் எண்ணும்மைகள். மார்பு அணி- மார்பில் தரித்தற்குரிய ஆபரணம்; அதனை மதாணிப்பதக்கம் என வழங்குப.

'பெருந்திருக்கூடல்' என்பதுமுதல் 'உளமென' என்பதுவரை.

(8—9 வரிகள்.)

(ப-ரை.) பெருந்திருக்கூடல்-பெரிய வளப்பமுள்ள கூடலில், அருந்தவர் பெருமான் - அரியதவர்களது பெருமான், இரு சரண் அகலா-இரண்டு திருவடிகளையும் விட்டு நீங்காத, ஒருமையர் உளம் என - ஒருமைப்பாட்டினை யுடையவர்களது உள்ளத்தைப்போல.

(வி-ரை.) பெருந்திருக்கூட லருந்தவர்பெருமான் என்றது சிவபிரானை. ஒருமையரை ஏகாக்ரசித்தர் என்பர் வடநூலார்.

'கருப்பெயற்குளிரின்' என்பதுமுதல் 'அருள்வரவு' என்பதுவரை.

(13—15 வரிகள்.)

(ப-ரை.) கருப்பெயல் குளிரின் - கரியமழை பெய்தலினொலியினாலே, களி மயில் என்ன-களிக்கின்ற மயிலைப்போல, கிளர் வினை சென்றோர் - மேலான வினையின்கட் சென்ற தலைவரது, உடல் உயிர் தழைக்கும் அருள் வரவு - உடலுமுயிருந் தழைத்தற்குக் காரணமான கிருபையுள்ள வரவை, கிளர்ந்து அயர்வாட்கு-மிகுதியாகத் தளர்கின்ற தலைவிக்கு.

(வி-ரை.) குளிர் - ஒலி. களிமயில் - வினைத்தொகை நிலைத்தொடர். கிளர்தல் - மிகுதல்.

'மூன், உணர்த்த, முல்லையங்கொடி.' என்பதுமுதல் 'ஒருவி' என்பதுவரை.

(14, 15, 16—18 வரிகள்.)

(ப-ரை.) முன் - எதிராகவந்து, உணர்த்த-அறிவிக்க, முல்லை அம் படர் கொடி-அழகாகப் படர்கின்ற முல்லைக் கொடிகளை, நீக்கி-போக்கி, பிடவ சொரி அலர் - பிடவத்தினது மிகுதியாகச் சொரி கின்ற மலர்களை, தள்ளி-விலக்கி, துணர்-பூங்கொத்துக்களையுடைய, பொலம் கடுக்கை - பொற்கொன்றையானது, இடைதரவு - இருக்கு மிடத்தை, ஒருவி - நீங்கி.

(வி-ரை.) பிடவம் - ஓர்செடி. பொலம் - பொன். இடைதரவு-ஆகுபெயர்.

'களவலர்' என்பதுமுதல் 'கால்பெற்றென்ன' என்பதுவரை.

(18—20 வரிகள்.)

அற்புதக் கோபத் திருவரவு.

(22—வது வரி.)

(ப-ரை.) களவு அலர் - களாவினதலரை, கிடத்தி - உதிர்த்து, பூவை அம் புது மலர்-காயாவினது புதியமலரை, போக்கி-போக்கி, அரக்கு அழித்த - அரக்கிலொட்டி, கழுவிய திரு மணி-சாணைதீர்ந்த அழகிய மாணிக்கம், கால் பெற்று என்ன - கால்பெற்று வந்தாற் போல, அற்புதக்கோபம் திரு வரவு-அர்புதமான இந்திரகோபத்தி னல்ல வரவானது.

(வி-ரை.) களவலர் - களாமலர். கழுவல் - சாணைதீர்தல். இந்திரகோபம் - ஓர்பூச்சி, இதனை ஈயல் என்றும் மூதா என்றும் கூறுப (பட்டுப்பூச்சி). அற்புதம் - ஆச்சரியம்.

அதற்கு, நற்பெருந் தூது காட்டும்.

(21—22 வரிகள்.)

'சுடர்விளக்கெடுமின்' என்பதுமுதல் 'தூற்றுமின்' என்பதுவரை.

(10—12 வரிகள்.)

(ப-ரை.) அதற்கு - அவ்வருள் வரவிற்கு, நல் பெருந்தூது - மிகவு நன்மையான தூது, காட்டும் - காட்டாநிற்கும் (ஆதலால்), சுடர் விளக்கு எடுமின் - மாணிக்க விளக்க மேந்துவீராக, கோதை

கள் தூக்குமின் - மலர்மாலைகளை நாற்றுவீராக, பூவும் பொரியும் - மலரும் பொரியும், தூவுமின் - தூவுவீராக, எழுதுமின்-தரைமெழுகிக் கோலமிடுவீராக, சுண்ணமும் தாதும் - வாசனைச் சுண்ணமும் மலர்த்தாதுகளுமாகிய, துணைத்துகள் - இருவகைப் பொடிகளையும், தூற்றுமின் - இறைப்பீராக.

(வி-ரை.) நன்மை - மிகுதிப்பொருளில் வந்தது. சுடர் - ஆகுபெயர். நாற்றுதல் - தொங்கவிடுதல்; தன்வினையில் நாலல் என வரும். தூவல் - இறைத்தல். துணை - இரண்டு.

கூடலருந்தவர் பெருமான் இருசரணகலா ஒழுமைய ருளமெனக் கிளர்வினைச் சென்றோர் வரவை, அயர்வாட்கு முன்னுணர்த்த, அரக்கடுத்த கழுவிய திருமணி கால்பெற்றென்ன, அற்புதக்கோப நற்பெருந்தூது காட்டும், ஆதலால், விளக்கெடுமின், கோதைகள் தூக்குமின், பூவும் பொரியுந் தூவுமின், எழுதுமின், தூற்றுமின் என வினைமுடிவு செய்க. (அரு)

திருக்கோவையார் ௩௧௧-ம் செய்யுள்.

வாய்மொழிகூறித் தலைமகள் வருந்தல்.

வாய்மொழிகூறித் தலைமகள்வருந்தலென்பது — கலக்கங் கண்டுரைத்த தோழிக்கு, முன்னிலைப் புறமொழியாக நின்னிற் பிரியேன் பிரிவுமாற்றேனென்று சொன்னவர் தாமேபிரிவாராயின், இதற்கு நாஞ்சொல்லுவ தென்னேவெனத் தலைமகனது வாய்மொழி கூறித் தலைமகள் வருந்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பிரியா மையுமுயி ரொன்றாவ தும்பிரி யிற்பெரிதுந்
தரியாமை யுமொருங் கேநின்று சாற்றினர் தையன்மெய்யிற்
பிரியாமை செய்துநின் றோன்றில்லைப் பேரிய லூரரன்ன
புரியா மையுமிது வேயினி யென்னும் புகல்வதுவே.

தீதறுகல்விக்குச் செல்வன்செல்லுமெனப்
போதுறுகுழலி புலம்பியது.

(ப-ரை.) தையல் - உமாதேவியை, மெய்யின்-தன் திருமேனியினின்றும், பிரியாமை செய்து நின்றோன் - பிரியாதிருக்கச்செய்து நின்றவனது, தில்லை - திருத்தில்லையாகிய, பேர் இயல் ஊரர்-பெருவளத்தையுடைய ஊரரானவர், பிரியாமையும் - என்னைவிட்டுப் பிரியாமையையும், உயிர் ஒன்று ஆவதும்-எம்மிருவர்க்கும் உயிரொன்றாயிருத்தலையும், பிரியின் - பிரிந்தால், பெரிதும் தரியாமையும்-மிகுதியாய்த் தரித்திராமையையும், ஒருங்கே நின்று சாற்றினர் - ஒருங்கே

நின்று சொல்லினர், இதுவே - இச்சொல்லுதலே, அன்ன புரியாமையும் - அவற்றைச் செய்யாமையுமாகும்போலும், இனி நாம் புகல்வது என் - இனி யாம் சொல்லக்கிடந்தது யாது, எ - று.

(வி-ரை.) தையன் மெய்யிற் பிரியாத பேரன்பினுனது தில்லைக்கட் பயின்றும் அன்பு பேணுது பிரிதல் எங்ஙனம் வல்லராயினு ரென்னுங் கருத்தால், 'பிரியாமை செய்துநின் றேன் றில்லைப் பேரியலூரர்' என்றாள். பிரிவு காணப்பட்டமையின், அன்னவென்றது ஒழிந்த விரண்டுமேயாம். அன்னபுரியாமையு மிதுவே யென்பதற்குப் பிரிவு முதலாகிய நமக்கின்னாதவற்றைத் தாம் செய்யாமையு மிதுவேயா யிருந்ததெனினு மமையும். இன்னல் புரியாமையு மிதுவே யென்று பாடமோதுவாருமுளர்.

நேரிசையாசிரியப்பா.

பழுதறு தெய்வங் காட்டப் பண்டையி
னுழுவ னலத்தா லோருயி ரென்றுங்
கடுஞ்சூ டந்துங் கைபுனை புனைந்தும்
பூழியம் போனகம் பொதுவுட னுண்டுங்
குழமகக் குறித்துச் சிலமொழி கொடுத்துங்
கையுறை சுமந்துங் கடித்தழை தாங்கியு
முயிரிற் றளர விரங்கியு முணங்கியும்
பனையுங் கிழியும் படைக்குவ னென்று
மிறடியஞ் சேவற் கெறிகவண் கூட்டியும்
புனமுமெம் முயிரும் படர்கரி தடிந்து
மழுங்குறு புனலெடுத் தகிற்புகை யூட்டியு
மொளிர்மணி யூசல் பரியவிட் டுயர்த்து
மிரவினிற் றங்க வெளிவர விரந்து
மிருவியம் புனத்திடை யெரியுயிர்ப் பெறிந்துந்
தெரிந்தலர் கொய்தும் பொழிற்குறி வினவியு
முடலொடும் பிணைந்தகை யாய்துயி லொற்றிச்
செறியிருட் குழம்பகஞ் சென்றுபளிங் கெடுத்த
விற்பொழிற் கிடைக்கு மளவுநின் றுலைந்தும்
பன்னாட் பன்னெறி யழுங்கின ரின்று
முகமலர்ந்து மணத்த முழவந் துவைக்க

வொருகாற் றாக்கி நிலைய மொளிர்வித்து
மூவுட லிணைத்தமும் முகத்தொ ரோமுகத்
தெண்கடிப்பு விசித்த கல்லல் செறிய
விருட்குற றான்றியெம் மருட்களி யாற்றி
யுருள்வாய்க் கொக்கரை யும்பர்நாட் டொலிக்கக்
கரங்கால் காட்டித் தலைய மியக்கி
யிதழவிழ் தாமரை யெனுந்தகு ணித்தந்
துவைப்பநின் றமைகரத் துக்கவைக டோற்றிக்
சரிக்கா லன்ன மொருங்கைதகலித் திரங்கத்
துடிபெறிந் திசைப்பத் துகளம் பரப்பி
வள்ளம் பிணைத்தசெங் கரடிகை மல்க
வெரியகலேந்திவெம் புயங்கமிசை யாக்கி
யெரிதளிர்த் தன்ன வேணியிற் குழவிப்
பசும்பிறை யமுதொடு நிரம்பிய தென்ன
மதுக்குளிர் மத்தமு மிலைத்தொரு மறுபிறை
மார்பமு மிருத்திய தென்னக் கூன்புறத்
தேனக் கோடுவெண் பொடிப்புலத் தொளிரச்
பொலன்மிளிர் மன்றப் பொதுவக நாடித்
தனிக்கொடி காணவெவ் விடத்துயிர் தழைப்ப
வாடிய பெருமா னமர்ந்துநிறை கூடல்
கனவினும் வினவா தவரினு நீங்கிச்
சூளும் வாய்மையுந் தோற்றி
நீளவும் பொய்த்தற் கவர்மனங் கரியே.

பழுதறுதெய்வம் - அவர்மனங்கரியே. பகுதி - ஒத்தற்பிரிவு. துறை - வாய்மொழிகூறித் தலைமகள் வருந்தல்.

'பழுதறுதெய்வம்' என்பதுமுதல் 'ஒருயிரென்றும்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) பழுது அறு தெய்வம் - குற்றமற்ற ஊழானது, காட்ட - கூட்டுவித்ததால், பண்டையின் - முன்னாளில், உழுவல் - நலத்தால் - எழுமையுந் தொடர்ந்த அன்போடு, ஒருயிர் என்றும் - நம்மிருவர்க்கு முயிரொன்றென்றும்.

(வி-ரை.) தெய்வம்-ஈண்டைக்கேற்ப ஊழுக்காயிற்று.

'கடுஞ்சூடந்தும்' என்பதுமுதல் 'சிலமொழிகொடுத்தும்' என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) கடுஞ்சூள் தந்தும் - அருமையான சூளுரைத்தும், கை புனை புனைந்தும் - கையாலணிகலனணிந்தும், பூழி அம் போனகம் - வண்டற்சோற்றினை, பொதுவுடன் உண்டும் - ஆயத்தோடிருந்தருந்தியும், குழமகக்குறித்து - வண்டற்பாவையாகிய இளமகவைப் பாராட்டி, சில மொழி கொடுத்தும்-சில வார்த்தை பயிற்றியும்.

(வி-ரை.) சூள் - சபதம், இதனை வஞ்சினம் என்றும் கூறுப. புனை - அணிகலன் (ஆபரணம்). பூழி - புழுதி, அது இங்கு வண்டலுக்காயிற்று. போனகம் - சோறு. பொது - ஆயம். இளமக - இளங்குழவி.

'கையுறைசுமந்தும்' என்பதுமுதல் 'படைக்குவனென்றும்' என்பதுவரை.

(6—8 வரிகள்.)

(ப-ரை.) கையுறை சுமந்தும் - கையுறைதந்தும், கடி தழை தாங்கியும்-மணத்தையுடைய தழையையேந்தியும், உயிரின் தளர - உயிரோடு தளரும்படி, இரங்கியும் - வருந்தியும், உணங்கியும் - வாடியும், பனையும் - பனைமடலாற் குதிரையும், கிழியும் - ஓவியப்படமும், படைக்குவன் என்றும் - படைப்பேனென்றும்.

(வி-ரை.) கடி - மணம். பனை - ஆகுபெயர். கிழி-எழுதுபடம். இரங்கல் - வருந்தல். உணங்கல் - வாடல்.

'இறடியஞ்சேவற்கு' என்பதுமுதல் 'அகிற்புகையூட்டியும்' என்பதுவரை.

(9—11 வரிகள்.)

(ப-ரை.) இறடி அம் சேவற்கு - தினைகாவற்கு, எறி கவண் கூட்டியும் - எறிதற்குக் கவண்கட்டிக் கொடுத்தும், புனமும்-தினைப்புனத்தின்மேலும், எம் உயிரும் - எம்முயிரின்மேலும், படர் கரி தடிந்தும் - வந்தயானையைக் கொன்றும், அழுங்குறு புனல் எடுத்தும் - யானழுந்திய புனலினின்று மேலெடுத்தும், அகில் புகை ஊட்டியும் - (குளிர்மையை நீக்குமாறு) அகிற்புகை கொடுத்தும்.

(வி-ரை.) இறடி - தினை. அம் - சாரியை. சேவல் - காவல். கவண் - ஒடி. தடிதல் - கொல்லல். புனல் - நீர்.

‘ஒளிர்மணியூசல்’ என்பதுமுதல் ‘எரியுயிர்ப்பெறிந்தும்’ என்பதுவரை.
(12—14 வரிகள்.

(ப-ரை.) ஒளிர் மணி ஊசல் - மணிகள் விளங்காநின்ற வூசல் வடமானது, பரிய - அற்றபோது, இட்டு - கயிறிட்டு, உயர்த்தும் - ஆட்டியும், இரவினில் தங்க-இரவிலெம்மிடத்துத்தங்க, எளிவர இரந்தும் - எளிமையாக யாசித்தும், இருவி அம் புனத்திடை - அறுத்த தினைப்புனத்தின்கண், எரியுயிர்ப்பெறிந்தும் - என்னைக் காணாமையால் பெருமூச்சுவிட்டும்.

(வி-ரை.)) பரிதல் - அறுதல். உயர்த்தல்-ஆட்டல். இரத்தல்-யாசித்தல். இருவி - கதிர் கொய்த தினைத்தட்டை; இது, “பரிவு செய்தாண்டு” என்னு முதற்குறிப்பினையுடைய திருக்கோவைச் செய்யுளுரையா லினிதுவிளங்கும்.

‘தேரிந்தலர்’ என்பதுமுதல் ‘அழுங்கினரின்று’ என்பதுவரை.
(15—19 வரிகள்.)

(ப-ரை.) அலர் தெரிந்து கொய்தும் - மலர்களை யாராய்ந்து பறித்துக்கொடுத்தும், பொழில் குறி வினவியும் - தங்கும் பொழிலுக்கு அடையாளங்கேட்டும், உடலொடும் பிணைந்த கை-தன்னுடலோடு மணைத்த கையையுடைய, ஆய் துயில் ஒற்றி-தாயினது துயில் சோதித்து (நீங்கி), செறி இருள் குழம்பகம் - குழம்பாகச் செறிந்த விருளாகிய நள்ளிரவில், சென்று-வந்து, பளிங்கு எடுத்த இல்-பளிக்குப்பாறையாலியற்றிய இல்லிலிருந்தும், பொழில்-அக்குறித்த பொழிலினிடத்தே, கிடைக்கும் அளவும் - (நான் வந்து) சேருமளவும், நின்று உலைந்தும் - ஓயாமலச்சத்தால் வருந்தியும், பல் நாள் - பலநாளாக, பன்னெறி - இவ்வாறு பலவகைப்பட, அழுங்கினர்-வருந்தின தலைவர், இன்று - இப்பொழுது.

(வி-ரை.) தெரிதல் - ஆராய்தல். பிணைதல் - அணைத்தல். ஒற்றல் - சோதித்தல். பளிங்கு - படிகம். அழுங்கல் - வருந்தல்.

‘முகனைந்து’ என்பதுமுதல் ‘கல்லல்சேறிய’ என்பதுவரை.
(20—23 வரிகள்.)

(ப-ரை.) முகனைந்து மணத்த - ஐந்துமுகம் பொருந்திய, முழவம் தவைக்க - முழவமென்னும் வாச்சியமொலிக்க, ஒருகால்தூக்கி-

ஒருகாலைத்தூக்கி, நிலயம் ஒளிர்வித்து-கூத்தினைத் தோற்றுவித்து, மூவுடல் அணைத்த - மூன்றுடல் பொருந்திய, மும்முகத்து-மூன்று முகத்துள், ஒரோமுகத்து - ஒவ்வோர் முகத்தில், எண் கடிப்பு விசித்த - எட்டுக்கடிப்பால் விசித்த, கல்லல் செறிய - கல்லலென்னும் வாச்சியமுழங்க.

(வி-ரை.) துவைத்தல் - ஒலித்தல். விசித்தல் - கட்டல், இறுக்குதலுமாம்.

‘இருட்குறளூன்றி’ என்பதுமுதல் ‘துவைப்ப’,

என்பதுவரை.

(24—28 வரிகள்.)

(ப-ரை.) இருள் குறள் ஊன்றி - கருமையாகிய பூதங்கள் கீழேநாட்டி, எம் அருள் களி ஆற்றி - எமக்கருளால் மகிழ்ச்சியுண்டாக்கி, உருள் வாய் - உருட்சியாகிய முகத்தையுடைய, கொக்கரை-வலம்புரிச் சங்கத்தை, உம்பர் நாட்டு - தேவர்நாடளவு மூடுருவுமாறு, ஒலிக்க - போய்சத்திக்க, கரம் கால் காட்டி-கையையுங்காலையுங்காட்டி, தலையம் இயக்கி - தலையமென்னுங்கூத்தைத் தோற்றுவித்து, இதழ் அவிழ் தாமரை என்னும் - இதழ்விரிந்த தாமரைமலரையொத்த, தகுணிச்சம் துவைப்ப - தகுணிச்சமென்னும் வாச்சியமொலிக்க.

(வி-ரை.) ஆற்றல் - உண்டாக்கல். கொக்கரை - வலம்புரிச் சங்கினோர் பேதம். உம்பர் - ஆகுபெயர். இயக்கல் - தோற்றுவித்தல்.

‘நின்றமைகரத்து’ என்பதுமுதல் ‘வெம்புயங்கமிசையாக்கி’,

என்பதுவரை.

(28—32 வரிகள்.

(ப-ரை.) நின்று அமை கரத்து - நிலைபெற்றமைந்த கையால் கலைகள் தோற்றி - கிளைக்கின்றவொலிகளை யெழுப்பி, கரி கால் அன்ன - யானைக்காலையொத்த, மொந்தை - மொந்தையென்னும் வாச்சியம், கலித்து இரங்க - மிகுந்தொலிக்க, துடி எறிந்து இசைப்ப - சிறுபம்பையென்னும் வாச்சியமெழுந்தொலிக்க, துகளம் பரப்பி - நுட்பமான வொலிகளை யெழுப்பி, வள்ளம் பிணைத்த - மாக்கால் கட்டிய, செம் கடிகை மல்க - செவ்விய கரடிகையென்னும்

வாச்சியத்திஞெலி யதிகரிப்ப, எரியகல் ஏந்தி - மழுவேந்தி, வெம் புயங்கம் மிசை ஆக்கி - வெவ்விய பாம்பணியை மேலேதரித்து.

(வி-ரை.) கலித்தல் - மிகுதல். துகள் - தூளி; அது இங்கு நுண்மை குறித்துநின்றது. மல்கல் - அதிகரித்தல். எரி அகல் - எரியாநின்ற அகல் (மழு). புயங்கம்-புஜங்கம் என்னும் வடசொற்றிரிபு. நஞ்சுடைமையால் 'வெம்புயங்கம்' என்றார்.

'எரிதளிர்த்தன்ன' என்பதுமுதல் 'ஒளிர' என்பதுவரை. (33—37 வரிகள்.)

(ப-ரை.) எரி தளிர்த்தன்ன - நெருப்புத் தளிர்த்தாலொத்த, வேணியில் - சடையில், குழவி பசும்பிறை - இளம்பிறையின், அமுதொடு - அமிர்தத்துடனே, நிரம்பியது என்ன - நிரம்பியிருந்தாற் போல, மது குளிர் மத்தமும் - மதுவாற் குளிர்ந்த மத்தம்பூவையும், மிலைத்து - தரித்து, ஒரு மறுபிறை - வேறொரு பிறையை, மார்பமும் - மார்பினிடத்தும், இருத்தியது என்ன - வைத்தாற்போல, கூன் புறத்து - வளைந்த முதுகையுடைய, ஏனம் கோடு - வராகக் கொம்பும், வெள் பொடி புறத்து - வெள்ளிய திருநூற்றுப் பொடியானது திருமேனியில், ஒளிர - ஒளிசெய்ய.

(வி-ரை.) எரி-ஆகுபெயர். தளிர்த்தாலன்ன லென்பது தளிர்த்தன்னவென விகாரமாயிற்று. இறைவன் சடை சிவந்திருத்தல்பற்றி 'எரிதளிர்த்தன்னவேணி' என்றார். "தென்னெக்குஞ் சோலைக்கமலைப்பிரான் செஞ்சடாடவிதான், என்னெக்கு மென்னி லெரியொக்கும்" என்றும், "அந்தியேபோலு மவிர்சடையான்" என்றும் பிறருங் கூறுதல் காண்க. மிலைத்தல் - தரித்தல். புறம் - முதுகு. ஏனம் - பன்றி.

'போலன்மிளிர்' என்பதுமுதல் 'வினவாதவரினும்' என்பதுவரை. (38—41 வரிகள்.)

(ப-ரை.) பொலன் மிளிர் - பொன்மயமாக விளங்காநின்ற, மன்றப்பொதுவகம் - மன்றமாகிய சபையினிடத்து, நாடி - திருவுளங்கொண்டு, தனி கொடி காண - ஒப்பற்ற பார்வதியார் தரிசிக்க, எவ்விடத்து - எந்தவிடத்திலுமுள்ள, உயிர் தழைப்ப - உயிர்கள் பெருக, ஆடிய பெருமான் - ஆடியகடவுள், அமர்ந்து - வீற்றிருந்து, நிறை கூடல் - எங்கு நிறைந்திருக்கின்ற "மதுரைப்பதியை, கன

வினும் - சொப்பனத்திலும், வினவாதவரினும்-கேட்டறியாதவரைப் பார்க்கிலும்.

(வி-ரை.) பொலன் - பொன். மிளிர்தல் - விளங்கல். கொடி - ஆகுபெயர்.

'நீங்கி' என்பதுமுதல் 'அவர்மனங்கரியே' என்பதுவரை.
(41—43 வரிகள்.)

(ப-ரை.) நீங்கி - (அன்பு சிறிதுமின்றி) நீங்கி, சூளும் வாய்மையும் - சத்தியத்தையும் இனிய வாய்மொழியையும், தோற்றி - சொல்லி வெளிக்குக்காட்டி, நீளவும் - பெரும்பாலும், பொய்த்தற்கு- உள்ளே வஞ்சித்ததற்கு, அவர் மனம் - அவர் மனமொன்றே, கரி - சாட்சியாகுமல்லவோ.

(வி-ரை.) நீட்சி இங்குப் பெரும்பான்மை குறித்தது.

பொழில் கிடைக்குமளவும் பன்னாள் பன்னெறி யழுங்கினர், இன்று எவ்விடத் துயிர்தழைப்ப ஆடியபெருமான் கூடல் கனவினும் வினவாதவரினும் நீங்கிச் சூளும் வாய்மையுந் தோற்றி நீளவும் பொய்த்தற்கு அவர்மனங் கரியென வினைமுடிவுசெய்க. (அசு)

திருக்கோவையார் ௩௭௬-ம் செய்யுள்.
தோழியியற்பழித்தல்.

தோழியியற்பழிந்தலென்பது—பாணன் வரவுரைத்த தோழி, இவள் வருந்த அயலாரிடத்து நல்குதலால் எம்முடைய வள்ளல் இன்று தக்கிருந்திலனெனத் தலைமகனை யியற்பழித்துக் கூறா நிற்றல். அதற்குச் செய்யுள்:—

திக்கினி லங்குதிண் டோளிறை தில்லைச்சிற் றம்பலத்துக்
கொக்கி னிறகத ணிந்துநின் றாடிதென் கூடலன்ன
வக்கின்ன கையிவ ளையவ யல்வயி னல்குதலாற்
றக்கின் றிருந்தில னின்றசெவ் வேலெந் தனிவள்ளலே.

தலைமகனைத் தகவிலனெனச்
சிலைநுதற்பாங்கி தீங்குசெப்பியது.

(ப-ரை.) திக்கின் இலங்கு - திக்குகளிற்சென்று விளங்குகிற, திண் தோள் - திண்ணியதோள்களையுடைய, இறை - இறைவன், தில்லைச்சிற்றம்பலத்து - தில்லைச் சிற்றம்பலத்தில், கொக்கின்

இறகு - கொக்கிறகை, அணிந்து நின்று ஆடி - தரித்து நின்று ஆடுவோன், (அவனது) தென்கூடல் அன்ன-தென்மதுரையை நிகர்த்த, அக்கு - அக்குமணிபோலும், இன் நகை - இனிய நகையையுடைய, இவள் நைய - இவள்வருந்த, அயல் வயின்-அயலாரிடத்து, நல்குதலால் - அருள்செய்தலால், நின்ற - யாவராலு மறியப்பட்டுநின்ற, செவ்வேல் - செவ்வேலேந்திய, எம் தனி வள்ளல் - எமது ஒப்பற்ற வள்ளலானவன், இன்று தக்கு இருந்திலன் - இன்று தகவுடையனல்லன், எ-று.

(வி-ரை.) அயல் வயின் என்பதற்குப் பொருணசை யுள்ளத்தராகலிற் காமத்திற் கயலென்றுரைப்பினு மமையும்.

நேரிசையாசிரியப்பா.

பாசடைக் கருங்கழி படர்மண லுலகமு
மெழுமலை பொடித்தவர்க் கிசைதல் வேண்டி
வரையுல கனைத்தும் வருவது போலத்
திரைநிரை திரைத்துக் கரைகரைக் கொல்லும்
வையைநீர் விழவு புகுந்தன மெனவொரு
பொய்யின ளன்றி மெய்யினை நீயும்
பொலம்பூண் பெயர்ந்துறை பூணே யருடரு
குளிர்ச்சி நீங்கிக் கொடுங்கோல் வேந்தெனச்
சேக்கொள் கண்ணே செம்மொழி பெயர்தந்
தொன்றுட னில்லா மொழியை மறுத்த
முதிரா நாட்செய் முண்டக மலர்ந்து
கவிழ்ந்த முகத்தையெக் கண்மனந் தோன்ற
வரும்பிய நகையை யன்றே நின்கே
ளென்கண் கண்ட வில்விடை யென்னுள
மன்னிநின் றடங்காக் குடுமியம் பெருந்தழல்
பசுங்கடல் வளைந்து பருகக் கொதித்த
தோற்றமுங் கடந்ததென் றுலாற் றல்செய்
விண்ணகம் புடைத்து நெடுவரை கரக்குங்
கொடுஞ்சூர் கொன்ற கூரிய நெடுவேற்
குன்றக் குறவர் கொம்பினுக் கிளியன்

குருகொலி யோவாப் பனிமலை வாவி
வயிறுவாய்த் தழகு குழவியங் கிழவோன்
வாழ்பரங் குன்றெனு மணியணி பூண்ட
நான்மறை புகழுங் கூடலம் பெருமான்
வான்முத லீன்ற மலைமக டன்னொடு
முழுதுணர் ஞான மெல்லா முடைமை
முழுதனுக் கிரகங் கெழுபர மநாதி
பாசமி லாமை மாசறு நிட்கள
மவிகா ரக்குறி யாகிய தன்குண
மெட்டுந் தரித்து விட்டறு குற்ற
மருச்சனை வணக்கம் பரவுயிர்க் கன்பகம்
பேரருட் டிருநூல் பெருந்துற வெங்கு
நிறைபொரு ளழுந்த லருளினக் கூட்ட
மிருட்பவ நடுங்க லெனுங்குண மெட்டுந்
தமக்கும் படைக்க விதிப்பேற் றடியவர்
நிலையருட் கற்பென நெடுங்கற் புடையோன்
முன்னுறின் வண்மன மாங்கே
நன்னரிற் கொண்டு குளிரும் பெறுமே.

பாசடைக்கருங்கழி - குளிரும்பெறுமே. பகுதி - பரத்தையிற் பிரிவு. துறை - தோழியயற்பழித்தல்.

'பாசடை' என்பதுமுதல் 'இசைதல்வேண்டி' என்பதுவரை,
(1—2 வரிகள்.)

(ப-ரை.) பாசடை - பாசிலையால் மூடுதலுள்ள, கருங்கழி - பெருங்கடலானது, படர் - பரந்துள்ள, மணல் உலகமும் - மணல் மிகுந்த நெய்தனிலமும், எழு மலை பொடித்தவற்கு - ஏழுமலையையுந் தூளாக்கிய வேலவனுக்கு, இசைதல் வேண்டி - பொருந்துதலை விரும்பி.

(வி-ரை.) பாசிலை - பச்சிலை; பசுமை-பகுதி.

'வரையுலகனைத்தும்' என்பதுமுதல் 'மெய்யிழைநீயும்' என்பதுவரை.
(3—6 வரிகள்.)

(ப-ரை.) வரை உலகு அனைத்தும் - குறிஞ்சியிலுள்ளவெல்லாமலைகளும், வருவது போல - வருகின்ற தன்மைபோல, திரை

நிரை திரைத்து - அலைகளை யணியாகத்திரைத்து, கரை கரைக் கொல்லும் - கரையைக் கரைத்தழிக்கின்ற, வையை நீர் விழவு - வையையைப் பெருக்கத்தின்போது செய்யும் விழாவிற்கு, புகுந்தனம் என - போய் வந்தோமென்னும்படி, ஒரு பொய்யினள் அன்றி - பொய்யுள்ளவவ் வொருத்திபோலல்லாமல், மெய்யினை நீயும் - நீயு மெய்ம்மையுள்ளாய்.

(வி-ரை.) அணி - வரிசை. கரைக்கொல்லும் என்றது "வரிப் புனைபந்து" போன்றது.

'பொலம்பூண்' என்பதுமுதல் 'மொழியை' என்பதுவரை.

(7—10 வரிகள்.)

(ப-ரை.) பொலம்பூண் - பொன்னணிகள், பெயர்ந்துறை - கலந்து கிடக்கின்ற, பூணை - அலங்காரமுடையவனாயினை, அருள் தரும்-இனிமையைத்தருகின்ற, குளிர்ச்சி நீங்கி - தண்ணளியொழிந்து, கொடுங்கோல் வேந்து என - கொடுங்கோலரசன்போல, சேக் கொள் கண்ணை - சிவப்பைக்கொண்ட கண்ணையுடையவனாயினை, செம்மொழி பெயர்தந்து - இனியசொல் நீங்கி, ஒன்றுடன் நில்லா - ஒருதன்மையதா நில்லாத, மொழியை - சொல்லையுடையவனாயினை.

(வி-ரை.) பொலம் - பொன். தண்ணளி - கிருபை. சே - செம்மை.

'மறுத்த' என்பதுமுதல் 'அரும்பியநகையை' என்பதுவரை.

(10—13 வரிகள்.)

(ப-ரை.) மறுத்த - மலர்ச்சிக் கிடமில்லாத, முதிராநாள் - பருவமில்லாதநாளில், செய்-உண்டான, முண்டகம் - தாமரைப்பூப் போல, மலர்ந்து கவிழ்ந்த - மலர்ந்து கீழேநோக்கிய, முகத்தை - முகத்தையுடையாய், எக்கண் - எந்தவிடத்தோ, மனம் தோன்ற - மனம்போய்ப் பதியுமாறு, அரும்பிய நகையை - உண்டான நகையை யுடையவனாயினை.

(வி-ரை.) நகை - சிரிப்பு.

'அன்றே' என்பதுமுதல் 'கடந்ததென்றல்' என்பதுவரை.

(13—17 வரிகள்.)

(ப-ரை.) அன்றே - அல்லவா, இவ்விடை - இவ்விடத்தில், என் கண் - எனதுகண்ணால், நின் கேழ் கண்ட - உனது தன்மை

யைக் கண்ட, என் உளம் - எனது நெஞ்சமானது, மன்னிநின்று அடங்கா - நிலைபெற்று நின்றடங்காமல், குடுமி அம் பெருந்தழல் - கொழுந்துவிட் டெரிகின்ற வடவாக்கினியானது, பசுங்கடல் வளைந்து - கருங்கடலைச் சூழ்ந்து, பருக - அதனைச்சுவற்றும்படி, கொதித்த தோற்றமும் - கொதித்தெழுந்த கொடுமையினையும், கடந்தது என்றால்-கடந்து கொதிப்பதென்றால்.

(வி-ரை.) வடவாக்கினியைப் 'பெருந்தழல்' என்றார், அசனிற் பெருந்தீயின்மையால். பசுமை- இங்குக் கருமை குறித்து நின்றது. சுவற்றல் - வற்றச்செய்தல்.

'ஆற்றல்செய்' என்பதுமுதல் 'குழவியங்கிழவோன்'
என்பதுவரை.

(17—22 வரிகள்.)

(ப-ரை.) ஆற்றல் செய் - போர்புரிந்து, விண்ணகம் புடைத்து- தேவருலகங்களை யழித்து, நெடு வரை - பெரிய மலையினுள்ளே, கரக்கும் - ஒளித்த, கொடுஞ்சூர் கொன்ற - வெவ்வியசூரனைத் தடிந்த, கூரிய நெடு வேல் - (கூரிய) நெடியவேலை யேந்தியவனும், குன்றம் குறவர் - மலைவேடுவர்தந்த, கொம்பினுக்கு இனியன் - மகளுக்கினியவனும், குருகு ஒலி ஓவா - பறவைகளொலித்தல் நீங்காத, பனி மலை வாவி - இமயமலைச்சாரற் சுனையானது, அழகு வயிறு வாய்த்த - தன்னிடத்தே அழகா யீன்ற, குழவி அம் கிழவோன் - குழந்தையுமாகிய நாயகன்.

(வி-ரை.) கரத்தல் - ஒளித்தல். தடிதல்-கொல்லல். கொம்பு- ஆகுபெயர்.

'வாழ்பரங்குன்று' என்பதுமுதல் 'கூடலம்பெருமான்'
என்பதுவரை.

(23—24 வரிகள்.)

(ப-ரை.) வாழ் பரங்குன்று என்னும் - வாழ்கின்ற பரங்கிரி யென்கிற, மணி அணி பூண்ட - மாணிக்கப்பூடணத்தைத் தன்னிற் கொண்ட, நான்மறை புகழும் - வேதங்கணான்கு மேத்துகின்ற, கூடலம் பெருமான் - மதுரைக்கிறைவன்.

(வி-ரை.) பரங்கிரி - திருப்பரங்குன்றம்.

'வான்முதல்' என்பதுமுதல் 'தன்குணமெட்டுந்தரித்து'
என்பதுவரை.

(25—30 வரிகள்.)

(ப-ரை.) வான் முதல்-விண்முதலிய அனைத்தையும், ஈன்ற-தந்தருளிய, மலைமகள் தன்னொடும் - பார்வதியாருடனே, முழுது உணர் ஞானம்-அனைத்து முணர்கின்ற பேரறிவும், எல்லாம் உடைமை - அனைத்துந் தன்வயத்தே யுடைமையும், முழுது அனுக்கிரகம்-பேரருளுடைமையும், செழு பரம் - முடிவிலாற்றலும், அநாதி - தோற்றமின்மையும், பாசம் இலாமை - பாசமின்மையும், மாசு அறு நிட்களம் - குற்றமற்ற நிட்களமும், அவிகாரக்குறி - விகாரமில்லாத சகளமும், ஆகிய - இவையாகிய, தன் குணம் எட்டும் தரித்து - தனக்குரிய எண்குணங்களையும் தானுள்ளவாறு தரித்து.

(வி-ரை.) மாசு - குற்றம்.

'விட்டறுகுற்றம்' என்பதுமுதல் 'விதிப்பேற்றடியவர்'
என்பதுவரை.

(30—35 வரிகள்.)

(ப-ரை.) அறு குற்றம் விட்டு - காமமுதலிய அறுவகைக் குற்றத்தினின்று நீக்கி, அருச்சனை - சிவார்ச்சனையும், வணக்கம்-வணக்கமும், பாவுயிர்க்கு அன்பு அகம்-பெரிய சீவகாருண்ணிய வுள்ளமும், பேரருள் திரு நூல் - பெரிய அருட்குக் காரணமாகிய திருமுறையுணர்ச்சியும், பெருந் துறவு - எவற்றினும் பெரிய துறவும், எங்கும் நிறை பொருள் அழுந்தல் - எங்குநிறைந்துள்ள சிவத்தோடழுந்துதலும், அருள் இனக்கூட்டம் - அருளையடைந்த சாதுசங்கப்புணர்ச்சியும், இருள் பவம் நடுங்கல்-சன்மாந்தகார நடுங்குதற்கேதுவாகிய ஆத்மஞானமும், எனும் குணம் எட்டும் - ஆகியவெண்வகைக் குணங்களையும், தமக்கும் படைக்க - அடியாராகிய தமக்கு மளித்தருள, விதிப்பேற்றடியவர் - அவ்வாறுபெற்ற முறைமைப்பாடுடைய அடியவர்களது.

(வி-ரை.) அறுவகைக் குற்றம்-காமக்ரோத லோபமோஹமதமத்ஸரங்கள். நூல்-ஆகுபெயர். துறவு - ...ல குழையத
புணர்ச்சி - கூடுதல். ...தனுகில் கஞ்புளைதத்

'நிலையருட்கற்பென' என்பதுமுதல் 'குளிரும்பெறுமே'
என்பதுவரை.
(36—38 வரிகள்.)

(ப-ரை.) நிலை - நிலைமையான, அருள் கற்பு என - அருட்கற்பைப்போல, நெடுங்கற்புடையோள் - நீங்காத கற்பையுடைய தலைமகளுக்கு, முன் உறின் - எதிரிலிவ்வண்ணஞ் சென்றனையாயின், அவள் மனம் - அவளுள்ளமானது, ஆங்கே - அதுபோழ்தே, நன்னரில் கொண்டு - நன்மையையுட்கொண்டு, குளிரும் பெறுமே - தணிவும் பெறக்கூடுங்கொல்லோ.

(வி-ரை.) நன்னர் - நன்மை. உறல் - செல்லல்.

நீயும் வையைநீர்விழவு புகுந்தனமென, மெய்யினை பெயர்ந்துறை பூணை, சேக்கொள் கண்ணை, ஒன்றுடனில்லா மொழியை, கவிழ்ந்தமுகத்தை, மனந்தோன்றுநகையையன்றோ, நின்கேழ்கண்ட என்னுள்ளம், கடல் பருக்கக் கொதித்த பெருந்தழற் றோற்றமுங் கடந்ததென்றால், கூடற்பெருமான் மலைமகளொடு தன்குணமெட்டுந் தரித்தபடி யருச்சனைமுதலிய வெண்வகைக் குணங்களையுந் தமக்கும் படைக்கப்பெற்ற, அடியவரருட் கற்பெனக் கற்புடையோண் முன்னுறின் அவள் மனம் குளிரும் பெறுமேயென வினைமுடிவு செய்க. (அஎ)

திருக்கோவையார் ௩௯௧-ம் செய்யுள்.

புனலாட்டுவித்தமை கூறிப்புலத்தல்.

புனலாட்டுவித்தமைகூறிப்புலத்தலென்பது — அணைந்தவழியூடாநின்ற தலைமகள், ஊடறீராநின்ற தலைமகனோடு, இவர்செய்த பிழையெல்லாம் பொறுக்கலாம், பலருமறிய வொருத்தியைப் புனலாட்டுவித்து அது செய்யாதார்போல என் மனையின்கணிவர் வந்து நிற்கின்றவிது எனக்குப் பொறுத்தலரிதெனத் தணிக்கத் தணியாது பரத்தையைப் புனலாட்டுவித்தமைகூறிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

சேந்தார் நறுங்கொன்றைச் சிற்றம் பலவர் தில்லைநகரோர்
பந்தார் விரலியைப் பாய்புன லாட்டிமன் பாவியெற்கு
...நிற்கு மாறென் வளமனையிற்
...ங்கா லயிற்படைக் கொற்றவரே.

ஆங்கதனுக் கழுக்கமெய்தி
வீங்குமென்முலை விட்டுரைத்தது.

(ப-ரை.) கொந்து ஆர்-கொத்துமாலை நிறைந்த, தடம் தோள் - பெரிய தோளினையும், விடம் கால்-நஞ்சைக் கக்குகிற, அயில் படை-கூர்மையாகிய படையினையுமுடைய, கொற்றவர் - தலைவர், பாவியெற்கு - தீவினையேனுக்கு, என் வளமனையில் நிற்குமாறு - என் வளமனையில் வந்து நிற்கின்றபடி, ஓர் பந்து ஆர் விரலியை - பந்துபயிலாநின்ற விரலுடையாளொருத்தியை, செந்தார் நறுங்கொன்றைசிற்றம்பலவர் தில்லைநகர்-செய்யதாராகிய நறிய கொன்றைப்பூவினையுடைய சிற்றம்பலவரது தில்லையாகிய நகர் (வரைப்பில்), பாய் புனல் ஆட்டி - பாய்கின்ற புனலாட்டுவித்து, வந்தார் பரிசும் அன்று ஆய் - (வெளிப்படத்தவறு செய்து) வந்தார் (சிலர் நிற்கும்) பரிசுமன்றாக (மனத்தவறு செய்யாதார் வந்து நிற்குமாறு வந்து நின்றாராயின், அது பொறுத்தலரிது), எ-று.

(வி-ரை.) தில்லைநகரோர் பந்தார் விரலியென வியைப்பினுமமையும். மன் - ஒழியிசைக்கண் வந்தது, அசைநிலையெனினு மமையும். ஒருத்தியைப் புனலாட்டி வந்தார் பரிசுமன்றாய்க் கொற்றவர் மனைக்கண்வந்து நிற்குமா றென்னென்று கூட்டி யுரைப்பினுமமையும். கொத்துமாலை - பலவா யொன்றாகியமாலை. ஆங்கதனுக்கு - அப்படிற்று நிலையால். விட்டுரைத்தது - வெளிப்படவுரைத்தது.

நேரிசையாசிரியப்பா.

மாயமு மின்பு மருட்சியுந் தெருட்சியு
நகைத்தொகை கூட்டிக் கவைத்தெழு சொல்லி
லமுதமுங் கடுவும் விழியில்வைத் தளிக்கு
மிருமனப் பொய்யுளத் தொருமக டன்னைக்
கரியோன் கடுப்பத் துகில்கவர்ந் தொளிர
விதியினும் பன்மைசெய் முகம்படைத் தளவாச்
சோதியிற் படைக்கண் செவவுய்த் தரும்புசெய்
முண்டக முலையிற் சாந்தழித் தமைத்தோ
ளெழுதிய கழைக்கரும் பெறிந்துநூல் வளர்த்த
கோதைவகை பரிந்து மணிக்கலன் கொண்டு
கழைத்தோ ணெகிழத் தழைய
திரையெதிர் தள்ளி மலர்

தொண்ணிற வேங்கை யின்றாதும் பொன்னுஞ்
சுண்ணமுங் கலந்து திமிர்ந்துட லூற்றி
வண்டொடு மகிழ்ந்தவிழ் தோட்டலர் சூட்டி
யிறால்புணர் புதுத்தே னீத்துடன் புணரும்
வையையின் மறித்து மன்னவ டன்னுடன்
கெழுமிய விழவுட் புகுமதி நீயே
கவைமாக் கட்செவி யணந்திரை துய்த்த
பாசுடற் பகுவாய்ப் பீழையந் தவளையும்
பேழ்வாய்த் தழல் விழித் தரக்கடித் தவிந்த
நிலம்படர் தோகைக் குலங்கொள்சே தாவு
மவ்வுழி மாத்திரை யரையெழு காலைத்
திருநுதற் கண்ணு மலைமகட் பக்கமு
மெரிமழு நவ்வியும் பெறுமருட் டிருவுரு
வெடுத்துட னந்தக் கடுக்கொலை யரவினைத்
தீவாய்ப் புலியினைத் திருத்தவர் நகைப்ப
வெடுத்தணி பூண வுரித்துடை யுடுப்ப
முனிவருந் தேவருங் கரமலர் முகிழ்ப்பத்
தருவன வன்றி மலரவ னவன்றொழி
றரண ணங்கவன் கூருடைக் காவல்
சேரத் துடைக்கும் பேரரு ளிளின்
முத்தொழி லிற்றன் முதற்றொழி லாக்கி
யொருதாட் டாரைகொண் முக்கவைச் சுடர்வேற்
றலையிருந் தருங்கதி முழுதுநன் றளிக்குந்
திருநகர்க் காசிப் பதியகத் தென்றும்
வெளியுறத் தோன்றிய விருண்மணி மிடற்றோ
னேமியங் குன்றகழ் நெடுவேற் காளையன்
றன்பரங் குன்றந் தமர்பெறு கூடற்
கிறையோன் றிருவடி நிறையுடன் வணங்கும்
பெரும்புன லூர வெம்மில்ல
மரும்புனல் வையைப் புதுநீ ரன்றே.

மாயமுமின்பும் - புதுநீரன்றே. பதி - பாத்தையிற்பிரிவு.
துறை - புனலாட்டுவித்தமைகூறிப் புலத்தல்.

'மாயமும்' என்பதுமுதல் 'ஒருமகடன்னை' என்பதுவரை.
(1—4 வரிகள்.)

(ப-ரை.) நகைத்தொகை கூட்டி - சிரிப்பு மிகுதியுஞ்சேர்த்து, கவைத்தெழு சொல்லில்-இருவேறாகிய சொல்லினிடத்து,மாயமும்-வஞ்சமும், இன்பும் - இன்பமும், மருட்சியும்-மயக்கமும், தெருட்சியும் - தெளிவும், விழியில்-கண்ணினிடத்தே, அமுதமும் கடுவும் - அமிர்தமும் நஞ்சமும், வைத்து அளிக்கும் - இருத்தித் தமது தொழிலை யோம்புகின்ற, இரு மனம் - இருவகைப்பட்ட மனத்தையும், பொய் உளத்து - பொய்மைபட்ட வுள்ளத்தையுமுடைய, ஒரு மகடன்னை - விசாதிகமான விலைமகளை.

(வி-ரை.) ஓம்புதல் - காப்பாற்றல். பரத்தையை 'இருமனப் பொய்யுளத்தொருமகள்' என்றார், அவள் அன்னளாகலின்; "இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும், திருநீக்கப் பட்டார்தொடர்பு" என்றார் பெருநாவலரும். விசாதிகம் - வேறுசாதித்தன்மை.

'கரியோன்கடுப்ப' என்பதுமுதல் 'சேலவுய்த்து'
என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) கரியோன் கடுப்ப-கண்ணன்போல, துகில் கவர்ந்து - ஆடையைக்கவர்ந்தும், ஒளிர-ஒளிரும்படி, விதியினும்-நான்முகனைப் பார்க்கிலும், பன்மை செய் - பற்பலவிதத்தைச் செய்கின்ற, முகம் படைத்து - அவன் முகத்தைப்பெற்று, அளவா சோதியின்-அளவுபடாத சோதியினாலே, படை கண்-கூரிய கண்கள், சேலவுய்த்து - பதியுமாறு நோக்கியும்.

(வி-ரை.) கரியோன் - கருநிறமுள்ளவன். இது க்ருஷ்ணன் என்னும் வடசொன் மொழிபெயர்ப்பு. ஒளிர்தல் - ஒளிசெய்தல். படைக்கண் - படுத்தற்குரிய கண் எனினுமாம்.

'அரும்புசெய்' என்பதுமுதல் 'பரிந்தும்' என்பதுவரை.
(7—10 வரிகள்.)

(ப-ரை.) முண்டகவரும்பு செய் - தாமரைமொக்குள்போலுமழகு செய்கின்ற, முலையின் சாந்து அழித்து - தனத்திற்பூசிய சந்தனத்தை யழித்தும், அமை தோள் - மூங்கில்போன்ற தோளில், எழுதிய-தொய்யில்வரைந்த, கழை கரும்பு எறிந்தும்-மாரன் கரும்பு

வில் வடிவத்தைக் கரைத்தும், நூல் வளர்த்த - நாரால் நீளக்கட்டிய, கோதை வகை பரிந்தும் - மாலைவகைகளை யறுத்தும்.

(வி-ரை.) முண்டகம் - தாமரை. அமை-மூங்கில். தொய்யில்-சந்தனக்கோலம்.

'மணிக்கலன்கோண்டு' என்பதுமுதல் 'மறித்தும்'
என்பதுவரை.

(10—17 வரிகள்.)

(ப-ரை.) மணி கலன் கொண்டு - மணியணிகளைக் கழற்றி, கழை தோள் நெகிழ - மூங்கில் போன்ற தோணெகிழவும், தழை உடல் குழைய - பூரித்தவுடல் குழையவும், திரை எதிர் தள்ளி - அலைக்கெதிரே தள்ளியும், மலர் துகில் - பூந்துகிலாலே, கண் புதைத்து - கண்ணை மூடியும், ஒள் நிற வேங்கையின் - நன்னிறமுள்ள வேங்கைமலர்களின், தாதும் பொன்னும் - மகரந்தத்தையும் பொற்பொடியையும், சுண்ணமும் கலந்து-சுண்ணத்தோடு கலந்து, திமிர்ந்து உடல் ஊற்றி - அவளுடலிற் பூசியுமிறைத்தும், வண்டொடு மகிழ்ந்தவிழ் - வண்டுகள் மொய்க்கச் செழித்து மலர்ந்த, தோடு அலர் சூட்டி - மலரிதழாற்றொடுத்த மாலைதரித்தும், இருல் புணர் புது தேன் - இருட்டிற் கட்டின புதியதேனை, ஈத்துடன் புணரும்-உண்பித்து அவளுடன் கூடி, வையையில் - வையைநதியில், மறித்தும் - மீளவும்.

(வி-ரை) மணியணிகள் - ரத்நாபரணங்கள். கழை - மூங்கில். ஒண்மை-நன்மை. திமிர்தல் - பூசுதல். தூற்றல்-இறைத்தல். தோடு-பூவிதழ். இருல் - இருட்டு (தேன்கூடு).

'அன்னவட்ன்னுடன்' என்பதுமுதல் 'குலங்கோள்சேதாவு[illegible]'
என்பதுவரை.

(17—22 வரிகள்.)

(ப-ரை.) செழுமிய விழவுள்-சிறப்பித்தவிழாவில், அன்னவள் தன்னுடன் - அவ்விலைமகளுடனே, புகுமதி நீயே - சென்ற[illegible]கிய நீயே, கவை நா கட்செவி - பிளவாகிய நாவையுடைய பா[illegible]னது, அணந்து இரை துய்த்த - வாய்திறந்திரையாகவுண்ட, ப[illegible]டல் பகு வாய் - பச்சுடலையும் பெரிய வாயையுமுடையதாய, பி[illegible]அம் தவளையும் - மரணவாதனைக்குட்பட்ட தவளையும், பேழ் வா[illegible]

பிளப்பாகிய வாயையும், தழல் விழி - நெருப்பெரிகின்ற கண்களையு முடைய, தாக்கு அடித்து அவிந்த - புலியடித்தலாலிறந்த, நிலம் படர் தோகை-மண்ணிற்படரும் வாலையுடைய, குலம் கொள் சேதாவும் - உத்தமப் பிறவியுள்ள செவ்வியபசுவும்.

(வி-ரை.) அன்னவடன் என்பதில் தன் சாரியை. மதி - மூன்றிலையசை. கண்ணே செவியாகவுடையதாதலால் பாம்பு கட்செவியெனப்பட்டது. அணத்தல் - வாய்திறத்தல். துய்த்தல் - உண்டல். பிழை - மரணவேதனை. தாக்கு - புலி; இது தாக்ஷு என்னும் வடசொற்றிரிபு. குலம் - மேன்மை.

'அவ்வுழி' என்பதுமுதல் 'உருவெடுத்து' என்பதுவரை.

(23—26 வரிகள்.)

(ப-ரை.) அவ்வுழி - அவைபட்டவிடத்தே, அரைமாத்திரை - அரைநொடியில், எழு காலை - உயிர்பெற்றெழுந்த சமயத்தில், திருநுதல் கண்ணும் - விளக்கமான நெற்றிக்கண்ணும், மலைமகள் பக்கமும் - பார்வதியார் பாகமும், எரி மழு நவ்வியும் - எரிகின்ற மழுவு மானும், பெறும் - கொண்ட, அருள் திரு உருவெடுத்து - அருளே திருமேனியாகத் தோற்றி.

(வி-ரை.) அவ்வுழி - அவ்விடம். அமயம் - சமயம்.

'உடன்' என்பதுமுதல் 'தருவனவன்றி' என்பதுவரை.

(26—30 வரிகள்.)

(ப-ரை.) உடன் - விரைந்து, அந்த-மேற்கூறிய, கடுக்கொலைவிடத்தாற் கொலையைத் தன்னிடத்துள்ள, அரவினை - பாம்பையும், தீ வாய் புலியினை - தீப்புகையெழும் வாயையுடைய புலியையும், திருந்தவர் நகைப்ப-தருவனத்திருடிகள் நகைக்குமாறு (முறையே), எடுத்து அணி பூண - தூக்கி யணியாக வணிந்துகொள்ளவும், உரித்து உடை உடுப்ப - தோலையுரித்துடையாக வுடுப்பவும், முனிவரும் தேவரும் - அதனைக்கண்ட முனிவருந்தேவரும், கரமலர் முகிழ்ப்ப - மலர்போன்ற கைகளைக் கூப்பவும், தருவன அன்றி - செய்வதுமல்லாமல்.

(வி-ரை.) அணியாக - ஆபரணமாக. உடை - ஆடை. முகிழ்த்தல் - கூப்புதல்.

'மலரவன்' என்பதுமுதல் 'பேருளின்' என்பதுவரை.

(30—32 வரிகள்.)

(ப-ரை.) மலரவனவன் தொழில்-பிரமனது படைப்பும், ஆங்கு-அவ்வாறே, நாரணனவன் - திருமாலின், கூருடை காவல்-பெருமையையுடைய காப்பும், சேர துடைக்கும் - ஒருங்கே யழிக்கின்ற, பேருள் நாளின் - பேருளைச்செய்கின்ற ஊழியினும்.

(வி-ரை.) கூர் - பெருமை. துடைத்தல் - சங்கரித்தல்.

'முத்தொழிலில்' என்பதுமுதல் 'மிடற்றோன்' என்பதுவரை.

(33—37 வரிகள்.)

(ப-ரை.) முத்தொழிலில் - மூவகைத் தொழிலுள்ளும், தன் முதல் தொழில் ஆக்கி - தன்றொழிலை முதன்மைத்தாக்கி, ஒரு தாள் - ஒரு தாளின்மேல், தாரை கொள் - கூர்மைகொண்ட, முச்சுடர் கவை வேல் - மூன்று சுடர்போலுங் கவருள்ள சூலத்தின், தலை இருந்து - தலைக்கட்டங்கி, அருங்கதி முழுதும் - அரியகதியனைத்தும், நன்று அளிக்கும் - குறைவின்றி யளிக்காநின்ற, திருநகர் - நகரங்களுட் சீர்மைத்தாகிய, காசி பதியகத்து - காசியென்னுந் திருப்பதியில், என்றும் - எந்நாளினும், வெளியுற தோன்றிய - வெளிப்படத் தோன்றுகின்ற, இருள் மணி மிடற்றோன் - நீலமணி போலுங் கண்டத்தினன்.

(வி-ரை.) தாள் - கால். கவர் - பிளவு. இருள் மணி-நீலமணி. மிடறு - கண்டம்.

'நேமியங்குன்று' என்பதுமுதல் 'பெரும்புனலூர' என்பதுவரை.

(38—41 வரிகள்.)

(ப-ரை.) நேமி அம் குன்று - பெரிய கிரௌஞ்சமலையை, அகழ் - பிளந்த, நெடு வேல் காளையன் - நெட்டிலைவேற்குமரன், தன் பரங்குன்றம் - தனது திருப்பரங்குன்றத்தை, தமர் பெறு - தன்னினமாகப்பெற்றுள்ள, கூடற்கிறையோன் - மதுரைப்பெருமானது, திருவடி - ஸ்ரீபாதங்களை, நிறையுடன் வுணங்கும்-பத்திமையுடன் வணங்குகின்ற, பெரும்புனல் ஊர - பருநீர் ஊரனே.

(வி-ரை.) அகழ்தல் - பிளத்தல். நிறை-ஈண்டுப் பத்திமையை யுணர்த்திற்று.

'எம்மில்லம்' என்பதுமுதல் 'நீரன்றே' என்பதுவரை.

(41—42 வரிகள்.)

(ப-ரை.) எம் இல்லம் - எமது வீடானது, அரும்புனல் - புண்ணிய நதியாகிய, அ வையை-அந்த வையையைப்போலும், புதுநீர் அன்றே- புதுமையாகிய நீர்மைத்தன்று.

(வி-ரை.) கிடைத்தற்கரிதாதலால் புண்ணிய நதியை 'அரும் புனல்' என்றார்.

கூடற்கிறையோன் திருவடி நிறையுடன் வணங்கும் பெரும் புனலூர ! இருமனப் பொய்யுளத்து ஒரு மகடன்னைத் துகில் கவர்ந்து படைக்கண் செலவுய்த்தும் முலையிற் சாந்தழித்துத் தோளெழுதிய கழைக்கரும் பெறிந்தும் கோதைவகை பரிநறுந் திரைபெதிர் தள்ளி மலர்த்துகில் கண்புதைத்து உடலூற்றி அலர் சூட்டிப் புதுத் தேனீத்துடன் புணரும் வையையின் மறித்துங் கெழுமிய விழவுள் அன்னவடன்னுடன் புகுமதி நீயே வர, எம்மில்லம் அரும்புனல் அவ் வையைப் புதுநீரன்றெனை வினைமுடிவு செய்க. (அஅ)

திருக்கோவையார் ௩௧௫-ம் செய்யுள்.

வருத்தந்தணித்தல்.

வருத்தந்தணித்தலென்பது—தலைமகனது பிரிவுகேட்டு உள்ளுடைந்து தனிமையுற்று வருந்தாநின்ற தலைமகளை, நின்னைவிட்டு அவர் பிரியார், நீ நெருப்பையுற்ற வெண்ணெயும் நீரையுற்றவுப்பும் போல இவ்வாறுருகித் தனிமையுற்று வருந்தாதொழி யெனத் தோழி அவளது வருத்தந் தணியாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

நெருப்புறு வெண்ணெயு நீருறு முப்பு மெனவிங்ஙனே
பொருப்புறு தோகை புலம்புறல் பொய்யன்பர் போக்குமிக்க
விருப்புறு வோரைவிண் ணோரின்மி குத்துநண் ணார்கழியத்
திருப்புறு சூலத்தி னோன்றில்லை போலுந் திருநுதலே.

மணிப்பூண் மன்னவன் றணப்ப தில்லை
அஞ்சல் பொய்யென வஞ்சியைத் தணித்தது.

(ப-ரை.) மிக்க விருப்பு உறுவோரை - (தன்கண்) மிக்க விருப்புறுமவரை, விண்ணோரின் மிகுத்து - விண்ணோரினு மிகச்செய்து, நண்ணார்கழிய - பகைவர்மாய, திருப்புறு சூலத்தினோன் தில்லைபோ

லும் திருநுதல் - விதிர்க்கப்படுஞ் சூலவேலை யுடையவனது தில்லையையொக்குந் திருநுதால், பொருப்பு உறு தோகை - பொருப்பைச் சேர்ந்த மயில்போல்வாய், நெருப்பு உறும் வெண்ணெயும் நீர் உறும் உப்பும் என - தீயையுற்ற வெண்ணெயும் நீரையுற்ற வுப்பும்போல, இங்ஙன் புலம்புறல் - இவ்வாறுருகித் தனிமையுறு தோழி, அன்பர் போக்கு பொய் - அன்பர் போக்குப்பொய், எ-று.

(வி-ரை.) மிகுத்தென்னும் வினையெச்சம் திருப்புறு சூலமென்புழித்திருப் பென்பதனோடு முடிந்தது.

நேரிசையாசிரியப்பா.

வேலியங் குறுஞ்சூல் விளைகாய்ப் பஞ்சினம்
பெருவெள் ளிடையிற் சிறுகாற் பட்டென
நிறைநாண் வேலி நீங்கித் தமியே
யோருழி நில்லா தலமரல் கொள்ளுமென்
னருந்துணை நெஞ்சநிற் குறும்பயன் கேண்மதி
மண்ணுளர் வணங்குந் தன்னுடைத் தகைமையு
மிருளறு புலனுமெய்ப் பொருளுறுங் கல்வியு
மமரர்பெற் றுண்ணு மமுதுருக் கொண்டு
குறுஞ்சொற் குதட்டிய மழலைமென் கிளவியில்
விளரியுள் விளைக்குந் தளர்நடைச் சிறுவனு
நின்னலம் புகழ்ந்துணு நீதியுந் தோற்றமுந்
துவரத் தீர்ந்தநங் கவர்மனத் தூரன்
பொம்மலங் கதிர்முலை புணர்வுறுங் கொல்லெனச்
சென்றுசென் றிரங்கலை யன்றியுந் தவிர்மோ
நெட்டுகிர்க் கருங்காற் றேன்முலைப் பெரும்பே
யமர்பெற் றென்னல ரறிவுறப் படரப்
பேழ்வா யிடாகினி காவெறுழு தேத்திக்
கையடை கொடுத்தவெண் ணினவாய்க் குழவி
யீமம் பெருவிளக் கெடுப்ப மற்றதன்
சுடுபொடிக் காப்புட றுளங்கச் சுரிகுர
லாந்தையுங் கூகையு மணிதா லுறுத்த
வோரிபாட் டெடுப்ப வுவணமுங் கொடியுஞ்

செஞ்செவிச் சேவற் கவர்வாய்க் கழுகு
மிட்டசெம் பந்த ரிடையிடைக் காலெனப்
பட்டுலர் கள்ளியம் பாற்றுயில் கொள்ளுஞ்
சுள்ளியங் கானிடைச் சுரர்தொழு தேத்த
மரகதத் துழாயு மந்நிறக் கிளியுந்
தோகையுஞ் சூலமுந் தோளின்முன் கையின்
மருங்கிற் கரத்தினில் வாடா திருத்திப்
போர்வலி யவுணர் புகப்பொரு துடற்றிய
முக்கட் பிறையெயிற் றெண்டோட் செல்வி
கண்டுளங் களிப்பக் கனைகழற் றுமரை
வானக வாவி யூடுற மலர
வொருதா ளெழுபுவி யொருவத் திண்டோள்
பத்துத் திசையு ளெட்டவை யுடைப்ப
வொருநடங் குலவிய திருவடி யுரவோன்
கூடலம் பதியகம் பரவி
நீடநின் றெண்ணு ருளமென நீயே.

வேலியங்குறுஞ்சூல் - உளமெனநீயே. பகுதி - பகைதணி வினைப்பிரிவு. துறை - வருத்தந்தணித்தல்.

'வேலியங்குறுஞ்சூல்' என்பதுமுதல் 'சிறுகாற்பட்டென' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) வேலி அம் குறுஞ்சூல் - முள்ளிலவின் சிறிய சூலானது, விளை காய் பஞ்சினம் - முதிர்ந்தகாயிலுள்ள பஞ்சினங்கள், பெருவெள்ளிடையில் - பெரிய வெளியிடத்து, சிறு கால் பட்டென - தென்றற்காற்றி லகப்பட்டாற்போல.

(வி-ரை.) வேலி - முள்ளிலவமரம். அம்-சாரியை. சூல் - கருப்பம். விளைதல் - முதிர்தல். மெல்லிய காற்றாதலால் தென்றற்காற்றினைச் 'சிறுகாற்று' என்றார். கால்-காற்று; "மனிதர் வெங்கோடை தீர்க்கும் வசந்த மென்காலும்" என்றார் பிறரும்.

'நிறைநாண்' என்பதுமுதல் 'நெஞ்சம்' என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) நிறை நாண் - நிறையு நாணுமாகிய, வேலி நீங்கி - காப்பானது நீங்காநிற்ப, தமியே - தனியாய், ஒருழி நில்லாது - ஒரு

நிலையில் நில்லாமல், அலமரல் கொள்ளும் - உழலுகின்ற, என் அருந் துணை - எனதரிய துணையாகிய, நெஞ்சம் - நெஞ்சமானது.

(வி-ரை.) நிறை நாண் என்பவற்றீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. நீங்கி-எச்சத்திரிபு.

'நிற்குறும்பயன்' என்பதுமுதல் 'சிறுவனும்' என்பதுவரை.

(5—10 வரிகள்.)

(ப-ரை.) நிற்கு உறும் பயன் - உன்பால் பொருந்தத்தக்க பயனை, நீ கேண்மதி-நீ கேட்பாயாக, மண் உளர்-மண்ணுலகத்தார், வணங்கும் - பணியாநின்ற, தன்னுடை தகைமையும் - தனது பெருமையும், இருள் அறு புலனும் - மாசற்ற அறிவுடைமையும், மெய்ப்பொருள் - உண்மைப்பொருளை, உறும் - அடையத்தக்க, கல்வியும்-கல்விவளமும், அமரர் பெற்று உண்ணும் - தேவர்பெற்றுண்ணுகின்ற, அமுது உரு கொண்டு - அமுதத்தின் சுவையையுடைத்தாய், குறுஞ்சொல் - இளஞ்சொல்லாகிய, குதட்டிய - குழறிய, மழலை மெல் கிளவியில் - மென்மையாகிய மழலைச்சொல்லால், உள் விளரி விளைக்கும் - உள்ளத்தில் வேட்கையை விளைக்கின்ற, தளர் நடை சிறுவனும் - தளர்நடையையுடைய மைந்தனும்.

(வி-ரை.) கேண்மதி என்பதில் மதி முன்னிலை யசையிடைச்சொல். வளம் - செல்வம். உரு - ஈண்டுச் சுவையை யுணர்த்திற்று. விளரி - வேட்கை.

'நின்னலம்' என்பதுமுதல் 'மனத்தூரன்' என்பதுவரை.

(11—12 வரிகள்.)

(ப-ரை.) புகழ்ந்து - புகழ்ந்துபேசி, நின் நலம் - நினதின்பத்தை, உணும்-அனுபவித்த, நீதியும் தோற்றமும் - மெய்மையும் மாண்பும் துவரத்தீர்ந்த - முற்றுந்துறந்த, நம் கவர் மனத்து ஊரன் - நமதிரண்டுபட்ட மனத்தையுடைய தலைவன்.

(வி-ரை.) துவர - எஞ்சாமைப் பொருடருவதோர் வினையெச்சம். "துய்க்கது வாப்பசித்து", "துவர முடித்த துகளறு முச்சி" என்றற்றொடக்கத் தான்றோர் செய்யுட்களானும் மிஃதினிது விளங்கும்.

'பொம்மலங்கதிர்முலை' என்பதுமுதல் 'தவிர்மோ' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) பொம்மல் அம் கதிர் முலை - பூரிப்பால் விளங்குகின்ற தனங்களை, புணர்வுறுங்கொல் என - தழுவுவனோவென்று,

நீயே - நீதானே, சென்று சென்று இரங்கலை - அடிக்கடி வருந்தா தொழிக, அன்றியும் - இரங்கல் சிறிதுமின்றி, தவிர்மோ - விடுவா யாக.

(வி-ரை.) கதிர்முலை-வினைத்தொகை நிலைத்தொடர். கொல் - அசைநிலை. உம் - இசைநிறை. தவிர்மோ என்பதில் மோ முன்னிலை யசை யிடைச்சொல்.

'நெட்டுகிர்' என்பதுமுதல் 'படர'
என்பதுவரை.
(15—16 வரிகள்.)

(ப-ரை.) நெடு உகிர் கருங்கால் - நெடியநகமுள்ள கரிய காலை யும், தோல் முலை - தோல்முலையையுமுடைய, பெரும்பேய்-பெரிய பேய்கள், அமர் பெற்று - போர்கிடைத்து, ஒன்னலர் அறிவுற - பகைஞரறியுமாறு, படர - செல்லவும்.

(வி-ரை.) உகிர் - நகம். அமர் - போர். ஒன்னலர் - சேராதவர் (பகைவர்). படர்தல் - செல்லல்.

'பேழ்வாய்' என்பதுமுதல் 'வாய்க்குழவி'
என்பதுவரை.
(17—18 வரிகள்.)

(ப-ரை.) பேழ் வாய் - பெரியவாயுள்ள, இடாகினி - ஏவற் பெண், கால் தொழுது ஏத்தி - பாதத்தை வணங்கித்துதித்து, கையடை கொடுத்த - அடைக்கலமாகக் கொடுத்த, வெள் நிணம் வாய் குழவி - வெள்ளிய நிணம்பற்றிய வாயையுடைய குழந்தை.

(வி-ரை.) இடாகினி - பேய்வகையினென்று. நிணம் - தசை.

'ஈமம்' என்பதுமுதல் 'அணிதாலுறுத்த'
என்பதுவரை.
(19—21 வரிகள்.)

(ப-ரை.) ஈமம் - மயானமானது, பெரு விளக்கு எடுப்ப-பெரிய தீபமெடுக்க, அதன் - அம்மயானத்தின், சுடுபொடி காப்பு - பிணஞ் சுடற் சாம்பற்பொடியால், உடல் துளங்க - உடல் வருந்தவும், சுரிகுரல் - சுரிந்த குரலையுடைய, ஆந்தையுங் கூகையும் - ஆந்தையுங் கோட்டானும், அணி தாலுறுத்த - அருகில் நாவாலொலிக்கவும்.

(வி-ரை.) துளங்கல் - வருந்தல். அணி - அருகு. தாலு - நா, அது தால் என ஈறு தொகுத்தலாயிற்று.

'ஓரிபாட்டெடுப்ப' என்பதுமுதல் 'சுள்ளியங்கானிடை' என்பதுவரை.

(22—26 வரிகள்.)

(ப-ரை.) ஓரி பாட்டெடுப்ப - முதுநரிகள் ஊளையிடவும், உவணமும் கொடியும் - பருந்துங் காக்கையும், செஞ்செவி - சிவந்தகாதையும், கவர் வாய் - பிளவாகிய வாயையுமுடைய, சேவல் கழுகும் - சேவலுடன் பெண்கழுகுகளும், இட்ட - அமைத்த, செம் பந்தர் இடையிடை - செவ்விய பந்தருக்கு நடுவே நடுவே, கால் என - நட்டகால்களையொப்ப, பட்டு உலர் - பட்டுப்போயுலர்ந்த, சுள்ளியம்பால் - கள்ளியினிடத்து, துயில்கொள்ளும் - தங்குதற்கிடமாகிய, சுள்ளி அம் கானிடை - இலையுலர்ந்த சுள்ளிபொருந்திய பாலையுள்.

(வி-ரை.) ஓரி - கிழநரி. பாட்டெடுத்தல் - ஊளையிடல். பால் - இடம். சுள்ளி - அறவுலர்ந்த மெல்விறகு. கான்-காடு (பாலைவனம்). இடை-ஏழனுருபு.

'சுரர்தொழுதேத்த' என்பதுமுதல் 'வாடாதிருத்தி' என்பதுவரை.

(26—29 வரிகள்.)

(ப-ரை.) சுரர் தொழுது எத்த - தேவர் வணங்கித் துதிக்க, மரகதத்துழாயும் - பசிய துளபமாலையையும், அந்நிறக்கிளியும்-அந்நிறக்கிள்ளையையும், தோகையும்-மயிலிறகுகளையும், சூலமும் - சூலத்தையும் (முறையே), தோளில் - தோளினிடத்தும், முன் கையில் - முன் கையிலும், மருங்கில் - இடையிலும், காத்தினில் - கையிலும், வாடாது இருத்தி - நீங்காமலிருத்தி.

(வி-ரை.) மரகதம் - பச்சைநிறம். மருங்கு - இடை.

'போர்வலி' என்பதுமுதல் 'உளங்களிப்ப' என்பதுவரை.

(30—32 வரிகள்.)

(ப-ரை.) போர் வலி - போர்செய்தலில் வலிமைமிக்க, அவுணர் - அரக்கர்கள், புக - எதிர்ந்தபோது, பொருது - அமர்புரிந்து, உடற்றிய - அழித்த, முக்கண் - மூன்றுகண்களும், பிறை எயிறு - பிறைபோற் பல்லும், எண் தோள் - எட்டுத்தோளுமுள்ள, செல்வி -

காளியம்மை, கண்டு - (கூத்தின் விகற்பத்தை) நோக்கி, உளங்களிப்ப - உள்ளத்தில் மகிழ்ச்சிமிக.

(வி-ரை.) பொருதல் - போர்செய்தல். உடற்றல் - அழித்தல்.

'கழைசழல்' என்பதுமுதல் 'ஒருவ' என்பதுவரை.

(32—34 வரிகள்.)

(ப-ரை.) கழை கழல் - வேதச்சிலம்பொலிக்கின்ற திருவடியாகிய, தாமரை - ஒருதாமரைப்பூ, வானகம் - ஆகாயத்திலுள்ள, வாவியூடு - கங்கையினிடத்தே, உற மலர - பொருந்தி மலராநிற்பவும், ஒருதாள் - ஒரு திருவடியானது, எழு புவி - எழுபாதலத்திற்கும், ஒருவ - அப்பாற்கடந்து செல்லாநிற்பவும்.

(வி-ரை.) கழைத்தல் - ஒலித்தல். தாமரை-ஆகுபெயர். வாவி - ஸரோவரம். பாதலம் - பாதாளலோகம். ஒருவல் - கடந்துசேறல்.

'திண்டோள்' என்பதுமுதல் 'அவையுடைப்ப' என்பதுவரை.

(34—35 வரிகள்.)

(ப-ரை.) திண் தோள் - திண்ணிய புயங்களும், பத்து திசையுள் - மேலுங் கீழுஞ் சேர்ந்து பத்தாகிய திசைகளுள், எட்டு-எட்டுத்திசையையும், அவை யுடைப்ப-தாமே கடந்து ஊடுருவாநிற்பவும்.

(வி-ரை.) உடைத்தல் - ஊடுருவிச்செல்லல்.

'ஒருநடங்குலவிய' என்பதுமுதல் 'உளமென' என்பதுவரை.

(36—38 வரிகள்.)

(ப-ரை.) ஒரு நடம் குலவிய-ஒப்பில்லாதநடனத்தைச் செய்தருளிய, திருவடி - அவ்விரண்டு திருவடியையுடைய, உரவோன் - பெரியோனது, கூடலம்பதியகம்-கூடலாகிய திருப்பதியினிடத்தே,பாவி-(சொக்கலிங்கத்தைப்) போற்றி, நீடு நின்று-ஒழியாமல் நிலைபெற்று, எண்ணார் - நினையாதவரது, உளம் என - உள்ளத்தைப்போல.

(வி-ரை.)'ஒருமை - ஒப்பின்மை. குலவல் - செய்தல்.

திருவடி உரவோன் கூடல்பாவி யெண்ணா ருளமென, நீயே நெஞ்சிற் குறும்பயன் கேள், கவர்மனத்தூரன் கதிர்முலை புணருங் கொல்லெனா இரங்கலை, இன்றியுந் தவிர்ஞோ' என வினைமுடிவு செய்க.

(அகூ)

திருக்கோவையார் ௩௮௪-ம் செய்யுள்.

பாணனொடு வெகுளுதல்.

பாணனொடு வெகுளுதல்—தோழிக்கு வாயின் மறுத்த தலைமகள், நின்னிடத்து அவர் நீங்காதவருள் பெரியரென்று நீ சொல்ல வேண்டுமோ, அதுகிடக்க கொற்சேரியி லூசிவிற்றுப் புலையா எம்லத்து நின்னுடைய நல்லநல்ல பொய்யைப்பொருந்தி நிற்கலுற்றோ நீபோந்ததென வாயில் வேண்டிய பாணனொடு வெகுண்டு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

மைகொண்ட கண்டர் வயல்கொண்ட தில்லைமல் கூரர்நின்வாய்
மெய்கொண்ட வன்பின ரென்பதென் விள்ளா வருள்பெரியர்
வைகொண்ட வூசிகொற் சேரியின் விற்றெம்மில் வண்ணவண்ணப்
பொய்கொண்டு நிற்கலுற் றோபுலை யாத்தின்னி போந்ததுவே.

மன்னியாழ்ப் பாணன் வாயில் வேண்ட
மின்னிடை மடந்தை வெகுண்டுரைத்தது.

(ப-ரை.) மைகொண்ட - கருமை பொருந்திய, கண்டர் - கண்டத்தையுடையவரது, வயல் கொண்ட - வயல் சூழ்ந்த, தில்லை - தில்லையிலுள்ளாராகிய, மல்கு - செல்வம் நிறைந்த, ஊரர் - ஊரரானவர், நின்வாய் - உன்னிடத்து, மெய்கொண்ட அன்பினர் என்பது என் - உண்மையாகிய அன்பையுடையவரென்று நீ சொல்லுவதென், விள்ளா - நீங்காத, அருள் பெரியர் - அருளிற் சிறந்தவர், (அது நிற்க) வை கொண்ட ஊசி - கூர்மையைக்கொண்ட ஊசியை, கொல் சேரியில் விற்று - கொல்லரூரில் விற்று, எம் இல் - எமதில்லத்தில், வண்ண வண்ணப் பொய் கொண்டு நிற்கலுற்றோ - உனது நல்லநல்ல பொய்மையைப் பொருந்தி நிற்கலுற்றோ, புலை ஆ தின்னி - புலையனாகிய ஆத்தின்னி, போந்தது - ஈண்டு நீ வந்தது (இது சாலநன்று), எ-று.

(வி-ரை.) மெய்கொண்ட வன்பினரென்று சொல்லுகின்றதென், நின்வாயிலவர் விள்ளாவருள் பெரியரன்றோ வென்றுரைப்பினுமமையும். ஊசி கொற்சேரியின் விற்றென உவமவினை உவமிக்கப்படும் பொருண்மேலேறிநின்றது. அடுக்கு - பன்மைக்கண்வந்தது. ஆத்தின்னி யென்பதனை முன்னிலைக்கண் வந்ததாக வுரைப்பினுமமையும். விற்குநின்னென்பதூஉம் பாடம்.

நேரிசையாசிரியப்பா.

ஊர்நகைத் தூட்க வூக்குமோர் விருந்தினைக்
குவளைவடி பூத்த கட்டவள வாணகைக்

குறுந்தொடி மடந்தைநந் தோழியுங் கேண்மோ
கவிரலர் பூத்தசெஞ் செம்மைவிற் குடுமி
மஞ்சடை கிளைத்த வரிக்குறு முட்டாட்
கூரரி வாளின் றேகையஞ் சேவற்
கொடியோன் குன்றம் புடைவளர் கூடற்
கணிச்சியங் கைத்தலத் தருட்பெருங் காரண
னுலகுயிர் பகவுடைப் பசுங்கொடிக் கொருபாற்
பகுத்துயிர்க் கின்பந் தொகுத்தமெய்த் துறவினன்
முளரிநீர்ப் புகுத்திய பதமலர்த் தாட்டுணை
மணிமுடி சுமந்தநம் வயலணி யூரர்பின்
வளர்மறித் தகரெனத் திரிதரும் பாண்மக
னெனக்குறித் தறிகிலம் யாமே யெமது
மணியொளிர் முன்றி லொருபுடை நிலைநின்
றன்ன வூரர் புல்லமும் விழுக்குடிக்
கடாஅக் கிளவியும் படாஅப் பழியு
மெங்கையர் புலவியி லியம்பின நம்பாற்
றனதுமுன் புன்மொழி நீளத் தந்து
மொன்றுபத் தாயிர நன்றுபெறப் புனைந்துங்
கட்டிய பொய்ப்பரப் பனைத்துநிற் குறுத்திற்
பேரெறுழ்ச் சகர ரேழெனப் பறித்த
முதிர்திரை யடிக்கும் பரிதியந் தோழங்
காட்டையு மிம்பர் காணத்
தோட்டிநின் றளிக்குந் தொன்மைய துபெறுமே.

ஊர்நகைத்துட்க - தொன்மையதுபெறுமே. பகுதி - பரத்தையிற்பிரிவு. துறை - பாணனொடு வெகுளுதல்.

'குவளைபூத்த' என்பதுமுதல் 'கேண்மோ' என்பதுவரை.

(2—3 வரிகள்.)

(ப-ரை) குவளைபூத்த - குவளைமலரையொத்த, வடி கண் - கூர்மையான கண்களையும், தவள வாள் நகை - வெள்ளிய வொளி பொருந்திய நகையையும், குறுந்தொடி-குறிய தொடியையுமுடைய, மடந்தை - மடப்பத்தையுள்ள, நந்தோழியுங் கேண்மோ - எனது தோழியே கேட்பாயாக.

(வி-ரை.) குவளை-ஆகுபெயர். வடி - கூர்மை, மாவடுவெனினு மாம்; இப்பொருட்டாதல், "வடிக்கணிவை" என்னு முதற்குறிப் பினையுடைய திருக்கோவைச் செய்யுளானு முணர்க. தொடி - வளையல்.

ஊர்நகைத் துட்க வூக்குமோர் விருந்தினை.
(1—வது வரி.)

'கவிரலர்பூத்த' என்பதுமுதல் 'கூரரிவாளின்' என்பதுவரை.
(4—6 வரிகள்.)

(ப-ரை.) ஊர் நகைத்து உட்க-ஊரார் பழித்து அஞ்ச, ஊக்கும் ஓர் விருந்தினை - ஏவப்பட்ட வொருவிருந்தை, கவிர் அலர் பூத்த - முருக்கலர்ந்தாலொத்த, வில் - ஒளிபொருந்திய, செஞ்செம்மை குடுமி-மிக்க செம்மையுள்ள சூட்டையுடைய, மஞ்சு அடைகிளைத்த- இளமை நீங்காத, வரி குறுமுள் தாள் - வரிபொருந்திய சிறுமுள் ளோடுகூடிய காலாகிய, கூர் அரிவாளின் - கூரிய அரிவாளினையும்.

(வி-ரை.) நகைத்தல் - பழித்தல். உட்கல் - அஞ்சல். கவிர் - முருக்கமரம். சூட்டு - உச்சிக்கொண்டை.

'தோகை' என்பதுமுதல் 'பசுங்கொடிக்கு' என்பதுவரை.
(6—9 வரிகள்.)

(ப-ரை.) தோகை-தோகையையுமுடைய, அம் சேவல் கொடி யோன் - அழகிய கோழிக்கொடியை யுயர்த்தோனது, குன்றம்-திருப் பரங்கிரி, புடை வளர் - சூழ்ந்திருக்கின்ற, கூடல்-மதுரையின்கண், கணிச்சி - மழுப்படையை, அம் கைத்தலத்து - அழகிய கையினிடத் தேந்திய, அருள் பெருங்காரணன் - அருளாற் பெரியகாரணன், உலகு உயிர் - உலகிலுள்ள அனைத்துயிருமாகிய, மகவு உடை - மக் களையுடைய, பசுங்கொடிக்கு - உமாதேவிக்கு.

(வி-ரை.) தோகை - வால். சேவற்கொடியோன் - முருகக்கட வுள். பசுங்கொடி - ஆகுபெயர், அன்மொழித்தொகையுமாம்.

'ஒருபாற்பகுத்து' என்பதுமுதல் 'வயலணியூரர்பின்' என்பதுவரை.
(9—12 வரிகள்.)

(ப-ரை.) ஒருபால் பகுத்து - ஒருபாகந்தந்து, உயிர்க்கு - மேற் குறித்த வுயிராகிய மக்கட்கு, இன்பம் தொகுத்த - இன்பத்தை வகுத்

தருளிய, மெய் துறவினன் - உண்மைத் துறவியினது, முளரி-தாமரைமலரை, நீர் புகுத்திய - நீரிற்போக்கிய, பத மலர் தாள் துணை - அன்பர்பெறும் பதமாகிய இரண்டு திருவடிமலரையும், மணி முடி சுமந்த-அழகிய முடிமேற்கொண்ட, நம் வயலணி ஊரர்பின் - நமது வயலான் வளப்பமல்கிய ஊரருடனே.

(வி-ரை.) பால் - பாகம். உயிர் - ஈண்டு மக்களுயிரைக் குறித்தது. முளரி-ஆகுபெயர். மணி - அழகு. முடி - தலை. பின் என்றது ஈண்டு மூன்ருவதன் உடனிகழ்ச்சிப் பொருள்பயந்து நின்றது. துறவினன், தாளிணை யெனவியையும். பதம் - பதவி. இணை - இரண்டு. நம் ஊரன் என்க.

'வளர்மறித்தகரேன' என்பதுமுதல் 'அறிகிலம்யாமே' என்பதுவரை.

(13—14 வரிகள்.)

(ப-ரை.) வளர் மறித்தகர் என-அவரால் வளர்க்கப்பட்ட ஆட்டுக்கிடாய்போல, திரிதரும் - திரிகின்ற, பாண்மகன் என குறித்து - பாணனென்று குறிப்பாய், அறிகிலம் யாமே - நாமேயறியோம்.

(வி-ரை.) பாண்மகன் ஒரு சொல்லாய்ப் பாணனென்னும் பொருடந்து நின்றது. வளர் மறித்தகர் - வினைத்தொகை நிலைத்தொடர். திரிதரும்-ஒருசொல், பகுதி திரிதா.

'எமது' என்பதுமுதல் 'நீளத்தந்தும்' என்பதுவரை.

(14—19 வரிகள்.)

(ப-ரை.) எமது - நம்முடைய, மணி ஒளிர் முன்றில் - மணியால் விளங்கும் முற்றத்தில், ஒருபுடை நிலைநின்று - ஒருசாரொழியாமல்நின்று, அன்ன ஊரர் - அவ்வூரரது, புல்லமும் - புன்மையும், விழுக்குடிக்கு - அவரது உயர்குடிப்பிறப்பிற்கு, அடா கிளவியும் - தகுதியில்லாத சொல்லும், படா பழியும் - இல்லாதவசையுமாகிய, தனது புல் மொழி - தனது புன்சொற்களை, முன் எங்கையர் புலவியில் - முன்னம் எந்தங்கையராகிய பரத்தையருடலில், இயம்பின - சொல்லியவைபோல, நம்பால் - நம்மிடத்தில், நீள தந்தும் - மிகுதியாகச் சொல்லியும்.

(வி-ரை.) ஒளிர்தல் - விளங்குதல். முன்றில் - மரூஉ. ஒருசார் ஒருபுடை என்பன ஒருபக்கம் என்னும் பொருள. புல்லம் என்பதில் அம் பண்புப்பெயர் விகுதி. விழுமை-மேன்மை. அடா-எதிர்

மறைப்பெயரெச்சம், இது கிளவி யென்பதனோடு முடிந்தது. கிளவி-சொல். பகுதல்-உண்டாதல். என் தங்கை யென்பது எங்கையென மரீஇயது. புலவி ஊடல் என்பன பிணங்குதற்பொருள.

'ஒன்றுபத்தாயிரம்' என்பதுமுதல் 'நிற்குறுத்தின்' என்பதுவரை.

(20—21 வரிகள்.)

(ப-ரை.) ஒன்று பத்து ஆயிரம் - ஒன்று பத்து ஆயிரமாக, நன்று பெற - நாம் நம்பும்படி, புனைந்தும் - சிறப்பித்தும், கட்டிய - அலங்கரிக்கப்பட்ட, பொய் பரப்பு அனைத்தும் - பொய்யின் விரிவு முழுவதும், நிற்கு உறுத்தின்-உனக்குச் சொல்லப்புகுந்தால்.

(வி-ரை.) நன்றுபெறல் - நம்புதல். புனைதல் - சிறப்பித்தல். கட்டல் - அலங்கரித்தல். உறுத்தல் - வற்புறுத்தல்.

'பேரெறுழ்ச்சகரர்' என்பதுமுதல் 'அதுபெறும்' என்பதுவரை.

(22—25 வரிகள்.)

(ப-ரை.) பேர் எறுழ் சகரர் - அடங்கா வலிமைபெற்ற சகரர்கள், எழ் என பறித்த - எழென்னும்படி அகழ்ந்த, முதிர் திரை அடிக்கும் - பெரிய அலைவீசுகின்ற, பரிதி அம் தோழம் - சூரியனுதித்தற்கிடமாகிய கடலின், காட்டையுள் - உள்ளிருக்கின்ற பொருள்களை, இம்பர் காண - இவ்வுலகங் காணும்படி, தோட்டி நின்று - பேர்த்தெடுத்து, அளிக்கும் - காட்டவல்ல, தொன்மை - பழமையுண்டெனில், அது பெறும் - அதனையொக்கும்.

(வி-ரை.) எறுழ் - வலிமை. பறித்தல் அகழ்தல் என்பன தோண்டுதற்பொருள. திரை அலை என்பன ஆகுபெயர்கள். தோழம் - இடம். தோட்டல் - பேர்த்தல். சகரர்கள் - சகர சக்ரவர்த்தியின் புதல்வர்கள், இவர்கள் தொகை அறுபதினாயிரம். பெருமை - இங்கு அடங்காமைப்பொருட்டு. இம்பர் - ஆகுபெயர். அளித்தல் - இங்குக் காட்டலெனப் பொருள்பட்டுநின்றது.

நந்தோழியுங் கேண்மோ, தோகையஞ் சேவற்கொடியோன் குன்றம் புடைவளர் கூடல் மெய்த்துறவினன் முளரிநீர் புகுத்திய பதமலர்த் தாட்டுணை மணிமுடி சுமந்த நம் வயலணியூரர்பின் தகரெனத் திரிதரும் பாண்மகன் எமது முன்றி லொருபுடைநின்று அன்னவூரர் புல்லமும் அடாஅக் கிளவியும் படாஅப் பழியும் எங்கை

யர் புலவியி லியம்பின நம்பால் நீளத்தந்தும் நன்றுபெறப் புனைந்தும் நிற்குறுத்தின் சகரர்பறித்த பரிதியர் தோழங் காட்டையுள் இம்பர் காணத் தோட்டிநின் றளிக்குந் தொன்மையது பெறுமென வினை முடிவு செய்க. (௯௦)

திருக்கோவையார் ௩அஎ-ம் செய்யுள்.

பாணன் புலந்துரைத்தல்.

பாணன் புலந்துரைத்தலென்பது — தலைமகள் வெகுண்டுரை யாநிற்ப, நின்புருவநெரிய வாய்துடிப்ப என்னை யெறிதற்குக் கல் லெடுக்கவேண்டா, நினது கரிய கண்களின் சிவப்பாற்றுவாயாக, நீ வெகுளப்படுவதன்று, நினக்குப் பல்லாண்டு செல்வதாக, யான் வேண்டியவிடத்துப்போக நின்னடியை வலங்கொள்ளாநின்றேனென வாயில் பொருமையிற் பாணன் புலந்துகூறாநிற்றல். அதற்குச் செய் யுள்:—

கோல்லாண் டிலங்கு மழுப்படை யோன்குளிர் தில்லையன்னாய்
வில்லாண் டிலங்கு புருவ நெரியச்செவ் வாய்துடிப்பக்
கல்லாண் டெடேல்கருங் கண்சிவப் பாற்று கறுப்பதன்று
பல்லாண் டடியே னடிவலங் கொள்வன் பணிமொழியே.

கருமலர்க்கண்ணி கனன்றுகட்டுரைப்பப்
புரியாழ்ப்பாணன் புறப்பட்டது.

(ப-ரை.) கொல் - கொற்றொழில், ஆண்டு இலங்கும் - அவ் விடத்து விளங்கும், மழு படையோன் - மழுப்படையை யுடையவ னது, குளிர் தில்லை அன்னாய்-குளிர்ந்த தில்லையையொப்பாய், வில் ஆண்டு இலங்கு புருவம் நெரிய - வில்லை யடிமைகொண்டு விளங்கா நின்ற புருவம் நெரிய, செவ்வாய் துடிப்ப - செவ்வாய் துடிக்க, கல் - கல்லை, ஆண்டு எடேல் - அவ்விடத்தெடாதே, கருங்கண் சிவப்பு ஆற்று - கருங்கண்ணின் சிவப்பொழிவாயாக, கறுப்பது அன்று - வெகுள்வதன்று, பல் ஆண்டு - உனக்குப் பல்லாண்டுளவாகவேண் டும், பணி மொழி - பணிமொழியையுடையாய், அடியேன் - அடிய னேன், அடி - உன்னடியை, வலங்கொள்வன் - வலம் வருகிறேன், எ - று.

(வி-ரை.) கொல்-கொலைத்தொழிலுமாம். கறுப்பது வெகுள் வது என்பன கோவித்தற்பொருள. பல்லாண்டு என்றது ஆயுணீட் டித்திருப்பை யென்னும்பொருட்டு. கருங்கண்ணினது சிவப்பெ

ளினுமமையும், பல்லாண். டென்றது - தலைமகனுடனுண்டாகிய வெறுப்புத் தீர்ந்து கூடியிருமென்று சொல்லியது நமக்குத் தவறாயிற்றாயின் பல்லாண்டும் இப்படி யிருப்பீரென்றான். இப்படி யிருப்பீரென்றது - பல்லாண்டு மிப்படித் தனித்திருப்பீரென்று வளமாகத் தன் பாணவார்த்தை சொல்லியவாறென்றறிக. புருவ நெரிக்கவென்பதூஉம் வெவ்வா யென்பதூஉம் பாடம். புரி - நரம்பு.

நேரிசையாசிரியப்பா.

இலவலர் தூற்றி யனிச்சங் குழைத்துத்
தாமரை குவித்த காமர் சீறடித்
திருவின ளொருநகை யரிதினிற் கேண்மோ
வெல்லாந் தோற்ற விருந்த தோற்றமுந்
தன்னுட் டோன்றித் தானதிற் றோன்றாத்
தனிநடை நிறைபு மொருதனிக் கோலத்
திருவடி வாகி பழமறை வேதிய
னான்மறைத் தாபதர் முத்தழற் களம்புக்
கரக்கர்துய்த் துடற்று மதுவே மானப்
பாசடை மறைத்தெழு முளரியங் கயத்துட்
காரா னினங்கள் சேடெறிந் துழக்குங்
கூடற் கிறையவன் காலற் காய்ந்தோன்
றிருநடங் குறித்தநம் பொருபுன லூரனை
யெங்கையர் குழுமி யெமக்குந் தங்கையைப்
புணர்த்தினன் பாண்டொழிற் புல்லனென் றிவனைக்
கோலிற் கரத்திற் றோலிற் புடைப்பக்
கிளைமுட் செறித்த வேலியம் படப்பைப்
படர்காய்க் கணைந்தபுன் கூழையங் குறுநரி
யுடையோர் திமிர்ப்ப வருமுயிர்ப் பொடுக்கி
யுயிர்பிரி வுற்றமை காட்டியவர் நீங்க
வோட்டங் கொண்டன கடுக்கு
நாட்டவர் தடையமற் றுதிர்த்து நடந்ததுவே.

இலவலர்தூற்றி - உதிர்த்துநடந்ததுவே. பதத் - பாத்தையிற் பிரிவு. துறை - பாணனைப் புடைத்தமை பாங்கிக்குரைத்தல்.

'இலவலர்' என்பதுமுதல் 'கேண்மோ' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) இலவு அலர்தூற்றி - இலவமலரைப் பழித்து, அனிச்சம் குழைத்து - அனிச்சப்பூவை வாடச்செய்து, தாமரை குவித்த - தாமரைப்பூவைக் குவியச்செய்த, காமர் சிறு அடி - அழகிய சிறிய காலையுடைய, திருவினள் - பாங்கியே, ஒருநகை - பரிகாசம் நடந்ததை, அரிதினில் கேண்மோ - புதுமையாக் கேட்பாயாக.

(வி-ரை.) இலவலர் - இலவமலர், தூற்றி - பழித்து, என்றேனும், இலவு - இலவமலரை, அலர்தூற்றி - பழித்து என்றேனும் பொருளுரைத்துக்கொள்க. அனிச்சம் தாமரை என்பன அவற்றின் மலர்களை யுணர்த்தலான் ஆகுபெயர்கள். சிறுஅடி சீறடி யென நின்றது. காமர்-அழகு. திருவினள்-அண்மைவிளி.

'எல்லாம்' என்பதுமுதல் 'வேதியன்' என்பதுவரை.
(4—7 வரிகள்.)

(ப-ரை.) எல்லாம் - பிரபஞ்சமெல்லாம், தோற்ற - தன்சந்நிதியின்கண் தோற்றுமாறு, இருந்த தோற்றமும் - தானசைவற வீற்றிருந்த காட்சியும், தன் உள் தோன்றி - தன்னிடத்தி லுண்டாகி, தான் அதில் தோன்றா-தானதிற்றோன்றாத, தனி நடை நிறையும் - தனியான வியாபகனாகி எங்கு நிறைந்துள்ள, ஒரு தனி கோலத்து - ஒப்பில்லாத ஒருருவில், இரு வடிவு ஆகி - சிவன்சத்தி யென் றீருருவாகி, பழமறை வேதியன் - பழமையான வேதப்பொருளாயுள்ளவன்.

(வி-ரை.) கோலம் - உரு. வேதியன் - வேதார்த்தமாயிருப்பவன். வியாபகம் - பரவுதல். மறை - ஆகுபெயர். தோய்தல்-பொருந்தல்.

'நான்மறை' என்பதுமுதல் 'அதுவேமான' என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) நால் மறை - நால்வேதமுமுணர்ந்த, தாபதர்-இருடிகளது, முத்தீழல் களம்-மூன்றழலாலோங்கிய வேள்வியில், புக்கு - புகுந்து, அரக்கர் - அரக்கர்கள், துய்த்துடற்றும்-அவியையுண்டழிக்கின்ற, அதுவே மான - அத்தன்மையேபோல.

(வி-ரை.) தாபதர் - தவஞ்செய்வோர். தழல் அழல் என்பன ஆகுபெயர்கள், நெருப்பு என்னும் பொருள் பயப்பன. களம் - இடம், அது ஈண்டு வேள்விசெய்யு மிடத்துக்காயிற்று. முத்தழல் - மூன்று நெருப்பு, இவற்றை த்ரேதாக்கியென்பர் வடநூலார். மூன்று நெருப்பாவன-ஆகவநீயம், தக்ஷிணாக்கி, காருகபத்தியம் என்பன.

'பாசடை' என்பதுமுதல் 'எறிந்துழக்கும்' என்பதுவரை.
(10—11 வரிகள்.)

(ப-ரை.) பாசு அடை - பச்சிலைகளை, மறைத்து எழும் - மறைத்து மிகுதியாய்ப் பூத்தெழுந்த, முளரி அம் கயத்துள் - தாமரை மலர் நிறைந்த பொய்கையுள், காரான் சேடு இனங்கள் - எருமைப்பகட்டினங்கள், எறிந்து உழக்கும் - வீழ்ந்து கலக்காநின்ற.

(வி-ரை.) பாசு அடை - பசுமையாகிய இலை. கயம்-பொய்கை. காரான் - எருமை. சேடு - பகடு. இனம் - கூட்டம். உழக்குதல் - கலக்குதல்.

'கூடற்கிறையவன்' என்பதுமுதல் 'பொருபுனலூரனை' என்பதுவரை.
(12—13 வரிகள்.)

(ப-ரை.) கூடற்கு இறையவன்-மதுரைநாயகன், காலன் காய்ந்தோன் - யமனைச்சினந்தவன், (அந்த கடவுளது), திரு நடம் - திரு நடனத்தை, குறித்த - சிந்திக்காநின்ற, நம் - நமது, பொருபுனல் ஊரனை - அலைவீசும் புனலூரனுக்கு.

(வி-ரை.) காய்தல் சினத்தல் என்பன கோவித்தல் என்னும் பொருள. குறித்தல் - சிந்தித்தல். புனலூரன்-நீர்நாடன். நம் ஊரன் எனவியையும். ஊரனை - உருபுமயக்கம்.

'எங்கையர்குழுமி' என்பதுமுதல் 'புடைப்ப' என்பதுவரை.
(14—16 வரிகள்.)

(ப-ரை.) எமக்கு தங்கையை - எமக்குத்தங்கையாய்வந்த பரத்தையை, பாண் தொழில் புல்லன் - பாண்பாடுந் தொழிலையுடைய கீழ்மகன், புணர்த்தினன் என்று-சேர்த்துவைத்தது கருதி, எங்கையர் குழுமி - எம்பாலுள்ள தோழிமார் கூடி, இவனை - இப்பாணனை, கோலின் - கோலினாலும், கரத்தின்-கைகளாலும், தோலின் - வாரினாலும், புடைப்ப - அடித்ததால்.

(வி-ரை.) புல்லன் - புன்மையடியாகப் பிறந்தபெயர். புணர்த்தல் - சேர்த்தல். குழுமுதல் - கூடுதல். கோல்-தண்டு (தடி). புடைத்தல் - அடித்தல். புடைப்ப-செயினென்னும் எச்சத்திரிபு.

'கிளைமுட்செறித்த' என்பதுமுதல் 'குறுநரி' என்பதுவரை.

(17—18 வரிகள்.)

(ப-ரை.) கிளை முள் செறித்த - முள்ளுள்ள மூங்கில்களா லடர்ந்த, வேலி அம் படப்பை - வேலிசூழ்ந்த தோட்டத்தின்கண், படர் காய்க்கு - படர்ந்த கொடிக்காய்களைக் கவர்வதற்கு, அணைந்த-வந்த, புன் கூழை அம் குறு நரி - சிறியவாலுள்ள குறிய ஓரியை.

(வி-ரை.) கிளை - மூங்கில். அணைதல் - வருதல். கூழை-வால். செறிதல் அடர்தல் என்பன நெருங்கலென்னும் பொருள. வேலியம் படப்பை என்பதில் அம் சாரியை,அழகெனினு மமையும்.ஓரி-கிழநரி.

'உடையோர்திமிர்ப்ப' என்பதுமுதல் 'காட்டி' என்பதுவரை.

(19—20 வரிகள்.)

(ப-ரை.) உடையோர் திமிர்ப்ப - தோட்டத்திற் குரியவர் புடைத்தபோது, வரும் உயிர்ப்பு ஒடுக்கி - வெளிவருகின்ற மூச்சை யடக்கி, உயிர் பிரிவுற்றமை - உயிர் பிரிந்ததன்மையாக, காட்டி - காண்பித்து.

(வி-ரை.) திமிர்த்தல் - புடைத்தல். உயிர்ப்பு - மூச்சு. ஒடுக்கல் - அடக்கல்.

'அவர்நீங்க' என்பதுமுதல் 'நடந்தது' என்பதுவரை.

(20—22 வரிகள்.)

(ப-ரை.) அவர் நீங்க - அவ்வுரியவர் நீங்கக்கண்டு, ஓட்டம் கொண்டன கடுக்கும் - ஓடிப்போயினவாறு ஒக்கும், நாட்டவர் - இவ்வூரார், தடைய - தடுக்க, உதிர்த்து நடந்தது - அவர்களை விலக்கி யோடிப்போயினது.

(வி-ரை.) மற்று - அசை. கடுத்தல் - நிகர்த்தல். தடைதல் - தடுத்தல்.

தாமரை குவித்த காமர் சேவடித் திருவினளே ஒருநகை அரிதினிற் கேண்மோ, கூடற்கிறையவன் நடங்குறித்த நம்பொருபுன

லூரனை எமக்குத் தங்கையைப் பாண்டொழிற் புல்லன் புணர்த்தின னென்று எங்கையர் குழுமி யிவனைக் கோலிற் காத்திற் றேலிற் புடைப்ப படர்காய்க் கணைந்த குறுநரி உடையோர் திமிர்ப்ப உயிர்ப் பொடுக்கி யுயிர்பிரிவுற்றமை காட்டி அவர் நீங்க ஒட்டங்கொண்டன கடுக்கும் நாட்டவர் தடைய உதிர்த்து நடந்ததெனை வினைமுடிவு செய்க. (௬௧)

திருக்கோவையார் ௩எ௫-ம் செய்யுள்.

பாணன் வரவுரைத்தல்.

பாணன் வரவுரைத்தலென்பது—நாணோடு தனியிருந்து வருந்தாநின்ற தலைமகளுக்கு, இராப்பொழுதின்கட்சென்று திசையைக் கடக்கும் வாவல் இரைதேடுங் காலமன்மையாற் பகற்பொழுதின்க ணுறையும் மரம்போலுந் தமியோமை யறியாது விறலியும் பாணனும் நம் வேந்தற்குத் துயிலெழு மங்கலம் பாடவந்து நின்றாரெனத் தோழி பாணன்வரவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

விறலியும் பாண னும் வேந்தற்குத் தில்லை யிறையமைத்த
திறலியல் யாழ்கொண்டு வந்துநின் றார்சென் றிராத்திசைபோம்
பறலியல் வாவல் பகலுறை மாமரம் போலுமன்னோ
வறலியல் கூழைநல் லாய்தமி யோமை யறிந்திலரே.

இகல்வே லவனகல் வறியாப் பாணனைப்
பூங்குழன் மாதர்க்குப் பாங்கி பகர்ந்தது.

(ப-ரை.) விறலியும் பாணனும்—, தில்லை இறை அமைத்த-தில்லையிறைவனா லமைக்கப்பட்ட, திறல் இயல் யாழ் - வெற்றி பொருந்திய யாழினை, வேந்தற்கு கொண்டுவந்து நின்றார் - நம் வேந்தற்குத் துயிலெடை பாடும்பொருட்டுக் கொண்டுவந்து நின்றார்கள், அறல் இயல் கூழை நல்லாய்-அறல்போலும் கூழையையுடைய நல்லாய், இரா சென்று - இரவிற்சென்று, திசை போம் - திசையைக் கடக்கின்ற, பறல் இயல் வாவல் - பறத்தலாகிய இயல்பினையுடைய வாவல், பகல் உறை - பகற்பொழுதிலுறையும், மா மரம் போலும் - பெரியமரம்போலும், தமியோமை அறிந்திலர்- துணையில்லாதோமை யிவர் அறிந்திலர்போலும், எ-று.

(வி-ரை.) வெற்றி-வீணைகளுட்டலையாதல்,"எம்மிறைநல்வீணை வாசிக்குமே" என்பவாகலின், 'இறையமைத்தயாழ்' என்றார். சென்றுபகலுறை மாமரமென் றியைப்பினுமமையும். பறத்தல் - பறலெனை இடைக்குறைந்து நின்றது. போலவென்பது பாடமாயின், பக

லுறையு மாமரம்போலத் தமியேமாகிய நம்மையென வுரைக்க. மன்னும் ஒவும் அசைநிலை. இவர் வந்து நின்றதற்குத் தலைவி நம்மை இவர் நகையாடிய வந்தாரென்று முனிந்தாளாக, தோழி இவரென் செயலை யறிந்தாரல்லரென்றும் தலைவர்க்கியல்பு நம்மிடத்து வருதலும் அவரிடத்துச் சேறலுமென்றும் இயல்பு சொல்லுதலாற் சிவப்பாற்றுவித்தாளாம்.

நேரிசையாசிரியப்பா.

வாய்வலங் கொண்ட வயிற்றெழு தழலுக்
காற்றா தலைந்து காற்றெனக் கொட்புற்
றுடைதிரை யருவி யொளிமணி காலுஞ்
சேயோன் குன்றகத் திருப்பெறு கூடற்
கொழுஞ்சுடர் கிளைத்த நெடுஞ்சடைப் புயங்கன்
பவளந் தழைத்த பதமலர் சுமந்தநம்
பொருபுன லூரனைப் பொதுவென வமைத்த
வக்கடி குடிமனை யவர்மனை புகுத்தி
யறுவாய் நிறைந்த மதிப்புறத் தோவென
சுரைதலை கிடைத்த விசையுளர் தண்டெடுத்
தளிதார் பாடுங் குரனீர் வறந்த
மலைப்புட் போல நிலைக்குர லணந்தாங்
குணவுளங் கருதி யொளியிசை பாட
முட்டாண் மறுத்த முண்டகந் தலையமைத்
தொருபா லணைந்தவிவ் வுயர்மதிப் பாணற்
கடுத்தனை யுதவ வேண்டுங்
கடுத்திகழ் கண்ணியக் கல்லையிக் கணமே.

வாய்வலங்கொண்ட - கல்லையிக்கணமே. பகுதி - பரத்தையிற் பிரிவு. துறை-பாணன்வரவுரைத்தல்.

‘உடைதிரையருவி’ என்பதுமுதல் ‘கூடல்’ என்பதுவரை.
(3—4 வரிகள்)

(ப-ரை.) உடை திரை அருவி-அலைமறிகின்ற அருவியானது, ஒளி மணி காலும் - ஒளியுள்ள மணிகளைக் கொழிக்கின்ற, சேயோன் குன்று - பிள்ளையாரது பரங்குன்றத்தை, அகம் - தன்பாற்கொண்

டுள்ள, திரு பெறு - தெய்வத்தன்மைபெற்ற, கூடல் - மதுரையின்கண்.

(வி-ரை.) உடைதிரை - சிதைகிற அலையென்றலுமாம். அருவி-மலையாறு. காலல் - கொழித்தல், உமிழ்தலுமாம். சேயோன் பிள்ளையார் என்பன முருகனுக்குப் பரியாய நாமங்கள். திரு-ஆகுபெயர்.

'கோழுஞ்சுடர்' என்பதுமுதல் 'புனலூரனை' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) கொழுஞ்சுடர் - கொழுமையுள்ள நெருப்பானது, கிளைத்த - கிளைவிட்டாற்போன்ற, நெடு சடை புயங்கன் - நீண்ட செஞ்சடைப்பெருமானது, பவளம் தழைத்த - பவளநிறமுள்ள, பத மலர் - ஸ்ரீபாததாமரைகளை, சுமந்த-தலைமேற்கொண்ட, நம் பொரு புனல் ஊரனை - நமது தலைவனை.

(வி-ரை.) சுடர்-ஆகுபெயர். புயங்கன்-புஜங்கன் என்னும் வடசொற்றிரிபு; இதற்குப்பொருள் பணியையுடையவனென்பது. பவளந் தழைத்த என்பதற்கு பவளம்போற் செழித்த என்றுரைத்தலுமாம். மலர் - தாமரைமலர். பவளம் - ப்ரவாளம் என்னும் வடசொற்றிரிபு. பொரு - அலைமோதுகிற.

'போதுவெனவமைத்த' என்பதுமுதல் 'தண்டெடுத்து' என்பதுவரை.
(7—10 வரிகள்.)

(ப-ரை.) பொது என அமைத்த-யாவர்க்கும் பொதுவாக அமைக்கப்பட்ட, அ கடி குடி மனையவர் - (நூலான்) விலக்கப்பட்ட குடிவாழ்க்கையையுடைய அப்பொதுமகளிரது, மனை புகுத்தி-இல்லிடத்திற் சேர்த்து, அறுவாய் - கார்த்திகை நட்சத்திரம், நிறைந்த மதிப்புறத்தோ என - நிறைமதியினிடத்துள்ளதோவென் றுரைக்கப்பட்ட, சுரை தலை கிடைத்த-சுரைக் குடுவையை தலையிலே தாங்கப்பெற்ற, இசை உளர் - இசை நரம்புகளைத் தடவுகின்ற, தண்டு எடுத்து - யாழைக்கையிலெடுத்து.

(வி-ரை.) கடிதல் - விலக்கல். குடி - குடிவாழ்க்கை. மனையென்பதனீற்றில் ஏழனுருபு தொக்கது. புகுத்தல் - சேர்த்தல். உளர்தல் - தடவுதல். இசை - ஆகுபெயர். தண்டு - யாழ், இதனை வீணை தண்டம் என்பர் வடநூலோர். அமைத்த மனையவர் என வியையும். பொது - பொதுப்பொருள். தண்டுருவமிகுந்திருத்தலால் யாழைத் 'தண்டு' என்றே கூறினார்.

'வாய்வலங்கொண்ட' என்பதுமுதல் 'காற்றெனக்கோட்புற்று' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) வாய் வலம் கொண்ட - வாயாற்பாடும் வன்மைகொண்டதால், வயிற்று எழு - வயிற்றில் மூளுகின்ற, தழலுக்கு - (பசியாகிய) தழலையவித்தற்கு, ஆற்றாது - தாங்கமாட்டாமல், அலைந்து-துன்புற்று, காற்று என கோட்புற்று-காற்றைப்போலெங்குஞ்சுற்றி.

(வி-ரை.) வலம் - பலம் என்னும் வடசொற்றிரிபு, வன்மையென்பது பொருள். ஆற்றல் - தாங்கல். அலத்தல்-துன்புறல். கோட்புற்று-ஒருசொல், சுழன்று என்பது பொருள்.

'அளிதார்பாடும்' என்பதுமுதல் 'ஒளியிசைபாட' என்பதுவரை.

(11—13 வரிகள்.)

(ப-ரை.) அளி தார் பாடும்-பூவில் வண்டு பாடுவதுபோல் பாடுகின்ற, குரல் நீர் வறந்த - தொண்டைநீர் வற்றிய, மலைப்புள்போல-மலைப்பறவைபோல, நிலை குரல் அணந்து - தன்மையையுடைய குரலைத்திறந்து, உணவு உளம் கருதி - உள்ளத்தி லுணவுபெறக்கருதி, ஒளி இசை பாட - ஒள்ளிய பாட்டைப்பாட.

(வி-ரை.) அளி - வண்டு. தார் - பூ. குரல்-தொண்டை. வறத்தல் - வற்றுதல். புள் - பறவை. அணத்தல் - அண்ணாத்தல் என்பதன் விகாரம், வாய்திறத்தல் என்பது பொருள். கருதல் - நினைத்தல். உணவு - உண்டி.

'முட்டாண்மறுத்த' என்பதுமுதல் 'உயர்மதிப்பாணற்கு' என்பதுவரை.

(14—15 வரிகள்.)

கடுத்திகழ் கண்ணி.

(17—வது வரி.)

(ப-ரை.) முள் தாள் மறுத்த - முள்ளுள்ள காம்பை நீக்கிய, முண்டகம்-தாமரைமலரை, தலை அமைத்து-தலையில் தரித்து, ஒருபால் அணைந்த - ஒருபுறத்தில்வந்து நிற்கின்ற, இ உயர் மதி பாணற்கு - இந்த வுயர்ந்த புந்தியுள்ள பாணனுக்கு, கடு திகழ் கண்ணி - விடமெனக் கறுத்த கண்ணையுடையாய்.

(வி-ரை.), மறுத்தல் - நீக்கல். முண்டகம்-ஆகுபெயர். அமைத்தல்- தரித்தல். உயர்மதி - பேரறிவு. கடு - விடம். கண்ணி - அண்மைவிளி.

'அடுத்தனை' என்பதுமுதல் 'இக்கணமே' என்பதுவரை.
(16—17 வரிகள்.)

(ப-ரை.) அடுத்தனை - நீ அடுத்தாயாகி, இக்கணமே-இப்பொழுதே, அ கல்லை - அந்தக்கல்லை, உதவவேண்டும் - கொடுத்தல்வேண்டும்.

(வி-ரை.) அடுத்தனை-முற்றெச்சம், அடுத்து என்பதுபொருள். இலைக்கலம்-இலையாற் செய்யப்பட்ட தொன்னை. கல்லை யென்பது இலைக்கலமெனவும் பாணனை யடித்தற்கு ஓர் கல்லினையெனவும் உரைத்துக்கொள்க.

கூடல் நெடுஞ்சடைப்புயங்கன் பதமலர் சுமந்த நம்மூரனை, அக்கடி குடிமனை யவர்மனைபுகுத்தி, இசையுளர் தண்டெடுத்து, குளனீர் வறந்த மலைப்புட்போல உணவுளங் கருதி, இசைபாட ஒருபாலணைந்த இவ்வுயர்மதிப் பாணற்கு, கடுத்திகழ் கண்ணி, அடுத்தனை யிக்கணமே, அக்கல்லை யுதவவேண்டுமென வினைமுடிவு செய்க. ()

திருக்கோவையார் கஅச-ம் செய்யுள்.

அன்னமோடாய்தல்.

அன்னமோடாய்த லென்பது—கடலொடு புலந்து கூறிய தலைமகள், புன்னையொடு புலந்து, அகன்றவர் அகன்றே யொழிவரோ யானறிகின்றிலேன், நீயாயினுஞ் சொல்லுவாயாகவென அன்னமோடாய்ந்து வரவு கேளாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

புலத்தல் - ஊடல்.

பகன்றா மரைக்கண் கெடக்கடந் தோன்புலி யூர்ப்பழனத்
தகன்றா மரையன்ன மேவண்டு நீலமணி யணிந்து
முகன்றாழ் குழைச்செம் பொன்முத் தணிபுன்னை யின்னும்முரையா
தகன்றா ரகன்றே யொழிவர்கொல் லோநம் மகன்றுறையே.

மின்னிடை மடந்தை
யன்னமோ டாய்ந்தது.

(ப-ரை.) பகன் - ஆதித்தனது, தாமரை - தாமரைமலர்போன்ற, கண் - கண்ணனது, கெட - கெடும்வண்ணம், கடந்தோன் - அவனை வென்றவனது, புலியூர் - புலியூரிடத்துள்ள, பழனத்து - வயல்களில் வாழ்கின்ற, அகன் - பெரிய, தாமரை - தாமரைமலரில் வாழ்கின்ற, அன்னமே - அன்னப்பேடே, வண்டு-வண்டாகிய, நீலமணி அணிந்து-நீலரத்நத்தைத் தரித்து, செம்பொன் முத்து அணி-(தாதாகிய) செம்பொன்னினையும்(அரும்பாகிய) முத்தினையும் அணிந்த, முகம் - முகத்தில், தாழ் குழை - தாழ்ந்த குழையினையுடைய, புன்னை - புன்னையானது, இன்னும் உரையாது - இந்நிலைமைக்கண்ணும் ஒன்றும் சொல்லாது, அகன்றார்-அகன்றவர், நம் அகல் துறை-நமதகன்ற துறையை, அகன்றே ஒழிவர் கொல்லோ - அகன்றேவிடுவரோ, அறியேன் - (நீயுரைப்பாயாக), எ - று.

(வி-ரை.) முகன்றாழ் குழையென்பது இருபொருட்பட நின்றது. யானித்தன்மையேனாகவும் மணியணிந் தின்புற்று நிற்கின்ற புன்னை எனக்கொன்று சொல்லுமோ, அன்னமே, எனக்கு நீ கூறென்பது கருத்து. ஈண்டு நம்மோடு தாம் விளையாடும் விளையாட்டை மறந்தே விடுவரோ வென்னுங் கருத்தான் 'நம்மகன்றுறையை யகன்றே யொழிவர் கொல்லோ' என்றார். கடத்தல் - வெல்லுதல். குழை - காதணி முத்து என்னும் இரண்டு பொருளையுந் தந்துநின்றது.

நேரிசையாசிரியப்பா.

வெறிமறி மடைக்குரற் றோல்காய்த் தென்ன
விருக்கினு மிறக்கினு முதவாத் தேவர்தம்
பொய்வழிக் கதியக மெய்யெனப் புகாத
விழியுடைத் தொண்டர் குழீஇமுடி தேய்ப்பத்
தளிர்த்துச் சிவந்த தண்டையந் துணைத்தாட்
சேயோன் பரங்குன் றிறையெனச் செறித்துத்
தமிழ்க்கலை மாலை சூடித் தாவாப்
புகழ்க்கலை யுடுத்துப் புண்ணியக் கணவன்
பன்னெறி வளனிறப் பூட்சியிற் புல்லுந்
தொன்னிலைக் கூடற் றுடியிடை யகத்தனை
யன்புளத் தடக்கி யின்பமுன் ஞ்ரெனச்
சேவண்மண் டலித்துச் சினையடை கிடக்குங்

கைதைவெண் குருகெழ மொய்திரை யுகளு
மூளைகடற் சேர்ப்ப னளிவிடந் தணிப்ப
நீலமுங் கருங்கொடி யடம்புஞ் சங்கமுங்
கண்ணிற் கிடையிற் களத்திற் கழிதந்து
அலர்ந்து முலர்ந்து முடைந்து மனுங்கலின்
வட்குடை மைய லகற்றியன் பொருகாற்
கூறவும் பெறுமே யாறது நிற்க
இவணடை பெற்று மிவட்பயின் றிரங்கியு
மோருழி வளர்ந்த நீரவிவ் வன்ன
மன்றெனத் தடையாக் கேண்மை
குன்றமச் சூளினர் தம்மினுங் கொடிதே.

வெறிமறிமடைச்குரல் - தம்மினுங்கொடிதே. பகுதி-ஒருவழித் தணத்தல். துறை - அன்னமோடாய்தல்.

'வெறிமறி' என்பதுமுதல் 'தேவர்தம்' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) வெறி மறி - வெறியாடற்குரிய ஆட்டின், மடை குரல் - துளையுள்ள கழுத்தினிடத்து, தோல் காய்த்து என்ன-அதர் உண்டாயிருப்பதுபோல, இருக்கினும் இறக்கினும் - உயிரோடிருந் தாலும் இறந்தாலும், உதவா - உயிர்க்குறுதி யுதவமாட்டாத, தேவர் தம் - ஏனைத்தேவர்களது.

(வி-ரை.) வெறியாடல் - வெறியாட்டயர்தல். மடை - துளை. குரல்-கழுத்து. அதர்-ஆட்டின் கழுத்திற் றொங்குகிற தோற்காய்.

'பொய்வழி' என்பதுமுதல் 'தண்டையந்துணைத்தாள்' என்பதுவரை.

(3—5 வரிகள்.)

(ப-ரை.) பொய் வழி - பொய்ந்நெறியாகிய, கதியகம் - கதியினிடத்து, மெய் என புகாத-அதனை மெய்யென்று சொல்லாத, விழி உடை தொண்டர்-சிவஞானமாகிய கண்பெற்ற மெய்யடியார், குழீஇ-கூடிவணங்கும்போது, முடி தேய்ப்ப - அவர் முடிகளாற் றேய்ப் புண்டு, தளிர்த்து சிவந்த - மகிழ்வுற்றுச் சிவப்பேறிய, தண்டை அம் துணைத்தாள் - தண்டையணிந்த தாளிணையையுடைய.

(வி-ரை.) புகல் - செல்லல். குழுவல் - கூடல். முடி - கிரீடம். தளிர்த்தல் - மகிழ்தல். தண்டை - தாளணிகளிலொன்று. தண்டையந்துணைத்தாள் என்பதில் அம் சாரியை. துணை இணை என்பன இரண்டென்னும் பொருள.

'சேயோன்' என்பதுமுதல் 'துடியிடையகத்தனை' என்பதுவரை.
(6—10 வரிகள்.)

(ப-உரை.) சேயோன் பரங்குன்று - பிள்ளையாரது ஸ்ரீ பராசலத்தை, இழை என செறித்து - ஆபரணமாகப்பூண்டு, தமிழ்கலை-முத்தமிழ்நூல்களாகிய, மாலை சூடி - மணிமாலை தரித்து, தாவா - நிலைபெற்ற, புகழ் கலை உடுத்து - புகழாகிய வஸ்திரத்தையுடுத்து, புண்ணியம் கணவன் - தருமமாகிய கணவனுலாகிய, பல் நெறி வளம் - பல்வகைப்பட்ட வளப்பங்களை, நிறம் - தனதுள்ளே, பூட்சியின் - ஆபரணங்களாக, புல்லும் - பூண்டிருக்கின்ற, தொல் நிலை - தொன்மைப்பதியாகிய, கூடல் - மதுரையில், துடி இடை அகத்தனை-துடிபோலு மிடையுள்ள உமைபாகனை.

(வி-ரை.) செறித்தல் - பூணல். கலை - நூல். முத்தமிழாவன - இயல் இசை நாடகம் என்பன. வளம்-செல்வம். நிறம் - மார்பு, அது இங்கு அதனுள்ளிடமாகிய மனத்துக்காயிற்று. பூட்சி - பூணப்படுவது (ஆபரணம்). துடியிடை - அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

'அன்பு' என்பதுமுதல் 'உகளும்' என்பதுவரை.
(11—13 வரிகள்.)

(ப-ரை.) அன்பு - அன்பினால், உளத்து அடக்கி - உள்ளத்திலிருத்தி, இன்பம் உண்ணுர் என-பேரின்பத்தை யனுபவியார்போல, சேவல் - சேவலுடன், மண்டலித்து - கூடி, சினை அடை கிடக்கும்-முட்டைகளை அடைகாக்கின்ற, கைதை - தாழைத்தூற்றினின்றும், வெள் குருகு-வெள்ளியநாரை, எழ - (அஞ்சி) மேலெழும்படி, மொய் திரை - நெருங்கிய அலைகள், உகளும் - வீசுகின்ற.

(வி-ரை.) மண்டலித்தல்-கூடுதல். தாழைத்தூறு-தாழைவேர். மொய்த்தல் - நெருங்கல். உகளல் - வீசல். அடைகிடக்கும் - ஒரு சொல், அணைத்துக்கிடக்கிற என்பது பொருள். மொய்திரை-வினைத்தொகைநிலைத்தொடர். வினைத்தொகையைக் காலங்காந்த பெயரெச்சமென்ப.

'உளைகடற்சேர்ப்பன்' என்பதுமுதல் 'அனுங்கலின்' என்பதுவரை.

(14—17 வரிகள்.)

(ப-ரை.) உளை கடல் சேர்ப்பன் - ஒலிக்காநின்ற கடற்றுறையையுடைய தலைவன், அளி விடம் தணிப்ப - கொடுத்த சோர்வைத் தணிக்கும்பொருட்டு, நீலமும் - நீலோற்பலமலரும், கருங்கொடி அடம்பும் - கரிய அடம்பின் கொடியும், சங்கமும் - சங்கும் (முறையே), கண்ணிற்கு - கண்களுக்கும், இடையில் - இடைக்கும், களத்தில் - கழுத்தினுக்கும், கழிதந்து - தோற்று, அலர்ந்தும்-விரிந்தும், உலர்ந்தும் - வாடியுலர்ந்தும், உடைந்தும் - முத்துக்களை யீன்றுடைந்தும், அனுங்கலின் - கெடுதலால்.

(வி-ரை.) உளைத்தல் - ஒலித்தல். கடற்சேர்ப்பு-கடற்றுறை. அளித்தல் - கொடுத்தல். கழிதரல் - தோல்வியடைதல்; கழிதா பகுதி. அனுங்கல் - கெடுதல். நீலமலர் கண்ணுக்குத் தோற்று விரிந்தும், அடம்பங்கொடி இடைக்குத்தோற்று வாடியும், சங்கு கழுத்திற்குத் தோற்று முத்தீன்றுடைத்தும் அனுங்கினவென்பது கருத்து.

'வட்குடை' என்பதுமுதல் 'ஆறதுநிற்க' என்பதுவரை.

(18—19 வரிகள்.)

(ப-ரை.) வட்கு உடை - மழுக்கமுடைய, மையல் அகற்றி - மயக்கத்தை நீக்கி, அன்பு - அன்பாக, ஒருகால் - ஒருமுறை, கூறவும் பெறுமே - பேய்ச்சொல்லவும் பெறுவனவோ, ஆறது நிற்க - அவை யவ்வாறிருக்க.

(வி-ரை.) வட்குதல் - மழுங்குதல். மையல் - மயக்கம். ஒருமுறை - ஒருதரம். பெறுமே யென்னும் ஏகாரம் வினாவோடையப் பொருட்டு.

'இவணடைபெற்றும்' என்பதுமுதல் 'கோடிதே' என்பதுவரை.

(20—23 வரிகள்)

(ப-ரை.) இவள் நடை பெற்றும் - இவளது நடையைப்பெற்றும், இவள் பயின்றும் - இவளோடு பயில்வுற்றும், இரங்கியும் - ஒலித்தும், ஒருழி வளர்ந்த - ஒரேயிடத்தில் வளர்ந்த, நீர - நீர்மையை

யுடைய, இ அன்னம் - இந்த அன்னம், அன்று என - அவ்வாறிவளுடன் பயின்றதன்றென்னும்படி, தடையா கேண்மை - தடைப்படாத நட்பில், குன்றும்-குறைந்து நீங்கிய, அ சூளினர் தம்மினும் - அந்தச் சத்தியவாதியைப்பார்க்கிலும், கொடிதே - மிகவுங் கொடிதாக விருக்கின்றது.

(வி-ரை.) நடை - நடத்தல். பயிலல் - பழகல். இரங்கல்-ஒலித்தல். உழி - இடம். நீர் - நீர்மை (தன்மை). தடைதல்-தடைபடல். கேண்மை - சிநேகம். குன்றல்-குறைதல். சூள்-சத்தியம். அன்னம் - அன்னப்புள். கொடிது - கொடுமையுடையது.

கூடற்றுடியிடை யகத்தனை, அன்புளத்தடக்கி இன்பமுண்டு றெனை, இவணடைபெற்றும் இவட் பயின்றிரங்கியும், ஒருழி வளர்ந்த நீர இவ்வன்னம், அன்றெனத் தடையாக்கேண்மை குன்றுமச்சூளினர் தம்மினுங் கொடிதேயென வினைமுடிவு செய்க. (சுஅ)

திருக்கோவையார் கசகூ-ம் செய்யுள்.

வழியருமைகூறி மறுத்தல்.

வழியருமைகூறிமறுத்தலென்பது—தலைமகனிரவுக்குறி வேண்டி நிற்ப, யாங்கள் வாழும்பதி ஏற்றிழிவுடைத்தாகலின் அவ்விடத்து நினக்குச் சிந்தைக்கு மேறற்கரிதெனத் தோழி வழியருமை கூறி மறுத்துக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

விசும்பினுக் கேணி நெறியன்ன சின்னெறி மேன்மழைதூங்
கசும்பினிற் றுன்னி யளைநுழைந் தாலொக்கு மையமெய்யே
யிசும்பினிற் சிந்தைக்கு மேறற் கரிதெழி லம்பலத்துப்
பசும்பனிக் கோடு மிலைந்தான் மலயத்தெம் வாழ்பதியே.

இரவர லேந்தல் கருதி யுரைப்பப்
பருவரற் பாங்கி யருமை யுரைத்தது.

(ப-ரை.) ஐய - ஐயனே, விசும்பினுக்கு ஏணி நெறி அன்ன - ஆகாயத்திற் கிட்டதோர் ஏணிவழியையொத்த, சில் நெறி மேல் - இடுக்குவழிமேல், மழை தூங்கு - மழையிடையறாது நிற்றலால், அசும்பினில் துன்னி - வழுக்குநிலத்திற் சென்று பொருந்தி, (ஏறுமிடத்து) அளை நுழைந்தால் ஒக்கும் - மலைக்குகையுள் நுழைந்தாற் போன்றிருக்கும், எழில் அம்பலத்து - (அதுவேயுமன்றி) அழகிய அம்பலத்திலுள்ளனாகிய, பசும்பனி கோடு மிலைந்தான் - குளிர்ந்த பனி

யையுடைத்தாகிய பிறையை யணிந்தவனாகிய சிவபெருமானது, மலயத்து-(தென்) மலயத்திலுண்டாகிய, எம் வாழ் பதி - எமது வாழிடமானது, இசும்பினில் - வழுக்கினால், சிந்தைக்கும் ஏறற்கு அரிது - மனத்திற்கும் ஏறுதற் கரிதென்பது, மெய்யே - உண்மையே, (அதனால் ஈண்டு நீ வரத்தகாது), எ - று.

(வி-ரை.) இசும்பு - ஏற்றிழிவு முதலாயின குற்றமென்பாருமுளர். அசும்பு-சிறுதிவலை. இசும்பினிற் சிந்தைக்குமேறற் கரிதென்றவதனான், எமது வாழ்பதி யிவ்வொழுக்கத்தைச் சிறிதறியுமாயிற் சிந்தையாலு நினைத்தற்கரிய துயரத்தைத் தருமாதலால், தாஞ்செத் துலகாள்வாரில்லை. அதுபோல, இவ்வொழுக்கமொழுகற்பாலீ ரல்லீரென்று மறுத்துக் கூறியவாறாயிற்று. பசுமை - செவ்வியுமாம். அதனைக் கோட்டின்மே லேற்றுக. கோட்டை யுடைமையாற் கோடெனப்பட்டது.

நேரிசையாசிரியப்பா.

முதுக்குறை பெண்டிர் வரத்தியல் குறிப்ப
வழிமுதற் றெய்வதம் வரைந்துமற் றதற்குப்
பருக்கா டுறுத்திப் பலிமுதற் பராவக்
கிழமையவ் வயலினர் நாவுடன் றேத்தப்
பக்கஞ் சூழுநர் குரங்க மண்படப்
பெற்றுயிர்த் தவரும் பொற்றொடி மடந்தைதன்
னிருவிழி பொலியத் திருநகர்ப் புறத்துக்
கரியுட னுண்ணூர் பழியுள மொத்த
விருளுடைப் பெருமுகில் வழிதெரிந் தேகன்மி
னரிமா னுறுத்த நூற்றுவர் மதித்த
புடைமனச் சகுனி புள்ளியங் கவற்றி
லைந்தொழிற் கமைந்த வைவரும் புறகிட்
டொலிவர வோதிம மெரிமலர்த் தவிசிருந்
தாடுகள் சிரலை பச்சிற வருந்தும்
பழனக் குருநா டளிபதி தோற்று
முன்னூறு முழுவயிற் பன்னிரு வருடங்
கண்டீ ரவத்தொடு கறையடி வளருங்
குளிர்நிழ லடவி யுறைகொண் டகன்றபி
னனைத்துள வஞ்சமு மழித்துநிரை மீட்சி

முடித்துத் தமது முடியாப் பதிபுக
வூடிமுறை யேவெமக் குளமண் கருதிச்
சேறியென் றிசைப்பச் செல்பணித் தூதினர்க்
கொருகா லளித்த திருமா மிடற்றோன்
பாடல் சான்ற தெய்வக்
கூடல் கூடார் குணங்குறித் தெனவே.

முதுக்குறைபெண்டிர் - குணங்குறித்தெனவே. பந்தி - இரவுக்குறி. துறை - வழியருமைகூறி மறுத்தல்.

'முதுக்குறை' என்பதுமுதல் 'பராவ' என்பதுவரை.
(1—3 வரிகள்.)

(ப-ரை.) முதுக்குறை - முதுக்குறைந்த, பெண்டிர் - மகளிர், வரத்தியல் குறிப்ப - வரங்கேட்கவும், வழிமுதல் தெய்வதம் - தம் வழி முதலாகிய குலதெய்வத்தை, வரைந்து - வரித்து, அதற்கு - அத்தெய்வத்தின்பொருட்டு, முதல் - முதலில், பரு காடுபலி உறுத்தி-அடர்வாகிய காடுபலி கொடுத்து, பராவ - பரவுதல் செய்யவும்.

(வி-ரை.) முதுக்குறை பெண்டிர்-வினைத்தொகை நிலைத்தொடர். முதுக்குறைதல் - பேரறிவுவாய்த்தல் (சமைதல்). வழி-சந்ததி. வரைதல் - வரித்தல் (அழைத்தல்). பராவல் - துதித்தல்.

'அக்கிழமை' என்பதுமுதல் 'சூழுநர்' என்பதுவரை.
(4—5 வரிகள்.)

(ப-ரை.) அ கிழமை - அப்பரவுதற்குரிய, அயலினர் - அயலிலுள்ளார், நா உடன்று எத்த - நாக்குழறி யேத்தவும், பக்கம் சூழுநர் - நாற்புறத்தினின்றும்வந்து சூழ்கின்றாராக.

(வி-ரை.) கிழமை - உரிமை. அயலினர்-பக்கத்தார் (அந்நியர்). நாவுடலல் - நாக்குழறல். சூழுநர் - வளைவோர்.

'குரங்கம்' என்பதுமுதல் 'நகர்ப்புறத்து' என்பதுவரை.
(5—7 வரிகள்.)

(ப-ரை.) குரங்கம் - ஒருமானானது, மண்பட - நிலத்திற்பட, பெற்று உயிர்த்த - கருக்கொண்டு ஈன்ற, அரும்பொற்றொடி - அருமையான வள்ளியம்மையை நிகர்த்த, மடந்தைதன் - தலைமகளது,

இரு விழி - இரண்டு கண்கள்போலும், பொலி - விளங்காநின்ற, அ திருநகர்ப்புறத்து - அந்தப் பெருநகரிடத்தினின்றும்.

(வி-ரை.) குரங்கம் - மான். பெறல் - கருக்கோடல். உயிர்த்தல் - ஈனல். பொற்றொடி - அன்மொழித்தொகைக் காரணப்பெயர். குரங்கம் ஈன்ற பொற்றொடி யென்றமையால் வள்ளியம்மையென் றுரைக்கலாயிற்று. மடந்தையென்றது ஈண்டுப் பருவங் குறியாது பெண்ணென்னுந் துணையாய்நின்றது.

‘கரியுடன்’ என்பதுமுதல் ‘ஏகன்மின்’ என்பதுவரை.
(8—9 வரிகள்.)

(ப-ரை.) கரியுடன் - விருந்தினருடன், உண்ணார் - உண்டு வாழாதவர்களது, பழி உளம் ஒத்த - கள்ளமனம்போன்ற, இருள் உடை - இருளையுடைய, பெருமுகில் - மேகங்களான் மிகவும் மூடப்பட்ட மழையிரவில், வழிதெரிந்து-வழிகண்டு, ஏகன்மின்-நீவிர் வாராதொழிவீராக.

(வி-ரை.) கரி - சாக்ஷி, அது ஈண்டுடனிருந் துண்போராகிய விருந்தினரை யுணர்த்திற்று. பழியுளம் - கள்ளமனம் ஏகல் - வருதலைக் குறித்தது. பழியென்றது ஈண்டுக் கள்ளத்துக்காயிற்று.

‘அரிமானுறுத்த’ என்பதுமுதல் ‘ஐவரும்புறகிட்டு’ என்பதுவரை.
(10—12 வரிகள்.)

(ப-ரை.) அரிமான் உறுத்த - சிங்கம்போற் சினந்த, நூற்றுவர் - (துரியோதனன் முதலிய) நூற்றுவரால், மதித்த - நன்குமதிக்கப்பட்ட, புடை மனம் சகுனி - புறம்போய மனமுள்ள சகுனியென்பவனால், புள்ளி அம் கவற்றில் - புள்ளிபொருந்திய சூதாடல் காரணமாக, ஐந்தொழிற்கு - ஐவேறு தொழில்கட்கு, அமைந்த - அமைந்தவராகிய, ஐவரும் புறகிட்டு - பாண்டவரைவருந் தோற்று.

(வி-ரை.) அரிமான்-இருபெயரொட்டு. உறுத்தல் - சினத்தல். புடைமனம்-அல்வழிச் செல்லுமனம். புள்ளியல் கவற்றில் என்பதில் அம் சாரியை. சூது - புறகிடல், தோற்றல்.

‘ஒலிவர’ என்பதுமுதல் ‘தோற்று’ என்பதுவரை.
(13—15 வரிகள்.)

(ப-ரை.) ஓதிமம் - அன்னப்பறவைகள், எரி மலர் தவிசு இருந்து - செந்தாமரைத்தவிசின்கணிருந்து, ஒலிவர - ஒலிக்க, ஊடு

உகள் - அவ்விடத்தில் பாய்ந்து, சிரலே - சிச்சிலிப்பறவை, பச்சிறவு அருந்தும் - சிறிய இறவென்று மீனைக்குத்தி யருந்துகின்ற, பழனம் - வயல்கள் சூழ்ந்த, குருநாடு-குருநாடாகிய, அளி பதி - தம்மாலளிக்கப்பட்ட பதியை, தோற்று - இழந்து.

(வி-ரை.) எரி - நெருப்பு, இது செந்நிறமாதலால் எரிமலர் எனவே செந்தாமரைமலரை யுணர்த்திற்று. தவிசு - ஆசநம். ஒலிவர என்றது ஒருசொல்லாய் ஒலிக்க எனப் பொருடந்து நின்றது, ஒலிவா பகுதி. உகளல் - பாய்தல். இறவு - இறால்மீன். பதி-இடம்.

'முன்னுறும்' என்பதுமுதல் 'அகன்றபின்' என்பதுவரை. (16—18 வரிகள்.)

(ப-ரை.) முன்னுறும் உழுவயின் - முன்செய்த வினைகாரணமாக, பன்னிருவருடம்-பன்னிரண்டாண்டுவரை, கண்டீரவத்தொடு-சிங்கமும், கறையடி - யானையும், வளரும் - (ஒருமையாய்ப்) பெருகுகின்ற, குளிர் நிழல் - தருநிழலால் தட்பமான, அடவி - வனத்தில், உறைகொண்டு - தங்கியிருந்து, அகன்றபின் - பின்பு அக்கியாதவாசமுங் கழித்து.

(வி-ரை.) முன்னுறல் - ஒருசொல். கண்டீரவம் - வடசொல் (சிங்கம்). ஒடு - இசைநிறை, கறையடி - உரல்போலுங் காலையுடையது (யானை). அடவி-வடசொல், காடு என்பது பொருள். உறைகோடல்-ஒருசொல்லாய் தங்குதல் எனப் பொருடந்துநின்றது. அக்கியாதம் - ஒருவருக்கு மறியவொண்ணுமை.

'அனைத்துளவஞ்சமும்' என்பதுமுதல் 'தூதினர்க்கு' என்பதுவரை. (19—22 வரிகள்.)

(ப-ரை.) அனைத்துள வஞ்சமும் - (இடையில் நூற்றுவரால் நடந்த) வஞ்சனை முழுமையும், அழித்து - கெடுத்து, நிரைமீட்சி முடித்து - (விராடனுடைய) பசுக்களைப் போரின்மீட்டு, தமது - ஐவருந் தம்முடைய, முடியா பதி புக - கேடில்லாத பதியைக் கைக்கொள்ள, ஊடி - பகைத்து, முறையே - மநுமுறைப்படி, எமக்கு உள - எமக்குரித்தான, மண் கருதி - பூமியைப் பெறக்கருதி, சேறி என்று இசைப்ப - தேவர் செல்வீரென்று வேண்டலின், செல் பணி-அப்பணி முடிக்கச்சென்ற, தூதினர்க்கு - தூதராகிய திருமாலுக்கு.

(வி-ரை.) நிரை - பசுக்கூட்டம். முடிதல்-அழிதல். ஊடல் - பகைத்தல். நூற்றுவர் - துரியோதநன் முதலிய நூறுபேர். இசைப்ப-காரணப்பொருட்டாகிய செயவென் வாய்பாட்டு வினையெச்சம்.

'ஒருகாலளித்த' என்பதுமுதல் 'குணங்குறித்தேனவே' என்பதுவரை.

(23—25 வரிகள்.)

(ப-ரை.) ஒரு கால் அளித்த - ஒருதிருவடி தந்தருளிய, மா - கருமையாகிய, திரு மிடற்றோன் - ஸ்ரீகண்டன் வீற்றிருக்கின்ற, பாடல் சான்ற - பெருமை நிறைந்த, தெய்வக்கூடல் - தெய்வத்தன்மையுள்ள கூடற்பதியை, கூடார் - அடையாதாரது, குணங்குறித்தென - குணத்தைக் குறித்தாற்போல.

(வி-ரை.) கால் - திருவடி. அளித்தல் - தருதல். மிடறு-கண்டம். ஸ்ரீகண்டன் - அழகாகிய கண்டத்தையுடையவன். கண்டத்துக் கழகாவது - பாற்கடல் கடையப்பட்டபோது அதனிடத்துத் தோன்றிப் பரந்தெழுந்த ஆலாகல விடத்தையுண்டு பிரமாதி தேவர்களைக் காத்தருளினமை.

தெய்வக்கூடல் கூடார் குணங்குறித்தென்ன, குரங்க மண்படப் பெற்றுயிர்த்த மடந்தை, தன்னிருவிழி பொலியத், திருநகர்ப் புறத்து கரியுடனுண்ணூர் பழியுளமொத்த இருளுடைப் பெருமுகில், வழிதெரிந்து ஏகன்மின் என வினைமுடிவு செய்க. (௯௪)

திருக்கோவையார் ௩௨௯-ம் செய்யுள்.

பருவங்காட்டி வற்புறுத்தல்.

பருவங்காட்டி வற்புறுத்தலென்பது—தலைமகன் தான் வருதற்குக் குறித்துப்போகிய கார்ப்பருவத்தினது வரவு கண்டு கலங்காநின்ற தலைமகளுக்கு, இக்கார் வந்து வானிடத்துப் பரந்தமையான், நம்மைக் கலந்தவரது தேர் இன்றாக நாளையாக இங்கே வாராநிற்பக் காணப்படுவதே இனியுள்ளதெனத் தோழி அப்பருவந்தன்னையே காட்டி அவளை வற்புறுத்தாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பூண்பதென் றேகொண்ட பாம்பன் புலியூ ரரன்மிடற்றின்
மாண்பதென் றேயெண வானின் மலரு மணந்தவர்தேர்
காண்பதன் றேயின்று நாளையிங் கேவரக் கார்மலர்த்தேன்
பாண்பதன் றேர்குழ லாயெழில் வாய்த்த பணிமுகிலே.

கார்வருமெனக் கலங்குமாதரைத்
தேர்வருமெனத் தெளிவித்தது.

(ப-ரை.) கார் - கார்காலத்து, மலர் - மலரையூதுகிற, தேன் - வண்டுகள், பாண்பதன் - பாட்டின் செவ்வியை, தேர்-ஆராய்தற்கிடமாகிய, குழலாய்-கூந்தலையுடையவளே, பூண்பது என்றே கொண்ட பாம்பன் - பூணத்தகுவதேயெனப் பூண்ட பாம்பணியையுடையவன், புலியூர் அரன் - சிற்றம்பலத்தையுடைய அரன், (அவனது) மிடற்றின் - கண்டத்தின், மாண்பு என்றே-அழகென்றே, எண்ண-கருத, எழில்வாய்த்த - அழகுபொருந்திய, பனி முகில்-குளிர்ச்சியையுடைய மேகங்கள், வானில் - ஆகாயத்தில், மலரும் - பரவாநின்றன (ஆதலால்), மணந்தவர் தேர் - நம்மைக் கலந்தவரது தேரானது, இன்று நாளை-இன்ருதல் நாளையாதல், இங்கே வர காண்பது அன்றே-இவ்விடத்துவரக் காண்பதல்லவே, (இனி நீ யாற்ருயாகத்பாலையல்லை), எ - று.

(வி-ரை.) தேரிங்கே வருவதனைக் காணுமதல்லவே இனியுள்ளதென மொழிமாற்றி யுரைப்பினுமமையும். கான்மலரென்பதூஉம், எழிலாயவென்பதூஉம் பாடம்.

நேரிசையாசிரியப்பா.

அளிகள்பாட் டெடுப்பப் புறவுபாட் டொடுங்கக்
காந்தளங் கடுக்கைக் கனறன மலரக்
கோட லீன்று கொழுமுனை கூம்பப்
பிடவமுங் களவு மொடுநிறை பூப்ப
வாள்புறம் பூத்த மீன்பூ மறையக்
கோப மூர்தர மணிநிரை கிடப்பத்
தென்கா றிகைப்ப வடகால் வளரப்
பொறிவிழிப் பாந்தள் புற்றளை வதிய
வரியுட லீயல் வாய்தொறு மெதிர்ப்ப
விடிக்குர லானேற் றினமெதிர் செறுப்பப்
பொரிக்குறி மடமான் சுழித்தலைக் கவிழ
முடையுட லண்டர் படலிடம் புகுதக்
கோவியரளையுடன் குலனெண்டு குளிர்ப்பக்
காயாக் கண்கொள முல்லையெயி றுறழ
முசுக்கலை பிணவுடன் முழையுறை யடங்கக்

கணமயி லடனெழக் காளிகூத் தொடுங்கச்
சாதக முரல்குரல் வாய்மடை திறப்ப
மாக்குயின் மாழ்கிக் கூக்குர லடைப்பப்
பணிக்கதி ருண்ணச் சகோரம் பசிப்ப
வுடைநற வுண்டு வருடை வெறுப்ப
வகில்சுடு பெரும்புன முழுபதன் காட்ட
வெறிவிழிச் சவரர் மாவடி யொற்ற
மணந்துடன் போகுநர்க் குயங்குவழி மறுப்பப்
புலிக்குர லெயிற்றியர் பூவினிற் பரப்பக்
குழவியங் கதிர்பெறத் திருமல ரணங்க
வினத்தொடு கயிரவ மெதிரெதிர் மலரக்
குமரியர் காமமுங் கூவலும் வெதுப்புற
நிலமக ளுடலமுந் திங்களுங் குளிர
வொலிகட லிப்பி தரளஞ் சூற்கொள
விவைமுதன் மணக்க வெழுந்தகார் கண்டை
வறுநீர் மலரென மாழ்கலை விடுமதி
மறையடி வழுத்திய மறைவனத் தொருநாண்
மணிச்சுடர் நறுநெய் கவர்மதிக் கருப்பைக்
கிருவகை யேழெனுந் திருவுல கனைத்துங்
கொடுத்தவன் கூடல் வழுத்தினர் போல
விருபுறம் போற்ற வொருதேர் வரத்தினர்க்
கொன்னலர் முற்றி யொருங்குபு படரப்
பாசறை சென்ற நாணிலங் குழிய
வெண்ணிவிரற் றேய்ந்த செங்கரங் கூப்புக
கொய்தளி ரன்ன மேனி
மொய்யிழை பூத்த கவின்மலர்க் கொடியே.

அளிகள்பாட்டெடுப்ப - கவின்மலர்க்கொடியே. பதி - பகைதணிவினைப்பிரிவு. துறை-பருவங்காட்டி வற்புறுத்தல்.

‘கோய்தளிரன்ன’ என்பதுமுதல் ‘கோடியே’ என்பதுவரை.
(40—41 வரிகள்.)

(ப-ரை.) கொய் தளிர் அன்ன - கொய்ததளிரையொத்த, மேனி - மேனியினிடத்து, மொய்யிழை பூத்த - அழகுமிக்க அணிகள் பூத்துள்ள, கவின் மலர் கொடியே - மெல்லிய பூங்கொடியே.

(வி-ரை.) கொய்தல் - பறித்தல். கொய்தளிர்-வினைத்தொகைநிலைத்தொடர். மேனி - உ[illegible] - மிகுதி. இழை அணி என்

பன ஆபரணங்களுக்குப் பரியாய நாமங்கள். கவின் - மென்மை; அழகென்றலு மொன்று. மலர்க்கொடி-அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

‘அளிகள்’ என்பதுமுதல் ‘கனறனமலர’ என்பதுவரை.
(1—2 வரிகள்.)

(ப-ரை.) அளிகள் - வண்டுகள், பாட்டு எடுப்ப - இசைபாடத் தொடங்கவும், புறவு - புறாக்கள், பாட்டு ஒடுங்க - குரலோசையடங்கவும், காந்தள்-செங்காந்தளும், அம் கடுக்கை-அழகிய சரக்கொன்றையும் (முறையே), கனல் தனம் மலர-நெருப்புப்போலவும் பொன்போலவும் பூப்பவும்.

(வி-ரை.) எடுத்தல் - தொடங்கல். பாட்டு - பாடுதலையும் குரலோசையையும் குறித்தது. பாடுந்தொழில் வண்டுகளுக்கும் குரலோசை புறாக்களுக்கும் பொருத்தமாதலான் இங்ஙன முறையுரைக்கலாயிற்று. கனல்-ஆகுபெயர். தனம் - பொன். காந்தள் கடுக்கையென்பற்றீற்றில் எண்ணும்மைகள் தொக்கன.

‘கோடல்’ என்பதுமுதல் ‘ஒடுநிறைபூப்ப’ என்பதுவரை.
(3—4 வரிகள்.)

(ப-ரை.) கோடல் - வெண்காந்தள், ஈன்று - அரும்பி, கொழுமுனை - கலப்பைக் கொழுமுனைபோல், கூம்ப - மேலே கூம்பிநிற்கவும், பிடவமும் களவும் - பிடவஞ்செடியுங் களாவும், நிறை பூப்ப - நிறைந்துமலரவும்.

(வி-ரை.) ஒடு - இசைநிறை. களா - குறியதன்கீழாவாதலாற் களவெனக் குறுகிற்று. நிறைப்பூப்பவென்றது “வரிப்புனைபந்து” என்புழிப்போல நிறைந்து பூப்பவெனப் பொருள்பட்டுநின்றது.

‘வான்புறம்’ என்பதுமுதல் ‘புற்றளைவதிய’ என்பதுவரை.
(5—8 வரிகள்.)

(ப-ரை.) வான்புறம் - விண்ணினிடத்து, பூத்த - தோன்றிய, மீன் பூ மறைய - தாராகணங்களாகிய மலர்கள் மறையவும், கோபம் ஊர்தர - இந்திரகோபங்கள் தவழவும், மணி நிரை கிடப்ப - மணித்திரள்கள் அசைவின்றிக் கிடக்கவும், தென்கால் திகைப்ப - தென்றலடங்கவும், வடகால் வளர - வாடை தலையெடுக்கவும், பொறி விழி - கண்ணிற் கனற்பொறி சிதறுகின்ற, பாந்தள் - பாம்புகள், புற்றளை வதிய - புற்றின்வளையிலொடுங்கவும்.

(வி-ரை.) புறம் - ஏழனுருபு, இடம்பொருட்டு. வான் விண் என்பன ஆகாயத்துக்குப் பரியாய நாமங்கள். பூத்தல் - தோன்றல்.

தாராகணம் - உடுத்திரள். ஊர்தரல் - தவழ்தல், ஊர்தா பகுதி. கோபம், இந்திரகோபம் என்பன பட்டுப்பூச்சிக்குப் பரியாயப்பெயர்கள்; இதனைத் தம்பலப்பூச்சி என்றும் வழங்குவர். மணி - அரதநம். நிரை - திரள். தென்கால் - தென்றிசையிற் றோன்றிவருங் காற்று (தென்றல்). வடகால் - வடதிசையிற் றோன்றிவருங்காற்று. இதனை வாடையென்றும் ஊதையென்றும் வழங்குவர். திகைத்தல் - அடங்கல். வளர்தல் - தலையெடுத்தல் (மிகுதல்). அளை - வளை (துவாரம்).

வரியுட லீயல் வாய்தொறு மெதிர்ப்ப.

(9—வது வரி.)

(ப-ரை.) வரி உடல் - உடலில் வரியுள்ள, ஈயல் - ஈயற்பறவைகள், வாய்தொறும் எதிர்ப்ப - திக்கெங்கும் எதிர்ப்படவும்.

(வி-ரை.) வரி - கீற்று. ஈயல்-ஈசற்பறவை, இது ஈசலெனவழங்கப்படுகின்றது. வாய்-இடம், அது ஈண்டுத் திசையைக் குறித்தது. எதிர்த்தல்-எதிர்ப்படுதல்.

'இடிக்குரல்' என்பதுமுதல் 'படலிடம்புகுத' என்பதுவரை.

(10—12 வரிகள்.)

(ப-ரை.) இடி குரல் - இடியோசையுடனே, ஆன் ஏறு இனம் - எருத்தினங்கள், எதிர் செறுப்ப - எதிர்முழங்கவும், பொறிக்குறி - புள்ளியரும்பிய, மடமான் - இளமான்கள், சுழி - சுழியுள்ள, தலை கவிழ - தலை கவிழவும், முடை உடல் - நாற்றம் பொருந்திய உடலையுடைய, அண்டர் - இடையர்கள், படலிடம் புகுத-படலால் மூடும் குடிலிற் புகவும்.

(வி-ரை.) குரல் என்றது ஓசையை யுணர்த்திற்று. இனம் - கூட்டம். செறுத்தல் - முழங்கல். மடம் - இளமை. படல் - தடுக்கு, இது மூங்கில் முதலியவற்றாற் செய்யப்படுவது. இடம் இங்கு குடியை யுணர்த்திற்று.

'கோவியர்' என்பதுமுதல் 'அடங்க' என்பதுவரை.

(13—15 வரிகள்.)

(ப-ரை.) கோவியர் - இடைச்சியர், குலனொடு - இனத்துடன், அளையுடன் குளிர்ப்ப - தயிரோடு குளிரடையவும், காயா - காயாமலர்கள், கண் கொள - கண்போன்று மலரவும், முல்லை - முல்லைச்செடிகள், எயிறு உறழ - (மாதரது) பற்கள்போல் அரும்பவும், முசுக்கலை - ஆண் முசுக்கள், பிணவுடன் - தத்தம் பெண்முசுக்களுடன், முழையுறை - மலைக்குகையாகிய இருக்கையில், அடங்க-அடங்கவும்.

(வி-ரை.) அளை - தயிர். காயா-ஆகுபெயர், இதனைப் பூவைப் பூவெனவும் காசாம்பூவெனவும் வழங்குப. உறழ்தல்-நிகர்த்தல். முசு-குரங்கிலோர்சாதி. கலை - ஆண். பிணவு பிணாவென்னும் குறியதன் கீழா பிணவெனக்குறுகி உகரமேற்றுபிணவு என்றாயிற்று.

'கணமயில்' என்பதுமுதல் 'கூக்குரலடைப்ப' என்பதுவரை.
(16—18 வரிகள்.)

(ப-ரை.) மயில் கணம் - மயில் கூட்டங்கள், நடன் எழ - நடனஞ்செய்யவும், காளி கூத்து ஒடுங்க-காளியாட லொழியவும், சாதகம் - வானம்பாடிப் பறவைகள், முரல் குரல் - பாடுங்குரலை, மடை வாய்திறப்ப - எடுத்துப்பாடவும், மா குயில் மாழ்கி - மாமரத்திற் குயில்கள் மயங்கி, கூக்குரல் அடைப்ப - கூவுங்குரலோசை யடக்கவும்.

(வி-ரை.) கணம்-வடசொல், கூட்டம் என்பது பொருள். நடனம் என்பது நடன் என ஈற்றம்முத் தொகுத்தலாயிற்று. முரலல் - பாடுதல். மடைவாய் திறத்தல் – எடுத்தலோசையாற் பாடுதல். மா - மாமரம். மாழ்கல் – மயங்கல்.

'பனிக்கதிருண்ண' என்பதுமுதல் 'வெறுப்ப' என்பதுவரை.
(19—20 வரிகள்.)

(ப-ரை.) பனி கதிர் உண்ண-சந்திரகிரணத்தையுண்ண, சகோரம் பசிப்ப-சகோரங்கள் பசித்திருக்கவும், உடை நறவு-(இருட்டில்) உடைந்ததேனை, உண்டு - குடித்து, வருடை வெறுப்ப - வரையாடுகள் வெறுப்புக்கொள்ளவும்.

(வி-ரை.) பனிக்கதிர் - சந்திரகிரணம். சகோரம் - நிலாமுகிப் புள். நறா என்னுங் குறியதன் கீழா நற எனக் குறுகி உகரமேற்று நறவு என்றாயிற்று. வருடை - மலையாடு.

'அகில்சுடு' என்பதுமுதல் 'மாவடியோற்ற' என்பதுவரை.
(21—22 வரிகள்.)

(ப-ரை.) அகில் சுடு - அகின்மரங்களைச்சுட்ட, பெரும்புனம் - விசாலமான புனங்கள், உழு பதன் காட்ட - உழுதற்குப் பருவத்தைக்காட்டவும், வெறி விழி - வெறித்த கண்களையுடைய, சவரர் - புளிஞர், மா அடி ஒற்ற-மிருகங்களின் அடிச்சுவடுகளை யொற்றவும்.

(வி-ரை.) புனம் - கொல்லை. பதன் - பருவம். சவரர் புளிஞர் என்பன வேடர்க்குப் பரியாய நாமங்கள். மா - விலங்கின் பொதுப் பெயர். அடி - ஆகுபெயர். ஒற்றல் - பின்பற்றுதல்.

'மணந்துடன்போகுநர்க்கு' என்பதுமுதல் 'பூவினிற்பரப்ப' என்பதுவரை.
(23—24 வரிகள்.)

(ப-ரை.) மணந்துடன் போகுநர்க்கு - தலைமகளுடன் சுரத்திற் செல்பவர்க்கு, உயங்கு வழி மறுப்ப-போம்வழியில் அவரைத்தடுக்க, புலி குரல் - புலிநகந்தரித்த கண்டத்தையுடைய, எயிற்றியர் - குறமங்கையர், பூவினில் பரப்ப - அவ்விடத்திற் சஞ்சரியாநிற்பவும்.

(வி-ரை.) மணத்தல் - கலத்தல். உயங்கல் - போதல். மறுத்தல் - தடுத்தல். குரல் - கழுத்து. பூ-இடம். பரத்தல்-சஞ்சரித்தல்.

'குழவியங்கதிர்' என்பதுமுதல் 'எதிரெதிர்மலர' என்பதுவரை.
(25—26 வரிகள்.)

(ப-ரை.) குழவி அம் கதிர் - காலைக்கதிரவன் கிரணத்தை, பெற - பெறுதற்கு, திரு மலர் - தாமரைமலர்கள், அணங்க - வாடவும், கயிரவம் - ஆம்பல்கள், இனத்தொடு - தம்மினத்துடனே, எதிர் எதிர் மலர - எதிருமிடந்தோறு மலராநிற்பவும்.

(வி-ரை.) குழவியங்கதிர் என்பதில் அம் சாரியை, அழகெனினுமாம் (பாலசூரியகிரணம்). இலக்குமிக்குத் தவிசாயிருத்தலால் தாமரையைத் 'திருமலர்' என்றார். அணங்கல் - வாடல்.

'குமரி' என்பதுமுதல் 'குளிர' என்பதுவரை.
(27—28 வரிகள்.)

(ப-ரை.) குமரியர் காமமும் - சிறுமியரது விரகாக்கினியும், கூவலும் - கிணற்றுநீரும், வெதுப்புற - சுடவும், நிலமகள் உடலமும் - பூமிதேவியின் சரீரமும், திங்களும் - சந்திரனும், குளிர - குளிரவும்.

(வி-ரை.) கூவல் - ஆகுபெயர். வெதுப்புற - ஒருசொல். வெதுப்புறு - பகுதி.

'ஒலிகடல்' என்பதுமுதல் 'மணக்க' என்பதுவரை.
(29—30 வரிகள்.)

(ப-ரை.) ஒலி கடல்-ஒலிக்கின்ற கடலினிடத்து, இப்பி-இப்பிகள், தரளம் சூல் கொள - முத்துக்கருப்பங்கொள்ளாநிற்கவும், இவை முதல் மணக்க - இவைமுதலிய குறிகள் தோன்றும்படி.

(வி-ரை.) ஒலிகடல் - வினைத்தொகைநிலைத்தொடர். இப்பி - முத்துச்சிப்பி. மணத்தல் - மிகுதியாய்த் தோன்றுதல்.

'எழுந்தகார்' என்பதுமுதல் 'விடுமெதி' என்பதுவரை.
(30—31 வரிகள்.)

(ப-ரை.) எழுந்த கார் - வந்தகார்காலத்தை, கண்டை-நீ கண்டாய், வறு நீர் - வற்றிய நீரிலுள்ள, மலர் என - மலர்கள் வாடுதல் போல, மாழ்கலை - உள்ளம் வாடுதலை. விடுமெதி - ஒழிவாயாக.

(வி-ரை.) கார்-ஆகுபெயர். கண்டை-முன்னிலையொருமை யிறந்தகாலத் தெரிநிலைவினைமுற்று. மாழ்கல் - வாடுதல், இதனீற்றை யிரண்டனுருபு. விடுமெதி யென்பதில் மதி முன்னிலையசை யிடைச்சொல்.

'மறையடிவழுத்திய' என்பதுமுதல் 'வழுத்தினர்போல' என்பதுவரை.
(32—35 வரிகள்.)

(ப-ரை.) மறை அடி வழுத்திய - வேதங்கள் பாதபூசை பண்ணிய, மறைவனத்து - திருமறைக்காட்டில், ஒருநாள் - முன்னொருகாலத்து, மணி சுடர் நறு நெய் - அழகிய விளக்கினெய்யை, கவர் மதி - உண்ணுமெண்ணமுற்ற, கருப்பைக்கு - காரெலிக்கு, இருவகை எழ் எனும் - மேலுங் கீழுமாகிய பதினன்கென்னப்பட்ட, இரு உலகு அனைத்தும் - பெரிய வுலகமுழுதும், கொடுத்தவன் - தந்தருளின கடவுளது, கூடல்-மதுரைத்திருப்பதியை, வழுத்தினர் போல - வாழ்த்தினவர்போல.

(வி-ரை.) அடி - பாதம். வழுத்தல்-தோத்திரஞ்செய்தல் எனினுமாம். வனம் - காடு. மறைவனம் - மறைக்காடு (வேதாரணியம்). கவர்தல் - கவர்ந்துண்ணல். மதி - எண்ணம். திருவுலகு அழகிய வுலகங்கள் எனினுமமையும். வழுத்தல்-வாழ்த்தல். திருப்பதி-திவ்ய க்ஷேத்ரம்.

'இருபுறம்' என்பதுமுதல் 'செங்கரங்கூப்புக' என்பதுவரை.
(36—39 வரிகள்.)

(ப-ரை.) ஒன்னலர் முற்றி - பகைவரைவென்று, ஒரு தேர் வீரத்தினர்க்கு-ஒப்பில்லாத தேர்மேல் வருந்தலைவருக்கு, இருபுறம் - இருபக்கத்தினும், போற்ற-போற்றல்செய்ய, ஒருங்குபு படர-சேனை

கள் நெருங்கிச்சூழ, பாசறை சென்ற - முன்னர் பாசறைக்குப்போயின, நாள் - நாள்களை, நிலம் குழிய எண்ணி - தரைகுழிய எண்ணியெண்ணி, விரல் தேய்ந்த - விரல்கள் தேய்ப்புண்ட, செம் கரம் கூப்புக - செங்கையைக் குவித்து வணங்குக.

(வி-ரை.) முற்றல் - முடித்தல் (வெல்லல்). வரத்து - வரவு. போற்றல் - வணங்கல். ஒருங்கல் - நெருங்கல். ஒருங்குபு - செய்பு என்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம். பாசறை - படைவீடு. குழித்தல் - பள்ளமாதல். கூப்புதல் - குவித்தல் (குவித்துவணங்கல்).

கார்வந்தது கண்டனை, இனி யாழ்குதலை விடுக, கூடல் வழுத்தினர்போல ஒன்னலரை முற்றி தேர்வரத்தினர்க்கு, நிலங்குழிய எண்ணி விரல்தேய்ந்த கரங்கூப்புகவென வினைமுடிவு செய்க. (கூ)

திருக்கோவையார் ௩௬௮-ம் செய்யுள்.

பள்ளியிடத்தூடல்.

பள்ளியிடத்தூடலென்பது—வாயின்மறுத்த தலைமகள், ஆற்றாமையே வாயிலாகப் புக்குப் பள்ளியிடத்தானாகிய தலைமகனோடு, நின்னை யிடைவிடாது நுகர்தற்கு முற்காலத்துத் தவத்தைச் செய்யாத தீவினையேனை நோவாது, இன்றிவ்வாறாகிய நின்னை நோவதென்னோ, அதுகிடக்க, நின் காதலிமார் புறமேசுற்று நினக்குப் புதிதாகச்செய்த அப்புல்லுதலை யாஞ்செய்யமாட்டேம், அதனாலெம்மைத் தொடாதே, எங்கலையை விடுவாயாகவெனக் கலவிகருதிப் புலவாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

தவஞ்செய் திலாதவெந் தீவினை யேம்புன்மைத் தன்மைக்கெள்ளா
தெவஞ்செய்து நின்றிவளி யின்றுனை நோவதெ னத்தன்முத்தன்
சிவன்செய்த சீரரு ளார்தில்லை யூரநின் சேயிழையார்
நவஞ்செய்த புல்லங்கண் மாட்டேந் தொடல்விடு நற்கலையே.

பீடிவர் கற்பிற் றேடிவர் கோதை
ஆடவன் றன்னோ டூடி யுரைத்தது.

(ப-ரை.) அத்தன்-(உலகத்துள்ள யாவர்க்கும்) தந்தை, முத்தன்-(இயல்பாகவே) பாசத்தினின்று நீங்கினவன், சிவன் - (எல்லாவுயிர்கட்கும் என்ஞான்றும் நன்மையையே செய்தலால்) சிவன், செய்த - அவனாற் செய்யப்பட்ட, சீர் அருள் ஆர் - சிறந்த அருள் நிறைந்த, தில்லை - தில்லையிலுள்ள, ஊர - ஊரனே, தவம் செய்திலாத - முற்காலத்துத் தவஞ்செய்யாத, வெம் தீவினையேம் -

வெய்ய தீவினையையுடைய யாம் (உன்னால் ஆதரிக்கப்படாத எமது), புன்மைத்தன்மைக்கு - புன்மையின்பொருட்டு, எள்ளாது - (எம்மையே) இகழாமல், எவ்வம் செய்துநின்று - (உனக்குத்) துன்பஞ் செய்துநின்று, இன்று இனி உன்னை நோவது என் - இப்பொழுது இனி நின்னை நோதல் என்னாம், நின் சேயிழையார் - (அது நிற்க) உன் சேயிழையார், நவம்செய்த - உனக்குப் புதிதாகச்செய்த, புல்லங்கள் - புல்லல்களை, மாட்டேம் - யாம் செய்யமாட்டேம், (அதனால் எமது) நல் கலை - நல்லகலையை, தொடல் - தொடாதை, விடு - விடுவாயாக, எ-று.

(வி-ரை.) எவ்வம் எவமென நின்றது. காதலில்லை யாயினுங் கண்ணோட்ட முடைமையான் இகழ்ந்து வாளாவிருப்ப பாட்டாமையின், எம் புலவியான் நினக்குத் துன்பமாந் துணையேயுள்ள தென்னுங் கருத்தான் 'எவஞ்செய்து நின்று' என்றாள். இனிபெண்பது - நீ யிவ்வாறுயின் பின்னென்னும் பொருட்டாய்நின்றது. 'சிவன்செய்த சீருளாந்தில்லையூர' என்றதனைன், நின்றாற் காயப்பட்டாராயினுங் காதலிக்கப்படாநின்றேயெனவும் தவஞ்செய்திலாத வெந்தீவினையே மென்றதனான், எம்மாற் காதலிக்கப்பட்டாராயினுங் காயப்படா நின்றேமெனவுங் கூறியவாறும். புல்லலென்பது புல்லமென விரிந்துநின்றது. புல்லமென்பதனைப் புன்மையென்று நின் சேயிழையார் புதிதாகச் செய்த குறிகளைப் பொறுக்கமாட்டேமென் றுரைப்பினுமமையும். எவன்செய்து நின்றெனப் பாடமோதி, தவஞ்செய்திலாத வெந்தீவினையேம், இன்றுன்னை நோவாது என் செய்து நின்றென்றும் எண்ணத்தென்று முரைப்பாருமுளர். எள்காதென்பதூஉம் பாடம்.

நேரிசையாசிரியப்பா.

பெருநிலத் தேவர்கண் மறைநீ ருகுப்ப
மற்றவர் மகத்துள் வளரவி மாந்த
விடையோ னருச்சனைக் குரிமையின் முன்னவ
னன்னவன் றன்னுடன் கடிகையே முமா
வன்றியு மிமையாக் கண்ணெனல் காட்ட
வாயிரம் பணாடவி யரவுகடு வாங்கத்
தேவருண் மருந்துட னீடநின் றுதவ
வுடன்முனி செருவின ருடல்வழி நடப்ப
நாரண்ணன் முதலாந் தேவர்படை தோற்றத்

தண்மதிக் கலைக டானற வொடுங்க
வெரிந்தெழு மரக்க ரேனையர் மடிய
மறையவன் குண்ட முறைமுறை வாய்ப்ப
வவன்றரு முலகத் தருந்தொழி லோங்கப்
பாசுட லுளமா வேழணி பெற்ற
வொருகாற் றேர்நிறைந் திருளுடைத் தெழுந்த
செங்கதிர் விரித்தசெந் திருமலர்த் தாமரைப்
பெருந்தே னருந்திபெப் பேரிசை யனைத்தினு
முதலிசைச் செவ்வழி விதிபெறப் பாடியத்
தாதுட றுதைந்தமென் றழைச்சிறை வண்டினம்
பசுந்தாட் புல்லிதழ்க் கருந்தா ளாம்பற்
சிறிதுவா மதுவமுங் குறைபெற வருந்தியப்
பாசடைக் குலகவர் பயிலாத் தாரியை
மருளொடு குறிக்கும் புனலணி யூர
தானவர்க் குடைந்து வானவ ரிரப்ப
வுழறேர்ப் பத்தினன் மகவென நாறி
முனிதழற் செல்வ முற்றிப் பழங்கற்
பெண்வரச் சனகன் மிதிலையிற் கொடுமர
மிறுத்தவன் மகட்புணர்ந் தெரிமழு விராமன்
விற்கவர்ந் தன்னை விணையுள்வைத் தேவத்
துணையு மிளவலுந் தொடரக்கான் படர்ந்து
மாக்குக னதிவிட வூக்கி வனத்துக்
கராதிமா ரீசன் கவந்த னுயிர்மடித்
திருசிறைக் கழுகினற் குலந்த கடன்கழித்
தெறிவளி மகனைநட் டேழு மரத்தினுக்
கரிக்குக் கருங்கடற் கொரோவொரு கணைவிடுத்
தக்கடல் வயிறடைத் தரக்கனுயிர் வெள்ளி
யிலங்கையவ் வரக்கற் கிளையோன் பெறுகெனத்
தமதூர் புகுந்து முடிசுமந் தோர்க்கு
நான்முகத் தவர்க்கு மிருபாற் பகுத்த
வொருநுதற் கண்ணவ னுறைதரு கூடற்
றெளிவேற் கட்குறுங் தொடியினர் காணி

னின்பா லளியு நீங்கி
யின்புயின் றொழிக்குமெங் காறொடல் சென்மே.

பெருநிலத்தேவர்கள் - காறொடல்சென்மே. பகுதி - பரத்தையிற்பிரிவு. துறை - பள்ளியிடத்தூடல்.

'பெருநிலத்தேவர்கள்' என்பதுமுதல் 'அவிமாந்த' என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) பெரு நிலம் தேவர்கள் - பெரியநிலத்தேவர்களாகிய அந்தணர், மறை-வேதவொழுக்கத்திற்குரிய, நீர் உகுப்ப-நீரிறைக்கவும், அவர் - அவ்வந்தணரது, மகத்துள்-வேள்விக்களத்தில், வளர் அவி மாந்த - மிக்க அவியை யுண்ணவும்.

(வி-ரை.) நிலத்தேவர்-பூசுரர் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. அவியுணவு - அவிர்ப்பாகமாகக் கொடுக்கப்படும் தேவருணவு. மாந்தல் - உண்ணல்.

'விடையோன்' என்பதுமுதல் 'கடிகையேழமர' என்பதுவரை.

(3—4 வரிகள்.)

(ப-ரை.) விடையோன் அருச்சனைக்கு - சிவபூசனைக்கு, உரிமையின் - உரிமையினாலே, முன்னவன் - முதல்வனாகி, அன்னவன் தன்னுடன் - அச்சிவபிரானுடனே, ஏழ் கடிகை அமர - ஏழு நாழிகையளவும் பொருந்தவும்.

(வி-ரை.) விடையோன்-இடபவாகனத்தையுடையவன். உரிமையின் என்பதில் இன் என்னும் ஐந்தாவது மூன்றாவதன் கருவிப் பொருட்டு. அன்னவன் தன்னுடன் என்பதில் தன் சாரியை. அமர்தல் - பொருந்துதல்.

'அன்றியும்' என்பதுமுதல் 'கடுவாங்க' என்பதுவரை.

(5—6 வரிகள்.)

(ப-ரை.) அன்றியும் - இஃதல்லாமலும், இமையா - இமைத்தலில்லாத, கண் எனல்- (தான் சிவபெருமானது) கண்களுளொன்றாயிருத்தலை, காட்ட - (யாவர்க்கும்) காட்டவும், ஆயிரம் பண அடவி-அநேகம் படத்திரளையுடைய, அரவு - பாம்புகள், கடு வாங்க - நஞ்சைக் கவரவும்.

(வி-ரை.) பணம் - படம். அடவி - திரள். வாங்கல்-கவர்தல்.

'தேவர்' என்பதுமுதல் 'நடப்ப' என்பதுவரை.

(7—8 வரிகள்.)

(ப-ரை) தேவர் உண் மருந்து - தேவர்கள் உண்கின்ற அமிர்தத்தை, உடல் நீட நின்று உதவ - நெடுங்காலந் தேகத்துடனிருக்கும்படியுதவவும், உடல் முனி செருவினர்-உடலை விரும்பாத வீரர்கள், உடல் வழி நடப்ப - தன்னுடலாகிய மண்டில நெறியே செல்லவும்.

(வி-ரை.) மருந்து - அமிர்தம். முனிதல் - வெறுத்தல் (விரும்பாமை). செரு - போர். செருவினர் என்றமையால் வீரர்களென்றுரைக்கலாயிற்று.

'நாரணன்' என்பதுமுதல் 'அறவோடுங்க' என்பதுவரை.

(9—10 வரிகள்.)

(ப-ரை.) நாரணன் முதல் ஆம் தேவர் - திருமால்முதலிய தேவரது, படை தோற்ற - திகிரிப் படையைக் காட்டவும், தண் மதி கலைகள்-சட்டமாகிய சந்திரனது கலைகள், தான் அற ஒடுங்க - முழுதுந் தன்னிடத்தி லொடுங்கவும்.

(வி-ரை.) நாரணன் என்ற குறிப்பால் படை திகிரிப்படையைக்குறித்தது. ஒடுங்கல் - அடங்கல்.

'எரிந்தெழும்' என்பதுமுதல் 'வாய்ப்ப' என்பதுவரை.

(11—12 வரிகள்)

(ப-ரை.) எரிந்தெழும் - சினந்தெழுகின்ற, அரக்கர் வினையர்-அரக்கர்முதலிய தீயோர், மடிய - மாளவும், மறையவன் குண்டம் - பிரமனது யாககுண்டம், முறை முறை வாய்ப்ப - விதிமுறை நடப்பவும்.

(வி-ரை.) எரிதல் - சினத்தல் (கோவித்தல்). வேதாதிகாரியாதலால் பிரமனை 'மறையவன்' என்றார்.

'அவன்தரும்' என்பதுமுதல் 'இருளுடைத்தெழுந்த' என்பதுவரை.

(13—15 வரிகள்.)

(ப-ரை.) அவன் தரும் - அப்பிரமனாற் படைக்கப்பட்ட, உலகத்து - உலகங்களில், அருந்தொழில் ஓங்க - தானின்றியமையாத தொழில்கள் பெருகவும், பாசு உடல் உளை-பச்சுடலும் பிடரிமயிருமுள்ள, மா எழ் அணி பெற்ற - எழுபரிக ளணியுறப்பூண்ட, ஒருகால் தேர் நிறைந்து-ஒற்றையாழித்தேரில் கிரணங்களெங்கும் பரவ, இருள் உடைத்து எழுந்த - இருளைக்கிழித்துதித்த.

(வி-ரை.) தருதல் - படைத்தல். பாசு - பச்சை. உளை-பிடரிமயிர் (புறமயிர்). மா - விலங்கின் பொதுப்பெயராயினும், பாசுடல் உளை மா எழ் அணிபெற்ற ஒருகால் தேர் எனமேல் வருவனவற்றால் குதிரையை யுணர்த்திற்று. கால், ஆழி யென்பன தேர்ச்சக்கரத்தின் பரியாய நாமங்கள். நிறைந்து-எச்சத்திரிபு.

'செங்கதிர்' என்பதுமுதல் 'விதிபெறப்பாடி' என்பதுவரை.

(16—18 வரிகள்.)

(ப-ரை.) செங்கதிர் - சூரியன், விரித்த - மலர்த்தின, செம் திரு - செவ்விய திருமகட்கிடமாகிய, தாமரைமலர் - தாமரைப்பூவினிடத்து, பெருந்தேன் அருந்தி-மிக்க தேனையுண்டு, எப்பேரிசையனைத்தினும்-எவ்வகைப்பட்ட இசைகள் பலவற்றினும், முதலிசை-முற்பட்ட இசையாகிய, செவ்வழி - செவ்வழிப்பண்ணை, விதிபெற பாடி - முறையாகப்பாடி.

(வி-ரை.) விரித்தல் - மலர்த்தல். பெருமை - ஈண்டு மிகுதிப் பொருளது.

'அத்தாது' என்பதுமுதல் 'குறைபெறவருந்தி' என்பதுவரை.

(18—21 வரிகள்.)

(ப-ரை.) அ தாது-அத்தாமரைப் பூந்தாதுக்களை, உடல் துதைந்த - தமதுடலிற் றிமிர்ந்த, மெல் தழை சிறை-தளிர்போன் மென்மையாகிய சிறையுள்ள, வண்டு இனம் - வண்டின் கூட்டம், பசுந்தாள் - பச்சைத்தண்டினையும், புல் இதழ்-சில இதழ்களையுமுடைய செவ்வல்லிப்பூவிலும், கருந்தாள் ஆம்பல் - கரியதாளுள்ள நீலோற்பலப்பூவினும், சிறிது மதுவமும் - சிறிது தேனையும், உவா - வளர் மதிபருவத்தில், குறைபெற அருந்தி - நிறைவு அறவுண்டு.

(வி-ரை.) தாது - மகரந்தம். துதைதல் - திமிர்தல் (பூசுதல்). தழை - தளிர். இனம் - கூட்டம். தாள் - தண்டு. புன்மை சின்மை மேற்று. மதுவம் என்பதில் அம் சாரியை. குறைபெற - சிறிதாக.

'அப்பாசடைக்கு' என்பதுமுதல் 'மகவெனநாறி' என்பதுவரை.

(21—25 வரிகள்.)

(ப-ரை.) அ பாசு அடைக்கு - அவற்றின் பச்சிலைப்பரப்பால், உலகவர் - உலகத்திலுள்ளோர், பயிலா தாரியை - செல்லமாட்டாத வழியை, மருளொடு - மயக்கத்துடனே, குறிக்கும் - குறித்தற்கிடமாகிய, புனல் அணி ஊர - நீரால் வளப்பமிக்கவூரனே, தானவர்க்கு உடைந்து-அரக்கரால் வருந்தி, வானவர் இரப்ப-தேவர்கள் வேண்ட, உழல் தேர் பத்தினன் - ஓடுகின்ற தேரினால் பத்துத் திசைகளையும் வென்ற தயரதற்கு; மகவு என நாறி - மைந்தனென்றவதரித்து.

(வி-ரை.) தாரி - வழி. மருள் - மயக்கம். அணி-ஈண்டு வளப்பத்தைக் குறித்தது. உடைந்து - தோற்று எனினுமாம். இரத்தல் - வேண்டல். நாறல் - தோன்றல் (அவதரித்தல்).

'முனிதழற்செல்வமுற்றி' என்பதுமுதல் 'அவன்மகட்புணர்ந்து' என்பதுவரை.

(26—28 வரிகள்.)

(ப-ரை.) முனி - (விசுவாமித்திர) முனிவனது, தழல் செல்வம் முற்றி - யாகம்பெருக நிறைவெற்றி, பழம் கல் - (கௌதமனால் சபிக்கப்பட்ட) பழைய கல்லானது, பெண் வர - பெண்ணுருவாகி வர, சனகன் - சனகனென்னு மன்னனது, மிதிலையில் - மிதிலைப் பட்டினத்தில், சொடு மரம் இறுத்து - வில்லையொடித்து, அவன் மகள் புணர்ந்து-அம்மன்னவன் மகளை மணந்து.

(வி-ரை.) முனிவர்க்கு யாகாதி சற்கிரியைகளே பெருஞ் செல்வமாதலால் 'முனிதழற் செல்வம்' என்றார். முற்றல்-முடித்தல் பெண் என்றது அகலிகையை. கொடுமரம்-வில். கோடுமரம் கொடுமரம் எனக் குறுகிற்று. இறுத்தல் - ஒடித்தல்.

'எரிமழுவிராமன்' என்பதுமுதல் 'கான்படர்ந்து' என்பதுவரை.

(23—30 வரிகள்.)

(ப-ரை.) எரி மழு இராமன் - எரிகின்ற பரசிராமனது, வில் கவர்ந்து - வில்லினை வாங்கி, அன்னை - கைகேசி, வினையுள் வைத்து

எவ - வஞ்சத்தையுள்ளேவைத்து அனுப்பலால், துணையும் இளவலும் - தேவியும் இளையவனும், தொடர - உடன்போக, கான் படர்ந்து - காட்டிற்சென்று.

(வி-ரை.) மழு - பரசு. வாங்கல் - வளைத்தல். வினையுள்வைத்தனுப்பலால் என வரலால் அன்னையென்றது கைகேசியை. வினை - வஞ்சம். இம்மைமறுமைப் பேறுகட்குத் துணையா யிருப்பவளாதலால் மனைவியைத் 'துணை' என்றார். படர்தல் - செல்லல்.

'மாக்குகன்' என்பதுமுதல் 'உயிர்மடித்து' என்பதுவரை.

(31—32 வரிகள்.)

(ப-ரை.) மா குகன் - பெரிய வேடனாகிய குகன், நதிவிட - கங்கையினின்றுங் கடத்துவிக்க, ஊக்கி - கடந்து, வனத்து - காட்டில், கராதி - கரன்முதலியோர், மாரீசன் கவந்தன் - மாரீசன் கவந்தன் என்பவர்களது, உயிர் மடித்து - உயிரை வாங்கி.

(வி - ரை.) வேடர்க்கரசனாதலால் குகனை 'மாக்குகன்' என்றார். நதிவிடல்-நதியைத் தாண்டுவித்தல். குகன் நதிவிட என்றமையால் நதி கங்காநதியைக் குறித்தது. ஊக்கல் - கடத்தல். வாங்கல் - கவர்தல்.

'இருசிறைக்கழுகினர்க்கு' என்பதுமுதல் 'நட்டு' என்பதுவரை.

(33—34 வரிகள்.)

(ப-ரை.) இரு சிறை கழுகினற்கு - இருசிறையையுடைய கழுகினத்திற்றோன்றிய சடாயுவுக்கு, உலந்த கடன் - உத்தரக்கிரியையினை, கழித்து - முடித்து, எறி வளி மகனை - வீசாநின்ற வாயுபுத்திரனை, நட்டு - சிநேகித்து.

(வி-ரை.) இருஞ்சிறையென்றும் பாடம், இதற்குப் பெரிய சிறகு என்பது பொருள். உலத்தல் - சாதல். உலந்தகடன் என்றதனால் இறந்தபின் செய்யும் உத்தரக்கிரியையென் றுரைக்கலாயிற்று. சதாகதி யென்னுப் பெயர் பூண்டு இடையறாது சரிப்பவனாதலால் வாயுவை 'எறிவளி' என்றார். வாயுபுத்திரன்-அநுமான். நட்டு என்பதற்குப் பகுதி நள்.

'ஏழுமரத்தினுக்கு' என்பதுமுதல் 'ஒருகணைவிடுத்து' என்பதுவரை.

(34—35 வரிகள்.)

(ப-ரை.) ஏழு மரத்தினுக்கு - மராமரம் ஏழுக்கும், அரிக்கு - வாலியென்னுங் குரக்கிறைவனுக்கும், கருங்கடற்கு - பெரிய தென் கடலுக்கும், ஒரோவொரு கணை விடுத்து - தனித்தனி யோரம்பு களை யெய்து.

(வி-ரை.) அரி - குரங்கின் பொதுப்பெயர், அது ஈண்டைக் கேற்ப வாலியை யுணர்த்திற்று.

'அக்கடல்' என்பதுமுதல் 'பெறுகென' என்பதுவரை.

(36—37 வரிகள்.)

(ப-ரை.) அக்கடல் வயிறு அடைத்து - அக்கடலில் திருவணை கட்டி, அரக்கன் உயிர் வௌவி - இராவணனை மடித்து, இலங்கை - இலங்கைப் பட்டினத்தை, அ அரக்கற்கு இளையோன் - விபீடண னென்னும் அவன் சோதரன், பெறுக என - பெற்றுக்கொள்ளக் கடவனெனத் தந்து.

(வி-ரை.) வயிறடைத்தல்-அணைகட்டற் பொருளது. இதுகா றும் நிகழ்ந்தவற்றால் அரக்கன் என்றது இராவணனை யுணர்த்திற்று. பெறுகெனவென்பது பெறுகவென வென்பதன் விகாரம்.

'தமது' என்பதுமுதல் 'ஒருநுதற்கண்ணவன்' என்பதுவரை.

(38—40 வரிகள்.)

(ப-ரை.) தமது - தமக்குரிய, ஊர் புகுந்து - அயோத்தியில் மீண்டுவந்து, முடி சுமந்தோர்க்கும் - முடிதரித் தரசியல் நடாத்திய திருமாலுக்கும், நான்முகத்தவற்கும் - பிரமதேவற்கும், இரு பால் பகுத்த - இரண்டு பாகத்தையும் பகுத்தருளிய, ஒரு நுதல் கண் ணவன் - ஒருகண்ணை நெற்றியிலுள்ள சொக்கலிங்கன்.

(வி-ரை.) முடி - மகுடம். நான்முகத்தவன் - நான்குமுகங் களை யுடையவன். இருபாற்பகுத்த வொருநுதற் கண்ணவன் என மேல்வருதலால் நான்முகத்தவன் என்றது பிரமனையென்பது தெள் ளிதின் விளங்கிற்று. ஒருநுதற்கண்ணவன் - ஒப்பற்ற நெற்றிக் கண்ணன் எனினுமாம்.

'உறைதருகூடல்' என்பதுமுதல் 'சேன்மே' என்பதுவரை.
(40—43 வரிகள்.)

(ப-ரை.) உறைதரு கூடல் - வீற்றிருக்கின்ற மதுரையின் கண், தெளி வேல் கண் - அச்சவடிவாகிய வேல்போன்ற கண்ணும், குறுந்தொடியினர் - சிறியவளையணிந்த கையுங்கொண்ட பரத்தையர், காணின் - (எம்பால்வந்து நீ ரிங்ஙனம் புகுவது) கண்டால், நின்பால் - நும்மிடத்து (அவர்க்குள்ள), அளியும் நீங்கி - கருணையும் நீங்கி, இன்பும் - இன்பமும், இன்று ஒழிக்கும் - இப்போதே ஒழிக்கப்படும் (ஆதலால்), எம் கால் தொடல் - எமது காலைத் தீண்டன்மின், சேனம் - நீர் செல்லுமின்.

(வி-ரை.) குறுமை - சிறுமை. தொடி-வளையல். தொடிவளர் என்புழி தொடி யணிதற்குரிய கை வருவித்துரைக்கப்பட்டது. அளி-கருணை.

இச்செய்யுளில் ஒருமை பன்மைகள் மயங்கிவந்த வழுவமைதியை யுய்த்துணர்ந்துகொள்க. சென்ம் என்பது செல்லுமென்னும் முற்றீறு கெட லகரம் மகரத்தோடு மயங்காமையின் னகரமாகத் திரிந்து ஈரொற்றாய் மயங்கி நின்றதென் றுணர்க.

புனலணியூர! முடிசுமந்தோர்க்கும் நான்முகத்தவற்கும் இருபாற் பகுத்த ஒருநுதற் கண்ணவன் கூடலில், தொடியினர் காணின், நின்பாலளியு மின்பு நீங்குவர், ஆதலால் எங்கால் தொடன்மின் சென்மினென வினைமுடிவு செய்க. (கூசு)

திருக்கோவையார் உகஅ-ம் செய்யுள்.

நெறிவிலக்கிக் கூறல்.

நெறிவிலக்கிக்கூறலென்பது—அயர்வகற்றிக்கொண்டு செல்லாநின்ற தலைமகனை, இனிச்செல்லு நெறிக்கண் நன்மக்களில்லை, நீ தனியை, இவள் வாடினாள், பொழுதுஞ் சென்றது, ஈண்டுத் தங்கிப் போவாயாகவென, அவ்விடத்துள்ளோர் வழிவிலக்கிக் கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

விடலையுற் றாரில்லை வெற்முனை வேடர்த மியைமென்பூ
மடலையுற் றார்குழல் வாடின ளென்மன் னுசிற் றம்பலவர்க்
கடலையுற் றாரினெ றிப்பொழிந் தாங்கருக் கன்சுருக்கிக்
கடலையுற் றான்கடப் பாரில்லை யின்றிக் கடுஞ்சுரமே.

சுரத்திடைக் கண்டவர் சுடர்க்குழை மாதொடு
சாத்தணி வில்லோய் தங்குகென்றது.

(ப-ரை.) விடலை - விடலாய், உற்றார் இல்லை-(இனிச் செல்லு நெறிக்கண்) நன்மக்களில்லை, வெம் முனை வேடர் - வெய்ய முனையிடத்து வேடரே, தமியை-நீ தனியை, மெல் பூ மடலை உற்று ஆர் குழல் - மெல்லிய பூவினிதழைப் பொருந்தி நிறைந்த குழலையுடையாள், வாடினள் - (வழிவந்த வருத்தத்தால்) வாடினாள், மன்னு - நிலைபெற்ற, சிற்றம்பலவர்க்கு - சிற்றம்பலத்தை யுடையவர்க்கு, அடலை - ஆட்படுந் தன்மையை, அற்றாரின் - பொருந்ாதவர்கள் போல, எறிப்பு ஒழிந்து - விளக்கமொழிந்து, ஆங்கு - அவ்விடத்து, அருக்கன் - சூரியன், சுருக்கி - தன் கிரணங்களை யொடுக்கிக்கொண்டு, கடலை உற்றான் - கடலை யடைந்தான், இ - இந்த, கடுஞ் சுரம் - கடிய சுரத்தை, இன்று - இப்பொழுது, கடப்பார் இல்லை - கடப்பவருமில்லை (அதனாலீண்டு நீ தங்குவாயாக, எ - று.)

(வி-ரை.) வேடரொடு சாராத நன்மக்கள் இவர்க்கணிய ராதலின் அவரை 'உற்றார்' என்றார். வேடரி லுற்றாரில்லையென்று நன்றி செய்யாரென்பது பயப்ப வுரைப்பினு மமையும். மடலென்றது - தாழம்பூ மடலை யென்பாருமுளர். சிற்றம்பலவர்க்கென்னு நான்கனுருபு பகைப் பொருட்கண் வந்தது. அருக்கன் பெருக்கியென்றும் பெருகி யென்றும் பாடமாயின், கெடுதலை மங்கல மரபிற் கூறிற் றென்க.

நேரிசையாசிரியப்பா.

வனப்புடை யனிச்சம் புகைசூழ் கியதென
விவ்வணங் கவ்வதர்ப் பேய்த்தேர்க் கிடைந்தன
டென்றிசைக் கோமகன் பகடு பொலிந்தன்ன
கறையடிச் சென்னியி னகநுதி போக்கிக்
குருத்தயில் பேழ்வாய்ப் பற்படைச் சீய
மதர்தொறுங் குழூவு மவற்றினு மற்றவன்
கடுங்காற் கொற்றத் தடுந்தூ துவரெனத்
தனிபார்த் துழலுங் கிராதரும் பலரே
பொருகா லிரதத் தெழுபரி பூட்டி
யிருவான் போகிய வெரிசுடர்க் கடவுண்
மாதவ ராமென மேன்மலை மறைந்தனன்

மின்பொலி வேலோ யன்பினர்க் கருளுங்
கூடற் பதிவரு மாடற் பரியோ
னெட்டெட் டியற்றிய கட்டமர் சடையோ
னிருசர ணடைந்த மறுவிலர் போல
வருளுடன் றமியை வாடினை யைய
தண்ணீர் வாய்தருஞ் செந்நிறச் சிதலை
யதவுதி ரரிசி யன்ன செந்தினை
நுண்பதந் தண்டேன் விளங்கனி முயற்றசை
வெறிக்கட் கவையடிக் கடுங்கான் மேதி
யன்புமகப் பிழைத்துக் கல்லறைப் பொழிந்த
வறட்பா லின்னவெம் முழையுள வயின்று
காருட லனுங்கிய பைங்கட் கறையடி
சென்னி தூங்கி நின்றது காட்டு
நெடுமரை யதள்வேய் சில்லிடக் குரம்பையின்
மற்றதன் றோலி னூற்றிரு வீருங்
கண்படுத் திரவி கீழுமு
னெண்பட நம்பதி யேகுதல் கடனே.

வனப்புடையனிச்சம்-ஏகுதல்கடனே. பகுதி - உடன்போக்கு. துறை-நெறிவிலக்கிக்கூறல்.

மின்பொலி வேலோய்.

(12—வது வரி.)

‘வனப்புடை’ என்பதுமுதல் ‘இடைந்தனள்’ என்பதுவரை.

(1—2 வரிகள்.)

(ப-ரை.) மின் பொலி வேலோய் - மின்போல் விட்டுவிட்டு ஒளிர்கின்ற வேலையுடையாய், வனப்பு உடை அனிச்சம் - அழகுள்ள அனிச்சமலரானது, புகை - புகையால், மூழ்கியது என-மூடப்பட்டதுபோல, இ அணங்கு - இப்பெண், அ அதர் - அப்பாலைவழியிற் கண்ட, பேய்த்தேர்க்கு - கானலுக்கு, இடைந்தனள் - அஞ்சினள்.

(வி-ரை.) மின்பொலி - உவமைத்தொகை நிலைத்தொடர். அனிச்சம் - ஆகுபெயர். புகை என்பதனீற்றில் மூன்றனுருபு தொக்

கது. மூழ்கியது - செயப்பாட்டு வினைப்பொருளில் வந்தது. அதர் - என்பதன் ஈற்றில் ஏழனுருபும்பயனும் உடன்றொக்கன. கானல் - பேய்களுக்குத் தேராதலால் அதனைப் 'பேய்த்தேர்' என்றார். "பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே" என்றார் மேலோரும். இடைதல் - அஞ்சுதல்.

'தென்றிசைக்கோமகன்' என்பதுமுதல் 'சீயம்' என்பதுவரை,

(3—4 வரிகள்.)

(ப-ரை.) தென்திசை கோமகன் - இயமனுடைய, பகடு பொலிந்தன்ன - எருமையேறு ஒங்கினாற்போன்ற, கறையடி சென்னியில் - யானையின் மத்தகத்தில், நகநுதி போக்கி - கூறிய நகநுனியால் அறைந்து, குருத்து அயில் - மூளையை யுண்ணுகின்ற, பேழ்வாய் - பெரிய வாயையும், பல் படை - படைபோற் கூறிய பல்லையு முடைய, சீயம் - சிங்கங்கள்.

(வி-ரை.) எமன் தென்றிசைக்கு அரசனாதலால் அவனைத் 'தென்திசைக்கோமகன்' என்றார். பகடு-எருமையேறு (ஆண்எருமை); இது கடா எனவும், கிடா எனவும், கிடாய் எனவும் வழங்கும். யானை உரல்போலும் அடியினையுடையதாதலால் அதனை 'கறையடி' என்றார். கறை-உரல். கறையடி - உவமைத்தொகை நிலைத்தொடர். நுனியென்பத னீற்றில் மூன்றனுருபு தொக்கது. குருத்து-ஈண்டு மூளையைக் குறித்தது. அயிலல் - உண்டல்.

'அதர்தோறும்' என்பதுமுதல் 'பலரே' என்பதுவரை.

(6—8 வரிகள்.)

(ப-ரை.) அதர்தொறும் குழுவும் - வழிகள்தோறும் நெருங்குவன, அவற்றினும் - அவைகளினும் (கொடியராய்), மற்றவன் - இயமனது, கடுங்கால் - வேகமாகிய நடையையும் கொற்றத்து - வெற்றியையுமுடைய, அடுமை தூதுவர் என-கொல்கின்ற தூதர்போல, தனி பார்த்து - (அவ்வழிச் செல்வோரது) தனிமையை நோக்கி, உழலும்-அங்குச் சஞ்சரிக்கின்ற, கிராதரும் பலரே - மறவர்களோ பலருளர்.

(வி-ரை) குழுவுதல் - நெருங்குதல். கால்-ஆகுபெயர். கொற்றம் - வெற்றி. அடுதல் - கொல்லுதல். தனி - தனிமை. அதர்-வழி.

'ஒருகாலிரதத்து' என்பதுமுதல் 'மறைந்தனன்'என்பதுவரை.
(9—11 வரிகள்.)

(ப-ரை.) ஒருகால் இரதத்து - ஒற்றையாழித்தேரில், எழு பரி பூட்டி-எழு குதிரைகளைக் கட்டி நடத்தி, இரு வான் போகிய-பெரிய விண்ணிற் செல்கின்ற, எரிசுடர்க்கடவுள் - சூரியன், மாதவராம் என - பெரிய விருடிகள்போல, மேல் மலை மறைந்தனன்-குடதிசைமலையி லொளித்தனன் (ஆதலால்).

(வி-ரை.) கால் ஆழி யென்பன தேர்ச்சக்கரத்தின் பரியாய நாமங்கள். இருமை-பெருமை. சோம சூரியாக்கினிகளென்னு முச்சுடர்களுள்ளும் முதற்சுட ராதலால், சூரியனை சுடர்க்கடவுள், என்றார். மேல்மலை - மேற்றிசைமலை (அத்தமனகிரி). குடதிசை - மேற்றிசை.

'அன்பினர்க்கு' என்பதுமுதல் 'வாடினையைய' என்பதுவரை.
(12—16 வரிகள்.)

(ப-ரை.) அன்பினர்க்கு மெய்யன்பராகிய திருவாதவூரர்பொருட்டு, அருளும் - அருளுதற்கிடமாகிய, கூடல்பதி வரும் - மதுரைப் பதியி லெழுந்தருளிவந்த, ஆடல் பரியோன் - வெற்றியுள்ள வேதப் பரியுள்ளோன், எட்டெட்டு இயற்றிய - திருவிளையாடலறுபத்து நான்குஞ் செய்தருளிய, கட்டமர் - சுற்றப்பட்ட, சடையோன் - சடையை யுடையவனது, இரு சரண் - இரண்டு திருவடியையும், அடைந்த - புகலாயடைந்த, மறுவிலர்போல-தூயோர்போல, அருளுடன் - அருளுடனே, தமியைய - தனியாய், ஐய வாடினை - இறைவனே வாடினை.

(வி-ரை.) கூடற் பதிவரு மாடற் பரியோன் என மேல்வருதலால் அன்பினர் என்றது திருவாதவூரரைக் குறித்தது. புகல் - அடைக்கலம். மறு இலர் - குற்றமற்றவர். ஆடல்-வெற்றி. கட்டல் சுற்றல்.

'தண்ணீர்' எனபதுமுதல் 'கடுங்கான்மேதி' என்பதுவரை.
(17—20 வரிகள்.)

(ப-ரை.) தண்ணீர் - குளிர்ச்சியாகிய நீரினை, வாய்தரும் - வாயாலுமிழ்கின்ற, செந்நிறச்சிதலை - செய்ய நிறமுள்ள செல்லினை

யும், அதவு ஊதிர் அரிசியன்ன - உதிருகின்ற அத்திவிதையையொத்த, செந்தினை - செவ்விய தினையாலாகிய, நுண் பதம்-சிறிய சோறும், தண் தேன் - சுவையுள்ளதேனும், விளங்கனி-விளம்பழமும், முயல் தசை - முயலிறைச்சியும், வெறி கண் - வெறித்த கண்களையும், கவை யடி - பிளவாகிய குளம்பினையும், கடுங்கால் - விரைவாகிய நடையையுமுடைய, மேதி - காட்டெருமைகள்.

(வி-ரை.) வாய் - வாயால். தருதல்-உமிழ்தல். சிதலை-செல். அதவு - அத்தி. பதம்-சோறு.

'அன்புமகப்பிழைத்து' என்பதுமுதல் 'அயின்று' என்பதுவரை.

(21—22 வரிகள்.)

(ப-ரை.) அன்பு மகப்பிழைத்து - தமக்கினிய கன்றுகளைக் காணாமையால், கல்லறை-பாறைக் குழிகளில், பொழிந்த-சொரிந்த, வறட்பால் - உலர்ந்த பாற்கட்டியும், இன்ன - ஆகியவிவைகள், எம் உறை உள-எம்மில்லில் உள்ளன, அயின்று-புசித்து.

'காருடல்' என்பதுமுதல் 'காட்டும்' என்பதுவரை.

(23—24 வரிகள்.)

(ப-ரை.) கார் - மேகத்தை, உடல் - தன்னுடலின் வண்ணத்தால், அனுங்கிய - கெடுத்த, பைங்கண் - பசிய கண்ணையுடைய, கறையடி - யானை, சென்னி - தலையை, தூங்கி நின்றது - தொங்கவிட்டு நின்றதன்மையை, காட்டும் - காட்டுகின்ற.

(வி-ரை.) உடல் - ஆகுபெயர். அனுங்கல் - கெடுத்தல். தூங்கல் - தொங்கல்.

'நெடுமரை' என்பதுமுதல் 'இருவீரும்' என்பதுவரை.

(25—26 வரிகள்.)

(ப-ரை.) நெடு மரை - பெரிய மானினுடைய, அதள் - தோல்களால், வேய் - மேற்கூரை வேய்ந்துள்ள, சில்லிடைக்குரம்பையில் - நெருக்கமான இடமுள்ள குடிலினிடத்து, மற்று அதன் தோலில் - அந்த மான்தோலாகிய பாயலில், இருவீரும் உற்று - நீவிரிருவீருமிருந்து.

(வி-ரை.) குடம்பை - குடில்.

'கண்படுத்து' என்பதுமுதல் 'ஏகுதல்கடன்' என்பதுவரை.
(27—28 வரிகள்.)

(ப-ரை.) கண்படுத்து-இற்றையிரவில் துயில்கொண்டு, இரவி-சூரியனால், கீறுமுன் - இருள் விடியுமுன்னே, எண்பட - நுமது எண்ணம் முற்ற, நும் பதி-நுமக்குரிய பதியின்கண், ஏகுதல் கடன்-செல்லுதல் முறைமையாம்.

(வி-ரை.) கண்படுதல் - தூங்குதல். கீறுதல் - கிழிதல் (விடிதல்). எண் - எண்ணம்.

வேலோய்! நின்தலைவி கனலதர்ப் பேய்த்தேர்க் கிடைந்தனள், சியம் அதர்தொறுங் குழுவுங் கிராதரும் பலருளர், சுடர்க்கடவுளும் மலைமறைந்தனன், அன்பர்க்கருளும் கூடல்வரும் பரியோனாகிய எட்டெட்டியற்றிய சடையோனது சரணடைந்த மறுவிலர்போல அருளுடன் தமியை வாடினை (ஆதலால்), தினைச்சோறுந் தேனும் முதலிய எமதில்லின்கண் ணுள்ளவற்றையுண்டு இருவீரும் இற்றையிரவில் எமது குரம்பையிற் றயின்று, விடியுமுன் நும் எண்ணப்படி நும்பதிக் கேகுதல் கடனென வினைமுடிவு செய்க. (கூஎ)

திருக்கோவையார் களகூ - செய்யுள்.

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவியென்பது - சிறைப்புறமாகத் தலைமகள் ஆற்றுமை கூறக்கேட்ட தலைமகன், குறியிடைச்சென்று நிற்ப, தோழியெதிர்ப்பட்டு, நீ கான்யாறு பலவு நீந்திக் கைவேல துணையாக அஞ்சாது வந்தால் யாங்களிச்சோலையிடத்துண்டாகிய தெய்வத்துக் கஞ்சுவோம், அதனலிவ்விருளிடை வாற்பாலையல்லையெனத் தங்களச்சங்கூறி வரவுவிலக்காநிற்றல் அதற்குச் செய்யுள்:—

தாருறு கொன்றையன் றில்லைச் சடைமுடி யோன்கயிலை
நீருறு கான்யா றளவில நீந்திவந் தானினது
போருறு வேல்வயப் பொங்குரு மஞ்சுக மஞ்சிவருஞ்
சூருறு சோலையின் வாய்வரற் பாற்றன்று தூங்கிருளே.

நாறு வார்குழ லவ்வி நோக்கி
யாறுபார்த் துற்ற வச்சக் கிளவி.

(ப-ரை.) தார் உறு கொன்றையன்-தாராகிய மிக்க கொன்றையையுடையவன், தில்லை சடைமுடியோன்-தில்லைக்கண்ணுளனாகிய

சடையாணியுன்ற முடியையுடையவன், (அவனது) கயிலை - கைலையின், நீர் உறு-நீரினால் மிக்க, கான்யாறு-கான்யாறுகள், அளவு இல-எண்ணிறந்தனவற்றை, நீந்திவந்தால்-கடந்துவந்தால், (அவ்விடத்து) வயம்-வலியையுடைய, பொங்கு உரும்-பொங்கும் இடியேறு, நின து-உனது, போர் உறு வேல் - போர்த்தொழில்மிக்க வேற்படையை, அஞ்சுக-அஞ்சி நின்பால் வாராதொழிக, (ஆயினும்) மஞ்சு இவரும் - மஞ்சு பரக்கின்ற, சூர் உறு-தெய்வம் பொருந்திய, சோலையின்வாய்-சோலையினிடத்து, தூங்கு இருள் - செறிந்த இருட்கண், வரல்பாற்று அன்று - வரும்பான்மைத்தன்று (அத்தெய்வங்களையும் அஞ்சுதும்), எ-று.

(வி-ரை.) தாருறை கொன்றையனென்பது பாடமாயின், தார் தங்கு கொன்றையனென முதலாகிய தன்பொருட்கேற்ற வடையடுத்து நின்றதாக வுரைக்க. இப்பாடத்திற்கு ஏனை மூன்றடியும் உறையென் றேதுப. வரற்பாற்றன்றென்பது வினைமேனின்றது. நவ்வி நோக்கியது கிளவியென வியையும்.

நேரிசையாசிரியப்பா.

வெறிக்கூறுங் கதுப்பின் வெள்ளெயிற் றெயிற்றியர்
செம்மணி சுழற்றித் தேனிலக் கெறிதரப்
பெருக்கெடுத் திழிதரும் வெள்ளப் பிரசக்
கான்யா றுந்துங் கல்வரை நாட
சொற்றவ றுவக்கும் பித்தினர் சேர்புலன்
சிறிதிடைத் தெருள்வது முடனுடன் மருள்வது
மாமெனக் காட்டு மணியிருண் மின்னவி
னிணம்புணர் புசர்வே லிணங்குதுணை யாகக்
காம மாறுட் கவர்தரும் வெகுளுநர்
படிறுளங் கமழுஞ் செறிதரு தீயுறழ்
கெள்ளி வாய்க்குணங் குள்ளுதோ றிவறிய
யஃனையென் றணைதரு மறையிருள் யாமத்துக்
கடுஞ்சுட ரிரவி விடுங்கதிர்த் தேரினை
மூல நிசாசரர் மேனிலம் புடைத்துத்
துணைக்கரம் பிடித்தெனத் தோற்றிடும் பொழில்சூழ்
கூடற் பதிவருங் குணப்பெருங் குன்றினன்
ருமறை பழித்த விருசர ணடையாக்

கோளினர் போலக் குறிபல குறித்தே
யைந்தமர் கதுப்பின னமைத்தோ ணசைஇத்
தருவிற் கிழவன் றனெனை நிற்றி
நின்னுயிர்க் கின்ன றவறில வாவா
விரண்டுயிர் தணப்பென வெனதுகண் புணரவிக்
கொடுவழி யிவ்வர் வென்றும்
விடுவது நெடும்புக ழுடுவே லோயே.

வெறிக்குறுங்கதுப்பின் - அடுவேலோயே. பகுதி-இரவுக்குறி. துறை - ஆறுபார்த்துற்ற வச்சக்கிளவி.

'வெறி' என்பதுமுதல் 'வெள்ளப்பிரசம்' என்பதுவரை.

(1—3 வரிகள்.)

(ப-ரை.) வெறி - நாற்றமுடைய, குறுங்கதுப்பின்-குறுமையாகிய கூந்தலையும், வெள் எயிறு-வெள்ளிய பற்களையும் உடைய, எயிற்றியர் - எயினமகளிர், செம் மணி சுழற்றி-செவ்விய மணிகளை வைத்துச்சுழற்றி, தேன் இலக்கு - தேன்கூடாகிய இலக்கில், எறிதர - கவண் எறிதலால், பெருக்கெடுத்து - பெருகி, இழிதரும் - இழியாநின்ற, வெள்ளப்பிரசம் - தேன் வெள்ளமானது.

(வி-ரை.) கதுப்பு - கூந்தல். எயிறு - பல். செம்மணி - மாணிக்கம். இலக்கு - குறி. எறிதரல் - ஒருசொல். பிரசம் - தேன்.

கான்யா றுந்துங் கல்வரை நாட.

(4—வது வரி.)

(ப-ரை.) கான்யாறு - காட்டாற்றில் மடுத்து, உந்தும்-பெருக்கெடுக்கின்ற, கல்வரை நாட - மலைநாட்டையுடையாய்.

(வி-ரை.) கான் - காடு. உந்தல் - பெருக்கெடுத்தல்.

'சோர்றவறு' என்பதுமுதல் 'மின்னலின்' என்பதுவரை.

(5—7 வரிகள்.)

(ப-ரை.) சொல் தவறு - சொற்சோர்வில், உவக்கும் - களிக்கின்ற, பித்தினர் சேர்புலன் - பித்தர்களுடைய அறிவானது, சிறி

திடை தெருள்வதும் - சிறிதுபோழ்து தெளிவதும், உடனுடன் மருள்வதும் - இடையிட்டு இடையிட்டு மயங்குவதும், ஆமென - ஆகிய தன்மைபோல, காட்டும் - தோற்றுகின்ற, அணி இருள் மின்னலின் - நெருங்கிய இருளின் மின்னல்போல.

(வி-ரை.) தெருளல் - தெளிதல். மருளல் - மயங்கல். அணிதல் - நெருங்குதல். மின்னலின் என்பதில் இன் ஐந்தாவதனுருப்புப் பொருளது.

'நிணம்புணர்' என்பதுமுதல் 'தீயுறழ்' என்பதுவரை.
(8—10 வரிகள்.)

(ப-ரை.) நிணம் புணர் - (பகைவர்) தசை நாற்றமுற்ற, புகர் வேல் - புகர்முகமுள்ள வேற்படை யொன்றுமே, இணங்கு துணையாக - பொருந்திய துணையாக்கொண்டு, காமம் ஆறுள் - காமாதியாறு குணங்களுள், கவர்தரும் - (அறிவை) மாறுபடுத்துகின்ற, வெகுளுநர் - கோபத்தையுடையவர்களது, படிறு உளம் - மெய்ம்மை நீங்கிய உள்ளத்தில், கமழும் - மேலெழுகின்ற, செறிதரும் - அடர்ந்த, தீ உறழ் - நெருப்பையொத்த.

(வி-ரை.) துணை - உதவி. கவர்தல்-மாறுபடுத்தல். புணர்தல் - பொருந்தல். புகர் - புள்ளி. காமாதியாறு குணங்களாவன - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரம் என்பன. வெகுளல் - கோபித்தல். படிறுள்ளம் - வஞ்சமனம். படிறு-பொய்யெனினுமாம். செறிதல் - அடர்தல் (நெருங்கல்), இதற்கு செறிதா பகுதி. உறழ்தல் - ஒத்தல்.

'கொள்ளிவாய்' என்பதுமுதல் 'கள்ளியை' என்பதுவரை.
(11—12 வரிகள்.)

(ப-ரை.) கொள்ளிவாய் குணங்கு-கொள்ளிவாய்ப் பிசாசங்கள், உள்ளுதோறு - இடந்தோறும், இவர்ய - எழுந்த, மின்மினி உமிழும் - மின்மினிகள் சுடர்தற்கிடமாகிய, துன் அலர் கள்ளியை-மலர் நிரம்பிய கள்ளிமரங்களை.

(வி-ரை.) இவர்தல் - எழுதல். துன்னல்-நிரம்பல். அலர்-மலர். குணங்கு - பிசாசு (பேய்).

'அன்னை' என்பதுமுதல் 'பொழில்சூழ்' என்பதுவரை.
(13—16 வரிகள்.)

(ப-ரை.) அன்னையென்று அணைதரும் - அன்னையென்று அடைகின்ற, அரையிருள் யாமத்து - நள்ளிரவாகிய பெரும்பொழு

தில், கடுஞ்சுடர் - வெவ்விய கிரணங்களையுடைய, இரவி - சூரியன், விடும் - நடத்தாநின்ற, கதிர் தேரினை - ஒளிபொருந்திய இரதத்தை, மூலநிசாசரர்-தீமைக்கெல்லா மூலமாகிய அரக்கர், மேல் நிலம் புடைத்து - விண்ணுலகத்தைக் கெடுத்து, துணைக்கரம் பிடித்து என - இருகைகளாலும் பிடித்தாற்போல, தோற்றிடும் - தோற்றுகின்ற, பொழில் சூழ் - சோலைசூழ்ந்துள்ள.

(வி-ரை.) அணைதரும் - ஒருசொல்; அணைதா பகுதி. நள்-நடு. நள்ளிரவு - நடுராத்திரி. கடுமை - வெம்மை. விடல் ஈண்டு நடத்தன் மேற்று. மூலம் - காரணம். நிசாசரர் - (இரவிற் சஞ்சரிப்போர்) நிசா-இரவு, சரர்-சஞ்சரிப்பவர் (அரக்கர்). புடைத்தல்-அழித்தல். துணை - இரண்டு. கரம் என்பதனீற்றில் மூன்றனுருபும் இனைத்தென வறிந்த வும்மையுந் தொக்கன. பிடித்தாற்போல வென்பது பிடித்தென வென விகாரமாயிற்று.

'கூடற்பதி' என்பதுமுதல் 'கோளினர்போல' என்பதுவரை. (17—19 வரிகள்.)

(ப-ரை.)கூடற்பதி வரும்-மதுரைப்பதியிற் கோயில்கொண்டெழுந்தருளிய, குணம் பெருங்குன்றினன் - மங்கலகுணங்களால் பெரியமலையையொத்த கடவுளது, தாமரை பழித்த-தாமரைப்பூவை யிகழ்ந்த, இரு சரண் அடையா - திருவடி யிரண்டினையுமடையாத, கோளினர்போல - தவறுடையார் சொல்போல.

(வி-ரை.) வருதல் ஈண்டு எழுந்தருளற்பொருட்டு. கடவுள் என மேல்வருதலால் குணம் மங்கலகுணத்தைக் குறித்தது. தாமரை - ஆகுபெயர். கோள் - குற்றம்.

'குறிபலகுறித்தே' என்பதுமுதல் 'நிற்றி' என்பதுவரை. (19—21 வரிகள்.)

(ப-ரை.) பல குறி குறித்து - பலகுறிகளை யெண்ணி, ஐந்து அமர் கதுப்பினள் - ஐம்பாலாகிய கூந்தலையுடையாளது, அமை தோள் - மூங்கிலையொத்த தோளைத் தழுவுதலை, நசைஇ - காதலித்து, தருவின் கிழவன்தான் என-இந்திரனே யென்னும்படி, நிற்றி-நிற்கின்றாயாகிய.

(வி-ரை.) குறி - அடையாளம். குறித்தல் - எண்ணல். ஐம்பால் - ஐந்துவகை. கதுப்பு-கூந்தல். ஐம்பாற் கதுப்பினள் - ஐவகையாகிய கூந்தலையுடையவள். ஐம்பால் என்பன யாவையெனின்: முடி, கொண்டை, சுருள், குழல், பணிச்சை என்பன. இவற்றுள், மயிரை

உச்சியிற் சேர்த்து முடித்தல் முடியெனவும், பக்கத்திற் சேர்த்து முடித்தல் கொண்டையெனவும், பின்னே செருகல் சுருள் எனவும், சுருட்டி முடித்தல் குழல் எனவும், பின்னிவிடுதல் பனிச்சையெனவும் கூறப்படும். அமையென்பதனீற்றில் உவமவுருபு தொக்கது. நகைஇ - சொல்லிசை யளபெடை, வினையெச்சப்பொருட்டு. காதலித்தல் - விரும்பல். நிற்றி - முற்றெச்சம்.

'நின்னுயிர்க்கு' என்பதுமுதல் 'கண்புணர' என்பதுவரை.
(22—24 வரிகள்.)

(ப-ரை.) நின் உயிர்க்கு - நினது உயிர்க்கு, இன்னல் நேர்தர - துன்பம் நேரிட்டால், திருவின்தன் உயிர்க்கு - தலைமகளது உயிர்க்கும், இன்னல்-துன்பம் நேரிடல், தவறில-தபுதலில்லையாம், ஆவா - அந்தோ, இரண்டு உயிர் - நம்முயிரிரண்டும், தணப்பு என - நீக்கமாமென்றஞ்சும்படி, எனது கண் புணர - (அவ்வாறுளதாகாவண்ணம்) என் கண் காண.

(வி-ரை.) இன்னல் - துன்பம். தணப்பு-நீக்கம்; தண-பகுதி. புணர்தல் ஈண்டுக் காண்டற்பொருட்டு.

'இக்கோடுவழி' என்பதுமுதல் 'வேலோயே' என்பதுவரை.
(24—26 வரிகள்.)

(ப-ரை.) இ கோடு வழி - இந்தக் கொடுமையாகிய வழியில், இ வரவு-இவ்வாறு துணிந்து வருதலை, என்றும் விடுவது-எப்போதும் நினையாதொழிவது, நெடும் புகழ்-பெரிய புகழாகும், அடு வேலோய் - (பகைவரை) அட்ட வேலையுடையாய்.

(வி-ரை.) வழியென்பதனீற்றில் ஏழனுருபு தொக்கது. அடுதல் - கொல்லுதல். அடுவேல் - வினைத்தொகைநிலைத்தொடர். அடுதற்குத் தகுதியாகிய பகைவர் என்பது வருவிக்கப்பட்டது.

வரைநாட! வேலோய்! அரையிருள் யாமத்து கூடற்குணக் குன்றினன் சரணடையாக் கோளினர்போல, குறித்து கதுப்பினல் தோள்நகைஇ இரண்டுயிர் தணப்பென என் கண்காண இக்கோடு வழியில் நின்வரவு விடுவது நெடும்புகழாமென வினைமுடிவுசெய்க.

திருக்கோவையார் உஅஉ-ம் செய்யுள்.

மெலிவுகண்டு செவிலிகூறல்.

மெலிவுகண்டு செவிலி கூறலென்பது — ஏதிலார் தூதுகண்டழுங்காநின்ற தலைமகளைச் செவிலியெதிர்ப்பட்டு, அடியிற்கொண்டு

முடிசாறு நோக்கி, இவள் பண்டைத்தன்மையளல்லள், இவ்வாறு மெலிதற்குச் சேயினதாட்சியிற் பட்டனள்போலுமென் றறிகின்றிலேனென்று அவளது மெலிவு கண்டு கூறுநிற்றல். அதற்குச் செய்யுள்:—

வேயின மென்றோண் மெலிந்தொளி வாடி விழிபிறிதாய்ப்
பாயின மேகலை பண்டைய ளல்லள் பவளச்செவ்வி
யாயின வீச னமரர்க் கமரன்சிற் றம்பலத்தான்
சேயின தாட்சியிற் பட்டன ளாமித் திருந்திழையே.

வண்டமர் புரிகுழ லொண்டொடி மெலிய
வாடா நின்ற கோடாய் கூறியது.

(ப-ரை.) வேய் இனம்-வேய்க்கினமாகிய, மெல் தோள் மெலிந்து - மென்மையாகிய தோள்கள் மெலிந்து, ஒளி வாடி - கதிர்ப்பு வாடி, விழி பிறிது ஆய் - கண் தன்னியல்பிழந்து வேறாகி, பாயின மேகலை - பரந்தமேகலையை யுடையாள், பண்டையள் அல்லள் - பண்டைத்தன்மைய ளல்லளாயினாள், (ஆதலால்) இ-இந்த, திருந்திழை - திருந்திழையானவள், பவளம் செவ்வி ஆயின ஈசன் - திருமேனி பவளத்தினது செவ்வியாகிய ஈசன், அமரர்க்கு அமரன் - தேவர்க்குத் தேவன், சிற்றம்பலத்தான் - சிற்றம்பலத்தின்கண்ணான், சேயினது ஆட்சியில் பட்டனள் ஆம் - சேயினது ஆட்சியாகிய விடத்துப் பட்டாள்போலும், எ-று.

(வி - ரை.) அவனது சேய் எனக்கூட்டுக. வேய் - மூங்கில். செவ்வி - அழகு. சேய் - முருகன். ஒளிவாடி யென்பதூஉம், விழி பிறிதா யென்பதூஉம் சினைவினைப் பாற்படும். பாயினமேகலை யென்னுஞ் சொற்கள் ஒரு சொன்னீர்மைப்படுதலின், ஆகுபெயரெனப் படும். செவ்வி-கருகுதலும் வெளுத்தலு மில்லாத நிறமுமாம். ஆட்சி-அவனதாணையான் மக்களுக்கு கணையலாகாதவிடம்.

நேரிசையாசிரியப்பா.

கதிர்நிரை பரப்பு மணிமுடித் தேவர்கள்
கனவிலுங் காணாப் புனைவருந் திருவடி
மாநிலந் தோய்ந்தோர் வணிக னாகி
யெழுகதிர் விரிந்த திருமணி யெடுத்தா
வரையாக் கற்புட னன்கெனப் பெயர்பெற்
றுங்காங் காயிர கோடி சார்கைகண்
மிடலொடு விரித்துச் சருக்கம் பாழி

வீயா விந்தம் பதநிரை நாத
மறைப்புப் புள்ளி மந்திர மொடுக்கமென்
றிவையவை விரித்துப் பலபொருள் கூறும்
வேத முளைத்த வேதமில் வாக்காற்
குடுமிச் சேகரச் சமனொளி சூழ்ந்த
நிறைதரு நான்கி னிகழ்ந்தன குறியுங்
குருவின் றஞ்சௌ கந்திகோ வாங்கு
சாதுரங் கமெனுஞ் சாதிக ளென்குந்
தேக்கி னெருப்பிற் சேர்க்கினங் கையிற்
றாக்கினற் றகட்டிற் சுடர்வாய் வெயிலிற்
குச்சையின் மத்தகக் குறியினோ ரத்தி
னெய்த்துப் பார்வையி னோர்ந்து சிவந்தாங்
கொத்த நற்குண முடையபன் னிரண்டுங்
கருகியெரிய் தாதல் காற்று வெருளி
திருகன் முரணே செம்ம ணிறுகன்
மத்தகக் குழிவு காசமி லைச்சுமி
வெச்சம் பொரிவு புகைதல் புடாயஞ்
சந்தைநெய்ப் பிலியெனத் தகுபதி னாறு
முந்திய நூலின் மொழிந்தன குற்றமுஞ்
சாதகப் புட்கண் டாமரை கழுநீர்
கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு
வன்னி மாதுளம் பூவிதை யென்னப்
பன்னுசா துரங்க வொளிக்குளம் பந்துஞ்
செம்பஞ் சரத்தந் திலகமு லோத்திர
முயலின் சோரி சிந்துரங் குன்றி
கவிரல ரென்னக் கவர்நிற மெட்டுங்
குருவிந் தத்திற் குறித்தன நிறமு
மசோகப் பல்லவ மலரிசெம் பஞ்சு
கோகிலக் கண்ணீ ரிலவலர் செம்பெனத்
தருசௌ கந்தி தன்னிற மாறுஞ்
செங்கல் குராமலர் மஞ்சள் கோவை
குங்கும மஞ்சிற் கோவாங்கு நிறமுந்
திட்டை யெறு சிவந்த விதாய
மொக்கல் புற்றங் குருகி தொழுதினை
மணிகோ கனகங் கற்டம் பாடி
மாங்கிச கந்தி வளர்காஞ் சுண்டைபென்
றங்கொரு பதின்மூன் றடைந்த குற்றமு

மிவையெனக் கூறிய நிறையருட் கடவுள்
கூடல் கூடாக் குணத்தினர் போல
முன்னைய ளல்லள் முன்னைய ளல்ல
ளமுதவாய்க் கடுவிழிக் குறுந்தொடி நெடுங்குழற்
பெருந்தோட் சிறுநகை முன்னைய ளல்ல
ளுலகியன் மறந்த கதியினர் போல
நம்முட் பார்வையும் வேறுவே றாயின
பகழிசெய் கம்மிய ருள்ளம் போல
வைம்புலக் கேளிரு மொருவாய்ப் புக்கன
வதிருவர்க் கொக்கின் களவுயிர் குடித்த
புகரிலை நெடுவே லறுமுகக் குளவன்
றகரங் கமழு நெடுவரைக் காட்சி
யுற்றன ளாதல் வேண்டுஞ்
சிற்றிடைப் பெருந்தோட் டேமொழி தானே.

அரும்பதவுரை.

கதிர்நிரை-கிரணவரிசை. மணிமுடி - ரத்நகிரீடம். புனைவரும் - அலங்கரிக்கப்பெற்ற. எழுகதிர் - மிக்கஒளி. திருமணி - மாணிக்கம். வரையாக் கற்பு - அளவுபடாத கல்வி. நான்கு எனப் பெயர் பெற்று - இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் எனப் பெயர் அடைந்து. சாகை - கிளை. மிடல் - உறுதி. வேதம்முளைத்த - வேதங்கள் தோன்றின. ஏதம் இல் வாக்கு - குற்றமற்ற திருவாக்கு. குறி - அடையாளம். கருகி - கறுத்து. நொய்தாதல் - இலேசாதல். கோபம் - இந்திரகோபம். கொடுங்கதிர்-பாலசூரியன். வன்னி - வன்னிப்பூ. திலகம் - உச்சித்திலகப்பூ. முயலின் சோரி - முயலின் இரத்தம். குன்றி - குன்றிமணி. கவிர்அலர் - செம்முருக்கம்பூ. அசோகப் பல்லவம்-அசோகந் தளிர். கோகிலக்கண்-குயிலின்கண். இலவுஅலர்-இலவம்பூ. கோவை - கொவ்வைக்கனி. அருட்கடவுள் - சிவபெருமான். கூடல் - மதுரைமாநகரம். கூடா - அடையாத. குணத்தினர்போல - தீக்குணத்தினர்போல். கடு - விஷம். குறுந்தொடி - சிறியவளையல். சிறுநகை - புன்சிரிப்பு. உலகியல் மறந்த கதியினர் - துறவினர். பகழிசெய் கம்மியர் - அம்பு செய்கின்ற கம்மாளர். ஐம்புலக் கேளிர் - ஐம்புலன்களாகிய சுற்றத்தார். அதிர் உவர் - முழங்குகின்ற உவர்ச்சுவையுள்ளது (கடல்). கொக்கு - மாமரம் (மாமரவுருவாய்வந்த சூரபன்மன்). களவு - வஞ்சனை. உயிர் குடித்த - உயிரைக் கவர்ந்த. புகர் - சிறம்வாய்ந்த. இலை - அச்சவடிவாகிய. தகரம்-

மணம். நெடுவரை - திருப்பரங்குன்றம். காட்சியுற்றனன் ஆதல் வேண்டும் - கண்டனர்போலும்.

தேவர்கள் கனவினுங் காணாப் புனைவருந் திருவடி மாநிலம் தோய்ந்து, ஓர் வணிகனாகி, திருமணி எடுத்து, வேதமுழைத்த ஏதமில் வாக்கால் குருவிந்தம் முதலிய சாதிகள் நான்கும், தேக்கின் நெருப்பு முதலிய நற்குணம் பன்னிரண்டும், கருகிநொய்தாதல் முதலிய குற்றம் பதினாறும், சாதகப்புட்கண் முதலிய சாதுரங்க ஒளிர்குணம் பத்தும், செம்பஞ்சு முதலிய குருவிந்தத்திற் குறித்தன நிறம் எட்டும், அசோகப்பல்லவமுதலிய சௌகந்திதன் நிறம் ஆறும், செங்கல் முதலிய கோவாங்கின்நிறம் ஐந்தும், திட்டையேறு முதலிய குற்றங்கள் பதின்மூன்றும் இவையெனக் கூறிய நிறையருட் கடவுள் கூடல் கூடாக் குணத்தினர்போல, சிற்றிடைப் பெருந்தோட்டேமொழி முன்னையள் அல்லள்,முன்னையள் அல்லள், அமுதவாய்க் கடுவிழி குறுந்தொடி நெடுங்குழல் பெருந்தோட் சிறுநகை முன்னையள் அல்லள்; (ஆதலால்) கொக்கின் களவுயிர் குடித்த புகர்நிலை நெடுவேல் அறுமுகக் குளவன் நெடுவரைக்காட்சி உற்றனன் ஆதல்வேண்டும் என வினைமுடிவுசெய்க. (கூகூ)

திருக்கோவையார் ௩சகூ-ம் செய்யுள்.

தேர்வரவு கூறல்.

தேர்வரவுகூறலென்பது — பொருள்வயிற் பிரிந்த தலைமகன் முகிலொடு வந்து புகாநிற்ப, இம்முகில் இவளதாவியை வெகுளாநின்றகாலத்து ஒருதேர் வந்து காத்தமையான் இனி வரக்கடவதனை வெல்லுமா றில்லையெனத் தோழி தலைமகளுக்குத் தேர்வரவு கூறாநிற்றல். அதற்குச் செய்யுள்:—

பாவியை வெல்லும் பரிசில்லை யேமுகில் பாவையஞ்சீ
ராவியை வெல்லக் கறுக்கின்ற போழ்தத்தி னம்பலத்துக்
காவியை வெல்லு மிடற்றோ னருளிற் கதுமெனப்போய்
மேவிய மாநிதி யோடன்பர் தேர்வந்து மேவினதே.

வேந்தன் பொருளொடு விரும்பி வருமென
ஏந்திழைப் பாங்கி யினிதியம் பியது.

(ப-ரை.) முகில் - முகிலான்று, பாவை - பாவையாது, அம்-அழகிய, சீர்-சீர்மையையுடைய, ஆவியை - உயிரை, வெல்ல - செகுக்கும் பொருட்டு, கறுக்கின்ற போழ்தத்தில் - கறுக்கின்ற பொழுதின்கண்,

அம்பலத்து - அம்பலத்தின்கண்ணுள்ளானாகிய, காவியை வெல்லும் மிடற்றோன் - நீலப்பூவை வெல்லுமிடற்றையுடையவனது, அருளின் போய் - அருள்போலப்போய், மேவிய மாநிதியோடு - தேடிய பெருநிதியோடு, அன்பர் தேர் - அன்பரது தேரானது, கதுமென வந்து மேவினது - கதுமென வந்து பொருந்திற்று, பாவியை வெல்லும் பரிசு இல்லை - அதனால் வரக்கடவதனை வெல்லுமாறில்லைபோலும், எ-று.

(வி-ரை.) இனி ஒருவாற்றானும் இவளுயிர் வாழ்தலரிதென்றிருந்தனம், இது பாவியாதலின் இற்றைப்பொழுதிகவாது தேர் வந்ததென்னுங் கருத்தாற் பாவியை வெல்லும் பரிசில்லையே யென்றாள். தமியரை அற்றம் பார்த்து வெல்லக்கருதிச் சிலர் வெகுள்கின்ற காலத்து அத்தமியர்க்குத் துணையாயொருதேர் வந்து காத்ததென வேறுமொரு பொருள் விளங்கினவாறறிக. அருளின் மேவினதெனவியையும், அருளான் வந்து மேவிற்றெனினுமமையும்.

நேரிசையாசிரியப்பா.

வடவனத் தொருநாண் மாறுபட் டெதிர்ந்து
வழிநடந் தனது மரக்கா லன்றி
முதற்றொழிற் பதுமன் முன்னா வவ்வுழி
மான்றலைக் கரத்தினிற் கூட்டினை வயக்கித்
தூக்கல் வளையுடன் றொடர்ப்பத மெறிந்து
மற்றதன் றாளம் புத்திரி யாக
நிமிர்த்தெறி காலிற் கடைக்கண் கிடத்திப்
பாணியிற் சிரம்பதித் தொருநடை பதித்துக்
கொடுகொட் டிக்குக் குறியடுத் தெடுக்கும்
புங்கவம் வாரம் புடைநிலை பொறுத்துச்
சச்ச புடத்திற் றனியெழு மாத்திரை
யொன்றைவிட் டொருசீ ரிரண்டுற வுறுத்தி
யெடுத்துத் துள்ளிய வினமுந் திரைக்கு
மங்கலப் பாணி மாத்திரை நான்குடன்
சென்றெறிந் தொடுங்குந் துறுமிடை திருத்தி
ஞெள்ளலிற் குனித்த விருமாத் திரைக்குப்
பட்டடை யெடுக்கப் புலிதம் பரப்பிப்
புறக்கான் மடித்துக் குவித்தெறி நிலையம்
பதினான் கமைத்து விடுமாத் திரைக்கு
வனமும் பிதாவும் பாணியில் வகுத்து
வட்டங் கொடுக்கு மிந்திரை பணிக்கு

மாத்திரை யாறுடன் கும்பம் பதித்து
வலவை யிடாகினி மண்ணிருந் தெடுத்த
காலுடன் சுழல வாடிய காளி
நாணிநின் றொடுங்கத் தானுமோர் நாடகம்
பாண்டரங் கத்தொரு பாடுபெற் றமைந்த
மோகப் புயங்க முறைத்துறை தூக்கி
யதற்குச் சாரணி யருட்கர மொன்றிற்
பாணி யிரண்டுந் தாள மாக்கி
யொருதாண் மிதித்து விண்ணுற விட்ட
மறுதாண் மலரின் மலர்க்கரந் தூடக்கிப்
பார்ப்பதிப் பாணியைத் துடிமணி யெடுப்பச்
சுருதியைத் தண்டி வலிகொண் டமைப்ப
முதலே ழதனை யொன்றினுக் கேழென
வீணை பதித்துத் தானந் தெரிக்க
முற்றுடி மணியி லொற்றிய பாணியை
நாதங் கூட்டி மாத்திரை யறுத்து
மாங்கனி யிரண்டி லாங்கனி யொன்றால்
முன்னொரு நாளின் முழுக்கதி யடைந்த
வம்மைப் பெயர்பெறு மருட்பேய் குனிப்பப்
பூதமுங் கூளியும் பேயும் நடிப்ப
வமரர்கண் களிப்ப வாடிய பெருமான்
மதுரையம் பதியெனு மொருகொடி மடந்தை
சிறிதழ்ச் சாதிப் பெருமணம் போல
நின்னுள நிறைந்த நெடுங்கற் பதனால்
வினையுடற் புணர வருமுயிர் பற்றிப்
புண்ணியந் தொடரும் புணர்ச்சி போலக்
காலமுற் றொடுங்கு நீண்முகிற் கூட்டமு
மணிதரு தெருவிற் கொடிதரு தேரு
நாற்குறிப் புலவர் கூட்டெழு நனிபுகழ்
மருந்தயில் வாழ்க்கையர் மணிநக ருருவின
வுருளெழு பூழியு மவ்வுருள் பூண்ட
கலிமான் றுகளுங் கதிர்மறை நீழலி
னின்றுமுன் னிட்ட நிறையணி பொறுத்துப்
பருங்குலைக் கயத்துட் கருந்தாட் கழுநீர்
நிறைவினுட் பூத்த தாமரை யொன்றென
நின்னுபி ராய நாப்பண்
மன்னு சவேந்தன் வரவினுக் கெழுந்தே.

அரும்பதவுரை.

வடவனத்து - ஆலங்காட்டில் (வடம் - ஆலமரம், வனம் - காடு, திருவாலங்காடு). மரக்கால் - ஓர்கூத்து. பாணியில் - கையில். கொடு கொட்டி - ஓர்கூத்து. புறக்கால் - புறவடி. பாண்டரங்கம்-ஓர்கூத்து. ஒருதாள் - ஒருகால். விண் உற - ஆகாயத்தைப்பொருந்த. மாங்கனி யிரண்டி லாங்கனி யொன்றால் மூன்றொரு நாளில் முழுக்கதி யடைந்த அம்மை - காரைக்காலம்மையார். குனிப்ப-ஆட. முகில்-மேகம். மருந்து - அமுதம். அயில் - உண்ணுகிற. மருந்தயில் வாழ்க்கையர் - தேவர்கள். பூழி - புழுதி. உருள்-தேர்ச்சக்கரம். கலிமான் - குதிரை. துகள் - புழுதி. கதிர் - சூரியன். நிறைஅணி - நிறைந்த ஆபரணம். பொறுத்து - தாங்கி (பூண்டு). கயம் - ஒடை. உயிர் ஆயம்-உயிர்போலுந் தோழிக்கூட்டம். நாப்பண்-நடுவே. வரவினுக்கு-வருகைக்கு.

திருக்கோவையார் உ௮௧-ம் செய்யுள்.

தூதுகண்டழுங்கல்.

தூதுகண்டழுங்கலென்பது — தூதுவரவுரைப்பக் கேட்ட தலைமகள் மனமகிழ்வோடு நின்று, இஃதயலார் தூதாகலான் இவை வருவன செல்வன வாகாநின்றன, காதலர் தூது இன்று வாராதிருக்கின்றது என் செய்யக்கருதியென் றறிகின்றிலேனென்று ஏதிலார் தூதுகண் டழுங்காநிற்றல். அதற்குச் செய்யுள்:—

வருவன செல்வன தூதுக ளேதில வான்புலியூ
ரொருவன தன்பரி னின்பக் கலவிக ளுள்ளுருகத்
தருவன செய்தென தாவிகொண் டேகியென் னெஞ்சிற்றம்மை
யிருவின காதல ரேதுசெய் வானின் றிருக்கின்றதே.

அயலுற்ற தூதுவரக்
கயலுற்றகண்ணி மயலுற்றது.

(ப-ரை.) ஏதில தூதுகள் - ஏதிலவாகிய தூதுகள், வருவன செல்வன - வருவன போவனவா யிராநின்றன, வான் புலியூர்-வாலிய புலியூர்க்கண்ணுளனாகிய, ஒருவனது - ஒப்பற்றவனது, அன்பரின் - அன்பர்போல், இன்பக்கலவிகள் - இன்பக்கலவிகளை, உள் உருக தருவன செய்து - மனமுருகத் தருமவற்றை முன்னே செய்து, எனது ஆவிகொண்டு ஏகி - பின்னே என்னுயிரைக் கவர்ந்துபோய், என் நெஞ்சில் - என் மனத்தில், தம்மை இருவின - தம்மையிருத்

தின, காதலர்-அன்பர், இன்று இருக்கின்றது - இன்று வாளாவிருக்கின்றது, ஏது செய்வான் - என்செய்யக் கருதி, எ - று.

(வி-ரை.) ஒருவனதன்பு - ஒருவன்கணன்பு. உள்ளுருகத்தருவன வென்பதற்கு உள்ளுருகும்வண்ணஞ் சிலவற்றைத் தருவன வாகிய கலவியென் றுரைப்பினுமமையும். தன் மெய்யன்பர்போல யானுமின்புறவுள்ளுருகுங் கலவிகளை முன்செய்து பின்னென தாவி போயினாற்போலத் தாம் பிரிந்துபோய் ஒருஞான்றுங் கட்புலனாகாது யானினைந்து வருந்தச்செய்த காதலர் இன்று ஏதுசெய்ய விருக்கின்றாரென வேறுமொரு பொருடோன்றியவாறு கண்டுகொள்க. அயல் - அயன்மை.

நேரிசையாசிரியப்பா.

வளைந்துநின் றுடற்று மலிகுளிர்க் குடைந்து
முகிற்றுகின் மூடி மணிநெருப் பணைத்துப்
புனமெரி காரகிற் புகைபல கொள்ளுங்
குளவன்வீற் றிருந்த வளர்புகழ்க் குன்றமும்
புதவுதொட் டெனத்தன் புயன்முதிர் கரத்தினை
வரன்முறை செய்த கூன்மதிக் கோவுந்
தெய்வ மறைத்த செழுந்தமிழ்ப் பாடலு
மைந்தினிற் பங்குசெய் தின்புவளர் குடியுந்
தவலருஞ் சிறப்பொடு சால்புசெய் தமைந்த
முதுநகர்க் கூடலுண் மூவாத் தனிமுத
லேழிசை முதலி லாயிரங் கிளைத்த
கானங் காட்டும் புள்ளடித் துணையினர்
பட்டடை யெடுத்துப் பாலையிற் கொளுவிக்
கிளையிற் காட்டி யைம்முறை கிளத்திக்
குரலும் பாணியு நெய்தலிற் குமட்டி
விளரி யெடுத்து மத்திமை விலக்கி
யொற்றைத் தாரி யொருநரம் பிரட்ட
விழுந்து மெழுந்துஞ் செவ்வழி சேர்த்திக்
குருவிவிண் ணிசைக்கு மந்தரக் குலிதம்
புறப்படு பொதுவுடன் முல்லையிற் காட்டி
விரிந்தவுங் குவிந்தவும் விளரியில் வைத்துத்
தூக்கலு மசைத்தலுந் துள்ளலு மொலித்தலு
மாங்கவை நான்கு மணியுழை யாக்கிப்
பூரகங் குப்பகம் புடையெழு விள்ளி

தத்தந் தாரங் கைக்கிளை யதனுக்
கொன்றினுக் கேழு நின்றுநனி விரிந்துத்
தனிமுக மலர்ந்து தம்மிசை பாடக்
கூளியுந் துள்ள வாடிய நாயக
னிணையடி யேத்து மன்பினர்க் குதவுந்
திருவறம் வந்த வொருவன் றாதுக
ளின்பமு மியற்கையு மிகழாக் காமமு
மன்புஞ் சூளு மளியுறத் தந்தென்
னெஞ்சமுந் துயிலு நினைவு முள்ளமு
நாணமுங் கொண்ட நடுவின ரின்னுங்
கொள்வது முளதோ கொடுப்பது முளதோ
செய்குறி யினிய வாயிற்
கவ்வையிற் கூறுவிர் மறைகள்விட் டெமக்கே.

அரும்பதவுரை.

உடற்றும்-வருத்துகின்ற. உடைந்து-தோற்று. முகில் துகில் - மேகமாகிய ஆடை. மணி - மாணிக்கம். அணைத்து - அவித்து. குளவன் - முருகவேள். குன்றம் - திருப்பரங்குன்றம். புதவு - கதவு. புயல் - மேகம். கூன் - வளைவு. மதிக்கோ-சந்திரனாகிய அரசன். ஐந்தினில் - ஐந்திடங்களில்; ஐந்திடங்களாவன-தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், தான் என்பன. தவல் அரு சிறப்பு-கெடுதலில்லாத மேன்மை. சால்பு - நிறைவு. மூவா - முதிராத (அழியாத). கூளி - பூதகணம். சூள் - ஆணை. துயில் - தூக்கம். நடுவினர் - நடுவு நிலைமையுள்ளவர். மறை - இரகசியம்.

கல்லாடம் மூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

கல்லாடம்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

கல்லாடம் செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருக்கோவையார்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

திருக்கோவையார்

செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

[illegible]